

ஓ

சிவமயம்.

அரசகுலதிலக புலவரேறு

அதிவீராராமபாண்டியனர் இயற்றிய

நைடதமூலமும்,

ஸ்ரீலஸ்ரீ

ஆறுமுகநாவலரவர்கள்

மாணுக்கரின் மாணுக்கரும், மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும்,
அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும் ஆகிய
(யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி)

மகாவித்வான்

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ் சேர்த்துக்
கொடுத்த

விருத்தி உரையும்.

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

All Rights-reserved.] 1936. [விலை ரூ. 4.

1958

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புதுச்சந்நிதிக் கந்தநாதன் துணை.

நாந்தியுரை.

வழிபடுகடவுள் வணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மண்ணுலகி லிஃதென்ன வியப்பென்கோ வெங்குமொளித்
திருக்குமுரு கருட்டேன் வாய்ந்து
தண்ணுலவு மளியெல்லா நிலைத்தவிணைத் தாட்கமல
மெவ்விடத்துந் தயங்கா தீண்டொர்
விண்ணுலவு பொழிற்சுலாம் புலோலிகர்ச் சந்நிதியென்
றறிஞர்புகழ் விரிந்த கோயிற்
கண்ணலரக் கண்டதுபோற் கடுவெளியென் கருத்துவெ
ளிக்கணும்மலர்ந்து கதித்த தாலோ.

"புலவர்க் கேளாத"மெனு நைடதமாமிது, தொகைநிலைச்செய்யுள் இரண்டனுட் பொருட்டொடர்நிலைச் செய்யுளின் பாலதாய்ப் பெருங்காப்பிய மெனப்படும். என்னை?

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து:வணக்கம் வரும்பொரு ளிவற்றினென்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்."

என வருமுரை இலக்கண விளக்கச் சூத்திரப்படி வருவனவெலாம் புகலப் பெற்று, இடைவிடாத எண்வகைச் சுவையும், மெய்ப்பாடுங் கேட்போர் மதிக்கப் புனைந்த தன்மையா னென்க. "மாத்திரை யெழுத்திய லசைநிலை யெனுவ" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் விதந்தோதிய செய்யுளுறுப்பு முப்பானுன்குள் எண்வகை வனப்புள் தோல் என்னும் வனப்பிற்கு இலக்கியமாகவுள்ளதிது. சிலர் தோன்மை வனப்பிற்கு இலக்கியமென்ப. "தொன்மை தானே, உரையொடு புணர்ந்த பழமைமேற்றே" எனச் செய்யுளியற் சூத்திரங் கிளந்தாங்குப் பழமை மேற்றாயினும், பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை என்னு நூல்கண் மான்

உரைவிரவி வருவதும் பாட்டாகிய தம்பு நடையின்றி, ஆசிரிய விருத்த மாப்பானே பழைய கதைமேற் றொடுக்கப்பட்டமையின் ஆது வசனந்தாதாகத் தோல்வனப்பிற்றுயிற்றென்க. "தோலெனமொ ழிப தொன்மொழிப் புலவர்" என ஒல்காப் பெரும்புகழ்த் தொல் காப்பியனுர் அருளி, "தொன்மொழி" என்று விதந்தோதிப் பெறு வான் வைத்தாராகலி னது மறுக்கப்படாமை தெற்றெனவுணர்க.

இங்ஙனம் அறமுத னான்கிற் குறைபாடின்றிப் பெருங்காப்பிய மாகக் கொள்ளப்படும். இது, கந்தபுராண முதலியவற்றி னடை போலவும், சங்கத்துக் காப்பியங்கள் சிவணவும் நிற்றலாற் புலவர் களாற் பெரிதுங் கொண்டாடப் படுகின்றது. இதற்கு முதனூல் ஸ்ரீ ஹர்ஷகவி என்பவராற் செய்யப்பட்ட வடமொழி நைஷதமே யாகும். அது வடமொழியி லெத்துணைச் சிறப்பாக மதிக்கப்படு கின்றதோ, அத்துணைச் சிறப்பாக இத்தமிழ் மொழியினு மிஃதெ ண்ணப் படுகின்றது. இவ்வியல் வாய்ந்த காப்பியம் இதுபோது நன்கு பதிப்பிக்கப் படாமையாற் சீரிய உரையுடன் வெளிப்படுத் துவது மிக்க நலமாமென்று நஞ் சுதேச நண்பரும், பன்னிரு திரு முறைத் திருவருட்பாப் பத்தியினரும், சைவ சித்தாந்தப் பற்று டையவரும், பரோபகார சீலரும், சிங்கைச் சனமித்திரன் பத்திரி கைப் போஷகரு ளொருவரும், கிளானில் பி. டபிள்யு. டி. உத்தி யோகத்தருமாகிய வித்வான் ஸ்ரீமந் கா. கந்தையாபிள்ளை அவர்கள் பன்முறையும் வேண்டிக் கோடலாலே யங்ஙனம் புரிவான்புக்கேம்.

வடமொழி நைஷதத்தையும், அதன் வியாக்கியானங்கள் ஆற னையும் வைத்து ஒப்பு நோக்கியும், இதுகாறும் அச்சிட்டவற்றிற் சில பாடபேதங்களும், பாடக் குறைவுகளும் இருத்தலால் அவற் றையுள்ளவாறு பதிப்பிக்கு மெண்ணத்தாற் றமிழ்மொழி நைட தை எட்டுப் பிரதிகளை அழைப்பித்துப் பரிசோதனஞ் செய்தும், சிரிய விருத்தியுரையுடன் வெளிப்படுத்துதல் நலமெனக் கருதி நின் றேம். அதுகாலை "பகுநமல்பசாராணும் சமவாயோதுரத்யய:! த்ரணீர் விதியதே ரச்சுர்ப் பத்தியந்தே மத்தந்தி:!" என்று காளிதாசனு ருரைத்தாங்குச் சென்னைப் புலவர் நோனுமையால் மருட்பா விவகாரம் நேர்ந்தது. அது ஒருவருடமாக நிகழ்ந்தமை யால், அதன்கட்சென்றுற்ற நம்முளம், இந்நூல் உரை யாராய்ச்சி விடயத்திற் சோம்பலாலும், புகுங்காலும் கவனித்தியற்றப் போதுமான நேரமின்மையாலும் எண்ணியபடி செய்யமுடியா தாயிற்று.



ஸ்ரீமந். நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள்.

இந் நைடதத்திற்கு மகாவித்வான் சரவணப் பெருமாள் ஐயர் ஒருரை செய்தனரெனத் தெரிகிறது. அதுவே இவ்விடத்தில் வழங்கிவருவதாம். அவ்வுரையிலே சிலபொருந்தாத பாகங்களை யெடுத்துக்காட்டி, நம் யாழ்ப்பாணத்து மகாவித்வான் சரவணமுத்துப் புலவர் அவர்கள் மறுத்திருக்கின்றனர். சைவசித்தாந்த தீபகராய், செந்தமிழ்ப் பரிபாலனராய், சிவபுண்ணியப்பேறு உடையராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராம் நம்பெருந்தகையார் ஒருரையியற்றியுளார். அவ்வுரை, அன்னோர்போல வித்தியாசர்கள் தாபித்தன் முதலிய சிவ புண்ணியங்களைச்செய்து, சைவசித்தாந்த பரிபாலனஞ் செய்யாநிற்கும் யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமத் சி. சுவாமிநாதபண்டிதர் அவர்களால் வெளிப்படவிருக்கிறதென்று அறிகின்றேம். இங்ஙன மிருத்தலால் இப்போது வழங்கப்பட்டு வருமுரையை வைத்துக்கொண்டு, ஆங்காங்குத் திருத்த வேண்டிய இடங்களிற் றிருத்தியும், விளக்கியும், புதுக்கியும், மேற்கோள்கள் பலப்பல தக்கதாகக் காட்டியும், இலக்கணக் குறிப்புக்கள் சைவ சித்தாந்த வுட்கிடைக ளிவைசேர்த்தும், நூலாசிரியர் வரலாறு, வடமொழிநைடதம், அதனூலாசிரியர் வரலாறு, இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள், நளசரித்திரங் கூறும் நூல்கள், தமயந்தி வமிச வரலாறு, நளச் சக்கரவர்த்தி வமிச வரலாறு, நளன் முன்னோப்பிறவி, நளதியானங் காரியசித்தி, நைடத வுள்ளுறை பொருள், நைடத நூற்பயன், நிடததேச விவ்ரம், நைடதம் என்னும் பெயர் விளக்கம், செய்யுளிற்போதரும் அலங்காரங்கள் என்னுமிவற்றையும் எழுதிப்பதிப்பித்தேன். உரையைத் தனித்தனிப் பதங்களாக வெடுத்து அவற்றிற்குப் பொருள் கூறுவதினும், பொருண் மூடிபுக்கியையப் பதங்களை யந்துகமாகச் சேர்த்துப் பொருளுரைத்த னலமாக விருந்தும் அசந்தர்ப்பங்க ணேக்கி விடுத்தாம். இஃதிரண்டாவது பதிக்கப்படுமேல் இன்னமும் பலப் பல இன்றியமையா விடயங்கள் சேர்த்துச் செவ்வனே பதிப்பிக்க, வேண்டுவார் வேண்டியாங்கியும் புதுச்சந்நிதிக் கந்தரத சுவாமியா மெந்தையார் தந்திருவரு டந்து முற்றுக வெனப் பன் முறை வந்தித்துப் பிரார்த்திக்கின்றேம்.

இங்ஙனம்:

நா. கதிரைவேற்பிள்ளை,

மேலைப்புலோலி

யாழ்ப்பாணம்.

இந்நூல் உரையிற்காட்டப்பட்ட நூல்கள்.

உரையாசிரியர்கள்.

நச்சினார்க்கினியர்.

அடியார்க்குநல்லார்.

பரிமேலழகர்.

கூர்மபுராணம்.
வைடூரியத்தியுரை.
கந்தபுராணம்.
தொல்காப்பியம்.
நன்னூல்.
பதிற்றுப்பத்து.
சிறுபாணாற்றுப்படை.
இரகுவினத்திரயம்.
திருக்குறள்.
சீவகசிந்தாமணி.
காஞ்சிப்புராணம்.
ஆத்திசூடி.
புறநானூறு.
சிலப்பதிகாரம்.
திருவிளையாடற்புராணம்.
நன்னெறி.
உதயணன்கதை.
சூரியசித்தாந்தம்.
சூடாமணிநிகண்டு.
பிங்கலந்தை.
நியாயநூல்.
பாகவதபுராணம்.
சூதசங்கிதை.
தரிசனேபநிடதம்.
காசிகாண்டம்.
நல்வழி.
மகாபாரதம்.
சாமுத்திரிகாலக்கணம்.
மதிவாணர் நாடகத்தமிழ்நூல்.
அடிநூல்.
இசைநூலார்.
சிவப்பிரகாசம்.
உவமானசங்கிரகம்.
நிமித்தநூல்.
திருவருட்பயன்.
பிரபுலிங்கலீலை.
மூலபடகடாம்.

பொருநராற்றுப்படை.
மதுரைக் காஞ்சி.
தணிகைப் புராணம்.
நாடகத் தமிழ் நூலார்.
அமரம்.
தேவாரத் திருவருட்பா.
நாலடியார்.
திருவருட்பா திருக்கோவையார்.
சித்தாந்த சிகாமணி.
பேரூர்ப்புராணம்.
மதனதந்திரம்.
மானவபுராணம்.
மனுஸ்மிருதி.
காளிதாசசுலோகம்.
வெண்பாப் பாட்டியல்.
நளவெண்பா.
வண்டுவிடுதூது.
விவாக கற்பம்.
காமந்தகம்.
இலக்கணவிளக்கம்.
சிவதருமோத்தரம்.
பஞ்சபாரதீயம்.
பார்க்கவபுராணம்.
பிருகச்சாபாலவுபநிடதம்.
பஸ்மசாபால வுபநிடதம்.
குறிஞ்சிப்பாட்டு. [ருட்பா.
திருமுருகாற்றுப்படைத் திருவ
பட்டினத்துப்பிள்ளையார்பாடல்.
திருவாசகத் திருவருட்பா.
சைவபுராணம்.
சௌந்தரியலகரி.
இலக்கணவிளக்கம்.
புறப்பொருள்வெண்பாமாலை.
கௌதம விவாகப்பத்ததி.
கல்யாணபஞ்சாதி. [சுரம்.
திருவாலவாயடிகள் திருமுகப்பா
யாப்பருங்கலக்காரிகை.

நூலாசிரியர் வரலாறு.

அமிழ்தினு மினிய தமிழ்மொழியிற் சொன்னேக்கும், பொரு ணேக்குந் தொடை நேரக்கும், நடைநோக்கும் எந்நோக்கும் நன்கு பொருந்த விருத்த யாப்பான் யாக்கப்பட்ட காப்பியமாகிய இந் நைடத நூலைச் செய்தவர் அதி வீரராம பாண்டியனர் ஆகும். இப் புலவரேறும் அரசகுல திலகரைப் பற்றி யிந்நூலிற் கூறப்பட்ட வரலாறு, "வலனுயர்த்த வண்ணி லஞ்சேல் வான்றெடுபொற் கோட்டிமய வரையிற் றீட்டி-யலர்தலை மாநிலம்புரக்கு மதிவீர ராம னிக லரசரேறே" என்னு மிதுவேயாம். இதுகொண்டு அதிவீர ராமன் என்பவர், பாண்டிய குல அரசர் என்பதும், குமரி தொடங்கி இமயமலை காறும் ஆணை செலுத்திய மன்னர் என்பதும் நன்கு விளங்குகின்றது. இவரால் இயற்றப்பட்ட கூர்ம மகா புராண மூதலிய செந்தமிழ் நூல்களி னிடத்தும் இதற்கு மேல் இவர் வர லாறு தெளிவிற் கூறப்பட்டிலது. ஆகலின் இவர் வரலாற்றைச் சிரியனேன் அறிந்தவரையில் எழுதுகின்றனன். நந் தமிழ்நாட் டுப் புலவர்களுட் பலர் சரிதங்களின் உண்மை காண்டல் அரிதாக இருக்கின்றது. காலம், இருப்பிடம், சமயம், அவரியற்றிய நூல் கள், அவர்காலத்திருந்த ஏனையபுலவர்கள் முதலாயின ஒருவ ருரைத்தபடி மற்றையோ ருரைக்கவும் ஒப்புவுங் கண்டிலேம். ஆங் கிலம் படித்துச் சிறிது தமிழாராய்ச்சி யுள்ளாரும், அதுதானு மில் லாதாருமாய சிலர், இக்காலத்துவெளிவந்து தத்தமக்குத் தோன் றியவாறு எழுதி முரணுகின்றனர். ஔவையார் இருவர் என்றும், ஸ்ரீசமயாசாரிய தெய்வங்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாய னர் முதலாயினோர் காலம் 1510 வருடத்துக்குள் என்றும், சைவ சித் தாந்தியாகிய திருவள்ளுவ நாயனர் சமணர், புத்தர், வைணவர், பொது நிலையர் என்றும், களவியலுரை நக்கீரனர் செய்ததன் றென் றும், ஆசிரியர் நீலகண்டனரியற்றினர் என்றும், கல்லாடம் சங்க நூலன்றென்றும், திருக்கோவையாருரை பேராசிரியர் செய்த தென்றும் புகழேந்தி, கம்பர்வைணவர்கள் என்றும், இவ்வாறு ஒரு வர்க் கொருவர் பிறழ்வுறக் கூறுகின்றனர். மூந்து தமிழிற் செய் யப்பட்ட செந்தமிழ் நாவலர் சரிதம் என்னு நூலில் இன்னும் வெளி வரக்கண்டிலேம். ஒருநூலின் முன்னர் ஆக்கியோன் பெயரே

வழியே யெல்லே'' என வரூஉம் பாயிரம் இருத்தல் வேண்டுமென் பது தமிழ்நூல் விதியாக விருந்தும், அது செவ்வனே கூறப்படா மையால் சரிதம். அறிதல் அருமையாயிற்று. பாவலர் சரித்திர தீபகம், அபிதான கோசம், புலவர் புராணம் என்னு நூல்கள், புல வர்களின் சரிதங்களே யெடுத்து விளக்கப் போந்தும் ஒன்றே டொன்று முரணியும், விரிவிற்கூறுதும், விளக்கவேண்டுவன வற்றை விளக்காதும், ஒருவாறுசென்றன. இங்ஙனடதத்தை யிதற்கு முன் அச்சிடுவித்தார் பற்பலராயிருந்தும், அவர் தாமும் இவ்வர லாற்றிற் புக்காரல்லர். இந்நூலாசிரிய ரியற்றிய ஏனைய நூல்களைப் பதிப்பித்தார் தாமும் அவ்வாறுயினர். ஆகலின் யானும், அவ்வாறு ஒழித்தனலம் அன்றென்று, கேள்வியானும், சாதனங்களானும் தெரிந்தவற்றை யெழுதிவைப்பிற் பின்னோர்க்குப் பெரிதுபகாரமா மென்பதை முள்ளிட்டு வரைவான் புக்கே னகலிற் பெரியோர் குறைகூறு சென்க.

அதிவீரராமபாண்டியர் அவர்களின் தந்தை தாயார் இவர் எனத் தெரிந்திலது. அவர்தமையனர் வரதுங்க ராம பாண்டியனர் என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. இவர்களிருவரும் கல்வி, கேள்வி, ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந்தவர், காகத் திருகண் ணிற் கொன்றே மணிகளுந் தாங்கும், இருவராகத்தும் ஒருயிர் பெற் றாற்போலு முழுவலன் புடையவர். பாண்டியற்கு எஞ்ஞான்றுந் தமிழ் மொழியை வளர்த்தல் உரிமையாதல்போல் இன்னேரும் தாம் அலர்தலே மாநிலம் புரக்கும் அரசரேறுகளா யிருந்தும், அவ் விவகாரத்தி னில்லாது அதனுடன் செந்தமிழ்ப் பரிபாலனமுஞ் செய்து வந்தனர். அதுபற்றியே யுலகம் ''பாண்டியிலிரண்டுபட் டாலிரண்டு'' எனப் பழமொழி கூறுகின்றது. நால்வர் பரமாசாரிய மூர்த்திகள் திருவவதாரஞ் செய்து, இறைவனருளாலே யிருவராய் நின்று செந்தமிழ் வேதமாகிய திருவருட்பாத் திருமுறைகளே யருளித் தமிழ் மொழியின் பெருஞ்சிறப்பை யுலகமதிக்க எவ்வாறு நிலை நாட்டி யருளினரோ, அதுபோல இந்நால்வரும் பின்னர்த்தோன் றித் தத்தமக்கியன்றவாறு தமிழ் மங்கைநூலிழுக்க மடங்காது, அன்னட்கு மங்கல நாண் நிலைத்தாரமேறச் செய்தமைபற்றி யுலகம் அம்முதுமொழியை யின்றும் வியந்து கழறுகின்றும். என்னே! சங்கமிரீஇய பாண்டியர்க்கும், அவற்றினிருந்து தமிழாராய்ந்த புல வர் பெருமான்களுக்கும் ஒப்பாகச் சங்கமிருத்துவோரும், இருந்து ஆராய்வோருந் தாமாகவேயிருந்து தமிழை வளர்த்தலி னென்க.

இங்கே "பாண்டியில் இரண்டு" என்றது, இவ்வதிவீரராம பாண்டியனுரையும், அன்னவர் தம்முன்னவரான வரதுங்க ராமபாண்டியனுரையு மாகும். "பட்டரில் இரண்டு" என்றது மாதவப் பெருந்தகை யாசிரியராந் திராவிடமாபாடியச் சிவஞான்யோகிகளையும், அவர்தம் முதன்மாணாக்கர் கவிச்சக்கரவர்த்தி கச்சியப்ப முனிவரையும் குறிக்கும்.

ஆகவே அதிவீர ராம பாண்டியனுர் புவிச் சக்கரவர்த்தியாயிருந்ததுபோலக் கவிச் சக்கரவர்த்தியாகவும், விளங்கினர். அவரியற்றிய நூல்வளப்பத்தானே யுயர் வேதம், சிவாகமம், உபாகமம், வேதாந்தம், சித்தாந்தம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் முதலிய வடமொழி நூல்களையும், தொல்காப்பியம், புறப்பொருட் பன்னிரு படலம், முத்தொள்ளாயிரம், களரியாவிரை, இசைதுணுக்கம், தாளசமுத்திரம், வெண்டாளி, நற்றிணை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, இறையனர் அகப்பொருள், பத்துப்பாட்டு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி குண்டலகேசி முதலாய சங்கநூல்களையும், திருஞானசம்பந்த சுவாமிகள் முதலாக ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் இறுதியாகவுள்ள திருவருளாளப் பெருந்தகை யாராற் றிருவாய் மலர்ந்தருளப்பட்ட தேவாரம் முதலாகப் பெரிய புராண மிறுதியாகவுள்ள பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்களையும் ஏனைய சித்தாந்த நூல்களையும் ஆசிரியரிடம் வரன்முறையிற் கற்றுத் தெளிந்த புலமையுடையார் என்பது குன்றின்மேலிட்ட தீபம்போற் காணப்படுகின்றது. இவர் ஆசிரியர்கள் வேப்பத்தூர் ஈசான மாமுனிவர் அவர்களும், சுவாமிநாத தேவர் அவர்களும், சிதம்பரம் அகோர சிவாசாரியர் அவர்களுமாவர். அது குருவணக்கச் செய்யுளாற் கண்டாம். குருவணக்கம் புரிந்ததனால் இவர் குருபத்தியில் விசேடித்தவர் என்பது வெளிப்படை. அகோர சிவாசாரியர் என்பவர் சைவசித்தாந்த தாபகராய்ப் பதினெண் பத்ததித் தலைவர்களு ளொருவராய்ச் சிதம்பரத்திலிருந்த ஆதிசைவப்பிராமணர் ஆவர்.

இவர் இருந்து அரசாண்ட இடம் கொற்கைகுரே யாகும். அது "வெற்றிவேற்கை வீரராமன்-கொற்கையாளி" என்று நறுந்தொகையிற் கூறப்பட்டதனாற் றெரிகிறது. சிலர் பாண்டிநாட்டின்கணுள்ள தென்காசியிலிருந்து அரசு செலுத்தினர் எனவும், சிலர் மதுரையிலிருந்து அரசு செலுத்தினர் எனவும் புகலா நிற்பர். மதுரைப் புராணத்தில் துரைத்தாங்கு, பாண்டியர்கணெடுங் காலை

காலமாகக் கொற்கை என்னும் நகரத்திலே சித்தார் எனப் புலப்பட லால், பெரிபிளசு என்னும் மேலைத்தேசவாசிரியார் கூறிய பாண்டி யர் பட்டினமாகிய கொல்கி, அல்லதேல் டிஆன்வில்லிஎன்னும் ஐரோப்பியர் சொல்லிய தாய, இராமேச்சுரத்தின் அருகில் இருக் கும் கிழக்கரையே பாண்டிய ராசதானி என்று பாண்டித் தேய சரித்திரம் கூறுகின்றது. இவற்றினும், நறுந்தொகைக் கூற்றினும் சந்திரவமிச அரசராகிய இந்நூலாசிரியரும் வசித்த இடம் கொற் கை நகர் என்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதின் உணரக் கிடக்கின்றது. மதுரையையும் தமக்கு உறைவிடமாகக் கொண் டிருக்கலாம்.

இவர்க்கும் இவர் தமயனர்க்கும் இராமன் என்கின்ற பெயர் இருத்தலான், இவரது தாய் தந்தையர்கள் நெடுங்காலம் மகப்பே றின்றி, சேது சென்று, இராமநாத சுவாமியை வழிபடுங் காலத்து அவர் திருவருளாலே இரட்டைப்பிள்ளைகளாகத் தோன் றினமையால் மூத்பிறந்தார்க்கு வரதுங்கராமன் என்றும், பிற் றோன்றியார்க்கு வமிச பரம்பரைப் பெயர் சேர்த்து அதிவீர ராமன் என்றும் பெயர் வைத்தனர் என்ப. அதுகாலத்தில் இரட் டையர் ஆண் மகவாய்ப் பிறந்தமையால் ஒன்றற்கு இலக்குவன் என நாமகரண மிடவேண்டுமென்று சிலர் கூறியும், அம்மானுடப் பெயரை யெடுக்கிலேம்; சிவபெருமானுக்குரிய திருநாமமாக "ஸ்ரீராமம் த்ரிணேத்ரம் சோமார்த்த தாரிணம் சூலிகம்பசம்! பஸ்மோத்தூளித சர்வாங்கம் கபர்த்திநமுபாஸ்மகே" என அதர் வணவேத இராம ரகசியோபநிடதம் உரைத்தபடி இராம நாம மாகிய சிவன்பெயரையேயிடுவேம் என்று இருவர்க்கும் இராமன் என்னும் பெயர் பொருந்த இட்டனர் என்ப. அதிவீர ராமபாண் டியன் என்னும் பெயரன்றி வல்லபதேவன், பிள்ளைப்பாண்டியன், குலகேகரன், குணசேகர வழுதி, தமிழ் வளர்த்த தென்னவன் என் னும் பெயர்களும் இந்நூலாசிரியர்க்குப் பெயர்களாம்.

இக்காரணத்தானே வாயு சங்கிதை என்னுஞ் சைவபுராண பாகத்தை யருந்தமிழிற் பாடினர் இவரே யென்று கூறுவர் கல்வி சைப் புலவர். சிலர் அதுவேறு பாண்டிய னெனவு முரைப்ப. அன் னது பொருந்தாமைக்குரிய வேதுக்களைக் கூறின், விரியுமென்று விடுத்தாம். "குட்டித்தற்கோ பிள்ளைப் பாண்டியனில்லைக் குறும்பி யளவாக் காதைக்குட்டுந் தோண்டி - யெட்டினமட் டறுப்ப தற்கோ வில்லியில்லை" என்னுஞ் செய்யுட்படி, பிள்ளைப் பாண்டி

யன் என்னும் பெயருடைய இவர். புலவரென்றிருந்தார் பாடிய பாடல்களைக் கண்ணுற்றுப் பிழையிருப்பின், பிழைவருந்தோறும் அவர் தலைகளிற் குட்டிக் குட்டித் திருத்தமாகப் பாடிவருமாறு ஆஞ்ஞாபித்தும், பின்னர் அங்ஙனம் பாடிவந்தாரை மகிழ்ந்து உபசரித்து அவர் விழைந்தனவற்றைக் கொடுப்பாரென்றுந் தெரிகின்றது. தாங்கா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவரைக் கண்ட்க்கால், போசராஜன் காளிதாசனைக் கண்டாங்கு மகிழ் மீக்கூரக் கட்டியணைத்து, கல்வி யாராய்ச்சி புரிந்து தக்கவாறு பரிசிலளிப்பர். வித்தியா விநோதமே தமக்குப் பெரியதோர் ஆட்சியாக் கொண்டிருந்தார்.

கூர்மபுராணம், இலிங்கபுராண மியற்றி யரங்கேற்றுங்காலத்திலே அரசற்குரிய தானங்கள் கூறிய விடத்து அவற்றை அநுபவத்துங் காட்டவேண்டுமென்னும் கருத்துடையராய், துலாபுருட தானம், இரணிய கருப்பதானம், பிரமாண்டதானம், இரணிய கற்பகதானம், அட்டோத்தர சகத்திர கோதானம், இரணிய விடப தானம், சுவர்ண கன்னிகாதானம், திக்குப் பாலகதானம், சுவர்ண ரததானம், பஞ்சலாங் கலதானம், இரணியபூதானம், சுவர்ண சத்த சாகரதானம், இரத்தின தேனு தானம், சுவர்ண கணபதி தானம், திலபருவத தானம் முதலிய தானங்களைச் செய்து காட்டினர் என்ப. தாயர் இறந்த காலத்திலே வைதிகக் கிரியைகள் செய்தல் வேண்டுமென்றும், அவற்றைப்போலச் சிறந்த கிரியைகள் வேறிலவென்றும் பிராமணர் சிலர் கூறியவிடத்து, ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தினின்றும் சகலாகம பண்டித சிரோமணியாகிய சித்தாந்தபானு அகோரசிவாசாரியார் அவர்களைத் தருவித்து, சைவாகமக் கிரியைகளைச் செய்வித்துக் காட்டி வெட்கமடையப் பண்ணியதன்றி, அக்கிரியைகளெல்லாம் சிவாகமங்களிலிருந்து பெறுதல் அருமை நோக்கிப் பூர்வாபரக் கிரியாவிதிகளெல்லாம் பொலிந்து எவரும் இலகுவிற் றெரியும்படி அகோர சிவாசாரியரைக்கொண்டு, சௌச ஆசமனமுதல் அத்திராபிடேக மீறுகவுள்ள தீக்ஷாவிதி, அந்தியேட்டியாதி பிண்டசம் போசன மீறுகவுள்ள உத்தர கிரியாவிதி, சுவசந்தி துவசாரோகண உற்சவாதி பிராயச்சித்தாந்தமாகவுள்ள பிரதிட்டாவிதி என்னு மூன்றையும் அடக்கிச் செய்வித்தமையால் அந்நூற்கு "கிரியாக்ரம ஜ்யோதி அல்லது ஜ்யோதி" என்று பெயர் வழங்குப.

இமயந் தொடங்கிக் கன்னியா குமரி வரைக்கும் உள்ள

தேயங்களைத் தமக்குச் சுவாதீனமாக்கி, மற்றைய அரசர்க டமக் குத் திறைகொடுக்க ஆண்டனர். அரசுசெலுத்துவதிலேயே தங் காலத்தைக் கழித்துவிடாது, தத்துவ ஆராய்ச்சிபுரிவதிலும், சிவ பூசை செய்வதிலும், புலவர் கோட்டி கொள்வதிலும், வடமொழிக் கணுள்ள நூல்களைத் தமிழ்க்குச் சிறப்பாக மொழிபெயர்ப்பதி லுமே காலங்கழித்தார். இதனாற் றமிழிலன்றிச் சம்ஸ்கிருதத்திலும் பாண்டித்திய முடையார் என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. வடமொழி நூல்களைத் தமிழிற் பெயர்த்து வருங்காலத்து, அவற்றை யவ்வப்போது தமது தமயனாகிய வரதுங்க ராமபாண் டியனுக்குக் காட்டி வருவார். அவரும் இவர் தமை யூக்கப்படுத்தி வருதலுண்டு. அங்ஙனமாய காலத்து * இலிங்கபுராணத்தை மொழிபெயர்த்துக் காட்டிய காலத்திலே வரதுங்க ராம பாண்டிய னார், வெள்ளையாக இருக்கிறது; ஆயினும் பொருளோ மதிக்கத்தக் கது என்னுங் கருத்தைக் குறிப்பாக் காட்டுவான் "முத்துப்போ லிருக்கிறது" என்றார். அதனையறிந்த பாண்டியனார் முன்னைனைத் திருத்திப்படுத்தல் காரணமாகவும் காசிகண்டத்தைமொழிபெயர்த் துக் காட்டினார்.

அதனைக் கண்ணுற்ற வரதுங்கராம வழுதியார், சோதர! "இது கரும்பு போன் றிருக்கிறது" என்றார். வலிந்து பொருள் கொள்ளும் அத்தகையதோ வென்று, நூலாசிரியர், கூர்ம மகா புராணத்தைச் செந்தமிழிற் செவ்வனே பாடிச் சென்றார். அந்தத் தத்துவ சாகரமாகிய புராண முற்றையும் ஆராய்ந்த பாண்டியனார், பாக்கள் நிரசொற்களின் றி யிருத்தலானும், கொண்டு கூட்டு முத லிய பொருள்கோ ளரிதாயிருத்தலானும் சிவநேய நிரம்பிய செல் வத்துனையே! "இது பால்போ லிருக்கிறது" என்றார். அதுகேட்ட அதிவீரராம பாண்டியனார் அதினு முவகையுறுமல் நைடதமாகிய இந்நூலைப் பாடத்தொடங்கினர் என்ப.

ஸ்ரீ ஹர்ஷ கவி என்பார் வடமொழி நைஷதம் பாடியது சிந்தா மணிமந்திர வுபாசனையால் என்று தெரிதலால், தாமுஞ் சிவபெரு மானை யதிதேவதையாக வுடைய சிந்தாமணி மந்திரவுபாசனை

* தமிழில் இக்காலத்து அச்சிடப்பட்டு வெளிப்படுத்திய இலிங்கபுரா ணம், வடமொழிப் புராணத்திற்குப் பெரிது மொவ்வாது வேறுபட்டிருக் கின்றது. அதிவீர ராம பாண்டியர் சமஸ்கிருதத்திலும் வல்லராயிருக்கவும் அங்ஙனஞ் செய்வர்கொலோ, செய்யார்! செய்யார்!! அப்பிரதி ஒழிந்து விட்ட தென்றாவது, காலிகித்காரி னேர்ந்த வழுவு வென்றாவது, அல் லது வேற்றூர் செய்த தென்றாவது அதனைக் கொள்ளுதலே சால்பாகும்.

கொண்டு, புகழேந்திவெண்பா யாப்பில் களசரிதம் செய்திருப்ப தால் அதனைப் பார்க்கினும் இதுவிழுமிதாக வியற்ற நினைந்து விருத்தயாப்பாற் றொடங்கி, மன்மதோ பாலம்பன்ப்படலம் வரை யும் பாடிமுடித்துத் தமக்கே யப்பாடல்களின் சொற்சுவை பொருட்சுவையாதிகள் வியப்பையும் உவகையையும் விளைத்தல் கண்டு, இன்னதனை நஞ்சேட்டன் பார்த்து என்சொல்லுமோ? அறிகுவமென் றெண்ணி யதுகாறு முள்ள பாக்களைக் கொண்டு போய்க் காட்டினர். அப்பாடல்களை யெல்லாம் பார்த்து மிக்க இரும்பூதற்று ஆனந்தக் கூத்தாடித் தம்பியைத்தழுவி முத்தமிட் டுச் சொல்லும். "அச்சோ! பொற்கலத்தினிரப்புதற்குரிய திவ்வி யாமிர்தத்தை வாளா நிலக்கமரிற் பெய்தனையே" என்றனர். அது கேட்ட நைடத ஆசிரியர் நஞ் சந்திரவமிசச் சக்கரவர்த்தி காப்பி யத் தலைவனுகவும் இங்ஙனமுரைத்தல என்னென, சிந்தாமணி, சிலப்பதிகார முதலியவே மான, எம்போலும் மாணிட அரசனைப் புகழ்ந்து, இத்தனைச் சொற்சுவை, பொருட்சுவைப் பாக்களைப் பாடினையே! இவற்றைப் பிறத்தலிறத்தல், வேதனைப் படன் முத லியன இல்லாத முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொரு ளாஞ் சிவபெருமான்மீது கூறப் பூர்வ வரும் புண்ணிய நிற்கில்லா தாயிற்றே! அதுகொண்டு கவல்கின்றேம்" என, நூலாசிரியர் உண் மையே கூறினர்! எனத்தெளிந்து சுவன்று, அப்பால் ஊக்கமின் மையால் ஒருவாறு பாடிமுடித்தனர் என்ப. இவ்வுண்மை யறியாப் புலவோர் பலர் "புலவர்க்கோ ரௌடதமென நைடதமாம்" இத னைச் சென்று தேய்ந்திறுதலை யுடைத்தென்ப. அவரெலாம் இக் கருத் தறிவாராயின் அங்ஙனங் கூரோன்பதுதேற்றம்.

நைடதம் அரங்கேற்றுங் காலத்தில், ஓர் புலவர் எழுந்து, அரசரேறும் புலவர் பெருமை! பாக்களை "வாயுறைவாழ்த்தியலை யடக்கியலே-செவியறி வுறூஉவென வவையுமன்ன" என்ற சூத் திரத்தானே ஆசிரியர் தொல்காப்பியனர் மூவகைப் படுத்தலான், அவற்றுள் அவையடக்கியலாம் செய்யுள் கூறுமை யிழுக்கன்றே யென்றார். அதற்குப் பாண்டியனர் செவ்வனிறையாவது:—அர சர்க்குத் தங்குடிகண்மாட்டு என்றும் வழிபாடு பெறப்படாமையா னும், மூவகைப் படுத்திய தொல்காப்பியனரே தம் நூற்கு அவை யடக்கங் கூறுமையானும் யாம் புவிராசனுவதன்றிக் கவிராசனுவு மிருத்தலானும், நஞ்சமுகங் கண்டுழி யவையடக்கங்காணு மாக லானு மெமக் கஃதெஞ்ஞான்றும் வேண்டப்படாது என்பதாம். புலவர் அதுகேட்டு வியந்திருந்த பிற்றைப் பாண்டியன் அப்பீற்

பாவையரங்கேற்றி வருவானுயினுன். அவ்வாறு அரங்கேற்றி வரு உங்கால், நகரப்படலத்தில் வரும் செய்யுளாகிய "வாய்ந்தமின்னே" என்னும் பாடலே அரங்கேற்றும்போது ஓர் புலவர் எழுந்து ஆக்ஷேபித்த ஆக்ஷேபத்தையும், அதற்குப் பாண்டியனுர் உரைத்த விடையையும் அச்செய்யுளின் குறிப்புரையிற் காண்க. அதுபற்றிப் பாண்டியனுன்றி யவரது மனைவியாரும், மூற்காலத்துள்ள உமாபாத பங்கச்சாட்சியார், ஒளவையார், வாசுகியார், பாரிமகளிர், பூதப் பாண்டியன் தேவியார் பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, வெறிபாடிய காமக் கண்ணியார், நீலகேசி, கேமம், அஞ்சனுக்ஷி, வீணுகானபுரக் கோணநாயகியம்மையார், சண்பக வடிவி, வித்தியாகூரோசம், சைவ எல்லப்ப நாவலர் தேவியார் முதலினேர்போல, புலமையினும் சிறந்தவர் என்பது வெளியாகின்றது. மொழிபெயர்க்குங் காலத்து இவ்வரசியாருந் தங்கணவனுர்க்குப் பலவகையானும் உதவிபுரிந்தார் என்ப.

பின்னர் வாயுசங்கிதை என்னு நூலியற்றி யதனைத் தமயனுக்குக் காட்டிய காலே யவர் மிக்க மகிழ்ச்சியுற்றனர் என்ப இவர் இளமையிலே சிற்றின்பப் பிரியராயிருந்து வினைவயத்தால் அதனையே மெய்யின்பாக்கருதி யொழுகி அதனியல்களை யுணர்த்தும் கொக்கோக இருடியினுற் செய்யப்பட்ட கொக்கோகம் என்னு நூலை மொழி பெயர்த்து அப்பெயர் சாத்தியும், கந்தபுராண இந்திரபுரிப் படலத்திற் கூறப்பட்ட மதனசுகமியல்களை மொழி பெயர்த்து, மதனக்கிரீவை எனப் பெயர் சூட்டியும் வெளியிட்டார் எனவுங் கூறுப. அவற்றுட் கொக்கோகம் அவரது சகோதரர் பெயருடன் வெளியா யிருக்கிறது. இந்நூல்கள் செய்தற்குக் காரணம், மதமீறிய மங்கையரை யம்மூறையானே தம் வயப்படுத்தி, அவாக் கொண்டு இல்லற மென்னும் திருமசுகடத்தை யிழுப்பித்து உலகர் வீட்டு நெறிசேரு மியல்பிற்றன்றி, அவர்தம் சிற்றின்ப நெருக்கத்தானன்றென்ப தெளிந்திசினேர். பூர்வ வினை மேலீட்டானே யிவர்க்குத் தொழுநோய் பற்றிய காலத்துத் திருக்கருவை என்ற க்ஷேத்திரம் சென்று, அகோராத்திரம் பெருமானுரை வழிபட்டுவந்தார். அரசியின் தூண்டுதலால் திருக்கருவை வெண்பாவந்தாதிபாடி முடித்தார். திருக்களா ரீழற் பெருமான் சிவயோகத்துள் அஷ்டாங்கயோக வழியைச் சித்தவருக் கொண் டுணர்த்தியதுசெய்க, என்று சொற்பனத் துணர்த்தி யருள, அது செய்வாரர்யினர். இங்ஙன் இருக்குங் காலத்திற் றங் கணவனுர்க்கு நோய்

தீரா திருத்தல் கண்டு, பயமுற்ற அரசியார், தியானம் செய்தெழுந்த தங்கணவர்க்கண்டு "யோகபலம் எவ்வாறு இருந்தது" என வினவ, அதற்குவிடையாகவும், தியானத்து நிகழ்ந்ததை யுணர்த்துவதாகவும் பாண்டியனர் மேல்வருஞ் செய்யுளைக் கூறினர்.

* அஞ்சலென்ற கரதலமுங் கணபண கங்கணமு
மரைக்கிசைந்த புலியுடையு மம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனகழலுஞ் சிலம்புங்
கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்று
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பு
நலந்திகழ் வெண்ணீற்றெளியு மறிமானு மழுவும்
பஞ்சடிச்சிற் றிடையுமையா ளொப்பனைப் பாகமுமாய்ப்
பால்வண்ண னுளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே.

இச் செய்யுட் கருத்தையறிந்த அரசியார் ஒருவாறு மௌனமாயிருத்தல் கண்டு, ஏதோ ஒரு கருத்துற்றும், அதனை நம்மாட்டுச் சொல்லுதல் கூடாதென் றன்றோ வாளா மறுகின்றனளென்று, நாயகன் சொற்படி நடத்தல் மங்கையர் கடனென நங்கைமீ யறிவையே. ஆதலின் நின்கருத்தைத்தெரித்தி, அஞ்சாதே யெனப் புகல, இத்துணையும் இச்சகுனபாவனையிற்றான் நிற்கின்றீரோ? இன்னும் அத்துவித பாவனையே யோகபலமாயுள்ளது; யோகபாவம் வேதாந்தமும், அத்துவிதபாவம் சித்தாந்தமுமாக விளங்குவனவன்றே? ஆகலின் அப்பாவனையைக் குறிப்பிற் புகல்வார் போன்று, மேல்வருஞ் செய்யுளை மனைவியார் கூறினர். அதுவருமாறு:—

ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைத்தணையாப் பொருளை
யருளொளியைப் பரிபாரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்குந்
நிறைத்து நின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்.

---

* இதுவும் அடுத்த செய்யுளும் இவர் தமயனர்க்கும் அவாது மனைவியார்க்கும் நிகழ்ந்த பாடல்களாமென்பர் சிலர். சீமதசையிற் பயந்தகாலை மனைவி கேட்டதென்ப.

இச்செய்யுளில் வேத சிரசுகளான யோகதத்தோப நிடதம், தரிசனோபநிடதம் என்பன வுணர்த்திய மெய்ப்பொருட் பாவனை யிருத்தல் கண்டு வியப்பும் மகிழ்வும் மீக்கூரப்புகழ்ந்து, நம் புண்ணியப் பயனன்றே நின்னுருவாக வந்தடுத்தது என்று களி கொண்டு நிற்குண பாவனைசெய்ய நேர்ந்தார். அக்காலத்திற் றோன்று மெய்யன்பு மேலிட்டானே, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி என்னும் பாமாலைகளைச் சாத்தினர். பரமனருளாலே தொழுநோயகன்று உதய சூரியன்போலிலகினர். தேவியுங் களிப்பெனுங் கடன் முழுகினள். அந்தாதிப்பாக்கள் ஒவ்வொன்றும் கல்லியு முருக்குந் தன்மை வாய்ந்தன.

இவர் செய்த வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகைநூலின் அருமை பெருமை கோக்கியே, ஆங்கில திராவிட ஆரிய பாடாவிற் பன்னரான டயிலர் என்னும் ஐரோப்பியர் ஆங்கில பாடையில் அதனை மொழி பெயர்த்தனர். சேதுபுராணம் செய்தருளிய நிரம்ப வழகிய தேசிகர் இவர்க்கு ஆசிரியாராயிருந்தனர் என்றும், ஒரு கால் பாண்டியன் அவரை வெகுண்டுநோக்கி, அவர் மிக்க கருநிற முடையரா யிருந்தமையால் அதனைச் சுட்டி "அண்டங் காக்கைக்குப் பிறந்தவரே" என்று அழைக்க, அவர் அரசனே! நீவிரே அண்டங் காக்கைக்குப் பிறந்தவர்; யாமல்லேம்; என்ன. பாண்டியனர் பின்னும் வெகுண்டெழ, சித்தியார்க்கு வியாக்கியானஞ் செய்தார் அறுவருள் ஒருவராம் அழகியார், அண்டத்தைக் காத்தற்குப் பிறந்தவர் நீவிரோ? யாமோ என்ன, அப்பொருளருமை கோக்கிக் கோபந்தணிந்து அவர்மீது மிக்க அன்புவைத்தொழுகினர் என்றும் உரைப்பாருமுளர். நிரம்ப அழகிய தேசிகர் அவர்கள் குருவாக விருப்பரேல், குருவணக்கத்தில் வாழ்த்தன் முறை பற்றி வாழ்த்தப் படாமையானும், அவ்வகைச் சம்வாதம், கந்தபுராணச் சுருக்கம்செய்த சம்பந்தசரணாலய சுவாமிகட்கும் மைசூர் அரசற்கும் நிகழ்ந்ததென்று சிலர் கூறுபவாகலானும் அஃதுண்மைக் கிடமின்றாயிற்று. அவ்வாறு சம்வாதம் புரிந்தார் இவராயின் ஆசிரியரெனக் காட்டப்பட்டார் மூவருள் ஒருவரோ டெனக் கொள்க.

புலியாலும் வேந்தற்கு, கவியாலும் கல்லிசைப் புலவர் பலரானும் இன்றியமையாதனவாகச் சிறப்பித்தோதப்பட்ட பெருங் குணங்கள் வீரம், நியாவம், நியாயம் என்பனவாம். இம்மூன்றனை

யும் பலருக்கும் ஒலியானும் புலப்படுத்தற் கன்றே மும்மூசங்கள் ஏற்படுத்தினர் மன்னர் அது புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, சங்காசோழனுலா, விக்கிரமசோழனுலா முதலிய நூல்களாற் பெறப்படும். இம் மூன்று முடையா னிப்பாண்டிய னென்பது பெயரானும், இயற்றிய நூல்களானும், கொடையானும் விளங்கும். இராமன் என்னும் பதத்துடன், அதிவீரன் என்னும் பதஞ்சேர்த் திருத்தலே மேலான சான்றும். அக்காலத்திருந்த மிலேச்சர் தமையும், குறும்பர்களையும் சமணர் புத்தர் மாயாவர்தி, உலகாயதர் முதலாயி னோரையும் சொற்போர், விற்போர் என்னும் இருசமத்தானும் வென்றுகொண்டு, இலௌகிக அரசும், வைதிக அரசும் செவ்வனே நடத்தினர்.

இந் நூலாசிரியர் இருந்த காலத்தை யாராயுமிடத்து இங்கிலந்தின்கணுள்ள ஆக்ஸ்போர்ட் நகரத்திலிருந்த சம்ஸ்கிருத பாஷாவிற்பனராகிய ஹோரேஸ் ஹோமென் வில்சன் என்னும் ஐரோப்பியர் சிலாசாதனங்களைக் கொண்டு ஆராய்ந்து எழுதிய (இண்டியன் ஆவ் பாண்டிய) "பாண்டிய அரசர்" என்னும் சரித்திர நூலிலே, "தமிழ்க் கல்வியிலே பாண்டியன் என்னும் பேர்தான் ஒரு பிரபலமானபெயர். கொற்கையிலிருந்து அரசாண்ட குலசேகரன் என்பவனே அதிவீரன், அல்லது அதிவீர னெனச் சொல்வது முண்டு. அவன் வடமொழியிலிருந்து அநேக நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்தனன் என்றும். கி-பி-1051-க்குச் சமமான சாலிவாகன சகாத்தம் 973வருத்திலே அவன் பிரபலமுற் றிருந்தான்" என்றுஞ் சொல்லப்பட்டுளது. ஆகலால் இந்நூலாசிரியர் காலம் பதினொருவது நூற்றாண்டென்றே தெளியப்படும். எனவே யிற்றைக்குச் சுமார் 100வருத்துக்குமுன் இருந்தனர் என்று கொள்ளுதல் வேண்டும். இவர் இந்நூற்கு வடமொழி காவ்யாதர்சமே முதனூலாகக் கொண்டனர் என்பது அதனை யாராய்ந்தார்க்கு இனிதுபுலப்படும்.

நூலாசிரியர் வரலாறு

முற்றிற்று.

இந்நூல் ஆசிரியர் இயற்றிய நூல்கள்.

கூர்மபுராணம்.
இலிங்க புராணம்.
காசி கண்டம்.
வாயு சங்கிதை.
திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி.
கலித்துறை யந்தாதி.
வெண்பா வந்தாதி.
நூற்றொகை அல்லது வெற்றி வேற்கை.
கைடதம்.
தனிப்பாடல்கள்.

இவற்றுள் வாயுசங்கிதை குணசேகர பாண்டியர் என்பார் இயற்றியதென்றும், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி மிக்க உருக்கமும், சொற்சுவை பொருட்சுவைச் செறிவுகளு முடைமையாலும், பதி பசுபாச விலக்கணங்களை விலக்கிச் சித்தாந்த வியல்தமை விளக்குந் தன்மையானும் குட்டித் திருவாசகம் என்றுங் கூறுவர். அங்ஙனங் கூறுதல் பொருந்தா. என்னை? திருவாசகம் என்னுந் திருவருட்பாவிற்கு ஒப்பாகவும் உயர்வாகவும் அடுத்தபடியாகவும் ஓர் நூலிருக்கின்ற தென்பது மாபாவமென்று பேரறிவுடையார் கூறலினென்க. கொக்கோகம் மதனக்கோவை என்னு நூல் அதிவீரராம பாண்டியனர் செய்து, தமது தமயனாகிய வரதுங்கராம பாண்டியனர் பெயரால் வெளிப்படுத்தினரென்ப.

நவ தமயந்திகளின் சரிதம்உரைத்த நூல்கள்.

கூர்ம புராணம்.
பார்க்கவ புராணம்.
வியாச பாரதம்.
வில்லிபுத்தூரார் பாரதம்.
நல்லாப்பிள்ளை பாரதம்.
வடமொழி கைஷதம்.
நளவெண்பா.
திவாகரம்.
பிங்கலந்தை.
சூடாமணி நிகண்டு.
கைஷதியப் பிரகாசம்.
சுகாவபோதம்.
திலகம்.
தீபிகை.
சாகித்திய வித்தியாதரி.
ஜீவாது.

வடமொழி நைஷதம்.

ஸ்ரீ ஹர்ஷகவி அவர்களாற் செய்யப்பட்ட வடமொழி நைஷதம் பற்பல அலங்காரத் தொகுதிசெறிந்த இருபது சருக்கங்களையுடையது இவ்வரிய காப்பியத்திற்கு அறுவர் வியாக்கியானஞ் செய்துளார். அவர்தம் பெயர் வருமாறு:—நாராயணர், ஜினராசர், சாரித்திரவர்த்தன சூரி, நரஹரி, வித்யாதரர், மல்லிநாதசூரி என்னுமிவரென்க. இவர் செய்த உரைகள், முறையே நைஷதியப் பிரகாசம், சுகாவபோதம், திலகம், தீபிகை, சாகித்திய வித்தியாதரி, ஜீவாதது எனப்பெயர் பெறும். இவ்வியாக்கியானம் ஆறனுள் ஸ்ரீமல்லிநாதசூரி அவர்களாற் செய்யப்பட்ட ஜீவாதது வியாக்கியானமே விசேடமாகப் பண்டிதர்களால் எடுத்தாளப்படுகின்றது.

வடமொழி நைஷத ஆசிரியர்.

அரசகுல திலகரும் புலவரேறுமாகிய அதிவீரராம பாண்டியனர் செய்த இச் செந்தமிழ் மொழி நைடத நூலுக்கு முதனூல் வடமொழி நைஷதமென்க அந்நூல் மகாவித்வான் ஸ்ரீ ஹர்ஷ கவி அவர்களாற் செய்யப்பட்டது அவர் தந்தையார் ஸ்ரீ கிரர் எனப் பெயர்பெறுவர் தாயார்பெயர் மாமல்ல தேவியார் மந்திரங்கள் பலவற்றினும் மேம்பட்டதாகிச் சிவபெருமானையே அதிதேவதையாகவுடைய ஸ்ரீ சிந்தாமணி மந்திரத்தை யுபாசித்தவர் அதன்பலத்தாலே வடமொழிப் பாண்டித்திய மடைந்து அதனைச்செய்தனர். இவர்தம் சைவசித்தாந்த நிலையாகும். உபநிஷத தாற்பரிய சங்கிரகம், சிவலிங்க தத்வ போதம், சிவமாதிருகா மந்திர தோத்திரம், வேங்கட குகேச ஸ்தல நிரூபணம் முதலிய கிரந்தங்களீ செய்து புகழ் புண்ணிய மிரண்டும் பெற்றார் என்று தெரிகிறது.

நளதியானங் காரியசித்தி என்பது.

* "அரிச்சந்திர னளன் முசுகுந்தன் புரூரவாச் - சகரன்
கார்த்த வீரிய னென்றிவர் - அறுவகைச் சக்கரவர்த்திகளென்ப."
எனப் பிங்கலந்தை கூறியவாறு, அறுவகைச் சக்கரவர்த்திகளுள்
ஒருவனுய நளச்சக்கரவர்த்தியை நினைத்தாலும் எல்லாக்காரியங்
களுங் கைகூடுமென்று இந்திரனே கூறினன். அதனை யிந்நூலில்,
நளன்மீதுப் படலத்து, 34 - செய்யுளாற் றெரிக. அன்றியும்
"தரைதிருத்தியசீர் வினியனென்னுந் தனிக்குடைப் பிருதுவேந்
தனையும் - விரைமலர்த்தொடை யேகையன்றருகார்த்த வீரியவருச்
சுனன் றனையு - மூதைசகுந்தலை புத்திரனெனும் பரதனெடு நள
னையு மொருசெயற்குப் - புரையறச் செல்லும்பொழுது முன்னி
ரைப் பொருள்பெறீஇ விரைக்குமீள்குவரால்" என்ற செய்யுளானு
முணர்க.

நிடததேச விவரம்.

நிடதம் என்னும் மலையையுடைய தேசமே நிடததேசம் எனப்
பெயர்பெறும். நிடதமலை என்பது, மேருமலையின் றென்றிசை
யிலேயுள்ள மூவகை மலைகளு ளொன்று. மூவகை மலைகள் ஆவன:-
நிடதம், ஏமகூடம், இந்தாரம் என்பன. இவை யொவ்வொன்றும்
2000-யோசனை தூரம் உயர்ந்து அகன்று ஆழ்ந்து விளங்கும். இந்
நிடதமலைக்கட் பலவகை நிறத்தனவாகிய தருக்கள் உள்ளன.
ஈசான ஈச்சர பார்வதீபதி யென்னும் பெயர்களுள்ள சிவலிங்கங்
களைத் தேவர்கள் பூசித்துநிற்பர். ஈண்டுச்சொல்லப்பட்ட நிடதம்
மந்தாரத்தின் கீழ்த்திசையிலிருக்கும் பன்மூன்று மலைகளு ளொன்
றன்று. பதின்மூன்று மலைகளாவன—சீதாந்தம், சாருகுந்தம்,
குரூடி, சுசிலோத்தமம், மணிகணம், சிலாத்திரி, விருக்கவாது,
உருக்குமவித்துவாது, மந்தர வேணுமாது, மேககிரி, நிடதம்,
தேவாகம் என்பனவாம். இத்தகைய மலைசெறிந்த நிடததேயம்
ஆனது, பட்டு, பெருங்கிராமம், மடப்பம், புரி, என்னுமிவை
செறிந்த நாடுகள் பலவற்றையுடையதாய், மருவூர்ப்பாக்கம், பட்டி
னப் பாக்கம், இராசதானி யிவைவாய்ந்த நகரத்தை யுடைத்தாய்
விளங்கும். இந்நிடத தேசத்திலே மாவிந்தம் என்னும் நகரமே
நளனிருந்த இடமாகும்.

---

* சில நூல்களிலே சகரன் என்பதற்குப் பிரதியாகப் புருகுச்சன் என்
பவனைக் கூறப்பட்டிருக்கின்றது.

உ

சிவமயம்.

நைடத நூற்பயன்.

நல்லாப்பிள்ளை பாரதம்.

யாவரே யுளரெனினு மவர்தங் காதை
யிசைத்திடுக வெனக்கேட்கு மிறைவற் காங்குத்
தேவரெலா முடிதுளக்கு முனிவன் சொல்வான்
றிகழ்நிடத நாட்டிறைவன் செகங்கை விட்டு
மேவருங்கா னகம்புகுந்தான் சூதா லென்னும்
வியன்சரித மிவ்வுலகில் விளம்பா ருண்டோ
காவலனே யானுமதைப் புகல்வன் கேண்மோ
கடக்குவைநந் துயரமெனக் கழற லானன்.

ஆதலாலித்தப் புண்ணியன் சரித
மார்வுறக் கேட்டுளோர் தமக்குந்
தீதறப் புகன்றோர் தமக்கு மெவ்வமூழ்
சித்தியாங் கலிதொடா தென்றே
போதனே யிவனென் றுரைத்திடு முனிவன்
புகன்றணி யாசிக ளியம்பி
மீதவ னகன்றன் பாண்டவ ரிருந்தார்
வீணமா முனியவ ணடைந்தான்.

இந்நூலிற் கலிநீங்கு படலம் (17)

இழைத்த தீவினை தணந்தன னின்று தொட்டுன்பேர்
வழுத்தி னுரையு மருவலன் மன்னவன் றேத்த
வழற்கொடுஞ்சினந் தணிந்தன னுடல்வே லரசன்
குழைத்த தான்றியி லேறினன் கொடியவெங் கலியே.

——

நளச்சக்கரவர்த்தி வமிசவரலாறு.

வேளிர், சாமந்தர், மண்டலீகர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், இரர்சர், மகாராசர், சக்கரவர்த்திகள் என மன்னவர் எண்வகைப்படுவர். இவர் முறையே ஒருவர்க் கொருவர் உயர்ந்தவராவர். அவருள் மகாராசர் பதினறுவர். அவர் பெயர்களாவன— கயன், அம்பரீடன், சிபிசிந்து, சிபி, பிருது, மருத்துவான், பாதன், சுகோத்திரன், இராமன், திலீபன், இரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அநங்கன் என்பனவாம்.

முன்னர்க் காலத்திற் சக்கரவர்த்திகள் அறுவர் இருந்தனர். அவர் அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், முசுகுந்தன், கார்த்தவீரியார்ச்சுனன் எனப்பெயர் பெறுவர். இவ்வறுவரும் சிவபெருமானுலே அருளப்பட்ட சக்கரத்தைப்பெற்று நிலவுலகத்தைப் பொதுவறப் புரத்தலாலே சக்கரவர்த்திக ளெனப்பெற்றார். இவ்வறுவருள் நளச்சக்கரவர்த்தி கிருதயுகத்திலேயே நிடத தேயத்திலே மாவிந்தம் என்னும் நகர்க்கண் இருந்து அரசாண்டவராவர். வீரசேன ராசனின் புதல்வன் என்ப. வள்ளன்மார் மூவகையருள் வரைவின்றி யாவர்க்குங் கொடுக்கும் முதல் வள்ளல் எழுவருள் ஒருவர். சந்திர குலத்திலே தோன்றிய இச் சக்கரவர்த்தியின் வமிச வரலாறு கூறுவாம்.

1. சந்திரன்
2. புதன்
3. புரூரவன்
4. ஆயு
5. பிரபை
6. நகுடன்
7. யயாதி
8. துருவசு, எது
9. சகத்திரசித்து
10. சதசித்து
11. கேகயன்
12. தருமன்
13. தாமசேத்திரன்
14. கீர்த்தி
15. சஞ்ஞக்கினன்
16. மயிட்டுமான்
17. பத்திரசிரேணி
18. துத்தமன்
19. கிருதவீரியன்
20. கார்த்தவீரியன்
21. கிட்டிணன்
22. மது
23. சயத்துவசன்
24. வீதிகோத்திரன்
25. அனந்தன்
26. துர்ச்சமன்
27. சுப்பிரீதன்
28. குரோட்டு
29. துவசனி
30. மூர்த்தி
31. விசங்கு
32. சித்திரரதன்
33. சசிவிந்து
34. பிருதியச்சு
35. பிருதுகன்மம்
36. யாகபார்க்கன்
37. பிருது
38. பிருதுசத்தமன்
39. உசன்
40. சிதடு
41. க்வசன்
42. சாரவிருத்தன்
43. உதயியன்
44. விதர்ப்பன்

45. உரோமபாதன்	48. சந்தன்	51. இச்சுமந்துவின்
46. பப்புரு	49. விச்சுவசமன்	குமாரனே நளச்சக்க
47. விருத்தி	50. சுமந்து	ரவர்த்தி என்க.

கூர்ம புராணம்.

விழுதுவிட்டொழுகுமுத்த வெண்ணிலாமாலைதாழு
மெழுவுறழ்குவவுத்திண்டோட் சுமந்துவினெழில்கொண்மைந்தன்
கழுதுகைகொட்டியால வொன்னலர்க்கடிந்தவாய்வாண்
முழுதுலகொருகோலோச்சு நளனெனுமூரிவேலான்.

52. நளனது குமாரன் கேசிகன் எனப்படுவான். இந்நூலிலே நளன் மகன் இந்திரசேனன் என்றுரைக்கப்பட்டது. கேசிகனுகிய இந்திரசேனனதுமகன் :—

53. சோதிட்டுமன்	62. தசாருகன்	71. தேவரன்
54. வபுட்டுமான்	63. ஆரோகன்	72. தேவபக்கன்
55. பிரமமேதி	64. சீமுதன்	73. மது
56. சீதரன்	65. விகுதி	74. குரவசன்
57. விகாதன்	66. பலாச்சுவன்	75. மனு
58. கிருது	67. நவாச்சுவன்	76. புருகுச்சன். மற்
59. குணி	68. தசரதன்	றவர் களையும்
60. விருட்டுணி	69. சகுனி	இவ்வாறே கா
61. நிருவிருத்தி	70. காந்தி	ண்க.

நைடதம் என்னும் பெயர் விளக்கம்.

நைஷதம் என்னும் வடமொழி நைடதம் எனத்திரிந்து நின்றது. நிஷதம் என்னும் தேயத்தை யாள்பவன் நைஷதன் என்ப. இது வடமொழித் தத்திதாந்தநாமம் ஆகும். நைஷதன் என்னும் நளனது சரித்திரத்தைக் கூறும் நூல் நைஷதம் எனப்படும். நிடதம் என்பது ஓர் தேயம். நிடதம் என்னும் ஓர் மலை இருத்தலால் அங்காட்டிற்கு நிடதநாடு எனப் பெயர் வந்தது. நிடதமலையாவது மகாமேருவரைக்குத் தென்றிசையிலேயுள்ள ஏமகூடம், மந்தரம், நிடதம் என்னும் மூன்று முக்கியமலைகளுள் ஒன்று. அம்மலை இரண்டாயிரம் யோசனை நீளமும், அத்தனை அகலமும் அந்தராந்தரங்களும் உடையது. இம்மலையினிடத்தே பலவகை விசித்திரதருக்கள் விளங்கும். தேவர்கள் ஈசான லிங்கத்தை யாராதித்து இருப்பார்கள. வடமொழியிலேயுள்ள கூர்ம மகாபுராணம், பாரதம் நைஷதம் என்னு நூல்களையும், செந்தமிழ்க்கனுள்ள நளவெண்பாவையும் முதனூலாக்கொண்டு இது செய்யப்பட்டது என்க. "நைடதம் புலவர்க் கெளடதம்" என்னு முதுமொழியினாலே இந்நூலின் சிறப்பு நன்கு விளங்கும்.

நேடதமூலமும்
விருத்தி உரையும்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

இதனுல் எடுத்துக்கொண்ட காப்பியம் இடையூறின்றி
இனிது முடிதற்பொருட்டு உயர்ந்தோர் வழக்கத்
தின்படியே கவி, கடவுள் வணக்கஞ்
செய்தல் சொல்லப்படுகின்றது.

தழைவிரிகடுக்கைமாலைத் தனிமுதல்சடையிற்சூடுங்
குழவிவெண்டிங்களிற்ற கோட்டதுகுறையென்றெண்ணிப்
புழைநெடுங்கரத்தாற்பற்றிப் பொற்புறவினைத்துநோக்கு
மழைமதக்களிற்றின்செய்ய மலரடிசென்னிவைப்பாம்.

இ-ள். தழை - செழித்த, விரி - மலர்ந்த, கடுக்கை - கொன்றைமலர்களாகிய, மாலை - மாலையையுடைய, தனி - ஒப்பில்லாத, முதல் - பரமசிவனுல், சடையில் - சடையின்கண், சூடும் - சூடப்பட்டிருக்கிற, குழவி - இளமையாகிய, வெள் - வெள்ளிய, திங்கள் - சந்திரனை, இற்ற - ஒடிந்த, கோட்டது - (தன்) கொம்பினது, குறையென்று - சேடமென்று, எண்ணி - நினைத்து, புழை - துளையையுடைய, நெடு - நெடிய, கரத்தால் - துதிக்கையினுலே, பற்றி - பிடித்து, பொற்பு - அழகானது, உற - பொருந்த, இனைத்து - (அதிற்) பொருத்தி, நோக்கும் - பார்க்கின்ற, மழை - மழை போல்கின்ற, மதம் - மதத்தையுடைய, களிற்றின் - யானையாகிய விநாயகக் கடவுளுடைய, செய்யமலர் - செந்தாமரைமலர்போலும், அடி - திருவடிகளை, சென்னி - தலைமேல், வைப்பாம் - (யாம்) சூடிக்கொள்வாம் என்ற வாறு.

தழைகள் விரிந்த கடுக்கை எனினும் பொருந்தும். தழை—தழைப்பது தழை விரி என்கிற பெயரெச்சத் தொகைகளடுக்கிக் கொன்றைமலரென்கிற வினைமுதற்பெயர்கொண்டன. கடுக்கை - முதலாருபெயர். வேதத்திற்கும் முதலாயுள்ள பிரணவப் பொருளாயுள்ளார் தாமே யென்பதை யுலகிற்கு அறிவுறுத்துவான் சிவபெருமான், அதுபோலும் வடிவினையுடைய கொன்றை மலர்மாலையைத் தரித்தனர் என்க. களிறு—மதக்களிப்பினையுடையது. எல்லா அவயவங்களிலு முதன்மையாகிய தலை யானைத்தலையாயிருத்தல்பற்றி விநாயகக்கடவுள் யானையென்ரு ரென்னல் பொருந்தாது அமரரிடர் தீர்த்த வறுமுக நம்பிக்குக் கானகத்தே வள்ளியங் கொடியைச்

சேர்ப்பான் யானை யுருக்கொண்டு சென்றருளினர் ஆகலின் களிறென்றார். அதற்கு மேற்கோள்:—

கந்தபுராணம் - வள்ளியம்மை திருமணப்படலம்.

பொன்னே யனையாண் முன் போகுந் திறனேக்கி
யென்னே யினிச்செய்வ தென்றிரங்கி யெம்பெருமான்
றன்னே ரிலாததொரு தந்திமுகத் தெந்தையனை
முன்னே வருவாய் முதல்வாவென நினைந்தான்.

அந்தப் பொழுதி லறுமா முதற்கிரங்கி
மூந்திப் படருகின்ற மொய்குழலாண் முன்பாகத்
தந்திக் கடவுட் டனிவா ரணப்பொருப்பு
வந்துற்ற தம்மா மறிகடலே போன்முழங்கி.

பலமலர்களினும் தாமரை மலர் சிறந்தமைபற்றி மலரெனப்பட்டது. "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்பதனாலறிக. தந்தைக்கு மூத்த பிள்ளையின் மீதும் தாய்க்கு இளைய பிள்ளையின் மீதும் அன்புமிகுதலாலும் யற்கையாகலாற் பரமசிவனிடத்தே விநாயகக் கடவுளுக்கு விளையாட்டுச் சொல்லப்பட்டது. "மூத்த மகனிடத்தார்வமீன்றெடுத்த பிதாமகற்கு முதிரு மாற்றால்" என்பதனாலுமறிக. பிறையைக் கொம்பின் குறையென்று மயங்கினமையால் **மயக்கவணியாம்.** இது பெரும்பாலு முதற்சீரும் நான் காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றை நான்கு மாச்சீர்களுமாகிய வடிகளால் வந்த ஆசிரிய விருத்தம். வைப்பாம் என்றது தனித்தன்மைப் பண்மை வினைமுற்று. இற்ற கோடு - விநாயகக் கடவுளால் ஒடிக்கப்பட்டகோடு. செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்குநின்றது. 1

அதற்கு மேற்கோள் கந்தபுராணம் கயமுகனுற்பத்திப் படலத்தில் 246, 247-ம் பாடல்களைக் காண்க. "மழவுங் குழவுமிளமைப்பொருள்" என்ற தொல்காப்பிய விதிகொண்டு, குழவி என்றதைக்குழவு என்றதன் றிரி பென்றும், குழவு என்னும் உரிச்சொல்லுடன் இ என்னும் உடைமைப்பொ ருள் விகுதிசேர்ந்து குழவி என்றுமிற்றென்றும் உரைப்பாருமுளர். "ஒன்ப தங் குழவியோடிளமைப்பெயரே" எனத் தொல்காப்பியத்து மரபியலிற் கூறப்பட்டதனால் அவை பொருந்தாவென்க. பொற்பு என்னும் உரிச் சொல் பொலிவென்னும் பொருட்டு. பொற்பே பொலிவு என்றது தொல் காப்பியவிதி.

* சிறப்புப்பாயிரம்.

இதனுல் ஆக்கியோன்பெயர் முதலானவை சொல்லப்படுகின்றன.

நிலவுபொழி தனிக்கவிகை நிடதர்கோன் புகழ்ச்சரித கெடு நீர் வைப்பிற், புலவர்களி யமிழ்தொழுகு புதுமொழி கூட்டுணத் தமிழாற் புனைதல்செய்தான், வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான் றொடுபொற் கோட்டிமய வரையிற்றீட்டி. யலர்தலைமா நிலம்புரக்கு மதிவீராராமனிக லச்சரேறே.

இ - ள். இகல் - பகைத்த, அரசர்-மன்னராகிய யானைகளுக்கு, எறு-ஆண்சிங்கமாயுள்ளவனுகிய, வலன் - வெற்றியினுல், உயர்த்த - உயர்த்தப் பட்ட, அண்ணல் - பெருமை பொருந்திய, அம் - அழகிய, சேல் - மீனக் கொடியை, வான் - ஆகாயத்தை, தொடு - அளாவிய, பொன் - பொன்னை யுடைய, கோட்டு - சிகரத்தையுடைய, இமயவரையில் - இமயமலையினிடத்தே, தீட்டி - (தனக்குரிய வெல்லைக் கல்லாக) எழுதி, அலர் - பரந்த, தலை - இடத்தையுடைய, மா - பெரிய, நிலம் - பூமியை, புரக்கும் - காக்கின்ற, அதிவீராராமன் - அதி வீராராமனென்கிற வியற்பெயருடைய (பாண்டியராசனுனவன்), நிலவு - சந்திரிகையை, பொழி - பொழிகின்ற, தனி-ஒப்பற்ற, கவிகை - (முத்துக்) குடையையுடைய, நிடதர்கோன் - நளமகாராசனது, புகழ் - புகழையுடைய, சரிதம் - சரித்திரமாகிய, கவி - கவிப் பைத் தருகின்ற, அமிழ்து - அமிர்தத்தை, ! நெடுநீர் - கடலாற்சூழப்பட்ட, வைப்பில் - பூமியிலுள்ள, புலவர் - புலவரானவர், கூட்டுண - கொள்ளை கொள்ளும்படியாக, ஒழுகு - (அவ்வமிர்தம்) பெருகுகின்ற, புதுமொழி - புதியகாப்பியத்தை, தமிழால் - தமிழ் மொழியினுலே, புனைதல்செய்தான் - அலங்கரித்துப் பாடினுன் எ-று. 2

புலவர் - விசேடித்த அறிவையுடையவர். செயற்கை யறிவுடையவர் என்பர் ஆசிரியர் பரிமேலழகரும்.

புலவரென்பது தேவர்க்கும் வித்துவான்களுக்கும் பெயர். இங்கே வானென்றது நீலநிறமுள்ளதாகக் காணப்படுமாகாயமாம். பின் வருவன வற்றையும் இப்படியே கொள்க. கூட்டுணற்குக் கொள்ளையிடற்கென்பது "நலமணிமருடந்தேடிக் கண்டிலர்நீதிநில கண்டிலர் நிகைத்து வாடிச் சிந்தைநோயுழந்திது மாற்றவர் கூட்டுண்டோடிப்போயினது" என்பதனு

* "ஆக்கியோன் பெயரே வூழியே யெல்லை" எனவுரைஞ் சூத்திரவியலை யுரைத்தலின் சிறப்புப் பாயிரமாயிற்று. அவை யகத்தாரெல்லார்க்கும் வழிபடு தெய்வஞ் சொல்லுதல் அவையடக்கமாகலின், அதுகூறுராயினர். என்னை? அலர்தலை மாநிலம் புரக்கு மிகலரசேறு மிருத்தலால், வழிபாடு கொள்ளின் மாறுமென்க.

லறிக. மொழியென்பது தன் காரியமாகிய காப்பியத்தை யுணர்த்த, புது வென்பது அக்காப்பியத்தை விசேடித்து நிற்கையால் இருபெயரொட்டாகு பெயரீமென்றறிக. கவிகை - கவிந்திருப்பது, குடை. அமிர்தம் என்னும் வடமொழி அமிழ்து எனத்திரிந்து நின்றது.

அதிவீராராம னெனவே ஆக்கியோன்பெயரும், நிடதர்கோன் புகழ்ச்சரிதம் எனவே நூதலிய பொருளும், அக்காரணத்தாலே தோன்றுகிற நைடதம் என்கிற வடமொழிப்பெயரே இதற்குப்பெயரென்பதும், கூட்டுணவெனவே இந்நூலுக்குப் பயனும் பெறப்பட்டன. தமிழாற் புனைதல் செய்த னெனவே முன்பிது தமிழிலின்றி வடமொழியி லிருந்தெடுத்துத் தமிழின் மொழிபெயர்க்கப்பட்டதென்பது குறிக்கப்படுகின்றது. நெடுநீர்வைப்பிற் புலவர்களி யமிழ்தொழுகு என்றதனால் விண்ணிற் புலவர்க்குக் கடலமிர்தம் போல மண்ணிற்புலவர்க்கு இச்சரித்திராமிர்த மகிமையுமென்னும் உவகையணி தொனிக்கின்றது. 'இகலரசேறு' என்பதில் அதிவீராராமனிடத்தே சிங்கத் தன்மையை எற்றினதற்கேற்கப் பகைவரிடத்தே யானைத்தன்மையை யேற்றுமையால் ஏகதேச வுருவகவணியாம். இது பெரும்பாலு மீற்றுச் சீர்களிரண்டு மாச்சீர்களு மற்றை நான்குங் காய்ச்சீர்களுமாகிய வடிகளால் வந்த ஆசிரியவிருத்தம். 1

நாட்டுப் படலம்.

நளஞலாளப்பட்ட நிடதநாட்டின் வளத்தைச்சொல்லுகிறது.

கலிநிலைத்துறை.

கருவிம்மாமழைகலைமகளுருவெனவிளங்கி
யிருவிசும்பிடைப்படர்ந்துசென்றினமணிகொழிக்கும்
பரவைவெண்டிரைமேய்ந்துயர்பனிவரையுயிர்த்த
வுருவவோடரித்தடங்கணளருக்கொடுமீண்ட.

இது முதலிரண்டு செய்யுள்களால் மழையின்
சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ - ள். கருவி - உலகத்திற்குத் துணைக்காரணமாகிய, மா - பெருமை பொருந்திய, மழை - மேகங்களானவை, கலைமகள் - சரசுவதியினது, உருவென - வடிவம்போல, விளங்கி - வெண்மையாக விளங்கி, இரு - பெரிய, விசும்பிடை - ஆகாயத்தினிடத்தே, படர்ந்து - பரந்து, சென்று - போய், இனம் - இனமாகிய, மணி - இரத்தினங்களை, கொழிக்கும் - கொழிக்கின்ற, பரவை - கடலினது, வெள் - வெள்ளிய, திரை - அலைகளையுடைய நீரை, மேய்ந்து - குடித்து, உயர் - உயர்ந்த, பனிவரை - மலையரசனுல், உயிர்த்த - புதல்வியாகத் தரப்பட்ட, உருவ - காதுகளுக்குநேராக - ஓடு-ஓடுகின்ற, அரி - செவ்வரிபடர்ந்த, தடம் - விசாலமாகிய, கணள் - கண்களையுடைய பார்வதியினது, உரு - கருநிறத்தை, கொடு - பெற்று, மீண்ட - திரும்பின. எ - று.

மழை கருவியாதல் திருக்குறள் வான்சிறப்பிற்காண்க. கருவி என்பதற்கு மின்னல் இடி முதலிய தொகுதி யெனல் ஈண்டுச் சிறப்பன்று. கலைமகள்—கலைகளுக்குத் தலைவி. மணி—அலங்காரத்தை யுடையது. வேகடியாற் சூழப்படுவது என்னலுமொன்று.

முன்னுரு - வடிவு, பின்னுரு - நிறம். "உருவேயுட்கும் ;வடிவுமாகும்" என்பதனுலறிக. மழை கலைமகளுருவெனவிளங்கி—இதில் கலைமகளுரு உபமானம். மழை உபமேயம். என - உருபு விளங்கல் - பொதுத்தன்மை. இந்நான்கும் விரிந்து நிற்கையால் விரியுவமை யணியாம். தடங்கணளருக் கொடுமீண்ட - இதில் மழையாகிய உபமேயத்திலே தடங்கணளருவாகிய உபமானத்தின் குணத்தை யேற்றலாற் பதப்பொருட்காட்சியணியாம். பரவை பரத்தலுடையது. மழை மீண்ட வென் றியைக்க. இதுமுதல் பத்துப்பாட்டுகள் வரைக்கும் பெரும்பாலு முதற்சீரு மீற்றுச்சீரு மாச்சீர்களு மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய வடிகளால் வந்த கலிநிலைத்துறைகள்.

அன்னங்கண்படுதண்பணைநிடதநாடளிக்கும்
மன்னர்மன்னவன்மண்டமர்கடந்த * வொள்வேலின்
மின்னியாங்கவன்முரசெனவிண்ணிடையதிர்ந்து
பொன்னங்குன்றின்மேலவன்கொடைபோன்மெனப்பொழிந்த.

இ-ள். அன்னம்-அன்னங்களானவை, கண்படு-தூங்குகின்ற,தண்-குளிர்ச்சி பொருந்திய, பணை - கழனிகளையுடைய, நிடதநாடு - நிடததேசத்தை, அளிக்கும் - காக்கின்ற, மன்னர் - அரசர்களுக்கு, மன்னவன் - அரசனாகிய நளனது, மண்டு - நெருங்கிய, அமர் - போரை, கடந்த - முடித்த, ஒள் - ஒள்ளிய, வேலின் - வேல்போல, மின்னி - மின்னுதல்செய்து, அவன் - அவனது, முரசென - முரசம்போல, விண்ணிடை - ஆகாயத்தினிடத்து, அதிர்ந்து - ஒலித்து, பொன் - பொன்னையுடைய, அம் - அழகிய, குன்றின்மேல் - இமயமலையின்மேல், அவன் - அவனது, கொடை - ஈகையை, போன்மென - ஒக்குமென்று சொல்லும்படியாக, பொழிந்த - அம்மேகங்கள் நீரைச் சொரிந்தன. எ - று. ஆங்கு - அசை.

வேல் - பகைவரை வெல்வது. வேலின் முரசென - இவற்றில் - இன்-என. என்பன உவம வுருபுகள். இங்கேபொன்மலை யென்றது இடியமலையாம். நிடததேசத்திற்குச் சமீபத்திற் சிறந்துள்ளது அதுவே யாதலால். பின்வரும் கங்கையென் றுலகேத்திய வேன்னும் பாட்டில் அம்மலையிற் பிறந்துவருங் கங்கையே அந்நாட்டிற்கு நதி என்பதனாலுமறிக. நிடதமலை யெனக்கோடலுமொன்று. மேகத்திற்கு மின்னுதல்பற்றி வேலும். ஒலித்தல்பற்றி முரசமும். அம்மேகத்தின் பெய்விற்குக் கைம்மாறு நோக்காமை பற்றி ஈகையும் உபமானஞ் செய்யப்படுதலால் உவமையணியாம். ஆகவே இக்கதைக்கு நாயகனாகிய நளராசனுடைய வேன் முதலியவற்றி னுயர்வு தொனிக்கின்றது. முரசென்றாரேனும் மும்முரசுங்கொள்க. போனம் - மகரக் குறுக்கம் "னனமுன் வகார மிசையுமக்குறுகும்" என்றது விதியாகலின். 1

விலகிவில்லுமிழ்விரிகதிர்மணிபலவான்றிப்
பொலன்முகட்டுயர்பெர்ன்னெடுங்குன்றின்வீழருவி
குலவுவெண்டிரைகுரைகடலுடுத்தபார்மடந்தை
யலர்மூலத்தலைத்துயல்வருமாரமொத்ததால.

---

* "படையுங் கொடியுங் குடையு முரசும்...பிறவுந் தெரிவுகொள் செங்கோ லரசர்க்குரிய" என்பது தொல்காப்பிய விதியாகலின் வேற்படையையும் முரசையும் சிறப்பித்தார். கண்ணுங் கழுத்தியாத்துக் குளப்புங் கோடும் பொன்னிணைந்த புனிற்றிரையும் கழுகுமுதலியன செறிந்தபட்டப் பை சூழ்ந்தமனையும் தண்ணடையுங் கன்னியரும் பிறவுங் கொடுத்தலும், மழுவாணெடியோ னெப்ப வுலகு முதலியன கொடுத்தலும்போன்ற கொடைத்தொழில் அரசர்க்குச் சிறந்ததாகலின் கொடையையும் விதந்தார். அதனை விசையந் தப்பிய எனவருமிடம் பதிற்றுப் பத்துச்செய்யுளிற்காண்க.

இது முதல் மூன்றுபாட்டுக்களால் வெள்ளச் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ - ள். உயர் - மலைகளில் உயர்ந்த, நெடு - நெடிய, பொற்குன்றின் - இமயமலையின்மேல், பொலன் - அழகிய, மூகட்டு - சிகரத்திலிருந்து, விலகி - இடைவிட்டு, வில் - ஒளியை, உமிழ் - வீசுகின்ற, விரி - விரிந்த, கதிர் - கிரணங்களையுடைய, பல - பலவகைப்பட்ட, மணி - முத்துக்களையும், வரன்றி - வாரிக்கொண்டு, வீழ் - வீழ்கின்ற, அருவி - வெள்ளமானது, குலவு - வளைவாகிய, வெள் - வெள்ளிய, திரை - அலைகளையுடைய, குரை - ஒலிக்கின்ற, கடல் - கடலாகிய (ஆடையை) உடுத்த - மருங்கிற் சூழக்கொண்டிருக்கிற, பார்மடந்தை - பூமிதேவியினுடைய, அலர் - அடிபரந்த, மூலத்தலை - (அம்மலையாகிய) மூலையினிடத்து, துயல்வரும் - புரளுகின்ற, ஆரம் - முத்துமாலையை, ஒத்தனது - ஒத்திருக்கின்றது. எ - று.

"அலர்மூலத் துயல்வரு மாரமொத்தளதால்" என்றது போல, "மணிமலைப் பணைத்தோண் மாநிலமடந்தை - யணிமலைத் துயல்வருமாரம் போல" எனப் பத்துப்பாட்டுட் சிறுபாணாற்றுப் படையிற்கூறப்பட்டமையும் ஈண்டுணரத்தக்கது.

பலவகை முத்துக்களாவன:—குறிஞ்சிக் கருப்பொருளாகிய யானைக் கொம்பு, பன்றிப்பல், மூங்கில், இவைமுதலியவற்றி லுண்டாகின்றவையாம். பூமியிலே மடந்தை தன்மையையும், கடலிலே ஆடைத்தன்மையையும், மலையிலே மூலத்தன்மையையும், ஆரோபித்தலாகிய உருவகம் உறுப்பாகவும், அருவியின்கண் ஆரத்தன்மையைச் சம்பாவித்தலாகிய தற்குறிப்பு உறுப்பாகவும், உறுப்பியாகவும் வருதலால் உறுப்புறுப்பிக்கலவையணியாம்.

வேழவெண்மருப்பெறிந்துவெண்ணித்திலம்வரன்றிக்
காழகிற்றுணிசந்தொடுகையரிக்கொண்டு
கோழரைச்செழுங்குங்குமத்தடஞ்சினைசாடி
யாழ்திரைக்கடலகடுகிண்டொழுகியதன்றே.

இ - ள். வேழம் - யானைகளுடைய, வெள் - வெள்ளிய, மருப்பு - கொம்புகளை, எறிந்து - வீசிக்கொண்டும், வெள் - வெள்ளிய, நித்திலம் - முத்துக்களை, வரன்றி - வாரிக்கொண்டும், காழ் - வயிரம் பொருந்திய, அகில் - அகின்மரங்களுடைய, துணி - துண்டங்களை, சந்தொடு - சந்தன மரங்களோடு, கையரிக்கொண்டு - சேர்த்துக் கொண்டும், கோழ் - வழுவழுப்பாகிய, அரை - அரையையுடைய, செழு - செழிய, குங்குமம் - குங்கும மரங்களுடைய, தட - விசாலமாகிய, சினை - கிளைகளை, சாடி - மோதித்துக் கொண்டும், ஆழ் - ஆழ்ந்த, திரை - அலைகளையுடைய, கடல் - கடலினது, அகடு - வயிற்றை, கிண்டு - கிழித்து, ஒருங்கியது - (அவ்வெள்ளம்) சென்றது எ - று. அன்று, ஏ - அசைகள்.

அரித்தென்பதற்குக் கையென்பது முன்னடையாய்க் கூடி அவ்விரண்டும் ஒருசொல்லாய் நின்றன. கைகூடல் கால் சித்தல் என்பனபோல்,

ஒழுங்காக அள்ளிக்கொண்டு என்றுமாம். அதற்கு, கை ஒழுங்கு மரங்களுக்குக்கோழரை, பொகுட்டரை, பொரியரை, முள்ளரை என்று சொல்லப்பட்டவற்றுள்ளே கோழரை - சருச்சரையில்லாத அரையாம். பின் கோழரை - யரம்பைசாய்க்குங் குடகாடாளும் வேந்தே' என்பதனாலுமறிக. 1

கங்கையென்றுலகேத்தியகடவுண்மாநதிவெண்
கங்குசூலுளைந்தலறியதடம்பணைதவழ்ந்து
கொங்குயிர்த்தபூந்தடத்துலாய்க்குளம்பலநிரப்பி
யங்கண்மாநிலத்தமிழ்தெனப்பரந்ததையன்றே.

இ - ள். கங்கை யென்று - கங்காநதியென்று, உலகு - உயர்ந்தோரால், ஏத்திய - துதிசெய்யப்பட்ட, கடவுள் - தெய்வத்தன்மை பொருந்திய, மாநதி - பெரிய நதியானது, வெள் - வெள்ளிய, சங்கு - சங்குகளானவை, சூல் - சூலினாலே, உளைந்து - வருந்தி, அலறிய - இரையும்படியாக, தட - விசாலமாகிய, பணை - கழனிகளிலே, தவழ்ந்து - ஊர்ந்து, கொங்கு - வாசனையை, உயிர்த்த - வீசுகின்ற, பூ - மலர்களையுடைய, தடத்து - தடாகங்களில், உலாய் - திரிந்து, பல - பலவகைப்பட்ட, குளம் - குளங்களையும், நிரப்பி - நிறைத்து, அங்கண் - அழகிய இடத்தையுடைய, மா - பெரிய, நிலத்து - பூமிக்கு, அமிழ்தென - அமிர்தமென்று சொல்லும்படியாக, பரந்தது - பரவிற்று எ - று. ஐ - சாரியை, அன்று, எ - அசைகள்.

உலகுக்கு உயர்ந்தோரென்பது 'உலகமென்ப வுயர்ந்தோர்மாட்டே' என்பதனாலறிக. கங்காநதிக்குத் தெய்வத் தன்மையாவது தன்னின் மூழ்கியோரைப் பரிசுத்தராக்கலாம், அலறிய வென்பதனி செய்யியவென் வாய்பாட்டு வினையெச்சம். உயிர்த்தவென்பது காலவழுவமைதி, பலவகைக்குளமாவன எரி, கயம் ஓடை, குட்டம், மடு முதலியன. நிலத்தமிழ்தென வெனவே தேவருலகுக்குக் கடலமிர்தம்போ லென்னு முவமையணி தொனிக்கின்றது. 5

ஒழுகுதீம்புனல்சிறைசெயுமோதையுமுழுநர்
குழுவின்சும்மையுமுழத்தியர்குரவையினார்ப்பும்
கழனிவாழ்கெனவான்முளைவித்துநர்கலிப்பு
மழைமுழக்கொடுமாறுகொண்டொலித்தனமாதோ.

இதுமுதல் ஐந்துபாட்டுக்களால் வயல்வளச்சிறப்புச்
சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒழுகு - பெருகி யோடுகின்ற, தீ - மதுரம் பொருந்திய, புனல் - நீரை, சிறைசெயும் - கரைகோலித் தடுத்தற்கு முண்டாகின்ற, ஓதையும் - ஓசையும், உழுநர் - எருழுகின்றவருடைய, குழுவின் - கூட்டத்தினது, சும்மையும் - ஓசையும், உழத்தியர் - கடைசியரது, குரவையின் - குரவைக் கூத்தினது, ஆர்ப்பும் - ஓசையும், கழனி - வயல்களானவை, வாழ்கென

வாழ்கவென்று, வால் - வெள்ளிய, முளை - (நெல்லு) முளைக்கூ, வித்துநர்-விதைக்கின்றவருடைய, கலிப்பும் - ஓசையும், மழை - மேகத்தினது, முழக்கொடு - ஓசையுட்னே, மாறு கொண்டு - பகைமைகொண்டு, ஒலித்தன-முழங்கின எ-று. மாது, ஓ - அசைகள்.

வாழ்க்வென்பது கடை குறைந்தது. குரவை - கைகோத் தாடல், 'குரவைக்கூத்தே கைகோத்தாடல்' என்பதனு லறிக. களைகோலுதற்கணுண்டாகிய வோசை முதலியவற்றிற்கு மழை முழக்கத்தோடு மாறுகொள்ளுதலாகிய சம்பந்த மில்லாதிருக்கச் சம்பந்தத்தைக் கற்பித்தலால் தொடர்புயர்வு நவிற்சியணியாம். இதனுல் அவ்வொலிகள் மேகவொலியைப்போலிருக்கின்றவென்னு முவமையணியொலிக்கின்றது. 6

வள்ளவாய்ச்செழுங்கமலத்தில்வண்டுண்மிழற்று
மள்ளலங்கருஞ்சேற்றிடையாமைகண்படுக்கும்
பள்ளநீர்ச்செழும்பணைதொறும்பணிலமுத்துயிர்க்குங்
கள்ளுலாமலர்ப்பொதும்பரிற்களிமயிலகவும்.

இ-ள். வண்டு - வண்டுகளானவை, வள்ளம்-கிண்ணம் போன்ற, வாய்-வாயையுடைய, செழு - செழிய, கமலத்தில் - தாமரை மலர்களிலே, பாண்-இசைகளை, மிழற்றும் - பாடிக்கொண்டிருக்கும், ஆமை - கூர்மங்களானவை, அள்ளல் - குழம்பாகிய, கரு - கரிய, சேற்றிடை - சேற்றின்கண், கண்படுக்கும் - தூங்கிக்கொண்டிருக்கும், பணிலம் - சங்குகளானவை, பள்ளம் - ஆழமாகிய, நீர் - நீரையுடைய, செழு- செழிய, பணைதொறும்-கழனிகளி லெல்லாம், முத்து -முத்துக்களை, உயிர்க்கும் - சொரியும், களி-களிப்பை யுடைய, மயில் - மயில்களானவை, கள் - தேனனது, உலாம்-பெருகுகின்ற, மலர் - மலர்களையுடைய, பொதும்பரில் - சோலைகளிலே, அகவும் - ஆடிக் கொண்டிருக்கும் எ-று. அம் - சாரியை. 7

பண்ணைவாய்த்தவழ்பணிலங்களுயிர்த்தவெண்முத்துங்
கண்ணுடைக்கரும்பீன்றவெண்முத்தமுங்கமழுந்
தண்ணந்தாமரைசொரிந்தவெண்முத்தமுந்தயங்கி
வெண்ணிலாக்கதிர்விரித்தலிற்குமுதம்வாய்விள்ளும்.

இ-ள். பண்ணைவாய் - கழனிகளிடத்து, தவழ் - தவழ்கின்ற, பணிலங்கள் - சங்குகளால், உயிர்த்த - தரப்பட்ட, வெள் - வெள்ளிய, முத்தும்-முத்துக்களும், கண் - கணுக்களை, உடை - உடைய, கரும்பு - கரும்புகளால், ஈன்ற - தரப்பட்ட, வெள் - வெள்ளிய, முத்தமும் - முத்துக்களும், கமழும் - பரிமளிக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, அம்-அழகிய, தாமரை-தாமரைமலர்களால் சொரிந்த - தரப்பட்ட, வெ - வெள்ளிய, முத்தமும்-முத்துக்களும், தயங்கி - விளங்கி, வெள் - வெள்ளிய, நிலா - சந்திரனது, கதிர் - கிரணத்தை, விரித்தலின் - பரப்புதலினுலே, குமுதம் - அல்லிமலர்களானவை, வாய்விள்ளும்(சந்திரோதய மில்லாத காலத்திலும்)மலரும் எ-று.

சங்கு முதலானவைகளிலே முத்துப் பிறக்கு மென்பது. "தந்திவ ராகமருப்பிப்பி பூகந்தழைகதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்குகளின் மின்னூர், கந்தரஞ்சாலிகழை கன்னலாவின்பல் கட்செவிகா, ரிந்துவடும்பு கதிர்முத்தமீனுமிருபதுமே" என்பதனாலறிக. முத்தாகிய வுபமேயத்திலே சந்திரனுகிய வுபமானத்தின் குணத்தை யாரோபித்தலாற்காட்சியணி. 8

விழுந்தவஞ்சிறைவண்டினமிதிப்பமெல்லரும்பு
கிழிந்துவார்தருதேறலுங்கிளர்சினைப்பலவின்
பழங்கணிந்துவீழ்தேறலும்பழனங்கடோறும்
வழிந்துபாய்தலின்வானுறவளர்வனசெந்நெல். 9

இ-ள். விழுந்த - (மேல்) விழுந்த, அம் - அழகிய, சிறை - சிறைகளை யுடைய, வண்டு - வண்டுகளுடைய, இனம் - கூட்டங்களானவை, மிதிப்ப தாலைக்க, மெல் - மெல்லிய, அரும்பு - அரும்புகளானவை, கிழிந்து-கிழிய, வார்தரு - (அவைகளிலிருந்து) ஒழுகுகிற, தேறலும் - தேனும், கிளர்- விளங்குகின்ற, சினை - கிளைகளையுடைய, பலவின் - பலாமரங்களுடைய, பழம் - பழங்களானவை, கனிந்து - கையு, வீழ் - (அவைகளிலிருந்து) விழு கின்ற, தேறலும் - தேனும், வழிந்து - பெருக்கெடுத்து, பழனங்கடோறும்- கழனிகளி லெல்லாம், பாய்தலின் - பாய்தலினுலே, வான் - ஆகாயத்தை, உற - தொடும்படி, செந்நெல் - செந்நெற் பயிர்களானவை, வளர்வன - வள ரும் எ-று.

கிழிய, கனிய என்பன கிழிந்து கனிந்து எனத் திரிந்து வந்தன, "வானின்றுலகம்வழங்கி" என்பதில் நிற்பவென்பது நின்றெனத்திரிந்தமை போல, செந்நெற் பயிருக்குந் தேறலுக்குஞ் சம்பந்த மில்லாதிருப்பவும் சம் பந்தத்தைக் கற்பித்தமையால் தொடர்புயர்வு நவிற்சியணி. தோறும் என் னும் இடைச்சொல் இடப்பன்மை. 9

கூனிரும்பினிற்குறைத்தரிசும்மையிற்கொடுபோய்
மேனிவன்துயர்வரையெனப்போர்பலவேய்ந்து
நீனிறக்கரும்பகட்டினுற்றெழித்துவைதீத்த
தூநிறத்தகெற்பண்டியிற்பற்பலர்தொகுப்பார்.

இ-ள். கூனிரும்பினில் - அரிவாளினுல், குறைத்து - அறுத்து, அரி- (அறுக்கப்பட்ட) அரிகளை, சும்மையில் - சுமைகளாக்கி, கொடுபோய்- கொண்டுபோய், மேல் - மேல், நிவந்துயர் - ஓங்கிய, வரையென - மலைகள் போலத் (தோன்ற), பல - பலவாகிய, போர்-போர்களை, வேய்ந்து-குவித்து, நீனிறம் - நீலநிறம்பொருந்திய, கரு - பெரிய, பகட்டினுல் - கடாக்களி னுலே, தெழித்து - அலைப்பித்து, வை - வைக்கோலை, தீத்த - கழித்த, தூ- பரிசுத்தமாகிய, நிறத்த - காந்தியையுடைய, நெல் - நெற்களை, பண்டியில்- பண்டிகளாற் (கொண்டுபோய்) பற்பலர் - பலபல சாதியார்களும், தொகுப் பார் - (களஞ்சியங்களிலே) நிறைப்பார்கள் எ-று.

கூனிரும்பு—இருபெய ரொட்டாகுபெயர். நிவந்தியர்—ஒருபொரு ளைக் குறித்த இருசொற்கள். இதற்கு 'ஒருபொருளிருசொற் பிரிவிலவ ரையார் என்பது விதி. நீல - கடைக்குறை. 10

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

குரும்பைமென்முலையாராடக்கூந்தலினறவந்தோய்ந்த
விரும்புனலாறுபாயவெறிதிரைசுருட்டுந்தெண்ணீர்க்
கருங்கடற்புலவுநீங்கநறுமணங்கமழுமென்றூன்
முருந்துறழ்மூரலார்தமிகுதியைமொழியலாமோ.

இதுமுதற் புகிலுறு பாட்டுக்களால் அந்நாட்டிலுள்ளோர் செல்வமுதலிய சிறப்புக்கள் சொல்லப்படுகின்றன.

இ-ள். குரும்பை - தென்னம்பிஞ்சு போன்ற, மெல் - மெல்லிய, முலை யார் - முலைகளை யுடையமாதர், ஆட - முழுக, கூந்தலில் - (அவர்) தலை மயிரிலுள்ள, நறவம் - சாந்தத்தோடு, தோய்ந்த - கலந்த, இரு - பெரிய, புனல் - நீரான, ஆறு - ஆற்றிலுலே (போய்), பாய - விழ, எறி - வீசு கின்ற, திரை - அலைகளை, சுருட்டும் - மடக்குகின்ற, தெள் - தெளிவு பொருந்திய, நீர் - நீரையுடைய, கரு - கரிய, கடல் - கடலினது, புலவு- புலாலுற்றத்தை, நீங்கி - நீங்கச் செய்து, நறுமணம், கல்லமணமானது, கமழுமென்றூல் - (அக்கடலிடத்தே) மணக்குமென்றூல், முருந்து - மயி லிறகினடியை, உறழ் - ஒத்த, மூரலார் - பற்களையுடைய அவரது, மிகு தியை - பெருக்கத்தை, மொழியலாமோ - (நான்) சொல்லலாமோ எ-று. தம் சாரியை, ஓ எதிர்மறை.

நறவமென்னும் வாசனைப்பெயர் அதனையுடைய மயிர்ச்சாந்தத்தை யுணர்த்தலால் ஆகுபெயர். நீங்கியென்பது பிறவினைப் பொருளைத்தந் தது; "குடிபொன்றிக் கூற்றமுமாங்கேதரும்" என்பதிற் பொன்றி யென் பது போல, அந்நாட்டு மகளிரது செல்வமிகுதியைச் சொல்லுதலால் வீறு கோளணியாம். 11

பூமலிதடங்கடோறும்புனல்குடைமகளிரீட்டங்
காமருகழனிதோறுங்கடைசியர்குரவையீட்டந்
தேமலர்ச்சோலைதோறுஞ்செழுங்குயிற்குருஞ்சியீட்டங்
கோமறுகிடங்கடோறுங்குணில்பொருமுரசினீட்டம்.

இ-ள். பூ - மலர்களாலே, மலி - நிறைந்த, தடங்கடோறும் - குளங்களி லெல்லாம், புனல்குடை - நீர்விளையாடுகின்ற, மகளிர் - மாதரது, ஈட்டம்- கூட்டமும், காமர் - அழகிய, கழனிதோறும் - வயல்களிலெல்லாம், குரவை- கைகோத்தாடுதலை யுடைய, கடைசியர் - பன்னத்தியரது, ஈட்டம் - கூட்ட மும், தேம் - வாசனைபொருந்திய, மலர் - மலர்களையுடைய, சோலைதோறும்- சோலைகளிலெல்லாம், தொழீஇ - ஒலித்தலையுடைய, செழு - செழிய, குயில் - குயில்களது, ஈட்டம் - கூட்டமும், கோ - அரசரது, மறுகு - வீதிக ளுடைய, இடங்கடோறும் - இடங்களிலெல்லாம், குணில் - குறுந்தடியால்,

பொரு - அடிக்கப்படுகின்ற, முரசின் - முரசங்களது, ஈட்டம்-கூட்டமும், (இருக்கும்) எ-று.

காமரு - என்பதில், உகரம் சாரியை. தொழுதி - புள்ளொலி. கோ - சாதியொருமை. கடைசியர் - மருதநிலமகளிர். 12

கறுவொடுமொன்றுமொன்றுடொன்றுகாரணமின்றிச்சிறிப்
பொறியுடைக் * குறும்பூழ்தம்மிற்போர்செயப்பொருத்துமோதை
செறிமயிர்த்தகர்கடம்மிற்றீயெழத்தாக்கலுக்கி
யறைகழல்வீரார்க்குமமலையையவிக்குமன்றே.

இ-ள். பொறியுடை - புள்ளிகளையுடைய, குறும்பூழ் - காடைகளானவை, தம்மில் - தம்முள்ளே, ஒன்றுமொடொன்று - ஒன்றுடனொன்று, காரணமின்றி - ஏதுவில்லாமல், கறுவொடும் - கறுவுதலுடனே, சிறி-சிறிக் கொண்டு, போர் - சண்டையை, செய - செய்யும்படியாக, பொருத்தும் - (அவற்றைக்) கூட்டுதற்க ணுண்டாகின்ற, ஓதை - (சிறுவ) ரோசையானது, செறி - நெருங்கிய, மயிர் - மயிர்களையுடைய, தகர்கள் - ஆட்டுக்கடாக்கள், தம்மில் - தம்முள்ளே, தீ - நெருப்பானது, எழ - தோன்ற, தாக்கல் - (ஒன்றையொன்) றிடித்தலை, நோக்கி - பார்த்து, அறை - ஒலிக்கின்ற, கழல் - வீரக்கழலையுடைய, வீரர் - வீரரானவர், ஆர்க்கும் - (ஆச்சரியப்பட்டு) ஒலிக்கின்ற, அமலையை - ஓசையை, அவிக்கும் - அடக்கும் எ - று.

தகுதி பற்றிக் காடைச் சண்டைக்குச் சிறுவரென்பது வருவிக்கப்பட்டது. கழல் - வீரர்காலணி. வீரத்தின் "வீக்கியகழலே யாடவர் கான்மிசையணிவடம்" என்பதனாலறிக. 13

மாதர்மென்முல்லையீன்றவான்முகையனையமூரல்
கோதறுகருனைதீம்பால்கொழுங்கனியிவற்றினோடு
மாதுலர்யாவரென்னவதிர்குரன்முரசிற்சாற்றி
வேதியர்க்கருத்திப்பின்னர்விருந்தொடுநுகர்வர்மாதோ.

இ-ள். ஆதுலர் - யாசகர், யாவரென்ன - யாவரென்று, அதிர் - ஒலிக்கின்ற, குரல் - ஓசையையுடைய, முரசின் - முரசினாலே, சாற்றி - விளவி (வருவித்து), மாதர் - அழகிய, மெல் - மெல்லிய, முல்லை-முல்லைக் கொடியினால், ஈன்ற - தரப்பட்ட, வால் - வெள்ளிய, முகையனைய - அரும்புகள்போலும், மூரல் - சோறும், கோதறு - குற்றமற்ற, கருனை - பொறிக்

* இச்செய்யுளால் வாகைத்திணைக்குரிய தகர்வென்றி, குறும்பூழ் வென்றி கூறப்பட்டன இனம்பற்றிக் கோழிவென்றி, சொல்வென்றி, பாடல்வென்றி, கூத்துவென்றி முதலியவுங் கொள்க, இவையெலாம் "அறிமரபிற் பொருநர்கட்பாலும்" என்னும் வாகைத்திணைத் துறையுளடக்குக.

கறியும், தீ - தித்திப்பாகிய, பால் - பாலும், கொழு - செழிய, கனி - பழமும், இவற்றினோடும் - ஆகிய இவற்றோடு மற்றை யுணவு களோயும், வேதியற்கு - அந்தணரை, அருத்தி - (முன்னே) உண்பித்து, பின்னர் - (அதன்) பின்பு, விருந்தொடும் - (சுற்றத்தார் முதலியோரோ டன்றி) விருந்தினரோடும், நுகர்வர் - (அங்ஙாட்டோர்) உண்பார் எ-று.

மாது, ஓ - அசைகள். உம்மை இரண்டும் எச்சம். வேதியர்க்கு-உருபு மயக்கம். முரசு - ஈண்டுக் கொடைமுரசு. 14

முல்லையங்கோதைநல்லார்முகமதிவெயர்வுதோன்ற
வல்லிநுண்மருங்குனுவவால்வளாவாய்விட்டார்ப்ப
மெல்விரற்காந்தள்சேப்பவெண்டயிர்கடையுமோதை
கொலபுலிமுழக்கமென்னவயின்றொறுங்குளிறுமாதோ.

இ-ள். முல்லை - முல்லை மலர்களைச் சூடிய, அம் - அழகிய, கோதை - கூந்தலையுடைய, நல்லார் - இடைச்சியர், முகமதி - (தமது) முகமாகிய சந் திரனிடத்து, வெயர்வு-வியர்வையானது, தோன்ற - உண்டாகவும், வல்லி - பூங்கொடிபோலும், நுண் - நுட்பமாகிய, மருங்குல்-இடையானது, நோவ வருந்தவும், வால் - வெள்ளிய, வளை-சங்கவளையல்களானவை, வாய்விட்டு ஒன்றோடொன்று தாக்குண்டு, ஆர்ப்ப - ஒலிக்கவும், மெல் - மெல்லிய, விரல் - விரல்கள், காந்தள் - காந்தண்மலர்போல, சேப்ப-சிவக்கவும், வெள் - வெள்ளிய, தயிர் - தயிரை, கடையும் - கடைதலினலுண்டாகின்ற, ஓதை - ஓசையானது, கொல் - கொல்லுகின்ற, புலி - புலியினது, முழக்கமென்ன - உறுமுதல்போல வயிற்றொறும் - (அவர்) வீடுதோறும், குளிறும் - ஒலிக் கும் எ-று. மாது, ஓ - அசைகள்.

நிலமத்திட்டுத் தயிர்கடைகின்ற இடைச்சிகளுக்கு அப்போது உண் டாகின்ற முகம்வெயர்த்த ராதியாகிய சுபாவத்தைச் சொல்லுதலாகிய தன்மை நவிற்சியணியும், கொல்புலி முழக்கமென்னக் குளிறுமென்னும் உவமையணியுஞ், சேர்ந்துவருதலாற் சேர்வையணியாம். 15

பூங்கரும்புடைந்தநீஞ்சாறடுபுகைபுயலென்றெண்ணி
மாங்குயிற்றொகுதியாவும்வாய்விடாதொழிந்தமஞ்ஞை
தூங்கிசைவண்டுந்தேனுஞ்சுரும்பொடுமிமிரும்பாடத்
தேங்கமழ்சோலைதோறுஞ்சிறைவிரித்தாடுமாதோ.

இ-ள். உடைந்த - (ஆலையிற்) சிதைந்த, பூ - அழகிய, கரும்பு - கரும்பு களுடைய, நீ - தித்திப்பாகிய, சாறு - சாற்றை, அடு - காய்ச்சுமிடத்தெழு கின்ற, புகை - தூமத்தை, புயலென்னு, மேகமென்று, எண்ணி - நினைத்து, மா - மாமரங்களிலுள்ள, குயில் - குயில்களுடைய தொகுதியாவும் - கூட்டங் களெல்லாம், வாய்விடாதொழிந்த-கூவாதொழிந்தனவாக, மஞ்ஞை-மயில்க ளானவை, தூங்கிசை - நாட்டிய ராகத்தை, வண்டும் - கருவண்டுகளும்,

தேனும் - தேன்வண்டுகளும், சுரும்பொடு - பொறிவண்டுகளுடனே, ஞிமிறும் - பொன்வண்டுகளும், பாட - பாடுதல்செய்ய, தேம்-தேனுண்டது, கமழ்மணக்கின்ற, சோலைதோறும் - சோலைகளிலெல்லாம், சிற்ற - கலாபத்தைவிரித்து - விரித்துக்கொண்டு, ஆடும் - கூத்தாடும் எ-று. மாது, ஒ - அசைகள்.

ஒழிந்தவென்பது முற்றெச்சமாய் வந்தது. "பாயுமாரிபோற் பழிசிந்தினை, ராயர்மத்தெறி தயிரினையினர்" இதிற் சிந்தினுரென்பது சிந்தவென்னும் பொருளைத் தந்தமைபோல. வண்டு, தேன், சுரும்பு ஞிமிறு, இந்நான்கும் வண்டுகளுள் சாதிபேதம். "மங்கை நல்லவர் கண்ணுமன மும்போன், தெங்குநாடியிடறுஞ் சுரும்புகாள், வண்டுகாண்மகிழ்தேனினங் காண்மது, வண்டுதேக்கிடு மொண்ஞிமி றீட்டங்காள்" என்பதனாலறிக. தேன் தேமென ஈறு திரிந்தது. மேகத்தைக் காணும்போது குயில்களுக்குத் துன்பமும் * மயில்களுக்கு இன்பமும் உண்டாகுகை சுபாவம். புகையை மேகமென்று மயங்குதலினாலே மயக்கவணியாகும்.

அரக்கெறிகுமுதச்செவ்வாயலர்மூலையக்நலார்தந்
திருக்கிளர்கமலம்பூத்தசெயரிக்கண்ணும்வாவி
யுருக்கிளர்குவளைப்போதும்வேற்றுமையுணராதுற்றீ
வரிச்சிறைத்தும்பியோடுவண்டினமருளுமாதோ.

இ-ள். அரக்கு - சிவப்பு நிறத்தை, எறி - வீசுகின்ற, குமுதம் - அல்லிமலர்போலும், செய் - செய்ய, வாய் - வாயையும், அலர் - அடிபரந்த, மூலை - மூலைகளையுமுடைய, அந்நலார் - அந்நாட்டு மாதருடைய, திரு-அழகினால், கிளர் - விளங்குகின்ற, கமலம் - தாமரைப் பூவாகிய (முகங்களிடத்தி), பூத்த - மலர்ந்த, சேய் - செய்ய, அரி - இரேகைகளையுடைய, கண்ணும் - கண்களுக்கும், (கமலம்) தாமரை மலர்களிடத்து, உரு - அழகினால், கிளர் - விளங்குகின்ற, குவளைபோலும் - நீலோற்பல மலர்களுக்கும். வாவிகுளத்தின் கண், வேற்றுமை - பேதத்தை, உணராது - அறியமாட்டாமல், உற்ற - (தேனுண்ணற்காக) அடைந்த, வரி - கீற்றுகளையும், சிறை - சிறைகளையுமுடைய, தும்பியோடு - தும்பிகளுடன், வண்டு - வண்டுகளையுடைய், இனம் - கூட்டம், மருளும் - மயங்கும் எ-று. மாது, ஒ - அசைகள்.

கமலம் குவளைக்குங் கூட்டப்பட்டது. வாவியிடத் தென்றதனால் அந்நலார் நீர்விளையாடு மகளிரெனக் கொள்க. அவர் முகங்களைச் சேர்ந்த கண்களுக்குந் தாமரை மலர்களைச் சேர்ந்த குவளைகளுக்கும் விசேடந் தோன்றுமையைச் சொல்லுதலாற் பொதுமையணியாகும். 17

* மயில்களுக்கு இன்பமுண்டாதல் "என்னையூர்ந்தருள் சுடர்வடிவிலைய வேற்பெருமான் - றன்னை நன்மருகனெனப்பலவீட்டத் தவன்றனதூர்தியன்னதாமெனுங் கேண்மையா லளிமுகிற்குலத்தினைக் - கண்ணிமாமயில் காண்டொறுங் களிசிறந்தகவும்" என்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளாற் காரணங்கூறியது முணர்க.

அல்லியங்கோதைமாதான்பொடுவளர்த்தமுல்லை
மெல்லரும்பீன்றதென்னவிழாவயர்முழவினோடு
மல்லலந்திணிதோண்மைந்தர்மங்கையர்வதுவையாற்றும்
பல்லியமுழக்கமார்க்கும்பரவையோடிகலுமாதோ.

இ-ள். அல்லி - அகவிதழ்களாலாகிய, அம் - அழகிய, கோதை-மாலையையுடைய, மாதர் - மகளிரானவர், அன்பொடு - அன்புடனே, வளர்த்த-(தம்மால்) வளர்க்கப்பட்ட, முல்லை - முல்லைக்கொடியானது, மெல் - மெல்லிய, அரும்பு - அரும்புகளை, ஈன்றதென்ன - தந்ததென்று கினைத்து, விழா-(அதற்குத்) திருவிழாவை, அவர் - செய்யுமிடத்துண்டாகின்ற, முழவினோடு - வாத்திய வொலியோடு, மல்லல் - மற்போரில், அம் - அழகிய, திணி - வலிமைபொருந்திய, தோள் - தோள்களையுடைய, மைந்தர் - காளையரானவர், மங்கையர் - மங்கைப்பருவப்பெண்களை, வதுவையாற்றும் - விவாகஞ் செய்தற்கணுண்டாகின்ற, பல்லியம் - பலவகைவாத்தியங்களது, முழக்கம்-ஓசையானது, ஆர்க்கும்-ஒலிக்கின்ற, பரவையோடு - கடலொலியோடு, இகலும் - பகைக்கும் எ-று. மாது, ஓ - அசைகள்.

மங்கைப்பருவமுடைய பெண்களாவார்—பதினொன்று முதற் பதின்மூன்று வயதுவரைக்கு முள்ளார். மற்போராவது—ஆயுதமின்றித் தத்தம் உடம்பினாற் செய்யும் போர். அது * சங்கிபாதம், அவதூதம், பிரக்கேபணம், முட்டி, கேகிபாதம், வச்சிரிபாதம், பாதோத்தூதம், பிரமிருட்டம் என எண்வகைப்படும். கற்புடைய மாதருக்கு முல்லைப்பூ உரித்தாதலால் அன்பொடு வளர்த்த முல்லையென்றார். இது "முல்லையுந் தொடையருந்தி முதலெழு முனிவ - ரில்லறம் புரிதலினவியர்" என்பதனாலுமறிக. அதற்கு விழாவாவது பருவப்பெண்ணுக்கு முதற்பூப்பிலே செய்யப்படுஞ்சிறப்பை அதன் முதற்பூப்பிலே செய்தல் வாத்திய வோசைக்குங் கடலோசைக்கும் பகையில்லாமையிலே பகையைக் கற்பித்தமையினாலே தொடர்புயர்வு நவிற்சியணியாகும். 18

அவிரிளஞ்சுமக்கலாற்றுதந்நலார்பரிந்துநீத்த
திவளொளிமணியுமுத்துஞ்சிந்தியமுன்றிலோறுங்
குவிமுலைக்கயவாய்ச்செங்கட்குடம்புரைசெருத்தன்மேதி
கவையடிபெயர்ப்பமாழ்கிக்காறளர்ந்தெதாங்குமன்றே.

இ-ள். அந்நலார் - அத்தேசத்து மாதரால், சுமக்கலாற்றுது - சுமக்க மாட்டாமல், பரிந்து - வருந்தி, நீத்த - களைந்தெறியப்பட்ட, அவிர்-ஒளி

* இவைமுறையே முதலிற்பிடித்துப் பஞ்சாப்போடுதல், புறங்கையாற் கீழே தள்ளுதல். இருத்தித்தள்ளுதல். கைகுவித்து இடித்தல் முழங்கை, கணைக்கைகளினால் இடித்தல் கைவிளிம்புகளால் இடித்தல் நடுவிரல் ஆழிவிரல் என்பவற்றினாலே பெருவிரல் வைத்துக்குத்தல், காலாற்றாக்கியெறிதல், உடம்பெல்லாம் இதமப்பிடித்துத் தள்ளியுழக்குதல் எனக்கொள்க.

செய்கின்ற, இழை - ஆபரணங்களையுடைய, திவன் - அசையாகின்ற, ஒளி - ஒளியையுடைய, மணியும் - பலவித மணிகளும், முத்தம் - முத்துக்களும், சிந்திய - சிதறிக்கிடக்கின்ற, முன்றிலோறும் - வீட்டுமுன்னிடந்தோறும்; குவி - குவிந்த, முலை - முலைகளையும், கயம் - பெரியதாகிய, வாய் - வாயையும், செம் - செய்ய, கண் - கண்களையும், குடம்புரை - குடம்போலும், செருத்தல் - மடியையுமுடைய, மேதி - எருமைகளானவை, கவை - பிளப்பையுடைய, அடி - அடிகளை, பெயர்ப்ப - எடுத்துவைக்க, மாழ்கி - வருந்தி, கால் - கால்களானவை, தளர்ந்து - சோர்ந்து, ஒதுங்கும் - (பக்கங்களிலே) விலகும் எ-று. அன்று, ஏ - அசைகள்.

இதன்முன் முன்றிலெனநிலைமாறிப் போலியாய் வந்தது. அடி - கீழ்க் கால் தளர்ந்து என்னுஞ் சினைவினை ஒதுங்குமென்னு முதல்வினையோடு முடிந்தது. இதற்கு "அம்மூக்கிளவியுஞ் சினைவினைதோன்றிற் - சினையொடு, முடியாமுதலொடு முடியினும் - வினையோரனைய" என்பதுவிதி. அம்மணிகளும் முத்துக்களுங் குளம்பின் சுற்றிலேறுண்டால்நோமென்றஞ்சி ஒதுங்குமென்பது கருத்தாயிற்று. செல்வ மிகுதியைச் சொல்லுதலால்வீறு கோளணியாம். 19

பொரியரைத் தேமாநெற்றிப்பூங்கனியிழிந்ததேனும்
விரிதலையரம்பையீன்றமென்பழனுகுத்ததேனு
முருகவிழ்சுளைவாய்விண்டமுட்புறக்கனியின்றேறலுங்
குருகுபாய்தடமும்யாறுங்குறைவறப்பெருகுமன்றே.

இ-ள். பொரி - பொருக்குகளைக்கொண்ட, அரை - அரையையுடைய, தேமா - தேமாவினது, பூ - அழகிய, கனி - பழங்களானவை, நெற்றி - முதிர, இழிந்த - (அவைகளிலிறங்) தொழுகிய, தேனும் - மதுவும், விரி - விரிந்த, தலை - தலையையுடைய, அரம்பை - வாழைகளால், ஈன்ற-தரப்பட்ட மெல் - மெல்லிய, பழன் - பழங்கள், உகுத்த - சொரிந்த, தேனும்-மதுவும், விண்ட-வெடித்த, முட்புறக்கனியின் - பலாப்பழங்களினுடைய, முருகு - பரிமளமானது, அவிழ் - விரிகின்ற, சுளைவாய்-சுளைவாயிலிருந்து (ஒழுகிய) தேனும் - மதுவும், குருகு-பறவைகளானவை, பாய் - பாய்கின்ற, தடமும் - வாவிகளிலும், யாறும் - நதிகளிலும், குறைவற - குறைவுதீர, பெருகும் - பெருகிப்பாயும் எ-று. அன்று, ஏ-அசைகள்.

நெற்றி - வினையெச்சத்திரிபு. முட்புறக்கனி யென்பது முள்ளுகளைப் புறத்திலுடைய கனியாம். குறைவு - வெயிலாதிகளா லுண்டாவது. முக்கனிகளின் சாற்றிற்கும் வாரி நதிகளுக்குஞ் சம்பந்தமில்லா திருப்பவும் சம்பந்தத்தைக் கற்பித்தலினுலே தொடர்பியல்வு தவிற்சியணியாம். பழம்-பழன். எனப்போலி. 20

அருமறைக்கிழவருள்ளத்தவாக்கெடவன்பினல்கும்
பெருநிதிக்குப்பையோடுபெய்புனல்பெருகியோடி

வரிவளையலறியீன் றமணியிளநிலவுகாலுந்
திருவநீள்கழனிதோறுஞ்செங்கேலிவளர்க்குமாதோ.

இ-ள். அரு - அரிய, மறைக்கிழவர்-வேதத்திற்குரிய பார்ப்பாருடைய, உள்ளத்து - மனத்திலுள்ள, அவர் - (பொரு) ளாசையானது கெட-அழிய, அன்பின் - பத்தியினாலே, நல்கும்-கொடுக்கப்படுகின்ற, பெரு-பெரிய, நிதி-பொருள்களுடைய, குப்பையோடு - குவியல்களோடு, பெய் - (விதிப்படி) வார்க்கப்படுகின்ற, புனல்-நீரானது, பெருகி - பெருக்கெடுத்து, ஓடி-விரைந்துபோய், வரி - இரேகைகளையுடைய, வளை - சங்குகளால், அலறி-கூவி, ஈன்ற - தரப்பட்ட, முனி-முத்துக்களானவை, இள - இளமை பொருந்திய, நிலவு-சந்திரிகையை, காலும்-வீசுகின்ற, திரு-அழகிய, நீள்-நீண்டிருக்கின்ற, கழனிதோறும் - கழனிகளிலெல்லாம், செங்கேலை-செங்கேற பயிரை, வளர்க்கும் - வளர்விக்கும் எ-று. அகரம்-சாரியை. மாது, ஓ - அசைகள்.

ஆச்சரியப் படத்தக்கதாயும் பொய்யாகியும் இருக்கிறதானப் புகழ்ச்சியாகிய மிகுதிநவிற்சியணியானது, தான நீருக்கும் பயிருக்குஞ் சம்பந்தத்தை உண்டாக்குகையாகிய தொடர்புயர்வு நவிற்சியணிக்கு அங்கமாகவருதலால் உறுப்புறுப்பிக் கலவையணியாம். 21

நிலவுவெண்முத்தும்பொன்னுநீனிறமணியுஞ்சாந்துந்
தலைமயக்குற்றவாற்றுற்றண்மதிதவழுங்கோட்டு
மலைவளம்பெரிதென்கோயான்வால்வளைபரந்துமேயு
மலைவளம்பெரிதென்கோயான்யாதென வறைவன்மாதோ.

இ-ள். நிலவு - சந்திரிகையையுடைய, வெள் – வெள்ளிய, முத்தும்-முத்துக்களும், பொன்னும் – கனகங்களும், நீனிறம் – நீலநிறத்தையுடைய மணியும் – மணிகளும், சாந்தும் – சந்தனக்கட்டைகளும், தலைமயக்குற்றவாற்றல் - கலந்துகிடக்கையால், தண் – தண்ணிய, மதி – சந்திரனால், தவழும்-உராய்ந்து செல்லப்படுகின்ற, கோட்டு – சிகரத்தையுடைய மலை – மலையினது, வளம் – வளத்தை, யான் - நான், பெரிதன்கோ - அதிகமென்று சொல்லுவேனோ, வால் – வெண்மைபொருந்திய, வளை - சங்குகளானவை, பரந்து – பரவி, மேயும் - மேய்கின்ற, அலை – அலைகளையுடைய கடலினது, வளம் - வளத்தை, யான் - நான், பெரிதென்கோ – அதிகமென்று சொல்லுவேனோ, யாதென - இவற்றுள்ளே எதை அதிகமென்று, அறைவல்-யான் சொல்லுவேன். எ-று.

முத்து முதலியவற்றை விரிவிக் கூறினாரேனும் உரிமைபற்றிக் கடலுக்கு முத்தும் நீலமணியும், மலைக்குப் பொன்னுஞ் சாந்துங் கூட்டப்படும் நீலமணி கடலிற் பிறவாதேனுங் கடலகத்துள்ள வேறு தீவிற்பிறத்தல்பற்றி அதன் வளமெனப்பட்டது. மலைக்குங் கடலுக்கும் விசேடணங்களோ மிகுத்துச் சொன்னமையால் அதின்முதலிய மற்றை மலைவளங்களும் பவளமுதலிய மற்றைக்கடல் வளங்களுங் கொள்ளப்படும். நானிலங்களின் முதலிய

வளமுங் கடைநிலவளமுங்கூறவே மற்றை நிலவளங்களுங் கூறுதேயமை யும். (இதில் ஐயவணியினாலே அப்பலவளங்களு மிருந்திருக்கின்றன வென் னும்பொருள் தொனிக்கின்றது.) 22

உளங்கனிந் தாயருதும்வேயிசைசெவியினேர்ந்து
தளங்குவெள்ளருவிக்குன்றிற்றோகைகண்டுஞ்சுந்தெண்ணீர்
வளங்கெழுமருதவேலிவண்டுதாலாட்டநெய்த
லிளங்களிக்குமரியன்னமின்றுயில்கூருமாதோ.

இ-ள். ஆயர் - (மூல்லை நிலத்துள்ள) இடையரான், உளங்கனிந்தும்ன மகிழ்ந்து, ஊதும் - ஊதப்படுகின்ற, வேய்-புள்ளாங்குழல்களுடைய, இசை-இராகத்தை, செவியின் - காதுகளினாலே, ஓர்ந்து - கேட்டு, தளங்கு-அசைகின்ற, வெள் - வெள்ளிய, அருவி - வெள்ளக்கலை யுடைய, குன்றில்-குறிஞ்சிநிலத்தில், தோகை - மயில்களானவை, கண்டுஞ்சும்-தூங்கும், தெள்-தெள்ளிய, நீர் - நீரினது, வளம் - வளமானது, கெழு - பொருந்திய, வேலி-வேலியையுடைய, மருதம்-மருதநிலத்தில், வண்டு-வண்டுகளானவை. தாலாட்ட - தாலாட்டிசையப்பாட, நெய்தல் - நெய்தனிலத்தில், இள - இளமை பொருந்திய, களி - களிப்பையுடைய, குமரியன்னம் - பெட்டை யன்னங்களானவை, இன்-இனிய, துயில்கூரும் - நித்திரைசெய்யும் எ-று.

முல்லையோடு குறிஞ்சிக்கும் மருதத்தோடு நெய்தலுக்கும் அணிமை சொல்லப்பட்டது. வேயிசை எனக்கூறினுமேனும் ஆம்பற்குழல், கொன்றைக்குழல்முல்லைக்குழல் என்னுமூவகையுங்கொள்க. அவற்றுள்சஞ்சத்தாற் குமுதவடிவாக அனேக பண்ணிச்செறித்தவை ஆம்பற் குழலெனப்படும். கொன்றைப் பழத்தைத் திருவித் துளைத்து ஊதுவனகொன்றைக் குழலெனப்படும். முல்லைக் கொடியால் முப்புரியாகத் தெற்றிய வலையை வலவாய்க்கட்செறித்தூதுவன முல்லைக்குழலெனப்படும். இசையாவன:—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்னுமிவ்வேழுமாம். குன்று - ஆகுபெயராய் நிலத்தை யுணர்த்திற்று. 23

கொடியனமகளிர் தங்கள்குழையுதுண்மருங்கேகவாளா
படுகொலைபுரிவமாதர்படைகெடுங்குவளைக்கண்ணே
யடிமிசைமுறையிட்டென்மீமரற்றுவசிலம்பேசூழ்ந்து
கடிமதுநுகர்வவன்னேர்கருங்குழற்காமர்வண்டே.

இ-ள். மகளிர் - மாதருடைய. குழையும் - வாடுகின்ற, நுண்-நுண்ணிய, மருங்கே - இடைகளே, கொடியன - கொடுமை யுள்ளனவாம், அன்னேர் - அவருடைய, மாதர் - அழகிய, படை - வாளும், குவளை - நீலோற்பலமும்போலும், கெடு - நெடிய, கண்ணே - கண்களே, வாளா - வீணாக, படு - இறந்துபடுகின்ற, கொலை - கொலைத்தொழிலே, புரிவ - செய்வனவாம், சிலம்பே - நூபுரங்களே, (அன்னேர்) அவருடைய, அடிமிசை - அடிகளின்மேல் விழுந்து, முறையிட்டு-(தங்குறைகளே)

மூறையிட்டு, என்றும் – எந்காளிலும், அரற்றுவ – புலம்புவனவாம், அன்னோர் – அவருடைய, கரு – கரிய, குழல் – கூந்தலிலுள்ள, காமர் – அழகிய, வண்டே – வண்டுகளே, சூழ்ந்து – சூழ்ந்து, கடி – (வேதத்தினுலே) விலக்கப்பட்ட, மது – கள்ளை, நுகர்வ – குடிப்பனவாம் எ–று.

மருங்கே கொடியான என்பதற்கு—மருங்கே – இடைகளே, கொடியன் – கொடிபோல்வன எனவும்; கண்ணே வாளா படுகொலைபுரிய என்பதற்கு—கண் – கண்களே, வாளா – காரணமில்லாமல், படு – வருந்துகின்ற, கொலை – வருத்தத்தை, புரிவ—செய்வன எனவும்; சிலம்பே அடிமிசை முன்றியிட்டென்று மாற்றுவ என்பதற்கு – சிலம்பே – சிலம்புகளே, அடிமிசை – அடிகளின்மேல், முறை – முறையாக, இட்டு – தரிக்கப்பட்டு, அரற்றுவ – ஒலிப்பன எனவும்; வண்டேசூழ்ந்து கடிமது நுகர்வ என்பதற்கு—வண்டே – வண்டுகளே, சூழ்ந்து – மொய்த்து, கடி – பரிமளம்பொருந்திய, மது – பூந்தேனை, நுகர்வ – குடிப்பன எனவும் கருத்தாகக்கொள்க.

எனவே அந்நாட்டு மனிதர்களிலே கொடியவரும், வீணாக இறந்து படுகிற கொலைத் தொழிலைச் செய்பவரும், பிறரடிகளின்மேலே வீழ்ந்து தங் குறைகளே முறையிட்டுப் புலம்புவோரும், வேதத்தினுலே விலக்கப்பட்ட கள்ளைக் குடிப்பவரும் இல்லையென்பதாயிற்று. இடை முதலியவைகளே அம்மனிதரிற் பிரித்தலால் ஏகாரங்களுன்றும் பிரிநிலைகள். கொடுமைமுதலானவற்றை மனிதர்களினெழித்து இடை முதலானவற்றிற் காட்டலால் ஒழித்துக்காட்டணியாம். 24

கடல்படுமமுதுமல்லற்கான்படுமமுதுமோங்குந்
தடவரையமுதுமொன்றித்தலைமயக்குற்றவாற்ரு
லுடைதிரையமுதமொன்றிறபுடையவிண்ணுடுகோலோ
நிடதநாடதற்குநேராநிகழ்த்தலாந்தகைமைத்தம்மா.

இ–ள். கடல் – கடலின்கண், படும் – உண்டாகிய, அமுதும் – (உப்பு முதலாகிய) அமிர்தமும், மல்லல் – வளம்பொருந்திய, கான் – காட்டின்கண், படும் – உண்டாகிய, அமுதும் – (பால்முதலாகிய) அமிர்தமும், ஓங்கும்–உயர்ந்த, தடம் – பெரிய, வரை – மலையின்கண், (படும்) உண்டாகிய, அமுதும் – (தேன்முதலாகிய) அமிர்தமும், ஒன்றி – பொருந்தி, தலைமயக்குற்ற–கலந்துகிடந்த, ஆற்றல் – காரணத்தால், உடை – (கரையை) உடைக்கின்ற, திரை – அலைகளையுடைய (கடலின்கண்)படும்–உண்டாகிய, ஒன்றமுதமே–ஓரமிர்தத்தையே, உடைய – (தன்னிடத்தி) லுடைய, விண்ணுடோ–தெய்வநாடோ, நிடதநாடதற்கு – நிடததேசத்திற்கு, நேரா – ஒப்பாக, நிகழ்த்தலாம் – சொல்லுதற்காகின்ற, தகைமைத்து – குணத்தையுடையது எ–று. கொல்—ஐயப்பொருட்கண் வந்த இடைச்சொல்.

அமுது உண்ணுதற்குரிய அறுசுவையுணவுகளுக்கும், தேவருணவிற்குஞ் சிலேடை. "அமுதுபா நேவருண்டி யார்புனல் கதைசுவைப்பேர்"

னன்பதனுலறிக. உபமேயமாகிய நிடதநாட்டிற்கு உபமானமாகிய வோர முதமுடைய தெய்வநாட்டினும் பல வமுதமுடைமையாகிய விசேடத்தைச் சொல்லுதலால் வேற்றுமையணியாம். 25

நலனுறுகுமரர்யார்க்குநண்ணியவிருந்தோடுண்டும்
பலகலேகேள்வியாய்ந்தும்பகற்பொழுதினிதுநீங்கு
மலர்முலேயக்நலார்தமலத்தகமலர்த்தாணீவிப்
புலவிகடீர்த்தஞ்சேர்ந்துநள்ளிருட்பொழுதும்போமால்.

இ-ள். நலன் - நற்குணங்களே, உறு - பொருந்திய, குமரர் யார்க்கும் - ஆடவரெல்லாருக்கும், நண்ணிய - (தம்மிடத்து) வந்த, விருந்தோடு - விருந்தினரோடு, உண்டும் - (அறுசுவையுண்டிகளே) யுண்ணலாலும், பல - பல வகையாகிய, கலே - கலேகளே, கேள்வி - கேள்வியினுலே, ஆய்ந்தும் - ஆராய்ச்சி செய்தலாலும், பகற்பொழுது - பகற்காலமானது, இனிது - இனியதாக, நீங்கும் - கழியும், அலர் - அடிபரந்த, முலே - முலேகளேயுடைய, அந்நலார் - அழகிய மங்கையருடைய, அலத்தகம் - செம்பஞ்சூட்டிய, மலர் - தாமரை மலர்போலும், தாள் - அடிகளே, நீவி - தடவி, புலவிகள் - ஊடல் களே, தீர்த்தும், நீக்குதலாலும், சேர்ந்தும் - (அவரைச்) சேர்தலாலும், நள்ளிருட்பொழுதும் - நடுயிராக்காலமும், இனிது - இனியதாக, போம் - கழியும் எ-று. தம் - சாரியை. ஆல் - அசை.

உண்டு, ஆய்ந்து, தீர்த்து, சேர்ந்து இந்நான்கும் வினையெச்சத் திரிபுகள், பலகலேகளாவன:—வேதவேதாங்க முதலியவும், அறுபத்துநாலு கலேகள் முதலியவுமாம். இரவின் முதற்பங்கு உண்வாதிகளாலும், கடைப் பங்கு நித்திரையினுலும் கழிதல்பற்றி நள்ளிருட் பொழுதென்றார். பல கலேகளேயும் கேள்வியையும் ஆராய்ந்தும் என்றும் பொருள். என்னை, "தூல்பலகல்" என்ற பெரியோர், "கேள்விமுயல்" எனவும் விதந்தோதினராகலின். 26

கொல்லுலேவேற்கணல்லார்கொழுநரோடிடிரீத்த
வில்லுமிழ்கலன்களியாவுமிளிர்சுடரெறிக்குமாற்ரு
லெல்லியும்பகலுந்தோன்ரு தியவருலகமேய்க்கு
மல்லன்மாவிந்தமென்னும்வளநகர்கூறலுற்ரும்.

இதனுல் அந்நிடததேசத்துள்ளே நளச்சக்கரவர்த்திக் கிடமாகிய மாவிந்த நகரத்தின் சிறப்பைப் புகழத் தொடங் கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கொல் - கொல்லனது, உலே-உலேக்களத்திலே (காய்ச்சப்பட்ட) வேல்-வேல்போலும், கண் - (சிவந்த) கண்களேயுடைய, நல்லார்-மாதரால், கொழுநரோடு - (தம்முடைய) கணவரோடு, ஊடி - பிணங்கி, நீத்த - களேந் தெறியப்பட்ட, வில்-காந்தியை, உமிழ் - வீசுகின்ற, கலன்களியாவும்-ஆபர

ணங்களெல்லாம், மிளிர் - விளங்குகின்ற, சுடர் - கிரணங்களே, எறிக்கும்-வீசுகின்ற, ஆற்றல் - காரணத்தால், எல்லியும் - இரா (இது) வென்றும், பகலும்-பக (லிது)வென்றும். தோன்றுது - அறியப்படாமல், இமையவர்-தேவரது, உலகம் - உலகத்தை, ஏய்க்கும்-ஒத்திருக்கின்ற, மல்லல் - செல்வத்தையுடைய, மாலிந்தமென்னும் - மாலிந்தமென்று சொல்லப்படுகின்ற, நகர் - பட்டினத்தினது, வளம் - சிறப்பை, கூறலுற்றும் - (யாஞ்)சொல்லத் தொடங்கினேம். எ-று.

கொழுநர் - கொழுகொம்பு போன்றவர். கொழுகொம்பு - ஊன்று கொம்பு, கலன்களாவன:—மகரவாய் மோதிரம், பீலி, கான்மோதிரம், பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி, குறங்குசெறி, மேகலை, காஞ்சி பருமம், விரிகிகை, மாணிக்கவளை, முத்தவளை, சூடகம், நவரத்தினவளை, சங்கவளை, பவளவளை, வெள்ளிவளை, வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, பூண்ஞாண், சவடி, சரப்பளி, குதம்பை, சீதேவி, வலம்புரிச்சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி முதலாயின.

கணவர்மேற் கோபத்தினுலே கண்கள் சிவத்தலிற் காய்ச்சப்பட்ட வேலை யுவமானமாக்கினர். இரவும் பகலுந் தோன்றுமையை ஆபரணகாந்தியினுலே சாதிப்பதாகிய செய்யுட்குறியை அங்கமாகக்கொண்டு இமைய வருலக மேய்க்குமென்னு முவமை வருதலாற் கலவையணி. 27

நாட்டுப் படல முற்றிற்று.

நகரப் படலம்.

இது நளனது இராசதானியாகிய மாவிந்தநகரத்தின் சிறப்பைச் சொல்லுகின்றது.

கலிநிலைத்துறை.

குடவளைக்குலம்வயிறுளைந்தினமணிகொழிக்கு
மடவில்வானகருருவுகாட்டியதுபோன்மதில்சூழ்
கடிகொண்மாநகரங்நிழல்கவிதுவிடாதகன்ற
புடைகொணீர்நகருடுத்தலைபொங்குபேரகழி.

இதனுல் மாவிந்தநகரத்தின் சிறப்புச் சொல்லப் படுகின்றது.

இ-ள். மதில் - மதில், சூழ் - சூழ்ந்த, கடி - காவலை, கொள் - கொண்டிருக்கிற, மா - பெருமைபொருந்திய, நகர் - (முன்சொல்லப்பட்ட) நகரமானது, குடம் - குடம்போலும், வளை - சங்குகளது, குலம் - குலமானது, வயிறுளைந்து - வயிறுகொந்து, இனம் - (ஒன்றற்கொன்)றினமாகிய, மணி - முத்துக்களை, கொழிக்கும் - சொரிதற்கிடமாகிய, மடவில் - ஒருதடாகத்துள், வானகர் - அமராவதி பட்டினத்திலுள், காட்டியது - காட்டப்பட்டதாகிய, உருவு - நிழலை, போன்ம்-போலும், நகர் - அந்நகரத்திலுள்,உடுத்து - உடுக்கப்பட்டு, அலை - அலைகளால், பொங்கு - விளங்குகின்ற, பேர்-பெரிய, அகழி - அகழியானது, அந்நிழல் - அந்நிழலிலுள், கதுவிடாது - பற்றப்படாமல், அகன்ற - நீங்கிய, புடை - சுற்றுப்பக்கத்தை, கொள் - (தனக்கிடமாகக்) கொண்ட, நீர் - நீரை, (போன்ம்) போலும். எ-று.

''குடவளைக்குலம் வயிறுளைந்தின மணிகொழிக்கு மடவில்'' என்ற தனுல் வானகரத்தின் பிரதிவிம்பம் உள்ளடங்குதற்குத் தகுந்தவிசாலமுள்ளதென்பதாயிற்று. சங்குகள் முத்துக்களை மிகுதியாகத் தருதல்தேரின்ற ஈனுமென்னுது கொழிக்குமென்றார், போலுமென்னுஞ் செய்யுமென் வாய்பாட்டு முற்றுவினை ஈற்றய லுகரங்கெட்டு லகரமெய் னகரமெய்யாகத் திரிந்தது, இதற்குவிதி ''அவற்றுள் செய்யுமென்னும் வியரெஞ்சு கிளவிக்கு'' என்னுஞ் சூத்திரவுரையிற்காண்க, போன்மென்பது புடைகொணீர்க்குங் கூட்டப்பட்டது. உடுத்து, கதுவிடாது என்பவை 'எழுதிவந்தவோலை'என்கிறவிடத்தே எழுதி யென்பதுபோலச் செயப்பாட்டு வினைப்பொருளைத் தந்தன. அந்தமாவிந்த நகரத்தை அமராவதியின் பிரதிவிம்பமாகவும், அந்த மாவிந்த நகரைச் சூழ்ந்த அகழியை அந்நிழலைச் சூழ்ந்த நீராகவுங் குறித்தலால் தற்குறிப்பணியாகும். 1

கண்ணகன் றேரகழியிலுழக்கியகரிக
டண்ணந்தாமரைத்தாளெனத்தடக்கையாற்பிடித்தி

னண்ணுஞ்சேடனெடுத்ததன் சுடிகையிறை
புண்ணிவந்தொளிர்மணியினுலுற்கையென்றெறியும்..

இதனுல் அகழியின்சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். கண்ணகன்ற - இடம்பரந்த, பேர் - பெரிய, அகழியில் - அகழியின்கண், உழக்கிய - கலக்கிய, கரிகள் - யானைகள், தண் - தண்ணிய, அம் - அழகிய, தாமரை - தாமரையினுடைய, தாளென - நாளமென்று நினைத்து, தடம் - பெரிய, கையால் - துதிக்கையினுலே, பிலத்தில் - பாதலத்திலே, நண்ணும் - வாசஞ்செய்கின்ற, சேடனை - சேடனென்னும்பாம்பை, எடுத்து - மேலெடுத்து, அதன் - அப்பாம்பினது, சுடிகையில் - உச்சியின்கண், உள் (அது) னுள்ளிருந்து, கிவந்து - மேலெழும்பி, நாறி - காணப்பட்டு, ஒளிர் - விளங்குகின்ற, மணியினுல் - இரத்தினத்தினுலே, உற்கையென்று - கொள்ளியென்றஞ்சி, எறியும் - (அதனை) வீசும் எ-று.

நல்லசாதிப் பாம்பிற்கு வளருந்தோறும் உள்ளிருந்து மேலெழும்பிக் கொண்டுவந்து தகுந்தபருவத்திலே உச்சியிற் புறப்பட்டுக் காணப்படுதலால் உண்ணிவந்தொளிர் மணியென்றார். கரிகளென்று பன்மையாற் கூறலால் றனித்தனி யெடுத்தென்றுகொள்க. சேடனைத் தாமரை நாளமென்றுங் கொள்ளியென்றும் மயங்குதலால் மயக்கவணி. யானைக்குஞ் சேடனுக்குஞ் சம்பந்தத்தைக் கற்பித்த தாகிய தொடர்புயர்வு நவிர்ச்சியணியினுலே அகழி பாதாளவரைக்கும் ஆழ்ந்துள்ள தென்னும் பொருளொலிக்கின்றது. 2

ஒற்றையாழியந்தேரவனுயர்மதிற்கடக்கப்
பெற்றிலாமையிற்பிறங்குபொற்கதவங்கடிறக்கு
மற்றநோக்குவனங்நலாரியல்புறவணியக்
கற்றைவெண்மதிசாளரத்தாடியிற்காட்டும்.

இதனுலே மதிலினது சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒற்றையாழி - ஒருருளையையுடைய, அம் - அழகிய, தேரவன் - தேரையுடைய (சூரியனனவன்), உயர் - (தன்வழியின்) மேலுமுயர்ந்த, மதில் - மதிலை, கடக்க - தாண்டுதற்கு, பெற்றிலாமையின் - (வல்லமை) பெற்றிலாமையால், பிறங்கு - விளங்குகின்ற, பொன் - பொன்மயமாகிய, கதவங்கள் - (அம்மதில்வழிக்) கதவுகளை, திறக்கும் - திறக்கும், அற்றம் - சமயத்தை, நோக்குவன் - பார்த்துக்கொண்டிருப்பான், அந்நலார் - அழகிய மகளிரானவர், இயல்புற - திருத்தமுண்டாக, அணிய - (திலகமுதலானவற்றைத்) தரித்துக்கொள்ள, கற்றை - (கிரணக்) கற்றையையுடைய, வெள் - வெள்ளிய, மதி - சந்திரனனவன், சாளரத்து - (அம்மதின்மேற்) பலகணியின்புறத்திருந்து, ஆடியின் - நிலைக்கண்ணுடிபோல, காட்டும் - (அவருக்குத் தன்னைக்) காட்டுவான் எ-று.

நிலைக்கண்ணுடி - நிலையாக முன்வைக்கப்படுங் கண்ணுடி.

அற்றஞ் சமயமென்பது "அற்றமேமறைவுஞ் சோர்வு மவகாசந்தானு மாகும்" என்பதனுலறிக. கற்றை வெண்மதியென்றதனுற் பூரண சந்திர னெனக்கொள்க. சந்திரன் சாளரத்துள்ளே நுழைதற்கிடம் பெறுமந் புறத்தே நிற்கைபற்றி ஆடியிற்காட்டுமென்றார். சூரியனோடு மதில் வாயி லுக்குஞ் சந்திரனோடு மதிற் சாளரத்திற்குஞ் சம்பந்தஞ் சொல்லுதலால், தொடர்புயர்வு நவிற்சி யணிகளாம். இதனுல் அந்நகரத்து மதிலுக்கு அதிக உயர்வு தொனிக்கிறது. 3

மறுவிகந்தவெண்மதியெனவயங்கியபித்தி
செறியுமாடங்கள்வெண்கதிர்பரப்பிடுசெவ்வி
நறவுயிர்த்தபைந்துணர்மலிகற்பகக்காட்டை
வெறுவிதாமெனவெண்ணைகபுரிவதுபோலும்.

இதுமுதல் மூப்பத்துநான்கு பாட்டுக்களால் வீடுகள்முத லியவற்றின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். மறு - களங்கத்தினின்றும், இகந்த - நீங்கிய, வெள்-வெள்ளிய, மதியென - சந்திரன்போல, வயங்கிய - விளங்கிய, பித்தி - (பளிங்குச்) சுவர்களானவை, செறியும் - நெருங்கிய, மாடங்கள் - மாளிகைகளானவை, வெள் - வெள்ளிய, கதிர் – கிரணங்களை, பரப்பிடு - விரிக்கின்ற, செவ்வி- அழகினுலே, நறவு – தேனை, உயிர்த்த - தருகின்ற, பைந்துணர் - பசிய பூங் கொத்துகளால், மலி-நிறைந்த, கற்பகம்-கற்பகதருக்களையுடைய, நாட்டை- சுவர்க்கத்தைக்குறித்து, வெறுவிதாமென - வறுமையுடையதென்று, வெள்- வெள்ளிய, நகை - சிரிப்பை, புரிவது - செய்வதை, போலும் - ஒக்கும் (அந் நகரம்) எ-று.

விரும்பப்படுகிற உண்டி அணி ஆடை முதலியவற்றைக் கற்பிக்கின்ற கற்பகதருவை யுடைத்தாய் மற்றெல்லா வுலகங்களாலும் புகழப்படுகை தோன்றக் கற்பக நாடென்றார். அப்படியிருந்தும் அது தன்பெருவளத் திற்குச் சிறியதாகக் காணப்படுதலால் மாவிந்தம் அதனை யிகழ்ச்சி செய்து சிரிப்பதென்றதாயிற்று. சிரிப்பதற்குத் தெரு வாயாகவும்மாடவரிசைகள் பல் வரிசைகளாகவுங் கொள்க. பளிக்குமாடங்களின் வெள்ளொளி வீச லாகிய தருமசம்பந்தத்தினுலே மாவிந்தத்தைச் சிரிப்பதாகக் குறித்தலால், பொருட்டற் குறிப்பணியாகும். இதனுலே மாவிந்தத்தின் வளஞ் சுவர்க்க வளத்தினு மிகுந்துள்ளதென்பது தொனிக்கின்றது.

வடிகொள்வெண்சுதைநீற்றியமாடநீள்கழுத்தின்
படியமைம்முகில்கதிர்விடுபானிலாக்குழவி
முடியின்மீதுறத்தவழ்தலான்முழுமெய்யும்வெள்ளைப்
பொடியணிந்தருள்கறைமிடற்றண்ணலைப்போலும்.

இ-ள். வடிகொள் - வடித்துக்கொள்ளப்பட்ட, வெண்சுதை - வெள் ளிய சுண்ணச்சாந்தை, நீற்றியமாடம் - பூசிய மாளிகையான து, நீள்கழுத்

தில் - நீட்சி பொருந்திய (அதன்) கண்டத்தின்கண், மைமுகில் படிய-காரிய மேகமானது படிந்திருக்க, கதிர்விடு - கிரணங்களை வீசுகின்ற, பாணிலாக் குழவி - வெண்பிறையானது, முடியின்மீது - (அதன்) முடியின்மேலே, உற்றதவழ்தலால் - பொருந்த ஊர்தலால், முழுமெயும் - திருமேனி முழுதி லும், வெள்ளைப்பொடி - விபூதியை, அணிந்தருள் - பூசியருளிய, கறை மிடற்று - (நஞ்சக்) கறைபொருந்திய கண்டத்தையுடைய, (நிலாக்குழவி முடியின்மீது) - பிறையானது முடியின்மேல், உற - பொருந்த, தவழ்-ஊர்கின்ற, அண்ணலை - பரமசிவனை, பொருவும் - ஒத்திருக்கும் எ-று.

.. நீலாக்குழவி முடியின்மீதுறத் தவழ்தல் பரமசிவனுக்குங் கூட்டப்பட் டது. மாளிகையின்கு வடிவத்திற் பூசிய சுண்ணச்சாந்து பரமசிவனது வடிவத்திற்பூசிய விபூதிபோலவும், அதனது கழுத்திலே படிந்த காரியமேகம் அவன் கழுத்திலேபடிந்த நஞ்சக்கறை போலவும், அதன்முடிமேலே தவழ் கின்ற பிறை அவன்முடிமேலே தவழ்கின்ற பிறைபோலவும், தோன்றுத லாலே அது பரமசிவனுக்கு ஒப்பாக இருக்குமென்பதாம். இது உவமை யணி. இதனால் அம்மாடங்கள் சந்திரமண்டலத்தையளாவி யிருக்கின்றன வென்பது தொனிக்கின்றது. ஒருகலை நின்ற மதியை இறையவன் முடி மேற் கோடலின் "பாணிலாக்குழவி" என்றார். 5

மழைக்கண் மங்கையர்பயிறரமரகதமணியி
னிழைத்தசெய்குன்றின்பைங்கதிர்பொன்னிலத்தெய்தக்
குழைத்தவைந்தருநீழலிற்குலவுமானினங்க
டழைத்தபுல்லெனவிசைவொடுதனித்தனிகறிக்கும்.

இ-ள். மழை - குளிர்ச்சிபொருந்திய, கண் - கண்களையுடைய, மங்கை யர் - மகளிரானவர், பயில்தர - (ஏறி) விளையாடுதற்கு, மரகதமணியின்-மரகத மணிகளாலே, இழைத்த - பதித்துச்செய்த, செய்குன்றின் - விளை யாட்டு மலைகளுடைய, பைங்கதிர் - பசிய கிரணங்களானவை, பொன்னி லத்து - தேவ லோகத்தின்கண், எய்த - அடைய, குழைத்த - தளிர்த்த, ஐந் தரு - பஞ்சதருக்களது, நீழலில் - நிழலின்கண், குலவும்-உலவுகின்ற, ஆன்-பசுக்களுடைய, இனங்கள் - கூட்டங்களானவை, தழைத்த - செழித்த, புல் லென் - புற்களென்று நினைத்து, விரைவொடு - சீக்கிரமாக, தனித்தனி-ஒவ் வொன்றாக, கறிக்கும் - (அக்கிரணங்களை) கௌவும் எ-று.

மற்றை மலைகள்போலப் படைப்புக்காலத் தண்டாயதன்றி விளையாடு தற்காகச் செய்யப்பட்டமையாற் செய்குன்றென்றார். மரகதமணியின் கிர ணத்தைப் புல்லென்று மயங்கினமையான் மயக்கவணியாகும். இதற்கு, அக்கிருக்கும் தெய்வலோகத்திற்குஞ் சம்பந்தத்தைக் கற்பித்ததாகிய தொடர்புயர்வு நவிற்சியணியங்கமாதலாற் கலவையணியாம். 6

புதுமணிதிமென்மகளிர்சாலரத்திடைப்பொருந்து
மதியையின்னுயிர்ப்பாங்கியர்மறைந்தனர்நோக்குங்

கதிர்கொள்வாண்முகமென்றுதங்காதலர்ப்புல்லும்
பதுமமென்கரநீக்கிநீள்படைவிழிபுதைப்பார்.

இ-ள். புது – புதிய, மணத்த – விவாகத்தை யுடைய, மெல் – மெல்லிய, மகளிர் – மங்கையரானவர், சாளரத்திடை – (மேல்வீட்டின்) பலகணியின்புறத்து, பொருந்து – சேர்ந்த, மதியை – சந்திரனை, இன் – இனிய, உயிர் – உயிர்போலச்சிறந்த, பாங்கியர் – தோழிய ரானவர், மறைந்தனர் – மறைந்தவராகி, நோக்கும் – பார்க்கின்ற, கதிர் – கிரணத்தை, கொள் – கொண்ட, வாள் – ஒளியையுடைய, முகமென்று – முகமென்றுநினைத்து; தம் – தம்முடைய, காதலர் – நாயகரை, புல்லும் – தழுவிக்கொண் டிருக்கின்ற, பதுமம் – தாமரைமலர்போலும், மெல் – மெல்லிய, கரம் – கைகளை, நீக்கி – (அவரிலிருந்து) நீக்கி, நீள் – நீண்ட, படை – வாள்போலும், விழி – கண்களை, புதைப்பார் – மூடிக் கொள்வார் எ-று.

மறைந்தென்னும் வினையெச்சம் மூற்றுரைத் திரிந்தது. இதற்குவிதி- "வினையெஞ்சுகிளவியும் வேறுபல்குறிய" என்பதனாலறிக. இன்னுயிர்ப் பாங்கியர் என்றதனால் அந்தப் புரச்செய்கையைப் பார்த்தற்கும் உரிமை தோன்றுகின்றது. புதுமணத்தராதலால் இன்னுயிர்ப் பாங்கியர்க்குங் கண் மூடற் கேதுவான நாணஞ் சொல்லப்பட்டது. மதியைப் பாங்கியர் முகமென்று மயங்குதலால் மயக்கவணியாம். இதனால் அம்மகளிர் முகஞ் சந்திரனிற் சிறந்ததென்பதும் அம்மாடஞ் சந்திரமண்டலத்தினுயர்ந்ததென்பதும் ஒலிக்கின்றன. 7

வள்ளவாய்மலர்முகத்தியர்வதியுமேனிலைமிற்
கள்ளருமலர்நாற்றியசுருங்கையிற்கதிர்க
ளுள்ளுறப்புகுந்துவாமதியுடனுரிஞ்சுதலாற்
பிள்ளைவெண்மதியாதனன்றெனப்பெரிதுவக்கும்.

இ-ள். உவா – பருவகாலத்திலே தோன்றுகிற, வெள் – வெள்ளிய, மதி – சந்திரனைனவன், வள்ளவாய்மலர் – தாமரை மலர்போலும், முகத்தியர் – முகத்தையுடைய மாதரானவர், வதியும்-வாசஞ்செய்கின்ற, மேனிலையில் – மேல்வீட்டில், கள் – தேனுனது, அரு – நீங்காத, மலர் – மலர்களை, நாற்றிய – தூங்கக்கட்டிய, சுருங்கையில் – நுழைவாயிலிலே, கதிர்கள் – கிரணங்களானவை, உள் – உள்ளே, உற – பாய, புகுந்து – நுழைந்து, மதி-(யாவராலும்) மதிக்கப்படுகிற, உடல் – (தன்பெரிய) வுடம்பு, உரிஞ்சுதலால்-தேய்த்தலினாலே, பிள்ளையாதல் – குழந்தையாதலே, நன்றென-எனக்கு நல்லதென்று நினைத்து, பெரிது – மிகவும், உவக்கும் – (அப்பருவத்தை,) விரும்புவான் எ-று.

வள்ளவாய் மலர் – கிண்ணம்போலும் வாயையுடைய மலரென்க, சுருங்கை – திட்டிவாயில், சுருங்கை யென்பது காந்தகற்படைப்பு நுழைவாயிலு மென நுவலுமிருபெயர். மகிழ்தலென்னும் பொருளைத் தருகிறவுவத்த

லென்பது விருப்பத்தை யுணர்த்தலால் ஆகுபெயர். கலே குறைதலாகிய குற்றத்தினுலே நான்காகச் சுருங்கையினுள்ளே நழையுங்ருண மிருத்தல் கண்டு அக்குற்றத்தை வேண்டுதலாலே வேண்டலணியாம். 8

உருவின்மைந்தரில்வேனில்வேட்குடைகுநரில்லே
பொருளிலார்களிற்றன தீனப்பொருவிலாரில்லே
தெருளின்மாக்களிற்சேடனிற்ருழ்குநரில்லே
யருளிலார்களிலேந்தருநிகர்க்கலாரில்லே.

..இ-ள். உரு – அழகு, இல் – (தம்மிடத்) தில்லாத, மைந்தரில் – காளையருள், வேனில் – வசந்தகாலத்தையுடைய, வேட்கு – மன்மதனுக்கு, உடைகுநர் – தோற்பவர், இல்லே – இலர், பொருள் – செல்வப்பொருள், இலார்களில் – (தம்மிடத்) தில்லாதவருள், தனதனே – குபேரனே, பொருவிலார்-ஒவ்வாதவர், இல்லே – இலர், தெருள் – கல்வியறிவு, இல் – (தம்மிடத்) தில்லாத, மாக்களில் – மனிதருள், சேடனில் – ஆதிசேடனில், தாழ்குநர்-குறைபவர், இல்லே – இலர், அருள் – ஈகையானது, இலார்களில் – (தம்மிடத்) தில்லாதவருள், ஐந்தரு – பஞ்சதருக்களுக்கு, நிகர்க்கலார் – ஒப்பாகாதவர், இல்லே – இலர் எ-று.

அந்நகரத்திலே மன்மதன்போ லழகுள்ளவர்களே அழகில்லாதவர்களென்றும், குபேரன்போலச்செல்வமுள்ளவர்களேச் செல்வமில்லாதவர்களென்றும், ஆதிசேடன்போலக் கல்வியுள்ளவர்களேக் கல்வியில்லாதவர்களென்றும், பஞ்சதருக்கன்போல ஈகையுள்ளவர்களே ஈகையில்லாதவர்களென்றும், கொள்ளுதலால். அம்மன்மதன் முதலான பொருள்களின் மிகுந்த அழகு முதலானவை யுள்ளவர்களே சிறந்தவராகக் கொள்ளப்படுவரென்பதாயிற்று. 9

பளிக்குமேனிலத்தன்பர்பாற்பயில்வுறுகலவி
தினேத்துமார்பிடைத்துயில்பவர்முகத்தில்வெண்டிங்கள்
கினேத்தகண்கதிர்பரப்புதல்கிளர்ந்தசாளரத்தி
னெளித்துவாண்முகச்செவ்வியைக்கவர்வதொத்துளதால்.

இ-ள். வெள் – வெள்ளிய, திங்கள் – சந்திரனுனது, பளிக்கு – பளிங்கினுலாகிய, மேனிலத்து – மேல்வீட்டினுள், அன்பர்பால் – நாயகரிடத்தில், பயில்வுறு – (நாள்தோறும்) பழகிய, கலவி – புணர்ச்சியை, தினேத்து – அனுபவித்து, மார்பிடை – அவர் மார்பினிடத்தே, துயில்பவர் – தூங்குகிற மகளிரது, முகத்தில் – முகத்தினிடத்தே, கினேத்த – தழைத்த, தண் – தண்ணிய, கதிர் – கிரணங்களே, பரப்புதல் – விரித்தலினுலே, கிளர்ந்த – விளங்குகின்ற, சாளரத்தின் – பலகணியின்புறத்து, ஒளித்து – மறைந்துகின்றுவாள் – ஒளி பொருந்திய, முகம் – (அவர்) முகத்திலுள்ள, செவ்வியை-அழகை, கவர்வது – திருடுவதை, ஒத்துளது – ஒத்திருக்கும் எ-று. ஆல், அசை.

பிறரிடத்துள்ள பொருளைத் திருடுதற்குச் சமயம் தங்கும்வேளை யாதலால் துயில்பவரென்றார். சந்திரனைக் கவர்வதாகக் குறித்தலினாலே பொருட்டற் குறிப்பணி. இதனால் முகத்திற்குச் சந்திரனிலும் அதிக காந்தியைச் சொல்லியதாகிய வேற்றுமையணி தொனிக்கின்றது. 10

கணங்கொண்மாமணிகுயிற்றியொண்கதிர்செய்ம்மேனிலையிற்
சுணங்குபூத்தணிபருமிதத்திணைமூலமகளிர்
மணங்கொடாமரைமுகமுமொண்மதியமுமறியா
தணங்கராமதிமருண்டுபார்த்தையுறவெய்தும்.

இ-ள். கணம் - கூட்டத்தை, கொள் - கொண்டாட, மா - பெரிய மணி - மணிகளானவை, குயிற்றி – பதிப்பிக்கப்பட்டு, ஒள் – ஒள்ளிய, கதிர் – கிரணங்களை, செய் – செய்கின்ற, மேனிலையில் – மேல் வீட்டில், சுணங்கு – தேமல், பூத்து – படர்ந்து, அணி – அலங்கரிக்கப்பட்ட, பருமிதம் – பருத்த அளவையுடைய, திணை – இரண்டாகிய, மூல – மூலகளையுடைய, மகளிர் – மாதரது, மணம் – வாசனையை, கொள் – கொண்ட, தாமரை – தாமரை மலர்போலும், முகமும் – முகத்தையும், ஒள் – ஒள்ளிய, மதியமும் – சந்திரனையும், அறியாது – அறியமாட்டாமல், அணங்கு – தெய்வத்தன்மை பொருந்திய, அரா – இராகுவானது, மதிமருண்டு – புத்திமயங்கி, பார்த்து – நோக்கி, ஐயுறவு – (இவற்றுள் முகம் யாதோ சந்திரன் யாதோவென்கிற) சந்தேகத்தை, எய்தும் – அடையும் எ-று.

அணங்கு – தெய்வம். "அணங்குகோ யழகுதெய்வம்" என்பதாலறிக. ஒப்புமையினாலே முகத்திற்குஞ் சந்திரனுக்கும் வீசேடந்தோன்றுதலாகிய பொதுமையணி ஐயவணிக்கு அங்கமாதலாற் கலவையணி. இதனால் அம் மேல் வீடுகள் சந்திர மண்டலத்தை யளாவி நிற்கின்றன வென்பதும், மாதர்முகங்கள் சந்திரன்போல் விளங்குகின்றனவென்பதுந் தோன்றுகின்றன. சிவவரத்தால் மதியைக்கொள்வது இராகுவாதலின் "அணங்கரா" என விதந்து கூறினர். 11

மேனிவந்தொளிர்மாடத்தின்விழுத்தகநிரைத்த
பானிலாமணித்தசும்பினிற்றண்கதிர்பரப்பக்
கானறும்புனனிறைதலுங்கதிரவன்றடந்தேர்
மீனினங்குடித்தயர்வுபிர்த்தும்பரினவாவும்.

இ-ள். மேல் – ஆகாயத்தில், நிவந்து – உயர்ந்து, ஒளிர் – விளங்குகின்ற, மாடத்தின் – மேல்வீட்டில், விழுத்தக – சிறப்புப் பொருந்த, நிரைத்த – வரிசையாக வைக்கப்பட்ட, பால் – வெண்மை பொருந்திய, நிலாமணி – சந்திர காந்தத்தாலாகிய, தசும்பினில் – குடங்களிலே, தண் – தண்ணிய, கதிர் – கிரணங்களை, பரப்ப – (சந்திரன்) விரிக்க, கால் – கக்கப்பட்ட, நறு – நல்ல, புனல் – நீரானது, நிறைதலும் – (அவற்றுள்ளே) நிறைதலும், கதிரவன் – சூரியனது, தடம் – விசாலமாகிய, தேர் – தேரினுடைய,

மான் – குதிரைகளது, இனம் – கூட்டமானது, குடித்து – (அந்நீரைக்) குடித்து, அயர் வுயிர்த்து – இளைப்பாற்றிக்கொண்டு, உம்பரின் – ஆகாயத்திலே, வாவும் – தாவும் எ-று.

மான்—ன் சரியை, – உம்பர்—மேலிடம்.

நிரைத்த தசும்பாவன—சீதளோப சாரத்திற்குரிய தண்ணீர் பெறுவது கருதி வைக்கப்பட்டவையாம். அவை சந்திரன் முன்னீர்காலுதல்—"சந்திர வொளியிற் றண்ணீர் கால்வது சந்திரகாந்தமெனப் பெயர் பெறுமே" என் பத்தலறிக. அந்நீரைக் குடித்தவளவிலே வெயிலாலும் இழுத்தலாலும் உண்டான வருத்தந்தீர்தலாற் களிப்படைந்து தாவுமென்க. மேனிலைக்குஞ் சூரிய மண்டலத்துக்குஞ்சம்பந்தங் கற்பித்தலால் தொடர்புயர்வுநவிற்சியணி. சூரியனது இரதத்திற்குக்காயத்திரி, பிருகதி, உட்டிணி, சகதீ, திரிட்டுப்பு, அநுட்டுப்பு, பங்தி என்னும் வேத சந்தங்கள் ஏழும் குதிரைகளா முண்மைபற்றி, "கதிரவன் றடந்தேர் மானினம்" என்றார். ஏழுபுரவியென்பதற்குச் சப்தாசுவம் என்னும்வடநூல் வழக்குப்பற்றி யப்பெயர்கொண்ட ஒருகுதிரை எனக் கொள்வார் மதம் மறுக்கப்பட்டது கூர்மபுராண விருத்தியுரையில், தக்கன் வமிசமுரைத்த அத்தியாயம் 36-வது செய்யு ளுரைக்கண் பரக்கவுரைத்துள்ளாம். ஆங்குக் கண்டுதெளிக. 12

முருகுயிர்த்தவொள்ளகிற்புகைமுகிலொடுமுறழக்
குருமணிச்சுடர்வெயில்விரிமாடநீள்கொடிகள்
பரிதிவானவனடவுதேர்ப்பரியினைப்புடைத்தவ்
வருணனிற்றொழில்புரிந்தவன்கரஞ்சிறிதாற்றும்.

இ-ள். முருகு – பரிமளத்தை, உயிர்த்த – தருகின்ற, ஒள் – ஒள்ளிய, அகில் – அகிற்கட்டைகளது, புகை – புகையானது, முகிலொடும் – மேகத்தோடும், உறழ் – ஒத்துத்தோன்றுகின்ற, அ – அந்த, குரு – நிறமுள்ள, மணி – மணிகளது, சுடர் – கிரணமானது, வெயில் – வெயில்போல, விரி – விரிகின்ற, மாடம் – மாளிகையினுடைய, நீள் – நீட்சிபொருந்திய, கொடிகள் – கொடிகளானவை, பரிதிவானவன் – சூரியனுகிய தேவனது, நடவு – நடத்தலையுடைய, தேர் – தேரினுடைய, புரியினை – குதிரைகளை, புடைத்த – அடித்த, அவ்வருணனில் – அவ்வருணன்போல, தொழில் – நடத்துகைத்தொழிலை, புரிந்த – செய்த, அவ்வன் – அல் வருணனது, கரம் – கைவருத்தத்தை, சிறிது – சற்றே, ஆற்றும் – தீர்க்கும் எ-று.

உறழ என இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சமென்றுங் கொள்ப. பரிதிவானவன் – இருபெயரொட்டு. நடவு—தொழிற்பெயர்.

அகிற்புகை மேல்வீட்டறைகளுக்கு வாசனை யூட்டுதற் பொருட்டு மூட்டப்படுவதாம். சூரியனது தேர்ச்செலவிற்கு ஒரு கணப்போதேனு மோய்வில்லாமையாற் சிறிதாற்று மெனப்பட்டது அக்குதிரைகளுக்கும் இக்கொடிகளுக்குஞ் சம்பந்தங் கற்பித்ததாகிய தொடர்புயர்வு நவிற்சி அங்க

மும், உவமை அங்கியும் ஆகலாற் கலவையணியாம். பரி – பரிப்பது: குதிரை அருணன் – சூரியன் றேர்ப்பாகன். காசிபமுனிவரின் மனைவியருள் விந்தை என்பாளின் மகன். அது "வினதை யருணனெடுங் கலுழற் பயந்தா ளோங்குவிறன்முக்கட் – கனியைப்போற்றி யவனருள்பாற்கதிரோற் கருணன் சாரதியாய்த் – தனிசென்றனன்" என்னுங் கூர்மபுராண விருத்தத்தானறிக. 13

வரிவளைக்குலக்குவையினுன்மணிகளான்மணிக
டெரிதருங்கரவலவனுல்வயின்வயிற்றிரண்ட
* விரிகருப்புரவெண்மணற்குன்றினுலொலியாற்
பொருவிலாவணமறிதிரைக்கடலினைப்பொருவும்.

இ-ள். வரி – இரேகைகளையுடைய, வளைக்குலம் – சங்குச்சாதிகளுடைய, குவையினுல் – இராசிகளாலும், மணிகளால் – இரத்தினங்களினுலும், மணிகள் – இரத்தினங்களை, தெரிதரும் – எண்ணுகின்ற, கரம் – கைகளாகிய, அலவனுல் – நண்டுகளாலும், வயின் வயின் – இடந்தோறும், திரண்ட – குவிந்த, விரி – விரிந்த, கருப்புரம் – கர்ப்பூரங்களாகிய, வெள் – வெள்ளிய, மணல் – மணல்களுடைய, குன்றினுல் – குவியல்களாலும், ஒலியால் – ஓசையினுலும், பொரு – ஒன்றையொன்றெர்த்திருக்கின்ற, இல் – மாடவரிசைகளையுடைய, ஆவணம் – கடைத்தெருவானது, மறி – மடங்குகின்ற, திரை – அலைகளையுடைய, கடலினை – சமுத்திரத்தை, பொருவும் – ஒக்கும்.

வளை – வளைந்திருப்பது. இடம்புரி, வலம்புரி. யென்பன ரண்டுள்ள சங்குகள். பொருவில் – ஒப்பில்லாத என்றலுமாம்.

மணிகளை விரல்களாலே தள்ளி யெண்ணுகிறபோது கைகள் நண்டுகள் செல்லுதல்போலத் தோன்றலாற் கரவலவ னென்றார். வளையென்பதற்குக் கடலிலே சங்கென்றுங் கடைத்தெருவிலே வளையலென்றும், மணிகடெரிதருங் கரவலவனென்பதற்குக் கடலிலே முத்துக்கள்போன்ற வீடிவுதெரிகின்ற கைகளையுடைய நண்டென்றும், கடைத்தெருவிலே கரங்களிலே மணிகளைவைத்து அவற்றின் குணகுணங்களை யறிகிற அவ்வறிவில் வல்லவ னென்றும் சிலேடையாகப் பொருள் கூறினும் அமையும். இது உவமையணி. வயின் வயின் என்னு மடுக்கு இடப்பன்மைப் பொருளில் வந்தது. மணிகள் – ஒன்பது வகை யிரத்தினங்கள். கருப்பூரம் – கருப்புரம் எனக் குறுக்கல். 14

---

* கருப்பூரவகை யாவன:—மலைச் சரக்கு, கலை, அடைவு சரக்கு, மார்பு இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மரிர்ப்பற்று, வாராசான் குமடெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன், சீனச்சூடன் என்னுமிவை. இவ்வகைப் பாடலானே கர்ப்பூரத்தை "வெண்மணற் குன்று" என்றார்.

திங்கள்வெண் மணிநிலத்துவா மதிச்செழுங்கதிர்க
டங்கிவீழ்புன றிருக்கொடுதலைப்பெய் துளிசும்பிற்
கங்கையாழ்கடற்றலைமகன்களிப்புறக்களித்துப்
பொங்குகற்புநூலுரைத்தவைபுகரறவிளக்கும்.

இ-ள். விசும்பில் – ஆகாயத்திலுள்ள, கங்கை – கங்கையானவள், வெள் – வெள்ளிய, திங்கண்மணி – சந்திர காந்தங்கள் படுத்த, சலத்தி- (மேல்வீட்) டிடத்தே, உவா – பருவத்தி லுண்டாகிற, மதி-சந்திரனுடைய, செழு – செழிய, கதிர்கள் – கிரணங்கள், தங்கி – தங்க, வீழ் – (அதிலிருந்து) வீழ்கின்ற, புனல் – நீரினது, பெருக்கொடு – வெள்ளத்தோடு, தலைப் பெய்து – கலந்து, ஆழ் – ஆழ்ந்த, கடற் றலைமகன் – கடலாகிய (தன்) கண வனனவன், களிப்புற – (அப்போது) களிக்க, களித்து – (தானும்) களித்து, பொங்கு – விளங்குகின்ற, கற்புநூல் – கற்பிலக்கண நூலினுல், உரைத்தவை- சொல்லப்பட்ட விதிகளை, புகரற – குற்றமற, விளக்கும் – விளக்குவாள்.

கணவன் களிக்கும்போது உடன் களித்தலும், அவன் துயருறும் போது உடன் துயருறுதலுங் கற்பிலக்கண மாதலால், ஆகாயகங்கையும் பூரண சந்திரோதய காலத்திலே தன் கணவனுகிய சமுத்திரவரசன் பெரு குதலாலே அப்போது அந்தச் சந்திர கிரணம்பட்டுச் சந்திரகாந்தத்தி னிருந்து வீழ்கின்ற நீர்வெள்ளத்தோடு கலந்து தானும்பெருகி அக்கற் பிலக்கணத்தைப் பிறருக்குங்காட்டு மென்பதாம். தங்கியென்பது வினை யெச்சத்திரிபு, இங்கே களித்தல் – முன்னேயளவின் மிகுதல். கங்கை தன் செய்கையினுலே கற்பிலக்கணமாகிய நற்பொருளைக் காட்டுதலால் நற்பொ ருட்காட்சியணியாம். இதற்குச் சந்திரகாந்த நீருக்குங் கங்கைக்குஞ் சம்பந் தங் கற்பித்ததாகிய தொடர்புயர்வு நவிற்சி அங்கமாகலாற் கலவையணி. இதனுலே அங்கரத்து வீடுகளின் மேனிலைகள் ஆகாய கங்கையின் மேலு யர்ந்திருக்கின்றமை தொனிக்கின்றது. 15

தடங்கொடாமரைத்தளிரியலுறையுமிங்நக
ரிடங்கொள்பூதலநகரெலாம்வென்றனமினிவா
னடங்கவெல்லுதுமென்னவோர்வஞ்சினமறையாப்
படங்கணூற்றியபோன்றுளபசியபொற்கொடிகள்.

இ-ள். பசிய – பசுமையுள்ள, பொன் – பொன்மயமாகிய, கொடிகள்- கொடிகளானவை, தடம் – விசாலத்தை, கொள் – கொண்ட, தாமரை-தாம ரைப்பூவி லிருக்கின்ற, தளிரியல் – தளிர்போலு மெல்லிய வடிவுடைய சீதேவியானவள், உறையும் – வாசஞ்செய்கின்ற, இந்நகரம் – இந்தமாவிந்த நகரமானது, இடம் – இடத்தை, கொள் – கொண்ட, பூதலம் – பூமியி லுள்ள, நகரெலாம் – எல்லாநகரங்களையும், வென்றனம் – வென்றேம், இனி – இனிமேல், வான் – தெய்வலோகத்தை, அடங்க – (எமக்குக்) கீழ்ப் பட, வெல்லுதும் – வெல்லுவோம், என்ன – என்று, ஓர்வஞ்சினம் – ஒரு

சபதத்தை, அறையா – சொல்லி, நாற்றிய – (எழுதித்) தூக்கவிடப் பட்டன வாகிய, படங்கள் – படங்களே, போன்றன – ஒத்திருக்கும். எ-று.

எல்லா நகரங்களேயும் வென்ற அதனுயர்வதோன்ற வென்றனம் வெல்லுதும் எனப் பன்மையாற் சொல்லியதாகக் கூறினர். தளிரியல்-அன் மொழித் தொகை. தன்பகைவன் அஞ்சுவாஞயின் வந்து வணங்கவும், அஞ்சிலஞயிற் போர்க்கருவிகளேக் கூட்டவுஞ் சமய முண்டாகவேண்டி முன்னே படமெழுதி யறிவித்தல் வெல்லக்கருதிய அரசனுக்குக் கட்டளே லாற் படங்களுற்றிய வென்றூர். துகிற்கொடிகளே அப்படிப்பட்ட படங்க ளுற்றிய வென்றூர். துகிற்கொடிகளே அப்படிப்பட்ட படங்களாகக் குறித் தலாலே பொருட்டற் குறிப்பணியாகும். 16

அகனிலாமணிவட்டநீளரிமதர்மழைக்கண்
மகளிர்வாண்முகமதிகண்டுதீம்புனன்மல்கப்
புகரிறென்மலேநறுங்குறடுரிஞ்சுபூந்தேய்வை
பகருமின்னுயிர்ப்பால்விரையூட்டினர்பகர்வார்.

இ-ள். நீள் – நீண்ட, அரி – இரேகைகளேயும், மதர் – செருக்கையும், மழை – குளிர்ச்சியையுமுடைய, கண் – கண்களேயுடைய, மகளிர் – மாதரா னவர், வட்டம் – வட்டமாகிய, அகல் – பரந்த, நிலாமணி – சந்திரகாந்தக் கல்லானது, வாள் – காந்தி பொருந்திய, முகமதி – (அவர்) முகமாகிய சந்தி ரனே, கண்டு – காணலால், தீ – மதுரமாகிய, புனல் – நீரானது, மல்க – (அதிலே) நிறைய, புகரில் – குற்றமில்லாத, தென்மலே – பொதிய மலேயி லுண்டாகிய, நறு – நல்ல, குறடு – கட்டைகளே, உரிஞ்சு – (அதனிடத்தே) தேய்த்துண்டாக்கப்பட்ட, பூ – அழகிய, தேய்வை – சந்தனத்தை, பகரும் – புகழப்படுகின்ற, இன் – இனிய, உயிர்ப்பால் – சுவாசத்தினுலே, விரை – வாசனேயை, ஊட்டினர் – ஏற்றினவராகி, பகர்வார் – விற்பார் எ-று.

கண்டென்பது வினேயெச்சத்திரிபு. அச்சந்தனம் விற்கின்றமகளி ரிடத்தே யியற்கைவாசனே சொல்லுதலால் உத்தம சாதியாரென்பது தோன்றுகின்றது. இது "ஒண்மணம் பாடலங்குவளே தண்ணறுமுளரி மல்லிகை நறுந்தண்சண்பகம் போல்வனவாகும்" என்பதனுலறிக * விரை எனவே இனம்பற்றிப் பத்துவகைத் தாகும் முப்பத்திருவகைத் தாகிய ஓ மாலிகையும் பெறப்படும். என்னே? "பத்துத் தவினு மைந்து விரை யினு – மூப்பத்திருவகை யோமாலியினு – மூறின நன்னீ ருரைத்த நெய் வாச – நாறிருங்கூந்த னலம்பெறவாட்டி" எனச் சிலப்பதிகாரங் கூறிற் றுகலின். 17

* விரையாவன—"கோட்டந் தருக்கந் தகரங்கிலார – மோட்டிய வைந்தும் விரை" எனையவற்றைச் சிலப்பதிகாரக் கடலாடு காதையுரைக்கட் காண்க.

கலிவிருத்தம்.

நீங்கரிய கூலமணிநீண்மறுகுதோறும்
மாங்குயிலின்மென்குதலைமாலைபகர்மாதர்
தேங்கமழுயிர்ப்பின்விரைசேர்த்தினர்கள்விற்குங்
கோங்கமலர்சண்பகமென்கோதையினுங்கொள்வார்.

இ-ள். நீங்கரிய – ஒதுங்குதற்கிடமில்லாத, மணி – நவமணிகளையுடைய, நீள் – நீட்சிபொருந்திய, கூலமறுகு தோறும் – கடைத்தெருவெல்லாம், மா – மாமரத்திலுள்ள, குயிலின் – குயிலிசை போலும், மெல் – மெல்லிய, குதலை – மழலைச் சொற்களையுடைய, மாலை – மாலைகளை, பகர் – விற்கின்ற, மாதர் – மங்கையரானவர், தேம் – பரிமளமானது, கமழ்-மணக்கின்ற, உயிர்ப்பின் – சுவாசத்தால், விரை – வாசனையை, சேர்த்தினர்கள்-சேர்த்தவராய், விற்கும் – விற்கப்படுகின்ற, கோங்கமலர் – கோங்கமலர்களாலாகிய, கோதை – மாலையை, மெல் – மெல்லிய, சண்பகம் – சண்பக மலர்களாலாகிய, கோதையினும் – மாலையினுஞ் சிறந்ததாக, கொள்வார் – வாங்குவார் எ-று.

சண்பக மலரிற்சூழ்ந்த கோங்கமலர் அவர் மூச்சுக்காற்றின்பரிசத்தால் அச்சண்பகமலர் வாசனையினு மிகுந்த வாசனையைப் பெறுதலால் மிகவும் விரும்பப்படு மென்பதாம். இதுமுதல் ஏழுபாட்டுகள் பெரும்பாலும் கடைச்சீர் மாச்சீரும், மற்றை மூன்றுசீர்களும் விளங்காய்ச்சீர்களு மாகிவந்த அளவடிக ளுன்குகொண்ட கூலி விருத்தங்கள். 18

ஆடவரொடியெழும்சொன்மடநல்லார்
நீடொளியதூணின்முகங்கோட்டியெதிர்நிற்ப
வாடுமிடையாரெனமருண்டிறைவர்பாவைத்
தாடொழுமெய்த்துனிதகைப்பநகைசெய்வார்.

இ-ள். ஆடவரொடு – தங்கணவரோடு, ஊடி – பிணங்கி, எழும் – புறப்பட்ட, அஞ்சொல் – அழகிய சொற்களையுடைய, மடம் – பேதமை பொருந்திய, நல்லார் – மாதரானவர், நீடு – நீட்சி பொருந்திய, ஒளிய – காந்தியையுடைய, தூண் – (இரத்தினத்) தூணுக்கு, எதிர் – எதிராக, முகம்-முகத்தை, கோட்டி – வளைத்துக்கொண்டு, இல் – அறைவீட்டுள், நிற்ப – நிற்க, இறைவர் – அக்கணவரானவர், பாவை – (அத்தூணிலே தோன்றுகிற) பாவையை நோக்கி, வாடும் – வாடுகின்ற, இடையாரென – இடையையுடைய மாதரென்று, மருண்டு – மயங்கி, தாள் – (அப்பாவையின்) பாதங்களை, தொழுதும் – வணங்கலும், மெய் – மெய்யாகிய, துனி-அப்பிணக்கானது, தகைப்பதடுக்கவும், நகைசெய்வார் – (அவர்) சிரிப்பார் எ-று.

நீடொளிய தூணென்றதனால் இரத்தினத் தூணென்பது பெறப்பட்டது. இங்கே பாவை பிரதி விம்பம். கருமணியிற் பாவாய் நீபோ தாயாம் வீழுந் – திருந்ததற் கில்லையிடம் என்பதனாலறிக. மெய்த்துனி-கார

ணத்தா லுண்டாகிய புலவிநீட்டம். ஊடிச்சென்ற மகளிரைத் தேடிச் சென்ற ஆடவர் அவர் இல்லுள்ளே மறைந்து நிற்ப, அவரைக் கண்டிலாது தூணிலே தோன்றுகின்ற அவரது சாயையைக்கண்டா ரென்க. தூணில்-தூணின்கனென்றும், பாவை – பிரதிமை யென்றும், கூறுவாருமுளர். பாவைகளே மகளிரென்று மயங்கலால் மயக்கவணி. 19

வண்ணமுலைமாதர்பகர்வறியசெழுஞ்சாந்தங்
கண்ணெளிகள்பாயனரந்தங்கலந்ததென்றும்
வெண்ணகைபரத்தல்கருப்பூரம்விரவிற்றென்
றெண்ணியுகுறுங்கலவையென்றிளைஞர்கொள்வார்.

இ-ள். வண்ணம் – அழகிய, முலை – முலைகளே யுடைய, மாதர் – மங்கையரால், பகர் – விற்கப்படுகின்ற, வறிய – கலப்பில்லாத, செழு – செழிய, சாந்தம் – சந்தனத்தில், கண்ணெளிகள் – (அவர்) கண்களி னெளியானது, பாயல் – பாய்தலினாலே, நரந்தம் – கத்தூரி யானது, கலந்ததென்றும் – கூட்டப்பட்டதென்றும், வெள் – வெள்ளிய, நகை – பல்லொளிகள், பரத்தல்-பாய்தலினாலே, கருப்பூரம் – பச்சைக் கர்ப்பூரமானது, விரவிற்றென்றும், கூட்டப்பட்ட தென்றும், எண்ணி – நினைத்து, நறு – நல்ல, கலவையென்று-கூட்டு சாந்தமென்று, இளைஞர் – ஆடவர், கொள்வார் (அதனை விலைக்கு) வாங்குவார் எ-று.

ஒப்புமையினாலே கண்ணெளியையும் பல்லொளியையுங் கத்தூரியென்றும் கருப்பூரமென்றும் மயங்குதலினாலே மயக்கவணியாம். மாதர் என்னும் உரிச்சொல் ஆகுபெயராற் பெண்களே யுணர்த்திற்று. மாதர் – காதல் என்னும் பொருட்டு. "மாதர்காதல்" என்பது தொல்காப்பியவிதி. வீற்றுத் தெய்வங் – குடிகொண்டிருக்குந் தனமென்பார் "வண்ணமுலை" என்றார். 20

பளிக்கறைபுகுந்தனர்கள்பாயொளியின்வாயில்
வெளிப்படுதலின்றிமருண்மேவிநிழலுறித்
துளக்கறுமிடத்துவிரைதோய்ந்துவருதென்ற
றிளைத்துலவுவெள்ளிடையின்வாயிதெளிகிற்பார்.

இ-ள். பளிக்கு – பளிங்காலாகிய, அறை – அறையினுள்ளே, புகுந்தனர்கள் – நுழைந்தவர்கள், பாய் – பரந்த, ஒளியின் – ஒளியினாலே, வாயில்-வாயிலானது, வெளிப்படுதலின்றி – அறியப்படுதலில்லாமையால், மருள – மயக்கத்தை, மேவி – அடைந்து, துளக்கறுமிடத்து – பொதிய மலையிலிருந்து, விரை – (சந்தன) வாசனையில், தோய்ந்து – படிந்து, வரு – வருகின்ற, தென்றல் – தென்றலானது, நிழல் – குளிர்ச்சியோடு, நாறி – தோன்றி, இளைத்து – அசைந்து, உலவு – சஞ்சரிக்கின்ற, வெள்ளிடையின் – வெளியினாலே, வாயில் – அந்த வாயிலை, தெளிகிற்பார் – அறிந்து கொள்வார் எ-று.

மலே சலியாமையால் அசலமெனப் படுதல்போலத் துளக்கறு மிட மெனப்பட்டது. சூழ்ந்துகின்ற பளிக்குச் சுவரானது வாயிலி னுகாயம் போலத் தன்புறத்துள்ள பொருள்களேக்காட்டி வெள்ளெனத் தோன்றி நிற் கையால் வாயில்காணுது மயங்கினரென்பதாம் ஒப்புமையினுலே பொதுமை யடைந்த பளிங்கிற்கும் வாயில்வெளிக்குந் தென்ற லுலாவுதலாகிய காரணத் தினுலே சிறப்புத் தோன்றுதலினுலே சிறப்பணியாகும். 21

வில்லுமிழுமாமணிகுயிற்றிமிளிர்மாடத்
தொலகியதுகிற்கொடிகளும்பருலகெய்திப்
பல்லவமுயிர்த்துவளர்பைத்தருவின்மேவும்
வல்லிபடர்கின்றகொழுகொம்பெனவயங்கும்.

இ-ள். வில் – காந்தியை, உமிழும் – வீசுகிற, மா – பெருமைபொருந் திய, மணி – மணிகளானவை, குயிற்றி – பதிக்கப்பட்டு, மிளிர் – விளங்கா நின்ற, மாடத்து – மாளிகைகளின்மேல், ஒல்கிய-அசைகின்ற, துகிற்கொடி கள் – சீலைக்கொடிகளானவை, உம்பர் – தேவாது, உலகு – உலகத்தை, எய்தி-அடைந்து, பை – பசிய, தருவில் – கற்பகதருவின்மேல், மேவும் – அடைதற் குரிய, பல்லவம் – தளிர்களே, உயிர்த்து – ஈன்று, வளர் – வளர்கின்ற, வல்லி-கொடிகளானவை, படர்கின்ற – படர்தற்குக் காரணமாயிருக்கின்ற, கொழு கொம்பென – கொழு கொம்புகள்போல, வயங்கும் – விளங்கும் எ-று.

கற்பகதருவின்கீழ் வளர்கின்ற கொடிகளே அதன்மே லேற்றுதற்கு நாட்டப்பட்ட கொழுகொம்பென்க. அக்கொடிகளே அப்படிப்பட்ட கொழு கொம்புகளாகக் குறித்தலால். தற்குறிப்பணி; இதற்குத் தொடர் புயர்வு நவிற்சியணி அங்கம் ஆகலாற் கலவையணி. 22

திங்களுநல்லார்முகமுஞ்செவ்விதெரிக்கொண்ணு
வங்கலுழுமேனியொடுமின்பிரிக்கலாகா
மங்குறவழ்வெண்கொடியும்வானதியுமணியால்
வெங்கதிர்செய்மாடமிசைவேறறியலாகா.

இ-ள். மணியால் – மாணிக்கங்களால், வெங்கதிர் – சூரிய கிரணத்தை, செய் – செய்கின்ற, மாடமிசை – மாளிகையின்மேலே, திங்களும் – சந்திர னும், நல்லார் – மாதரது, முகமும் – முகமும், செவ்வி - அழகினுலே, தெரிக் கொண்ணு - வேறு படுத்தப்படாவாம், அம்-அழகினுலே, கலுமும்-விளங்கா நின்ற, மேனி – (அவர்) சரீரமும், மின் – மின்னற்கொடியும், பிரிக்கலாகா-பிரிக்கப்படாவாம், மங்குல் – மேகங்களானவை, தவழ் – மேலே தவழ்கின்ற, வெண் கொடியும் - வெள்ளைக் கொடியும், வான தியும் – ஆகாயகங்கையும், வேறு – வேருக, அறியலாகா – அறியப்படாவாம் எ-று.

இச்செய்யுளுக்கு யாவராலும் என்னும்வினே முதல்வருவித்துக்கொள்க. சந்திரனேடு மாதர்முகத்துக்கும், மின்னற்கொடியோடு மாதர் சரீரத்துக்

கும், ஆகாயகங்கையோடு வெள்ளைக்கொடிக்கும், ஒப்புமையினாலே விசேடத் தோன்றுமையால் பொதுமை யணியாகும். திங்கள்—தித்திப்பாகிய மது வினையுடையது. 23.

சந்தநறுமென்புகைதவழ்ந்தநிலமெங்கும்
பந்துபயில்கோதையர்பசும்பொனணியாவு
மைந்தருவியன்சினையணிந்தனரதன்றே
வந்துநனியேற்பவர்மகிழ்ந்திடவழங்கும்.

இ-ள். சந்தம் - சந்தனக்கட்டைகளது, நறு – மணமுள்ள, மெல்மெல்லிய, புகை – புகையானது, தவழ்ந்த - படிந்த, நிலமெங்கும் – மேல்வீடெங்கும், பந்து – பந்தாட்டத்தில், பயில் – பழகுகின்ற, கோதையர் – மாதரானவர், பசும்பொன் – பசிய பொன்னாலாகிய, அணி – ஆபரணங்களையும், யாவும் – மற்றெல்லாவற்றையும், ஐந்தரு – பஞ்சதருவினுடைய, வியன்-பெரிய, சினை – கிளைகளில், அணிந்தனர் – வேய்ந்தார், அதன்றே – அதனாலன்றே, வந்து – (தம்மிடத்து) வந்து, ஏற்பவர் – இரப்பவர்க்கு, மகிழ்ந்திட – மகிழும்படியாக, நனி – மிகுதியாக, வழங்கும் – (அத்தருக்கள் தர விரும்பப்பட்டவற்றைக்) கொடுக்கும் எ-று.

ஐந்தரு – சந்தனம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பன. நிலம் என்பது இடமென்னும் பொருட்டு.

யாவுமென்றதனாலே ஆடைமாலை முதலிய வெல்லாங்கொள்க பந்து களைத் தாவிவீசவும் ஒடிப்பிடிக்கவும் வேண்டுதலால் அப்போது வருத்துமென்று களைந்தணிந்தாரென்க. அதன்றே வழங்கு மென்றதனாலே, செல்வப்பெருக்கின் செருக்கினால் மீட்டும் அவற்றை யெடுத்தில ரென்றதாயிற்று. கற்பக முதலியவற்றின் கொடைக்கு ஏதுவாகாத அவ்வணி முதலியவற்றைப் பெற்றிருக்கையை ஏதுவாகக் குறித்தலாலே ஏதுத்தற் குறிப்பணியாம். 24

* வாய்ந்தமின்னைமடந்தையராக்கிவிண்
போந்திடாமலன்றேமலர்ப்புங்கவன்
சாந்தணிந்ததமனியக்குன்றென
வேந்துவெம்மூலப்பாரமியற்றினன்.

---

* இந்நூல் அரங்கேற்றுங் காலத்துப் புலவர் ஒருவர் எழுந்து, பாண்டியனும் நூலாசிரியரை நோக்கி, புலிக்கும் கவிக்கும் அரசே! மின்னலுக்கும் மலைக்கும் சம்பந்த மின்மையால் இவ்வுவமை பொருந்தற்பாலதன்றென்ன, பாண்டியனார் நிறுத்தியிற்சென்று மனங்கொண்டு படிக்கைபுக்காராக, தேவி கேட்டு இதற்கோ வல்கின்றீர்; மின்னற்கும் மலைக்கும் சம்பந்த மில்லாவிடினும், இயைபுண்டாக்கவன்றே சூசுகமாகிய இருப்பு ஆணியை விதியோன் அடித்தான் என்றாள். அதுகேட்ட பாண்டியனார் அளவிலா உவகையுற்றுத்தமுலி யலையஞ் சென்றுரைத்துத் தன்கோள் நிறுவினார் எனக் கன்ன பரம்பரையாற் றெரிகின்றது.

இ-ள். மலர் – தாமரைப்பூவி லிருக்கின்ற, புங்கவன் – நான்முகக்கடவு ளானவன், விண் – மேகத்தின்கண், வாய்ந்த – பொருந்திய, மின்னே – மின் னற்கொடிகளே, மடந்தையராக்கி – மங்கையராக்கி, போந்திடாமல்ன்றே- (அம்மேகத்தினிடத்தே) போகாதிருத்தற்கன்றே, சாந்து – சந்தனத்தை, அணிந்த – பூசிய, ஏந்து – சுமக்கப்படுகின்ற, வெம் – விருப்பஞ்செய்கின்ற, பாரம் – பாரமாகிய, மூலை – மூலைகளே, தமனியக் குன்றென – பொன்மலை யைப்போல, இயற்றினன் – (அவருக்கு) உண்டாக்கினன் எ-று.

புகழவேண்டியதல்லாத மின்னலைக்கொண்டு படைத்தலைப் புகழ்தலி னலே புகழவேண்டிய அங்கராத்து மகளிரது சரீரகாந்தி தோன்றுதலாற் காரணப்பூவிலிபுக்ழ்ச்சி. இது அங்கம் மூலைகளின்பாரத்தை யுண்டாக் கினமைக்குப் பயனுகாத மேகத்தின்கட் போகாமையைப் பயனுகக் குறித்த லாலே பயன்றற் குறிப்பணியாகும். இது அங்கி ஆதலாற் கலவையணி.

இதுமுதற் பதினெருபாட்டுக்கள் பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும் மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகி வந்த அளவடிகள் நான்குகொண்ட கலி விருத்தங்கள். 25

வெங்கதிர்சுடர்மேவியதேர்ப்பரித்
தங்குவன்குளம்பிற்றகர்ந்திட்டன
தெங்கினெண்பழத்தெள்ளமுதத்தினுற்
பங்கமெய்துமறுகின்பரப்பெலாம்.

இ-ள். வெம் – வெவ்விய, கதிர் – கிரணங்களையுடைய, சுடர் – சூரி யன், மேவிய – வீற்றிருந்த, தேர் – தேரிற்கட்டப்பட்ட, பரி – குதிரைக ளுடைய, வல் – வலிமை, தங்கு – தங்கிய, குளம்பின் – குளம்புகளாலே, தகர்ந்திட்டன – உடைந்தனவாகி, தெங்கின் – தென்னமரங்களுடைய, ஒள் – ஒள்ளிய, பழம் – கனிகளினது, தெள் – தெளிவு பொருந்திய, அமு தத்தினுல் – நீரினுலே, மறுகின் – வீதிகளினுடைய, பரப்பெலாம் – விரிவுக ளெல்லாம், பங்கம் – சேறுதலை, எய்தும் – அடையும் எ-று.

தென்னமரத்திற்குஞ் சூரியமண்டலத்திற்குஞ் சம்பந்தத்தைக் கற்பித் ததனுலே தொடர்புயர்வு நவிற்சியணியாகும். 26

நிலவுவெண்கதிர்நீண்மணிமாடமேற்
குலவுபாதிமதியைமென்கொம்பனூர்
சிலைகொள்வாணுதல்சேர்த்தியவாடவ
ருலகமேத்துமுவாமதியென்பரால்.

இ-ள். நிலவு – நிலவைச்செய்கின்ற, வெண்கதிர் – சந்திரனுடைய, மணி – மணிகளாலாகிய, நீள்மாடமேல் – நீண்ட வீட்டின்மேலே, குலவு- விளங்குகின்ற, பாதிமதியை – பாதிச்சந்திரனை, மெல் – மெல்லிய, கொம்ப னூர் – பூங்கொம்புபோல்வார், சிலை – வில்வடிவத்தை, கொள் – கொண்ட,

வாள் - ஒளிபொருந்திய, நுதல் - (தமது) நெற்றியோடு, சேர்த்திய-கூட்ட, ஆடவர் - (அதுகண்ட நாயகரானவர்), உலகம் - உயர்ந்தோரால், ஏத்தும்-துதிக்கப்படுகின்ற, உவாமதி - பூரணசந்திரன், என்பர் - என்றுசொல்லுவார் எ-று.

பாதிமதி எட்டாந்திதியிற் சந்திரன். உவாமதி - பதினாறு கலைகளும் நிறையப்பெற்ற சந்திரன். மதி என்பதற்கு மதுவையுடையது, யாவராலும் மதிக்கப்படுவது எனக் காரணங்கொள்க. "பதினெண் கணனுமேத்த வம்பதிமே" என்றார் புறநானூற்றினும். சேர்த்தலென்னும் வினையெச்சம் சேர்த்தியவெனத் திரிந்தது. ஆடவரைவஞ்சித்துப் பரிகாசஞ் செய்தற்கு அங்ஙனஞ் செய்தாரென்க. ஒப்புமையினாலே அந்நெற்றிக்கும் பாதிமதிக்கும் விசேடந் தோன்றுமையாற் பொதுமையணி. 27

புலவிநீக்கிப்புணர்முலைமாதர்தங்
நிலவுபூந்துகிலாடவர்நீக்கலு
நலம்விளைத்தனர்நாணிவெண்டிங்களின்
கலையெமெல்லக்கலையென வர்சேர்த்துவார்.

இ-ள். ஆடவர் - கணவரானவர், புலவி - பிணக்கை, நீக்கி - தீர்த்து, புணர் - நெருங்கிய, முலை - முலைகளையுடைய, மாதர் - மகளிரது, நிலவு-சந்திரிகைபோல் விளங்குகின்ற, பூ - அழகிய, துகில் - ஆடையை, நீக்கலும்-அவிழ்த்தவளவில், நாணி - வெட்கப்பட்டு, நலம் - உதவியை, விளைத்தனர்-(அவர்க்கு) உண்டாக்கினவராக, வெள் - வெள்ளிய, திங்களின்-சந்திரனது, கலையை - கிலவை, மெல் - மெல்லிய, அக்கலையென - அவ்வாடையென்று நினைத்து, சேர்த்துவார் - (அவர் அரையிலே) சேர்ப்பார் எ-று.

புலவிநீங்கிய பின்னும் நாண மேலிடலால் அவிழ்க்கப்பட்ட கலையை மீட்டுஞ் சேர்த்துவாராயினர். அது ஆடவர்செயற்குத் தடையாகாமையால் நலம் விளைத்தனரென்றார். சந்திரிகை கைக்கப்படாததாயினும் மெல்லிய குணத்தாற் கைக்கப்பட்டபோதும் பரிசந்தோன்றுத வாடையென்று மயங்கச் செய்தது. கலை - ஆகுபெயர், மென்மை, வெண்மை முதலிய பொதுப்பண்பி னெடுப்புமையினாலே ஆடையை நிலவென்று மயங்கலால் மயக்கவணி. 28

பொருந்துறுதனம்பூஞ்சிலம்பார்ப்பறக்
கரந்துதம்முயிர்க்காதலர்பாற்செல்வார்
திருந்துவாண்முகந்திங்களென்றஞ்சிலா
வருந்தவந்தபுள்ளார்த்தலாதூற்றுமால்.

இ-ள். அனம் - அன்னங்களானவை, பொருந்துறுதனம் - தம்மருகிலடையாதிருக்க, பூ - அழகிய, சிலம்பு - சிலம்புகளது, ஆர்ப்பு - ஓசையானது, அற - நீங்கும்படியாக, கரந்து - மறைந்து, தம்முயிர் - தம்முயிர்

போலும், காதலர்பால் – அன்பரிடத்து, செல்வார் – (மெள்ளச்) செல்லுகின்ற மங்கையாது, திருந்து – திருத்தமாகிய, வாள் – ஒளிபொருந்திய, முகம் – முகத்தை, திங்களென்று – சந்திரனென்றுநினைத்து, அங்ஙனா – அதனது நிலமை, அருந்த – உண்ண, வந்த – வந்த, புள் – சகோரங்களானவை, ஆர்த்து – ஒலித்து, அலர் தூற்றும் – வெளிப்படுத்தும் எ-று.

சிலம்புகள் அனம்போலொலித்தலாலே அதுகேட்டு அவ்வன்னங்கள் தம்மினமென்று வரின் மறைந்து செல்லுதல் வெளிப்படுமென்று அச்சிலம் பொலியாமல் மெல்ல நடந்து செல்லுவாரென்க. சிலம்பு அன்னம்போலொலிக்குமென்பது பின்னே 'அனமென மிழற்றும் பரிபுரமணிந்து' என்பதனாலு மறிக. பெருநாண முடைமையாற் கணவரிடத்துங் காந்து செல்லுவாராயினர். சகோரம் நிலவை யருந்துதல் "வெண்டிங்க னிலவு வாயிடைப்புகினுஞ் சகோரமெனு மென்புளன்றி – யுண்டிங்குவாழு நருமுளர் கொல்லோ" என்பதனாலறிக. முகத்தைச் சந்திரனென்று மயங்குதலால் மயக்கவணி இது அங்கம். மறைந்து செல்லலாகிய விரும்பப்பட்ட பொருளைக்குறித்து முயற்சிசெய்ய, அது வெளிப்படுதலாகிய அதன் பகைப்பொருள் கிடைத்தலால் தன்பவணி. இது அங்கி ஆசலாற் கலவையணியாம்.

மலயமர்தவனுண்டமணிக்குவைக்
குலவுவார்கடனேர்சொலிற்குற்றமே
யலகில்பல்வளஞ்சேர்த்தியவாவண
முலகமுண்டருண்மால்வயிறொக்குமே.

இ-ள். மலயம் – பொதிய மலையிலிருக்கின்றன, மாதவன் – அகத்திய முனிவனால், உண்ட – குடிக்கப்பட்ட, மணி – மனிகளது, குவை – கூட்டத்தையுடைய, குலவு – வளைவாகிய, வார் – நெடிய, கடல் – கடலை, அலகில் – கணக்கில்லாத, பல்வளம் – பலவகையாகிய வளங்களையும், சேர்த்திய – (தன்னு) ளடக்கிய, ஆவணம் – கடைக்கு, நேர் – ஒப்பென்று, சொலின் – சொன்னால், குற்றமே – (அச்சொல்லுதல்) குற்றமேயாம், உலகம் – உலகத்தை, உண்டருள் – விழுங்கியருளிய, மால் – திருமாலினது, வயிறு – வயிற்றை, ஒக்கும் – (அது) ஒத்திருக்கும் (ஆதலால்,) எ-று.

அகத்தியர் கடல்குடித்த சரிதம் திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் பழிதீர்த்த படலத்திற் றெற்றெனக் காண்க. முனிக்கரசுகையான் முகந்து முழங்கும் – பனிக்கடலு முண்ணப்படும்" என்றார் நன்னெறியாரும்.

முத்து, பவள முதலிய கீடல் வளமேயன்றி நான்கு நிலவளங்களையுந் தன்னிடத்தே கொண்டிருக்கையாற் கடனேர் சொலிற் குற்றமென்றார். பிரளயத்திலே திருமால் வயிற்றுட்சென்ற மார்க்கண்டேயரால் உலகத்துப் பொருள்களெல்லாம் காணப்பட்டன வென்பது புராணகதை யாதலால், அப்படியே அக்கடையிலுங் காணப்படுதல் பற்றி மால்வயிறொக்குமென்

ரூர். உலகமுண்டருள்மால் வயிரூக்கு மென்னும் வாக்கியத்தினுற் கடலே ஒப்புச்சொல்லுதல் கூடாமை சாதித்தலாலே செய்யுட்குறிப்பணியாம். 30

நீடுமாவணநித்திலப்பந்தருட்
கேடில்கம்பலையாலிசைகேட்கிலார்
பாடல்வண்டொடுநானம்பகர்ந்திடக்
கோடல்செய்வர்நிறைகுறைவின்றென.

இ-ள். நீடும் – நீண்டிருக்கின்ற, நித்திலப்பந்தருள் – முத்துப் பந்தல்களிலுள்ள, ஆவணம்-கடைகளிலே, பாடல்-பாடுதலையுடைய, வண்டொடு-வண்டுகளோடு, நானம் – கத்தூரியை, பகர்ந்திட - (கிறுத்து) விற்க, கேடில்-(எப்போதும்,) நீங்காத - கம்பலையால் - (களகள) ஒலியினுலே, இசை - (அப்பாட) லொலியை, கேட்கிலார் = கேட்கின்றிலருமாகி, நிறை – இங்நிறுக்கப்பட்ட பொருளிலே, குறைவு – யாதொரு குற்றமும், இன்றென – இல்லையென்று நினைத்து, கோடல்செய்வர் - (வீலைக்குக்) கொள்ளுவார். எ-று.

இசைகேட்கிலா ரென்றதனுல் கருநிறத்தாலும் வாசனை விருப்பங் கொண்டு மெய்த்தபடி அசைவின்றிக் கிடத்தலாலும் வண்டின் வடிவத்தைப் பார்த்தறிந்திலரென்பது பெறப்பட்டது. வண்டொலி சிற்றொலியாகலிற் கடைத்தெருவின் பேரொலியுண் மறைந்ததென்க. இக்காரணத்தாற் குறையுளதாகவு மின்றெனக் கருதி வீலைக்குக் கொள்வாராயினர். ஒப்புமையினுலே கத்தூரிக்கும் வண்டுக்கும் விசேடந் தோன்றுமையினுலே பொதுமையணியாகும். 31

குளிர்பளிக்குநீண்மாடங்கொடிகளான்
வெளிமுகட்டுயர்வெண்மதிதோய்வன
வொளிகொள்வெங்கதிர்வெம்மையொழித்திட
நளிகொடண்சுதைநக்குவபோலுமே.

இ-ள். குளிர் – குளிர்ச்சிபொருந்திய, பளிக்கு - பளிங்காலாகிய, நீள்-நீண்ட, மாடம்-மாளிகைகளானவை, வெளி-ஆகாயவெளியினது, முகட்டு-முகட்டின்கண், உயர் – உயர்ந்த, வெண்மதி - சந்திரனை, தோய்வன - தடவுவனவாகிய. கொடிகளான் – கொடிகளினுலே, ஒளி – சூரியனிலிருந்து, கொள் – (தம்மேற்) கொள்ளப்பட்ட, வெங்கதிர் – உட்டிண கிரணத்தாலாகிய, வெம்மை – வெப்பத்தை, ஒழித்திட - நீக்கும்படியாக, நளி – பெருமையை, கொள் - கொண்ட, தண் - குளிர்ச்சிபொருந்திய, சுதை - (அச்சந்திரனிடத்துள்ள) (அமிர்தத்தை), நக்குவ – (நாக்களினுலே) நக்குவனவற்றை, போலும் – ஒத்திருக்கும். எ-று.

ஆகாயமத்தியத்தில்வந்த பின்னன்றித்தோய்தல் கூடாமையால் வெளிமுகட்டுயரென்றார். சந்திரனிடத்தே கலைவளருந்தோறும் அமிர்தம் பெருகுமென்பது புராணசித்தம். பகல்முழுதும் வெயிலால் வருந்தியோன் இர-

விலே சிதலோபசாரஞ்செய்து கொள்வானுகலின் மாடங்கள் வெம்மை யொழித்திடச் சுதை நக்குவபோலுமென்றார். கொடிகளாலென்றதனுலும், நக்குவவென்றதனுலும் நாக்களென்பது வருவிக்கப்பட்டது. கொடிகளாலே சந்திரனேத் தோயு மாளிகைகளே அப்படி நக்குவனவாகக் குறித்தலாற் பொருட்டற்குறிப்பணி. 32

பத்திமாடமணிக்கொடிபானுவின்
மெய்த்தழும்புறத்தைவரல்வெங்கதிர்
கைத்தலங்களிற்காளிந்தியைமடி
வைத்திருந்துதாலாட்டுதன்மானுமே.

இ-ள். பத்தி - ஒழுங்காயுள்ள, மாடம் - மாளிகையினது, மணிக்கொடி - நீலக்கொடியானது, பானுவின் – சூரியனது; மெய் – உடம்பிலே, தழும்புறு - தழும்புபொருந்த, தைவரல் – தடவுதலால், வெங்கதிர் – அச்சூரியனனவன், காளிந்தியை – காளிந்தியென்பவளே, கைத்தலங்களின் – கைகளினுற்பற்றி, மடி - தனது மடியின்மேல், வைத்திருந்து - வைத்துக்கொண்டிருந்து, தாலாட்டுதல் - தாலாட்டுகின்றதை, மானும் - ஒக்கும். எ-று.

மணி கருமையென்பது "மணிநவமணியே கண்டை வனப்பொடு கருமைசெம்மை" என்பதனுலறிக. காளிந்தி – சூரியன் புதல்வி மடிவைத்திருந்தென்றதனுல் குழந்தைப் பருவமுற்றிருந்த காளிந்தியென்பதாயிற்று. காளிந்தி கருநிறத்தவளாதலாலே நீலக்கொடி அவள்போலத் தோன்றிற்று. தாலாட்டுதல் தொட்டிலிலேனு மடியிலேனுங் கிடத்தி மெல்லென வசைத்தும் பாடியுந் துயில்வைத்தலாம். தால் – நாவை, ஆட்டல் - அசைத்துப் பாடுதல். நீலக்கொடி தடவுதலாலே சூரியனேக் காளிந்தியைத் தாலாட்டுகிறவனுகக் குறித்தலாலே பொருட்டற் குறிப்பணி. 33

யாணர்மேயவிரவியைநண்பகற்
காணுர்தோறுங்கனன்றுகனலுமிழ்
கோணைவெம்மணிக்கொம்மையெயிற்புறம்
வாணஞாழல்சூழெயின்மானுமே.

இ-ள். இரவியை - சூரியனே, நண்பகல் – நடுப்பகலிலே, காணுந்தோறும் – பார்க்குந்தோறும், கனன்று – எரித்து, கனல் – நெருப்பை, உமிழ் - சொரிகின்ற, புறம் – புறத்தையுடைய, கோணை – அழியாத, வெம்மணி - சூரியகாந்தத்தாலாகிய, யாணர் - தச்சரால், மேய – விரும்பிச் செய்யப்பட்ட, கொம்மை – வலயமாகிய, எயில் – மதிலானது, வாணன் – வாணசுரனது, சூழ் - (சோணிதபுரத்தைச்) சூழ்ந்த, ஆழல் – மிகுந்த நெருப்புமயமாகிய, எயில் – மதிலே, மானும் - ஒத்திருக்கும்.

---

* விலச்சுவான் என்னுஞ் சூரியனுக்கு யமன், காளிந்தி, சனி என்னும் மூவர் குழவிகளா யுதித்தார் என்னு முண்மைபற்றி யிங்ஙன் கூறினர்.

யாணர் தச்சரென்பது "யாணரே புதுமைதச்ச ரெய்நியவனப்பு நன்மை" என்பதனாலறிக அழகெனினுமாம். சூரியகாந்தம் நெருப்பை யுமிழ்வது "சூரியனொளியிற் றீக்கால்சலாகை - சூரியகாந்தமெனப் பெயர் பெறுமே" என்பதனாலறிக. மாவிந்தத்தின் மதில் மூன்சொல்லப்படுத லால் இது அரசராண்மனை மதிலென்க. வாணன் என்பான் மரவலிச் சக் கிரவர்த்தியின் குமாரர் நூற்றுவருள் மூத்தோன், அவன் அன்புடன் சிவ பெருமானை வழிபட்டு அக்கினி மதில் பெற்றிருந்தமை,

"ஆயிர முளரிநீண் டலர்ந்த நீனிற - மாயிருங் குன்றுறழ்வாணன் சூழ்ந்தெழூஉத் - தீயழற் புரிசைபுந் திறலு மாக்கமும் - பாயமூ வுலகமும் பரிக்குங் கொற்றமும்" என்பதனாலறிக. 34

உள்ளமொன்று தங்காதலரோதிய
கள்ளநேயக்கலவியின்வாய்மையை
வள்ளவாயமுதுண்டுவளர்மடக்
கிள்ளைமெல்லக்கிளத்தலுநாணுவார்.

இ-ள். உள்ளமொன்று - ஒருமனப்பட்ட, தம் - தம்முடைய, காதலர்-நாயகரால், ஓதிய-சொல்லப்பட்ட, கள்ளம் - (தம்மிருவருக்குள்ளே) மறைக் கத்தக்க, நேயம் - அன்புபொருந்திய, கலவியின் - புணர்ச்சியினுடைய, வாய் மையை - சொல்லுகளை, வள்ளவாய் - கிணத்திலிடத்தே தங்கிய, அமுத-பாலை, உண்டு - குடித்து, வளர் - வளர்கின்ற, மடம் - இளமை பொருந்திய, கிள்ளை - கிளிகள், மெல்ல - மெள்ள, கிளத்தலும் - (பிறரறியச்) சொல்லு தலும், நாணுவார் - (மங்கையர்) வெட்கப்படுவார். எ-று.

கள்ளநேயமாவது - பிறர்க்கு வெளிப்படாமல் மறைக்கப்பட்ட வன்பு. கலவியின்வாய்மை - காமவிகாரமேலிட்டுத் தம்மை மறந்து சொல்லப்பட்ட வையாம். இதனாலே அங்கேயுள்ள கிளிகள் தமக்கு ஒருவர் ஒன்றைப் பல தரஞ்சொல்லி வருந்திக் கற்பிக்கவேண்டாது தாமே விரைவிற் கற்கின்றன வென்பது தோன்றுகின்றது. 35

வாணிலாமணிமாடத்தொளித்தெமைக்
காணுகென்பவர்மெய்நிழல்கண்ணுறீஇப்
பூணுலாமுலையார்புல்லியின்மையி
னாணிநின்றுநகைமுகங்கோட்டுவார்.

இ-ள். பூண் - ஆபரணங்கள், உலாம் - புரளுகின்ற, முலையார் - கொங் கையையுடைய மகளிரானவர், வாள் - ஒளிபொருந்திய, நிலாமணி - சந் திரகாந்தத்தாலாகிய, மாடத்து-வீட்டினுள்ளே, ஒளித்து-மறைந்து, எமை-எங்களை, காணுகென்பவர் - காண்பீராகவென்ற கணவனது, மெய் - உடம்பி னது, நிழல்-சாயையை, கண்ணுறீஇ-கண்டு, புல்லி (அச்சாயையைத்) தழுவி, இன்மையின் - கைக்கப்படாமையினாலே, நாணி - வெட்கப்பட்டு, நின்று-

கின்று, நகை - நகையோடு கூடிய, முகம் - முகத்தை, கோட்டுவார் - வளைப் பார். எ-று.

காணுகவென்பது தொகுத்தல்விகாரம். மகளிர் நாணிமுகங்கோட்டு வாரென்றதனால் ஒளித்தவராடவரென்பது பெறப்பட்டது. நிழலைக் கணவ ரென்று மயங்கலால் மயக்கவணி. 36

சாந்தமூழ்கிவளர்ந்ததடமுலைக்
காந்துபன்மணிமேகலைக்காழல்கு
லேந்திவிண்ணிலியங்கலரிதெனப்
போந்தமங்கையரிங்ஙகர்ப்பொன்னனூர்.

இ-ள். இங்ஙகர் - இந்த நகரத்துள்ள, பொன்னனூர் - சீதேவிபோல் வார், சாந்தம் - சந்தனத்துள், மூழ்கி - முழுகி, வளர்ந்த - பருத்த, தடம்-மலைபோலும், முலை - முலைகளையும், காந்து - விளங்காநின்ற, பல்மணி - பல மணிகளாலாகிய, மேகலை - மேகலையினுடைய, காழ் - சரங்களையுடைய, அல்குல் - சகனத்தையும், ஏந்தி - சுமந்துகொண்டு, விண்ணில் - வானத்திலே, இயங்கல் - உலாவுதல், அரிதென - (எம்மாலே) முடிவதன்றென்றுநினைத்து, போந்த - இறங்கிவந்த, மங்கையர் - தெய்வ மகளிரே. எ-று.

காழ்சரமென்பது "காழென்பமணிநின்கோவை" என்பதனாலறிக. மேகலை எண்கோவையுள்ளது. "எண்கோவை மேகலை காஞ்சியிருகோவை-பண்கொள் கலாபமிருபத்தொன்று - கண்கொள், பருமம் பதினாலு முப்பத் திரண்டு, விரிசிகை யென்றுணரற்பாற்று" என்பதனாலறிக. இப்பட்டி னத்து மங்கையரை அப்பாரத்தைச்சுமந்து ஆகாயத்திலே சஞ்சரிக்கமாட்டா மல் வந்த தெய்வ மகளிராகக் குறித்தலாலே பொருட்டற் குறிப்பணி.

நளச்சக்கரவர்த்தி அரசாட்சி செய்திருந்தகாலங் கிருதயுகமாயிருக்க, இதுவரையிலே நாடுநகரங்களின் சிறப்புக்கள் பலவற்றைச் செய்யுமென் வாய்பாட்டு நிகழ்கால வெதிர்காலங்களுக் குரியமுற்று வினைகளாலும் எதிர் காலத்திற்கேயுரிய முற்றுவினைகளாலுங் கூறல் வேண்டுவ தென்னையெ னின், அவ்வினை நிகழ்ச்சி அந்த யுகத்திலே நெடுங்காலம் நிகழ்ந்தன வென் னும் பொருள்படுதற்கு அங்ஙனங் கூறினாரென்க. "இவர் பண்டிப் பொழி லகத்து வீளையாடுவர்" "இவள் பண்டிப்பொழிலகத்து வீளையாடும், என்பன போல" இவற்றிற்கு "இறப்பே யெதிர்வே யாயிருகாலமுஞ் - சிறப்பத் தோன்று மயங்கு மொழிக்கிளவி - ஏனைக் காலமு மயங்குதல் வரையார்" என்பது தொல்காப்பிய விதி, மேல் லருவனவு மின்ன. 37

கலிவிருத்தம்.

வளமலியிங்ஙகர்மன்னர்மன்னவன்
றளையவிழ்நறுமலர்தண்ணந்தாரினன்
களைகணிபுலிகொருமூன்றுங்காத்தரு
ணளனெனப்பெயரியநாமவேலினன்.

இது முதலைந்துபாட்டுக்குள் ஒருதொடர். இவ்வைந்து பாட்டுக்க ளாலும் அந்நகரத்திருந்து உலகத்தையாண்ட நளச்சக்கர வர்த்தியினுடைய வியக்கத்தக்க பலவகைக் குணங் களுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். உலகொருமூன்றும் - (தன்னை யுச்சரிக்கின்ற) மூன்றுலகத்தா ரையும், கோகணங் - ஆதாரமாய், காத்து - (ஆபத்திணின்றும்) காத்து, அருள் - (விரும்பப்பட்டவற்றைத்) தருகின்ற, நளனெனப்பெயரிய - நள னெனப் பெயர்பெற்ற, வளம் - செல்வத்திலுலே, மலி - நிறைந்த, இந்நகர்- இம்மாவிந்த நகரத்திலுள்ள, மன்னர் மன்னவன் - அரசர்க்கரசனுன்வன், தலையவிழ் - கட்டவிழ்ந்த, நறு-நல்ல, மலர்-மலர்களால்லாகிய, தண்-குளிர்ச்சி பொருந்திய, தாரிஞன்-மாலையையுடையவன், நாமம்-அச்சஞ் செய்கின்ற, வேலினுன் - வேற்படையை யுடையவன் எ-று.

பெயரிய மன்னவன், இந்நகர் மன்னவன், மன்னர் மன்னவன் எனக் கூட்டுக. மூன்றுலகம் பூமியும் வானமும் பாதலமுமாம். எவ்வுலகத்துள் யாவராயினும் நளனென்கிற பெயரை யுரைக்கினு நினைக்கினும் அவர்க்கு நினைத்தது முற்று மென்பது புராணசித்த மாதலாலே அவ்விசேடணம் அப்பெயர்க்குக் கூறப்பட்டது. இது மகா பாரதத்திலுங் காண்க. இதனுல் அவனது மகத்துவமாகிய தெய்வத்தன்மை விளங்குகின்றது. அவன் மாலை யைக் கண்டோர் கண்களுக்குங் கருத்துக்கும் மலர்ச்சியுங் குளிர்ச்சியுஞ் செய்யும் அதன் சிறப்புத்தோன்றத் தலையவிழ் நறுமலர்த் தண்ணந்தாரென் ரூர். பகைவர்க்குச் செருக்கு வினையுந்தோறு மச்சஞ்செய்து அதனை யொ ழித்தலின் நாமவேலென்ரூர். நாமமென்பதில் அம், சாரியை. நாம் அச்ச மென்பது "பேநாமுருமென வரூஉங், கிளவி - யாமுறை மூன்று மச்சப் பொருள்" என்பதனுலறிக. இவ்வைந்து பாட்டுக்கள் பெரும்பாலும் மூன்ரஞ்சீர் மாச்சீரும் மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிவந்த அளவடி கள் நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். 38

ஒன்னலர்மணிமுடியுரிஞ்சுதாளினுன்
கன்னவிரிருளிகான்கமலக்கண்ணினுன்
றன்னுயிராமெனவுலகிற்றங்கிய
மன்னுயிரனைத்தையும்புரக்குமாட்சியான்.

இ-ள். ஒன்னலர் - பகைவருடைய, மணி - நவமணிகளையுடைய, முடி- மகுடங்கள், உரிஞ்சு - தேய்த்தற்குக் காரணமாகிய, தாளினுன் - அடிகளை யுடையவன், கல் - மலைபோல, நவில் - செய்யப்பட்ட, தோளினுன் - புயங் களை யுடையவன், கமலம் - தாமரைமலர்போலும், கண்ணினுன் - நேத்திரங் களை யுடையவன், தன் - தனது, உயிராகினை - உயிர்போல நினைத்து, உலகில் - உலகத்தின் கண்ணே, தங்கிய - பொருந்திய, மன் - நிலையுள்ள, உயிரனைத்தையும் - எல்லாவுயிர்களையும், புரக்கும் - காப்பாற்றுகின்ற, மாட் சியான் - பெருமையையுடையவன் எ-று.

பகைவர் தம்மேற் கருணை பிறப்பிக்க வேண்டிப் பல முறையாகத் தம் முடிகள் அவனடிகளிற்பட வணங்குதலாலே அம் முடிகளுக்குத் தேய்வு கூறப்பட்டது. அவர்கள் வணங்குதற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட ஊர்த்துவ ரோகதிகளையுடைய தாளென்பதனுங் குறிக்கப்படுகின்றது. திண்மையும் பருமையுந் திரட்சியும் பற்றித் தோள்களுக்கு மலையும், மலர்ச்சியுங் குளிர்ச்சியுங் கண்டோரை மகிழ்வித்தலும் பற்றிக் கண்களுக்குத் தாமரைமலரும் உபமானமாக்கப்பட்டன. உடம்பழியினும் உயிரழியாது வேறுடம்பு பெற்று நிற்குமாதலின் மன்னுயி ரென்றார். அது பதி பசு பாச மூன்றும் நித்தியமென்கிற சைவாகமங்களானுணர்க உயிரனைத்தையு மென்றதனாற் பறவை விலங்கு முதலியவுங் கொள்க, இங்கே புரத்தல் பகைபிணி முதலியவற்றாற் றுன்பம் வாராமற் காத்தல். 39

பொருசிலைவேனில்வேளனையபொற்பினன்
னருவரையாமெனவகன்றமார்பினன்
கரையொருமுடைத்திரைக்கடலுத்தானையான்
றிருகுவஞ்சனக்களிறனையசீற்றத்தான்.

இ-ள். பொரு - போர்செய்கின்ற, சிலை - (கருப்பு)வில்லையுடைய, வேனில் - வசந்தகாலத்திற்குரிய, வேளனைய - மன்மதனைப் போலும், பொற்பினன் - அழகினையுடையவன், அரு - அரிய, வரையாமென - மலையைப் போலும், அகன்ற - பரந்த, மார்பினன் - மார்பினையுடையவன், கரை - கரையோடும், பொரு - போர் செய்கின்ற, முடை - புலாலுற்றம்பொருந்திய, திரை - அலைகளையுடைய, கடல் - கடல்போலும், தானையான் - சேனையையுடையவன், திருகு - மாறுபட்ட, வஞ்சனம் - மிக்க கோபத்தையுடைய, களிறனைய - யானைபோலும், சீற்றத்தான் - சோபத்தை யுடையவன் எ-று.

மன்மதனுக்கு வேனிற் காலத்திலே போர்த்தொழிற் கண்ணே யுக்கமுங் களிப்புமுண்டாதல்பற்றி அப்போது அவனுடம்பு பூரித்து அழகு சிறந்து விளங்குமாதலாற் பொருசிலைவேனில் வேளென்றார், அருவரையா மென லென்றமையாற் பகைவர் படைக்கலங்களா லூறடையாததிட்பமுங் குறிக்கப்படுகின்றது. அளவு காணப்படாமையும் பூமிமுழுதுஞ் சூழ்தலும் பற்றிச் சேனைக்குக் கடல் உவமையாக்கப்பட்டது. அக்கடலலைகள்போலச் சேனையி னணிவகுப்புகள் ஒன்றன்பின் னொன்றாக வெழும்பி யிரைந்து கொண்டு பின்வாங்காது சென்று பகைவரை மோதுதலாலும், புலாலுற்றம் பகைவரிறைச்சியு முதிரமூன்றோய்ந்த படைக்கலங்களின் மாறுமையானும் கரைபொரு முடைத்திரை யென்னு மடைகள் கடலுக்குச் சேர்க்கப்பட்டன யானைபோல மறைத்தற்குரிய காலத்தே மறைத்து வெளிப்படுத்தற்குரிய காலத்தே வெளிப்படுத்தலாற் சீற்றத்திற்கு யானையுவமான மாக்கப்பட்டது. "பொள்ளெனவாங்கே புறம்வேரார் காலம்பார்த் - துள்வேர்ப்ப கொள்ளியவர்" எனபதனாலறிக. யானையின் கணக்குணமுண்டென்பது "யானையறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என்பதனாலறிக. திருகு வஞ்சனக்களிறு எனவும் பாடம். 40

வெங்கலியிருள்கெடவெண்ணிலாவுமிழ்
திங்களங்கவிகையான்றிகிரியொன்றினு
லங்கண்மாநிலமுழுதளிக்குமாற்றலான்
மங்குலினுமுடங்குதவும்வண்கையான்.

இ-ள். வெங்கலி – தீயவறுமையாகிய, இருள் – இருளானது, கெட – அழிய, திங்கள் – சந்திரன்போல, வெள் – வெள்ளிய, நிலா – நிலவை, உமிழ் – வீசுகின்ற, கவிகையான் – குடையை யுடையவன், திகிரியொன்றினால் – ஏகசக்கிரத்தினாலே, அங்கண் – அழகிய விடத்தையுடைய, மா – பெரிய, நிலமுழுது – பூமியனைத்தையும், அளிக்கும் – அரசாளுகின்ற, ஆற்றலான் – வல்லமையை யுடையவன், மங்குலின் – மேகத்தினும், எழுமடங்கு – எழுபங் கதிகமாக, உதவும் – கொடுக்கின்ற, வள் – வளம்பொருந்திய, கையான் – கை யையுடையவன் எ-று.

நிலாவுமிழ் குடையெனக் குடையின் விளக்கத்தைச் சொல்லுதலாலே அவனரசாட்சி விளங்குதலுங் கூறப்பட்டதாயிற்று, அவ்வரசாட்சியே யாவ ருர் வறுமை நோய் தீர்ந்து பெருஞ் செல்வத்தராய் வாழ்தற்குக் காரண மாகையால் வெங்கலி யிருள்கெட வெண்ணிலாவுமிழ்-திங்களங்கவிகையென் ரூர். மாநில முழுதளிக்கு மாற்றலானென்றதனாற் பல தீவுகளையுங் கண் டங்களையும் வென்று தன்னாணையின் கீழ்ப்படுத்தி வாழுஞ் சக்கரவர்த்தி யென்றதாயிற்று. இதனாலே போராற்ற லுடைமையும் விளங்குகின்றது எழென்பது ஒரு தொகைச்சொல்லாயினும் இங்கே பலவென்னும் பொருள தாம். மேகம் நீரொன்றையே ஒரு பருவத்திலே தரும், இவன் கைகளோ வெல்லாப் பொருள்களையு மெல்லாப் பருவங்களிலுந் தருமென்றதாயிற்று. கைக்கு வளமாவது உத்தமரே கைகள் பொருந்தி முழக்தாளளவு நீண் டிருத்தல். 41

அருளினதுறையுணல்லறத்தின்வேலிசார்
தெருளுறுகல்வியந்தெய்வமாக்கடல்
குரைகடற்புவிபுகழ்குணக்குன்றஞ்சுட
ரெரிதவழலங்கல்வேலரசரேறனன்.

இ-ள். அருளினது – கருணையினது, உறையுள் – வீடாயுள்ளவன், நல் லறத்தின் – நல்ல தருமமாகிய (பயி) ரினது, வேலி – வேலியாயுள்ளவன், சொல் – நூல்களாலே, தெருளுறு – (பலவகைப் பொருள்களையும்) அறிந்த, கல்வி – கல்விக்கு, தெய்வம் – தெய்வத்தன்மை பொருந்திய, மாக்கடல் – பெரிய கடலாயுள்ளவன், குரை – ஒலிக்கின்ற, கடல் – கடல்போல, புவி – பூமியிலுள்ளோரால், புகழ் – புகழப்படுகின்ற, குணம் – நற்குணங்களெல்லாஞ் சேர்ந்த, குன்றம் – மலையா யுள்ளவன், சுடர் – ஒளியையுடைய, எரி – நெ ருப்பானது, தவழ் – தவழ்கின்ற, அலங்கல் – மாலையையுடைய, வேல் – வே லையுடைய, அரசர் – பகையரசராகிய (யானைகளுக்கு), ஏறனன் – ஆண் சிங்கம்போல்பவன் எ-று.

அருளாவது பிறவுயிர்க்குவந்த வருத்தத்தைக் காண்கின்றபோது மனம் பொரு நிரங்கலாம். அதற்கு வீடெனவே அது அவனிலே நிலையாயிருக்கு மென்றதாயிற்று. அறமாவது அந்தணர் முதலிய வருணத்தோரும் பிரம சாரி முதலிய வாச்சிரமத்தோரும் வேத முதலியவற்றில் தத்தமக்கு விதிக் கப்பட்டவற்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றைச் செய்யாமையுமாம். நல்லறமென்று அடை கொடுத்துக் கூறலால் அது புறச்சமய நூல்களிற் கூறுந் தீயவறங்களை யொழித்து நிற்றல் காண்க. அறத்தின் வேலியெனவே அவர்களை அவற்றிற் பிறழாது நடத்துவ னென்றதாயிற்று. கல்வியெனப் பொதுப்படக் கூறலால் * வேதம், - 4, வேதாங்கம் - 6, மீமாஞ்சை - 1, தருக்கம் - 1, புராணம் - 1, தருமநூல் - 1, ஆகிய பதினான்கு வித்தைகளு மெனக்கொள்க. அக்கல்விக்குக் கடலெனவே அது யாவராலும் உணரப் படாத ஆழமுங் கடக்கப்படாத விரிவு முடைத்தென்றதாம். குரைகடற் கவிபுகழென்றதனாலே கடலினாலே யொலிபோலப் புவியிலே புகழொலி யெப் போது மெழுதல் சொல்லப்பட்டது. இங்கே குணமெனப் பட்டவை இவ் வைந்து பாட்டினுஞ் சொல்லா தொழிந்த உயர்குலப் பிறப்பும் சதுரப்பாடு டைமையும் முற்புகழ்ச்சி வேண்டாமையும் ஆழ்கருத்துடைமையும் பிறவுங் கொள்ளப்படும். எரிதவழலங்கல் வேலரசரென்றதனால் பகையரசரென்றதா யிற்று. அவரை அங்ஙனஞ் சிறப்பித்தமையால் இவனோடு பகைத்தற்குத் தருதி யுடையராதல் தோன்றுகின்றது. புவிபுகழ் குணக்குன்றென்றதனாற் பெருங் கீர்த்தியும் அரசரேறனு னென்றதனாற் பெரும் பிரதாபமும் விள ங்குகின்றன. வளமலி யென்னும் பாட்டில் மன்னர் மன்னவனென்னு மெ முவாய் நின்று அப்பாட்டு முத லிப்பாட்டு வரையுமுள்ள பயனிலைகளைத் தனித்தனி கொண்டுமுடிந்தது. இவற்றாலே தெய்வத்தன்மை பெருங் கொடை பெருஞ் செல்வம் ஒப்பின்மை நிறை புலமை உயர்குலப் பிறப்பு விளக்கமுடைமை சதுரப்பாடு அறவழி நிற்றல் இவை முதலிய குணங்கள் சொல்லப்படுதலினாலே இவ்வரசன் உத்தமநாயகனென்பது பெறப்பட்டது.

நகரப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் - 71.

---

* பதினான்கு வித்தைகளின் விவரத்தை மேல்வருங் கூர்மபுராணச் செய்யுளானறிக. "அங்க மாறு மறைநான்கு மீமாங்கியு மென்றருள் கொ ழித்தத் - தங்கு நீதி நூலொன்று புராணமொன்று தவறெரிந்து - பொங்கு தருமநூலொன்று புகன்றவீரேழ் விஞ்சையினை - யங்க ணுலகீன்றவ னளித் தானவற்றை யுணர்ந்தா ரறிவுடையோர்."

அன்னத்தைக் கண்ணுற்ற படலம்.

நளன் பூஞ்சோலையிற் சென்று அதன் வளத்தைக்கண்டதையும், அவ்வனத்தினிடையிலுள்ள ஓர் தடாகத்தில் அரச வனத்தைப் பற்றினதையும், அதன் துயரத்தைக் கண்டு அதை விடுத்ததையும் இப்படலஞ் சொல்லுகின்றது.

கலிநிலைத்துறை.

இன்னதன்மையனெகியரிவர்தெழிற்றிணிதோண்
மன்னர்மன்னவன்மாணெழில்வகைநலங்கேட்டுக்
கன்னலஞ்சுவைகனிந்தசொற்றமயந்தியென்னும்
பொன்னங்கொம்பனாண்மயலொடும்வைகலும்புலம்பும்.

இதுமுதலொன்பது பாட்டுக்களால் தமயந்தியினது காமவிருப்பத்தைச் சொல்லத்தொடங்கி இதனால் விரகிகளுக்குச் சொல்லப்பட்ட காட்சி முதலாகிய பத்து அவத்தைகளுள் காட்சியென்பது கேள்விக்கும் உபலக்கணமாதலால் அவள் நளச்சக்கரவர்த்தியினுடைய உயர்வாகிய குணங்களைக் கேட்டு அதுமுதலாகியஞ்சு அவத்தைகளையடைந்துவருந்துகின்றமை பொதுவகையாற் சொல்லப்படுகின்றது.

இ-ள். கன்னல் - சர்க்கரைபோல, அஞ்சுவை - மதுரச்சுவையினால், கனிந்த - முதிர்ந்த, சொல் - சொல்லையுடைய, தமயந்தியென்னும் - தமயந்தியென்கிற, பொன்னங் கொம்பனாள் - கற்பகப் பூங்கொம்பு போல்பவள், இன்ன - இப்படிப்பட்ட, தன்மையனாகிய - குணாதிசயங்களையுடையவனாகிய, எந்து - (பூமிபாரத்தைத்) தாங்குகின்ற, எழில் - அழகும், திணி - வலிமையும் பொருந்திய, தோள் தோள்களையுடைய, மன்னர் - அரசர்களுக்கு, மன்னவன் - அரசனாகியநளனுடைய, மாண் - குணங்களையும், எழில் - அழகினது, வகை - வகையையும், நலம் - செல்வத்தையும், கேட்டு - (அறிந்தோர்சொல்லக்) கேட்டு, மயலோடும் - மயங்குதலோடும், வைகலும் - தினந்தோறும், புலம்பும் - புலம்புவாள் எ-று.

மயலொடு மென்னுமும்மை கீழ்ப்போன வேட்கை முதலாகிய ஏழவத்தைகளையுந் தழுவி நின்றது. அவத்தை பத்தாவன:—காணுதல், பெறவேண்டல், இடைவிடாது நினைத்தல், உடம்பு வாடல், தன்வருத்தம் பிறர்க்குச் சொல்லல், நாணத்தினெல்லை கடத்தல், தன்னைக் காணப்படுகின்றவையெல்லாம் அவ்விரும்பப் பட்டவை போலுதல், பித்தாதல், மூர்ச்சித்தல், இறத்தல் என்பன இவற்றுட் காட்சியொழிந்த வொன்பதும் "வேட்கையொருதலை யுள்ளுதன்மெலிதல், லாக்கஞ் செப்பலுணுவரை யிறத்த, னைந்

குவ வெல்லாம் வையேபோறன், மறத்தன் மயக்கஞ் சாக்காடென்றிச். சிறப்புடை மரபினவைகளவென மொழிப'' என்பதனுலறிக. வடநூலா ருள் ஆக்கஞ் செப்பலையும் நோக்குவவெல்லாமவையே போறலையும் நீக்கி, சாகரமென்கிற விழி துயிலாமையும், அரதியென்கிற வேற்றுப் புலவெறுப் புங் கூட்டிப் பத்தென்பாராலெனின், அவ்விரண்டும் உள்ளுதலி லடக்கிக் கொள்ளப்படுமென்க. கன்னலஞ்சுவை கனிந்த சொல்லாவது - கேட்டோ ரை மகிழ்விக்கும் பொருணயமமைந்த மொழியாம். ஆகவே அவளது குறை வற்ற புலமை கூறியவாறுயிற்று. வாடாமையாலு மொளியாலும் கண் டோர் கண்களிகூரச் செய்தல் பற்றிப் பொன்னங்கொம்பு உபமான மாக் கப்பட்டது. அக்கலிவி யழகுகளிற் சிறந்த தமயந்தியால் விரும்பப்படுதற்கு இப்படிப்பட்ட தோள்களே முக்கிய காரணமென்பது தோன்ற ஏந்தெழிற் றிணி தோளென்றார். கல்வி யறிவுடைய டிங்கையர் ஆடவரிடத்தே முன் னே குணங்களையும் அதன்பின்னே அழகையும் அதன்பின்னே அவரிரண் டுங்கொண்டு, காமவின்பத்தை யனுபவித்தற்குத் தூணேக்காரணமாகிய செல் வத்தையும் விரும்புவராதலால், அம்முறையே மாணெழில் வகைநலங் கேட் டாளென்க. அழகின்வகையாவன - கை கால் கண் முதலிய வவயங்களி னளவையு நிறத்தையும் பற்றிய இயற்கை யழகின் கூறுபாடும் ஆடையணி முதலியவற்றுற் செய்து கொள்ளப்படுஞ் செயற்கையழகின் கூறுபாடுமாம்.

தாதலைந்தினவண்டுகண்படுகுழற்றைய
லேதமற்றதன்னெழிற்கிணேயாமெனவெண்ணி
யாதரத்தின்வேளாணேயிற்பயிலுநெஞ்சதனைத்
தூதுவிட்டனடோன்றல்பாற்றுறந்தனடுயிலே.

இதனுல் இடைவிடாது நினைத்தலும் அதனுலுளதாகும்
விழி துயிலாமையுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். இனம்-கூட்டமாகிய, வண்டு-வண்டுகளானவை, தாது-மலர்ப் பொடியை, அலைந்து - பூசிக்கொண்டு, கண்படு - தூங்குதற்கிடமாயிருக்கின்ற, குழல் - கூந்தலையுடைய, தையல் - தமயந்தியானவள், ஏதமற்ற - குற்றமற்ற, தன் - தனது, எழிற்கு - அழகுக்கு, இணேயாமென - (இவளழகு) தகுதியா மென்று, எண்ணி - நினைத்து, ஆதரத்தின் - ஆசையினுலே, வேள் மன்மத னது, ஆணேயில் - ஆக்கினையிலே, பயிலும் - தங்காநின்ற, நெஞ்சதனை - (தன்) மனத்தை * தூது - தூதாக, தோன்றல்பால் - அரசனிடத்திலே, விட்ட னள் - அனுப்பினவளாகி, துயிலே - நித்திரையை, துறந்தனள் - இழந்தாள்.

அழகினுலே தனக்குயர்ந்தவளேயன்றி யொப்பவளொருத்தி யிருக்கி னும் அதுவே தன்னழகுக்குக் குறைவாமென்று கொள்ள லாதலால் அக்

* இதன்கண் ''நெஞ்சதனைத் தூதுவிட்டனள்'' என்றதனுல் வரைந் தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடு எட்டனுள்தூது முனி வின்மை என்னு மெய்ப்பாடும், துறந்தனடுயிலே என்றதனுல் கண்டுயின் மறுத்தல் என்னு மெய்ப்பாடும் வந்தவர் காண்க.

குறைவு மில்லையென்பது தோன்ற ஏதமற்ற தன் னெழிற்கெனச் சொல் லப்பட்டது. இங்கே யிணையென்பது மாற்றுயர்ந்த பொன்னுக்கும் மாசில் லாத மணிக்கும்போலத் தன்னழகுக்கு மவனழகுக்குமுள்ள தகுதியாம். வேளாணையிற் பயிலுதல் தன்னுரிமை கெட்டு மன்மதன் எவ்வழியிலே நடத்துகின்றனனே அவ்வழியிலே நடத்தல். நெஞ்சைத் தூதுவிடுதல் நள னிடத்தே மிக்குறச் செலுத்துதலாம்; அதாவது இடைவிடாது நினைத்த லென்க. இனவண்டு தாதளைந்து கண்படுகுழற்றையல் தயிலத் தறந்தன னெனவே தன்னையடுத்த அஃறிணை யுயிர்களுக்கும் நித்திரைசெய்தற் கிட மாயுள்ளவள்தான் அதனை யிழந்தனளோவென்னு மிரக்கத்தைத் தோற்று கின்றது. 2

மின்னிலங்கு † வேளாளன் பெயர்கேட்டிடும்விழைவாற்
பொன்னின்வார்கழல்வீ தர்ப்பர்கோன்பேரவைபோந்து
மன்னர்யாரினும்வந் தியர்நிடதனைத்தடுப்ப
வன்னவன்புகழ்கேட்டலும்புளகமுற்றயரும்.

இதுமுதன் மூன்று பாட்டால் கேள்வி
விருப்பஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். மின் – மின்னல்போல, இலங்கு - விளங்காகின்ற, வேல்-வேலா யுடைய, நளன் - நளச்சக்கரவர்த்தியினது, பெயர் - நாமத்தை, கேட்டிடும்- கேட்கவேண்டு மென்கிற, விழைவால் - ஆசையினாலே, பொன்னின்-பொ ன்னாலாகிய, வார் - நீட்சிபொருந்திய, கழல் - வீரக்கழலையுடைய, வீதர்ப் பர்கோன் - வீதர்ப்ப தேசத்தாருடைய வரசன்து, பேரவை - பெரியசபை யின்கண், போந்து - (அவனைத் தொழுதற்குச் செல்கின்றவள் போலச்) சென்று, மன்னர் யாரினும் - அரசர் பலரினும், வந்தியர் - புகழ்வோரான வர், நிடதன் - நிடததேசத் தரசனை, எத்தெடுப்ப - அதிகமாகப்புகழ, அன் னவன் - அப்படிப் புகழ்பெற்ற வரசனது, புகழ் - கீர்த்தியை, கேட்டலும்- கேட்ட வளவிலே, புளகம் - மெய்ம்மயிர்சிலிர்த்தலை, உற்று - அடைந்து, அயரும் - (தமயந்தி) வாடுவாள். எ-று.

நளன்பெயர் கேட்பவென்னுது கேட்டிடும் விழைவா லென்றதனால், போந்து - என்றதற்குத் தந்தையை தொழச் செல்கின்றவள் போலச் சென் றென்று பொருள் கூறப்பட்டது. நற்குல மகளிர்க்கு விவாகமளவும் தந்தை யைத் தொழுதலும் விவாகத்தின்பின் கணவனைத் தொழுதலும் நித்தியவிதி யாமென்க. நளன்பெயர் கேட்டிடும் விழைவினாலே வந்தியாவனைப் புகழுஞ்

† "நளன் பெயர் கேட்டிடும் விழைவால்" எனவும், அன்னவன் புகழ் கேட்டதும் "புளகமுற்றயரும்" எனவுங் கூறியதனால் உறுபெயர் கேட்டல் என்னு மெய்ப்பாடும் போதரல் தெளிக. இதனை "இன்பூத்தை வெறுத்தல்" என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தா லுணரவைத்தார். ஆசிரியர் தொல் காப்பியனார்.

சமயநோக்கிச் சென்றனென்க. ஒருபெரியவரசன் முன்னே பலதேசத்தரசர் குணங்களையும் உள்ளவாறு புகழ்ந்துரைத்தல் வந்தியர் கடனுதலால் அவர் நளன் குணத்தை யுயர்த்திப் புகழ்ந்தாரென்க. புளகத்தால் அவன்மேலவனுக் காசை மிகுந்தமை வெளிப்படுகின்றது. புளகித்தல் உவகைச் சுவையைப் பற்றிய விரலாம். இப்படிப்பட்டவனை எனக்குக் கணவனுகப் பெற்றிலே னென்னுமுள்ள நிகழ்ச்சியே அயர்தற்குக்காரண மாதல் தோன்றுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அனங்கனையொழியாமண்ணிலாடவற்றெரிதிரென்னுக்
கனங்குழையவரான்மன்னர்க்கோரொருகுற்றங்காட்டி
யினஞ்செய்வண்டிமிருந்தண்டார்நளனலதில்லையென்று
மணங்களித்துரைப்பக்கேட்டுமம்மர்நோயுழக்குமாதோ. 4

இ-ள். அனங்கனை - மன்மதனை, ஒழியா – ஒழித்து, மண்ணில் – பூமியின்கண், ஆடவன் – ஒருகாளையை, தெரிதிரென்னு – ஆராய்ந்தெடுங்களென்று சொல்லி, கனம்-கனம்பொருந்திய, குழையவரால்-காதணியையுடையவிரால், மன்னர்க்கு – மற்றையரசர்களுக்கு, ஓரொருகுற்றம் – ஒவ்வொரு குற்றத்தை, காட்டி – சொல்லித்துக்கொண்டு, இனஞ்செய் – கூட்டஞ்செய்கின்ற, வண்டு – வண்டுகளானவை, இமிரும் – ஒலிக்கப்பெறுகின்ற, தண்-குளிர்ச்சிபொருந்திய, தார் – மாலையையுடைய, நளனது – நளராசனல்லாமல், இல்லை யென்று – (ஒருவனு) மில்லையென்று, மனம் – நெஞ்சத்தில், களித்து – மகிழ்ந்து, உரைப்ப – (அவர்) சொல்ல கேட்டு – (தான்) கேட்டு, மம்மர் – மயக்கமாகிய, நோய் – நோயிலே, உழக்கும் – (தமயந்தி) வருந்துவாள். எ-று.

மன்மதனுக்கு அழகு நிறைந்திருந்துங் காணத்தக்க அங்க மில்லாத குறையுள தென்பதுதோன்ற அனங்கனென்றும், அக்காரணத்தினுலே அவனதழகு பயன்படுவ தன்றென்பது கருதி ஒழியாவென்றும், விண்ணவரிற்சிறந்த மன்மதனை யொழிக்கவே தண்டபூபிக நியாயத்தினுலே மற்றை விண்ணவரும் ஒழிக்கப்பட்டமையினுலே மண்ணிலாடவனென்றும் சொல்லினுள். எல்லாவவயவங்களினழகு மொருவனுக்கே யமைதரிதாதலால் ஒவ்வோரரசனுக்கு மொவ்வொரு குற்றங்கூறி நளனிடத்தெல்லா வவயவங்களினழகும் இருத்தல்பற்றி நளனைக்கூறி அதனைப் பின்னும் வலியுறுத்தற்கு உளனென்னுது அலதில்லை யென்றார். அவன் குணங்களைச் சொல்லும்போது சொல்கின்றோர்க்கே மனமகிழ்ச்சி யுண்டாதலால் மனங்களித்துரைப்ப வென்றார். என்னைக் காட்டிக் கேட்டுழக்கும் எனமுடிக்க, அனங்கனென்னும் விசேடியம் அதன் பொருளாகிய மன்மதனை விலக்குதற்குத் தகுங் கருத்தையுட் கொண்டிருத்தலாலே கருந்தடை யொளியணி. 4

பாலைவாய்க்முகிற்றுவிப்படுபழஞ்சிறைவாளை
தாளதாமரையிற்றுஞ்சுந்தண்பணைநிடதநாட்டி

நீள்வளங்கேட்பாள்போலத்தூதர்பானிருபன்சீர்கேட்
டாளிமொய்ம்பினனெண்ணியணிமுலைநோக்கிச்சோரும்.

இ-ள். பாளை – பாளைகளானவை, வாய் – பொருந்திய, கமுகில்-பாக்கு மரத்தின்மேலே, தாவி – பாய்ந்து, படு – சூலைகளிலுள்ள, பழம் – கனிகளை, சிதறி – உதிர்த்து, வாளை – வாளை மீன்களானவை, தாள – தாள்களையுடைய, தாமரையில் – தாமரை மலர்களிலே, துஞ்சும் – துயிலப்பெறுகின்ற, தண் – தண்ணிய, பணை – கழனிகளையுடைய, நிடதநாட்டின்-நிடததேசத்தினது, நீள்வளம் - பெரியவளத்தை, கேட்பாள்போல-கேட்பவள்போல, தூதர் பால் – (அங்கிருந்துவந்த) தூதரிடத்து, நிருபன் – அரசனது, சீர் - கீர்த்தியை, கேட்டு-கேட்டறிந்து, ஆளி - சிங்கம்போல்பவனுடைய, மொய்ம்பு - தோள்களாகிய, இணை – இனத்தை, எண்ணி – நினைத்து, அணி – ஆபரணங்களையுடைய, முலை – (தன்) முலைகளை, நோக்கி – பார்த்து, சோரும் - (தமயந்தியானவள்) வாடுவாள் எ-று.

அந்நாட்டின் வளத்தைக் கேட்பாள்போல நளன் சீரைக்கேட்டலாவது நளனை முக்கியப்பொருளாகக் காட்டாமல் அந்நாட்டையே முக்கியப் பொருளாகக் காட்டி, அதைத் தொடர்ந்துவருகிற அவனது சீரைக் கேட்டலாம். அதைக் கேட்கும்போது மற்றை நாட்டுவளங்களினுமிது பெரிதாதலின் அவற்றை யொழித்து இதனைக் கேட்கின்றாளென்று கொள்ளுதலால், அவளிடத்தே ஐயமுற்றில ரென்பதுதோன்ற நீள்வள மென்றார். இவண் முலைகளோடு சேர்த்தற்கு அவன்றோள்கள் தகுதியான வினமாதலால் இனமெனப்பட்டது. பொருத்தம் பார்த்தற்குத் தோள்கள் காணப்படாமையாலும் தன் முலைகள் காணப்படுதலாலும் அவற்றை மனத்தாலெண்ணி இவற்றைக் கண்களாலே பார்த்தாளென்க. அவ்விரண்டற்கும் பொருத்த முண்டென்றறிதலாலே அவ்விரண்டுஞ் சேர்தலால் வருமின்பத்தைப் பெற்றிலே னென்று வாடினளென்க. நாட்டுவளங் கேட்கையாகிய கபடத்தினாலே நளன் சீர்கேட்கையாகிய தன் விருப்பத்தைச் சாதித்தலாலே பிறிதினவிற்சியணி. 5

ஓவியத்துறைகைபோயவொருவனையுருவின்மிக்க
காவலனொருவன்மற்றேரிர்கன்னிநீகேட்டுகென்னத்
* தாவருமெழிலிற்கோட்டத்தானுமந்நகரனுமாக
மேவரவினிதுநோக்கிமெய்ம்மயிர்பொடிக்குமன்றே.

சித்திரக்காட்சி கனவிற்காட்சி முதலியவை விரகிகளுக்கு
விளைதோபாயங்களாகையாலே இதனாலே சித்திரக்காட்சி விருப்பம் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஓவியம் - சித்திரவித்தையினது, துறை - வழியிலே, கைபோய-வல்லவனாகிய, ஒருவனை - ஒருவனைப் (பார்த்து), உருவின் - அழகினாலே,

* "எழிலிற்கோட்ட இனிதினெங்கி" என்றதனால், எம்மெய்யாயினுமொப்புமை கோடல் என்னு மெய்ப்பாடுற்றது.

மிக்க - (யாவரினும்) மேற்பட்ட, காவலனொருவன் - ஓர் அரசகுமாரனையும், மற்றோர் - வேறொரு, கன்னி - கன்னிகையையும், நீ தீட்டுகென்ன - நீ யெழுதுகவென்று சொல்ல, தாவரும் - வருத்தஞ் சேர்தலில்லாத, எழிலில்-சித்திரசாலையிலே, கோட்ட - (அவ்விருவர் வடிவங்களையும் அவன்) எழுத, தானும் -.(விரும்பிய) தானும், அந்நளனுமாக - (விரும்பப்பட்ட) அந்நள ராசனுமாக, மேவர - பொருந்த, இனிது - இனிதாக, நோக்கி - பார்த்து, மெய் - உடம்பிலுள்ள, மயிர் - மயிர்களானவை, பொடிக்கும் - சிலிர்க்கப் பெறுவாள் (தமயந்தியானவள்) எ-று.

ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் விகற்பங்கள் பலவுள. அவற்றை ஒன்பான் விருத்தியுளடக்குவர், "பன்னுள் கழிந்தபின்னர் முன்னு - ளெண்மெய்ப் பாட்டினுளிரக்க மெய்ந்நிறீ இ-யொண்வினையோவியர் கண்ணிய விருத்தியுள்" என உதயணன் கதை கூறுமாற்றா னுணர்க.

ஒருவனை யென்பது பார்த்தென்னுஞ் சொல் வருவித்து முடிக்கப் பட்டது; இது சொல்லெச்சம். "சொல்லெனச்ச முன்னும் பின்னுஞ்-சொல்லளவல்ல தெஞ்சுதலின்றே." எழில் - வண்ணம்; அழகுமாம். கை போதல் - சிறுமைபோதல். தன் சொற்குறிப்பறிந்து தன் விருப்பத்தின் படி யெழுத வேண்டலால் ஓவியத்துறை கைபோயவொருவன் தெரிந்து கொள்ளப்பட்டான். மன்மதன் முதலியோரை யொழித்து நாற்றிசை யினும் புகழ்பெற்ற நளனென்று உய்த்துணர்ந்து கொள்ளுதற்கு உருவின் மிக்கவனென்னுது உருவின் மிக்க காவலனொருவனென்றும், அதுவரையி லவனோடு சம்பந்த மில்லாதவளுங் கன்னிகையுமாகிய தன்னைக் குறிப்பித் தற்கு ஒருத்தி யென்னுது மற்றோர் கன்னியென்றுங் கூறினள். நளனை யுந் தன்னையும் வெளிப்படையாகச் சொல்லாமைக்குக் காரணம் நாணமே யாம். அவ்வெழுதுதலிலே அவனுக்கு மனவுக்க முண்டாதற் பொருட்டு வேண்டிக்கோடல் பொருள்படத் தீட்டென்னுது தீட்டுகவென்றாள். அவ் வெழுதப்பட்டவை விபரீதப்படாமல் தன் விருப்பத்தின்படியே அமைத லால் தானுமந் நளனுமாக நோக்கினளென்க. தன்னுருவங் காணப்பட்டு நிற்றலாலும் நளனுருவஞ் செவிப்புல வுணர்ச்சியைக்கொண்டு பார்த்தறிய வேண்டுதலாலும் முன் சொல்லப்பட்ட முறைப்படி அந்நளனுந் தானுமாக வன்றித் தானுமந் நளனுமாகக் கண்டாளென்றார். அன்றியும் இப்பாட் டுக்கு அழகினுலே மிக்க வொருவனையு மொருத்தியையும் எழுதென்று பின்னே அவ்வுருவங்களே அழகான் மிக்கவர் தாமிருவருமே யாதலால் அவற்றைத் தாமாகக் கண்டா ளெனினும் அமையும். உண்மையாகவே தாமல்லாதிருந்தாலும் வினைதமாக அவற்றைத் தாமாகப் பாவித்துப் பார்த்து மகிழ்ந்தாளென்க. மயிர்பொடித்தல் உவகைச் சுவைபற்றிய விகாரம்.

இதமுத லிரண்டு பாட்டுக்களால் கனவிற்காட்சி
சொல்லப்படுகின்றது.

* வள்ளற்றார கலர்தன்னில்வன முலை திலைக்கவெண்ணு
முள்ளத்தாள்கன விற்காணெ தாழிந்தகாளுளதோகங்கு
னள்ளிற்கூர்துயிலிற்காணுகண்பொருள்காணுங்கொல்லோ.
மெள்ளத்தான் வியாற்காட்டுஞ்செயலினைவிலக்கலாமோ.

இ-ள். வள்ளல் - நளச்சக்கிரவர்த்தியினது, தார் - மாலையையுடைய, அகலந்தன்னில் - மார்பின்கண்ணே, வனம் - சித்திரத்தையுடைய, முலை-முலைகளானவை, திலைக்க - அழுந்தாநிற்க, எண்ணும் - (அவனை) இடைவிடாது நினைக்கின்ற, உள்ளத்தாள் - மனத்தையுடைய தமயந்தியானவள், கனவில் - சொப்பனத்திலே, காணுது - காணாதிருக்க, ஒழிந்தநாள் - கழிந்த நாளும், உளதோ - உண்டோ (இல்லை), காணு - (முன்) காணப்படாமல், நண் - தங்கிய, பொருள் - ஒருபொருளை, கங்குல் - இரவினது, நள்ளில் - நடுவிலே, கூர் - செய்யப்பட்ட, துயிலில் - நித்திரையிலுல், காணுங்கொல் - (ஒருவன்) காண்பானே (வெனின்,) வியால் - ஊழிலுல், காட்டும் - (அதனைக்) காட்டுகின்ற, செயலினை - (அந்நித்திரையின்) செய்கையை, மெள்ளத்தான் - விரையாமலேனும், விலக்கலாமோ - (அசம்பவமென்று) விலக்கலாமோ (ஆகாது) எ.று.

திலைக்கவென்னும் வினையெச்சம் காணுதென்னு மெதிர்மறையின் முதனிலைத் தொழில்கொண்டது. முன்னே துயிலைத் துறந்தனனென்பதனோடு இங்கே பலநாள்களிலுந் துயின்றபின் வருவதாகிய கனவுகண்டானென்றது மாறன்றேவெனின், அவனை இடைவிடாது சிந்தித்திருப்பவருக்கு நெடுங்கால வாசனையாற் சிறிது கண்ணுறக்கம் வருவதன்றிப் பழையபடி நித்திரை செய்திலனென்க. நளனைத் தனக்கு இடைவிடாது சிந்திக்கின்றவளாகிய தமயந்தியானவள் தினந்தோறுங் கனவிலே தன்னைப் புணர்கின்றவளாக அவனைக் காண்கின்றா ளென்றும், ஒருபோதுங் காணப்படவில்லாத ஒரு பொருளை இரவிலே நித்திரையிலுலே காணுதல் அசம்பவமன்றே வென்கிற சங்கைக்கு அந்த நித்திரையானது தன்னுலேயன்றி ஊழ்வலியிலுலே அப்படிப்பட்ட பொருளையுங் காட்டுதலால் அதனை அசம்பவமென்ன லாகாதென்றுஞ் சொல்லியதாம். இங்கே காணுதலுக்குக் கட்பொறி மாத்திரத்தாலன்றி மற்றைப் பொறிகளாலுபவித்தலுங்கொள்க. மெல்ல என்பது மெள்ள என எதுகைபற்றி வந்தது. வியாற் காட்டுஞ்

---

* "உள்ளத்தாள் கனவிற் காணுதொழிந்த நாளுளதோ" என்றது கனவொடு மயங்கல் என்னு மெய்ப்பாடு அதனை "இன்புத்தை வெறுத்தல்" என்னுந் தொல்காப்பிய வியானுணர்க. சகரன், காரி, நளன், தந்துமாரி, நிருதி. செம்பியன், விராடன் என்னும் முதல்வள்ளன்மார் எழுவருள் ஒருவனுதல் பற்றி வள்ளல் என்றார்.

செயலினை விலக்கலாமோ வென்னும் பொதுப்பொருளாலே நளனைக் கண்டிலாத தமயந்தி கனவிலே அவனைக் காணுதலாகிய சிறப்புப் பொருளைச் சாதித்தலால் வேற்றுப்பொருள் வைப்பணி. 7

கட்புலனென்னுந்தூயகதவடைத்திதயமேய
வுட்புலனெடுங்கநோக்கியுறுதுயிலென்னுந்தோழி
புட்குலஞ்சுழலும்வைவேலிறையெழிற்பொலிவுகாட்டு
முட்பொதிபசுந்தாட்செய்யமுளரிபோன்முகத்தினுட்கே.

இ-ள். தூய - (நீர்த்துளிகளைத்) தூவிய, கட்புலனென்னும் - கண்ணிமைகளென்கிற, கதவு - கதவுகளை, அடைத்து - சாத்திக்கொண்டு, இதயம்- நெஞ்சமாகிய (தன்வீட்டுள்), மேய - தங்கிய, உட்புலன் - மனமானது, ஒடுங்க - அடங்க, நோக்கி - (அச்சமயம்) பார்த்து, உறு - அடைந்த, துயிலென்னும் - நித்திரையென்கிற, தோழி - பாங்கியானவள், புட்குலம் பறவையினமானது, சுழலும் - வட்டமிடப்பெறுகின்ற, வை - கூர்மைபொருந்திய, வேல் - வேலையுடைய, இறை - நளச்சக்கரவர்த்தியாகிய, எழில் - அழகினது, பொலிவு - பெருக்கத்தை, முள் - முள்ளுகளாலே, பொதி - நிரைந்த, பசு - பசிய, தாள் - தண்டையுடைய, செய்ய முளரிபோல் - செந்தாமரைமலர்போலும், முகத்தினுட்கு - முகத்தையுடைய தமயந்திக்கு, காட்டும்- காண்பிப்பாள். எ-று.

தூவுதல் வினைக்கு அவாய் நிலையாலே நீர்த்துளிகளென்கிற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பிறர் தனக்கெதிராகாதிருக்கக் கதவடைத்து வீட்டுள்ளே தனித்திருந் தெண்ணுவோன்போல மனமானது உருவங்கள் தனக்கெதிராகாதிருக்கக் கட்பொறிவாயிலி ணிமைக்கதவடைத்து நெஞ்சமாகிய தனிடத்தே தங்கி நெடும்பொழு தெண்ணியதாற் சேர்ந்ததென்க. உட்புலனெடுங்க வென்றதனால் மற்றை மெய் வாய் மூக்குச் செவியென்னும் பொறிகளிற் செல்லாமையும் பெறப்படுகின்றது. ஒருத்திக்கு அரிதான ஒரு மறைப்பொருளைப் பிறரறியாமற் கொணர்ந்து காட்டுந் தோழி போல நித்திரையானது தமயந்திக்கு அவள் கண்களும் அந்தக்கரணமும் அறியாமல் மறைத்து நளனைக் காட்டியதென்பதாம். கனவிற் காட்சியறிவும் மனத்தாலன்றி யுண்டாவதில்லையே; அங்ஙன மிருக்க அதற்கு எவ்வாறு மறைத்துக் காட்டியதெனின், இங்கே பொறிகளோடு கூடிய மனத்துக்கே மறைத்ததென்று கொள்க. எதுகைக்காகவே யன்றிப் பறிக்கப்பட்டு, மலர்ச்சியும் அழகுங் கெட்டுப்போகாத மலரென்பது தோன்றற்கு "முட்பொதிபசுந்தாள்" என்னும் அடை சொல்லப்பட்டதுபோலும், இஃது உருவகவணி. 8

தாமறைமுகங்கள்வாட்டுந்தண்பனிக்காலந்தன்னிற்
காமர்வெம்புகனீட்டித்தவண்ணமுங்கணவர்த்தீர்ந்தோ
சேமுறுவேனிற்காலமிரவுநீட்டித்தவாறுந்
தூமமென்கூந்தற்செவ்வாய்த்துடியிடையுரவன்மேரு.

இதனுல் நினைத்தாலுண்டாகிய துயிலாமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். தாமரை – தாமரைமலர்களுடைய, முகங்கள் – முகங்களை, வாட்டும் - வாடச்செய்கின்ற, தண் - தண்ணிய, பனிக்காலம் - பனிக்காலமானது, தன்னில் – தன்னிலே, காமர் – அழகிய, வெம்பகல் – வெவ்வியபகலை, நீட்டித்த வண்ணமும் – நீள்வித்தபடியும், கணவர் – (தம்முடைய) நாயகரினின்றும், தீர்ந்தோர் – நீங்கினமாதர், எம் – மையலை, உறு – அடைதற்குக் காரணமாகிய, வேனிற்காலம் – வெயிற்காலமானது, தன்னில் – தன்னிலே, இரவு – இரவை, நீட்டித்தவாறும் - நீள்வித்தபடியும், தூமம் – புகைபோலும், மெல் - மெல்லிய, கூந்தல் - கூந்தலையும், செம்மை – செய்ய, வாய் – வாயையும், துடி – உடுக்கைபோலும், இடை – இடையையும்உடைய தமயந்தியானவள், துயர – துன்பப்படுதற்கேயாகும், அன்றே – இது ஆச்சரியம். எ-று.

தைமீ முதல் தொடங்கி ஆனிமீ முடிவு வரைக்கும் பகற்காலம் 28-நாழிகையிலிருந்து 32-நாழிகை அளவாக வளர்ந்தும் இதற்கேற்ப இராக்காலம் 32-நாழிகையிலிருந்து 28-நாழிகையளவாகத் தேய்ந்தும் வரும், இவ்வாறே ஆடிமீ முதல் தொடங்கி மார்கழிமீ முடிவு வரைக்கும் இராக்காலம் 28-நாழிகையிலிருந்து 32-நாழிகையளவாக வளர்ந்தும் இதற்கேற்பப் பகற்காலம் 32-நாழிகையிலிருந்து 28-நாழிகையளவாகத் தேய்ந்துவரும்; இது சூரியசித்தாந்த முதலிய கணிதநூல்களாலும் அனுபவத்தானும் அறியப்படும். 28 - நாழிகைப் பகலுள்ள மார்கழியும் தையுமாகிய மூன்பனிப் பருவத்தையே தண் பனிக்கால மென்றுரென்றும், 28 - நாழிகை யிரவுள்ள ஆனியும் ஆடியும் ஆகிய முதவேனிற் பருவத்தினையே வேனிலென்று ரென்றுங் கொள்க. தாமரை முகங்கள் வாட்டுமென்றதனுலும் கணவர்த் தீர்ந்தோரேமுறு வென்றதனுலும், அவ்விருவகைக் காலங்களுக்குங் கொடுமையே சொல்லப்பட்டதாயிற்று. பனிக்காலத்திலே குறைந்த பகலும் வேனிற் காலத்திலே குறைந்த இரவும் மிகுந்து தோன்றுதல் சாத்திரத்துக்கும் அனுபவத்திற்கும் விரோத மன்றுவெனின் விரகிகளுக்குக் கணப்பொழுது நெடுங்காலமா மென்பதனுல் விரோத மில்லையென்க. 9

மணியெழுவனையதோளார்மனவலியகற்றுந்தத்திப்
பணவரவல்குற்செவ்வாய்ப்பைங்தொடிகுணனூலாக
வணிசுளர்சீர்த்திமுத்தங்கோத்தனரசர்சென்னி
தணவறவிளங்குபைம்பொற்றுமரைத்தாளினனே.

இதுமுதற் பதினெரு பாட்டுக்களால் நளச்சக்கரவர்த்தியினுடைய காமவிருப்பத்தைச் சொல்லத்தொடங்கி அவன் தமயந்தியுயர்வாகிய குணத்தைக் கேட்டமையை இதனுற் சொல்லுகிறார்.

இ-ள். அரசர் – அரசருடைய, சென்னி – தலைகளிலே, தணவற - ஒழிவில்லாமல், விளங்கு – விளங்குகின்ற, பைம்பொற்றுமரை – பசிய பொற்று

மரை மலர்களாகிய, தாளினன் – அடிகளையுடைய நளச்சக்கரவர்த்தியான வன், அரவு – பாம்பினது, துத்தி – கறுப்புவரிகளையுடைய, பணம் – படம் போலும், அல்குல் - அல்குலையும், செவ்வாய் - செவ்வாயையும், பைந்தொடி - பச்சைவளையல்களையும் உடைய தமயந்தியினது, மணிஎழுஅனைய – மணித் தூண்போலும், தோளார் – தோள்களையுடைய காளையரது, மனவலி – தை ரியத்தை, அகற்றும் - நீக்குகின்ற, குணன் – குணமானது, நூலாக - இழை யாக, அணி – (தன்) அழகினாலே, இளர் – விளங்காநின்ற, கீர்த்தி – கீர்த்திக ளாகிய, முத்தம் – முத்துக்களை, கோத்தனன் – (அவ்விழையிலே) கோத்தான் எ-று.

குணம் – குணன் எனப்போலி. தாமரை – ஆகுபெயர். அரசர் தமது முடிகளின் மேலே பொற்றுமரை மலரைப்போல மகிழ்ந்து கொள்ளுதலால் அவர் முடிக்கு இவனடி பொற்றுமரை மலரெனப்பட்டது படத்திற் கரும் புள்ளிகள்போல அல்குலுக்கு உரோமமென்க. பைந்தொடிகுணன் – மன வலி யகற்றுங் குணன் – எனக்கூட்டுக. மணியெழு வனையதோளார் அரசி ளங்காளையர். மனவலியகற்றலாவது – கூற்றங் கொடித்து மேல்வரினுங் கலங்காத அவரது மனநிலையைக் கேட்கப்பட்ட வளவிலே கலங்கச்செய்த லாம். குணமெனப் பொதுப்படக் கூறுதலால் அழகு முதலான பலவுங் கொள்ளப்படும். அரசனழகினு லுண்டாகிய கீர்த்திகளாகிய முத்துகளுக்கு அவள் குணம் நூலாகவெனவே முத்துகளுக்கு நூல்போல அக்கீர்த்திக ளுக்கு அவள்குணம் இன்றி யமையாத சிறப்புடைத்தென்பது பெறப்பட் டது. கீர்த்தி முத்தங்களைக் குணநூலிற் கோத்தல் அவள் தனக்குக் கிடைக்கப்பெறின் அவள் குணத்தினுலே தன் கீர்த்தி விளங்குந் தன் மையை நினைத்தல். குணத்திலே நூலையும் கீர்த்தியிலே முத்தையும் ஆரோபித்தலால் உருவகவணி. 10

வனப்பினில்வென் றவேந்தையவங்கொளுங்காலமென்னக்
கனைத்துவண்டிவருங்கூந்தல்கருதியவிலக்கந்தப்பாத்
தனிப்படையாகவேறறற்றெண்ணினன்றளைஞ்சிந்தக்
குனிக்குமென்கரும்பான்மேருவில்லியைவெல்லுங்கோளான்.

இதுமுதல் மூன்றுபாட்டுக்களால் நளனை வெல்லுதற் கெண் ணிய மன்மதன் செய்கையைக் காட்டி அவன் மே லவனுக்குண்டாகும்விருப்பம் குறிப்பிக்கப் படுகின்றது.

இ-ள். தாளம் – முத்துக்களானவை, சிந்த – உதிராநிற்க, குனிக்கும் - வளைக்கப்பட்ட, மென்கரும்பால் – மெல்லிய கருப்பு வில்லினுலே, மேரு வில்லியை – மேருவை வில்லாகக்கொண்ட கடவுளையும், வெல்லும் – வெல் லுதற்கு நினைத்த, கோளான் – (பெருமையையுடைய) மன்மதனவன், வயம் – வெற்றியை, கொளும் - கொள்ளுதற்கேற்கின்ற, காலமென்னு - காலம் இதுவேயென்று, வண்டு – வண்டுகளானவை, கனைத்து – ஒலித்து, இவரும்-

ஏறப் பெறுகின்ற, கூந்தல் – கூந்தலையுடைய தமயந்தியானவள், கருதிய-(தன்னுலே) குறிக்கப்பட்ட, இலக்கம் – குறியினின்றும், தப்பா – தப்பாத, தனி-ஒப்பற்ற, படையாக-ஆயுதமாக, வனப்பினில்-அழகினால், வென்ற-(தன்னை) வென்ற, வேந்தை – நளச்சக்கரவர்த்தியை, வேறற்கு – (அப்படையால்) வெல்லுதற்கு, எண்ணினன் – ஆலோசித்தான். எ-று.

முன்னே மேருவில்லியால் வெல்லப்பட்டவ ளாயினும் பின்னே உமாதேவியை மணம்புணரச் செய்தமையினாலே கரும்பான் மேருவில்லியை வெல்லுங்கோளானென்ற ரென்பதுமாம்.

"மாதுமை நிமித்தமாக மழுவலா னனங்க ளுக்கு – கோதநெஞ் சுடற்றச்சீறிக் கொண்கனே டமைக்கு மேனி, பாதிசெய்தவரைத் தண்டம்பண்ணித் தன் வசமாச்செய்த, நாதனே யுலகுக்கெல்லா நாதனென் றேத்து வாமே." என்பதனாலுமறிக.

வல்லவனுக்குப் புல்லுமாயுத மென்றபடியே மன்மதனுற்றலே மெய்ச்சியவாறுயிற்று. வயங்கொளுங்கால மென்றது கீர்த்தி முத்தங்களைக் குணநூலிற் கோத்தகாலத்தைச் சுட்டி நின்றது. வனப்பினில் வெல்லுதலாவது அழகின்மேம்பட்டு நிற்றலாம், தமயந்தி மன்மதனுக்கு அவளுலே குறிக்கப்பட்ட அரசனுகிய குறியிலே தப்பாது சென்று தாக்கும் ஒப்பற்ற படைக்கல மாயினளென்க. தன்னை யழகில் வென்ற அரசன்மேல் உள்வயிரங் கொண்டு அவனை வெல்லுதற்கானகாலமும் படைக்கலமுந் தேடிக்கொண்டிருந்து அவை கிடைக்கப்பெறுதலினுலே வேறற் கெண்ணினனென்க. வயங்கொள்ள நினைத்தற்கு ஏதுவாகாத வனப்பினில் வென்றமையை யேதுவாகக் குறித்தலால் ஏதுத்தற்குறிப்பணி. கரும்பான் மேருவில்லியை வெல்லுங் கோளானெனக் காரணத்தினது தருமங் குறைவாயிருக்கக் காரியம் பிறத்தலைச் சொல்லுதலால் 2-வது பிறி தாராய்ச்சியணி. இவ்விரண்டுஞ் சேர்தலாலே சேர்வையணி. 11

அணங்கினுக்கணங்குசெய்யுமணிகிளரஞ்சில்லோதி
குணங்கமழ்குருதிவைவேற்கொற்றவன்செவியுறுமுன்
மணங்கமழ்தென்றற்றேரோன்வாங்குபைங்கழைவிற்பூட்டுங்
குணஞ்செவிப்பட்டதன்னுன்வண்மையார்குணிக்கற்பாலார்.

இ-ள். அணங்கினுக்கு – தெய்வ மகளிருக்கு, அணங்கு – வருத்தத்தை, செய்யும் – செய்கின்ற, அணி – அலங்கரித்தலாலே, கிளர் – விளங்காநின்ற, அம் – அழகிய, சில் – பொன்வட்டத் தகட்டணியையுடைய, ஓதி – கூந்தலையுடைய தமயந்தியினது, குணம் – குணமானது, கமழ் – நாறுகின்ற, குருதி – உதிரத்தையுடைய, வை – கூர்மைபொருந்திய, வேல் – வேலையுடைய, கொற்றவன் – நளச்சக்கரவர்த்தியினது, செவி – காதிலே, உறுமுன் – அடைவதன்முன்னே, மணம் – மணமானது, கமழ் – மணக்கப்பெற்ற, தென்றல்-தென்றலாகிய, தேரோன் – தேரையுடைய மன்மதனுல், வாங்கு-

வளைக்கப்பட்ட, பைங்கழைவில் – பசிய கருப்புவில்லிலே, பூட்டும் – ஏறிடப் பட்ட, குணம் – குணமான அது, செவி – (அம்மன்மதன்) காதிலே, பட்டது – அடைந்தது, அன்னேன் – அப்படிப்பட்ட மன்மதனது, வன்மை – வல்ல மையை, யார் – யாவர், குணிக்கற்பாலார் – அளவுசெய்யவல்லவர். எ-று.

அணங்கு – சாதியொருமை. "அணங்குஞ் சூருந்தெய்வப் பெண் பொ துப்பெயர்" என்பதனாலறிக. அணங்கினுக் கணங்குசெய்தல் தன் பேரழ கினால் அவர்க்குப் பொறுமை வருத்தஞ் செய்தலாம்; அல்லாமலும் அழகுக் கழகு செய்கின்றவெனினுமாம். தமயந்தியின் குணம் அழகு முதலிய பண் பாம். கரும்பு விற்குணம் அதனது நாணும். "குணமென்ப கயிறும் பண் புங் கும்பம் வின்னுணாற்பேர்" என்பது நிகண்டு. தமயந்தியின் குணம் நளன் செவியிலடைவதன் முன்னே கருப்பு வில்லின் குணம் மன்மதன் செவியிலடைந்ததென்க. நளன் செவியிலடைதலாவது கேட்டறியப்படு தல். மன்மதன் செவியிலடைதலாவது, இடதுகையால் வில்லைப்பிடித்து நின்று வலதுகையால் அம்பைத்தொடுத்து நாரியை யிழுக்கும்போது அந் நாரி காதளவிற் சென்று படுதலாம். தமயந்தியின் குணத்தை நளன் கேட் பதற்கு முன்னே மன்மதன் அம்பெய்யத் தொடங்குதல் கூடாமையாலே செவியுறு முன்னென்பது செவியுற்றளவி லென்னும் விரைவைக் காட்டியது. தமயந்தியினழகை யரசன்கேட் டறிதலாகிய காரணத்துக்குமுன்னே மன்ம தன் வில் வளைத்தலாகிய காரியம் பிறத்தலைச் சொல்லுதலால் மிகையுயர்வு நவிற்சியணியாகும். 12

கல்வியின் றுறைகைபோயகாவலன் றன்னேயின்னே
வெல்குவலென்ன நெஞ்சின் விழைவுறு கருப்புவிலான்
மல்லலம்புவனமூன் றும்வென்றதன்வரம்பில்சீர்த்தி
யல்கலியையமென்னுமாழிபிலுகுத்துநின்றான்.

இ-ள். கல்வியின் – கல்வியினது, துறை – வழியில், கைபோய – வல்ல வனாகிய, காவலன்றன்னே – அரசனே, இன்னே – இப்போதே, வெல்குவ லென்ன – வெல்வேனென்று, நெஞ்சின் – (தன்) மனத்தில், விழைவுறு – ஆசைப்பெருக்கத்தைக் கொண்ட, கருப்புவில்லான் – கருப்பு வில்லையுடைய மன்மதனவன், அம் – அழகிய, புவனமூன்றும் – உலகமூன்றையும், வென்ற – (அதுவரையில்) வென்ற சம்பாதிக்கப்பட்ட, தன் – தனது, மல்லல் – வளம் பொருந்திய, வரம்பில் – அளவில்லாத, கீர்த்தி – கீர்த்தியை, அல்கலில் – சுருங் கலில்லாத, ஐயமென்னும் – சந்தேகமென்கிற, ஆழியில் – கடலுள், உருத்து – முழுகச்செய்து, நின்றான் – (திசைத்து) நின்றான். எ-று.

கல்வியின்றுறை கைபோயகாவல னெனவே வேதாகமங்களிற் சொல் லப்பட்ட விதிவிலக்குகளோ டியயந்திரிபின்றி யறிந்து அவ்வறிவினுலே மனத் தைத் தன்வசப்படுத்தி நிற்பவனென்பது பெறப்பட்டது. அவனை வெல்லு தல் அவன் மனநிலையைக் கெடுத்துக் காமத்திற் கலங்கச் செய்தல். அக்கல் விபறிவி னுயர்ந்தோரை யிப்போதே வெல்லுவேனென் றுரை கூர்தல்

சாகசமாதலாலே மன்மதனுக்கு இவனே வெல்லமாட்டுவேனே மாட்டேனே வென்கிற வள்ளநிகழ்ச்சி பிறந்து அதனால் இதுவரையிலே மூன்றுலகங்களையும் வென்று சம்பாதிக்கப்பட்ட கீர்த்திகளும் நிற்குமோ நீங்குமோவென்று சந்தேகித்தானென்க. புதிதாகச் சம்பாதிக்க விரும்பிய ஊதியத்தைக் குறித்து முயன்று அதுவரையிலே சம்பாதித்துவைத்திருக்கப்பட்ட முதலையும் இழந்துபோதல் அறிவிலான் செயலாதலால், "ஆக்கங் கருதிமுதலிழக்குஞ் செய்வினை யுக்காரறிவுடையார்" என்பதனாலறிக. கல்வியின்றுகீழ்கைபோயவென்னுமடை அரசன் மன்மதனுக்கு ஐயந்தாவல்லனென்னுங் கருத்தை யுட்கொள்ளுதலால் கருத்தடையணி அங்கம். மன்மதனுக்குச் சந்தேகமில்லாதிருக்கச் சக்தேகத்தைக் கற்பித்தலால் தொடர்புயர்வு நவிற்சியணி. அங்கி ஆதலால் உறுப்புறுப்புக் கலவையணி. 13

தண்ணறுத்துளிக்குங்கூந்தற்றமயந்திமுலையும்போர்வே
லண்ணறன்புயமுங்கூட்டும்விதிவலியழகிற்றம்மா
மண்ணைமுழவுத்தோளான்மனவலிக்கவசமார
* ஞெண்மலர்வாளியாலுமுரனறப்பிளந்ததன்றே.

இதனால் மன்மதனுக்கு விதித்துணையாற் பூவம்பைக்
கொண்டே ஆண்மை பயன்பட்டமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். தண் – தண்ணிய, நறு – (மலர்த்) தேனை, துளிக்கும் – துளிக்கின்ற, கூந்தல் – கூந்தலையுடைய, தமயந்தி – தமயந்தியினுடைய, முலையும் – முலைகளையும், போர் – போர்க்குரிய, வேல் – வேலையுடைய, அண்ணல் – நளச்சக்கரவர்த்தியினுடைய, புயமும் – தோள்களையும், கூட்டும் – சேர்க்கும், விதி – தெய்வத்தினது, வலி – நினைப்பானது, அழகிற்று – பயனுடைத்தாயிற்று, மண் – துடைத்தல், அமை – அமைந்த, முழவு – மத்தளம்போலும், தோளான் – தோள்களையுடைய அவ்வரசனது, மனவலி – தைரியமாகிய, கவசம் – கவசமானது, மாரன் – மன்மதனது, ஒள் – மெல்லிய, மலர் வாளியாலும் – பூவம்பினாலும், உரனற – உரங்கெட, பிளந்தது – கிழிந்தது. எ-று.

மனவலியில் வலியென்பது தன் விருதிருன்றிய தொழிற்பெயர். அது நினைத்தலென்பது; "உய்ந்துபோமாறே வலிக்குமாண்டார் மனம்" என்பதனாலறிக. தமயந்தி முலையும் நளன் புயமுங் கூட்டலென்றதற்கு அவளை இவனுக்கு மனைவியாகச் செய்தென்பதுபொருள். கொடிய படைக்கலங்களால் ஊறுபடாமற் காக்குங் கவசம்போல அரசனது மனவலி காமத்தினாலே ஊறுபடாமற் காத்தலாலே மனவலிக் கவசமென்றார். அது பிளத்தல் நிலைகலங்குதல், தெய்வ சங்கற்பத்தினாலே எந்தக்காரியந்தான் முடியா

* வாளியாவன – தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, குவளை என்னும்வைந்தமாம். "வனசஞ்சூதமசோக மல்லி - குவளை கர்மன் கொலுமைங்கணையே" என்றார் பிங்கலந்தையாரும்.

தென்றதாயிற்று. மலர் வாளியாலுங் கவசம் பிளந்ததென்னும் விரோதம் விதிவலியாற் பிளந்ததென்றதனுலே அழிதலால் மூரண் வீளந்தழிவணி. இது மனவலிக் கவசமென்னு முருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்தது. அம்மா - வியப்பிடைச்சொல். 14

தேங்கமழ்துளவிநானுநான்முகத்தேவுநாளுந்
தாங்கருங்காமவெம்மைதரிக்கிலராகியன்றே
வாங்குதண்டிரையிற்றண்ணென்மலர்வயின்வதிர்ந்தார்மன்ன
னீங்கருநிழலிற்றேன்றுமதனேயெவ்வாறுநீங்கும்.

இதனுலே முதற்கடவுளரையும் வென்ற மன்மதனுக்கு வெல்லுதற்கரிய தியாதென்று சொல்லப்படுகின்றது.

இ-ள். தேம் – தேனுனது, கமழ் – மணக்கப்பெற்ற, துளவினனும் – துளசிமாலையையுடைய விட்டுணுமூர்த்தியும், நான்முகத்தேவும் – நான்கு முகங்களையுடைய பிரமாவும், நாளும் - எந்நாளும், தாங்கரும் - (யாவராலுந்) தாங்குதற்கரிய, காமவெம்மை – மன்மதனு லுண்டாகிய வெப்பத்தை, தரிக்கிலராகி – பொறுக்கமாட்டாதவராகி, வாங்கு – வளைந்த, தண்திரையில் – குளிர்ச்சி பொருந்திய பாற்கடலின்கண்ணும், தண்ணென் – குளிர்ச்சிபொருந்திய, மலர்வயின் – தாமரைப்பூவின் கண்ணும், வதிந்தாரன்றே - வாசஞ் செய்கின்றாரன்றே, மன்னன் - அரசனுனவன், நீங்கரு - நீங்காத, நிழலின் - (தனது) சாயைவடிவமாக், தோன்றும் – தோன்றுகின்ற, மதனை – மன்மதனினின்றும், எவ்வாறு – எவ்வுபாயத்தினுலே, நீங்கும் – நீங்கமாட்டுவான்.

காமவெம்மை நிலைமொழியீறு விகாரப்பட்டது, குமர கோட்ட மென்பதுபோல, காமனுலாகிய வெப்பம்பொறுமல் அதைத் தணித்துக்கொள்ளுற்குத் திருமால் பாற்கடலிலும், நான்முகன் தாமரைப்பூவிலும், வாசஞ் செய்கின்றரென்றார். படுக்கையிடமும் ஆசனமும் ஆதல் பற்றியென்க. முதற்கடவுளரே மன்மதனைக் கடக்கமாட்டா திருக்கையில் ஒருமனிதனுகிய அரசன் தனது சாயை வடிவாய்த் தொடர்ந்து கிற்கின்ற அவனை யெப்படி கடக்கமாட்டுவனென்றதாயிற்று. நிழலிற் றேன்று மென்றதற்கு, மன்னனது காந்திபோலுங் காந்தியுடையனுகத் தோன்று மென்பது நேர்பொருளாகவும் மன்னனது சாயையின் வடிவமாய்த் தோன்றுமென்பது பயன்படுபொருளாகவுங் கொள்க. நிழல் காந்தியுஞ் சாயையுமாதலின் காந்தியென்பது "வாமநிழல்சவி வளரொளியாகும்" என்பதனுலறிக. உடம்பினிழலை யொருவருங் கடக்கக் கூடாமையறிக. மன்மதனுலே கடவுளர்படும் பாட்டைச் சொல்லவே நளன் படும் பாடு தோன்றலாலே செய்யுட் பொருட்பேரணி காந்திபோலுங் காந்தியென்பது தொகையுவமை. இது அங்கம், கடக்கமாட்டாமைக்கு ஏதுவாகாத நிழலிற்றேன்றுதலை யேதுவாகக் குறித்தலால் ஏதுத்தற்குறிப்பணி. இது அங்கி ஆதலாற் கலவையணி. 15

மானநீரணஞ்சூழ்ந்தமன்னவனுளத்தினூடு
தூநலப்பருவமென்னுந்தோழியன்பொழுகநல்கு
நானமும்புழுகுங்கொட்டிநகைமணிமுத்தஞ்சூட்டு
நீனிறமணிக்கட்கொங்கைக்குடத்தினூனீந்திபுக்காள்.

இதனுல் உள்ளுதலும் நாணுவரையிறத்தலும்
சொல்லப்படுகின்றன.

இ-ள். மானம் – நாணமாகிய, நீரணம் – அகழியினுலே, சூழ்ந்த-சூழப்பட்ட, மன்னவன் – அரசனது, உளத்தினூடு – மனத்தினுள்ளே, தூ-குற்றமற்ற, நலப்பருவ மென்னும் – மங்கைப் பருவமென்கிற, தோழி-பாங்கியினுலே, அன்பொழுக – (அவண்மேல்) அன்புபெருக, நல்கு – கொடுக்கப்பட்ட, நானமும் – கத்தூரியையும், புழுகும் – புழுகையும், கொட்டி-அப்பி, நகை – காந்திபொருந்திய, மணி – அழகிய, முத்தம் – முத்துவடத்தை, சூட்டும் – சூட்டப்பெற்ற, நீலமணிநிற – நீலமணிபோலும், கண் – சூசுகத்தையுடைய, கொங்கை – முலைகளாகிய, குடத்தினுல் – குடங்களினுலே, நீந்தி – (அவ்வகழியைக்) கடந்து, புக்காள் – சென்றுள். எ-று.

ஒரு நகரத்திலே பகைவர் புகாமற் காக்கும் அகழிபோலி நாணம் அரசனுள்ளத்தே காமம் புகாமற் காத்தலாலே மானநீரண மென்றுர். "மானமும் வெள்கலும் வட்கலுஞ் சமழ்ப்பு – நாணமுணர்த்து நடையவாகும்" புதியகாம வின்பத்தை யனுபவித்தற் குரித்தாய் முன்னும் பின்னுமுள்ள பருவங்களினுஞ் சிறந்த நிற்கையால் மங்கைப் பருவத்தைத் தூநலப் பருவமென்றுர் அது பன்னிரண் டாண்டுகளின் மேல்வருவது. அதிலே பெண்மைக்குச் சிறந்த முலைகளும்புதல்பற்றி அதன்மேல் அன்புபிறத்தலால் அன்பொழுகவென்றுர். மார்பிலே குடத்தைக்கொண்டு ஆழநீரைக் கடந்து அக்கரை சேர்வோர்போலத் தமயந்தி தன் முலைகளாலே அரசனது நாணத்தைக்கடந்து அவனது மனத்திலே புகுந்தாளென்க. இப்படி அவள் செயலாகக் கூறப்பட்டதாயினும் அரசன் அவளுடைய முலையழகைக்கேட்டுத் தன்னுணத்தை யிழந்து அவளை நினைத்திருந்தானென்பது கருத்தாகக் கொள்க. உயர் வொப்பில்லாத வழகுடைய மகளிராயினும் எவ்வனமுற்றுமூலை யரும்புதற்கு முன்னே அவரை விரும்புதல் பொருந்தாக் காமமாகலின், விரும்புதற்கு முலைகளினியற்கை யழகோடு செயற்கை யழகுங் காரணமாதல் தோன்ற "நானமும் புழுகுங் கொட்டி நகைமணி முத்தஞ் சூட்டு-நீனிற மணிக்கட் கொங்கை" யென்றுர். மனம், பருவம், கொங்கை, இம்மூன்றினும் நீரணம் - தோழி - குடம் - இம்மூன்றின் அபேதங்களை ஆரோபித்தலால் உருவகவணி. நீலம் கடைக்குளம். 16

சிறையளிகுடைந்துபாடுந்தேமலர்ப்பகழிமாரி
நறைவிரியலங்கன்மார்பிற்றிளைத்தலி * னையுந்துன்பங்

* மலர்க்கணைகளால் கையுந் துன்பமென்றது அவற்றிற்குரிய செயலும் அவத்தையுமாம். செயல்களாவன – பெருமயக்கு, சிந்தாகுலம், புணர்ச்சிக்

கறைமதிவிளங்குங்கங்குற்காலையுமிணையுமல்லாற்
பிறரறியாமலுள்ளத்தடக்கினன்பிறங்கற்றிருளான்.

இதனுல் துயிலாமைத் துன்பஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். பிறங்கல் – மலைபோலும், தோளான் தோள்களையுடைய நளச் சக்கரவர்த்தி, சிறை – சிறையையுடைய, அளி வண்டுகளானவை, குடைந்து-தினைத்து, பாடும் – பாடப்பெறுகின்ற, தேம் – பரிமளம் பொருந்திய, மலர்ப் பகழி – பூவம்புகளது, மாரி – மழையானது, நறை – தேனையுடைய, விரி-மலர்ந்த, அலங்கல் – பூமாலையையுடைய, மார்பில் – மார்பின்கண்ணே, இளைத்தலின் – படுத்லினுலே, நையும் – இளைத்தலா லுண்டாகின்ற, துன்பம் – (தனது) துன்பத்தை, கறைமதி – சந்திரனுலே, விளங்கும் – விளங்காகின்ற, கங்குற் காலையும் – இராக்காலமும், (கறைமதி) – சந்திரன்போல, (விளங்கும்) – விளங்காகின்ற, அனையும் – பாயலும், அல்லால் – அல்லாமல், பிறர் – மற்றொருவரும், அறியாமல் – அறியாதிருக்க, உள்ளத்து – (தன்) மனத்தின்கண், அடக்கினன் – மறைத்தான். எ-று.

வெண்மை தண்மைகளாலே மதி சயனத்திற்கு முபமானமாக்கப்பட்டது. இரவும் அணையும் உணர்வில் பொருள்களாயினும் "உறுப்புடையது போ லுணர்வுடையது போன் - மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடு புணர்த்தஞ் - சொல்லா மரபினவற்றொடு செழீஇய - செய்யாமரபிற் றொழிற்பத்தடக்கியும்" என்னும் பொருளியற் சூத்திரவிதியால் உணர்தற்றன்மையை அவற்றிலேற்றினர். இதனுலே அரசனிரவிலே அனுபவித்த துன்பத்தைத் தன்னுயிர்போற் சிறந்த நட்பாளர்க்கும் வெளிப்படுத்திலனென்பதாயிற்று. காலமு மிடமுமாகிய கங்குலிலே படுக்கையிலே வருந்தினமையால் அவை யறிந்தனவாகக் கூறப்பட்டன. 17

தளர்வொடுபெலிந்தும்வையந்தனிக்குடைநிழற்றும்பைம்பொற்
கிளரொளிப்பூணன்வீமன்பாவையைக்கேட்டல்செய்யா
னளிபினவுயிரையுண்மையறத்தினையறவிட்டானு
மிளிவெனவெண்ணிமானம்பூண்டவிரப்பர்கொல்லோ.

இதனுல் - தமயந்தியைத் தருகவென்று இரவாமைக்குக் காரணஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். வையம் – பூமிக்கு, தனி – ஒப்பற்ற, குடை – குடையினுலே, நிழற்றும் – நிழலைத்தருகின்ற, பைம்பொன் – பசும்பொன்னுலாகிய, கிளர்-

---

கிணங்குதல், மோகனம். சந்தாபம், வசீகரணம் என்பவாம். அவத்தைகளாவன, பேசாதொழியாதினவு, பெருமூச்செறிந்து வருந்துதல், வெதும்பியுணவு, வெறுத்தல், அழுதல், பிதற்றல், உயிர்சோர்தலுடன் மயங்குதலாம். இவற்றை முறையே வட்டுலார் சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்ப.

விளங்காநின்ற, ஒளி – ஒளியையுடைய, பூணன் – ஆபரணத்தை யுடைய வரசன், தளர்வொடு – (உள்ளத்) தளர்ச்சியோடு, மெலிந்தும் – (உடம்பு) வாடியும், வீமன் – வீமராசனுடைய, பாவையை – (புதல்வியாகிய) தமயந் தியை, அளியென – தருகவென்று, கேட்டல் செய்யான் – (அவனே) யாசித் திலன், இளிவென – (ஏற்ப) திகழ்ச்சியென்று, எண்ணி – நினைத்து, மானம்- மானமாகிய (பூணை), பூண்டவர் – தரித்தவர், உயிரை – பிராணனையும், உண்மை – பின்னுள்ளதாகிய, அறத்தினை – தருமத்தையும், அற – பற்றற, விட்டாலும் – கைவிட்டாலும், இரப்பர்கொல் – இரப்பாரோ (இரவார்.)

தனிக்குடை நிழற்கணிருந்து விளங்கு மவனரசாட்சியே யுலகியற்க ளெல்லாம் இன்புறுதற்குக் காரணமாதலால் வையந் தனிக்குடை நிழற்று மென்றார், பின்மெலிந் தென்றமையால் தளர்வு மனத்திற் கேற்றப்பட்டது. அளியினையுயிரை யெனப்பாடங் கூறுவாருமுண்டு. அளியும், அறத் தினு ளடங்குமென்க. உயிர் – பஞ்சப்பிராணன்கள். பிராணன்களே யிழந்த பின்னு மழியாது நிற்றல்பற்றி உண்மையற மென்றார். பல துன்பங்களினு மிறத்தற்றுன்பமும், அதனினும் அறத்தை யழித்தற்றுன்பமும் அதனினும் இரப்புத் துன்பமுங் கொடியனவென்று கூறியதாயிற்று. "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் – கிரவினிளிவந்ததில்" என்பதனாலும் இரத்தல் இழி வென்பதறிக. மானம் பூண்டவரிரவாரென்னும் பொதுப்பொருளால் வீம னைத் தமயந்தியை யிரவாமை சாதிக்கப்படுதலால் வேற்றுப் பொருள்வைப் பணி. வையத்தை நிழலேச் செய்கின்ற என்று உரைத்தலு மொன்று. குடை—குடைந்த வடிவாகத் தோன்றுவது. அறம் – (பெரியோர்களால் இதுசெய்க; இது தவிர்க என) வரையறுக்கப்பட்டது; பாவத்தை யறுப் பது எனக் காரணங் கொள்க. இழிவு என்றது எதுகை நோக்கி இளிவெ னத் திரிந்து நின்றது. 18

நிறங்கிளர்வயிரத்தோளானெட்டுயிர்ப்பெறியுந்தோறும்
பிறங்குதல்சிறிதுமின்றிவேறொன்றன்மறைக்கும்பெட்பான்
மறங்கிளர்வேற்கண்மாதினுருவெளிவயத்தனாகிக்
கறங்கிநெஞ்சுழலவன்னட்குரைப்பதுகரக்கமாட்டான்.

இதனுற் காமநோயை மறக்குமாறும், அது உன்மத்தத்தாலே மறைபடாமையுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். நிறம் – காந்தியினாலே, கிளர் – விளங்காநின்ற, வயிரம் – வச்சி ராயுதம்போலும், தோளான் – தோள்களையுடைய அரசனவன், நெட் டுயிர்ப்பு – பெருமூச்சை, எறியுந்தோறும் – விடும்போதெல்லாம், பிறங்கு தல் – (அவற்றின்) காரணமாகிய காமம் வெளிப்படுதல், சிறிதும் – சிறிதா யினும், இன்றி – இல்லாமல், வேறொன்றால் – வேறொரு காரணத்தால், மறைக்கும் – (பிறருக்கு அதனை) மறைப்பான், மறம் – கொலைத்தொழில், கிளர் – விளங்காநின்ற, வேல் – வேல்போலும், கண் – கண்களையுடைய, மா தின் – தமயந்தியினது, உருவெளி – (பிராந்தியால்) வெளியிலே தோன்று

கிறவருவத்திற்கு, வயத்தனாகி-வசப்பட்டவனாகி, கறங்கின்-காற்றடிபோல, நெஞ்சு-மனமானது, உழல-சுழல, அன்னாட்கு-அப்பொய்யாகத் தோன்றுகிற தமயந்திக்கு, பெட்பால்-ஆசையால், உரைப்பது-சொல்வதை மாத்திரம், காக்கமாட்டான்-மறைக்கமாட்டான். எ-று.

நெட்டுயிர்ப் பென்னது நெட்டுயிர்ப்பெறியுந்தோறு மென்றதனால் அருகிலுள்ள மந்திரி முதலியோர்க்கு ஒருகாற் கொன்றாக வேறு வேறு காரணந்தோன்ற அபிநயித்து அவற்றின் காரணமாகிய காமத்தை மறைப்பானென்க. தோறும்-மிகுதிப்பொருட்டில் வந்தது. கறங்கின்-இன் உவமவுருபிடைச்சொல். சொல்வதை மாத்திரம் மறைக்கமாட்டானெனினு மென்க. அவளுக்குச் சொல்வதாவது அவளழகின் சிறப்பையும் அது பற்றித் தனக்குண்டான விருப்பத்தையும் அவ்விருப்பங் காரணமாகத் தான்படும் வருத்தத்தையும், அவ்வருத்தத்தை யொழித்தற்கு அவளிரக்கஞ் செய்யவேண்டுதலையுஞ் சொல்லுதலாம். காமங் காரணமாக உண்டாகும் பெருமூச்சுகளே வேறு காரணங்களாலே மறைத்தமையினாலே வஞ்சனவிற்சியணி. 19

பொறிவழியுள்ளம்போக்காப்புரவலன்காமநோயை
மறைசெயமறையாதாகமம்மரிணுணுட்கொள்ளா
வறைகழலவனிவேந்தர்நெருங்குபேரவையினீங்கி
நறைகமழ்சோலைசெல்வானுளத்தினியத்தல்செய்தான்.

இதுமுதலிவற்றால் தன் விருப்பங் கைகூடுதற்கு உதவியாகுந் தெய்வவன்னத்தைக் காணுதற்குக் காரணமாகிய பொழில் விளையாட்டுச் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொறி-ஐம்பொறிகளது, வழி-வழியிலே, உள்ளம்-மனத்தை, போக்கா-செலுத்தாத, புரவலன்-அரசனாகவன், காமநோயை-காமவியாதியை, மறைசெய-(வேறு காரணங்களால்) மறைக்க, மம்மரின்-மயக்கத்தினாலே, மறையாதாக-மறையாமல் வெளிப்பட, நாண்-நாணத்தை, உட்கொள்ளா-உள்ளேகொண்டு, அறை-ஒலிக்கின்ற, கழல்-வீரக்கழலையுடைய, அவனி-பூமியிலுள்ள, வேந்தர்-அரசர்களானவர்கள், நெருங்கு-நெருங்கப்பெற்றிருக்கின்ற, பேரவையின்-பெரிய சபையினின்றும் நீங்கி, நறை-தேனையது, கமழ்-மணக்கப்பெற்ற, சோலை-(தனது) சிங்காரவனத்திற்கு, செல்வான்-போகும்படியாக, உளத்தினில்-மனத்தின்கண், நயத்தல் செய்தான்-(அவன்) விரும்பினான். எ-று.

பொறிகளாவன:—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னுமைந்தாம். இவற்றை முறையே துவக்கு, சிங்குவை, சட்சு, ஆக்கிராணம், சுரோத்திரம் என்பர் வடநூலார். இவற்றின் வழியுள்ளம் போகலாவது-பரிசம், இரசம், உருவம், கந்தம் சத்தம் என்னும் விடயங்களே நுகர்வான் சேறல். புரவலன்-புரத்தலில் வல்லவன்- கழல்-ஆகுபெயர். அவனி-

காக்கப்படுவது. அவனம்—காத்தல். செல்வான் – வினையெச்சம். பொறி வழியுள்ளம் போக்காமையாவது மனத்தை அது விரும்பியவாறு பொறிகளிலே செலுத்தாது ஒயுமாறு நிறுத்தலாம். முன்பாட்டிலே வேறொன்றன் மறைக்கு மென்றதனாலே காமநோயை மறைக்கு மாறும், உரைப்பது காக்கமாட்டா னென்றதனாலே அது வெளிப்படுமாறும் வகுத்துச் சொல்லப்பட்டமையால், இப்பாட்டிலே மறைசெய மறையாதாக வெனத் தொகுத்துக் கூறினர். அறைகழலவனிவேந்தர் நெருங்குபோரவை யாதலின் அதனகத்தே தனது காமநோய் வெளிப்படுதல் தன்னிறைமைக் குணங்களுக் கிழுக்காமென்று நாணினு னென்க. அந்நாணம் பிறர்க்கு வெளிப்படாது உள்ளே தானே யடக்கப்பட்ட தென்பதுதோன்ற நாணி என்னுது நாணுட் கொள்ளா வென்றார், அந்நாணத்தால் அச்சபையினீங்கித் தனித்திருக்க வேண்டிச் சிங்காரவனத்துக்குச் செல்ல விரும்பினு னென்க. 20

கொட்புறவுலவுந்தோறுங்குரத்தடைதுகளின்குப்பை
நுட்பமாரணுக்களென்னுநுவலருமனத்தின்கூட்டங்
கட்புலன்கதுவல்செல்லாக்கடுப்பினைக்கற்பான்காலே
வெட்புறப்பிடித்தல்போலப்பிறக்குமாக்கொணர்மினென்றான்

இதனுள் * இராசபுரவிகொணர்கவென்றமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். கொட்புற – சுழற்சிபொருந்த, உலவுந்தோறும் – சஞ்சரிக்குந்தோறும், குரத்த - குளம்புகளினின்றும், அடை - (கால்களை) யடைகின்ற, துகளின் - புழுதியினது, குப்பை – கூட்டமான்து, கட்புலன்கண் - கண்ணறிவிற்கு, கதுவல்செல்லா – பற்றுதல்கூடாத, கடுப்பினை – வேகத்தை, கற்பான் - கற்கும்பொருட்டு, காலை - கால்களை, வெட்புற - ஆசைமிக, பிடித்தல் – பிடித்தலையுடைய, நுட்பமார் – நுண்மைபொருந்திய, அணுக்களென்னும் - அணுக்களென்கிற, நுவலரும் - (எண்ணிச்) சொல்லக்கூடாத, மனத்தின் - மனங்களது, கூட்டம் – கூட்டத்தை, போல - ஒத்துத்தோன்றுகிற, பிறங்கு - விளங்குகின்ற, மா - குதிரையை, கொணர்மின் - கொண்டுவாருங்கள், என்றான் - என்றுசொன்னான் (அரசன்) எ-று.

கொட்புறவுலவல் - கொள்ளிவட்டம் போன்று மண்டலித்துச் செல்லுதல். "இருவகைச்சாரியு மெதிர்ந்துவட்டமாய் - வருவழிஞெகிழி போன் மறுகெலாமொரு – நாகதமேனிலைநின்ற தோற்றமொத்தொருவற நடத்திலு ரொருகணத்தினே" என்பதிற் காண்க. நியாயநூலார் மதம்

* இராசபுரவியாவது - மங்கையர் மனம்போல மிக்க மனத்ததாய், வாழைமடலைப்போலக் காதுகளை யுடைத்தாய், நான்கு கால்களும் பிடரும் முகமும் முதுகும் முற்பக்கமும் வெண்ணிறமுடைத்தாய், ஏண்பத் திருவிரலுயர்ந்ததா யுள்ளதாம் இதனை "மாதர்தம்மனமென மிக்க மனத்தது" எனவரூஉம் சூத்திரத்தானறிக.

பற்றி மனத்தை அணுவென்றார். "இன்பமுதலிய பண்புறத்தருஉங், கருவியாம்பொறி மனமஃதுயிர்தோ, றின்றியமையாது. வேண்டலிற்பலவா, யணுவாய் நிற்குமென்மனார்புலவர்" என்பதனாலறிக. போலுத்தல் - துகளின்செயல். பிறங்குதல் - குதிரைச்செயல் ஆரியனைத்தொழுது கற்க வேண்டுதல் மாணாக்கரது கடனுதலாலே கற்பான் காலைப் பெட்புறப் பிடித்தலென்றார். அத்துகளின் கூட்டத்தை அப்படிப்பட்ட மனக்கூட்டமாகக் குறித்தலாலே பொருட்டற்குறிப்பணி. 21

பன்னகஞ்சுமந்தவைப்போர்தோளினிற்பரிக்குமன்னர்
மன்னனைப்பரிப்பல்யானேவருகதிரவிதன்னை
யென்னீர்தாங்குமாறென்றேழ்பரியினைநக்கென்ன
மின்னெளிவிரிக்கும்வெண்பற்கூந்தன்மாமேற்கொண்டானே.

இதனால் அக்குதிரைமேலேறினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். பன்னகம் – ஆதிசேடனாலே, சுமந்த - (ஆயிரந்தலைகளாலே) சுமக்கப்படுகின்ற, வைப்பு – பூமியை, ஓர்தோளினில் - (தனது) ஒரு தோளினாலே, பரிக்கும் – தாங்குகின்ற, மன்னர்மன்னனை - அரசர்க்கரசனை, யானை - நான் தனியாக, பரிப்பல் - சுமக்கவல்லேன், வரு - வருகின்ற, கதிர் - கிரணங்களையுடைய, இரவிதன்னை - சூரியனை, நீர் - (பலவாகிய) நீங்கள், தாங்குமாறு - தாங்குஞ்செய்கை, என்னை - எத்தன்மைத்து, என்று - என்றுபழித்து, ஏழ்பரியினை – (அச்சூரியனது தேரினுடைய ஏழுகுதிரைகளையும் (பார்த்து), நக்கென்ன - சிரித்தல்போல, வெண்பல் - வெள்ளைப்பற்களது, மின் - விளங்காநின்ற, ஒளி - ஒளியை, விரிக்கும் – பரப்புகின்ற, கூந்தல் – புறமயிரையுடைய, மா - குதிரையின்மேல், மேற்கொண்டான் – (அரசன்) ஏறினன். எ-று.

பன்னகம்—பத்—பாதம—, ந—இன்மை, கம்—சஞ்சரித்தல் பாதத்தினூற் சஞ்சரித்த லில்லாதது. இது சாதிபற்றிய பெயர். வைப்பு – ஆகுபெயர். பரிப்பல்—அல்லீற்றுத் தன்மை யொருமை வினைமுற்று. மன்னர் - பெருமையையுடையவர். மன் – பெருமை. பன்னகஞ்சுமந்த வென்றவளவிலே ஆயிரமுடிகளாற் சுமக்கப்படுதல் விளங்குதலால் அப்படிப்பட்ட பூமிபாரத்தை ஒருதோளாற் சுமக்கு மரசனை யான் தனியே சுமக்கின்றே னென்று தனது மிக்க வலிமையைக்காட்டி, அத்தகைமையில்லாத சூரியனை நீங்களேழாகக்கூடிச் சுமக்குமாறென்னென்று அச்சூரியன் குதிரைகளின் வலிமைக் குறைவைச் சொல்லுதற் பொருண்மைதோன்ற அவமதித்துச் சிரித்தல்கொள்க. அரசன் ஓர் தோளிற் பரித்தலாவது - ஒரு தோள்வலியைக்கொண்டு பகைவரை வென்று காப்பாற்றுதலாம். பரித்தல் – சுமத்தலுக்குங் காத்தலுக்குஞ் சிலேடை. "பரிபரி சுமத்தல் வேகம் பாதகாத்திடல்" இதனாலறிக. சூரியனது தேர்க்குதிரைகள் ஏழென்னுந் தொகையினவென்க. ஏழெனப் பெயர்பெற்ற குதிரையொன்றே யென்பாரும் ஏழ்குதிரைகளுள் அவற்றுள் ஏழெனப் பெயர்பெற்ற தொன்றென்பாரும் மறுக்

கப்பட்டனர். நக்கனென்பது ஈறுகெட்டது. குதிரையின் பல்லொளிவிரித்தலே அப்படிச் சிரித்தலாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாகும். 22

கொய்யுளைப்பரியிற்செல்லுங்குரிசில்வாண்முகத்திற்செவ்விச்
செய்யபங்கயமென்றெண்ணித்தெரிவையர்முகத்துலாய
வையரிபர்ந்தமைக்கணினியினந்தொடர்ந்துவீழ
மையலங்களிற்றுவேந்தர்மலரடிபரவச்சென்றான்.

இதனுல் வனத்திற்குச் செல்லுதற் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொய் – கொய்யப்பட்ட, உளை – கழுத்துமயிரையுடைய, பரியில் – குதிரையில், செல்லும் – போகாகின்ற, குரிசில் – அரசனது, வாள் – காந்திபொருந்திய, முகத்தில் – வதனத்தில், செவ்வி – பருவமுள்ள, செய்ய பங்கயமென்று – செந்தாமரைப்பூவென்று, எண்ணி – (அதனை) நினைத்து, தெரிவையர் – மங்கையருடைய, முகத்து – முகங்களிலே, உலாய – உலாவுகின்ற, ஐயரி – பஞ்சவரிகள், பரந்த – பரவப்பெற்ற, மை – அஞ்சனத்தையுடைய, கண் – கண்களாகிய, அளி – வண்டுகளது, இனம் – கூட்டமானது, தொடர்ந்து – சென்று, வீழ – வீழாநிற்கவும், மையலங்களிற்று – மதயானைபோலும், வேந்தர் – அரசர்களானவர்கள், மலர் – தாமரை மலர்போலும், அடி – பாதங்களை, பரவ – துதிசெய்யாநிற்கவும், சென்றான் – அரசன் போயினன். எ-று.

குரிசில் – பெருமையிற் சிறந்தவன். பிடரியின் மயிர்கள் ஒன்றற்கொன் றளவொத்திருப்பக் கத்தரிக்கப் படுதலாற் கொய்யுளையென்றார். பங்கயம் – பங்கம்—சேற்றில்; யம்—தோன்றுவது; தாமரை. தெரிவையர்-தெரியப்பட்ட ஆபரணத்தை யணிந்தவர். நால்வகைச் சேனைகளுள் யானைச் சேனை சிறத்தல் பற்றிக் "களிற்றுவேந்தர்" எனவிதந்தார். அது "தானை யானை குதிரையென்ற" புறத்திணையியற் சூத்திரத்தானு முணரப்படும். தெரிவையர் – உலாக்காணவந்த அந்தகரத்து மகளிரென்க. நாணுக்கொண்டு வேந்தர் நெருங்குபோலையினீங்கித் தனித்திருக்க வனத்திற்குச் செல்வோனுடு வேந்தர் உடன் செல்லுதற்கு இயையுமோவெனின் மன்னர் மன்னனுதலின் வழிவிடச் சென்றாரென்க. அல்லது நளனுக்கு உயிர்போலச் சிறந்த நட்பரசரென்று கொள்க. கண்ணளியினமென்னும் உருவகத்தை அங்கமாகக்கொண்டு "செய்ய பங்கயமென் றெண்ணி" யென்னும் மயக்கவணி வந்தது. 23

சுழிகொள்வாம்பரியிழிந்துதுன்னலர்மெலிதேய்க்குங்
கழல்களிற்கழல்கள்சேர்த்தகாட்சிமுன்வெருவித்தோற்ற
தழனிறத்தளிருஞ்செய்யதாமரைமலருமல்கி
விழைவுறுவனமென்றெண்ணிவிசித்தபொற்கவசம்போன்ற.

இதனுல் வனஞ்சேர்ந்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். சுழி – சுழியை, கொள் – கொண்ட, வாம் – தாவாகின்ற, பரிஞ்ஞிரையிலிருந்து, இழிந்த – இறங்கி, தன்னலர் – பகைவரது, மௌலி – மகுடத்தை, தேய்க்கும் – தேய்கின்ற, கழல்களில் – அடிகளிலே, சேர்த்த – தொடுக்கப்பட்ட, கழல்கள் – செருப்புகளானவை, காட்சி – காண்கைக்கு, முன் – முன்னே, வெருவி – அஞ்சி, தோற்ற – தோற்றுப்போன, தழல் – தீயினது, நிறம் – நிறத்தையுடைய, தளிரும் – தளிர்களும், செய்யதாமரை மலரும் – செந்தாமரை மலர்களும், மல்கி – பெருக்கமடைந்து, விழைவுறு – (அவற்றிலே தமக்கரணமாக) விரும்பப்பட்ட, வனமென்று – பொழிலென்றும் நீரென்றும், எண்ணி – ஆலோசித்து, விசித்த – (அவ்வடிகளாற்) போர்த்துக் கொள்ளப்பட்ட, பொன் – பொன்மயமாகிய, கவசம் – கவசங்களே, போன்ற – ஒத்திருந்தன எ-று.

சுழி – கழுத்திலுள்ள தேவமணி முதலாயவை. தோற்றவர் வனத்தையடைவராதலால் அரசனடிகளுக்குத் தோற்ற களிர்களுக்குந்தாமரை மலர்களுக்கும் வனவாசங் கூறப்பட்டது. தழனிறத்தளிரென்றதனுல் மாந்தளிர் அசோகந்தளிர்கொள்க. அவை நிறமும் மென்மையும்பற்றி யுவமமாயின. தோற்றெளித்தாரோடு பொருதற்குச் செல்லல் அறனிலேப்போரன்றே யெனின், அவர்தோற்ற நிலையினின்று மீண்டும் பெருக்க மடைந்திருப்பாயிற்பொருதல் அறனிலேப்போரேயாம். அவற்றிற்குப் பெருக்கமாவது – நிலவளத்தாலும் நீர்வளத்தாலுஞ் செழுமையு மொளியுங் கொண்டிருத்தலாம். வனஞ்சோலையும் நீரும்; "வனமே நீர் மிகுதி காடு வளர் சோலே" என்பதனுலறிக. அக்கழல்களே அப்படிப்பட்ட கவசங்களாகக் குறித்தலே பொருட்டற் குறிப்பனி. 24

வயிரியர்பாடற்றீந்தேன்செவிப்புலத்தினிதுமாந்திக்
கயிரவமனையவாயார்கவரிகாலசைப்பக்காமப்
பயிரெனப்படருமாதர்வெள்ளடைபாகுநல்கச்
செயிரறுவனங்காப்பாளர்செறிவளங்காட்டக்கண்டான்.

இது முதலியவற்றுல் வனங் காண்கின்றமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். வயிரியர் – பாடகரது, பாடல் – பாடலாகிய, தீந்தேன் – மதுரத்தேனை, செவிப்புலத்து – செவியறிவாகிய (வாயி) னுலே, இனிது-இனிதாக, மாந்தி – குடித்து, கயிரவமனைய – செவ்வல்லி மலர்போலும், வாயார் – வாயையுடைய மாதர்கள், கவரி – சாமரத்தினுலே, கால் – வாயுவை, அசைப்ப – எழுப்பவும், காமப்பயிரென – மன்மதனதுபயிர்போல, படரும்-உடன் செல்கின்ற, மாதர் – மாதரானவர், வெள்ளடை – வெற்றிலைச்சுருளையும், பாகும் – பாக்குப் பிளவையும், நல்க – கொடுக்கவும், செயிரறு – குற்றமற்ற, வனம் – வனத்தை, காப்பாளர் – காப்பவர், செறி – நெருங்கிய, வளம்-

(சோலை) வளத்தை, காட்ட – காண்பிக்க, கண்டான் – (அரசன்) பார்த்தான் எ-று.

பாடல்களாவன:—ஆற்றுவரி, கானல்வரி, சார்த்துவரி, இளர் வரி, எடுத்துக்கோள்வரி, உள்வரி, புன்புறவரி, திணைநிலவரி, முரிவரி, நிலைவரி, காண்வரி, கண்கூடுவரி, தேர்ச்சிவரி முதலாயின. வரியாவது:—அவரவர் பிறந்த நிலத்தன்மையும், தொழிற்றன்மையுந் தோன்றப் பாடி நடித்தல் என்ப.

காமப்பயிரில் நிலைமொழி ஈறு கெட்டது. ஆசிவகப்பள்ளியிற்போல. அது காளையர்க்கு இன்பப்பயன் விளைவித்ததற்குக் காமனுல் வளர்க்கப் பட்ட பயிரென்க. வனபாலகரைக்கொண்டே வனச்சிறப்புக்களை முறையிற் பார்க்க வேண்டுதலாலே காட்டக் கண்டானென்றார். 25

கோங்கிளமுலைகடாங்கிக்கொடியிடைநடுங்கக்கூவு
மாங்குயிற்கிளவிதன்னுல்வருகெனமுகமன்கூறித்
தேங்கமழ்வனமான்புன்னைப்பூம்பொரிசிதறிச்செவ்வி
தாங்குமென்றளிர்க்கைதன்னுற்கனிதரத்தகவிற்கண்டான்.

இ-ள். தேம் – பரிமளமானது, கமழ் – (தன்கண்) மணக்கின்ற, வனமான் – அவ்வனமாகிய மங்கையானவள், கோங்கு – கோங்கரும்புகளாகிய, இளமுலைகள் – இளமைபொருந்திய முலைகளை, தாங்கி – சுமந்து, கொடி-பூங்கொடியாகிய, இடை – இடையானது, நடுங்க – அசைய, கூவும் – கூவுகின்ற, மா – மாமரத்தில் இருக்கின்ற, குயில் – கோகிலத்தினது, கிளவிதன்னுல் – இசையினுலே, வருகென – (அரசனே) வாவென்று, முகமன் – இன்சொல்லே, கூறி – சொல்லி, புன்னை – புன்னையினுடைய, பூ – மலர்களாகிய, பொரி – பொரிகளை, சிதறி – இறைத்து, செவ்வி – அழகை, தாங்கு – தாங்கிய, மென்றளிர் – மெல்லியதளிராகிய, கைதன்னுல் – கையினுலே, கனி-பழத்தை, தர – (தனக்குக்) கொடுக்க, தகவின் – தகுதியாக, கண்டான் – (அரசன்) பார்த்தான் எ-று.

தன்வரவைக் கண்டவளவிலே முலைகளின் பாரத்தைச் சுமந்து இடையசையாநிற்க அன்பிற்கடையாளமான நல்வார்த்தை சொல்லி மங்களத்தின் பொருட்டுப் பொரியிறைத்துக் காணிக்கையாகக் கனிகொடுத்துக் காண்கிறவொரு சுமங்கலிபோல, வனமானது கோங்கரும்புகளைத் தாங்கிக் கொடியசையா நிற்பக் குயிற்சொற்களைக் காட்டிப் புன்னைப்பூக்களை யிறைத்துத் தளிரிடைத்தொங்குகிற கனியைத் தருகின்றது போலத்தோன்ற, அரசன் காணுதற்குரிய தகுதியின்படியே கண்டானென்க. வன முதலியவற்றில் மான் முதலியவற்றின் அபேதத்தை யாரோபித்தலாலே உருவகவணி. 26

அரும்பிளநகையிற்றேன்றவழிகருவெயர்விற்றேன்றச்
சுரும்பிமிர்முல்லைவீசுந்தென்றலாற்றுவளர்தோற்றம்

விரும்பினர்ப்புணர்ந்தமாதர்மெய்யெழில்காட்டக்கண்டு
பொருந்தலர்வணங்கும்வேலாற்கச்சமுமகிழும்பூத்த.

இது முதற்பத்துப்பாட்டுக்களால் வனத்தின் முல்லையாதி களின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். அரும்பு – அரும்புகளி (ஞளி), இளநகையின் – சிறுநகை போல, தோன்ற - விளங்கவும், அழிநறு - சிதறிய தேன் (துளிகள்), வெயர் வின் – வெயர்வுபோல, தோன்ற – தோன்றவும், வீசும்-எறிகின்ற, தென்ற லால் – தென்காற்றால், அவளும் – அசைகின்ற, தோற்றம் – தோற்றத்தை யுடைய, சுரும்பு – வீண்டுகள், இமிர் – ஒலிக்கப்பெற்ற, முல்லை - முல்லைக் கொடியானது, விரும்பினர் - விரும்பிய ஆடவரை, புணர்ந்த – கூடிய, மாதர் – மாதருடைய, மெய் - வடிவங்களது, எழில் – அழகை, காட்ட-காண் பிக்க, கண்டு – (அதனைப்) பார்த்து, பொருந்தலர் – பகைவரானவர், வணங் கும் – தொழப்பெறுகின்ற, வேலாற்கு – வேலையுடைய அரசன்கண், அச்ச மும் – அஞ்சுதலும், மகிழும் - மகிழ்தலும், பூத்த – உண்டாயின எ-று.

அரும்பு அதனொளியை யுணர்த்தலால் ஆகுபெயர். புணர்ந்த மங்கை யர்க்கு உடனே பிறரைக் காணும்பொழுது தமது புணர்ச்சி நிகழ்ந்தமை குறிகளாலே வெளிப்படுமென்னும் நாணத்தாற் புன்சிரிப்பும் புணர்ச்சி வருத்தத்தால் வெயர்வும் உடம்பு அவளுதலும் வண்டிசைபோன்று சொல் லிசை பிறத்தலு முளவாமென்க. தனது காமத்தை யெழுப்புதலால் அச்ச மும் தன்காதலி போலுதலால் மகிழும் அரசன் அடைந்தனன். அச்சமு மகிழும் அகத்தியும் வகுளமும் பூத்தன வென்னும் பொருளுங் குறிக்கப்படு கின்றது. முல்லைக்கொடி தன் செய்கையினாலே புணர்ந்தமகளிர் வடிவத் தழகைக் காட்டுதலாலே நற்பொருட் காட்சியணியாகும். இதற்கு இளநகை யிற் றோன்றுகை முதலிய உவமையங்கம். 27

விரும்பியகணவர்க்கண்டார்மெய்புளகுற்றவென்ன
வரும்புகண்டகத்தவாகுமாதரோபருவத்தன்றித்
தரும்புகையிடையிற்றோன்றுங்கனிதமயந்திகொங்கைக்
குரும்பையைநிகர்ப்பப்பொன்னங்குடந்தவமுயல்வபோன்ற.

இ-ள். விரும்பிய – (தம்மால்) விரும்பப்பட்ட, கணவர் – நாயகரை, கண்டார் – கண்டமகளிருடைய, புளகுற்ற-மயிர்க்குச்சுற்ற, மெய்யென்ன- உடம்புகள்போல, அரும்பு – அரும்பிய. கண்டகத்த ஆகும் – முள்ளுகளை யுடையனவாகிய, மாதரோ – மாதரோமரங்களில், பருவத்தன்றி – பழுத்தற் குரிய காலமல்லாத காலத்திலே, தரும் – (பழுக்கத்) தரப்படுகின்ற, புகை புகையினது, இடை - நடுவிலே, தோன்றும் – தோன்றுகின்ற, கனி- கனிகளானவை, தமயந்தி – தமயந்தியினுடைய, கொங்கை – முலைகளாகிய, குரும்பையை – குரும்பைகளை, நிகர்ப்ப – ஒப்படைய, தவம் – தவத்தை, முயல்வ-செய்கின்றனவாகிய, பொன்னங்குடம் – பொற் குடங்களை, போ ன்ற - ஒத்துத்தோன்றின (அரசனுக்கு) எ-று.

கண்டகம் – முள். வாகு – அழகெனினுமாம். விரும்பியகணவரைக் கண்ட மகளிர் மெய்யிற் புளகரும்பல் உவகையைப்பற்றி யுண்டாவது. மாதுலைக் குரித்தல்லாத வேறுபருவத்திலே அதிற்பயனுண்டாக்கவேண்டி ஆட்டுத்தோலூற நீர்ப்பாய்ச்சி அதன் மயிர்ப்புகை யூட்டப்படுமென்க, மாதுளங்கனிகள் தமயந்தி மூலைகளின்சாரூப்பியத்தைப்பெறுதற்குப் புகைத் தீயிடைத் தலைகீழாக நின்று தவஞ்செய்யும் பொற்குடம்போன் றிருந்தன வென்க. பெரும்பயன் வேண்டினோர் உக்கிரதவஞ் செய்வரென்னு முறை பற்றி யிங்ஙனுரைத்தார். அம்மாதுளங்கனிகளே அப்படிப்பட்ட பொற் குடங்களாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. 28

தண்ணருக்கொழிக்குஞ்செய்யசம்பகநனைகள்வேனி
லண்ணல்பாசறைவிளக்கம்போன் றனவவைமேல்வண்டு
நண்ணியதூமம்போன் றுகசையுநர்ச்சலபங்கொன்றீட்
டெண்ணரும்பழிகள்போன் றுந்தனித்தனியிருந்தமாதோ.

இ-ள். தண் – குளிர்ச்சிபொருந்திய, நரு – தேனை, கொழிக்கும் – சொரிகின்ற, செய்ய – சிவப்பாகிய, சண்பகம் – சம்பகத்தினுடைய, நனைகள்-அரும்புகளானவை, வேனில் – வசந்தகாலத்திற்குரிய, அண்ணல் – தலைவனது, பாசறை – (சோலையாகிய) படைவீட்டினுள்ளே வைக்கப்பட்ட, விளக்கம் – தீபங்களே, போன்றன – ஒத்திருந்தன, அவைமேல் – அவ்வரும்புகளின்மேலே, வண்டு – (விழுகின்ற) வண்டுகளானவை, நண்ணிய – பொருந்திய, தூமம் – புகையை, போன்றும் – ஒத்தும், நசையுநர் – காமிகளாகிய, சலபம் – விட்டில்களே, கொன்று – கொலைசெய்து, ஈட்டு – (அவ்விளக்குகளாலே) சம்பாதிக்கப்பட்ட, எண்ணரு – எண்ணுதற்கரிய, பழிகள் – பாவங்களே, போன்றும் – ஒத்தும், தனித்தனி – வேறுவேறாக, இருந்த – இருந்தன. (அரசனுக்கு) எ-று.

சண்பகமும் வேங்கையும் வண்டுணமலர்மரம் என விருக்கச் சண்பகத்தின்மேல் வண்டு சேர்ந்ததாகச் சொல்லிய தென்னையெனின், அதற்கு வண்டுசேர்ந்து தேனையுண்டா லிறந்துபடுமென்பதே கருத்தாகலின் மற்றை மலர்போல அதன்கண்ணுஞ் சேருமென்க. மன்மதனுக்குப் படைவீடு சோலையே யாதலின் வேனிலண்ணல் பாசறையென்றார். * 'தொடையி

---

* "ஆலக் கரும்புசினை யைங்கணைபூ நாண்சுரும்பு
மாலக் கிளிபுரவி மாருதந்தேர் – லேலை
கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங்
கொடிமகரந் திங்கள் குடை.

தொடையிலஞ்சி மஞ்சளிளஞ் சோலைபடை வீடு
படைமங் கையர் கமுகம் பாலை – யிடகவரி
காளாஞ்சி மல்லிகையாங் காரிகையீர் மாரனுக்கு
வாளாமோ லப்பூவு மால்.

லஞ்சி மஞ்சளிளஞ்சோலை படைவீடு'' என்பதனுலறிக. ''நசையுநர் தயர வேளீட்டெண்ணரும் பகழிபோன்று'' மெனப்பாடமுமுண்டு. அதமுத னூலோடு மாறுபட்டும், வண்டுகள் அம்புகள் போன்று அவற்றின்மே லிருத்தற் கையின்றி நிற்றலுங்காண்க. பழியைக் கரிதென்பது செய்யுள்வழக்கு. சம்பக வரும்புகளே அவ்விளக்குகளாகவும், அவ்வரும்புகளின்மேல் மொய்த்த வண்டுகளே அவ் விளக்குகளின்மேற்றங்கிய புகைகளாகவும், அப்படிப்பட்ட பழிகளாகவும் குறித்தலாலே தற்குறிப்பணியாகும். பழியாகக் குறித்தற்கு நசையுநர்ச்சலபமென்னும் உருவகம் அங்கம். 29

பூங்கழைக்குமரனேவாற்புலம்புகொண்டினைவார்துன்ப
மாங்குயிலுரைப்பமூசும்வரியளிமுரல்வவாசத்
தேங்கமழ்பொழில்வாய்விட்டுக்கேட்பதுசிவணக்கூறு
மாங்கதற்கன்றிலோதையதிசயித்தரற்றல்போன்ற.

இ-ள். பூ – அழகிய, கழை – கருப்புவில்லையுடைய, குமரன் – மன்மதனது, ஏவல் – அம்பினுலே, புலம்பு – துன்பத்தை, கொண்டு – அடைந்து, இனைவார் – இளைக்கின்றவரது, துன்பம் – துன்பத்தை, மா – மாவிலுள்ள, குயில் – குயில்கள், உரைப்ப – சொல்லாநிற்க, வரிமுரல்வ – இசைபாடுவனவாகிய, மூசும் – மொய்க்கின்ற, அளி – வண்டுகளுக்கு, வாசம் – இருப்பிடமாகிய, தேம் – தேனினுல், கமழ் – மணக்கின்ற, பொழில் – சோலையானது, வாய்விட்டு-உங்கொடுத்து, கேட்பதுசிவண-கேட்பதுபோன்றிருக்க, கூறும்-சொல்லப்படுகின்ற, ஆங்கு – அவ்விடத்தே, அதற்கு – அச்செய்திக்கு, அன்றில் - அன்றிற்பறவைகளுடைய, ஒகை - ஒலிகளானவை, அதிசயித்து - ஆச்சரியப்பட்டு, அரற்றல்போன்ற – கூவுதல்போன்றிருந்தன (அரசனுக்கு).

சிவண – உவமவுருபிடைச் சொல். குயிலுரைப்ப வென்றுரேனுங் குயிலினதுகூவுதல் அதனதுரைத்தல்போலத் தோன்றுகிற்ப வென்பது பொருளாகக்கொள்க. இடைவிடாது நிகழும் வண்டொலி இடைவிட்டு நிகழும் உங்கொடுத்தல் போலுதற்கியையுமோ வெனின், அவ்வண்டினது சிற்றொலி குயிலினது பேரொலியில் இடையிடை மறைந்து அங்ஙனந் தோன்றுதலாலியையுமென்க. திட்பமில்லாத கருப்புவில்லையுடைய னம்பால் லருந்துதல் ஆச்சரியத்திற்குக் காரணமாமென்க. அக்குயில்களைச் சொல்வனவாகவுஞ் சோலையைக் கேட்பதாகவும் அன்றில்களி னொலிகளே அவற்றி னதிசயவொலிகளாகவுங் குறித்தலாலே தற்குறிப்பணி. 30

வெண்மதிக்கவிகைவேந்தன்விழாவயர்வனமான்பைந்தாட்
டண்மலர்க்காந்தளங்கைமறித்தளித்தைதவபோன்ற
வொண்மலர்ப்பொதுளுந்தேமாதளிர்விரலசைத்துள்ளுறுங்
கண்ணுகர்வண்டினர்ப்பாற்காமுகர்ச்சினப்பபோன்ற.

இ.ள். வெண்மதி – வெள்ளிய சந்திரனை, கவிகை - குடையாகவுடைய, வேந்தன் – மன்மதனது, விழா – உற்சவத்தை, அயர் – செய்தற்கிடமாகிய,

வண்மான் – வனமாகிய மங்கையை, காந்தள் – காந்தள்களானவை, பைந் தாள் – பசியகாம்பையுடைய, தண்மலர் – தண்ணியமலர்களாகிய, அங்கை- அழகியகைகளாலே, மறித்து – (அச்செய்தியைக் கேளேலென்று) தடுத்து, அளி – கருணையினாலே, ததைவபோன்ற – நிறைகின்றன போன்றன, ஒண்மலர் – ஒள்ளிய மலர்களாலே, பொதுளும் – நிறைந்திருக்கின்ற, தேமா- தேமாமரங்களானவை, தளிர் – தளிராகிய, விரல் – விரலே, அசைத்து- ஆட்டி, உள்ளுறும் – உள்ளொழுகுகின்ற, கள் – தேனை, நுகர் – உண்கின்ற, வண்டின் – வண்டுகளது, ஆர்ப்பால் – ஒலியினாலே, காமுகர் – காமிக்கள், இனப்பபோன்ற – (உங்காரஞ்செய்து) கோபிக்கின்றன போன்றன (அரச னுக்கு) எ-று.

மன்மதனது விழாவாவது ஆடவரு மகளிருஞ் சென்று சோலையின் கண்ணே, பூக்கொய்தும் புனல்விளையாடியுங் காமனின்பத்தை யனுபவித்த லாம். அல்லது மன்மதனுக் கெடுப்பதோர் சிறப்பெனினுமாம். இன்னும் வெண்மதிபோலுங் கவிகையுடைய நளராசனது விழாவெனினு மமையும். மூற்பாட்டிற் குயில்சொல்ல வனத்தாற் கேட்கப்பட்ட செய்தி கொடிதாக லின் அவ்வனத்தை நோக்கி நீயதைக் கேளற்க வெனக் காந்தள் மலர்க்கைக ளாலே விலக்கினவென்க. அளிததைதற்குச் சிலேடையாநீ கருணை கூர்த லென்றும் வண்டுகணிறைதலென்றும் பொருள்கொள்க. இக்காந்தள் விலக் குதலே யிதன் முதனூலிற் சொல்லப்பட்டபடியே மூற்பாட்டிலே யடக்கா மல் வேறு முடிபுசெய்தற்கு ஏது வென்னையெனின், அம்முதனூலு ளில் லாத அன்றிலி னதிசயித்தாற்றலே அதிலே மிகுத்துச் சொல்லியவதனு லினே வேறு முடிபு செய்தார்போலும். இப்பாட்டிலே காந்தளது தோற் றமும் மாவினது தோற்றமுஞ் சொல்லப்பட்டன. காந்தட்செடிகளே அங் ஙனந் தடுப்பனவாகவும் மாமரங்களே அப்படி வெருட்டுவனவாகவுங் குறித்த லாலே தற்குறிப்பணியாகும். 31

பொன்னிதழ்ச்சண்பகத்திற்புரிமுறுக்கவிழத்தூங்கி
யினனருத்துளியினுடமகரந்தமிறைப்பவூதித்
தென்னிடுங்களிகொள்வண்டுசேர்த்தமைகாமவெங்நோய்
தன்னினர்க்கின்னல்காட்டுந்தூமகேதுவினப்போன்ற.

இ-ள். புரி – கட்டினது, முறுக்கு – முறுக்கானது, அவிழ – விரிய, தூங்கி – ஆடி, இன் – இனிதாகிய, நறு – தேனினது, துளியினோடு – துளி யுடனே, மகரந்தம் – மகரந்தப்பொடியை, இறைப்ப – உதிர்க்க, ஊதி – (வா யினால்) ஊதி, தென்னிடும் – இசைபாடுகின்ற, களிகொள் – களிப்பைக் கொண்ட, வண்டு – வண்டுகளானவை, பொன் – பொன்னிறம்பொருந்திய, இதழ் – இதழ்களையுடைய, சண்பகத்தில் – சண்பகப் பூக்களிலே, சேர்த்த மை – சேர்ந்தமையால், (அம்மலர்கள்), காமம் – காமமாகிய, வெந்நோய்- வெப்பநோயை, தன்னினர்க்கு – அடைந்தவர்க்கு, இன்னல் – (பின்வருந்)

துன்பத்தை, காட்டும் – காண்பிக்கின்ற, தூமகேதுவினை – வான்மீனை, போன்ற – ஒத்துத் தோன்றின (அரசனுக்கு) எ-று.

வண்டுகள் சண்பகத்திலே தேனுண்டவளவிலே இறந்துபடு மாதலால் அப்படி ஆடியூதல் மற்றைமலர்களி லென்றுகொள்க. களிப்பிலுலே தம் பகைமை கருதாது சேர்ந்தன வெனினு மமையுமென்பதற்குத் தென்னிடுங் களிகொள் வண்டென்றார். சேர்தல் மாலைபோலொன்றன்பின் லுென்றுக வந்து வீழ்தல். தூமகேது உலகத்தார்க்குப் பெருந்துன்பத்தைச் செய்தல் போல வண்டொழுங்கோடு கூடிய சண்பகமலர் காமிகளுக்குப் பெருந்துன் பத்தைச் செய்தலாலும் வண்டொழுங்கு வால்போலவுஞ் சண்பகமலர் அத னையுடைய மீன்போலவு நிற்றலாலுந் தூமகேதுவினைப் போலுமென்றார். தூமகேது – புகைக்கொடி. அது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என நான்கு வகைப்படும். வால்வெள்ளி யென்பாரு முளர். தூமகேது பின்வரும் பஞ்ச முதலியவற்றிற்கு உற்பாதமாகலாற் பெருந் துன்பத்திற் கேதுவா மென்க. சண்பகமலரோடு சேர்ந்த வண்டொழுங்கை அப்படிப்பட்ட தூம கேதுவாகச் சூறித்தலாலே தற்குறிப்பணி. தூமக்கோட்டு மேற்கோள் வரு மாறு—புறநானூறு – 117 "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந் தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும் வயல நிறையப் புதற்பூ மலர"

சிலப்பதிகாரம்.

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடு
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்ப" 32

குளிர்நறுஞ்சாந்தநாறுங்கூவிளங்கனிமுள்ளேறுண்
டொளிர்வனகணிகைமாதர்வரிமுலைக்குவமைசான்ற
தலையவிழ்பாடலத்தின்கவரிணர்சம்பராரி
யுலைவுறவிருவர்மேலுமுடற்றினப்பகழிபோன்ற.

இ-ள். முள் - முள்ளினுலே, ஏறுண்டு – கிழிக்கப்பட்டு, ஒளிர்வன – விளங்குகின்றவையாகிய, குளிர்-குளிர்ச்சிபொருந்திய, நறுஞ்சாந்தம் - நல்ல சந்தனம்போல, நாறும் - மணக்கின்ற, கூவிளங்கனி – வில்வப்பழங்களான வை, கணிகைமாதர் – பரத்தையருடைய, (சாந்தம்) – சந்தனத்தினுலே, (நாறும்)-மணக்கின்ற, வரி - நகக் குறிகளையுடைய, முலைக்கு – முலைகளுக்கு, உவமை - ஒப்புமையில், சான்ற - சிறந்தன, தலையவிழ் – கட்டவிழ்ந்த, பாட லத்தின் – பாதிரி மரங்களுடைய, கவர் – கவர்தற்குரிய, இணர் – பூங்கொத் துகளானவை, சம்பராரி – மன்மதனனவன், உலைவுற - வருத்தும்படியாக, இருவர்மேலும் – நாயக நாயகி களிருவர்மேலும், உடற்று – கோபித்தற்கு (வைத்திருக்கப்பட்ட), இனப்பகழிபோன்ற – அம்புக்கூட்டம் போன்றன (அரசனுக்கு) எ-று.

சாந்தநாறுதல் மூலக்குங் கூட்டப்பட்டது. குலமங்கையர் மூலகளுக்கு நகக்குறி விசேடித்துச் சொல்லுதல் தகுதியன்றுமாதலிற் கணிகைமாதர் வரிமூலை யென்றார். அன்றியும் அவர் பலரையும் புணர்தலின் நகக்குறி மிக்குத் தோன்றுமென்க. அவ்வில்வக்கனிகளுக்கு அப்படிப்பட்ட கணிகைமாதர் மூலகளே யுவமித்தலால் உவமை யணியாகும். இனப்பகழி யென்றதற்கு அதற்கிடமாகிய அம்பறாத்தூணியென்பதும், இருவரென்றதற்கு விரும்பிய ஆடவரும் மகளிருமென்பதுங் கருத்தாகக் கொள்க. "கவரிதழ்ச்சம்பாரி யூளவுறவிருவர்மேலு முடற்றினப் பகழிபோன்ற" என்பாடமுமுண்டு, இருபிளப்பாகிய விதழ் அதற்கின்மையாலும் இரண்டம்புகளே யொன்றுகச்சேர்த்து இருவர்மேற் செலுத்துதலே கூடாமையாலும் இதன் முதனூன்முடிபிற்கு வேறுபடுதலாலும் பொருந்தாமையுணர்க. அப்பாதிரிப்பூங்கொத்துகளே அவ்வம்பறாத் தூணியாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. வில்வமும் பாதிரியுங் கூறப்பட்டன. சம்பாரி – சம்பரனென்னும் அசுரனைக் கொன்றவன்; மன்மதன். அது சரிதம் கூர்மபுராணத்தும், பாகவதத்துங் காண்க. 33

பாசிலையிடையிற்பூத்தபைந்துணரகத்திதாய
மாசறுநிலவுகாலு * மதியினைவிழுங்குநாளிற்
றேசுறுகலைகள்யாவுந்தின்றுதின்றுமிழுந்துத்திக்
காசுறுசுடிகைச்செங்கட்கருநிறப்பாந்தள்போன்ற.

இ-ள். பாசிலை - பச்சிலைகளேயும், இடையில் - நடுவிலே, பூத்த - மலர்ந்த, பைந்துணர் - குளிர்ச்சிபொருந்திய மலர்களேயுமுடைய, அகத்தி - அகத்திமரங்களானவை; தூய - பரிசுத்தமாகிய, மாசறு - குற்றமற்ற, நிலவு - சந்திரிகையை, காலும் - வீசுகின்ற, மதியினை - சந்திரனை, விழுங்குநாளில் - உட்கொள்ளுகிறநாளிலே தேசுறு - காந்திபொருந்திய, கலைகள்யாவும் – கலைகளேயெல்லாம், தின்றுதின்று – ஒவ்வொரு கலையாகத்தின்று, உமிழும் - உமிழ்ந்துகொண்டிருக்கின்ற, துத்தி - படப்புள்ளிகளேயும், காசுறு - இரத்னம்பொருந்திய, சுடிகை – உச்சியையும், செங்கண் – செய்யகண்களேயும், கருநிறம் – கரியநிறத்தையுமுடைய, பாந்தள்போன்ற - பாம்பாகிய இராகுபோன்றன (அரசனுக்கு) தூறு.

துணர்மலரென்பது "போதவீதுணர்மலர்" இத்தொலதிக. தூயமாசறு நிலவென்னு மடையை அம்மலர்க்குங் கூட்டுக. மதியினை விழுங்குநாள் அபரபக்கத்துப் பதினைந்து நாட்களுமென்க. அவற்றுள்ளே சந்திரனுக்குத் தினம் ஒவ்வொருகலை குறைதலே இராகுவினுலே அங்ஙனந் தின்னப்பட்டுக் குறைதலாகக் கற்பித்து அப்பொருண்மை தோன்றத் தின்றுதின்றென்றார்.

* சந்திரனை இராகு பற்றுதலின் காரணத்தைக் கந்தபுராணத்தில் மாசாத்தாபடலத்திற் பரக்கக் காண்க. கூர்மபுராணம் இராகுவைப் பூமியின் சாயையெனக் கூறுகின்றது சுதசங்கிதையும், சாமவேத உபநிடதமாகிய தரிசனோபநிடதமும் இதனுண்மை வேறென வுரைத்தன.

அன்றியும், சந்திரகிரகண காலமெனினுமாம். தேவராகமாகிய இராகு வென்பது தோன்றற்குக் காசுறுசுடிகைச் செங்கணென்னு மடைகொடுத் தார்போலும் இராகு கரிதென்பது. "இராகுக்கோள் கரும்பாம்பு" என் பதனுலறிக. கருமைக்கும் பசுமைக்கும் மிக்க வேற்றுமை தோன்றுமையிற் பச்சென்ற தழைகளாற் சூழப்பட்டஅகத்தி கரியவிராகுபோலுதலும் அதன் மலர்கள் அவ்விராகுவால் மென்றுமிழப்பட்ட சந்திரகண்டங்கள் போலு தலுங் கொள்க. அவ்வகத்தியை இராகுவாகக் குறித்தலாலே தற்குறிப் பணியாம். 34

கலிவிருத்தம்.

விண்புகுவியன் சினைத்தருக்கண் மேவிய
தண்கனிப்பொறையினுற்றலைவணங்கின
தெண்கடற்கலைபுனைசெல்வமாநிலப்
பெண்கொடிதாடொழும்பெற்றி போன்றவே.

இ-ள். மேவிய - விரும்பப்பட்ட, தண் தண்ணிய, கனி - பழங்களது, பொறையினுல் - பாரத்தினுலே, தலை - தலைகள், வணங்கின - வளைந்தவை யாகிய, விண் - ஆகாயத்தில், புகு - நுழைந்த, வியன் - விசாலமாகிய, சினை - கிளைகளையுடைய, தருக்கள் - மரங்களானவை, தெள் - தெள்ளிய, கடல் - கடலாகிய, கலை - ஆடையை, புனை - உடுத்த, செல்வம் - செல்வத்தையுடைய, மா - பெரிய, நிலப்பெண்கொடி - பூமிதேவியினது, தாள் - அடியை, தொ ழும் - வணங்காகின்ற, பெற்றிபோன்ற - தன்மையுடையன போன்ற (அர சனுக்கு) எ-று.

வியல் என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்தது. கடல்—தோண்டப்பட் டது. பெற்றியன வென்பது இறுதி நிலைகெட்டது. தம்மைப்பெற்று வளர்த்த தாயென்று வணங்குதல்கொள்க. அவ்வணங்கிய மரங்களைப் பூமி தேவியைத் தொழுவனவாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். 35

அளிமுரலணிமலரசோகம்பூத்தன
தெளிவருகாரணப்பெயரினசெவ்வியா
லெளிவருகாமுகர்க்கிரங்கிவேணுறு
ளளிர்மறையழற்கணேதரித்தபோன்றவே.

இ-ள். பூத்தன - மலர்ந்தனவாகிய, அளி - வண்டுகளானவை, முரல் - ஒலிக்கப்பெற்ற, அணி - அழகுபொருந்திய, மலர் - மலர்களையுடைய, அசோ கம் - அசோகமரங்களானவை, தெளிவரு - தெளியவந்த, காரணப்பெயரின் - காரணப்பெயரினது, செவ்வியால் - அழகினுலே, எளி - எளிமையோடு, வரு - (தம்மிடத்திலே) வருகின்ற, காமுகர்க்கு - காமிகளுக்கு, இரங்கி - உள்ளிரங்கி, வேள் - மன்மதனது, அழற்கணே - நெருப்பம்புகளை, நறுந் தளிர் - நல்ல தளிர்களிலே, மறை - மறைத்து, தரித்தபோன்ற - தரித்திருக் கின்றவை போன்றன (அரசனுக்கு) எ-று.

அசோகஞ் சோகமில்லாததாம். சோகமில்லாததாதலால் எம்மையுஞ் சோகமில்லாதவ ராக்குமென்று சரணமடைகின்றோமென்க. தமக்கடைக்கல மாயினோரைக் காவாதுவிடல் மகா பாதகமாகலால் இரங்கின வென்க அந் நெருப்பம்புகளே யஞ்சினோர்க்கு அவற்றை வெளிப்படுத்தாமலிருக்கை காத் தற்கு உபாயமென்பது கருத்து. மலருக்குச் சொல்லப்பட்ட அளிபோல அழற்கணைக்குப் புகை குறிக்கப்படுகின்றது. அசோகமலர் அழல்போற் சிவந்து தோன்றலின் அழற்கணை யென்றார். மறைத்தென்பது மறையென வீறுகெட்டு நின்றது. "வரிப்புனை பந்தோடு பாவைதாங்க" வென்பதில் வரிந்தென்பதுபோல, அசோகமென்னும் பெயர்க்கு வேறு பொருளைக் கற்பித்தலாற் பிரிநிலை கவிற்சியணியாம். இது அங்கம். அவ்வசோகத்தை அங்ஙனந் தரித்தனவாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். இது அங்கி, வேள் - விரும்பப்படுபவன். 36

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மணங்கமழ்முடவெண்டாழைமலரின்வார்நறவமாந்திக்
கணங்கொள்வண்டினமுந்தேனுங்களித்திடைவந்தேற்ற
மணங்கரவசைத்தோனீத்தவரும்பழிசுமந்ததென்ன
நிணங்கமழ்வேலான்கண்டுநெஞ்சுறவிழித்துச்சொல்வான்.

இதுமுதலொன்குபாட்டுக்களால் தாழம்பூவை வெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். நிணம் - (பகைவரது) கொழுப்பானது, கமழ் - நாறுதற்கிடமாகிய, வேலான் - வேலையுடையவன், முடம் - முடமாகிய, தாழை - தாழையினது, மணங்கமழ் - மணக்கின்ற, வெள் - வெண்மைபொருந்திய, மலரின் - பூவின், வார் - ஒழுகாகின்ற, நறவம் - தேனை, மாந்தி - குடித்து, கணம் - கூட்டத்தை, கொள் - கொண்ட, வண்டு - கருவண்டுகளின், இனமும் - சாதிகளும், தேனும் - தேன் வண்டுகளும், களித்து - மகிழ்ந்து, இடை - (அது) நடுவில், வந்த - தங்கிய, தோற்றம் - தோற்றத்தை, கண்டு - பார்த்து, அணங்கரவசைத்தோன் - பரமசிவனால், நீத்த - தள்ளிவிடப்பட்ட, அரும்பழி - நீங்கக்கூடாத பழியை, சுமந்த தென்ன - (இம்மலர்) சுமந்ததென்று, நெஞ்சுற - மனப்புண்டாக, இழித்து - இகழ்ந்து, சொல்வான் - கூறுவான் எ-று.

வார் என்னும் உரிச்சொல் ஒழுகல் என்னும் பொருட்டாய் மிகுதியைக் குறிக்க நின்றது. நறவம் - இதன்கண் அம் சாரியை, அரவு அசைத்தல் - சர்ப்பங்களே ஆபரணமாகத்தரித்தல்; அதன் காரணம் காசிகண்டத்திற் றெரிக. நான்முகன் அன்ன வடிவங்கொண்டு நெருப்பு மலையாய் நின்ற பரமசிவனது திருமுடியை நெடுங்காலந் தேடிக் கண்டிலாது மீள்கையில், அம்முடியினின்றும் வீழ்கின்ற தாழம்பூவைக்கண்டு தான் கண்டாலுகப் பொய்க்கரி கூறுதற்கு உடன்படுதலால், அம்மலர் பரமசிவனுற் கோபித்து

இன்றுமுத லெனக்காகா யென்றிகழ்ந்து தள்ளப்பட்டதென்பது சரிதம். சிறந்தோனுக்குப் பெரியோரால் தள்ளப்படுதலே பழிவிளக்குமென்பது கருத்து. அத்தாழம்பூவை அப்படிச் சுமந்ததாகக் குறித்தலாலே தற்குறிப் பணியாம். 37

நாகிளவரிவண்டுண்டுநறவுகொப்பளிக்குங்கைதாய்
பாகுறுகழைவேளெய்யிற்பறிப்பரிதாயுள்ளாவி
யேகமெய்தளர்த்தோர்நெஞ்சமீர்ந்திடுமுள்ளம்பென்றே
வாகைவின்மதனைச்செற்றோன்வனைந்திடாதிகழ்ந்தவாறே.

இ-ள். நாகிள - இளமைபொருந்திய, வரி (இசைபாடுகின்ற), வண்டு-வண்டுகளானவை, நறவு - தேனை, உண்டு - குடித்து, கொப்பளிக்கும் - உமிழ்தற்கிடமான, கைதாய் - தாழம்பூவே, பாகு - சாறுனது, உறு - பொருந்திய, கழை - கருப்புவில்லினால், வேள் - மன்மதனனவன், எய்யின் - எய்தால், பறிப்பரிதாம் - பிடுங்கப்படாததாகி, உள் - உள்ளிருந்து, ஆவி - உயிரானது, எக - நீங்க, மெய் - உடம்பு, தளர்ந்தோர் - தளர்ந்தவிரகிகளுடைய, நெஞ்சம் - மனத்தை, ஈர்ந்திடும் - அறுக்கின்ற, முள்ளம்பென்றே - முள் அம்பென்று (உன் கொடுமையை நினைத்தே), வாகை - வெற்றிபொருந்திய, வில் - வில்லையுடைய, மதனை - மன்மதனை, செற்றோன் - வென்ற பரமசிவன், வனைந்திடாது - சூடாமல், இகழ்ந்த - (உன்னை) யிகழ்ந்ததற்கு, ஆறு-காரணமாம் எ-று.

நாகிளவென்பன வொருபொருள் குறித்த விருசொற்கள் "ஒருபொருளிருசொற் பிரிவில வரையீர்" என்ற தொல்காப்பிய விதியினடக்குக. தாழம்பூவினுடைய நடுமுட்களும் இருபுடைமுட்களும் எதிரிட்டடுக்கி நிற்றலால் அதனடி நுனிகளில் யாதொன்றைப்பற்றி யிழுக்கினும் அறுக்குமாதலாற் பறிப்பரிதா மென்க. வாகைவின்மகனைச் செற்றோ னென்றமையாலே தன் பகைவனுக்கு உபகாரணமாயிருப்பதே பொறுக்கக் கூடாததாயிருக்குமாயிற் கொல்வதாயுமிருந்தாற் கொல்வானேன் என்றதாயிற்று. கடவுளிகழ்தற்கு ஏதுவாகாத அப்படிப்பட்ட முள்ளம்பாயிருக்கையை ஏதுவாகக் குறித்தலாலே ஏதுத்தற்குறிப்பணியாம். கைதாய் என்னுஞ் சொல் இழிவுப்பொருடோன்றநின்றது. மதன் - அகங்காரத்தை விளைப்பவன். 38

பசியநெட்டிலையதாழைமடலெனுமீர்வாள்பற்றி
வசையறுகாமத்தச்சன்மையலாம்வளியினுரு
மசைவொடுதளர்ந்துகல்வியருந்தழையுகுத்துநிற்கு
நசையுநர்நெஞ்சத்தாருடுவுறப்போழுமாதோ.

இ-ள். பசிய - பசுமைபொருந்திய, நெடு - நெடிய, இலைய - இலைகளையுடையனவாகிய, தாழை - தாழம்பூவே, மடலெனும் - (உன்) னிதழென்கின்ற, ஈர்வாள் - பல்வாளை, பற்றி - பிடித்து, வசையறு - பழியற்ற, காமத்தச்சன் மன்மதனுகிய தச்சனுனவன், மையலாம் - மயக்கமாகிய, வளியின்-

காற்றிலுலே, நாளும் - பலநாளும், அசைவொடு - அசைதலுடனே, தளர்ந்து-வாடி, கல்வி – கல்வியறிவாகிய, அருந்தழை – அரியதழையை, உகுத்து-உதிர்த்து, நிற்கும் – நிற்கின்ற, நசையுநர் - காமிகளுடைய, நெஞ்சம் – மன மாகிய, தாரு – உலர்ந்தமரத்தை, நடு - நடுவிலே, உற – பொருந்த, போழும்-பிளப்பான் எ-று.

கல்வி – ஆகுபெயர். தாழை அண்மைவிளி. காமத்தச்சனென்பதில் நிலைமொழி யீறுகெட்டது. காமமேலிடுவார்க்குக் கல்வியறிவு குறையுமாத லால் மையலாம் வளியுற கல்வி யருந்தழை யுகுத்தென்றார். "போதந் தனங் கல்வி பொன்றவருங் காலமயன் – மாதர்மேல் வைப்பார் மனம்" எனத் தெய்வப்புலமை ஔவைப் பிராட்டியார் அருளியதனாலு முணர்க. மடலாதிகளிலே யீர்வாளாதிகளின் அபேதங்களே யாரோபித்தலாலே உரு வகவணியாம். தரு - நீட்டல் விகாரம். ஈர்வாள் - அரிவாளுமாம். நசை யுநர்—இதில் ந் – பெயரிடைநிலை. 39

விழையுநராவிபோழும்வேனிலான்ரதமூறுங்
கழைகுழைத்தளிராணேற்றிக்கணைமலர்தொடுக்கிற்றீதே
மழையினிற்கரங்களுமவழுவழுத்திழுக்காவண்ணங்
தழைமடற்கைதாய்நின்பொற்றுகைதிமிர்ந்தெய்வானுல்.

இ-ள். விழையுநர் – விரும்பினவருடைய, ஆவி - உயிரை, போழும்-பிளக்கின்ற, வேனிலான் - மன்மதனவன், இரதம் - சாருனது, ஊறும்-ஒழுகுகின்ற, கழை - கருப்புவில்லை, குழைத்து - வளைத்து, அளி நாண்-வண்டுகளாகிய நாரியை, ஏற்றி - பூட்டி, கணைமலர் – பூவம்புகளை, தொடுக் கின் – எய்யும்போது, தீம் – மதுரம் பொருந்திய, தேன் - தேனினது, மழையினில் – மழையினுலே, கரங்கள் – (தன்) கைகளானவை, நாளும்-தினந்தோறும், வழுவழுத்து – நழுவிநழுவி, இழுக்காவண்ணம் – தப்பிப்போ காதபடி, தழை – தழைத்த, மடல் - இதழ்களையுடைய, கைதாய் – தாழம் பூவே, நின் – உனது, பொன் – பொன்னிறம்பொருந்திய, தாது – அகளை, கை – தன் கைகளிலே, திமிர்ந்து - பூசிக்கொண்டு, எய்வான் - (அவன் என் மேற்) செலுத்துகிறான் எ-று.

அத் தாழம்பூவில் மற்ற மலர்களினும் மிக்க அளிருத்தல்பற்றி அங் ஙனங் கூறப்பட்டது. மன்மதனது கருப்புவில், இருப்புவில், பூவில் என் பவற்றுட் கருப்புவில் சிறந்ததாதலின் அதனையே யீண்டுப் பலவழியும் எடுத்தோதினர். கைதை - கையில் தைப்பது ஆதலின் தாழைக்குக் கார ணப்பெயர். வைகை என்றுற்போல. 40

குனிசிலேவேனிலான்கைக்குருதிதோய்பிறைவடம்பின்
றனியெழில்கவர்ந்துதான்றித்தணந்தவர்தகையெஞ்ஞான்றுங்
தனியுறமுருக்குகின்றதெழிலிலைலன்றேநின்னே
முனிவுடனுலகில்யாருமுருக்கலரென்கின்றாரே.

இதனால் முருக்கம்பூவை வெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். குனிசிலை - வளைக்கப்பட்ட வில்லையுடைய, வேனிலான் - வசந்த காலத்திற்குரிய மன்மதனது, கை - கையிலிருக்கின்ற, குருதி - உதிரத் திலே, தோய் - முழுகிய, பிறைவாயம்பின் - பிறைபோன்ற வாயையுடைய அம்பினது, தனி - ஒப்பற்ற, எழில் - அழகை, கவர்ந்து - வௌவி, தோன்றி - னிங்கி, தணந்தவர் தமை - பிரிந்தவரை, எஞ்ஞான்றும் - எந்நாளிலும், துனியுற - துன்பத்தையடைய, முருக்குகின்ற - கொல்கின்ற, தொழிலினு வன்றே - செய்கையினுவன்றே, நின்னை - (முருக்கம்பூவே) உன்னை, முனி வுடன் - வெறுப்புடனே, உலகின்கண்ணே, யாரும் - எவரும், முருக்கல ரென்கின்றார் - முருக்கலரென்று சொல்லுகின்றார் எ-று.

பிறைவாயம்பு - அர்த்தசந்திரபாணம். அது நிறத்தற்கு முவமையா க்கவேண்டிக் குருதிதோயென்றார். முருக்குதல் - கொல்லுதல், முருக்கு கின்ற வலரென விரியும். விரகிகளேயன்றி மற்றையோரும் அப்பெயர் கூறுகின்றரென்பதுதோன்ற யாருமென்றார். பிறைவாயம்பி னழகைக் கவர்ந்தென உவமானத்தன்மையை யுவமேயத்திலாரோபித்தலாற் காட்சி யணியாம். முருக்கலரென்னும் பெயர்க்கு உறுப்பாற்றலான் மற்றொரு பொருளைக் கற்பித்தலாற் பிரிநிலை நவிற்சியணியாம். வேனிலான் – வசந்த காலத்திற்கு அதிபன். 41

கலிவிருத்தம்.

எனவிவையெடுத்துரைத்தின்னதன்மைய
பனிமலர்க்காவினிற்பயிலுமாங்குயில்
குனிசிலைமாரனைக்கூவக்கேட்டலு
மனநிலைதளர்வுறமதிமயங்கினன்.

இதனாற் குயில்கூவல் சொல்லப்படுகின்றது.

இ-ள். என - என்று, இவை - இவைகளை, எடுத்து - எடுத்து, உரைத்து - சொல்லி, இன்னதன்மைய - இப்படிப்பட்ட தன்மையையுடைய, பனி - குளிர்ச்சிபொருந்திய, மலர் – மலர்களையுடைய, காவினில் – சோலையில், பயிலும் - பழகியிருக்கின்ற, மா - மாமரங்களிலுள்ள, குயில் - குயில்களானவை - குனி – வளைக்கப்பட்ட, சிலை – வில்லையுடைய, மாரனை – மன்மதனை, கூவ - அழைக்க, கேட்டலும் - கேட்டவளவிலே, மனநிலை – தைரியமானது, தளர் வுற – சோர, மதிமயங்கினன் – (அரசன்) அறிவுகலங்கினன். எ–று.

இவையென்றது கீழ்ப்போன நான்கு பாட்டுக்களைச் சுட்டி நின்றது. குயில் கூவல் தன் பகைவனுகிய மாரனை யழைத்தல் போலுதலால் தைரிய மிழந்து மதிமயங்கினனென்க. மாரன் - கொல்லுவோன்; மன்மதன். கா - காக்கப்படுவது; சோலை குயில், பூங்கொடி கண்மிடைந்த சோலையாகிய பாசறையி லிருக்குஞ் சின்னமூதி யெனப்படலாற் கூவிற்றென்றார். கூவு தலானது எம்மரசனுகிய காமன் சேனையாயுள்ளார் யாவருங் கோலங்

கொண்மினென்னும் பொருள் பயப்பதுபோலும் அது "மகா வெல்கொடி மைந்தன் சேஎ - புகாறுகோலங் கொள்ளுமென்பதுபோற் - கொடிமிடை சோலைக்குயிலோ னென்னும் - படையுள் படிவோன் பணிமொழிகூற" எனுஞ் சிலப்பதிகாரக் கூற்றுணும்பெறுதும். 42

வெங்கதிர்தென்றலிற்குளிர்த்தும்வீழ்மலர்த்
தங்கியமலர்கறுத்தளிக்குண்மூழ்கியும்
பொங்குபூங்கைதைவெண்டாதுபூசியுந்
திங்களிற்றிருன்றலாண்மகிழ்சிறந்திலான்.

இதனுல் அங்கே வெயில் நிலவுபோலுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். வெங்கதிர் - சூரியகிரணமானது, தென்றலின் - தென்காற்றுல், குளிர்த்தும் – சீதளித்தும், மலர் - மலர்களிலே, தங்கிய – பொருந்திய, கறு-தேனினுடைய, வீழ் – விழுகின்ற, கறுத்தளிக்குள் – கல்லதளிகளுள், மூழ்கியும் – படிந்தும், பொங்கு – எழும்புகின்ற, பூ – அழகிய, கைதை – தாழை மலரது, வெண்தாது – வெள்ளைப்பொடியை, பூசியும் – திமிர்ந்தும், திங்களின் – சந்திரகிரணம்போல, தோன்றலால் – காணப்படலால், மகிழ் சிறந்திலான் – (அரசன்) களிகூர்ந்திலன் எ-று.

தேன்றுளிகளும் பொடியும் அத்தென்றலால் மலர்களிலிருந்து கொணரப்படுவன. திங்கள் அதன் கிரணத்தை யுணர்த்தலால் ஆகுபெயர். வெயிலானது தென்றலாலே குளிர்த்தும் பனித்துளிகள்போலுந் தேன்றுளிகளோடு கலந்துத் தாழம்பூப் பொடியால் விளர்த்தும் நிலவுபோன்ற தென்க. அது மகிழ் சிறத்தற்குக் காரணமாயிருக்கவும் அரசன் வீரியாதலால் மகிழ் சிறந்திலனென்க. மகிழ் சிறந்திலனெனவே துன்பு சிறந்தானென்பது கருத்து. உவமையணி. 43

அலையொலிமுழவெழவளியின்கம்பலை
குலவியசுருதியாக்குயில்கள்பாண்செய
நிலவுபூத்தண்டலையரங்கிநீடிய
கலவமாமயில்களித்தாடக்கண்டனன்.

இதனுல் மயிலினது கூத்துச் சொல்லப்படுகின்றது.

இ-ள். அலையொலி - கடலினொலியாகிய, முழவு – மத்தளவோசையானது, எழ – உண்டாகவும், அளியின் – வண்டுகளது, கம்பலை – ஒலியானது, குலவிய – கொண்டாடப்பட்ட, சுருதியா – இசையாகவும், குயில்கள்-குயில்களாகிய (பாடகர்), பாண்செய - இசைபாடவும், நிலவு - விளங்குகின்ற, பூத்தண்டலை – பூஞ்சோலையாகிய, அரங்கில் – சபையின், நீடிய – நீண்ட, கலவம் – கலாபத்தையுடைய, மாமயில் - பெரிய மயில்களாகிய (மகளிர்,) களித்து – மகிழ்ந்து, ஆட – கூத்தாட, கண்டனன் – (அரசன்) பார்த்தான்.

அலையொலி முதலியவற்றை முழவொலி முதலியவாகக் கூறினமைக் கேற்ப, குயில்கள் பாடகராகவும், மயில்கள் மகளிராகவும் சொல்லப்பட்டன. அலையொலி முதலியவற்றிலே முழவொலி முதலியவற்றை யாரோபித்தல்லால் உருவகவணியாம். இசையாவன:—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பன. "சரிகம பதநியென் றேழெழுத்தாற் ரூனம் - வரிபரந்த கண்ணினுய் வைத்துத் - தெரிவரிய, வேழிசையீங் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ் - சூழ்முதலாஞ் சுத்தத் தலே" என்றூர் இசைநூலாரும். 44

நஞ்சுமிழ்வேலினன் சீர்த்திநாடொறு
மஞ்சொலார்பயிற்றலாலந்தண்காவினின்
மஞ்சரியிடையிடைவதிந்தபூவையும்
பைஞ்சிறைக்கிள்ளையும்பாடக்கேட்டனன்.

இதனுல் பூவையுங்கிளியும் புகழ்கின்றமை சொல்லப்படுகின்றது.

இ-ள். நஞ்சு – நஞ்சத்தை, உமிழ் - கக்குகின்ற, வேலினன் – வேலையுடைய நளச்சக்கிரவர்த்தி, சீர்த்தி - (தன்) கீர்த்தியை, நாடொறும் – தினந்தோறும், அஞ்சொலார் - அழகிய சொற்களையுடைய மகளிரானவர், பயிற்றலால் - கற்பித்தலாலே, அம் – அழகிய, தண் – தண்ணிய, காவினில் – சோலையிலே, மஞ்சரி பூங்கொத்துகளுடைய, இடையிடை – நடுவே நடுவே, வதிந்த – தங்கிய, பூவையும் – நாகணவாய்ப் பறவைகளும், பைஞ்சிறை - பசிய சிறைகளையுடைய, கிள்ளையும் – கிளிகளும், பாட – படிக்க, கேட்டனன் (அரசன்) கேட்டான். எ-று.

அரசனை மகிழ்வித்தற் பொருட்டு அவனது புகழைப் பூவைகளுக்குங் கிளிகளுக்குங் கற்பித்து அவ்வனத்தில் விட்டுவைப்பா ரென்க. அப்பறவைச்சொற்களின் மதுரச்சுவை தோன்ற அஞ்சொலாற் பயிற்றலா லென்ரூர்; காரணத்தின்குணங் காரியத்தினு முளதா மாதலால். 45

தேங்கமழ்மலர்நறவருந்திச்சீர்கெழு
தூங்கிசையளிமுரல்சுண்ணமாடிமென்
பூங்கொடிமடந்தையராடப்போர்வள
மாங்குயிலுரைசெயவசந்தனெய்தினன்.

இதனுல் தென்றலான்வரவு சொல்லப்படுகின்றது.

இ-ள். தேங்கமழ் – பரிமளிக்கின்ற, மலர் – மலர்களது, நறு – தேனை, அருந்தி - உண்டு, சீர்கெழு – சிறப்புப் பொருந்திய, தூங்கிசை – நாட்டியராகத்தை, அளி – வண்டுகள், முரல் – பாடும், சுண்ணம் – பரிமளப்பொடியை, ஆடி – பூசிக்கொண்டு, மென்பூங்கொடி – மெல்லிய பூங்கொடிகளாகிய, மடந்தையர் – மகளிர், ஆட – கூத்தாட, போர்வளம் – போர்க்குரிய வளத்தை, மா – மாவிலுள்ள, குயில் – குயிலாகிய (மந்திரி), உரைசெய – சொல்ல, வசந்தன் – தென்றலாகிய (பகைவன்), எய்தினன் – வந்தான் எ-று.

மூல மூல் என விகாரமென்பதுமாம். போர்வளம் - கால தேசங்களின் சிறப்பு. இங்கே தமயந்தியை நினைக்கிற காலமும் பொழி லிடமுமாம். மத்தவுண்டு பரிமளப்பொடி பூசிக்கொண்டு ஆடல் பாடல்களின் மகிழ்ந்த அமைச்சரோடெண்ணிப் போர்செய்தற்கு அரசன்கண் வந்தானென்க. இப்படி வந்தானெனவே அரசனை வெல்லுதற்கு அவனை எளியனாக்-கருதலாலே செருக்கோடு வந்தானென்பது தொனிக்கின்றது. பூங் கொடியாட என்றதனாலே மெல்லிய நடையும், நறுவருந்தி என்றதனாலே தண்மைக்குணமும், சுண்ணமாடி என்றதனாலே நறுநாற்றமும், ஆகிய தென்றலுக்குரிய மூன்று குணங்களுஞ் சொல்லப்பட்டன. 46

மிடைந்திருவிசும்புறையமரர்வெற்பினைத்
கடைந்துதன்வளனெலாங்கவர்வராமெனுக்
குடைந்துவண்டிமிர்பொழிலிடையிற்கொள்கட
லடைந்தனவாவியையண்ணலுக்கினன்.

இதனால் அவ்வனத்திலுள்ள தடாகத்தைக் கண்டமை சொல்லப்படுகின்றது.

இ-ள். இருவிசும்பு – பெரிய விண்ணுலகத்தில், மிடைந்து – நெருங்கி, உறை – வாசஞ்செய்கின்ற, அமரர் – தேவரானவர், வெற்பினை – மந்தர கிரியினாலே, கடைந்து – (இன்னும்வந்து) கடைந்து, தன் வளனெலாம் – தன் செல்வத்தை யெல்லாம், கவர்வராமெனு – வௌவுவாரென்றெண்ணி, குடைந்து – கிண்டி, வண்டு – வண்டுகளானவை, இமிர் – ஒலிக்கப்பெறுகின்ற, பொழில் – வனத்தினது, இடையில் – நடுவிலே, அடைந்து – அடைந்ததாகிய, கொள் – (அவ்வளங்களைக்கொண்ட) கடலன – பாற்கடல்போல்கின்ற, வாவியை – தடாகத்தை, அண்ணல் – அரசன், நோக்கினன் – பார்த்தான்.

முற்காலத்தே தேவர்கள் கடைந்து ஐராவதாதிகளைக் கொண்டுபோதலாலே மீளவும் வந்து மற்றை வளங்களையுங் கொண்டுபோகினும் போவாரென்றஞ்சியதென்க. ஒருகாலோரிடத்தே தன் வளங்களையெல்லாங்கொண்டுகொடுத்தோன் அவ்விடம்விட்டு வேறிடத்துச் செல்வது கண்கூடே. அடைந்தது என்பது அணுகுதல் என விகாரப்பட்டு நின்றது. அத்தடாகத்தை அப்படி யஞ்சி யடைந்த கடலாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. 47

தூவியஞ்சிறையனந்துயிலுநாண்மலர்
வாவியுட்டாமரைவளையுந்தோன்றுவ
பூவலர்க்கற்பகப்பொதும்பர்நாட்டுறை
கோவிளங்களிற்றினைக்கோடுபோன்றவே.

இதுமுதலேழுபாட்டுக்களால் முற்பாட்டில் வளனெலாமென்றன இவையெனச் சொல்லப்படுகின்றன.

இ-ள். தூவி – இறகையும், அஞ்சிறை – அழகிய சிறையையுமுடைய, அனம் – அன்னங்களானவை, துயிலும் – தூங்குதற்கிடமாகிய, நாள் – அன்

மலர்த்த, மலர் – மலர்களையுடைய, வாவியுள் – தடாகத்தினுள்ளே, தோன்றுவ – தோன்றுகின்றவையாகிய, தாமரை – தாமரைகளுடைய, வளையம் – தளிர்ச்சுருள்களானவை, பூ – அழகிய, அலர் – மலரையுடைய, கற்பகப்பொ ம்பர் – கற்பகச்சோலையையுடைய, நாட்டு – நாட்டின்கண், உறை – வாசஞ் செய்கின்ற, கோ – அரசனுகிய இந்திரனுடைய, இளங்களிற்று – (அதனுள் ளிருக்கிற) இளமை பொருந்திய யானைகளது, இனம் – இனத்தினுடைய, வெண்கோடுபோன்ற – வெள்ளைக் கொம்புகள்போன் றிருந்தன எ – று.

வளையம் "விரித்திடுஞ் சுருளினமம் விசியொடு வளையமாகும்" இதனு லறிக; இரண்டு பிரிவாகிய அச்சுருள்கள் இரட்டைத்தந்தங்கள் போலுதல் காண்க. "பூவலர்க்கற்பகப்பொ ம்பர் நாட்டுறை கோவிளங்களிறு" இவற் றையொருமொழியாகக்கொண்டு தேவுலக ஐராவதமெனப் பொருள்கொள்க. களிறென்னும் பொதுப்பெயர் ஐராவதமென்னுஞ் சிறப்புப்பெயர்ப் பொரு ளைத்தருதற்கு அவ்வடை சேர்க்கப்படுதலாலே, பல ஐராவதங்கள் நீருள்ளே மறைந்து நிற்க, நீர் மேலே வெளிப்பட்டுத் தோன்றுகிற அவற்றினிரட் டைக் கோடுகள் போலுதல் கொள்க. "தாமரை மூளைகடோன்றுவ" வெனப் பாடங்கூறின் இதன் முதனூன் முடிபையொத்து முடியும். அவ் வளையங்களை அக்கோடுகளாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. அதிலே யோரைராவதம் இதிலே பல வைராவதங்கள் தோன்றலாலே வேற்றுமை யணியாம். "அலர் கற்பகம்" எனவும் பாடம். 48

ஏந்தலோடவ்வழியிறுத்தவெண்ணறுங்
கூந்தன்மாநிழறடத்திடைகுலாவுவ
காந்தளங்கரத்தமகளிர்காமுறு
வேந்தனற்புரவியின்வெள்ளம்போன்றவே.

இ-ள். ஏந்தலோடு – அரசனோடு, அவ்வழி – அவ்விடத்தே, இறுத்த – அடைந்த, எண்ணறும் – எண்ணில்லாத, கூந்தல் – மயிரையுடைய, மா – குதி ரைகளுடைய, தடந்திடை – தடாகத்தின் கண், குலாவுவ – தோன்றுவன வாகிய, நிழல் – சாயைகளானவை, காந்தள் – காந்தண்மலர்போலும், அம் – அழகிய, கரத்த – கைகளையுடைய, அரமகளிர் – தெய்வமங்கையரால், காமுறு – இச்சிக்கப்படுகின்ற, வேந்தன் – இந்திரனுடைய, நல் – நல்ல, புரவியின் – குதிரைகளுடைய, வெள்ளம்போன்ற – (அகலுள்ள) கூட்டம் போன்றன.

"காந்தளங் கரத்தரமகளிர் காமுறு வேந்தனற்புரவி" இவற்றையும் முன் ஐராவதத்திற்குச் சொல்லப்பட்டது போலவே ஒருமொழியாகக் கொண்டு உச்சைச்சிரவமென்று பொருள்கொள்க. குலாவுதல் அந்நிழல் கள் அலையினுலே ஒன்றையொன்று தொடர்வனவாகத் தோன்றுதல். அந் நிழல்களை அவ்வச்சீரச் சிரவங்களாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. அக் கடலிலே ஒருச்சைச்சிரவம்; இதிலே பல தோன்றுதலாலே வேற்றுமை யணியாம். இதனுலே அரசன் குதிரைகளெல்லாம் உச்சைச்சிரவம்போ லிருக்கின்றன வென்பது தொனிக்கின்றது. 49

வரிச்சிறைத்தும்பிகளூழல்வள்ளவாய்
விரித்தவெண்டாமரைவிளங்கித்தோன்றுவ
தரித்திடுகளங்கமெய்தயங்கத்தண்ணெனுங்
திருக்கிளர்நிலவுமிழ்திங்கள்போன்றவே.

இ-ள். விளங்கி – பிரகாசித்து, தோன்றுவ – (தடாகத்திலே) காணப்படுகின்றவையாகிய, வரிச்சிறை – கீற்றுகள் பொருந்திய சிறைகளையுடைய, தும்பிகள் – வண்டுகளால், ஊழ் – கிண்டப்படுகின்ற, நல் – நல்ல, வள்ளவாய் – கிண்ணம்போலும் வாயை, விரித்த – திறந்திருக்கின்ற, வெண்டாமரை – வெண்டாமரை மலர்களானவை, தரித்திடு – தாங்கப்பட்ட, களங்கம்-களங்கங்களானவை, மெய் – வடிவங்களிலே, தயங்க – தோன்ற, தண்ணெனும் – குளிர்ச்சியாயிருக்கிற, திரு – அழகிலுலே, கிளர் – விளங்காநின்ற, நிலவு – சந்திரிகையை, உமிழ் – கக்குகின்ற, திங்கள்போன்ற – (அதிலுள்ள) சந்திரர்கள் போன்றிருந்தன எ-று.

வண்டுகளங்கமும் வெண்டாமரைமலர் சந்திரனும்போலுதல் கொள்க. தண்மையுந் திருக்கிளர் நிலவுந் தாமரைக்குமாம். அப்படிப்பட்ட வெண்டாமரைமலர்களே அத்தன்மையையுடைய சந்திரர்களாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். இதிலும் வேற்றுமையணி கொள்க. 50

சேயிதழ்க்குவளைமென்னனைகடெண்டிரைத்
தூயநற்றடத்திடைத்தோன்றுகின்றன
மேயவர்கண்கவர்வனப்பின்மிக்கவாய்ப்
பாயொளிசிறந்தசெம்பவளம்போன்றவே.

இ-ள். தெண்டிரை – தெளிவுள்ள வலைகளையுடைய, தூய – பரிசுத்தம் பொருந்திய, நற்றடத்திடை – நல்ல தடாகத்தினுள்ளே, தோன்றுகின்றன-காணப்படுகின்றவையாகிய, சேயிதழ் – சிவப்பிதழ்களையுடைய, குவளை-உற்பலங்களுடைய, மெல் – மெல்லிய, னைகள் – அரும்புகளானவை, மேயவர் – அடைந்தவருடைய, கண் – பார்வையை, கவர் – வௌவுகின்ற, வனப்பில் – அழகில், மிக்கவாய் – மிகுந்தனவாகி, பாயொளி – விரிந்தவொளியால், சிறந்த – விசேஷித்த, செம்பவளம்போன்ற – (அதிலுள்ள) செம்பவளங்கள் போன்றன எ-று.

அச்செங்குவளை யரும்புகளை அப் பவளங்களாகக் குறித்தலால் தற்குறிப்பணி. 51

வெண்ணிறத்தாமரைமலரும்வேரியந்
தண்கருங்குவளையுந்தடத்துட்டோன்றுவ
வெண்ணிருகலைமதிநிலவினீட்டமு
மூண்ணிலவியவிடத்தொளியும்போன்றவே.

இ-ள். தடத்துள் – தடாகத்தினுள்ளே, தோன்றுவ – தோன்றுகின்றவையாகிய, வெண்ணிறம் – வெள்ளைநிறம் பொருந்திய, தாமரைமலரும்-

தாமரைப்பூக்களும், வேரி – தேனையுடைய, தண் – தண்ணிய, கருங்குவளையும் – நீலோற்பலமலர்களும், உள்-(அந்) னுள்ளே – நிலவிய-விளங்குகின்ற, எண்ணிருகலை – பதினாறு கலைகளையுமுடைய, மதி – சந்திரனது, நிலவினீட்டமும் – ஒளிச்செறிவும், விடத்து – ஆலாகலத்தினது, ஒளியி (னீட்ட) மும்-ஒளிச்செறிவும், போன்ற – ஒத்திருந்தன. எ-று.

எண்ணிருகலை எட்டாலுறழ்ந்த இரண்டுகலை. தோன்றுவ வினைமுற் றெச்சம். வெண்டாமரை மலரைச் சந்திரனொளியாகவும், கருங்குவளை மலரை நஞ்சொளியாகவுங் குறித்தலாலே தற்குறிப்பணியாம். தாமரை குவளைகளை வைத்த முறையே அவற்றோடு சம்பந்தமுள்ள மதியொளி நஞ் சொளிகளை வைத்தலால் நிரனிறையணி. இவை சேர்தலால் சேர்வையணி.

குடவளையின மணிகொழிக்குந்தண்புனற்
றடமெறியலைகளினலையுஞ்சைவலம்
படர்தருமழற்சிகைபரப்புஞ்செங்நிற
வடவையின்புகையெனவயங்கித்தோன்றின.

இ-ள். குடம் – குடம்போலும், வளை – சங்குகளானவை, இனம்-இனமாகிய, மணி-முத்துக்களை, கொழிக்கும்-சொரிதற்கிடமாகிய, தண்புனல்-தண்ணீரையுடைய, தடம் – தடாகத்திலே, எறி – வீசப்படுகிற, அலைகளின்-அலைகளினுலே, அலையும் – அலைகின்ற, சைவலம் – கொடிப்பாசிகளானவை, படர்தரும் – வளர்கின்ற, அழல்-சூடுள்ள, சிகை – சுவாலைகளை, பரப்பும்-பரப்புகின்ற, செந்நிறம் – சிவப்புநிறமாகிய, வடவையின் – (அதிலுள்ள) வடவாமுகாக்கினியினது, புகையென – தூமம்போல, வயங்கி – விளங்கி, தோன்றின – காணப்பட்டன எ-று.

வடவை கடலுள்ளே மறைந்து அதனீரை மேற்படாம லுறிஞ்சி நிற்கின்ற ஊழித்தீயாம். படபா என்னும் வடமொழி வடவா என்றாகி, அது வடவை எனத்திரிந்து நின்றது. வடவை - பெண் குதிரைமுகம் போன்றது எனக் காரணங் கொள்க. சைவலம். அஃறிணையியற்பெயர். தடம்—தடுக்கப்படுவது. அப்படி யலைகிற பாசிகளை அப்புகைகளாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். 53

குருமணியிமைக்குநீள்கூலமேயவான்
றருநிழலலையிடையலைவதண்கதி
ரருமணிப்பொலன்குவட்டணிமைகாகமால்
வரைசிறையடிக்கொளுமாட்சிபோன்றவே.

இ-ள். அலையிடை – அலைகளாலே, அலைவ – அலைக்கின்றவையாகிய, குரு – நிறம்பொருந்திய, மணி – மணிகளால், இமைக்கும் – விளங்குகிற, நீள் – நீளம்பொருந்திய, கூலம் – கரையின்கண், மேய – தங்கிய, வான்றரு-பெரிய மரங்களுடைய, நிழல் – நிழல்களானவை, சிறை – சிறைகளை, அடிக்

கொளும் – அடித்துக்கொள்ளுகின்ற, மாட்சி – அழகையுடைய, தண் – தெளம்பொருந்திய, கதிர் – கிரணங்களையுடைய, அருமணி – அரிய மணியையும், பொலன் – பொன்னையும் உடைய, குவடு – சிகரத்தையுடைய, அணி – அழகிய, மைநாகம்-மைநாகம் என்னும், மால்வரை-பெரியமலைகள், போன்ற-ஒத்திருந்தன எ-று.

முற்காலத்திலே யிந்திரன் வச்சிராயுதத்தினாலே மலைகளின் சிறகுகளை யறுத்தபோது மைநாகமலை கடலு ளொளித்ததென்க. அக்கையிலுள்ள மணிநிழல்கள் அத்தரு நிழல்களோடு சேர்ந்து தோன்றுதலால் அருமணிப் பொலன் குவடென்னும் அடைகொடுக்கப்பட்டது. பொன் என்னும் சொல் பொலன் எனத் திரிந்து நின்றது. அதனை "பொன்னென் கிளவியீறுகெட முறையின்" என வரூஉந் தொல்காப்பியச் சூத்திர விதியானுணர்க. அடித்தென் வினையெச்ச மீறுகெட்டது. அங்ஙன மசைகின்ற நிழல்களை அப்படிப்பட்ட மைநாகங்களாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். இதிலும் வேற்றுமையணி கொள்க. 54

தொலைவறுபலவளமினையதொக்கவவ்
வலைதவழ்வாவியிற்பயிலுமாய்பெடை
கலவியின்குறிப்புரைகாட்டப்பின்றொடர்
பொலனிறவன்னத்தின்பொற்புநோக்கினான்.

இதனால் விரும்பப்படுபொருள் கிடைத்தற்குக் காரணமாகிய அன்னத்தைக்கண்டமை சொல்லுப்படுகின்றது.

இ-ள். தொலைவறு-ஒழியாத, இனைய-இத்தன்மையனவாகிய, பலவளம் – பலவிதவளங்களும், தொக்க-நிறைந்த, அலை-அலைகளானவை, தவழ் – தவழப்பெற்ற, அவ்வாவியில் – அத்தடாகத்தில், பயிலும் – வாசஞ்செய்கின்ற, ஆய் – ஆராய்ந்துக்கொள்ளப்பட்ட, பெடை – பெட்டையானது, கலவியின் – புணர்ச்சியினது, குறிப்பு – குறிப்பை, உரை – சொற்களாலே, காட்ட – காண்பிக்க, பின் – (அதன்) பின்னே, தொடர் – தொடர்கிற, பொலன் – பொன்வடிவாகிய, நிறம் – ஒளியுள்ள, அன்னத்தின் – அன்னத்தினது, பொற்பு – அழகை, நோக்கினான் – (அரசன்) பார்த்தான் எ-று.

பொன்னன்ன மென்றதனாற் பொன்னுலகத் தன்னமென்றதாயிற்று. இன்னன்ன பலவள மெஞ்ஞான்று முள்ளதென்பார் "தொலைவறுபல்வளம்" என்றார். அன்னம் – அம்சம் என்னும் வடமொழிச் சிதைவு. 55

தண்ணறுந்தாமரையணையிற்றங்கிய
வண்ணலோதிமத்தனியகற்றிப்பேடையை
விண்ணிறச்சிறகாற்றழீஇவிருப்பொடு
முண்மகிழ்கூர்தரவுவந்துபுல்லிற்றே.

இதனுலே பின்னர்ச் சொல்லப்படுங் தக்கத்தின் காரணஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். தண் - தண்ணிய, நறு - நறிய, தாமரை - தாமரைப்பூவாகிய, அணையில் - சயனத்தின்கண்ணே, தங்கிய - வாசஞ்செய்கின்ற, அண்ணலோதிமம் - அவ்வரச வன்னமானது, தனி - ஊடலை, அகற்றி - நீக்கி, பிடையை - பெட்டையை, விண் - பொன்னுலகத்திலுள்ள, நிறம் - ஒளி பொருந்திய, சிறகால் - சிறைகளினுலே, தழீஇ - தழுவி, விருப்பொடும் - ஆசையுடனே, உள் - (அது) னுள்ளத்தே, மகிழ்-மகிழ்ச்சியானது, கூர்தர்மிரும்படி, உவந்து - (தானும் மகிழ்ந்து, புல்லிற்று-புணர்ந்தது எ-று.

மூற்பாட்டிலே கலவியின் குறிப்புரை காட்டிற் றென்ற பேடைக்கு ஊடலெவ்வாறுண்டாயிற் றென்றுரல், நாயகனே முன்னே தன்னிடத்து விரும்பி வரச்செய்தலும், வந்தபின்பு, ஊடுதலும் நாயகிக்கு இயல்பாமென்க. ஊடலில்லையாயிற் புணர்ச்சியின்பஞ் சிறவாதாம். "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங் - கூடி முயங்கப்பெறின்" இதனுலறிக. தழீஇ - சொல்லிசையளபெடை. சிறகர் - மொழியிறுதிப் போலி. 56

விழைவுறுகலவியின்மெலிந்தோர்தாளினின்
றெழிறிகழ்பொன்னிறவெருத்தங்கோட்டுபு
தழைவுறுசிறகான்மூடித்தண்ணரு
வழிமலர்ச்சேக்கையினன்னந்துஞ்சிற்றுல்.

இதனுல் அரசன் செய்ய விரும்பியது கைகூடல் கரிய முகத்தாற் சொல்லப்படுகின்றது.

இ-ள். விழைவுறு - விரும்பப்பட்ட, கலவியின் - புணர்ச்சியால், மெலிந்து - இளைத்து, ஓர்தாளின் - ஒருகாலினுல், நின்று - நின்று, எருத்தம்-பிடரியை, கோட்டுபு - வளைத்து, தழைவுறு - தழைத்த, சிறகால் - சிறையால், மூடி - (தலையை) மறைத்துக்கொண்டு, தண் - தண்ணிய, நரு - தேனுனது, அழி - வழியப்பெற்ற, மலர் - தாமரைப்பூவாகிய, சேக்கையில்-சயனத்தில், எழில் - அழகினுல், திகழ் - விளங்காகின்ற, பொன் - பொன் வடிவமாகிய, நிறம் - காந்தியுள்ள, அன்னம் - அவ்வன்னமானது, துஞ்சிற்று - தூங்கிற்று எ-று.

விழைஉறு - இதன்கண் உறு, அணைவினை. கலவி - போகம், முயக்கினிளைப்பு மிகின், பறவைகள் தம்தலையைச்சிறகினுள்வைத்து, ஒற்றைக்காலினின்று துயிறன் மரபாமாதலின் அன்னந் துஞ்சியதை யங்ஙன முரைத்தார். கோட்டுபு - வினையெச்சம். ஆல் - அசை. இவ்வனந் தூங்குதலாகிய பறவையின் சாதித்தன்மை சொல்லுதலாலே தன்மை நவிற்சியணி. 57

சூழ்வளியுடன்சுழல்சருகிற்றேன்றிய
வூழ்வழிமனஞ்செலலுண்மையன்றுகொ

சூழ்புலன்வழிமனஞ்சாரவோதிமம்
பாழியந்தோளினுன்கையிற்பற்றினுன்.

இதனுல் அவ்வன்னத்தைப் பிடித்ததற்குக் காரணமும்
பிடித்தமையும் சொல்லப்படுகின்றன.

இ-ள். சூழ்வளியுடன் - அலைகாற்றுடனே, சுழல் - சுழன்றுசெல்கின்ற, சருகின் – சருகுபோல, ஊழ்வழி – விதியின்வழியிலே, தோன்றிய - (அதன் பயன்) உண்டாக, மனம் - (உயிர்களது) மனமானது, செலல் - செல்லுதல், உண்மையன்றுகொல் - சத்தியமன்றே, தாழ்புலன்வழி - அற்பவிடயமாகிய (அவ்வன்னத்தின்கண்), மனம் – மனமானது, சார - (வழிஞல்) அடைய, ஓதிமம் - அவ்வன்னத்தை, பாழி - வலிமைபொருந்திய, தோளினுன் - தோள்களையுடைய நளச்சக்கரவர்த்தி, கையில் - கையினுலே, பற்றினுன் - பிடித்தான்.

அவ்வன்னம் பெறுதற்கரிய பொருளாயினும் அரசனது பெருந்தன்மைக்கு அதைத் தாங்கும்போது பற்றுதல் தகாத செயலென்பது தோன்ற அதனைத் தாழ்புலமென்றும், அவனைப் பாழியந்தோளினுனென்றுங் கூறினர். அற்பகாரியத்திலே தீரோதாத்தனுகிய அரசனுக்கு மனஞ்செல்லுமோவென்கிற சங்கைக்கு, உயிர்களுக்கு மனம் விதிவழிபட்டு நிற்குமாதலாற் செல்லுமென்பது சொல்லப்பட்டது. ஊழிவழி மனஞ்செல்லுமென்னும் பொதுப்பொருளே அவ்வன்னம் பற்றுதற்கு அரசன் மனஞ்சென்றதென்னுஞ் சிறப்புப்பொருளாலே சாதித்தலால் வேற்றுப்பொருள் வைப்பணி. இதில் உவமையுஞ் சேர்தலாற் சேர்வையணி. 58

கைப்படுசிறையனங்கலங்கிவாய்வெரீஇத்
துப்புறழ்தோலடிதுடிப்பத்தன்பமுற்
றெய்ப்பொடுசிறையடித்தேகலாமையின்
மைப்புயலனையகைம்மதரிற்கொத்திற்றால்.

இதனுற் பிடிபட்ட அன்னத்தின் வருத்தச்செயல் சொல்லப்படுகின்றது.

இ.ள். கை – (அரசனது) கைக்கு, படு – அகப்பட்ட, சிறை – சிறகளையுடைய, அனம் – அன்னமானது, கலங்கி – அறிவழிந்து, வாய்வெரீஇ - அச்சவொலிகள்செய்து, துப்புறழ் – பவளம்போலும், தோல் – தோலையுடைய, அடி - அடிகளானவை, துடிப்ப – நடுங்க, தன்பமுற்று – துயரமடைந்து, சிறையடித்து – சிறைகளாலடித்து, ஏகலாமையின் – போகமாட்டாமையால், எய்ப்பொடு – இளைப்புடனே, மைப்புயலனைய - (கொடையாற்) கரியமேகம்போலும், கைம்மலரில் - (அவன்கையாகிய) மலரில், கொத்திற்று - கொத்தியது எ-று.

கைப்படல் என்றதை யொருசொல்லாக்கி அகப்படலெனினுமாம், வலியவன் கையிலகப்பட்டோன் முன்னே தப்பிப்போதற்கு முயற்சி செய்தலும், அது கூடாதபோது தன்னுலானமட்டும் அவனை வருத்துதலுஞ் செய்.

வானென்க. பிடிபட்டபோது கலங்குதலாதியாகிய அதன் சாதித்தன்மை களைச் சொல்லுதலால் தன்மை நவிற்சியணியாம். அன்னம் – அனம் என இடைக்குறை. 59

இரைத்தயர்புள்ளினுக்கிரங்கிப்புட்குலம்
விரித்தெழுசிறைவளிவீசமெல்லிதழ்த்
திருத்தகுதாமரையலைதல்சேர்தடம்
வருத்தலையென்றுகைம்மறித்தல்போன்றதே.

இதுமுதலிரண்டு செய்யுள்களால் அவ்விடத்து நிகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். புட்குலம் – பறவைக்கூட்டமானது, விரித்து – பரப்பி, எழு – எழும்புகையில், சிறை – சிறைகள், வளி – காற்றை, வீச – எறிதலால், மெல்-மெல்லிய, இதழ் – இதழ்களையுடைய, திருத்தகு – அழகுபொருந்திய, தாமரை – தாமரை மலர்களானவை, அலைதல் – அசைதலானது, சேர் – சேர்விடமாகிய, தடம் – தடாகமானது, இரைத்து – கூவி, அயர்-வருந்துகின்ற, புள்ளினுக்கு – அவ்வனத்திற்கு, இரங்கி – இரக்கமுற்று, வருத்தலையென்று-(அதனை) வருத்தாதேயென்று, கை – (தன்) கைகளினாலே, மறித்தல்போன்றது – (அரசனைத்) தடுத்தல் போன்றது எ-று.

இரங்கியென்னும் வினையெச்சம் கைம்மறிந்தலென்னும் வினைகொண்டது தன்னைச் சேர்ந்திருந்ததாதலால் அதற்குத் தடாகமிரங்கிற்றென்க. அத்தாமரைமலர்களினசைதலை அத்தடாகத்தின் கைம்மறித்தலாகக் குறித்தலால் தற்குறிப்பணி. 60

வள்ளவாய்த்தாமரைவதிந்துபோதரு
புள்ளெலாந்தனித்தனிபுலம்பல்வாவியி
னுள்ளுறுவறுமைகண்டொதுங்குபூமகள்
தெள்ளரிச்சிலம்புகள்சிலம்பல்போன்றதே.

இ-ள். வள்ளம் – கிண்ணம்போலும், வாய் – வாயையுடைய, தாமரை-தாமரைமலர்களில், வதிந்து – வாசஞ்செய்திருந்து, போதரு – (அப்போது) போகின்ற, புள்ளெலாம் – பறவைகளனைத்தும், தனித்தனி – வேறுவேறாக, புலம்பல் – புலம்புதலானது, வாவியினுள் – தடாகத்தினுள்ளே, உறு – நேரிட்ட, வறுமை – (அரசவண்ண) மில்லாமையை, கண்டு – பார்த்து, ஒதுங்குவிலகுகின்ற, பூமகள் – திருமாதினுடைய, தெள் – தெள்ளப்பட்ட, அரி-பருக்கைக் கற்களையுடைய, சிலம்புகள் – பாதச் சிலம்புகளானவை, சிலம்பல் போன்றது – ஒலித்தல் போன்றது எ-று.

இங்கே விளக்கத்தைத் திருமகளென்ற ராகலின் அத்தடாகம் அரசவண்ண மில்லாமையிலுலே சந்திரனில்லாத இரவுபோலவிளக்கத்தை இழந்ததென்றதாயிற்று. அஞ்சிப்போகிற அன்னங்களினொலியை அச்சிலம்புகளினொலியாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. 61

இன்னபொன்னிறவனங்கண்டிலேனெனு
மன்னர்மன்னவன்மதிவதனநோக்கியே
யன்னவன்கரமலரமர்ந்தவோதிம
நன்னயமொழிசிலசவிறலுற்றதே.

இதனுலே சில நியாயங்கள் கூறத்தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். இன்ன - இத்தன்மையதாக, பொன் - பொன்மயமாகிய, நிறம்-ஒளிபொருந்திய, அனம் - அன்னத்தை, கண்டிலேனெனும் - (இதுவரையிற்) பார்த்திலேனென வியக்கின்ற, மன்னர் மன்னனின் - அரசர்க்கரசனது, மதி - சந்திரன்போலும் (விளக்கம்பொருந்திய), வதனம் - முகத்தை, நோக்கி - பார்த்து, அன்னவன் - அப்படிப்பட்டவனது, கரம் - கையாகிய, மலர் - தாமரைப்பூவின்கண், அமர்ந்த - தங்கிய, ஓதிமம் - அன்னமானது, நல் - நல்ல, நயம் - நீதிநூலைப்பற்றிய, சிலமொழி - சிலசொற்களை, சவிறலுற்றது - சொல்லத்தொடங்கிற்று எ-று.

மதிவதன மென்றதனுலே அதனைப் பார்க்கையில் அவனுடு பேசுதற்கு ஊக்கமுண்டாயிற் றென்றதாயிற்று. கைப்பிடியினுலே அதற்கொரு வருத்தமில்லை யென்பது காமலரென்றதனுற் குறிக்கப்படுகின்றது. நயம்-நியாயம். "நயமென்ப நியாயநன்றி" இதனுலறிக. 62

சிறையொளிர்பொன்னிறைசெல்வநல்குமோ
வறைகடல்பனியினினிறைவதாங்கொலோ
கறைகெழுவேலினுய்கருத்தினுள்ளுற
நிறைதருவிழைவினீத்தல்வேண்டுமால்.

இதுமுதல் மூன்று செய்யுட்களாலே மூன் கூறப்பட்ட நயமொழிகள் சொல்லப்படுகின்றன.

இ-ள். கறைகெழு - உதிரம்படிந்துள்ள, வேலினுய் - வேலையுடைய நளாசனே, சிறை - (என்) சிறைகளிலே, ஒளிர் - விளங்காநின்ற, பொன் - பொன்னனது, நிறைசெல்வம் - குறைவில்லாத செல்வத்தை, நல்குமோ-(உனக்குத்) தருமோ, அறை-ஒலிக்கின்ற, கடல் - (பெரிய) கடலானது, பனியினின் - (அற்பமாகிய) பனியினுலே, நிறைவதாங்கொலோ - நிறையுமோ, கருத்தினுள் - (உன்) மனத்தினுள்ளே, உற - பொருந்த, நிறைதரு-நிறைந்த, விழைவினை - அப்பொன்னசையை, நீத்தல்வேண்டும் (நீ) ஒழிக்க வேண்டும் எ-று.

முற்செய்யுளிலே இன்னபொன்னிற வனங்கண்டிலே னென்றுனுகச் சொல்லப்பட்டமையால் தன்னைப் பொன்னுக்காகக் கொல்வானென்று நினைத்து இவ்வாறு சொல்லியதென்க. கறைகெழுவேலினு யென்றதனுலே நீ கொலையிற் கொடியோ யென்றதாயிற்று. இச் சிறிய பொன்னிலே உன் பேராசை பழிக்கப்படத்தக்க தாகலால் நீத்தல் வேண்டுமென்

றது. முன்னிரண்டு வாக்கியங்களிலுஞ் சாதாரண தருமத்தைச் சொல்லு தலால் தொடர்முழுதுவமையணி. 63

கோறல்செய்தாலுயிர்க்கொலையொன்றேயலாற்
றேறினர்ப்பிழைத்தவன்பழியுஞ்சேருமாற்
றூறுபாய்கவுண்மதத்தறுகண்யானையாய்
மாறுகொள்பகைஞர்க்குமிதுமனங்கொளார்.

இ-ள். தாறு – மூட்கோல்கள். பாய் – பாயப்பெறுகின்ற, கவுள்-க்குப்பையும், மதம் – மதத்தையும், தறுகண் – கோபக்கண்களையும்உடைய, யானையாய் – யானைபோல்பவனே, கோறல்செய்தால் – (உன்னை விசுவாசித் திருந்த என்னைநீ)கொல்வையேயாஞல், உயிர்க்கொலை ஒன்றேயலால்-உயிரைக்கொல்லுதல் பாதகமொன்றே யல்லாமலும், தேறினர் – நம்பின வர்க்கு, பிழைத்த – தீங்குசெய்த, வன்பழியும் – கொடிய பாதகமும், சே ரும் – (உன்னை) யடையும், மாறுகொள் – மாறுபாடுகொண்ட, பகைஞர்க் கும் – விரோதிகளுக்கும், இது – இவ் விசுவாசகாதஞ் செய்தலை, மனங் கொளார் – நினையார் எ-று.

தேறினர் பிழைத்த வென்றதனுலே எனக்கு ஒரு தீங்குஞ் செய்யா யென நான் உன்னை நம்பியிருந்தே னென்றதாயிற்று. "நன்றாகு மாக்கும் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக், கொன்றாகு மாக்கங்கடை" என்றவாறே எல்லாப் பாவங்களிலுங் கொலைப்பாவங் கொடிது, அதினும் விசுவாசகாதகங் கொடியதென்பது தோன்ற வன்பழியெனப்பட்டது. மதச்செருக்கும் வன் கண்மையும் உடையையாதலால் இத்தகாதசெயல் செய்கின்றாயென்பது குறிப்பித்தற்கு மதத்தறுகண் யானையா யென்றது. நம்பின பகைவர்க்குத் தீங்கு நினைத்தலும் பாவமாயிருக்கப் பகைவனல்லாதிருந்து விசுவாசித்த என்னைக் கொலைசெய்யப் பற்றலாமோ வென்றதாயிற்று. 64

செருக்களத்தேதற்றவர்ச்செகுத்தலன்றியுன்
னருட்கிடனெனையடர்த்தனீதியோ
முருக்கிதழ்மடந்தையர்முலைநிலைத்திடுங்
குருக்கிளர்மணிபுனைகுவவுத்தோளினாய்.

இ-ள். முருக்கு – முருக்கம்பூப்போலும், இதழ் – உதடுகளையுடைய, மடந்தையர் – மாதருடைய, முலை – முலைகளானவை, நிலைத்திடும் – அழுந் தப்பெறும், குரு – நிறத்தினுலே, கிளர் – விளங்காகின்ற, மணி – இரத்தினு பரணத்தால், புனை – அலங்கரிக்கப்பட்ட, குவவு – திரட்சியையுடைய, தோ ளினாய் – தோள்களையுடையவனே, செருக்களத்து – போர்க்களத்தில், எற் றவர் – (உன்னைநோக்கி) எதிர்த்தவரை, செகுத்தலன்றி – கொல்லுதல் (நீதியா) மன்றி, உன் – உன்னது, அருட்கு – கருணைக்கு, இடனும் – பாத்திரமாகிய, எனை – (ஒரு புல்லி பறவையாகிய) என்னை, அடர்த்தல் – கொல்லுதல், நீதியோ – நீதியாமோ எ-று.

எனையென்றது அற்பமாகிய பறவையாயிருக்கிற வென்னுஞ் சொல்லை விசேடணமாக வேண்டி நின்றது. நீதியோவென்னும் ஓகாரம் அநீதியே யாமென்னும் பிறிதபொருளைத் தந்தது. மூலநூலைத்திடந் தோளினு யென்றதனுலே பெண்டிரோடு கூடிவாழு நீ அப்படிப்பட்ட என் வாழ்வைக் குலைத்தற்கு எப்படித் துணிந்தா யென்பதைக் குறிப்பித்ததாயிற்று. 65

கல்வியினகன்றிடுகருணைவேந்துளத்
தொல்கலுங்கருணையுமுலப்புந்தோன்றிட
வல்கலின்மொழிசிலவறைந்துபின்னரும்
பல்பலதுயர்மொழிபகரலுற்றதே.

இதனுலே பல துயர்மொழிகள் கூறத் தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கல்வியின் - கல்வி யறிவுபோல, அகன்றிடு – பெருக்கத்தை யடைந்திருக்கின்ற, கருணை-அருளையுடைய, வேந்து-நளராசனது, உளத்து-உள்ளத்தின்கண், ஒல்கலும் – நாணமும், கருணையும் – அருளும், உவப்பும்-மகிழ்ச்சியும், தோன்றிட – ஏககாலத்திலுண்டாக, அல்கலில் (பொருளாற்) சுருங்குதலில்லாத, சிலமொழி – சில சொற்களை, அறைந்து-சொல்லி, பின்னரும் – (அதன்) பின்பும், பல்பல – பலபலவாகிய, துயர்மொழி – அரசனுக்குத் துன்பத்தை யுண்டாக்குகின்ற சொற்களை, பகரலுற்றது – (அன்னம்) சொல்லத் தொடங்கிற்று எ-று.

ஒல்கல் - அசைதல்; அது இங்கே நாணத்தை உணர்த்தி நின்றது. மூன்னிலையிலிருந்து நிந்தித்தலால் நாணமும், அதன் வருத்தத்தைக் காணுதலாற் கருணையும், அது கற்றுவல்லோர் போலப் பேசுதலால் மகிழ்ச்சியும் அரசனுக்குண்டாயின. சில மொழிகளாயினும் நீதிநூலின் பல பொருள்களைத்தழுவிச் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகமைந்து கிற்கையால் அல்கலின்மொழி சிலவென்றார். "அல்கலுட் சுருங்கல் வைகல்" இதனுலறிக. 66

பெருகியமூப்பினிற்றளர்ந்துபேதுறு
மிருமுதுகுரவருமென்செய்கிற்பரோ
கருவுயிர்த்தயர்வுறுகாதற்பேடையுள்
ளுருகுமேயென்னநெட்டுயிர்ப்புவீங்கிற்றே.

இதுமுத லாறு செய்யுள்களால் மூன்று கூறப்பட்ட துயர்மொழிகள் சொல்லப்படுகின்றன.

இ-ள். பெருகிய – நிறைந்த, மூப்பினில் – மூதுமையால், தளர்ந்து-மெலிந்து, பேதுறும் – மதிமயக்கங் கொண்டிருக்கின்ற, இருமுதுகுரவரும்-(என்னுடைய) தாயுந்தகப்பனும், என்செய் கிற்பரோ – (இனி) யாது செய்வரோ, கரு – கருப்பத்தை, உயிர்த்து - ஈன்று, அயர்வுறு - சோர்வடைந்திருக்கின்ற, காதல் – (என்மேல்) அன்புடைய, பேடை – மனைவியானவள்,

உள்ளுருகுமே – மன முருகுவாளே, என்ன – என்று, நெட்டுயிர்ப்பு வீங் கிற்று – பெருமூச்சுவிட்டது எ-று.

என்செய்கிற்பரோ வென்றதனால் நான் அவர்களுக்கு ஏகபுத்திரனென் றும், இனி மூப்புத் தன்பத்தோடும் என்னை இகழ்ந்த தன்பமும் இரை கொடுப்பாரில்லாத தன்பமுங்கொண்டு இறந்துவிடுவாரென்றுஞ் சொல்லிய தாயிற்று. கருவுயிர்த் தயர்வுறு மென்றதனால் அவளீன்று அதிக காலங் கழிந்ததில்லையென்றும், உள்ளுருகுமே யென்றதனால் அத்தன்பத்தோடு இரைபெறுத தன்பமும் என்னை இழந்த தன்பமுங் கூடுதலால் எங்ஙனம் பிழைப்பாளென்றுங் குறிப்பித்தது. 67

அன்னைமூப்பழிதரவார்கொலாற்றுவார்
மன்னனெற்படுத்தலும்வெருவிவாவியிற்
றுன்னியாங்கிருந்தபுள்சொற்றபோழ்தினி
லின்னலங்கடலுளாழ்ந்திறக்குமேகொலாம்.

இ-ள்: அன்னை - (என்னுடைய) தாயானவள், மூப்பு – முதுமையினா லே, அழிதரவு – வருந்துதலே, ஆர் – எவர், ஆற்றுவார் - தேற்றுவார், மன் னன் – இவ்வூரசனனவன், எற்படுத்தலும் - (என்னைப்) பிடித்தவளவிலே, வாவியில் – தடாகத்திலிருந்து, வெருவி – அஞ்சிப்போய், ஆங்கு – அவ்வி டத்தே, துன்னி – நெருங்கி, இருந்த – தங்கிய, புள் – பறவைகள், சொற்ற போழ்தினில் – (இச்செய்தியைச்) சொன்னபோது, இன்னல் - துன்பமா கிய, கடலுள் - சமுத்திரத்தினுள், ஆழ்ந்து - அமிழ்ந்து, இறக்குமே - (அவள்) இறந்துபோவாளே. எ-று, அம், கொல், ஆம் - சாரியைகள்.

ஆங்கென்றது விண்ணுலகத்தின் மானசதடாகத்தைச் சுட்டிநின்றது. ஒருவேளை மூப்புத்தயரத்தை யாற்றுவார் கிடைக்கினும் புத்திர சோகத் தாற் சாவாதிராளென்றதாயிற்று. 68

புல்லுவிட்டஞ்சிறைநெகிழினும்பொரு
தல்லல்கூர்பெடையவர்யாங்குற்றுறெனிற்
சொல்லரும்புட்குலங்களுழுந்துன்பமாய்ந்
தெல்லையிலுயரொடுமிறக்குமேகொலாம்.

இ-ள். புல்லுவிட்டு – தழுவுதலேவிட்டு, அஞ்சிறை – (என்) அழகிய சிறைகளானவை, நெகிழினும் – விலகினாலும், பொருது – மனம்பொருமல், அல்லல்கூர் – துன்ப மிகுகின்ற, பெடை – (என்) மனைவியானவள், அவர்- என்கணவர், யாங்கு – எவ்விடத்தே, உற்றுறெனின் - வந்தாரென்று விஞ் வில், சொல்லரு – (அதற்கு உத்தரம்) சொல்லமாட்டாத, புட்குலம் – பற வைக்கூட்டமானது, கலுழும் – அழாநிற்கும், துன்பம் - அத்துன்பத்தினா லே, ஆய்ந்து – (என்செய்தியை) ஆலோசித்தறிந்து, எல்லையில் – அளவில் லாத, துயரொடும் – துன்பத்துடனே, இறக்குமே – (அவள்) இறந்துபோ வாளே எ-று. கொல், ஆம் - அசைகள்.

புல்லுதல் என்கிற தொழிற்பெயர் இறுதி நிலைகெட்டு வந்தது. தெரிதும் பிரியப்பொருத விப்பெடைக்கு இக்கொடிய செய்தியைச் சொல்வேமாயின் இறந்துவிடுமென்றுசொல்ல நாவெழாமல் அழுமென்க. அவ்வழுகையே அச்செய்தியைக் குறிப்பினுணர்த்துகிற உத்தரமாம். 69

அனிச்சமென்மலரினுமொய்யவாய்சிறைத்
தனிப்பெடையமைக்குமென்றளிர்க்கையாலயன்
றுனிப்படுபிரிவெனுஞ்சுடுசொலென்றலே
நினைத்துமுன்னெவ்வணநிலவக்கோட்டிஞன்.

இ-ள். அனிச்சம் என் – அனிச்சமென்னப்பட்ட, மலரினும் – பூவினும், நொய்ய – மெல்லிய, ஆய் – தேடத்தக்க, சிறை – சிறைகளையுடைய, தனி – ஒப்பற்ற, பெடை – (என்) மனைவியை, அமைக்கும் – உண்டாக்குவதாகிய, மென்றளிர் – மெல்லிய தளிர்போலும், கையால் – கையினாலே அயன் – நான்முகக்கடவுள், துனிப்படு – துன்பம் விளைத்தற்குக் காரணமாகிய, பிரிவெனும் – பிரிவென்கின்ற, சுடு – சுடாகின்ற, சொல் – சொல்லை, நினைத்த – கருதி, முன் – முன்னே, என் – எனது, தலை – தலையில், எவ்வண்ணம் – எவ்விதமாக, நிலவ – விளங்க, கோட்டிஞன் – எழுதினன் எ-று.

"தனிப்பெடையமைத்த"வெனப் பாடங்கூறிற் பெடையைப் படைத்தபின் அதனைப் படைத்தானென்பது தோன்றுதலாலே முறை பிறழ்வென்னுங் குற்றந்தங்கும். அனிச்சமென்மலரினு மென்றமையாலு மென்றளிர்க்கையா லென்றமையானுங் காரணமாகிய கைக்கும் காரியமாகிய பெடைக்கும் மென்மையுந் தண்மையுஞ் சொல்லப்பட்டன. மெல்லிய தளிர்க்கையாகிய காரணத்திலிருந்து சுடுசொல்லெழுதுதலாகிய பகையான காரியம் பிறத்தலைச் சொல்லுதலால் இது தருதியின்மையணி. 70

வீழுமெற்படுத்தவிக்கொடுஞ்சொன்மென்னிறத்
தாழ்சிறைமடப்பெடைசெவியிற்சார்தலு
மாழ்துயர்க்கடலிடையாழ்ந்தியானிலாப்
பாழ்படுதிசையெலாமருண்டுபார்க்குமே.

இ-ள். வீழும் – (தன்னுல்) இச்சிக்கப்பட்ட, என் – என்னை, படுத்த – பிடித்த. இக்கொடுஞ்சொல் – இக்கொடுமையை யுணர்த்துகிற சொல்லானது, செவியில் – (தன்) காதில், சார்தலும் – சேர்ந்த வளவிலே, மெல்மெல்லிய, நிறம் – ஒளிபொருந்திய, தாழ் – நீண்ட, சிறை – சிறைகளையும், மடம் – பேதமையையுமுடைய, பெடை – (என்) மனைவியானவள், ஆழ் – ஆழம்பொருந்திய, துயர்க்கடலிடை – துன்பமாகிய கடலுள்ளே, ஆழ்ந்து – முழுகி, யான் – நான், இலா – இல்லாமையால், பாழ்படு – பாழடைந்த, திசையெலாம் – திக்குகளனைத்தையும், மருண்டு – மயங்கி, பார்க்குமே – பார்ப்பாளே எ-று.

திசையெலா மென்றதற்குக் கிழக்காதியெட்டும் மேலுங் கீழும் ஆகிய பத்துத்திசைகளுங் கொள்க. இப்பறவை யொன்றில்லாமையால் திசைக ளெல்லாம் பாழ்படுமோவெனின் அத்திசைகளில் மற்றெல்லாப் பொருள் களு மூள்ளவாயிருந்தும், தன்னே யமிழ்த்தியது சமுத்திரமென்கிறபடி உயிர்த்துணைவ னில்லாமையினுலே பாழ்பட்டனவாகத் தோன்றுமென்க.

பிரிவெனுமழல்சுடப்பெடையிறக்குமே
யரிதினிற்பெற்றவெம்பார்ப்பெலாமயர்ந்
திரைபெறுக்குடம்பையுளரற்றியெய்திய
பரிவினிற்காமெனப்பதைத்துச்சோர்ந்ததே.

இ-ள். பிரிவெனும் – பிரிவென்கின்ற, அழல் – நெருப்பானது, சுட – (தன்னைச்) சுட, பெடை – (என்) மனைவியானவள், இறக்குமே – இறந்து போவாளே, அரிதினில் – அரியதவத்தினுலே, பெற்ற – ஈன்ற, எம் – எம்மு டைய, பார்ப்பெலாம் – குஞ்சுகளெல்லாம், அயர்ந்து – தளர்ந்து, இரை – இரையை, பெறு – பெறுமல், குடம்பையுள் – கூண்டினுள்ளே, அரற்றி – கூவி, எய்திய – (தமக்கு) நேரிட்ட, பரிவினில் – துன்பத்தினுலே, சாம் – இறந்துபோம், என – என்று, பதைத்து – துடித்து, சோர்ந்தது – (அன் னம்) மூர்ச்சித்தது எ-று.

பெடையிறக்குமே யென்றதனுல் இனித் தாய்தந்தைக ளிரண்டையு மிழந்த அக்குஞ்சுகளுக்கு இரைகொடுப்பா ரில்லையென்பதும், இரைபெறுக் குடம்பையிற்சா மென்றதனுலே அவை பறக்கமாட்டாத மிகுந்த இளமைப் பருவமுடையன வென்பதுஞ் சொல்லப்பட்டன. புத்திரசோக மெல்லா வற்றினுங் கொடிதாகலாலும், சந்ததியற்றும் போங்காலம் நேரிட்டதென் னுந் துயரத்தாலும் மூர்ச்சை யடைந்ததென்க. 72

அளிக்கொருகடலனைதனேக்கண்டுகண்
டுளித்திடுதண்புனற்றுவலிவீழ்தலிற்
றளிர்த்தமென்சிறையனந்தளர்வுநீங்கியுட்
களித்ததுகாவலன்கருணைநோக்கியே.

இதனுல் அவ்வன்னம் அரசன் கருணையைக் கண்டு களித்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். அளிக்கு – அருளுக்கு, ஒரு கடலனை – ஒரு கடல்போல் பவன், அதனே – அம்மூர்ச்சை யடைந்தமையை, கண்டு – பார்த்து, கண் – பார்த்த கண்களால், துளித்திடும் – (அவனுலே) சொரியப்படுகின்ற, தண் – குளிர்ச்சிபொருந்திய, புனல் – நீரினுடைய, துவலை – மழையானது, வீழ்தலின் – (தன்மேல்) வீழ்தலினுலே, தளிர்த்த – உணர்வடைந்த, மெல் – மெல்லிய, சிறை – சிறைகளையுடைய, அனம் – அன்னமானது, தளர்வு நீங்கி – ஆயாசத்தினீங்கி, காவலன் – அரசனது, கருணை – அருளின் (பெருக் கத்தை), நோக்கி – பார்த்து, உள் – (தன்னுள்ளே), களித்தது – மகிழ்ந்தது.

அளியென்பதற்கு அன்பெனலேலாது. என்னை? மேல் "காவலன் கருணைநோக்கியே" என்னலானுமென்க. அளியாவது எவ்வுயிரிடத்துந் தன்பங் கண்ட காலத்துத் தோன்றும் உள்ளநெகிழ்ச்சி. எல்லைப் படுத்தற் கரிதாகலேக்கி "ஒருகடலனை" என்றார். அன்னத்தின் சிறகுகள் மென்மையவாய், அடர்ந்து பரந்து செழியவாயிருத்தலான் "தளிர்த்த" என்னும் அடை கொடுத்தார். மூர்ச்சை யடைந்தோர்க்குத் தண்ணிய நீர்த்துளிகளை மேலே தெளிக்கும்போது அது நீங்குமாதலால் அத்துளிகளாலே மூர்ச்சை நீங்கிற்று. கண்ணீர்த்துளிகள் அவலச்சுவையைப் பற்றியவிராலாம். அத் துளிகளால் அவனுள்ளிருந்த கருணையை அறிந்ததென்க. 73

ஆகுலத்துடன்மடவனத்தைநோக்கினின்
சேகுறுபொன்னிறச்சிறகர்நோக்குறு
மோகமேபிடித்தனன்முழுதுநோக்கின
னேகுழியேகெனவிறைவிடுத்தனன்.

இதனால் அன்னத்தை விட்டமை சொல்லப்படுகின்றது.

இ-ள். இறை – நளராசனனவன், ஆகுலத்துடன் – துன்பத்துடனே, மடம் – இளமை பொருந்திய, அனத்தை - அவ்வன்னத்தை, நோக்கி - பார்த்து, நின் - உனது, சேகுறு - மாற்றுயர்ந்த, பொன் - பொன்மயமாகிய, நிறம் – ஒளிபொருந்திய, சிறகர் – சிறைகளை, நோக்குறும் – பார்க்கவேண்டுமென்கிற, மோகமே – ஆசையினாலேயே, பிடித்தனன் – (உன்னைப்) பிடித்தேன், முழுதும் – முழுதையும், நோக்கினன் – பார்த்தேன், ஏகுழி - (நீ) போகத்தக்கவிடத்திற்கு, ஏகென – போவென்று, விடுத்தனன் – (அதனை) விட்டான் எ-று.

"ஏக என" என்பது ஏகென அகரந்தொக்குநின்றது. சேகு என்பது வைரம் என்னும் பொருட்டாய் மாற்றுக்காயிற்று. என்னாலே பிடிக்கப் பட்டமையால் இப்பறவைக்கு இப்படிப்பட்ட துன்பம்விளைந்ததென்று அரசனுக்கு வியாகுலம் உண்டாயிற்றென்க. நோக்குறுமோகமே பிடித்தனனென்றமையால் உன்னைச் சொல்லப்பட்டபடி பொன்னுக்காக உன்னைக் கொல்லுதற்குப் பிடித்திலேனென்றதாயிற்று. மோகமே – ஏ பிரிநிலை. 74

அன்னத்தைக் கண்ணுற்றபடலமுற்றிற்று.

ஆ செய்யுள் – 145.

அன்னத்தைத் தூதுவிட்டபடலம்.

அன்னமானது நளன் தன்னை யாதொரு தீங்குமுஞ் செய்யாமல் விடுத்தமைப்பற்றி அவனிடத்து வந்து, தமயந்தியின் அழகு முதலியவற்றைச் சொல்லியதையும், நளனிடத்து விடைபெற்று தமயந்தியிடத்துப்போய் அவளை அவனுக்கு மனைவியாக இசையும்படி செய்ததையும் சொல்லுகின்றது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பிறைவடங் கிடந்து சுணங்குபூத் தொளிரும் பேரிள வனமுலை திளைப்ப, நறவுகொப் பளிக்குந் தெரியல்சூழ் மார்ப ணண்மலர் பொருவுமென் கரத்திற், துறவுகொண் டெழுந்த பொலன் சிறையன்னந் தொல்வினைத் தொடரறுத் தின்ப, நிறைகடற் றிளைக்கு மவரினின் புற்று நீடிரை வாவிபுக் கதுவே.

முற்படலத்திலே தமயந்தியும் நளனும் ஒருவர் குணங்களை யொருவர்கேட்டு வருந்தின விதமும், அவன் அவ்வருத்தம் பொறாது பூங்காவனத்திற் சென்றதும், அங்கே தெய்வவன்னத்தைப் பிடித்துவிட்ட விதமுஞ் சொல்லி இந்தப்படலத்தில் அவ்வன்னம் அரசனிடத்து வந்து தமயந்தியினழகைப் புகழ்ந்து அவளுக்கு தூதுவிடப்பட்டுப்போய் அவளுடன்பாடு பெற்றுவந்த விதத்தை உணர்த்தத் தொடங்கினர். அவற்றுள் இப்பாட்டால் அன்னந் தன்னிடத்திற் சேர்ந்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். நறவு – தேனை, கொப்பளிக்கும் - கக்குகின்ற, தெரியல்-பூமாலையினுல், சூழ் – சூழப்பட்ட, மார்பன் – மார்பையுடைய நளச்சக்கரவர்த்தியானவன், பிறைவடம் – சந்திர ஆரமானது, கிடந்து - தங்கியும், சுணங்கு - தேமலானது, பூத்து – படர்ந்தும், ஒளிரும் - விளங்கப்பெற்றுள்ள, பேரிளவனம் – பெருமையுமிளமையுமழகும் பொருந்திய, முலை - (தமயந்தியினுடைய) முலைகளை, திளைப்ப – அனுபவிக்கும்படியாக, நாண்மலர்பொருவும்-அன்றுபூத்த தாமரைமலர்போலும், மென்கரத்தின் – மெல்லிய (அவன்) கையினின்றும், துறவுகொண்டு – துறத்தல்கொண்டு, (தொல்வினை) – முன்வினைச் செயலது, (தொடர்) - சம்பந்தத்தை, (அறுத்து) – ஒழித்து, எழுந்த – புறப்பட்ட, பொலன் - பொன்மயமாகிய, சிறை – சிறைகளையுடைய, அன்னம் – அன்னமானது, (துறவுகொண்டு) – துறவறத்தைக்கொண்டு, தொல்வினை – பழவினையாகிய, தொடர் – சங்கிலியை, அறுத்து – கட்டறுத்து, இன்பநிறைகடல் – பேரின்பக் கடலில், திளைக்குமவரின் - முழுகியோர்போல, இன்புற்று - இன்பத்திலுலே மிகுந்து மீள்கின்ற, நிரை - அலகுகளையுடைய, வாவி – தடாகத்தின்கண், புக்கது - சென்றது.

சுணங்கு – பொன்னுரைபோற் சிறிதும் பெரிதுமாகப் படர்வது. பிறை வடங்கிடந்து சுணங்குபூத்தொளிரும் என்றதனால் அவற்றுல் விளங்குகிற மற்றைமகளிர் மூலைகள் போலாது தமயந்தி மூலைகள் அவற்றை விளக்கு மென்று அம்மூலைகளி னியற்கையழகின் சிறப்பைக் குறிப்பித்ததாயிற்று. பேரிளவன மூலையை அன்மொழித் தொகையாக்கி, அப்படிப்பட்ட மூலைகளையுடையவளாகிய தமயந்தி யெனினுமாம். அங்ஙனமுள்ள மூலைகளை அனுபவித்தற் குரியது அரசனது நறவு கொப்பளிக்குந் தெரியல்சூழ் மார்பேயாதலால் அதனை எடுத்துக் கூறினர். அவ்வண்ணம் விட்டதற்குக் கைம்மாறுகத் தமயந்தியைக் கூட்டுதலால் நிலைத்தற்குத் துறவுகொள்ளுதல் காரணமாக்கப்பட்டது. நிலைப்பவென்னுஞ்செயவெனெச்சம் துறவுகொள்ளுதலாகிய பிறவினைகொண்டது. துறத்தல் அன்னத்திற்கு அரசனைவிட்டு நீங்குதல் வீடடைந்தோர்க்கு யான் எனது என்கிற பற்றுக்களைவிடுதல். தொல்வினைத்தொடரறுத்தல் அன்னத்திற்கு மூன்பிடிபட்டுப் புலம்பிய செயலின் சம்பந்தத்தை யொழித்தல். வீடடைந்தோர்க்கு அணுகியாகத் தொடர்ந்த தொடரை யொழித்தல். தொடர் என்பது ஈண்டு உவமையாகு பெயராய் ஆணவம், மாயை, கன்மம் என்னு மும்மலங்களையு முணர்த்திற்று. இம்மூன்றனோடு மாயேயம், வைந்தவம் என்னும் இரண்டுங் கூட்டியைந்தென்பதுமாம். அதனை "மோகமிக வுயிர்கடொறு மூடனுய்கிற்கு – மூலவாணவமொன்று முயங்கிநின்று" எனவரூஉம் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானறிக. கடவுளுலகத்தை யின்பநிறைகடலென்றூர் உவமையணி. இதுமுதல் மூப்பத்தெட்டுச் செய்யுள்கள் பெரும்பாலும் முதற்சீரு மூன்றுஞ்சீரு மைந்தாஞ்சீரு மாறுஞ்சீரும் விளச்சீர்களும், மற்றவைமூன்றும் மாச்சீர்களுமாகி வருகிற எழுசீர்க்கழி நெடிலடி நான்குகொண்ட ஆசிரிய விருத்தங்கள். 1

பொன்னிறத் தூவிப் பவளவாய்ச் செங்காற் பொற்புறு பசிய
சூட்டரச, வன்னமெய் யுதறிற் சிறையுளர்ந் தயல்சூ முனக்குழாத்
திடைவந் தரலுங், கன்னவிறலோ ளிறைகரத் தழுந்துஞ் சிறை
யினைக் காண்டலும் வெருவி, முன்னைய தன்றென் றிருந்தபுட் குல
ங்கண் முளரியந் தடத்தகன் றனவே.

இதனுல் அன்னம் விடுபட்டபின்பு நிகழ்ந்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். பொன் - பொன்வடிவமாகிய, நிறம் - காந்திபொருந்திய, தூவி – இறகையும், பவளம் - பவளம்போலும், வாய் - வாயையும், செம் – சிவப்புநிறம்பொருந்திய, கால் – அடிகளையும், பொற்புறு - அழகான்மிகுந்த, பசிய - பசுமைபொருந்திய, சூட்டு - உச்சிக் கொண்டையையுமுடைய, அரசவன்னம் - அரசவன்னமானது, மெய் - தன்னுடம்பை, உதறி - (சிலிர்த்) துதறி, சிறை - சிறைகளை, உளர்ந்து – (மூக்கினுலே) கோதிக்கொண்டு, அயல் – பக்கத்தில், சூழ்-(தன்னைக்கண்டுவந்து) சூழ்ந்த, அனம்-அன்னங்களது, குழாத்து-கூட்டத்தினது, இடை – நடுவில், வதிதரலும் – தங்கியவளவில், இருந்த – (அங்)கிருந்த, புட்குலங்கள் – அப்பறவைக் கூட்டங்களானவை, கல் - மலை

போல, நவில் – செய்யப்பட்ட, திரள் - குவிந்த, தோள் – தோள்களையுடைய, இறை – அரசனது, கரத்து – கையிலுள், அழுந்தும் – அழுந்திய, சிறையினை - (அதன்) சிறைகளை, காண்டலும் – பார்த்தவளவில், முன்னையது, அரசனுற் கொண்டுபோகப்பட்டவரசவன்னம், அன்றென்று – அன்றென்றுநினைத்து, வெருவி - அஞ்சி, முளரி - தாமரையையுடைய, தட்டத்து - தடாகத்தினின்றும், அகன்றன – நீங்கிப்போயின எ-று.

வதிதரல் – இதன்கண் தரல் தூனை வினை விகுதி. மெய்யுதறல் புழுதி உதிர்த்தற்கு; சிறையுளர்தல் தினவு தீர்த்தற்கு. அரசவன்னமாதலாற் பறவைக் கூட்டத்திற்கு நடுவே தங்கியதென்க. முன்னையதன் றென்றெனவே, இத்வேற்றுப் பறவையென்று நினைத்தன வென்றதாயிற்று. ஆகவே வேற்றுப் பறவையைக் காணும்போது அஞ்சிப் பறந்துபோதல் பறவைகளுக்கியல்பாதலால் வெருவினவென்க. பறவையின் சாதித்தன்மையைச் சொல்லுதலால் தன்மைநவிற்சியணி. முன்னையது – இதில் ஐ - சாரியை. இறைகப்பம் வாங்குவோன். 2

புள்ளினமிரிய மதுக்குடம் விரிந்தாற் போலுமென்மலர் நறும் பொகுட்டி, னுள்ளுறையன்னங் கொலைத்தொழில்சிறிது முளற்றில னிறையெனத்தறிக், கள்ளவிழ்கமல மலரெனவகன்ற கரத்தினின் மீட்டும்வந்தெய்தி, யள்ளிலைநெடுவே லண்ணறனுளத்திலதிசயமிகவிளைத்துறைக்கும்.

இதனுல் அன்னம் அரசனிடத்துக்கு மீண்டுவந்து பேசத்தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். புள் - பறவைகளது, இனம் – கூட்டமானது, இரிய – அஞ்சியோட - (அதன்பின்), மதுக்குடம் - தேன்குடமானது, விரிந்தா – வாய்மலர்ந்ததாயின், போலுமென் – ஒக்குமெனப்படுகின்ற, மலர் - தாமரைப்பூவினது, நறும் – பரிமளம்பொருந்திய, பொகுட்டினுள் – கொட்டையின்கண்ணே, உறை – தங்கிய, அன்னம் – அவ்வன்னமானது, கொலை – கொலையாகிய, தொழில் – தொழிலில், சிறிதும் – சிறிதாயினும், இறை – அரசனுவன், உளற்றிலனென – (என்னிடத்தே) செய்திலனென்று, தேறி – தெளிந்து, கள் – தேனையுடைய, அவிழ் – மலர்ந்த, கமலமலரென – தாமரைப்பூவென்று (மயங்கியதுபோல), அகன்ற - (முன்னேதான்) நீங்கப்பெற்ற, கரத்தினில் – கையின்கண்ணே, மீட்டும் – திரும்பியும், வந்து – வந்து, எய்தி - அடைந்து, அள் - கூர்மைபொருந்திய, இலை - இலைபோலும், நெடு - நெடிய, வேல் – வேலையுடைய, அண்ணல் - அவ்வரசனது, உளத்தில் - மனத்தின்கண்ணே, அதிசயம் – ஆச்சரியத்தை, மிக – மிகுதியாக, விளைத்து - உண்டாக்கி, உரைக்கும் – சொல்லும் எ-று.

கமலம்-கம்—நீரில், அலம்—பிரகாசிப்பது; தாமரை. கொலைத்தொழில் சிறிது முளற்றில னென்றதனுல் கைப்பிடியினுலும் வருத்தில னென்றதாயிற்று. மீட்டுமென்னும் பிறவினை தன்வினைப் பொருளில் வந்தது.

"நட்பாடாறேற்றூதவ ரென்பதுபோல" நெடுநாட்பழகி நம்பிக்கை பெற்றதுபோலத் தானுக விரைந்து வந்தமையால் அரசனுக்கு ஆச்சரியமுண்டாயிற் றென்பது கருத்து. அன்றியும் நெடுவேலண்ண லென்றதனுல் ஆயுதபாணியாகிய அவனிடத்து அப்படி வருதல் சிறிதுங் கூடாத காரியமாதலால் மிகவியாத்தென்றார். மதக்குடத்திற்கு வாய்மலர்தலில்லாமையால் இல்பொருளுவமையணி. அரசன்கையை யடைதற்கு ஏதுவாகாத அம்மலங் குதலை யேதுவாகக் குறித்தலாலே ஏதுத்தற்குறிப்பணி. மயங்கியதுபோ லென்னுஞ் சொற்கள் தொகுத்துவந்தன. 3

அளியின முரன்று துளிகரு வருந்து மைங்கணைக் கிழவன்
னெறிக, டெளிவரு நூலோர் வேட்டமன் னவர்தஞ் செய்தொழி
லென்பதெற் படுத்து, மெளிவரு மென்ற னயர்வினை நோக்கி விடுத்
தலி னிரங்குநீர்த் தரங்க, நளிர்கட லுடுத்த புடவியிற் றருமந
ாட்டிய தனது பேரளியே.

இதனுல் தனக்குச் செய்தவுதவியால் அன்னம் அரசனருளைப் புகழ்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அளியினம் – வண்டினமானது, முரன்று – ஒலித்து, துளி – துளிக்கின்ற, கரு – தேனை, அருந்தும் – உண்ணப் பெறுகின்ற, ஐங்கணை – பஞ்சபாணத்திற்கு, கிழவ – உரிய மன்மதனே, நன்னெறிகள் – நல்ல வழிகளை, தெளிவரு – ஐயந்திரிபின்றியுணர்ந்த, நூலோர் – தருமநூலையுடையோராகிய, மன்னவர் – அரசரும், வேட்டம் – வேட்டையை, தம் – தமக்குச் செய் – செய்தற்குரிய, தொழில் – தொழிலாகும், என்பர் – என்றுசொல்லுவார், (அப்படியிருக்க) இரங்கு – ஒலிக்கின்ற, நீர் – குணம்பொருந்திய, தரங்கம் – அலைகளையுடைய, நளிர் – குளிர்ச்சிபொருந்திய, கடல் – கடலை, உடுத்தமருங்கிற்கொண்ட, புடவியில் – பூமியின்கண், என்படுத்தும் – (நீ) என்னைப் பிடித்தும், எளிவரும் – எளிதிற் கிடைத்த, என் – எனது, அயர்வினை – வருத்தத்தை, நோக்கி – பார்த்து, விடுத்தலின் – விடுதலால், தருமம் – இந்தத் தருமத்தை, நாட்டியது – (உன்னிடத்தே) நிறுத்தியது, உனது – உன்னது, பேர் – பெரிய, அளியே – கருணையே (இதற்கையமில்லை.

கிழவன் – தலைவன், குரிஞ்சிக்கிழவனெனல்போல், அளியின முரன்று துளிகருவருந்து மைங்கணைக்கிழவ – இவற்றை ஒருமொழியாகக்கொண்டு மன்மதனென்று பொருள்கொள்க. அவ்வடைகள் அப்பொருளை விளக்குதற்குக் கூடிவருதலால் மன்னவருமென்னும் உயர்வு சிறப்பும்மை தொக்கது. நூலோரை மனுமுதலியோரென்றுகூறி அவர் வேட்டைமன்னவர் தொழிலென்ப ரெனினுமாம். மிருகங்கள் பயிர் முதலியவற்றை யழித்தலாலும் பறவைகள் மலமூத்திராதிகளிலே பூஞ்சோலை பூந்தடாக முதலியவற்றைக் கெடுத்தலாலும் அவற்றைக் கொல்லுதல் குற்றவாளியைத் தண்டித்தல்போலு மாதலால் அரசர்க்குரித்தென்று அறநூல் கூறுமென்க. புடவியில் விடுத்தலின் என்றதனுல் எனக்கொப்பான அரிய பொருள்களை வருந்

திச் சம்பாதிப்பாரன்றி அவை யெளிதிற் கிடைப்பிற் கைவிடுவா ரொருவரு மில்லாத பூமியி லென்றதாயிற்று. விடதலறத்தை நாட்டியது, போலி யென்று எப்படி யறிந்தாயெனில், புகையினாலே நெருப்பையறிதல்போல அறநூல் விதியையு நோக்காது என்னயர்வை நோக்கிவிடுதலால் அனுமித் தறிந்தே னென்றதாயிற்று. ஏகாரம் - தேற்றப் பொருளில்வந்தது. அர சனுகிய வுபமேயத்தை ஐங்கணைக் கிழவனுகிய வுபமானச்சொல்லினு லாகு பெயராகச் சொல்லுதலால் வருவகவுயர்வு நவிற்சியணி. அரசனழகை யிங்கே கிறப்பித்ததற்கு அவன் வடிவமேயன்றிச் செய்கையு மழகியதென்பது கருத்தாம். 4

வருந்தமுன் புகன்றகொடியவென் மொழியின் வருபிழை யனைத்தையு மின்னே, திருந்தலர்க் கடந்தோய் மகிழுமா செய்து தீர்க்குவன் றினஞ்செய்வோன் வெய்தா, விரித்ததன் கதிரினலைகட லுடுத்த மேதினி யிடத்தபைங் கூழ்கள், கரிந்தன தளிர்ப்ப வெள்ளிவீ ழுன்ன கணமழை பொழிவது கடுப்ப.

இதனுலே ஆயின்மீண் டிங்கேன்வந்தாயென்னும் வினவிற்கு உத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். திருந்தலர் – பகைவரை, கடந்தோய்-வென்றவனே, முன் - நான் பிடிபட்டிருந்தபோது, வருந்த – (நீ) வருந்தும்படி, புகன்ற – சொல்லப்பட்ட, என் – எனது, கொடிய – கொடியதாகிய, மொழின் - சொல்லினால், வரு-வந்த, பிழையனைத்தையும் – குற்ற முழுதையும், மகிழுமா – (வருந்தியநீ) மகிழும்படியாக, செய்து – (ஒரு பெரிய வுபகாரத்தைச்) செய்து, அலை-அலைகளையுடைய, கடல் - கடலை, உடுத்த – மருங்கிற்கொண்ட, மேதினி யிடத்த - பூமியிலுள்ளனவாகிய, பைங்கூழ்கள் - பயிர்களானவை, (வருந்த)-வருந்தும்படி, தினஞ்செய்வோன் – சூரியனனவன், வெய்தா – கொடிதாக, விரிந்த – விரிக்கப்பட்ட, தன் – தனது, கதிரின் – கிரணத்தினால், (வரு)-வந்த, (பிழை யனைத்தையும்) – குற்றமுழுதையும், கரிந்தன – வாடிய அப் பயிர்கள், தளிர்ப்ப – செழிக்கும்படியாக, வெள்ளி வீழன்ன - வெள்ளி விழு தகள்போலும், கணம் – அளிகளையுடைய, மழை - மழையை, பொழிவது கடுப்ப – பொழிவதுபோல, தீர்க்குவன் – (நான்) தீர்ப்பேன், இன்னே-இப்போதே எ-று.

திருந்தலர் - திருந்துத லில்லாதவர். ஆறு - கடைக்குறை. விரித்த வென்பது எதுகைநோக்கி மெலிந்து நின்றது. உபமானோபமேயங்களி லொன்றற்கொன் றிணங்கவேண்டுஞ் சொற்கள் கூட்டப்பட்டன. தீர்க் குவன் - இது தன்மையொருமைமுற்று. தினகரன் என்னும் வடமொழி நோக்கித் "தினஞ்செய்வோன்" என்றார். எங்ஙனஞ் சூரியன் தன் சுடுங் கதிரால் வருந்திய பயிரைத் தானே மழைபெய்து தளிப்பிப்பானோ அப்ப டியே என் கொடுஞ்சொல்லால் வருந்திய வுன்னை யானே குபகாரஞ்செய்து மகிழ்விப்பே னென்பது பொருள். சூரிய கிரணத்தாற் பூமியினுள்ள நீர

ணுக்கள் வானத்திற் கொண்டுபோகப்பட்டு மேகமாய் மழை பெய்யுமாக லிற் சூரியன் மழைக்கு நிமித்தகாரணமாதலறிக. "நீங்கிய விகாரப்பிரமமா மீச னிகழ்த்தமோ தொழில் பலவென்னிற், பூங்கதிரிச்சை யின்றியே மாரி பொழிமழைக் கதிரினுற் பொழியா, வாங்கதினிழலிற் பொருந்தியங்நிழல் யலர்முகிலான்மறைத் தொழித்தத், தூங்கி மகரத்தால் வெங்கதிரானீர் தொலைத்ததைத்தன்னெ டாக்குதல்போல்" இதனுலறிக. வெள்ளி வீழுன்ன கணமழையென்னு முபமான முகத்தாலே தன்னுலேசெய்யப்படு முபகாரம் பெரிதாமென்பதுங் காட்டியது. அதை வெளிப்படச் சொல்லின் தற் புகழ்ச்சியா மாதலின் எப்போது செய்யுமோவென்னு மையமொழித்தற்கு இன்னேயென்றது இம்முவமையணி. 5

மல்லலம் புவனம் பொதுவறப் புரக்கு மன்னவர் மன்னநின் றனக்கோர், புல்லிய பறவை யியற்றுகைம் மாறொன் றிலதெனும் புணர்ப் பறிந்தாலு, மொல்லையிற் கைம்மா றியற்றுதி யென்னு மருத்தியென் னுளத்தின தாசி, யல்லலுற் றழுந்த வீருமா லதனை யடிகள்கேட் டருளியென் றறையும்.

இதனுலே சக்கரவர்த்தியாகிய வெனக்கு உன்னுற் செய்யப்படும் நன்றியாதென வினுவிற்கு உத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். மல்லல் – வளம்பொருந்திய, புவனம் – பூமியை, பொது – பொதுமையினின்றும், அற – நீங்க, புரக்கும் - காக்கின்ற, மன்னவர்மன்ன - அரசர்க்கரசனே, நின்றனக்கு - உனக்கு, ஓர் புல்லியபறவை ஒரு சிறிய பறவையால், இவற்று – செய்யத்தரும், கைம்மாறொன்று - ஒருதிர்நன்றி, இலதெனும் - இல்லையென்கின்ற, புணர்ப்பு - நியாயத்தை, அறிந்தாலும் - (யான்) அறிந்திருந்தும், ஒல்லையில் - விரைவிலே, கைம்மாறு - ஒருதிர் நன்றியை, இயற்றுதியென்னும் – செய்யென்றேவுகின்ற, அருத்தி – ஆர்த்தியானது, என் – எனது, உளத்தினதாகி – மனத்திலுள்ளதாகி, அல்லலுற்று – துன்பமிகுந்து, அழுந்த – (அதில்) அழுந்தும்படியாக, ஈரும் – அறுக்கின்றது, அடிகள் – சுவாமீ, அதனை – அந்நன்றியை, கேட்டருளியென்னு – கேட்டருளென்று, அறையும் – (அன்னஞ்) சொல்லும் எ-று.

பொதுவறப் புரத்தலாவது:—பல வரசர்க்கும் பொதுமையைக் கெடுத்துத் தனக்கே சிறந்ததாகக் கொண்டாளுதல். நீதியால் எல்லாவரசரும்போலன்றி விசேடமாகப் புரத்தலெனினுமாம். பறவையென்னும் படர்க்கைப் பெயர் தன்மையில்வந்தது இடவழுவமைதி. உடம்பு நிலையாமைபற்றி ஒல்லையி னென்றது, "மற்றறிவா நல்வினையா மிளையமென்னுது, கைத்தண்டாம்போழ்தே கரவாதறஞ்செய்மின், முற்றியிருந்த கனியொழியத் தீவளியா, னற்காயுதிர்தலுமுண்டு" இதனுலறிக. இற்றுதி அருடி என்னு முன்னிலை வினைமுற்றுக்கள் ஏவற்பொருளில் வந்தன. ஆர்த்தியென்கிற வடமொழி அருத்தியெனத் தற்பவமாயிற்று. அதாவது தன்னுற் செய்யப்பட்டதைப் பின்னேதீதென்று அறிந்தவருந்துதல். புல்லியபறவை அல்

லலுற்றழுந்த ஈரும் என்றவற்றால் அவ்வுபகாரஞ் சிறிதாயிருந்தாலும் என் வருத்த நோக்கிப் பெரிதாகப் பாவித்து ஏற்றுக்கொள்ளுதல் உனக்குக் கடனுமென்றதாயிற்று. 6

பொன்னினிற் செய்த வள்ளவா யமுதம் பூவையைக் கிள்ளை யை யருத்திக், கன்னலி னமிழ்திற் கனிந்தமென் சொற்கள் பயிற் றியுங் கேட்டுளங் களிப்பார், மன்னவர் மன்ன நின்னுளத் தேறு மடமொழி யாயினு மீதோ, ரன்னமென் சொல்லென் றதிசயஞ் சிறப்ப வகமலர்ந் தினிதுகேட் டருளாய்.

இதனால் அன்னந் தன்சொல்லை விரும்பிக் கேட்கவேண்டுமெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொன்னினில் - கனகத்தினாலே, செய்த - செய்யப்பட்ட, வள்ளவாய் - கிண்ணத்திலுள்ள, அமுதம் - அமிர்தத்தை, பூவையை - நாகணவாய்ப்புள்ளையும், கிள்ளையை - கிளியையும், அருத்தி - குடிப்பித்து, கன்னலின் - சர்க்கரையினும், அமிழ்தின் - அமிர்தத்தினும், கனிந்த - மதுரமூறிர்ந்த, மெல் - மெல்லிய, சொற்கள் - சொற்களை, பயிற்றியும் - கற்பித்தும், கேட்டு - (அவைபேசக்) கேட்டு, உளங்களிப்பார் - (உலகத்தார்) மனமகிழுவார் (ஆகையால்), மன்னவர்மன்ன - அரசர்க்கரசனே, ஈது - இச்சொல்லானது, நின்னுளத்து - உனது மனத்தில், ஏறு - ஏறமாட்டாத, மடம் - அறியாமையோடு கூடிய, மொழியாயினும் - சொல்லாயினும், ஓரன்னம் - ஓரன்னத்தினது, மெல் - மெல்லிய, சொல்லென்று - மொழியென்று, அதிசயம் - ஆச்சரியமானது, சிறப்ப - சிறந்ததோன்ற, அகமலர்ந்து - மனமகிழ்ந்து, இனிது - இனிதாக, கேட்டருளாய் - (நீ) கேட்டருளுதி எ-று.

பயிற்றியுங் கேட்டுளங்களிப்பா ரென்றதனால் அம்முயற்சி செய்யாதிருக்க அவை தாமாகவே வந்து பேசுமாயின் யார்தான் செவிகொடா ரென்பது தோன்றுகின்றது. நின்னுளத்தே மடமொழியாயினு மென்றதனால் எஞ்சொற் பயனற்றதாகத் தோன்றினாலும் பூவைக்கிளிகளின் சொற்கள்போல உன்செவி யறிவிற் கின்பஞ்செய்தற் பொருட்டாவது இனிதாகக் கேட்கவேண்டு மென்றதாயிற்று. கேட்டருளாய் என்கிற முன்னிலை யெதிர் மறைவினை முற்று உடன்பாட்டுப் பொருளில் வந்தது; வேண்டிக் கோடல்பொருள்பற்றி. இதற்குவிதி "செய்யாயென்னு முன்னிலை வினைச்சொற் செய்யென் கிளவியாகிடனுடைத்தே" என்பதாம். அப்பறவைகளின் சொல்லிலே தீஞ்சுவை மிகுவித்தற்குக் காரணமாகாத பொன்னினிற்செய்த வள்ளவாயமுதம் அருத்தலை அதற்குக் காரணமாகச் சொல்லுதலாற் கற்றோர் நவிற்சியணி. உலகத்தார் பூவைக்கிளிகளின் சொல்லைக் கேட்கலாகிய பொதுப்பொருளால் அன்னத்தின் சொல்லையுங் கேட்கலாமென்னுஞ் சிறப்புப்பொருளைச் சாதித்தலால் வேற்றுப்பொருள் வைப்பணி. 7

குடவளை யினங்கள் வயிறுளைந் தின்ற குருமணி கருவென வயிர்த்து, மடன்முறுக் கவிழுங் கமலமென் பொகுட்டில் வரிச் சிரைக் குருகடை கிடைக்குந், தடநிறை வாளை பகட்டின முகளுந் தண்பணை விதர்ப்பநா டுடையோன், விடுசுடர் பரப்பி வினங்கு பொற் கழலான் வீமனென் றுளனொரு வேந்தன்.

இதுமுதலிய செய்யுட்களால் முன்னே அடிகள் கேட்டருளியென்று சொல்லப்பட்டதில் அதையென்று சுட்டப்பட்டது சொல்லப்படுகின்றது.

இ-ள். குடம் - குடம்போலும், வளையினங்கள் - சங்கினங்களால், வயிறு - (தம்) வயிறு, உளைந்து - நொந்து, ஈன்ற - தரப்பட்ட, குரு - நிறம் பொருந்திய, மணி - முத்துக்களே, கருவென-முட்டைகளென்று, அயிர்த்து-மயங்கி, மடல் - இதழ்களது, முறுக்கவிழும் - கட்டவிழ்ந்த, கமலம் - தாமரைப்பூவினது, மெல் - மெல்லிய, பொகுட்டில் - கொட்டையின்கண்ணே, வரி - நீட்சிபொருந்திய, சிறை-சிறைகளையுடைய, குருகு-நாரைகளானவை, அடைகிடக்கும் - அவயங்காக்கப்பெறுகின்ற, தடம் - தடாகத்தையும், நிறை-பருத்த, வாளை - ஆண்வாளைகளானவை, பகட்டு - எருமைக்கடாக்களுடைய, இனம்-இனத்தின்மேல், உகளும்-குதிக்கப்பெறுகின்ற, தண்-தண்ணிய, பணை-கழனிகளையும்உடைய, விதர்ப்பநாடு - விதர்ப்பதேசத்தை, உடையோன்-உடையவனும், விடு - வீசப்படுகின்ற, சுடர் - கிரணங்களே, பரப்பி - விரித்து, விளங்கு - விளங்காநின்ற, பொன் - பொன்னாலாகிய, கழலான் - வீரக்கழலையுடையவனும் ஆகிய, ஒருவேந்தன் - ஓரரசனவன், வீமனென்று-வீமனென்று சொல்லப்பட்டு, உளன் - இருக்கின்றான் எ-று.

விதர்ப்பநாட்டி னிலவள நீர்வளங்களைப் புகழ்தலால் வீமனது செல்வச்சிறப்பும், அவன் வீரக்கழலின் விளக்கத்தைச் சொல்லுதலால் அவனரசாட்சிச் சிறப்புஞ் சொல்லியவாறும். ஆகவே பின் அவன் மகளைக் குறித்துச் சொல்லப்படுஞ் சம்பந்தத்திற்கு அவனைத் தனக்குத் தகுந்தவனைக் கொள்ளுதற்கு அடிப்படை செய்ததாயிற்று. குருகு-நாரையெனபது "குருகுவண்டான மென்ப கொய்யடி நாரையின்பேர்." இதனாலறிக. அந்நாரைகள் முத்துகளைத் தம்மூட்டைகளென்று மயங்கலால் மயக்கவணி. 8

அருந்தவத் தமன முனியருள் வரத்தா லாயிழை யரம்பையர் தம்மின், முருந்திள முறுவ னுகமந் னையரின் முகிழ்முலைப் புவி மடந் தையரின், வருந்தியு முவமை கூறுதற் கரிதா வனப்பொரு வடிவெடுத் தனைய, கருந்தட நெடுங்கட் கதிர்முலைத் தூவ்வாய்க் கன்னியை யரிதினிற் பயந்தான்.

இ-ள். அரு - அரிய, தவம் - தவத்தையுடைய, தமனமுனி - தமன முனியினின்றும், அருள் - அருளாற் பெறப்பட்ட, வரத்தால் - வரத்தினாலே, ஆய் - ஆராய்ந்தெடுக்கப்பட்ட, இழை - ஆபரணங்களையுடைய, அரம்

பையர்தம்மின் – தெய்வமங்கையருள்ளும், முருந்து – மயிலிறகினடிபோலும், இளமுறுவல் – சிறிய பற்களையுடைய, நாகமங்கையரின் – நாகலோக மங்கையருள்ளும், முகிழ் – தாமரையரும்புபோலும், மூலை – மூலைகளையுடைய, புவிமடந்தையரின் – பூலோகத்து மங்கையருள்ளும், வருந்தியும்-வருத்தமுற்றும், கூறுதற்கு – சொல்லுதற்கு, உவமை – உபமானம், அரிதா-இல்லாததாக, வனப்பு – அழகானது, ஒருவடிவு – ஒரு (மங்கை) வடிவத்தை, எடுத்தனைய – எடுத்தாற்போலும், கரு – கரிய, தடம் – விசாலம்பொருந்திய, நெடு – நெடிய, கண் – கண்களையும், கதிர் – காந்திபொருந்திய, முலை – முலைகளையும், தவர் – பவளம்போலும், வாய் – வாயையுமுடைய, கன்னியை-ஒருபெண்ணை, அரிதினில் – அரியசெயலால், பயந்தான் – (அவ்வீமராசன்) பெற்றான் எ-று.

அருந்தவத் தமனமுனி யென்றதனால் அவன் மேலான வரத்தைத் தருவதற்கு வல்லவனென்பது குறிக்கப்படுகின்றது. தமனமுனிவரமென்னுது தமனமுனியருள் வரத்தாலென்றதனாலே அம்முனி தனக்குச் செய்த வழிபாட்டின் மிகுதியால் வீமன்மேற் கருணைகூர்ந்து கொடுக்கப்பெற்ற தென்றதாயிற்று. அரம்பையர்க்கு ஆயிழையென்றும், நாகமங்கையர்க்கு முருந்திள முறுவலென்றும், புவிமடந்தையர்க்கு முகிழ்முலையென்றும், அடைகள்கொடுக்கப்படுதலால் அவ்வவ்வுலகத்திற் சிறந்த அரசமகளிரென்று கொள்க. வருந்தியுமுவமை கூறலாவது அவர் குணங்களையெல்லாமாராய்ந்து ஒருபுடை யொப்பாகக் கூறுதல். இங்கே அரிதென்றது இன்மைப் பொருளில் வந்தது. வடிவெடுத்தா லென்பது ஈறுகெட்டுவந்தது, மூன்றுலகங்களினும் உபமான மில்லாமையால் வனப்பொரு வடிவெடுத்தாலென்றது. கண்களு முலைகளும் வாயும்போகத்திற் சிறந்தவையாதலால் அவை சிறப்பித்துச் சொல்லப்பட்டன. அரசனுக்கு அவள்மேலாசை பிறப்பித்தற்கு இன்னும் விவாகமில்லையென்பது தோன்றக்கன்னியென்றது. அரிதினிற்பயத்தல்-நெடுங்காலம் மகவில்லையென்று வருந்தி நோற்றவையாம். 9

களைகடிந் தொதுங்குங் கடைசியர் நெடுங்கண் காவிமென் மலரெனக் கருதி, விளரிவண் டினங்க ளெமமருங் கழனி விதர்ப்பர் கோன் றவத்தினிற் றோன்றி, முளரியந் தவிசி லினிதுவீற் றிருக்கு முகிழ்முலை மதர்விழித் திருவே, தளிர்நலங் கவற்று மலத்தக மலர்த்தாட் டமயந்தி யெனும்பெயர் தரித்தாள்.

இ-ள். முளரி – தாமரைப்பூவாகிய, அம் – அழகிய, தவிசில் – ஆதனத்தில், இனிது – இனிதாக, வீற்றிருக்கும் – எழுந்தருளி யிருக்கின்ற, முகிழ்-தாமரை யரும்புபோலும், முலை – முலைகளையும், மதர் – மதர்த்த, விழி-கண்களையுமுடைய, திருவே – சீதேவியே, களை – (பயிர்) களையை, கடிந்து-பிடுங்கி, ஒதுங்கும் – நடக்கின்ற, கடைசியர் – உழத்தியருடைய, நெடுங்கண்-நெடியகண்களை, காவி – நீலோற்பலங்களுடைய, மென்மலரென – மெல்லிய மலர்களென்று, கருதி – நினைத்து, விளரி – விளரிராகத்தைப் பாடுகின்ற,

வண்டு – வண்டுகளுடைய, இனங்கள் – இனங்களானவை, அலமரும் – சுழலுகின்ற, கழனி – கழனிகளுடைய, விதர்ப்ப – விதர்ப்ப தேசத்தாருக்கு, கோன் – அரசனுகிய வீமனது, தவத்தினில் – தவத்தினாலே, தோன்றி-பிறந்த, தளிர்நலம் – தளிர்களிற் சிறந்ததை, கவற்றும் – வருத்துகின்ற, அலத்தகம் – செம்பஞ்சுக் குழம்பையுடைய, மலர் – செந்தாமரை மலர்கள் போலும், தாள் - பாதங்களையுடைய, தமயந்தியெனும் - தமயந்தியென்கின்ற, பெயர் – பெயரை, தரித்தாள் – தரித்திருக்கின்றாள் எ-று.

கடைசியர் நெடுங்கண் காவிமென்மலரெனக் கருதியென்ற அங்காட்டி லுள்ள சாதாரணமான மகளிரழகைச் சிறப்பிக்கவே அரசன் மகளாகிய தமயந்தியினழகு இத்தன்மையதென்று விளங்குமாறறிக. திருவேயென்னுந் தேற்றேகாரத்தால் பெயர் மாத்திரமே வேறு மற்றைக் குணங்களிற் சிறிதும் வேறுபாடில்லை யென்றதாயிற்று. கண்களைக் காவிமலரென மயங்குதலால் மயக்கவணி. தமயந்தியென்னும் பெயரினாலே புகழ் பொருளினது தன்மையை ஒழித்து அப்பொருளினது தன்மையை ஆரோபித்தலால் வஞ்சக வொழிப்பணி. 10

நீனிற முகிலோ பசியசை வலமோ நெடுந்திரை கொழித்த தெள்ளறலோ, பானலங் கொண்ட பணிமொழித் துவர்வாய்ப் பைந்தொடி கரியமென் கூந்த, றேனின முரன்று துதைந்துதா தாடுஞ் சினைமலர்த் தொடையொடும் வேய்ந்து, நானமும் புழுகுங் கமழ்தர நீவி நள்ளிருள் குடியிருந் ததுவே.

இதுமுதற் பதினைந்து செய்யுட்களால் அன்னம் அவ்வுபகாரப் பொருளாகிய தமயந்தியினது தலைமயிர் முதல் அடியளவும் புகழ்தலால், இதனுற் கூந்தற் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். பால் – பாலினது, நலம் – தித்திப்பை, கொண்ட – (தன்னிட த்தே) கொண்ட, பணி – வணக்கம்பொருந்திய, மொழி-சொல்லையும், அவர்-பவளம்போலும், வாய் – வாயையுமுடைய, பைந்தொடி – தமயந்தியினது, கரிய-கருமைபொருந்திய, மெல் - மெல்லிய, கூந்தல் - கூந்தலென்று சொல்லப்படுகிற பொருள், நீனிறம் – நீலநிறம்பொருந்திய, முகிலோ - மேகமோ, பசிய – பசுமைபொருந்திய, சைவலமோ – கொடிப்பாசியோ, நெடுந்திரை-நெடிய கடலலைகளாலே, கொழித்த – கொழிக்கப்பட்ட, தெள்ளறலோ-தெள்ளிய கருமணலோ, தேன் – வண்டுகளது, இனம் – கூட்டமானது, முரன்று – ஒலித்து, துதைந்து - நெருங்கி, தாது – மகரந்தத்தில், ஆடும்-விளையாடப்பெறுகின்ற, சினைமலர் – தோட்டுப்பூக்களாலாகிய, தொடையொடும் - மாலையையும், வேய்ந்து – சூடப்பெற்று, நானமும் – கத்தூரியையும், புழுகும் - புழுகையும், கமழ்தர – பரிமளிக்க, நீவி – தடவப்பெற்று, நள்ளிருள் - பாதியிரவி னிருளானது, குடியிருந்தது – குடியிருக்கப்பெற்றனது (அப்பொருள்) எ-று.

வெள்ளே மேகத்தை ஒழித்தற்கு நீனிறமுகிலென்றூர். பசியசைவலம்-முற்றிய கொடிப்பாசி. நெடுந்திரையென்றதனுல் கடலலையென்பது பெறப் பட்டது. தெள்ளற லென்றதனுல் அதனுல் மாசொழித்துத் தூய்தாக்கப் பட்டமை தோன்றுகின்றது. "கொண்டலுங் கூந்தற் கமுகுங் கொன்றைக் காயும் மிருளுந், தண்டலையுங் கார்மணலுஞ் சைவலமும் - வண்டினமுந், தண்குழலியொப்பாம்." என்று உவமான சங்கிரக மூரைத்த வாறே உபமா னங்களாகிய முகில் முதலியவற்றில் ஐயந்தோன்றிற்றென்க. கூந்தலென் றறிந்தபின் அதனிடத்தே சந்தேகம் பிறக்குமோவெனின் இங்கே பெயர் மாத்திரங் கூந்தலெனப் படுவதன்றிப் பொருள் அம்மேக முதலிய மூன்று மொன்றென்பதே கருத்தாமென்க. இவ்வுரை பின்வருவனவற்றிற்குங் கொள்க. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புகற்பூ என்னு நான்கனுள்ளே கோட்டுப்பூச் சிறந்ததாகலிற் சினைமலரென்றூர். அவை சண்பகம், மகிழ், புன்னாக முதலியவாம். தொடையொடு என்றதில் ஒடுவருபு செயப்படு பொருளில் வந்தது உருபு மயக்கம். "யாதனுருபிற் கூறிற்றாயினும் பொ ருள்சென்மருங்கின் வேற்றுமைசாரும்" என்பது தொல்காப்பியவிதி. தொ டையொடுமென்னும்உம்மையால் மற்றைக் கொடிப்பூ முதலியனவுங் கொள் ளப்படும். நள்ளிருளென்றது சந்திரனது தேய்வுக்கும் வளர்ச்சிக்கும் நடு நாளாகிய அமாவாசியி னிருளெனினுமாம். ஒளிக்கு முன்னீங்காது விளங் கலாற் குடியிருந்த தென்றது. இருந்ததுவே யெனக் குற்றிய னுகரத்தின் முன் வகரவுடம்படுமெய் வந்தது. கூந்தலின் கருமை யொளியைத் தன்மை வாய்ந்த இருளாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். முதல் வாக்கியத்தில் வந்த ஐயவணியும் இதனுஞ் சேர்தலாற் சேர்வையணி. 11

கண்கவர் வனப்பிற் சிந்துரக் தீட்டிக் கவின்செய்பொன் னிற
த்ததாய்ச் சிறந்த, தண்பிறைக் கொழுந்தோன் றுளதெனிற் றில
கத் தையல்வா ணுதலினே நிகர்க்குந், தெண்கட லமிழ்திற் கனிந்த
வந் தீஞ்சொற் சேயிழை முகத்தொளிர் புருவம், வெண்கதிர்க்
குடையி லிரதியு மதனும் வைத்தகை வில்லினே பொருவுப.

இதனுல் நெற்றிச்சிறப்பும் புருவங்களின் சிறப்புஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கண் - கண்களின்பார்வையை, கவர் – தன்னிடத்தேயிழுத்துக் கொள்ளுகின்ற, வனப்பின் – அழகையுடைய, சிந்துரம் – சிந்துரதிலகத்தை, தீட்டி – எழுதப்பெற்று, கவின்செய் – அழகைச்செய்கின்ற, பொன்னிறத்த தாய் - பொன்னிறத்தை யுடையதாகி, சிறந்த – உயர்ந்த, தண் – குளிர்ச்சி பொருந்திய, பிறைக்கொழுந்தோன்று – ஓரிளம்பிறையானது, உளதெ னின் – உளதாயின், தையல் - தமயந்தியினது, திலகம் – சிந்துரதிலகத்தை யுடைய, வாள் – ஒளிபொருந்திய, நுதலினே-நெற்றியை, நிகர்க்கும் - (அது) ஒக்கும், தெள் – தெள்ளிய, கடல் – பாற்கடலினது, அமிழ்தின் – அமிர்தம் போல, கனிந்த – முதிர்ந்த, அம் – அழகிய, தீம் – மதுரம்பொருந்திய, சொல் – சொற்களையும் உடைய, சேயிழை – தமயந்தியினது, முகத்து –

முகத்திடத்தே, ஒளிர் – விளங்காநின்ற, புருவம் – இரண்டு புருவங்களும், இரதியும் – இரதிதேவியாலும், மதனும் – மன்மதனாலும், வெண்கதிர் – சந்திரனுடைய, குடையில் – குடையின்கண்ணே, வைத்த – வைக்கப்பட்ட, கைவில்லிணை – (அவர்) கைவில்லிரண்டையும், பொருவும் – ஒத்திருக்கும்.

இந்துரம் அதனாலே செய்யப்பட்ட திலகத்தை யுணர்த்தலால் ஆகு பெயர். உலகெனினிகர்க்கு மென்றதனால் இப்போதுள்ள பிறைக்கு அவ்வாறாய திலகமும் பொன்னிறமும் மில்லாமையால் ஒவ்வாதென்றதாயிற்று. அங்ஙனந் தோன்றும் பிறை ஒன்றுளதாயினென்றதனாலும் நுதலினிகர்க்குமென உபமேயத்தை உபமானமாக்குதலாலும் இல்பொருள்தற்குறிப்பணியாம். மன்மதனுக்குச் சந்திரன் குடையாதலால் வெண்கதிர்க்குடையிலென்றது. தமயந்தியின் முகத்தைச்சேர்ந்த விரண்டு புருவங்களையும் அக்குடையைச்சேர்ந்த அவ்விரண்டு விற்களாகக் குறித்தலாலே தற்குறிப்பணியாம். 12

குமிழ்மிசை மறிந்து குழையெதிர் நடந்து கொலைத்தொழின்
மறலியைப் பயிற்றி, யமிழ்தினின் விளர்த்து ணஞ்சினிற் கருகி
யையரி சிதறிமை தோய்ந்து, கமலமென் மலரை வனம்புகுத்திய
வேற் கண்ணிணை மான்மரு ணோக்கந், தமதெனக் கவர்ந்து கொண்
டவோ மடமான் றடங்கணின் செயல்கவர்ந் தனவோ.

இதனுள் கண்களின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். குமிழ் - குமிழம்பூவினது, மிசை - மேற்பக்கத்தில், மறிந்து – மீண்டு, குழை – குழையெனப்படுகின்ற காதணிக்கு, எதிர் - முன்பாக, நடந்து – சென்று, கொலை – கொல்லுதலாகிய, தொழில் - தொழிலை, மறலியை – யமனுக்கு, பயிற்றி – கற்பித்து, அமிழ்தினில் – அமிர்தத்தினும், விளர்த்து – சுற்றிடம் விளர்த்து, உள் – நடுவில், நஞ்சினில் – விடத்தினும், கருகி – கறுத்து, ஐயரி – அழகிய ரேகைகள், சிதறி – சிதறப்பெற்று, மை – அஞ்சனத்திலே, தோய்ந்து – முழுகி, கமலமென் – தாமரையெனப்படுகிற, மலரை - பூவை, வனம் – காட்டிலே (நீரிலே,) புகுத்திய - அடைவித்த, வேல் - வேல்போலும், கண்ணிணை - (தமயந்தியின்) கண்களிரண்டும், மான்மானினது, மருள் – மருட்சிபொருந்திய, நோக்கம் – பார்வையை, தமதென – தம்முடையதென்று, கவர்ந்து கொண்டவோ – வெளவிக் கொண்டனவோ, மடமான் - தமயந்தியினுடைய, தடம் – விசாலம்பொருந்திய, கணின் – கண்களினது, செயல் – செய்கையை, கவர்ந்தனவோ – (அம்மான் கண்கள்) வெளவிக் கொண்டனவோ எ-று.

குமிழென்னுமுபமானச் சொல்லால் மூக்கென்னுமுபமேயஞ்சொல்லப்படுதலால் உருவகவயர்வு கவிற்சியணி. மேன்மூக்கினிரு பக்கத்திலுந் தடையுண்டு சொல்லமாட்டாமையால் மறிந்தென்றது. எதிர் நடந்தென்றதனால் குழை காதைச்சூழவிடப்பட்ட வொரு காதணியென்க; அன்றெனின்

ஆகுபெயராக்கி அதனையுடைய காதென்றுகொள்க; மறிதலும் எதிர்நடத்தலுங் கண்களுக்குச் சுபாவமாதலால் தன்மை நவிற்சியணி. கொலைத் தொழில் மறலியைப் பயிற்றுதலில்லாதிருக்கப் பயிற்றுதற் சம்பந்தத்தைக் கற்பித்தலால் தொடர்புயர்வு நவிற்சியணி. இதனுலே கொலை செய்தலில் யமனிலும் வலியன வென்னுட் பொருள் தொனிக்கின்றது. அமிழ்தும் நஞ்சுஞ் சேர்த்துச் சொல்லப் படுதலால் அவை பாற்கடலிற் பிறந்த தேவாமிர்தமும் ஆலகாலமுமாம். கமலத்தை வனத்திலே புகுத்தலாகிய சம்பந்தத்தைக் கற்பித்தலால் தொடர்புயர்வு நவிற்சியணி. இது சிலேடையை அங்கமாகக் கொண்டுவந்தது. வேற்கண் உவமைத் தொகையணி. மருளேக்கம் – அஞ்சியனபோற் பார்த்தல். கொண்டவோ? கவர்ந்தனவோ எனச் சந்தேகத்தைச் சொல்லுதலால் ஐயவணி. இங்ஙனம் பலவணிகளுஞ் சேர்தலாற் சேர்வை யணியாம். 13

வேனில்வேள் வனப்பு நோக்குதற் கமைத்த விளங்குகண் ணுடியோ வொளிரும், பானலங் கண்வா ளூட்டியே கிடந்த சாணையின் படிவமோ கபோலங், கான்வழிந் தொழுகுஞ் சண்பக மலரைக் கடிந்துமென் குமிழினைத் துரந்துள், ளூனைய மூருக்கு மொழுகுபொற் கொடிமூக் குவமையா முரைக்குமா றரிதே.

இதனுலே கபோலங்கள் மூக்கு இவற்றின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒழுகு – நேர்மைபொருந்திய, பொன் – பொன்மயமாகிய, கொடி – பூங்கொடிபோல்பவளது, கபோலம் – கதுப்பென்று சொல்லப்படுகிற பொருள்களானவை, வேனில் – வசந்தகாலத்திற்குரிய, வேள் – மன்மதனுனவன், வனப்பு – அழகை, நோக்குதற்கு - பார்த்தற்காக, அமைத்த, (நான்முகனுல்) உண்டாக்கப்பட்ட, விளங்கு – விளங்காநின்ற, கண்ணுடியோ – கண்ணுடிகளோ, ஒளிரும் – விளங்கா நின்ற, பாலனம் – கருங்குவளை மலர்போலும், கண் – கண்களாகிய, வாள் – (அவனுடைய) வாள்களை, தீட்டிய – தீட்டுதற்பொருட்டு, கிடந்த – தங்கிய, சாணையின் – சாணைக்கல்லினுடைய, படிவமோ – வடிவங்களோ, கான் – வாசனையானது, வழிந்து – பெருகப்பெற்று, ஒழுகும் – நீண்ட, சண்பகமலரை – சண்பகப் பூவை, கடிந்து – கோபித்து, மென்குமிழினை – மெல்லிய குமிழம்பூவை, துரந்து – தூரத்தி, உள் – (கண்டோர்) உள்ளத்தையும், ஊனையும் – உடம்பையும், உருக்கும் – உருக்காநின்ற, மூக்கு – (அவளது) மூக்குக்கு, உவமை – உபமானத்தை, யாம் – நாம், உரைக்குமாறு – சொல்லும்வழி, அரிது – இல்லை எ-று.

ஒழுகுபொன் - மாற்றுயர்ந் தில்லிய பொன்னெனினுமாம். மன்மதனழகிற் சிறந்தவளதலால் வனப்பு நோக்குதற்கென்றும், கண்ணினருகே யிருக்கையால் கண்வாளூட்டிய வென்றும் சொல்லிற்று. காமன் சம்பந்தமான பொருள்களெல்லாங் காமநோயை வளர்க்குமாதலால் அவன் சம்பந்தமான கண்ணுடியுஞ் சாணைக்கல்லுமென்றது. கபோலங்களே அப்படிப்பட்ட கண்

ணுடிகளுஞ் சாணைக்கற்களுமாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. இதனை யுறுப்பாகக்கொண்டு ஐயவணி வந்தது. சண்பகமணம் மூக்கின் சுவாசத் திருக்கின்றமையால் அதற்குக் கான்வழிந் தென்கிற அடை கொடுக்கப் பட்டது. சண்பகத்தைக் கடிதலுங் குமிழைத் தரத்தலுமில்லாதிருக்க அவைகளைக் கற்பித்தலால் தொடர்புயர்வு நவிற்சியணி. உவமை இல்லை யென்றதனால் உபமானந்தொக்க தொகையுவமையணி. இவைபலவுஞ் சேர் தலாற் சேர்வையணியாம். 14

வள்ளைவார் காது நோக்கின ருள்ள மகிழ்ந்தினி தாடுபொன் னூசல், கள்ளவி ழாம்பற் செய்யவாய் பவளக் கடிகைவா ணீகை யொளிர் தரளந், தெள்ளிதிற் கோத்துப் பவள வள்ளத்திற் சேர்த் திய தாகுமஞ் செறிசொல், கிள்ளையங் கிளவி குயின்மொழி யலதி யாதெனக் கிளக்கலா வதுவே.

இதனுற் காதுகள், வாய், பல்வரிசைகள், சொல் இவற்றின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். வள்ளை - வள்ளயிலேபோல்கின்ற, வார் - நீட்சிபொருந்திய, காது - (அவள்) காதுகளானவை, நோக்கினர் - பார்த்தவருடைய, உள்ளம் - உள்ளங்களானவை, மகிழ்ந்து - களித்து, இனிது - இனிதாக, ஆடு - ஆடப் பெறுகின்ற, பொன்னூசல் - பொன்னூஞ்சல்களாகும், கள் - தேனை யுடைய, அவிழ் - மலர்ந்த, ஆம்பல் - அல்லிமலர்போலும், செய்ய - சிவப்பு நிறம்பொருந்திய, வாய் - (அவள்) உதடானது, பவளக்கடிகை - பவளத் துண்டாகும், வாள் - காந்தி பொருந்திய, நகை - (அவள் வாயைச்சேர்ந்த) பல்வரிசையானது, ஒளிர் - விளங்குகின்ற, தரளம் - முத்துக்களே, பவள வள்ளத்தில் - பவளக்கிண்ணத்தினுள்ளே, தெள்ளிதின் - தெளிவுடைய தாக, கோத்து - கோத்தல்செய்து, சேர்த்தியதாகும் - சேர்க்கப்பட்ட கோவையாகும், அஞ்செறி - அழகானிறைந்த, சொல் - (அவள்) சொல் லுக்கு, கிள்ளை - கிளியினது, கிளவி - சொல்லும், குயில் - குயிலினது, மொழி - சொல்லும், அலது - (உபமானங்கள்) அல்லாமல், யாதென - (வேறே) யாதென்று, கிளக்கல் - சொல்லுதல், ஆவது - ஆகும் எ-று.

வள்ளைவார்காது - உவமையணி. காதுகள் தோள்களினளவுந் தொங்கி ஊசல்போல அசைவுற்றுக் கண்டோர்மனந் தம்மைச் சேர்ந்து களிகூர்ந் திருக்கப் பெறுதலாலே நோக்கினருள்ள மகிழ்ந்தினிதாடுபொன்னூசலென் றது, காதினை அப்படிப்பட்ட ஊசலாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. கள்ளவிழாம்ப லென்றதனால் ஆம்பலிலே தேன்போல வாயிலே தீஞ்சுவை நீர்கொள்ளப்படும். உதட்டிலே பவளத் துண்டையும், வாயைச்சேர்ந்த பல் வரிசையிலே பவளக்கிண்ணத்தைச்சேர்ந்த முத்துக்கோவையையும், ஆரோ பித்தலால் அவ்விரண்டும் உருவகவணிகள். உபமானத்திற் கேற்கப் பல்வரி சைக்கு வாயைச் சேர்ந்தவென்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. சொல்லுக் கழகு சுருங்கச்சொல்லன் முதலியன. கிள்ளையங்கிளவி சுரம்பற்றியுஞ்

சொற்பற்றியும் உபமானமாதலாலுங் குயின்மொழி சுரமொன்றையே பற்றி உபமான மாதலாலும் அது முன்னும் இது பின்னும் வைக்கப் பட்டன. 15

ஒழுகொளி விரிந்த கதிர்மணி வண்ண னுந்தியந் தாமரை யுறைவோன், முழுமதிக் கலையு ணிறைந்தபே ரழகை மொண்டு கொண் டரிபரந் தகன்ற, மழைமதர் நெடுங்கட் டமயந்தி வதனம் வகுத்தனன் கரத்தினு லெடுத்த, புழைவழித் தோன்றும் விசும் பின் னன்றே களங்கமென் றின்னமும் புகல்வார்.

இதனுலே முகத்தின் சிறப்பு சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒழுகு – நீள்கின்ற, ஒளி – காந்தியையுடைய, விரிந்த – பரந்த, கதிர் – கிரணங்களே யுடைய, மணிவண்ணன் – நீலமணிபோலும் நிறத்தை யுடைய திருமாலது, உந்தி – நாபியிலுண்டாகிய, அம் – அழகிய, தாமரை – தாமரைப்பூவில், உறைவோன் – வாசஞ்செய்கின்ற நான்முகக்கடவுள், முழு மதிக்கலையுள் – பதினாறுகலைகளாலுநிறைந்த சந்திரனிடத்தே, நிறைந்த – நிரம்பிய, பேரழகை – உயர்வாகிய சாரத்தை, மொண்டுகொண்டு – (கையி னுலே) மொண்டுகொண்டு, அரி – இரேகைகள், பரந்த – படரப்பெற்று, அகன்ற – விசாலமாகிய, மழை – குளிர்ச்சிபொருந்திய, மதர் – களித்திருக் கின்ற, நெடு – நெடிய, கண் – கண்களேயுடைய, தமயந்தி – தமயந்தினது, வதனம் – முகத்தை, வகுத்தனன் – படைத்தான், கரத்தினுல் – கையினுல், எடுத்த – எடுக்கப்பெற்ற, புழைவழி – துவாரத்தின்வழியிலே, தோன்றும் – காணப்படுகிற, விசும்பினேயன்றே – (நீலநிறமுள்ள) ஆகாயத்தையன்றே, களங்கமென்று – களங்கமென்று, இன்னமும் – இப்போதும், புகல்வார் – சொல்லுவார் (உலகத்தார்.) எ-று.

மணியென்பது நவமணிகளுக்குப் பொதுப்பெயராகியும் சிலவிடங் களிலே, நீலமணிக்குச் சிறப்புப்பெயராகியும் வருதலாலே நீலமணியெனப் பொருள் கூறப்பட்டது. ஒரு பிரளய முடிவிலே நான்முகக்கடவுள், திரு மால் வயிற்றுட்சென்று அவனது நாபியிலே *தோன்றிய கமலத்தின் வழி யாக வெளிப்பட்டு • அதிலிருக்கின்றனென்பது * புராணத் துண்மை. பேரழகென்றது இங்கே சந்திரனது சிறந்த பங்கு. அரிபரந்தகன்ற மழை மதர் நெடுங்கணென்னும் அடையை முகத்துக்குக் கொள்ளாது தமயந்திக் குக் கொள்க. காரணமாகச் சொல்லப்பட்ட சந்திரசாரத்தினுலே உயர் வுடைய முகத்தழகாகிய காரியந் தோன்றலாலே காரணப்பூனவிலி புகழ்ச்சி

* கூர்மபுராணம் – அரியயன் வரம்பெற்ற அத்தியாயம் "என்னலும் வயிற்றிற் புகுந்தெழுகடலு மெழுபெருந்தீவு மேழுலகு – மன்னிய புவன மனேத்தையு நோக்கி மனத்திறும் பூதறுங்காலத் – துன்னியவாயி லொன் பது மாயோன் சுருக்கலும் வரும்வழி யுணரான் பொன்னிதழ்க்கமல நாள மீன் றனேயிற் போந்தயர் பொகுட்டில் வந்தனனால்"

யணி. "புழைவழித் தோன்றும் விசும்பினையன்ரே களங்கமென் றின்ன மும் புகல்வார்" எனவே அது களங்கமன்று அப்பங்கு எடுபட்டபள்ளத்தே தோன்றுகிற நீலவாய மென்றதாயிற்று, களங்கத்திலே அவ்வாயத்தன் மையை ஆரோபித்தற்கு அதனது தன்மையை ஒழித்தலாலே ஒழிப்பணி. இவைபலவுஞ் சேர்ந்து வருதலாற் சேர்வையணியாம். 16

செய்புறு மமுதப் பசுங்கரும் பேய்ப்பத் திரண்டழ கொழுகு மென் றடந்தோள், பெய்வளை முன்கைக் கிணையன வகுத்த பொருள்களிற் பேசுவ தெவனோ, வெய்யவன் கதிர்க ளலர்த்து செங்கமல மெல்லடிக் குடைந்தன வென்றூற், கையிணை மலருக் கிணையென வுரைத்தல் சுழிமட னலத்துவ றிலேய.

இதனுள் தோள்கள் முன்னங்கைகள் இவற்றின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். மெல் – மெல்லிய, தடம் – பெரிய, தோள் – (தமயந்தியி னுடைய) தோள்களானவை, செய்புறும் – கழனியிலிருக்கிற, அமுதம் – அமிர்தத்தையுடைய, பசுங்கரும்பேய்ப்ப – பசியகரும்புபோல, திரண்டு – திரட்சிபொருந்தி, அழகொழுகும் – அழகு பெருகப் பெற்றிருக்கும், பெய் வளை – இடப்பட்ட வளையல்களையுடைய, முன்கைக்கு – (அவள்) முன்னங் கைகளுக்கு, இணை – உபமானம், அயன் – நான்முகக் கடவுளால், வகுத்த- படைக்கப்பட்ட, பொருள்களில் – பொருள்களுள்ளே, பேசுவது – சொல் லத்தகுவது, எவன் – யாது, வெய்யவன் – சூரியனுடைய, கதிர்கள் – கிர ணங்களால், அலர்த்து – மலர்த்தப்படுகின்ற, செங்கமலம் – செந்தாமரை மலர்களானவை, மெல்லடிக்கு – மெல்லிய வடிகளுக்கு, உடைந்தனவென் றூல் – தோற்றனவென்று சொன்னால், இணை – இரண்டாகிய, கை – கைக ளாகிய, மலருக்கு – மலர்களுக்கு, இணையென – உபமானமென்று, உரைத் தல் – சொல்லுதற்குக் காரணம், கழி – மிகுந்த, மடனலத – அறியாமையல் லாமல், வேறு – மற்றொரு காரணம், இலே – இல்லே எ-று.

அயன் – பிறத்தலில்லாதவன்; இது உபசாரவழக்கு செழுமையும் கிள ர்ச்சியும் நல்ல நிறமும் உபமேயத்திலே குறிப்பித்தற்குச் செய்புறு மமு தப் பசுங் கரும்பென்றது. பசுங்கரும்பேய்ப்ப – உவமையணி. எவனென பது இன்மைப்பொருளில் வந்தது. அயன்வகுத்த பொருள்களில் ஒரு ப மானந் தோன்றுமையால் தொகையுவமையணி. செங்கமலத்திற்கு வெய்ய வன் கதிர்களலர்த்தென்ற அடை அது தம்மியல்பின் மலர்ச்சியையுடைய மெல்லடிகளுக்குத் தோற்றற்குரிய குணத்தை யுடையனவென்னுங் கரு த்தை யுட்கொண்டிருத்தலாலே கருத்தடையணி. இதனுலே உபமேயமாகிய அவ்வடிகளுக்கு விசேஷந் தோன்றுவதாகிய வேற்றுமையணி தொனிக் கின்றது. கமலம் கீழ்ப்பட்ட வடிகளுக்குத் தோற்றமையைச் சொல்லவே மேற்பட்ட கைகளுக்கிணையாகாமை தோன்றுதலாலே செய்யுட் பொருட் பேரணி. இவை பலவுஞ் சேர்தலாலே சேர்வையணியாம். 17

இழையிடை புகாது மார்பிடங் கொண்ட வேரிள வனமுலை வள்ளைக், குழைபொருங் கண்ணி யெழிற்கடற் பிறந்த குமிழியோ வதனிடை நீந்த, விழைவுறு மதனும் பருவமு மமைத்து விளங்கு பொற் குடங்கொலோ வதனிற், றழைசிறை நேமிப் புட்கொலோ கமல முகைகொலோ வென்கொல் சாற்றுவதே.

இதனுல் முலைகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். இழை – நூலும், இடை – நடுவிலே, புகாது – நுழையாதிருக்கும்படி, மார்பு – மார்பை, இடம் – (தமக்) கிடமாக, கொண்ட – கவர்ந்த, எரிளவனம் – அழகும் இளமையும் சந்தனக் கோலமும் பொருந்திய, முலை-முலைகளென்று சொல்லப்படுகிற பொருள்களானவை, வள்ளை – வள்ளைபோலுங் காதுகளைச்சூழ்ந்த, குழை – குழைகளோடு, பொரும் – போர்செய்கின்ற, கண்ணி – கண்களையுடையவளது, எழில் – அழகாகிய, கடல் – கடலின் கண்ணே, பிறந்த – உண்டாகிய, குமிழியோ – குமிழிகளோ, அதனிடை – அக்கடலின்கண்ணே, நீந்த – நீந்துதற்கு, விழைவுறு – ஆசைகொண்ட, மதனும், மன்மதனுலும், பருவமும் – மங்கைப்பருவத்தினுலும், அமைத்து – உண்டாக்கப்பட்டு, விளங்கு – விளங்காநின்ற, பொற்குடங்கொல் – பொற்குடங்களோ, அதனில் – அக்கீடலி லிருக்கின்ற, தழை – தழைந்த, சிறை – சிறைகளையுடைய, நேமிப்புட்கொல் – சக்கரவாகப் பறவைகளோ, (அதனில்) அக்கடலிலே தோன்றிய, கமலமுகைகொல் – தாமரையரும்புகளோ, என் – (இவற்றுள்ளே) யாது, சாற்றுவது – (என்னுற் சொல்லப்படுவது) எ-று.

இழையிடை புகாது மார்பிடங்கொண்ட வென்றதனுலே அம்முலைகள் அடிபரந்துயர்ந்து ஒன்றோடொன்று நெருங்கி விளங்குகின்றமை சொல்லப்பட்டதாயிற்று. நீந்துதல் – புனல்விளையாட்டைக் குறித்தென்க. பருவமெனப் பொதுப்படக் கூறினும் எல்லாப் பருவங்களினும்சிறந்த மங்கைப்பருவமென்று கொள்க. ஆழநீரிலிறங்கவஞ்சி யோர்குட முதலியவற்றைப்பற்றியிறங்குதல் உலகவழக்கம். முலைகளை அக்குமிழி முதலியனவாகக் குறித்தலாலே தற்குறிப்பணிகள். இந்நான்கு தற்குறிப்புகளையும் அங்கமாகக் கொண்டு ஐயவ்வணி வந்தது. இத்தற்குறிப்புகள் எழிற்கடலென்ற உருவகத்தாலே பிழைப்பிக்கப்பட்டன. 18

மால்புரி முலைமென் கமலநாண் முகையில் வண்டுவீழ் மாலை
யோ பசும்பொற், சேலைமீ தணிந்த மேகலை மணியி னெருசுடர்
செவ்வ னின்றதுவோ, நூலினு நடங்கு மருங்குரு தனங்க ணுண்
ணிதிற் சலாகைசேர்த் தியதோ, வாலிளந் தளிரி னழகுவீற் றிருந்த வவ்வயி றணிமயி றொழுங்கே.

இதனுல் வயிற்று மயிரொழுங்கின் சிறப்புச்
சொல்லப்படுகின்றது.

இ-ள். ஆல் – ஆலினது, இளந்தளிரின் – சிறு தளிரினது, அழகு-அழகானது, வீற்றிருந்த – கொலுவிருக்கப்பெற்ற, அவ்வயிறு – அத்தம

யந்தி வயிற்றை, அணி - அலங்கரித்துக் கொண்டிருக்கிற, மயிரொழுங்கு- மயிரொழுங்கென்று சொல்லப்படுகிற பொருளானது, மால் – ஆசையை புரி – செய்கின்ற, முலை – முலைகளாகிய, நாள் – மலரும் பருவத்தை யுடைய, மெல் – மெல்லிய, கமலம் – தாமரையினுடைய, முகையில் அரும்புகளில், வீழ் – (வந்து) விழுகிற, வண்டு – வண்டுகளது, மாலையோ- வரிசையோ, பசும்பொன் – பசிய பொன்மயமாகிய சேலைமீது – புடவை யின்மேல், அணிந்த – தரிக்கப்பட்டிருக்கிற, மேகலை – மேகலாபரணத்தி னது, மணியின் – நீலமணியினது, செவ்வன் – நேராக, நின்றது – மேலெழு ந்து நின்றதாகிய, ஒருசூடரோ – ஒருசுதிரோ, நூலினும் – இழையினும் நிக ராக, நுடங்கும் – அசைகின்ற, மருங்கு – இடையானது, இரு துகு – ஒடியா திருக்க, அனங்கன் – மன்மதனுல், நுண்ணிதின் – நுண்ணிதாக, சேர்த்தி யது – சேர்க்கப்பட்டதாகிய, சலாகையோ – இருப்புக்கம்பியோ எ-று.

ஆடவர்க்கு மற்றை யவயவங்களினும் அதிக விருப்பஞ் செய்தல்பற்றி மால்புரி முலையென்றது. மணமுந்தேனும் வெளிப்படாமையால் வண்டு வீழ்தற் கியைபில்லாத இளமுகைகளே யொழித்தற்கு நாண்முகையென்றது. அதாவது அன்றைக்கு மலரும் பருவமுடைய அரும்பாம். வண்டு மாலை யாவது வண்டுகள் இடைவிட்டுப் போகாம லொன்றன்பின் ஞெண்ருகத் தொடருந் தொடர்ச்சி. செய்வ னிற்றலாவது – சாய்வின்றி மேலே நிவந் திருத்தல். நூலினு நுடங்கு நுண்ணியவிடைக்குத் தகுதியாக நுண்ணிதிற் சலாகையென்றது. செவிமுதலிய வுறுப்புகளுக்குக் குழைமுதலியன போல வயிற்றிற் கணியாயழகு செய்தலின் அணிமயிரென்றது. வயிற்று மயி ரொழுங்கை அவ்வண்டுமாலை முதலியனவாகக் குறித்தலாலே தற்குறிப் பணி. இதனை அக்மாகக்கொண்டு ஐயவணி வந்தது. உபமானமாகிய ஆலந் தளிரினது தன்மையை உபமேயமாகிய வயிற்றிலே ஆரோபித்தலாலே காட்சியணி. இதனுலே அம்மயிரொழுங்குக் கிடன் சொல்வது போன்று வயிற்றுச்சிறப்புஞ் சொல்லியதாயிற்று. 19

படைப்புழி வேதன் கமலமென் மலரைப் பழிக்குமென் கரத் திணு னடுவைப், பிடித்தலும் விரல்க ளழுந்திய வரையோ பெட் புறு மங்கையம் பருவ, மடித்தலஞ் சேர்த்தி யேறுதற் கமைத்த படிகொலோ வவ்வயி றணிந்த, மடிப்புறு வரையி னழகினுக் குவமை மற்றுநா முரைக்குமா றெவனே.

இதனுல் வயிற்றுமடிப்புகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். அவ்வயிறு – அத்தமயந்தியின் வயிற்றினுல், அணிந்த – தரிக்கப் பட்டிருக்கிற, மடிப்பு – மடிப்புகளென்று சொல்லப்படுகிற பொருள்களா னவை, படைப்புழி – (அவளைப்) படைத்தபோது, வேதன் – நான்முகக் கடவுளானவன், கமலமென் – தாமரையெனப் படுகிற, மலரை – பூவை, பழிக்கும் – நிந்திக்கின்ற, மெல் – மெல்லிய, கரத்தினுல் – கையினுலே, நடுவை – இடையை, பிடித்தலும் – பிடித்தவளவிலே, விரல்கள் – (அவன்

கை) விரல்களானவை, அழுந்திய – அழுந்துதலா லுண்டகிய, வரையோ-மடிப்புகளோ, பெட்புறு – விரும்பப்படுகின்ற, மங்கையும் பருவம் – மங்கைப்பருவமாகிய (பெண்), அடித்தலம் - அடித்தலங்களே, சேர்த்தி-னன்றி, ஏறுதற்கு – ஏறுதற்காக, அமைத்த – (அவளுலே) உண்டாக்கப் பட்ட, படிகொல் – சோபானங்களோ, வரையின் – அம்மடிப்புகளது, உறு-மிகுந்த, அழகினுக்கு – சௌந்தரியத்துக்கு, உவமை - உபமானம், நாம்-நாம், உரைக்குமாறு – சொல்லுமாறு, எவன் – யாது எ-று.

கமலமென் மலரைப் பழிக்குமென் கரமென்றதனுல் அவண் மெல்லிய இடையைப் பிடித்தற்கு அக்கரந் தகுதியுடைத்தென்றதாயிற்று. நடுவைப் பிடித்தல் அவனளவையறிதற்கென்க. விரல்களமுந்தியவரையென்றதனுல் அழுத்திப் பிடித்தானென்பதும், அங்ஙனம் பிடித்தபோது அங்குட்டம் பின்புறத்திற்செல்ல மற்றைச் சுட்டுவிரல் முதலிய நான்கு விரல்களும் முன்புறத்துச் சென்றமுந்தலால் அவற்றுளொன்றற் கொன்றிடை வெளி களிலெழும்பி மூன்றுவரைக ளுண்டாயினவென்பதுந் தோன்றுகின்றன. வயிற்றுமடிப்புகளே அவ்விரல்களமுந்திய வரைகளாகவும் அப்படிகளாகவுங் குறித்தலால் தற்குறிப்பணிகள். இவை ஐயவணிக்கங்கம். இங்ஙனஞ் சிறப் பிக்கப்பட்டது வரையின் வடிவமே யாதலால் வரையினழகினுக் குவமை யென்று பின்வேறு கூறப்பட்டது. மற்றும் – அசைநிலை எவனென்பது இன்மைப்பொருளில் வந்தது. அழகினுக் குவமையில்லை யெனலால் உப மானந்தொக்க தொகையுவமையணி. 20

சுணங்குபூத் தொருகாழ் மணிவடங் கிடந்த துணையிள வன
மூலை சுமந்து, வணங்கி நாடோறுந் தேய்ந்ததோ பெருகும் வனப்
பெனுங் கடலுளாழ்ந் ததுவோ, கனங்கொள் வண்டார்க்குங் கணை
மதன் கண்ணே றெய்தலுங் கழிந்ததோ வன்றி, யணங்கர வல்
குற் றோன்மிசை வதியு மனங்களே விடையறி கிலேமால்.

இதனுல் இடையின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். இடை - (அத்தமயந்தியினது) இடையென்று சொல்லப்படுகிற பொருளானது, சுணங்கு - தேமல், பூத்து - படர்ப்பெற்று, ஒருகாழ் – ஓரள வாகிய சரங்களையுடைய, மணிவடம் – இரத்தினமாலை, கிடந்த - கிடக்கப் பெற்ற, துணை – இரண்டாகிய, இளவனம் - இளமையுஞ் சந்தனக்கோல மும் பொருந்திய, மூலை – மூலைகளே, சுமந்து - சுமத்தலால், வணங்கி – வளை ந்து, நாடோறும் - தினந்தோறும், தேய்ந்ததோ – (சிறிதுசிறிதாகத்) தேய்ந்து போயிற்றோ, பெருகும் – பொங்குகின்ற, வனப்பெனும் - அழகென்கிற, கடலுள் - கடலுள்ளே, ஆழ்ந்ததுவோ - முழுகிப்போயிற்றோ, கணம் – கூட்டத்தை, கொள் – கொண்ட, வண்டு - வண்டுகளானவை, ஆர்க்கும் – ஒலிக்கப்பெறுகின்ற, கணை – பூவம்பையுடைய, மதன்-மன்மதனது, கண்ணேறு-பார்வைக் குற்றமானது, எய்தலும் – அடைந்தமாத்திரத்திலே, கழிந்ததோ-இறந்துபோயிற்றோ, அன்றி – அல்லாமல், அணங்கு – அழகாகிய, அரவு-

பாம்பின் படம்போலும், அல்குல் - அல்குலாகிய, தேர்மிசை - தேரின்மே லே, வதியும், இருக்கின்ற, அனங்களே - அங்கமில்லாத மன்மதனே, அறி கிலேம் – (யாம்) அறிகிலேம் எ-று.

அநங்கன் – அங்கமில்லாதவன். இடையானது நுண்ணிதாய்க்காணக் கூடாதிருத்தல்பற்றி – அதன்மேலே கணங்கொண்டிருக்கிற இரண்டு மூலே களாலும் அழுத்தப்பட்டுத் தேய்தற்கு வினைமுதலாகவும் அளவற்றிருக்கை யால் அழகைக்கடலாக உருவகஞ் செய்து அக்கடலிலே மூழ்குதற்கு வினை முதலாகவும், ஒருவனேருபொருளே வியந்துற்றுப் பார்த்தால் அப்பொருள் அப்பார்வைக்குற்றந் தாங்கியழிதல் உலகியல்பாகலால் மன்மதனது அப்படிப் பட்ட பார்வைக்குற்றந் தாங்கி அழிதற்குவினைமுதலாகவும், அரசனுக்குத் தேர்போல மன்மதனுக்குப் பகை வெல்லுதற்குத் துணைக்கருவியாகையால் அல்குலேத்தேராக வருவகஞ்செய்து அதன்மேலிருக்கிற உருவமில்லாத மன் மதனேவும், குறித்தலாலே இந்நான்குந் தற்குறிப்பணிகள். இவற்றை அங்க மாகக்கொண்டு ஐயவணிவந்தது. இவற்றுள் முன்னேயமூன்றும் வினைப் பொருட்டற் குறிப்பணி. பின்னது வடிவப்பொருட் டற்குறிப்பு. இவ் வேறுபாடறிதற்கு அவற்றிடை அன்றியென்னுஞ் சொல்வைக்கப்பட்டது. இரண்டாவது தற்குறிப்பு உருவகத்தா லுய்விக்கப்பட்டது. 21

வெங்கதிர்க் கடவுள் கொடிஞ்சியந் தேர்க்கு வியப்புற வாழி யொன் றமைத்த, பங்கமி றெழிலின் பயிற்சியா லனங்கன் பைங் கிளிக் கூந்தன்மான் றேர்க்குச், செங்கரம வருந்த மலரயன் வகு த்த திகிரியோ செய்யபொற் றட்டோ, வங்கர வல்குலதனள வுரை க்கு ஞடவ ரவாவின தளவே.

இதனுல் அல்குல்சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். அங்கு - அவ்வரையிடத்தைச் சேர்ந்த, அரவு - பாம்பின்படம் போலும், அல்குல் – அல்குலென்று சொல்லப்படுகின்ற பொருளானது, மலர் - தாமரைப்பூவிலிருக்கின்ற, அயன் – நான்முகக் கடவுளானவன், வெங்கதிர்க்கடவுள்-சூரியதேவனது, கொடிஞ்சி – மேன்மொட்டையுடைய, தேர்க்கு – இரதத்திற்கு, வியப்புற – ஆச்சரியப்பட, ஆழியொன்று-ஒருருளையை-அமைத்த, அமைவித்த, பங்கமில்-பழுதில்லாத, தொழிலின்-தொழிலினது, பயிற்சியால் - பழக்கத்தினுலே, அனங்கன் – மன்மதனது, பைங்கிளி – பச்சைக் கிளியாகிய, கூந்தன்மான் - குதிரையை யுடைய, தேர்க்கு - இரதத்திற்கு, செங்கரம் - செய்யகைகளானவை, வருந்த - வருத்தமுற, வகுத்த - (அவனுலே) படைக்கப்பட்ட, திகிரியோ - ஒருருளையோ, செய்ய பொற்றட்டோ - (அக்கடவுளாலே ஆம் மன்மதனுக்குப் படைக்கப்பட்ட) செம்பொன்னினுற் செய்ததட்டோ, அதன் – அவ்வல்குலினது, அளவு-(பரப்பி) னளவை, உரைக்கின் - சொன்னுல், ஆடவர் - காளையர் தம், அவா வினது - (அதன்மேலுளதாகிய) ஆசையினது, அளவே - அளவேயாகும். (அது) எ-று.

கொடிஞ்சி - தேர்மேன்மொட்டு, "கூவிரங் கொடிஞ்சி கூம்புதேர் மொட்டே" இதனுலறிக. பலவருளேக ளின்றி யமையாத தேர்க்கு ஒருருளே அமையும்படியாகச் செய்தல் அரிய செயலாதலால் வியப்புறவென்றும், அங்ஙனஞ் செய்யப்பட்டது நெடுங்காலமாக நிலேபெறுதலாலேபங்கமிறுழி லென்றும் கூறிற்று. பின்செய்யப்பட்ட விதற்குச் செங்கரம் வருந்த வென லால் அதினுமிது சிறந்ததாகச் செய்யப்பட்டமை தோன்றுகின்றது. அல் குல் அப்படிப்பட்ட உருளேயும் பொற்றட்டுமாகக் குறித்தலாலே தற்குறிப் பணிகள். இவற்றையுறுப்பாகக்கொண்டு ஐயவணி வந்தது. அதனளவு ஆடவ ரவாவினதளவெனவே அவ்வவாவினளவைப் போலவே அல்குற் பரப்பி னளவைக் காணக்கூடா தென்றதாயிற்று. "ஐயோவகலல்குல் சூழ்வருதற் காழித்தேர் - வெய்யோர்க் கனேகநாள் வேண்டுமே" என்னூர் பிறரும். அல்குலினளவுயாது? அது ஆடவரவாவினதள வென்பதுபடத் தோன்று நிறவிரண்டு வாக்கியப் பொருள்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லுதலாலே காட்சியணி. 22

மாந்தளிர் மேனி யரம்பையை வனப்பின் வென்றமான் றிர ண்மணிக் குறங்கு, கூந்தலம் பிடியின் கொழுங்கரந் துரந்து குல விய கவின்குடி யிருந்து, சேந்தநுண் பஞ்சின் மென்மைய வாகிச் செழுமணி மேகலை தாங்கி, யேந்தெழிற் கன்னி யரம்பையின் குல க்க ளியாவையு மெளிதின்வென் றனவே.

இதனுல் தொடைகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். மா - மாவினது, தளிர் - தளிர்போலும், மேனி - வடிவத்தை யுடைய, அரம்பையை - அரம்பையென்பவளே, வனப்பின் - அழகினுலே, வென்ற - வென்ற, மான் - தமயந்தியினுடைய, திரண்மணி - திரட்சியும் அழகும்பொருந்திய, குறங்கு - தொடைகளானவை, கூந்தல் - கூந்தலேயு டைய, பிடியின் - பெண்யானேயினது, கொழுங்கரம் - செழிய துதிக்கை யை, துரந்து - துரத்தி, குலவிய - விளங்குகின்ற, கவின் - காந்தியானது, குடியிருந்து - குடியிருக்கப்பெற்று, சேர்ந்த - சிவந்த, நுண் - நுண்ணிய, பஞ்சின் - பஞ்சினுமதிகமான, மென்மையவாகி - மெல்லியகுணத்தை யுடை யனவாகி, செழுமணி - செழிய நவமணிகளாலாகிய, மேகலை - மேகலையை, தாங்கி - சுமந்து, ஏந்து - ஏந்தப்பட்ட எழில் - அழகையுடைய, கன்னியரம் பையின் - இளவாழைகளுடைய, குலங்கள் யாவையும் - குலங்களேயெல்லாம், எளிதின் - வருத்தமில்லாமல், வென்றன - வென்றன எ-று.

மாந்தளிர் மேனியரம்பை யென்றதனுலே அவளழகிற்சிறந்தவ ளென்ற தாயிற்று. அரம்பை - தேவ கன்னிகையரு ளொருத்தி. வென்ற வென் னும் பெயரெச்சக் குறங்கென்னும் பெயர்கொண்டது. அரம்பையை வனப் பின்வென்ற குறங்கெனவே அவளுடைய வெல்லா அவயவங்களி னழகுங் கூடி இவளது தொடையழகுக்குங் குறைந்ததென்பதாயிற்று. அரம்பைக்கு அவ்விருபொருள்களும் "அரம்பை தெய்வப்பெண்வாழை" இதனுலறிக.

அவ்விரண்டரம்பைகளையும் வெல்லுதலும் பிடியின் காத்தைத் தரத்தலும் இல்லாதிருக்க அவற்றின் சம்பந்தத்தைக் கற்பித்தலாலே தொடர்புயர்வு நவிற்சியணி. 23

பூங்கழை குழைக்கும் வேனில்வேள் பகழி பொதிந்த பொன்னவம் வெங்கொடுப்ப, வாங்கவன் வெற்றி குறித்திட விரிஞ்சனமைத்தகா களம்வெரீஇ யரற்றத், தேங்கமழ் வாவி நீரிடைக் குளித்துச் சினைவரான் மறைந்திட வரையிற், றூங்குதேன் பெய்த பச்சிளங் கழையைத் தோழமை கொண்டன கணைக்கால். .

இதனால் கணைக்கால்களின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். கணைக்கால் – (தமயந்தியினுடைய) கணைக்கால்களானவை, பூங்கழை – அழகிய கருப்புவில்லை, குழைக்கும் – வளைக்கின்ற, வேனில் – வசந்தகாலத்திற்குரிய, வேள் – மன்மதனது, பகழி – பூவம்புகளால், பொதிந்த – நிறைந்த, பொன் – பொன்மயமாகிய, ஆவம் – அம்புக்கூடானது, வெங்கொடுப்ப – (தோற்றுப்) புறங்கொடுக்கவும், ஆங்கு – அந்தக்காலத்தில், அவன் – அம்மன்மதனது, வெற்றி – வெற்றியை, குறித்திட – குறிக்கும்படியாக, விரிஞ்சன் – நான்முகனால், அமைத்த – படைக்கப்பட்ட, காகளம் – காளமானது, வெரீஇ அரற்ற – அஞ்சியொலிக்கவும், தேங்கமழ் – தேன்மணக்கப் பெற்றிருக்கின்ற, வாவி – தடாகத்திலுள்ள, நீரிடை – நீரின்கண்ணே, குளித்து – மூழ்கி, சினை – கருவையுடைய, வரால் – வராலானது, மறைந்திட – ஒளித்துக்கொள்ளவும், (செய்த) வரையில் – மலையின்கண்ணே, தூங்கு – தங்கிய, தேன் – தேனை, பெய்த – வார்த்தவளர்க்கப்பட்ட, பச்சிளங்கழையை – பசுமையு மினமையும் பொருந்திய மூங்கிலோடு, தோழமை – நட்பை, கொண்டன – கொண்டிருந்தன எ-று.

ஆவத்திற்குப் பகழிபொதிந்த வென்றும் பொன்னென்றும் அடைகள் சேர்த்தமையாற் கணைக்காலில் ஆடவரது மனவலியைக் கெடுக்கின்ற குணமும் பொன்னிறமுங்கொள்க. மன்மதன் காகளமெனப்பட்டது குயிலாம். "கடிமுரசங் கங்குல் களிறு குயின் காளங் - கொடிமகரந் திங்கள் குடை" இதனாலறிக. குயில் வடிவத்திற்குங் காமுகரை வருத்துதற்குங் கொள்ளப்படும். சினைவராலுக்கு வயிறுபோலக் கணைக்காலிற்குப் பின்புற மேற்பங்கு பருத்திருத்தல்கொள்க. வெங் கொடுப்ப – வெரீ. இயரற்ற – மறைந்திட – இவ்வினையெச்சவடுக்கை முடித்தற்குச் செய்து என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. ஆவ முதலியவை வெங் கொடுக்கச் செய்கை முதலியவற்றின் சம்பந்தத்தைக் கற்பித்தலாலே தொடர்புயர்வு நவிற்சியணி. மூங்கிலுக்குக் கண்டோரால் விரும்பப்படுகிற அதன் செழுமை முதலிய குணங்கள் தோன்றற்கு வரையிற்றூங்கு தேன் பெய்தவென்னு மடைகொடுக்கப்பட்டது போலும், தோழமை கொண்டனவென்றதற்கு அவைகளை யொத்திருக்கின்றன வென்பது கருத்து. 24

முருகவிழ் செய்ய கமலமுண் ணெகிழ்ந்து முகமலர்ந் தூறுக
ணீர் சிந்தி, யொருபசுந் தாளின் வனத்தினின் றரிதி னுஞற்றிய
தவத்தினு லன்றே, விரிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி மென்
சிறை யனமென மிழற்றும், பரிபுர மணிந்து பஞ்சியூட் டியபொற்
பதத்தினைச் சிறிதுபோன் றனவே.

இதனுல் அடிகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். முருகு – பரிமளமானது, அவிழ் – விரியப்பெற்றிருக்கின்ற, செய்யகமலம் – செந்தாமரை மலர்களானவை, உண்ணெகிழ்ந்து – மன முருகி, (உட்கட்டுவிட்டு) முகமலர்ந்து – முகக்கிளர்ச்சிகொண்டு – (நனி விரிந்து) உறு – மிகுந்த, கணீர் – ஆனந்தக் கண்ணீரை, (தேனுகியநீரை) சிந்தி – பொழிந்து, ஒருபசுந்தாளின் – பசிய ஒருகாலினுலே; (ஒருநாளத் தினத்தினுலே) வனத்தில் – காட்டிலே, (நீரிலே) நின்று – நின்று, அரிதின்- அரிதாக, உஞற்றிய – செய்த, தவத்தினுலன்றே – யோகத்தினுலன்றே, விரி – விரிந்த, மலர் – மலர்களையும், அசோகின் – அசோகத்தினது, தளிர் நலம் – தளிர்களி லுயர்ந்ததையும், கவற்றி – துன்பப்படுத்தி, மென்சிறை- மெல்லிய சிறைகளையுடைய, அனமென – அன்னம்போல, மிழற்றும்- ஒலிக்கின்ற, பரிபுரம் – சிலம்பை, அணிந்து – தரித்து, பஞ்சி – செம் பஞ்சை, ஊட்டிய – அப்பப்பெற்ற, பொன் – பொன்னிறம்பொருந்திய, பத்தினை – அடிகளை, சிறிதுபோன்றன – ஒரு சிறிது ஒத்தன எ-று.

தாமரைக்கு முகமலர்தல் சூரியன்முன்னே யாதலால் அது தவத்திற் சூன்கொள்க. வனத்திற்சென்றொரு தாளானின்று மனங்கழைந்து சூரியனை நோக்கி யானந்தக்கண்ணீர் பொழிந்து செய்யப்படுகிற யோகம் தாமரைக் குச் சிலேடையாற் சொல்லப்பட்டது. பதத்தினைச் சிறிது போன்றன வென்பதற்கு அந்த யோகத்திற்குப் பயனுகத் தமயந்தியின் பதசாரூப்பியத் திற் சிறிது பெற்றனவென்பது பொருள். சரியை - கிரியை - யோகம்- ஞானம்-இவற்றிற்கு முறையே - சாலோக்கியம் - சாமீப்பியம் - சாரூப்பியம்- சாயுச்சியம் இவை பயன்களாமென்பது சைவாகமத்திற் காண்க. பதத் தினைச் சிறிதுபோலுதற் கேதுவாகாத அத்தாமரையினது அப்படிப்பட்ட நிலைமையாகிய தவத்தை யேதுவாகக் குறித்தலாலே ஏதுத் தற்குறிப்பணி. தாமரை தன்னுலே விரும்பப்பட்ட பதசாரூப்பிய முழுதும் அடையாமை யைச் சொல்லுதலால் தகுதியின்மையணி. இவைசேர்தலாற் சேர்வையணி.

இத்தகை வனப்பின் மடவர றன்னை யெவ்வுழிக் கண்டனை யென்னிற், பைத்தபாம் பல்கு லரம்பையர் வதியும் பதிதறந் திம் பரிற் போந்து, மொய்த்தலும் பொய்கை காணிய தேய முழுவதுங் குறுகின னவற்றுட், கைத்தல மமர்ந்த கெல்லியங் கனியிற் கண்ட னன் விதர்ப்பர்கோ னகரில்.

இதனுல் நீ அவளை எங்கேகண்டாய் என்கிற வினவோடு
கூடிய உத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். இத்தகை - இப்படிப்பட்ட, வனப்பின் - அழகினையுடைய, மடவரல்தன்னை - மங்கையை, எவ்வுழி - எவ்விடத்தே, கண்டனை என்னின் - பார்த்தாயென்று வினவினுல், பைத்தபாம்பு - படம்விரித்த பாம்பு போலும், அல்குல் - அல்குலையுடைய, அரம்பையர் - தெய்வமாதர், வதியும் - தங்கப்பெற்றிருக்கின்ற, பதி - நகரத்தை, துறந்து - விட்டுநீங்கி, இம்பரில் - இவ்வுலகத்தின்கண், போந்து - வந்து, மொய்த்த - நெருங்கிய, பூ - மலர்களையுடைய, பொய்கை - தடாகங்களை, காணிய - பார்க்கும்படியாக, தேயமுழுவதும் - தேசங்களனைத்தையும், குறுகினன் - அடைந்தேனுகி, அவற்றுள் - அத்தேசங்களுள்ளே, கைத்தலம் - உள்ளங்கையில், அமர்ந்த - தங்கிய, நெல்லியங்கனியின் - நெல்லிப்பழத்தைப்போல, விதர்ப்பர்கோன் - வீமராசனது, நகரில் - பட்டினத்தில், கண்டனன் – (அவனைப்) பார்த்தேன் எ-று.

பூம்பொய்கை காணுதல் விளையாடுதற் பொருட்டென்க. அவளிடத்தே சிலகுறைவுகள் உன்னுலறியப்படாதிருக்கலாகாதாவெனின் அப்படிக்கில்லை யெனற்குக் கைத்தலமமர்ந்த நெல்லியங்கனியென்றது. நெல்லிக்கனியை யுள்ளங்கையில் வைத்துப் பார்ப்போருக்கு அதனுருவமுழுதும் நன்முய்க்காணப்படுதலறிக. அன்றியும் அக்கனியின் புறவரைகளாலே உட்கொட்டையின் வரைகளையும் வரிதல்போல அவள் புறத்துக் குணங்களாலே அகத்துக்குருத்தின் குணங்களையும் அளவறிதற்கும் சொல்லப்பட்ட தெனினுமாம். 27

காண்டலு மவட்கு நிகரர மகளிர் தம்மிலுங் கண்டிலேன்
கதித்துப், பூண்தயங் கினைய வனமுலை திளைக்கும் புயமுடை யிளை
ஞன்யா ரென்னுத், தேண்டினன் மும்மை யுலகினுங் காணேன்
திருந்தலர்க் கசனியே றன்ன, வாண்ட காய் நின்னைக் காண்டலு
நினைத்தே னவ்வளைத் தோளணங் கினையே.

இதனுலே அப்படி நின்னுற் காணப்பட்டவளை இங்கே
நினைத்தற்குக் காரணம் யாதென்கிற வினவிற்கு
விடை சொல்லப்படுகின்றது.

இ-ள். திருந்தலர்க்கு - பகைவருக்கு, அசனியேறன்ன - இடியேற்றைப் போலும், ஆண்டகாய் – ஆண்மையுடையவனே, காண்டலும் - கண்டவளவிலே, அவட்கு - அவளுக்கு, நிகர் - நிகர்வாளை, அமரகளிர்தம்மிலும் - தெய்வமகளிருள்ளும், கண்டிலேன் – பார்த்திலேன், கதித்து - பருத்து, பூண் - ஆபரணங்களால், தயங்கு - விளங்காநின்ற, இளைய - இளமைபொருந்திய, வனம் - சந்தனக்கோலத்தையுடைய, முலை - முலைகளை, திளைக்கும் - தழுவுவதற்குத்தகுதியுள்ள, புயம் - தோள்களை, உடை - உடைய, இளைஞன் - காளை, யாரென்னு - எவரென்று, தேண்டினன் - தேடினேன், மும்மையுலகினும் -

மூன்றுலகங்களிலும், காணேன் - கண்டிலேன், நின்னை - உன்னை, காண்டலும் - பார்த்தவளவிலே, அ - அந்த வேலையிலையுடைய, தோள் - கைகளை யுடைய, அணங்கினை - கன்னியை, நினைந்தேன் - நினைத்தேன் எ-று.

முற்பாட்டிலே அரம்பையர் வதியும் பதினாறுந் தென்றதனாலே தனக் கிடந் தேவலோக மென்பதும், தேவமகளிரையெல்லாம் தானறிந் திருக் கையும், குறிப்பித்தலினாலே காண்டலுமவட்கு நிகரானமகளிர் தம்மிலும்கண் டிலே னென்றது நிகர்வாளென்பத னீறுகெட்டு நின்றது. அரமகளிர் தம் மிலுமென்ற வும்மையுயர்வுசிறப்ப, தேடினனென்னும் வினை எதுகைத் தொடைநோக்கி விரித்தல் விகாரமாய்வந்த ணகரம்பெற்று நின்றது. யானென்னு மெழுவாய்வருவிக்க மும்மை யுலகிலுங்காணே னென்றதனால்- தேவர் - உரகர் - மனிதர் - இம்மூத்திரத்தாருள்ளுந் தக்கவனில்லையென்ற தாயிற்று. நின்னைக்காண்டலு நினைந்தே னென்றதனால் நெடுங்காலத்தின் முன்னே அவளைக்கண்டு இன்றளவும் அவளுக்குத்தக்கவனைக் காணுமையால் அவளை மறந்திருந்து இப்போது உனதுபேரழகு அவளை நினைப்பிக்க நினைத் தே னென்றதாயிற்று. அழகொப்புமையால் நளனைக்கண்டு தமயந்தியை நினைத்தலால் நினைப்பணி. 28

கேழ்கிளர் தாள வடமிள முலையிற் கிடப்பினன் றேறிறப் பெய்து, மாழையொண் கண்ணி மார்பிடங் கொண்டு வளரிள வனமுலை னினது, பாழியந் தடந்தோட் குவட்டினை ஞெமுங்கப் புல்லினன் றேபயன் பயக்கு, மாழியாய் நினக்கு வனப்பவ ளிலளே லலர்ந்த பா டலநிகராமால்.

இதனாலே நீ அவளுக்கு இன்றியமையாச் சிறப்பினனென் பதும் அவளும் உனக்கு இன்றியமையாச் சிறப்பி னென்பதுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். ஆழியாய் – சக்கரவர்த்தியே! கேழ் – நிறத்தினாலே, கிளர்- விளங்காநின்ற, தாளவடம் – முத்துமாலையானது, இளமுலையில் – இளமை பொருந்திய முலையின்கண்ணே, கிடப்பினன்றே – கிடந்தாலன்றே, சிறப் பெய்தும் – விளங்கும், மாழை – மாவடுப்போலும், ஒள் – ஒளிபொருந்திய, கண்ணி - கண்களையுடையவளது, மார்பு – மார்பை, இடங்கொண்டு – இட மாகக்கொண்டு, வளர் – வளர்கின்ற, இளவனமுலை – இளமையுஞ் சந்தனக் கோலமும் பொருந்திய முலைகளானவை, நினது – உன்னுடைய, பாழியந் தடந்தோள் – வலிமையும் விசாலமும் பொருந்திய தோள்களாகிய, குவட் டினை - மலைகளை, ஞெமுங்க – அழுந்த, புல்லினன்றே – சேர்ந்தாலன்றே, பயன்பயக்கும் – விளங்கும், நினக்கு – உனக்கு, வனப்பு – அழகானது, அவன் – அத்தமயந்தி, இலளேல் – இலளாயின், அலர்ந்த-மலர்ந்த, பாடலம்- புரிநிரிப்பூவிற்கு, நிகராம் – ஒப்பாகும் எ-று.

இளமுலையிற் சிறப்பெய்து மென்றுந் தோட்குவட்டினைப் புல்லிற் பயன்பயக்கு மென்றுங்கூறவே மற்றையிடங்களிலே வீணுமென்றதாயிற்று.

இதனுலே நீ அவளுக்கு இன்றியமையாச் சிறப்பினையென்பது காட்டப்பட்டது. அன்றே விரண்டும் - உலகறிதேற்றத்தில் வந்தன. இங்கே தாள வடமும் வனமுலையுமாகிய உபமானேப மேயங்களையுடைய விரண்டு வாக்கியங்களிலே இளமுலைக்கும் அரசனுக்கும் விம்பப்பிரதி விம்ப பாவத்தைச் சொல்லுதலாலே எடுத்துக்காட்டுவமையணி. பாதிரி மலரிலே தகுந்தகாயுண்டாகாமைபற்றி அலர்ந்தபாடல நிகராமென்றது, இதன்முதனூலிலே அவ கேசியென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது, அத்திமுதலிய பூவாதகாய்க்கு மரங்களுக்கெல்லாங் கோளியென்பது போலப் பூத்துக் காயாதமரங்களுக் கெல்லாம் பொதுப்பெயராம். இங்கே அவற்றுளொன்றுகிய பாதிரி சொல்லப்பட்டது. ''அல்கியுந் தீங்கனிமிக் காக்கும் பலவினலர், பல்கியும்பாட லப்பூப் பாழாகு - நல்கிசைகூர், நல்லோர்பாற் செல்வஞ் சிறிது நலம்பயக்கு, மல்லோர்பே ராக்கமும்வீணும்'' என்பதனுலுமறிக. தற்சிழமைப் பொருளாகிய அழகைக் கூறவே பிறிதின் சிழமைப் பொருளாகிய அரசாட்சி செல்வ முதலியவையும் வீணுமென்பதுதானே தோன்றுமென்க. இதனுலே அவள் உனக்குக் கிடைப்பாளர்யின் உன்னழகு முதலியன யாவும் பயன்படுமென் பதுதோன்றலால் அவள் உனக்கின்றியமையாச் சிறப்பினளென்பதுங் காட்டப்பட்டது. அரசனுகிய புகழ்பொருளைத் தமயந்தியாகிய ஒருபொருளில்லாமையினுலே தாழ்வடைவதாகக் கூறலால் இன்மைமவிற்சியணி. இதுவும் பாடல நிகாமென்ற உவமையணியுஞ் சேர்ந்து வருதலால் சேர்வையணியாம். 29

கரும்புயன் மறைக்கு மதிக்கதிர் வேட்டல் கைரவ மலர்பெறு
தறுபோ, லரும்பிள முறுவ லிளமுலைப் போக மையநீ யெய்துதற்
கரிதால், விரும்பின ராகி யமரரு மிருந்தார் விண்ணவ ரிடத்தவ
ளார்வம், புரிந்திடா தனது பேரெழி லவலு னுளத்திடைப்
பொறிப்பல்கா ணுதியால்.

இதனுல் தன்னுதவி வேண்டுமென்பதைக் காட்டுதற்கு அவளருமை கூறலும், ஆனல் எப்படி அவளே அடையலாமென்றற்கு உத்தரமுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். ஐய - அரசனே! அமரரும் - தேவர்களும், விரும்பினராகி இருந்தார் - (அத்தமயந்தியை) விரும்பியிருந்தார், கைரவமலர் - அல்லிமலரானது, கரும்புயல் - கரியமேகத்தினுலே, மறைக்கும் - மறைக்கப்பட்டிருக்கின்ற, மதி - சந்திரனது, கதிர் - கிரணத்தை, வேட்டல் - அனுபவித்தலே, பெறுது - பெறமாட்டாது, அதுபோல் - அம்மலர்போல, அரும்பினமுறுவல் - அரும்புகின்ற புன்சிரிப்பையுடையவனாகிய (அத்தேவரால்) விரும்பப்பட்டிருக்கின்ற (தமயந்தியினது), இளமுலை - இளமுலையினது, போகம் அனுபவமானது, நீ - நீ, எய்தற்கு - அடைதற்கு, அரிது - அரிதாயிருக்கும், விண்ணவரிடத்து - அத்தேவரிடத்தே, அவள் - அம்மங்கையானவள், ஆரவம் - ஆசையை, புரிந்திடாது - செய்யாதிருக்கும்படியாக, உனது-

நினைத்து, பேரெழில் – ஒப்புயர்வில்லாதவழகை, அவள் – அவளது, உளத்தினிடை – மனத்தின்கண்ணே, பொறிப்பல் – (யான்) எழுதிவைப்பேன், காணுதி – (நீ என்வல்லமையைப்) பார் எ-று.

அமரர் – இந்திரன்முதலியோர். அமருமென்னும் உம்மை வுயர்வு சிறப்பு. தான் முன்னறிந்தமையைச் சொல்லுதலால் இருக்கின்றானென்னுது இருந்தானென் றிறந்தகாலத்தாற் கூறிற்று. விரும்பினராகி அமருமிருந்தானென்னும் பதப்பொருளால் எய்துதலரிதெனப் பட்டதைச் சாதித்தலாலே செய்யுட்குறியணி. இதனை அங்கமாகக்கொண்டு உவமையணி வந்தது. உனதுபேரெழி லவடனுளத்திடைப் பொறிப்பலெனவே உனதியாவொப்பில்லாத் அழகைக்குறித்து அவளிடத்தே பலவிதத்தாலும் புகழ்ந்த அவளது நினைப்பைவிட்டு நீங்காதிருக்கச் செய்வேனென்றதாயிற்று. இங்ஙனஞ் செய்தல் அரிதாதலாலே தகுதிபற்றிப்பாரென்றதற்கு வல்லமையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 30

செய்தொழில் பயனு ரைப்பரே யன்றித் தெளிகுரு ரையினு ரையோ, ரையமுற் றுடன்பா டெய்துவான் முன்ன ரறைந்தன னெனமட வன்னம், பெய்தசொல் லமுத முள்ளெலாம் பரந்து பெருகிமேல்வழிதல்போ னகையாக், கையினுற் பசும்பொற் சிறகர்தை வந்து காதல்கூர் மொழிசில புகன்றார்.

இதனுல் அப்படியே செய்யலாமே என்னுடு சொல்லுதலாற்
பயனென்னென்றற்கு உத்தரமும் அரசன் அதற்குக்
காதல் கூர்மொழி சில சொன்னமையுஞ்
சொல்லப்படுகின்றன.

இ-ள். ஐய – அரசனே ! தெளிகுநர் – விவேகிகள், செய்தொழில்– (தம்மாற்) செய்யப்படு முபகாரத்தை, பயனுல் – (அதன்) காரியத்தினுலே, உரைப்பரேயன்றி – சொல்லுவரே யல்லாமல், உரையினுல் – வாக்கினுல், உரையார் – சொல்லார், முற்று – முழுதும், உடன்பாடு – (உன்) சம்மதியை, எய்துவான் – அடையும்பொருட்டாகவே, முன்னர் – முன்னுக, அறைந்தனனென – சொல்லினனென்று சொல்லியதாக, மடவன்னம்– இளமைபொருந்திய அன்னத்தினுலே, பெய்த – பெய்யப்பட்ட, சொல்லமுதம் – சொல்லாகிய அமிர்தமானது, உள்ளெலாம் – உள்ளிடமெல்லாம், பரந்து – பரவி, பெருகி – பெருக்கெடுத்து, மேல் – மேலே, வழிதல்போல் – (வாய்வழியால்) வெளிப்படுதல்போலும், நகையா – நகைசெய்து, கையினுல் – கரத்தினுலே, பசும்பொன் – பசியபொன் வடிவமாகிய, சிறகர் – சிறகுகளே, தைவந்து – தடவி, காதல் கூர்மொழி சில – ஆசைமிகுந்த சிலமொழிகளே, புகன்றான் – (அரசன்) சொன்னன் எ-று.

முற்றுமென்பத் னும்மைதொக்கது. அம்முற்று மென்னுஞ்சொல் சிறிதும் பிறிதொன்றைக் குறித்ததன்றென்னும் பொருள்பட நின்றது.

உடன்பாடெய்தாமற்செய்தால் அங்ஙனஞ் செய்யப்பட்டதை நீ அங்கீகாரஞ் செய்யாமற் போவாயாயின் என்முயற்சி வீணுய்த் தீராப்பழிதருமென்னும் பொருளைக் காட்டுதற்கு உடன்பாடெய்துவான் முன்னரறைந்தனனென்றது. இதனுலே பின்செய்யப்படு முபகாரத்தை முன்னே சொல்லுதல் தகாதென்ற தாயிற்று. "செய்தொழிற் பயனே யுரைப்பதையன்றி – ஐய முற்றிடுதி யென்பதான் முன்னர்" எனவும் பாடமுண்டு; அப்பாடத்திற்கு இப்பொருள் அமையாமை காண்க. அன்றியும் ஐயமுற்றிடுதி என நிறுவி நீ அங்கீகாரஞ் செய்வாயோ செய்யாயோ வென்று நான் சந்தேகமுற்று எனப்பொருள் கூறினும் அமையும் முதலடியிற் சொல்லப்பட்ட பொதுப் பொருளாலே இரண்டாமடியிற் சொல்லப்பட்ட முன்னரறைதல் தகாதென்னுஞ் சிறப்புப்பொருளைச் சாதித்தலாலே வேற்றுப்பொருள் வைப்பணி. "பெய்தசொல்லமுதம்" குடவாயினங்கள் வயிறுளந்தென்னும் பாட்டு முதலியவற்றுற் சொல்லப்பட்டவை சொல்லமுதம் உருவகவணி. தெள்ளமுதமெனப் பாடங் கூறின் உருவகவுயர்வு நவிற்சியணியாம். அமுதத்தை அதிகமாகக் குடித்தவனுக்கு எதிர்த்துச் சிறிது வெளிப்படுமாதலின் வெண்மைபற்றி அவனது நகையை அவ்வெளிப்படு மமுதமாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. இது அவ்வுருவகத்தா லுய்விக்கப்பட்டது. காதல் கூர்மொழி சிலவென்றதற்கு அன்னத்தினுலே விரும்பப்படுகிற சிலமொழி யெனவும் தனது ஆசைமிகுதியை வெளிப்படுத்துகிற சில மொழியெனவு மிருபொருள் கொள்க. 31

பொலன் சிறைப் பவளக் கடிகைவா யனநின் பொற்பினுக் குவமைவே றின்று, நலங்கெழு குணனு முரைப்பதற் கரிது நல்லிழில் பகருமுன் னூலோ, ரிலங்கெழி லளவு குணமென வுரைப்ப ரிதற்குமேற் கோளென நின்னைத், தலங்குறக் கண்டேன் விரக நோய் தீர்க்கு மருந்துநின் சொல்லின்வே றுளதோ.

இதுமுதலிய சில பாட்டுக்களாலே முன்காதல் கூர்மொழிசில வென்னப் பட்டவை சொல்லப்படுகின்றன.

இ-ள். பொலன் – பொன்வடிவாகிய, சிறை – சிறகையும், பவளக் கடிகை – பவளத்துண்டு போலும், வாய் – வாயையும் உடைய, அனம்-அன்னமே, நின் – உனது, பொற்பினுக்கு – அழகுக்கு, உவமைவேறு – வேறு வமை, இன்று – இல்லை, நலங்கெழு – நன்மைபொருந்திய, குணனும் – உன் குணமும், உரைப்பதற்கு – சொல்லுதற்கு, அரிது – அரிதாகும், நல்லெழில்-நல்ல அழகினிலக்கணத்தை, பகரும்-சொல்லுகின்ற, முன் னூலோர்-பழைய நூலோர், இலங்கு – (ஒருபொருளிலே) விளங்காநின்ற, எழிலளவு – அழகினளவாகவே, குணமென – குணமும் (அதிலிருக்கு) மென்று, உரைப்பர்-சொல்லுவார், இதற்கு – இந்தச் சித்தாந்தத்திற்கு, மேற்கோளென – உதாரணமாக, தலங்குற – விளங்காநிற்க, நின்னை – உன்னை, கண்டேன்-(நான்) பார்த்தேன், விரகம் – விரகத்தாலாகிய, நோய் – காமவியாதியை, தீர்க்கும்–

நீக்குகின்ற, மருந்து - ஔடதம், நின்சொல்லின் - உனது சொல்லைப்பார்க்கிலும், வேறு உளதோ - (எனக்கு) இருக்கின்றதோ எ-று.

உவமைவேறின் றென்றதனால் அதற்கு அதுவே ஒப்பென்றதாயிற்று. எழிலளவுகுணமெனல் எதிலேயெவ்வள வழகிருக்குமோ அதிலே யவ்வளவு குணமிருக்குமென்றல், நின்னேமேற்கோளெனக் கண்டேனெனலால் ஒப்பில்லாத அவ்விரண்டிற்கும்நீ இடமாயிருக்கின்றாயென்றதாயிற்று. எழிலளவு குணமெனப்பட்டதைச் சாதித்தற்கு முன்வாக்கியப்பொருள் எதுவாகையால் செய்யுட்குறியணி. விரகநோய் தீர்க்கு மருந்து நின்சொல்லின் வேறுளதோ என்றதற்கு அவளைக் கூட்டுதல் உன்னலன்றி முடியாதென்பது கருத்து. 32

வெண்ணகைத் துவர்வா யணங்கெழில் பலரும் விளம்பினர் நின்மொழி யவளென், கண்ணெதிர்ப் பட்டாள் போலுமெய்த் தூணையாற் கருத்திலுற் காண்டலே காண்ட, னண்ணிமுற் றோன்றும் பொருளு நுண்ணியதே லுடுதற் கரியலா முகத்திற், பண்ணிய நோக்க நோக்குநர்க் கழகு பயப்பதை யன்றிவேறுளதோ.

இ-ள். வெண்ணகை - வெள்ளியபற்களையும், துவர்வாய் - பவளம் போலும் வாயையுமுடைய, அணங்கு - தமயந்தியினது, எழில் - அழகை, பலரும் - (விதர்ப்பதேசத்திலிருந்துவந்த) பலரும், விளம்பினர்-(எனக்குச்) சொன்னார் (ஆயினும்), நின்மொழி - உன்சொற்களாலே, அவள் - அம்மங்கை, என் - எனது, கண்ணெதிர்ப் பட்டாள்போலும்-கண்முன் பார்க்கப்பட்டவள் போல்கின்றாள், மெய் - மெய்ம்மையாக, தூணையால் - நட்பாளனாலும், கருத்திலுல் - (தன்) மனத்திலுலும், காண்டலே - (எல்லாவற்றையும்) காணுதலே, காண்டல் - காட்சியாகும், முன்-எதிரிடத்தே, நண்ணி - பொருந்தி, தோன்றும் - தோன்றுகின்ற, பொருளும் - பொருளையும், நுண்ணியதேல் - நுட்பமானதாயிருக்கின், நாடுதற் கரியலா - காணுதற்குச் சான்றாகாத, முகத்தில் - முகத்திடத்தே, பண்ணிய - உண்டாக்கப்பட்ட, நோக்கம் - கண்ணைனது, நோக்குநர்க்கு - (அப்படித் தூணைவனாலுங் கருத்திலாலுங்) காண்கின்ற வறிவுடையோர்க்கு, அழகு - அழகை, பயப்பதையன்றி - (அம்முகத்துக்குச்) செய்வதல்லாமல், வேறு - மற்றொருபயனைச் (செய்தற்கு), உளதோ - இருக்கின்றதோ எ-று.

ஆற்றவாக்கியப் பிரமாணத்தினாலே நின்மொழியவ ளென்கண் ணெதிர்ப்பட்டாள்போலு மென்றா னென்க. மெய்யெனலாற் சந்தேக விபரீதங்கள் ஒழிக்கப்பட்டன; தூணையென்னும்பெயர் - அமைச்சு - வேந்து - என்பவைபோலப் பண்புக்காயிற்று. தன்மனம்போலவே தூணைவனுமென்று அவனிடத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துதற்குக் கருத்திலுலென்பது சொல்லப்பட்டது. இதனாலே தான்காட்சியினுந் தூணைவன் காட்சியே உயர்வின தென்றதாயிற்று. எங்குமுள்ள வெல்லாவற்றையுந் தூணைவன் வாய் மொழியையுந் தன் கருத்தையுங்கொண்டு காணக்கூடுமாதலால் அவற்

ரூற் காணுதலே காட்சியென்றும் தூரத்திலுள்ளவற்றையே யன்றிச் சமீபத்திலுள்ள அணுமுதலிய நுண்ணிய பொருள்களையுங் கண்ணைக்கொண்டு காணக்கூடாமையால் அவற்றூற் காண்பார்க்கு இக்கண்ணூற் பயனில்லையென்றுஞ் சொல்லப்பட்டன. ''நண்ணி முற்றூன்றும் பொருளுளம்பிரியினுதற்கரிய வாண்முகத்திற் பண்ணியநோக்கம்'' எனப்பாடங்கூறி அதற்கு எதிரேயுள்ளபொருளே மனத்தன்னைவிட்டுப் பிரிந்தாற் காணமாட்டாத கண்ணைனப் பொருள் கூறுவாருமுண்டு. அது இதன் முதனூன் முடிபின் வேறுபட்டும் அத்துணைச் சிறப்பின்றி நிற்றலறிக. 33

முருந்திள முறுவ லழகுரைத் தெவரு மூட்டிய காமவெங் தீயிற், சொரிந்திடு நெய்யிற் குணனெலா முரைத்தி சொல்லுமவ் வழலிடைப் பெய்து, கரிந்தபைந் தளிரின் வாடுமெற் குறித்துக் கனன்றுகூற் றுறுதிசை யமர்ந்து, வருஞ்சிறு தென்றன் மலய வெவ் விடங்கால் வாளரா வுயிர்ப்பென லாமால்.

இ-ள். முருந்து - மயிலிறகினடிபோலும், இளமுறுவல் - சிறிய பற்களே யுடையவளது, அழகு - அழகை, உரைத்து - (எனக்குச் சொல்லி, எவரும் - (விதர்ப்பதேசத்திலிருந்துவந்த) பலராலும், மூட்டிய - (அச் சொற்களாகிய விறகிலே) மூட்டப்பட்ட, காமம் - காமமாகிய, வெந்தீயில் - வெப்பம்பொருந்திய நெருப்பிலே, சொரிந்திடு - சொரியப்பட்ட, நெய்யின் - நெய்யாக, குணனெலாம் - (அவ) ளழகையெல்லாம், உரைத்து - சொல்லினை, சொல்லும் - சொல்லப்பட்ட, அழலிடை - அக்காமநெருப்பில், பெய்து - இடப்பட்டு, கரிந்த - கருகின, பைந்தளிரின் - பசியதளிராக, வாடும் - வாடுகின்ற, என்குறித்து - என்னைக்குறித்து, கனன்று - கூட்டுக்கொண்டு, கூற்று - யமனுனவன், உறு - வாசஞ்செய்யப்பெற்ற, திசை - தென்றிசையில், அமர்ந்து - பொருந்தி, வரும் - வருகின்ற, சிறு தென்றல் - இளந்தென்றலே, மலயம் - பொதியமலையிலுள்ள, வான் - ஒளி பொருந்திய, அரா - பாம்புகளது, வெவ்விடம் - கொடியநஞ்சை, கால் - பொழிகின்ற, உயிர்ப்பெனலாம் - ஊதுகாற்றென்று சொல்லலாம் ஏ-று.

கூற்று - (உயிர்களே யுடலினின்றும்) பிரிப்பவன்: யமன். அவர் போலத் தமயந்தியி னழகுமாத்திரமே யன்றி நீ அவள் பிறப்பு முதலியவற்றையுஞ் சொன்னையென்றற்குக் குணனென்றும், அவற்றுளினீயறியவேண்டுவது சிறிதுமில்லை யென்றற்கு எலாமென்றுங் கூறினனென்க. கூற்றுறு திசையமர்ந்து வருஞிறு தென்றலென்றது சகவாசகுணம் பற்றி உயிர்க்கொலை செய்யுந் தன்மைத் தென்பது தோன்றற்கென்க. பொதிய மலையிலே சந்தனமரங்களின் மணம்பற்றிப் பாம்புகள் அதிகமாயிருத்தலால் மலய வெவ்விடங்கால் வாளரா வென்றூன். விறகிலே நெருப்புமூட்டி நெய்வார்த்து அதனை யெரிவித்தற்கு ஊதுதல் உலகவழக்கமாதலால் அங்ஙனஞ் சொல்லப்பட்டது. தென்றலே அவ்வூதுகாற்றாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. இது உருவகத்தை அங்கமாகக்கொண்டு வந்தது. 34

வெண்கதிர் பரப்பித் தணந்தவ ரிதய மெழுகென வுருக்கும் * வெண் டிங்கள், கண்கவர் வனப்பி னணங்கினை நினைந்து கவலு மென் னுளத்தினைக் கனற்றத், தண்கதிர் பெரூவென் றழற்றுவெங் கதிர்க டனித்தனிக் கவர்வதற் கன்றே, வொண்சுட ரிரவி யிடத்தி னிற் றிங்க டொறுமினி தூறவு செய்குவதே.

இ-ள். வெண்கதிர் – வெள்ளிய கிரணங்களே, பரப்பி – விரித்து, தணந்தவர் – பிரிந்தவரது, இதயம் – மனத்தை, மெழுகென – (தீயிற்பட்ட) மெழுகென்னும்படி, உருக்கும் – உருக்காநின்ற, வெண்டிங்கள் – சந்திரனது, ஒண்சுடர் – ஒள்ளிய கிரணங்களேயுடைய, இரவியிடத்தினில் – சூரியனிடத்தே, திங்கடொறும் – மாதந்தோறும், இனிது – இனிதாக, ஊறவு – நட்பை, செய்குவது – செய்துவருகிறது, கண் – கண்களே, கவர் – கவர்கின்ற, வனப்பின் – அழகையுடைய, அணங்கினை – அத்தமயந்தியை, நினைந்து – எண்ணி, கவலும் – துன்பப்படுகின்ற, என்னுளத்தினை – எனது மனத்தை, கனற்றசுடுதற்கு, தண்கதிர் – சீதளகிரணங்கள், பெரூவென்று – (வல்லமை) பெறுவனல்லவென்று, அழற்று – சுடுகின்ற, வெங்கதிர்கள் – வெவ்விய கிரணங்களே, தனித்தனி – ஒவ்வொன்றாக, கவர்வதற்கன்றே – வௌவுதற்கன்றே.

சீதளகிரணத்திலுலே தணந்த பலரையுஞ் சுடாநின்ற சந்திரன் தன்னுள்ளத்தைச் சுடுதற்கு அக்கிரண மூதவாதென்று சூரியகிரணத்தை வாங்குகிறதாகச் சொல்லலால் தன்னை அவரின் மேற்பட்ட மனவலியையுடையவரென்று அங்ஙனஞ் செய்கின்றனென்பது குறிப்பிக்கப் பட்டதாயிற்று. ஹிர்தயம் என்னும் வடமொழி இதயம் எனச் சிதைந்து நின்றது. மெழுகென – இதன்கண் என – உவமவுருபு. சந்திரன் அமாவாசிதோறுஞ் சூரியனேடுறவு செய்தற்குப் பயனுகாத அழற்றுவெங்கதிர்க டனித்தனிக் கவர்தலேப் பயனுகக் குறித்தலாலே பயன்றற்குறிப்பணி. 35

காதலங் கடலின் கரைபெறற் கயனுற் காரண மின்றியே காட்டப்பட் போதரும் புனைய தாதியென் னுள்ளம் புலம்புகொண் டினைவது தவிர்ப்பான், றூதுனீ போய்மூன் னுரைத்தவா முடித்த லீறுமறு புகழ்தினக் கென்ன, வாதரம் பெருக நன்மொழி புகன்றவ் வனத்தினை மடந்தைபால் விடுத்தான்.

---

* வெண்மை என்னும் பண்புமொழி இனம்பற்றியும், இனம்பற்றுமலும், தனக்குரிய தினேயை விட்டு உரிமையில்லாத முதலேப்பற்றியும், வெதிர்வுபற்றியும், இழிபு பற்றியும், சாதி, பொய், புதுமை, உள்ளீடின்மை, இயல்பு, கூலப்பின்மை, தனிமை, நிறம், நிறமின்மை, மந்தம், பண்புப்போலி என்னுமிவை முதலாய பல்வகைப்பற்றியும் பயிலும். அவற்றுள் "வெண்டிங்கள்" * எனவண்டு இனம்பற்றுமே வந்ததென்க. அதனே "இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை வழக்காறல்ல செய்யுளாறே" என்னுந் தொல்காப்பிய விதியி னடக்கிடுக.

இதனுல் அன்னத்தைத் தூதுவிடுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். காதல் – ஆசையாகிய, அம்கடலின் – அழகிய கடலினது, கரை-கரையை, பெறற்கு – (நான்) பெறுதற்கு, காரணமின்றி – ஏதுவில்லாமல், காட்ட – (அதனைக்) காண்பிக்க, அயனுல் – விதியினுல், போதரும் – வந்த, பூணியதாதி – தெப்பமாகுதி, என்னுள்ளம் – என்மனமானது, புலம்புகொண்டு – துன்பத்தைக்கொண்டு, இனைவது – வருந்துதலை, தவிர்ப்பான் – தீர்க்கும்படியாக, தூது – தூதாக, நீ – நீ, போய் – சென்று, முன் – முன்னே, உரைத்தவா – (உன்னுற்) சொல்லப்பட்டவாறு, முடித்தல் – நிறைவேற்றல், நினக்கு – உனக்கு, தோமறு – குற்றமற்ற, புகழ் – கீர்த்தியாகும், என்ன-என்று, ஆதரம் – அன்பானது, பெருக – வளர, நன்மொழி – முகமன்சொற்களோ, புகன்று – சொல்லி, அவ்வனத்தினை – அந்தவன்னத்தை, மடந்தை பால் – தமயந்தியிடத்து, விடுத்தான் – அனுப்பினுன் எ-று.

காதல் – தமயந்திமேலாசை. கரைபெறுதல் – அவ்வாயடைதல். இங்கே காரணமின்மை – தன்முயற்சியில்லாமை. காரணமின்றி அயனுற்போதரும் பூணியெனவே என் முயற்சியாலன்றி முன்னை நல்வினையாற் கிடைத்த பூணியென்றதாயிற்று. இம்முதல் வாக்கியம் உருவகவணி. முன்னுரைத்தவா முடித்தியெனவே நீதானே இதுகாரியத்திலே முயலாநிற்க நான் உன்னை முயல்வித்தல் பிசைபட்ட மாவைப் பிசைதல்போலுமா மென்றதாயிற்று. முடித்தல் புகழெனக் காரண காரியங்களுக்கு ஒற்றுமையைச் சொல்லுதலால் ஏதுவணி. தோமறுபுகழ் – உலகமுள்ளளவும் அழியாது நிற்கும் புகழ். 36

போதரு நெறியி னன்மைகள் பயக்கப் பொருந்துறு கிளை
யொடு புல்லி, யாதரம் பெருகு மனியினை மறவே லாயிழை யருண்
முகம் பெற்றுத், தீதற விறைவில் வருகியென் றுரைத்துத் திங்
களி னருஞ்சுதை தீற்று, தாதவிழ் தாம மாடமேற் றனுங் தனி
யுமா யிருந்துட னளர்ந்தான்.

இதனுல் போம்போது அதற்குச் சொல்லப்பட்டவையும் பின்வருந்தியிருக்கின்றப்படியுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். போதரும் – போகின்ற, நெறியில் – வழியில், நன்மைகள் – சுபங்களானவை, பயக்க – (உனக்கு) உண்டாகுக, பொருந்துறு – பொருந்திய, கிளையொடு – (உன்) சுற்றத்துடனே, புல்லி – கூடி, ஆதரம் – ஆசையானது, பெருகும் – வளரப் பெற்றிருக்கின்ற, அளியனை – எளியேனை, மறவல்-மறவாதே, ஆயிழை – தமயந்தியினது, அருள்முகம் – அருளோடு கூடிய வாக்கை, பெற்று – அடைந்து, தீதற – குற்றமற, விரைவில் – சீக்கிரத்தில், வருதியென்று – வாவென்று, உரைத்து – சொல்லி, திங்களின் – சந்திரன்-போலும், அருஞ்சுதை – அரிய சுண்ணச்சாந்தை, தீற்று – தீற்றப்பெற்றுள்ள, தாது – பொடியையுடைய, அவிழ் – மலர்ந்த, தாமம் – பூமாலைகளையுடைய, மாடமேல் – மேல்வீட்டிலே, தானும்-தானும், தனியுமாய் – ஒரு

வருமுடனில்லாமையுமாகி, இருந்து – இருந்து, உடல் – உடம்பு, தளர்ந்தான் – தளரப்பெற்றிருந்தான் எ-று.

நன்மைகள் பயக்கவென்றது – வாழ்த்து. மறவேலென்றது – வேண்டிக்கோடல். வருதியென்றது – விதி. முகம் – ஆகுபெயர். நீமீண்டு வருவதற்குச் காலநீட்சியுண்டாமாயின் அதுவரையில் என்னுயிர் நிற்கமாட்டாது உன்முயற்சி வீணுய்ப் பழிபடுமென்பது தோன்றற்குத் தீதறவிரைவில் வருதியென்றுனென்க. விடுத்தபின் னுரைத்தல் பொருந்துமோ வெனின் போகத் தொடங்குகையில் ஆசைமிகுதியாற் சொல்லுதலும் உலக வழக்க மாதலாலே பொருந்துமென்றறிக தானுந் தனியுமாயிருந்தென்ற தனுல் உயிர்போற்சிறந்த நட்பாளரையும் விலக்கியிருந்தானென்றதாயிற்று.

ஈங்கிவன் மாழாந் தன்னமென் சொல்லா லின்னுயிர் தாங்கின னிருப்பத், தீங்கரும் பனுக்கு மாங்குயிற் கிளவி செவ்விகண் களிப்புற நோக்கி, யாங்கணுற் றிற்றைப் பகலேநற் பகல தாக்குவ லென மனம் வலியாப், பூங்கனி நிறைநீர்ப் பொற்குட மெதிரப் போயது பொலன்சிறை யன்னம்.

இதுமுதலிரண்டு பாட்டுக்களால் அன்னத்தின் செலவு சொல்லப்படுகின்றது.

இ-ள். ஈங்கு – இவ்விடத்தே, இவன் – இவ்வாசன், மாழாந்து – அறிவு கலங்கி, அன்னம் – அன்னத்தினது, மென்சொல்லால் – மெல்லியசொல்லால், இன்னுயிர் – இனிதாகியவுயிரை, தாங்கினன் – தாங்கினவனுகி, இருப்ப – இருக்க, தீங்கரும்பு – மதுரமாகிய கன்னலை, அனுக்கும் – கெடுக்கின்ற, மாங்குயில்-மாங்குயிலிசைபோலும், கிளவி – சொல்லையுடையவளது, செவ்வி – அழகை, ஆங்கண் – அவளிருக்கின்ற விடத்தை, உற்று-அடைந்து, கண் களிப்புற – (என்) கண்களிகூர, நோக்கி – பார்த்து, இற்றைப்பகலை-இத்தினத்தை, நற்பகலதாக்குவலென – நல்லதினமாக்குவனென்று, மனம் வலியா – மனத்திலெண்ணி, பூங்கனி – அழகியபழமும், நிறைநீர் – நிறைந்த நீரையுடைய, பொற்குடம் – பொற்குடமும், எதிர – தனக்கெதிர்ப்பட, பொலன்சிறை – பொற்சிறகளையுடைய, அன்னம் – அன்னமானது, போயது – போயிற்று எ-று.

மென்சொல் எனவே காதுக்கு இனியமொழியென்பது பெறப்படும். தாங்கினன் – வினைமுற்று எச்சப்பொருளில்வந்தது. அன்னமென்சொல்லாலின்னுயிர்தாங்குதல் அதுதன் விருப்பப்பொருளைப் பெறுதற்கு உபாயமாகையாலே தைரியங்கொண்டிருத்தல். பூங்கனி அவ்வனத்திலேர் மரத்தின்பழம். பழமும் நிறைநீர்க்குடமும் எதிர்ப்படின் அவைவிரும்பப்பட்ட காரியங் கைகூடுமென்பதை முன்னறிவிக்கின்ற நல்ல நிமித்தங்களாம் இது நிமித்தநூலிலே சொல்லப்படுவது. 38

கட்புலன் கதுவா துயர்ந்துபின் னெவரும் காண்வர வெள்ளி னீடப் பறந்து, புட்செறிவாவி புகாதகல் விசும்பிற் பொன்னுரைத்

தாலெனப் போகி, துட்பமாய் குநர்க்கு மதிசயம் பயப்ப நொடி வரைப் புகுந்ததவ் வன்னம், வட்கிவெண் மதியஞ் சவிகெட வொளிரு மாடமார் குண்டின புரமே.

இ-ள். அவ்வன்னம் – அவ்வன்னமானது, கண் - கட்பொறிகளுக்கு, புலன் – விஷயமாக, கதுவாது – பற்றப்படாமல், உயர்ந்து – மேலெழும்பி, பின் – (அதன்) பின்பு, எவரும் – யாவரும், காண்வர – (தன்னைக்) காண், வெள்ளிடை – ஆகாயத்தில், பறந்து - பறந்து, புள் - பறவைகளானவை, செறி - நெருங்கப்பெற்ற, வாவி – தடாகங்களிலே, புகாது – செல்லாமல், அகல்விசும்பில் - விரிவுள்ள வாகாயமாகிய (உரைகல்லில்), பொன் - (தன் சிறைகளின்) பொன்னை, உரைத்தாலென - உரைத்ததுபோல, போகி-சென்று, நுட்பம் - காலநுட்பத்தில், ஆய்குநர்க்கும்-ஆராய்கின்றவருக்கும், அதிசயம்பயப்ப - ஆச்சரியமுண்டாகுமாறு, நொடிவரை - நொடியளவில், வெண்மதியம் - வெள்ளைச்சந்திரனைது, வட்கி - நாணி, சவிகெட - அழகு கெட, ஒளிரும் - விளங்கா நின்ற, மாடம் - மாளிகைகளால், ஆர் - நிறைந்த, குண்டினபுரம் - குண்டினபுரத்திலே, புகுந்து - சென்றது எ-று.

மேலெழும்புகிற விசையாற் காணப்படாமையாற் கட்புலன் கதுவாதுயர்ந்தென்றும், பின்மேலிருந்து வழிநினைத்துச் செல்லுஞ் சிறிது காலத்திலே யாவராலுங் கண்களிகூரக் காணப்படுதலால் எவருங்காண்வர வென்றிடைப் பறந்தென்றும், சுற்றத்தோடுகூடியின்புறுதலையும் வழியிடையிற் சற்றேதங்கி இளைப்பாறுதலையும்விட்டு அரசன் காரியத்தையே பெரிதாக நினைத்துப் போதலாற் புட்செறிவாவி புகாதென்றும் சொல்லப்பட்டன. உரைத்ததென்னும் வினைமுற்று உரைத்தாலெனத்திரிந்தது. பறத்தல் வேகத்திலுலே அதன் பொன்னொளி தாரையாக விழுதல்பற்றிப் பொன்னுரைத்ததெனக் குறித்தலால் தற்குறிப்பணி. நுட்ப மாய்குநர் கீழே அந்நிழலைப்பார்த்து அக்கணத்திற்றானே மேலே பார்ப்பவர். 39

கலி விருத்தம்.

மன்னுமாநகர்மேயவளனெலா
மன்னங்கணுற்றதிசயித்தேதகவு
முன்னங்கண்டதுமூசுவண்டார்த்தெழப்
பொன்னந்தாதவிழ்பூந்துணர்ச்சோலையே.

இதனுல் வனக்காட்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். அன்னம் - அன்னமானது, மன்னும் - நிலைபெற்ற, மா-பெருமைபொருந்திய, நகர் - குண்டினபுரத்தில், மேய - தங்கிய, வளனெலாம்-சிறப்புக்களெல்லாம், கண்ணுற்று - பார்த்து, அதிசயித்து - ஆச்சரியப்பட்டு, எகலும் - போமளவிலே, முன்னம் - (தன்) எதிரே, மூசு – மொய்க்கின்ற, வண்டு – வண்டுகளானவை, ஆர்த்து - ஒலிசெய்து, எழ - எழும்பாநிற்க, பொன் - பொன்னிறம்பொருந்திய, தாது - பொடியுடனே, அவிழ்-

விரிகின்ற, பூ - மலர்களையுடைய, தணர் - கொத்துக்களையுடைய, சோலை-(தமயந்தியினது) வனத்தை, கண்டது - பார்த்தது எ-று.

முன் என்னும் இடப்பொருளிடைச்சொல் சாரியைபெற்று வந்தது. அரும்புகளாயிருக்குங்காலத்து மொய்த்தவண்டுகள் விரியும்போது அஞ்சியெழுமாதலால் ஊர்த்தெழுவென்னும் வினையெச்சம் அவிழென்னும் வினை கொண்டதென்க. அன்றி தன்சிறைக்காற்றால் அஞ்சியெழக்கண்டது எனமுடிக்கினு மமையும். 40

சோலைவாயிலசுடருநிலாமணி
யாலவாலத்தவிர்மதியாற்புனல்
காலவாய்ந்தகதிர்மணிமுல்லையின்
கோலநாண்மலர்கொய்வதற்கெய்தினள்.

இதனால் அச்சமயத்திலே தமயந்தி அங்கேவருதற்கு நிமித்தஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். சோலைவாயில் – அச்சோலையின்கண்ணே, ஆலவாலத்து-பாத்திகளில், சுடரும் – விளங்குகின்ற, நிலாமணி – சந்திரகாந்தங்கள், அவிர்-விளங்காநின்ற, மதியால் – கிரணத்திலே, புனல் – நீரை, கால – கக்க, வாய்ந்த – (அதனால்) நிலைபெற்ற, முல்லையின் – முல்லைக் கொடிகளுடைய, கதிர் – கிரணத்தையுடைய, மணி – முத்துப்போலும், கோலம் – அழகிய, நாள் – அன்றுபூத்த, மலர் – மலர்களை, கொய்வதற்கு- பறிப்பதற்கு, எய்தினள் – (தமயந்தி) வந்தாள் எ-று.

இப்பாட்டின் பொருள் செல்வ மிகுதியைச் சொல்லுதலென்னு மிலக்கணத்தால் வீறுகோளணியும், சந்திரகாந்தத்தின் அவ்வளவு நீர்ப்பெருக்குக்கு முல்லைக்குஞ் சம்பந்த மில்லாமையிலே சம்பந்தத்தைக் கற்பித்தலென்னும் இலக்கணத்தால் தொடர்புயர்வு நவிற்சியணியும், ஆதலால் ஒருதொடர்ப்பொருட் கலவையணியாம். 41

மீதுலாயவெண்டாரகைநாப்பணிற்
சீதவொண்கதிர்த்திங்கள்கண்டோலென
மாதர்நோக்கின்மடந்தையர்நாப்பணிற்
காதல்கூர்தமயந்தியைக்கண்டதே.

இதனாலே காட்சிசொல்லப் படுகின்றது.

இ-ள். மீது – ஆகாயத்திலே, உலாய-திரிகின்ற, வெண்டாரகை-நக்ஷத்திரங்களது, நாப்பணில் – நடுவில், சீதம் – குளிர்ச்சிபொருந்திய, ஒள் – ஒள்ளிய, கதிர் – கிரணங்களையுடைய, திங்கள் – சந்திரனை, கண்டாலென-கண்டதுபோல, மாதர் – விரும்பப்படும், நோக்கின் – பார்வையையுடைய, மடந்தையர் – மாதரது, நாப்பணில் – நடுவில், காதல் கூர் – விரும்பப்படுகிற, தமயந்தியை – தமயந்தியென்பவளை, கண்டது-(அவ்வன்னமானது) பார்த்தது.

இவ்வுவமையினுலே தமயந்தியினுடைய தோழிகளெல்லாரும் ஒருநிகரான வழகுடையவர்களாய் விளங்கலும் அவள் அவர்களுக்குள்ளே நடிநாயகமாய் விளங்கலுங்காண்க. தாரகை—கடலைக் கடத்தற்குக் கருவியாயுள்ளது; விண்மீன். தாரகம்—கடத்தல் பிரணவத்திற்கும் இதுபோலும் பொருள் விரிக்கப்படல் காண்க. 42

கண்ணுங்கையுமுகமுங்கமலமா
நண்ணுஞ்சண்பகநாண்மலர்மேனியா
வண்ணல்வேளேவழிபடற்காற்றிய
வண்ணமாலெகொலென்றுமருண்டதே.

இதனுல் அவளேவியந்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கண்ணும் – கண்களும், கையும் – கைகளும், முகமும் – வதனமும், கமலமா – தாமரை மலர்களாகவும், மேனி – வடிவமானது, நண்ணும் – பொருந்திய, நாள் – அன்றுபூத்த, சண்பகம் – சண்பகத்தினுடைய, மலரா – மலர்களாகவுமினைத்து, அண்ணல் – தலைவனுகிய, வேளே – மன்மதனே, வழிபடற்கு – பூசித்தற்பொருட்டு, ஆற்றிய – செய்யப்பட்ட, வண்ணம் – அழகிய, மாலையென்று – தொடையென்று, மருண்டது – மயங்கிற்று (அன்னம்) எ-று.

கமலமாக மலராக வென்கிற செயவென் வாய்பாட்டு வினையெச்சங்கள் தொகெட்டுவந்தன. அவற்றை முடித்தற்குத் தோன்றலாலென்னுஞ்சொல் வருவிக்கப்பட்டது. நான்குசாதிகளினுஞ் சிறந்த பதுமினிசாதிக்கு "சண்பகமலரெனச் சிவந்த மேனியாள்" என்று சொல்லப்பட்டமையால் பதுமினி சாதியளென்றதாயிற்று. தமயந்தியை அப்படிப்பட்டமாலையென்று மயங்குதலால் மயக்கவணியாம். 43

வழிந்துதெள்ளமுதூறவளர்ந்துமா
சொழிந்தகிங்களூர்வளைந்தாலெனச்
செழுந்தண்கோதைதிருமுகமுள்ளூறச்
சுழன்றுதாழ்ந்ததுதூச்சிறையன்னமே.

இது முதன் மூன்று செய்யுள்களால் பின் அன்னத்தின் செயல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தூ – பரிசுத்தமாகிய, சிறை – இறகுகளையுடைய, அன்னம் – அன்னமானது, வழிந்து – பெருக்கெடுத்து, தெள்ளமுது – தெள்ளிய அமிர்தமானது, ஊற – சுரக்க, வளர்ந்து – நிறைந்து, மாசு – குற்றத்தின், ஒழிந்த – நீங்கிய, திங்களூர் – சந்திரனே, ஊர் – பரிவேடமானது, வளைந்தாலென – சூழ்ந்ததுபோல, கோதை – தமயந்தியினது, செழுந்தண் – செழுமையுங் குளிர்ச்சியும் பொருந்திய, திரு – அழகிய, முகம் – முகமானது, உள் – நடுவில், உற – பொருந்த, சுழன்று – சுற்றிவந்து, தாழ்ந்தது – இறங்கிற்று எ-று.

மாசொழிந்த திங்களே யென்றதற்குக் களங்க மில்லாத சந்திரன் ஒன்றுண்டாயின் அதனே யெனப் பொருள்கூறி இல்பொருளுவமை யாக்கினு மமையும். சந்திரனுக்கு அமிர்தம்போல முகத்திற்கு மதுரவாக்குக்கொள்க. ஊர்வளைந்தா லெனச் சுழன்றெனவே சுழற்சி வேகத்திலுலே அதன் பொன்னொளி வலயமாக வீழ்ந்ததென்பது தோன்றுதலறிக. பறவைக்கு ஆகாயத்திலிருந்து கீழேயிறங்கும்போது தங்குதற்குத் தகுந்த விடத்தைச் சுழன்றுகொண்டே பார்த்தல் சுபாவம் உவமையுந் தன்மை நவிற்சியுஞ் சேர்தல் சேர்வையணி. 44

தெய்வத்தாமரைப்போதுறைசெல்வியுங்
கொவ்வைவாயயிராணியுங்கூறுமிந்
நவ்விநோக்கிக்கிணேயெனநாட்டுத
லெவ்வமென்னவிகழ்ந்துவியந்ததே.

இ-ள். தெய்வம் – தெய்வத் தன்மைபொருந்திய, தாமரைப்போது – தாமரைப்பூவின்கண், உறை – வாசஞ்செய்கின்ற, செல்வியும் – திருமாதும், கொவ்வை – கோவைப்பழம்போலும், வாய் – வாயையுடைய, அயிராணியும் – இந்திராணியும், கூறும் – சொல்லப்பட்ட, இந்நவ்விநோக்கிக்குமான்கண்போலுங் கண்களையுடைய் இவளுக்கு, இணையென – உபமானமாவரென்று, நாட்டுதல் – நிறுத்துதல், எவ்வமென்ன – குற்றமென்று, இகழ்ந்து – (அவ்விருவரையு) மிகழ்ந்து, வியந்தது – (இவளழகைக்குறித்து) ஆச்சரியப்பட்டது (அன்னம்) எ-று.

உபமானங்களுக்குக் குறைவைச் சொல்லுதலால் எதிர்நிலை யுவமையணி. 45

வேறு.

சுலவுற்றெதிர்போகியதூவியனங்
குவவுற்றபொலன்சிறையைக்குவியா
நிலனுற்றெறிநீள்சிறைமெல்வளியா
லலைவுற்றமருங்கினளஞ்சினளால்.

இ-ள். சுலவுற்று – சூழ்ந்து, எதிர் – (தமயந்தி) முன்பு, போகிய – சென்ற, தூவி – இறகுகளையுடைய, அனம் – அன்னமானது, குவவுற்ற – வளவுபொருந்திய, பொலன் – பொன்மயமாகிய, சிறையை – சிறைகளை, குவியா – குவித்து, நிலன் – பூமியின்கண், உற்று – பொருந்தி, எறி – (அப்போது) உதறப்பட்ட, நீள் – விரிந்த, சிறை – (அதன்) சிறைகளது, மெல்வளியால் – மெல்லிய காற்றுரசையால், அலைவுற்ற மருங்கினள் – அசைவுற்ற விடையையுடைய தமயந்தியானவள், அஞ்சினள் – அச்சமுற்றாள்.

வேறொன்றிற் கருத்து வைத்திருக்கின்றவளுக்கு முன்னே அன்னஞ் சரேலென் றிறங்குஞ் சமயத்தில் விரித்தடித்துக் கொள்ளுஞ் சிறைகளின் காற்றுரசை ஆகஸ்மிகமாக வுண்டாதலால் அச்சமுண்டாயிற்றென்க.

அன்றியும் அலைவுற்ற மருங்கின ளெனலால் காற்றால் இடைமுரியு மென்றஞ்சிலை ளெனினுமாம். இது தன்மை நவிற்சியணி. இதுமுதற்பத்தொன்பது செய்யுள்கள் பெரும்பாலும் முதற்சீர் புளிமாச்சீரோனுந் தேமாச்சீரோனும்பெற்று மற்றை மூன்றும் புளிமாச்சீர்க ளாகிவருகிற அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். 46

பொறியின்வழிநெஞ்சுபுகுத்தியிடா
ரறிவின்னறிவாயவரும்பொருளைப்
பிறிதொன்றறநோக்குதல்போற்பிறழு
மறியுண்கணின்பங்கையர்நோக்கினரால்.

இதனால் மங்கையர்க்கு அதனிடத்தண்டான விருப்ப மிகுதி சொல்லப்படுகின்றது.

இ-ள். பொறியின்வழி – ஐம்பொறிகளின் வழியிலே, நெஞ்சு – மனத்தை, புகுத்தியிடார் – செலுத்தாத யோகிகள், அறிவின் – ஞானக்கண்ணி னாலே, அறிவாய-அரிவருவாகிய, அரும்பொருளை-பரசிவனை, பிறிதொன்று-மற்றொருவிடயசம்பந்தம், அற – நீங்க, நோக்குதல்போல் – பார்த்தல்போல், மங்கையர் – தோழிகளானவர், பிறிதொன்று – மற்றொருவிட்ய சம்பந்தம், அற – நீங்க, பிறழும் – புரளுகின்ற, மறி – மான்கண்போலும், உண் – மையுண்ட, கணின் – முகக்கண்களாலே, அறிவாய – அறிவையுடையதாகிய, அரும் பொருளை – அபூர்வமாகிய அன்னத்தை, நோக்கினர் – பார்த்தார் எ-று.

அறிவினறிவாயவென ஒற்றீரட்ட வேண்டா விடத்துச் சந்தநோக்கி யிரட்டித்தது. உலகம் அஞ்ஞானமயமாகியும் பிரமம் ஞான மயமாகியுகிற்றலின் அறிவாயவென்றார். "அகரவுயிர்போ லறிவாகியெங்கு, நிகரிலைறைகிற்கு நிழைந்தது" எனத் திருவருட்பயன் கூறுவதனாலுமறிக. பிறிதொன்றற அப்பிரமமன்றி யிரண்டாவதொரு பொருளில்லையாக வெனினுமாம். இது உவமையணி. 47

அணித்தாயரிதாயவரும்பொருளைப்
பிணிப்பானசைவைத்தமர்பெற்றியர்போ
லணித்தாயவனங்கவர்வானசையான்
மணிப்பூணசையாதுவந்தனளால்.

இதனால் தமயந்தி அதனை விரும்பிப்பிடிக்கத் தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். அணித்தாய் – தேகத்தினு ளிருக்கின்றதாய், அரிதாய – (பெறுதற்கு) அரிதாகிய, அரும்பொருளை – பிரமத்தை, பிணிப்பான் – கண்டுபிடித்தற்பொருட்டு, நசைவைத்த – (அதனிடத்தே) ஆசைவைத்த, அமரர்-அசைவற்று நிற்கின்ற, பெற்றியர்போல் – மனச்செய்கையையுடைய மூனிவர்போல், அணித்தாய – சமீபத்திலே வந்த, அனம் – அன்னப்பறவையை,

கவர்வான் – பிடித்தற்பொருட்டு, நசையால் - (அதன்மேல் வைக்கப்பட்ட) ஆசையினாலே, மணி – நவமணிகளாலாகிய, பூண் – ஆபரணமானது, அசையாது - அசையாதிருக்கும்படி, வதிந்தனள் - (தமயந்தி) தங்கினள் எ-று.

தற்பரசிவம் உடம்புதோறும் உயிர்க்குயிராய்க் கலந்து நிற்றலின் அணித்தா யென்றதற்குத் தேகத்தினு ளிருக்கின்றதாயெனப் பொருள் கூறப்பட்டது. பூணசையாதெனவே வடிவமசையாமை கூறப்பட்டதாயிற்று. யோகிகள் மனமசையாமல் வைத்துப் பிரமத்தைக் காணுமாறு "வாயுநிற்ப மனநின்று மனந்தானிற்கப் பொறிநின்று, பாயபொறிக ணிற்பவிடர் படுபுன் புலன்கணின்றனவா, லாயபுலன்கணின்றமையா லகிலந்தோன்று துள்ளத்தே, தூயபர மானந்த பரஞ்சோதிதோன்றக் கண்டிருந்தார்" என்னும் பிரபுலிங்க லீலைச் செய்யுளினுலறிக உவமை. 48

அவிர்பூணினையாமலடக்கினளாய்க்
கவர்வான்வரல்கண்டுமகன்றிலதாய்த்
துவர்வாய்மயிலொட்டிடலாகுமெனு
நவைதீரனமெல்லநடந்ததுவே.

இதனுல் அப்போது அன்னத்தின்செயல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அனம் – அன்னமானது, அவிர் – விளங்காநின்ற, பூண் - பூண்களை, ஒலியாமல் – ஒலியாதிருக்க, அடக்கினளாய் - அடங்கினளாகி, கவர்வான் – (தன்னைப்) பிடிக்கும்படியாக, வரல் - வருதலை, கண்டும் - பார்த்தும், அகன்றிலதாய் - (தைரியத்தினுல்) ஒடிப்போகாததாகி, துவர் - பவளம்போலும், வாய் - வாயையுடைய, மயில் - மயில்போல்பவளாலே, தொட்டிடலாகுமெனும் - பிடிக்கக்கூடுமென்கின்ற, நவை - இகழ்ச்சியானது, தீர் - தீர, மெல்லநடந்தது - மெள்ள நடந்தது எ-று.

தொட்டிடலாகுமெனு நவைதீரென்றலிற் பிடித்தற்கெளிதென்னு மெண்ணத்தை அவளுக்குண்டாக்கி அவள்கை தன்மேல் விழவருந்தோறுந் தன் சூதிப்பினாலே தப்பித்துக்கொண்டு அவள் முயற்சியை வீணாக்கிற் றென்க. தீரவென்னினை யெச்சம் ஈறுகெட்டது. விரைந்து நடப்பிற் பிடிபடாதென்று தொடராளென நினைத்து அவளடைக்கேற்ப மெல்ல நடந்தென்க. 49

புளினத்தடமேவியபோகுமன
மெளிதிற்றனகைம்மலரெய்துறுமோ
வுளம்வைத்தமையென்னெனவொண்ணுதலார்
நளினக்கைபுடைத்துநகைத்தனரால்.

இதனுல் மங்கையர் தமயந்தியைத் தடுத்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒள் – காந்திபொருந்திய, நுதலார் – நெற்றியையுடைய தோழிகள், புளினம் - மணற்குன்றுகளையுடைய, தடம் – தடாகத்திலே, மேவிய-

வாசஞ்செய்யும்படியாக, போகும் – போகின்ற, அனம் – அன்னமானது, எளிதில் – எளிதிலே, தன் – தன்னுடைய, கை – கைகளாகிய, மலர்-தாமரை மலர்களிலே, எய்துறுமோ – அடையுமோ, உளம்வைத்தமை-(எம்பிராட்டி அதனிடத்தே) மனம்வைத்தமைக்குக் காரணம், என்னை-யாதென்று, நளினம் – தாமரை மலர்போலும், கை – (தம்) கைகளே, புடைத்து – தட்டி, நகைத்தனர் – சிரித்தார் எ-று.

புளினமென்றதற்குப் பறவைகளி னினத்தையுடைய வெளிணுமாம். தமயந்தியின் முயற்சி வீணுதலேக்கண்டு இங்ஙனம் பரிகாசஞ் செய்தா ரென்க. 50

பூணேமகலேயீர்கைபுடைத்துநகைத்
தனமேகவியற்றுதலன்புகொலோ
தனியேகுவனின்மினெனத்தகையாத்
துனியோடுரைசெய்துதொடர்ந்தனளே.

இதமுத னுன்குசெய்புள்களாலே பிடித்தற்குச் செய்யு முயற்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். பூணே – அலங்கரிக்கப்பட்ட, மேகலேயீர் – மேகலாபரணத்தை யுடையவரே, கைபுடைத்து – கைதட்டி, நகைத்து – சிரித்து, அனம்-அன்னத்தை, ஏக – ஓடிப்போக, இயற்றுதல் – செய்தற்குக்காரணம், அன்போ – (என்மேலுள்ள) அன்போ, தனி – தனியாக, ஏகுவன் – (நான்) போவேன், நின்மினென – (நீர்) நில்லுமென்று, துனியோடு – கோபத் தோடு, உரைசெய்து – சொல்லி, தகையா – ஆணையிட்டு, தொடர்ந்தனள்-(தமயந்தியானவள்) அதன்பின் போயினுள் எ-று.

கைபுடைத்த லொலியொடு மேகலையொலியு மெழுதல் தோன்றப் பூணேமகலேயீ ரென்றுளென்க. அன்புகொலோவெனலால் என்மேல் அன் பிலீ ராதலால் இங்ஙனஞ் செய்கின்றீரென்றதாயிற்று. தகைதல் என் பின்னே தொடருவீராயின் எனக்குத் தீங்குசெய்தவராகக்கடவீரென் றூணை கூறல். 51

முகிழ்மென்முலேவாணுதன்மொய்குழலார்
நகைசெய்வதுகண்டுளகாணினளா
யகல்கின்றபொலன்சிறையன்னநிழ
னிகரென்னவொதுங்கினணேரிழையே.

இ-ள். நேரிழை – தகுந்த வணியையுடைய தமயந்தியானவள், முகிழ்-தாமரை யரும்புபோலும், மென்முலே – மெல்லியமுலேகளையும், வாணுதல்-ஒளிபொருந்திய நெற்றியையும், மொய்குழலார் – நெருங்கிய கூந்தலையும் உடைய தோழிகள், நகைசெய்வது – பரிகாசஞ்செய்தலே, கண்டு – பார்த்து, உளம் – மனத்திலே, நாணினளாய் – வெட்கமுற்றவளாகி, அகல்கின்ற-

நீங்குகின்ற, பொலன் – பொன்மயமாகிய, சிறை - சிறைகளையுடைய, அன்னம் – அன்னத்தினது, நிழல் - நிழலானது, நிகரென்ன – (தனக்கு) நிகரா மென, ஒதுங்கினள் – நடந்தாள் எ-று.

தகையப்பட்ட தோழிகள் தனது பிடிக்க மாட்டாமையைக்கண்டு சிரித் தலால் நாணங்கொண்டாளென்க. அன்னநிழனிகரென்ன வொதுங்கின னெனவே அந்நாணம் அவளது முயற்சியை எழுப்பலால் அதன்சாயை போல விடாதசென்றாளென்க. இஃது உவமையணி. 52

* வடியுண்கணிமாமூலைதாங்கியதா
லிடுகும்பிடையெண்படுமேகலெனப்
பிடிமென்னடைமங்கையர்பேசமறுத்
தடிமென்மலர்பேர்த்தனளாயிழைபே.

இ-ள். வடி – கூர்மைபொருந்திய, உண் – (மை) யுண்ட, கணி – கண் களையுடையவளே, மாமூலை – பெரியமூலைகளை, தாங்கியதால் – சுமத்தலால், இடுகும் – அவளுகின்ற, இடை(உன்) இடையானது, என்படும் – (நடத்த லாலே) என்னபாடுபடும், ஏகலென – போகாதேயென்று, பிடி-பெண்யானை போல், மெல்நடை – மெல்லிய நடையையுடைய, மங்கையர் – தோழிகள், பேச – சொல்ல, மறுத்து - (அதை) மறுத்து, ஆயிழை – ஆராய்ந்து கொள் ளப்பட்ட வணியையுடையவளாகிய தமயந்தியானவள், அடி – அடியுருக் கொண்ட, மென்மலர் – மெல்லியதாமரை மலர்களை, பேர்த்தனள் - எடுத் தாள் எ-று.

கணி – அன்மைவினி. என்படுமென்றதற்கு இப்படியிருக்கிறவிதுயான் நடந்துசெல்லின் மிகவருந்துமென்று நீதானே அறிவாயென்பது பொருள். முன்னே எளிதிற் றன்கைம்மல ரெய்துறுமோ என்று பிடிபடாமைகூறிக் கேளாமற் போகையாலே பின்னும் வருத்தங்கூறி மறுத்தாரென்க. தகா தொழில் செய்யும்போது விலக்கல் தோழியர் கடனதலின் "நகுதற் பொருட்டன்று கட்டன்மிகுதிக்கண், மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்னுந் திருக்குறளானுமறிக. அடி மென்மலரென்னலால் – அடி வருந்து தலுங் கொள்க. ஏகல் - முன்னிலையேவ லொருமை யெதிர்மறைவினை முற்று. மலராகிய வுபமானம் நடத்தற்செய்கைக்கே உபயோகித்தற்கு அடி யாகிய உபமேயத்தி னுருவங்கொண்டு வேறுபட்டதாகச் சொல்லலால் தீரிபணி. 53

---

* "வடியுண்கணி – (மாவின்) வடுவையும் வென்ற கண்ணையுடைய வளே என்றுரைத்தல் சிறப்பு வடி அப்பொருட்டாதல், கஞ்சக நறுமுறி யாலே இப்பைந்துணர் நெடுமாக் கொக்கி னறுவடிவிதிர்த்த" என்னும் பெரும்பாணாற்றுப்படைச் செய்யுளானும், "மிடிக்கலப் பன்ன நறுவடி மாவின் - வடிச்சேறு விளைந்த நீம்பழத் தாரந் – தூவற்கலித்த" என்னும் மலைபடுகடாத்துச் செய்யுளானும் பெறுதும்.

செய்ப்பட்டசெழுங்கமலத்திலனங்
கைப்பட்டதுபட்டதெனக்கருதா
மைப்பட்டமலர்ப்பொழின்மாதவிவாய்ப்
பொய்ப்பட்டமருங்கினள்புக்கனளே.

இ-ள். பொய்ப்பட்ட – பொய்கூறுதற் கிடமாகிய, மருங்கினள்-இடையையுடைய தமயந்தியானவள், செய்ப்பட்ட - கழனியிலுண்டாகிய, செழுங் கமலத்தில் – செழிய தாமரைப்பூவிலிருக்கின்ற, அனம் – அன்னமானது, கை – (என்) கையிலே, பட்டதுபட்டதென – அகப்பட்டது அகப்பட்டதென்று, கருதா - நினைத்துக்கொண்டு, மைப்பட்ட – மேகத்தை யளாவிய, மலர் – மலர்களையுடைய, பொழில் – சோலையிலே, மாதவிவாய் - குருக்கத்தினிடத்தே, புக்கனள்-சென்றாள் எ-று.

இருந்தும் சிறுத்துக் காணப்படாமை பற்றி இல்லையென்றுகொள்ளப் படுதலாலே பொய்ப்பட்ட மருங்கென்று சொல்லப்பட்டது. கருதாப்புக்கனளென்றதனால் அடிபெயர்க்கும் தோறும் அப்படி நினைத்தாளென்க. பட்டதென்பது விரைவு பற்றி அடுக்கி இறந்த காலத்திலே வந்தது. புக்கனளென்றதற்கு அன்னம் அவளை அப்படி நினைக்கச்செய்து வஞ்சித்துக் குருக்கத்தியின் கீழ்த் தனிப்படர்கொண்டு போயிற்றென்பதே கருத்தாகக் கொள்க. 54

தொடர்ந்தாள்கலுழ்தூமுகம்வேரொழுக
நடக்* தாயிழையெய்த்தனளென்னநயந்
திடந்தேர்ந்தவளின்புறுநன்மொழிகண்
மடந்தாழிளவன்னம்வழங்கியதே.

இதனால் அன்னம் நன்மொழிகள் பேசத்தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். மடந்தாழ் – அறியாமைபோகிய, இளவன்னம் – இளமைபெருகிய அன்னமானது, தொடர்ந்தாள் – (என்பின்னே) தொடர்ந்துவளாகி, கலுழ் – விளங்குகின்ற, தூ - பரிசுத்தமாகிய, முகம் – முகத்தினின்றும், வேர்-வியர்வையானது, ஒழுக – ஒழுகாநிற்க, நடந்து – நடந்து, ஆயிழை - தமயந்தியானவள், எய்த்தனளென்ன – இளைத்தாளென்று, நயந்து – விரும்பி, இடம் – (தகுதியான) இடத்தை, தேர்ந்து - அறிந்து, அவள் – அத்தமயந்தி

* "ஆயிழை" என்பதற்கு ஆராய்ந்தெடுத்த ஆபரணத்தை யுடையாள் என்பதன்றி, அழகிய அணியையுடையா ளென்னலுமாம், ஆய் - அழகென்னும் பொருட்கண் வருதல் "மாயோன் மூன்கையாய் தொடி கடுக்கும்-கண் கூடிருக்கைத் திண்பிணித் திவலி – ஞாயிறே யரிசி யவையவென்ன" என்னும் பொருநாற்றுப்படைச் செய்யுளுரையினும், "நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்டாய்கோ லவிர்தொடி விளங்க வீசி" என்னும் மதுரைக் காஞ்சிச் செய்யுளுரையினுங் கண்டாம்.

யானவள், இன்பு - இன்பத்தை, உறு – அடைதற்குக் காரணமாவனவாகிய, நன்மொழிகள் – நல்லசொற்களை, வழங்கியது – சொல்லிற்று எ-று.

எனைய அன்னங்கள் போலாது பகுத்துணர்வுடைய அன்னமென்பார் "மடந்தாழுளவன்னம்" என்றார். இடந்தேர்தல் தனித்துப் பேசுதற்கா மிடத்தையறிதல். தூமுகம் – தசைபொருந்திய முகமுமாம் "தூவொடு மூலிந்த காயகானவர்" என வருமும் மேலபடி கடாஅத்துச் செய்யுளானு மறிக. 55

கோடுந்தியகொம்மைமுலைப்பொறையால்
வாடும்மிடைமாமயில்வாரலெனத்
தோடுண்குழன்மங்கையரிற்றுணர்மா
வாடுந்தளிரங்கைமறித்தனபார்.

இதுமுதலிரண்டு செய்யுள்களாலே முன்சொல்லப்பட்ட நன்மொழிகள் இவையென்று சொல்லப்படுகின்றன.

இ-ள். துணர் - பூங்கொத்துகளை யுடைய, மா – மாமரங்களானவை, கோடு – யானைக்கொம்புகளை, உந்திய – கீழ்ப்படுத்திய, கொம்மை – திரட்சி பொருந்திய, முலை – முலைகளது, பொறையால் – பாரத்தினாலே, வாடும்- வாடுகின்ற, இடை – இடையையுடைய, மாமயில் – பெருமை பொருந்திய மயிலே! வாரலென - (நடந்து) வாராதேயென்று, தோடு – மலரிதழ்களை, உண் – உட்கொண்ட, குழல் – கூந்தலையுடைய, மங்கையரின் – (உன்னுடைய) தோழிகள்போல், ஆடும் - அசைகின்ற, தளிர் – தளிர்களாகிய, அங்கை – அழகிய கைகளாலே, மறித்தன - (உன்னை) விலக்குகின்றன, பார் – (நீ அவற்றைப்) பார் எ-று.

கொம்மை என்னுஞ்சொல் திரட்சிப் பொருட்டாதல், "மும்மதத்த னென் றொருபெயர் தனக்கு மொய்கூந்தற் கொம்மை வெம்முலைக் கேற் றொடிக் கொடிச்சியை யிலைவேல்" எனுந் தணிகைப்புராணச் செய்யுளானு மூணர்க. வடியுண்கணியென்றபாட்டிலே மங்கையர் மறுத்தமையைச்சுட்டி இதிலே மங்கையரினென் றுவமிக்கப்பட்டது மாமரங்களை அங்ஙன மறிக் கின்றனவாகக் குறித்தலினாலே தற்குறிப்பணி. இதற்கு மங்கையரி னென்னு முவமையும் தளிரங்கை யென்னு முருவகமும் அங்கங்கள். 56

விண்ணின்னியங்குழ்மெனமேவரநீ
மண்ணின்னடந்தெவ்வணம்வெளவுதியா
லெண்ணின்னிதுகண்டவர்யார்நகையார்
பெண்ணின்னமுதேவரல்பேதைமையே.

இதனுல் பிடிபடாமைக்குக் காரணஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். பெண் – பெண்களிலே, இன்னமுதே – இனியவமிர்தம்போல் வினங்குகின்றவளே! விண்ணின் – ஆகாயத்திலும், இயங்கும் – திரிகின்ற,

எனை – என்னை, மேவர – அடைதற்கு, நீ – நீ, மண்ணில் – பூமியின்மேல், நடந்து – நடந்துவந்து, எவ்வணம் – எவ்விதத்திலுலே, வளவுநி – பிடிக்க மாட்டுவாய், எண்ணின் – ஆலோசிக்குமிடத்து, இது – இச்செய்தையை, கண்டவர் – பார்த்தவருள், யார் – யாவர், நகையார் – சிரியார், வரல் – (மங் கைப்பருவமடைந்த வனது) வருகை, பேதைமை – பேதைப்பருவத்தின் செயலாயிருக்கின்றது எ-று.

விண்ணி னியங்கு மெனையென்றதற்குப் பூமியிலன்றி ஆகாயத்திலுஞ் சஞ்சரிக்க வல்ல வென்னை யென்றும், மண்ணினடந் தென்றதற்குப் பூமி யொன்றிலே மாத்திரஞ் சஞ்சரிக்கின்ற நீ அப்பூமியிலே நடந்தென்றும், விரித்துரைத்துக் கொள்க. பெண்ணின்னமுதே யெனலாலும் வரல் பேதைமை யெனலாலும் மங்கைப்பருவ முடைமை சொல்லப்பட்டது. விண்ணினியங்கு மென்னும் பதப்பொருளாலும் மண்ணினடந் தென்னும் பதப்பொருளாலும் வளவக்கூடாமையும் இம்முதல்வாக்கியப் பொரு ளாலேவரல் பேதைமை யென்றதையுஞ் சாதித்தலாலே இவ்விரண்டு செய் யுட்குறியணிகள் கலந்துவந்த கலவையணி. 57

என்றின்மரபோதுமிவட்கியையப்
பின்னம்மொழிபேசுவலென்றயனூ
ரன்னந்தனதன்புறுசுற்றமியாம்
பொன்னின்னகர்யாங்கள்பொருந்திடமே.

இதனுல் அரசன் காரியத்துக்கு உபயோகியாகிய தன்வரலாற்றின் சிறப்பை யுணர்த்தத்தொடங்கிச் சுற்றமுமிடமு முணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். என்று – என்றுசொல்லி, இவட்கு – இவளுக்கு, இசைய – பொருந்த, பின் – பின்பு, அம்மொழி – அவ்வரசன்காரியத்தை, பேசுவ லென்று – சொல்வேனென் றெண்ணிக்கொண்டு, இன்மரபு – இனிதாகிய, (தன்) வரலாற்றை, ஓதும் – சொல்லுகின்றது, யாம் – யாங்கள், அயன்- நான்முகக்கடவுளால், ஊர் – செலுத்தப்படுகின்ற, அன்னந்தனது – அன்ன வாகனத்தினது, அன்புறு – அன்புமிகுந்த, சுற்றம் – உறவினேம், யாங்கள்- யாங்கள், பொருந்து – தங்கப்பெற்ற, இடம் – இடமானது, பொன்னின்ன கர் – தேவநகரமாகும் எ-று.

என்னென்றது முன்னிரண்டு பாட்டையுஞ் சுட்டி நின்றது பின் சொல்லப்படுவதாகிய அரசன் காரியத்திற்கு உபயோகியாதலால் இன்மர பென்றது. அன்புறுசுற்றமென்றதனுல் நெருங்கிய சம்பந்த முடைமை சொல்லப்பட்டதாயிற்று. பொன்னின் னகர்பொருந்திட மெனலால் எம் மோடு பயிலுதல் மனிதர்க்கு அரிதென்றதாயிற்று. தன்னினத்தையுந் தழுவிக்கொண்டு யாமென்றும் யாங்களென்றும் கூறிற்று. 58

மலர்மேலயன்மான தவாவியினுட்
பொலன்மெல்லிதழ்பூத்தசெழுங்கமல

நலனுர்வளையம்பலகாலுமயின்
றுலவாதொளிர்பொன்னிறமுற்றனமால்.

இதனுல் தன்வடிவம் பொன்மயமா யிருக்கைக்குக் காரணமுணர்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மலர்மேல் – தாமரைப்பூமேலுள்ள, அயன் - நான்முகனது, மான்ஸவாவியினுள் – மானசதடாகத்திலுள்ள, பொலன் - பொன்மயமாகிய, மெல் - மெல்லிய, இதழ் – இதழ்கள், பூத்த – வீரியப்பெற்ற, செழுங்கமலம்- செழிய தாமரைமலர்களையும், நலனுர் – நலம்பொருந்திய, வளையும் – இள விலேசசருள்களையும், பலகாலும் - பலதினமும், அயின்று – தின்று, உல வாது – அழியாமல், ஒளிர் - விளங்குகின்ற, பொன்னிறம் – பொன்னுரு வத்தை, உற்றனம் – அடைந்தோம் எ-று.

மானசவாவி அண்டமுகட்டின்கணுள்ளசத்தியலோகத்திலுள்ளது. இது யாற்றைப்போல வீழ்ந்தொழுகுதலுடையதாய், சீதை, சக்குசை, அளக நந்தை, பத்திரை என நான்குவகைப்படும். "உயர்தரு மண்ட முகட்டின் மானவஞ் சூற்றிருந் தொழுகிய கங்கை - முயலடைகிடக்குந் திங்களஞ் செல் வன் முழுமையு நனைந்துவார்ந் தொழுகி - வெயில்கெட விமைக்குஞ் சத்திய வுலகின் விரிதலே யருவியின் வீழ்ந்து – துயரறுசீதை சக்குசை யளகநந்தை பத்திரையெனத்திரியும்" என்னும் கூர்மபுராணச் செய்யுளானறிக. காரண குணம் காரியத்தில் உளதாமென்பது பற்றிப் பொற்கமலமாகிய தம்முண் வின்குணந் தமக்குண்டானமை சொல்லிற்று. 59

களிமாமயிலன்னவர்காதலுறு
மளி * நாண்மலரைங்கணைவேளனையா
னளன்மாநகர்நாண்மலர்வாவியினல்
வளநோக்குறமண்ணிடைவந்தனமால்.

இதனுல் பூமியில் வந்தமைக்குக் காரணமுணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். களி – களிப்பைத்தருகின்ற, மா – பெருமை பொருந்திய, மயி லன்னவர் – மயில்போலுஞ் சாயலுடையவராகிய மகளிரால், காதலுறும்- விரும்பப்படுகின்ற, அளிநாண் - வண்டுகளினுழுங்காகிய நாரியையும், மல ரைங்கணை – மலர்களாகிய பஞ்சபாணத்தையுமுடைய, வேளனையான் - மன் மதன்போ வழகினுலுகிய, நளன் - நளச்சக்கரவர்த்தியினது, மாநகர் – பெரிய பட்டினத்திலேயுள்ள, நாள் – அன்றுபூத்த, மலர் - மலர்களையுடைய, வாவி யின் - தடாகத்தினது, நல்வளம் – நல்லவளத்தை, நோக்குற - பார்த்தற்பொ ருட்டு, மண்ணிடை – பூமியினிடத்துக்கு, வந்தனம் – (யாம்வானுலகத்தை விட்டு) வந்தோம் எ-று.

* நாள்மலர் - நாட்காலத்திற் பூத்தமலர். அதனைப் "பூவெனப் பொலிந்த வோதியோடி - நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சி" என்னுஞ் சிறுபாணாற்றுப்படைச் செய்யுளுரையிற் காண்க.

நளன்மேல் அவளுக்கு ஆசையை யெழுப்புதற்கு அவனழகை இங்ஙனஞ் சிறப்பித்துச் சொல்லியது வளநோக்குற வென்றதற்கு அதில் விளையாடுதற் பொருட்டென்பது கருத்து. 60

விண்ணம்புவிபாதலமேவுகினு
நண்ணுந்துயரின்றெனநல்வரமுன்
றண்ணங்கமலத்திறைதந்தனன்மைக்
கண்ணென்றயில்கொண்டகனங்குழையே.

உலகமெங்கு மொழிவில்லாத திரிவிலேயும் தளர்வு தோன்றுமைக்குக் காரணமுணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மை – மையெழுதப்பெற்ற, கண்ணென்று – கண்களென்று (பெயர் வைத்து) அயில் - (நஞ்சூட்டப்பெற்ற) வேல்களை, கொண்ட – கொண்டிருக்கிற, கனங்குழையே – கனம்பொருந்திய காதணியையுடையவளே! தண்ணங்கமலத்து – குளிர்ச்சி பொருந்திய தாமரைப்பூவி லிருக்கின்ற, இறை - தலைவன், விண்ணம்புவிபாதலம் – தேவலோகம் பூலோகம் பாதலோகம் இவ்வனைத்தையும், மேவுகினும் - ஒழிவின்றி யடைந்து திரியினும், நண்ணும் – (உன்னை) யடையக்கடவதாகிய, அயர் – (தளர்ச்சித்) அயரவானது, இன்றென - இல்லையென்று, நல்வரம் - நல்லவரத்தை, முன் - முன்பு, தந்தனன் – (எனக்குக்) கொடுத்தான் எ-று.

ஒருகாலத்தில் நான்முகனுக்கு வாகனமா யிருந்ததற்காகக் கொடுத்தானென்க. இவ்வரத்தால் தளர்ச்சியின்றி இப்பூமியிலுள்ள தேசங்களெல்லாம் ஒழிவின்றி நோக்கித் திரிகின்றே னென்பது இசையெச்சம். கண்ணிற்கு மைபோல வேலிற்கு நஞ்சம் வருவிக்கப்பட்டது. 61

கௌவைக்கடல்சூழ்தருகாசினியிற்
றெய்வத்திறமேவியசீர்நளனே
வெளவுற்றிடினன்றியிம்மானிடர்தா
மெவ்வப்படிவெளவினுமெய்துவனே.

இதனுல் வேட்டைக்காரர் முதலானவர் பிடிப்பரென்னுமச்சம் எனக்கில்லையெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கௌவை – ஒலியையுடைய, கடல் – கடலாலே, சூழ்தரு- சூழப்பட்ட, காசினியில் – பூமியிலே, தெய்வத்திறம் - தேவபோகத்தை, மேவிய – பொருந்திய, சீர் - பாக்கியத்தையுடைய, நளன் – நளமகாராஜன், வெளவுற்றிடினன்றி - பிடித்தாலன்றி, இம்மானிடர்தாம் – இம்மனிதர்தாம், எவ்வெப்படி – எந்தெந்தவிதமாக, வெளவினும் – பிடித்தாலும், எய்துவனே – அகப்படுவனே எ-று.

காசினி – காசிபமுனிவராற் பரசுராமரிடத்திற் ரூனமாக ஈக்கப்பட்டது. நளன் பிறப்பினுலே மானிடனுயிருந்தும் போகத்தினுலே தேவனு

கத்தோன்றலின் அவனிடத்தே மாத்திரம் என்னைப் பிடித்தற்கு வல்லமை யுண்டென்று கூறிற்றென்பது கருத்து. மானிடரெனப் பொதுப்படக் கூறினரேனும் தகுதிபற்றி வேட்டைக்காரர் முதலியோரென்று கொள்க. வளைகண்ணி படைக்கல முதலியவற்றைக்கொண்டு பறவைகளை வௌவு மாறு பலவுமடங்குதற்கு எவ்வெப்படி வௌவினுமென்றது. 62

ஒளிர்பொன்னுலகத்துறையும்பர்பிரா
னளியாற்புகலேவலுமாற்றுகிலேம்
வளர்பூவுறைவானவனேவலுமிந்
நளனேவலுமேநனிசெய்குவமால்.

இதுமுத லிரண்டு பாட்டுகளாலே அத்தெய்வபோகம்
இதுவெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒளிர் – விளங்குகின்ற, பொன்னுலகத்து – தெய்வலோகத்தின் கண், உறை – வாசஞ்செய்கின்ற, உம்பர்பிரான் – இந்திரனது, அளியால்-அன்பினாலே; புகல் – சொல்லப்பட்ட, ஏவலும் – ஏவலையும், ஆற்றுகிலேம்-(யாஞ்) செய்வோம், வளர் – வளர்கின்ற, பூ – தாமரைப்பூவின்கண், உறை-இருக்கின்ற, வானவன் – நான்முகக் கடவுளது, ஏவலும் – ஏவலையும், இந்நளன் – இந்தநளனது, ஏவலுமே – ஏவலையுமே, நனி – மிகுதியாக செய்குவம் (யாஞ்) செய்வோம் எ-று.

தனக்கடங்கின வென்றேவும் வல்லமையில்லாமையால் அளியாற்புகலேவலு மென்றது. நனிசெய்தல் – அவர்சொன்னவளவினு மதிகமாகச் செய்து முடித்தல். இங்ஙன் கூறலால் இந்திரனைக்காட்டிலுஞ் சிறந்தவன் நளனென்று குறிப்பித்ததாயிற்று. 63

தளிதூங்கியவான திதோய்ந்துநறுங்
குளிர்தூங்குகுறுந்துளிமென்சிறையாற்
களிதூங்கியகாமவிடாயகல
நளன்மேனியில்வீசுவனன்குறவே.

இ-ள். தளி – தளித்தலோடு, தூங்கிய – தங்கிய, வானதி – ஆகாயகங்கையிலே, தோய்ந்து – முழுகி, நறுங்குளிர் – நல்லகுளிர்ச்சியானது, தூங்குநிலையுறப்பெற்ற, குறுந்துளி – சிறிய துளிகளே, மென்சிறையால் – மெல்லிய சிறைகளினாலே, களி – களிப்பானது, தூங்கிய – தங்கும்படியாகவும், காமம் – காமத்தாலாகிய, விடாய் – தளர்ச்சியானது, அகல – நீங்கும்படியாகவும், நளன் – நளனது, மேனியில் – உடம்பில், நன்குற – நன்றாகப்பட, வீசுவம் – (யாம்) வீசுவேம் எ-று.

வீசுவமென்றது எதிர்காலமுற்றாயினும், எதிர்கால முற்றுகள், இப்படிப்பட்ட விடங்களிலே செயலுமாத்திரமே யுணர்த்துமென்க. நளனுக்கு வேறுமகளிரோடு கூட்டுறவும் இவை அப்படி வீசுதலும் பொய்யாதலிற்

குற்றமன்றே வெனின் அன்று. "பொய்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மைபயக்குமெனின்" என்று சொல்லப்பட்டமையின், புரை தீர்ந்த நன்மையாவது இதனுல் அவளே வசப்படுத்தித் தகுந்த நாயகனோடு சேர்த்தலாம். 64

கலித்துறை.

தெள்ளாரமுதத்தெளிவொத்தவந்தீஞ்சொனல்லாய்
வள்வார்முரசங்கறங்கும்மணிமுன்றில்வேந்தன்
கள்வாயுமிழ்பூங்கணையேந்தியகாமனன்னு
னள்ளார்வணங்குநளனென்னுமோர்நாமவேலான்.

இனி நளனுடைய பலவகைப்பட்ட குணங்களையுஞ் சொல்லத் தொடங்கி இதனுலே செல்வமும் அழகும் வேலின் சிறப்பும் உணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ன். தெள்ளார் – தெளிவு பொருந்திய, அமுதம் – தேவாமிர்தத்தினது, தெளிவொத்த – சாரம்போன்ற, அம் – அழகிய, தீ – இத்திப்பாகிய, சொல் – வாக்கையுடைய, நல்லாய் – தமயந்தியே, வள்வார் – வலி பொருந்திய வாரினுலிறுக்கப்பட்ட, முரசம் – முரசவாத்தியமானது, கறங்கும் – ஒலிக்கப் பெற்றிருக்கின்ற, மணி-நவமணிகளையுடைய, முன்றில்-வீட்டின்முன்னிடத்தையும், நளனென்னும் – நளனென்று சொல்லப்படுகிற, ஓர் நாமம் – ஒப்பற்ற நாம தேயத்தையும் உடைய, வேந்தன்-அரசனுருவன்), கள் – தேனை, வாய் – இதழ்வாயினுல், உமிழ் – கக்குகின்ற, பூங்கணை – மலரம்புகளை, ஏந்திய – தாங்குகின்ற, காமனன்னுன் – மன்மதன்போலழகுடையவன், நள்ளார் – பகைவர், வணங்கும் – (தன்னை) வணங்குதற்குக் காரணமாயிருக்கின்ற, வேலான் – வேற்படையையுடையவன்.

வள்வார் முரசம் – மயிர்க்கண் முரசம் என்னலுமாம் அஃதாவது புலியைப் பொருது கொன்றுகின்று சிலத்துக் கோட்டு மண்கொண்ட எருது இறந்துழி அதன்றோலே மயிர்சீவாமற் போர்த்த முரசாம். "புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற – கனைகுரலுருமுச் சிற்றக் கதழ்விடையுரிவை போர்த்த – தனைகுரன் முரசத்தானைத் தோன்றலே" என்றுரு பிறரும். மணிமுன்றில் வேந்தன்-காமனன்னுன் – நள்ளார் வணங்குவேலான் – எனமுறையே செல்வம் – அழகுவேற்படை – இவற்றின் சிறப்புக் கூறியவாறு காண்க. மணி – பலதேசத்தாராலுந் திறையளக்கக் குவிக்கப்பட்டவை. இல்முன் – முன்றிலென நிலைமாறிய இலக்கணப்போலி. இதுமுதல். 16 – பாட்டுக்கள் பெரும்பாலும் இடையிலொரு புளிமாங்கனிச்சீரும் ஏனைநான்கும் மாச்சீர்களு மாகிவந்த நெடிலடி நான்குகொண்ட கலித்துறைகள். 65

வண்டார்வஞ்செய்தமதுவுண்டுமிழ்மாலைமார்பன்
றிண்டோளெழில்கேட்டவரம்பையச்செம்மன்மார்பக்

தண்டாதுபுல்லப்பெறுதாற்பெயர்ச்சார்புநாடி
யொண்டார்புனையுநளகூபரன்றன்னையுற்றுள்.

இதனுலே பின்னும் அழகின்புகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். வண்டு – வண்டுகளானவை, ஆர்வஞ்செய்து – விரும்பி, மது – தேனை, உண்டு – குடித்து, உமிழ் – உமிழப்பெறுகிற, மாலை – பூமாலையை யுடைய, மார்பன் – மார்பையுடைய நளனது, திண்டோள் – வலிய தோள் களது, எழில் – அழகை, கேட்டு – (எம்மிடத்திற்) கேட்டு, அ அரம்பை – அந்தவரம்பையானவள், அச்செம்மல் – அவ்வரசனது, மார்பம் – மார்பத்தை, தண்டாது – நீங்காமல், புல்ல – தழுவுதற்கு, பெறுதல் – பெறுதகாரணத் தால், பெயர் (அவன்) பெயரினது, சார்பு – சம்பந்தத்தை, நாடி – ஆராய்ந்து, ஒண்டார் – ஒள்ளிய பொன்னரிமாலையை, புனையும் – சூடுகின்ற, நள கூப ரன்றன்னை – நளகூபரனை, உற்றுள் – அடைந்தாள், எ-று.

அரம்பைக்கு அகரச்சுட்டு அழகிற் சிறந்தவளென்று பெயர் பெற்று விளங்குகின்றமையைக் காட்டுகின்றது. தண்டாதுபுல்லல் – தனக்குக் கண வனுகப்பெற்று எந்நாளும் புணர்தல். தண்டாமை – நீங்காமை. இது "ஆணமை தண்டாமையா யிரண்டு நீங்காமை" என்பதனுலறிக * நள கூப ரன் – குபேரன்மகன். நளகூபரனைச் சேர்தற்கு ஏதுவாகாதநளனதுபெயர்ச் சார்பு நாடுதலை ஏதுவாகக் குறித்தலாலே ஏதுத்தற்குறிப்பணி. இதனுலே அவனழகுக்கு ஒப்பு இல்லையென்பது குறிப்பிக்கப்படுகின்றது. 66

ஏகாவிசும்பினளன்பாடலியாங்கள்கூற
மாகாதிபனிவ்வரிப்பாடல்வருங்கொலென்று
பாகூறவீணபயில்வோன்முகம்பார்த்துரைப்ப
வாகாவெனலாலவற்சப்பெயர்சேர்த்தினுரே.

இதனுலே இசை பாடற்புகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். யாங்கள் – யாம், விசும்பின் – பொன்னுலகத்திற்கு, ஏகா – (இவ் வுலகத்திருந்து) போய், நளன் – நளராசனது, பாடலை – இசைபாடுதற் சிறப்பை, கூற – சொல்ல, மாகாதிபன் – தேவேந்திரன், இவ்வரிபாடல்-

* கூர்மபுராணம் – இராவணன் மாபுரைத்த அத்தியாயம்.

என்னலுனின் முன்னவ னிதிக்கிழவ னின்ற
மன்னளள கூபர னெனைத்தனி வரித்தா
னுன்னுடன் மணப்பது தகாதென வுரைத்துக்
கன்னல்புளித் தென்னநனி கட்டுரை புகன்றுள்
ஆங்கவன் விடுத்திடலு மாமுத மன்ன
கோங்கமுலை மாதநள கூபரனை நண்ணி
மீங்கிவை யியம்பவவ னுன்னுமது போலுங்
கீங்குசெயி னவன்றலை தெறிக்கவென வைதான்.

இப்பாட்டுப்பாடுதல், வருங்கொலென்று - உனக்கு வருமோவென்று, பாகு-பாகின்சுவை, (போலுஞ்சுவை,) ஊற - பெருக, வீணைபயில்வோன் - வீணை பாடுகிற ஒரு கந்தர்வனது, முகம் - முகத்தை, பார்த்து - நோக்கி, உரைப்ப-சொல்ல, ஆகாவெனலால் - (யாம்) ஹாஹாவென்று இகழ்தலால், அவற்கு-அக்கந்தர்வனுக்கு, அப்பெயர் - அந்த ஹாஹா என்கிற பெயரை, சேர்த்தினர் - வைத்தார் எ-று.

மாகமென்னும் ஆகாயத்தின்பெயர் ஆகுபெயராய்த் தேவலோகத்தை யுணர்த்தி நின்றது. அதுவருமொழியோடு மரம்—அடி—மராடி என்பது போலப் புணர்ந்து நின்றது. கொல் - வினைப்பொருளில் வந்தது. ஓரியாவது, அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடிக்கும்பாடல். "வரியெனப்படுவது வகுக்குங் காலைப் - பிறந்த நிலனுஞ்சிறந்த தொழிலு - மறியக் கூறியாற்றுழி வழங்கல்" என்னூர் நாடகத்தமிழ்நூலாரும், ஆகாவெனலா லென்றதற்கு அக்கந்தருவன் என்னு லாகாவெனலா லெனப்பொருள் கூறுவாருமுண்டு. கந்தருவர் பன்னிரு வருள் இவன் சிறந்தோன். பன்னிருவராவார் -- ஆகா, ஊகூ, திம்புரு, நாரதன் - விசுவாவசு, அத்திரசேனன், வசிருசி, சருவாசு, சித்திரசேனன், ஊளுகன், திருதராட்டரன், சூரியவாசன் என்னுமிவராம். அவனுக்கு அப்பெயர் அங்ஙனந்தற்பவமாய் வந்த வடமொழிப் பெயராதலால் அமரத்திலுங் காண்க. ஆகாவென்னும் பெயர்க்குவேறு காரணத்தைக் கற்பித்தலால் பிறிதுநிலை நவிற்சியணி. இதனால் நலன் இசைப்பாடலில் அக்கந்தருவனிலும் வல்லவனென்னும் பொருள் தோன்றுகின்றது. 67

உலனூறுசெய்தவுயர்மாமணித்தூண்செய்தோளா
னலன்யாமுரைப்பநசைகூரயிராணிகொம்மை
முலைமேற்பொடித்தபுளகத்தினைமொய்த்தசெங்கண்
மலர்நீரரும்புவதிற்சண்டிலன்வானவேந்தன்.

இதனால் நற்குணப் புகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். உலன் - திரண்டகல்லை, ஊறுசெய்த - பொடிசெய்த, உயர்-உயர்வாகிய, மா - பெரிய, மணித்தூண் - வச்சிரத் தூண்கள்போல, செய் செய்யப்பட்ட, தோளான் - தோள்களையுடைய நளமகாராஜனது, நலன்-நற்குணத்தை, யாம் - யாங்கள். உரைப்ப - சொல்லக் (கேட்டு,) நசைகூர்-(அவன்மே) லாசைமிக்க, அயிராணி - இந்திராணியினுடைய, கொம்மை-இளமைபொருந்திய, முலைமேல் - முலைகளின்மேலே, பொடித்த - உண்டாகிய, புளகத்தினை - மயிர் சிலிர்த்தலை, மொய்த்த - (தன்வடிவத்திலே) நெருங்கிய, செம் - செவ்விய, கண்மலர் நேத்திரா - விந்தங்களில், நீர் - ஆனந்தநீரானது, அரும்புவதின் - தோன்றலால், வானவேந்தன் - தேவேந்திரனுவன், சண்டிலன் - பார்த்திலன் எ-று.

வச்சிரமணிவற்றைப் பலமணிகளையும் பேதிக்குமுறுதியுடையதாகலின் உயர்மாமணி யெனப்பட்டது. நலன் - அவன் பலகுணங்கள். புளகம் உவ

கைச் சுவையைப் பற்றிய விறல். இந்திரனுக்கு ஆயிரங் கண்களர்தலின் மொய்த்த செங்கணென்றது. புளகத்தைக் கண்டால் உள்ளப்புணர்ச்சியின் குற்றநோக்கி மனைவியைத் தண்டிப்ப னென்பதுகருத்து. 68

முருகுண்டுவண்டுபயிருர்நளன்வாண்முகத்தைப்
பெருவெண்மதியங்கையத்தப்பெருமையன்றே
கருதுங்கமலத்துறைகான்முகன்கைவருந்த
வருதிங்கடோறும்புதிதாகவகுத்தல்செய்வான்.

இதுமூக விரண்டுசெய்யுள்களாலே முகப்புகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். கருதும் – நினைக்கின்ற, கமலத்து – தாமரைப் பூவின்கண், உறை – இருக்கின்ற, நான்முகன் – நான்முகக்கடவுள், வண்டு – வண்டுகளானவை, முருகு - தேனை, உண்டு - குடித்து, பயில் – வாசஞ்செய்யப்பெற்ற, தார் – மாலையையுடைய, நளன் – நளராசனது, வாண்முகத்தை – காந்தி பொருந்திய வதனத்திற்கு, பெருவெண்மதியம் - கலை நிறைந்த சந்திரன், நிகர் - ஒப்பை, எய்த - அடைய, பெருமையன்றே – பெருமையாலன்றே, கை – (தன்) கைகள், வருந்த - நோவ, வரு – வருகின்ற, திங்கடோறும், மாதந்தோறும், புதிதாக – நூதனமாக, வகுத்தல் செய்வான் – உண்டாக்குகிறான் எ-று.

கருதல் – நளன் முகத்துக் கொப்பாவதொரு சந்திரனைச்செய்ய நினைத்தல், வல்லவனொருவன் தன்னுலே தொடங்கப்பட்டது பலமுறை கெடுமாயினும் அதுசெவ்வையாக முற்றுப்பெறுமளவும் அதன் முயற்சியை விடாளுதலால் வருதிங்கடோறும் புதிதாக வகுக்கின்றனென்க. நான்முகன் மாதந்தோறுஞ் சந்திரனைப் புதிதாகப் படைத்தற்கு ஏதுவாகாத அங்கையைத் தப் பெருமையை ஏதுவாகக் குறித்தலினுலே ஏதுத்தற்குறிப்பணி. இதனுலே நளன் முகஞ் சந்திரனைப் பார்க்கிலுஞ் சிறந்து விளங்குகின்றமை தோன்றுகின்றது. 69

கோணைக்களிற்றுநளன்வாண்முகக்கூறுகென்ன
யாணர்த்திருமாலருள்செய்தலும்யாங்கள்கூற
நாணிக்கமலமயனேடுமுழைப்பநாடிப்
பூணிற்பொலிந்தமுலைப்பூமகட்புல்லுமன்றே.

இ-ன். கோணை - மாறுபாடுபொருந்திய, களிற்று - யானைகளையுடைய, நளன் - நளச்சக்கரவர்த்தியினது, வாள் - காந்திபொருந்திய, முகம் – முகச்சிறப்பை, கூறுகென்ன - சொல்லக்கடவிரென்று, யாணர், அழகிய, திருமால் – விட்டுணு, அருளிச்செய்தலும் – சொல்லிய வளவிலே, யாங்கள் – யாம், கூற – சொல்ல, நாணி – வெட்கி, கமலம் – நாபிக்கமலமானது, அயனேடு - நான்முகனேடு, முழைப்ப – குகிய, நாடி - (அத்தருணம்) பார்த்து, பூணின் - ஆபரணத்தினுலே, பொலிந்த - விளங்குகின்ற, முலை-

மூலகளையுடைய, பூமகள் - திருமாதை, புல்லும் – (அக்கடவுள்) கூடுவான் எ-று. ஐ சாரியை.

திருமால் நளன் முகத்தைப் புகழ்வித்தலாகிய கபடத்தினாலே நாபிக் கமலத்தைக் குவிவித்து நான்முகனை மறைத்து மனைவியைப் புணர்தலாகிய விருப்பத்தை முடித்தலால் பிறிதினவிற்சியணி. இதனாலே நள்ன் முகம் அக்கமலத்தினுஞ் சிறந்தமை தோன்றுகின்றது. 70

சிறைவண்டுதண்ணென்முகைசூழ்ந்துபைந்தேறன்மாந்தி
யறைகின்றதண்டார்புனையுந்திறலாடல்வேந்தன்
பொறைதேரினங்கட்புவிமாதினைப்பொங்குசெஞ்சூட்
டிறைவாளரவைநிகரென்னவியம்பலாமே.

இதனாலே பொறுமை பூபாரந்தாங்குதல்களின் புகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். சிறை – சிறகளையுடைய, வண்டு - வண்டுகளானவை, தண்ணென் - குளிர்ச்சிபொருந்திய, முகை – அரும்புகளை, சூழ்ந்து – சுற்றிக் கொண்டு, பைந்தேறல் – பசியதேனை, மாந்தி – குடித்து, அறைகின்ற - ஒலிக்கப்பெற்ற, தண் – குளிர்ச்சிபொருந்திய, தார் – மாலையை, புனையும் - தரித்திருக்கின்ற, திறல் – வலிமையாலுண்டாகிய, ஆடல் - வெற்றியையுடைய, வேந்தன் – நளச்சக்கரவர்த்தியினது, பொறை - குற்றம், பொறுத்தலையும் - பூபாரந்தாங்குதலையும், தேரின் – ஆராய்ந்தால், அங்கண் – அழகியவிடத்தையுடைய, புவிமாதினை – பூமிதேவியையும், பொங்கு – விளங்காநின்ற, செஞ்சூட்டு - சிவப்பாகிய சூட்டையுடைய, வாள் – காந்திபொருந்திய, இறை - (பாம்புகளுக்கெல்லாந்) தலைவனாகிய, அரவை - ஆதிசேஷனையும், நிகரென்ன - (அவனுக்கு) உபமானங்களாக, இயம்பலாம் – (அறிவுடையோருக்குச்) சொல்லுதல் கூடும் எ-று.

குற்றம் பொறுக்குங் குணத்துக்குப் பூமியும் பூபாரந்தாங்குதலுக்கு அனந்தனுமென்று கொள்க. முன்னதற்கு "அகழ்வாரைத் தாங்குநிலம் போலத், தம்மை யிகழ்வார்ப் பொறுத்தறலை" என திருக்குறள் உரைத்தலாலும், பின்னதற்கு இந்நூலிலே "பன்னகஞ் சுமந்த வைப்போர் தோளினிற் பரிக்கு மன்னர் மன்னனை" என்று வருதலாலும், அவை உபமானமாதற் கேற்றல் காண்க. பொறையினிருபொருளும் புகழ்பொருளாதலிற் புகழ்பொருட் சிலேடையணி. 71

புற்றுகுமாவமுறைவாளிப்புயங்கமுண்ணச்
செற்றார்தமாவிதுகர்விக்குஞ்சிலைக்கையாற்குக்
குற்றேவல்செய்யுங்கொடியன்னவர்பானடக்கக்
கற்றுடரம்பையில்வானடைகாட்டுகிற்பேன்.

இதனுல் நளராசனிடத்து உத்தம மங்கையரிருக்கையைக் குறிப்பித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஆவம் ஆகும் – தூணியாகிய, புற்று – புற்றினுள், உறை – இருக்கிற, வாளி - அம்புகளாகிய, புயங்கம் - பாம்புகளானவை, உண்ண - உண்ணும்படியாக, செற்றூர் – பகைவரது, ஆவி – பிராணவாயுவை, நுகர்விக்கும், உண்பிக்கின்ற, சிலை – வில்லையுடைய, கையாற்கு – கையையுடையவனுகிய நளனுக்கு, குற்றேவல் - சிறியவேவல்களை, செய்யும் – செய்கின்ற, கொடியன்னவர்பால் – பூங்கொடிபோல்பவரிடத்தே, நடக்க - நடத்தற்கு, கற்று-(யாண்) கற்றுக்கொண்டு, ஆடு – (தெய்வச்சபையி) லாடுகின்ற, அரம்பை-அரம்பையான்னவள், பயில்வான் - கற்கும்படியாக, நடை – அந்நடையை, காட்டுகிற்பேன் - கற்பிப்பேன் எ-று.

கில் - ஆற்றலிடைநிலை, வாயு அருவமாயினும் அதனை யுண்ணுதல் பாம்பிற்கு இயல்பாதலால் ஆவி நுகர்விக்குமென்றது. ஆவ முதலியவற்றிலே புற்று முதலியவற்றி னெற்றுமையை ஆரோபித்தலாலே உருவக வணி. கற்றுக்காட்டுகிற்பே னென்றதனுல் எனது நடையினும் அரம்பை நடையினும் சிறந்தது நளன் குற்றேவல் செய்யு மகளிர் நடையென்றதாயிற்று. குற்றேவல் - சாமரம் வீசுதல், அடைப்பையேந்துதல் முதலியன. இங்கே நளனுக்குச் சொல்லப்பட்ட விசேடணத்தால் அவன் யுத்த பராக்கிரமமுஞ் சொல்லப்பட்டதாயிற்று. 72

அறைபொற்கழற்காலரசன்னகரஞ்சொனல்லார்
மறைசொற்கள்யாவுமறையாமலெனக்குரைப்பார்
பொறிமுற்றடக்கிப்புலன்போம்வழிபோக்கல்செய்யா
நெறியிற்பிறர்க்குப்புகலாதெனநெஞ்சிலெண்ணி.

இதனுல் நளனந்தப்புரத்திலே தனக்குப் பழக்க முண்டெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அறை - ஒலிக்கின்ற, பொன் - பொன்னுலாகிய, கழல் - வீரக்கழலையுடைய, கால் - பாதத்தையுடைய, அரசன் – நளச்சக்காவர்த்தியினது, நகர் – அரண்மனையிலுள்ள, அஞ்சொல் - அழகிய சொல்லையுடைய, நல்லார் – மாதரானவர், பொறிமுற்று – ஐம்பொறிகளையும், அடக்கி-அடக்கி, புலன் – ஐம்புலன்களிலும், போம்வழி - செல்லும்வழியில், போக்கல் செய்யா – (அவற்றைச் செலுத்தாத, நெறியின் – ஒழுக்கத்தினுலே, பிறர்க்கு - அயலாருக்கு, புகலாதென - சொல்லாதென்று, நெஞ்சில் – மனதிலே, எண்ணி - நினைத்து, மறை – மறைக்கத்தக்க, சொற்கள்யாவும் - எல்லாச்சொற்களையும், மறையாமல் – ஒளிக்காமல், எனக்கு – எனக்கு, உரைப்பார் - சொல்லுவார் எ-று.

அந்தப்புரமாதர் சொல்லுவாரென்னும் பொதுப்பொருளினுலே உன் கருத்தைச் சொல்லென்னுஞ் சிறப்புப்பொருள் தோன்றுதலாற் பொதுப் பூனிலி புகழ்ச்சியணி. 73

திங்கட்கலையின்செழும்பூங்கதிர்செவ்விவாய்ப்பக்
கங்குற்கமலமலர்தோய்ந்துகளிப்புறுமற்
பைங்கட்குமுதமுறல்போலுநீபார்த்திவன்றன்
றெங்கற்புயந்தோய்ந்துறுமற்பிறமாதுதய்த்தல்.

இதனால் அவளுக்கு நளன்மேற் காதலை யெழுப்புதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். திங்கட்கலையின் - சந்திரகலையினது, செழு - செழிய, பூ - அழகிய, கதிர் - அமுதகிரணத்தை, செவ்வி - அழகானது, வாய்ப்ப - பொருந்த, கங்குல் - இரவின்கண், கமலமலர் - தாமரைமலரானது, தோய்ந்து - சேர்ந்து, களிப்ப - மகிழ்ச்சியை, உறுமல் - அனுபவியாதிருக்க, பைங்கள் - பசியதேனையுடைய, குமுதம் - (அத்தாமரை மலரிற் குறைந்த) அல்லி மலரானது, உறல்போலும் - (அப்படி அம்மகிழ்ச்சியை) அனுபவித்தல் போலும், நீ - நீயானவள், பார்த்திவன்றன் - அரசனது, தொங்கல் - மாலையையுடைய, புயம் - தோள்களே, செவ்வி - அழகானது, வாய்ப்ப - பொருந்த, தோய்ந்து - சேர்ந்து, களிப்பு - மகிழ்ச்சியை, உறுமல் - அனுபவியாதிருக்க, பிறமாது - (உன்னிற் குறைந்த) மற்றொருத்தி, தய்த்தல் - (அப்படி அம்மகிழ்ச்சியை) அனுபவித்தல் எ-று.

தாமரை மலர்களிலுஞ் சிறந்ததாய் நிற்றலிற் செவ்விவாய்ப்பவென்றது. "பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை" என்பதனாலுமறிக. கமல மலர் களிப்புறுதல் - மலர்ச்சியுறுதல், நீ மகளிர் பலரினுஞ் சிறந்த அழகுடையவளாயிருந்தும் உனக்குத்தகுந்த நளனைப் பெறுதற்கு முயற்சி செய்யாது உன்னிற்குறைந்தவள் அவனைச்சேர்ந் தின்புறவிட்டிருத்தல் மடமையென்பது கருத்து. 'பைங்கட் குமுதமுறல்போலு நின்பாலுறுமற் றெங்கற்புயத்தான் பிறமாதரைத் தோய்தன்மாதோ" எனப் பாடங்கூறி - சந்திரகிரணங் கமலத்தைச் சேர்ந்து களிப்புறுமல் அல்லியைச் சேர்ந்து களிப்புறுதல் போலும் நளன் உன்னைச்சேர்ந்து களிப்புறுமற் பிறமாதரைச் சேர்ந்து களிப்புறுதல் எனப் பொருளுரைப்பாருமுண்டு. களிப்புறுதல் மலர்களுக்கன்றிக் கிரணத்திற்கு இயையாமையாலும் அரசனுக்குக் குறைவு தோன்றலாலும் அது முதனூன்முடிபின் வேறுபட்டும் பயன்படாமையறிக. 74

மயிர்வாய்ச்சிறுகட்பிடிமென்னடைவாய்ந்தகல்லாய்
செயிர்தீர்வியின்றிறம்யார்கொறெளிந்தநீரா
ரயில்வேனளன்றனழகுன்னெழிலொத்தவாற்றற்
பயினேயவின்பநினக்கன்றிப்பயன்படாதால்.

இதனால் அவளுக்கு நளனைப்பெறுதற்கு அனுகூலமிருக்கின்றபடி யுணர்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மயிர்வாய் - மயிர்பொருந்திய, சிறுகண் - சிறியகண்களையுடைய, பிடி - பெண்யானைபோலும், மென்னடை - மெல்லியநடை,

வாய்ந்த - பொருந்திய, நல்லாய் - தமயந்தியே ! அயில் – கூர்மைபொருந்திய, வேல் - வேலையுடைய, நளன் – நளராசனது, அழகு – அழகும், உன்- உனது, எழில் – அழகும், ஒத்த – (தம்மி)லொத்திருக்கின்ற, ஆற்றல்- காரணத்தினால், பயில் – தங்கிய, நேயம் – (ஒப்புடை) யன்பாலுண்டாகும், இன்பம் – இன்பமானது, நினக்கன்றி – உனக்கல்லாமல் (மற்றொருத்திக்கு), பயன்படாது - கிடைப்பதில்லை, (அழகொத்திருந்தாலும் விதிசங்கற்பம் பிரதி கூலமாயிருந்தாலோவெனில்) செயிர - குற்றத்தினின்றும், தீர் - நீங்கிய, விதியின் – விதியினது, திறம் – கருத்தை, தெளிந்த – அறிந்த, நீரார் – குணத்தையுடையவர், யார் – எவர் எ-று.

இங்கே அழகும் எழிலும் ஆண்மை வடிவும் பெண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி யமைந்தவனப்பாம். அன்றியும் உயர்குடிப்பிறப்பு, நல்லொழுக்கம் – பருவம் - அறிவு - செல்வம் - என்பவை முதலியனவும் ஒரோவழி அழகெனவும் படுமாதலின் அவையு மிங்கே யடக்கிக் கொள்ளப்படும். நும்மிருவருக்கும் அழகொத்தலால் அன்புமொத்த இன்பஞ் சிறக்குமென்பது தோன்ற நேயவின்பமென்றது இருவர்க்கும் அன்பொக்குமாயினின்பஞ் சிறக்குமென்பது "தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர் பெற்றாரே, காமத்துக்காழில்கனி" என்பதனாலுமுணர்க. நினக்கன்றிப் பயன்படாதெனவே நீயே அவனுக்கு மனைவியாவை யென்றதாயிற்று. விதியென வாளா கூறுது செயிர்தீர்விதியெனச் சிறப்பித்துக் கூறுதலால் விதிசங்கற்பமும் இந் நற்காரியத்துக்கு அனுகூலித்தே யிருக்குமென்பது குறிப்பிக்கப்பட்டது. யாரென்றது ஒருவருமில்லையென்னும் பொருளில் வந்தது. 75

விரைசேர்கமலவிதிப்புந்தகக்கூட்டுமென்க
திருவோடுசெங்கட்டிருமாலினைச்சேர்த்தலானும்
வரைமானைமுக்கட்பெருமானிடம்வைத்தலானு
மிரவோடுதண்ணெனக்கதிர்த்திங்களியைத்தலானும்.

இதனால் அழகொத்திருக்கையிலுலே விதிசங்கற்பமும் அனுகூலித்திருக்குமென்று துணிதற்கு உதாரண முண்டோவெனின் உண்டெனல் சொல்லிப்படுகின்றது.

இ-ள். திருவோடு - திருமாதோடு, செங்கண்-செய்யகண்களையுடைய, திருமாலினை - விஷ்ணுவை, சேர்த்தலானும் - கூட்டினமையாலும், வரைமானை - பார்வதிதேவியை, முக்கண் - மூன்றுகண்களையுடைய, பெருமானிடம் - கடவுளிடத்தே, வைத்தலானும் – இருத்தினமையாலும் இரவோடு- இராத்திரியோடு, தண்ணென் - குளிர்ச்சிபொருந்திய, கதிர் - கிரணங்களையுடைய, திங்கள் - சந்திரனை, இயைத்தலானும் - பொருத்தினமையாலும், விரைசேர் - வாசனைபொருந்திய, கமலம் - தாமரைப்பூவிலிருக்கின்ற, விதியும் - நான்முகனும், தக - தகுதியாக, கூட்டுமென்க - (ஒருபொருளோடொருபொருளைக்) கூட்டுகிறனென் றறியக்கடவாய் எ-று.

ஒருவர்க்கொருவர் தகுந்தவராகத் திருவோடு செங்கட்டிருமாலினைச் சேர்க்கை முதலிய உதாரணங்களால் விதி சங்கற்பமும் இது காரியத்திலே அனுகூலித்திருக்குமென்று அறியப்படுகின்றதென்பது கருத்து. "விரை சேர்கமல நறும்போதினில் வீற்றிருக்கு" எனப் பாடங்கூறி இதனைத் திருவுக்கடை யாக்குதலுமுண்டு. அப்போது இப்பாட்டிற்கு முடிக்குஞ் சொல் இல்லாமையாற் பின்பாட்டோடேனும் முன்பாட்டோடேனுஞ் சேர்த்துக் குளகமாக்கி முடிக்கவேண்டும். அங்ஙன முடித்தற்குப் பொருளியையாமையாற் பொருந்தாமையறிக. 76

போர்வேனளன்றன்புனைதாரகன்மார்புபுல்லு
மேரார்மகள்யாரெனயானயனோடுகேட்பக்
காரோதிநின்பேர்கழலுற்றனன்போலுமாங்குத்
தேரோதைதன்னுற்றெளிவுற்றிடக்கேட்டிலேன்யான்.

இதனால் அவ்வனுமானமேயன்றி இதற்கு ஆகமபிரமாணமு முண்டெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கார் – மேகம்போலும், ஓதி – கூந்தலையுடையவளே, போர் - போர்செய்தற்குரிய, வேல் - வேலையுடைய, நளன் - நளராஜனது, புனை - சூடப்பட்ட, தார் – மாலையையுடைய, அகல் - பரந்த, மார்பு - மார்பை, புல்லும் – தழுவத்தகும், ஏர் – அழகினால், ஆர் – நிறைந்த, மகள் – மங்கை, யாரென - எவளென்று, யான் – நான், அயனோடு – நான்முகனே, கேட்ப - வினவ, நின் – நினது, பேர் – நாமதேயத்தை, கழலுற்றனன்போலும் - (அவன்) சொன்னன்போலும், ஆங்கு - அப்போது, தேர் – (அவனது) தேரினது, ஓதைதன்னால் - ஒலியினாலே, தெளிவுற்றிட - ஐயந்தீர, யான் - நான், கேட்டிலேன் - (அதைக்) கேட்டறிந்திலேன் எ-று.

57-ம் பாட்டில் "அயனு ரன்னந்தனதன் புறுசுற்றமியாம்" என்றலின் அயனை வினவுதற்கு இயைபுடைமை பெறப்பட்டது. யாரென்றது பெண்பாலில் வந்தது. அது உயர்திணை மூப்பாற்கும் பொதுவாதலின் - இதற்கு "யாரென்னும் வினவின் கிளவி – யத்திணைமருங்கின் மூப்பாற்கு முரித்தே" என்பது தொல்காப்பியவிதி. அயனோடென்பது உருபுமயக்கம். இதற்கு "யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்சென்மருங்கின் வேற்றுமைசாரும்" என்பது தொல்காப்பியவிதி. ஒருவனே மற்றொருவன்மேலனுக்கு விருப்பமுண்டாயிருப்பின் தன்சொல்லைப் பொய்யென்று கொள்வனென்று நின்பேர் கழலுற்றனன்போலும், தெளிவுற்றிடக் கேட்டிலேன் என்றது. 77

குயின்மென்குதலைத்திருவேநினைக்கூடுமின்ப
மயில்கொண்டவொள்வேனளற்காகவமைத்திலானே
லியைபெண்ணியன்றிவிதிகூட்டலனென்னுஞ்சீர்த்தி
பயனின்றிமாறிப்பழியாகப்பயக்குமன்றே.

இதனுல் விதியின் செயலுஞ்சொல்லும் அப்படியிருந்தாலும்
அவள் சுதந்தரனுகையால் இப்போது வேறுவிதமாகச்
செய்யலாமே யென்ருல் அதற்கு தடை யுண்
டெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். குயில் – குயிலிசைபோலும், மென்குதலை – மெல்லிய மழலைச் சொற்களையுடைய, திருவே – தமயந்தியே! நீனை – உன்னை, கூடும் – அனுபவித்தடைவதாகிய, இன்பம் – இன்பத்தை, அயில்கொண்ட – கூர்மை கொண்ட, ஒள்வேல் – ஒள்ளியவேலையுடைய, நளற்காக – நளராஜன் பொருட்டு, அமைத்திலானேல் – படைத்திலனுயின், இயைபு – தகுதியை, எண்ணியன்றி – நீனைத்தல்லாமல், விதி – நான்முகனுனவன், கூட்டல னென்னும் – (ஒருவரோடொருவரைச்) சேர்க்கலனென்கின்ற, சீர்த்தி-கீர்த்தியானது, பயனின்றி – பயனில்லாமல், மாறி – வேறுபட்டு, பழியாகநிந்தையாக, பயக்கும் – (அவனுக்கு), வினையும் எ-று.

இங்ஙனங்கூறவே நளனை நீ நாயகனுகப்பெறுதற்கு விதியினுலுந்தடை யுண்டாவதில்லையென்று வலியுறுத்திக் கூறியவாருயிற்று. 78

கருந்தாரைவாய்வாள்பொருவுங்கயற்கண்ணிகேண்மோ
பொருந்தாதனயான்புகன்றேனதுநிற்கபூந்தாள்
வருந்தாவொதுங்கப்பிழைசெய்தனன்மாறவுள்ளம்
பரிந்தார்வமுற்றப்புரிவேனென்பணித்தியென்ரு.

இதுமுதல் இரண்டுபாட்டுகளால் இப்படி அவளுக்கு ஆசையை வளர்த்தவன்னம் அவள் கருத்தை அறிதற்காக வேருரு ன் றைச்சொல்லி முன்சொல்லப்பட்டதை முடித்தமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கருந்தாரைவாய் – கருவிழிபொருந்திய, வாள் – வாளையும், கயல் – கெண்டையையும், பொருவும் – நிகர்க்கின்ற, கண்ணி – கண்களை யுடையவளே! கேள் – (நீ) கேளு. யான் – நான், பொருந்தாதன – (இப் போதைக்கு) வேண்டாதசொற்களை, புகன்றேன் – சொல்லினேன், அது நிற்க – அது நிற்பதாக, பூ – மலர்போல (மெல்லிய), தாள் – (உன்) னடிகளானவை, வருந்தா – வருந்தி, ஒதுங்க – (என்பின்னே) நடந்து வரும்படியாக, பிழை – குற்றத்தை, செய்தனன் – (உனக்குச்) செய்தேன், மாற – (அது)தீர, உள்ளம் – உள்ளத்தில், பரிந்து – அன்புற்று, ஆர்வம் – (உன்) விருப்பத்தை, முற்ற – நிறைவேற, புரிவேன் – செய்வேன், என் – (அவ் விருப்பம்) யாது, பணித்தி – (நீ) சொல்லு, என்ரு – என்றுசொல்லி, எ-று. மோ – முன்னிலையசை.

வருந்தா வொதுங்க வென்றதற் கேற்பப் பூந்தாளென்றது. இப்பாட் டும் பின்வரும் பாட்டுங் குளகம். குளகம் பலபாட்டொரு வினைகொள்ளும்-என்பதனிதி. 79

தோளாமணியைநிரைத்தன்னமென் றூபமூரற்
கோளார்மதிவாண்முகத்தாளுட்குறிப்புகாடித்
தாளாண்மையுள்ளங்குறிப்பிற்றெரிதன்மையோரின்
வாளாவதிந்ததணிப்பொற்சிறைவாய்ந்தவன்னம்.

இ-ள். அணி – அழகிய, பொன் – பொன்மயமாகிய, சிறை – சிறைகள், வாய்ந்த – பொருந்திய, அன்னம் – அன்னமானது, தோளா – தூளாக்கப் படாத, மணியை – முத்துகளை, நிரைத்தன்ன – ஒழுங்கு படுத்தது போலும், மெல் – மெல்லிய, தூய – பரிசுத்தமாகிய, மூரல் – பல்லொழுங்கையும், கோளார் – பெருமைபொருந்திய, மதி – சந்திரன்போலும், வாள் – கூர்மை பொருந்திய, முகத்தாள் – முகத்தையுமுடைய தமயந்தியினது, உட்குறிப்பு – உட்கருத்தை, நாடி – ஆராய்ச்சிசெய்துகொண்டு, ஆண்மை – ஆழமாகிய, உள்ளம் – (ஒருவர்) கருத்தை, குறிப்பின் – அறியின், தாள் – (தமது) முயற்சியை, தெரி – (அதன்பின்பு) தெரிவிக்கும், தன்மையோரின் – குணமுடையவர்போல், வாளா – சும்மா, வதிந்தது – இருந்தது எ-று.

தோளாமணி. தோண்டப்படாத முத்து என்றதை, "தெரிவரிதாகிய தெளிவே போற்றி – தோளாமுத்தச் சுடரேபோற்றி" எனத் திருவருட்பா எட்டாந் திருமுறைக்கண் உரைத்ததனலு முணர்க. தோளாமணியை நிறைத்தனன்றூய மூரலென்றும், கோளார் மதிவாண்முகமென்றும், சொல்லப்பட்டமையால், நளன் செய்திகேட்டுத் தமயந்திக்கு நகையும் முகக்கிளர்ச்சியுந் தோன்றினமை குறிப்பிக்கப்பட்டதாயிற்று. ஆண்மை இங்கே உள்ளக்கருத்தை வெளிப்படுத்தாது ஆழுதற்றன்மையாதலின் ஆழமெனப்பொருள் கூறப்பட்டது. பெரியோர் அப்படிப்பட்ட பிறர் கருத்தைத் தாமறிவதன் முன்னே தமது காரியத்தைக்கெடுமென்று சொல்லாதலால் அன்னம் அவள்கருத்தை யறிந்தபின்னே தன்வரவின் காரியத்தைச் சொல்லுதற்கெண்ணிச் சும்மா வீருந்ததென்க. தெரியென்றது தன்னினை பிறவினைகளுக்குப் பொதுவாதலின் இங்கே பிறவினைப் பொருளில் வந்தது. உட்குறிப்பு நாடித் தாளாண்மையுள்ளங்குறிப்பிற்றெரி தன்மை யோரினென்றதற்கு முயற்சியையுடைய உள்ளத்தை முகக்குறிப் பினு லாராயுந் தன்மையோர்போலத் தமயந்தியுட்கருத்தைமுகக்குறிப்பினு லாராய்ந்திருந்ததெனப் பொருள் கூறுவாருமுண்டு. அதுமுதனூற் கருத்தன்றென்க. 80

இவ்வாறுசெங்கான்மடவன்னமிருத்தலோடு
மைவ்வாணெடுங்கட்டமயந்திமனத்திலிருந்து
செவ்வாம்பலாறுஞ்செழுந்தேற்றுளித்தலின்றி
யொவ்வாததீஞ்சொல்குயிலுணவுரைக்கலுற்றாள்.

இதனுல் தமயந்தி பேசத்தொடங்கினமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். இவ்வாறு – இவ்விதமாக, செங்கால் – செய்யகால்களையுடைய, மடம் – இளமைபொருந்திய, அன்னம் – அன்னமானது, இருத்தலோடும்-

இருந்தவளவில், மை – அஞ்சன மெழுதப்பெற்ற, வாள் – வாள்போலும், நெடு – நீட்சிபொருந்திய, கண் – கண்களையுடைய, தமயந்தி – தமயந்தியானவள், மனத்தின் – மனத்தின்கண், ஓர்ந்து – ஆலோசித்து, செவ்வாம்பல் – செவ்வல்லிப் பூவிலிருந்து, ஊறும் – சுரக்கின்ற, செழுந்தேறல் – செழிய தேனை அது, தளித்தலின்றி – சிந்துதல் (தன்னிடத்) தில்லாமல், ஒவ்வாத – நிகராகமாட்டாத, தீஞ்சொல் – (தன்செவ்வாயிலிருந்து வருகிற) மதுர வார்த்தையை, குயில் – கோகிலமானது, நாண – வெட்கமுற, உரைக்கலுற்றாள் – சொல்லத் தொடங்கினாள் எ-று.

செவ்வாம்பலுக் கேற்பச் செவ்வாய் வருவிக்கப்பட்டது. ஆம்பலூறுஞ் செழுந்தேற்றளித்தலின்றி யொவ்வாத தீஞ்சொலெனவே அல்லிமலரிலிருந்து வெளிப்படுந் தேன்போல் வாயிலிருந்து வெளிப்படுதலுந் தீஞ்சுவையுமுடைய சொல்லென்ற தாயிற்று உவமையணி. 81

கலிவிருத்தம்.

பேதைநீர்மையிற்பெட்புறின் யாங்கணு
மேதமெய்துறுமென்பர்சாதமே
யாதலானிற்றொடர்ந்தருளெய்துறத்
தீதிழைத்தனன்யானுன்றிறத்தினே.

இதமுத லிரண்டுபோட்டுகளாற் பூந்தாள் வருந்தா வொதுங்கப்
பிழைசெய்தன னென்றதற்கு மாறான உத்தரஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். பேதை நீர்மையில் – பேதைமைக் குணத்தினாலே, யாங்கணும் – எல்லாவிடங்களிலும், பெட்புறின் – விரும்பினால், ஏதம் – குற்றமும் (அதனால் விளைவதாகிய) துன்பமும், எய்துறும் – அடையும், என்பர் – என்று சொல்வார் (பெரியோர்), சாதமே – (அது) சத்தியமே, ஆதலால் – ஆகையால், நின் – உன்னை, தொடர்ந்து – பின்சென்று, அருள் – துன்பமானது, எய்துற – (என்னை) அடைய, யான் – நான், உன்றிறத்தின் – உன்னிடத்தே, தீது – குற்றத்தை, இழைத்தனன் – செய்தேன் எ-று.

பேதை நீர்மையாவது – செயத்தகுவதுந் தகாததும் பகுத்தறியமாட்டாதகுணம். அது பெண்மைக்குச் சிறந்தகுணமாய் நிற்றலிற் பேதை நீர்மையிற் பெட்புறினென்றாள். அது பெண்மைக்குச் சிறந்ததென்பது. "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்பதனாலறிக. இரட்டுறமொழிதலென்னு முத்தியால் ஏதத்திற்குக் குற்றமும் அதனால் வருந்துன்பமு முரைக்கப்பட்டன. அவ்விருபொருளும் "ஏதந்துன்பங் குற்றப்பேர்" என்பதனாலறிக. "என்பர் சாதமே யென்றாள். பேதைமையுளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட்செயல்" என்பவாகலின். பேதைமையினாலே விஷயவியமில்லாமல் எல்லாப் பொருள்களிலும் விருப்பம் வைத்தால் அதனாலே தான் பிறருக்கு அபகாரஞ்செய்யவும் பின்பு அதைக்குறித்துத் தான் மனம்வருந்தவு நேரிடும், அதை யென்னிடத்தித் தானே காணலாமென்பது கருத்து.

முன் வாக்கியத்தின் பொதுப்பொருளாற் பின்வாக்கியத்தின் சிறப்புப் பொருள் சாதிக்கப்படுதலால் வேற்றுப் பொருள் வைப்பணி. 82

பளிங்கிற்றன்னியபல்பொருண்மற்றதில்
விளங்கித்தோன்றல்போல்யான்செய்தவெம்பிழை
களங்கமற்றவுன்னுள்ளத்திற்கண்டுகொற்
றுளங்கயான்பிழைத்தேனென்றுசொற்றதே.

இ-ள். (களங்கமற்ற) – மாசற்ற, பளிங்கில் - கண்ணாடியிடத்து, தன்னிய – கிட்டியிருக்கின்ற, பல்பொருள் - பலபொருளும், அதில்- அதனுள், விளங்கித் தோன்றல்போல்-பிரதிபிம்பித்துத் தோன்றுதல்போல், தன்னிய - (உன்னிடத்துக்) கிட்டியிருக்கின்ற, யான் - நான், செய்த- (உனக்குச்) செய்த, வெம்பிழை - கொடிய பிழையானது, களங்கமற்ற- மாசற்ற, உன் - உனது, உள்ளத்தில் – நெஞ்சுன், கண்டுகொல் – பிரதிபிம்பித்துத் தோன்றியோ, யான் - நான், துளங்க – நடுங்கும்படியாக, பிழைத்தேனென்று – (உனக்குக்) குற்றஞ் செய்தேனென்று, சொற்றது - (நீ) சொல்லியது எ-று.

பெரியோர் தமக்கொருவனொரு பிழை செய்தவிடத்து அவனை நோக்கி நான்ரு னுனக்குப் பிழைசெய்தேனென்று கண்ணாடியானது தன் முன்னுள்ள பொருளைத் தன்னிடத்தே காட்டுதல்போல் அவனிடத்துள்ள பிழையைத் தம்மிடத்தே காட்டுவாராதலால் அவர் கண்ணாடிபோற் களங்கமின்றி விளங்குவார் நீயவர்களிற் சேர்ந்துளாயாதலால். அங்ஙனஞ் சொன்னயென்பது கருத்து. கண்டுகொல் - தோன்றலேக்கண்டோ வெனினுமாம். சொற்றதென்றது – இறந்தகாலம் பற்றிவந்த தொழிற்பெயர். இதுவுவமையணி. 83

வேண்டல்செய்வலென்றுய்விழைவானினைக்
காண்டலன்றியென்வேண்டுங்கதிர்மதி
யீண்டுநோக்குநர்கண்களிப்பெய்துறச்
சேண்டயங்குவதன்றியென்செய்யுமால்.

இதனால் மாறவள்ளம் பரிந்தார்வமுற்றுப் புரிவேனென்றதற்கு உத்தாஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். வேண்டல் – வேண்டப்பட்டதை, செய்வலென்றுய் - செய்வேனென்றசொன்னுய், விழைவால் - ஆசையினாலே, நினை - (அழகிய) வுன்னை, (கண்களிப்பு நேத்திரானந்தத்தை), எய்துற – அடைய, காண்டலன்றி- காணுதலல்லாமல், என் – யாது, வேண்டும் – (எனக்கு) வேண்டும், கதிர்- கிரணத்தையுடைய, மதி - சந்திரனுனவன், ஈண்டு - இவ்விடத்திருந்து, நோக்குநர்-பார்ப்பவர், கண்களிப்பு-நேத்திரானந்தத்தை, எய்துற - அடைய, சேண் - ஆகாயத்திலிருந்து, தயங்குவதன்றி – விளங்குவதல்லாமல், என்- யாதபயனை, செய்யும் – (அவர்க்குச்) செய்வான் எ-று.

வேண்டல் - வேண்டப்படுபொருளே யுணர்த்தலால் ஆகுபெயர். அவ்வனத்தைக் காணுதலினுஞ் சிறந்தபொருள் தனக்கில்லை யென்பது தோன்ற நினைக்காண்டலன்றி யென் வேண்டுமென்றாள். சந்திரன் இங்கேயிருந்து பார்ப்பவர்க்குக் கண்களிப்பைச் செய்வதன்றி வேறே விசேடமாகச் செய்யக்கிடந்த தொன்றில்லை அதுபோல நீயும் எனக்குக் கண்களிப்பைச் செய்வத்ன்றி வேறே சாலவுஞ் செய்யக்கிடந்த தொன்றில்லை என்பது கருத்து. அன்னத்தையுஞ் சந்திரனையுங் குறித்துச் சொல்லப்பட்ட இரண்டு வாக்கியங்களுக்கு விம்பப்பிரதி விம்பபாவந் தோன்றலால் எடுத்துக்காட்டுவமையணி. 84

கொச்சகக்கலிப்பா.

விழையுமனத்ததுமனத்தைவிட்டகல்வதெனினன்றே
தழையவுரைதருநாவாற்சாற்றலாந்தகைமைத்தா
மெழுபுவிவாழ்கன்னியரிலிருவிசும்பிற்றருவினறுங்
கொழுநனைநல்குதியென்றுகூறுநளுமுளல்கொல்லோ.

இதனுல் விரும்பப்பட்ட பொருள் எப்படிப்பட்டதாயினும்
சொல்லலாமெனின் அது கூடாதெனல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். விழையும் – விரும்பப்படுகின்ற, மனத்தது – மனத்திலுள்ளதொன்று, மனத்தை – அம்மனத்தை, விட்டகல்வதெனினன்றே – விட்டு வெளிப்படுவதாயினன்றே, தழைய - பெருக, உரைதரும்-பேசுகின்ற, நாவால்-நாவினுலே, சாற்றலாந் தகைமைத்தாம் – சொல்லப்படுந் தகுதியுடையதாகும், எழுபுவி – ஏழு தீவுகளிலேயும், வாழ் – வாழ்கின்ற, கன்னியரில்-பெண்களுள், இருவிசும்பில் – பெரிய வானுலகத்துள்ள, தருவின் - கற்பகதருவினது, நறு – பரிமளம்பொருந்திய, கொழுநனை – செழியவரும்பை, நல்குதியென்று – (கொணர்ந்து) கொடுவென்று, கூறுநளும் – சொல்வாளும், உளல் கொல் – இருக்கின்றனளோ, (அப்படியே) தருவின் கற்பகதருப்போலும், நறு – நற்குணம்பொருந்திய, கொழுநனை - நளராஜனை, நல்குதியென்று-கொணர்ந்து கொடுவென்று, கூறுநளும் - சொல்வாளும், உளல்கொல்-இருக்கின்றனளோ என்று.

மனத்தைவிட் டகலாமைக்குக் காரணம் - மனம் அதனை யுறுதியாகப் பிடித்திருத்தலேயாம். கொழுநனையெனவே மலரும் பருவத்துப் பேரரும் பென்றதாயிற்று. மலர்மேல் விருப்ப மகளிர்க் கியல்பாதலால் அதனை யெடுத்துக் காட்டினுள். கொழுநன் - தலைவன். "பிரானேகொழுநனரசனுகியெனப் பதினேந்தமுரை செயப்பொருட்கு மிறைவன் மேற்றே" என்பதனுலறிக. அது சிறப்புப்பற்றி நளனை யுணர்த்திற்று. கணவனென்பாருமுளர். கிடைத்தற்கரிய வொருவனைப் பெறவேண்டுதல் கிடைத்தற்கரிய கற்பகவரும்பைப் பெறவேண்டற் கொப்பாதலாற் பழிப்புக்கிடமாதலால் பற்றி நாணமுடையவளெப்படிக் கூறுவளென்பது கருத்து. சிலே

டையி ளிருபொருளுக்கும் விம்ப பிரதி விம்பபாவத்தால் எடுத்துக்காட்டுவ மையணி. இதுமுத லிருபத்துநாலு பாட்டுகள் பெரும்பாலுங் காய்ச்சீர் நான்குபெற்றுக்கலித்தளைமிக்குவருகிற அளவடிநான்கு கொண்டதாவுகொச் சகக்கலிப்பாக்கள் எ-று. 85

தழைசிறையமடவனமேசாற்றுதியென்றிவ்வாறு
குழைகிழிக்குமதர்நெடுங்கட்கொம்பர்மகிழ்நாணினெடு
மொழிவதுகேட்டையுற்றுமுகிழ்நகைவாணுதலுளத்தில்
விழைவுறுநன்மொழிகள்சிலமடவன்னம்விளம்புமால்.

இதனுலே தமயந்தியிச்சொல்லைக்கேட்டு அன்னம் பேசத் தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். தழை – தழைத்த, சிறைய – சிறகையுடைய, மடம் – இள மைபொருந்திய, அனமே – அன்னமே! சாற்றுதியென்று – சொல்லென்று, இவ்வாறு – இவ்விதமாகிய, குழை – குழையையுடைய (காதை) கிழிக்கும்-கிழிக்கின்ற, மதர் – மதர்த்த, நெடு – நீட்சிபொருந்திய, கண் – கண்களை யுடைய, கொம்பர் – பூங்கொம்புபோல்பவள், மகிழ் – மகிழ்ச்சியோடும், நாணினெடும் – வெட்கத்தோடும், மொழிவது – சொல்வீதை, கேட்டு-(தான்) கேட்டு, ஐயுற்று – சந்தேகித்து, முகிழ் – (முல்லை) யரும்புபோலும், நகை – பற்களையும், வாள் – காந்திபொருந்திய, நுதல் – நெற்றியையுமுடை யவளது, உளத்தில் – உள்ளத்தின்கண்ணே, விழைவுறு – விரும்பப்படும், நன்மொழிகள் சில – சில நல்லசொற்களை, மடவன்னம் – இளமைபொருந் திய அன்னமானது, விளம்பும் – (அவளுக்குச்) சொல்லும் எ-று.

கொம்பு கொம்பரென நீறுநிரிந்தது. மகிழ்—தன்விருப்பத்தை முடித் தற்கு உபாயங்கிடைத்ததென் றுண்டாகியது. ஐயமுற்றென்பது விகாரப் பட்டது. ஐயம் – நன்மை லிவளுக்கு விருப்பமுண்டோ வில்லையோ வென்னுஞ் சந்தேகம். 86

தருவினறுங்கொழுநீயார்தருகவெனவுரைப்பளெனு
மரியமறைப்பொருள்தானேயான்கேட்கலாகாதோ
தெரியவருமறைப்பொருளைச்செவிப்புலத்திலுறநான்காம்
வருணமுடையவர்கேட்கலாகாதவாறேபோல்.

இதனுல் அது நான் கேட்கத்தக்கதுதானெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தருவின் – கற்பகதருவினது, நறு – பரிமளம்பொருந்திய, கொழுநனே – செழியவரும்பை, யார் – எவள், தருகவென – கொடுவென்று, உரைப்பளெனும் – சொல்வாளென்று சொல்லப்பட்ட, அரிய – அரிதாகிய, மறைப்பொருளதனை – இரகசியப்பொருளை, யான் – நான், கேட்கலா காதோ – கேட்கத்தகாதா, தெரியவரு – அரிதற்கரிய, மறைப்பொருளை-வேதப்பொருளை, செவிப்புலத்தில் – காதினுலே, உற – பொருந்த, நான்

காம் வருணமுடையவர் – சூத்திரர், கேட்கலாகாதவாறேபோல் – கேட்கத் தகாத விதம்போல் எ-று.

அம்மறைப்பொருளைக் கேட்டதற்குச் சூத்திரர்போல் இம்மறைப் பொருளைக் கேட்டற்கு யான் அனதிகாரியல்லேன், அதிகாரியே அதனை நன்றாகச் சொல்லென்பது கருத்து. பின்மறைப்பொருள் – வேதவாக்கியம்; அன்றி – வேதத்தினது அர்த்தமெனினுமாம் 87

மனமுறுமோர்பொருளடைதலரியதோமனத்தரலு
நினைவரியபொருளினையுநிறையுடையோரடைகுவராற்
புனைமணிமேகலைதாங்கிப்புடையகன்றவகலல்குற்
கனியனையவஞ்சிஞ்சொற்கற்பகப்பூங்கொம்பன்னாய்.

இதனால் அப்பொருள் பெறுதற்கரியதாகையாற் சொல்லுதற்கு
நாணுகின்றேனெனின் அதற்குத்தரு முத்தாஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். புனை – அலங்கரிக்கப்பட்ட, மணிமேகலை – இரத்தின மேகலை யை, தாங்கி – சுமந்து, புடையகன்ற – புடைபரந்த, அகல் – பரப்பை யுடைய, அல்குல் – அரைக்கீழிடத்தையும், கனியனைய – முக்கனிபோ லும், அம் – அழகிய, தீ – மதுரம்பொருந்திய, சொல் – சொல்லையுமுடைய, கற்பகப் பூங்கொம்பன்னாய் – கற்பகத்தின் மலர்க் கொம்புபோல்பவளே! மனம் – மனத்தின்கண், உறும் – இருக்கின்ற, ஓர்பொருள் – ஒருபொருளை, அடைதல் – பெறுதல், அரியதோ – (கற்பக வருமையடைதல்போல்) அரியதோ, (அரியதன்று) அரியதென்றேன் – சொல்லக் கூடாதெனின், நிறையுடையோர் – யோகிகள், மனத்தாலும் – அம்மனத்தினாலும், நினை வரிய – நினைத்தற்கெட்டாத, பொருளினையும் – பரப்பிரமத்தையும், அடை குவார் – பெறுவார் எ-று.

மனமுறுமோர் பொருளடைதலரியதோ வென்றதற்கு அப்பொருள் கட்பொறி முதலியவற்றிற்குப் புலனாகிருப்பினும் மனமொன்றற்காவது புலனு யிருக்கையால் உனக்கு அதனை யடைதலரிதன்றென்பது கருத்து. ஆணவமலத் தடையா யுயிரைச்செறிந்து நிற்கையாற் சச்சிதானந்தசொரூப மாகிய பரப்பிரமத்தை நினைத்தல் மனத்திற்குக் கூடாமையறிக. நிறை-அம் மனத்தைப் பொறிகளிற் செலுத்தாது சமாதியினுறுத்தல். நில்லென்முத னிலை நிறவெனப் பிறவினையாய்ப் பின்பு நிறை யெனத் தொழிற் பெயரா யிற்று மனத்திற் கெட்டாததையும் அடைவரென்னு மொருபொருளைச் சொல்லத் தண்டாபூபிக நியாயத்தினாலே மனத்திற் கெட்டியபொருளை யடைதல் சொல்லவேண்டுவதில்லை என்னுமற்றொரு பொருள்தோன்றலால் செய்யுட்பொருட்பேறணி. 88

பொய்ம்மைமொழிபுகன்றறியேம்புகலமனமெண்ணுகினு
ய்மெம்மையலதுரையாகாவேதாவில்பயிற்சியாற்

கொம்மைவருமுலைவாய்மையுடையோரைக்குறித்துரைப்பி
னெம்மைமுதலெடுத்துரைப்பரீர்ங்கமலத்திறைமுன்னும்.

இதனுல் இதுபொய்சொல்வதென்று சொல்லாதிராதே
யெனல் சொல்லப் படுகின்றது.

இ-ள். கொம்மை – இளமைபொருந்திய, வரு – வளர்கின்ற, முலை-முலைகளையுடையவளே ! பொய்ம்மைமொழி – அசத்திய வார்த்தையை, புகன்றறியேம் – சொல்லியறியேம், புகல – (ஒருசமயத்திலே) சொல்லுதற்கு, மனம் – மனமானது, எண்ணுகினும் – நினைத்தாலும், நா – (எம்முடைய) நாக்களானவை, வேதம் – வேதத்தை, நவில் – ஓதிவருகின்ற, பயிற்சியால் – பழக்கத்தினுலே, மெய்ம்மை (மொழி) யலது – சத்தியவார்த்தையை யல்லாமல், உரையா – சொல்லாவாம், ஈர்ங்கமலத்து – குளிர்ச்சி பொருந்திய தாமரைப் பூவிலுள்ள, இறைமுன்னும் – நான்முகக் கடவுண் முன்னும், வாய்மையுடையோரை – சத்தியத்தை யுடையவரை, குறித்துகருதி, உரைப்பின் – பேசின், எம்மை – எம்மையே, முதல் – மூதலில், எடுத்து – குறித்து, உரைப்பர் – சொல்லுவார் எ-று.

தன்னினத்தையுந் தழுவிப் புகன்றறியேம் எம்மை என்றது. புகல மனமெண்ணுகினு மென்னு மும்மைமனமும் அப்படி எண்ணுகின்றதில்லை என்னும் பொருளைப் பயத்தலால் எதிர்மறை. சத்தியத்தைச் சொல்லுகிற வேதத்தோடு பழகலால் நாவிற்கு அப்பழக்கக்குணம் விடாதென்க. "பழக்கங் கொடியது பார்பாறையினுங் கோழி, ஒழிக்கும் பொதியைக் கிளறும் – விழித்துங், குருடர்க்கொளிபகையாக் கூகைக்கோல்போடா, ருருளைப்பருக்குமான்மா" என்பதனுலுமறிக. தேவலோகத்துப் பறவையாதலின் வேதமோதுதற் குரித்தாயிற்றென்க. கமலத்திறைமுன்னு மென்னு மெச்சப் பொருளில் வந்தவுயர்வு சிறப்பும்மையால் இந்திரன் முதலியோரிடத்து முரைப்பரென்பது தோன்றுதல் காண்க. 89

பாட்டுவரிச்சுரும்புமுரல்பங்கயமெல்லரும்பேய்க்கு
மோட்டிளவெம்முலையெனக்குமுடியாதபொருளுளதோ
சூட்டரவின்மேற்கிடந்ததொடுகடன்ஞாலத்திடைநீ
வேட்டதுகூறுதிகொணர்வல்விரைவினெனக்கூறியதால்.

இதனுல் நீ என்னசெய்யமாட்டுவா யெனின் அதற்குத்
தருமுத்தாஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். வரி – இரேகைகளையுடைய, சுரும்பு-வண்டுகளானவை, பாட்டுபாட்டை, முரல் – பாடப்பெற்றிருக்கின்ற, பங்கயம் – தாமரையினது, மெல்லரும்பு – மெல்லியவரும்பை, ஏய்க்கும் – நிகர்க்கின்ற, மோட்டிளவெம்-உயர்ச்சியும் இளமையும் விரும்பப்படுங் குணமும்பொருந்திய, முலை-முலைகளையுடையவளே!, எனக்கு – என்னுல், முடியாத-முடிவுபெறுத, பொருள், காரியமானது, உளதோ – (ஒன்) றிருக்கின்றதோ, சூட்டு – உச்சிக்கொண்

டையையுடைய, அரவின்மேல் – ஆதிசேஷன்மேல், கிடந்த – தங்கிய, தொடு – தோண்டப்பட்ட, கடல் – கடலாற் குழப்பட்ட, ஞாலத்திடை – பூமியின்கண், வேட்டது – (உன்னுல்) விரும்பப்பட்ட பொருளை, நீ – நீ, கூறுதி – சொல்லு, விரைவில் – சீக்கிரத்தில், கொணர்வல் – (யான் அதனைக்) கொண்டுவருவேன், என – என்று, கூறியது – (அன்னந்தமயந்திக்குச்) சொல்லியது எ-று.

சுரும்பு மூலுதலைப் பங்கயவரும்பிற்கு அடையாக்கியது மலரும் பருவத்துப் பெரியவரும்பென்று தோன்றுதற் கென்க. எனக்கு முடியாத பொருளைதோவினவே அற்பமான பறவையென்று நினையாதே சிறிய வச்சாணி பெரியதேரை நடத்துதல்போல் எப்படிப்பட்ட பெரியகாரியத்தையு முடிக்கின்ற வல்லமை யெனக்குண்டென்றதாயிற்று. 90

மருவுபுரிநரம்பிசைக்குமாடகநல்லியாழிசைகேட்
டுருகினளன்பால்வேட்கையுற்றனளென்றறிகில்லா
யரியபசும்பொன்னிறத்தவாய்தூவிமடவனமே
தெருமரலுற்றேன்விழைவுசெப்புமாறெவனென்றாள்.

இதனுல் வேட்டது கூறுதியென்றதற்குத் தரும்
உத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். அரிய – பெறுதற்கரிய, பசும்பொன் – பசிய பொன்னினது, நிறத்த – உருவமுள்ள, ஆய் – தேடத்தக்க, தூவி – இறகுகளையுடைய, மடம் – இளமைபொருந்திய, அனமே – அன்னமே! மருவு – சேர்ந்த, புரி – வலிக்கட்டுகளையும், நரம்பு – தந்திகளை, இசைக்கும் – இசைவிக்கின்ற, மாடகம் – முறுக்காணிகளையும் உடைய, நல்யாழ் – நல்லவீணை யிசைபோல்கின்ற, இசை – (என்) சொல்லை, கேட்டு – (இவள்) கேட்டு, உருகினள் – மனங்குழைந்தவளாகி, அன்பால் – ஆசையினுலே, வேட்கை யுற்றனளென்று – (அச்சொல்லையே) கேட்கவேண்டுதலுற்றுளென்று, இன்னுஞ் சிலேஷையால் உருகு – உளமுருகுகின்ற, இன் – இனிமைபொருந்திய, நளன்பால் – நளனிடத்தே, வேட்கை யுற்றனளென்று – ஆசைமிகுந்தாளென்று, அறிகில்லாய் – அறியாயா, தெருமரலுற்றேன் – மனச்சுழற்சியை யடைந்த நான், விழைவு – அவ்வாசையை, செப்புமாறு – (வெளிப்படையாகச்) சொல்லும் விதம், எவன் – யாது, என்றாள் – என்று சொல்லினுள் (தமயந்தி) எ-று.

வீணையிசைபோல்கின்ற என் சொல்லை யிவள்கேட்டு மனங்குழைந்தவளாகி, ஆசையினுலே இன்னுமச்சொல்லையே கேட்கவேண்டுகின்றுளென்றறியாயாவெனலால், உன்சொல் கேட்குந்தோறுஞ் செவிக்கின்பஞ் செய்தலால் நான் இன்னும் அதனையே கேட்கவேண்டுகின்றேனல்லது பிறிதொன்றை வேண்டுகின்றிலேன் என்றுளென்பதாயிற்று. இப்பொருளிலே வேட்கைப்பெறல் வேண்டுதல். வீணையிசைபோலு மென்சொல்லை இவள்கேட்டு உளமுருகுகின்ற விளிமை பொருந்தியநளனிடத்தே விருப்பமுற்றுளென்றறியாயாவெனலால், உன்சொல்லினுலே நள

னுடையகுணங்களே நன்றுகவறிந்து அவனிடத்தே விருப்பமுற்றேன் என்
றுரென்பதாயிற்று. இப்பொருளில் தமயந்தியை வினைமுதலாகவுடைய
உருகென் வினைத்தொகை நளனென்பெயர் கொண்டுமுடிந்தது. உற்றே
னென்றது வினையா லணையும்பெயர். 91

வேட்கைதனதுளத்தடக்கிமெய்நாணன்மறைத்திகலும்
வாட்படைபோனெடுங்கண்ணுள்வழங்கியசொற்பொருடேர்ந்து
நாட்கமலவள்ளவாய்நறும்போதிலமர்செய்ய
தாட்பவளக்கடிகைவாய்மடவன்னஞ்சாற்றுமால்.

இதனுல் அன்னம் பேசத்தொடங்கினமை
சொல்லப்படுகின்றது.

இ-ள். நான் – அன்று பூத்த, கமலம் – தாமரையினது, வள்ளம்-கிண்
ணம்போலும், வாய் - வாயையுடைய, நறும்போதில் – நல்லமலரில், அமர்-
வாசஞ்செய்கின்ற, செய்ய – சிவப்புநிறம் பொருந்திய, தாள்-அடிகளேயும்,
பவளக்கடிகை – பவளத்தண்டம்போலும், வாய்-வாயையும் உடைய, மடம்-
இளமை பொருந்திய, அன்னம் – அன்னமானது, இகலும் – போர்செய்தற்
குரிய, வாட்படைபோல் – வாளாயுதம்போலும், நெடுங்கண்ணுள் - நெடிய
கண்களேயுடையவள், வேட்கை-(நளன்மேலுண்டாகிய) ஆசையை, தனது-
தன்னுடைய, உளத்து - மனத்தின்கண், அடக்கி-வெளிப்படாமல்வைத்து,
நாணுல் – வெட்கத்தினுல், மெய் – அவ்வாசை கொள்ளப்பட்ட பொருளே,
மறைத்து – (சிலேஷையால்) மறைத்து, வழங்கிய – சொல்லிய, சொற்
பொருள் - வாக்கியார்த்தத்தை, தேர்ந்து – அறிந்து, சாற்றும் - சொல்லும்.

தருவினறுங்கொழுநனேயார்தருகென்பாரென்றதுவு
மருவுபுரிநரம்பிசைக்குமாடகநல்லியாழிசைகேட்
டுருகினளன்பால்வேட்கையுற்றனளென்றுரைத்ததும்யான்
கருதினனற்பலகலேயும்கற்றுணர்ந்ததெளிவினுல்.

இதனுல் நீ என்னுலே மறைத்துச் சொல்லப்பட்ட பொருளே
யறிந்திலேயா வென்பாயாயின் அறிந்துளேனெனல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். தருவின் – கற்பகதருவினது, நறும் – வாசனே பொருந்திய,
கொழுனே – செழியவரும்பை, யார் - யாவர், தருகென்பார் – தருக
வென்று சொல்லுவார், என்றதுவும் – என்று சொன்னதும், மருவு-
சேர்ந்த, புரி – வலிக்கட்டுகளேயும், நரம்பு - தந்திகளே, இசைக்கும் - இசை
விக்கின்ற, மாடகம் – மூறுக்காணிகளேயு முடைய, நல் – நல்ல, யாழிசை
கேட்டு – வீணையின் இசையைக்கேட்டு, உருகினள் அன்பால் – ஆசையால்
மனங்குழைந்தவளாகி, (மனமுருக நின்ற) நளனிடத்தே,வேட்கையுற்றன
ளென்று - ஆசைமிகுந்தாளென்று, உரைத்ததும் - சொன்னதும், யான்-
நான், பலகலேயும் – பலவகைநூல்களேயும், கற்றுணர்ந்த – கற்று (அவற்

றின்பொருளே) யறிந்த, தெளிவிலுல் – தெளிவைக்கொண்டு, கருதினன்- (நளனைக் குறித்துச் சொல்லப்பட்டவை யென்று) அறிந்தேன் எ-று.

நளனைக்குறித்துச் சொல்லப்பட்டவைக ளென்பது இசையெச்சம். கருதல் - இங்கே அறிதற்பொருளைப் பயந்து நின்றது. பலகலை – வியாகரணம் – தருக்கம் - முதலியன. 93

மறங்கிளருமதர்நெடுங்கட்கன்னிபர்தமனமொன்றிற்
செறிந்துமுடன்பிரியுமெனத்தெளிவுடையோர்செப்புதலா
னுறுந்துணைரொண்சில்லோதியப்புறுநின்குறிப்புரைக
ளறிந்துமறியேன்போலவையுறவுற்றிருந்தனன்யான்.

இதனுல் இருவிசும்பிற்றருவினறுங் கொழுனைமுதலிய வாக்கியப்
பொருளை நீ அறிந்திருந்தால் அறியாப்போற் சொல்லிய
தற்குக் காரணம் யாதெனின் அதனையுணர்த்தல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். நறுந்துணர் – நரியமலர்களையும், ஒண்சில் – ஒள்ளிய பொன் வட்டத் தகட்டணியையுமுடைய, ஓதி – கூந்தலை யுடையவளே! மறம்- கொலைத்தொழிலால், கிளரும் – வீளங்காகின்ற, மதர் – மதர்த்த, நெடு- நெடிய, கண் – கண்களையுடைய, கன்னியர்தம் – கன்னியர்களுடைய, மனம் – மனங்களானவை, ஒன்றில் – ஒருபொருளில், செறிந்தும் – அழுந்தியும், உடன் – விரையின், பிரியுமென – (அங்ஙிலேயி) னீங்குமென்று, தெளிவுடையோர் - அறிவுடையோர், செப்புதலால் - சொல்லுதலினாலே, நயப்புறு - விரும்பப்படுகின்ற, நின் – உன்னுடைய, குறிப்புரைகள் – குறிப்புச்சொற்களின்பொருளை, யான் - நான், அறிந்தும் – தெறிந்தும், அறியேன்போல - அறிந்திலேன்போல, ஐயுறவுற்று – சந்தேகமடைந்து, இருந்தனன் – இருந்தேன் எ-று.

மனமொன்றில் அழுந்தல் – ஒரு பொருளைப் பெறல் வேண்டுமென்று மிகவிரும்பி அதனையே நினைத்திருத்தல். தெளிவுடையோர் செப்புதல் "இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர் – மனம்போல வேறு படும்." என்பதனுலறிக. கன்னியர்மன மொன்றி லழுந்தியும் உடனே நீங்குமெனச் சொல்லுதலாலே உன்மனமும் நளனிடத்தே இப்போது அழுந்தி நிற்பினும் இன்னுஞ் சிறு பொழுதிலே விட்டு நீங்கும் ஆதலால் உனது நிச்சயம் அரியப்படாமைபற்றி அறியேன்போலச் சந்தேகித்திருந்தே னென்றதாயிற்று. 94

உலகமெலாம்பொதுநீக்கியோராழிதனையுருட்டி
யலகில்புகழ்படாம்போர்த்தவாசர்பிரான்றிருமுன்னர்
மலர்பொதுளுஞ்சில்லோதியையுற்றுமடநாணுற்
சிலமொழிசொற்றனளென்னுஞ்செப்புவதுஞ்சீர்மைத்தே.

இதனுல் அன்றியும் நளன் அரசர்க்கரசனு யிருக்கையால்
அவனுக்கு நிச்சயமல்லாத செய்தியைச்சொல்லல்
ஆகாதெனல் கூறப்படுகின்றது.

இ-ள். உலகமெலாம் – பூமிமுழுதையும், பொது – (பலவாசர்க்கும்) பொதுமையினின்றும், நீக்கி – நீங்குவித்து, ஓராழிதனே – ஒருசக்கரத்தை, உருட்டி – செலுத்தி, அலகில் – அளவில்லாத, புகழ் – புகழாகிய, படாம்-ஆடையை, போர்த்தா (அந்தப்பூமியின்மேற்) போர்த்திய, அரசர்பிரான்-அரசர்க்கரசனது, திருமுன்னர் – சந்நிதானத்தில், மலர் – மலர்கள், பொதுள் – நெருங்கப்பெற்ற, அம் – அழகிய, சில் – பொன் வட்டத் தகட்டணியையுடைய, ஓதி – கூந்தலே யுடையவள், ஐயுற்று – சந்தேகித்து, மடம் – அறியாமையோடுகூடிய, நாணல் – வெட்கத்தினுலே, சிலமொழி-(உன்னைக்குறித்துச்) சில சொற்களே, சொற்றனனென்னு – சொல்லினு னென்று, செப்புவதும் – சொல்லுவதும், சீர்மைத்தோ - சிறப்புடைத் தாமோ எ-று.

எலாமென்பது எஞ்சாப் பொருளில்வந்தது, மேனியெலாம் பசலையா யிற் றென்பதிற்போல் ஆணையைச் சக்கரமாகச் சொல்வது செய்யுள் வழக்கு. புகழ்ப்படாம் போர்த்தவெனவே அவனீபுகழ் பூமியெங்கும் வியா பித்திருக்கின்ற தென்றதாயிற்று. பெண்களுக்கு விவாகமளவும் தகப்ப னுடைமையா யிருக்கவேண்டுதலிற் கருத்தின்படி முடியுமோ முடியாதோ வென்று சந்தேகித்தல். சீர்மைத்தோவெனவே ஐயம் – மடம் – நாணம்-சொற்குறைவு இவற்றுளொன்றே சொல்லுதற்குத் தடையாமெனின் இக் நான்குஞ் சேர்ந்த இக்காரியத்தை நான் அதனுல் வரும் பழிக்கஞ்சாது எப் படிச் சொல்லமாட்டுவே னென்றதாயிற்று. 95

கந்தடுகும்புரிக்கோட்டுக்கழைசுளியுங்கடாயானை
மந்தரத்தாற்பகைக்கடலைமதித்தடையும்வயவேந்தன்
சிந்தையைநின் பாற்பிணிப்பிற்றெள்ளமுதத்திருவேயுன்
றந்தைபிறற்களித்திடினென்வாய்மைதவருகாதோ.

இதனுல் அங்ஙனந் தான் சொல்லினுற் குற்றம் யாதெனின் அதற்குத் தரு முத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். தெள்ளமுதம் – தெள்ளிய பாற்கடலிற்பிறந்த, திருவே – திரு மாதே! கந்து – கட்டுத்தறியை, அடு – ஒடிக்கின்ற, கும்புரி – பூணையுடைய, கோட்டு – கொம்புகளேயுடைய, கழை – கரும்புகளே – சுளியும்-முறிக்கின்ற, கடாயானை – மதயானையாகிய, மந்தரத்தால் – மந்தரகிரியினுலே, பகை-பகை வராது, கடலை-(சேனையாகிய) பாற்கடலை, மதித்தி – கடைந்து, அடையும்-அடையப்பட்ட, வயம் – வெற்றித் (திருவை) யுடைய, வேந்தன் – நளராச னது, சிந்தையை – மனத்தை, நின்பால் – உன்னிடத்தே, பிணிப்பின்-(யான்) கட்டிவைத்தால், உன் – உன்னுடைய, தந்தை – தகப்பனுனவன், பிறற்கு – மற்றொருவனுக்கு, அளித்திடின் – (உன்னைக்) கொடுப்பானேயா

ஞல், என் - எனது, வாய்மை – வாய்ச்சொல்லின் றன்மையானது, தவறு காதோ – வழுவாகாதோ எ-று.

பகையென்னும் பண்புப்பெயர் பண்புக்காயிற்று. பகைக்கடலோடு ஆரோபித்தற்கிடமாகிய சேனையும், வயத்தோடு ஆரோபிக்கப் படுபொருளாகிய திருவும், வருவித்துக் கூட்டப்பட்டன. நளனுக் குன்மேலாசை பிறத்த லெளிதன்றென்பது தோன்ற இப்படிப்பட்ட வெற்றிச்சிறப்பை யடையாக்கியது. உன்னைக்குறித்துப் பலவாறு புகழ்ந்தன்றி அவன் மனத்தை உன்னிடத்தே திருப்புதல் கூடாதென்பது படப்பிணிப்பினென்றது. அரசன் மனத்தை யுன்னிடத்தே திருப்பியபின்பு உன்றந்தை யுன்னை மற்றொருவனுக்குக் கொடுத்தால் அவனுக்கு நம்பவைத்து மோசஞ்செய்தவ னுவே னென்பது தோன்ற என்வாய்மை தவறுகாதோ வென்றது சந்தேகத்திற் கிடமில்லாத பொருளையே சொல்லவேண்டுமென்பது கருத்து. யானை முதலியவற்றிலே மந்தர முதலியவற்றை யாரோபித்தலால் உருவகவணி. 96

என்னுளத்திலெயுறல்போல்யார்க்களிப்பான் றந்தையெனை
வன்னுளத்துமையமுளதாதலாலீஃதொழிக
பின்னரெவையுரைத்திடினுமுடிப்பலெனப்பேரொழில்கூ
ரன்னமடவரலுள்ளமறியுமாறுரைத்ததுவே.

இதனுல் அது சந்தேகத்திற் கிடமாகையால் அதனைவிட்டு என் பிரதிக்ஞை வழுவாமல் வேறுபகாரஞ் செய்வேனெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பேரெழில் - பெரிய அழகினுல், கூர் – மிகுந்த, அன்னம் - அன்னப்பறவையானது, என்னுளத்தில் - எனது மனத்தில், ஐயுறல்போல் – சந்தேகமிருத்தல்போல், தந்தை – தகப்பனுனவன், யார்க்கு – யாருக்கு, அளிப்பானென – கொடுப்பானுனென்று, உன்னுளத்தும் - உனது மனத்திலும், ஐயம் - சந்தேகமான்னது, உளது – இருக்கின்றது, ஆதலால் – ஆகையினுலே, இஃது - இக்காரியம், ஒழிக – நீங்கக்கடவது, பின்னர் – அதுவன்றி, எவை - எந்தக்காரியங்களோ, உரைத்திடினும் – (நீ யெனக்குச்) சொல்லினுலும், முடிப்பலென – (யான்) முடிப்பேனென்று, மடவரல் – தமயந்தியினது, உள்ளம் - கருத்தை, அறியுமாறு – உணரும்படியாக, உரைத்தது - சொல்லிற்று.

யார்க்களிப்பானு வென்னும் ஓகாரந் தொக்குவந்தது. உனக்கே சந்தேகத்திற்கிடமாகிய விக்காரியத்தி லென்னைத் தூண்டுதல் நன்றன்றென்பது தோன்ற இஃதொழிக வேன்றது. இஃதொன்று நீங்கலாக வேறே பல காரியங்க ளுளவாயினும் உனக்கு முடிப்பேனெனற்கு எவையுமெனப் பன்மையாற் கூறியது. 97

கன்னிமனஞ்சூழ்கிடந்தகாணென்னுங்கடியரண
மன்னமொழியெனும்படைகள்வழங்குதலுமழிந்ததான்
முன்னியுளந்தனிற்சிறிதுமுறுவலித்துமுகங்கோட்டி
யின்னமுதமுகுப்பதுபோல்வெளிப்படையினியம்புமால்.

இதனுல் தமயந்தி நாணம்விட்டுப் பேசத்தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கன்னி – தமயந்தியானவள், மனம் - மனத்தை, சூழ்கிடந்த, சூழ்ந்துகிடந்த, நாணென்னும் - நாணமென்கின்ற, கடி - காவலாகிய, அரணம் - மதிலானது, அன்னம் - அன்னத்தினது, மொழியெனும் - சொற்களென்கிற, படைகள் - ஆயுதங்கள், வழங்குதலும் - மேற்சென்ற வளவில், அழிந்ததால் - கெட்டமையால், சிறிது - சிறிதுபொழுது, உளந்தனில்- (தன்) மனத்திலே, முன்னி - ஆலோசித்து, முறுவலித்து - சிரித்து, முகங் கோட்டி – முகங்கவிழ்த்து, இன்னமுதம் – இனியவமிர்தத்தை, ஒருப் பதுபோல் – சொரிவதுபோல், வெளிப்படையின் – வெளிப்படையிலே, இயம்பும் - சொல்லுவாள் எ-று.

மனத்திலுள்ள பொருள்களே வெளிப்படாமற் காத்து நிற்றலால் நாணென்னுங் கடியரணமெனப்பட்டது. முன்னுதல் அதிகாரகியமாகிய இக்கருத்தை யெப்படி வெளிப்படையாற் சொல்வதென் றாலோசித்தல். நாணமழியினும் அதன்பழக்கவாசனை சிறிது நிற்கையாற் சிரிப்பும்முகங் கோட்டலும், உண்டாயின. நாணமுதலியவற்றிலே அரணமுதலியவற்றை யாரோபித்தலால் உருவகவணி. 98

விரையுயிர்க்குந்தாமரைக்குவெய்யவனுஞ்சேதாம்பன்
மருவுயிர்க்குநாண்மலர்க்குமாமதியுமல்லாம
லுரைபெறுநற்றலைவர்பிறருளர்கொல்லோபொலன்சிறைய
வரசமடவன னெனையுமன்னளாயெண்ணுதியால்.

இதனுல் நளனே தனக்குத் தலைவனென்று நிச்சய முறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொலன் – பொன்மயமாகிய, சிறை - சிறைகளையுடைய, மடம் – இளமைபொருந்திய, அரசவனம் – அரசவன்னமே ! விரை – வாசனையை, உயிர்க்கும் - வீசுகின்ற, தாமரைக்கு – தாமரைப்பூவிற்கு, வெய்யவனும் – சூரியனும், சேதாம்பல் – செவ்வல்லியினது, மரு - வாசனையை, உயிர்க்கும் – வீசுகின்ற, நாள் – பருவமுள்ள, மலர்க்கு – பூவிற்கு, மாமதியும் - பெரியசந்திரனும், அல்லாமல் – அன்றி, பிறர் – அன்னியர்களாகிய, உரைபெறு – புகழ்பெற்ற, நற்றலைவர் – நல்லநாயகர், உளர்கொல்லோ- இருக்கின்றாரோ – (இல்லை), எனையும் - என்னையும், அன்னளாய், அப்படிப்பட்டவளாய், எண்ணுதி – (நளனன்றி நாயகனில்லையென்று) எண்ணக்கடவாய் எ-று.

எப்படித் தாமரைமலர்க்குச் சூரியனும் அல்லிமலர்க்குச் சந்திரனுமன்றி வேறுநாயகரில்லையோ அப்படியே எனக்கு நளனன்றி வேறு நாயகனில்லையென்று தன்னிச்சயத்தைக் கூறியவாறுமாயிற்று. 99

ஐயமுறேனளன்மார்பிலணியலணிகுவனன்றி
மையல்புரிவேள்வரினுமன்றலர்க்கார்சூட்டுவனே

நெய்யொழுகுவேற்றுதைபிறற்களிப்பநோக்குவனேல்
வெய்யதழற்புகுந்தாவிவிட்டுனுரைநிறுத்துவனுல்.

இதனுல் விபரீதம் – பிரமாதம் – சாதனக்குறைபாடு – வஞ்சவிருப்பு-இவற்றுளொன்றுற் பிறனைத் தான் கணவனுகக் கொள்ளாமையை வலியுறுத்தித் தன் பிதாவினுலும் அது முடியாமையை யுணர்த்துதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஐயமுறேல் – (அன்னமேநீ) சந்தேகப்படாதே, நளன் - நளராசனது, மார்பில் - மார்பின்கண், அணியல் – மாலையை, அணிகுவனன்றி-சூட்டுவனல்லாமல், மையல்புரி – மயக்கத்தைச் செய்கின்ற, வேள் – மன்மதனுனவன், வரினும் – வந்தாலுயினும், மன்றல் – வாசனை பொருந்திய, அம் – அழகிய, தார் – மாலையை, சூட்டுவனே – (யான்) சூட்டுவேனே, நெய் – நெய்யானது, ஒழுகு - ஒழுகப்பெற்ற, வேல் – வேலையுடைய, தாதை – (என்) தகப்பனுனவன், பிறற்கு - மற்றொருவனுக்கு, அளிப்ப-(என்னைக்) கொடுக்க, நோக்குவனேல் – உடன்படுவானுயின், வெய்யதழல்-வெப்பம்பொருந்திய நெருப்பினுள், புகுந்து - முழுகி, ஆவிவிட்டு - உயிரை விட்டு, உன் – உனது, உரை – சொல்லை, நிறுத்துவன் – (நளனிடத்தி)னிலைபெறுவிப்பேன் எ-று.

மூன்றுலகத்திலும் அழகாற்சிறந்த மன்மதனையொழிக்கவே மற்றை யாடவர்களையு மொழித்ததாயிற்று. வெய்யதழற் புகுந்தாவி விட்டென்ற தனுல் கொடுத்தயர் வினைக்கு மாணமே நளனை யன்றி மற்றொருவனை மணத்தலினும் இனிதென்றதாயிற்று. அரசனுக்குத் தன்னைக்குறித்து அன்னத்தாற் சொல்லப்படுஞ் சொல்லை யுன்னுரையென்றுள். 100

ஊழியஞ்செய்திறம்வேந்தைவேட்டுள்ளமுருகுமெனை
வாழிமடவனங்கூட்டலரிதென்னைமதித்திடேல்
கேழ்கிளர்தாமரையின்முகைகிளரொளித்தண்ணிணற்கலரா
தேழ்பரித்தேரவர்க்காணினலர்த்திடுதலியல்பன்றே.

இதனுல் தனக்குள்ள நிச்சயத்தை யுணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மடம் – இளமைபொருந்திய, அனம் – அன்னமே, வாழி-வாழ்க்கடவாய், ஊழியஞ்செய்திறம் – அடிமைத்தொழில் செய்யும்படிக்கு, வேந்தை - நளமகாராசனை, வேட்டு – விரும்பி, உள்ளமுருகும் - மனமுருகாநின்ற, எனை – என்னை, கூட்டல் – அவனுக்கு மனைவியாக்குதல், அரிது – பெரியவுபகாரமாகும், என்னை – (இனி) யென்னை, மதித்திடேல் – விசாரியாதே (இப்படிப்பட்ட பிடிவாதமே) குணமுள்ள மற்றொருநாயகனைப் பெறுதற்குற்றம் யாதென்றுல்), கேழ் – நிறத்தினுலே, கிளர் விளங்கா நின்ற, தாமரையின் – தாமரையினது, முகை – அரும்புகள், கிளர்-விளங்கா நின்ற, ஒளித்தண்ணிணர்க்கு-சீதள கிரணத்தையுடைய சந்திரனுல்,

அலராது – மலராமல், எழ்பரித்தேரவன் – சூரியனே, காணின் – கண்டால், அலர்ந்திடுதல் – மலர்தல், இயல்பன்றே – சுபாவமன்றோ எ-று.

வாழியவென்னும் வியங்கோளினீற்றின் யகர வுயிர் மெய்கெட்டு வாழி யென நின்றது. "ஊழியஞ்செய் நிறம்வேந்தை வேட்டுள்ள முருகுமெனை, வாழிமட வனங்கூட்ட லரிதெனவே" தனக்கு நானூழியக் காரியாம் பதத் தைப் பெறவிரும்பும்படி யிருக்கின்ற அப்படிப்பட்ட நளனுக்கு மனைவியாம் பதம் எனக்குக் கிடைத்தால் அது எப்படிப்பட்ட பெரும்பேறு யாதென்ற தாயிற்று. என்னை மணித்திடலெனவே இப்படிப்பட்ட நிச்சயத்தை அறி விக்கப்பட்ட நீ என்னை யினிச்சோதித்தல் அரைபட்டமாவை யரைத்தல் போலுமாம். ஆதலால் கூட்டுதற்கு வேண்டு முயற்சிசெய்யென்றதாயிற்று. தாமரையைக் குறித்துச் சொல்லப்பட்ட உபமான வாக்கியத்தால், எப்படித் தாமரை யரும்பு சூரியனையன்றிச் சீதள கிரணத்தையுடையவனு யிருந்தா லுஞ் சந்திரனைவிரும்புகிற தில்லையோ அப்படியே நான் நளனையன்றிக் குணமுடையவனு யிருந்தாலும் மற்றொருவனை விரும்பே னென்னும் பொருள் பெறப்பட்டது. நளனிற் சிறந்த குணமுடையவ னொருவனில்லா திருக்கவுந் தனது நிச்சயத்தை நம்புவித்தற்கு இங்ஙனங்கூறினுள். தாமரைச் செய்தியாகிய அல்பொருளி னொப்புமையின் சம்பந்தத்தால் தமயந்திசெய்தி யாகிய புகழ்பொருள் தோன்றுதலால் ஒப்புமைப்புனைவிலி புகழ்ச்சியணி. "ஊழியல் பிற்றிறல் வேந்தை வேட்டுள்ள முருகுமெனை-வாழிமட வனங் கூட்ட லரிதென்ன மணித்திடேல் – கேழ்கிளர் தாமரையின் முகை கிளரளி தண்டேனுகர" என வழங்குகின்ற பாடம் இதன் முதனூல் முடிபிற்குச் சிறிதும் ஒவ்வாமற் பொருட்சிறப்பு மிலதாய் நிற்கின்றது. 101

வாட்டிறல்சேர்வய வேந்தின் மணிப்புயத்தென்முலை கிளைப்பக்
கூட்டுதியே லுயிர்வாழ்வல்கூட்டாயே லுலகறிய
மூட்டழலிற்புகுந்தாவிமுடித்திடுவலொளிகெழுசெஞ்
சூட்டுமடவனமிவற்றுளென்செய்வான் றுணிந்தனையால்.

இதனுல் தனதுநிச்சயத்தை யறிவித்து அன்னத்தினது நிச்சயத்தை வினவுதல் சொல்லப்படுகின்றது.

இ-ன். ஒளிகெழு – காந்திபொருந்திய, செஞ்சூட்டு – செய்ய வுச்சிக் கொண்டையையுடைய, மடம் – இளமை பொருந்திய, அனம் – அன்னமே! வாள் – வாளினது, திறல் – போரினுலே, சேர் – சேர்ந்த, வயம் – வெற்றி யையுடைய, வேந்தின் – நளமகாராசனுடைய, மணி – அழகிய, புயத்து – தோள்களிடத்து, என் – என்னுடைய, முலை – முலைகளானவை, கிளைப்ப – அழுந்தும்படியாக, கூட்டுதியேல் – (என்னை) அவனுடு சேர்ப்பாயானுல், உயிர்வாழ்வல் – உயிர்வைத்திருப்பேன், கூட்டாயேல் – சேர்க்காயானுல், உலகறிய – உலகத்தாரறிய, மூட்டு – மூட்டப்பட்ட, அழலில்-நெருப்பினுள், புகுந்து – மூழ்கி, ஆவி – உயிரை, முடித்திடுவல்-விட்டுவிடுவேன், இவற்றுள்-(கூட்டலுங் கூட்டாமையுமாகிய) இவ்விரண்டனுள், என்செய்வான்-எது செய்யும்படியாக, துணிந்தனை – (நீ) நிச்சயித்தாய் எ-று.

'கூட்டுதியே லுயிர்வாழ்வ' லென்றும், 'கூட்டாயேலுலகறிய மூட்டழி
லிற்புகுந்தாவிமுடித்திடுவ'லென்றும், கூறுதலாலேகூட்டிப்பிழைப்பிக்கவும்,
கூட்டாமலிறப்பிக்கவும், வல்லமை உனக்குண்டா யிருத்தலால் உன்னையே
தஞ்சமாக நம்பியிருக்கிற வென்னைப் பிழைப்பித்தாற் புகழும் புண்ணியமும்
உண்டாமென்றும், அது செய்யாயாகிற் பழியும் பாவமும் உண்டாமென்
றும், குறிப்பித்தவாறுயிற்று. தனது தீப்பாய்தலே யாவரும் புகழ்தற்
பொருட்டுத்தன்னுத்தம சிந்தையை வெளிப்படுத்தவேண்டு மென்பதுபற்றி
உலகறியவென்றுள். 102

உயிருதவிசெய்தவர்க்கொன்றுற்றக்காலுணர்வுடையோர்
செயிரறுதம்முயிரளித்துச்செய்ந்நன்றிக்கடன்கழிப்பார்
மயர்வறவென்னுயிரினுஞ்சீர்வாய்ந்தளன்றனையளிப்பி
னயர்வறுமோதிமீமதற்குக்கைம்மாறுதறிகிலன்யான்.

இதனுல் அக்கூட்டலுதவியின் பெருமைகூறல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். அயர்வறு – (மனச்) சோர்வற்ற, ஓதிமம் – அன்னமே! உணர்
வுடையோர் – அறிவுடையோர், உயிருதவி செய்தவர்க்கு – (ஆபத்து வந்த
போது) தம்முயிரைக் காப்பாற்றினவர்க்கு, ஒன்று – ஓராபத்து, உற்றக்கால்–
வந்ததாயின், செயிறு – குற்றமற்ற, தம் – தம்முடைய, உயிர் – உயிரை,
அளித்து – கொடுத்து, செய் – (அவராற்) செய்யப்பட்ட, நன்றி – உபகார
மாகிய, கடன் – கடனை, கழிப்பார் – தீர்ப்பார், மயர்வு – மயக்கமானது,
அற – நீங்க, என் – எனது, உயிரினும் – உயிரைக் காட்டிலும், சீர்வாய்ந்த–
சிறப்புப்பொருந்திய, நளன்றனை – நளராஜனை, அளிப்பின் – கொடுப்பாயா
னுல், அதற்கு – அவ்வுபகாரத்திற்கு, கைம்மாறு – எதிருபகாரம், ஏது–யான்,
யான் – நான், அறிகிலன் – (அதனை) யறியேன் எ–று.

யாது அறியேனெனவே யில்லையென்றதாயிற்று. கடன்கழிப்பாரென
உலகத்தின்மேல் வைத்துக் கூறினும் நீ எனக்கு உயிருதவி செய்யின் உன்
பொருட்டென் னுயிரைக்கொடுத்து அக்கடனைத் தீர்ப்பேன் என்பதே கருத்
தாகக் கொள்க. அதற்குக் கைம்மாறேதறிகிலன் யான் என்றதற்கு உயிர்க்
குயிரே யீடாமாதலின் என்னுயிரின் மேற்பட்ட நளனுக்கீடாக நளனிற்
சிறப்பட்ட வென்னுயிரைக்கொடுத்து அக்கடனைத் தீர்க்கக்கூடாமையால்
நீ அவனை எனக்குக் கொடுத்தி என்னை உனக்கு இனி யென்றென்றைக்கும்
தீர்க்கமாட்டாத கடன்பட்டவளாக் கென்பது கருத்து. 103

கைம்மாறுனக்காற்றலரிதெனினுங்களிப்பினுளஞ்
செம்மாந்துன்செயிறுசீரோவாதுசெப்புவல்யா
னெம்மாவியிறந்துபடாதிருக்குங்கொல்விரைவினிற்போய்த்
தெம்மாறுசுடர்வேலான்றிருவருள்பெற்றிடாயெனினே.

இதனுல் ஈடில்லாதவுதவி செய்தலாற் பயன் யாதெனின் அதற்குத்தரு முத்தரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கைம்மாறு – பிரதியுபகாரத்தை, நினக்கு – உனக்கு, ஆற்றல்-செய்தல், அரிதெனினும் – இல்லையாயினும், களிப்பின் – மகிழ்ச்சியினுலே, உளம் – உள்ளத்தில், செம்மாந்து – இறுமாந்து, உன் – உனது, கெயிரறு-குற்றமற்ற, சீர் – குணத்தை, ஓவாது – இடைவிடாமல், யான் – நான், செப்புவல் – சொல்லுவேன், (ஆனுல் அதை நன்முகவாலோசித்து விரையாமற் செய்வனென்பாயின்) விரைவினில் – சிக்கிரத்தில், போய் – சென்று, தெம் – பகைவரும், மாறு – (நட்பினரால்) வேறுபடுதற்குக் காரணமாகிய, சுடர் – ஒளியையுடைய, வேலான் – வேலையுடையவனது, திரு – அழகிய, அருள் – அருளை, பெற்றிடாயெனின் – பெறுவாயின், எம் – எம்முடைய, ஆவி – உயிர்களானவை, இறந்துபடாது – நீங்கிப்போகாமல், இருக்குங்கொல்-இருக்குமோ எ-று.

ஈடில்லாத வுபகாரத்தைச் செய்யுஞ் சீராதலாற் செயிரறுசீ ரென்முள். உன்செயிறு சீரோவாது செப்புவலெனவே என்னுலே யுலகத்திலே பெரும் புகழுண்டாதலே யுனக்குப் பயனென்றதாயிற்று. அன்றியும், "எந்நன்றி கொன்முர்க்கு முய்வுண்டா முய்வில்லே. செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்றிருக்கையால் பின்னே தான் செய்யக்கடவதாகிய நன்றி பாராட்டலைக் காட்டித் தான் அவ்வுபகாரத்திற்குப் பாத்திரமாயிருக்கையைக் குறிப்பித்த வாருயிற்று. தானிறக்கும்போது அது பொருது தாயர் பாங்கியரும் இறப்பரென்பது கருதி அவரையுந்தழுவி எம்மாவியெனப் பன்மையாற் கூறினுள். பகைமைப்பொருளே யுணர்த்துந் தெவ்வென்பதின் வகரமெய் வருமொழி மகாத்தை நோக்கி மகரமெய்யாயிற்று. "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க, தூங்காது செய்யும் வினே" என்றிருக்கையால் விரைந்து செய்யத் தகுவதாகிய இக்காரிய மூயற்சியில் ஆலசியஞ் செய்யாதே யென்னுங் கருத்தால் விரைவினிற்போய் அருள்பெற்றிடாயெனின் "எம்மாவி யிறந்துபடா திருக்குங்கொல்" என்முள். 104

எண்குறைவயவேந்தற்கியம்புதியேல்வடங்கிடந்த
பொன்பிதிர்மின்சுணங்கார்ந்தபொம்மலிளமுலையினர்பா
லன்புறுநல்லமையமதிலறையற்கவறைகுதியோ
ன்குரைதீங்காமவர்பானயப்புற்றதன்மையினுல்.

இதுமுதலைந்துபாட்டுகளால் பின்பு அன்னஞ்செய்யத் தகுமவற்றை யறிவித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். என் – எனது, குறை – குறையை, நீ – நீ, வயம் – வெற்றியையுடைய, வேந்தற்கு – நளமகாராசனுக்கு, இயம்புதியேல் – சொல்வாயாயின், வடம் – முத்துவடமானது, கிடந்த – தங்கப்பெற்று, பொன்பிதிர் – பொற்கொடிபோல், மின் – விளங்குகின்ற, சுணங்கு – தேமலால், ஆர்ந்த – நிறைந்த,

பொம்மால் — பொலிவும், இள — இளமையும் பொருந்திய, மூலையினர்பால் — மூலையினரிடத்து, அன்புறு — அன்புற்றிருக்கின்ற, நல் அமயத்தில் — நல்ல சமயத்தில், அறையற்க — (அதனைச்) சொல்லாதே, அறைகுதியேல் — (அப்போது) சொல்வையேயானால், அவர்பால் — அவரிடத்தே, நயப்புற்ற-இன்பமுற்ற, தன்மையினால் — குணத்தினாலே, நன்குரை — (உனது) நல்லசொல்லும், தீங்காம் — (அவனுக்குக்) குற்றமுள்ளதாகும் எ-று.

பொம்மலுக்கு அப்பொருள். "பொம்மலே பொலிவுஞ் சோறும்" என்பதனாலறிக. எப்படி நீரைக்குடித்து அதனாலே திருப்தியடைந்திருக்கிறவருக்கு அப்போது தெளிவும் தீஞ்சுவையும் பரிமளமுஞ் சீதளமு முடையதா யிருந்தாலும் வேறு நீர் விரும்பப்படாதோ அப்படியே ஒருத்தியைப் புணர்ந்து அவளாலே திருப்தியடைந் திருக்கிறவனுக்கு அப்போது பல குணங்களு முடையவளா யிருந்தாலும் வேறொருத்தி விரும்பப்படா ளாதலால் நன்குரை தீங்காமவர்பா னயப்புற்றதன்மையினால் என்றான். 105

வேற்றரசர் திறைகொணரும்வேலையினுஞ்சொல்லற்க
மாற்றரசர்பால்வெகுளுமமயத்தும்வகுத்துரையே
றேற்றமுடைமதிவல்லோர்தேர்ச்சியினுந்தெரிந்துரையேல்
சாற்றினுரைத்தனவெல்லாந்தவறுதலறிதியே.

இ-ள். வேற்றரசர் – பிறவரசருடைய, திறை - இறைப்பொருளை, கொணரும் – வருவிக்கின்ற, வேலையிலும் - காலத்திலும், சொல்லற்க - சொல்லாதொழிக, மாற்றரசர்பால் - பகையரசரிடத்து, வெகுளும் - கோபஞ் செய்கின்ற, அமயத்தும் – காலத்திலும், வகுத்துரையேல் – சொல்லாதே, தேற்றம் – தெளிவை, உடை - உடைய, மதிவல்லோர் – மந்திரிகளோடு, தேர்ச்சியிலும் – ஆலோசனை செய்யுங்காலத்திலும், தெரிந்துரையேல் - சொல்லாதே, சாற்றின் - (நீ) சொல்லின், உரைத்தனவெல்லாம் – (உன்னுற்) சொல்லப்பட்டனவெல்லாம், தவறுதல் – குற்றமுடையனவாதலை, அறிதி - (நீ) அறிவாய் எ-று.

செல்வப்பொருளிலே சென்றிருக்கிற மனமானது தத்துவப்பொருளிலே சென்றிருக்கிற யோகிமனம்போற் பிறிதொன்றிலே விரைந்து திரும்பாதாதலாலும், கோபத்தாற் கலங்கிய மனத்திற்கு நற்செய்தியும் பித்தத்தாற்குணம் வேறுபட்ட வாய்க்குச் சர்க்கரைபோற் கசக்கு மாதலாலும், மந்திரிகளோடு செய்யும் ஆலோசனை வேளையிலே சொல்வது கனவு வேளையிலே சொல்வதுபோற் செவியிலே நழையாதாதலாலும், அப்படிப்பட்ட சமயங்களிலே சொல்லலாகாதென்றான், வகுத்துரை, தெரிந்துரை, ஒருசொற்றன்மைப்பட்டு வந்தன. பிறவரசர் திறைகொண்டு வருங்காலத்திலுஞ் சொல்லற்க என்ற முதலாம் அடிக்குப் பொருளுரைத்தலு மொன்று. கொண்டுவரும் என்னுஞ் சொற்கள் கொணரும் எனமரூஉவிற்று. 106

* பொறிசெறித்தமாண்பினராய்பொருந்தலர்ச்செற்றிருசெறியஞ்
செறிதருமாறீட்டியருவினைவாக்குசெயலினரு
மூறுபிழையுட்சிறிதியற்றினுநத்திடுவர்வயவேந்த
ரூறுதிபெறீமொழியுமமயமறிந்துரைத்தியால்.

இ-ள். பொறி – ஐம்பொறிகளையும், செறித்த – அடக்கிய, மாண்பின ராய் – நற்குணமுடையவராகி, பொருந்தலர் – பகைவரை, செற்று- வென்று, இருசெறியம் – அதிக நிரவியத்தை, செறிதருமாறு – நெருங்கு மாறு, ஈட்டி – சேர்த்து, அருவினை – பெரியதொழில்களை, வாக்கு – (தம் மிடத்து) வாங்கிய, செயலினரும் – செய்கையை யுடையவரும், உறு- (பலவா) றுறுகின்ற, பிழையுள் – குற்றங்களுள், சிறிது – சிறிய வொரு குற் றத்தை. இயற்றின் – செய்தாலும், வயம் – வெற்றியையுடைய, வேந்தர்- அரசராயினோர், அறுதி – (தம்மி) னெழிவை, பெற – அடைய, ஒறுத்திடு வர் – (அப்படிப்பட்டவரையும்) தண்டிப்பார், (ஆதலால்) நீ – (விவேகியா கிய) நீ, மொழியும் – சொல்லுதற்குரிய, அமயம் – காலத்தை, அறிந்து- தெரிந்து, உரைத்தி – சொல்லுவாய் எ-று.

பொறிசெறித்தலாவது அரசனொருவரோடு இரகசியம் பேசும்போது தான் செவிகொடுத்துக் கேளாமையும், கண்ணுற் பாராமையும் முதலியன. † "எப்பொருளுமோரார் தொடாரார் மற்றப்பொருளை, விட்டக்காற் கேட்க மறை" என்பதனாலுமறிக. நல்ல குணத்தையும் பகைவெல்லு மூபாயத்தை யும் பொருள் சேர்க்குமுத்தியையும் எவரிடத்தே காண்கின்றாரோ அவரை அரசர் பெரியஉத்தியோகத்தில் வைப்பரென்க. பெரியதொழில்களாவன:— மந்திரித்துவம் — சேனாபத்தியம் — கியாயாதி பத்தியம் முதலியனவாம். அங்ஙனம் பலவிதத்தினும் தமக்கு உதவி செய்தவரையே சிறிது பிழையா லொறுத்தல் அரசர்க்குச் சுபாவகுண மாதலால் அச்சமயத்திலே சொன் னால் நமது காரியம் எப்படிமுடியும் என்பது கருத்து. "குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில் — வேண்டுப வேட்பச்சொலல்" என்னுந் திருக்குறட்படி சொல்லுதற்கேற்ற காலம் வேண்டுமாகலின் "நீமொழியுமமயமறிந் துரைத் தியால்" என்றதாம். 107

உளத்தனவான்முகத்தனவாயுதிக்குமவைகூறிப்பினுற்
றெளித்துரைத்தல்சிர்மைத்தேதுதார்செயலிற்றருகும்
வினக்கமுறநீயலதாரறிவரிவைமெலியுமெனை
யளித்திடுநிவிரைவினிற்பாயாய்தூவிமடவனமே.

இ-ள். ஆய் — மிகுமெல்லிய, தூவி — இறகையுடைய, மடம் — இளமை பொருந்திய, அனமே — அன்னமே, உளத்தன — (ஒருவர்) மனத்திலுள்ள குணங்களானவை, முகத்தனவாய் — முகத்திடத்தனவாகி, உதிக்கும்-

* ஐம்பொறிகளாவன:—மெய், வாய், கண், மூக்கு, செவி.
† திருக்குறள் 70-அதிகாரம் 5-செய்யுள்.

தோன்றும், அவை — அக்குணங்களே, குறிப்பினுல் — (அம்முகக்) குறிப்பினலே, தெளித்து — அறிந்து, உரைத்தல் — சொல்லுதல், சீர்மைத்தே — சிறப்புடைத்தாகும், தூதர் — தூதரது, செயல் — தொழிலானது, இற்றாகும் — இத்தன்மைத்தாகும், இவை — (நளன் மனத்திலுள்ள) விவற்றை, விளக்க முற — விளங்குதலுற, நீயலது — நீயல்லாமல், ஆர் — (வேறே) யாவர், அறிவர் — அறியவல்லவர், விரைவினில் — சீக்கிரத்தில், போய் — (நளமகாராஜனிடத்துப்) போய், மெலியும் — வருந்துகின்ற, எனை — என்னை, அளித்திடுதி — காப்பாற்று எ-று. ஆய் — கோதுகின்ற எனவும் பொருள்.

உளத்தின் — விருப்பு வெருப்பு முதலியன. அவைமுகத்தளவா யுதிக்குமென்றது, * "அடுத்ததுகாட்டும் பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டு முகம்" என்பதனலும், அவை குறிப்பினுற் றெளித்துரைத்தல் சீர்மைத்தென்றது. † குறிப்பிற் குறிப்புணர்வாரை யுறுப்பினுள், யாதுகொடுத்துங் கொளல்" என்பதனலும் அறிக. தெளிந்தெனற்பாலது தொடை நோக்கித் தெளித்தென விகாரப்பட்டது. விளக்கமுறல் — ஐயந்திரிபின்றியறிகிற்றல். நீயலதாரறிவ ரெனவே விவேகியாகிய நீயே யறியவல்லா யென்றதாயிற்று. யாவர் என்னுஞ் சொல் யார் என்றுகி, அது ஆர் என விகாரப்பட்டது. 108

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்னவாங்குவெளிப்படையிற்குயிலுகாணவின்னமிழ்திற்
கன்னற்பாகிற்கோற்றேனிற்கனியிற்கனிந்தமொழிகவிலும்
பொன்னம்பாவையன்னுடன்னுள்ளந்தேர்ந்துமகிழ்புரியா
வன்னங்கண்ணுலருந்துதல்போனேக்கிச்சிலசொல்லறையுமால்.

இதனுற் பின்பு அன்னஞ் சில சொற்கள் பேசத்
தொடங்கினமை சொல்லப்படுகின்றது.

இ-ன். என்ன — என்று, அன்னம் — அன்னமானது, ஆங்கு — அந்தச் சோலையினிடத்து, வெளிப்படையின் — வெளிப்படையினலே, குயிலும் — கோகிலமும், நாண — வெட்கமுற, இன்னமிழ்திற் — இனிதாகிய அமிர்தத்தினும், கன்னற்பாகின் — சர்க்கரைக் குழம்பினும், கோற்றேனின் — கொம்புத் தேனினும், கனியின் — முக்கனியினும், கனிந்த — சுவைமிகுந்த, மொழி — இந்தச்சொற்களே, நவிலும் — சொல்லிய, பொன் — பொன்மயமாகிய, ஆம் — அழகிய, பாவையன்னுள் — பாவைபோல்பவளது, உள்ளம் — கருத்தை, தேர்ந்து — அறிந்து, மகிழ்புரியா — மகிழ்ந்து, கண்ணுலருந்துவதுபோல் — கண்களால் விழுங்குதல்போல், நோக்கி — (அவளைப்) பார்த்து, சிலசொல் — சில சொற்களே, அறையும் — சொல்லும் எ-று.

பொன்னம்பாவை யன்னுடன்னுள்ளம் — நளனிடத்துப் பற்றிய அவளது மனநிச்சயம். தன்னைத் தூதனுப்பிய அரசன் காரியங் கைகூடுதலால்

* திருக்குறள் 71-அதிகாரம் 6-செய்யுள்.
† " " 3-செய்யுள்.

மகிழ்ந்தனென்க. கண்ணுலருந்துதல்போலுணக்கல்—அதிகவிருப்பத்தோடு பார்த்தல்; இது உலகவழக்கச் சொல்லாதலால் உலகவழக்கு நவிற்சியணி. இதுமுதலிருபத்தாறு பாட்டுக்கள் பெரும்பாலும் மூன்றுஞ்சீரும் ஆறுஞ் சீரும் காய்ச்சீர்களும் மற்றை நான்குசீர்களும் மாச்சீர்களும் ஆகிவருகிற கழிநெடிலடி நான்குகொண்ட ஆசிரியவிருத்தங்கள். 109

சுணங்குபூத்துக்குவிகச்செப்பெனலாய்ச்சுருங்கிநுழைநுசுப்பு
வணங்கித்தேம்பவருமுலையாபுரைத்தமாற்றமெய்யாமே
வினங்குவாயில்யார்வேண்டுகளற்குனக்குமிதயத்து
ளணங்குநோய்செய்தலர்தூற்றுமநங்கனுருவனிருக்கவே.

இதனுல் நிச்சயமிருந்தாற் காரியம் எளிதின்முடியு
மெனல் சொல்லப்படுகின்றது.

இ-ள். சுணங்கு—தேமலானது, பூத்து—படரப்பெற்று, குவிகச் செப் பெனலாய்—இங்குலிகத்தினுலாகிய செப்புபோனற்காகி, நுழை—நுண் ணிய, நுசுப்பு—இடையானது, சுருங்கி—இளைத்து, வணங்கி—வளைந்து, தேம்ப—வருந்த, வரு—வளர்கின்ற, முலையாய்—முலைகளை யுடையவளே, உரைத்த—(உன்னுற்) சொல்லப்பட்ட, மாற்றம்—சொல்லானது, மெய்யா மேல்—சத்தியமாயின், நளற்கும்—நளராசனுக்கும், தினக்கும்—உனக்கும், இதயத்துள்—மனத்தின்கண், அணங்கு—வருத்தஞ் செய்கின்ற, நோய்-(காம) நோயை, செய்து—உண்டாக்கி, அலர்தூற்றும்—பழிமொழியைப் பரப்புகின்ற, அநங்கனுருவன்—மன்மதனுருவன், இருக்க—உளனாக, இணங்கு—(உம்மிருவரையும்) பொருத்துதற்கு, வாயில்—சந்திசெய்வோர், யார்—எவர், வேண்டும்—(உங்களுக்கு) வேண்டும் எ-று.

அநங்கன்—அங்கமில்லாதவன். மன்மதன். இங்குலிகமெனற்பாலது குலிகமென முதற்குறைந்தது. இங்குலிகச்செப்பை உபமானமாக்கியது செந்நிறமும் ஒளியும் பற்றியென்க. அநங்கனுருவனிருக்க இணக்குவா யில் யார்வேண்டும் எனவே உம்மிருவரையுங் கூட்டுதற்கு மன்மதனுரு வனே போதுமாகையால் இது காரியத்திலே யான்செய்யக் கிடந்த உபகார மொன்றுங் கண்டிலே னென்றதாயிற்று. இணக்கென்னும் பிறவினை தொ டைநோக்கி இணங்கென விகாரமாயிற்று. 110

கடல்சூழ்புவியிற்பாதலத்திலமரருலகிற்கவின்றிகழுங்
கொடிமேரிடையாள்யாரென்னநின்னேயுங்கள்கூறுதலும்
படியேழ்புரக்கும்வேந்துளத்துப்படைவேள்பகழிபுகுவழிபோய்
மடமாதனுக்கிதியுறைதன்மறந்தாய்கொல்லோமறைத்தீனையோ.

இதுமுதலொன்பது பாட்டுக்களால் அன்னம் நளனுடைய காட்சி முதலிய அவத்தைகளை யுணர்த்தத்தொடங்கி இதனுலே செவிப்புலக்காட்சி யுணர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மடம்—இளமைபொருந்திய, மான்-மான்-கண்போலும், நோக்கி கண்களை யுடையவளே! படியேழ்—ஏழுதீவுகளையும், புரக்கும்—காக்கின்ற,

வேந்து — நளமகாராசனுனவன், கடல் — கடலானது, சூழ் — சூழப்பெற்ற, புவியில் — பூலோகத்திலும், பாதலத்தில் — நாகலோகத்திலும், அமரருலகில் — தேவலோகத்திலும், கவின் — அழகினுலே, திகழும் — விளங்காகின்ற, கொடி நேரிடையாள் — கொடிபோலிடையையுடைய மங்கை, யாரென்ன — எவ ளென்றுவினவ, யாங்கள் — யாங்கள், நின்னே — உன்னே, கூறுதலும், சொல் லுதனும், படை — படையையுடைய, வேள் — மன்மதனது, பகழி — பாண மானது, புகு — சென்ற, வழி — வழியால், போய் — சென்று, உளத்து — (அவன்) மனத்தின்கண், நீ — நீ, உறைதல் — இருக்கையை, மறந்தாய்கொல் — மறந்தாயோ, மறைத்தனேயோ — (எனக்கு) ஒளித்தனேயோ எ-று.

காங்கள் உன்னுடைய குணதிசயங்களைச் சொல்ல என்று கேட்டறிந் தாலே அன்றுமுதலாக உன்மேலாசைகொண்டு மன்மத பாணங்களினுலே வருந்தி உன்னே நினைத்திருக்கின்றனென்பது கருத்து. மறத்தற்குப் பேதைமையும், மறைத்தற்கு நாணமும், காரணங்களாகும். கேட்டறிதலும் பார்த்தறிதலோடொத்தலிற் காட்சியாதலறிக. 111

ஈட்டுமணிகள்பலதெளித்துன்னெழுதற்கரிய திருவுருவங்
கோட்டுங்கிழிதான்முலேகோட்டப்பரப்பின்றென்னுங்கொடிமருங்கு
றீட்டவினேகோனுநிறுண்மையிலதென்றெண்ணித்நிகைக்குமுளம்
வேட்டுநெடுங்கண்ணிமையாமலேக்கித்தளரும்வெல்வேற்கே.

இதனுற் சித்திரக்காட்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். வேல்-வேற்படையையுடைய, வேந்து — நளமகாராசனுனவன், உன் — உனது, எழுதற்கரிய — (சித்திரக்காரரா) லெழுதுதற்கரிதாகிய, திரு-அழகிய, உருவம் — (உனது) வடிவத்தை, ஈட்டு — (தன்னுற்) சம்பாதிக்கப் பட்ட, பல — பலவகையாகிய, மணிகள் — மணிகளே, தெளித்து — பதித்து, கோட்டும் — எழுதுகிருன், முலை — (உன்) முலைகளே, கோட்ட - எழுதுதற்கு, கிழி படத்தில், பரப்பு — அகலம், இன்றென்னும் — இல்லையென்கிருன், கொடி — பூங்கொடிபோலும், மருங்குல் — (உனது) இடையை, தீட்ட — எழு தற்கு, வினேகோல் — தூலிகைக்கோலினது, நுதி — நுனியின்கண், நுண் மை — கூர்மையானது, இலதென்று — இல்லையென்று, எண்ணி — நினைத்து, நிகைக்கும் — நிகைக்கிருன், உளம் — மனத்தில், வேட்டு — விரும்பி, நெடுங் கண் — நெடிய கண்களானவை, இமையாமல் — இமையாதிருக்க, நோக்கி — (அவ்வடிவத்தைப்) பார்த்து, தளரும் — வருந்துகிருன் எ-று.

மணிகள் பலதெளித்தலாவது ஒன்பதுவகை மணிகளிலே எவ்வெம் மணியெவ்வெவ்வுறுப்பிற்கு ஒத்திருக்குமோ அவ்வம்மணியை அவ்வவ்வுறுப் பைச் செய்யுமிடத்துப் பதித்தலாம். அவையாவன:—கண்ணுக்கு நீலமும் பல்லுக்கு முத்தமும், அதரத்துக்குப் பவளமும் போல்வனவாம். வினேதோ. பாயமாகத் தமயந்திக்குச் சமானமாக வெழுதப்பட்ட சித்திரமாதலால் அத னைப் பார்த்தலுங் காட்சியாமென்க. 112

பருந்துங்கழுகுங்கோடியினமுமருந்தப்பகைஞருடலடிந்து
விருந்துசெய்புஞ்சுடர்வடிவேல்வேந்தனுயிருநீயென்னும்
பொருந்துங்காமப்பிணிநீக்கிப்புலம்புதீர்த்தின்னுயிரளிக்கு
மருந்துநீயெனென்றெண்ணிமகிழ்தூங்குளத்தோடிருந்தயரும்.

இதனுல் வேட்கையும் உள்ளதலுஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். பருந்தும் – சேனங்களும், கழுகும் – எருவைகளும், கொடியின மும் – காக்கைக் கூட்டங்களும், அருந்த – தின்னும்படியாக, பகைஞர்-பகை வருடைய, உடல் – உடம்புகளை, தடிந்து – அணிந்து, விருந்துசெய்யும்- (அவற்றிற்கு) விருந்துசெய்கின்ற, சுடர் – ஒளியும், வடி – கூர்மையும் பொருந்திய, வேல் – வேலையுடைய, வேந்தன் – நளமகாராசனுவன், உயி ரும் – (தன்) னுயிரும், நீயென்னும் – நீயாக வேண்டுகிறன், பொருந்தும்- (தன்னைப்) பற்றிய, காமப்பிணி – காமநோயை, நீக்கி – ஒழித்து, புலம்பு- (அதனுலாகின்ற) தன்பத்தை, தீர்த்து – தீர்வித்து, இன் - இனிதாகிய, உயிர் – (தன்) னுயிரை, அளிக்கும் – காப்பாற்றும், மருந்தும் – ஔடதமும், நீயேயென்று – நீயேயாக, எண்ணி – (இடைவிடாது) நினைத்து, மகிழ்-மகி ழ்ச்சியில், தூங்கு – பரவசப்பட்டிருக்கின்ற, உளத்தோடு – மனத்துடனே, இருந்து – தங்கி, அயரும் – வருந்துகிறன் எ-று.

அரசனுக்குச் சொல்லப்பட்ட வெகுளிச் சுவையைப்பற்றிய விசேட ணம் உவகைச்சுவை சொல்லப்படு மிவ்விடத்திற்குப் பொருந்துமோவெனின் அரசனது நிகரற்ற பராக்கிரமத்தையத்தைக் காட்டி இப்படிப்பட்ட வைரிய மும் உன்பொருட்டு இப்போது அழிந்ததென்று அறிவித்தற்கு அவ்விசேட ணஞ் செய்தலாற் பொருந்துமென்க. இதுபோல் வருவன பிறவும் இப் படியே யமைத்துக்கொள்க. அவளைத் தன்னுயிர்போற் சிறந்த பொருளா கப் பெறல் வேண்டுதலால் வேட்கையும், அவளாலன்றித் தன்காமநோய் தீராதென்று அதற்கு மருந்தாக இடைவிடாது நினைத்திருத்தலால் உள்ள தலும் ஆயின. 113

தேற்றுரொளிருமணிமௌலியிடறித்தேய்த்துவிளங்குகைக்
கூற்றுமென்னுமால்யானைப்பிடறிற்சிறந்துமெழில்குறிபா
வாற்றுராகியாடவரும்பெண்மைவிரும்புமடல்வேந்தன்
வேற்றுரர்பொருளிலம்புலனும்விழையாவாகமெலியுமால்.

இதனுல் உள்ளதலாலாகிய வேற்றப்புலவெறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். தேற்றுர் – பகைவரது, ஒளிரும் – விளங்காநின்ற, மணி - நவ மணிகளாலாகிய, மௌலி – மகுடத்தில், இடறி - குண்டு, தேய்த்து – தேய்த லால், விளங்கு-விளங்காநின்ற, நகம் – நகங்களையுடைய, கூற்றுமென்னும்- (கொலையிலே) யமனெனப்படுகின்ற, மால் – பெரிய, யானை-யானையினது, பிடரில் – எருத்தத்தில், தோன்றும் – காணப்படுகின்ற, எழில் – (தன்)

தழகை, குறியா — நினைத்து, ஆடவரும் — புருடரும், ஆற்றாராகி-பொருக்க மாட்டாதவராகி, பெண்மை - பெண்வடிவத்தை, விரும்பும் — விரும்பப் பெறுகின்ற, அடல்வேந்தன் — வெற்றிவேந்தனனவன், வேற்றூர் பொருளில் — (உன்னிடத்தன்றி) வேறொரு பொருளிடத்து, ஐம்புலனும் — பஞ்சவிடயங்களும், விழைவாயாக — விரும்பப் படாதனவாக, மெலியும் — தளர்கின்றன் எ-று.

ஆடவருமென்னு மும்மையுயர்வு சிறப்பு, தமதாண்வடிவத்திற் சூழ்ந்த பெண்வடிவமாகிய குற்றத்தால் நனனைப் புணர்தலாகிய குணம் உண்டாதல் கண்டு அதனைப்பெறல் வேண்டுதலால் வேண்டவணி. வேற்றூர் பொருளிலம்புலனும் விழையாவாக மெலியுமெனவே உணவு முதலியவற்றையும் வெறுத்து உன்னையே விரும்புகின்றன னென்றதாயிற்று. ஐம்புலன்— சுவை — ஒளி — ஊறு — ஓசை — நாற்றம் என்பன. ஐம்புலன்களும் ஒருத்தியிடத்தே யுளவென்பது "கண்டுகேட் டுண்டுயிர்த் தற்றறியு மைம்புலனு-மொண்டொடிகண்ணேயுள" என்பதனுலறிக. விழையாவென்னுஞ் செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளிலே வந்தது. 114

கார்க்குங்வெண்மையளித்திருண்டகரியகூந்தற்கனங்குழையா
யார்க்குஞ்சுரும்புமிசைத்தேனும்வண்டுஞ்சுழலுமைங்கணேவேள்
போர்க்குமெலிக்தோவெண்டிங்கள்பொழியுநிலவிற்றோற்புதியோ
பார்க்குந்தோறும்புதிதாகவுடலமெலியும்பார்வேந்தே.

இதனுல் மெலிதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கார்க்கும் — மேகத்திற்கும், வெண்மை — வெள்ளை நிறத்தை, அளித்து — கொடுத்து, இருண்ட — கறுத்த, கரிய - பெரிய, கூந்தல் — கூந்தலையும், கனம் — கனம்பொருந்திய, குழையாய் — குண்டலத்தையுமுடையவளே! பார் — பூமியையுடைய, வேந்து — நளமகாராசன், ஆர்க்கும் ஒலி செய்கின்ற, சுரும்பும் — பொறி வண்டுகளும், இசை — இசைபாடுகின்ற, தேனும் — தேன் வண்டுகளும், வண்டும் - கருவண்டுகளும், சுழலும்-சுழலப்பெறுகின்ற, ஐங்கணை — பஞ்சபாணத்தையுடைய, வேள் — மன்மதனது, போர்க்கு - சண்டையினுல், மெலிந்தோ — இளைத்தோ, வெண்டிங்கள் — வெள்ளிய சந்திரனது, பொழியும் — சொரியப்பட்ட, நிழலின் — நிலாவினுலே, தேம்பியோ - வருந்தியோ, பார்க்குந்தோறும் — காணுந்தோறும், புதிதாக — நூதனமானதாக, உடலம் — உடம்பு, மெலியும் — இளைக்கப்பெறுகின்றன் எ-று.

கார்க்கும்வெண்மை யளித்திருண்ட வென்றதற்கு மேகத்தைப் பார்க்கிலு மிகக்கறுத்த வென்பதுபொருள். பார்க்குந்தோறும் புதிதாக வுடல் மெலிதலாவது முன்பார்க்கப்பட்ட வளவிற் பின்பார்க்கப்படுகிற வளவு குறைந்தபோதலாலே வேறுபட்டுத் தோன்றல். சுரும்பு எல்லாமனத்திலுஞ் செல்வது — தேன் — நல்லமணத்தே செல்வது. இதனைக் குணமாலை

யாரிலம்பகத்து "மங்கை நல்லவர் கண்ணு மனமும் போன்" எனவரூஉஞ் செய்யுட்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்ததனாலுமுணர்க. 115

அலர்வார்பகழிதுரந்துதுரந்தாகமெலிவித்திடுதலன்றிச் [ன்
சிலைவேள்வேந்தனியல்பினைத்துங்கவர்ந்தான்போலுந்தீங்கிழைத்து
மூலைமேற்கூடப்பெறுமெனிலோவதுமியற்றுமுதுக்குறைவற்
றாலையாக்காமங்கொடுன்றொழும்புமுழப்பநாணுமிழக்குமால.

இதனால் நாணுவரையிறத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். சிலை—கருப்புவில்லையுடைய, வேள்-மன்மதனெனவன், வார்-நெடிய, அலர்—மலர்களாகிய, பகழி—பாணங்களை, துரந்து துரந்து-செலுத்திச்செலுத்தி, ஆகம்—உடம்பை, மெலிவித்திடுதலன்றி—இளைப்பித்தலல்லாமலும், வேந்தன்—அரசனுடைய, இயல்பினைத்தும்—(பாவத்தையஞ்சுதல் இழிதொழிலெண்ணல்முதலாகிய) சுபாவகுணமுழுதையும், கவர்ந்தான்போலும்-வௌவிக் கொண்டானே, (ஏனென்றால்) தீங்கு—பாவத்தை, இழைத்து-செய்து (அதனாலே), உன்மூலைமேல்-உன் கொங்கைகளின்மேலே, கூடப்பெறுமெனிலோ—கூடப்பெறலா மென்றாலோ, அதுவும்—அப்பாவத்தையும், இயற்றும்—(அஞ்சாது) செய்வான், முதுக்குறைவற்ற—பேரறிவற்ற, உலையா—கெடாத, காமம்—காமத்தை, கொடு—கொண்டு, உன்—உன்னிடத்தே செய்யப்படுவதாகிய, தொழும்பும்-அடிமைத்தொழிலிலும், உழப்ப, முயலுதற்கு, நாணும்—நாணத்தையும், இழக்கும்-விட்டுவிடுவான் எ-று.

பாவம் கொலைமுதலியன பெண்ணேவல் இழிதொழிலாதல் "பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுனுடைப்பெண்ணை பெருமையுடைத்து" என்பதனாலறிக. ஆயினும் அதுகாமமிக்க வாடவர்க்குரித்தாதல் "மடுக்கோகடலின் விடுதிமிலன்றி மறிதிரைமீன், படுக்கோ பணிலம் பலகுவிக்கோபான் றில்லைமுன்றிற், கொடுக்கோவளைமற்று நும்மையர்க்காய குற்றேவல்செய்கோ, தொடுக்கோ பணியீ ரணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே" என்னுந் திருவருட்பாவாலு மறிக. மன்மதனே வேந்தனியல்பினைத்துங் கவர்ந்தனைக் குறித்தலால் தற்குறிப்பணி. உலையாக் காமக்கொடுந் தொழும்பு முழந்து என்றும் பாடமுண்டு. ஆக்கஞ் செப்பற்குத் தடையாகிய நாணத்தினிழப்பையிங்ஙனங் கூறவே அதுவந் தோன்றுதலறிக. 116

நின்சீருருவுவெளிப்படதேனைக்கிநோக்கிநிலைதளரு
மென்பூடுருகவிளமூலைமேற்புல்லுமுனிந்தாயெனவருந்து
மன்போடீர்த்தனன்போனகைக்குமகன்றாயெனவெளியிற்
பின்போதருகல்லுணர்விழந்தபித்தர்போலப்பிதற்றுமால்.

இதனால் மறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். நின்—உனது, சீர்—சிறப்புப்பொருந்திய, உருவு-வடிவமானது, வெளிப்படுதல்—தோன்றுதலே, நோக்கிநோக்கி—பார்த்துப் பார்த்து, நிலை

(தன்னறிவு) நிலை, தளரும் — தளருகின்றன், என்பு — எலும்பும், ஊடுருக — உள்ளுருக, இள — இளமைபொருந்திய, மூலமேல் — (அவ்வடிவத்தின்) மூலைகளின்மேல், புல்லும் - தழுவுகின்றன், முனிந்தாயென — ஊடினை யென்று, வருந்தும் — வருந்துகின்றன், அன்போடு — ஆசையினால், ஊடல்-அவ்வூடலை, தீர்த்தனன்போல் — நீக்கினவன்போல், நகைக்கும் — சிரிக்கின்றன், அகன்றனையென — நீங்கினையென்று, வெளியில்-வெறுவெளியில், பின்-(அவ்வடிவத்தின்) பின்னே, போதரும் — போகின்றன், நல்லுணர்வு - நல்ல நிலை, இழந்த — துறந்த, பித்தர்போல — பித்தம் பிடித்தவர்போல், பேதுறும் — மறவியுற்றிருக்கின்றன எ-று.

உருவு வெளிப்படுதல் - விருப்பத்தாலிடைவிடாது சிந்திக்கப்பட்ட வுருவுபோல்வது புத்தி விகாரத்தினாலே வெளியிலேதோன்றுதல் பகையில் லாமையால் ஒருகாலத்திலே கூடத்தக்க இத்தனார்தல் — புல்லுதல்-வருந்தல்-நகைத்தல் — பின்போதரல் — என்கிற பலவற்றிற்குக் கூட்டத்தைச் சொல்லுதலினாலே கூட்டவணி வெறுவெளியிலே அவ்வுருவு தோன்றுதலைச் சொல்லவே நோக்குவ வெல்லாமவையேபோலுஞ் சொல்லப்பட்டதாயிற்று.

புலவுநாறும்வேல்வேந்தர்சேனைப்புணரிகடக்கெதிரற்
றுலவுநிடதக்கடாயானையுனதுவிரகப்போராற்றி
னலியினிலைகாண்பரிதாகியந்தோவாழ்ந்துமயங்கியதாற்
சிலைகொணுதலாய்பின்னர்வருமவத்தைச்சேராதருள்புரியாய்.

இதனுள் மயக்கஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். சிலை — வில்வடிவத்தை, கொள் - கொண்ட, நுதலாய் — நெற்றியையுடையவளே! புலவு — (பகைவ) ரூனல், நாறும் - நாறுகின்ற, வேல்-வேலையுடைய, வேந்தர் — அரசாதி, சேனை — சேனையாகிய, புணரி-கடலை, கடந்த — தாண்டி, எதிரற்று — எதிரியில்லாமல், உலவும் — திரிகின்ற, நிடதக்கடாயானை — நளனுகிய களிறுனது, உனது — உன்சம்பந்தமாகிய, விரகம் — விரகமென்கிற, போர் — பெயரையுடைய, ஆற்றின் — ஆற்றினது, அலையின் — அலையில், நிலை — நிலையை, காண்பதரிதாகி — காணமாட்டாததாகி, ஆழ்ந்து — முழுகி, மயங்கியது — மூர்ச்சித்தது, அந்தோ-ஐயோ, பின்னர்வரும் — (அம்மயக்கத்தின்பின்) வருவதாகிய, அவத்தை-(சாக்காடாகிய) அவஸ்தையை, சேராது — அடையாமல், அருள் புரியாய்-அருள்செய்வாயாக எ-று.

நிடதன் கடாயானை - நிடதக்கடா யானையென விகாரப்புணர்ச்சியாயிற்று. பல்லாயிரவர் கூட்டத்தாற்றோன்றிய தென்னும் பெருமைபற்றிச் சேனையை ஆறென்றுந் கடலென்றும், ஒருத்தியாற் றோன்றிய தென்னுஞ் சிறுமைபற்றி விரகத்தைக் கடலென்றது ஆறென்றும், உருவகஞ் செய்ததென்க. ஆற்றளவாகிய காரணத்திற்குப் பெருமையாகிய தருமங் குறைவாயிருப்பக் கடலைக் கடந்தயானை முழுகுதலாகிய காரியம் பிறத்தலைச்

சொல்லுதலாலே பிரிதாராய்ச்சியணி. இதற்கு உருவகம் அங்கம். கொடுமை பற்றிக்கூற நாவெழாமையாற் சாக்காட்டைப் பின்னர் வருமவத்தை யென்று கூறிற்று. 118

குடங்கையணையிற்பகைவேந்தர்துயிலுங்கொற்றமுற்றத்து
மடங்கலனையபோர்மீளியின்னவாறுமதிமயங்கித் [ன்
தடங்கொண்முலைபாயெனைத்தூதுநின்பால்விடுத்தான்றளர்ந்திடே
முடிந்ததுவுமிருவீருமுன்னர்ச்செய்ததவப்பேற்றால்.

இ-ள். தடம் – மலைவடிவத்தை, கொள் – கொண்ட, முலையாய் – முலைகளையுடையவளே ! பகை – தன்னோடு பகைத்து, வேந்தர் – அரசரானவர், குடங்கை – உள்ளங்கையாகிய, அணையில் – தலையணையில், துயிலும் – நித்திரைசெய்யப்பெற்ற, கொற்றம் – வெற்றிபொருந்திய, முற்றத்து – முற்றத்தையும், மடங்கலனைய – ஆண்சிங்கம்போலும், போர் – போர்த்தொழிலையுமுடைய, மீளி – அக்காளையானவன், இன்னவாறு – இப்படிப்பட்ட விதமாக, மதிமயங்கி – அறிவுகலங்கி, நின்பால் – உன்னிடத்து, தூது – தூதாக, எனை – என்னை, விடுத்தான் – அனுப்பினன், தளர்ந்திடேல் – (நீ) வருந்தாதே, இருவீரும் – நீங்களிருவரும், முன்னர் – முற்பிறப்பிலே, செய்ததவப்பேற்றால் – செய்ததவத்தின்பயனாலே, அதுவும் – அக்காரியமும், முடிந்தது – முடிவுபெற்றது எ-று.

ஒருவர்க்கொருவர் பெறுதற்கரியபொருளாகிற்றலால் இருவீரு முன்னர்ச்செய்த தவப்பேற்றாலென்றது. அதுவென்றது தூதிற்குப்பயனுகிய விவாகத்தைச் சுட்டிநின்றது. விரைவுபற்றி முடியுமென்றது முடிந்ததென விறந்தகாலத்தாற் கூறப்பட்டது. 119

முருகன்வேலுமுக்கண்ணன்முடித்தபுனிற்றுப்பிறைக்கொழுந்துந்
திருவின்கொழுநன்பாயலுங்கண்டிகலுதல்பேரகலல்குல்
லுருவமாகத்தனிக்கவர்ந்தவனக்குக்கலுழிமதமொழுகுங்
கரடக்களிற்றுகளனுள்ளங்கவருமாறுவியப்பாமோ.

தன்முயற்சி பயன்பட்டமைபற்றி அவனைப்புகழ்தல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். முருகன் – சுப்பிரமணியனது, வேலும் – வேலையும், முக்கண்ணன் – பரமசிவனது, முடித்த – முடியிற்றரித்த, புனிற்று – புதிய, பிறைக்கொழுந்தும் – பிறைச்சந்திரனையும், திருவின்கொழுநன் – திருமாலினது, பாயலும் – (பாம்பாகிய) சயனத்தையும், கண் – கண்ணினதும், திலகம்-பொட்டையுடைய, நுதல் – நெற்றியினதும், பேர் – பெரிய, அகல் – பரந்த, அல்குல் – அல்குலினதும், உருவமாக – வடிவங்களாக, தனி – தனித்து, கவர்ந்த – வௌவிய, உனக்கு – நினக்கு, கலுழி – கான்யாறுபோல், மதம்-மதநீரானது, ஒழுகும் – இழியப்பெற்ற, கரடம் – கனப்பையுடைய,

களிற்று – களிறுபோலும், நளன் – நளமகாராசனது, உள்ளம் – உள்ளத்தை, கவருமாறு – வௌவுமாறு, வியப்பாமோ – ஆச்சரியமாமோ எ-று.

முருகன்முதலிய மூவர்களுந் தலைமைக்கடவுள ராதலாலே யன்றி முருகனெனவே கட்டிளமையோ னென்பது தோன்றலால் அவன் பெரும் போர்க்குரிய கைப்படையையும், மூக்கண்ணனெனவே பகையை யெரிக்கு நெற்றிக்கண்ண னென்பது தோன்றலால் அவன் மூடிக் கனிகலமாகச் சூடப்பட்ட பிறையையும், திருவின் கொழுந னெனவே பெருஞ்செல்வச் சிறப்பினனென்பது தோன்றலால் அவனறிதுயிற் குரிய பாயலையும், கவர்த லரிதாதல் காட்டப்பட்டமை யறிக. அவர் பன்மையும் இவளொருமையுந் தோன்றத் தனிக்கவர்ந்தவென்றது. கடவுளராகிய, அம்மூவர்களுடைய அப்பொருள்களைக் கவர்தலாகிய வொரு பொருளைச் சொல்லத் தண்டாபூ பிகையாயத்திலுலே ஒரு மனிதனுகிய நளனதுள்ளத்தைக் கவர்தல் சொல்ல வேண்டிய தில்லையென்னு மற்றொருபொருள் தோன்றுதலால் செய்யுட் பொருட்பேறணி. இங்ஙனங்கூறவே அவ்வேற்படை முதலியவைபோற் சிறந்து விளங்குங் கண் முதலியவற்றையுடையை யாதலின் அரசன் உன்னழகுக்கு எளிதிலே மயங்குவானென்றதாயிற்று. 120

பொன்னேயமுதேமொழிக்கரும்பேபூந்தாமரையிற்றிருவேகின்
மின்னேரிடைதேய்ந்தறவருந்தவிம்முமுலையிலல்லாம
லென்னேதொய்யிற்றொழிலினைத்துமெழுதலாமேயென்றெண்ணி
மன்னேயுரைக்குமெங்களுடன்மதுவார்பொழிலினிடையிருந்தே.

இதுமுத லிரண்டுபோட்டுக்களால் காரியமுடிவை அதன்பின் விளைவைக் காட்டி வலியுறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொன்னே – தங்கமே! அமுதே – அமிர்தமே! மொழி-சொல்லாகிய (சாரத்தை) யுடைய, கரும்பே – கன்னலே! பூ – அழகிய, தாமரையில் – தாமரைமலரிடத்துள்ள, திருவே – சீதேவியே! நின் – உனது, மின்னேர் – மின்போலும், இடை – இடையானது, தேய்ந்து – இளைத்து, அறமிகவும், வருந்த – நோவ, விம்மும் – பருக்கின்ற, முலையிலல்லாமல் – முலைகளிடத்தல்லாமல், தொய்யில் – பருத்திக்கீற்றுகிய, தொழிலனைத்தும் – வேலை முழுவதும், என்னே – என்னுகும், எழுதலாமேயென்று – (மற்றொன்றி) லெழுதலாமோவென்று, எண்ணி – ஆலோசித்து, மன்னே நளமகாராசனே, மது – வண்டுகளானவை, ஆர் – ஒலிசெய்யப்பெற்றிருக்கின்ற, பொழிலினிடை – சோலையின்கண், இருந்து – தங்கி, எங்களுடன் – எங்களோடு, உரைக்கும் – (இனிச்) சொல்லுவான் எ-று.

இனி விரைவிலே யுன்னே மணந்து உன் முலையிலே தொய்யிலெழுதிப் பார்த்து அவ்விரண்டிற்கும் தகுந்திருக்கிறபடியை யாலோசித்து அதனே வியந்து செல்வானென்றது. தொய்யிலாவது – சந்தனத்தாற் பத்திபடக் கிறிக் கோலஞ்செய்தல். "திருமுலைந் தடத்திடைத் தொய்யிலன்றியும்" என்வரூஉம் சிலப்பதிகாரச் செய்யுளுரைக்கண் தொய்யிலென்பது பத்திக்

கீற்று என்னூர் அடியார்க்கு நல்லார்கட் கினிமையாற் பொன்னென்றும், கொண்டமாத்திரையே நோய்நீக்கி யின்பம் பயத்தலின் அமுதேயென்றும், சுவையினிமையாற் கரும்பே என்றும் கூறியதென்க.

இன்பக்கலவிக்காரணங்களியாவுமியற்றுயிருவீரு
மன்புற்றவசமுறுமே னியயர்தீர்வதற்கெம்பொலன்சிறையான்
முன்புற்றுயர்வாநந்திப்புனலின்மூழ்கித்தண்ணென்குறுந்திவலை
நன்கிற்றெறிப்பவீசுதற்குக்காலமணித்தாய்வண்ணியதே.

இ-ள். இருவீரும் – நளமகாராசனு நீயும், இன்பம் – சுகத்தைத் தருகின்ற, கலவி – புணர்ச்சியினுடைய, காரணங்கள் யாவும் – காரணங்கள் யாவற்றையும், இயற்றி – செய்து, அன்புற்று – (ஒருவர்மேலொருவ) ரன்புமிகுந்து, அவசமுறும் – பரவசப்படுமாறுண்டாகும், மேனி – (உங்) ளுடம்பினுடைய, அயர் – தளர்ச்சியானது, தீர்வதற்கு – நீங்குதற்பொருட்டு, உயர் – உயர்வாகிய, வானதி – ஆகாயகங்கையினது, புனலில் – நீரின்கண், மூழ்கி – முழுகிவந்து, முன்புற்று – முன்னிருந்து, எம் – எமது, பொலம் – பொன்னுருவமாகிய, சிறையால் – சிறைகளினாலே, தண்ணென் – குளிர்ச்சிபொருந்திய, குறுந்திவலை – சிறியதுளிகள், நன்கின் – நன்றாக, தெறிப்ப – பட, வீசுதற்கு – வீசுதல் செய்தற்கு, காலம் – காலமானது, அணித்தாய் – சமீபித்து, வண்ணியது – வந்தது எ-று.

* கலவிக்காரணங்களாவன – ஆலிங்கனம் (5), சும்பனம் (11), அமிர்தநிலை (16), நகக்குறி (8), பற்குறி (8), முரல் (8), தாடனம் (8), ஆக 64. இவை. "ஆலிங்கன மைந்தும் மிதழ்ப்பானம் பதினொன்று-மமிர்தம் பதினாறும் முகிழ்முலைதங் குறியெட்டுங்கோலம்பூசை தந்தக்குறியெட்டுங் குரலெட்டுங் குவிதாடனமிருநான்கொடு கூடுங்கலவிக்கே" என்பதனாலறிக. இவற்றினியல்பு கொக்கோகம் மதனதந்திரம் முதலிய நூல்களிற்காண்க.

* இவை வேறு வகையாகவுங் கூறப்படும். கந்தபுராணம் இந்திரபுரிப் படலத்தில்,

உறுத்தலேநெறுக்கன்மெல்லவூரோசதலுறுதன்முன்னு
மறுத்தவிர்தருவுஞ்சூழ்ந்தவல்லியேமாமேற்கோடல்
செறித்தவெள்ளரிசிபோலார்தீம்புனல்செயிர்தீர்காட்சிப்
புறத்திலோருறப்புறத்தல்புணர்ச்சியிற்புல்லற்பால.

வைத்தலேதுடித்தலொற்றுமாபொப்புலீலங்குசற்றே
யுத்தரமதுக்கலுள்ளீடோங்குசம்புடாதிதன்னூற்
பத்துடனென்றுமேனப்பல்வகையுறுப்புகாடி
முத்திரத்தமிர்தமுண்டன்முன்மொழிவைத்தலாமே.

சரிதகமெண்ணட்டிங்கியேமண்டலமேமஞ்ஞை
நிரலடிமுயலின்புன்காணெய்தலினிதிழேவேங்கை

எனவரூஉஞ் செய்யுளாற் காண்க.

கொல்லும்வேலுங்கூர்வாளுங்கூற்றுங்கொடியகடல்விடமும்
வெல்லுநெடியகருங்கண்ணுய்வேல்வேந்திடத்தியான்விரைவிற்
செல்லுமளவுநீவருந்தேல்செல்லிற்றிகழ்பூண்வனமுலைகள்
புல்லும்வேட்கைத்தேரூர்ந்துவேந்துன்னகரம்புகுவானுல்.

இதனுல் ஆற்றுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொல்லும் – கொலைசெய்கின்ற, வேலும் – வேலையும், கூர்-கூரிய, வாளும் – வாளையும், கூற்றும் – யமனையும், கடல் – கடலிற்பிறந்த, கொடிய – நீய, விடமும் – ஆலாலத்தையும், வெல்லும் – வெல்லுகின்ற, நெடிய – நீட்சிபொருந்திய, கரு – கரிய, கண்ணுய் – கண்களையுடையவளே, யான் – நான், வேல் – வேலையுடைய, வேந்திடத்து – அரசனிடத்தே, விரைவில் – சீக்கிரத்தில், செல்லுமளவும் – போமளவும், நீ – நீ, வருந்தேல்-வருந்தாதே, செல்லின் – போனுல், திகழ் – விளங்காநின்ற, பூண் – ஆபரணத்தையும், வனம் – சந்தனக்கோலத்தையுமுடைய, முலைகள் – முலைகளை, புல்லும் – தழுவுதலைக் குறித்தண்டாகிய, வேட்கை – ஆசையினுலே, வேந்து – அரசனுனவன், தேர் – தேரை, ஊர்ந்து – செலுத்தி, உன்-உனது, நகரம்.- பட்டினத்தில், புகுவான் – வருவான் எ-று.

வேந்துன்னகரம் புகுமளவும் வருந்தாதென்னுது வேல்வேந்திடத்தியான் விரைவிற் செல்லுமளவும் வருந்தே லென்றமையால் கேட்டவளவிலே வருவானென்றதாயிற்று. 123

மடைவாய்த்தவழுஞ்சூற்சங்கம்வனசப்பொகுட்டின்மணியுயிர்ப்பப்
பெடைநாரைகடங்கருவெண்ணுவடைசேர்ந்திடப்பெருமான்பால்
விடைதாவென்னமடவன்னஞ்சிறகர்நீவிவிருப்பிணுடும்
படைவாணெடுங்கட்பசுந்தோகைமுகமனுரைகள்பணித்தனளால்.

இதனுல் அன்னம் விடைபெறுமாறு சொல்லப்படுகின்றது.

இ-ள். மடைவாய் – மடையின்கண், தவழும் – ஊர்கின்ற, சூல் – கருப்பத்தையுடைய, சங்கம் – சங்குகளினவை, வனசம் – தாமரைமலர்களுடைய, பொகுட்டில் – கர்ணிகையில், மணி – முத்துக்களை, உயிர்ப்ப – ஈன்றிட, பெடைநாரைகள் – பெண்ணாரைகளானவை, தம் – தம்முடைய, கருவெண்ணு – முட்டைகளென்னு, அடைசேர் – அவயங்காக்கின்ற, கிடத்தம்-கிடத்தலாகிய தொழிலையுடைய, பெருமான்பால் – அரசன்கட் (செல்ல), விடை-உத்தரவை, மடம் – இளமை பொருந்திய, அன்னம் – அன்னமானது, தாவென்ன – கொடுவென்றுசொல்ல, சிறகர் – (அத) னிறகை, நீவி-தடவி, விருப்பிணுடும் – ஆசையோடும், படைவாள் – வாட்படைபோலும், நெடுங்கண் – நெடிய கண்களையுடைய, பசுந்தோகை – பச்சைமயில் போல்பவள், முகமனுரைகள் – உபசாரவார்த்தைகளை, பணித்தனள் – சொல்லினுள் எ-று.

வனசம்—நீரிற்றோன்றுவது, தாமரை. உபசாரவார்த்தைகளாவன-அன்னத்தினுடைய நற்குணநற்செய்கைகளைப் புகழுஞ்சொற்களும் அதற்குத்தன்வணக்கத்தைக்காட்டுஞ் சொற்களுமாம். 124

இவ்வாறிருந்தநன்மொழிகளியம்புவேலையமுதமூறுஞ்
செவ்வாய்மடந்தைசிறடியின்சுவடுநோக்கிச்சிலதியரு
மைவாணெடுங்கட்டோழியரும்வரக்கண்டயிர்ப்பரிவரென்னு
வெவ்வாய்வடிவேல்வேந்தன்பாலன்னம்விரைவிலகியதே.

இதனால் அன்னஞ் சென்றவாறு சொல்லப்படுகின்றது.

இ-ள். இவ்வாறிருந்த – இவ்விதமாயிருந்த, நன்மொழிகள் - நல்ல வார்த்தைகளை, இயம்புவேலை—சொல்லிமுடித்தசமயத்தில், அமுதம் – அமிர்தமானது, ஊறும் – சுரக்கின்ற, செவ்வாய் – செய்யவாயையுடைய, மடந்தை—தமயந்தியினது, சிறடியின் – சிறியவடிகளதி, சுவடு – சுவட்டை, நோக்கி - பார்த்துக்கொண்டு, சிலதியரும் – தாதிகளும், மை – அஞ்சனம் பொருந்திய, வாள் – வாள்போலும், நெடு – நெடிய, கண் – கண்களையுடைய, தோழியரும்—பாங்கிகளும், வர – (தேடிக்கொண்டு) வர, கண்டு-(அவர்களைப்) பார்த்து, இவர் – இம்மங்கையர், அயிர்ப்பரென்ன – சந்தேகிப்பாரென்று நினைத்து, வெவ்வாய் – வெவ்வியவாயின்கண், வடி – கூர்மையையுடைய, வேல் – வேலையுடைய, வேந்தன்பால் - அரசனிடத்து, அன்னம் – அன்னமானது, விரைவில் – விரைவிலே, எகியது—போயிற்று.

இவ்வாறிருந்தென்றது அன்னத்தின் சிறகு நீவிக்கொண்டிருந்த படியைச் சுட்டிநின்றது. அயிர்த்தல்—இவ்வன்னம் இதுவரைக்கு மிவளிடத்தே தனியாகவிருந்துகொண்டு என்னகாரியத்தைப் பேசியதோவென்று சந்தேகித்தல். 125

அன்னமூரைத்தமொழியமுதமருந்தித்தெவிட்டாவாரமுதக்
கன்னற்குதலையிருகண்ணுங்கருத்துமதன்பின்றொடர்ந்தேதகப்
பொன்னம்பாவைகழற்பெய்தாலென்னவுருகிப்புலம்புகொண்டாங்
கின்னற்கடலின்கரைகாணுதிருந்தாளிருந்தவேலைதனில்.

இதனால் அதன்பின் தமயந்தி நிலை சொல்லப்படுகின்றது.

இ-ள். அன்னம்-அன்னத்தினுல், உரைத்த-சொல்லப்பட்ட, மொழி-சொல்லாகிய, அமுதம்—அமிர்தத்தை, அருந்தி-உட்கொண்டு, தெவிட்டா-வெறுக்காத, ஆர்—உண்டற்கரிய, அமுதம் - அமிர்தமும், கன்னல்—சர்க்கரைபோலும், குதலை - மழலைச் சொற்களையுடையவள், இருகண்ணும்-(தன்) னிருகட்பார்வையும், கருத்தும்—மனமும், அதன்பின்—அவ்வன்னத்தின்பின், தொடர்ந்து—பற்றிக்கொண்டு ஏக—போக, பொன்னம் பாவை—பொன்மயமாகிய பாவையை, தழல்—நெருப்பின் கண், பெய்தாலென்ன—இட்டா (லது) போல, உருகி – கரைந்து, புலம்புகொண்டு—இரங்கி, ஆங்கு—அவ்விடத்து, இன்னல்—துன்பமாகிய, கடலின்—கடலினது,

கரை—கரையை, காணுதி—காணுமல், இருந்தாள்—இருந்தனள், இருந்த வேலேதனில்—(அப்படி) யிருந்த சமயத்தில் எ-று.

அன்னத்தின்வாக்கு அமிர்தம்போல மதுரித்து எவ்வளவு கேட்பினும் போதுமென்னு மனமதியைத் தாராததா யிருக்கையால் அன்னமுரைத்த மொழியமுத மருந்தித்தெவிட்டா வெனப்பட்டது. இன்னல் அன்னத்தால் வளர்க்கப்பட்ட நளனுசையைப் பற்றியுண்டாகிய அன்பம். இன்னற்கட லின் கரைகாணுமை அக்கடலினுட் பட்டிருத்தல். 126

ஆயவெள்ளம்புடையெய்தியனிச்சமலரின்றுதுரைப்பச்
சேயிறமாஞ்சீறடிகள்கன்றச்செங்காலனந்தொடர்ந்து
மேயதென்னமதிகொல்லோமுருகுவிம்மகறவுமிழுந்
தூயமலர்ப்பங்கயப்போதைத்துறந்தெம்மனையிற்புகுந்திருவே.

இதமுத லிரண்டுபோட்டுக்களான் மகளிர்தளர்ச்சியைக்குறித்து வினவுமாறு சொல்லப்படுகின்றது.

இ-ள். ஆயவெள்ளம்—வெள்ளம்போல மங்கையர் கூட்டமானது, புடை—பக்கத்தில், எய்தி—அடைந்து, முருகு—வாசனையானது, விம்ம—பெருக, நறவு—தேனை, உமிழும்—கக்குகின்ற, தூயமலர்—பரிசுத்த மலராகிய, பங்கயப்போதை—தாமரைப்பூவை, துறந்து—விட்டு, எம்மனையில்—எமது வீட்டின்கண், புகும்—வந்த, திருவே—சீதேவியே! அனிச்சமலரின்—அனிச்சப் பூவினது, தாது—மகரந்தமானது, உறைப்ப—உறுத்த, சேயநிறமாம்—சிவப்பு நிறமாகின்ற, சீறடிகள்—சிறியவடிகள், கன்ற—வாட, செங்கால்—செய்ய கால்களையுடைய, அனம்—அன்னத்தை, தொடர்ந்து—(பிடிக்கும்படியாகப்) பின்சென்று, மேயது—(இங்கே) யடைந்ததற்குக் காரணமாயது, என்னமதி—என்ன அறிவு எ-று.

முன்பாட்டிலே இருந்த வேலேதனி லென்றதனோடு ஆயவெள்ளம் புடையெய்தி என்றதைக் கூட்டுக. எய்தியென் வினையெச்சம் பின்வருந்தாது கமழுமென்னும்பாட்டில் என்ன வென்வினைகொண்டது. என்னமதியெனவே நல்லறி வன்றென்றதாயிற்று. 127

அன்னந்தொடருமயர்வதுவோவயலார்விழிபூறடைந்ததுவோ
பன்னும்பொழில்வாய்ப்பலவலகையெதிர்ந்தேதமருட்டப்பயந்ததுபொன்
னங்கிளியேமடமயிலேபுகல்வாய்க்குயிலேபூங்கமல [வோ
மன்னுந்திருமானேயன்னவணங்குவாய்ந்தமரகதமே.

இ-ள். பொன்னங்கிளியே—அழகிய பொற்கிளியே, மடமயிலே-இளமயிலே, புகல்—கூவும், வாய்—வாயையுடைய, குயிலே-குயில்போல்வாளே, பூ—அழகிய, கமலம்—தாமரையில், மன்னும்—நிலேபெற்றிருக்கும், திருமானேயன்ன—இலக்குமிக்கொப்பான, அணங்கு—அழகு, வாய்ந்த—பொருந்திய, மரகதமே—மரகதம் போல்பவளே, அன்னம்—அன்னப் பறவையைப் பற்றி, தொடரும்—தொடர்ந்த, அயர்வதுவோ—வருத்தமோ, அயலார்—

அயலவர்களது, விழியூறு—கண்ணேறு, அடைந்ததுவோ - சேர்ந்ததுவோ, பன்னும் - சொல்லும், பொழில் - சோலையின், வாய் - இடத்து, தல அலகை - பலபேய்கள், எதிர்ந்து - எதிர்ப்பட்டு, மருட்ட - வெருட்ட, பய ந்ததுவோ—பயமடைந்ததுவோ (அம்மேனி) எ-று. 128

மையன் மதவெங்களியானைவீமன்வரத்தால்வருந்திருவே
கையுமுகமுமரிபரந்தகண்ணுமுருகுகொப்புளிக்குஞ்
செய்யகமலமெனவீழுமளிகளோச்சுந்திறத்தாலே
தொய்யிலெழுதுதடமுலைகள்சுமந்தோமேனிதுவண்டதுவே.

இ-ள். மையல் - மயக்கஞ்செய்கின்ற, மதம் - மதத்தாலுண்டாகிய, வெங்களி - வெவ்விய செருக்கையுடைய, யானை - யானையையுடைய, வீமன் - வீமராசனது, வரத்தால் - வரத்தினாலே, வளரும் - (மகளாய்ப்) பிறந்த, திருவே - திருமாதே! கையும் - (உன்கைகளையும்), முகமும் - முகத் தையும், அரி - இரேகையானது, பரந்த - படரப்பெற்ற, கண்ணும் - கண் களையும், முருகு - தேனை, கொப்புளிக்கும் - உமிழ்கின்ற, செய்யகமலமென - செந்தாமரை மலர்களென்று மயங்கி, வீழும் - (வந்து) வீழ்கின்ற, அளிகள் - வண்டுகளை, ஓச்சுந்திறத்தாலே - ஓட்டுஞ் செயலாலோ, தொய்யில் - சந்த னக்கோலத்தை, எழுதை - எழுதப்பெற்ற, தடம் - மலைபோலும், முலைகள் - முலைகளை, சுமந்தோ - தாங்கியோ, மேனி - உடம்பானது, துவண்டது - வாடியது எ-று.

ஒரு தொழிலை யிடைவிடாது செய்வோர்க்கும் அதிபாரஞ் சுமப்போர்க் கும் உடம்பு வாடி யிளைக்குமாதலால் அங்ஙனம் விளவினர். 129

தாதுகமழுமலர்த்திருவேயென்னச்செவிலித்தாயர்பலர்
பூதியணிக்தாங்கயினிநீர்சுழற்றித்தெய்வம்பராய்ப்போற்றிக்
காதன்மயிலைக்கொடுவந்துகடிமாமனையிற்பசுந்தேறற்
சீதமலர்மெல்லணைமீதுசேர்த்தாரவளுஞ்செயலிழந்தாள்.

இதனுல் அவள் மனையிற் சேர்க்கப்பட்டவாறு சொல்லப்படுகின்றது.

இ-ள். தாது - மகரந்தமானது, கமழும் - மணக்கப்பெற்ற, மலர் - தாம ரைப்பூவிலுள்ள, திருவே - திருமாதே! என்ன - என்றுசொல்ல, பலர் - பல ராகிய, செவிலித்தாயர் - வளர்த்த தாய்மாரானவர், பூதி - திருநீற்றை, அணிந்து - (நெற்றியி) லிட்டு, அயினி நீர் - ஆலத்தியை, சுழற்றி - சுற்றி, தெய்வம் - குலதெய்வத்தை, பராய் - பிரார்த்தித்து, போற்றி - துதிசெய்து, காதல் - ஆசையைத்தருகின்ற, மயிலை - மயில்போல்பவளை, கொடுவந்து - கொண்டுவந்து, கடி - காவலையுடைய, மா - பெரிய, மனையில் - மாடத்தின் கண், பசுந்தேறல் - பசியதேனையும், சீதம் - குளிர்ச்சியையுமுடைய, மலர் - மலர்களாலாகிய, மெல் - மெல்லிய, அணைமீது - சயனத்தின்மேல், சேர்த் தார் - கிடத்தினர், அவளும் - அத்தமயக்கியும், செயல் - (தன்) செய்கை களை, இழந்தாள் - இழந்தனள் எ-று.

செவிலித்தாயர் – அவளுக்கு நல்லறிவும் நல்லொழுக்கமுங் கற்பித்து வளர்த்தமாதர்கள். செயலிழத்தல்-உண்ணல்-உடுத்தல்-அணிதல் முதலிய செயல்களை மறத்தலாம். பூதியணிதலும் அயினீர் சுழற்றலும்-அச்சமுதலியவற்றை லுண்டாகியகுற்றங் களைதற்கென்க. * பூதி - ஐசுவரியத்தைக்கொடுப்பது; திருநீறு. அது "பூதியெனப்படுஞ் செல்வவேதுவினல்" எனச் சித்தாந்தசிகாமணியும், "நீடலறுந்தி வினையனைத்து நீற்றுவிடலானீறென்றும் வீடில் வெறுக்கை தருதலினல் விபூதியென்றும்" எனப் பேரூர்ப்புராணமும் கூறுவதனைற் காண்க. சத்தியோசாத முகத்திற்றோன்றிய நந்தையென்னும் பசுவிற்றோன்றிய நீறு விபூதியெனப்படுமென்று பிருகச்சாபாலவுபநிடத முரைக்கின்றது. குலதெய்வம் பரம்பரையாக வழிபடப் பெறுங் கடவுள். பூதியணிதன் முதலிய செய்கைகளானே குலதெய்வம் பரசிவனென்க. 130

ஈங்கிவ்வாறு மயில் வருந்தி யிருப்ப வினவண் டிசைமிழற்றுந், தேங்கொள் பொழில்வாய் முகையவிழ்ந்து செந்தே னிறைக்கு மலர் வாவிப், பாங்க ரமளி மிசைவிரித்த பனிமென் போது கரிய வள, ரோங்கற் றிணிதோள் வயவேந்தை யன்னங் கண்ணுற்று வந்ததால்.

இதனல் அன்னம் அரசனைக் கண்டமை சொல்லப்படுகின்றது.

இ-ள். மயில் - மயில்போல்பவள், ஈங்கு – இக்குண்டினபுரத்தின்கண், இவ்வாறு – இவ்வண்ணமாக வருந்த - (காமநோயால்) வருந்தி, இருப்ப-இருக்க, அன்னம் - அன்னமானது, இனம் – கூட்டமாகிய, வண்டு – வண்டுகளானவை, இசை – இராகத்தை, மிழற்றும் – பாடப்பெற்ற, தேம் – வாசனையை, கொள் – கொண்ட, பொழில்வாய் – சோலையின்கண், முகை-அரும்புகளானவை, அவிழ்ந்து – விரிந்து, செந்தேன் - செய்யதேனினுலே, நிறைக்கும் – நிறைக்கப்பெறுகின்ற, மலர் – மலர்களையுடைய, வாவி-தடாகத்தினது, பாங்கர் - பக்கத்தில், அமளிமிசை – சயனத்தின்மேல், விரித்த – பரப்பப்பட்ட, பனி – குளிர்ச்சிபொருந்திய, மெல் - மெல்லிய, போது - மலர்களும், கரிய – கருகும்படியாக, வளர் – படுத்திருக்கின்ற, ஒங்கல் – மலைபோலும், திணி – திடமுற்ற, தோள் – தோள்களையும், வயம்-வெற்றியையுமுடைய, வேந்தை - நளமகாராசனை, கண்ணுற்று – பார்த்து, உவந்தது – மகிழ்ந்தது எ-று.

பனி மென்போது கரியவள ரெனவே அதிக காமவெப்பங் கொண்டிருந்தபடி சொல்லப்பட்டதாயிற்று. அரசன் காமநோயாற்படும் பாட்டை

* பூதப்பிரேத இராக்கதர்கள் பூதியைக் கண்டமாத்திரையே அலறி ஓடுவாரென்பது "த்ரிபுண்டரதாரணம் த்ருஷ்வாபூதப்ரேதபுரஸ்ஸர" எனவரூஉம் மானவபுராண சுலோகத்தானும், "யோகோராக்ஷசா" எனவரூஉம் மனுஸ்மிருதி வாக்கியத்தானும் கன்குணரப்படுமென்க.

நோக்கி அவன் தான்வருமளவு முயிர்பொறுத் திருந்தமையைக் குறித்து மிழ்தலால் அன்னங் கண்ணுற்று வந்ததென்றார். 131

பொன்னஞ்சிறைபமடவன்னம்போதுமுன்னர்வேல்வேந்து
தன்னந்தனியோதுணையென்னுந்தடங்கண்பொருந்தாதோவென்
மின்னுந்தூதாகியவன்னமீளாதிருந்ததென்னென்னு [னு
மின்னினுருவெளிப்படதோனோக்கிநோக்கிவெய்துயிர்க்கும்.

இதுமுதல் இரண்டு பாட்டுக்களால் அப்போது அரசன் இருப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். வேல் - வேலையுடைய, வேந்து - ராமகாராசனுனவன், பொன் - பொன்மயமாகிய, அம் - அழகிய, சிறைய - சிறகையுடைய, மடம் - இளமைபொருந்திய, அன்னம் - அன்னமானது, போதுமுன்னர் - செல்லுதற்குமுன், தன்னந்தனியோ - தன்னந்தனியாகவிருக்கையோ, துணை யென்னும் - எனக்குத் துணையென்று சொல்லுவான், தடங்கண் - விசாலம் பொருந்திய கண்களையுடையவள், பொருந்தாதோவென்னும் - உடன் படாளோவென்று சொல்லுவான், தூது - தூதாக, ஏகிய - சென்ற, அன் னம் - அன்னமானது, இன்னும் - இதுவரையிலும், மீளாதிருந்தது - திரு ம்பி வராமைக்குக் காரணம், என்னென்னும் - யாதென்றுசொல்லுவான், மின்னின் - மின்னல்போல்பவளது, உருவு - வடிவமானது, வெளிப்படுதல் - வெளியிலே தோன்றுதலை, நோக்கிநோக்கி - பார்த்துப்பார்த்து, வெய் துயிர்க்கும் - சுடுமூச்செறிவான் எ-று.

தனியென்பது சிறப்புப்பற்றித் தன்னந் தனியென வந்தது தடங்கண் சொன்னேக்கத்தால் அஃறிணை முடிபேற்றது. அன்னம் விரைவிலே தானே திரும்பியதாயினும் அரசனுக்குக் கணமும் நெடுங்காலமாகத் தோன் றலால் இன்னுமென்றார். 132

மீண்ட தன்ன மெனவெண்ணி வினவு மொருகாழ் மணிமுத் தம், பூண்ட பொம்மன் முலையென்னே புகன்ற தென்னு மருந்தா மற், காண்டல் செயினுங் கேட்பினுமென் னுள்ள மயக்குங் களி நறவைத், தூண்டல் செய்யா மணிவிளக்கை கொணர்ந்தாய் கொல் லோ வெனச்சோரும்.

இ-ள். அன்னம் - அன்னமானது, மீண்டதென - திரும்பிவந்த தென்று, எண்ணி - நினைத்து, வினவும் - விளுவுவான், மணி - அழகிய, முத்தம் - முத்துகளையுடைய, ஒருகாழ் - ஒருகாத்தை, பூண்ட - மேற் கொண்ட, பொம்மல் - பொலிவுபொருந்திய, முலை - முலைகளையுடையவள், என்னே - என்னசெய்தியையோ, புகன்றது - சொல்லினுள், என்னும் - என்றுசொல்வான், அருந்தாமல் - உண்ணப்படாமல், காண்டல்செயினும் - கண்டாலும், கேட்பினும் - கேட்டாலும், என் - எனது, உள்ளம் - மன த்தை, மயக்கும் - மயக்காகின்ற, களிநறவை - தேன்குழம்பை, தூண்டல்

செய்யா – தூண்டப்படாத, மணிவிளக்கை – இரத்தின தீபத்தை, கொணர்ந்தாய் கொல்லோவென – கொண்டுவந்தாயோவென்று, சோரும் – தளருவான் எ-று.

அருந்தாமற் காண்டல் செயினுங் கேட்பினு மென்னுள்ள மயக்குங்களி நறவையெனவே அருந்துங்கால் உள்ளமயக்குதல் சொல்லவேண்டா வாறு யிற்று, இவ்வாறே "உள்ளங்களித்தலுங் காணமகிழ்தலுங் - கள்ளுக்கில் காமத்திற்குண்டு" என்றமையறிக. மணிவிளக்கெனவே மற்றைத் தீவிளக்குப்போல் மழுங்குதலன்றி யெப்போதும் விளங்குதல் கொள்க. பொம்மன் மூலீ – அன்மொழித்தொகை. என்னும் செய்யுமென்னும் வாய்பாட்டு உயர்திணையாண்பாற் படர்க்கைவினைமுற்று. உண்டாக்கைவினைமுற்று. உண்டாக்கல் உள்ளத்தை மயக்கு மேனைய நறவுபோலாது இந்நறவு (தமயந்தி) காணல் கேட்டல் செய்தவழி மயக்கும் வன்மையுடைய தென்பான் "காண்டல் செயினுங் கேட்பினு மென்னுள்ள மயக்குங்களிநறவை" என்றதாம். 133

திருந்தார்மௌலிமணிவுரிஞ்சித்திகழும்கழற்காற்றேர்வேந்தே
வருந்தேல்வருந்தேனீவேண்டின்வாராதனவுமுளகொல்லோ
முருந்தேர்முறுவன்முகம்பெற்றுவந்தேனெனவுமூர்ச்சைதெளிந்
தருந்தாவமுதமருந்தினன்போற்பலகாற்கேட்குமகமகிழும்.

இதனுள் அன்னஞ் சொல்லுதலும் அரசன் மகிழ்தலும் சொல்லப்படுகின்றது.

இ-ள். திருந்தார் – பகைவருடைய, மௌலி - மகுடத்திலுள்ள, மணி-நவமணிகளை, உரிஞ்சி – தேய்த்து, திகழும் – விளங்காநின்ற, கழல் – வீரக் கழலையுடைய, கால் - பாதத்தையும், தேர் – மகாரதத்தையுமுடைய, வேந்தே – அரசனே! வருந்தேல் வருந்தேல் - வருந்தாதே வருந்தாதே, நீ-(இப்படிப்பட்ட) நீ,வேண்டின் - பெறவிரும்பினால், வாராதனவும் - (உனக்குக்) கிடையாத பொருள்களும், உளகொல் – (உலகத்தில்) உண்டோ,முருந்தேர் – மயிலிறகினடிபோலும், முறுவல் – பற்களையுடைய தமயந்தியின், முகம் – முகத்தை, பெற்று – அடைந்து, வந்தேனெனவும்-வந்தேனென்ற அளவில், அருந்தா - (முன்) உண்ணப்பட்டில்லாத, அமுதம் – தேவாமிர்தத்தை, அருந்தினன்போல் – உண்டவன்போல், மூர்ச்சைதெளிந்து-மூர்ச்சைதீர்ந்து, பலகால் – பலதரம், கேட்கும் – கேட்பான், அகம் - உள்ளத்தின்கண், மகிழும் – களிப்பான் எ-று.

அரசன் தன தொப்பற்ற மனவலிமையை மறந்து வருந்துதலை நோக்குதலால் அதனை நினைப்பித்தற்குத் "திருந்தார் மௌலி மணியுரிஞ்சித் திகழுங்கழற்காலென்னும்" விசேடணங்கொடுத்துக் கூறியது. வருந்தேலென்பது ஆற்றுதற் பொருளிலடுக்கிவந்தது, இதற்கு "இசைகிறையசைநிலை பொருளொடு புணர்தலென – றவைமூன்றென்ப வொருசொல்லடுக்கே" என்பதுவிதி. மேற்சொல்லப்பட்ட மனவலிமையுடையவனுக்கு எண்ணம்

பட்ட பொருள்களியாவும் எளிதிற் கைகூடு மென்றற்கு "நீவேண்டின் வாராதனவுமுளகொல்லோ" என்றது, "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார் திண்ணிய ராகப்பெறின்" என்றாராகலின். அதனுலே அவளுடன் பட்டமை குறிப்பிக்கப்பட்டதாயினும் பின்னும் அதனை நன்றாக அறிவித்தற்கு "முருந்தேர் முறுவன் முகம்பெற்றுவந்தேன்" என்றது. முகம்பெறல் ஒருவர்தஞ்சொல்லை மற்றொருவர் முகத்திருப்பமின்றி விருப்பத்தோடு கேட்டுடன்படப் பெறலாம். 134

அன்னமுரைத்தவின்சொல்லினுவிதாங்கியதனோடு
பின்னுமடவான்பேரழகும்பெருகுதயரும்விளம்பியது
மின்னுமுரைத்தியுரைத்தியெனுக்கேட்டிங்கிவ்வாறிவணிருப்ப
மின்னுண்மருங்குறுயரமுமேல்விளைந்தவாறும்விளம்புவாம்.

இதனுல் அரசனது செய்தியை நிறுத்திப் பின்வருங்
கைக்கிளைப்படல முதலியவற்றுல் தமயந்திக்கு
நேரிட்ட காமநோய்த் துன்பமும் அதுபற்
றிப் பின்னடந்த செய்தியும்
சொல்லப்படுகின்றன.

இ-ள். அன்னம் – அன்னத்தினுல், உரைத்த – சொல்லப்பட்ட, இன்சொல்லின் – இனியசொற்களால், ஆவி - உயிரை, தாங்கி – பொறுத்திருந்து, பின்னும் – (அதற்குப்) பின்னும், மடமான்-இளமைபொருந்திய மான்போல்பவளது, பேரழகும் – பெரியவழகையும், பெருகுதயரும் – (காமத்தாலவளிடத்தே) வளர்கின்ற துன்பத்தையும், விளம்பியதும் – (தன்னைக்குறித்து அவளாற்) சொல்லப்பட்ட செய்தியையும், இன்னும் - இன்னமும், உரைத்தியுரைத்தியெனு – சொல்லு சொல்லென்று, கேட்டு - வினவிக்கொண்டு, அதனோடு – அவ்வன்னத்தோடு, இங்கு-இவ்விடத்தே, இவ்வாறு-இவ்விதமாக, இவன் – இந்நளன், இருப்ப - இருக்கும்போது (உண்டாகிய), மின் - மின்போலும், நுண் – நுண்ணிய, மருங்குல் – இடையையுடைய வளாகிய தமயந்தியினது, தயரமும் – துன்பத்தையும், மேல் – பின்பு,விளைந்தவாறும் - நடந்த செய்தியையும், விளம்புவாம் – (யாம்) சொல்லுவாம்.

அன்னத்தின் சொல்லைக்கேட்டு அரசன் இனி எப்படியும் அவளைப் பெறலாமென்று நிச்சயங்கொண்டு உயிர் பொறுத்திருத்தலால் "அன்னமுரைத்தவின்சொல்லி னுவிதாங்கி" யென்றார். கேட்கப்பட்ட தொருபொருள் தம்மால் விரும்பப்பட்டதா யிருப்பின் அவ்விருப்ப மிகுதியாற் பின்னும் பின்னுங் கேட்பராதலால் பின்னும் "இன்னு முரைத்தியுரைத்தி" யென்றனென்க. அன்றியுங் கேட்குந்தோறுந் தன் காமநோய்க்குமருந்தாய் நிற்றலின், அங்ஙனங் கேட்டானெனினுமாம். 135

அன்னத்தைத் தூதுவிட்டபடல முற்றிற்று.

ஆ செய்யுள் – 278.

* கைக்கிளைப் படலம்.

கைக்கிளை யென்பது ஒருதலைக்காமம் - அது ஆண்பாற் கைக்கிளையும் பெண்பாற் கைக்கிளையும் என இருவகைப்படும். அவற்றுள் இது பெண்பாற் கைக்கிளையாம்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கொங்குவிம்மு கோதையோடு கோதைதாழ வான்முகம்
பங்கயத்தை மற்றொர்பங்கயத்து வைத்தபான்மை போ
லங்கைசேர்த்தி மைக்கணீல வாளிசிந்தை வைகிய
மங்கைமென்மு லைத்தடத்து மாரன்வாளி யேவினான்.

இப்படலத்தில் இதுமுதலிய பாட்டுக்களால் தமயந்தி தந்தையாற் பின்செய்யப்படும் சுயம்வரத்திற்குக் காரணமாக அவள் காமநோயிற் படும்பாடு சொல்லப்படுகின்றது.

இ-ள். கொங்கு – வாசனையானது, விம்மு – விரியப்பெற்ற, கோதை யோடு – பூமாலையோடு, கோதை – கூந்தலானது, தாழ - அவிழ்ந்து தொங் கவும், பங்கயத்தை – ஒரு தாமரைப்பூவை, மற்றொர் பங்கயத்து – மற் றொரு தாமரைப்பூவிலே, வைத்த பான்மைபோல் – வைத்த தன்மை போல், வாள் – ஒளிபொருந்திய, முகம் – முகத்தை, அங்கை – உள்ளங்கை யிலே, சேர்த்தி – வைத்து, மை – மையெழுதப்பெற்ற, கண் - கண்களி லிருந்து, நீலம் - கரிய, ஆலி - நீர்த்துளிகளானவை, சிந்த – உதிரவும், வைகிய – இருக்கின்ற, மங்கை – தமயந்தியினுடைய, மெல்முலைத்தடத்து- மெல்லியமுலைகளிடத்து, மாரன் - மன்மதனானவன், வாளி – பூவம்புகளை, எவினான் - செலுத்தினான் எ-று.

முகமுங்கையுந் தாமரை மலர்போலுதலால் "பங்கயத்தை மற்றொர் பங்கயத்துவைத்த பான்மைபோ" † லென்றார். கண்ணீர்மையைக் கரைத்

---

* கை—ஒருபக்கத்தில், கிளை – உண்டாவது. எனவே ஒருதலைக்காமம். கை – சிறுமை, கிளை - உறவெனப் பொருளுரைப்பாருமுளர் களவியலுட் கூறுஞ் சிறப்பில்லாக் கைக்கிளைபோலன்றி, இது காமஞ்சாலா விளமைய லாம் தமயந்திமாட்டுத் தோன்றியதாகலிற் சிறப்புடைத்தென்க. இது தலைவியின் வேட்கைக்குறிப்புத் தன்மேனிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே தன்காதன் மிகுதியாற் கூறுவதாகலிற் கைக்கிளையாயிற்று.

† "பங்கயத்தை மற்றொர் பங்கயத்துவைத்த பான்மைபோல்" என்றது. "தாமரை மலரிற் றாமரைமலர் உற்பத்தியானமை காணப்படுகின்றது என் னுங் கருத்துள்ள. "குஸ்மோ குஸ்மோற்பத்தி ர்ருஸ்யதே தவத்ருஸ்யதே" என்னுஞ் சுலோகத்தினுங்காண்க.

தக்கொண் டிழிதலின் நீல வாலியெனப்பட்டது. வைகிய வென்பதைச் செய்யிய வென்னும் வினையெச்சமாக்கி இருக்கும்படியாகவெனப் பொருள் கூறினு மமையும் [இப்படலத்துப் பாட்டுக்களெல்லாம் – பெரும்பாலும் ஈற்றுச்சீர் விளச்சீரும், ஏனைச்சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த எழுசீர்க்கழி நெடிலடி நான்குகொண்ட ஆசிரியவிருத்தங்கள்.] 1

செப்புநேர்முலைக்கண்வேனில்வேடொடுத்தசேதமல
ரப்புமாரிகாமவெம்மையெய்யவாற்றலாமையா
லெப்புவிக்குமேவேந்தெழிற்கடற்படிந்துமீண்டுமால்
வெப்புநோயர்நீரின்மூழ்கின்வெம்மையாறுமேகொலாம்.

இ-ள். வேனில் – வசந்தகாலத்திற்குரிய, வேள் – மன்மதனுல், தொடுத்த – எய்யப்பட்ட, தேமலர் – வாசனைபொருந்திய மலராகிய, அப்பு – அம்பாகிய (நீரினது) மாரி – மழையானது, செப்புநேர் – செப்புப்போலும், முலைக்கண் – முலைகளையுடையவளாகிய தமயந்தியிடத்து, காமவெம்மை – காமசுரத்தை, செய்ய – உண்டாக்க, ஆற்றலாமையால் – பொறுக்கமாட்டாமையால், எப்புவிக்கும் – எல்லாத்தேசங்களுக்கும், வேந்து – அரசனுயுள்ளனனது, எழில் – அழகாகிய, கடல் – கடலுள்ளே, படிந்தும் – மூழ்கியும், ஈண்டும் – (அக்காமசுரமானது அவனுக்கு) மிகும், வெப்புநோயர் – சுரவியாதியை யுடையவர், நீரில் – நீரினுள், மூழ்கின் – முழுகினுல், வெம்மை – அச்சுரமானது, ஆறுமேகொல் – தீருமோ எ-று.

"மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம் வல்லொற்றிறுதிக் கிளையெழுத்தாகும்" என்பதனுல் அம்பு அப்பு என விகாரப்பட்டது. அப்பென்பது நீருக்குப் பெயராதலால் அம்பாகிய நீரென இருபொருள் கூறப்பட்டது. மழையிலே நனைந்தவர்களுக்குச் சுரமுண்டாதலால் அப்புமாரி காமவெம்மை செய்யவென்றார். அழகாகிய கடலிலே படிதலாவது அவ்வழகை யிடைவிடாது நினைத்தல். காய்ச்சனெயாளிகள் நீரிலே முழுகினுல் அது பின்னும் அதிகமாக விஷமிப்பது வைத்திய நூலிற் சொல்லப்பட்டபடி அனுபவசித்தமாகலின் வெம்மையாறுமேகொலென்றார். ஈற்றடியின் பொதுப்பொருளால் முன் மூன்றடியின் சிறப்புப் பொருளைச் சாதித்தலால் வேற்றுப்பொருள் வைப்பணியாம். இதற்கு எழிலாகியகடல், அம்பாகிய நீர் என்கிற உருவகங்களும், கடற்படிதலாலே வெப்பந் தீர்தலாகிய விருப்பத்தைப் பெறுமல் அவ்வெப்ப மிகுதலைப் பெறுவதாகிய தகுதியின்மையணியும் அங்கங்கள் ஆதலால் உறுப்புறுப்பிக் கலவையணி. 2

அல்லலுற்றழுங்கும்வாடுமாவிசோருமெல்லிதற்
பல்லவந்தடியுமாறுபாயலிற்படுத்திடு
மொல்லையிற்பதைக்குநெட்டுயிர்ப்புவீங்கும்வார்கழை
வில்லிவாளிதன்னையார்விலக்குவார்கொலென்னுமால்.

இ-ள். அல்லலுற்று – துன்பமுற்று, அழுங்கும் – வருந்துவாள், வாடும்-வாடுவாள், ஆவிசோரும் – உயிர்சோர்வாள், மெல்லிதழ் - மெல்லிய பூவிதழ்களும், பல்லவங்கள் - தளிர்களும், தீயுமாறு - (தன்னுடல் வெட்பத்தாற்) கருகும்படியாக, பாயலில் – சயனத்தின்கண், படுத்திடும் – படுப்பாள், ஒல்லையில் – விரைவில், பதைக்கும் - துடிப்பாள், நெட்டுயிர்ப்பு வீங்கும் – பெருமூச்செறிவாள், வார்கழைவில்லி – நெடிய கருப்புவில்லையுடைய மன்மதனது, வாளிதன்னை - அம்பை, யார் – யாவர், விலக்குவார் - விலக்கவல்லவர், என்னும் – என்றுசொல்லுவாள் எ-று.

ஒன்றற்கொன்று பகையில்லாமையால் ஒருகாலத்திற் கூடத்தக்க அழுங்குதல், வாடல், ஆவிசோர்தல், படுத்திடல், நெட்டுயிர்ப்பு வீங்கல், மன்மதனம்பை யார் விலக்குவாரென்று சொல்லுதல் என்கின்ற பலபொருள்களுக்குக் கூடுதலைச் சொல்லுதலாற் கூட்டவணியாகும். அச்சுரத்தாற் படும் பாடு சொல்லப்பட்டது. 3

மைம்மறந்தநீலவாண்கண்வார்புனற்சொரிந்தியாழ்
கைம்மறந்தகூடலெண்ணிமெல்விரல்கள்கன்றின
பொம்மல்வெம்மூலைத்தடங்கலந்துறந்தபூமறந்
தம்மெலோதிசோர்ந்ததுள்ளமார்வமோடழிந்ததே.

இ-ள். நீலம் – கருங்குவளை மலர்போலும், ஒள் - ஒள்ளிய, கண் – கண்களானவை, வார் – தாரையாயிழிகின்ற, புனல் - நீரை, சொரிந்து – பொழிந்து, மை – அஞ்சனத்தை, மறந்தன, கை – கைகளானவை, யாழ் – வீணை (வாசித்தலை), மறந்த மறந்தன்கூடல் - கூடற் (சுழிகளை), எண்ணி-(தொட்)டெண்ணி, மெல் – மெல்லிய, விரல்கள் – விரல்களானவை, கன்றின – வாடின, பொம்மல் – பொலிவுபொருந்திய, வெம் – விருப்பத்தைத் தருகின்ற, மூலைத்தடம் – மூலைகளினிடங்களானவை, கலம் - ஆபரணங்களை, துறந்த-நீத்தன, அம் – அழகிய, மெல் - மெல்லிய, ஓதி - கூந்தலானது, பூ-மலரை, மறந்து - மறந்து, சோர்ந்தது - தளர்ந்தது, உள்ளம் - நெஞ்சமானது, ஆர்வமோடு - ஆசையோடு கூடி, அழிந்தது – நிலைகெட்டது எ-று.

மறத்தற்கு - ஒழிந்து நிற்றலென்பது கருத்து. கூடல் - ஆகுபெயர். கூடற்சுழியாவது. தலையோடுகடைவந்து கூடுமாயின்தம்மெண்ணங்கைகூடுமென்று குறிபார்த்தற்கு மகளிராற் கண்மூடி விரலாலே நிலத்திலே வலயமாகச் செய்யப்படுவது. அது பலசெய்து அவற்றைக்கூட்டி இத்தனையென்றறிதற்கு விரலாலொவ்வொன்றாகத் தொட்டெண்ணினாளென்க; "ஆழிதிருத்தம் புலியூருடையானருளினளித், தாழிதிருத்த மணற்குன்றினீத்தன் கூர்வருகென், சூழிதிருத்திச் சுழிக்கணக்கோதினையா மலைய, வாழிதிருத்தித் தரக்கிற்றியோவள்ளம் வள்ளலையே" என்னுந் திருக்கோவையார்த் திருவாக்கானுமறிக அவை செய்தற்குப் பொருமற் பலவிரல்களுங் கொள்ளப்பட்டமை தோன்றற்கு விரலென்னாது மென்மையும் பன்மையுங் கூட்டி மெல்விரல்களென்றார். 4

மழைமதர்க்கண்முலைகள்செய்யமார்பினைத்துமென்மைநே
ரிழைபுகப்பெறுதலிம்மியேர்பெறக்கவர்ந்ததாற்
கழைகுழைத்துமாரனெய்தகணையினுள்ளமூடுபோய்
நுழைவதற்கிடம்பெறுதுநொய்துதைத்துமீளுமால்.

இ-ள். மழை – குளிர்ச்சிபொருந்திய, மதர் - செருக்கையுடைய, கண் - கண்களையுடையவளது, முலைகள் – முலைகளானவை, செய்ய – சிவப்பாகிய, மார்பினைத்தும் – மார்பிடமுழுதையும், மென்மைநேர் – மென்மையு நேர்மையும் பொருந்திய, இழை – ஒருநூலும், புக – நுழைதற்கு, பெறுதல் - சந்தில்லையாக, விம்மி - பருத்து, ஏர்பெற - அழகுபெற, கவர்ந்ததால் - வௌவினதால், கழைகருப்பு (வில்லை), குழைத்து - வளைத்து, மாரன் – மன்மதனால், எய்த – செலுத்தப்பட்ட, கணையின் – அம்புகளால், உள்ளம் – நெஞ்சமானது, ஊடுபோய் – உள்ளுடைந்து, நுழைவதற்கு – (அவ்விருமுலைகளுக்கும் நடுவே), புகுந்து – வெளிப்படுதற்கு, இடம்பெறுது – வழிபெறுமல், நொய்து – சிறிது, உதைத்து – (அவற்றினிடையை) யுதைத்து, மீளும் - திரும்பிவிடும் எ-று.

ஓரிடத் தொருவனுக்குப் பகைவன் அம்புகளால் வருத்த மூண்டாம்போது அவ்விடம்விட் டோடிப்போகா திராளுதலின் மார்பினுள்ளே மன்மதபாணம்பட்டு வருந்திய நெஞ்சம் அவ்விடம்விட்டுப் பலமுறையோடி முடிகளினடியை மூட்டித் திரும்பியதென்க. நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்வதை அங்ஙனங்கூறினர். இக்கே அம்புகள் பட்டும், நெஞ்சம் வெளிப்பட்டுப் போகாமைக்கு ஆயுண்மிகுதி யேதுவாயிருப்ப முலைகளின் செறிவை யேதுவாகக் குறித்தமையால் ஏதுத்தற் குறிப்பணி. கணைகளுள்ள மூடுபோய் நுழைவதற் கிடம்பெறுது நொய்துதைத்து மீளுமெனப் பாடங்கூறி முலைநெருக்கத்தால் மார்பிலே நுழையமாட்டாமல் மன்மதபாணஞ் சிறிதுதைத்துத் திரும்பிவிடு மென்று பொருள் கூறுவாருமுண்டு. அது முதனூற்கருத்துக்குச் சிறிதும் ஒவ்வாமற் போவதுமன்றிக் காமநோயை மிகுதியாக வற்றிலளென்னுங் கருத்தை யுட்கொண்டிருத்தலாற் பொருந்தாதென்க. முதனூன் முடிபுக்கு முழுதுமொத் திருக்கவேண்டின் "தழைதலுற்ற காமவெம்மை சார்தலாற் பிளப்புறீஇ – விடைதலுற்ற நெஞ்சகம் வெளிப்படா திருந்ததே" எனப் பாடங்கூறல் வேண்டுமென்க.

சுழித்தகூடல்கூடுறுதுநீர்சொரிந்துநாடொறு
மழித்தகண்கடுயிலும்வேலையணிதயங்குமார்பகத்
திழைத்தவாரமூலதிளைப்பவெய்துபோழ்திலிறைவனை
விழித்துநீரடக்குமாயமென்கொலென்றுமெலியுமால்.

இ-ள். சுழித்த – சுழிக்கப்பட்ட, கூடல் - கூடற் (சுழியானவை), கூடுறுது – கூடாமற்போக, நீர் – நீரை, சொரிந்து – பொழிந்து, நாடொறும் - தினந்தோறும், அழித்த – கெடுத்துக்கொண்டவந்த, கண்கள் - கண்களே,

அயிலும் - தாங்கப்பெறுகின்ற, வேலை - காலத்திலே, அணி - ஆபரணங்களாலே, தயங்கும் - விளங்காநின்ற மார்பகத்து-(என்) மார்பிலுள்ள, இழைத்த-தேய்க்கப்பட்ட, ஆரம் - சந்தனத்தையுடைய, முலை - (என்) முலைகளை, நிழப்ப - தழுவ, எய்துபோழ்தில் - அடைகின்ற சமயத்தில், விழித்து-இமைகளைத் திறந்து, நீர் - நீங்கள், இடைவனை - (என்னுடைய) தலைவனை யானது, என்னென்ன - எத்தன்மைத் தாகுமென்று சொல்லி, மெலியும்-தளர்வாள் எ-று.

• கண்கள் கூடஞ்சுழிகளை யழித்தற் கன்றித் தன் வருத்தத்திற்காகவே நீர்சொரியினும் அந்நீரால் அச்சுழிகள் குலைதல்பற்றிப் பின்னும் வருத்த மிகுதலால் தனக்குத் தீங்குசெய்தன வாகக்கொண்டு அவற்றிற்கு நிந்தை தோன்றச் சுழித்த கூடல் கூடுமது நீர்சொரிந்து நாடொறுமழித்த கண்க ளென்றுரை. தான்காணுதற்குக் கருவியாயுள்ள கண்கள் அவற்றுலன்றித்தா னாகவே காணப்பெற்ற தலைவனைவிழித்து மறைத்தல் பெரியதோர் மாய வித்தையாகலின் மாயமென்னென்றுரை. அன்றித்தான்தலைவனைக்காணுது துயருறும்போது தன்மேலன்புடையனபோன்று அழுது நீர்சொரிந்து அவனைக்கண்டபோது பகையுடையன போன்று விழித்து மறைத்தலின் அங்ஙனங் கூறினுளெனினுமாம், "அஞ்சுங்காற் றுண்மேலராகி விழிக்குங்கா-னெஞ்சத்த ராவர்விரைந்து" என்றவாறே இது உணர்க்கலை. 6

வாட்டடங்கண்மானையாவிவாட்டமாரன்வார்சிலை
பூட்டியெய்தபகழிதைத்தபுழைநுழைந்துதென்றல்போ
யீட்டுகின்றகாமவெந்தழற்பிழம்பையெரியெழ
மூட்டிமேலெழுந்ததாகுநெட்டெயிர்ப்புமுடிவினே.

• இ-ள். நெட்டெயிர்ப்பு - பெருமூச்சானது, மாரன் - மன்மதனுகிய வேடனுனவன், வாள் - வாள்போலும், தடம் - விசாலம் பொருந்திய, கண்-கண்களையுடையவளாகிய, மானை - மானை, ஆவி - உயிரின்கண், வாட்ட-வருத்துதற்கு, வார்சிலை - நெடிய வில்லிலே, பூட்டி - தொடுத்து, எய்த-செலுத்தப்பெற்ற, பகழி - அம்புகளானவை, தைத்த - தைத்தலாலாகிய, புழை-துளைகளில், நுழைந்து-(ஒருவருமறியாமற்) புகுந்து, போய்-சென்று, ஈட்டுகின்ற - (நட்பாகச்) சேர்க்கப்படுகின்ற, காமம் - காமமாகிய, வெம்-வெப்பம்பொருந்திய, தழல் - ஒருருப்பினது, பிழம்பை-செறிவை, எரியெழ-எரிய, மூட்டி - மூள்வித்து, முடிவின் - (அச்செய்கை) முடிவில், மேல்-புறத்தே, எழுந்தது - புறப்பட்டதாகிய, தென் தென்றல் - காற்றே, ஆகும்-ஆகும் எ-று.

மானையென முதற்பொருளில் - ஐயுருபு வந்தமையால் ஆவிக்குக் கண் ணுருபுவிரிக்கப்பட்டது இதற்கு "முதன்முனைவரிற் கண்ணென்வேற்றுமை னைமுன்வருத லெள்ளிதென்ப" என்பது தொல்காப்பியவிதி. தீயிடுவோர் பிறர்றியாமற் கள்ளவழியாற் செல்வராகலின் புழை நுழைந்ததென்க. காற்

றிற்கு நெருப்பு நட்பாதலால் மூட்டியது. நட்பாதல் "எரிசுடு சிகியேயார விறைவன்காற் றினன்சகாயன்" என்பதனாலறிக. அக்காற்றுப் பின்பு தனக்குறிய வழியாகிய மூக்கினூற் புறப்படுதலால் முன் பிறரறியாமற் புழை வழியாற் சென்றமை அனுமிதிக்கப்பட்டது. தமயந்தியை மானுக வருவ கஞ் செய்ததற்கேற்ப மாரனே வேடனுகவருவகஞ் செய்யலாயிற்று. பெரு மூச்சை அப்படிப்பட்ட தென்றலாகக் குறித்தலால் பொருட்டற் குறிப் பணியாம். -7

செயிர்ப்பின் மாரனெய்யவாவியில்லெயுண்டுசிறிதெனு
லயிர்ப்பவாடிவிரகவெம்மையழலின்மூழ்கியஞருறும்
பயிர்ப்பில்கோதைநெஞ்சுளைகள்பரிவினூடுமழலுகெட்
டுயிர்ப்புரைத்தலேதாடுக்கமூற்றதுத்தரீயமேல்.

இ-ள். மாரன் – மன்மதனுனவன், செயிர்ப்பின்-கோபத்தினுல், எய்ய-(அம்புகளைச்) செலுத்த, ஆவி – உயிரானது, இல்லை – இல்லையெனவும், உண்டுசிறிதெனு – சிறிதுண்டெனவும், அயிர்ப்ப – ஐயங்கொள்ள, வாடி-தள ர்ந்து, விரகம் – விரகமாகிய, வெம்மை-வெப்பம்பொருந்திய, அழலின்-நெரு ப்பினுள், மூழ்கி-முழுகி, அளர்-வருத்தத்தை, உறும்-அடைந்த, பயிர்ப்பில்-அருவருப்புக் குணமிழந்திருக்கின்ற, கோதை - மங்கையினது, நெஞ்சுள்-நெஞ்சத்தினுளுண்டாகிய, நோய்கள்-நோய்களை, பரிவினூடும்-இரக்கத்தினு லே, அழலும்-சூடுபொருந்திய, நெட்டுயிர்ப்பு-பெருமூச்சானது, உரைத்தது-சொல்லியதனுல், மேல் – (அந்நெஞ்சத்தின்) மேலிடத்திலுள்ள, உத்தரீயம்-உத்தரீயமானது, நடுக்கம்-நடுக்கத்தை, உற்றதோ – அடைந்ததோ, எ-று. [ஓகாரம் – உற்றதிற் கூட்டப்பட்டது.]

இல்லையோ உண்டோ வென வருகிற ஐயவோகாரங்கள் தொக்கு வந் தன. அஞ்சுமம் என்ற பெயரெச்சவினை நெஞ்சென்னும் வினைமுதற்பெயர் கொண்டது. நெஞ்சென்பது மனத்திற்கும் அம்மனத்திற் கிடமாகிய மார் பிற்கும் பெயராதலால் அவ்வொற்றுமைபற்றி நெஞ்சுணைகளென்றார் "நெஞ்சென்ப மனமார்பின்பேர்" இதனாலறிக. அரசமகளிர் அரையிற் பாவாடையுடுத்து மார்பின்மே லுத்தரீயஞ் சேர்ப்பது வழக்கம். ஒருவரிடத் திற்கு இடையூறு நேரிடக் கண்டோர்க்கு இரக்கமுண்டா மாதலின் பரிவி னூடுமென்றார். தனக்காதாரமாகிய நெஞ்சிற்கு நோயுண்டானமையால் ஆதேயமாகிய உத்தரீயம் அஞ்சி நடுங்கியதென்க. உத்தரீயத்தினது நடுக்கத் திற்கு ஏதுவாகாத பெருமூச்சுரைத்தலே யேதுவாகக் குறித்தலாலும் உரை த்தலாகிய விடயம் இல்லாமையாலும் இப் புலவேதத்தற்குறிப்பணி. பயிர்ப் பில் கோதை காம நோய்களெனவும் பாடமுண்டு. 8

மையரிக்கண்வதனமங்கைவடிவமைந்தசிறடிச்
செய்யபங்கயங்களுண்டுமிழ்ந்தசெய்யகதிர்கெழோ
தொய்யில்வெம்முலைத்தடஞ்சுமந்துகொந்துவாடிய
வையதுண்மருங்குன்மெய்யழன்றெழுந்தவெம்மையே.

இ-ள். தொய்யில் – சந்தனக்கோலத்தினையுடைய வெம் – விருப்பஞ் செய்கின்ற, முலை முலைகளாகிய, தடம் – மலைகளை, சுமந்து-தாங்கி, நொந்து-வருந்தி, வாடிய – இளைத்த, ஐயம் - (உண்டோவில்லையோவென்னும்) சந்தேகத்தைத் தருகின்ற, நுண் – நுண்ணிய, மருங்குல் – இடையையுடைய வளது, மெய் - உடம்பிலிருந்து, அழன்று - சுட்டுக்கொண்டு, எழுந்த-புறப்படுகின்ற, வெம்மை - வெப்பமானது, மை - அஞ்சனத்தையும், அரி-இரேகைகளையும் உடைய, கண் – கண்களும், வதனமும் – முகமும், அங்கை-உள்ளங்கைகளும், வடிவு – அழகால், அமைந்த – நிறைந்த, சிறு - சிறிய, அடி-அடிகளுமாகிய, செய்யபங்கயங்கள் – செந்தாமரை மலர்களாலே, உண்டு-(அதற்குமுன்) உட்கொண்டு, உமிழ்ந்த - (அப்போது) கக்கப்படுகின்ற, செய்ய கதிர்கொல் – சூரிய கிரணமோ எ-று.

செய்ய கதிரெனவே சூரியகிரணமென்பது பெறப்பட்டது. அக்கிரணத்தைத் தங்களுக்கு நாயகனுகிய சூரியனுலே தரப்பட்டதென்கிற விருப்பத்தாலுண்டனவென்க. காம வெம்மையை அப்படிப்பட்ட கிரணமாகக் குறித்தலாலே பொருட்டற் குறிப்பணி. இதற்கு உருவகம் அங்கம். ஆதலால் உறுப்புறுப்பிக் கலவையணி. 9

அலைத்தடங் கணருவிபாய வாரவண்டலழியுமென்
முலைத்தடத்தினூடுதோன்று முகமுநீலவொண்கணுஞ்
சிலைத்தடக்கைமாரன் மாதுசிந்தைமீதழுந்திட
வுலைத்துவிட்டகமலம்வெய்யவுற்பலத்தையொத்தவே.

இ-ள். தட – விசாலம்பொருந்திய, கண்-கண்களிலிருந்து, அலை-அலையையுடைய, அருவி – வெள்ளமானது, பாய - பாய்தலினுலே, ஆரம் - சந்தனத்தினது, வண்டல் - குழம்பானது, அழியும் – அழியப்பெற்ற, மெல்-மெல்லிய, முலைத்தடத்தினூடு - முலைப்பரப்பினுள்ளே, தோன்று – காணப்பட்ட, முகமும்-முகத்தினது (நிழலும்), நீலம் – கருமை பொருந்திய, ஒள்-ஒள்ளிய, கணும் – கண்ணினது (நிழலும்), சிலை – (கருப்பு) வில்லையுடைய, தடம் - பெருமைபொருந்திய, கை – கையையுடைய, மாரன் - மன்மதனுல், மாது - மங்கையினது, சிந்தைமீது – நெஞ்சின் கண், அழுந்திட – அழுந்த, உலைத்து - இழுத்து, விட்ட – விடப்பட்ட, கமலம் - தாமரைப்பூ (அம்பையும்), வெய்ய – கொடிய, உற்பலத்தை - நீலோற் பலப்பூ (அம்பையும்), ஒத்த - ஒத்திருந்தன எ-று.

முகமுங் கண்ணும் அவற்றினியல்களுக்காகலால் ஆகுபெயர்கள். நீலோற்பலங் கொல்லுகின்ற பாணமாதலால் வெய்யவுற்பலமென்றார். "முல்லை கிடைகாட்டி மாதேமுழுநீலங் கொல்லுமத னம்பின்குணம்" என்பதனுலறிக. அவள் தலைவனைத்திருக்கும்போது முகமுங் கண்களும் முலைமேற் பாய்ந்த கண்ணீரிலே பிரதிபிம்பித்தனவென்க. அந்நிழல்களை அப்படிப்பட்ட மன்மதபாணங்களாகக் குறித்தலாற் பொருட்டற்குறிப்பணி. முகத்தையுங் கண்களையும் வைத்த முறையே கமலத்தையு முற்பலத்தையும் வைத்தலால் நிரனிறையணி. இவ்விரண்டுஞ் சேர்தலாற் சேர்வையணி.

வேயைவென்றபசியதோளணங்குகாமவெம்மையாற்
றீயின்மேயதளிரின்வாடியழிதல்கண்டுசிந்தியா
நேயநெஞ்சமழியமைக்கணீரிறைப்பநிலைதளர்ந்
தாயவெள்ளம்விரகவெம்மையாற்றுவான்றுணிந்ததே. 11

இ-ள். ஆயவெள்ளம் – மகளிர்கூட்டமானது, வேயை – மூங்கிலை, வென்ற – சயித்த, பசிய – பசுமைபொருந்திய, தோள் – தோள்களை யுடைய, அணங்கு – தெய்வப்பெண் போல்பவள், காமம் – காமத்தினது, வெம்மையால் – வெப்பத்தால், தீயில் – நெருப்பில், மேய – விழுந்த, தளிரின் – தளிர்போல், வாடி – மெலிந்து, அழிதல் – வருந்துதலை, கண்டு – பார்த்து, சிந்தியா – (இதற்கு நாஞ்செய்யக்கடவதியாதென்று) ஆலோசித்து, நேயம் – அன்பையுடைய, நெஞ்சம் – மனமானது, அழிய – வருந்தவும், மை – மையையுடைய, கண் – கண்களானவை, நீர் – நீரை, இறைப்ப – பொழியவும், நிலை தளர்ந்து – நிலைசோர்ந்து, விரகவெம்மை – விரகத்தாலாகிய (அக்காம) வெப்பத்தை, ஆற்றுவான் – தணிக்கும்படியாக, துணிந்தது – நிச்சயித்தது எ-று.

மதுப்பிலிற்றுசோலைவாயின்மணிதெளித்தநீரதாம்
புதுப்புனற்றடத்திலிந்துகாந்தவேதிகைப்புறத்
ததித்ததிங்கள்வாண்முகத்தணங்கைமாரனுண்கணை
வெதுப்புகின்றதொழிய * வாசமெல்லைக்கிடத்தினர்.

இ-ள். மது – தேனை, பிலிற்று – துளிக்கின்ற, சோலைவாயில் – பொழிலின்கண், மணி – முத்துக்களை, தெளித்த – தெளித்தலாலாகிய, நீரதாம் – குணமுடையது போல்வதாகிய, புது – புதிய, புனல் – நீரையுடைய, தடத்தில் – குளக் (கரை) யில், இந்துகாந்தம் – சந்திரகாந்தத்தாலாகிய, வேதிகைப்புறத்து – மேடையின்மேல், வாசம் – பரிமளம் பொருந்திய, மெல் – மெல்லிய, அணை – (பூ) அணையின்மேல், உதித்த – உதயமாகிய, திங்கள் சந்திரன்போலும், வாள் – காந்திபொருந்திய, முகத்து – முகத்தையுடைய, அணங்கை – தெய்வமாது போல்பவளை, மாரன் – மன்மதனது, ஒள் – ஒள்ளிய, கணை – அம்பானது, வெதுப்புகின்றது – சுடுகின்றது, ஒழிய – நீங்கும்படியாக, கிடத்தினர் – படுக்கவைத்தார்கள் எ-று.

திங்கள் வாண்முகத் தணங்கென்றதனால் திங்கள்போல் விளங்குகிற அவள் முகத்தொளியைச் சேர்ந்து தண்ணீர் சொரிந்து வெட்பமொழிக்கு

* தன் சேவலோடுபுணர்ந்த அன்னப்பேட்டை யப்புணர்ச்சியா னுருகியுதிர்த்த வயிற்றின்மயிரை யெக்காராகப்பெய்த தூவியணைமுதலிய வினைய படுக்கை கூராயினர். என்னை? அவை மேலும் வெம்மையை விளைத்தலாலென்க. இதுவுமன்றி வேனிற்காலத்திற்குரிய அணைபூவணையேயாகலின். பூஞ்சேக்கையாவது – குவளை, செங்கழுநீர், தாமரைமுதலியவற்றின் குளிர்ந்த மலர்களோடு பச்சிலையாதியவுங் கலந்து பரவப்பட்டதாம்.

மென்பதுபற்றிப் பகற்காலத்திலே சந்திரகாந்த மேடையிலே சேர்த்தினு ரென்க. பகலென்பது பின் குரவவிழ்ந்தவென்னும் பாட்டாலறிக: வாச மெல்லணையெனலாற் பூவணையென்பது பெறப்பட்டது. 12

* மலயவெற்புயிர்த்தோர்காதம்வாசநாறுமாரமு
மலிகடற்பிறந்திலங்குமணிகொள்கோவையாரமு
முலையின்வெப்பனீறதாகிமுழுமையும்புதைத்தலாற்
சிலைமதற்குவெருவியீசனுருவெடுத்தல்சிவணுமே.

இ-ள். மலயவெற்பு – பொதியமலையினுல், உயிர்த்து – தரப்பட்டு, ஓர்காதம் – ஒருகாதமளவாக, வாசநாறும் – வாசனைவீசுகின்ற, ஆரமும்-சந்தனமும், அலை – அலைகளையுடைய, கடல் – கடலின்கண், பிறந்து-உண்டாகி, இலங்கு – விளங்காகின்ற, அணி – அழகை, கொள் – கொண்ட, கோவை – வடங்களினுள்ள, ஆரமும் – முத்துக்களும், முலையின் – முலைகளது, வெப்பின் – (காமசர) வெப்பத்தினுல், நீறதாகி – சாம்பலாகி, முழுமையும் – (தமயந்தியின்) உடம்புமுழுதையும், புதைத்தலால் – மறைத்தலால், (தமயந்தியானவள்) சிலை – வில்லையுடைய, மதற்கு – மன்மதனுக்கு, வெருவி – அஞ்சி, ஈசன் – பரமசிவனது, உருவு – வடிவத்தை, எடுத்தல் சிவணும் – எடுத்தவள்போலும் எ-று.

சந்தனமும் முத்தும் முலைகளின்மேலே தரிக்கப்பட்டு அவற்றின் வெப்பத்தால் அவ்விடங்களிலே நீருயினும் அந்நீறு அவள் கிடைபொருந்தாது புரளும்போது சரீரமுழுதும் படிதலால் முலையின் வெப்பினீறதாகி முழுமையும் புதைத்தலாலென்றார். பரமசிவன் முன்னொருகாலத்திலே மன்மதனை யெரித்தலால் தன் வடிவமுழுதுமுள்ள நீற்றைக்காணின் தன்னை அவனென்னு வஞ்சுவானென்று அப்பரமசிவ னுருவெடுத் தாளாகக் கூறினார். எடுத்தலென்னுந் தொழிற்பெயர் ஆகுபெயராய் வினைமுதலுக்காயிற்று. அக்காரணத்தினுலே தமயந்தியை ஈசனுருவெடுத்தாளாகக் குறித்தலால் தற்குறிப்பணி. சிவண - உவம வுருபிடைச்சொல். 13

வளைத்தடக்கைவெம்மைநீரவாரமேல்வளைத்ததிற்
றெளித்தவாசநீர்நிறைத்துமுந்தணிந்தசெவ்வியான்
முளைத்ததிங்கடாரகைக்குலங்களோடுமொய்த்துமா
துளைத்தவேளையார்வமோடுகாணவந்ததொத்தமே.

இ-ள். வளை – வளையல்களையுடைய, தடம் – பெரிய, கை – கைகளையுடையவளது, வெம்மை – (காமசர) வெப்பானது, நீர – நீங்க, ஆரம் – சந்

* பொதிய மலைக்கட்டோன்றிய சந்தனமும் இலங்கைக் கடற்றோன்று முத்தமும் சிறந்தவாதலின் சிலப்பதிகாரத்தினும், பட்டினப்பாலையினுந் தெற்றெனக்காண்க. இச்செய்யுட்கருத்தே "மலயத்தாரமு மணிமுத்தாரமு-மலர்முலையாகத் தடையா தவருந்த" எனவரூஉம் அந்திமாலை சிறப்புச் செய்காதையினுங் கூறப்பட்டதறிக.

தனத்தால், மேல் – (மார்பின்) மேல், வளைத்த – (கரை) கோலி, அதில்-அதனடுவில், தெளித்த – தெளிந்த, வாசநீர் – பனிநீரால், நிறைத்து-நிறைவித்து, முத்த - முத்துக்களை, அணிந்தசெவ்வி – (சுற்றிலும்) அணிந்தமையாலுண்டாகிய அழகானது, மாது – தமயந்தியினது, உளத்து - நெஞ்சிலிருக்கின்ற, வேளை – மன்மதனை, காண - பார்க்க, வான் – ஆகாயத்திலே, முளைத்த - தோன்றுகின்ற, திங்கள் - சந்திரனுனவன், தாரகைக்குலங்களோடு – உடுக்கூட்டங்களுடனே, மொய்த்து – நெருங்கி, வந்தது - (அங்கே) வந்திருத்தலாலுண்டாகிய அழகை, ஒத்தது - நிகர்த்தது எ-று.

திங்கள் - தீம்—இனிமையாகிய, கள் மதுவை (அமிர்தத்தை) உடையது. தாரகை—கடத்தற்குக் கருவியாயுள்ளது. மாலுகிகள் கடலைக்கடத்தற்குத் திசையறிவிக்குங் கருவியாக நிற்றலின் நட்சத்திரங்கட்கு இப்பெயர் போந்ததென்ப. தெளிந்தவென்பது எதுகைநோக்கி வலித்தல் விகாரமாயிற்று. அப்பனிநீர் சந்திரன்போன்றும், அதனைச்சூழ்ந்த முத்துக்கள் சந்திரனைச் சூழ்ந்த உடுக்கள்போன்றும், தோன்றினவென்க. சந்திரன் உடுக்களுக்குத் தலைவனுதலால் தாரகைக் குலங்களோடென்றார். "வீபத்துடுபதியமுதகிரணன்" என்பதனுலுமறிக. சந்திரனுக்கு மன்மத னட்பாளனுதலால் ஆர்வமோடு காணவந்த தென்றார். அவ்வணிந்தவழகை அப்படிச் சந்திரன் வந்தவழகாகக் குறித்தமையால் தற்குறிப்பணியாம். 14

பூசுசாந்தமெய்யினிற்பொருக்கெழுந்துதீந்தன
வீசுமாலவட்டநெஞ்சில்விரகவெம்மைமூட்டின
வாசம்வீசுநெட்டுயிர்ப்பின்மாலைதீந்துவாடின
வாசைநோயின்வெம்மைதன்னையாற்றலாகுமேகொலாம்.

இ-ள். பூசும் – பூசப்பட்ட, சாந்தம் – சந்தனமானது, மெய்யினில்-உடம்பின்கண், பொருக்கு – பொருக்காக, எழுந்து - எழும்பி, தீந்தன - கரிந்தன, வீசும் – வீசப்பட்ட, ஆலவட்டம் – சிவிறிகளானவை, நெஞ்சில்-நெஞ்சிலுள்ள, விரகம் – விரகத்தாலாகிய, வெம்மை - நெருப்பை, மூட்டின-மூள்வித்தன, மாலை – மாலைகளானவை, வாசம் - வாசனையை, வீசும்-வீசுகின்ற, நெட்டுயிர்ப்பின் – பெருமூச்சிலே, தீந்து – கருகி, வாடின – புலர்ந்தன, ஆசைநோயின் - காமநோயினது, வெம்மைதன்னை – வெப்பத்தை, ஆற்றலாகுமேகொல் – (ஒருவரா) லாற்றலாமோ எ-று.

வெம்மையென்னும் பண்புப்பெயர் பண்பிசையாகிய நெருப்பிற்காதலால் ஆகுபெயர். சிவிறியின் காற்றுப்படுந்தோறும் நெருப்பு மூளுதல் போல் இவள் காமமூளுதலால் மூட்டினவென்றார். தமயந்தி பதுமினியாதலால் அவள் மூச்சிற்கு வாசனை சொல்லப்பட்டது. நெட்டுயிர்ப்பின் மாலை தீந்து வாடினவெனவே அப்பெருமூச்சு மிகவும் வெப்பமுடைத்தென்றதாயிற்று. 15

ஐயரிக்கண்மாதின்மெய்யழன்றவெம்மையாற்றலாத்
தொய்யில்வெம்முலைப்புதைத்ததோடவிழ்ந்ததாமரை

15

மையன் மாமதத்தயானைகளன் மணந்திவ்வாறுதன்
கையிஞற்பிடிப்பனென்றுகாட்டுமாறுபோன்றதே.

இ-ள். ஐயரி – பஞ்சவரிகளையுடைய, கண்-கண்களையுடைய, மாதின்-மங்கையினது, மெய்—உடம்பின்கண், அழன்ற—சுடுகின்ற, வெம்மை-(காம) வெப்பத்தை, ஆற்றலா—பொறுக்கமாட்டாமல், * தொய்யில்—சந்தனக் கோலத்தையுடைய, வெம்—விருப்பஞ்செய்கிற, மூலை—மூலைகளை, புதைத்த—சுருங்கியமுக்குகின்றனவும், தோடு - இதழ்களானவை, அவிழ்ந்தவிரியப்பெற்றனவும் ஆகிய, தாமரை – தாமரைமலர்கள், மையல்—மயக்கத்தைத் தருகின்ற, டிரா—பெரிய, மதத்த—மதத்தையுடைய, யானை - யானையையுடைய, நளன்—நளராசனுனவன், மணந்து—(உன்னை) விவாகஞ் செய்து, இவ்வாறு – இவ்வண்ணமாக, தன் – தன்னுடைய, கையிஞல்-கைகளாலே, பிடிப்பனென்று – பற்றுவானென்று, காட்டுமாறுபோன்ற—காட்டுந்தன்மையன போன்றன எ-று.

அத்தாமரை மலர்கள் நளன் கைகள்போன்றும், அம்மலர்களி னிதழ்கள் அக்கைகளின் விரல்கள்போன்றும், இருத்தலால் அவை காமசுரவெப்பத்தால் சுருங்கி மூலைகளையழுத்துதல் கையிஞற் பிடித்தல் போன்றதென்க. வெம்மையாற்றுவானெனவும் பாடமுண்டு. அத்தாமரைகளை அப்படிக் காட்டுவனவாகக் குறித்தலால் பொருட்டற்குறிப்பணி. 16

குரவவிழ்ந்தகோதைவாண்முகங்குளிர்ந்ததிங்களென்
றுருகியிற்றுகாந்தநீருகுப்பவெம்பியுரைசெய்வா
ளிரவுதிங்களென்றுபேர்மறைத்தெழுந்தவிரவியும்
வருதலின்றியிரவிகாந்தமழல்வதென்னவாதிறனே.

இ-ள். அவிழ்ந்த-மலர்ந்த, குரவு – குராமலர்களைக்கொண்ட, கோதை-கூந்தலையுடையவளது, வாள் – காந்திபொருந்திய, முகம்—முகத்தை, குளிர்ந்த—சீதளம்பொருந்திய, திங்களென்று – சந்திரனென்று மயங்கி, இந்துகாந்தம் - (தனக்கிடமாகிய) சந்திரகாந்தமானது, உருகி—உருகி, நீர்-நீரை, உகுப்ப—பொழிய், வெம்பி – வெந்து, இரவு—இரவில், திங்களென்று-சந்திரனென்று சொல்லப்பட்டு, பேர் மறைத்து (சூரியனென்கிற தன்னியற்) பெயரை மறைத்து, எழுந்த – உதயமாகிக்கொண்டிருந்த, இரவியும் - சூரியனும், வருதலின்றி – வாராதிருக்க இரவிகாந்தம் – இச்சூரிய காந்தமானது, அழல்வது-தீயைப்பொழிவது, என்னவாறெனை - என்னகாரணத்தாலென்று, உரைசெய்வாள் – சொல்லுவாளாஞள் எ-று.

---

* மங்கையர் தோள்களில் எழுதியலங்கரிப்பது கரும்பு, வல்லி என்பனவாம். கொங்கைக்கணெழுதுங்கோலம் தொய்யில் என்னு மொன்றேயாம். இவற்றை, "சுரும்புணக்கிடந்த நறும்பூஞ்சேக்கைக்—கரும்பும் வல்லியும் பெருந்தோளெழுதி" என்னுஞ் செய்யுளின் குறிப்புரைக்கண் ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரைத்தவற்றுனுணர்க.

தனது தாபமிகுதிக்குக் காரணமாதல்பற்றிச் சந்திரனைச் சூரியனென்றும், சந்திரகாந்தத்தைச் சூரியகாந்தமென்றும், நீர் பொழிதலைத் தீப்பொழிதலென்றும், கூறினாளென்க. முகத்தைச் சந்திரனென்று மயங்குதலால் மயக்கவணி. பேரென்கிற சொல்லினாலே சந்திரன் சந்திரகாந்தம் இவற்றின் நன்மையை யொழித்தலாலே வஞ்சகவொழிப்பணி. 17

உருவிலானெதிர்ந்து * வெய்யகன்னல்விற்குனித்திட
னருணவொண்ணிறத்தசோகவனலவம்பிறைத்தலும்
புரிநரம்பிரங்குசொல்லிபுருவவிற்குனித்துநேர்
வருணவாளிவிடுதல்போன்மழைக்கணம்பிறைக்குமே.

இதமுத லிரண்டுபாட்டுக்களால் மன்மதன்போர்
சொல்லப்படுகின்றது.

இ-ள். உருவிலான்-மன்மதனனவன், எதிர்ந்து-முன்னுற்று, வெய்ய-கொடிய, கன்னல்வில்-கருப்புவில்லை, குனித்து-வளைத்து, உடன்-உடனே, அருணவொண்ணிறத்து—சிவப்பாகிய வொள்ளிய நிறத்தையுடைய, அசோகம்—அசோகமலர்களாகிய, அனலவம்பு - ஆக்கினேயாத்திரத்தை, இறைத்தலும்—செலுத்தியவளவில், புரி - கட்டையுடைய, நரம்பு—(வீணையினது) தந்தியானது, இரங்கு—இரங்கப்பெறுகின்ற, சொல்லி—சொல்லையுடைய வள், புருவவில்—(தன்) புருவமாகிய வில்லை, குனித்து - வளைத்து, நேர்-(அவ்வாக்கினேயாத்திரத்துக்) கெதிராக, வருணவாளி—வருணத்திரத்தை, விடுதல்போல்—செலுத்துதல்போல், மழை—குளிர்ச்சிபொருந்திய, கண்-கண்களால், அம்பு—நீரை, இறைக்கும் – பொழிவாளாயினள் எ-று.

ஆக்கினேயாத்திரம்—அக்கினியைத் தெய்வமாகக்கொண்டது. வருணத்திரம் வாய்வாத்திரம் என்பவற்றுக்கும் அப்படியே பொருள்கொள்க. அனலையவிப்பது நீராதலாலே ஆக்கினேயாத்திரத்துக்கு எதிர் வருணத்திரம் சொல்லப்பட்டது. அசோகமலராகிய ஆக்கினேயாத்திரந் தாக்கப்பெறுது தமயந்தி கண்ணீர் பொழிதலை அதற்கு எதிர் வருணத்திரஞ் செலுத்துதலாகக் குறித்தலாலே தற்குறிப்பணி. இதன் முதனூலிலே சந்திரன் ஆக்கினேயாத்திரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே நிலாத்தோற்றம் பின்சொல்லப்படுதலால் அது பொருந்தாதாயிற்று. 18

தூயதிங்கள்வெண்குடைக்கருப்புவில்லிதாடுமலர்ச்
சேயதேறல்வருணவாளிமுனிவினிற்செலுத்தலும்

---

* மன்மதனுக்கு வில்கள் மூன்றுள. அவையாவன: — கருப்புவில், பூவில், இருப்புவில், என்பனவாம் அது "கயக்கணின்ற பூவின்மிக்க காமகாண்டங் கன்னலில், வியக்கமான பாரவில்லெடுத்து மொய்ம்பிலேந்தியே, தயக்கமுற்றுலாயசெய்ய தண்ணென் மாவினந் தளிர், வயக்கடுங்கண் வாளமொன்று மாமருங்கு வைத்தரோ" என்னுங் கந்தபுராண திருவிருத்தத்தாலுணரப்படும்.

வேயைவென்றதோளினுள்வெதும்பியுள்ளம்விம்முறு
வாயுவாளிபோலநெட்டுயிர்ப்பெறிந்துவாடுமே.

இ-ள். தூய – பரிசுத்தமாகிய, திங்கள் – சந்திரனுகிய, வெண்குடை – வெள்ளைக்குடையையும், கருப்புவில்லி – கருப்புவில்லையுமுடைய மன்மதனுல், தொடு – தொடப்பட்ட, மலர் – மலர்களது, சேயதேறல் – செந்தேனுகிய, வருணவாளி – வருணத்திரத்தை, முனிவினில் – கோபத்தால், செலுத்தலும் – செலுத்தியவளவில், வேயை – மூங்கிலை, வென்ற – சயித்த, தோளினுள் – தோள்களையுடையவள், வெதும்பி – வெம்பி, உள்ளம் – உள்ளத்தில், விம்முறு – வருந்தி, வாயுவாளிபோல் – வாயுவாஸ்திரத்தைச் (செலுத்துதல்) போல், நெட்டுயிர்ப்பு – பெருமூச்சை, எறிந்து – விட்டு, வாடும் – சோர்வாளானுள் எ-று.

மழையைத் தூப்பது காற்றுதலால் வருணத்திரத்துக்கு வாயுவாத்திரம் பகையாதலறிக. பூந்தேனுகிய வருணத்திரம் பொருமல் தமயந்தி பெருமூச்சுவிடுதலை அதற்கு எதிர்வாயுவாத்திரஞ் செலுத்தலாகக் குறித்தவாலே தற்குறிப்பணி. 19

கூறுமங்கையீருளங்கொதித்துவெம்புகாமநோய்
தேறுகின்றிலீரிதென்கொறேவியைப்பிரிந்ததா
லாறணிந்தும்விரகவெம்மையழல்வெடித்ததன்றுகொ
* னீறணிந்தகடவுளுக்குநெற்றியிற்கணுனதே.

இதுமுதலிரண்டுபாட்டுக்களாலே தமயந்தி காமநோயின்
கொடுமையை மகளிர்க்குங் கூறுமாறு
சொல்லப்படுகின்றது.

இ-ள். கூறு – (என்னிடத்தே குறைவைச்) சொல்லுகின்ற, மங்கையீர் – மாதரே! உளம் – (என்) உள்ளமானது, கொதித்து – கொதிப்புற்று,

---

* ஓர்காலத்திலே உமாதேவியார் சிவபெருமானுடன் திருக்கயிலாய மலைக்கணுள்ள சோலையினிடத்தே வீற்றிருந்தருளினர். அதுகாலை அம்மையார் ஓர் திருவிளையாடலாக எம்பெருமானது இரு திருக்கண்களையுந் தமது திருக்கைகளாற் பொத்தியருள, உலகமெல்லாம் அந்தகாரஞ்செறிந்தது மூடிய ஒருகணப்பொழுது உலகத்திற்கு அளவிறந்த ஊழிக்காலமாதலின் அவையெல்லாம் மயங்கிக்கிடந்தன. இறைவன் அவ்வின்னலை நீக்குவான் திருவுளங் கொண்டு தமது நெற்றியிலே ஓர் விழியை யுண்டாக்கி அதனெளியால் முன்னதுபோற் செய்தனர். இங்ஙனம் ''ஒங்குதன்னுதலினுப்பணெருதனிகாட்டலங்கி – யாங்கதுகொண்டுநாத னருள்கொடுநோக்கியாண்டு – நீங்கருங்கலைமைத்தாகி னின்றபேரிருளைமாற்றித் – தீங்கதிர்முதலானோர்க்குச் சிறந்தபேரொளியை யீந்தான்'' என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தானுணர்க. இவ்வாறுய சரிதத்தை யிங்ஙனம் வேறுகாரணங் கற்பித்துக் கூறினர்.

வெம்பு – வெம்புதற்குக் காரணமாகிய, காமநோய் – காமநோயின் (கொடுமையை), தேறுகின்றிலீர் – அறிகின்றீரில்லை, இது – இது, என் – என்ன பேதைமை, நீறு – விபூதியை, அணிந்த – பூசிய, கடவுளுக்கு – பரமசிவனுக்கு, நெற்றியில் – நெற்றியினிடத்து, கண்ணைனது – (நெருப்புக்) கண்ணனது, தேவியை – (தன்) மனைவியை, பிரிந்ததால் – நீங்கியதால், ஆறு-கங்கையை, அணிந்தும் – (முடியின்மேலே) தரித்தும், வெடித்தது – (அந் நெற்றியைப்) பிளந்து தோன்றியதான, விரகம் – காமமாகிய, வெம்மை-வெப்பத்தையுடைய, அழலன்றுகொல் – நெருப்பன்றோ எ-று.

தேவியை யென்னும் ஐயுருபு நீக்கப்பொருளில் வந்தது. தக்கன் கட்வுளை யிகழ்ந்து வேள்விசெய்தபோது அவன்மகளென்னு முறைபற்றி வந்த தாக்ஷாயணியென்கிற பேரை யொழித்துப் பார்வதியென்கிற பெயரைக் கொள்ள மலையரசனிடத்து வளர்ந்தபோது அவனைப் பிரிந்திருந்தமை கொள்க. தலைமேற் கங்கை யிருக்கவும் காமத்தீ யடங்காமல் உள்ளே பொங்கியெழுந்து நெற்றியளவுஞ் சென்று அக்கங்கைத் தடையா னுச்சியைப் பிளந்து செல்லமாட்டாமல் நெற்றியைப்பிளந்து வெளிப்பட்டதென்க. கடவுளுக்கே அப்படி நேரிட்டதாயின் மெல்லிய வொரு சிறு பெண்பாலாகிய எனக்கு எப்படி யிராதென்றதாயிற்று. கடவுள் காமத்தாற் படும்பாட்டைச் சொல்லித் தண்டாபூபிக கியாயத்தினாலே தான் படும்பாடு தோன்றச் செய்தலாற் செய்யுட் பொருட்பேறணி. 20

பண்ணமைந்தசொலீர்பழிப்பதென்னைமாநிலத்
துண்ணயந்தலைவர்வீயினுயிரையன்னமாதரா
ரெண்ணுகின்றகாமமென்னுமெரியழற்குவெந்தழ
றண்ணிதென்றுசூழ்கியந்தவெம்மையைத்தணிப்பரால்.

இ-ள். பண் – பாட்டிசைபோல், அமைந்த – நிறைந்த, தீ – மதுரம் பொருந்திய, சொலீர் – சொற்களையுடையவரே, பழிப்பது – பழிப்பதற்குக் காரணம், என்னை – யாது, மாநிலத்து – பெரிய பூமியின்கண், உள்-உள்ளத்தில், நயந்த – விரும்பப்பட்ட, தலைவர் – (தங்) கணவரானவர், வீயின் – இறந்துபோனால், உயிரையன்ன – (அக்கணவர்) உயிர்போலும், மாதரார் – மங்கையரானவர், எண்ணுகின்ற – சிந்திக்கப்படுகின்ற, காம மென்னும் – காமமாகிய, எரியழற்கு – நெருப்புக்கு, வெந்தழல் – வெப்பம் பொருந்திய நெருப்பானது, தண்ணிதென்று – குளிர்ச்சியதாயிருக்கின்றதென்று நினைத்து, சூழ்கி – (இந்நெருப்பினுள்ளே) மூழ்கி, அந்த வெம்மையை – அக்காமநெருப்பின் வெப்பத்தை, தணிப்பர் – நீக்குவார்கள் எ-று.

உயிரையன்ன மாதரென்னவே – கற்புடைமகளிரென்றதாயிற்று. வெந்தழ றண்ணிதென்று சூழ்கல் – உடன் கட்டையேறல், அல்லது நீப்பாய்தல். கணவருடனிறந்தவர் வானுலகத்திலே பழையபடியே அவருக்கு மனைவியாயிருந்து காமசுகத்தை யனுபவிப்பரென்பது அறநூலிற் சொல்லப்படுதலாலே அவ்வெம்மையைத் தணிப்பரென்றார். காமநோய் பொறுமை மகளிர்க்கெல்லாம் இயல்பா யிருக்க நீங்கள் பேதமையால் !என்னைப் பழிக்

கின்றீரென்றதாயிற்று. அப்படி மரணமடைதற்கு ஏதுவாகாத அத்தண்ணீ தென்று முழுமூலே யேதுவாகக் குறித்தலால் ஏதுத்தற்குறிப்பணி. 21

என்றுகூறி நுழைநுசுப்பிறுங்கொலென்னவினமணிக்
குன்றுபோலெழுந்துவீங்குகொம்மைவெம்முலைத்தடம்
பொன்றயங்குபசலைபோர்ப்பமம்மர்நோய்பொறுக்கலா
மன்றலோதிதுபருழந்துமதிமயங்குகாலையில்.

இ-ள். என்றுகூறி—என்றுசொல்லி, நுழை - நுண்ணிய, நுசுப்பு-இடையானது, இறுமென்ன—ஒடியுமென, இனம்—இனமாகிய, மணி-மணிகளின் மயமாகிய, குன்றுபோல் — மலைபோல், எழுந்து — உயர்ந்து, வீங்கு—பருத்திருக்கின்ற, கொம்மை—இளமைபொருந்திய, வெம் - வீருப்பத்தைத் தருகின்ற, முலைத்தடம்—முலைகளினிடங்கள், பொன் - பொன் போல், தயங்கு—விளங்காகின்ற, பசலை—பசப்புநிறத்திலை, போர்ப்ப-(தம்மை) மூடிக்கொள்ள, மம்மர்நோய் - காமநோயை, பொறுக்கலா-பொறுமல், மன்றல் - வாசனைபொருந்திய, ஓதி - கூந்தலையுடையவள், துயர் - துன்பத்தில், உழந்து—வருந்தி, மதிமயங்கு—அறிவு கலங்கப் பெறுகின்ற, காலையில்—காலத்திலே எ-று. இப்பாட்டும் பின்பாட்டும் குளகம்.

நையுநுண்மருங்குல்காமவெம்மைபற்றுநாண்மலர்
கையிலங்குவாண்முகங்கருந்தடங்கண்மெல்லடித்
தூயபங்கயத்தொடிற்சுடுங்கொலென்னவெண்ணியோ
வெய்யவன்கரஞ்சுருக்கிவேலைபுக்கொளித்ததே.

இ-ள். நையும்—தேய்கின்ற, நுண் – நுண்ணிய, மருங்குல் - இடையையுடையவளது, காமம் - காமத்தீயினது, வெம்மை—வெப்பத்தை, பற்று-கொண்டிருக்கின்ற, கை—கைகளும், இலங்கு—விளங்காகின்ற, வாள்-ஒளிபொருந்திய, முகம் – முகமும், கரு - கரிய, தடம்—விசாலம் பொருந்திய, கண்—கண்களும், மெல் – மெல்லிய, அடி—அடிகளுமாகிய, நாண் மலர்—அன்றுபூத்த, தூய - பரிசுத்தம் பொருந்திய, பங்கயம் – தாமரை மலர்களே, தொடின் — தொட்டால், சுடுமென்ன — சுடுமென்று, எண்ணியோ - நினைத்தோ, வெய்யவன் – சூரியனது, கரம்—(தன்) கிரணமாகிய கைகளே, சுருக்கி — சுருக்கிக்கொண்டு, வேலை – மேற்கடலுள்ளே, புக்கு – முழுகி, ஒளித்தது – மறைந்தது எ-று.

சூரியன் தாமரைக்கு நாயகனுதலால் அவற்றைத் தொடுதல் அவனுக்குறித்தாயிற்று. சூரியன் எல்லாவற்றுக்கும் வெப்பஞ்செய்பவனு யிருந்தும் தமயந்தியின் காமவெப்பத்துக்கு அஞ்சினனெனவே அவ்வெப்பத்தின் கொடுமைசொல்ல வேண்டாவாயிற்று. கரஞ்சுருக்குதற்கு ஏதுவாகாத அவ் வெண்ணத்தை யேதுவாகக் குறித்தலாலே ஏதுத்தற்குறிப்பணி. 23

கைக்கிளைப்படல முற்றிற்று.

செய்யுள் - 301.

மாலைப் படலம்.

இப்படலத்தால் முன்சொல்லப்பட்ட தமயந்தியின் காமநோய் மிகுதற்குக் காரணமாகிய மாலையின்வரவு சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

ஒற்றையாழியான் படமெனவுறு * பகற்சிறுவன்
கற்றைவார்கதிர்க்கயிற்றினல்விடுதலுங்கதித்து
முற்றுருமூலநெட்டுயிர்ப்பெறிதலான்மொத்துண்
டற்றுவீழ்ந்தபோற்குடதிசைக்கடலுளாழ்ந்ததுவே.

இ-ள். ஒற்றையாழியான் – சூரியனுடைய, படமென (தனக்குக்) காற்றடியாக, உறு – உறப்பெற்ற, பகல் – பகலாகிய, சிறுவன் – சிறியோனவன், கற்றை – திரளாகிய, வார் – நெடிய, கதிர் - கிரணமாகிய, கயிற்றினல் – கயிற்றைக்கொண்டு, விடுதலும் – (ஆகாயத்தின்கண்) விட்டவளவில், கதித்து – கருத்து, முற்றுரு – முற்றுத, மூல – மூலகளையுடைய தமயந்தியானவள், நெட்டுயிர்ப்பு - பெருமூச்சை, எறிதலான் - விடுதலினால், மொத்துண்டு – தாக்குண்டு, அற்று – (அக்கயிறு) அற்று, வீழ்ந்தபோல்-வீழ்ந்ததுபோல, குடதிசை – மேற்குத்திசையிலுள்ள, கடலுள் – சமுத்திரத்தினுள், ஆழ்ந்தது – (அது) மூழ்கிற்று எ-று.

வீழ்ந்தென்பன் வீழ்ந்தவெனத்துவ் விகுதி குறைந்து நின்றது. இதனால் மாலைப்பொழுது வருதற்குக் காரணமும் அப்பொழுது உளதாகுந் தமயந்தி வருத்தமுஞ் சொல்லப்பட்டன. பிரிந்தோரை மாலை வருத்துமென்பது 'காதலரில்வழிமாலை கொலைக்களத் - தேதிலர்போலவரும்' என்பதனு லுணர்க. சூரியனிற் படமும் பகலிற் சிறுவனும் கதிரிற்கயிறும் ஆரோபித்தலால் உருவகவணி. சூரியன் மேற்கடலுள் இயல்பாய் வீழ்தலைக் கதிர்க்கயிறற்று வீழ்வதாகக் குறித்தமையால் முன்னுருவகத்தை யுறுப்பாகக்கொண்ட பொருட்டற் குறிப்பணி. 1

---

* ஒற்றையாழியான் பகற்சிறுவன் என்பன, திங்களுஞ் செல்வன் என்றாற்போலவந்தன. "காலமுலகம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துள் ஞாயிறு, காலம் என்பன உயர்திணை மேலனவாய்ப் பால்பிரிந்திசையாவெனவும், "நின்றுங் கிசைத்த லிவணியல்பின்றே" எனவே நின்றமுறையானே ஈறுபெற்று நின்று உயர்திணையா யிசைத்தல் இவணியல்பின் றென வுங்கூறிய ஆசிரியர் "இசைத்தலுமூரிய வேரிடத்தான்" எனக்காலமுதலாகிய சொல் உயர் திணையா யிசைத்தலு மூரிய; ஈறுதிரிந்து வாய்பாடு வேறுபட்டவழி யென்றாராகலின் உயர்திணையாய் நின்றது. உருவகமென் பாருமுளர்.

புதைத்தகாரிருட்படமொழித்தித்துணைப்போது
முதித்தகீழ்த்திசைமகட்புணர்ந்தாயெனவூடிக்
கொதித்துமேற்றிசையணங்கலத்தகப்பதங்கொடுமே
லுதைத்ததாலெனச்சிவந்ததுவெய்யவனுடலம்.

இ-ள். புதைத்த – மறைத்த, காரிருள் – கரியவிருளாகிய, படம்-போர்வையை, ஒழித்து – களைந்து, இத்துணைப்போதும் – இவ்வளவுகாலமும், உதித்த – (நீ) உதயஞ்செய்யப்பெற்ற, கீழ்த்திசை-கிழக்குத்திக்காகிய, மகள்-மாதை, புணர்ந்தாயென – கூடிக்கொண்டிருந்தாயென்று, மேற்றிசை-மேற்குத்திக்காகிய, அணங்கு – மாதானவள், ஊடி – பிணங்கி, கொதித்து-வெப்பமுற்று, அலத்தகம் – செம்பஞ் சூட்டப்பெற்ற, பதங்கொடு – அடிகளைக்கொண்டு, மேல் – வடிவுத்தின்மேல், உதைத்ததாமென – உதைக்கப் பெற்றது போல், வெய்யவன் - சூரியனது, உடலம் - வடிவம், சிவந்தது – சிவப்பையடைந்தது எ-று.

சூரியனுக்குச் செந்நிறம் இயற்கையாயினும் காலையினு மாலையினும் மிகுந்து தோன்றுமென்க. மாலையிற் சிவத்தற்குக்காரண மேற்றிசை மாதினுடைய அலத்தகப் பதத்துதையெனவே காலையிற் சிவத்தற்குக் கீழ்த்திசைமா துதையாமெனக்கொள்க. தலைவனை டுதெற்குப் பலகாரணங்க ளுளவேனும் பிறமாதரை நயந்தானெனப் பிணங்குவதே மகளிர்க்கு இயல்பாமென்பது தோன்றக் கீழ்த்திசைமகட் புணர்ந்தாயென வூடியென்றார். தாயைப் புணர்ந்தோ னென்பதுதோன்ற உதித்த கீழ்த்திசை மகட்புணர்ந்தாயென்றார். அவனைக்கண்டுழி ஊடுதல் மாத்திரத்தினடங்காது அழற்சினமு மிகுமாதலால் ஊடியென்றெழியாது கொதித்தென்றார். திசைகளை மாதராகச் சொல்லியது உருவகம். சூரியன் அப்போ தடைந்த சிவப்பை அவ்வுதையின் சிவப்பாகக் குறித்தலால் பொருட்டற்குறிப்பணி. 2

* சகரர்தொட்டவெண்டிரையெறிதடங்கடற்புகுதும்
புகரில்வெங்கதிர்க்கடவுண்முன்போக்கியகதிர்க
ணிகரினித்திலங்குளிப்பவனீர்நிலையறிவா
னகனெடுங்கடல்விடுத்தபொற்கழையெனலாமால்.

இ-ள். சகரர் – சகரரென்னப்பட்ட வரசர்களாலே, தொட்ட - தோண்டப்பட்டிருக்கிற, வெள் – வெள்ளிய, திரை – அலைகளை, எறி – வீசுகின்ற,

---

* சகரர் கடலினைத் தோண்டிய சரிதத்தை மேல்வருஞ் செய்யுளாலறிக.

கூர்மபுராணம் இராமனவதரித்த அத்தியாயம் – 46 - செய்யுள்.

தள்ளரும்பெரும்புகழ்ச்சகரர்வாம்பரி
யெள்ளரும்பெரும்புவியெங்குங்காண்கிலார்
பள்ளநீர்வேலையைத்தொட்டுப்பாதலத்
துள்ளுறைகபிலன்மாட்டுறைதல்கண்ணுற்றார்.

தடம்—விசாலம்பொருந்திய, கடல்—கடலின்கண், புகுதும்—புகுகின்ற, புகரில்—குற்றமில்லாத, வெங்கதிர்க் கடவுள்—சூரியதேவனுலே, முன்-முன்னே, போக்கிய—செலுத்தப்பட்ட, கதிர்கள்—கிரணங்களானவை, நிகரில்—ஒப்பில்லாத, மித்திலம்—முத்துக்களைக் (குறித்து), குளிப்பவன்-(அக் கடலிலே) மூழ்குவோன், நீர்நிலை—நீராழத்தை, அறிவான்—அறியும்பொருட்டு, அகல்—விரிந்த, நெடுங்கடல்—நெடியகடலிலே, விடுத்த-விடப்பட்ட, பொற்கழை யெனலாம்—பொன் மூங்கில்களென்று சொல்லலாம்.

சகரவரசனுல் வேள்வியின்பொருட்டு விடப்பட்ட குதிரையை இந்திரன்பற்றிப் பாதாளலோகத்திற் றவஞ்செய்திருந்த கபிலமுனிவன் புறத்தக் கட்டுதல்செய்ய அதைத் தேடும்பொருட்டு அவனுடைய புதல்வராகிய சாகரர் அறுபதினுயிரவராலுந் தோண்டப்பட்டபடியால் சகரர் தொட்ட கடலென்றார். கடலைச் சாகரமென்பதும் இதனுலென வறிக. இரவியின் மூன்செல்லுகின்ற கதிர்களில் நீராழம்பார்க்கும் மூங்கிலை ஆரோபித்தலால் உருவகவணி. 3

மையுண்கண்ணியைமதிவரின்வருத்துமென்றிரங்கி
யையபோகலென்றும்பல்வாய்மலர்ந்தனவாவி
வெய்யவன்செழுங்கரங்களைவிழைவொடுந்தமது
கையினுறப்பிடித்தெனர்குவிந்தனகமலம்.

இ-ள். மையுண்கண்ணியை—அஞ்சனத்தைக்கொண்டகண்களையுடையவளாகிய தமயந்தியை, மதி—சந்திரனைவன், வரின்—வந்தால், வருத்துமென்று—வருத்துவானென்று, இரங்கி—உள்ளிரங்கி, ஐய—சாமி, போகலென்று—(இவளைக் கைவிட்டுப்) போகாதேயென்று (சொல்வனபோல்), வாவி—குளங்களிலே, ஆம்பல்—அல்லிமுகைகள், வாய்மலர்ந்தன—முகமலர்ந்தன, வெய்யவன்—சூரியனது, செழு—செழிய, கரங்களை—(கிரணங்களாகிய) கைகளை, விழைவொடும்-ஆசையோடும், தமது—தம்முடைய, கையினுல்-கைகளால், உற—பொருந்த, பிடித்தென—பிடித்தனபோல, கமலம்—தாமரைமலர்கள், குவிந்தன—கூம்பின எ-று.

வாவியில் ஆம்பல் வாய்மலர்ந்தன தாமரை குவிந்தவெனக் கூட்டுக.

சூரியன் இருத்தல் தன்னுயகன் வாவிற்குத் தடையாயினும் தமயந்தியின் வருத்தத்திற்கிரங்கி யிருக்கவேண்டிக் கொண்டானென்பது தோன்ற ஆம்பல் வாய்மலர்ந்தனவென்றும், தன்னுயகனென்னுஞ் சுதந்தரம்பற்றிக் கையினுற்பிடித்துத் தடுத்தானென்பது தோன்றக் கமலம் பிடித்தனவென்றும், சொல்லினர். மாலைப்பொழுதின் அல்லி தாமரைகட்கு இயல்பாகிய மலர்தலையுங் குவிதலையும் சொல்லுதலும் பிடித்தலுமாகக் குறித்தமையால் பொருட்டற்குறிப்பணி. 4

* பொருவிலாழியொன்றுருட்டியெப்புவனமும்விளக்கு
மிரவிமன்னவனிறத்தலுமெதிர்ந்தபுன்மாலை
பரவைமாநிலமுழுவதும்பரிப்பவனிறப்ப
விரவுவெந்தொழிற்குறுநிலவேந்துபோன்றுளதே.

இ-ள். பொருவில் – ஒப்பில்லாத, ஆழியொன்று – ஒருசக்கரத்தை, உருட்டி – செலுத்தி, எப்புவனம் – எல்லாவுலகங்களையும், விளக்கும் – ஒளிர்விக்கின்ற, இரவிமன்னவன் – சூரியனுகிய அரசன், இறத்தலும் – இறந்த வளவில் (அத்தமித்தவுடனே), எதிர்ந்த – தோன்றிய, புன்மாலை – புல்லிய மாலைக்காலமானது, பரவை – கடலையுடைய, மாநிலமுழுவதும் – பெரிய வுலகமுழுதையும், பரிப்பவன் – காப்பாற்றுகின்ற அரசன், இறப்ப – இறந்துபோக, விரவு – அத்தருணத்திலே வியாபிக்கின்ற, வெந்தொழில் – கொடிய செய்கையையுடைய, குறுநிலவேந்துபோன்றுளது – சிறிய நிலத்தையாளு மரசன்போலிருந்தது எ-று.

"இறப்பே சாமிருதிபோக்காம்" என்றதனால் ஈண்டு சூரியன் இறத்தல் – போதலும் – அரசனிறத்தல், சாதலுமாகப் பொருள்கொள்க. உலகமுழுவதும் புரத்தல்செய்த அரசனீங்கிய வளவிற்றோன்றி ஏழைகளை வருத்துதலால் வெந்தொழிற் குறுநிலவேந்தனென்றும் சூரியனீங்கிச் சந்திரன் றோன்றுதற்கிடையே தோன்றிச் சிறிதுபொழுது நின்றழிவதாதலிற் புன்மாலையென்றும் சொல்லினர். மாலைக்குக் குறுநிலமன்னரை ஒப்புமை சொல்லலால் உவமையணி. 5

காலமென்னுமோர்வணிகன்மேலகன்றவான்கல்லின்
ஞாலநீளிருள்சிப்பவனலங்கொள்பொன்னுக
வேலுமாறுரைத்தெனவொளிர்செக்கர்வானிருண்ட
நீலவார்குழலுயிர்சுடவெழுக்தசெந்நெருப்பே.

இ-ள். காலமென்னு மோர்வணிகன் – காலமாகிய வொருவைசியனுனவன், மேல் – மேலாக, அகன்ற – பரந்த, வான்கல்லின் – ஆகாயமாகிய (உரை) கல்லிலே, ஞாலம் – பூமியினிடத்து, நீளிருள் – மிக்கவிருளை, சிப்பவன் – கெடுப்பவனுகியசூரியனை, நலங்கொள் – நற்குணத்தைக்கொண்ட, பொன்னுக – கனகமாக, ஏலுமாறு – பொருந்துமாறு, உரைத்தென – உரைத்ததுபோல், ஒளிர் – விளங்குகின்ற, செக்கர்வான் – செவ்வானமானது, இருண்ட – இருளுற்ற, நீலம் – நீலநிறம்போருந்திய, வார் – நெடிய, குழல் – கூந்தலையுடைய தமயந்தியினது, உயிர் – ஆவியை, சுட – சுடுதற்பொருட்டு, எழுந்த – தோன்றிய, செந்நெருப்பு – செந்தீயே (ஆம்) எ-று.

---

* "பொருவிலாழியொன்றுருட்டி" என்றது தேருருளைக்கும்; சக்கரத்திற்கும் பொருள் கொள்ளப்படலாற் சிலேடையாம். "விரிகதிர் பரப்பி யுலகமுழுதாண்ட வொருதனித் திகிரியுரவோன்" என்றார் பிறரும். சூரியன் ஓராழியா னேழுலகையு மாண்டு விளக்குவோனெனற் கிங்ஙனுரைத்தார்.

காலத்தில் வணிகனையும் ஆகாயத்தில் உரைகல்லையும் சூரியனிற் பொன்னையும், ஆரோபித்தலால் உருவகவணி. செவ்வானத்திற் பொன்னுரைத்தாலென்னுந் தற்குறிப்பணி மேற்சொல்லிய உருவகவணியை உறுப்பாகக் கொள்ளுதலால் உறுப்புறுப்புக் கலவையணி. செவ்வானத்திற் செந்தீக் குறிக்கப்பட்டமையால் பொருட்டற்குறிப்பணி, இத்னுள் இரண்டணிகள் சேர்ந்து வருதலாற் சேர்வையணி. 6

செய்யவெங்கதிரிறத்தலுமவனுழைச்சிறந்த
மொய்கொள்பேரொளிவனிதைக்குமூட்டுசெந்தழலின்
வெய்யநீரதாய்ப்பரந்துதழுசெக்கர்வான்மெலிந்த
வையதுண்ணிடையணங்கினுக்கென்கொலாயமையும்.

இ-ள். செய்ய – செந்நிறம்பொருந்திய, வெங்கதிர் - சூரியனனவன், இறத்தலும் - இறந்தவளவில், அவனுழை – அவனிடத்தே, சிறந்த – சிறப்புற்றிருந்த, மொய்கொள் – மொய்த்தல் கொண்ட, பேர்-பெரிய, ஒளிவனிதைக்கு – சாயாதேவிக்கு, மூட்டு-மூட்டப்பட்ட, செந்தழலின் – செந்நெருப்புப்போல், வெய்யநீரதாய் – கொடியகுணத்ததாய், பரந்து – விரிந்து, ஒளிர்-விளங்காநின்ற, செக்கர்வான் – செவ்வானமானது, மெலிந்த – காமநோயாலிளைத்த, ஐயம் – ஐயத்துக்கிடமாகிய, நுண்ணிடை – நுண்ணிய இடையையுடைய, அணங்கினுக்கு – தமயந்திக்கு, என்கொலாய் அமையும் - எப்படிப்பட்டதா யிருக்கும் எ-று.

இருவகைப் புணர்ச்சியுள் உள்ளப்புணர்ச்சியின் வழித்தாகிய மெய்யுறு புணர்ச்சி யுற்றோர்க்கு விருப்பின் திண்மை சிறிதொழிந்து நிற்குமாயினுந் தலைவனீங்கிய வளவிலிவர்களும் பொருது சகமனஞ் செய்வரென்பதுதோன்ற ஒளிவனிதைக்கு மூட்டு செந்தழலினென்றார். மருவுகாதலாருயிர் மாய்ந்திடி, லெரியின் மூழ்கியிறந்து படுவதற், கருநெறித்தலைவைக்குமடிக்கடி, புரவி நன்மகப்பேரு பொருந்துவார்'' செக்கர் வானத்தை ஒளிவனிதைக்கு மூட்டு செந்தழலாகக் குறித்தமையாதல் தற்குறிப்பணி. 7

தணத்தலெண்ணிமெய்தளர்வுறுநேமியம்பறவை
புணர்த்தவஞ்சிறைப்புல்லுவிட்டொழியநெட்டுயிர்ப்பாற்
றுணர்த்தமெலவல்வண்டுதளீர்கங்குன்முன்றோன்றிற்
பணைத்தவெம்மூலைப்பாசிழையல்குலென்படுமே.

இ-ள். தணத்தல் – பிரிவை, எண்ணி – நினைத்து, மெய்-உடம்பு, தளர்வுறு – தளர்ச்சியடைகின்ற, நேமியம்பறவை - சக்கரவாகப் பறவைகள், நெட்டுயிர்ப்பால் – பெருமூச்சோடு, புணர்த்த – கலந்த, அம்-அழகிய, சிறை-சிறைகளின், புல்லு – தழுவுதலை, விட்டு – விடுத்து, ஒழிய-நீங்கவும், வண்டு-வண்டுகளானவை, துணர்த்த – கொத்துகளாகப் பூத்த, மெலவல் – மூல்லை மலரிலே, ஊத – ஆரவாரிக்கவும், நீள் – நெடிய, கங்குல்முன்-மாலையானது, தோன்றின் - உதிக்குமாயின், பணைத்த – பருத்த, வெம் – விருப்பஞ்செய்

கின்ற, மூலை—மூலைகளையும், பாசியை—பசியவாபரணத்தைக்கொண்ட, அல்குல்—அல்குலையுமுடைய தமயந்தியானவள், என்படும்—என்படுவாள்.

ஒழிய ஊதலென்னும் வினையெச்சங்கள் தோன்றினென்னும் வினை கொண்டு முடிந்தன. புணர்ந்த புணர்த்தலென எதுகைநோக்கி விகாரமாயிற்று. இடைவிடாமற் கூடுதலுற்ற பகுப்பறிவில்லாத சக்கரவாகப் பறவைகள் பிரியவும் மன்மதனது அம்பாய்ப் பிரிந்தவர்க்குக் கிடைகாட்டும் முல்லைமலரில் வண்டுகளாகிய வின்ஞண்போர்க் குறியாகிய ஒலியைச்செய்யவும் மாலைப்பொழு தண்டாகுமளவில் இவள்படுந்துன்பம் அளவிறந்ததாகலின் என்படுமென்றார். மாலையிற் காமநோய் மிகுமென்பது, காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலருமிந்நோய் என்பதனுற்காண்க. 8

அங்கண்வான கமுழுவ தமவிரொளிபரப்பிக்
கங்குல்வாயிடர்தாரகையெழுந்தனகடலுட்
பொங்குவெங்கதிர்மணிவிழுந்தெனத்திசைபுரப்போ
ரெங்குநாடுதற்கெடுத்தவன்சுடரெனவியையும்.

இ-ள். கங்குல்வாய் — இரவின்கண், அங்கண்—அழகிய விடத்தையுடைய, வானகமுழுவதும்—ஆகாயத்தினிடமெங்கும், அவிர் — விளங்காநின்ற, ஒளி—ஒளியை, பரப்பி—விரித்துக்கொண்டு, எழுந்தன — தோன்றினவையாகிய, அடர்—நெருங்கிய, தாரகை—உடுக்களானவை, கடலுள்-சமுத்திரத்தினுள், பொங்கு—விளங்காநின்ற, வெங்கதிர்-சூரியனுடைய, மணி-மணியானது, விழுந்தென—விழுந்ததென்று, திசைபுரப்போர் - திக்குப்பாலகர், எங்கும்—எவ்விடங்களிலும், நாடுதற்கு—தேடுதற்பொருட்டு, எடுத்தவந்திய, அஞ்சுடரென — அழகிய தீபங்கள்போல், இயையும் — பொருந்தும்.

திக்குப்பாலகரது காப்புப் பெரும்பாலுஞ் சந்திர சூரியர் பொருட்டாதலால் அவருக்குத்தேடல் சொல்லப்பட்டது. கங்குல் வாயடர் தாரகையென்றதால் பகலிற் சூரியனொளியால் மழுங்கி நிற்குமென்க. வெங்கதிர் மணியென்பது உருவகவணி. தாரகைகளில் தீபங்களைக் குறித்தலால் தற்குறிப்பணி. 9

கருத்தினூடெழுகாமமென்கொடுங்கனல்கனற்ற
வருத்தியுற்றவராருயிர்க்குளகிணையயில்வா
ளுருத்துவெங்கதிர்ப்பாகெறிந்துடுப்புகர்முகத்த
விருட்கடாக்களிறிருநிலத்திறுத்ததையன்றே.

இ-ள். உடுப்புகர் - தாரகைகளாகிய புள்ளிகளையுடைய, முகத்த-முகத்தினையுடைய, இருள் கடாக்களிறு — இருளாகிய மதயானை, உருத்து—கோபித்து, வெங்கதிர்ப்பாகு—சூரியனுகியபாகனை, எறிந்து - வீசி, கருத்தினூடு-நெஞ்சினுள், எழு — வளர்கின்ற, காமமென்—காமமென்கிற, கொடுங்கனல்-கொடியதீயானது, கனற்ற—சுடாநிற்க, அருத்தி—ஆசையை, உற்றவர்-பொருந்தினவருடைய, ஆர்-கிறைந்த, உயிர்க்குளகினை-உயிராகியதழையை,

அயில்வான் — உண்ண, இருநிலத்து — பெரிய பூயினிடத்து, இறுத்தது — தங்கியது எ-று.

பாகன் என்பது வேந்து என்னுற்போல நின்றது. ஆருயிர்க்குள கினையில்வானென்பதனால், இருள் பிரிந்தவர்க்கு மரணவேதனையொத்த வேதனையை விளக்குமென்க. குளகு விலங்குண்ணும்தழை. "இலைநுகர்விலங்கினவுளகென்ப." உயிர்குளகையும், வெங்கதிரிற் பாகனையும், உடுவிற் புகரையும், இருளிற் கயிற்றையும் ஆரோபித்தலால் உருவகவணி. 10

தோட்டுமென்மலர்ப்பூங்கணைதுரப்பமெல்லரிகாண்
பூட்டுபைங்கழைகுழைத்ததிர்வேனிலான்புகழைத்
தீட்டுதாரகையெழுத்தெளிசிறந்திடவணிலான்
கூட்டுமையெனச்செறிந்ததுகூரிருட்பிழம்பே.

இ-ள். தோட்டு — இதழ்களையுடைய, மெல் — மெல்லிய, மலர் — பூக்களாகிய, பூங்கணை — அழகியவம்புகளை, துரப்ப — செலுத்த, மெல் - மெல்லிய, அளிநாண் — வண்டுகளாகிய நாரியை, பூட்டு — பூட்டிய, பைங்கழை — பசிய கருப்புவில்லை, குழைத்து — வளைத்து, எதிர் — எதிர்க்கின்ற, வேனிலான் - மன்மதனது, புகழை — கீர்த்தியை, தீட்டு - எழுதப்பட்ட, தாரகை — உடுக்களாகிய, எழுத்து — எழுத்துக்களினது, ஒளிசிறந்திட - ஒளிவிளங்குதற்கு, அணிவான் — அழகிய வாகாயமானது, கூட்டு — கூட்டிய, மையென — மைபோல், கூர் — மிகுந்த, இருள் — இருளினது, பிழம்பு - திரட்சி, செறிந்தது — நெருங்கியது எ-று.

வேனிலானை எழுவாயாக்கி அவன் தனது புகழைத் தீட்டிய தாரகையாகிய எழுத்தொளி சிறந்திட அணிவதற்குக் கூட்டுமையெனப் பொருள் கொள்ளினு மமையும். சித்திரை வைகாசி மாதங்கள் காமத்தை மிகவும் விளக்கும் உரிமை நோக்கி "வேனிலான்" என்றார். தாரகையிலெழுத்தையாரோபித்தலா லுறுவகவணி. இருளின்மையைக் குறித்தலால் தற்குறிப் பணி. இது மூன்றுருவகத்தை யுறுப்பாகக் கொண்டமையாற் கலவையணி.

பட்டகாரிருட்கங்குல்போதரப்படர்திசைக
ளெட்டிலுள்ளனபொருள்தவர்ந்தேதகிலனென்னு
விட்டிலங்கொளிவெய்யவன்றனதுமெல்விரலாற்
சுட்டியெங்கணுங்காட்டல்போற்சுடர்வனசுடர்கள்.

இ-ள். பட்ட — உண்டாகிய, கார் — கரிய, இருள் — இருளையுடைய, கங்குல் - இரவானது, போதர — வர, படர் — பரந்த, திசைகளெட்டின் - எட்டுத்திக்குகளிலும், உள்ளன — இருக்கின்றனவாகிய, பொருள் - பொருள்களை, கவர்ந்து — அபகரித்துக்கொண்டு, எகிலனென்னு — நான் போகவில்லையென்று, ஒளி — காந்தியை, விட்டு - வீசி, இலங்கு — விளங்காநின்ற, வெய்யவன் - சூரியனவன், தனது - தன்னுடைய, மெல்விரலால் — மெல்லியவிரலினுல், சுட்டி - குறித்து, எங்கணும் — எவ்விடங்களிலும், காட்டல்போல் - காட்டுதல்போல், சுடர்கள் — தீபங்கள், சுடர்வன — விளங்குவன எ-று.

பிறர்பொருளைப் பாதுகாப்போர் அவ்விடத்தைவிட்டு நீங்குமிடத்துப் பின்காப்பவர்க்குத் தங்காப்பினுள்ள பொருள்களை யொப்பித்தல் உலக வழக்கமாகலிற் பகலிற்காத்தருளிய னீங்குமிடத்து இரவிற்காக்குஞ் சந்திரன் வருதற்குப் பொழுது நீட்டித்தலால் அவ்வுடைமையைக் காத்தற்குரிய அவன் மனைவியாகிய இராமடந்தைக்கு ஒப்பிக்கு மிடத்துச் சொன்மாத் திரத்தாற் புலப்படாதென்பது தோன்ற வெய்யவன் றனது மெல்விரலாற் சுட்டிக்காட்ட லென்னூர். அம்மாலைக்காலத்திலே உண்டாகிய நீபங்களில் சூரியன்விரலை யாரோபித்தலால் தற்குறிப்பணி. 12

* மாலைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 313.

---

* மாலைக்காலத்தை வியந்த தெற்றுக்கோவெனின், மாவும் புள்ளுந் தினையோடின்புற்று விளையாடுவதனாலும், அதைகண்டு ஒருதலைக் காமமுற் றூர்க்குக் காமக்குறிப்புச் சிறத்தலானும், நீங்குழவிசைத்தல், பந்தர் முல்லை வந்து மணங்கஞற்றல்முதலியன மேன்மேலும் விரகத்தைப் பெருக்கலானு மென்க.

மல்லிகையே வெண்சங்கா வண்தே வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப — மூல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

என்னூர் நளவெண்பாவாரும்.

நிலாத்தோற்று படலம்.

இப்படலத்தால் அம்மாலைக்குப் பின்வரும் நிலவினது தோற்றஞ் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

வெவ்வராவினைவிண்டொடர்மந்தரம்பிணித்துக்
கௌவைமிக்கெழக்கடவுளர்கடைந்திடுங்காலைப்
பௌவவெண்டிரையுயிர்த்தசெம்பதுமைவாண்முகம்போற்
றெய்வவொண்கதிர்பரப்பிமீதெழுந்ததுதிங்கள்.

இ-ள். கடவுளர்—தேவர்கள், வெம்—வெவ்விய, அராவினை—வாசுகியென்னும்பாம்பை, விண்—ஆகாயமுகட்டை, தொடர்-அளாவிய, மந்தரம்-மந்தாமலையின்கண், பிணித்து—கயிறுகக்கட்டி, கௌவை—ஒலியானது, மிக்கெழ—அதிகரிக்க, கடைந்திடுங்காலை—மத்திக்குங்காலத்தில், வெண்டிரை—வெள்ளிய அலைகளையுடைய, பௌவம்-பாற்கடலானது, உயிர்த்தன்ற, செம்பதுமை—செந்தாமரையி லிருக்கின்ற இலக்குமியினது, வாள்-காந்திபொருந்திய, முகம்போல்—முகத்தைப்போல, தெய்வம்—தெய்வத்தன்மையுள்ள, ஒண்கதிர்—ஒளிபொருந்திய கிரணங்களை, பரப்பி-விரித்து, திங்கள்—நிலவானது, மீது—ஆகாயத்தின்கண், எழுந்தது—உதித்தது.

கடவுளரு முடிவுகாலம் அடைந்ததென்று நடுநடுங்கக் கொடிய கடுவை த்தந்ததென்பார் வெவ்வராவென்றும், பெரியமலையென்பார் விண்டொடர் மந்தமென்றும், மற்றையரார் கடைதற்கரிதென்பார் கடவுளர் கடைந்திடு மென்றும், ஒருவர் கருப்பத்திற் றோன்றின ளல்லளென்பார் பௌவவெண் டிரை யுயிர்த்த வென்றும், மாதர்முகத்துக்கு உபமானமாகுமதி இவன்முக த்துக்கு உவமேய மாகுமென்பார் பதுமை வாண்முகம் போலென்றும், நெடுந்தூரத்துற்றும் இருளையோட்டுமென்பார் தெய்வவொண்கதிர் பரப்பி யென்றும், இவ்விடத்தி லுதித்ததென்பார் மீதெழுந்ததென்றும் சொல் லினர்.

திருவின் முகத்தை உபமானமாகவும், சந்திரனை உபமேயமாகவும் சொல்லுதலால் உவமையணி. 1

செறிந்தவாழ்கடற்செல்வனுமவனுழைச்சிறந்தாங்
குறைந்தவாருயிர்த்துணைவியர்பலருமுள்ளுவந்து
நிறைந்தவெண்டிரைநீர்குடைந்தாடலினிகலி
யெறிந்தமென்மலர்ப்பங்கினவெழுந்ததுதிங்கள்.

இ-ள். செறிந்த—மிகுந்த, ஆழ்—ஆழ்ந்த, கடற்செல்வனும்—சமுத்திர ராசனும், அவனுழை-அவனிடத்து, சிறந்து—சிறப்பையடைந்து, ஆங்கு-

அச்சமுத்திரத்தின்கண், உறைந்த – தங்கிய, ஆர் – நிறைந்த, உயிர் – உயிர் போன்ற, தூணெவியர்பலரும் – மனைவியரனைவரும், உள்ளுவந்து-மனமகிழ்ந்து, நிறைந்த – நிறைவையடைந்த, தெண்டிரை-தெளிந்தவலைகளையுடைய, நீர் - நீரில், குடைந்து – குளித்து, ஆடலின் – விளையாடற்கண், இகலி-பகைத்து, எறிந்த – வீசிய, மெல் – மெல்லிய, மலர்பந்தென – பூச்செண்டு போல, திங்கள் – நிலவானது, எழுந்தது – தோன்றிற்று எ-று. இகலியென்பதை வலிந்தெனினுமொக்கும்.

கடல்வேந்த னென்றமையால் அவனுயிர்த் தூணெவியர் நிமாதரெனக் கொள்க. உதயமாகிய சந்திரனிடத்து மலர்ப்பந்தைக் குறித்தமையால் தற்குறிப்பணி. 2

கதிர்செய்நித்திலங்கறங்குதெண்டிரைக்கரத்தெறியு
முதிர்பனிக்கடன்முகட்டினன்முளைத்தொளிர்திங்கள்
விதியின்மாலையாத்தூணெவியைவீங்கிருட்டலைவன்
வதுவையாற்றுவான்வைத்தபொற்குடமெனவயங்கும்.

இ-ள். கதிர்செய் – கிரணத்தைச்செய்கின்ற, நித்திலம் - முத்துக்களை, கறங்கு - ஒலிக்கின்ற, தெண்டிரை – தெளிந்த அலைகளாகிய, கரத்து – கைகளால், எறியும் – வீசுகின்ற, முதிர் – முதிர்ந்த, பனிக்கடல் – குளிர்ச்சியையுடைய கடலினது, முகட்டினில் – உச்சியில், முளைத்து - தோன்றி, ஒளிர் – விளங்காநின்ற, திங்கள் – நிலவானது, விதியின் – விதியினால், மாலையாம் – மாலைக்காலமாகிய, தூணெவியை – மனையாட்டியை, வீங்கு – மிகுந்த, இருள் - இருளாகிய, தலைவன் – நாயகன், வதுவையாற்றுவான் – மணஞ்செய்யும்பொருட்டு, வைத்த – வைக்கப்பெற்ற, பொற்குடமென – பொன்னாலாகிய குடத்தைப்போல், வயங்கும் – விளங்கும் எ-று.

விவாகத்தில் காரணம் பிழைக்கின் மரணந் தருமென்பது அறநூலிற் சொல்லப்பட்ட தாகலின் விதியின்வைத்த பொற்குடமென்றார். மாலைப் பொழுதிற் றூணெவியையும் இருளிற் றலைவனையும் ஆரோபித்தலால் உருவகவணி. சந்திரனிடத்துப் பொற்குடத்தைக் குறித்தலால் தற்குறிப்பணி. இத்தற்குறிப்பு உருவகத்தை அங்கமாகவுடைமையின் உறுப்புறுப்புக் கலவையணி. 3

தெள்ளுதெண்டிரைக்கருங்கடலெழுந்தவெண்டிங்கள்
புள்ளவாங்கணைமதனனைப்பூம்புனலாட்ட
வள்ளிதழ்க்கருங்குவளைபெய்திரவெனுமடந்தை
வெள்ளிவெண்குடமேந்தினளாமெனவிளங்கும்.

இ-ள். தெள்ளு – கொழிக்கின்ற, தெண்டிரை – தெளிந்த அலைகளையுடைய, கருங்கடல் – கரியகடற்கண், எழுந்த – தோன்றிய, வெண்டிங்கள்-வெள்ளிய சந்திரனது, புள் – வண்டுகளானவை, அவாம் – விரும்புகின்ற, கணை - மலர்க்கணைகளையுடைய, மதனனை – மன்மதனுக்கு, பூம்புனல்-

அழகிய நீரிஞலே, ஆட்ட - அபிடேகஞ்செய்ய, இரவெனுமடந்தை - இரவாகிய மடந்தையானவள், வள்இதழ் - கூரிய இதழ்களையுடைய, கருங்குவளை - நீலோற்பலப்பூவை, பெய்து - மேலேசூட்டி, வெள்ளி - வெள்ளியிஞலாகிய, வெண்குடம் - வெள்ளிய குடத்தை, ஏந்தினளாமென - ஏந்திஞளென்று சொல்லும்படியாக, விளங்கும் - (களங்கத்தோடு) விளங்கும்.

புள் - வண்டு, "புள்ளுவண் டவிட்டம்புட்பேர்" என்பதனுலறிக. அவாவும் என்பது அவாமென உகரங் குறைந்தது. இரவு மன்மதனரசுக்குரிய காலமாதலால் பட்டாபிடேக மில்லாமல் அரசு செய்யக்கூடாமையின், புனலாட்ட இரவெனுமடந்தை வெள்ளிவெண்குட மேந்தினளென்ருர். மடந்தையர் அவன்றெழிற்குக் காரணமாகையால் இராமடந்தைக்கு அபிடேகஞ் செய்யும் உயர்வு சொல்லப்பட்டது. இரவெனு மடந்தை யென்றது உருவகவணி. களங்கமென்னும் உவமேயத்தை விட்டுக் கருங்குவளை யென்னும் உவமானமாத்திரத்தைக் கூறுதல் உயர்வுநவிற்சியணி. சந்திரனிடத்திலே வெள்ளிக்குடத்தைக் குறித்தலாற் றற்குறிப்பணி. 4

புலவுநாறுவெஞ்சுறவெறிபொருதிரைமுகட்டி
னிலவுகொப்புளித்துயரியநிகரில்வெண்மதிய
மலகிருராகைமீன்பயிலாரிருட்கடலி
* லுலகமாழ்தலுமெழுந்தபுற்பதமெனவொளிரும்.

இ-ள். புலவுநாறு — புலாஞற்றம் நாறுகின்ற, வெம் - வெவ்விய, சுறவு - சுருமீன்களை, எறி - எறியும், பொரு - கரையின் மோதுகின்ற, திரை - அலைகளையுடைய கடலினது, முகட்டின் - உச்சியில், நிலவு - சந்திரிகையை, கொப்புளித்து - உமிழ்ந்து, உயரிய - எழுந்த, நிகரில் - ஒப்பில்லாத, வெண்மதியம் - வெள்ளியசந்திரஞனது, அலகில் — கணக்கில்லாத, தாரகை — உடுக்களாகிய, மீன் - மீன்களானவை, பயில் - சஞ்சரிக்கின்ற, ஆரிருள் — நிறைந்த வந்தகாரமாகிய, கடலில் - சமுத்திரத்தில், உலகமாழ்தலும் - உலகமுழுகிப்போதலும், எழுந்த - அதிலிருந்து மேலெழுந்த, புற்புதமென - குமிழியைப்போல, ஒளிரும் - விளங்காநிற்கும் எ-று.

வான்மீனில் மீனையும் இருளிற் கடலையும் ஆரோபித்தலால் உருவகவணி. சந்திரனில் நீர்க்குமிழியைக் குறித்தலால் பொருட்டற்குறிப்பணி. இத்தற்குறிப்பு உருவகத்தை அங்கமாக வுடைமையாற் கலவையணி. 5

† திரைகெடுங்கடல்வயிறுளோர்தின்ற வெண்டிங்க
ணிரைசெழுங்கதிர்க்கரங்களாலப்பரீவ

---

* கடலில் உலகமாழ்தல் பிரளயத்தென்க. அதுகாலே விட்டுணுவேதவராகமாகச்சென்று மூழ்கிய உலகை மேலெடுத்து நிறுவுவர் என்று வேதோபப் பிருங்கணமாகிய புராணங்கள் கூறுகிற்கும்.

† "ஓர்க்கோலசங்க மொளிர்பவள மொண்முத்த – நீர்ப்படு மூப்பினெடைந்து" என்று கடற்படும்பொருள் கூறப்படலால் "திரைகெடுங்கடல்" எனச்சிறப்பித்தார். அமிர்தங்கடையுங் காலத்திற் ருேன்றலின் "ஈன்ற வெண்டிங்கள்" எனப்பட்டது. வெண்டிங்கள் என்றது "இனச்சுட்டில்லாப் பண்பு" என்னுந் தொல்காப்பிய விதியினடங்கும்.

விரவுகின்றபுன்மாலையாந்தெரிவையுள்வெள்கி
யருணவெங்கதிர்ச்சுடரினையொளியறவவித்தாள்.

இ-ள். திரை – அலைகளையுடைய, நெடுங்கடல் – நெடிய கடலானது, வயிறலைந்து – வயிறலைந்து, ஈன்ற – பெற்ற, வெண்டிங்கள் – வெள்ளிய சந்திரனவன், நிரை – வரிசையாகிய, செழுங்கதிர் – செழுமையுள்ள கிரணங்களாகிய, கரங்களால் – கைகளால், அம்பரம் – ஆகாயமென்னுந் தனதாடையை, நீவ – தடவ, விரவுகின்ற – கலக்கின்ற, புற் – புல்லிய, மாலையாம் – மாலைக்காலமாகிய, தெரிவை – பெண்ணனவள், உள் – உள்ளத்தில், வெள்கி – நாணி, அருணம் – சிவப்பாகிய, வெங்கதிர் – சூரியனுகிய, சுடரினை – தீபத்தை, ஒளியற – ஒளிகுன்ற, அவித்தாள் – அவித்தனள் எ-று.

அம்பரமென்பது ஆகாயமும் ஆடையும். "அம்பரங்கடல் விண்டோம்" என்பதனுற் காண்க. தினமுங்கலந்து நீங்குந் தன் புருடனையினும் நாணிற்கெடாது என்றும் ஒரு தன்மைத்தாய்ப் பழகுங்குணமுள்ள குலமடந்தைபோல் சந்திரன் கதிர்க்கரங்களால் ஆகாயமாகிய கலையைத் தடவ மாலைமாது நாணந் தலைக்கொண்டு சூரியனுகிய தீபத்தை யவித்தானென்றூர். கதிரிற் கரங்களையும் மாலைப்பொழுதிற் றெரிவையையும் வெங்கதிரிற் சுடரினையும் ஆரோபித்தலால் உருவகவணி. அம்பரமென்றது முன் சொல்லப்பட்ட உருவகம் ஏதுவாகக்கொண்டு அம்பரமென்னும் அம்பரமெனப் பொருள். கொள்ளுதலிற் றொடர்புருவகவணி. 6

குறைவில்வெண்மதிதோன்றமென்குமுதநாண்முகையிற்
சிறகர்வண்டுபாண்முரலனும்முயிரினிற்சிறந்த
விறைவன்வார்திரைக்கடன்முகட்டெழுந்தனனென்ன
வறையவந்ததூதர்கள்சொலிற்றோன்றியதன்றே.

இ-ள். குறைவில் – கலைகணிரம்பிய, வெண்மதி – வெள்ளிய சந்திரனவன், தோன்ற – உதயமாக, மெல் – மெல்லிய, குமுதல் – அல்லிகளுடைய, நாள் – புதிய, முகையில் – அரும்புகளில், சிறகர் – இறகுகளையுடைய, வண்டு – வண்டுகள், பாண் – இசைகளை, முரலல் – ஒலிசெய்தல், நும் – உம்முடைய, உயிரினில் – உயிரைக்காட்டிலும், சிறந்த – சிறந்திருக்கின்ற, இறைவன் – நாயகனனவன், வார் – நெடிய, திரை – அலைகளையுடைய, கடல் – கடலினது, முகட்டு – உச்சியில், எழுந்தனனென்ன – புறப்பட்டானென்று, அறையவந்த – சொல்லவந்த, தூதர் – தூதர்களுடைய, சொல்லில் – சொல்லைப்போல், தோன்றிற்று – தோன்றியது எ-று.

ஒருவர்பால் நாடோறும் பயன்பெற்று வருபவர் தம்மாலடுக்கப்பட்டவர் உயிரிற் சிறந்தபொருளடைவதுதாமுன்னர்த் தெரிந்து அதை அவர்க்கு விரைந்து சொல்லி அவ்வின்பத்தைத் தாமுமடைவர். அதுபோல் என்றும் அல்லிமலரிற் றேனுண்டு வண்டினம் பாடல் அவற்றிற்குத் தலைவன் வரவுகூறுந் தூதர் சொல்லிற் றோன்றிய தென்றூர். எந்தத் தூதுகளினும்

வண்டு தூதிற்குச் சிறந்ததென்பது வண்டுவிடுதூதிற்காண்க. வண்டினிசையிற் றூதர்கள் சொல்லைக் குறித்தமையால் தற்குறிப்பணி. சிறகர் – போலி.

தெண்பனிக்கடற்றிரையினி துயிர்த்தவெண்டிங்க
டண்புனற்றடத்தாம்பன்மெல்லிதழ்த்துகிலைவந்
தொண்கரத்தினுனெகிழ்த்தலுநாணமீதூரக்
கண்புதைத்தனக்குவிந்தனகடிகமழ்கமலம்.

இ-ள். தெள் – தெள்ளிய, பனி – குளிர்ச்சி பொருந்திய, திரை – அலை களையுடைய, கடல் – கடலானது, இனிது – இனிதாக, உயிர்த்த – ஈன்ற, வெண்டிங்கள் – வெள்ளிய சந்திரன், தண் – தண்ணிய, புனல் – நீரையுடைய, தடத்து – தடாகத்திலுள்ள, ஆம்பல் – அல்லியினுடைய, மெல்மெல்லிய, இதழ் – இதழ்களாகிய, துகில் – ஆடையை, �ஃள் – ஒள்ளிய, கரத்தினுல் – கிரணமாகிய கையினுல், தைவந்து – தடவி, நெகிழ்த்தலும் – அவிழ்த்தவளவிலே, கடி – வாசனை, கமழ் – மணக்கின்ற, கமலம் – தாமரை, நாணம் – (அச்செய்கையைக் கண்டுண்டாகிய) நாணம், மீதூர – அதிகரிக்க, கண்புதைத்தென – கண்களை மூடிக்கொண்டனபோல், குவிந்தன – மூடித்தன எ-று.

புலவர் தொன்றுதொட்டுரைக்கு முறைப்படி சந்திரன் அல்லி மனைவியினது இதழ்த்துகிலை நெகிழ்த்தலு மென்றதற்கேற்ப சூரியன் மனைவியாகிய தாமரை குவிதலை நாணிக் கண்களை மூடிக்கொண்டனபோல் மூடித்தன வெனக்கொள்க. இதழ்த்துகிலென்றது உருவகவணி. கரத்தினுல் என்றலிற் கரமாகிய கரமென்று மூன்றுருவக வேதுவாகப் பொருள்கொளல் வேண்டலில் தொடர்புருவகவணி. கமலம் கண்புதைத்தென வென்றல் தற்குறிப்பணியாம். 8.

களிசெய்காமநோய்வினைத்திடும்பிரவெனுங்கன்னி
களிகொள்வெண்மதிநலங்கிளர்வாண்முகமதனுற்
றெளிநிலாக்கதிர்த்தேதறல்கொப்புளித்தலுஞ்சிறந்த
வொளிகொள்வான்மகிழ்பூத்தெனவிளங்கினவுடுக்கள்.

இ-ள். களிசெய் – களிப்பினைச் செய்கின்ற, காமநோய் – காமமாகிய நோயை, வினைத்திடும் – உண்டாக்கும், இரவெனுங்கன்னி – இரவென்னுமங்கையானவள், களிகொள் – குளிர்ச்சியைக்கொண்ட, வெள் – வெள்ளிய, மதி – சந்திரனுகிய, நலங்கிளர் – நன்மை விளங்காகின்ற, வாள் – காந்தி பொருந்திய, முகமதனுல் – முகத்தைக்கொண்டு, தெளி – தெளிந்த, நிலா – ஒளிபொருந்திய, கதிர் – கிரணமாகிய, தேறல் – மதுவை, கொப்புளித்தலும் – உமிழ்தலும், சிறந்த – சிறக்கப்பெற்ற, ஒளிகொள் – ஒளியைக்கொண்ட, வான் – ஆகாயமாகிய, மகிழ் – மகிழமரமானது, பூத்தென – மலர்ந்ததுபோல, உடுக்கள் – தாரைகைகள், விளங்கின – ஒளிசெய்வன.

மாதர் சுவைக்க மிழமர மலர்வதென்பதுபற்றி இரவென்னுங் கன்னி மதிமுகத்தாற் சுவைக்க வான்மகிழிற் பூரகைமலர் பூத்தனவென்றார். இது உருவகத்தை அங்கமாகக்கொண்ட பொருட்டற்குறிப்பணி. 9

நள்ளிருட்குறும்பெறிந்தெழுகளிர்மதிச்செல்வன்
விள்ளுமாம்பல்வாய்க்கங்குலாந்தெரிவையைவேட்ப
வள்ளிவான்மகள்சிதறுவெண்பொரியெனவமைந்த
* புள்ளிமீனினமகலிருவிசும்பினிற்பொடித்த.

இ-ள். அமைந்த – நிறைந்த, புள்ளி – பொறிகளாய, மீனினம் – தாரகைகளுடைய கூட்டங்களானவை, நள் – மிக்க, இருள் – இருளாகிய, குறும்பு - குறுநிலமன்னனை, எறிந்து – அழித்து, எழு – தோன்றிய, நளிர் - குளிர்ச்சிபொருந்திய, மதி – சந்திரனாகிய, செல்வன் - அரசனாகிய குமாரனவன், விள்ளும் – மலர்கின்ற, ஆம்பல் – செவ்வல்லிப்பூவாகிய, வாய் – வாயையுடைய, கங்குலாம் – இரவாகிய, தெரிவையை – மங்கையை, வேட்ப - மணஞ்செய்ய, வான் – ஆகாயமாகிய, மகள் – மாதானவள், அள்ளி – கைகளாலள்ளி, சிதறு-இறைத்த, வெண்பொரியென-வெள்ளிய பொரிகளைப்போல, அகல் – அகன்ற, இருவிசும்பினில் – பெரிய வாகாயத்தின்கண், பொடித்த-தோன்றின எ-று.

மணமுதலிய செய்யும்போது பொரியிறைத்தல் விதியென்பது விவாககற்பத்திற் சொல்லப்பட்டது. இதுவும் அவ்வணி. 10

திங்கள்வேந்துவெண்டாரகைத்துணைவியர்செறிய
வங்கண்வானகத்தெழுதலுமாரமுதுகுக்கும்
பொங்குவெண்கதிர்வெள்ளியம்பிரம்புபார்போர்த்த
துங்கவல்லிருட்குருநிலவேந்தினைத்துரந்த.

இ-ள். திங்கள்-சந்திரனாகிய, வேந்து-அரசனவன், வெண்தாரகை, வெள்ளியவடுக்களாகிய, துணைவியர் – மனைவியர், செறிய – தன்னோடு நெருங்கிவர, அங்கண் – அழகிய இடத்தையுடைய, வானகத்து - ஆகாயத்தின்கண், எழுதலும் - தோன்றியவளவில், ஆர் - நிறைந்த, அமுது - அமிர்தத்தை, உகுக்கும் – சிந்துகின்ற, பொங்கு – மிகுந்த, வெள் - வெள்ளிய, கதிர் – கிரணங்களாகிய, வெள்ளியம்பிரம்பு – வெள்ளியம் பிரம்புகளானவை, பார்-பூமியை, போர்த்த – மூடிய, துங்கம் – உயர்வுள்ள, வல் – வலிய, இருள் - இருளாகிய, குறுநிலவேந்தினை – குறுநிலமன்னனை, துரந்த – துரத்தின எ-று. அம் – சாரியை.

---

* களவெண்பாக்காரர் ஆன புகழேந்திப்புலவர் விண்மீன்மேற்றத்தை "செப்பிளங் கொங்கையீர் திங்கட் சுடர்பட்டுச்-கொப்புளங்கொண்ட குளிர் வாணை-யிப்பொழுதும், மீன்பொதிந்துகின்ற விசும்பென்ப தென்கொலோ-தேன்பொதிந்த வாயாற் றெரிந்து" என வருணித்தனர்.

திங்களைழ அவனது கிரணத்தால் இருளீங்கினதென்பார் கதிர் வெள்ளிப்பிரம்பு இருளைத் துரந்தவென்றார். சந்திரனில் வேந்தனையும் கிரணத்திற் பிரம்பினையும் இருளிற் குறுநிலவேந்தனையும் ஆரோபித்தலால் உருவகவணி. 11

தாழும்வண்டிமிர்தண்மலர்த்தடஞ்சினைத்தருவி
னீழலெங்கணுந்துயல்வருகின்றனநெடுநீ
ராழிவெண்டிரைமுகட்டெழுனவிர்மதிக்கதிர்வாள்
போழும்வல்லிருட்டுணிபலபதைப்பனபோலும்.

இ-ள். வண்டிமிர் — வண்டுகளொலிக்கின்ற, தண் — குளிர்ச்சிபொருந்திய, மலர் — மலர்களையுடைய, தாழும் — தாழ்ந்த, தடம் — விசாலம்பொருந்திய, சினை - கிளைகளையுடைய, தருவின் - மரத்தினுடைய, நீழல் — நிழல்களானவை, எங்கணும் — எவ்விடத்தும், துயல்வருகின்றன — அசைகின்றன, நெடுநீர் — நெடிய நீரையுடைய, ஆழி — கடலினது, வெண்டிரை முகட்டு- வெள்ளிய அலைகளினுடைய உச்சியில், எழும் — தோன்றும், அவிர் — காந்தி பொருந்திய, மதி - சந்திரனெனவன், கதிர்வாள் - கிரணங்களாகிய வாளினாலே, போழும் — பிளக்கப்பட்ட, வல் — வலிய, இருள்-இருளினது, தணி- துண்டங்கள், பல — அனேகம், பதைப்பனபோலும் — பதைப்பனவற்றையொக்கும் எ-று.

தாழுஞ் சினையெனமுடிக்க. நிலவினிற் காற்றினாலலைகின்ற மரத்தினீழல் நிலத்திலசைவதில் வெட்டுபட்டுயிரிறக்கும் இருளின் பதைப்பைக் குறித்தலால் தற்குறிப்பணி. 12

செருவின்மாண்டவரரம்பையர்ச்சேர்குவரன்றே
பொருவில்வெண்மதிபொழிகதிர்வாளினற்போழ்ந்த
விருளுமின்னகிற்கொழும்புகையுருவெடுத்தெழிலசே
ரரமடந்தையர்கருங்குழற்கற்றைசென்றடைந்த.

இ-ள். செருவில் — போரின்கண், மாண்டவர் — இறந்தவர், அரம்பையர் - அரம்பையரை, சேர்குவர் — அடைகுவர், அன்றே — அன்றோ, பொருவில் — பொழிகின்ற, கதிர் — கிரணமாகிய, வாளினால் — கத்தியினால், போழ்ந்த — வெட்டப்பட்ட, இருளும் — அந்தகாரமும், இன்-இனிய, அகில்-அகிற்கட்டைகளினது, கொழும்புகை — கொழுவிய தூமத்தினது, உருவெடுத்து- வடிவெடுத்து, எழில்சேர் — அழகுபொருந்திய, அரமடந்தையர் — தெய்வமங்கையருடைய, கரு — கரிய, குழற்கற்றை - மயிர்முடியை, சென்று - போய், அடைந்த - சேர்ந்தன எ-று.

போர்க்களத்திற் பகைவரோடெதிர்த்து இறந்தவர்கள் தேவருபசரிக்கத் தமக்குரிய அரம்பையரோடு கூடி, வீரசுவர்க்கத்தில் மகிழ்ந்திருப்பாராகையால் அவ்வாறு மதியோடு எதிர்த் திறந்த விருளும் தனக்குரிய அவர் குழற்கற்றையை யடைந்ததென்க. முற்கூறப்பட்ட பொதுப் பொருளிற்

பிற்கூறப்பட்ட சிறப்புப்பொருள் சாதிக்கப்படுதலால் வேற்றுப்பொருள் வைப்பணி. 13

களிகொள்வண்டினமாம்பல்சேர்ந்திசைபயில்காட்சி
யொளிரும்வெண்மதிதுரத்தலுமுடைந்தகாரிருள்போ
யளியின்மெல்லுருவெடுத்தவனருந்துணைவியர்பா
லெளிமையின்னுரையிரங்கிவீழ்ந்திசைப்பனவியையும்.

இ-ள். களிகொள் — மகிழ்ச்சியைக்கொண்ட, வண்டினம் – வண்டுக் கூட்டங்கள், ஆம்பல் சேர்ந்து - அல்லிமலர்களேயடுத்து, இசைபயில் — இராகத்தைப் பாடுகின்ற, காட்சி – தோற்றமான து, ஒளிரும் - விளங்காநின்ற, வெண்மதி — வெள்ளிய சந்திரனவன், துரத்தலும் – துரத்தியவளவிலே, உடைந்த - சிதைந்த, காரிருள் – கரிய விருளான து, போய் – (தன்னுருவ) நீங்கி, அளியின் – வண்டுகளுடைய, மெல்லுருவெடுத்து – மெல்லிய வுருவங் கொண்டு, அவன் – அச்சந்திரனுடைய, அரு - அருமையாகிய, துணைவியர் பால் – மனைவியரிடத்து, எளிமை - எளிமையாகிய, இன்னுரை – இனிய சொற்களே, இரங்கி – புலம்பி, வீழ்ந்து – அடிபணிந்து, இசைப்பனவியை யும் – சொல்வனவற்றை யொக்கும் எ-று.

ஒருவரா லிடுக்கணுற்றவர் தங்குறை முடித்தற்கு நினைத்து அவன் நட் பாளர்முதலியோரினும் அவனுயிர்த்துணைவியரை யடுத்து எளிதின் முடிப்ப ரென்பது தோன்ற அவனருந் துணைவியர்பா லெளிமை யின்னுரையிரங்கி வீழ்ந்திசைப்பன வியையு மென்றார். வண்டினிசையும் இருளின் வேண்டு கோளாகக் குறித்தலால் தற்குறிப்பணி. 14

மூள்ளரைச்செழுமுளரியுமுருகுகொப்புளிக்கு
மள்ளலங்கயத்தாம்பலுமுறவெனவறிந்தேந்
கள்ளுலாமலர்முகிழ்த்தவக்கடிமலர்க்கமலப்
பிள்ளைவண்டினுக்கூறுதேன்பெரிதளித்ததனால்.

இ-ள். கள்ளுலாம்-தேனெழுகுகின்ற, மலர்-அல்லிப்பூவான து, முகிழ் த்த-குவித்த, அக்கடிமலர்க்கமலம்-அப்படிப்பட்டவாசனை யுள்ளதாமரைமலரி னது, பிள்ளைவண்டினுக்கு - பிள்ளையாகிய வண்டுக்கு, ஊறு - சுரக்கின்ற, தேன் – தேனை, பெரிது – மிகவும், அளித்ததனால் – கொடுத்ததனால், அள் ளல் - சேற்றையுடைய, அம் - அழகிய, கயத்து – தடாகத்திலுள்ள, மூள்- மூட்களையுடைய, அரை – தாளையுடைய, செழு—செழிய, முளரியும்- தாமரைப்பூவும், முருகு - தேனை, கொப்புளிக்கும் – உமிழ்கின்ற, ஆம்பலும்- அல்லிப்பூவும், உறவென – தம்முளுறவுடையன வென்று, (நாம்) அறிந் தேம் – அறிந்துகொண்டோம் எ-று.

தாமரையின் பிள்ளையாகிய வண்டினுக்கு அல்லி தேனைக்கொடுத்தலால் மலர்கின்ற காலவேற்றுமைபற்றிப் புறத்தே பகையுடையனபோலத் தோன் றினும் அகத்தே நட்புடையன வென்பார் உறவென வறிந்தேமென்றார்.

மூளரியும் ஆம்பலும் உறவெனவறிந்தே மென்றது தற்குறிப்பணி. இவ் வாக்கியப்பொருள் கமலப் பிள்ளைவண்டினுக்கு அல்லிதேனளித்ததென் னும் பின் வாக்கியப் பொருளாற் சாதிக்கப்படுதலாற் செய்யுட்குறிப்பணி.

கங்குலெய்தியகாரிருட்கருங்கடலெளிய
திங்களென்சுடர்த்தேற்றினுற்றேற்றலுஞ்சிறந்து
பொங்குவெண்ணிலாத்தெளிந்தநன்னீரெனப்பொலிந்த
பங்கமென்னரீடருநிழல்படியினிற்படிந்த.

இ-ள். கங்குல் – இரவில், எய்திய – அடைந்த, கார் – கரிய, இருள்- இருளாகிய, கருங்கடல் – கரியகடலானது, தெளிய – கலக்கந்தீர, திங்க ளென் – சந்திரனென்னும், சுடர் – காந்தியையுடைய, தேற்றினுல் – தேற் றும்வித்தினுலே, தேற்றலும் – உரைத்துத் தெளிவித்த வளவில், சிறந்து- சிறப்புப்பெற்று, பொங்கு – விளங்குகின்ற, வெண்ணிலா – வெள்ளிய சந் திரிகைகள், தெளிந்த – தெளிவையடைந்த, நன்னீரென – நல்லநீர்போல், பொலிந்த – பொலிவையடைந்தன, நீள் – நெடிய, தருநிழல் – மரங்க ளுடைய நிழல்களானவை, படியினில் – பூமியின்மேல், பங்கமென்ன- சேறுபோல், படிந்த – படிந்தன எ-று.

இருளிற் கடலையும், திங்களில் தேற்றுவித்தையும் ஆரோபித்தலால் உருவகவணி. நிலா நன்னீரென, தருநிழல் பங்கமென்ன என்றலால் உவ மையணி. 16

அகல்விசும்பெனுமாவின்மென்மடியெனத்தோன்றித்
திகழும்வெண்மதியுமிழ்தருசெழுங்கதிர்த்தீம்பான்
முகைநெகிழ்ந்துதேன்பிலிற்றியமுல்லையம்புறவி
னுகள்புனிற்றிளங்கன்றெனச்சகோரநின்றுண்ணும்.

இ-ள். அகல் – அகன்ற, விசும்பெனும் – ஆகாயமென்கிற, ஆவின்-பசு வினது, மெல் – மெல்லிய, மடியென – மடியைப்போல், தோன்றி – உண் டாகி, திகழும் – விளங்காகின்ற, வெண்மதி – வெள்ளிய சந்திரன், உமிழ் தரு – சொரிகின்ற, செழு – செழிய, கதிர் – நிலவாகிய, தீம் – மதுரம்பொ ருந்திய, பால் – பாலை, முகை – அரும்புகள், நெகிழ்ந்து – விரிந்து, தேன்- தேனை, பிலிற்றிய – தளித்த, முல்லை – முல்லைக்கொடியையுடைய, அம்- அழகிய, புறவின்-முல்லைநிலத்தின்கண், சகோரம்-சகோரப்பறவையானது, உகள் – துள்ளுகின்ற, புனிறு இளம் – மிகுந்த இளமையையுடைய, கன் றென – கன்றுபோல், நின்று – நிலைபெற்று, உண்ணும் – குடிக்கும் எ-று.

ஆகாயத்திற் பசுவினையும், சந்திரனில் மடியையும், நிலவினிற் பாலை யும் ஆரோபித்தலால் உருவகவணி. சகோரங் கன்றென வென்றலால் உவமையணி. 17

நன்கமைந்தசாளரத்துறுகைநிலாக்கொழுந்தை
யன்பினீடுகூர்வாயினுற்சகோரங்களருந்தன்

மின்செய்வெள்ளிவெண்கம்பியைவிளங்குநூலச்சிற்
பொன்செய்கம்மியர்குறட்டினுல்வாங்குதல்போலும்.

இ-ள். நன்கமைந்த – அழகுபொருந்திய, சாளரத்து – பலகணியினுள், உறு – அடைகின்ற, நகை – ஒளிபொருந்திய, நிலாக்கொழுந்தை – சந்திரனுடைய இளங்கிரணங்களே, அன்பின் – ஆசையோடு, நீடு – நீண்ட, கூர்வாயினுல் – கூரியவாயினுல், சகோரங்கள் – சகோரப்பறவைகள், அருந்தல்-உண்ணுதல், மின்செய் – காந்தியைச்செய்கின்ற, வெள்ளி – வெள்ளியினுலாகிய, வெண்கம்பியை – வெள்ளியகம்பியை (மாட்டி), விளங்கு – விளங்காநின்ற, நூலச்சில் – கம்பியிச்சென்னுங் கருவியில், பொன்செய் கம்மியர் – பொன் வேலைசெய்யுங் கொல்லர், குறட்டினுல் – குறட்டினுற்பற்றி, வாங்குதல்போலும் – இழுத்தலையொக்கும் எ-று.

நூல்போல் வெள்ளிக்கம்பியைச் செய்தலால் கம்பியச்சை நூலச்சென்னுர். சாளரமிடமாகச் சகோரப்புள் சந்திரிகையை யுண்ணல் அக்கம்மியர் கம்பியச்சில் வெள்ளிக்கம்பி யிழுப்பதுபோ லெனலால் உவமையணி. 18

துலங்குவெண்மதித்தூநிலாக்கதிரின்றிலங்கு
பொலங்கொண்மாடமேற்புதுநிலாமணிபுனல்பொழித
னலம்பெய்நேமியம்புட்குலம்பிரிவுளநலியப்
புலம்புமாறுகண்டுள்ளமெக்குருகுதல்போலும்.

இ-ள். துலங்கு – விளங்குகின்ற, வெண்மதி – வெள்ளிய சந்திரனது, தூ – பரிசுத்தமாகிய, நிலாக்கதிரில் – சந்திரிகையில், நின்று – நீலபெற்று, இலங்கு – ஒளிர்கின்ற, பொலங்கொள் – அழகினைக்கொண்ட, மாடமேல்-உப்பரிகைமேற்பதித்த, புது – புதிய, நிலாமணி – சந்திரகாந்தங்கள், புனல்-நீரை, பொழிதல் – சொரிதலானது, நலம்பெய்-சுகத்தைத்தருகின்ற, நேமியம்புள் – சக்கரவாகப் பறவைகளது, குலம் – கூட்டத்தினது, பிரிவு – ஆண் பெண்களின் பிரிவானது, உளம் – அவற்றின் மனத்தை, நலிய – வருத்த, புலம்புமாறு – அவை வருந்தும் தன்மையை. கண்டு – (அச்சந்திரகாந்தங்கள்) கண்டு, உள்ளம் – தமதுள்ளம், நெக்குருகுதல்போலும் – கரைந்துருகுதல் போலும் எ-று.

நிலாமணி புனல் சொரிதலில் உள்ள நெக்குருகுதலைக் குறித்தலால் தற்குறிப்பணி. 19

இன்னகாரிருட்கங்குலுக்கெல்லிகாண்கிலளாய்க்
கன்னலஞ்செழுங்கழனிசூழ்விதர்ப்பநாடளிக்கு
மன்னர்மன்னவனருந்தவப்பேற்றினுல்வந்த
பொன்னவாஞ்சுணங்கணிமுலைப்பூங்கொடிபுலம்பும்.

இ-ள். கன்னல் – கரும்புகளையுடைய, அம் – அழகிய, செழு – செழுமையுள்ள, கழனிசூழ் – வயல்கள் சூழ்ந்த, விதர்ப்பநாடு – விதர்ப்பதேசத்தை,

அளிக்கும் – காக்கின்ற, மன்னர் மன்னவன் – அரசர்க்கரசனாகிய வீமனது, அருந்தவப்பேற்றினால் – அரிய தவ பலத்தினால், வந்த – தோன்றிய, பொன் அவாம் – பொன் விரும்புகின்ற, சுணங்கணி – தேமலனிந்த, மூலை – தனத்தினையுடைய, பூங்கொடி – மலர்க்கொடி போல்பவளாகிய தமயந்தி, இன்ன – இத்தன்மைத்தாகிய, காரிருள் – கரிய விருளையுடைய, கங்குலுக்கு – இரவிற்கு, எல்லை காண்கிலளாய் – அளவு காணாதவளாகி, புலம்பும் புலம்புவாள்.

இன்ன – இ என்னுஞ் சுட்டிடைச் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். காரிருட் கங்குல் – இன்ன சுட்டில்லாப் பண்புகொ ளடைமொழி பெற்றுவந்தது. களம் என்னுஞ் சொல் ழள வொற்றுமைபற்றிக் கழம் என்றாகி, அது இறுதிப்போலியாய் உடைமைப்பொருள் விகுதிபெற்று வந்ததென்ப. களத்தை யுடையது; வயல். பொன் என்பதன்கண் உயர்வு சிறப் பும்மைதொக்கது. அவாவும் என்பது அவாம் என நின்றது. 20

நிலாத்தோற்றுபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 333.

* சந்திரோபாலம்பனப் படலம்.

இப்படலத்தானே மேலுதித்த சந்திரனை விரகநோய்கொண்ட தமயந்தியானவள் நிந்திந்தல் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

விரிதெண் டிரைநீர்க் கருங்கடல்வான் முகட்டி லெழுந்த வெண்டிங்காண், மருவு திரைநீர்ச் சுவற்றுசிகை வடவை யிடத்தோ மைவிளர்ப்பக், கருகுங்கொடிய வெவ்விடத்தின் கண்ணே தணந்தா ருயிர்ப்பருக, வெரிவெங் கதிரா லுடல்வெதுப்ப யாண்டுக் கற்று யறியேமால்.

இ-ள். விரி – விரிந்த, தெள் – தெள்ளிய, திரை – அலைகளையுடைய, நீர் – நீரைக்கொண்ட, கருங்கடல் – கரிய கடலினது, வான் – உயர்ந்த, முகட்டில் – உச்சியில், எழுந்த – உதயஞ்செய்த, வெண்திங்காள் – வெள்ளியசந்திரனே, தணந்தார் – பிரிந்தவர்களுடைய, உயிர்பருக-உயிரைக்குடிக்க, எரி-எரிகின்ற, வெங்கதிரால் – வெவ்விய கிரணத்தினால், உடல்வெதுப்ப – உடலைச்சுட, மருவு – பொருந்துகின்ற, திரைநீர் – அலையையுடைய நீரினை, சுவற்று – சுவறச்செய்கின்ற, சிகை – கொழுந்தினையுடைய, வடவையிடத்தோ – வடவைத்தீயிடத்தோ, மைவிளர்ப்ப – அஞ்சனமும் வெள்ளிதாக, கருகும் – கருகிய, வெவ்விடத்தின்கண்ணே – வெவ்விய விடத்தினிடத்தோ, யாண்டுக்கற்றாய் – (இவ்விரண்டனுள்) எதனிடத்துக் கற்றுக்கொண்டாய், அறியேம் – (யாம் அதனை) அறிந்திலேம் எ-று.

ஆல் – அசை. திங்களென்பது உயர்திணைப் பெயராதலில் திங்காளென விளித்தற்கு ஈற்றய னீண்டது. மைவிளர்ப்ப வென்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. கடலினிடத்து வடவைத்தீயும் விடமும் தோன்றுதல் பற்றி அதிற்றோன்றிய சந்திரனுக்கு அவற்றினிடத்திற் கற்றுக்கொள்ளுதல் சொல்லப்பட்டது. அவனது கதிர் தண்ணியவா யிருந்தும் பிரிந்தவரைச் சுடுதல்பற்றி எரிவெங்கதி ரெனப்பட்டது. அறியேமென்பது தன்போலியோரையுந் தன்னுடன் படுத்துக் கூறிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற்று. வடவையிடத்தோ விடத்தின் கண்ணேவென்றது ஐயவணி. அறியேமென்றது தற்குறிப்பணி. 1

செய்யகமலமலர்கூம்பச்சேர்ந்தகொடியவெண்டிங்காள்
வெய்யகதிர்வாள்வீசியுயிர்வீட்டியதனைப்புகழ்பெறுக
பொய்யிறவத்தினிற்பயந்தபுணரிவேந்தன்குலம்வாழ்க
மையல்கூரென்றனைகாலும்வருத்தாதொழிதல்வேண்டுமால்.

இ-ள். செய்ய – சிவந்த, கமலமலர் - தாமரைப் பூக்களானவை, கூம்பகுவிய, சேர்ந்த – அடைந்த, கொடிய - கொடுமை பொருந்திய, வெண்டிங்காள் – வெள்ளிய சந்திரனே, மையல்கூர்-மயக்கமிகுந்த, என்றனை-என்னை,

* சந்திர = சந்திரனை, உபாலம்பனம் = பழித்தல், இது வடநூன் முடிபு.

நாளும் – எந்நாளும், வருத்தாது – வருத்தஞ் செய்யாமல், ஒழிதல்வேண்டும் – தவிர்தல்வேண்டும், வெய்ய – வெவ்விய, கதிர்வாள்வீசி – கிரணமாகிய வாளை வீசி, உயிர்வீட்டி – என்னுயிரைக்கொன்று, அதனால் – அக்கொலைத் தொழிலினாலே, புகழ் – கீர்த்தியை, பெறுக – பெறக்கடவாய், பொய்யில் – பொய்தவிர்ந்த, தவத்தின் – தவத்தினால், நின்பயந்த – உன்னைப்பெற்ற, புணரிவேந்தின் – கடற்கரசனுடைய, குலம் – மரபு, வாழ்க – வாழக்கடவது எ-று.

பலநாளுந் தன்பப்படுதலில் இறத்தல் ஒருநாளைத் தன்பமென்பாள் உயிர்வீட்டியதினாற் புகழ்பெறுக வென்றாள். "சாதலொருநா ளொருபொழுது தைத்தன்ப மவைபோ, லருகவை யாற்றுத லின்று." நீ புகழ்பெறுக நின்குலம் வாழ்கவென்றாளேனும் நீ நிந்தையடைக நின்குலங் கேடடைக வென்பது கருத்து. வருத்தாது உயிர்வீட்டிப் புகழ்பெறுகவெனப் பொருள் படலால் வஞ்சப்புகழ்ச்சியணி. 2

விரவுகரிய கூரிருள்வாய்வெய்யோனென்னக்கதிர்பரப்பி
மருவுகொழுநர்ப்பிரிந்தாரைவருத்தாநிற்குமாமதியே
திரைசெய்கடல்பொன்னுருக்கியபோற் செங்கேழெய்தப்புலரியெழு
மிரவிகதிராற்சவிமழுங்கியிருத்தல்யானேகாண்குவனுல்.

இ-ள். விரவு – (உலகமெங்கணும்) கலந்த, கரிய – கறுத்த, கூரிருள்வாய் – மிக்க விருளினிடத்தில், வெய்யோனென்ன – சூரியனென்று சொல்ல, கதிர் – கிரணங்களை, பரப்பி – விரித்து, மருவு – தம்மை மணந்த, கொழுநர்ப்பிரிந்தாரை – தலைவரைப் பிரிந்த மாதரை, வருத்தாநிற்கும் – வருத்துகின்ற, மாமதியே – பெரிய சந்திரனே, திரைசெய் – அலைகளை யுண்டாக்குகின்ற, கடல் – கடலானது, பொன்னுருக்கியபோல் – பொன்னை யுருக்கியதுபோல், செங்கேழெய்த – செந்நிறமடைய, புலரி – விடியற்காலத்தில், எழும் – எழுகின்ற, இரவிகதிரால் – சூரியகிரணத்தினால், சவிமழுங்கி – ஒளிகெட்டு, இருத்தல் – இருக்கையை, யானே – நானே, காண்குவன் – பார்ப்பேன் எ-று.

உருக்கியது உருக்கியவெனக் கடைகுறைந்தது. ஒருவர்க்குத் தீங்கிழைப்பவர் அவர் கண்முன்னே கேடுறுவரென்பது கருத்து. வெய்யோனென்ன வென்றது உவமையணி. கடல் பொன்னுருக்கியபோ லென்றது தற்குறிப்பணி. 3

* கன்றுகுணிலாக்கனியுகுத்தோன்கடலினமுதங்கடைந்தெடுப்பக்
குன்றமிடலுங்கிலபனைத்துந்தகர்ந்துள்ளாவிகுறைந்திலையே

* இங்ஙனம் "கன்றுகுணிலாக் கனியுகுத்த" "மாயவ - னின்று நம்மானுள் வருமேலவன் வாயிற் – கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ" எனச் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையிற் கூறப்பட்டது முணர்க. கடல் குடித்த சரிதம் திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலத்திற் பார்க்கக் காண்க.

தன்றுகதிர்வெண்கலைமதியேசுலவுதிரைநீர்க்சுடல்குடித்த
வன்றுகலசமுனிவயிற்றிலற்றுயென்னிலழலாயே.

இ-ள். தன்று – நெருங்கிய, கதிர் – கிரணங்களையுடைய, வெள்-வெள்ளிய, கலைமதியே – கலைகளையுடைய சந்திரனே, கன்று – பசுவின்கன்றை, குணிலா – குறுந்தடியாகக்கொண்டு, கனி – விளங்கனியை, உகுத்தோன்-உதிர்த்த நாரணனவன், கடலின் – பாற்கடலிலே, சடைந்து – மத்தித்து, அமுதம் – அமிர்தத்தை, எடுப்ப-எடுத்தல்வேண்டி, குன்றம்-மந்தரமலையை, இடலும் – இட்டவளவில், கலையனைத்தும் – பதினாறுகலைகளும், தகர்ந்து-உடைந்து, உள்ளாவி – உள்ளே யிருக்கின்ற, உயிர்குறைந்திலை – நீ குறைந்தாயில்லை, கடல் – கடலினுடைய, சுலவு – சுழல்கின்ற, திரை – அலைகளையுடைய, நீர் – நீர்முழுவதையும், குடித்த – பானம்பண்ணின, அன்று – அந்நாளில், கலசமுனி – அகத்திய முனிவனுடைய, வயிற்றில் – வயிற்றினிடத்தில், அற்றுயென்னில் – நீ சீரணித்தாயானால், அழலாய் – (இன்று) சுடமாட்டாய் எ-று.

கண்ணன் கன்றுமேய்த்துக் கொண்டிருந்தபோது அவனை வஞ்சித்துக் கொல்லும்படி கன்றினுருக்கொண்டுவந்த தேனுகாசுரனென்பவனைக் குறுந்தடியாக்கொண்டு விளவினுருவாயிருந்த அசுரனை விளங்கனியெறிதல்போல வடித்து அவ்விருவரையுங் கொன்றுனெனப் பாகவதத்திற் சொல்லப்பட்டது. உருமாறிவந்த பகைவரையுங்கொன்ற சூழ்ச்சியுடைய நாரணன் கடலிலே மந்தரமலையிட்டுக் கடைந்தும், தனது உதராக்கினியில் வாதாவியைச் சீரணிக்கச்செய்த அகத்தியமுனி கடனீரோடுண்டும் நீ நசியாமலிருப்பது எனது தவக்குறையென்பது கருத்தாகக் கொள்க. 4

மட்டு விரியு மலர்வாளி வருந்துந் தமியே னுயிர்சோரப், பட்ட புழையி லழலுமிழுங் கதிர்கள் சுருக்கிப் பார்வேந்தி, னெட்டுவரையு மிகழ்ந்துபொலங்கிரியோடிகலு மிருதடந்தோ, டொட்டகதிர்மென் கரத்தாலென் னுடலந் தொடுவாய் சுடர்த்திங்கள்.

இ-ள். சுடர்த்திங்கள் – ஒளியையுடைய சந்திரனே, (நீ) வருந்தும்-(விரகத்தினால்) வருந்துகின்ற, தமியேன் – தனியேனுடைய வெண்ணுடைய, உயிர்சோர – ஆவிசோர, மட்டுவிரியும் – தேனெழுகுகின்ற, மலர்வாளி-மலர்ப்பாணங்கள், பட்ட – தைத்த, புழையில் – துவாரத்தில், அழலுமிழும்-அக்கினியை யுமிழ்கின்ற, கதிர்கள் – கிரணங்களை, சுருக்கி – அடக்கிக்கொண்டு, பார்வேந்தின் – புவிக்கரசனுடைய, எட்டுவரையும்-அட்டகுலகிரிகளையும், இகழ்ந்து – இகழ்ச்சிசெய்து, பொலங்கிரியோடு – மேருமலையுடனே, இகலும் – பகைக்கின்ற, இரு – இரண்டாகிய, தடந்தோள்-பெரிய புயங்களை, தொட்ட – தீண்டிய, கதிர் – கிரணங்களாகிய, மென்கரத்தால் – மெல்லிய கரங்களால், என்னுடலம் – என்னுடைய தேகமுழுவதையும், தொடுவாய் – தீண்டுவாயாக எ-று.

மேருமலை எல்லா மலைகளினும் பெரிதாயும் அட்டகுலவரைகள் அதனிற் சிறியதாயும் நிற்றலால் நளன் புயங்கள் இகலுமென்றும் இகழ்ந்தென்

முஞ் சொல்லப்பட்டன. எட்டுமலைகளாவன: இமயம், மந்தரம், கயிலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பனவாம். பார்-பார்க்கப்படுவது; பருமையையுடையது, பூமி. உயிர் - (உடற்கு) உய்தலைச்செய்வது உயிர்த்தலை யுடையது; அதாவது சீவிப்பது. அழலுமிழு நின்கதிர்கள் நளன்றேட்பரிசத்தால் தண்ணிய வாகுமென்பாள் தொட்டகதிர் மென்கரத்தா லென்னுடலந் தொடுவா யென்றாள். கதிர் மென்கரமென்பது உருவகவணி. இருதடந்தோள் தொட்டமென் கரத்தால் என்னுடலம் தொடுவாயென்பது அச்செய்கையால் குளிர்ச்சிபெறுமென்பது கருத்தாகலின் வல்லோர் நவிற்சியணி. 5

அல்லினிருண் மாக்கடல்சுவற்றியளியள்முலைமேலழலூற்றிக்
கொல்லுங்கொடியவெண்டிங்கள்கொழிக்குநினதுகதிர்சிறிது
புல்லுமபொழுதிலொழியாதுபுனல்கான்றிருசுகந்தமெனுங்
கல்லுமுருகுமெனிலுலகிலெவரேயாவிகரையாதார்.

இ-ள். அல்லின்—இரவின்கண், இருள் – இருளாகிய, மா – பெரிய, கடல் – கடனீரை, சுவற்றி – சுவறச்செய்து, அளியள் – எளியளாகிய வெண்ணுடைய, முலைமேல் - தனத்தின்கண், அழலூற்றி – அக்கினியைச் சொரிந்து, கொல்லும் – கொல்லாநின்ற, கொடிய – கொடுமைபொருந்திய, வெண்டிங்கள் – வெள்ளிய சந்திரனே, கொழிக்கும்-கொப்புளிக்கின்ற, நினதுகதிர் – உன்னுடைய கிரணங்கள், சிறிது – கொஞ்சம், புல்லும்பொழுதில்-பொருந்தும் பொழுதில், ஒழியாது – ஒயாமல் இந்துகாந்தமெனுங் கல்லும்-சந்திரகாந்தமென்னுங் கல்லும், புனல் கான்று-நீரைக்கக்கி, உருகுமெனில்-கரையுமேயானால், உலகில் – உலகத்தில், ஆவிகரையாதார் – (மென்மையாகிய) உயிர் கரையாதவர், எவர் – யாவர் எ-று.

உலகமுடிவி லாயிரங் கிரணங்களோடு தோன்றிக் கடனீரனைத்தையுஞ் சுவற்றி மலைகளையுருக்கிச் சீவகோடிகளை யெல்லா மழிக்கின்ற சண்டபானுவின் விர்த்தாந்தந் தோனிக்கச் சந்திரனுக்கு இருட்கடலைச் சுவறச் செய்தலும், மலைக்கொப்பாகிய முலைமே லழலூற்றுதலும் காமிகளைக் கொல்லுதலும் கூறப்பட்டன. நெருப்பு முதலியவற்றை லுருகப்பெறுத வன்மை பொருந்திய கல்லுஞ் சந்திர கிரணத்தா லுருகுமெனில் மெல்லிய மக்களுயிருருகுதல் வியப்போவென்பாள் எவரேயாவி கரையாதாரென்றாள். வன்மையுள்ள கல்லே யுருகுமளவில் மென்மையுள்ள உயிருருகுமென்னும் பொருள் வினவின்றிப் பெறப்படுதலால் தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி. 6

பணந்தாழரவுண்டுமிழ்மதியேயமிழ்தினுண்டும்பலதேவ
கணந்தாம்வெருவும்விடத்தொடும்வந்ததனலன்றேகணவர்புய
மணந்தாருள்ளங்குளிர்ப்பேறத்தண்ணெனகதிர்கள்வழங்குவதுந்
தணந்தாருள்ளமிகவெதும்பத்தழல்போலுருக்குந்தன்மையுமேழை.

இ-ள். தாழ் – வளைந்த, பணம் – படத்தையுடைய, அரவு – சர்ப்பமானது, உண்டு – விழுங்கி, உமிழ்மதியே – உமிழ்கின்ற சந்திரனே, கணவர் புயம் – தலைவருடைய புயத்தை, மணந்தார் – சேர்ந்தவர்களுடைய, உள்ளம் – மனமானது, குளிர்ப்பேற – குளிர்ச்சியையடைய, தண்ணென்கதிர்கள் – குளிர்ச்சியாயிருக்கின்ற கிரணங்களை, வழங்குவதும் – கொடுப்பதும், தணந்தார் – பிரிந்தவர்களுடைய, உள்ளம் – மனமானது, மிகவெதும்ப – மிகவும் வாட, தழல்போல் – அக்கினியைப்போல், உருக்கும் – உருக்குகின்ற, தன்மையும் – குணமும், அமிழ்திலூடும் – அமிர்தத்துடனேயும், பல தேவகணம் – பலவாகிய தேவகூட்டங்கள், வெருவும் – பயப்படுகின்ற, விடத்தொடும் – நஞ்சுடனும், வந்ததலைலன்றே – வந்ததனாலன்றோ எ-று.

மணந்தார்க்குந் தணந்தார்க்கும் ஒரு தன்மையவாகச் செய்யாமை நின் குற்ற மன்று; நீ பழகுதற்கிடமாக நின்னுடன் வந்தவைகளுடைய குற்றமென்பது கருத்து. அமிழ்திலூடும் விடத்தோடும் என்றமுறையே, குளிர்ப்பேற மிகவெதும்ப வென்றமையால் நிரனிறையணி. 7

வடவானலத்தினுடன் பிறந்தாய்வளர்பூங் *கலையொன்றெய்தியபின்
படர்வார்சடையோனழல்பரப்புநுதற்கண்ணோடுபயின்றிருந்தாய்
சுடர்கால்கலைகணிறைந்துமுழுமதியாங்காலத்தொடாரவின்
விடவாயுறைந்தாய்மதியேநீவெம்மைகால்வதரிதேயோ.

இ-ன். மதியே – சந்திரனே, வடவானலத்தினுடன் – வடவாமுகாக்கினியுடனே, பிறந்தாய் – உதித்தாய், வளர் – வளர்கின்ற, பூ – அழகிய, கலையொன்று – கலையொன்றனை, எய்தியபின் – அடைந்தபின்பு, படர் – படர்கின்ற, வார் – நெடிய, சடையோன் – சடையினையுடைய பரமசிவனது, அழல் – அக்கினியை, பரப்பும் – விரிக்கின்ற, நுதற்கண்ணோடு – நெற்றிக்கண்ணுடனே, பயின்றிருந்தாய் – பழகிக்கொண்டிருந்தாய், சுடர் – கிரணங்களை, கால் – உமிழ்கின்ற, கலைகணிறைந்து – பதினாறுகலையு நிறைந்து, முழுமதியாங்காலை – பூரணசந்திரனபொழுது, தொடர் – தொடருகின்ற, அரவின் – பாம்பினுடைய, விடவாய் – விடமுள்ளவாயிலே, உறைந்தாய் – தங்

---

* அத்திரிமுனிவர் புத்திரனுகிய சந்திரனுக்கு தக்கன் தனது புத்திரிகளாகிய அசுவினி முதலாகிய இருபத்தெழுவரையும் விவாகம் பண்ணுவித்தனன். சந்திரன் கார்த்திகை, உரோகிணி என்னும் இருவர்மாட்டுமே காதலித்து ஒழுக, அதனையறிந்த தக்கன் வெகுளிகொண்டு நின்கலையனைத்துந் தேய்கவென்று சபித்தான். அங்ஙனே தேய்பெற்று ஒருகலை நின்றகாலத்து இறைவனை யடுத்தானுக; அவனிக்கலையொன்று எஞ்ஞான்றுந் தேயாதாக; ஏனையனவளர்ந்துந் தேய்ந்தும் விளங்கிடுக என்றருளித் தன் சடைமுடியிற் றரித்தானென்று கந்தபுராணங் கூறிற்று. அது "தீர்ந்தனவன்றியே திங்கடன்னிடை – யார்ந்திடுகலையினை யங்கையாற்கொளா – வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினன் – சார்ந்திலதவழித் தக்கன்சாபமே" என்ற தனால் முணர்க.

கினுய், (ஆகையால்) கீ-நீ, வெம்மைகால்வது – வெப்பத்தைத்தருவது, அரி தேயோ – அரிதாகுமோ எ-று.

ஒருவனுக்குப் பிறக்குமிடமும் பழகுமிடமும் உறையுமிடமும் நல்லிட மாயிருக்கில் நன்மையாம். ஆதலால் இம்மூவிடமும் உனக்குத் தீயவாயி ருத்தலினுல் பிறர்க்குத் தன்பஞ்செய்கின்றுயென்றுள். பிறக்குமிடம்பழகு மிடம் உறையுமிடமென்னு மூன்றனுள் ஒன்று கொடிதாயிருந்தாலும் அவன் செய்யுங் கொடுமை யளவற்றதாயிருக்க அம்மூன்றிடமுங் கொடியன வாகவுடைய நீ செய்யுந்தீமை கூறவேண்டாவென்பது தோன்ற வெம்மை கால்வ தரிதே யென்னப்பட்டது. சந்திரனுக்குப் பிறத்தல் பழகல் உறைத லென்பவைகள் முறையாகச் சொல்லப்பட்டமையால் முறையிற் படர்ச் சியணி. 8

தொய்யின்முலைகள்பசப்பூரத்துணைவர்ப்பிரிந்துதுயிறுறக்க
மையன்மடவாருயிர்கவர்வான்கூற்றம்போலவருமதியே
யையமிலேபுன்னுடற்களங்கமழலுங்கொடியவிடமன்றே
வெய்யபகுவாய்க்கரும்பாந்தள்விழுங்கியாற்றுதுமிழ்ந்ததுவே.

இ-ள். துணைவர்ப்பிரிந்து – கணவரைப் பிரிதலினுலே, தொய்யில் - சந் தனக்கோலத்தை யெழுதப்பெற்ற, முலைகள் – தனங்களானவை, பசப்பூர - வேறுபட்ட நிறத்தையுடைய, துயிறுறந்த-நித்திரையையொழிந்த, மையல்- மயக்கத்தையுடைய, மடவார் – மங்கையரது, உயிர் – ஆவியை, கவர்வான்- கொள்ளையிடும்பொருட்டு, கூற்றம்போல-கூற்றுவனேப்போல, வருமதியே- வருகின்ற சந்திரனே, ஐயமிலே – (அதற்குச்) சந்தேகமில்லை, உன் – உன்னு டைய, உடற்களங்கம் – உடலிலுள்ள கறையானது, அழலும் - சுடாகின்ற, கொடிய – கொடுமைபொருந்திய, விடமன்றே-நஞ்சமன்றே, வெய்ய-வெவ் விய, பகுவாய் – பிளப்பாகிய வாயையுடைய, கரும்பாந்தள் – இராகுவென் னும் பாம்பானது, விழுங்கி - உண்டு, ஆற்றுது – தாங்கமாட்டாமல், உமிழ்ந் தது – கக்கியது எ-று.

* இராகு – கரும்பாம்பு வடிவினையுடையது. துணைவரைப் பிரிந்து ஊணுறக்கமற்ற மாதருக்கு மரணவேதனைபொத்த தன்பஞ்செய்தல்பற்றிச் சந்திரனுக்குக் கூற்றுவனையுவமை கூறப்பட்டது. சந்திரனுடைய களங் கத்தை விடமாகக் குறித்தமையால் தற்குறிப்பணி. 9

சுடர்கான்றெழுந்தவெண்டிங்காளென்னேசுடுதியாரமுதத்
துடனீபிறந்தபாற்கடலின்றன்மையுணராயாலுலு

---

* இராகு கரும்பாந்த ளென்பதும் மதியை மறைக்கும் என்பதும் பின் வருஞ் செய்யுளாலுணர்க. "புன்னுகுகாக மணிவானடிபோற்றி நோற்றுச், செந்நாகமோடு கருநாகத்தின் செய்கைபெற்றுப், பின்னுகமுன்னந் தமைக் காட்டிய பெற்றியோரை, யந்நாகமீது மறைப்பாரமு தண்டகள்வர்" "கெ ழியராகுவுங் கேதுவுமேயென - மொழியகின்ற முதற்பெயர் தாங்கியே- விழுமிதாகிய வெய்யவனுதியா – மெழுவர்தம்மொ டிருவரு மீண்டினுர்"

மடலார்கமலப்பொகுட்டுறையும்புத்தேள்காணுமறைக்கொழுந்தின்
படர்வார்சடையில்வீற்றிருக்கும்பான்மையேனுமறிந்திலேயே.

இ-ள். சுடர்—கதிர்களே, கான்று—வீசிக்கொண்டு, எழுந்த - உதித்த, வெண்டிங்கள்—வெள்ளிய சந்திரனே, சுடுதி—சுடுகின்றாய், என்னே-(இது) யாதாகவிருந்தது, ஆர்—நிறைந்த, அமுதத்துடன்-அமிர்தினுடனே, நீ பிறந்த—நீ பிறக்கப்பெற்ற, பாற்கடலின் - பாற்கடலினுடைய, தன்மை-குணத்தை, உணராயாஞலும்—அறியாயென்னினும், மடல்ஆர் - இதழ்கணிறைந்த, கமலப்பொகுட்டு—தாமரைமலர்க் கொட்டையில், உறையும்-தங்குகின்ற, புத்தேள்-பிரமன், காணு—காணக்கூடாத, மறைக்கொழுந்தின்-வேதத்தச்சியிலிருக்கும் பரமசிவனுடைய, படர்—படர்ந்த, வார்—நெடிய, சடையில்—சடாபாரத்தில், வீற்றிருக்கும்—வீறுடனே யிருக்கின்ற, பான்மையேனும்—தன்மையை யாஞலும், அறிந்திலே—அறிந்தாயில்லே எ-று.

நற்குலத்தில் நல்லோருடன் பிறந்து பெரியோரைச் சேர்ந்து பெருமை பெற்றிருக்கின்ற நீ யாதொரு பயனுமின்றி இத்தீச்செய்கை செய்வது தகாதென்பது கருத்து. பாற்கடலமுது பரமசிவன் இவைகளினுறவுண்டாகியுஞ் சந்திரனுக்கு அக்குணமுண்டாகாமை சொல்லப்பட்டமையால் இகழ்ச்சியணி. 10

கருவுமணியுமிருஞ்சிறைத்தண்ணங்கமலமலர்த்தவிசிற்
றிருவுமுயிர்த்தபாற்கடலிற்றெள்ளாரமுதத்துடன்பிறந்தாய்
பெருவெண்மதியேநீயுறைதற்பெம்மான்மௌலிகதிரமிழ்தி
னுருவமாங்கனுறவொன்றும்விடுத்தியேன்மற்றுணர்கிகரார்.

இ-ள். பெரு - பெரிய, வெண்மதியே - வெள்ளியசந்திரனே, தருவும்-ஐந்தருவையும், மணியும்—சிந்தாமணியையும், இருஞ்சிறையும்—சங்கநிதி பதும நிதி யென்னு மிரண்டினையும், தண்—குளிர்ந்த, அம்—அழகிய, கமலமலர்-தாமரைமலராகிய, தவிசில்—ஆசனத்திலிருக்கின்ற, திருவும்—திருமகளும், உயிர்த்த—பெற்ற, பாற்கடலில்—பாற்கடலினிடத்தே, தெள்—தெள்ளிய, ஆர்—நிறைந்த, அமுதத்துடன்—அமிர்தத்துடனே, பிறந்தாய்—தோன்றினாய், நீ யுறைதல்—நீ வாசம்பண்ணுமிடம், பெம்மான்—பரமசிவனுடைய, மௌலி - சடைமுடி, கதிர்—உன்னுடைய கிரணங்கள், அமிழ்தினுருவம்—அமிர்தத்தினுடைய வடிவம், (ஆகையால்) அநங்கன்—மன்மதனுடைய, உறவொன்றும்—சம்பந்தமொன்றனையும், விடுத்தியேல்—விடப்பெற்றாயினால், உணர்கிகர்—உன்னை நிகராவார், ஆர்—யாவர் எ-று.

நிகர்வாரென்னு முற்றுவிகுதி நிகரெனத் தொக்கு நின்றது. பிறப்பிடத்தினாலும் உறையுமிடத்தினாலும் உனக்குண்டா யிருக்கின்ற மேன்மையை விரகினாற் கன்பஞ் செய்வதற் கேதுவாயிருக்கிற நீ பழகுமிடமொன்று லிழக்கின்று யென்பாள். அநங்கனுறவொன்று விடுத்தியென்றுள். ஒருவனுக்குக் குடிப்பிறப்பு முதலியவற்று லுளதாகுங் குணத்தினும் பழகுமினத்தா லுளதாகுங் குணமே பெரும்பாலென்பது. "நிலத்தியல்பா

வீர்திரிந் தற்ருகு மாந்தர்க், கினத் தியல்பதாகு மறிவு'' என்பதனுலறிக. அங்கனுற வொன்றினை விடுகையிற் சந்திரனுக்குச் சிறப்புச் சொல்லப்படுகையால் இன்மைநவிற்சியணி. அங்கன்—அங்கமில்லாதவன். 11

திங்கட்புலியைவீழ்த்தியுயிர்செகுப்பமடவீராமியத்திற்
றங்கப்படிமக்கலஞ்சேர்மினதனுட்புகுந்தாழாமே
துங்கக்கருந்தாதகப்புடைக்குத்தொழிலோர்க்கூவிக்கூடமெடுத்
தங்கைத்தலத்தாலறைதிரெனப்பணிப்பிராவியளிப்பீரே.

இ-ள். மடவீர்–தோழியரே, திங்கட்புலியை—சந்திரனுகிய புலியை; வீழ்த்தி—வீழச்செய்து, உயிர் செகுப்ப—உயிரைநீக்க, அரமியத்தில்—நிலாமுற்றத்தில், தங்கப்படிமக்கலம்–தங்கத்தினுல் வரம்புசெய்யப்பட்ட கண்ணுடியை, சேர்மின்—வையங்கள், அதனுள்—அக்கண்ணுடியினுள், புகுதும்-திங்கட்புலி நுழையும், தாழாமே–தாமதியாமல், துங்கம்-உயர்ச்சிபொருந்திய, கருந்தாது–இரும்பை, உக-உதிர, புடைக்கும்–அடியாகின்ற, தொழிலோர்–தொழில் செய்வோராகிய கொல்லரை, கூவி–அழைத்து, கூடமெடுத்து—சம்மட்டியெடுத்து, அங்கைத்தலத்தால்—அழகிய கையினலே, அறைதிரென—அடியுங்களென்று, பணிப்பீர்-சொல்லுவீர்களானுல், ஆவினதுயிரை, அளிப்பீர்—காப்பவராவீர் எ-று.

எதிர்நின்று சொல்லுதற்குக்கூடாத புலியைப் பொறியுட்படுத்திக் கொல்லுதல்போல அம்புலியையுஞ் செய்கவென்பாள். தங்கப்படி மக்கலஞ் சேர்மி னென்ருள். கற்றுணர்ந்த தமயந்தியானவள் திங்களைக் கொல்லுதற்கு இவ்வளவு உபாயஞ்சொல்லியது வண்டு முதலியவற்றைத் தூது அனுப்புதல்போலக் காம மயக்கத்தாற் கூறியதெனக் கொள்க. திங்களைப் புலியென்று உருவகஞ்செய்து கண்ணுடியைப் பொறியென உருவகஞ் செய்யாமையால் ஏகதேச உருவகவணி. அகம்=கை எனப் பிரித்துக் கோடலுமாம்.

சுடரும்வடவையுலகழலத்தோன்ருதமைத்தகிரையாழி
யடருமழன்மாமதியதனையாற்ருதரற்றிவிடுத்தகதினிற்
படருமிதழிப்புரிசடையெம்பரமனமரருயிர்புரப்பான்
கொடியவிடமுண்டதுபோலவுண்டாலதனுற்குறையுண்டோ.

இ-ள். சுடரும்–பிரகாசியாகின்ற, வடவை–வடவைத்தீயானது, உலகு—உலகத்தை, அழல்-சுட, தோன்ருது–வெளிப்படாமல், அமைத்த—(அதைத்) தன்னுளடக்கிய, கிரை—அலைகளையுடைய, ஆழி–கடலானது, அடரும்–நெருங்கிய, அழல்–சுடாகின்ற, மா—பெரிய, மதியதனை-சந்திரனை, ஆற்ருது—பொறுக்காமல், அரற்றி–அழுது, விடுத்ததனில்-விட்டதாலுல், படரும்—படராகின்ற, இதழி-கொன்றைமாலையையணிந்த, புரி—கட்டப்பட்ட, சடை—சடாபாரத்தையுடைய, எம்பரமன்—எம்முடைய கடவுள், அமரர்-தேவர்களினுடைய, உயிர்–ஆவியை, புரப்பான்-காக்கும்பொருட்டு, கொடிய–கொடுமைபொருந்திய, விடம்—விடத்தை,

உண்டதுபோல - புசித்ததுபோல, உண்டால் – இதனையும் புசித்தால், அதனல் – அச்செய்கையால், குறையுண்டோ – குறைபாடுளதோ எ-று.

அற்றலாவது அழுதலும் ஒலித்தலுமாம் "அற்றலேயழுகையோசை" யென்பதனலறிக. சந்திரனுதிக்குங் காலத்திற் கடன் மிக வொலித்தலின் அங்ஙனங் கூறப்பட்டது. வடவைத்தீயைத் தன்னுளடக்கிய கடலானது திங்களை விடுத்த தென்பதனல் அதனினு மிது பெருந்தீயெனக்கொள்க. தேவருயிரைப் புரக்கக் காளகூடத்தையுண்ட பேரருளையுடைய சிவபெருமான், விரகிகளுடைய வுயிரைப்புரக்க இதனை யுண்ணுதது அவர்கள் தவக்குறை யென்பது கருத்து. 13

விரிந்தநிரைப்பாற்கடற்பிறந்தவிடமோரிரண்டிலோர்கடவுண்
மருந்தினுகாந்தகரியவிடமீட்டுமுலகில்வந்ததுவோ
பரந்தகனலுமதிக்கலையாம்வெள்ளைவிடத்தைத்தேவர்பல
ரருந்தவருந்தநாணுமும்வளர்வதெவன்கொலறியேமால்.

இ-ள். விரிந்த – விரியப்பெற்ற, நிரை – அலைகளையுடைய, பாற்கடல்-பாற்கடலிலே, பிறந்த – தோன்றிய, விடம் ஓரிரண்டில் – விடமிரண்டில், ஓர்கடவுள் – ஒப்பற்ற பரமசிவனனவர், மருந்தின் – அமிர்தத்தைப்போல், நுகர்ந்த – புசித்த, கரியவிடம் – கறுத்த விடமானது, மீட்டும் - மீளவும், உலகில் – உலகத்திலே, வந்ததோ – தோன்றியதோ, பரந்த – பரவி, கனலும்-சுடாநின்ற, மதிக்கலையாம்-சந்திரனது கலையாகிய, வெள்ளைவிடத்தை-வெண்ணிறத்தையுடைய விடத்தை, தேவர்பலர் - தேவர்களனேகர், அருந்த அருந்த – புசிக்கப் புசிக்க, நாணுமும் – நாடோறும், வளர்வது - வளருகின்றது, எவன்கொல் – என்னகாரணமோ, (யாம்) அறியேம்-அறிகிலேம் எ-று. ஆல் – அசை.

கடலிலுண்டாகிய இரண்டு விடங்களுள் கரியவிடம் ஒருவனுண்ணநிக்க, இவ்வெள்ளைவிடம் தேவர் பலருண்ண நித்தும் பின்னும் வளர்வதனல் அதனினுமிது கொடிதென்க. ஒருவன் செய்கை முற்றுப்பெறுதலும் பலர்செய்கை முற்றுப்பெறுமையும் ஆச்சரியத்திற் கேதுவாகலின் எவனெனப்பட்டது. அறியோமென்பது விரகிகளுடைய வுழ்வினையின் கொடுமை இவ்வளவென வறியேமெனக்கொள்க. மதிக்கலையாம் வெள்ளைவிடமென்றது உருவகவணி. வெள்ளைவிடத்திற்கு மீட்டுந் தோன்றுதல் அதிகமாகச் சொல்லப்பட்டமையால் வேற்றுமையணி. 14

நிரைத்தண் டாளக்கோவை யென நிலவுகாலும் வெண்ணகையீர், விரைத்தண் கலவைச் செழுஞ்சேறென் றழலி யிறைத்து மெய்வெதுப்பிற், றிருத்து மலர்ப்பூஞ் சேக்கையென வில்வேள் பிரித்தா ருயிர்செகுக்கு, மரத்தந் தோய்ந்த வாளியணே கிடத்த லென்மே லன்பேயோ.

இ-ள். நிரை – வரிசையாக விருக்கின்ற, தண் – தண்ணிய, தாளக்கோவையென – முத்துக் கோவையைப்போல, நிலவு – ஒளியை, காலும் – தரு

கின்ற, வெள் – வெள்ளிய, நகையீர் – பற்களையுடைய மங்கையரே, விரை-வாசனைபொருந்திய, தண் - தண்ணிய, செழு - செழிய, கலவைச்சேறென்று-கூட்டுவருக்கஞ்சேர்ந்த சந்தனக் குழம்பென்று, அழலிலிறைத்து – தீயை வீசி, மெய் - தேகத்தை, வெதுப்பி – சுட்டு, திருத்தும் – காம்புகளையப் பெற்ற, மலர் – மலரினுற்செய்யப்பட்ட, பூ - அழகிய, சேக்கையென-மெத்தையென்று, வில்வேள் – மன்மதனனவன், பிரிந்தார் - பிரிந்தவர்களுடைய, உயிர் - ஆவியை, செகுக்கும் – போக்குகின்ற, அரத்தந்தோய்ந்த – உதிரந் தோய்ந்த, வாளிஅணை - பாணமெத்தையின்மேல், கிடத்தல் – படுக்கவைத்தல், என்மேல் - என்னிடத்து, அன்பேயோ – அன்புதானே எ-று.

நோயொன்றிருக்க மருந்தொன்று கொடுப்போரைப்போல விரகநோயைத் தீர்ப்பதற் கேற்றவைகளைச் செய்யாமல் அதை வீர்த்திசெய்வதற் கேற்றவைகளைச் செய்வது அன்புடையார் செயலன்றென்பது தோன்ற அன்பேயோ வென்னப்பட்டது. சேயென்றழலிலிறைத்து என்றதும், மலர்ச்சேக்கையென வாளியணை கிடத்தலென்றதும் ஒழிப்பணி. 15

பணந்தாழல்குற்பைந்தொடியீர்பதுமத் திறைக்கும்வானவர்க்குங்
கணஞ்சேருலகின்மன்பதைக்குங்காலங்கணித்தகலைவல்லோர்
மணந்தார்தமக்கோரிமைப்பொழுதுமாறுக்காதன்மகிழ்நர்புயந்
தணந்தார்க்கூழியாகுமெனச்சாற்றுதிருந்ததகையென்ன.

இ-ள். பணம் – பாம்பின்படம், தாழ் – வணங்குகின்ற, அல்குல் – அல்குலையுடைய, பைந்தொடியீர் – பசிய பொன்னுற்செய்த வளையலையுடைய மங்கையரே, பதுமத்திறைக்கும் – தாமரைமலரிலிருக்கின்ற பிரமனுக்கும், வானவர்க்கும் – தேவர்களுக்கும், உலகின் – மண்ணுலகின், கணம்-கூட்டமாக, சேர் – சேரப்பெற்ற, மன்பதைக்கும் - மனிதர்க்கும், காலம்-வாழ்நாளை, கணித்த – நிச்சயித்த, கலைவல்லோர் – சோதிடநூல்வல்லோர், மாறுக்காதல் – நீங்காத விருப்புள்ள, மகிழ்நர் புயம் – தலைவர்புயங்களை, மணந்தார்க்கு – கூடினவர்களுக்கு, ஓரிமைப்பொழுது – ஒருமாத்திரையாயிருந்தகாலம், தணந்தார்க்கு – (அப்புயங்களைப்) பிரிந்தவர்க்கு, ஊழியாகுமென – ஊழிக்காலமாகுமென்று, சாற்றுதிருந்த தகையென்னே – சொல்லாதிருந்த முறையென்ன காரணம் எ-று.

* பிரமாவுக்கு ஒருநாள் மனிதர்க்குப்பிரளயமும், தேவர்க்கொரு நாள் மனிதர்க்கோர் வருடமுமா யிருக்குங் காலவேறுபாடுகளைக் கணித்துச்சொல்லிய கணிதர், இதனைச்சொல்லாதது அறியாமையே யென்பது தோன்ற என்னெனப்பட்டது. 16

---

* பிரமதேவன், வானவர், மன்மதை என்னுமிவர்க்கு ஆயுள் வரையறுத்த விடயம் விண்டு புராணத்தும், கூர்மபுராணத்திலே காலவளவையுரைத்த அத்தியாயத்தின்கண்ணாம் இயற்றிய விசேட உரையினும் கண்டு தெளிக.

குதலைமொழியீர்மெய்வெதுப்புங்கொடுந்தீயாற்றவேண்டுதிரேற்
பொதியவரையினறுஞ்சாந்தம்பூசிமுலைமேற்புகைந்தழலக்
கதலியிளம்பூங்குருத்தனல்வீசிவீசிக்கனற்றுவதென்
மதியின்றழலைவிப்பதற்கோர்மருந்துண்டாகிற்செய்வீரே.

இ-ள். குதலைமொழியீர் — மழலைச்சொற்களையுடைய மங்கையரே! மெய்-உடலத்தை வெதுப்பும்-சுடுகின்ற, கொடுந்தீ-கொடியவெப்பத்தை, ஆற்ற — தணிக்க, வேண்டுதிரேல் — விரும்புவீர்களாஞல், பொதியவரையின்-பொதியமலையிற்பிறந்த, நறு — பரிமளம்பொருந்திய, சாந்தம் — சந்தனத்தை, பூசி — பூசுதல் செய்து, முலைமேல் — தனத்தின்மேல், புகைந்தழல்-புகைவிட்டெரிய, கதலி — வாழையினுடைய, இளம்பூங் குருத்தனல்-அழகிய இளங்குருத்தால், வீசி வீசி — இடைவிடாமல் வீசுதல்செய்து, கனற்றுவது — சுடும்படி மூள்விப்பது, என் — என்னகாரணம், மதியின் தழலை — சந்திரகிரணமாகிய நெருப்பை, அவிப்பதற்கு — தணிப்பதற்கு, ஓர் மருந்து - ஒருமருந்து, உண்டு — உள்ளது, ஆகில் — உம்மாற்செய்யக் கூடுமாஞல், செய்வீர் — (அதனைச்) செய்வீர்களாக எ-று.

மொழியாலன்றிச் செயலாற் பயனிலீ ரென்பது தோன்றக் குதலை மொழியீ ரென்றும், விரகாக்கினியைத் தணிப்பதற்குத் தக்கவாறு செய்யுந் திறத்தீ ரல்லீரென்பது தோன்ற வேண்டுதிரேலென்றும், எண்ணிய பயனெய்தப் பெரிது முயற்சியான் மெய் வருந்துவது வீணென்பது தோன்ற என்னென்றும், இத்தீ கடனீர் முதலியவற்று லவிக்கப்பெறுத பெருந்தீ யென்பது தோன்ற நெருப்பவிப்பதற்குச் சாதனமாகிய நீரைக் கூறுது மருந்தென்றும், தலைவனைப் பொருத்தலன்றிப் பிறிது மருந்தின்றென்பது தோன்ற உண்டாகிற் செய்வீரென்றுங் கூறினள். ஓர்மருந்துண்டென்று சுருக்கிப்பிக்க வேண்டியதைக்குறித்தலால் குறிப்பேயணி. 17

அந்தாமறையின்மடற்கல்லீர்மலயமுயிர்ப்பவலர்பொதுளுஞ்
சந்தாடவியிற்றவழ்ந்துநறுந்தண்ணைனருவிதோய்ந்துமலர்ப்
பைந்தாதாடிமுருகுயிர்த்துப்பசும்பொற்சிறுசாளரதுழையு
மந்தாகிலமின்றழல்வதெல்லாந்தமியேனிழைத்தவல்வினையே.

இ-ள். அம் - அழகிய, தாமரையின் — தாமரைமலரிலிருக்கின்ற, மடற்கல்லீர் — திருமகளையொத்த மங்கையரே! மலயம் — பொதியமலையானது, உயிர்ப்ப — பெற, அலர் — மலர்கள், பொதுளும் — நிறைந்திருக்கின்ற, சந்த அடவியில் — சந்தனக் காட்டிலே, தவழ்ந்து — ஊர்ந்து, நறு — நல்ல, தண்ணைனருவி — குளிர்ச்சியாயிருக்கின்ற அருவிநீரில், தோய்ந்து — படிந்து, மலர் — மலர்களினுடைய, பைந்தாதாடி — பசிய மகரந்தங்களையுலர்ந்துகொண்டு, முருகு - வாசனையை, உயிர்த்து — வீசி, பசும்பொன் — பசியபொன்னுற்செய்த, சிறு — சிறிய, சாளரம் — பலகணிவழியால், துழையும்-நுழைகின்ற, மந்த அகிலம் - தென்றற்காற்றுனது, இன்று — இன்று,

அழல்வதெல்லாம் - சுடுவதெல்லாம், தமியேன் - தனிமையுடையேனாகிய யான், இழைத்த - செய்த, வல்வினையே - தீவினையே எ-று.

பிறப்பு முதலிய வற்றால் தண்மையையே யியல்பாகவுடைய தென்றலானது என்னளவிற் சுடுதல் அதன் குற்றமன்று; என் குற்றமென்று தமியேனிழைத்த வல்வினையே யென்றாள். தென்றற்குப் பிறத்தல் தவழ்தல் நீராட்டுப் புழுதியாட்டு என்னும் பிள்ளைப் பருவச்செயல் தோன்றச் சொல்லுதலால் சுருங்கச் சொல்லணி. 18

கொங்குவிரியுமலர்க்குழலீர்கொழுநர்ப்பிரிந்தார்வருந்துறவா
னெங்குங்குருதியிறைத்ததுபோற்குடபாற்றிசையினெழுஞ்செக்க
பொங்குவடவைக்கொழுந்தீயதனுலன்றேபூசுரர்க [ர்
ளங்கைநிறையப்புனல்வாரியிறைத்துநாளுமவிப்பதுவே.

இ-ள். கொங்கு - வாசனையானது, விரியும் - விரியப்பெற்ற, மலர்மலரையணிந்த, குழலீர் - கூந்தலையுடைய மங்கையரே, கொழுநர் - கணவரை, பிரிந்தார் - நீங்கினவர்கள், வருந்துற-வருத்தத்தையுடைய, வானெங்கும் - ஆகாயமுழுவதும், குருதி - உதிரத்தை, இறைத்ததுபோல் - வீசப்பெற்றதுபோல், குடபாற்றிசையின் - மேற்குத்திசையிலே, எழு - எழுகின்ற செக்கர் - செவ்வானமானது, பொங்கு - மிகுந்த, வடவை - வடவையென்னும் பெயரையுடைய, கொழு - செழிய, தீயே - அக்கினியே, அதனுல்-அதனுலன்றே, பூசுரர்கள் - பிராமணர்கள், அங்கை - அங்கைநிறைய, புனல் - சலத்தை, வாரி - அள்ளி, இறைத்து-சொரிந்து, நாளும் - நாடோறும், அவிப்பது - அத்தீயையணைப்பது எ-று.

பூமிக்குச் சுரர்களாகவிருப்பவர்கள் சீவகாருண்ணியமுடைய அந்தணாதலால் அவரே விரகிலைச் சுடவெழுந்த தீயையும் அவிக்கவேண்டுதலின் * பூசுரர்க்கு அத்தீயவிப்பது கூறப்பட்டது. நெருப்பை யவிப்பதற்குச் சாதனம் நீரின்றிப் பிறிதொன்றன்றென்பது தோன்றப் புனல் வாரியெனப்பட்டது. குருதி யிறைத்ததுபோ லெழுஞ்செக்கரென்றது தற்குறிப்பணி. செக்கரைத் தீயென்றது பூசுரர்கள் நீரிறைத்து அவிப்பதனுற் சாதிக்கப்படுதலால் தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி. 19

பூனிமென்கொடியீர்நிலவருந்தென்புள்ளின்பார்ப்பையருட்கலசமூனிதன்றன்பாலிலைபுரட்டுமுன்நீர்குடிக்கும்விஞ்சையினே

---

* அந்தணர் காலையிலே பிராமி சத்தியையும், உச்சிக் காலத்திலே வைணவி சத்தியையும், அந்திக்காலத்திலே இரௌத்திரி சத்தியையும் வழிபடுவார்கள். இம்மூன்று சத்திகளுள் "அந்தியுண் மந்திர மஞ்செழுத்தமே" என்ற திருவருட்பாத் திருவாக்கின்படியுஞ் சாயங்கால் சந்தியாவந்தனையே விசேடித்தது. அதுகாலை அந்தணர் நீரெடுத்துத் தர்ப்பணஞ்செய்தல் வழக்காகலின் "அங்கைநிறையப் புனல்வாரி யிறைத்து நாளுமவிப்பதுவே" என்றாள்.

யினிதினுணரவைத்திடுமின்வைத்தாற்குணபாலிலூற்றுவெய்தாக்
கனலுங்கொடியவெண்டிங்கட்கதிர்வெங்கடலேயருந்தாதோ.

இ-ள். பூணை - அலங்கரிக்கப்பட்ட, மெல்-மெல்லிய, கொடியீர்-மலர்க் கொடிபோன்ற மங்கையரே, நிலவு - சந்திரிகையை, அருந்து - புசிக்கின்ற, என்-என்னுடைய, புள்ளின்பார்ப்பை - சகோரக்குஞ்சினை, அருள்-கிருபையுடைய, கலசமுனிவன்பால்-கும்பத்திற்பிறந்த - அகத்தியமுனிவனிடத்து, அலைபுரட்டும் - அலைகளை புரட்டுகின்ற, முந்நீர் - கடற்சலத்தை, குடிக்கும்-பானம்பண்ணுகின்ற, விஞ்சையினை - கல்வியை, இனிதின் - இனிதாக, உணர - அறிய, வைத்திடுமின்-வையுங்கள், வைத்தால் - வைக்கப்பெற்றால், குணபால் - கீழ்த்திசையில், எழுந்து - உதயமாகி, வெய்தாய் - வெவ்விதாய், கனலும் - சுடுகின்ற, கொடிய - கொடுமைபொருந்திய, வெண்டிங்கள்-வெள்ளிய சந்திரனுடைய, கதிர் - கிரணமாகிய, வெம் - வெய்ய, கடலை - சமுத்திரத்தை, அருந்தாதோ - (அது) குடியாதோ எ-று.

யாதொன்றினைக் கற்கவேண்டுவது இளமைப்பருவத்தாதலால் புள்ளின் பார்ப்பெனப்பட்டது. காமாந்தகமென்னும் பொருணூலில் விஷத்தைக் கண்டவளவிற் கண்சிவக்கு மியல்பினையுடைய சகோரத்தை விஷசோதனையின்பொருட்டு அரசர் வளர்க்கவேண்டுமென்று சொல்லப்பட்டபடி தன் வீட்டில் வளர்க்கப்பட்டதாகலின் என்புள்ளின் பார்ப்பெனப்பட்டது. கடனீரைக் குடிக்கக்கற்ற சகோரப்பறவைக்குத் தண்டாபூபிகையாயத்தால் சந்திரகிரணத்தைக் குடிப்பது எளிதிற் சித்திப்பதாகச் சொல்லப்பட்டமையால் தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி. 20

பதுமமலர்மெல்லணைகிடத்திப்பனிநீர்தெளித்துச்சாந்தணிந்து
முதிர்வெங்காமக்கனலவிப்பான்முயலாநின்றமொய்குழலீர்
கதிருங்கடல்வான்முகட்டிலெழுந்தழற்றுங்கொடியகதிர்பரப்பு
மதியங்குளிரமருந்தறிவீர்வடவைத்தழலுமவிப்பீரே.

இ-ள். பதுமமலர் - தாமரைமலரிதழ்பரப்பிய, மெல்லணை - மெல்லிய மெத்தையில், கிடத்தி - படுக்கவைத்து, பனிநீர் - பனிநீரை, தெளித்து-இறைத்து, சாந்து - சந்தனத்தை, அணிந்து - பூசி, முதிர் - முதிர்ந்திருக்கின்ற, வெம் - வெவ்விய, காமக்கனல் - காமத்தீயை, அவிப்பான்-தணிக்கும் பொருட்டு, முயலாநின்ற - முயலுகின்ற, மொய்குழலீர் - மங்கையரே, அதிரும் - ஒலிக்கின்ற, கடல் - கடலினது, வான் - மேலாகிய, முகட்டில் - உச்சியிலே, எழுந்து - உதித்து, அழற்றும் - சுடுகின்ற, கொடிய - கொடுமை பொருந்திய, கதிர் - கிரணங்களை, பரப்பும் - விரிக்கின்ற, மதியம் - சந்திரன், குளிர் - குளிர்ச்சிபெற, மருந்து - மருந்தை, அறிவீர் - அறிவீர்கள், வடவைத்தழலும் - வடவாமுகாக்கினியையும், அவிப்பீர் - தணியச்செய்வீர்.

ஒருகருமம் முடித்தற்கேற்ற கருவி இதுவென்றும் இதுவன்றென்று முணராது செய்பவர்களைப்போல் விரகத்தீயை யவிப்பதற்கு ஏற்ற தலைவற் கூட்டத்தைவிட்டு அதனை மிகுவிக்கின்ற மலர்ச்சேக்கை கிடத்தல் முதலிய

எலாதவைகளைச் செய்கின்றீரென்பது தோன்ற, காமக் கனலவிப்பான் மூயலாநின்ற மொய்குழலீரென்றாள். யாவரு மனுபவசித்தமா யறியப்படு கின்ற மதியைக் குளிர்விக்கும் இறைவற்கூட்டமாகிய மருந்தை முன்ன ரறியீர்களென்பாள், அறிவீரென்றாள், இதனை முன்னரறிந்தால் பின்னர் வடவைத்தழலேயவிக்கும், அரியவகையையுமறிவீர்க ளென்பாள், வடவைத் தழலு மவிப்பீரென்றாள். இவ்வுலையைக் காமத்தினதாக வறியாது தணித் தற்குமுயலு மங்கையரை மதியங்குளிர மருந்தறிவீர் வடவைத்தீயு மவிப்பீ ரென்று வஞ்சகமாகப் புகழ்தலால் வஞ்சப் புகழ்ச்சியணி. 21

துணர்த்தாரளகமடநல்லீர்சுடுவெங்காமக்கொடுந்தீயைத்
தணிப்பானெண்ணிக்கொடுவந்ததண்ணென்கதிர்க்கால்வெண்டாரள
மணித்தாழ்வடமும்வியன்சினைத்தீதமாவின்றளிருமெஞ்ஞான்று
மணித்தாயிருந்தவடவையும்வெங்கானிற்றீயுமவித்தனவே.

இ-ள். துணர் – பூங்கொத்துகளையுடைய, தார் – மாலையணிந்த, அள கம் – கூந்தலையுடைய, மடம் – இளமைபொருந்திய, நல்லீர் – மங்கையரே, சுடு – சுடுகின்ற, வெம் – வெவ்விய, காமம் – ஆசையாகிய, கொடுந்தீயை – கொடியதீயை, தணிப்பான் – தணிக்கும்பொருட்டு, எண்ணி – கருதி, கொடு வந்த – கொண்டுவந்த, தண்ணென் – குளிர்ச்சிபொருந்திய, கதிர் – கிரணங் களை, கால் – வீசுகின்ற, வெள் – வெள்ளிய, தாரளமணி – முத்துக்களா லாகிய, தாழ் – தொங்கிய, வடமும் – கோவையும், வியன் – பருத்த, சினை – கிளைகளையுடைய, தேம் – வாசனைபொருந்திய, மாவின்தளிரும் – மாங் கொழுந்தும், எஞ்ஞான்றும் – எந்நாளும், அணித்தாயிருந்த – சமீபமா யிருக் கப்பெற்ற, வடவையும் – வடவாமுகாக்கினியாகவும், வெம் – வெவ்விய, கானிற்றீயும் – காட்டுத்தீயாகவும், அமைந்தன – ஆயின எ-று.

சைத்திய வுபசாரத்தின் பொருட்டு மேலே அணிவதற்குங் கீழே பரிப்பு தற்குமான மணித்தாழ்வடமும் மாவின்தளிருஞ் சமீபத்திலே கொண்டு வரும்பொழுதே அவைகள் தமயந்திக்குப் பெருந்தீப்போன்றிருந்த வென்க. அவைகள் அப்போது கொண்டுவரப் பட்டனவாயினும் மிகுந்த துன்பத்தை விளைத்தலால் எஞ்ஞான்றுமெனப்பட்டது. தமயந்தி விரக வெப்பத்தைத் தணிக்க வெண்ணிக்கொண்டுவந்த தாரளவடமும் மாவின்தளிரும் அதைச்செய்யாவிடினும் வீணாகாது வெப்பத்தை மிகச்செய்தலாகிய அநிட்டம் கிடைத்தலால் தகுதியின்மையணி. 22

மழலைத்தீஞ்சொன்மதர்நெடுங்கண் மடவீர்கொடுத்தீக்கடவுளும்வெ
சுழல்கட்பகுவாய்நிருதியுங்காரிருள்போனிறத்தசுடர்க்குஞ்சி [ஞ்
யழல்கட்கூற்றமுமுவந்துறைபுந்தென்பாற்றிசைதின்றசைந்துவருங்
குழவித்தென்றலாருயிரைக்குடியாதன்புகூர்ந்தே.

இ-ள். தீ – மதுரம்பொருந்திய, மழலைச்சொல் – குதலைச்சொல்லையும், மதர் – களிப்புப்பொருந்திய, நெடுங்கண் – நெடியகண்களையுமுடைய, மட

வீர் – மங்கையரே! கொடுந்தீக்கடவுளும்-கொடிய அக்கினிதேவனும், வெம்-வெவ்விய, சுழல்கண் – சுழல்கின்ற கண்களையும், பகுவாய் – பிளப்பாகிய வாயினையுமுடைய, திருதியும் – திருதியென்னு மரக்கனும், கார் – கரிய, இருள்போல் – இருளைப்போன்ற, நிறத்த – நிறத்தினையும், சுடர்க்குஞ்சி-செந்நிறச்சிகையையும், அழல் - அழலைச்செய்கின்ற, கண் – கண்களையுமுடைய, கூற்றும் – யமனும், உவந்து – மகிழ்ந்து, உறையும் – வசிக்கின்ற, தென்பாற்றிசைகின்று – தென்றிசையி லிருந்து, அசைந்துவரும் - உலாவிவருகின்ற, குழவித்தென்றல் – இளந்தென்றலானது, ஆர் – நிறைந்த, உயிரா – விரகிகளுடையவுயிரை, குடியாது – பானம்பண்ணுமல், அன்பு கூராத – அன்புமிகாது எ-று.

தன்னைச் சேர்ந்தவர்களைக் கொல்லுதல்பற்றித் தீக்கடவுட்குக் கொடிய நீயென்றும், தன்னைக்கண்டோர்கள் கலங்கியஞ்சும்படி அரக்கனு யிருத்தல் பற்றிச் சுழல்கட் பகுவாயென்றும், எவ்வளவு மனவலிமையை யுடையோர்களையும் உயிரைப் பிரிக்குங்காலத்து நடுங்கச்செய்யும் உருவினனுய் நிற்ப னென்பதுபற்றிக் கூற்றுவனுக்குச் சுடர்க்குஞ்சி யழல் கண்ணென்றும் அடைகொடுத்தார். பாம்பு குட்டியாயிருப்பினுங் கொல்லுமென்பதுபட ஆருயிரைக்குடியா தன்புகூராதெனப்பட்டது. தணந்தாரைவருத்துந் தென்றலின் கொடுமைக் கேதுவாகாத நீ, கூற்று நிருதியுறைகின்ற தென்றிசை என்னுமிவற்றை யேதுவாக்கிக் கூறுதலாற் கற்றோர் நவிற்சியணி. 23

விளரிச்சுரும்பர்பாண்முரலவிரிதண்படலைத்துழாய்மார்ப
ளெளிருந்திகிரிச்சுடர்ப்படையென்றோராதுள்ளம்வெருவியதோ
குளிர்வெண்மதியைநஞ்சுயிர்க்குங்கூர்முள்ளெயிற்றுக்கரும்பாந்த
ளெளிதிற்கவர்ந்தும்விழுங்காமலென்னேவாளாவுமிழ்ந்ததுவே.

இ-ள். விளரி – விளரிராகத்தைப்பாடுகின்ற, சுரும்பர் – வண்டுகளானவை, பாண்முரல – இசையைப்பாட, விரி – விரிந்த, தண் – தண்ணிய, அழாய்ப்படலை – துளபமாலையையணிந்த, மார்பன் – மார்பினையுடைய நாரணனது, ஒளிரும் – பிரகாசியாநின்ற, திகிரி – சக்கரமாகிய, சுடர் – காந்திபொருந்திய, படையென்று – ஆயுதமென்றெண்ணி, ஓராது – இன்னதென்றறியாமல், உள்ளம் – மனம், வெருவியதோ – பயந்ததோ, குளிர் – குளிர்ச்சி பொருந்திய, வெண் மதியை – வெள்ளிய சந்திரனை, நஞ்சுயிர்க்கும் - விடத்தைத்தருகின்ற, கூர்முள் – கூரிய முட்கள்போன்ற, எயிறு – பற்களையுடைய, கரும்பாந்தள் – இராகுவென்னும் பாம்பானது, எளிதில் - இலேசாக, கவர்ந்தும் – பற்றியும், விழுங்காமல் - உட்கொள்ளாமல், என்ன – என்னகாரணம், வாளா – வீண, உமிழ்ந்தது – உமிழ்ந்துவிட்டது எ-று.

வாளா என்பது பயனின்மைப் பொருளைத்தரும் இடைச்சொல். இராகுவானது தனது பகைவனுகிய திருமாலுடைய சக்கரப்படையானது விடுக்கப்பட்டவர்களைச் சேதியாமல் விடாதென்பதை யனுபவத்தா லறிந்துளதாதலின் வெருவியென்றும், சந்திரன் அதன் வடிவாயிருப்பினும் தன் வாய்க்

குட்பட்டபின்பு சந்திரனென்னு முணர்ச்சி யுண்டாகவேண்டி யிருக்கவும் பண்டைப்பயத்தா னுண்மையுணராது உமிழ்ந்தபடியால் வாளாவெனப்பட்டது. இவ்வேழத் திகிரிப்படையாக மயங்குதலின் மயக்கவணி. 24

முழைவாய்திறந்துதெழித்தடருமூரியெருமைப் * பெரும்பகடீர்க்
தொழியாதுவரிசூழ்கிடந்தவுலகில்வாழ்பல்லுயிர்கவர்ந்து
பழிகூர்வெய்யகருங்கூற்றைத்தருமனெனப்பேர்பகர்ந்திடுவோர்க்
கழன்மாமதியைத்தண்மதியென்றுரைக்குமாற்றமரிதேயோ.

இ-ள். முழை — குகையையொத்த, வாய்திறந்து — வாயைத்திறந்து; தெழித்து — பேரொலிசெய்து, அடரும் — போர்செய்கின்ற, மூரி - வலிமை பொருந்திய, பெரு — பெரிய, எருமைப்பகடு — எருமைக்கடாவை, ஊர்ந்து - செலுத்தி, ஒழியாது — நீங்காமல், உவரி — கடலானது சூழ்கிடந்த — சூழப்பெற்றிருக்கின்ற, உலகில் - உலகத்திலே, வாழ் — வாழ்கின்ற, பல்லுயிர் - பலவாகியவுயிர்களை, கவர்ந்து - வௌவி, பழிகூர் - நிந்தை மிகுந்த, வெய்ய - வெவ்விய, கருங்கூற்றை — கரியயமனை, தருமனென — தருமராசனென்று, பேர் பகர்ந்திடுவோர்க்கு — பேர் சொல்லுவோர்க்கு, அழல் — வெம்மையைச் செய்கின்ற, மாமதியை - பெரிய சந்திரனை, தண்மதியென்று — குளிர்ந்த சந்திரனென்று, உரைக்கும் — சொல்லுகின்ற, மாற்றம் — சொல்லானது, அரிதோ — அரியதோ எ-று.

முழைவாய் மற்ற வாய்களிலும் பெருவாயாம். முழைவாய் திறந்து தெழித்தடரு மூரியெருமை யென்றதனால் தன்னெலியினுலும் பகைவரைக் கொல்லுகின்ற தென்றதாயிற்று. வாழ்பல்லுயிர் கவர்ந்து பழிகூர் வெய்ய கருங்கூற் றென்றதனால் எத்தனையுங் கண்ணோட்டமின்றி யாவரையுங் கொல்லுங் கொடியோ னென்றதாயிற்று. பிராரத்தானுபவ அந்தத்தி லுயிரைப் பிரிப்பவனும் அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்கட்கீடாக நீதிக்கியையத் தண்டிப்பவனுமாயிருப்பினுங் கொல்லுந்தொழிலே தன் தொழிலாக வுடையவனுதலால் அவனுக்கு அப்பெயர் கூறலாகாதென்பாள் கூற்றைத் தருமனெனப்பேர் பகர்ந்திடுவோரென்றாள். எவ்விடத்திலுள்ள வெல்லாவுயிரையுங் கொல்லுகின்ற யமனைத் தருமனென்று சொல்லுவோர்க்குத் தண்டாபூபிக நியாயத்தால் தனக்கெதிர்ப்பட்டவைகளே மாத்திரங் கொல்லுகின்ற அழன்மதியைத் தண்மதியெனல் எளிதென்பது தோன்றுதலால் தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி. 25

அறுகான்முளுகுங்கூற்சிதையொருத்தியாவியுப்பப் [ள்
பெறுவான்வரைகளனைத்துமெடுங்கடல்வாய்ப்பெய்தபெருங்கவிக

---

* ஆணெருமையை அதற்குவிதித்த கண்டி என்னுஞ் சொல்லாற்கூறுது, பகடு என்னுஞ் சொல்லாற் கிளந்தது. "எருமையு ளாணினைக் கண்டி யென்றலு - முடியவந்த வவ்வழக் குண்மையிற் - கடியலாகா கடனலிந் தோர்க்கே." என்ற தொல்காப்பியத்து மரபியல்விதியா னடைக்கப்படும்.

சிறுகாலுயிர்க்குந்தமிழ்வரையை * முந்நீரகத்திற்சேர்த்தியவே
லுறுகாதலரைத்தணக்துறையுமடவார்பலருமுய்வாரே.

இ-ள். அறுகால் – வண்டுகளானவை, முரலும் – ஒலிக்கப்பெற்ற, நறு-வாசனைபொருந்திய, கூந்தல் – அளகத்தையுடைய, சீதையொருத்தி – சீதை யென்னுமொரு மங்கையானவள், ஆவியுய்யப்பெறுவான் – உயிர்பிழைக்கப் பெறும்பொருட்டு, வரைகளனைத்தும் – மலைகளியாவையும், நெடுங்கடல் வாய் – நெடியகடலினிடத்தே, பெய்த – இட்ட, பெருங்கவிகள் – பெரிய வானரங்கள், சிறுகால் – தென்றற்காற்றை, உவர்க்கும் – பெறுகின்ற, தமிழ் வரையை – பொதிய மலையை, முந்நீரகத்தில் – அக்கடலினிடத்து, சேர்த் தியவேல் – சேர்த்தனவாகில், உறு – பொருந்தப்பெற்ற, காதலரை – தினை வரை, தணந்து – நீங்கி, உறையும் – வசிக்கின்ற, மடவார்பலரும் – பலரா யுள்ளமாதர்களும், உய்வார் – பிழைப்பார்கள் எ-று.

வரைகளனைத்தும் நெடுங்கடல் வாய்ப்பெய்த பெருங்கவிகளென்றதனால் இவ்வுலகில்வாழும் வானரங்களைப் போல்வனவல்ல; தெய்வத்தன்மை யுள்ள வானரங்களென்றதாயிற்று. அவை யெவ்வளவு உயர்ந்தவைகளாயி னும் குரங்கினினமாதலால் ஒருத்தியுயிர் பிழைத்தற்பொருட்டு அனேக மலைகளைக் கடலினிடத்தே போட்டு அனேகருயிர் பிழைத்தற்பொருட்டு இவ்வொருமலையை அதனிடத்திற் போடாது விட்டவென்க. வானரங்கள் சிறுகாலுயிர்க்குந் தமிழ்வரையையுங் கடலினிடத்துப்போட்டால் மடவார் பலர்க்கும் உய்தல்கூடுமென யூகித்தலால் உய்த்துணர்வணி. 26

† சீதையொருத்திகாதலரைத்தணந்துளாரிற்சிறப்புடைய
ளாதலுணர்ந்தேதமருகிருந்தோரரக்கமாதராதலிஞற்

---

* முந்நீர் என்பது ஆகுபெயரானே கடலினையுணர்த்தும் அதற்கு ஆற்று நீர், ஊற்றுநீர், மேனீரென்றும் மூன்று நீர்களையுடையதெனப் பொரு ளுரைப்பாருமுளர் அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டு மில்வழி ஊற்றுநீரும் இன்றுமாகலானும் பொருந்தாதென்க. முதிய நீரெ னப் பொருள்கோடலும் "நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றும்" என்று சைவ சித்தாந்தப் பெரியோர் உரைத்ததலால் அதுவும் மேனீரென்பது அமை யாது. ஆனால் அதற்குப் பொருளியாதோவெனின் முச்செய்கையையு டைய நீரையுடையது என்பதாம்; முச்செய்கையாவது மண்ணைப்படைத் தலும் காத்தலும் அழித்தலு மென்ப. எனவே மூன்று நீர்மை (குணங் களை) உடையது முந்நீரென்றவாறு.

† சீதா என்னும் வடமொழி சீதை என்றுயிற்று, சீதா – உழவுகால். அதனிடத்தே தோன்றுதலால் அப்பெயர் பொருந்திற்றென்க. குசத்துவச முனிவர் புத்திரி வேதவதியென்பாள் இராவணன் றன்னைப் புணர்வான் பற்றினமையின், தினைக்குமகளாய் நின்னையுமூரையு மழிப்பிப்பல், எனச் சாபங்கூறி அவன் மறைவி மண்டோதரியிற்றிற பிறக்க, சோதிடர் தர் நிமித்தஞ்சொல்ல, கடல்வாய்ப் பேழையிலிட்டு எறிந்தமையால் மிதிலைக் கரையில் அடைபட்டுச் சனகனுழுத சாலிற்றோன்றினள் என்று புராண முரைத்தது. தமயந்தி சீதைக்கு முற்பட்டாளாயினும் நூல்புனைந்த ஆசிரி யர் பிற்பட்டாராகலின் சீதையை யீண்டுக்கூறல் பிழையன்றென்ப.

காதலுளர்போற்றோழியர்சூழ்ந்திவ்வாறியற்றிற்கழிதுயரா
லேதமுழுந்துள்ளுயிர்சோருமென்போலபர்வற்றிருப்பாளே.

இ-ள். சீதையொருத்தி – சீதையென்னு மொருத்திமாத்திரம், காதலரை – கணவரை, தணர்ந்துளாரில் – நீங்கினவர்களில், சிறப்புடையளாதல்–சிறப்புடையளாதலை, உணர்ந்தேம் – அறிந்தேம், அருகிருந்தோர் – பக்கத்திலிருந்தவர்கள், அரக்கர் மாதராதலினுல் – இராக்கத மங்கையராகையினுலே, தோழியர் – தாதியர்கள், காதலுளர்போல் – ஆசையையுடையவர்களைப்போல், சூழ்ந்து – சுற்றிக்கொண்டு, இவ்வாறு – இந்தப்பிரகாரம், இயற்றில்–செய்தால், கழி – மிகுந்த, துயரால் – துன்பத்தினுலே, எதிமுழுந்து – வருத்தமிகப்பொருந்தி, உள் – உள்ளேயிருக்கின்ற, உயிர் – ஆவி, சோரும் – சோர்வையடைந்திருக்கின்ற, என்போல் – என்னைப்போல, அயர்வற்று – துன்பத்தைப்பொருந்தி, இருப்பாள் – இருப்பாள் எ-று.

விரகிகளுக்குச் செய்யப்படுஞ் சைத்திய வுபசாரங்கள் நெருப்பிற்பெய்த நெய்போல் அவர்களுற்ற நோயை மேன்மேலும் வளரச்செய்வனவாதலின் அவ்வாறுசெய்யு மியல்பிலராகிய அரக்கமாதராற் சூழப்பட்டிருந்த சீதைக்கு அத்துயரமுள்ளவளவின் அதிகரியாதிருத்தலாற் சீதையொருத்தி காதலரைத் தணந்துளாரிற் சிறப்புடையளென்றுள். அரக்கர் தேவரை மானிடரைக்கொன்று தின்ன விரும்புவதன்றி அவர்களுக் குபசாரஞ் செய்யாரென்பது கருத்து. கொடுஞ்செயலையுடைய அரக்கமாதர் சூழ்தலா லுண்டாகிய சீதையின் வருத்தத்தைக் குற்றமாகவுஞ் சொல்லுதலால் இலேசவணி.

கொங்கிற் பொலிந்து நறவுயிர்கருங் கொன்றைத் தொடையணிகுழகன், திங்கட்கலைகளனைத்து மொளிர் செம்பொற் சடையிற் கரந்தனனே, வெங்கட்டுளைவா ளெயிற்றரவம் விழுங்கியுமிழாதிருந்ததோ, கங்குற் பொழுதுந் தனியாழி செலுத்தா நிற்குங் கதிரோனே.

இ-ள். கொங்கில் – வாசனையினுலே, பொலிந்து – பிரகாசித்து, நறவு–தேனை, உயிர்க்கும் – துளிக்கின்ற, கொன்றைத் தொடையல் – கொன்றை மலராற் செய்தமாலையை, அணி – தரிக்கப்பெற்ற, குழகன் – பரமசிவன், திங்கட்கலைகளனைத்தும் – சந்திரனுடைய பதினறு கலையையும், ஒளிர் – பிரகாசியாநின்ற, செம்பொன் – சிவந்த பொன் வடிவமாயிருக்கின்ற, சடையில் – சடாபாரத்தில், கரந்தனனே – ஒளித்துவைத்தானே? வெங்கண்–வெவ்வியகண்களையும், வாள் – ஒளிபொருந்திய, நுனை – நுனியையுடைய, எயிறு – பற்களையுமுடைய, அரவம் – பாம்பானது, விழுங்கி – உட்கொண்டு, உமிழாதிருந்ததோ – கக்காமலிருந்துவிட்டதோ? கங்குற்பொழுதும் – இராத்திரிகாலத்திலும், தனி – ஒப்பற்ற, ஆழி – சக்கரத்தை, கதிரோன் – சூரியனுனவன், செலுத்தாநிற்கும் – செலுத்துகின்றன் எ-று.

பிரணவரூபங் காணப்படும் கொன்றைப் பூமாலையிறைவன் தரித்தமை அவ்வடிவையும் அதற்குத்தலைமைப்பொருளாந் தன்மையையுமுடை

யன் ரூனென்றுணர்த்தற் கென்க. அது "ஒருமொழி யுருவந் தோன்று மிதழித்தார் கோடலொப்பி - வருமொழி வடிவுமற்றின் பொருளும்யா னென்றற்கன்றே" என்றதனு லறியப்படும். ஆழி - வட்டவடிவுடையது இரவிற்றோன்றி வெப்பத்தைச் செய்கின்ற சந்திரன் சடையினிடத்திற் கரந்தனனே உமிழாதிருந்ததோவென ஏதுவைக்கூறி அவன்றன்மையை யொழித்து இரவியின்றன்மை கூறுதலால் ஒழிப்பணி. 28

வடுக்கண்டுயிலாதறவருந்துமடவார்தமையும்படைத்தவரை
துடைக்கும்படிவெவ்விடங்காலுஞ்சுடர்மாமதியுமமைத்தழலின்
விடுக்குங்கதிர்கடொடிற்கனற்றும்வெம்மைக்காற்றுதிகழ்க்கதவ
மடைக்குங்கமலத்திடையொளிக்குமருமாமறையோன்வாழியவே.

இ-ள். வடு-மாவடுபோன்ற, கண்-கண்கள், துயிலாது - நித்திரைசெய்யாமல், அற-மிகவும், வருந்தும்-வருந்தப்பெற்ற, மடவார்தமையும்-மகளிரையும், படைத்து-உண்டாக்கி, அவரைத் துடைக்கும்படி - அம்மகளிரையழிக்கும்படி, வெவ்விடம்-வெவ்வியவிடத்தை, காலும் - கக்கப்பெற்ற, சுடர் - கான்றிபொருந்திய, மாமதியுமமைத்து - பெரியசந்திரனையும் படைத்து, அழலின் - தீயைப்போல், விடுக்கும் - (அவனுல்) விடப்பட்ட, கதிர்கள்-கிரணங்களே, தொடில் - தொட்டால், கனற்றும் - சுடுகின்ற, வெம்மைக்கு - வெப்பத்திற்கு, ஆற்றுது - தரிக்காமல், இதழ்க்கதவம் - இதழாகிய கதவுகளே, அடைக்கும் - அடைக்கப்பெற்ற, கமலத்திடை - தாமரைவீட்டில், ஒளிக்கும் - ஒளித்துக்கொள்ளும், அரு - அரிய, மா - பெரிய, மறையோன்-வேதத்திற்குரிய பிரமன், வாழிய - வாழக்கடவன் எ-று.

நான்முகனுனவன் மடவாரையும்படைத்து அவரை வருத்தும்படி சந்திரனையும் படைத்து அச்சந்திரன் தன்னையும் வருத்துமென்று கமலத்திடை யொளித்தா னென்றதனுல் பிறருக்குக்கேடு விளைப்பவைகளே யமைத்தவன், அவைகளே தனக்குங் கேட்டைவிளைக்குமென்று அஞ்சுவனென்பதும், இன்னதுசெய்யினின்னது பயக்குமென்னும் அறிவிலியென்பதும் பெறப்பட்டன. இப்படிச்செய்தோ ஞசமடைகவென்பாள் மறையோன் வாழியவென்றதனுல் வஞ்சப்புகழ்ச்சியணி. 29

தண்ணங்கதிர்வெண்மதியென்பார்தழலாய்முடிந்ததென்னளவும்
வண்ணவரிவின்மதன்பகழிமலராமென்பாரவையுமுயி
ருண்ணுமரவக்கணேபோலவுடற்றுனின்றவொருபாவிப்
பெண்ணென்றயறாற்றிடப்பிறந்தேதற்கின்றுமேதாம்பேருலகே.

இ-ள். (சந்திரனை) தண்-தண்ணிய, அம்-அழகிய, கதிர்-கிரணங்களையுடைய, வெண்மதியென்பார்-வெள்ளிய சந்திரனென்று சொல்லுவார், தழலாய்முடிந்தது-அது அக்கினியாய்விட்டது, என்னளவும்-என்மட்டும், வண்ணம்-அழகிய, வரி-நெடிய, வில்-கருப்புவில்லையுடைய, மதன்பகழி-மன்மதனுடைய பாணங்கள், மலராமென்பார்-மலரென்று சொல்லுவார்கள், அவையும்-அம்மலர்களும், உயிருண்ணும்-உயிரையுண்

ணுகின்ற, அரவக்கணைபோல – சர்ப்பபாணங்கள்போல, உடற்றுகின்ற-கொல்லுகின்றன, ஒரு-ஒப்பற்ற, பாவிப்பெண்ணென்று – பாவியாகிய பெண்ணென்று, அயல்தூற்றிட – அயலார்தூற்ற, பிறந்தேற்கு - பிறந்தவெனக்கு, பேருலகு – பெரியவிவ்வுலகிலுள்ளவைகளில், இன்னுமேதாம் – இனி எது வெதுவாமோ (யான்) அறியேன் எ-று.

அறியேனென்பது சொல்லெச்சம். மனிதர் பிறவியிற் பெண்பிறப் பிழிந்ததென்பாள், பாவிப்பெண்ணென்று பிறந்தேற்கென்றும் இவ்வுலகோர் தண்ணியவென்பவைகள் வெச்சென வாயிருக்கின் வெச்செனவாயிருப்பவைகள் எப்படியிருக்குமோ வென்பாள் இன்னுமேதாம் பேருலகென். றுஞ் சொல்லினன். 30

திரைசெய்கரியகடற்பிறந்தகிங்கட்கொழுந்துந்தமிழ்ப்போதிய
வரையில்வளர்ந்தநறுஞ்சாந்தும்வயவாள்வேந்தர்மார்பேற்குந்
தரளவடமுமுருகுயிர்க்குந்தண்ணென்மலரும்பைந்தொடிதன்
விரகவனலேமேன்மேலுமூட்டும்விறகுபோன்றனவே.

இ-ள். திரைசெய் – அலைகளைச்செய்கின்ற, கரிய – கருமைபொருந்திய, கடற்பிறந்த – கடலினிடத்தே தோன்றிய, கிங்கட்கொழுந்தும் – பாலசந்திரனும், தமிழ் – தமிழ்தோன்றிய, பொதியவரையில் – பொதிய மலையில், வளர்ந்த – வளரப்பெற்ற, நறுஞ்சாந்தும் – நறியசந்தனமும், வயம் - வலிமை பொருந்திய, வாள் – வாட்படையையுடைய, வேந்தர் – அரசர்களுடைய, மார்பு – மார்புகள், ஏற்கும் – ஏற்றற்குரிய, தரளவடமும் – முத்துமாலையும், முருகுயிர்க்கும் - வாசனையைத் தருகின்ற, தண்ணென்மலரும் - குளிர்ச்சியாயிருக்கின்ற மலரும், பைந்தொடிதன் – பசிய வளையலணிந்த தமயந்தியினுடைய, விரக அனலை – விரகத்தாலாகிய தீயை, மேன்மேலும் – மேலுமேலும், மூட்டும் – மூளச்செய்கின்ற, விறகுபோன்றன – விறகுகளைப்போலிருந்தன எ-று.

சந்திரன் சந்தனம் தரளவடம் மலர் அடைமொழிகளோடு கூறப்பட்டமையால் மிகவுங் குளிர்ச்சி செய்வனவெனக் காட்டுகின்றன. எப்படிப்பட்டவைகளாயினும் விறகுகள் நெருப்பை விர்த்தி செய்வனபோல இவைகள் விரகத் தன்பத்தை விர்த்திசெய்வனவெனக்கொள்க. எப்படியென்னில் தலைவனைக் கூடுமின்பத்திற்குத் தூணையாயுள்ள இந்நான்கு மிருக்கின்றனவே அவனில்லையேயென்ன நினைப்பையுண்டாக்கி அத்துயரத்தை மிகுவித்தலாம். சந்திரன் முதலியவற்றில் விரகாக்கினியை விர்த்திசெய்யும் விறகினைக் குறித்தமையால் தற்குறிப்பணி. 31

நறைகொப்புளிக்குமலர்வாளிநலியவாற்றுதுயிர்ப்பொறைகொண்
டுறைதற்கரிதென்றிகல் * வேழமுண்டகனிபோலுள்ளுடைந்து

* வேழமுண்ட கனியென்றதற்கு யானையினால் உண்ணப்பட்ட விளாம் பழம் என்று உரைப்பாருமுளர். அனைது வழுவென்க. என்னை? ஆசிரியர் நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியுரைக்கண் வேழமுண்டகனி என்பதற்கு யானைத்தீயுண்ட கனியெனவுரைத்து, யானையென்பது யானைத்தீ என்னும் ஓர்வகை நோயென்று விளக்கினாரகலின்.

மறுவற்றெளிரும திமுகத்துமானேர்நோக்கிவிடுத்திடவும்
பெறுதற்கரியவுறுவிதெனப்பிரியாதிருந்ததென்னுயிரே.

இ-ள். நறை - தேனை, கொப்புளிக்கும் - உமிழ்கின்ற, மலர்வாளி-மலர்க்கணைகளானவை, நலிய - வருந்துதல்செய்ய, ஆற்றுது—பொறுதவளாகி, உயிர்ப்பொறைகொண்டு – உயிர்ப்பாரஞ் சுமந்து, உறைதற்கு – தங்குதற்கு, அரிதென்று-அருமையதென்று, இகல்-பகைமைபொருந்திய, வேழமுண்ட கனிபோல் – யானையுண்ட விளங்கனிபோல், உள்ளுடைந்து - மனந்தளர்ந்து, மறுவற்று - களங்கமற்று, ஒளிரும் – விளங்காநின்ற, மதி - சந்திரன் போன்ற, முகத்து—முகத்தையுடைய, மான்நேர் - மானையொத்த, நோக்கி-பார்வையையுடைய தமயந்தி, விடுத்திடவும் – தன்னை விட்டுவிடவும், பெறுதற்கு—பெற்றிடுவதற்கு, அரியவுருவிதென - இஃதரிய வடிவமென்று, இன்னுயிர் – அவளினிய வுயிரானது, பிரியாதிருந்தது—விட்டு நீங்காமலிருந்தது எ-று.

உள்ளுடைந்தும் விடுத்திடவும் என்னும் உம்மைகள் கிழ்ப்போனவேட்கை முதலிய எட்டவத்தைகளையுந் தழுவிநின்றன. உள்ளுதல் - மூர்ச்சித்தலாம். விடுத்திடல் - சாக்காடாம். இவ்வவத்தைகள் பத்தும் இவளடைதலால் இனி மெய்யுருபுணர்ச்சி நிகழாவிட்டால் இவளுயிர் பிரியாதிரா தென்பார். பெறுதற்கரிய வுருவிதெனப் பிரியாதிருந்த தின்னுயிரென்றார். தமிழ்நூலிற் பத்தவத்தைகளில் தலைமகட்குச்சிலவவத்தைமாத்திரம்சொல்லியிருக்கின்றனவென்னில் இந்நூல் வடநூலினின்று மொழிபெயர்க்கப்பட்டதாகலின் அந்நயம்பற்றிக் கூறினரென்க. 32

தார்வாய்மூரலுமினவண்டின்சிறைமெல்வளியாவிடைதளர்ந்து
சோர்வாடிதலைபரந்தமுலைத்துணையினுப்பண்மைதோய்ந்த
கூர்வாணெடுங்கணீர்வார்தல்கொற்றமாரன்விரகமெனு [வே.
மீர்வாள்கைக்கொண்டுயிர்போழ்தற்கேற்றநூல்போன்றிருந்தது

இ-ள். தார்வாய் — மலர்மாலையினிடத்தில், மூரலும் - ஒலிக்கின்ற, இனம்—கூட்டமாயுள்ள, வண்டின் — வண்டுகளுடைய, சிறை – இறகினுடைய, மெல்வளியால் - மெல்லியகாற்றால், இடைதளர்ந்து—இடைவருந்தி, சோர்வாள் - சோர்பவளாகிய தமயந்தியானவள், நிதலைபரந்த - வேறுபட்ட நிறத்தையடைந்த, முலைத்துணையின் - இரண்டுதனங்களின், நாப்பண் – நடுவே, மை - அஞ்சனமானது, தோய்ந்த - கலந்த, கூர்வாள்-கூரிய வாட்படையையொத்த, நெடுங்கண் - நெடிய கண்களினின்றும், நீர்வார்தல்-நீரொழுகுதல், கொற்றம்—வெற்றிபொருந்திய, மாரன் - மன்மதனெனவன், விரகமெனும் - பிரிவென்கின்ற, ஈர்வாள் - அரிவாளை, கைக்கொண்டு – கையிற்கொண்டு, உயிர் - உயிரை, போழ்தற்கு - பிளத்தற்கு, ஏற்றநூல்போன்று-ஏற்றியநூலையொத்து, இருந்தது – இருந்தது எ-று.

சிறைமெல் வளியா லிடைதளர்ந்து சோர்வா ளென்றதனால், மிகவு மெல்லிய விடையினென்றுரைத்தது. ஏற்ற நூலாவது - மாமறுப்போர்

கோணுதலின்றிச் செவ்விதா யறுத்தற் பொருட்டுச் செய்யப்பட்ட களிக் கோடாம். மைதோய்ந்தொழுகிய கண்ணினில் மன்மதனது ஏற்றுநூல் குறிக்கப்பட்டமையால் தற்குறிப்பணி. 33

புலவுத்திரைசூழ்நிலவலயம்புரக்கும்வேந்தையிப்பிறப்பி
னலமுற்றுறவீண்டணைவதற்குநவைதீர்தவமுன்னியற்றேதே
னிலவுத்துவர்வாய்மடநல்லீரின்னும்பிறந்துபுணர்வனென
நிலவுத்தழலிற்புகுந்திறப்பநினையாகிற்குநேரிழையே.

இ-ள். புலவு – புலால்நாற்றத்தையுடைய, திரைசூழ் – கடல்சூழ்ந்த, நிலவலயம் – பூமண்டலத்தை, புரக்கும் – காக்கின்ற, வேந்தை – நளராசனை, இப்பிறப்பில் – இந்தப்பிறப்பில், நலம் – இன்பமானது, முற்றுற – நிறைவு பெற, ஈண்டு – இவ்விடத்தில், அணைவதற்கு – தழுவுதற்கு, நவைதீர் – குற்ற நீக்கிய, தவம் – தவத்தை, முன் – முற்பிறப்பில், இயற்றுதேன் – செய்யாதவான், இலவம் – இலவிதழ்போன்ற, துவர் – சிவந்த, வாய் – வாயையுடைய, மடம் – இளமைபொருந்திய, நல்லீர் – மடவீர், இன்னும் – இன்னமும், பிறந்து – உதித்தாவது, புணர்வனென – கூடுவேனென்று, நிலவு – சந்திரிகையாகிய, தழலிற்புகுந்து – தீயின் மூழ்கி, இறப்ப – உயிரைநீக்க, நேரிழை – தமயந்தியானவள், நினையாகிற்கும் – நினைக்கின்றாள் எ-று.

நெருப்பு முதலியவற்றில் தாமாயிறப்பவர்கள் அப்பொழுது கருதிய படி மறுமையி லடைவரென்பது புராணசித்தமாகலின், இன்னும் பிறந்து புணர்வனென நிலவுத்தழலிற், புகுந்திறப்ப நினையாகிற்கு நேரிழையென்றார். இலவம் – பொருளாகுபெயர். 34

மன்றற்குழலார்வளிவிலக்கிவயங்குசுடர்காத்தெனமாரன்
வென்றிக்கொடியினுருவமைந்தமடமான்முலையில்வீசாமற்
குன்றிற்பிறந்ததாதலைந்துகுளிர்தூங்கருவிதோய்ந்துநறுந்
தென்றற்குழவிநுழைந்துவருஞ்சிறுசாளரங்கடாள்செறித்தார்.

இ-ள். மன்றல் – பரிமளம்பொருந்திய, குழலாற் – கூந்தலையுடைய மகளிர், வளிவிலக்கி – காற்றினுலுண்டாகு மிடையூற்றை நீக்கி, வயங்கு – பிரகாசியாநின்ற, சுடர் – விளக்கை, காத்தென – காத்தாற்போல, மாரன் – மன்மதனுடைய, வென்றி – வெற்றிபொருந்திய, கொடியின் – கொடியைப்போல, உருவ – வடிவமானது, அமைந்த – அமையப்பெற்ற, மடமான் – தமயந்தியினுடைய, முலையில் – தனத்தில், வீசாமல் – மோதாமல், குன்றில் – பொதியமலையில், பிறந்து – தோன்றி, தாது – மலர்ப்பொடியை, அளைந்து – பூசிக்கொண்டு, குளிர் – குளிர்ச்சிபொருந்திய, அருவி – அருவி நீரில், தோய்ந்து – முழுகி, நறு – நறிய, தென்றற்குழவி – இளந்தென்றல், நுழைந்து – புகுந்து, வரும் – வருகின்ற, சிறு – சிறிய, சாளரங்கள் – பலகணிகளினுடைய, தாள் – பூட்டை, செறித்தார் – பற்றித்தார்கள் எ-று.

வளிவிலக்கிச் சுடர்காத்தலாவது – விளக்கு நிலைபெறும்படி திரை முதலிய செய்தலாம். இவளருளைக் கண்டளவில் – துறவியர் முதலிய பகைவரும் மன்மதனுக் கினங்கலின் மாரன் – வென்றிக்கொடியி னுருவமைந்த மடமானென்னூர். 35

வெந்தீயதனிற்பெய்தளிர்போன்மெலிந்துவிளையாட்டயர்செழும்பூம்
பந்தோடறியகழங்கணிகள்பலவுந்துறந்துமலர்மகளே
யந்தாரகலத்திருத்தியபோர்வேந்தன்பெயரேயறைகுதலாற்
செந்தார்ப்பசியகிள்ளையொன்றுந்துறவாதிருந்தாள்சேயிழையே.

இ-ள். வெந்தீயதனில் – வெவ்விய நெருப்பினில், பெய் – யோடப்பட்ட, தளிர்போல் – தளிரைப்போல, மெலிந்து – விரகாக்கினியால் வாடி, விளையாட்டயர் – விளையாடுவதற்குரிய, செழு - செழிய, பூ - அழகிய, பந்தோடு – பந்துடனே, அரிய – அரியவாகிய, கழங்கு – அம்மனைகளையும், அணிகள்பலவும் – பலவாபரணங்களையும், துறந்து – நீக்கி, மலர்மகளே - திருமாதை, அம் - அழகிய, தார் - மாலையணிந்த, அகலத்து - மார்பினிடத்திலே, இருத்திய – இருக்கச்செய்த, போர் – போரைவிரும்பிய, வேந்தன் - நளராசனது, பெயரே – பெயரினையே, அறைகுதலால் – சொல்லுதலால், செம்மை வந்த, தார் – இரேகையையுடைய, பசிய – பசுமை நிறத்தைப்பொருந்திய, கிள்ளையொன்றும் - கிளியொன்றினையும், சேயிழை - தமயந்தியானவள், துறவாது – நீக்காமல், இருந்தாள் - இருந்தனள் எ-று.

செம்மை இழை - சேயிழையெனப் புணர்ந்தது. தீயதனிற் - பெய் தளிரென்றமையால் மெலிதற்கு விரகாக்கினியும், மெலிந்தென்றமையால், தளிருக்கு வாடுதலும், வருவிக்கப்பட்டன. மலர்மகளே யந்தாரகலத்திருத்தியே போர்வேந்த னென்றமையால் பெருஞ்செல்வத்தையும் பெருவிறலையு முடையோ னென்றதாயிற்று. 36

அலைவாய்விடத்தினுடன்றோன்றியாவிகவரும்வெண்ணெருப்பே
யுலையாப்புவனமினைத்துமழலொருங்குகொளுத்துதற்கண்ணுன்
றலைமேலுனதுகலையொன்றேதரித்தானென்றுன்மிகவுமுயிர்க்
கொலைசூழ்குரினின்போலுங்கொடியாருளரோகூறென்றாள்.

இ-ள். அலைவாய் – கடலினிடத்தே, விடத்தினுடன் றோன்றி – நஞ்சினுடனேபிறந்து, ஆவி – உயிரை, கவரும் – வௌவுகின்ற, வெண்ணெருப்பே – (சந்திரனென்னப்பட்ட) வெள்ளிய நெருப்பே, உலையாதொடாத, புவனமினைத்தும் – உலகம் யாவையும், அழல் – தீயால், ஒருங்கு ஒன்றாய், கொளுத்தும் – கொளுத்துகின்ற, அதற்கண்ணுன் – நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன், தலைமேல் – தலைமீது, உனது கலையொன்றை – உன்னுடைய பங்கொன்றினையே, தரித்தானென்றால் – தரிக்கப்பெற்றானேயாகில், மிகவும் – அதிகமாக, உயிர் – உயிரை, கொலைசூழ்குரில் – கொல்லக்

கருதுவோர்களில், நின்போலும்—உன்னைப்போலும், கொடியார்—கொடுமையை யுடையவர்கள், உளரோ — இருக்கின்றார்களோ, கூறென்றுள்—சொல்லென்றுள் எ-று.

உலகமனைத்தையு மொருங்குகொளுத்தும் வாழித்தீயைத் தன்கண்ணிற் றரித்த பரமசிவனுக்கு உடலல்லாத தலையினிடத்தில் உன்பதினாறு பங்கி லொருபங்கன்றி அதிகமாகத் தரிக்கக்கூடாதாயின் உன்மூன் மெல்லியராகிய மாதரையிர்வாழ்தல் கூடாதென்பது கருத்து. வாய்—ழகனுருபு. அலை—ஆகுபெயர். நெருப்புச் செந்நிறமாகலின், சந்திரனை நிறம்நோக்கி வெண்ணெருப்பென்றுள். கலை—பதினறிலொருபங்கு. உளரோ என்ற தன்கண் ஓகாரவிடைச்சொல் எதிர்மறைப் பொருட்டில் வந்தது. 37

சந்திரோபாலம்பனப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 370.

கவனிப்பு:—மேற்கண்ட செய்யுளில் * இக்குறியிட்டுள்ளதை கீழ்க்கண்ட உதாரணத்தை சேர்த்துக்கொள்க.

* நித்தியப் பிரளயம், நைமித்திகப் பிரளயம், பிராகிருதப் பிரளயம், ஆத்தியந்தப் பிரளயம் என்னும் நான்கனுட் பிராகிருதப் பிரளயத்திலே உருத்திராது நெற்றிக்கண்ணின்றும் ஓர்பொறிதோன்றிப் பரந்துலகை யழிக்கும் அது "உரைபெறு நைமித் திகப்பிர ளயத்தை நவின்றன முயர்பிரா கிருதம்—பிரளய முரைப்பன் கேண்மினீர் பார்த்த மிரண்டுசென் றுணியிர் பிரம—னுருகெழு சிற்றத் தருத்திரன் பாதத் தொடுங்குமவ் வுருத்திரன் கோடி - யிரவிகல் லுருவா யுயிர்பிர மாண்ட மெரிபட நுதற்கண லெரிக்கும்" என்னுங் கூர்மபுராணச் செய்யுளாற்காண்க.

தென்றல் சந்தனம், முத்தாரம், கடல், பூவணை, இருள், பிரமன், கலைவலோர், குளிர்பொருள் செக்கர் முதலியவற்றை வெறுப்பனவாகச் சிலசெய்யுளிருப்பினும் சந்திரனை நிந்தித்தல் பெரும்பான்மைபற்றி "கழுகுத்தோட்ட" மென்றாற்போல இப்படலத்திற்கு அப்பெயரிடப்பட்டது.

* மன்மதாபாலம்பனப் படலம்.

அஃதாவது சந்திரனை நிந்தித்த தமயந்தியானவள் இப்படலத்தால் மன்மதனை நிந்தித்தல் சொல்லப்படுகின்றது.

கலி விருத்தம்.

மங்குலூடுமறைந்துயிர்வாட்டுமித்
திங்கடன்னைவெறுத்ததுதீங்கெனு
வங்கமூடொளித்தாருயிர்கூட்டுணுந்
துங்கமேவலைவெறுக்கத்தொடங்கினள்.

இ-ள். (தமயந்தியானவள்) மங்குலூடு-மேகத்தினிடத்திலே, மறைந்து-ஒளித்திருந்து, உயிர் – ஆவியை, வாட்டும் – வாட்டுகின்ற, இத்திங்கள் தன்னை – இந்தச்சந்திரனை, வெறுத்து – வெறுத்துப் பேசினது, தீங்கெனு-குற்றமென்று கினைத்து, அங்கமூடு – தேகத்தினுள்ளே, ஒளித்த - மறைந்து கின்று, ஆர் – நிறைந்த, உயிர் – ஆவியை, கூட்டுணும் – கொள்ளைகொள் கின்ற, துங்கம் – உயர்வுபொருந்திய, வேலை – மன்மதனை, வெறுக்க-வெறுத்தல்செய்ய, தொடங்கினள் – ஆரம்பித்தாள் எ-று.

மங்குலூடு மறைந்துயிர் வாட்டுமித் திங்கடன்னை வெறுத்தது தீங்கென்றது – தூரத்திலிருந்து தன்பஞ்செய்கின்றவனை வெறுப்பது காட்டிலழுவதுபோலப் பயனின்றென்றும், புறப்பகைக்கு மிகவும் அஞ்சவேண்டுவதின் றென்றுமாயிற்று. அங்கமூடொளித் தாருயிர் கூட்டுணுந் துங்கவேலை வெறுக்கவென்றதனால் - அகத்திலிருந்து தன்பஞ்செய்கிறவனை வெறுப்பதனாலே சிறிது பயனுண்டென்றும் உட்பகைக்கே அஞ்சவேண்டுமென்றுமாயிற்று. அது, "வாள்போற் பகைவரை யஞ்சற்க வஞ்சுக, கோள்போற் பகைவர் தொடர்பு" என்னுந் திருக்குறளானுணர்க. 1

நையுமென்னுயிர்நாடறப்பூங்கணை
யெய்யும்வேளொன்றியம்புவல்கேட்டியால்
வெய்யசெந்தழலேந்திவெண்ணீறணி
யையன்முன்னுறிலாண்டொழில்காண்பனால்.

---

* மன்மத = உபாலம்பனம் என்னும் வடமொழிகள் அந்நூன் முடிபு பற்றி மன்மதோ பாலம்பனம் எனப் புணர்ந்தது. மந்—கினைப்பவனை, மதன் – கொல்லுவோன் (வருத்துவோன்) என்று காரணங்கொள்க. உபாலம்பனம்--பழித்தல். எனவே தன்னை கினைப்பாரைக் காவாது மாறுக வருத்தந் தொழிலையுடைய மன்மதனைப்பழித்தல் என்பதுபொருள். படலம் என்றதன் இயலே "ஒருநெறியின்றி விரவிய பொருளாற்—பொதுமொழி தொடரினதுபடலமாகும்" என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

இ-ள். நையும் – வாடுகின்ற, என்னுயிர் – என்னுடைய வுயிரினை, காமற – பேரற, பூங்கணையெய்யும் – பூவம்பை யெய்கின்ற, வேள் – மன்மதனே! ஒன்றியம்புவல் – ஒன்று சொல்லுவேன், கேட்டி – கேட்பாயாக, வெய்ய – வெவ்விய, செந்தழல் – சிவந்ததீயை, ஏந்தி – தாங்கி, வெள்-வெள்ளிய, நீறணி – விபூதியைத் தரித்திருக்கின்ற, ஐயன்முன் – பரமசிவனெதிரே, உறில் – அம்பெய்யப் பொருந்துவையானால், ஆண்டொழில் – நின்னுண்மைச் சேவகத்தை, காண்பன் – காணுவேன் எ-று.

"குடிசையிற் குதிரை நடத்துவோனைப் போலத்" தன்கீழ்வாழும் விரகிகளிடத்தே தன்னுண்மையைக் காட்டுகின்றவ னென்பதுதோன்ற, நையு மென்னுயிர் நாமறப் பூங்கணை யெய்யும்வேளென்றாள். தன் பகைவர்முன்னே நிற்க அஞ்சுகின்றவ னென்பதுதோன்ற – ஐயன்முன்னுறிலாண்டொழில் காண்பனென்றாள். ஆண்டொழில் – அஞ்சாமை, வீரம், ஊக்கமுதலியவாம் அவர்முன் ஆண்மைசெல்லா தென்பதாம். அக்கடவுளொழிந்தவர்முன் செல்லுமென்பதுங் கருத்து. நாமமென்பது நாம் எனக் கடைகுறைந்தது. 2

அலரின்மீதுறையந்தணனெய்திட
மலரையன்றிவடிக்கணைநல்குமேற்
சிலையெனக்கழைகொண்டதிறலினை
யுலகில்யாவருயிர்கொண்டிருப்பரே.

இ-ள். அலரின்மீது – தாமரை மலரின்மேல், உறை – வசிக்கின்ற, அந்தணன் – பிரமனுனவன், எய்திட, எய்யும்படி, மலரையன் றி – பூங்கணையல்லாமல், வடி – வடிக்கப்பெற்ற, கணை – (இரும்பு முதலியவற்றாலாகிய) பாணங்களை, நல்குமேல் – கொடுப்பானேயானால், கழை – கரும்பினை, சிலையெனக்கொண்ட – வில்லாகக்கொண்ட, திறலினாய் – வலிமைபொருந்திய மன்மதனே! உலகில் – உலகத்தில், யாவர் – எவர்கள், உயிர்கொண்டு – ஆவியைக்கொண்டு, இருப்பர் – இருப்பார்கள் எ-று.

உனது தன்மார்க்கத்தையறிந்தே நான்முகன் இப்படிச்செய்தானென்பது கருத்து. இங்ஙனமுள்ள நின்க்கு அக்கணை தானுமீந்ததனலன்றோ அலரி லிருக்கின்றானென்பதும் தொனித்தல் காண்க. ஆயினுங் கணையளவினீந்தவன் உயிர்கண்மீது கருணையுடையவனே யென்பாள் அந்தணனென்றாள். 3

அருவமாயணுவாயமனத்தையும்
விரைகொள்வாளிவிடுத்துப்பிளத்தலாற்
பொருவில்வேள்கட்புலனிற்புலப்படு
முருவமேபோற்றலுனக்கரிதன்றோ.

இ-ள். அருவமாய் – அரூபமாகியும், அணுவாய் – அணுவடிவாயுமிருக்கின்ற, மனத்தையும்-மனத்தினையும், விரைகொள்-வாசனையைக்கொண்ட,

வாளி - மலரம்புகளே, விடுத்து – எய்து, பிளத்தலால் – பிளக்கின்றபடியால், பொருவில் – ஒப்பில்லாத, வேள் – மன்மதனே! கட்புலனில் – நேத்திரேந்திரியத்திற்கு, புலப்படும் – விடயப்படுகின்ற, உருவு – வடிவங்களே, போழ்தல் – பிளத்தல், உனக்கு அரிதன்று – உனக்கெளிதாம் எ-று.

அரோ – அசை. பொருவில்வேள் – அண்மை விளியாதலின் இயல்பு. மனத்தையு மென்றது உயர்வு சிறப்பும்மை. கட்புலனுக்கு விடயப்படாத மனத்தையும் பிளத்தலால் என்னுடலைப் பிளத்தலெளிதென்பாள் – கட்புலனிற் புலப்படு முருவுபோழ்த லுனக்கரிதன்றென்றாள். உருவைப்பிளத்தல் மனத்தைப் பிளத்தலாலெனச் சாதிக்கப்படுதலாற் செய்யுட்குறிப்பணி. 4

மன்றனுறுமதுமலர்வாளிகொண்
டின்றெனதுருயிரீருந்தகைமையாற்
குன்றவில்லிகொடுந்தழற்கண்ணிலவேள்
பொன்றினனெனல்பொய்யெனவேண்டுமால்.

இ-ள். மன்றல் – வாசனையானது, நாறும் - மணக்கின்ற, மது-தேனையுடைய, மலர் வாளிகொண்டு – மலரம்புகளைக்கொண்டு, இன்று – இப்பொழுது, என் – என்னுடைய, ஆர் – நிறைந்த, உயிர் – ஆவியை, ஈருந்தகைமையால் – அறுக்கின்ற மூறைமையினாலே, குன்றவில்லி – மேருவில்லேந்திய பரமசிவனுடைய, கொடு - கொடிய, தழற்கண்ணில் – நீவிழியில், வேள் – மன்மதனானவன், பொன்றினனெனல் – இறந்தானென்று சொல்வது, பொய்யெனவேண்டும் - பொய்யென்று சொல்லவேண்டும் எ-று.

பொய்யென்றெழியாது எனவேண்டு மென்றதனால் இதிகாசபுராணங்கள் பொன்றினனெனக் கூறுதலாற் பொய்யெனலாகாது மெய்யென வேண்டுமென்றும், ஆயின் அவமிர்த்தவையடைந்தபடியாற் பசாசனாகியென்னே வருத்துகின்றனென வேண்டுமென்றும், சகத்தூற்பத்திக்குக் காரணனாகிய காமதேவனுதலாற் பசாசனுதல் கூடாதென்றும், பரமசிவனது, தழற்கண்ணால் மடிந்தவன் மறுபடியும் பிழைத்தானெனல் அசம்பவமென்றும், அவன் பிழைத்து என்னே வருத்துவது அவருடைய ஆற்றற் குறைவாலன்று; வீரர்களுடைய பாவத்தினாலாகலின் அசம்பவமன்றென வேண்டுமென்றும் பொருள்படுதல் காண்க. வேளிறவாமையை யீருந்தகைமையாற் சாதித்தலாற் செய்யுட் குறியணி. 5

கூற்றமென்னக்கொலோபுரிவேனிலா
* னூற்றிதழ்க்கமலத்திறைநோன்மைய
வாற்றல்சான்றமலர்க்கணையைந்தல
தேற்றகல்கினுலகினையென்செயான்.

* நூறு இதழ்களையுடைய தாமரை மலரைக் கமலம் என்றும், ஆயிரம் இதழ்களையுடைய தாமரைமலரைக் குசேசயம் என்றும் கூறல் வழக்கு இதனை மாற்றியுமுரைப்ப.

இ-ள். கூற்றமென்ன – யமனென்னும்படி, கொலைபுரி – கொலைத்தொழிலைச் செய்கின்ற, வேனிலான் – வசந்தகாலத்திற்குரிய மன்மதன், நூற்றிதழ்க்கமலத்திறை – நூறிதழ்களையுடைய தாமரைமலரிலிருக்கின்ற பிரமனவன், நோன்மைய – நுட்பமாகிய, ஆற்றல்சான்ற – வலிமையுள்ள, மலர்க்கணை – பூவம்புகளை, ஐந்தலது – ஐந்தன்றி, எற்றம் – அதிகமாக, நல்கின் – கொடுத்தால், உலகினை – உலகத்தை, என்செயான் – என்னதான்பஞ் செய்யமாட்டான் எ-று.

எல்லாவற்றையும் நியதி செய்கின்ற பிரமனவன் மன்மதன் கொடுமையைக்கண்டு உலகத்திற் கிரங்கி மெல்லிய பூவைக் கணையாகச் செய்து அவையும் ஐந்தன்றி அதிகமாகக் கொடுத்திலனென்பது கருத்து. என்ன உவம வருபிடைச்சொல். 6

அருவமாயுமென்னுவிபதைத்துளம்
வெருவுமாறுவினைசெயும்வேனிலான்
கருமிடற்றிறைகண்ணிலெரிந்திடா
துருவமெய்தினுலகமுமுய்யுமே.

இ-ள். அருவமாயும் – அருவமடைந்தும், என் – என்னுடைய, ஆவிபதைத்து – உயிர்பதைத்து, உளம் – மனம், வெருவுமாறு – பயக்கொள்ளும்படி, வினைசெயும் – மலர்க்கணைகளைத் தொடுக்கின்ற, வேனிலான் – வசந்தகாலத்திற்குரிய மன்மதனவன், கருமிடற்றிறை – நீலகண்டத்தையுடைய பரமசிவனது, கண்ணில் – நெற்றிக்கண்ணில், எரிந்திடாது – எரிந்திடாமல், உருவமெய்தில் – வடிவத்தைப் பெற்றிருப்பானால், உலகமும் – உலகமும், உய்யுமோ – பிழைக்குமா எ-று.

''உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே'' யென்பவாகலின், இங்கே உலகமென்றது சிதேந்திரியராகிய முனிவரை யெனக்கொள்க. சரீரமில்லாதிருக்கும்போதும் இவ்வளவு தன்பஞ் செய்கின்றவன் மற்ற வீரர்கள் போலச் சரீரமுடையவனாயிருக்குமாயின் சிதேந்திரிய ரென்பதில்லாமற் போய்விடுமென்பாள் உருவமெய்தி னுலகமுமுய்யுமே யென்றாள். பிரமன் முதலிய தேவர்களின் எவ்வலாற் றிருக்கயிலைசென்று பிரமன்மீது மலரம்பெய்து நெற்றித் தனிவிழியா னீறாய மன்மதன், இரதிதேவியின் வேண்டுகோளுக்கையைந்து, சிவபெருமான் திருமணக்காலத்திற் றமது திருவுள்ளத்தில் நினைத்தருளக் கொம்மெனத் தோன்றினன். அதுகாலையிறைவன் ''இரதிக்கு உருவாயிருத்தி; மற்றையோர்க்கு அருவாயிருந்து நின்னரசியல் புரிதியென்று பணித்தருளலின் ''உருவமெய்தி னுலகமுமுய்யுமே'' என்றாள். அது ''வேண்டின னிரதியின்னுட் குருவமா யிருத்தியேனும் பரோ டிம்பர்க்கெல்லா - மருவினேயாகியுன்ற னரசியல் புரிதியென்றான்'' என்னுந் திருவிருத்தத்தாற் கண்டாம். 7

விரிந்தவேணிவிமலன்வெகுளியா
லெரிந்துளாரிற்பிழைத்தவர்யாவரே

கரிந்தவேள்பிழைத்தெய்வதுகன்னியர்
புரிந்ததீவினையின்புணர்ப்பாகுமே.

இ-ள். விரிந்த—விரியப்பெற்ற, வேணி—சடையையுடைய, விமலன்—பரமசிவனுடைய, வெகுளியால்—கோபத்தினால், எரிந்துளாரில்—எரிக்கப்பட்டவர்களிலே, பிழைத்தவர்—பின்னும் பிழைத்தவர்கள், யாவர்—எவர், கரிந்தவேள்—கரிந்துபோன மன்மதன், பிழைத்து—பின்னும்பிழைத்து, எய்வது—பாணங்களையெய்வது, கன்னியர்—மாதர்கள், புரிந்த—செய்த, தீவினையின்—பாவத்தினுடைய, புணர்ப்பாகும்—சம்பந்தமாகும் எ-று.

பரமசிவனுடைய வெகுளியால் எரிந்த திரிபுரர் முதலியோர் பின்னும் பிழைத்திலரென்க. கன்னியர்புரிந்த தீவினையின் புணர்ப்பென்று மாதரைப் பழித்தலில் மிகவுங் கொடியனென மன்மதன் பழிப்புத்தோன்றுதலால் வஞ்சப்பழிப்பணி. 8

சடிலமன்றுபைந்தார்குழல்பின்னல்கார்
மிடறுதோன்றல்விடமன்றுநானமே
யுடல்விளர்ப்புவெண்ணீறன்றுருவிலா
யடர்வதென்னையரனலன்காண்டியால்.

இ-ள். உருவிலாய்—வடிவமில்லாத மன்மதனே! அடர்வதென்னை—என்னுடன் போர்செய்வதென்ன? சடிலமன்று—சடையன்று, பைந்தார்—பசியபூமாலையையணிந்த, குழல்—கூந்தலினது, பின்னல்—வேணி, கார்—கருமை, மிடறு—கழுத்தினிடத்தில், தோன்றல்—தோன்றுதல், விடமன்று—நஞ்சமன்று, நானமே—கத்தூரியாம், வெள்—வெள்ளிய, நீறன்று—விபூதியன்று, உடல் விளர்ப்பு—சரீரத்தினது வெண்ணிறமாம், அரனலன்—(ஆதலால் யான்) பரமசிவனல்லன், காண்டி—(நீ) காண்பாயாக எ-று.

மன்மதனுக்கும் தனக்கும் பகையின்மையா லவன் தன்னை வருத்துதற்குக் காரணம் தன்னுடற் குறியால் தனது பகைவனுகிய பரமசிவனென்று நினைப்பேயாகுமென்றெண்ணி அதனைச்சொல்லி யொழிந்தாளென்க. கூந்தன் முதலியவற்றிற் சடில முதலிய பிராந்தியைக் கற்பித்தொழித்தலால் மயக்கவொழிப்பணி. 9

கொன்செய்வாளிகுளித்தசெம்புண்ணிடைத்
துன்பமெய்தத்தழல்சொரிந்தாலென
வன்பர்போலநின்றுமிறைப்பரா
லென்செயாருயிர்த்தோழியருன்னுமே.

இ-ள். உயிர்த்தோழியர்—உயிரையன்ன தோழியரா யிருந்தவர்கள், அன்பர்போல—இப்பொழுதென்னிடத் தன்புடையவர்போல, நின்று—எனைச்சூழ்ந்துநின்று, கொன்செய்—அச்சத்தைச் செய்கின்ற, வாளி—மன்மதபாணங்கள், குளித்த—தைத்த, செம்—சிவந்த, புண்ணிடை—புண்ணி

னிடத்திலே, தன்பமெய்த - யான்றுன்பத்தையடைய, தழல்சொரிந்தா லென - நெருப்பைச் சொரிந்ததுபோல, ஆரம் — சந்தனக்குழம்பை, இறைப் பர் — வீசுவார்கள், இன்னும் — இன்னமும், என்செயார் - யாதுசெய் யார்கள் எ-று.

இருந்தவரென்றும் இப்பொழுதென்றும் பொருளுக் கேற்பக் கூட்டப் பட்டன. தோழியர் செய்யு முபசாரமாகிய குணத்தைக் கூறலால் இலே சவணி. 10

தேற்றுவார்சிலர்தேங்கமழ்வாசநீர்
தூற்றுவார்சிலர்தொல்குலதெய்வதம்
போற்றுவார்சிலர்பூண்முலைச்சாந்தினு
லாற்றுவாரினழற்றுகின்றார்சிலர்.

இ-ள். சிலர் — தோழிகளுள்ளே சிலர், தேற்றுவார் — தேறச்சொல்லு வார்கள், சிலர் — சிலரானவர், தேம் — வாசனையான து, கமழ் - மணக்கின்ற, வாசநீர் — பனிநீரை, தூற்றுவார் - வீசுவார்கள், சிலர் — சிலரானவர், தொல் — தொன்றுதொட்டாராதித்து வருகின்ற, குலதெய்வதம் — குல தெய்வத்தை, போற்றுவார் - பிரார்த்தனை செய்வார்கள், சிலர் - சிலர், பூண் — ஆபரணங்களையணிந்த, முலை — தனத்தின் வெப்பத்தை, சாந்தினுல் - சந்தனக் குழம்பினுல், ஆற்றுவாரின் — தணிப்பவர்களைப்போல, அழற்று கின்றார் - வெப்பமிகச் செய்வார்கள் எ-று.

தேற்றுதலாவது நின்னுல் விரும்பப்பட்ட நாயகனை நீபெறுவை, உன் றந்தையும் உன் விருப்பிற்கு மாறுகச் செய்யான் என்பனசொல்லி அவ ளுள்ள வருத்தத்தைப்போக்கல். தெய்வதம் போற்றுதலாவது தாம் வழி படும் கடவுளை நோக்கி இவளுக்கிஷ்டஞ் சித்தியாகவும் துன்பம் நீங்கவும் அருள்செய்க வென்று வேண்டிக்கோடல். குலதெய்வம் — சிவனென்பத் தெளிக. 11

இன்னவாறுமகளிரியற்றவுங்
கன்னல்மாரன்கணையுயிர்ஈரவும்
பொன்னின்வார்முலைமுத்தம்பொரிந்திடத்
தன்னையும்மறந்தாடமயந்தியே.

இ-ள். இன்னவாறு — இவ்விதமாய், மகளிர் - தோழிகள், இயற்றவும் - உபசாரஞ் செய்யவும், கன்னல் — கருப்புவில்லேந்திய, மாரன் - மன்மத னுடைய, கணை — பாணங்கள், உயிர் - ஆவியை, ஈரவும் — பிளக்கவும், பொன்னின் - பொன்னினுற்செய்த, வார் — கச்சையணிந்த, முலை — தனங் களின்மீதணிந்த, முத்தம் — முத்துக்கள், பொரிந்திட - நீருகவும், தமயந்தி - தமயந்தியானவள், தன்னையுமறந்தாள் — தன்னையுமறந்துவிட்டாள் எ-று.

மன்மதபாணஞ் செய்கின்ற வெம்மையானது தோழியர்கள் செய் கின்ற சைத்திய வுபசாரத்தினுலும் தணியாமல் மூர்ச்சித்தாளென்க. இயற்ற

வும் ஈரவும் பொரியவும் என்னுமெச்சங்கள் மறந்தாளென்னும் வினை கொண்டன. 12

நாவிமென்குழனன்னுதற்றோழியர்
காவியங்கட்கதிர்முலைக்கன்னியைப்
பூவின்மெல்லணைசேர்த்திப்புடையிருந்
தாவியுண்டுகொலோவென்றழுங்குவார்.

இ-ள். நாவி – கத்தூரியணிந்த, மெல் – மெல்லிய, குழல் – கூந்தலையும், நன்னுதல் – நல்லநெற்றியையுமுடைய, தோழியர் – தோழிகள், காவி-கருங்குவளை போன்ற, அம் – அழகிய, கதிர் – காந்திபொருந்திய, முலை-தனங்களையுடைய, கன்னியை – தமயந்தியை, பூவின் – மலரினாற் செய்யப் பட்ட, மெல் – மெல்லிய, அணை – மெத்தையின்மேல், சேர்த்தி – சேர்த்த, புடையிருந்து – பக்கத்திலிருந்து, ஆவி – உயிரானது, உண்டுகொலோ வென்று – உண்டோஇல்லையோவென்று, அழுங்குவார் – வருந்துவார் எ-று.

மூர்ச்சையுஞ் சாக்காடோ டொக்குமாதலின் அவளுயிரைக் குறித் தச் சந்தேகித்தற் கிடமுண்டாயிற்றென்க. கைக்கிளைப் படலத்திலே மதப்பிலிற்றென்னுஞ் செய்யுளில் மெல்லணைக்கிடத்தினு ரென்றும், சந் திரோபாலம்பனப் படலத்திலே பதுமமலர் மெல்லணைக் கிடத்தியென்றுங் கூறி யீண்டுப் பூவின் மெல்லணைசேர்த்தி யென்றுங் கூறல் கூறியது கூறலாமெனின் பெருஞ் செல்வர்க்குப் பலவணைகள் பரப்பப்பட்டிருத்த லும் ஒவ்வொன்றும் சிறிது சிறிது காலம் படுத்தலால் வாடிக்கழிபடுதலு மியல்பாதலால் கூறியது கூறலாகாது. அன்றியும் முன்னுள்ள வணையினும் மெல்லியவணையிற் கிடத்தினு ரென்றுமாம். ஆவியுண்டுகொலோ வென்ற தனுல் இல்லையோவென்பது வருவிக்கப்பட்டது. 13

எண்ணியெண்ணியிரங்குவதென்னுயிர்ப்
புண்ணிகழ்த்ததுயிர்துறந்தாளள்
வண்ணமென்றுவர்வாய்துடிக்கின்றது
கண்ணிமைத்தனகாணுமென்பார்சிலர்.

இ-ள். சிலர் – அத்தோழிகளிற் சிலர், எண்ணி யெண்ணி – நினைத்து நினைத்து, இரங்குவதென் – புலம்புவதென்ன, உள் – உள்ளே, உயிர்ப்பு-மூச்சு, நிகழ்ந்தது – அசைந்தது, உயிர் – ஆவி, துறந்தாளலள் – நீங்கினவ ளல்லள், வண்ணம் – அழகிய, மெல் – மெல்லிய, துவர் – பவளம்போன்ற, வாய் – வாயானது, துடிக்கின்றது – துடியாகின்றது, கண் – கண்க ளானவை, இமைத்தன – இமைத்தல் செய்கின்றன, காணுமென்பார்-பாருமென்பார்கள் எ-று.

இங்கிகழ்ச்சிகளால் அம்மூர்ச்சை தெளிந்தன வெனவறிதல் இதனுற் கூறப்பட்டது. எண்ணி யெண்ணி யிரங்கலாவது இவள் சாக்காடுறின் இவ

ளாற் செய்யப்பெற்ற சிறப்பு முதலியவெல்லாம் இழக்கப்படுவோமென் றிரங்கலால் தன்மைநவிற்சியணி. 14

மைத்தடங்கணிர்மாற்றுமின்சோர்ந்துவீ
ழுத்தரீயமுயர்மூலைசேர்த்துமின்
கொத்துநாண்மலரோடுங்குலைந்துசோர்
மொய்த்தகூந்தன்முடிமினென்பார்சிலர்.

இ-ள். சிலர் – தோழிகளிற் சிலரானவர், மை – அஞ்சனந்தீட்டிய, தடம் – விசாலம்பொருந்திய, கண் நீர் – கண்களினீரை, மாற்றுமின் – மாற்றுங்கள், சோர்ந்து – சோர்வையடைந்து, வீழ் – வீழ்கின்ற, உத்தரீயம் – மேற்போர்வையை, உயர் – உயர்ந்த, மூலை – தனத்தின்மேல், சேர்த்துமின் – சேருங்கள், கொத்து – கொத்தாகிய, நாள் – அன்றலர்ந்த, மலரோடும் – பூக்களுடனே, குலைந்து – அவிழ்ந்து, சோர் – சோர்கின்ற, மொய்த்த – நெருங்கிய, கூந்தல் – குழலை, முடிமினென்பார் – முடியுங்களென்று சொல்லுவார் எ-று.

இனி ஏற்பாடு அணித்தாகலின் இவளுடைய தந்தை முதலியோர் வருதற்கு முன்னமே முன்போல ஆடையணி முதலியவற்றைத் திருத்த முயல்கின்றரென்பது கருத்து. இதுவும் அவ்வணி நீர் என்றது சந்தநோக்கினீர் எனக் குறுகிற்று. உத்தரீயம் என்பது இக்காலத்துத் தாவணி எனவும் தொங்கல் எனவும் வழங்கப்படும். 15

சுடரும்வெண்மதிதூற்றுந்தழல்சுட
விடரின்மூழ்கியிறந்துபடுமுன
மடவரற்கிடர்மாற்றுவன்யானெனக்
கடன்முகட்டிற்கதிரவன்சேறன்றிஞன்.

இ-ள். சுடரும் – பிரகாசியாநின்ற, வெள் – வெள்ளிய, மதி – சந்திரனவன், தூற்றும் – தூற்றுகின்ற, அழல் – நீயானது, சுட – சுடுதல் செய்ய, இடரில் – துன்பத்தில், மூழ்கி – முழுகி, இறந்துபடுமுனம் – உயிர் நீங்குமுன்னே, மடவாற்கு – தமயந்திக்கு, இடர் – துன்பத்தை, யான் – யானே, மாற்றுவன் – நீக்குவன், என – என்பவன்போல, கடல்முகட்டில் – கடலினதுச்சியில், கதிரவன் – சூரியன், சேன்றிஞன் – உதயமானான்.

சந்திரனலும் மன்மதனலும் இரவின் மிகுகின்ற தமயந்தியின் துயரம் பகல்வர வொருபுடை நீங்குமென்பார், இடர்மாற்றுவன் யானெனக்கடன் முகட்டிற் கதிரவன் சேறன்றினனென்றார். இரவி யுதயத்தில் தமயந்தி வருத்த நீக்குவிப்போன் றன்மையைக் குறித்தலால் தற்குறிப்பணி. 16

மன்மதாபாலம்பனப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் – 386.

* இந்திரப்படலம்.

அஃதாவது தமயந்தியின் சுயம்வரத்திற்கு இந்திரன் முதலிய தேவர்வரவு சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

இடுக்கணைய்தவிகந்துகளித்துளார்
நடுக்கமெய்தகலிதருவேந்தரின்
விடுத்தகண்கதிர்த்திங்கள்விளங்கொளி
கெடுத்துவெய்யவன்கீழ்த்திசைத்தோன்றினான்.

இ-ள். இடுக்கண் – துன்பத்தை, எய்த – (அந்நாட்டிலுள்ளோ) ரடைய, இகந்து - அதிக்கிரமித்து, களித்துளார் – செருக்கடைந்த குறு நிலமன்னர், நடுக்கம் – நடுக்கத்தை, எய்த - அடைய, கலிதரு-வருத்துகின்ற, வேந்தரின்- அரசரைப்போல, விடுத்த – (தமயந்திவருந்தும்படி) விடுக்கப்பெற்ற, தண்- குளிர்ச்சிபொருந்திய, கதிர் – கிரணங்களையுடைய, திங்கள் – சந்திரனுடைய, விளங்கு - விளங்குகின்ற, ஒளி – காந்தியை, கெடுத்து - அழித்து, வெய்ய வன் – சூரியனெனவன், கீழ்த்திசை - கீழ்த்திசையில், தோன்றினான் – உதித் தான் எ-று.

இடுக்குகண் என்னுஞ் சொல் இடுக்கண் என மருஉவிற்று, துன்ப முற்றோர்க்குக் கண்கள் ஆழ்ந்து சிறுத்துக் காணப்படல் வழக்காகலின் இது காரணப் பெயரென்க. கலிதரு – இதன்கண்தா – அணைவினை, இன்-உவம வருபு. ஏழையரை வருத்தியவர்க்குக் கேடுதாமே வருமாதலில் தமயந்தியை வருந்திய சந்திரனும் ஒளியிழந்தானென்க. கேடுதாமே வருதல் – "பிறர்க் கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா பிற்பகற் ருமேவரும்" என்னுந் திருக்குறளா னுணரப்படும் வேந்தரைப்போல வெய்யவன் கீழ்த்திசைத் தோன்றினனென்றமையால் உவமையணி. 1

† வையமேழுடைமன்னனிருத்தலும்
வெய்யபாசறைவிட்டகல்வேளிரி

---

* இந்திரன்—ஐசுவரியத்தையுடையவன், இனி—ஐசுவரியம், இந்திர னது வருகையைக் கூறும்படலம் என விரிதலின் ஆரும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

† வையம் ஏழாவன—சம்புத்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத் தீவு, சான்மலித்தீவு, கோமேதகத்தீவு, புட்கரத்தீவு என்பன இவைமுறை யே நாவல்மரம் (சம்பு) தேக்கமரம் (சாகம்), பொன்மயமான தர்ப்பை (குசை) இலவமரம் (சான்மலி), பசுக்களின் நிணம் (கோமேதகம்) பொற்ருமரை (புட்காம்) அன்றில்வடிவாய அசுரமேல (கிரவுஞ்சம்) என்னுமிவை யிருத்த லால் அப்பெயர் பெற்றன. இவற்றைமுறையே எழுகடலுஞ் சூழ்ந்திருக்கும் இன்னும் அறியவேண்டுவன சிவதருமோத்திரத்திற் காண்க.

னையசெங்கதிராதவன்றோன்றுமுன்
செய்யவான்விட்டகன்றதுதிங்களே.

இ-ள். வையமேழுடை - ஏழு தீவுகளையுமுடைய, மன்னன் - அரசனவன், இறுத்தலும் — வந்துதங்கினமாத்திரத்தில், வெய்ய – வெவ்விய, பாசறைவிட்டு – படை வீட்டைவிட்டு, அகல் – நீங்குகின்ற, வேளிரின்-குறுநிலவேந்தரைப்போல், ஐய — அழகிய, செங்கதிர் - சிவந்த கிரணங்களையுடைய, ஆதவன் - சூரியனவன், தோன்றுமுன் – உதிக்குமுன்னே, செய்ய — சிவந்த, வான்விட்டு – ஆகாயத்தைவிட்டு, திங்கள் — சந்திரனது, அகன்றது – நீங்கியது. எ-று. இதவும் உவமையணி. 2

அன்னகாலையிலாய்வளைத்தோழியர்
தென்னல்வாட்டுநிலவுக்கதிர்மதி
யின்னுமெய்திலிறந்துபடுமென
வுன்னியன்னையொடுற்றவைகூறினர்.

இ-ள். அன்னகாலையில் — அப்பொழுதில், ஆய் – ஆராய்ந்தெடுக்கப்பட்ட, வளை – வளையலையணிந்த, தோழியர் - தோழிகள், தென்னல் – தேற்றைப்பொழுதில், வாட்டு – வாட்டிய, நிலவு – பிரகாசம்பொருந்திய, கதிர்-கிரணங்களையுடைய, மதி – சந்திரனவன், இன்னும் – இன்னமும், எய்தில் - வந்தால், இறந்து படுமென – தமயந்தி மரணத்தையடைவாளென்று, உன்னி – நினைத்து, அன்னையொடு – தாயுடனே, உற்றவை-அடைந்த காரியங்களை, கூறினர் – சொல்லினர்கள் எ-று.

தோழியென்றது உயிர்த்தோழியரை; செவிலியும் நற்றாயும் அன்னையாதலின் சண்டு அன்னையென்றது செவிலியை யெனக்கொள்க. "தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்றலும் — பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்றலுஞ்-செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றலும் – நற்றாய் தந்தை தன்னையர்க்கறத்தொடு – நிற்றலும் விதியென்ப தெறியுணர்ந்தோரே" என்பது விதி. 3

அத்திறந்தெரிந்தாய்மலர்க்கோதைவெண்
முத்தமூறன்முதுக்குறைந்தாளென
வுய்த்துரைத்தனளோடைப்புகர்முக
மத்தமால்கரிமன்னவர்மன்னற்கே.

இ-ள். அத்திறந் தெரிந்து – அச்செவிலி சொல்லிய திறத்தைத் தெரிந்துகொண்டு, ஆய் — ஆராய்ந்தெடுக்கப்பட்ட, மலர் — மலர்களையணிந்த, கோதை — கூந்தலையுடைய நற்றாயானவள், வெள் – வெள்ளிய, முத்தம்-முத்துக்களையொத்த, மூரல் — பற்களையுடைய தமயந்தியானவள், முதுக்குறைந்தாளென - பேரிவடைந்தாளென்று, ஓடை – பட்டமணிந்த, புகர்முகம் – புள்ளிபெற்ற முகத்தையுடைய, மத்தம் - மதங்கொண்ட, மால்-பெரிய, கரி — யானையையொத்த மன்னவர்மன்னற்கு – வீமராசனுக்கு, உய்த்து – அவ்விடத்திற் கருத்தைச்செலுத்தி, உரைத்தனள் - சொல்லினள்.

தடங்கொள்வெம்மூலசாற்றியமாற்றமு
நுணங்குசிற்றிடையாக்கமுநோக்கிய
மடங்கலேறனையான்மணநாட்டிய
முடங்கல்போக்கினன்மொய்கழல்வேந்தர்க்கே.

இ-ள். தடங்கொள் – பருமையைக்கொண்ட, வெம் – விருப்பத்தைத் தருகின்ற, மூல – தனத்தையுடைய தூணெவியானவள், சாற்றிய – சொல்லிய, மாற்றமும் – சொல்லையும், நுடங்கு-வளையாநின்ற, சிற்றிடை – சிறிய விடையையுடைய தமயந்தியினது, ஆக்கமும் – பருவத்தையும், நோக்கிய-கண்ட, மடங்கலேறனையான் – ஆண்சிங்கத்தையொத்த வீமராசனனவன், மணம் – விவாகநாளை, நாட்டிய – குறிக்கப்பெற்ற, முடங்கல் – ஓலையை, மொய் - நெருங்கிய, கழல் – வீரக்கழலினையுடைய, வேந்தர்க்கு – அரசர்க்கு, போக்கினன் – செலுத்தினன் எ-று.

தலெவியின் சொற் குறியாலும், தமயந்தியின் மெய்க்குறியாலும், அந்தப்புரத்தினிகழ்ந்த ஆரவாரத்தினாலும் இந்நோய்க்குக் காரணங்கண்ட வீமராசன், வடிவும் அழகும் நற்குணமும் நற்செய்கையும் நிறைந்த தன் மகளின் கருத்துக்கிசைந்த அரசன் இன்னனென்பது தெளியக்கூடாமையால் சுயம்வரம் நாட்டிய விவாகவோலையை அரசர் யாவருக்கும் விடுத்தானென்க. 5

வேலைசூழ்புவிமன்னர்க்குவேந்தர்கோ
னோலைபோக்கியதோர்ந்துயர்கற்பக
மாலைதாழ்முடிவாசவற்கோதுவான்
ஞாலமேத்திசைநாரதன்போயினன்.

இ-ள். வேந்தர்கோன் – வீமராசனனவன், வேலைசூழ் – கடல்சூழ்ந்த, புவிமன்னர்க்கு – பூமண்டலத்தை யாளுகின்ற அரசர்க்கு, ஓலை - ஓலையை, போக்கியது – செலுத்தியதை, ஓர்ந்து - அறிந்து, உயர் – உயர்ந்த, கற்பக மாலை – கற்பகத்தினுடைய மலர்மாலை, தாழ் – தாழ்கின்ற, முடி – மகுட மணிந்த, வாசவற்கு - இந்திரனுக்கு, ஓதுவான் – சொல்லும்பொருட்டு, ஞாலம் – உலகத்தார், ஏத்து - அதிக்கின்ற, இசை – புகழையுடைய, நாரதன் – நாரதமுனிவன், போயினன் - போனன் எ-று.

திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவன் இச்சுயம்வர அதிசயத்தை இந்திரனுக்குச் சொல்லி அவனையும் இதற்கு வருவித்தல் சிறப்பென்று நினைத்துப் பொன்னுலகத்திற்குச் சென்றனென்க. ஞாலம் ஏத்து இசை நாரதன் என்பதற்கு உலகம் புகழும் இசையில்வல்ல நாரதன் எனவும், உயர்ந்தோராற் புகழப்படும். * இசைநூல்செய்த நாரதன் எனவும் பொருளுரைத்தலுமாம். 6

* நாரதர் இசை வல்லாரென்பது. "இன்னிசை நான்முழுதணர்ந்த யாழ்வல்லோனே" என இப்படலத்திலும் "நாரதன் வீணை நயந்தெரிபாடலும்" எனச் சிலப்பதிகாரத்தும், "தலமுத லுழியிற் றோனவர் தருக்கறப்-

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானவரோண் சுடரெறிக்கு முடிதாழ்த்து வனைகழற்கால்
வணங்கியேத்தத், தேனிமிருங் கற்பகநாண் முகையுடைந்து பசிய
நறுந் தேறலூற்ற, மேனகைசா மரையிரட்ட வுருப்பசிவெள்ளிடை
யுதவ விளரித் தீஞ்சொற், பானலங்கட் டிலோத்தமைமென் சதி
முறையிற் பதம்பெயர்க்கும் பாணிதூங்க.

இதமுத லைந்துபாட்டுக்கள் ஒருதொடர். இவ்வைந்து
பாட்டுகளாலும் இந்திரலோகத்தின் சிறப்
புக்கள் சொல்லப்படுகின்றன.

இ-ள். வானவர் — தேவர்களுடைய, ஒள் — ஒள்ளிய, சுடர் - காந்தியை, எறிக்கும் — வீசுகின்ற, முடி — மகுடங்களே, தாழ்த்து — தாழச்செய்து, வனை கழற்கால் — வீரக்கழலையணிந்த பாதத்தை, வணங்கி — தாழ்ந்து, ஏத்த — புகழவும், தேன் — வண்டுகளானவை, இமிரும் — ஒலிக்கின்ற, கற்பகம் — கற்பகத்தினுடைய, நாள் — அன்றலர்ந்த, முகை — அரும்புகள், உடைந்து — உடைபட்டு, பசிய — பசுமைபொருந்திய, நறும் — நறிய, தேறல் — தேனே, ஊற்ற — சொரியவும், மேனகை — மேனகையானவள், சாமரை-சவரிகளே, இரட்ட — அசைக்கவும், உருப்பசி — உருப்பசியானவள், வெள்ளிடை — தாம்பூலத்தை, உதவ — கொடுக்கவும், விளரி — விளரியென்னு மிசையொத்த, தீ — மதுரம் பொருந்திய, சொல் - சொல்லையும், பானல் — நீலோற்பலம்போன்ற, அம் — அழகிய, கண் - கண்களையுமுடைய, திலோத்தமை - திலோத்தமையானவள், மெல் — மெல்லிய, சதிமுறையில் — தாளவொத்தின் முறைப்படி, பதம்பெயர்க்கும் — பதம்பெயர்த்தற்குரிய, பாணிதூங்க — கை அவிநயஞ் செய்யவும்.

பாணி என்பதற்குத் தாளங்களெனவும், பாட்டுக்களெனவு மூரைத்தலு மொன்று. என்னே? "கொட்டுமசையுந் தூக்குமளவு — மொட்டப் புணர்ப்பது பாணியாகும்" என்றார் இசைநூலார் ஆகலின், கொட்டு அரைமாத்திரை. அதற்கு வடிவு - க — அசை ஒருமாத்திரை. அதற்கு வடிவு எ. தூக்கு இரண்டு மாத்திரை அதற்கு வடிவு 2. அளவு மூன்று மாத்திரை. அதற்கு வடிவு ஃ எனக்கொள்க. இதனை "ககரங்கொட்டேயெகரமிசையே-யுகரந்தூக்கே யளவே யாப்தம்" என்னு மிசைநூற் சூத்திரத்தானுணர்க சதி எனவே அரைமாத்திரையுடைய ஏகதாளமுதலாகப் பதினறுமாத்திரை

புலமகளாளர் - புரிநரப்பாயிரம் - வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்-செலவுமுறையெல்லாஞ் செல்கையிற் றெரிந்து மற்றையாழுங் கற்று முறைபிறையான் - நாரத தேக்கேள்வி தளித்து" என உதயணகாவிய வத்தளகாண்டத்துங் கூறப்படுவதனுணர்க.

நாரதர் இசைநூல்செய்தாரென்பது "தேவவிருடி நாரதன்செய்தபஞ்சபார தீய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன" என்று அடியார்க்கு நல்லார் உரைத்த உரையாற்பெறுதும்.

யுடைய பார்வதி லோசனம் ஈறுகச்சொன்ன நாற்பத்தொருதாளமும், ஆறன்மட்டம் எட்டன்மட்டம், தாளவொரியல், தனிநிலையொரியல், பாணி விகற்பங்களென்பவுங் கொள்க. பதம்பெயர்க்கும் எனவே * கால்வகைகளும் உடலவர்த்தனைகளும் கை, அவிநயம் எனவே ஆண்கை முதலியவும் அவி நயங்களும் கொள்ளப்படும். 7

தண்டரள மணிமுறுவ லயிராணி வரிபரந்த தடங்கட் காமர், வண்டுபகட் டெழின்மார்பின் மந்தார நறுந்தெரியன் மலரின் வீழ ப், புண்டரிகச் செழுங்காடு பூத்ததென விழிமலர்கள் பொலிந்து தோன்றத், தெண்டிரைவா யமிழ்தமெனத் தெள்விளித்தே னர மகளிர் செவியி னூற்ற.

இ-ள். தண்—குளிர்ந்த, தரளம்—முத்துக்கள்போன்ற, மணி – அழ கிய, முறுவல் - பற்களையுடைய, அயிராணி - இந்திராணியினுடைய, வரி- இரேகைகளானவை, பரந்த—பரவப்பெற்ற, தடம் - விசாலம் பொருந்திய, கண் – கண்களென்னும், காமர் - அழகிய, வண்டு — வண்டுகளானவை, பகடு - பெருமை பொருந்திய, எழில் – அழகிய, மார்பின் - மார்பிலணிந்த,

---

* கால்வகைகள் ஆவன தேசிக்குரிய கால்கள், வடுகிற் குரியகால்கள் என இருவகைப்படும். தேசிக்குரிய கால்களாவன – கீற்று, கடிசரி, மண் டலம், வர்த்தனை, கரணம், ஆவீடம், குஞ்சிப்பு, கட்டுப்பிரியம், களியம், உள் ளாளம், கட்டுதல், கம்பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுகால், இட்டுப்புகுதல், சுற்றி வாங்குதல், உடற்புரிவு என்னும் இருபத்து நான்குமாம். வடுகிற்குறிய கால்களாவன. சுற்றுதல், எறிதல், உடைத்தல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டு தல், போக்கல், நீக்கல், முறுக்கல், அனுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்தரி க்கால், கூட்டுதல் என்னும் பதினெண்குமாம்.

உடலவர்த்தனைகளாவன—மெய்சாய்த்தல், இடை நெரித்தல், சுழித் தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றுதல், விரித்தல், குவித்தலெ ன்னும் ஒன்பதுமாம். ''மெய்சாய் விடைநெரிவு மேற்சுழிவோ டாங்கணைத் தல்—கைதொக் கசைத்தல் கிலபற்றல் ° கைகள். விரித்தல் குவித்தலிவை ங்களமாமென்று – தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து''என்னுஞ் சுத்தா னந்தப் பிரகாசபாதச் செய்யுளானுணர்க.

ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை என நான்குவகைப்படும். இவற்றுடன் இணையாவினைக்கை, கிணைக்கை என்னும் இரண்டுங் கூட்டி ஆறென்றுங் கூறும் ஆண்கை முதலியவற்றின்வகைகள் ''மூட்டி சிகரமலர் பதுமஞ்சந்தஞ்சம்'' எனவுஞ்சுத்தானந்தப்பிரகாச வெண்பாக்கள் கொண்டு அறியப்படும்.

அவிநயம் என்பது பாவகம்—அது வெகுண்டோன் அவிநயம் முதல், நஞ்சுண்டோனவிநயம் இறுதியாக இருபத்து நான்கு வகையாம்.

மந்தாரம் – மந்தாரத்தினுடைய, நறும் – நல்ல, தெரியல் – மாலையினுடைய, மலரில் – பூவில், வீழ – மொய்க்கவும், புண்டரிகம் – தாமரையின், செழுங் காடு – செழுமையுள்ளவனம், பூத்ததென – பூத்ததென்னும்படி, விழிமலர் கள் – நேத்திரகமலங்கள், பொலிந்து – பிரகாசித்து, தோன்ற – விளங்கவும், தெள் – தெள்ளிய, திரைவாய் – கடலிடத்தண்டாகிய, அமிழ்தமென – அமிர்தமென்றுசொல்ல, தெள்விளித்தேன் – தெள்விளியென்னு மிசைத் தேனை, அரமகளிர் – அரம்பையானவர்கள், செவியின் – காதினிடத்திலே, ஊற்ற – சொரியவும் எ-று. 8

மருவுயிர்க்கு நறுந்துணர்மென் மலர்பொதுளுஞ் பொலந்தருவு மணியு மானு, மிருநிதியும் விழிக்கடையி னருணோக்கி முறை முறைநின் றேவல் கேட்பக், கருதினர்கண் கவர்வனப்பிற் கந்தருவ மடமகளிர் கனிந்து பாடற், சுருதிமுறை பிறழாமன் பாடகயாழ் சுரம்புளருந் துழனி யார்ப்ப.

இ-ள். மரு – வாசனையை, உயிர்க்கும் – வீசுகின்ற, நறும் – நறிய, துணர் – கொத்தாகிய, மெல் – மெல்லிய, மலர் – மலர்களானவை, பொது ளும் – நெருங்கிய, பொலம் – பொன்மயமாகிய, தருவும் – ஐந்தருவும், மணி யும் – சிந்தாமணியும், ஆனும் – காமதேனுவும், இருநிதியும் – சங்கநிதி பதும நிதி யென்னு நிதிகளிரண்டும், விழிக்கடையின் – கடைக்கண்களினுடைய, அருள் – அருளை, நோக்கி – பார்த்து, முறைமுறைநின்று – வரிசைவரிசை யாகநின்று, ஏவல் – ஏவலை, கேட்ப – கேட்கவும், கருதினர் – நினைத்தவர்க ளுடைய, கண் – கண்களை, கவர் – பற்றிக்கொள்கின்ற, வனப்பின் – அழ கினையுடைய, கந்தருவர் – கந்தருவருடைய, மடம் – இளமைபொருந்திய, மகளிர் – மாதர்கள், கனிந்த – முதிர்ந்த, பாடல் – பாடல்களாலே, சுருதி – ஒலியினுடைய, முறை – வரிசைகள், பிறழாமல் – வேறுபடாமல், மாடகம் – முறுக்காணியோடுங் கூடிய, யாழ் – வீணையினுடைய, நரம்பு – நரம்பினை, உளரும் – தடவுகின்ற, துழனி – ஒலியானது, ஆர்ப்ப – ஒலிக்கவும் எ-று.

யாழை முறையிற் பாடலாவது ஒன்பது வகைப்பட்ட இருப்பினுள் முதற்கண்ணதாகிய பதுமாசனமென்னும் ஆசனத்திருந்து கோவைகலங்கா மரபினையுடைய யாழைச் சித்திரப்படத்தினின்று மெடுத்துக் கோட்டுறுப்பி னிடத்திலே மலர்மாலை பூணந்து, பத்தர், கோடு, ஆணி, நரம்பு என்னும் உறுப்புக்களிற் குற்றந்தீர்ந்த அதனைத் தாங்கும்போதே மாதங்கி என்னுந் தெய்வத்தை வாழ்த்தி, கண்டத்தால் மூன்றுறப்பாடிக் கலந்தபின்பாடத் தொடங்கி, வலக்கையைப் பதாகையாகக் கோட்டொடு சேர்த்தி, இடக்கை கால்விரலான் மாடகத்தைத்தழுவி, * பகை நரம்பு புகாமல் நீக்கும்வகை யறிந்து, கைக்கிளை தாரமாகக்காட்டி, குறிஞ்சிலைபொருந்தநோக்கி, கலைத் தொழிலெட்டானும் இசைக்காரண மெட்டானும் குரல்முதலாக இனிகுர லாக எடுத்து எழுநரம்புஞ் சுருதி நிலைமையிலே நிறுத்தி வாசித்தலாம். 9

* பகைநரம்பாவன—செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் என்னும் கான்குமாம். செம்பகை – தாழ்ந்தவிசை. அஃதாவது இன்பமின்றி யிசைத்

மருங்கினொரு புடைவிசித்த குற்றுடைவாள் வட்டுடையின் வயங்க வோற்பால், பொருங்குலிசப் படைகமஞ்சூன் முகிலினிடை விளங்குமின்னிற் பொலிவு காட்டச், சுரும்பிமிரஞ் சில்லோதி புலோமசைசெம் பஞ்சடிமென் சுவடு தோய்ந்து, விரிந்ததடம் புயப்பவளக் கொடிபடர்ந்த குலவரையின் விளங்கித் தோன்ற.

இ-ள். மருங்கின் – இடையில், ஒருபுடை – ஒருபக்கத்தில், விசித்த-கட்டிய, குற்றுடைவாள் - கூறியவாளானது, வட்டுடையின் – அரக்கவசத்தின் மீது, வயங்க – பிரகாசிக்கவும், ஓர்பால் – ஒருபக்கத்தில், பொரு - போர்செய்கின்ற, குலிசம்போ - வச்சிராயுதமானது, கமழ் – நிறைவுபொருந்திய, சூல் – கருப்பத்தையுடைய, முகிலினிடை – மேகத்தினிடத்திலே, விளங்கு-பிரகாசிக்கின்ற, மின்னின்-மின்னலைப்போல், பொலிவு-காந்தியை, காட்ட-காண்பிக்கவும், சுரும்பு – வண்டுகளானவை, இமிர் – ஒலிக்கின்ற, அம் – அழகிய, சில் – பொன்வட்டத் தகட்டினையணிந்த, ஓதி - கூந்தலையுடைய, புலோமசை – இந்திராணியினுடைய, செம்பஞ்சு – செம்பஞ்சுக்குழம்பணிந்த, அடி-பாதங்களினுடைய, மெல் – மெல்லிய, சுவடு - தழும்பு, தோய்ந்து – பொருந்தி, விரிந்த – விரியப்பெற்ற, தடம் – விசாலம்பொருந்திய, புயம் - தோள்களானவை, பவளம்கொடி – பவளக்கொடிகள், படர்ந்த – படரப்பெற்ற, குல வரையின் - குலகிரிகளைப்போல, விளங்கித்தோன்ற – பிரகாசித்துத் தோன்றவும் எ-று. 10

விஞ்சையர்கின் னரமவுண ருரகர்புவி முழுதாளும் வேந்தர் யாரு, மஞ்சலிசெய் திருமருங்கும் புடைசூழ முனிவர் குழா மாகி கூற, வெஞ்சலில்பல் வளஞ்சிறப்ப வரியணையில் வீற்றிருக்கு மிமை

தல் – ஆர்ப்பு – மாத்திரைக்கடந்த ஓசை அதாவது ஒங்க இசைத்தல். அீர்வு, கரம்பைச் சிதறவுந்தல். கூடம் இசைகிறவாதது. அஃதாவது தன் பகையாகிய ஆருகரம்பினிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கலாம். இதனை,

இன்னிசைவழியதின்றி யிசைத்தல்செம்பகையதாகுஞ்
சொன்னமாத்திரையினோங்க வீசைத்திடுஞ்சுருதியார்ப்பே
மன்னியவிசைவராது மழுங்குதல்கூடமாகு
நன்னுதால்சிதறவுந்த லதிர்வெனநாட்டினாரே.

என்னும் பஞ்சபாரதீயசூத் செய்யுளாற் காண்க. குறிஞ்சில பொருந்த நோகசல் – இணை, கிளை, பகை. நட்பு என்னு நான்கனுட் செறித்தல், அது "இணைகிளை பகைநட்பென்றிந் நான்கி – னிசைபுணர் குறிஞ்சில யெய்த நோக்கி" என்ற சிலப்பதிகாரச் சூற்றுற் பெறப்படும்.

கலத்தொழில் எட்டாவன – பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, குறும்போக்கு, விளையாட்டு, கையூழ் என்பனவாம்.

இசைக்கரண மெட்டாவன – வார்தல், வடித்தல், உந்தல், முதலியன.

யோர் வேந்தைக், கஞ்சமல *ரயனளித்த மறைபயிலு ரதனிருகண் களிப்பக் கண்டான்.

இ-ள். விஞ்சையர் – வித்தாதரர்களும், கின்னரர்-கின்னரர்களும், உவணர் – கருடரும், உரகர் – நாகரும், புவிமுழுதாளும் - பூலோக முழுதையும் ஆட்சிசெய்கின்ற, வேந்தர்யாரும் – அரசர்கள் யாவரும், அஞ்சலிசெய்து வணக்கஞ்செய்து, இருமருங்கும் - இரண்டுபக்கத்திலும், புடைசூழ - நெருங்கிச் சூழவும், முனிவர்குழாம் – முனிவர் கூட்டங்கள், ஆசிகூற – ஆசீர்வதிக்கவும், எஞ்சலில் – குறைவில்லாத, பல் – பலவாகிய, வளஞ்சிறப்ப – வளங்களானவை மிக, அரியணையில் – சிங்க ஆசனத்தில், வீற்றிருக்கும் – வீற்றிருக்கின்ற, இமையோர் வேந்தை - இந்திரனை, கஞ்சமலர் - தாமரைமலரிலிருக்கின்ற, அயன் – பிரமனனவன், அளித்த – பெற்ற, மறை – வேதத்தை, பயில் – பயிற்சிசெய்கின்ற, நாரதன் – நாரதமுனிவன், இருகண் - தன்னிருகண்களும், களிப்ப - களிப்பையடைய, கண்டான் – பார்த்தான் எ-று.

வானவரென்னும் பாட்டுமுதலிலந்து பாட்டினும் வந்த எத்தவென்பது முதலிய வினையெச்சங்கள் வீற்றிருக்குமென்னும் பெயரெச்ச வினையையும், அது இமையோர் வேந்தென்னும் பெயரையுங்கொண்டு முடிந்தன. "கின்னரரவுணர் எனவும்" பாடபேதம். 11

பொன்னகரந்தனிபுரக்கும்புரந்தரனாரதமுனிவன்புகுதலோடு
முன்னரியற்றியதவத்தினையநுபவனிப்பிறப்பின்முடிந்ததாமென்
றன்னமுனிவரனுவப்பவருக்கியபாத்தியமுதலாவனைத்துநல்கி[ன்
யின்னமுதமுகுவனபோலினிதுரைக்குமுகமலருமிருக்கையீந்தா

இ-ள். பொன்னகரம் – அமராவதியை, தனி - ஒப்பற்ற, புரக்கும் - அளிக்கப்பெற்ற, புரந்தரன் – இந்திரனனவன், நாரதமுனிவன் - நாரதமுனிவன், புகுதலோடும் - அடைந்தமாத்திரத்தில், முன்னர் – முற்பிறப்பில், இயற்றிய – யான்செய்த, தவத்தின் - தவத்தினாலே, எய்த – அடையவேண்டிய, பயன் – பிரயோசனம், இப்பிறப்பில் – இந்தப்பிறப்பில், முடிந்ததாமென்று – முற்றுபெற்றதாமென்று, அன்னமுனிவரன் – அந்த நாரதமுனிவன், உவப்ப – மகிழ்ச்சியடைய, அருக்கியபாத்தியமுதலா – அருக்கிய பாத்தியமுதலாக, அனைத்தும் – யாவையும், நல்கி – கொடுத்து, இன்னமுதம் - இனியவமிர்தமானவை, உகுவனபோல் – சொரிவனபோல, இனிது - இனிதாக, உரைக்கும் - சொல்லுகின்ற, முகமலரும் – உபசாரத்துடன், இருக்கை - ஆசனத்தை, ஈந்தான் – கொடுத்தான் எ-று.

---

* பிரமதேவரது மனத்தினின்றுந் தோன்றியவராகலின் நாரதரைப் பிரம புத்திரரென்றார். விஞ்சையர் – (மாலிகாஞ்சன முதலிய) வித்தையையுடையவர். கின்னரர் - கின்னர மிதுனமென்னுமுழ்வாத்தியத்தையுடையவர். உவணர் - பறவைபோல வாலுஞ் சிறகும் மூக்கும்பெற்று மற்றையுறுப்புகள் தேவவடிவமாக வுள்ளவர். உரகர் - பாம்புபோலப் படமும் வாலுமுடையராய் ஏனையுறுப்புக்களைத் தேவவடிவாகப் பெற்றவர்.

புரந்தரன் - பகைவருடலங்களே அழிப்பவன், சத்துருக்களின் நகரங்களே யழிப்பவன். புரம் - உடலம், நகரம். தரன் - அழிப்பவன் பாத்திய முதலா எனவே பதினாறு உபசாரங்களையுஞ் செய்தான் என்க. 12

உருகியுளங் களிசிறப்ப வாயிரங்கண் மலராலு மொருங்கு நோக்கி, யருமறையோ யிவணீங்கி நெடுங்கால மெவ்வுலகி லடைந் தா பென்னப், பொருவரிய தவமுனிவன் வானவர்கோன் முக நோக்கிப் புணரிசூழ்ந்த, விருநிலத்திற் கடவுணதிப் புனலாடி யித் தணைய ளிறந்த தென்றான்.

இ-ள். உருகியுளம் - மனமுருகி, களிசிறப்ப - களிப்புமிக, ஆயிரங்கண் மலராலும் - ஆயிரங்கண்களாகிய தாமரைமலராலும், ஒருங்கு - ஒருமிக்க, நோக்கி - பார்த்து, அருமறையோய் - நாரதமுனியே! இவண் நீங்கி - இவ்விடம்விட்டு, நெடுங்காலம் - நெடுநாளாக, எவ்வுலகில் - எந்தவுலகத்தில், அடைந்தாய் என்ன - போயினையென்றுகேட்க, பொரு அரிய-ஒப்பில்லாத, தவமுனிவன் - தவத்தையுடைய நாரதமுனிவன், வானவர்கோன் - இந்திரனுடைய, முகநோக்கி - முகத்தைப்பார்த்து, புணரி சூழ்ந்த - சமுத்திரஞ் சூழ்ந்த, இருநிலத்தில் - பெரிய பூமியினிடத்தில், கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, நதிப்புனலாடி-நதி தீர்த்தங்களிலே தோய்தல்செய்து, இத்தணை நாள் - இவ்வளவுநாள், இறந்ததென்றான் - கழிந்ததென்றார் எ-று. 13

என்றுமுனி வரனுரைப்பக் கடல்புடைசூழ் நிலவலயத் திக்ல்வேன் மன்னர், துன்றுசமர் துறந்தனர்கொல் சுடர்க்கதிர்போழ்க் தரமகளிர் தணைமென் கொங்கை, மன்றல்விழைந் திங்கிமகத் தோர் நல்விருந்தாய் வரலோழிந்த வாறேதென்றான், குன்றினிருஞ் சிறையரிந்த சுடர்வயிரப் படைசுமந்த குலவுத்தோளான்.

இ-ன். என்று - இப்படியென்று, முனிவரன் - நாரதமுனிவர், உரைப்ப - சொல்ல, குன்றின்-பர்வதங்களுடைய, இரும் - பெரிய, சிறை - இறகுகளே, அரிந்த - அறுத்த, சுடர் - பிரகாசம்பொருந்திய, வயிரப்படை - வச்சிராயுதத்தை, சுமந்த - தாங்கிய, குலவு - திரட்சிபொருந்திய, தோளான்-புயங்களையுடையவனுகிய இந்திரன், கடல்புடைசூழ் - கடலாற் புடைசூழப்பட்ட, நிலவலயத்து - பூமண்டலத்தில். இகல் - போர்செய்கின்ற, வேல்-வேற்படையேந்திய, மன்னர் - அரசரானவர், துன்று - நெருங்கிய, சமர்-போரை, துறந்தனர்கொல் - விடுத்தனரோ, சுடர்க்கதிர்போழ்ந்து - சூரியமண்டலத்தைக் கிழித்துக்கொண்டு, அரமகளிர்-அரமங்கையருடைய, தணை. இரண்டாகிய, மெல் - மெல்லிய, கொங்கை - தனத்தினுடைய, மன்றல்-மணத்தை, விழைந்து - விரும்பி, இங்கு - இவ்விடத்தில், எமக்கு - எமக்கு, ஓர் - ஒப்பற்ற, நல்விருந்தாய் - நல்லவிருந்தாகி, வரல் - வருதலை, ஒழிந்த வாறு - நீங்கியவிதம், ஏதென்றான் - என்னகாரணமென்றான் எ-று.

புண்ணியத்தினுற் கிடைத்த சம்பத்தைக் குறைவுபடாது சற்பாத்திரமா யிருந்து வளர்ப்பவராதலால் விருந்தென் றொழியாது நல்விருந்தென்றார். பொய்சொல்வோனே யொருவருஞ் சோராதபோல பூலோகத்தில் அரசர் கள் போர்செய்து மனிததேகம் விடுத்துத் திவ்வியதேகம்பெற்று விருந்தாய் வாராமல் தன்னுடைய சம்பத்தைத் தானே யனுபவித்தழிக்கும்படி நிற்ற லால் வரவொழிந்த வாறேதென்றான். தானே யனுபவித்தல் இன்னதென் பது "இரத்தலினின்னது மன்ற நிரப்பிய – தாமே தமியருணல்" என்னுந் திருக்குறளாலறிக. 14

கன்னல்கமழ் கெழில்காட்டுந் தண்பணைசூழ் விதர்ப்ப நகர் காவல் பூண்ட, மன்னனருந் தவப்பேற்றா லுலகில்வனப் பனைத்து மொரு வடிவ மாகி, * யன்னநடை வாய்ந்துமதர் விழியெனவாண் முகத்தினிரண் டுயில்வே றுங்கிப், பொன்னவிர்பூண் முலையென் னப்பொருப்பேந்தி யிருநிலத்திற் பொலிந்த தன்றே.

இ-ள். கன்னல் – கரும்புகளானவை, கமுகு – கமுகைப்போலும், எழில்காட்டும் – அழகுடையதாய் வளர்ந்து காட்டுகின்ற, தண் – தண்ணிய, பணைசூழ் – வயல்களாற் சூழப்பட்ட, விதர்ப்பநகர் – விதர்ப்பதேசத்தை, காவல்பூண்ட – காக்குந் தொழிலையடைந்த, மன்னன் – வீமராசனுடைய, அருந்தவப்பேற்றால் – அரியதவப்பேற்றினாலே, உலகில் – உலகத்திலிருக் கின்ற, வனப்பனைத்தும் – அழகெல்லாம், ஒருவடிவமாகி – ஒருருவாகி, அன்னநடை – அன்னத்தினடையை, வாய்ந்து – பொருந்தி, மதர் – தர்த்த,

---

* அன்னநடை வாய்தல் பெண்கட்கு முக்கிய இலக்கணமாகலிற் கூறி னார். அது, "மென்சிறை யெகினம்போற் – றூய நன்னடையில் லவர்" உத வாரென்று மிருகண்டியமுனிவர் உரைத்ததனானும் பெறப்படும்.

கால்களின் இயலாவது – விரல்கள்யாவும் நிலத்திற்றோய்வுற நடக்கப் பெற்று, சின்மயிர் பரக்கல்பெறாதனவாகி, உள்ளடி சிவந்து, வெயர் வில்லா தனவாய், பெருத்தல், அறச்சுருங்குதலின்றி, அனிச்சப்பூவி னடப்பினுங் குழைவுற மியல்பினவாய், உள்ளடியினிடத்தே பருப்பதம், கொடி, மற்சம், சக்கரம் குடை என்னு மிரேகைகள் பொருந்தப்பெற்று, தடுத்தொடங்கி மெல்லிரல்காறும் ஓர் வரைசெறிந்தும், பாம்பு. எலி, கழுகு என்னு மிவை போன்ற இரேகைகள் செறியாதும், பெருவிரல்திரண்டும், மெல்லிர லகலா தும் நீளாதும் ஏனையிரல்கள் அறவும் நேராதும், நீளாதும் – நெருக்குறு தும், ஒன்றின்மேல் ஒன்று பொருந்தாதும், நரம்பெழுதலின்றியும், அறவும் வளையாதும், கோலப்போல வுயராதும், நகங்கள் வட்டமுஞ்சிறிது சிவப்பு மூறுதும், நரம்பெழுந்துயர்ந்த மென்பா டின்றியும், மயிர்கனத்து மேல்வர வரப்பருத்து ஒப்பனவாய் ஒளிவாய்ந்து நரம்பின்றியுமுள்ள கணைக்கால்களை யுடையனவாகி, சக்கரம்போற்றிரண்ட முழந்தாள்களைப்பெற்றும் இருக்கும் என்க. மற்றைய கண்களின் இலக்கணம் மேலுரைக்குதும், ஆங்குக் கண்டு தெளிக.

விழியென – கண்களென்று சொல்லும்படி, வாள் – ஒளிபொருந்திய, முகத்தின் – முகத்தினிடத்திலே, இரண்டயில்வேல் – கூறியவிரண்டு வேற்படைகளை, தாங்கி – தாங்கிக்கொண்டு, பொன் – பொன்னினாற்செய்யப்பட்டு, அவிர் – பிரகாசிக்கின்ற, பூண் – ஆபரணங்களையணிந்த, முலையென்னதனங்களென்று சொல்லும்படி, பொருப்பு – இரண்டு மலைகளை, ஏந்திதாங்கி, இருவிலத்தில் – பெரிய பூவுலகில், பொலிந்தது – பிரகாசித்தது.

மருதநிலக் கருப்பொருள்களுட் கன்னலுங் கழுகுஞ் சிறந்தவாகலின் அவை கூறப்பட்டன. அன்னநடையும், விழியினியலும் சாமுத்திரிகாலக்கணம். விதந்தோசலின் அவற்றை விதந்தார். நடையெனவே காலினியலுங் கொள்க. வேற்படை – முருகன்வேல். அதனை வடிவானுந் தொழிலானும் நிறத்தானும் உவமையாகப்பெற்ற கண்களென்க. 15

ஆங்கவண்மேல் விழைவினராய் நின்னுலகிற் போகமுமின்னமிர்து மன்னுண், மாங்குயிலின் றீங்குதலை மொழிக்கிணையாச் சிறிதேனு மதிக்க கில்லார், பூங்கமல முகையனைய பொறிச்சுணங்கா ரிளமுலையின் பூசல் வேட்டு, வீங்குதடம் புயமெலிய விளைத்திடும்வா ளமர்துறந்தார் வேந்த ரெல்லாம்.

இ-ள். ஆங்கு – அவ்விடத்தில், அவன்மேல் – அத்தமயந்தியென்னுமாதின்மேல், விழைவினராய் – விருப்பையுடையவராகி, நின்உலகில்உன்னுடைய வுலகத்தில், போகமும் – போகத்தையும், இன்அமிர்தம்இனியவமிர்தத்தையும், அன்னள் – அவளுடைய, மாங்குயிலின் – மாமரத்திலுள்ள குயின்மொழியையொத்த, தீ – மதுரம்பொருந்திய, குதலைமொழிக்கு – மழலைச்சொல்லுக்கு, இணையா – ஒப்பாக, சிறிதேனும் – அற்பமாயினும், மதிக்கில்லார் – மதியாதவர்களாய், பூ – அழகிய, கமலமுகையனையதாமரை யரும்பையொத்த, பொறி – புள்ளிகள்கொண்ட, சுணங்குதேமல், ஆர் – நிறைந்த, இளமுலையின் – இளமைபொருந்திய, தனங்களினுடைய, பூசல் – போரை, வேட்டு – விரும்பி, வீங்கு – பருத்த, தடம்விசாலம்பொருந்திய, புயம் – தோள்கள், மெலிய – வாட, விளைத்திடும்செய்கின்ற, வாள் அமர் – வாட்படைகாற்செய்யும் போரை, வேந்தர் எல்லாம் – அரசர்யாவரும், துறந்தார் – விட்டனர் எ-று. 16

அத்தகைய மடவரலோ ரண்டகையை யுளத்தமைத்தாளவளே யின்ற, முத்தநெடுங் குடைவேந்த னிலவலய மினிதளிக்கு முதல்வர்க் கெல்லா, முய்த்துணரச் சுயம்வரமென் றோலைபோக்கினனதனை யுரைப்பா னெண்ணி, யித்தலையெய் தினனென்றுனின்னிசைநூண் முழுதுணர்ந்த யாழ்வல் லோனே.

இ-ள். அத்தகைய – அப்படிப்பட்ட குணத்தையுடைய, மடவரல்தமயந்தியானவள், ஓர் – ஒரு, ஆண்டகையை – ஆண்மகனிற் சிறந்தவனை, உளத்தை – மனத்தின்கண், அமைத்தாள் – வைத்தாள், அவளேயின்ற – அவ

ளைப்பெற்ற, முத்தம் – முத்தினைச்செய்த, நெடுங்குடை – நெடியகுடையை யுடைய, வேந்தன் – வீமராசனனவன், நிலவலயம் – பூமண்டலத்தை, இனிது - இனிதாக, அளிக்கும் - புரக்கின்ற, முதல்வர்க்கெல்லாம் - தலைமை பூண்ட வரசரானவர்க்கும், உய்த்து – கருத்தைச்செலுத்தி, உணர – அறிய, சுயம்வரமென்று – சுயம்வரநாளிந்நாளென்று, ஓலைபோக்கினன் – எழுதப் பட்ட வோலையைச் செலுத்தினன், அதனை – அச்செய்தியை, உரைப் பான் – உரைக்கும்படிக்கு, எண்ணி – நினைந்து, இத்தலை - இவ்விடத்தில், எய்தினன் என்றான் – வந்தானென்று சொன்னன், இன்னிசைநூல்- இனியவிசைநூல், முழுது – முழுவதையும், உணர்ந்த - அறிந்த, யாழ்வல் லோன் – யாழில்வல்ல நாரதமுனிவன் எ-று.

மனம் பரமாணுரூபமாகையால் அதனுளடக்கிய புருடனை நாஞல் அவனே வெளியிற் சொல்லாமையால் ஒராண்டகை யென்றும், யோகி யரும் அணுமாத்திரமன்றி அதனுள்ளீடறியாராகலால் அவராலும் அறியக் கூடாமையால் சந்தேகித்து வீமராசன் சுயம்வர நாட்டிய வோலை போக்கி னனென்றும் சொல்லினர். யாவராலும் அறியக்கூடாமை "அத்திமலரு மருங்காக்கை வெண்ணிறமுங், கத்துபுனல் மீன்பதமுங் கண்டாலும் – பித் தரே, காணர்தெரியற் கடவுளருங்காண்பரோ, மானுர் விழியார் மனம்" இத னுற்காண்க. 17

விண்ணகத்தும் பெறற்கரிய விழுப்பொருளீ பெறவேண் டின் விரிநீர் சூழ்ந்த, மண்ணகத்து வருதியென மகபதிவாண் முக நோக்கி மகிழ்ந்து கூறிப், பண்ணமைந்த தீங்குதலைத் தமயந்தி சுயம்வரத்திற் பாரில் வேந்தர், நண்ணியமர் வினைப்பரது காண்கு வலென் றுசிபல நவின்று போனன்.

இ-ள். விண்ணகத்தும் – தேவருலகத்தும், பெறற்கரிய – பெறுதற்கரு மையாகிய, விழுப்பொருள் - சிறப்புப்பொருளை, நீ பெறவேண்டின்-நீபெற விரும்பினையாயின், விரிநீர்சூழ்ந்த – கடலாற் சூழப்பட்ட, மண்ணகத்து- பூவுலகத்தில், வருதியென – வருவாயென்று, மகபதி - இந்திரனுடைய, வான் – ஒளிபொருந்திய, முகநோக்கி – முகத்தைப்பார்த்து, மகிழ்ந்து-மகிழ் ச்சியடைந்து, கூறி – சொல்லி, பண் அமைந்த – பண்பொருந்திய, தீம்-இத் திப்புள்ள, குதலை – மழலைச்சொல்லையுடைய, தமயந்தி – தமயந்தியினது, சுயம் வரத்தில் – சுயம்வர நாளில், பாரில் – பூமியிலிருக்கின்ற, வேந்தர்-அர சரானவர்கள், நண்ணி - அடைந்து, அமர் – போர்த்தொழிலை, வினைப்பர்- செய்வார்கள், அது – அப்போரை, காண்குவல் என்று – பார்ப்பேனென்று, பல ஆசி – அனேக ஆசீர்வாதங்களை, நவின்று - சொல்லி, போனன் – நாரத முனிவன் போயினன். எ-று. அன்று - ஏ – அசைகள். 18

அருந்தவனே கலுமிறைவ னடன்மாறன் பகழிபொர வாற் று னுகிக், கருந்தடங்கட் டமயந்தி கதிர்முலையும் வார்காதுங் கணை

மென் றோளு, முருந்தினிள முறுவலும்வாண் முகமதியு முருவெ
ளியாய் முன்னர் தோன்ற, வருந்தி யயிராணிமுத லரம்பையர்பா
லுமகலனு மறந்தா னன்றே.

இ-ள். அருந்தவன் – நாரதமுனிவன், ஏகலும்-போனவளவில், இறை
வன் – இந்திரனனவன், அடல் – வலிமை பொருந்திய, மாரன் – மன்மதனு
டைய, பகழி – பாணங்கள், பொர – போர்செய்ய, ஆற்றலுகி – பொறுக்க
மாட்டாதவனுய், கரு – கரிய, தடம்-விசாலம்பொருந்திய, கண் – கண்களை
யுடைய, தமயந்தி – தமயந்தியினுடைய, கதிர்முலையும் – காந்திபொருந்திய
தனங்களும், வார்காதும் – நெடியசெவிகளும், கழை – மூங்கில்போன்ற,
மெல்தோளும் – மெல்லியதோளும், முருந்தின் – மயிலிறகின் முதன்முள்
போன்ற, இளமுறுவலும் – சிறியபற்களும், வாள் – ஒளிபொருந்திய, முகம
தியும் – முகமாகிய சந்திரனும், உருவெளியாய் – உருவெளித்தோற்றமாய்,
முன்னர் – எதிரே, தோன்ற – தெரிய, வருந்தி – வருத்தப்பட்டு, அயிராணி
முதல் – இந்திராணிமுதலாகிய, அரம்பையர்பால் – அரமகளிரிடத்தில், உறை
மிகுந்த, நலனும் – நலத்தையும், மறந்தான் – மறந்துவிட்டான் எ-று. 19

மண்ணுலகின் மடவரலே விழைந்தனனம் மிறைவனென வரு
ந்தி மாழாந், தெண்ணினம தெழினலனு மிளமையுநன் ரூயவென
விகழ்ந்து கூறி, வெண்ணிலவு பொழிதரள முறுவலயி ராணிமுதல்
விண்ணில் வாழு, மொண்ணுதன்மங் கையர்மடநாண் மீதூர வோ
வியம்போன் றுணர்வு தீர்ந்தார்.

இ-ள். மண்ணுலகின் – பூவுலகத்திலிருக்கின்ற, மடவரலே – ஒருபெ
ண்ணுகிய தமயந்தியை, விழைந்தனன் – விரும்பினன், நம் இறைவனென –
நம்முடைய அரசனென்று, வருந்தி – வருத்தப்படுத்தி, மாழாந்து – மயக்க
மடைந்து, எண்ணின் – எண்ணுமிடத்தில், நமது – நம்முடைய, எழில் நல
னும் – அழகினுடைய நன்மையும், இளமையும் – இளமைப்பருவமும், நன்
ரூயவென – நல்லதாயவென்று, இகழ்ந்துகூறி – பழித்துச்சொல்லி, வெள்–
வெள்ளிய, நிலவு – பிரகாசத்தை, பொழி – பொழிகின்ற, தரளம்-முத்தினை
யொத்த, முறுவல் – பற்களையுடைய, அயிராணிமுதல் – இந்திராணி முதலா
கிய, விண்ணில் வாழும் – தெய்வலோகத்தில் வாழ்கின்ற, ஒள் – ஒள்ளிய,
நுதல் – நெற்றியையுடைய, மங்கையர் – மாதர்கள், மடம் – அறியாமையும்,
நாண் – நாணும், மீதூர-அதிகரிக்க, ஓவியம்போன்று-சித்திரத்தையொத்து,
உணர்வு தீர்ந்தார் – அறிவு நீங்கினர்கள் எ-று.

அயிராணிமுதல் விண்மாத ரென்றமையால் அச்சமையி லிருந்த
மேனகை உருப்பசி திலோத்தமை அரம்பை முதலியதெய்வமங்கையராம்.
இவர்கள் அழகுமுதலியவற்றின் மிக்கவரென்று மதித்திருந்த தம்மைத்தா
மே வெறுத்துக்கொண்டு மானமுடையவ ராகையால் புறத்திற்சொல்லாமல்
சித்திரம்போல அசைவறநிருந்தன ரென்க. ஓவியம்போ லென்றமையால்
உண்மையணி. 20

மதர்நெடுங்க ணரமகளி ரிவ்வாறு துயருழப்ப மனத்தி னோ
ராத், ததைமலர்க்கற் பகநறுந்தார் மணிமார்பன் றுயர்கூர்ந்து தரு
மன் வெய்ய, கதமொரிப்புத் தேன்வருண னுடனேகக் கொடிஞ்சியந்
தேர் கடிதிற் றூண்டி, யதிருநெடுங் திரையாழி சூழ்புவியி னெல்
லையில்வந் தடைந்தான் மன்னோ.

இ-ள். மதர் - மதர்த்த, நெடுங்கண் - நெடிய கண்களையுடைய, அரமக
ளிர் — அரம்பையரானவர்கள், இவ்வாறு-இந்தப்பிரகாரம், துயருழப்ப - துன்
பப்பட, மனத்தின் — மனத்தினிடத்திலே, ஓரா - எண்ணுமல், ததை - நெரு
ங்கிய, மலர் – மலரையுடைய, கற்பகநறுந்தார் – கரிய கற்பகமாலையணிந்த,
மணிமார்பன் – அழகிய மார்பையுடைய இந்திரன், துயர்கூர்ந்து — துயரமி
குந்து, தருமன் - யமனும், வெய்ய — வெவ்விய, கதம் — வேகம் பொருந்திய,
எரிப்புத்தேள் - அக்கினிதேவனும், வருணன் — வருணனும், உடனேக-உட
னாகவர, கொடிஞ்சி – மேன்மோட்டையுடைய, அம் - அழகிய, தேர் — இர
தத்தை, கடிதில் – சீக்கிரத்திலே, தூண்டி – செலுத்தி, அதிரும்-அதிர்கின்ற,
நெடுந்திரை – நெடிய அலைகளையுடைய, ஆழிசூழ் – கடலாற் சூழப்பட்ட,
புவியின் — பூவுலகில், ஒல்லையில் – விரைவில், வந்து அடைந்தான் – வந்து
சேர்ந்தான் எ-று. மன் - ஓ - அசை. 21

இந்திரப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 407.

நளன் றூதுப் படலம்.

இப்படலத்தால் இந்திரன் முதலிய நால்வர் பொருட்டுத்
தமயந்தியினிடத்து நளன் தூதுசென்றமை
சொல்லப்படுகின்றது.

கலிங்கிலைத்துறை.

அண்டருலகத்திறைவனவ்வழியிறுப்ப
மண்டுபுனல்வாளைவளர்பூகமடல்கிறுங்
கண்டலையுடுத்தநிடதந்தனிபுரக்கு
மொண்டிறலுடைக்குரிசில்செய்திறமுரைப்பாம்.

இ-ள். அண்டர் உலகத்து — தேவருலகத்தை யாளுகின்ற, இறைவன்-இந்திரன், அவ்வழி - அவ்விடத்தில், இறுப்ப - தங்க, மண்டு - நெருங்கிய, புனல் - நீரிலிருக்கின்ற, வாளை - வாளைமீன்களானவை, வளர்-வளர்கின்ற, பூகம் — கமுகினுடைய, மடல் - பாளைகளை, கிறும் — கிழிக்கின்ற, தண்டலை-சோலைகளை, உடுத்த - உடுக்கப்பெற்ற, நிடதம் - நிடததேசத்தை, தனி - ஒப்பற்ற, புரக்கும் - காக்கின்ற, ஒள்-ஒள்ளிய, திறலுடை-வலிமையையுடைய, குரிசில் - நளமகாராசன், செய்திறம் — செய்தகாரியத்தை, உரைப்பாம்-(யாம்) சொல்லுவோம் எ-று.

அண்டர் — ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்; தேவர். அ - பண்டறி சுட்டு. தண்டலை - குளிர்ந்த இடமாயுள்ளது, சோலை. துள்ளிமேலெழுதன் மிக்குளவாகலின் வாளையினத்தை விதந்தார். தனிபுரத்தல் எனவே ஏகசக்கராதிபதி யென்பது பெறப்படும். குரிசில் - பெருமையிற் சிறந்தவன். தான் விரும்பிய அரும்பொருளைப் பிறர் பெறுவான் விரும்பித் தன்னைத் தூதாகப் பணிக்கவும் வள்ளற் றன்மைகெடா தொப்பிச் சென்று முடிக்கும் பெருமையிற் சிறந்தோனுகலின் குரிசில் என்ற பெயராற் கூறினர்.

அன்னமுரைசெய்தவெழிலாயிழையைநெஞ்சத்
துன்னியயர்வோடுமுயிருண்டிலெகொலென்னக்
கன்னன்மதனைங்கணைகருத்திடைகுளிப்ப
மன்னவர்கண்மன்னன்மதிமாழ்கியயர்காலை.

இ-ள். அன்னம் - அன்னப்புள்ளானது, உரைசெய்த — சொல்லிய, எழில் - அழகிய, ஆயிழையை - தமயந்தியை, நெஞ்சத்து - மனத்தினிடத்து, உன்னி — நினைந்து, அயர்வோடும் — சோர்வுடனே, உயிர் — உயிரானது, உண்டிலெகொலென்ன — உண்டோ வில்லையோவென்று சொல்ல, கன்னல்-கருப்புவில்லேந்திய, மதன் - மன்மதனுடைய, ஐங்கணை — பஞ்சபாணங்களும், கருத்திடை — கருத்தினிடத்து, குளிப்ப — தைக்க, மன்னவர்கள் மன்னன் — நளனவன், மதிமாழ்கி — அறிவுமயங்கி, அயர்காலை - தன்பப்படுஞ் சமயத்தில் எ-று.

மன்மதபாணம் பிரயோகிக்குமிடம் வெவ்வேறுளதேனும் அன்பப் படுவது கருத்தொன்றேயாதலாற் கருத்திடை குளிப்பவென்றார். "நெஞ்சி லாவிந்த நீள்சூதங் கொங்கையின்மே; லஞ்சும் விழியி லசோகமாம் - வஞ் சியரே, சென்னிமிசை மூல்லை நிகழ்நீல மல்குலிலே, யின்னிலேவெளைவா னிவை" இதனுல் அவ்விடங்கள் காண்க. 2

பூகமடல்கிறியிளவாளைபுனல்காலு
மேகமிசைதாவிடும்வித்தர்ப்பநகர்மன்ன
னேகையொடளித்தவுயிரோவியநிதர்க்குந்
தோகைமணவோலைகொடுதூதுவரடைந்தார்.

இ-ள். பூமடல் — கமுகம்பாளையை, கீறி - கிழித்து, இளவாளை — இள மைபொருந்திய வாளைமீன்களானவை, புனல்காலும் — நீரைச்சொரிகின்ற, மேகமிசை — மேகத்தின்மீது, தாவிடும் — தாவுகின்ற, வித்தர்ப்பநகர் — வித்தர் ப்பதேசத்தையாளுகின்ற, மன்னன் — வீமராசனுனவன், ஏகையோடு-மகிழ்ச்சியுடனே, அளித்த — பெற்ற, உயிர் — உயிரையுடைய, ஓவியம்-சித்திரத்தை, நிகர்க்கும் — ஒப்பாயிருக்கின்ற, தோகை — தமயந்தியினுடைய, மணவோலைகொடு — கலியாணவோலையைக்கொண்டு, தூதுவர் - தூதர்கள், அடைந்தார் — சேர்ந்தார்கள் எ-று. 3

முடங்கலின்வரைந்தவுரைமுற்றுமுணராமுன்
றடம்புயம்வளர்ந்தனவரைக்குவமைசாலக்
குடங்கையினகன்றவிழிகோகரிசெல்வான்
மடங்கலனையானுளமகிழ்ச்சியொடெழுந்தான்.

இ-ள். முடங்கலின் - ஓலைச்சுருளில், வரைந்த - எழுதப்பட்ட, உரை-சொல்லுகளை, முற்றும் — முழுவதும், உணராமுன் — அறியாமுன்னே, தடம் — பெரிய, புயம் — தோள்களானவை, வரைக்கு — பர்வதங்களுக்கு, உவமைசால - உவமைபொருந்த, வளர்ந்தன - பருத்தன, குடங்கையின்-உள்ளங்கைபோல, அகன்ற - பரந்த, விழி — கண்களையுடைய தமயந்தி யினது, கோகரி — குண்டினபுரத்துக்கு, செல்வான் — செல்லும் பொருட்டு, மடங்கலனையான் - சிங்கவேற்றினையொத்த நளமகாராசன், உளமகிழ்ச்சி யொடு - மனக்களிப்பினுடனே, எழுந்தான் — எழுந்தனன் எ-று.

மூடங்கல் — முடங்குதல். தொழிலாகுபெயராய் ஓலைக்கு ஆயிற்று. மடங்கல் என்றுற்போல் வரைந்த என்னும் பலபொரு ளொருசொல் ஈண்டு எழுதிய என்னும் பொருட்டு விரும்பிய பொருட்பேறுறு மெனநினைந்த வுவகைமிகுதியானே புயமும் விழியும் வளர்ந்து அகன்றவென்க. 4

கொய்யுளைவயப்புரவிகோடியுழைபோத
மையன்மதவாரணமருங்குறவெருங்க
வெய்யதிறல்வாளுழவர்வேலிபுடைசூழ
மொய்திரையளக்கரினியம்பலமுழங்க.

இ-ள். கொய் – கொய்துகட்டிய, உளை – புறமயிரையுடைய, வயம் – வலிமைபொருந்திய, புரவிகோடி – கோடிகுதிரைகள், உழைபோத – பக்கங்களிலேவரவும், மையல் – மயக்கம்பொருந்திய, மதவாரணம் – மதயானைகள், மருங்குற – பக்கத்திலே, நெருங்க – நெருங்கிவரவும், வெய்ய – வெவ்விய, திறல் – வலிமைபொருந்திய, வாள் – வாட்படையையுடைய உழவர்வேலை காலாட்களாகிய கடலானது, புடைசூழ – பக்கங்களிலே சூழ்ந்துவரவும், மொய் – மொய்க்கப்பெற்ற, திரை – அலைகளையுடைய, அளக்கரின் – கடல்போல, பலஇயம் * பலவாத்தியங்கள், முழங்க – ஒலிக்கவும் எ-று.

இப்பாட்டில் போதவென்பது முதலிய வினையெச்சங்கள் மேற் பாட்டிற் போனவென்னு முற்றுவினையைக் கொண்டு முடிந்தன. 5

விரிகதிரெறிக்குமதிவெண்குடைநிழற்றத்
தரளநகைமாதர்பலர்சாமரையிரட்ட
வெரிமணியிமைக்குமுடிமன்னவரிறைஞ்சத்
திருவளருமார்பனுயர்தேரின்மிசைபோனான்.

இ-ள். விரி – விரியப்பெற்ற, கதிர் – கிரணங்களை, எறிக்கும் – வீசுகின்ற, மதி – சந்திரனையொத்த, வெண்குடை – வெள்ளிய குடைகள், நிழற்ற – நிழலைச்செய்யவும், தரளம் – முத்தினையொத்த, நகை – பற்களையுடைய, மாதர்பலர் – அநேகமகளிர்கள், சாமரை இரட்ட – கவரிகள் வீசவும், எரிமணி – காந்தியையுடைய மணிகள், இமைக்கும் – பிரகாசிக்கின்ற, முடி – மகுடத்தையுடைய, மன்னவர் – அரசர்கள், இறைஞ்ச – வணங்க

---

* அரசர்க் குரிய முக்கிய வாத்தியங்களாவன:—

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, காடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், கொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், வீரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, அடி, பெரும்பறை, சங்கு, நாகசின்னம், கொம்பு முதலாயின இவற்றைப் பின்வருஞ் செய்யுளானுணர்க.

பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை காடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி தடாரி
யந்தரி முழவொடு சந்திர வளைய
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசி றகுணிச்சம் வீரலேறு பாகந்
தொக்க வுபாங்கந் தடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே.

வும், திரு – திருமாதானவள், வளரும் – தங்குகின்ற, மார்பன் – மார்பை யுடையவனுகிய நளமகாராசன், உயர்-உயர்ந்த, தேரின்மிசை-தேரின்மேல், போனுன் – போயினுன் எ-று. 6

தேர்நடவுகம்பலேசெவிப்புகுதலோடும்
வார்கடன்முழக்கொலிகொலோமழைமுழக்கோ
சார்வதெனவையமுறும்வானவர்கடம்மு
னேர்கெழுமுமாடகிடதத்திறையெதிர்ந்தான்.

இ-ள். தேர் – தேரை, நடவு - செலுத்துகின்ற, கம்பலே-ஒலியானது, செவி – காதினிடத்து, புகுதலோடும்-நுழைந்த மாத்திரத்தில், வார்-நெடிய, கடல்முழக்கு ஒலிகொலோ – கடலொலியோ, மழைமுழக்கோ – மேகத்தினுலியோ, சார்வதென் - அடைவதென்று, ஐயமுறும் – சந்தேகமுற்ற, வானவர்கள்முன் - தேவர்களுக்கு முன்னே, எர் – அழகானது, கெழுமு-பொருந்திய, மாடம் - மாளிகைகளையுடைய, கிடதத்திறை – கிடததேசத்தரசன், எதிர்ந்தான் – எதிர்ப்பட்டான் எ-று. கொல் – ஐயப்பொருள். 7

பொற்றடந்தேர்மிசைப்பொலிந்துதோன்றிய
மற்றடந்தோளினன்வனப்புநோக்கினு
ருற்றதோர்வியப்பினுக்குள்ளமீந்துதாம்
வெற்றுடம்பாயினர்விண்ணுளோரெலாம்.

இ-ள். பொன் – அழகிய, தடம் – பெரிய, தேர்மிசை – தேரின்மீது, பொலிந்து - பிரகாசித்து, தோன்றிய – வந்த, மல் – மற்போர்செய்கின்ற, தடம் - பெரிய, தோளினுன் – தோள்களையுடைய நளமகாராசனது, வனப்பு – அழகை, நோக்கினர் – பார்த்தார், உற்றது-அதனுலடைந்ததாகிய, ஓர்-ஒப்பற்ற, வியப்பினுக்கு – ஆச்சரியத்துக்கு, உள்ளம் ஈந்து – மனத்தைக் கொடுத்து, விண்ணுளோர் எலாம் - இந்திரன்முதலிய நால்வரும், வெறு உடம்பு ஆயினர் – உயிர்நீங்கிய வுடம்புபோலானர் எ-று.

ஆச்சரியத்தால் அபகரிக்கப்பட்ட மனத்தை யுடையவராயினரென்பது கருத்து. 8

மாயிருஞாலத்துவந்துமன்னர்கோ
னேயபேரழகுகண்டிமைப்பிஞட்டமோ
ராயிரம்பெற்றபேறடைந்துளேனெனச்
சேயுயர்விசும்பினுக்கிறைவன்செப்பினன்.

இ-ள். மா – மகத்தாகிய, இரு – பெரிய, ஞாலத்துவந்து – பூமியில் வந்து, மன்னர்கோன் - நளனுடைய, எய - பொருந்திய, பேரழகு - பெரிய அழகினை, கண்டு – பார்த்து, இமைப்பில்-இமைத்தலில்லாத, நாட்டம் ஓராயிரம் – ஆயிரங்கண்களை, பெற்றபேறு - பெற்ற பேற்றினை, அடைந்துளேனென – இன்று அடையப்பெற்றேனென்று, சேய் – தூரமாக, உயர்-உயர்

ந்த, விசும்பினுக்கிறைவன்-சுவர்க்கத்துக்கரசனுகிய இந்திரன், செப்பினன்-சொல்லினன் எ-று.

இப்படிப்பட்ட அழகுள்ள ஆடவனைக் கண்டதில்லையென்பதகருத்து. 9

மண்டமர்கடந்தவேன்மன்னர்மன்னனைக்
கண்டுமற்றொருவர்தோள்காமுற்றீர்ந்தொடை
தொண்டைவாய்மடமயில்சூட்டுமோவெனத்
தெண்டிரைக்கானைகடற்செல்வன்கூறினன்.

இ-ள். மண்டு-நெருங்கிய, அமர்—போரை, கடந்த-செயித்த, வேல்-வேற்படையையுடைய, மன்னர் மன்னனை - நளனை, கண்டு - பார்த்து, மற் றொருவர் தோள் - வேறொருத்தர் புயங்களை, காமுற்று - ஆசைப்பட்டு, தொண்டை – கோவைக்கனிபோன்ற, வாய் – வாயையுடைய, மடமயில்-தமயந்தியானவள், ஈர்ந்தொடை – குளிர்ச்சிபொருந்திய மாலையை, சூட்டு மோ எனு—தரிப்பாளோவென்று, தெள்—தெள்ளிய, திரை - அலைகளை யுடைய, கானை—ஒலிக்கின்ற, கடன்செல்வன் — கடலுக்கரசனுகிய வரு ணன், கூறினன் – சொல்லினன் எ-று. 10

பாந்தண்மேற்கிடந்தபார்பரிக்குந்திண்டிறல்
வேந்தனுக்கேதொடைவேய்ந்திலாளெனி
லேந்திழையெழினலமென்கொலாமெனக்
காந்துவெங்கதிழரிக்கடவுள்சாற்றினன்.

இ-ள். பாந்தன்மேல் – ஆதிசேடன்மீது, கிடந்த - இருந்த, பார்-பூமியை, பரிக்கும் – சுமக்கின்ற, திண் – திண்ணிய, திறல் — சௌரி யத்தை யுடைய, வேந்தனுக்கே – நளமகாராசனுக்கே, தொடை – மாலையை, வேய்ந்திலாள்எனில் — சூட்டாளேயாஞல், எந்திழை – தமயந்தியினுடைய, எழில் – அழகினது, நலம் – நன்மை, என்கொலாமென — என்னபிரயோசன மாகுமென்று, காந்து – காந்துகின்ற, வெம்—வெவ்விய, கதழ் - வேகத்தை யுடைய, எரிக்கடவுள் — அக்கினிதேவன், சாற்றினன் – சொல்லினன் எ-று. கொல்—அசைநிலை. 11

கழைசுளிபுகர்முகக்களிநல்யானையா
னிழைசுடரெறிப்பவந்திறுத்தமேந்திழை
விழவினுக்காயின்யாமீண்டுபோதலே
யழகுதென்றந்தகனறைந்திட்டானரோ.

இ-ள். கழை—கரும்புகளை, சுளி – முறிக்கின்ற, புகர்முகம் – புள்ளி பெற்ற முகத்தையுடைய, களி – களிப்புப்பொருந்திய, நல்—நல்ல, யானை யான்—யானையையுடைய நளமகாராசன், இழை—ஆபரணங்கள், சுடர்-காந்தியை, எறிப்ப – வீச, வந்திறுத்தது – வந்ததங்கியது, எந்திழை – தமயந் தியினுடைய, விழவினுக்காயின் – விவாகத்துக்காஞல், யாம்—நாம், மீண்டு

போதலே — திரும்பிச் செல்லுதலே, அழகிதென்று - அழகையுடைய தென்று, அந்தகன் - யமனுனவன், அறைந்திட்டான் - சொல்லினுன் எ-று.

போர்த்தொழில்வைவாட்பொருவிலண்ணல்செங்
தார்ப்பசுங்கிளியனுடார்பெறுதுபோய்க்
கார்க்குழலரம்பையர்கமலவாண்முகம்
பார்ப்பதெவ்வாறெனப்பரிவிற்கூறினுன்.

இ-ள். போர் — போர்செய்கின்ற, தொழில் — தொழிலையுடைய, வைவாள் — வச்சிராயுதமேந்திய, பொருவில் — ஒப்பில்லாத, அண்ணல் — இந்திரனுனவன், செம் — சிவந்த, தார் — இரேகையையுடைய, பசு — பசுமை பொருந்திய, கிளியனுன் — கிளியை நிகர்த்தவளாகிய தமயந்தியினுடைய, தார் - மாலையை, பெறுது — பெற்றுக்கொள்ளாமல், போய் — சென்று, கார்கரிய, குழல் — கூந்தலையுடைய, அரம்பையர் — அரமாதருடைய, கமலம் - தாமரைமலர்போன்ற, வாள் — ஒளிபொருந்திய, முகம் — முகத்தை, பார்ப்பது — நோக்குவது, எவ்வாறென — எவ்வாறென்று, பரிவில் - தன்பத்தினுல், கூறினுன் — சொல்லினுன் எ-று.

சந்தேகத்தாலிந்திரனிவ்வாறு கூறினுன். 13

அரத்தமுண்டொளிரும்வாளவுணர்செற்றுநங்
திருத்தகுசெல்வமுஞ்சிறப்புநல்கிய
விரைத்துணரலங்கலான்வீரசேனன்போன்
றிருத்தலாலிவனளனென்னவேண்டுமால்.

இ-ள். அரத்தம் — உதிரத்தை, உண்டு — பானம்பண்ணி, ஒளிரும் — பிரகாசிக்கின்ற, வாள் - வாட்படையையுடைய, அவுணர் - அசுரர்களை, செற்று - கொன்று, நம் — நம்முடைய, திருத்தகு - திருவிற்குத்தக்க, செல்வமும் — செல்வத்தையும், சிறப்பும் — சிறப்பையும், நல்கிய — கொடுத்த, விரை — வாசனைபொருந்திய, துணர் — பூங்கொத்துகளையுடைய, அலங்கலான் — மாலையையுடையவனுகிய, வீரசேனன்போன்று — வீரசேனராசனை யொத்தவனுகி, இருத்தலால் — இருந்திடலால், இவன் — இவனை, நளனென்னவேண்டும் — நளமகாராசனென்று சொல்லவேண்டும் எ-று. தந்தையின் பெயர்வேறுங் கூறுப.

மிகுந்த வலிமையுடைய ரென்பதுதோன்ற அரத்தமுண்டொளிரும் வாளவுணரென்றும், அவர்களால் முழுவதுமிழந்தமை தோன்றத் திருத்தகு செல்வமுஞ் சிறப்புநல்கியவென்றும், வெற்றிமாலையணிந்தோ னென்பது தோன்ற விரைத்துண ரலங்கலா னென்றும் சொல்லினுர். முன்னெருகாலத்திலே தன்னைப்புறங்கண்ட அசுரர்களைவென்று தெய்வலோகத்தை நிலைநிறுத்தி இழந்தசெல்வத்தையுஞ் சிறப்பையுந்தந்த வீரசேனனைப்போலுதலால் அவன் குமாரனுகிய நளனென்று இந்திரன் நிச்சயித்தான். தந்தை போலும் புதல்வரென்பது — "செந்நெலாலாய செழுமுனை மற்றுமச், செந்

நெலேயாகி விளேதலா—லங்நெல், வயனிறையக் காய்க்கும்—வளவயலூர, மகனறிவுதந்தையறிவு.''—இதனுற்காண்க. 14

சேற்றிதழ்த்தாமரைமலரத்திதண்கட
றேற்றுசெங்கதிரென்றோன்றுகின்னேயா
மேற்றகல்லோரையிலெழுந்ததாலன்றே
வாற்றெதிர்ப்பட்டனமலங்கல்வேலினுய்.

இ-ள். அலங்கல்—வெற்றிமாலேயணிந்த, வேலினுய்—வேற்படையேந்திய நளமகாராசனே! சேறு—சேற்றிலிருக்கின்ற, இதழ்—இதழ்களேயுடைய, தாமரை—தாமரைகள், மலர—விரிய, தெள்-தெள்ளிய, கடல்-கடலினிடத்து, தோற்று—தோன்றுகின்ற, செங்கதிரென—சூரியனேப்போல, தோன்று நின்னே—வந்தவுன்னே, யாம்-யாங்கள், ஏற்ற—தக்க, நல்—நல்ல, ஓரையில்-இராசியில், எழுந்ததாலன்றே—புறப்பட்டபடியாலல்லவா, ஆறு-வழியில், எதிர்ப்பட்டனம்—எதிர்பட்டோம் எ-று.

ஓரை—இராசி—''ஓரையேமாதர்கூடி விளேயாடலுடனிராசி'' என்றது கிகண்டு இச்செய்யுள் உவமையணி. 15

இவனழற்கடவுண்மற்றிவன்வெங்கூற்றுவ
னுவனெறிகடற்கிறையொழிந்துகின்றயான்
கவனவாம்பரியுளமுணருங்காவல
வயிரொளிமணிமுடியமர்வேந்தனே.

இ-ள். கவனம்-வேகத்தையுடைய, வாம்—தாவுகின்ற, பரியுளம்-குதிரையினுடைய கருத்தை, உணருங்காவல-அறியும் நளமகாராசனே! இவன் அழற்கடவுள்-இவனக்கினிதேவன், இவன்வெம் கூற்றுவன்-இவன் வெப்பம்பொருந்திய—யமன், உவன்-அவன், எறிகடற்கிறை-அலேயவீசுகின்ற கடற்கரசனுய்ய வருணன், ஒழிந்து நின்ற-இவ்வொழியநின்ற, யான்—யானேவெனில், அவிர்—பிரகாசிக்கின்ற, ஒளி-காந்தியையுடைய, மணி—மணிகளா லிழைக்கப்பட்ட, முடி—கிரீடத்தையுடைய, அமர்வேந்தன்-தேவர்க்கரசனுகிய இந்திரன் எ-று.

ஒழியவென்னுஞ் செயவெனெச்சம் செய்தெனெச்சப் பொருளில்வந்தது. அசுவபரீட்சையில் வல்லானென்பது தோன்ற ''வாம்பரியுளமுணரும்'' என்றுன். 16

உன்னுழைவேண்டுவதொன்றுண்டாங்கது
பின்னர்யாங்கூறுதுமென்றுபெட்புறும்
பொன்னகர்க்கிறையவனிருந்தபோதினின்
மன்னவனவரிவணங்கினனோ.

இ-ள். உன்னுழை—உன்னிடத்தில், வேண்டுவது—யாம் விரும்புவது, ஒன்றுண்டு—ஒரு காரியமுண்டு, அது-அதனே, பின்னர்-பின்பு, யாங்

கூறுதுமென்று — யாம் கொல்லுவேமென்று, பெட்புறும்-விருப்பமடைந்த, பொன்னகர்க்கிறையவன் — இந்திரனனவன், இருந்தபோதினில் - இருந்த பொழுதில், மன்னவன் — நளமகாராசன், அவர் அடி — இந்திரன் முதலிய அந்நால்வர்பாதங்களையும், வணங்கினன் — வணங்குதல் செய்தான் எ-று.

உண்ணெகிழ்ந்திறைஞ்சியவுலங்கொடோளினன்
விண்ணுலகாள்பவர்க்கரியமேம்பொருள்
மண்ணுலகாள்பவர்மாட்டுவைகுமோ
வெண்ணின்மற்றிவருளம்யாவதாங்கொலோ.

இனி ஆறுசெய்யுட்களால் நளனுடைய சிந்திப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். உள் - உள்ளம், நெகிழ்ந்து — குழைந்து, இறைஞ்சிய — வணங்கிய, உலங்கொள் — திரள், கல்லினுடைய — வலிமையைக்கொண்ட, தோளினன் - தோள்களையுடைய நளமகாராசன், விண்ணுல காள்பவர்க்கு - தெய்வலோகத்தை யாளுகின்றவர்க்கு, அரிய — அருமையாகிய, மேம்பொருள்- மேன்மைப்பட்டபொருள், மண்ணுலகாள்பவர் மாட்டு — மண்ணுலகாள்பவரிடத்து, வைகுமோ — இருக்குமோ, எண்ணில் — எண்ணுமிடத்தில், இவர் உளம்-இவருடைய மனம், யாவதாங்கொலோ-யாதாகுமோ எ-று. கொல்-ஐயம்.

மண்ணுலகத்தோர் வருந்தித் தவஞ்செய்து பெறற்குரியது பொன்னுலகம்; அதனை யாளுகின்ற தலைமைபெற்ற இந்திரனுக்கும் அரியபொருளுண்டோ, ஆயின் அது நம்பாலுளதாகுமோ ஆதலின் இஃதியாதோவென ஐயுற்றனனென்க. மண்ணுலகென்றதனால் விண்ணுலகைப் பொன்னுலகெனக் கொள்ளப்பட்டது. 18

குறிப்பறிந்தீதலேகொடைமற்றின்றென
மறுத்தலேகேட்டபின் வழங்கலாதலிற்
பெறற்கருமாவியும்பெட்பினீகுவன்
றிறப்படவிவளருந்தெரிந்ததில்லையால்.

இ-ள். குறிப்பறிந்து - ஒருவர் குறிப்பினைத்தெரிந்து, ஈதலே - கொடுத்தலே, கொடை — கொடுத்தலாகும், கேட்டபின் - கேட்டபின்பு, வழங்கல்-கொடுத்தல், இன்றென - இல்லையென்று, மறுத்தலே — தடுத்தலேயாகும், ஆகலின் — ஆகையினாலே, பெறற்கரும் — பெறுதற்கரிய, ஆவியும் — உயிரையும், பெட்பின் - அன்பினாலே, ஈகுவன் — கொடுப்பேன், திறப்பட — நிச்சயமாக, இவருளம் — இவருடைய மனம், தெரிந்ததில்லை - தெரியவில்லை.

உம்மை — உயர்வுசிறப்பு. குறிப்பறிதலாவது தன்னிடத்தொன்றை விரும்பிவருபவனது முகக்குறிகளாலவன் கருத்தையறிதல். அது "உயிர்க்கொலை புரிந்தவர் முகக்குறி யுரைக்கும்" என்பதனாலறிக. அஃதறிந்தீத

லாவது "இலனென்னு மெவ்வ முரையாமையீதல், குலனுடையான் கண் ணேயுள" இதனாலறிக. கேட்குமிடத்தண்டாம் மானமிழத்தல் அச்சப் படுதல்முதலிய வருத்தம் இல்லையென்னும்போ தண்டாகும் வருத்தத்தோ டொப்பாதலின் இன் றெனமறுத்தலே கேட்டபின் வழங்கலென்றார். கொடுக்கும் பொருளின்முடிவாகிய ஆவியெனினும் அன்போடுகொடுப்பே னென்றதாம். 19

ஒளிமுகமிழப்பவந்துற்றநாணமீக்
கிளர்தரவில்லெனக்கிளக்குமூர்ச்சனை
தெளிதரமுகத்தினிற்றெளித்தற்கன்றுகொ
னளிபுனல்பொருளொடுகல்குகின்றதே.

இ-ள். முகம்—முகமானது, ஒளியிழப்ப - ஒளிகுன்ற, வந்து - வந்து, உற்ற - மிகுந்த, நாணம் - நாணமானது, மீக்கிளர்தர - அதிகரிக்க, இல் லெனகிளக்கும் - இல்லையென்று சொல்லும், மூர்ச்சனை - மூர்ச்சையானது, தெளிதர - தெளியும்படி, முகத்தினில் - முகத்தினிடத்தில், தெளித்தற் கன்றுகொல் - தெளித்தற்கல்லவா, நளி - குளிர்ந்த, புனல் - நீரை, பொரு ளொடு - திரவியத்துடனே, நல்குகின்றது - கொடுக்கின்றது எ-று.

நாணந்தலைக்கொண்டு எனக்கில்லையென்று சொல்லும்பொழுதண் டாகு மூர்ச்சைதெளிதற்கு முகத்திற்றெறிப்பத்தண்ணீரைப் பொருளொடு கொடுப்பதென்க. விதிப்படி கொடுக்குநீரில் மூர்ச்சை தெளிதற்பொருட் டென்னக் குறித்தலால் தற்குறிப்பணி. 20

ஐந்தருநீழலினரசுவைகிய
விந்திரன்முதலினோர்கென்றென்னுழை
வந்துயர்பெரும்புகழ்வழங்கினரிவர்
சிந்தனைமகிழ்வுறவென்கொல்செய்வதே.

இ-ள். ஐந்தரு நீழலின் - பஞ்சதருவினிழலிடத்து, அரசுவைகிய அரசிருக்கின்ற, இந்திரன்முதலினோர் - இந்திரனுதியோராகிய நால்வரும், ஈகென்று - தருவாயென்று, என்னுழைவந்து - என்னிடத்தில்வந்து, உயர்- உயர்ந்த, பெரும்புகழ் - பெரியகீர்த்தியை, வழங்கினர் - கொடுத்தார்கள், இவர் - இவர்களுடைய, சிந்தனை - மனங்கள், மகிழ்வுற-மகிழ்ச்சிபொருந்த, என்செய்வது - யாதுசெய்வது எ-று.

யாதுவிரும்பினும் இந்திரனுக்கொருகுறை யில்லையென்பதுதோன்ற 'ஐந்தருநீழலினரசுவைகிய'வென்றார். யாசகர்கள் எதைகேட்க நினைத்தார் களோ அதைக் கொடுத்தாலல்லாமல் அவராற்றாப்பட்ட புகழ் நில்லாதென் பது கருத்து. 21

உரவுநீர்க்கருங்கடலுடுத்தமாநிலத்
தருளுடனிம்மையினளித்தவான்பொருண்

மருவியமறுமையில்வழங்குபான்மையா
விரவலர்தமரினுமினியராவரே.

இ-ள். உவ - ஒலிக்கின்ற, நீர் - நீரையுடைய, கருங்கடல் - கரிய கடலை, உடுத்த - ஆடையாகத்தரித்த, மாநிலத்து-மகத்தாகிய பூமியில், அருளுடன் - கருணையுடனே, இம்மையில் - இப்பிறப்பில், அளித்த-கொடுத்த, வான்பொருள் - மேலாகியபொருளை, மருவிய - பொருந்திய, மறுமையில்-மறுபிறப்பில், வழங்கு பான்மையால்-கொடுக்கின்றதன்மையால், இரவலர்-யாசகர்கள், தமரினும் - தம்மவரினும், இனியராவர் - இனிமையுடையவராவர் எ-று.

தம்மவர் - உறவோர் இப்பிறப்பிற் கொடுப்பதை மறுபிறப்பி லவரிருக்கு மிடத்திற்குச்சென்று தருபவராதலால் யாசகரைத் தம்மவரினும் இனியரென்றார். ''அற்றாழிபகிர்ந்த லஃதொருவன், பெற்றான் பொருள்வைப்புழி'' அது கொடுப்பவருக்கு ஆஸ்தியென்பது இதனாலறிக. 22

உடைப்பெரும்பொருளினையுலகிலாதியங்
கிடைப்பதற்களித்தலிற்கிளர்நிரப்பினு
லடுத்துவந்தேற்குரர்க்கார்வமீதுறக்
கொடுக்கிலொன்றேபலகோடியாகுமால்.

இ-ள். உடை - தமதாகவுடைய, பெரும்பொருளினை - பெரிய திரவியத்தை, உலகில் - உலகத்தில், ஈதியம் - இலாபம், கிடைப்பதற்கு-கிடைக்கும்பொருட்டு, அளித்தலில் - கொடுப்பதிலும், கிளர் - மிகுந்த, நிரப்பினால்-வறுமையினால், அடுத்துவந்து - அணுசரித்துவந்து, ஏற்குரர்க்கு - யாசிப்பவர்க்கு, ஆர்வம் - ஆசை, மீதுற - அதிகரிக்க, கொடுக்கில் - கொடுத்தால், ஒன்றே - ஒருபொருளே, பலகோடியாகும் - பலகோடிப்பொருளாகும். 23

உலகத்திலே ஒருவருக்கு இலாபத்திற்குக் கொடுப்பதைக் காட்டிலும் யாசகர்க்குக் கொடுப்பதில் அனேகங்கோடி இலாபம் உண்டென்பதாம்.

என்றுமற்றினையனவெண்ணிவண்ணவான்
குன்றெனப்பணைத்துயர்குவவுத்தோளினான்
வன்றிறல்வாசவன்வதனநோக்கிமற்
றொன்றுநீகேட்டியென்றுரைத்தன்மேயினான்.

நளன் சொல்லுதல்.

இ-ள். என்று-இப்படியென்று, இனையன-இத்தன்மையவாக, எண்ணினானந்த, வண்ணம் - அழகிய, வான் - மேலாகிய, குன்றென - மலையைப்போல, பணைத்த - பருத்த, உயர் - உயர்ந்த, குவவு - திரட்சிபொருந்திய, தோளினான் - தோளையுடைய நளமகாராசன், வன்றிறல் - மிகுந்த வலிமை படைத்த, வாசவன் - இந்திரனுடைய, வதனநோக்கி - முகத்தைப்பார்த்து, ஒன்று - ஒருசெய்தி, நீ கேட்டியென்று - நீ கேட்பாயாகவென்று, உரைத்

தல் மேயினன் - சொல்லத் தொடங்கினன் எ-று. மற்றிரண்டும் அசை நிலைகள். 24

என்னருந்தவத்தினன்றெனதுதொல்குல
முன்னையோரருந்தவமுயன்றபான்மையாற்
பொன்னகர்துறந்துநீர்போதப்பெற்றனன்
சொன்னவைமறுக்கிலன்சொல்கவென்றனன்.

இ-ள். என் - என்னுற்செய்யப்பட்ட, அருந்தவத்தின் - அரியதவத்தினாலே, அன்று - அன்றாகும், எனது - என்னுடைய, தொல்குலம் - பழைய குலத்திற் றோன்றிய, முன்னையோர் - பெரியோர்கள், அருந்தவம் - அரிய தவத்தை, முயன்றபான்மையால் - முயன்று செய்தபடியினாலே, பொன்னகர் - தெய்வலோகத்தை, துறந்து - நீங்கி, நீர் போதப்பெற்றனன் - நீவிர் இங்கே வரப்பெற்றீர், சொன்னவை மறுக்கிலன் - சொல்லிய செய்திகளை மறுக்கமாட்டேன், சொல்கவென்றனன் - சொல்லக்கடவீரென்றான்.

மேன்மையுள்ள நீவிர் வருதற்கு எற்றதவம் யானொருவன் செய்தது போதாதாதலால் எனக்கு முற்பட்டவர் செய்த தவமாகு மென்றான். 25

ஆங்கதுகேட்டவான்ரசன்பொற்பினுல்
வீங்குதோள்மாரனெவன்றநீயலால்
யாங்குளரவன்றொடுத்தெய்யுமின்னரூப்
பூங்கணையால்வருந்துயரம்போக்குவார்.

நளனுக்கு இந்திரன் சொல்லுதல்.

இ-ள். ஆங்கு - அவ்விடத்தில், அது - அம்மொழியை, கேட்ட - கேள்விப்பட்ட, வானரசன் - இந்திரனனவன், பொற்பினுல் - அழகினுல், வீங்கு - மிகுந்த, தோள் - தோளையுடைய, மாரனை - மன்மதனை, வென்ற - வெற்றி கொண்ட, நீயலால் - நீயொருவனல்லாமல், அவன் - அம்மன்மதனனவன், தொடுத்து - நாரியிற்றொடுத்து, எய்யும் - பிரயோகஞ்செய்கின்ற, இன் - இனிய, நரு - தேனொழுகுகின்ற, பூங்கணையால் - மலரம்பால், வரும் - வருகின்ற, துயரம் - துயரத்தை, போக்குவார் - நீக்குவார், யாங்குளர் - எவ்விடத்திலுளர் எ-று.

அழகினுல் மிகுந்த தோளையுடைய மன்மதனைச் செயித்த நீயல்லாமல் அவன் வாளியால் வருந்துன்பத்தை நீக்குவோர் பிறர்யார்! அழகினுலென்றதை வீங்குதலோடுங் கூட்டுக. அன்றிலென்ற வென்பதோடுங் கூட்டுப் பொருள்கொளின் மிகுந்த அழகுள்ளவனென்னும் பொருள்படுதலால் துன்பம் நீங்குதற்கு வல்ல ஏதுவில்லையாயிற்று. முற்படியாயின் காமனெவென்றவனென்றலிற் சிதேந்திரியன் என்னும் பொருள்படலால் அத்துன்பம் நீங்கியவன் பிறர்க்கும் அத்துன்பத்தை நீக்குவானென்பதும் பெற்றாம். 26

வெயில்விரிமணிமுடிவீமனல்கிய
மயிலியன்மதர்விழிவளைக்கைமங்கையாற்

செயிறறு தூதுநீ செல்லவேண்டுமென்
றுயிரிரப்போரினு மூளையக்கூறினன்.

இ-ள். வெயில் – பிரகாசம், விரி – விரிகின்ற, மணி – மணிகள்பதித்த, முடி – முடியையுடைய, வீமனல்கிய – வீமராசன்பெற்ற, மயில் – மயிலை யொத்த, இயல் – சாயலும், மதர் – களிப்புமிக்க, விழி – கண்களும், வளைக்கை – வளையலணிந்த கைகளையுமுடைய, மங்கைபால் – தமயந்தியிடத்தில், செயிறறு – குற்றமற்ற, தூது நீ செல்லவேண்டுமென்று – நீ தூதுபோக வேண்டுமென்று, உயிரிரப்போரினும் – உயிரைக் கொடுவென் றிரப்பவரைப் பார்க்கிலும், உளைய – வருந்த, கூறினன் – சொல்லினன் ஏ-று.

நளனுல் விரும்பப்பட்ட உயிரினுஞ் சிறந்ததமயந்தியினிடத்து அவனே தூதுசெல்லுதலில் ஒருவருயிரிரத்தற்கணுளதாந் துன்பத்தினும் அதிக வருத்தமிருத்தலால் 'உயிரிரப்போரினு மூளையக்கூறினன்' னென்றார். 27

திருத்தகுசெவியிடைச்சிவையினூடுற
வுருக்கியசெம்பினையூற்றினலென
மருத்துவன்றீமொழிகேட்டுமன்னர்கோன்
கருத்தழிந்தாருயிர்கலங்கினனரோ.

நளன் வருத்தமடைதல்.

இ-ள். திருத்தகு – அழகுபொருந்திய, செவியிடை – காதினிடத்திலே, சிவையினூடு – உலைமூக்கில், உற – பொருந்த, உருக்கிய – உருக்கப்பெற்ற, செம்பினை – செம்பை, ஊற்றினலென – ஊற்றியதுபோல, மருத்துவன் – இந்திரனுடைய, தீமொழி – தீயையொத்தசொல்லை, கேட்டு – கேள்விப் பட்டு, மன்னர்கோன் – நளனெனவன், கருத்து அழிந்து – நினைவுமறந்து, ஆர் – நிறைந்த, உயிர் – ஆவி, கலங்கினன் – கலக்கமுற்றன் ஏ-று.

தான்விரும்பிய தமயந்தியை யபகரிக்கத் தன்னையே தூதுசெல்லச் சொன்னதாதலால் நளனுக்கு இந்திரன் சொல்லியது தீமொழியாயிற்று. செம்பை யூற்றினலென வெனலால் உவமையணி. 28

குருமணிமேகலைக்குவளைக்கண்கொலோ
பொருமதன்பகழியோபொய்ம்மைதீதெனுந்
தருமமோவுயிர்நிலைதளர்ந்துவாடுமென்
மருமமீதோன்றியவாளிற்போழ்வதே.

இ-ள். குரு – நிறம்பொருந்திய, மணி – இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, மேகலை – மேகலாபரணமணிந்த தமயந்தியினது, குவளை – நீலோற்பலம் போன்ற, கண்கொலோ – கண்ணே, பொரு – போர்செய்கின்ற, மதன் – மன்மதனுடைய, பகழியோ – பாணமோ, பொய்ம்மை – பொய்யுரை, தீதெனும் – குற்றமென்றுசொல்லும், தருமமோ – அறமோ, உயிர்நிலை – சீவநிலையானது, தளர்ந்து – தளர்ச்சியடைந்து, வாடுமென் – மெலிவேனை

கிய வென்னுடைய, மருமமீது – மார்பினிடத்தில், ஊன்றிய – தைக்கச் செய்த, வாளில் – வாளாயுதத்தைப்போல், போழ்வது – பிளக்கின்றது.

மேலே – எட்டுச்சாமுள்ளது தமயந்தி கண்ணே மன்மதபாணமோ பொய்யுரைத்தீதென்னுந் தருமமோ என்மார்பினிடத்தில் வாட்படை போலும் பிளப்பதெனக்கூட்டுக. கண்கொலோபகழியா தருமமோவென லால் ஐயவணி. வானிற்போழ்வதேயெனலால் உவமையணி. இவ்விரண்டுங் கலந்து வருதலால் கலவையணி. 29

என்னும்விள்ளாதயர்ந்திருக்குமுமுறுக்
தன்னையுமறக்குமெய்த்தருமநன்றெனுப்
புன்னகைகோட்டுமெய்புழுங்கும்வெய்துயிர்த்
தன்னமுன்னுரைத்தவையனைத்துமெண்ணுமால்.

இ-ள். என்னும் – இப்படியென்று சொல்லுவான், விள்ளாது – பேசாமல், அயர்ந்திருக்கும் - தன்பப்படுவான், எமுறும் – மயங்குவான், தன்னையு மறக்கும் - தன்னையுமறப்பான், மெய் – உண்மைபொருந்திய, தருமம்- அறம், நன்றெனு – நல்லதென்று, புன்னகைகோட்டும் – புன்சிரிப்புக்கொள் ளுவான், மெய்புழுங்கும் – உடல்வெதும்புவான், வெய்துயிர்த்து – அச்ச மடைந்து, அன்னம் – அன்னப்புள்ளானது, முன்னுரைத்தவை யனைத்தும்- (தூதுபோய்வந்து) முன்சொல்லிய செய்தியாவையையும், எண்ணும்- நினைப்பான் எ-று.

காம்பீர நடையுடையவ ளுதலால் விள்ளாதயர்ந் திருக்குமென்றும், செய்வதந் தவிர்வதந் தோன்றுமையால், எமுறுமென்றும், இப்படிப்பட்ட சிந்தையுடையவளுகலின் தன்னையு மறக்குமென்றும் சத்திய மிவ்வா றுரைத்தவதாகலின் வஞ்சப்புகழ்ச்சியாத் தருமநன்றெனுப் புன்னகைகோட்டு மென்றும், இதனுல் அகத்தில் அதிக தாபமுண்டாகையால் மெய்புழுங்கு மென்றும், தருமத்திற் குடன்பட்டவளுகையால் இனி தனக்குக் கிடையா னென்னு நிச்சயத்தால் வெய்துயிர்த்தென்றும், பெரு தபொருளின்மேல் வீருப்பம் அதிகரித்தலால் 'அன்ன முன்னுரைத்தவை யனைத்துமெண்ணு' மென்றுஞ்சொல்லினர் - வருத்தமிகுதியின் நகைசெய்வது. ''இடுக்கண் வருங்கானகுவதனே, யடுத்தூர்வ தஃதொப்பதில்'' இதனுலறிக. பகையில் லாமல்! ஒருகாலத்திலே கூடத்தக்க என்னும் அயர்ந்திருக்கு முதலிய பல வற்றிற்குக் கூட்டத்தைச் சொல்லுதலினுலே கூட்டவணி. 30

முற்றிழைவனமுலைமுயங்குநன்னலம்
பெற்றிலனெனினும்வேள்பெய்யும்வாளியான்
மற்றுயிரிறப்பினும்வானவேந்தொடு
சொற்றதமறுக்கிலனென்றுசொல்லுவான்.

இ-ள். முற்ற – முற்றிய, இழை – ஆபரணங்களையணிந்த தமயந்தியனது, வனம் – அழகிய, முலை - தனங்களே, முயங்கும் – தழுவுகின்ற, நன்

னலம் – நல்லசுகத்தை, பெற்றிலனெனினும் – பெறுமற்போனேனாயினும், வேள் – மன்மதனனவன், பெய்யும் – சொரிகின்ற, வாளியால் – பாணங் களினுலே, உயிரிறப்பினும் – ஆவிமாயினும், வானவேற்கெதிர் – இந்திர னுடன், சொற்றது – சொல்லியதை, மறுக்கிலன் – தடுக்கமாட்டேனென்று நிச்சயித்துக்கொண்டு, சொல்லுவான் – சொல்லுகின்றான் எ-று.

மூற்றுதல் – வளைத்தல். மற்று – அசைநிலை. இம்மைப்பயனைத் தரும் பென நினைத்து மறுமைப்பயனை விரும்பிய காம்பீர நடையையுடைய சத் திய சந்தனுகையால் இவ்வாறு கூறினனென்க. 31

எப்பொருளாயினும்யாவருள்ளமுங்
கைப்படுநெல்லியங்கனியிற்காணுநீர்
துப்பிதழ்மடந்தைபாற்றூதுபோகெனச்
செப்பியதெவன்கொலெஞ்சிந்தையோர்ந்துமே.

தூதுபோகச்சொல்லிய இந்திரனைக்குறித்து நளன் சொல்லல்.

இ-ள். எப்பொருளாயினும் – எந்தப் பொருளானலும், யாவருள்ளமும் – எவர்களுடைய மனமும், கைப்படு – உள்ளங்கையிற்பட்ட, நெல்லியங்கனி யின் – நெல்லிப்பழத்தைப்போல, காணும் – அறிகின்ற, நீர் – நீவிர், துப்பு பவளம்போன்ற, இதழ் – அதரத்தையுடைய, மடந்தைபால் – தமயந்தியினி டத்து, தூதுபோக என – தூதுபோவென்று, எம் – எங்களுடைய, சிந்தை மனத்தை, ஓர்ந்தும் – தெரிந்தும், செப்பியது – சொல்லியது, எவன்கொல் – யாதுகொல் எ-று.

என்னுள்ளம் அவளிடத்தும் அவளுள்ளம் என்னிடத்தும் ஒருமித்து நின்றதென்பது தோன்ற எஞ்சிந்தை யோர்ந்துமெனத் தன்மைப் பன்மை யாகச் சொல்லினர். "ஒருதலையா னின்னது காமங்காப்போல – விருதலை யானு மினிது" என விருத்தலால் ஒத்த காமமுள்ள வெனக்கன்றி ஒருதலைக் காமமுள்ள உனக்குச் சந்துபொருந்தாதென்பது கருத்து. நெல்லியங்கனியி லென்றமையால் உவமையணி. போக என்பதில் அகரந் தொகுத்தல். 32

வழங்கிய நும்மூரைமறுதுசென்றியான்
மொழிந்தனனுயினுமுன்னரேயெனை
விழைந்தவத்தளிரியல்வெள்குறுதுளங்
குழைந்துநும்பான்மணம்பொருந்தல்கூடுமோ.

நீயே செல்கென்ற இந்திரனுக்கு நளன் சொல்லல்.

இ-ள். வழங்கிய – சொல்லிய, நும்மூரை – உம்முடைய சொல்லை, மறுது – மறுக்காமல், யான்சென்று – யான்போய், மொழிந்தனனுயினும் – சொன்னேனுனும், முன்னரே – முன்னமே, எனைவிழைந்த – என்னை விரும்பிய, அ தளிர்இயல் – அத்தமயந்தி, வெகுளுறுது – நாணுதல், உளம் குழைந்து – மனங்கரைந்து, நும்பால் – உம்மிடத்தில், மணம் – விவாகத் திற்கு, பொருந்தல் கூடுமோ – சம்மதிப்பாளோ எ-று.

முன் - காலப்பொருளில் வந்த இடைச்சொல் அர் என்னுஞ் சாரியை பெற்று நின்றது. தளிர் இயல் - உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தளிர்போலும் இயலினை யுடையாள் என்பது பொருள். யான் விழைந்தவென்னில் தன்னறிவுக் கேலாதென்பதுபற்றி எனை விழைந்த வென்றான். விழைந்தவளாதலால் யான் சொல்லுவதற்கு எதிர்மொழி கொடுத்தற்கே நாணும். அங்ஙனம் நாணுபவள் எவ்வாறு நின் விவாகத் திற்குச் சம்மதிப்பாளென்பது கருத்து. 33

என்னவேந்துரைத்தலுமிசைத்தசொன்மரு
நின்னைமெய்ப்பரதனைநிகரில்பார்த்தனை
முன்னினுநினைத்தவையனைத்துமுற்றுமா
லன்னநீயேகிலேதரியதாகுமே.

என்னுல் முற்றுமோவென்ற நளனுக்கு இந்திரன் சொல்லியது.

இ-ள். என்ன-இப்படியென்று. வேந்து-நளமகாராசனுனவன், உரைத்தலும்—சொல்லலும், இசைத்த—சொல்லிய, சொல் - சொல்லினை, மரு-மறுக்காத, நின்னை - உன்னையும், மெய் – உண்மையையுடைய, பரதனை-பரதனையும், நிகரில் – ஒப்பில்லாத, பார்த்தனை – அருச்சுனனையும், முன்னினும்—நினைத்தாலும், நினைத்தவையனைத்தும் - நினைத்த காரியங்களியாவும், முற்றும் – முடியும், அன்ன—அத்தன்மையையுடைய, நீ - நீயே, எகில்-போலுல், ஏது—எந்தக்காரியம், அரியதாகும் – அருமையையுடையதாகும் எ-று. ஆல் - அசைநிலை.

வேந்து – விகுதி கெட்டுநின்ற உயர்திணைப்பெயர். கார்த்தவீரியன் பிரதையின் புத்திரனல்லாஞகவும் பார்த்தனெனக் கூறியது, அர்ச்சுனன் என்னும் பெயருண்மை பற்றியென்க. பரதன் அர்ச்சுனன் எனப் பொதுப்படக்கூறினும் சகுந்தலை புத்திரனுகிய பரதனும், எகைய புத்திரனுகிய கார்த்தவீரிய அர்ச்சுனனுமெனக்கொள்க. பரதனை இராமற்கிளவலென்றும், பார்த்தனை வீமற்கிளவலென்றும், பொருள் கொள்வாருமுண்டு. அவ்வாறு கொள்ளிற் காலவேற்றுமைப்படலானும் வடநூலுறையுடன் மாறுபடலானும் சான்றோராட்சி யல்லாமையானும் மரபு வழுவாகலானும் இழுக்காமென்க.

"தரைதிருத் தியசீர் வைனிய னென்னுந் தனிக்குடைப் பிருதவேந் தனையும், விரைமலர்த் தொடை * யே கையன்றரு கார்த்த வீரியவருச்

* எகையன் புதல்வன் 'கார்த்தவீரியார்ச்சுனன் என ஈண்டுப் பேசப் பட்டது. பார்க்கவ புராணத்திலே கிருதவீரியன் புதல்வன்ஆகலிற் கார்த்த வீரியன் எனப்பெயர் போந்ததென்று கூறப்பட்டுளது. அதனைக் கிருத வீரியன் மகப்பெறுபடலத்திற் காண்க. அன்றியுங் கூர்மபுராணம் சந்திர வம்சமுரைத்த அத்தியாயத்தில், "கன்னலின் றுயர்ந்ததிண்டோட் டன கன்மற் றவன்றனகாலை – யென்கிலத்தரசும் போற்றுங் கிருதவீரியனென் பாரால்" (21) ஏத்தும் வார்புக ழாங்கவன் மகனிராவணனை - யார்த்தவன் சிறைப்புகுத்தியெவ்வுலகமு மடர்த்த—கார்த்தவீரியனுகும். (22) என்னு மிச்செய்யுள்களாலு முணர்க.

சுனன்றனை யு, முரைசகுந் தலைபுத் திரனெனும்பாத லைநெள்ளை யுமொரு செயற்குப், புரையறச் செல்லும் பொழுதுதன் னினரப் பொருள்பெறீஇ விரைந்து மீள்குவரால்.''

இச்செய்யுள் வடநூலுரை மேற்கோளின்படி மொழி பெயர்க்கப்பட்டது. பிறர்க்கும் உன்னினைப்பால் முடியுங்காரியம் நீயே சென்றுல் முடிதற்குச் சந்தேகமில்லை யென்றலாற் செய்யுட்பொருட்பேறணி. 34

இனையன வாசவனியம்புமெல்லியின்
வனைமலர்க்கோதைதன்வயத்தனுகியுந்
தனியறனிழுக்குறுத்தகையனுதலி
னனையதற்கியைந்தன னலங்கல்வேலினுன்.

நளன் தூதுசெல்லச் சம்மதித்தது.

இ-ள். வாசவன் – இந்திரனுவன், இனைய – இத்தன்மையவாகிய சொற்களை, இயம்பும் எல்லியின் - சொல்லுகின்ற பொழுதில், வனை – கட்டுகின்ற, மலர்க்கோதைதன் – மலரையணிந்த கூந்தலையுடைய தமயந்தியினது, வயத்தனுகியும் – வசப்பட்டவனுயிருந்தும், தனி – ஒப்பற்ற, அறன்-தருமத்தினின்றும், இழுக்குறு – கெடுதலடையாத, தகையனுதலின்-குணத்தையுடையவனுதலால், அனையதற்கு – அவ்விந்திரன்சொன்னதற்கு, அலங்கல் – வெற்றிமாலையைத்தரித்த, வேலினுன் – வேற்படை யேந்திய நீளமகாராசன், இயைந்தனன் – உடன்பட்டான் எ-று. 35

பொருந்தியமன்னர்கோன்பொம்மல்வெம்முலைத்
திருந்திழைகடிநகர்ச்சேமமாகிய
வருந்திறல்வாயிலோரறிவுறுதுபோய்
வருந்திறன்யாதெனமறித்துங்கூறினுன்.

நீ செல்லத் தடையுளதோ வென்ற இந்திரனுக்கு
நளன் சொல்லியது.

இ-ள். பொருந்திய – சம்மதிப்பட்ட, மன்னர்கோன் – நளன், பொம்மல் - பொலிவுபொருந்திய, வெம் – விருப்பத்தைத் தருகின்ற, முலை-தனங்களையும், திருந்திழை – திருத்தமாகிய ஆபரணங்களையுமணிந்த தமயந்தியினுடைய, கடிநகர் - புதுமைபெற்ற நகர்க்கு, சேமமாகிய – காவலாகிய, அருந்திறல் – அரியவல்லமையையுடைய, வாயிலோர் - வாயில்காப்பவர், அறிவுறுதுபோய் – அறியாமற்புகுந்து, வருந்திறன் - வருகின்றவிதம், யாதென – எப்படியென்று, மறித்தும் – மறுபடியும், கூறினுன் – சொல்லினுன் எ-று. 36

விட்புலந்தனிபுரந்தருளும்வேந்தர்கோ
னட்பொடுமினியனவின்றியாவர்க்குங்

கட்புலனு ருக்காண்கிலாததோர்
* நூட்பநூல்விஞ்சையை நுவன்றிட்டானரோ.

மறைந்து செல்வதற்கு உபாயமுளதோவென்ற
நளனுக்கு இந்திரனருளியது.

இ-ள். விட்புலம் – விண்ணுலகத்தை, தனி – ஒப்பற்ற, புரந்தருளும்-காக்கின்ற, வேந்தர்கோன் – இந்திரனெனவன், நட்பொடும் — சினேகத்துடனே, இனியன — இன்சொற்களே, நவின்று – சொல்லி, யாவர்க்கும்-எவர்களுக்கும், கூட்புலனுல் — கண்ணறிவினுல், உரு – வடிவத்தை, காண்கிலாது – அறியப்படாதாகிய, ஓர் – ஒரு, நூட்பநூல் — நுண்ணிய நூலிற் சொல்லும், விஞ்சையை — மந்திரத்தை, நுவன்றிட்டான் – சொல்லினன். எ-று. விஞ்சை—மந்திரத்துக்காதலால் ஆகுபெயர். 37

பெறலரும்விஞ்சையும்பெற்றுவானவர்க்
கிறையவனிணையடியிறைஞ்சிவண்டிமிர்
நறைமலர்க்கூந்தலாணகரினண்ணுவா
னறைகழலிலங்குதாளரசனேகினன்.

இ-ள். பெறலரும் — பெறுதற் கரிய, விஞ்சையும் – மந்திரத்தையும், பெற்று – பெற்றுக்கொண்டு வானவர்க்கிறைவன் – இந்திரனுடைய, இணையடி – இரண்டு பாதங்களையும், இறைஞ்சி – வணங்கி, வண்டு – வண்டுகள், இமிர் – ஒலிக்கின்ற, நறை – தேனெழுகுகின்ற, மலர் – மலரையணிந்த, கூந்தலால் – அளகபாரத்தையுடைய தமயந்தியினது, நகரி – குண்டினபுறத்திலே, நண்ணுவான் — சேரும்பொருட்டு, அறை – ஒலிக்கின்ற, கழல்-வீரக்கழலானது, இலங்கு – பிரகாசிக்கின்ற, தாள் – பாதத்தையுடைய, அரசன் – நளன், எகினன் — போனன் எ-று.

நெடுநாள் தவஞ்செய்து யோகிகளும் அடைதற் கரிதாகலிற்பெறலருள் விஞ்சை யெனப்பட்டது. எடுத்தகருமம் இடையூறின்றி யினிது முடியும் பொருட்டு உலகவழக்கப்படி கடவுளரை வணங்குவதுமுறைமை யாகலின் "வானவர்க்கிறையவ னிணையடியிறைஞ்சி" யெனப்பட்டது. இதுமுதல் 3 – பாட்டுக்களாற் குண்டினபுரத்திற்குச் செல்லுதல் சொல்லப்படுகின்றன.

பண்ணமைகூந்தன்மான்றேரிற்பார்புக
முண்ணலுமிழையவரார்வம்பின்செல
மண்ணிடைவானவர்மகளிர்தம்மொடும்
விண்ணிழிந்திருந்தனகரமேயினன்.

---

* நூட்பநூல் விஞ்சை என்றது அதர்வண பாகத்துட் கூறப்பட்ட மாலிகாஞ்சனம் என்னும் மந்திரத்தை என்க. மாலிகாஞ்சனமாவது – தன்னுருத்தெரியாமல் எங்கணுஞ்செல்ல விழைவோற்கு அங்ஙனஞ் செய்யும் வன்மையையுடைய மந்திரம். இவ்விஞ்சையைக் கொண்டவரே விஞ்சையர், வித்தியாதரர் எனப்பட்டார்.

இ-ள். பண்ணமை — கல்லணையமைந்த, கூந்தல் - புறமயிரையுடைய, மான் - குதிரைகட்டிய, தேரில் - இரதத்தில், பார் — பூமியிலுள்ளார், புகழ்- புகழ்கின்ற, அண்ணலும் — நளமகாராசனும், இமையவர் — தேவர்களுடைய, ஆர்வம் — ஆசையானது, பின்செல — பின்னேடுதொடர, மண்ணிடை-மண் ணுலகத்தில், வானவர் மகளிரொடும் - அரம்பையருடன், விண் — சுவர்க்க மானது, இழிந்திருந்தன — இழிந்திருந்ததையொத்த, நகரம் - குண்டினபுர த்தை, மேயினன் — பொருந்தினன் எ-று.

இது குண்டினபுரமென்னும் பெயரினாலே மாத்திரம் வேற்றுநகராகத் தோன்றுவதன்றிச் சகல சம்பத்தும் நிறைந்திருக்கின்றபடியால் அமராவதி யென்பதற்குச் சந்தேக மில்லை யென்பது கருத்து. ஆர்வம் பின்செலவென் றது உடனிகழ்ச்சியணி. மண்ணுலகத்துள்ள இந்நகரை வானவர் மகளி ரொடு மண்ணினிழிந்த விண்ணெனக் குறித்தமையால் தற்குறிப்பணி. மான் — ன், சாரியை. 39

வாம்பரித்தேரினின்றிழிந்துவண்டுளர்
தேம்பொதிகுமலர்த்தெரியன்மார்பினன்
காம்புறழ்தோளினுள்செவ்விகாண்குறு
மேம்பலிற்கோநகரெய்தினனோ.

இ-ள். வாம் — தாவுகின்ற, பரி — குதிரையையுடைய, தேரினின் றிழி ந்து - தேரினின்றுமிறங்கி, வண்டு - வண்டுகளானவை, உளர்-ஒலிக்கின்ற, தேம் - வாசனை, பொதி - நெருங்கிய, நறும் - பரிமளம்பொருந்திய, மலர்- மலாற்றொடுத்த, தெரியல் — மாலையணிந்த, மார்பினன் — மார்பையுடைய வனாகிய நளமகாராசன், காம்பு — மூங்கிலை, உறழ்—ஒத்த, தோளினுள்- தோளினையுடையவளாகிய தமயந்தியினது, செவ்வி — அழகை, காண்குறும்- காணவேண்டுமென்கிற, ஏம்பலின் — ஆசையினாலே, கோநகர் — குண்டின புரத்தை, எய்தினன் — அடைந்தான் எ-று. 40

உருகுதங்கொழுநர்பாலூடிநீத்தநல்
விரைகமழ்தெரியலுமின்செயாமுங்
குருமணிக்கலன்களுங்குலவுவீதிவா
யெரிமணிப்பூணினனிடறியேகினன்.

இதுமுதல் 25-பாட்டுக்களால் இவன் செல்லுகையில்
நிகழ்ந்தவை சொல்லப்படுகின்றது.

இ-ள். உருகு — விருப்பத்தால்தளர்கிற, தம் — தம்முடைய, கொழுநர் பால் — கணவரிடத்து, ஊடி - பிணங்கி, நீத்த — நீக்கிய, நல் — நல்ல, விரை- வாசனை, கமழ் — வீசுகின்ற, தெரியலும் — மாலையும், மின்செய் — பிரகாசத் தைச்செய்கின்ற, ஆரமும் — பதக்கமும், குரு — நிறம்பொருந்திய, மணிக் கலன்களும் — இரத்தினபரணமும், குலவு - பிரகாசிக்கின்ற, வீதிவாய்-வீதி யினிடத்தில், எரி — ஒளியையுடைய, மணி — மணிகள்பதித்த, பூணினன்-

ஆபரணத்தையுடைய நளமகாராசன், இடறி – காலிலுலிடறிக்கொண்டு, எகினன் - போலுன் எ-று.

மிகுந்த அன்புடையோ ரென்பதற்கு உருகுதங் கொழுநரென்றும், அவரிடத்தும் ஊடினலன்றி இன்பம் பயவாமையால் ஊடியென்றும், ஊடலில் தம்மெய்யி லணிவனவற்றில் வெறுப்புண்டாதலில் நீத்தவென்றும், செல்வச் செருக்கினல் நாடோறுங் கழித்தெறிவதாதலிற் குலவுவீதிவா யென்றும் காலால் நடந்து செல்வோனுதலில் இடறியேகினு னென்றும்சொல்லினர். செல்வமிகுதியைச் சொல்லுதலால் வீறுகோளணி. 41

மனங்கவர்வனப்பமைவடிவினன்றியுங்
கனம்பயில்வாயிலோர்காண்குரூவகை
சினங்கொள்கூரிலையவேற்செம்மல்போதலா
லனங்கனென்றுரைப்பதற்கையமில்லையே.

இ-ள். மனம் - மனத்தை, கவர் – கவர்ந்துகொள்ளுகின்ற, வனப்பு-அழகு, அமை – அமைந்த, வடிவின் – வடிவினலும், அன்றியும் – அல்லாமலும், கனம் - மேகங்கள், பயில் – சஞ்சரிக்கின்ற, வாயிலோர் – வழியிலிருக்குங் காவலாளர்கள், காண்குரூவகை – காணுதவிதம், சினங்கொள் - கோபங்கொண்ட, கூர் – கூர்மைபொருந்திய, இலைய – இலையையுடைய, வேல்-வேற்படையேந்திய, செம்மல் – நளமகாராசன், போதலால் – செல்கிறபடியால், அனங்கனென்று – அருவத்தையுடையவனுகிய மன்மதனென்று, உரைப்பதற்கு – சொல்வதற்கு, ஐயம் – சந்தேகம், இல்லை – இல்லை. எ-று. இது தற்குறிப்பணி. 42

கண்ணகன்மணிக்கடைக்காவலாளர்தா
நண்ணினரெவரெனவெவரைநாடினுந்
தண்ணறுந்தெரியலான்றன்னையாமென
வெண்ணிவெம்மடங்கலினெருத்தங்கோட்டுமால்.

இ-ள். கண்ணகல் – இடமகன்ற, மணி – அழகிய, கடை – வாயிலிலிருக்கின்ற, காவலாளர்தாம் – காவல்செய்வோர், நண்ணினர் – வந்தவர்கள், எவரென – யாவரென்று, எவரை நாடினும் – யாரைநாடிப்பார்க்கினும், தண்-தண்ணிய, நறும் - பரிமளம்பொருந்திய, தெரியலான் – மாலையையுடையவனுகிய நளமகாராசன், தன்னையாமென – தன்னையாகுமென்று, எண்ணி-கினைத்து, வெம் – வெவ்விய, மடங்கலின் – சிங்கத்தைப்போல, எருத்தங் கோட்டும் – திரும்பிப்பார்ப்பான் எ-று.

இவர்கள் நம்மை எவ்வாறு பார்த்தார்களென்கிற ஆச்சரியத்தினுலே திரும்பிப் பார்த்தானென்க. சிங்கத்துக்குத் தான் வந்தவழியைத் திருப்பிப் பார்த்தலியற்கையென்க. மடங்கலினென்றமையால்உவமையணி. மறைந்து செல்லு மவனியல்பு கூறுதலால் தன்மை நவிற்சியணி. இவ்விரண்டுங் கலந்தலாற் கலவையணி. 43

மலர்பயில்வாவிதோய்மாதர் நுண்டுகி
லலைபுனனீதலுமல்குரோன்றலாற்
கலைவலான் கண்முகிழ்த்தேதகக்காண்குரூன்
முலைமுகடழுந்துறவொருத்திமுட்டினாள்.

இ-ள். மலர்பயில் — மலர்கள் நெருங்கிய, வாவி — தடாகத்தில, தோய்- முழுகிய, மாதர் — மடவாருடைய, நுண் — நுண்ணிய, துகில் — ஆடையானது, அலை — அலைவீசுகின்ற, புனல் — நீரிலே, நனைதலும் - நனைந்தவளவில், அல்குல் — நிதம்பமானது, தோன்றலால் - தெரிதலால், கலைவலான் — அறநூலில் வல்லவனுகிய நளமகாராசன், கண்முகிழ்த்தேக — கண்களை மூடிக்கொண்டுபோக, காண்குரூள் — காணுளாகி, முலை-தனங்களினுடைய, முகடு- உச்சி, அழுந்துற — அழுந்தும்படி, ஒருத்தி — எதிர்ப்பட்ட வொருநங்கை, முட்டினாள் — முட்டினுள் எ-று.

அறத்தின்வழி நிற்போனுதலாற் பிறமாதர்களுடைய மறைத்தற்குரிய உறுப்புக்களை நோக்குதலிற் பாவம் உண்டாகுமென்றஞ்சிக் கண்களை மூடிக் கொண்டான். பின்பு எதிர்ப்பட்டவளுக்கு இவனுருத் தெரியாமையானும் இவன் கண்களை மூடிக்கொள்ளுதலாலும் அவள் வருவது தெரியாமல் முட்டிக்கொண்டனளென்க. 44

காமுறுமொருத்திதன்வதனங்கண்டகண்
கோமகன்முகிழ்த்தலாற்கோதைமார்முக
மாமதியென்பதுமன்னன்செய்யகண்
டாமரையென்பதுந்தக்கவாயவே.

இ-ள். காமுறு — விரும்புதற்குரிய, ஒருத்தி — ஒருமங்கையினுடைய, வதனம் — முகத்தை, கண்டகண் - பார்த்த கண்களை, கோமகன் — நளமகாராசன், முகிழ்த்தலால் — மூடிக்கொள்ளுதலால், கோதைமார்முகம் — மாதருடையமுகம், மா — பெரிய, மதியென்பதும் - சந்திரனென்று சொல்வதும், மன்னன் — இந்த நளமகாராசனுடைய, செய்ய — சிவந்த, கண் — கண்கள், தாமரையென்பதும் — தாமரைமலரென்று சொல்வதும், தக்கதாய — தகுதியாயின எ-று. தன் - அசை.

இவன் விரகமுடையோனுதலால் அந்த மங்கையர் முகத்தைக்கண்டு மனமயங்கிற் பாவமுண்டென்று மூடிக்கொண்டான். அது அவர் முகத்தைச் சந்திரனென்பதையும் இவன் கண்களைத் தாமரை யென்பதையும் நிச்சயப்படுத்தியது தக்கதாயவெனலால் தகுதியணி. 45

செய்யகண்முகிழ்த்திடல்விழித்தறிதலு
மையனுங்கடைக்கணீனுக்கவன்பிதென்
றெய்யுமேவள்கணமலரிதயமார்ந்துமால்
பொய்யெனவருச்சணிபுரிதல்போன்றதே.

இ-ள். செய்ய – சிவந்த, கண் – கண்களே, மூகிழ்த்திடல் – மூடிக் கொள்வதும், விழித்தல் – விழிப்பதும், தீதெனு – குற்றமென்றுநினைத்து, ஐயனும் – நளமகாராசனும், கடைக்கணுலேக்க – கடைக்கண்ணிலுலே பார்க்க, அன்பிதென்று – இது ஆசையிலுலே பார்ப்பதென்று, எய்யும் – பிர யோகஞ்செய்கின்ற, வேள் – மன்மதனுடைய, கணைமலர் – பாணமலர்கள், இதயம் – கருத்தை, ஓர்ந்து – அறிந்து, மால் – மயக்கமானது, பொய்யென – பொய்யென்று, அருச்சனை – பூசை, புரிதல்போன்றது – செய்வதுபோலு மாயிற்று எ-று.

கண்களேமூடில் எதிர்ப்படுமாதர் தெரியாமல் மூட்டிக்கொள்வதாலும், திறக்கில் அவர்களது அழகிய வடிவநோக்குதலிற் பாவமுண்டாதலானும் இப்படியன்றிக் கடைக்கண்ணுல் நோக்கினுன். அங்ஙனநோக்குவதை அன்பு நோக்கென்று நினைத்து மன்மதன்றெடுத்த மலரம்புகள் அவன் மனத்தை யறிந்து மயக்கமில்லாமையால் வீணுகாது அர்ச்சனை செய்வதாயிற் றென்க.

தெரிவையென்றுருவெளியோடுசெப்பிய
வரசனதுரையசரீரியாமென
வெருவியமாதர்சொற்கேட்டுவெள்குரு
வுருவெளியிதுவெனவுள்ளந்தேறினுன்.

இ-ள். தெரிவையென்று – தமயந்தியென்று, உருவெளியோடு – உரு வெளித் தோற்றத்துடனே, செப்பிய – சொல்லிய, அரசனது – நளமகா ராசனுடைய, உரை – சொல்லே, அசரீரியாமென – ஆகாயவாணியாகு மென்று, வெருவிய – பயந்த, மாதர் – மாதருடைய, சொல்கேட்டு – சொல் லைக்கேட்டு, (அந்நளனவன்) வெள்குரு – நாணி, உருவெளியிதுவென – உருவெளித்தோற்றமிதுவென்று, உள்ளம் – மனம், தேறினுன் – தெளிவை யடைந்தான் எ-று.

உருவெளித்தோற்றமாவது தன்னுல் விரும்பப்பட்ட பொருள்போல் எதிரேதோன்றுதல். செப்பிய வுரையென்பது இந்திராதிகள் தமயந்திக்குச் சொல்லும்படி தன்னுடு சொல்லிய செய்திகளாம். அவளைக்கண்டுந் தன் விருப்புக்குரியவற்றைப் பேசாமல் இவ்வாறு சொன்னுனென்று பொருள் கொள்வானென்னில் அறத்தின்வழித் தூதுசெல்வோர்க்கு வழுவாகலானும் இதற்கு முன்னுலாகிய வடமொழியு ளிருத்தலானு மெனக்கொள்க. மாதர்க்கு அச்சமியற்கை யாதலின் இது தெய்வமோ மாயமோவென அசரீ ரிக்கு வெருவினுரென்க. அவ்ர்களுரையால் உருவெளித் தோற்றத்தோடு சொன்ன இரகசியமான தன்சொல் வெளிப்பட்டதென்று தெளிந்து நாணுற்றுனென்க. 47

விழைவெனும்பாகெறிந்தமர்விஞ்சையாற்
றழைமுகபடாத்தமைதறுகண்வாரணங்
கழைமதனியற்றியகருங்கண்மங்கைய
ரழகெனும்படுகுழியாழ்ந்தில்லையால்.

இ-ள். விழைவெனும் — ஆசையென்கிற, பாகு — பாகனை, எறிந்த-அள்ளி, அமரர் — தேவர்களுடைய, விஞ்சையாம் — மந்திரமாகிய, தழை-தழைந்த, முகபடாத்து - முகப்போர்வையினுலே, அமை — பொருந்திய, தறுகண் — அஞ்சாமையையுடைய, வாரணம் — யானையானது, கழைமதன்-கருப்பு வில்லேந்திய மன்மதன், இயற்றிய — செய்த, கருங்கண் - கரியகண்களையுடைய, மங்கையர் — மாதருடைய, அழகெனும் — அழகென்று சொல்லும், படுகுழி — பள்ளத்தில், ஆழ்ந்ததுஇல்லை — அழுந்தியதில்லை எ-று. ஆல் — அசை.

நளனை யானையாகவும், விழைவைப் பாகனாகவும், விஞ்சையை முகபடாமாகவும், ஆரோபித்தலால் உருவகவணி. தூதுசெல்லுமிடத்து அறத்தினவழி மகளிர்விழைவை நீக்கியோனாகலில் அவர்கள் அழகில் மயங்கவில்லையென்பது கருத்து. 48

அங்கலுழ்மேனியவணங்கைநாடொறு
மெங்கணுங்காண்குறுமயக்கமேனைய
பங்கயவாண்முகப்பாவைமாரையும்
மங்கையென்றெண்ணுறுமயக்கந்தீர்த்ததீது.

இ-ள். அம் — அழகானது, கலுழ் — ஒழுகுகின்ற, மேனிய - மேனியையுடைய, அணங்கை — தமயந்தியை, நாடொறும் — எந்நாளும், எங்கணும்-எவ்விடத்திலும், காண்குறும் — உருவெளித்தோற்றமாகக்காணுகின்ற, மயக்கம் — மயக்கமானது, ஏனைய — மற்றைய, பங்கயம் - தாமரைமலர்போன்ற, வாள் — ஒளிபொருந்திய, முகம் — முகத்தையுடைய, பாவைமாரை — மகளிரை, அம்மங்கையென்று - அந்தத் தமயந்தியென்று, எண்ணுறும் — நினைக்கின்ற, மயக்கம் — மயக்கத்தை, தீர்த்தது — நீக்கியது எ-று.

அழகு மிகுதிபற்றிக் கலுழெனப்பட்டது. உருவெளித் தோற்றத்துக்கு நிகராகிய அந்தப்புரத்தமங்கையர் வடிவங்களில் நளனுக்குத் தமயந்தியென்னு மயக்கம் எனுண்டாக வில்லையெனில் அதனுறுதியாலென்க. 49

கணங்குழைமுகத்தியர்கதிர்த்துவிம்மிய
சுணங்கவிரிளமுலைச்சுவடுதாக்கியு
மணிந்தகுங்குமமெழிலகலமூழ்கியு
மணந்தனர்போன்றன்மன்னரேறனை.

இ-ள். மன்னர் - அரசர்களுக்கு, ஏறனை — ஆண்சிங்கத்தையொத்த நளன், கணம் - கூட்டமாகிய மணிபதித்த, குழை — குண்டலந்தரித்த, முகத்தியர் — முகத்தையுடையவராகிய மாதர், கதிர்த்து — காந்திபொருந்தி, விம்மிய — பருத்த, சுணங்கு — தேமலானது, அவிர் — பிரகாசியாகின்ற, இள முலை — இளமைபொருந்திய தனங்களுடைய, சுவடு-தழும்புகள், தாக்கியும்-மோதப்பெற்றும், அணிந்த — தரித்த, குங்குமம்-குங்குமகுழம்புகள், எழில்-அழகிய, அகலம் — மார்பினிடத்து, மூழ்கியும் — மூழ்கப்பெற்றும், மணந்தனர் — கூடினவர்களை, போன்றனன் - ஒத்தனன் எ-று.

கூடினவர்க்கு உள்ள குணம் இவனிடத் தண்டாதலின் மணந்தனர் போன்றனனென்றார். இது உவமையலங்காரமாகும். 50

விளங்கிழையொருத்திபேரணியில்வேந்தெழி
லுளங்கலுமதிசயந்தோன்றநோக்கினாள்
வளங்கெழுபுகழினன்மறையக்காண்கிலா
ளுளம்புகுந்தொளித்ததவ்வுருவென்றெண்ணினாள்.

இ-ள். விளங்கு—பிரகாசியாநின்ற, இழை—ஆபரணத்தை யணிந்த, ஒருத்தி—ஒருமாதானவள், பேர்-பெரிய, அணியில்-தன்னுபரணத்தில், வேந்த—அரசனுடைய, எழில்—அழகானது, உளங்கலும்-பிரகாசித்தலும், அதிசயம்—ஆச்சரியம், தோன்ற-உண்டாக, நோக்கினாள்—பார்த்தாள், வளங்கெழு—வளம்பொருந்திய, புகழினன்—கீர்த்தியையுடைய நளன், மறைய—மறைந்துபோக, காண்கிலாள்—காணாதவளாகி, உளம்—மனத்தினிடத்தி, புகுந்து—நுழைந்து, ஒளித்தது-ஒளித்துக் கொண்டது, அவ்வுருவென்று—அவ்வடிவமென்று, எண்ணினாள்—நினைத்தாள் எ-று.

உளம் புகுந்தொளித்த தெனலால் நளனுடைய நிழன்மாத்திரம் அவளுடைய அணியினின்றும் நீங்கியதல்லது அந்நளன் அவள் மனத்தைவிட்டு நீங்கவில்லையென்பது கருத்து. மறைதலில் உள்ளம் புகுதலைக்குறித்தலால் தற்குறிப்பணி. 51

வாட்டிறன்மன்னவன்வனிதைபேரெழி
னீட்டியொண்கதிருமிழ்செய்யவார்வடஞ்
சூட்டினனகலவிவ்வுருவுதோன்றயார்
கோட்டினரெனச்சிலர்குறிப்பினுடுவார்.

இ-ள். வாள்—வாளாயுதத்திலே, திறல்-வல்லமைபெற்ற, மன்னவன்-நளமகாராஜனனவன், வனிதை-தமயந்தியினுடைய, பேர்-பெரிய, எழில்-அழகை, நீட்டி—எழுதி, ஒள்—ஒள்ளிய, கதிர்-கிரணங்களை, உமிழ்—உமிழ்கின்ற, செய்ய—சிவந்த, வார்—நெடிய, வடம்—இரத்தினமாலைகளை, சூட்டினன்—தரித்தனனாகி, அகல—நீங்க, இவ்வுருவுதோன்ற—இந்தவடிவந்தெரிய, யார்-எவர்கள், கோட்டினரென-செய்தாரென்று, சிலர்—சிலர்கள், குறிப்பின்—குறிப்பினாலே, நாடுவார்—தேடுவார்கள் எ-று.

விஞ்சையைவிட்டு உருத்தெரிய நிற்பினும் ஒருவராலும் வெல்லக் கூடாமைதோன்ற வாட்டிறன்மன்னவனென்றும், உருவெழுதவதிலுங்கை போயவனென்பது தோன்ற வனிதைபேரெழி நீட்டியென்றும், அவளிடத்தில் மிகுந்த அன்புள்ளவ னென்பதுதோன்ற வடஞ்சூட்டினனென்றும், அறிவினால் அவ்வன்பையும் நீக்கினனென்பது தோன்ற அகலவென்றும், இப்படிப்பட்ட உருவமெழுதினரைக் காணவேண்டுமென்கிற அவாவினாலும் இவனுருத்தெரியாமையினாலுஞ் சிலர் குறிப்பினுடுவாரென்றுஞ் சொல்லினர் ஒருநாளுங் காணதவடிவை அவன் எவ்வாறெழுதினனெனில் "முன்

னேவெண்ணகைத் துவர்வாயணங்கெழில் பலரும் விளம்பினர் நின்மொழி யவளென்கண்ணெதிர்ப்பட்டா''னென்றிருப்பதாலும் அன்னப்புள்ளானது தாமரையிலையி லெழுதிக்காட்டிய தென்று வடநூலி லிருத்தலாலு மென்க.

பூந்துகள்செறிந்தகோமறுகிற்போகிய
வேந்தரனழுந்துமவ்விடங்கணோக்குரு
மாந்தளிர்மேனியர்வையங்காவல்செய்
* வேந்தர்தாளிலக்கணமேயதென்னென் பார்.

இ-ள். பூந்துகள் – மகரந்தப்பொடிகள், செறிந்த - நெருங்கிய, கோமறுகில் – அரசவீதியில், போகிய – சென்ற, வந்தல் - நளமகாராஜனுடைய, தாள் – பாதங்கள், அழுந்தும் – அழுந்துகின்ற, அவ்விடங்கள் – அந்த விடங்களை, நோக்குரு – பார்த்து, மாந்தளிர் - மாந்தளிர்போன்ற, மேனியர் – வடிவத்தையுடைய மங்கையர், வையம் - உலகத்தை, காவல்செய்காத்தல்செய்கின்ற, வேந்தர் – அரசருடைய, தாள் – பாதங்களிலிருக்கும், இலக்கணம் – இலக்கணங்கள், மேயது – இவ்வடிச்சுவட்டிற் பொருந்தியது, என்னென்பார் – என்ன ஆச்சரியமென்பார்கள் எ-று.

வேந்தர்தா ளிலக்கணமென்பது சக்கிரரேகை முதலியவாம். அம்மாதர் சாமுத்திரிகநூலிலும் வல்லவராகையால் இது அறிந்தனரென்க. 53

கள்ளவிழ்கோதையரெறிந்தகந்துறம்
வள்ளன்மார்புற்றெதிர்மறிந்துவீழ்தலுந்
தள்ளருமதிசயமெய்தித்தத்தமில்
வெள்ளிடைப்பட்டிவண்மீண்டதென்னென்பார்.

இ-ள். கள்ளவிழ் – தேனொழுகுகின்ற, கோதையர் – மாலையையணிந்த மாதர், எறிந்த – வீசிய, கந்துகம் – பந்துகள், வள்ளல் - நளமகாராசனுடைய, மார்பு - மார்பினிடத்திலே, உற்று – பொருந்தி, எதிர் – எதிராக, மறிந்துமறிபட்டு, வீழ்தலும் - வீழ்ந்தவளவில், தள்ளரும் – தள்ளுதற்கரிய, அதிசயம் – ஆச்சரியத்தை, எய்தி - அடைந்து, தத்தமில் - தங்கள் தங்களுக்குள்ளே, வெள்ளிடைப்பட்டு – வெளியிடத்திற்பட்டு, இவண் – இவ்விடத்தில், மீண்டது – திரும்பியது, என்னென்பார் - என்னவென்று சொல்லுவார்கள்.

---

* அரசர் தாளினிலக்கணமாவது சிவந்து, சிறுவிரலினின்றும் மெல்லிரல் காறும் ஓர்வரையிருக்கப்பெற்று சங்கு, வச்சிராயுகம், பதுமம், சக்கிரம், வில் மகரம் என்னு மிவைபோலும் இரேகைகள் பொருந்தி, ஒப்புடையனவாகி, நரம்பெழாது தசைந்த பாடுகள் நிலத்திற்றோயப் பெற்றுள்ளன வாய் விளங்கும் என்க. இது ''சிறுவிர றன்னினின்றுந் தாச்சனி யளவுந் தீரா, வுறுவரை கிடந்த வாற்று லொழிவறு மாயுளெய்தும், நறுமலர்த்தாள்க ளொத்துத் தசைந்தவேர் வெழாது நன்கா - யுறுபர டோத்துவாற்று லுலப்பறு நிருவனுவான்'' எனவும், ''தூணைப்பொற்றுளி – னுற்றமே னேக்கி ரேகை கிடத்தலால்'' எனவும் வரூஉங் காசிகண்டச் செய்யுள்களானறிக.

எதிர்முகமாயிருந்திருவர்பைந்துணர்ப்
புதுமலர்தொடுத்தலுங்டுவட்டிக்கவன்
கதுமெனவேகலுமறைப்பக்கன்னியர்
மதிமயக்குறமுகமறைத்ததென்னென்பார்.

இ-ள். எதிர்முகமாயிருந்து - அபிமுகமாக விருந்து, இருவர் – இரண்டு பேர், பைந்துணர் – பசிய பூங்கொத்துகளிலிருக்கின்ற, புதுமலர் – அன்றலர்ந்த மலரை, தொடுத்தலும் – கட்டலும், நடுவண் – அவருக்கிடையில், புக்கவன் – புகுந்தவன், கதுமென – விரைந்து, ஏகலும் – போனவளவில், மறைப்ப – மறைக்க, கன்னியர் - அம்மாலே தொடுத்த மாதர்கள், மதி - புத்தி, மயக்குற – மயக்கத்தைப்பொருந்த, முகமறைத்தது – முகத்தை மறைத்து விட்டது, என்னென்பார் - என்ன ஆச்சரியமென்று சொல்லுவார்கள் எ-று.

கதுமென - வீழைவுக் குறிப்பிடைச்சொல். எதிர்முக - உன்முகமென்பர் வடநூலார். மறைத்தற்குக் காரணமில்லாதிருக்க மறைப்பைச் சொல்லுதலால் பிறிதாராய்ச்சியணி. 55

அண்ணற்கன்மார்பகத்தணிந்தபேரணி
மண்ணியமணிவயின்வடிவுதோன்றலும்
கண்ணுறநோக்குவாள்கன்னிமாரொடும்
விண்ணிடையெனதருவிளங்கலென்னென்பாள்.

இ-ள். அண்ணல்தன் – நளமகாராசனுடைய, மார்பகத்து – மார்பினிடத்து, அணிந்த – தரித்த, பேர் – பெரிய, அணி – ஆபரணங்களினுள்ள, மண்ணிய - தெளிந்த, மணிவயின் – மணியினிடத்தில், வடி – உருவமானது, தோன்றலும் - தெரிதலும், கண்ணுற-கண்ணினாற் பொருந்த, நோக்குவாள் - பார்ப்பாளாகிய வொருத்தி, கன்னிமாரொடும் - மாதர்களுடன், விண்ணிடை – ஆகாயத்தினிடத்து, எனதரு - எனது வடிவம், விளங்கல் – பிரகாசித்தல், என்னென்பாள் – என்ன ஆச்சரியமென்று சொல்லுவாள் எ-று.

மண்ணுதல் – கழுவுதல், வடிவுதோன்றற்கு உரிய கண்ணுடி முதலியவையின்றி நிழலின் றோற்றஞ் சொல்லப்படுதலாற் சிறப்பு நிலையணி. 59

வெற்பினதெழில்கெடவிளங்குதோளினன்
பொற்பொளிர்பித்திகைப்புறத்திற்றோன்றலு
மற்புதமிதுவெனநோக்கியன்பினாற்
* கற்புடைமகளிருநிலைகலங்கினர்.

---

* கற்பாவது "கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை" என ஔவையார் சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றிக் கூறினாரேனும் அஃதின்னவென்பதை "கொழுநனுண்டபின் றானுகர் கொள்கையும் - வீழுநாயின்றபின் றுஞ்சலு மென்றயி - லெழுதன்முன்ன மெழுதலுமேயன்றே, பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே" என வளையுங் கற்பிலக்கணங் கூறிய அத்தியாயச் செய்யுள்களாற் றெரிக. (காசிகாண்டம்.)

இ-ள். வெற்பினது – மலையினது, எழில் – அழகு, கெட – கெடும்படி, விளங்கு – பிரகாசிக்கின்ற, தோளினன் – தோளினையுடைய நள மகாராசனது, பொற்பு – அழகானது, ஒளிர் – பிரகாசிக்கின்ற, பித்திகைப் புறத்தில் – சுவர்த்தலத்தினிடத்து, தோன்றலும் – தோன்றலும், அற்புத மிதுவென – ஆச்சரியமிதுவென்று, நோக்கி – பார்த்து, அன்பினல் – ஆசையினல், கற்புடைமகளிரும் – கற்புடையமாதர்களும், நிலைகலங்கினர் – மயங்கினர்கள் எ-று.

உம்மை – உயர்வுசிறப்பு, கற்புடை மகளிர்நிலை கலங்கலுண்டோ வெனின் அழகிற்சிறந்த ஆண்மக்களைக் காணின் உண்டாம். அது "தந்தையா யினும்விழைவிற் றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனு, மைந்தரா யினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேன் மடநல்லார்தஞ், சிந்தைகலங் கிடுமதனுற் சாம்பன்மலர்க் கணைவேளிற் செவ்விவாய்ந்தோர், பைந் தொடியா ரினிதமரு முலகத்திற் றனிப்போதல் பான்மைத்தன்றே" என்னுங் காசிகாண்டச் செய்யுளாலறிக. 57

இழைவளர்மூலையினொருவனேர்பெரு
நிழலிவணேக்கினனெனவுநீளிடை
மொழிவனகேட்டனனெனவுமொய்ம்புறத்
தழுவினனென்னவுந்தம்மிற்கூறுவார்.

இ-ள். இழை – ஆபரணத்தோடுகூடிய, வளர் – வளர்கின்ற, மூலையினர் – மூலையையுடைய மாதர்கள், ஒருவன் – ஒரு ஆண்மகனுடைய, ஏர்பெறு – அழகைப்பெற்ற, நிழல் – நிழலை, இவண் – இவ்விடத்தில், நோக்கினன் எனவும் – பார்த்தானென்றும், நீளிடை – இந்நீண்ட இடத்தில், மொழிவன – பேசுவனவற்றை, கேட்டனனெனவும் – கேட்டானென்றும், மொய்ம்புற – தோள்களைப்பொருந்த, தழுவினன் எனவும் – தழுவினானென்றும், தம்மில் – தங்களுக்குள்ளே, கூறுவார் – பேசிக்கொள்ளுவார்கள் எ-று.

இன்னிசையளிபயில்பொழிலினேந்தன்முன்
பொன்னவிர்மூலைத்தமயந்திபோதலு
மன்னன்முன்கூறியவற்றைநாண்முதன்
முன்னுருமுருவனமுன்னினனோர்.

இதுமுதல் ஐந்துபாட்டால் வழியிற்கண்ட தமயந்தியோடு நளனுக் குண்டாகிய செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். இன் – இனிய, இசை – இசையைப்பாடும், அளி – வண்டுகள், பயில் – சஞ்சரிக்கின்ற, பொழிலின் – சோலையிடத்தில், ஏந்தல் – நளமகாராசன், முன் – தன்னெதிரே, பொன் – பொன்னையொத்த, அவிர் – பிரகாசியாநின்ற, மூலை – மூலையையுடைய, தமயந்தி – தமயந்தியானவள், போதலும் – வருதலும், அன்னம் – அன்னப்புள்ளானது, முன்கூறிய – முற்சொல்லிய, அற்றைநாண்முதல் – அன்றையநாள்முதலாக, முன்னும்-

எதிரேதோன்றுகிற, உரு என – உருவெளித்தோற்றமென்று, முன்னி ஞன் – நினைத்தான் எ-று. அரோ – அசை.

அன்னத்தின்சொல்லால் நாடோறும் காண்கின்ற தமயந்தியினுரு வெளித் தோற்றத்திற்கும், மெய்யாகக்கண்ட தமயந்திக்கும் அங்ஙனம் வேற்றுமைதோற்றுமை, கூறப்படுதலால் மறைவணி. நாடோறுங் கண்டது பொய்யாகவே இக்காட்சியிலு மிவ்வாறு மதியுண்டாயிற்றென்க. 59

மடவரலுருவெளிமன்னன்றோண்மிசை
யிடையறுவிழைவுடனென்றுஞ்சூட்டல்போன்
மிடைமலர்ப்பூந்தொடைசூட்டமேவிய
சுடரிலைவேலினஞன்றோளில்வீழ்ந்தநீத.

இ-ள். மடவரல் – தமயந்தியானவள், உருவெளி – உருவெளியாய்த் தோன்றிய, மன்னன் – நளமகாராஜனுடைய, தோண்மிசை – தோளின் மேல், இடையறு – இடைவிடாத, விழைவுடன் – ஆசையுடனே, என்றும்-என்றைக்கும், சூட்டல்போல் – சூட்டுதல்போல, மிடை – நெருங்கிய, மலர்-மலராற்றொடுத்த, பூந்தொடை – பூமாலையை, சூட்ட – தரிக்க, மேவிய-அங்கிருக்கின்ற, சுடர் – காந்திபொருந்திய, இலைவேலினஞன் – இலைபோன்ற வேற்படையையுடைய நளமகாராசனுடைய, தோளில் – புயங்களில், வீழ்ந்தது – விழுந்தது எ-று. 60

உருவெளியாகயான் கண்டவொண்ணுதன்
மருமலர்மாலிகைவாசந்தென்னென
வரசனுமெண்ணினனவளுஞ்சூட்டிய
தெரியல்காண்கிலனெனத்தெருமந்தாளரோ.

இ-ள். உருவெளியாக – உருவெளித்தோற்றமாக, யான் கண்ட – என்னுற் காணப்பட்ட, ஒண்ணுதல் – ஒள்ளிய நெற்றியையுடையதமயந்தியானவள், மருமலர்மாலிகை – வாசனை பொருந்திய பூமாலையை, வாசந்தென்னென – சூட்டியதென்ன காரணமென்று, அரசனும் – நளமகாராசனும், எண்ணினனென் – நினைத்தான், அவளும் – அத்தமயந்தியும், சூட்டிய – தரித்த, தெரியல் – மாலையை, காண்கிலனென – கண்டிலனென்று, தெருமந்தாள் – மனஞ்சுழன்றாள் எ-று.

நளன் நாள்தோறும் கண்டவிடத்தில்லாம லிப்போது சூடியது புதுமையாதலால் இது என்னவென வியந்தான். தமயந்தியும் நாடோறுஞ் சூடிய மாலைதெரிய இதுமாத்திர மறைதலால் என்னமாயமென்று திடுக்கிட்டாளென்க. காண்கிலன் – ஈண்டு அன்விகுதி தன்மையொருமை வினைமுற்றில் வந்தது புணர்ச்சி என்னும் உத்தி. 61

முருகவிழ்குழலினையுமன்னுரு
முருவெளியெனவிறையுவந்துபுல்லினு

னரிவையுமன்னவாறெண்ணியாங்கெதிர்
புரவலன்மார்புறப்புல்லினளோ.

இ-ள். முருகு அலிழ் - வாசனை வீசுகின்ற, குழலினுள்தனையும் - கூந்தலையுடைய தமயந்தியையும், முன்னுரும் — முன்னேதோன்றுகின்ற, உரு வெளியென - உருவெளித்தோற்றமென்று, இறை - நளமகாராசன், உவந்து - மகிழ்ச்சியையடைந்து, புல்லினன் - தழுவினன், அரிவையும் - தமயந்தியும், அன்னவாறு - அந்தப்பிரகாரம், எண்ணி - நினைத்து, ஆங்கு - அவ்விடத்திலே, எதிர் - எதிரேவந்த, புரவலன் - அரசனுடைய, மார்புற - மார்புபொருந்த, புல்லினள் - தழுவினள் எ-று.

தமயந்தியை யுண்மையாகக் கண்ட நளன் உருவெளியென மயங்கினனென்றும், அவ்வாறின்றி உருவெளியாகக்கண்ட தமயந்தியானவள் நளனை உண்மையென்றுன்னிப் புல்லினளென்றுங்கொள்க. தெய்வவரத்தினாலிவ ளிருவரையறியாளாகலின் ஒருவர்க்கொருவர் மயக்கஞ்சொல்லப்பட்டமையால் மயக்கவணி. 62

சொல்லருமின்பமீதூரத்தோன்றலும்
புல்லுவிட்டவ்வுருப்பொலிவுநோக்கினன்
மெல்லியலவ்வுருவிழியிற்காண்குறூ
தல்லலுற்றணிவளையங்கைநீக்கினள்.

இ-ள். சொல்லரும் - சொல்லுதற்கரிய, இன்பம் — இன்பமானது, மீதூர - அதிகரிக்க, தோன்றலும் - நளனும், புல்லுவிட்டு - தழுவுதலைநீக்கி, அவ்வுரு — அந்தவடிவினுடைய, பொலிவு - காந்தியை, நோக்கினன் — பார்த்தான், மெல்லியல் - தமயந்தியானவள், அவ்வுரு - அந்தவடிவத்தை, விழியில் — கண்ணினால், காண்குறூஉ - காணுதலளாகி, அல்லலுற்று - பயத்தையடைந்து, அணிவளை - அழகியவளையலணிந்த, அங்கை - அழகியகையை, நீக்கினள் — விடுத்தாள் எ-று.

மாதர்கட்கு அச்சம் உரியகுணமாகலின் உருவு கண்ணிற்றோன்றுதுகையிலகப்படலா லிவ்வாறு வெருவிவிடுத்தனளென்க. 63

பொன்னடிபூஞ்சிலம்பொலிப்பமேகலை
யின்னரிக்கிண்கிணியிகலியார்ப்பெழ
மின்னடைகற்பதுபோன்றுமெல்லெனத்
தன்னமர்கோயிலுட்டையலெய்தினள்.

இனி ஒவ்வொருபாட்டா லவ்விருவர்செய்கையும்
வெவ்வேறு சொல்லல்.

இ-ள். பொன் — பொன்னினாற்செய்த, அடிப்பூஞ்சிலம்பு - பாதத்திலணிந்த அழகிய சிலம்புகள், ஒலிப்ப — ஒலித்தலைச்செய்ய, மேகலை — மேகலையிலிருக்கின்ற, இன் - இனிய, அரி - பருக்கைக்கல்லையுடைய, கிண்கிணி-

சதங்கைகள், இகலி—ஒன்றோடொன்று தாக்கப்பட்டு, ஆர்ப்புஏழ—ஒலியெழும்ப, மின் — மின்னல், நடைகற்பதுபோன்று — நடத்தலைக் கற்பதொத்து, மெல்லென — மிருதுவாக, தன்—தன்னுடைய, அமர்—அமர்கின்ற, கோயிலுள்—கன்னிமாடத்தில், தையல்—தமயந்தியானவள், எய்தினள்—அடைந்தாள் எ-று. பூ என்னும் சொல்பொலிவு என்னும்பொருட்டு. கிண்கிணி - கிண்கிண் என்று ஒலிப்பது. தையல் என்னும் உரிச்சொல் அழகென்னும் பொருட்டு, ஆகுபெயராய்ப் பெண்ணுக்கு ஆயிற்று. இது தற்குறிப்பணி. 64

கருந்தடங்கண்ணியைக்கையிற்புல்லியும்
பொருந்தியவுருவெளியென்றுபோக்கிநல்
லருந்தனம்பெற்றிழந்தாரிலையனும்
வருந்திவெந்துயரொடுமதிமயங்கினன்.

இ-ள். கரும் - கரிய, தடம்—விசாலம்பொருந்திய, கண்ணினை—கண்களையுடைய் தமயந்தியை, கையிற்புல்லியும் — கையினலே தழுவியும், பொருந்திய—பொருந்தப்பெற்ற, உருவெளியென்று - உருவெளித்தோற்றமென்று, போக்கி — விட்டு, நல்ல — நல்ல, அருந்தனம் — அரிய திரவியத்தை, பெற்று - எளிதிற்பெற்று, இழந்தாரில் — இழந்தவர்களைப்போல, ஐயனும் — நளமகாராசனும், வருந்தி — வருத்தமடைந்து, வெம் துயரொடு-வெவ்வியதுன்பத்துடன், மதிமயங்கினன் — புத்திமயங்கினன் எ-று.

பின் நடக்கைகளால் நளன் மெய்த்தமயந்தி யென்றறிந்து வருந்தினனென்க அருந்தனம் பெற்றிழந்தாரில் என்றமையால் இது உவமையணி.

பாணிகார்வண்டினம்பாடுஞ்சோலையுஞ்
சேணுறநிவந்தசெய்குன்றுந்தேடியுங்
காணலனாகியகளிநல்யானையான்
மாணிழையுறைதருமாடமெய்தினன்.

நளன் கன்னிமாடத் தடைதல்.

இ-ள். பாண் - இசைபாட்டுக்கு, நிகர்—நிகராக, வண்டினம் — வண்டுக்கூட்டங்கள், பாடும் — பாடுகின்ற, சோலையும் — சோலையிடத்திலும், சேண்-ஆகாயத்தில், உற — பொருந்த, நிவந்த—உயர்ந்த, செய்குன்றும் - கட்டுமலையினிடத்திலும், தேடியும்—தேடுதல்செய்தும், காணலனாகிய — காணுதலனாகிய, களி நல்யானையான் — நளமகாராசனானவன், மாண் இழை - தமயந்தி, உறைதரும் — வசிக்கின்ற, மாடம்—கன்னிமாடத்தை, எய்தினன் — அடைந்தான் எ-று.

இவ்வளவுகால மிவ்விடந்தோறும் தேடியறியாதநளன்தமயந்திசென்ற நெறிபற்றி யவளுறையுமிடத்துச் சென்றனென்க. மாணிழை—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. 66

மின்னிடையரம்பையர்குழாத்துண்மேவிய
வன்னமென்னடையயிராணியாமென
நன்னுதன்மடந்தையர்நாப்பணின்னகைக்
கன்னிவீற்றிருத்தல்கண்களிப்பநோக்கினன்.

தமயந்தி காட்சி.

இ-ள். மின் – மின்னலியொத்த இடை – இடையையுடைய, அரம்பையர் குழாத்துள் – தெய்வ மாதருடைய கூட்டத்துள், மேவிய – பொருந்திய, அன்னம் – அன்னநடைபோன்ற, மெல் – மெல்லிய, நடை-நடையையுடைய, அயிராணியாமென - இந்திராணியாமென்று சொல்லும்படி, நல்-நல்ல, நுதல் - புருவத்தையுடைய, மடந்தையர் – மாதர்களுடைய, நாப்பண் - நடுவே, இன் – இனிய, நகை - புன்சிரிப்பையுடைய, கன்னி – தமயந்தியானவள், வீற்றிருத்தல் – வீறுடனிருத்தலை, கண்களிப்ப-கண்களிக்க, நோக்கினன் - பார்த்தான் எ-று.

அயிராணியாமென வென்றமையால் உவமையணி. 67

மண்டமர்கடந்தவேனளனன்வந்தானெனத்
தொண்டைவாய்மடந்தையர்நாளுஞ்சொல்வன
பண்டருமொழிக்கிளிபயின்றுகூறலுங்
கண்டதோவிஃதெனக்காமனெண்ணினன்.

தன்னுளத்தையுறல்.

இ-ள். மண்டு – நெருங்கிய, அமர் – போரை, கடந்த - வென்ற, வேப்-வேற்படையையுடைய, நளன்வந்தானென-நளமகாராசன் வந்தானென்று, தொண்டைவாய் – கொவ்வைக்கனிபோன்ற வாயையுடைய, மடந்தையர்-மாதர்கள், நாளும் – நாடோறும், சொல்வன – சொல்வனவற்றை, பண்தரும் மொழி - இசையோடுபொருந்திய மொழிகளைப்பேசுகின்ற, கிளி-கிளிப்பிள்ளை, பயின்று – பழகி, கூறலும் – சொன்னவளவில், இஃது - இந்தக்கிளிப்பிள்ளை, கண்டதோவென - பார்த்ததோவென்று, காமன் – நளமகாராசன், எண்ணினன் – நினைத்தான் எ-று.

தமயந்தி வருந்துங்காலத்து அதுதீர்ந்து மனங்களிக்க நளன்வந்தானென்று தோழிகள் சொல்லுஞ் சொல்லைக் கேட்டு அவள்கையிலிருக்குங் கிளிப்பிள்ளை சொல்லுவ தாகலி னிவ்வாறு கூறிற்று. தெய்வவரத்தால் மறைந்து வந்த நம்மையிது எவ்வாறு கண்டதென்று சிந்தித்தானென்க. யார் எதை யுரைப்பினும் குற்றமுடையோர் தம்மையாமென்று எண்ணுவரென்பதுகருத்து. இங்ஙன் உரைத்தலால் தன்மைநவிற்சியணி. 68

ஒருத்தியானளனெனவிருப்பவுள்ளுறும்
விருப்பினுமிலொருத்தியான்வீமன்மாதினை
மருக்கமழ்ந்திதாடைசூட்டமன்னவன்
பொருப்புறழ்தடம்புயம்புளகம்பூத்தவே.

இனி இரண்டுபாட்டால் நளன் மகிழ்ச்சியடைதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். உள்ளுறும் — உள்ளேயிருக்கின்ற, விருப்பினுல் — ஆசையினுல், யானளனென - நான் நளமகாராசனென்று, ஒருத்தியிருப்ப — ஒருமங்கையிருக்க, ஒருத்தி - ஒருமங்கையானவள், யான் — நான், வீமன்மாதென - தமயந்தி யென்றுசொல்லி, மருகமழ் — வாசனைகமழ்கின்ற, பூந்தொடை - மலர்மாலையை, சூட்ட - தரிக்க, மன்னவன் — நளமகாராசனுடைய, பொருப்பு உறழ் — மலையையொத்த, தடம் — பருத்த, புயம் - தோள்களானவை, புளகம்பூத்த — மயிர்க்குச்செறிந்தன எ-று.

நளனுக்கே தமயந்தி மாலைசூடுதற்குச் சந்தேகமில்லை யென்னுந் தெளிவாலும் அவனுக்கே சூட்டவேண்டுமென்கிற ஆர்வத்தாலும் அவ்வார்வ முற்றும் பெறுந்துணியும் பொறுக்கமாட்டாத மங்கையர்தமக்குள்ளே அவ்வாறு செய்தேனு நோக்குவோமெனு மன்பால் நாடோறுஞ் செய்துவருகையில் அன்றுஞ் செய்தனராக அதுகண்ட அவனுக்குத் தன்னிடத்து ஆர்வம்வைத்தமை தெரிந்து தனக்கே மாலைசூட்டுவாளென்னுந் தோற்றத்தால் தோள்கள் புளகம் பூத்தனவென்க. தொடை — தொடுக்கப்பட்டது; மாலை. 69

மலர்ந்தசெந்தாழைமென்மடலின்மேற்றனக்
கிலங்கிழையுகிரினுலெழுதுபாசுர
நலம்பெறக்காண்டலுநண்ணலார்புக
முலம்பொருதோளினுனுவகையெய்தினுன்.

இ-ள். மலர்ந்த — விரிந்த, செந்தாழை மெல் மடலின்மேல் — சிவந்த தாழையினுடைய மெல்லிய இதழின்மேல், தனக்கு — தனக்கு, இலங்கிழை - தமயந்தியானவள், உகிரினுல் — நகத்தினுலே, எழுது — எழுதப்பட்ட, பாசுரம் — செய்யுளை, நலம்பெற — நன்மைபெற, காண்டலும் - பார்த்தவளவில், நண்ணலார் — பகைவரால், புகழ் - புகழப்பட்ட, உலம்-திரள்கல்லை, பொருஒத்த, தோளினுன் — தோள்களையுடைய நளமகாராசன், உவகை — சந்தோஷத்தை, எய்தினுன் — அடைந்தான் எ-று.

தமயந்தி நாடோறுந் தன்னுடைய வருத்தத்தை எழுதிக் கொள்ளவேண்டுமென்கிற அன்புடையவளாயிருந்தஞ் சில இடையூறுகளால் ஒத்துக் கொள்ளாமையால் அவ்வன்பை யொருவாறு நிறைவேற்றற் பொருட்டுத் தாழை மடலிலே தனக்கெழுந்திக் கிடந்த செய்யுளைக்கண்டு நளன் மகிழ்ச்சியடைந்தனனென்க. 70

செழுமணிப்பித்திகைத்தலத்திற்றீதறு
மழலிடையினையவன்வடிவந்தோன்றலுங்
கழையமைதோளினுர்காளைபெழி
லெழுதியவுருவிலொன்றென்னவெண்ணினுர்.

நளனிழல்வடியால் மாதர்மனம் பேதியாமை.

இ-ள். செழுமணி – செழுமையுள்ள மணிகள்பதித்த, பித்திகைத்தலத்தில் – சுவர்த்தலத்தில், தீதறு – குற்றமற்ற, மழ – இளமை பொருந்தியவிடை அனையவன் - இடபத்தையொத்த நளமகாராசனுடைய, வடிவம் - உருவம், தோன்றலும் – தெரிந்தவளவில், கழை – மூங்கில்போல, அமை-பொருந்திய, தோளினர் – தோளையுடைய மாதர்கள், காளை-நளமகாராசனுடைய, பேர் - பெரிய, எழில் – அழகை, எழுதிய-தம்மாலெழுதப்பட்ட, உருவில்-வடிவத்தில், ஒன்றென்ன – ஒருவடிவென்று, எண்ணினர் - நினைத்தார்கள்.

மந்திரத்தால் நளன் மறைந்திருப்பினும் அவன்வடிவந்தோன்று மாகையால் அதைச் சுவர்த்தலத்திற் கண்ட மங்கையர் அந்தப்புரத்தில் ஒருவன் வந்தனனென்னு நினைப்பு அணுத்தனையுமின்றித் தமயந்திமுதலிய தாங்கள் பார்க்கும் பொருட்டுச் சித்திரித்திருக்கும் நளவடிவங்களிலே இவனையும் ஒன்றென மதித்திருந்தன ரென்க. ஆதலால் நளன்வடிவுகட்டழகுள்ளதன்றி அவ்வாறுசித்திரித்தலும் அருமையென்பது கருத்து. அவ்விடத்துச் சித்திரத்தோடு நளனுடைய நிழலுக்கு வேற்றுமையின்மை கூறப்பட்டமையால் பொதுமையணி. 71

காமமேவல்வலனுயர்களனுக்காங்கமர்
வாமமேகலையினர்நடுவண்வைகுவா
டாமமார்குழற்றமயந்தியென்றவள்
காமருபேரெழில்காட்டுகின்றதே.

அழகினுற்றமயந்தி தன்னைத் தெரித்தல்.

இ-ள். காமம் – அச்சத்தைத்தருகின்ற, வேல் - வேற்படையால், வலனுயர் – வெற்றியிருந்த, களனுக்கு – நளமகாராசனுக்கு, ஆங்கு – அவ்விடத்தில், அமர் – அமர்ந்த, வாமம் – அழகிய, மேகலையினர்-மேகலாபரணத்தையுடைய மகளிருடைய, நடுவண் – நடுவே, வைகுவாள் - இருப்பவன், தாமம்-மாலைகள், ஆர் – நிறைந்த, குழல் – கூந்தலையுடைய, தமயந்தியென்று – தமயந்தியென்னும் பெயரை யுடையவளென்று, அவள் – அவளுடைய, காமர்-ஒளிபொருந்திய, பேர் – பெரிய, எழில்-அழகானது, காட்டுகின்றது-காண்பிக்கின்றது எ-று. 72

ஏதமில்குணத்திளனினையகாகநண்
டாதவிழ்பூங்குழற்றையல்பாற்றம
தாதரம்பெருகியவமரேவிய
தூதியர்செய்திறஞ்சொல்லுவாமரோ.

இது கலிக்கூற்று.

இ-ள். ஏதமில் – குற்றமற்ற, குணத்திளன் – குணத்தையுடைய நளமகாராசன், இனையனுக – இத்தன்மையை யுடையவனுக, நண் – நட்பாகிய, தாது – மகரந்தப்பொடிகள், அவிழ் – உதிர்கின்ற, பூ-மலரையணிந்த,

குழல் – கூந்தலையுடைய, தையல்பால் - தமயந்தியிடத்தில், தமது – தம்முடைய, ஆதரம் – ஆசையானது, பெருகிய – மிகுந்த, அமரர் – தேவர்களால், ஏவிய – ஏவப்பட்ட, தூதியர் – தூதிகள், செய்திரம் – செய்த வகையை, சொல்லுவாம் - சொல்லுவாம் எ.று. அரோ - அசை. 73

அறுசீர்க் கழிலெடிலடி யாசிரியவிருத்தம்.

கானமரலங்கன்மாலைக்கடவுளர்விடுப்பவந்த
பானலங்கடந்தநீஞ்சொற்பணைமுலைப்பாவைநல்லா
ரூனெடுபழகுநெய்த்தோரும்ழ்ந்துவெம்புலவுநாறு
மானவேல்வீமனீன்றவனிதையையினிதுகண்டார்.

இனிப் பதினெரு பாட்டால் இந்திரன் முதலிய நால்வரால்
ஏவப்பட்ட தூதிகள் தமயந்தியோடுபேசி மீளுதல்
சொல்லப்படுகின்றன.

இ-ள். கான் – வாசனை, அமர்-பொருந்திய, அலங்கல்-அசையாகின்ற, மாலை - மாலையையுடைய, கடவுளர் - தேவர்களால், விடுப்ப - அனுப்பப்பட்டு, வந்த – வந்த, பால் – பாலினுடைய, நலம் – நன்மையை, கடந்த – வென்ற, நீ – நித்திப்புபொருந்திய, சொல் - சொல்லையும், பணை – பருத்த, முலை-முலையையுமுடைய, பாவைநல்லார் – பாவைபோலு மிருக்கின்ற மாதர், ஊனெடு – மாமிசத்துடன், பழகி-பழகுதல்செய்து, நெய்த்தோர் உமிழ்ந்து-உதிரத்தையுமிழ்ந்து, வெம் – வெம்மைபொருந்திய, புலவு – புலாலுற்றம், நாறு – நாறுகின்ற, மான – ஒப்பற்ற, வேல் - வேற்படையையுடைய, வீமன் ஈன்ற – வீமராசன்பெற்ற, வனிதையை – தமயந்தியை, இனிது – இனிதாக, கண்டார் – கண்டார்கள் எ-று. 74

பொருவருவனப்பின்மிக்கபுலோமசைமுதல்வராய
வரிவிழிக்குமுதச்செவ்வாய்வானவர்மகளிர்தாமித்
தெரியிழைசெவ்விநோக்கிற்சேணிடைப்பொலிந்துதோன்று
மிரவிமுன்மதியமாவரெனவுளத்தெண்ணினாரால்.

இ-ள். பொருவரு - ஒப்புச்சொல்லுதற்கரிய, வனப்பின் - அழகினுலே, மிக்க – மிகுந்த, புலோமசை முதல்வராய – இந்திராணி முதலினராகிய, வரி-இரேகைகளையுடைய, விழி - கண்களையும், குமுதச்செவ்வாய் – அல்லிமலர் போன்ற சிவந்த வாயினையுமுடைய, வானவர்மகளிர் – தெய்வமாதர், இத் தெரிஇழை – இந்தத் தமயந்தியினுடைய, செவ்வி – அழகை, நோக்கில்-பார்த்தால், சேணிடை – ஆகாயத்தினிடத்து, பொலிந்து – பிரகாசித்து, தோன்றும் – தோன்றுகின்ற, இரவிமுன் – சூரியன்முன்னே, மதியம் ஆவரென-சந்திரன்போலாவரென்று, உளத்து – மனத்திலே, எண்ணினார் – (தூதியர்) சிந்தித்தார்கள் எ-று. தாம், ஆல் - அசைகள்.

தெய்வமாதரிற் சிறந்த இந்திராணி முதலான மங்கையரும் இவளழகை நோக்கில் தாமழகுடையோமென்னுஞ் செருக்கை யொழிவார்களென்பது கருத்து. 75

எய்தியமகளிர்தம்மிலிறையவர்தலைவன்றா தி
யையரிநெடுங்கட்செவ்வாயணங்கிற்குமணந்தபோல்வாய்
கொய்துணர்த்தருவினீழற்கோமகன்பணியாற்போந்த
செய்திநீகேட்டியென்றுசிறடிவணங்கிச்சொல்வாள்.

இ-ள். எய்திய - அடைந்த, மகளிர் தம்மில் - தூதியர் நால்வருள், இமையவர்தலைவன் – இந்திரனுடைய, தாதி – தூதியானவள், ஐ – அழகிய, அரி- இரேகைகளையுடைய, நெடுங்கண் – நெடியகண்களையும், செவ்வாய் - சிவந்த வாயினையுமுடைய, அணங்கிற்கும் – தெய்வமங்கைக்கும், அணங்குபோல் வாய் – தெய்வமாதையொத்த தமயந்தியே! கொய் – கொய்கின்ற, துணர்- பூங்கொத்துக்களையுடைய, தருவினீழல் - ஐந்தருவி னிழலிலிருக்கின்ற, கோமகன் - இந்திரனுடைய, பணியால் – ஏவலினாலே, போந்த – வந்த, செய்தி – செய்தியை, நீ கேட்டியென்று - நீ கேட்பாயாகவென்று, சிறடி - சிறிய பாதங்களை, வணங்கி - வணங்குதல்செய்து, சொல்வாள் - சொல்வாள் எ-று.

தான் தெய்வமங்கையாயினும் தன்னிறைவனுக்குத் தலைவியாக்குவிக்கத் தூதியாகவந்தமையால் தமயந்தியினிடத்து அவளுக்கு வணக்கஞ் சொல்லப்பட்டது. 76

இருவிசும்பொருகோலோச்சியதிலர்க்கடந்துதேவர்
பரவிநின்றிறைஞ்சநாளும்பனிமலர்த்தருவினீழ
லரியணைப்புறத்துவைகுமண்ணலுக்கமிர்தமன்ன
யுருவிலாளொருவன்செய்யுமுறுபகைகாத்தல்வேண்டும்.

இ-ள். இரு - பெரிய, விசும்பு – வானுலகை, ஒருகோலோச்சி – ஒரு செய்கோல்செலுத்தி, எதிலர் – சத்துருக்களை, கடந்து – வென்று, தேவர்- தேவர்கள், பரவிநின்று - துதிசெய்துநின்று, இறைஞ்ச – வணங்க, நாளும்- நாடோறும், பனி – குளிர்ச்சிபொருந்திய, மலர் - மலராணிறைந்த, தருவினீழல் - ஐந்தருவினிழலில், அரியணைப்புறத்து – சிங்காதனத்தினிடத்து, வைகும் – தங்கிய, அண்ணலுக்கு – இந்திரனுக்கு, அமிர்தமன்ன – அமிர்தத்துக் கொப்பானவளே,! உருவிலான் - வடிவமில்லாதவனாகிய, ஒருவன்- மன்மதனனவன், செய்யும் – செய்கின்ற, உறு - மிகுந்த, பகை – பகையை நீக்கி, காத்தல்வேண்டும் – (நீ) காக்கவேண்டும் எ-று.

இதமுதலிலந்துபாட்டால் தூதி தமயந்தியை வேண்டிக் கோடல். இருவிசும்பென்றதனாற் பொன்னுல கென்பதும், ஒருகோலோச்சியென்றதனாற் பொதுவரப் புரப்பனென்பதும், எதிலர்க் கடந்தென்றதனால் வீரனென்பதும், தேவரிறைஞ்ச – வென்றதனால் அவரிலுஞ் சிறந்தோனென்பதும், தருவினீழலென்றதனால் மிகுந்த செல்வமுடையோனென்பதும், அரியணைப்புறத்தென்றதனால் அரசுசெய்பவ னென்பதும், அண்ணலென்றதனாற் பெருமையிற சிறந்தோனென்பதும் கருத்தாகப்பெற்றாம். இந்திரனே மணம்புரிவாயென்பது உருவிலான் செய்யும் பகையொழித்தல் வேண்டும் என்னும் வாக்கியத்தாற் பெறப்படுதலாற் பிறிது நவிற்சியணி. 77

எம்மிறையிளவற்காகவிருங்கடல்கடைந்துவாசச்
செம்மலர்த்திருவையீந்ததேவர்வாசவற்குமின்னுங்
கைம்மலர்வருந்தவிக்குக்கடல்கடைந்துழலாவண்ணம்
பொம்மல்வெம்முலையாயன்றோற்கின்னருள்புரிதல்வேண்டும்.

இ-ள். எம்மிறை – எங்களரசனுடைய, இளவற்காக – உபேந்திரனுக்காக, இரு – பெரிய, கடல்கடைந்து – பாற்கடலைக்கடந்து, வாசம் – வாசனை பொருந்திய செம்மலர்த்திருவை – செந்தாமரை மலரிலிருக்கின்ற திருமகளை, ஈந்த – தந்த, தேவர் – தேவதைகள், வாசவற்கும் – இந்திரனுக்கும், இன்னும் – இன்னமும், கைம்மலர் வருந்த – கைகளாகிய மலர்கள் வருந்த, இக்குக்கடல் கடைந்து – கருப்பிரதக் கடலைக்கடைந்து, உழலாவண்ணம் – அலையாதவிதம், பொம்மல் – பொலிவினையுடைய, வெம் – விரும்பத்தக்கவாகிய, முலையாய் – முலைகளையுடைய தமயந்தியே! அன்றோற்கு – அவ்விந்திரனுக்கு, இன் அருள் – இனிய அருளை, புரிதல்வேண்டும் – (நீ) செய்தல்வேண்டும் எ-று.

இங்கு இளவலென்பது, இந்திரனுக்குச் சயந்தருவதற்காக அவன் தம்பியாயவதரித்து உபேந்திரனெனியுடனிருக்கின்ற திருமாலையெனக் கொள்க. தேவர்க்கு இம்முயற்சி யில்லாதிருக்கவும் அவர்க்குளதாகக் கூறலால் உயர்வு நவிற்சியணி. 78

மாயிருஞாலந்தன்னின்மகம்பலவியற்றிப்பெற்ற
மீயுயர்பசும்பொன்ஞட்டின்மேதகுசெல்வமெல்லா
மேயினநின்பாலன்றோவிமையவர்க்கிறைவன்பானின்
சேயரிக்கடைக்கணோக்கஞ்சிறிதருள்புரியின்மாதோ.

இ-ள். மா – மகத்தாகிய, இரு – பெரிய, ஞாலந்தன்னில் – பூமியிலே, பலமகம் இயற்றி – நூறுவேள்விசெய்து, பெற்ற – பெற்றுக்கொண்ட, மீமேலாக, உயர் – உயர்ந்த, பசு – பசுமைபொருந்திய, பொன்ஞட்டின் – பொன்னுலகத்தில், மேதகு – மேன்மைபொருந்திய, செல்வமெல்லாம் – பாக்கியமெல்லாம், நின்பால் – உன்னிடத்தில், எயினஅன்றோ – பொருந்தியனவல்லவா, இமையவர்க்கிறைவன்பால் – இந்திரனிடத்தில், நின் – உன்னுடைய, சேயரி – செவ்வரிபரந்த, கடைக்கண்நோக்கம் – கடைக்கண் பார்வையானது, சிறிது – கொஞ்சம், அருள்புரியின் – அருள்செய்தால் எ-று.

மா – கருமை, இருமை – பெருமையெனப் பொருளுரைப்பர் அடியார்க்கு நல்லார். மா = இரும் என்னுஞ் சொற்கள் மாவிருமெனப் புணராது மாயிரு மெனப்புணர்ந்தது அதிகாரப்புறனடை விதியானென்க. செல்வமாவன – மூவுலகாட்சி, கற்பகமுதலிய ஐந்தருக்கள், காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி, பொன்னுலகம், அமராவதி, வசந்தமாளிகை, ஐராவதயானை, உச்சைச் சிரவக்குதிரை, சுதர்மசபை, நந்தவனம், அமிர்தம், தேவர், அரம்பையர் இவை முதலியனவாம். செல்வத்திற்கும் அருட்கும் மாற்றிக்கோடல் சொல்லப் பட்டமையால் மாற்றுநிலையணி. 79

மண்ணினிற்சிறந்துவாழுமன்பதைத்தொகுதிதன்னி
லெண்ணிடிற்சிறந்தாரன்றேவியக்கரவ்வியக்கர்தம்மில்
விண்ணவர்சிறந்தாரன்றேவிண்ணவர்தமையுமாளு
மண்ணினின்னேவல்கேட்பினதனினுஞ்சிறந்ததுண்டோ.

இ-ள். மண்ணினில் — பூவுலகத்தில், சிறந்து — சிறப்பைப்பொருந்தி, வாழும் - வாழ்கின்ற, மன்பதைத் தொகுதிதன்னில் – மக்கட் கூட்டத்துக் குள், எண்ணிடில் – நினைக்குமிடத்தில், இயக்கர் – இயக்கரானவர்கள், சிறந் தார் அன்றே – சிறந்தவர்களாவர், அ இயக்கர் தம்மில் – அந்த இயக்கருக் குள்ளே, விண்ணவர் - தேவர்கள், சிறந்தாரன்றே – சிறப்பைப் பொருந்தி னவர்களாவர், விண்ணவர் தமையுமாளும் - அத்தேவர்களையு மாட்சி செய் கின்ற, அண்ணல் – இந்திரனானவன், நின் ஏவல் கேட்பின் - உன்னுடைய ஏவற்றொழிலைக் கேட்பாயின், அதனினும்-அதைக்காட்டிலும், சிறந்தது- சிறப்பையுடையது, உண்டோ – ஒருபொருளுண்டோ (இல்லை.) எ-று.

இல் என்னும் ஐந்தனுருபுகள் உறழ்ச்சிப் பொருளில் வந்தன. யகூர் என்னுஞ்சொல் இயக்கர் எனத் திரிந்து நின்றது. சிறக்காதவாழும் உயிர் களைநீக்க "சிறந்துவாழுமன்பதை" என விசேடித்தார். தொகுதி என்பது சொல்லாற்றலானே ஒருமையாகலின் "தன்னில்" என்று ஒருமைச்சாரியை வைத்தார். மேன்மேலும் சிறப்பைச் சொல்லுதலால் மேன்மே லுயர்ச்சியணி. 80

தாதொடுநறவுதூற்றுந்தருநிழலினிதுவைகு
மேதகுநிதியுமானும்வேட்டனவுவந்துநல்க
வேதமிலரம்பைமாதர்முறைமுறையேவல்கேட்ப
நீதொழுமமரர்யாருநிற்றொழப்பணித்தியென்றாள்.

இ-ள். தாது ஒடு – மகரந்தப்பொடியோடு, நறவு-தேனையும், தூற்றும்- தூற்றுகின்ற, தருநிழல் – ஐந்தருநிழலில், இனிது — இனிதாக, வைகும்-தங் கிய, மேதகு - மேன்மைபொருந்திய, நிதியும் – சங்கநிதி பதுமநிதிகளும், ஆனும் - காமதேனுவும், வேட்டன — விரும்பியவைகளை, உவந்து-மகிழ்ந்து, நல்க – கொடுக்க, எதமில் - குற்றமில்லாத, அரம்பைமாதர் – தெய்வமடவார் கள், முறைமுறை - வரிசை வரிசையாக, ஏவல்கேட்ப – ஏவற்றொழிலைக் கேட்க, நீ தொழும் — நீவணங்குகின்ற, அமரர்யாரும் - தேவர்கள்யாரும், நின்றொழ – நின்னைவணங்க, பணித்தி என்றாள் — சொல்லென்றாள் எ-று. 81

இனையனவுரைத்தலோடுமியாவர்தமுளமுந்தேதரும்
பனியிருவிசும்பிற்றேவர்பரவவீற்றிருக்கும்வேந்தன்
மனநிலையுணரான்போலுமழைமதர்நெடுங்கணல்லா
யுனைவிரைந்திங்ஙன்றூதுவிடுத்ததென்னுரைத்தியென்னு.

இனியிரண்டு பாட்டால் தமயந்தி இந்திரன் தூதிக்கு விடைகொடுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். இனையன — இத்தன்மையவாகியசொற்களை, உரைத்தலோடும்- சொன்ன மாத்திரத்தில், யாவர்தம் - எவர்களுடைய, உளமும் — மனமும், தேரும் - தெரியாநின்ற, பனி - குளிர்ச்சிபொருந்திய, இரு – பெரிய, விசும்பில் - தெய்வலோகத்திலிருக்கின்ற, தேவர் – தேவர்கள், பரவ – வணங்க, வீற்றிருக்கும் – அரசிருக்கின்ற, வேந்து - இந்திரனவன், என் மனநிலை- என்மனத்தினிலையை, உணரான்போலும் – தெரியாதவன்போல, மழை-குளிர்ச்சிபொருந்திய, மதர் – மதர்த்த, நெடுங்கண்-நெடியகண்களையுடைய, நல்லாய் — தூதியே! உனை – உன்னை, விரைந்து - சீக்கிரமாக, இங்ஙன்-இவ்விடத்தில், தூதுவிடுத்தது - தூதாகவனுப்பியது, என் – யாதுகாரணமாக, உரைத்தி என்ன - சொல்லென்று எ-று.

இனையன – சுட்டிடைச் சொல்லடியாகப் பிறந்த பலவின்பால் வினையாலணையும்பெயர், விசும்பு — ஆகுபெயர். இங்ஙன் – என்பதன்கண் ஙனம் என்றது கடைக்குறைந்தது. அறியான்போலு மென்றமையால் இதுதற்குறிப்பணி. 82

என்னுளத்தென்றுநீங்காதிருப்பவனளனேயாகும்
பொன்னகர்க்கிறைவன்றன்பாற்பொருந்துதியென்னுந்தூதுக்
கன்னவனியையுங்கொல்லோவெனமறைந்தயலேநிற்கு
மன்னவன்மகிழ்ச்சிகூறமடவல்லினிதுசொன்னாள்.

இ-ள். என் உளத்து - என்னுடைய மனத்தில், என்றும் – எந்நாளும், நீங்காதிருப்பவன் – பிரியாமனிலை நிற்பவன், நளனே ஆகும் – நளமகாராசனேயாகும், பொன்னகர்க்கிறையவன் தன்பால் — இந்திரனிடத்து, பொருந்துதி – நீ பொருந்தக்கடவாய், என்னும் தூதுக்கு – என்று சொல்லுந் தூதுக்கு, அன்னவன் – அந்த நளமகாராசன், இயையுங் கொல்லோ என – சம்மதிப்பானோவென்று, மறைந்து — ஒளித்து, அயலேநிற்கும் - பக்கத்திலேநிற்கின்ற, மன்னவன் - அரசன், மகிழ்ச்சிகூர - மகிழ்ச்சிமிக, மடவரல்-தமயந்தி, இனிது — இனிதாக, சொன்னாள் - சொல்லினாள் எ-று.

அன்னவனியையலாவது - தான் காணியாகக்கொண்ட மனத்தைவிட்டு நீங்குதல். அவ்வரசனுவது என்னிடத்து வெறுத்து நீங்கல்வேண்டும். யானுவது அவனை வெறுத்து நீக்கல்வேண்டும், இருவரும் ஒத்திருக்கும் போது அவ்விடத்தை விரும்பித் தகாதென்றதாயிற்று. ஆயின் ஓரிடத்தில் இருவர் எப்படியிருக்கலாமென்பது கருத்து. சுபாவத்திற் சொல்லுந் தமயந்தியினுரையைக் கேட்டமையால் நளனுக்கு மிகவு மகிழ்ச்சியுண்டாயிற்றென்க. 83

கோற்றொடிகளன்மேலுற்றகாதலிக்குறித்துநோக்கி
மாற்றுதலரிதென்றெண்ணிவாசவன்றூதியேக

வாற்றல்வாசவற்குநேராவணங்கெவர்க்கியையுமென்னுந்
தேற்றமோடுரையார்மற்றைத்தேவர்தூதியரும்போனர்.

இ-ள். கோல்தொடி—தமயந்தியானவள், நளன்மேல்—நளனிடத்தில், உற்ற—வைத்த, காதலை—ஆசையை, குறித்து நோக்கி—குறித்துப்பார்த்து, மாற்றுதல்—அதனை நீக்குதல், அரிதென்று—அரிதாகுமென்று, எண்ணினினைத்து, வாசவன் தூதி—இந்திரனுடைய தூதி, எக—தன்னிடத்துச் செல்ல, ஆற்றல்—வலிமைபெற்ற, வாசவற்கும்—இந்திரனுக்கும், நேராஉடன்படாத, அணங்கு—தமயந்தி, எவர்க்கு—யாவர்கட்கு, இயையும் என்னும்—சம்மதிப்பா (ளொருவருக்குஞ் சம்மதியா) ளென்கின்ற, தேற்றமோடு—தெளிவுடனே, உரையார்—பேசாதவர்களாய், மற்றைத்தேவர் தூதியரும்—மற்றைத் தேவர்கள் விடுத்த தூதிகளும், போனர்—சென்றார்கள்.

கோல்—வளவு. "கோற்றொடிக் கொடிச்சியை" என்றார் தணிகைப் புராணத்தாரும். உம்மை இறந்தது தழீஇயவெச்சம். தமயந்தி பூவுலக மடந்தையாயினும் நம்மினுமிக்க கலைகளின் பயிற்சியுடையவ ளாகையால் அவளே நமது சொல்லால் மடக்கி இந்திரனுக்குத் தூணெவியாக்குவது அசாத்தியமென்று இந்திரன் தூதி நீங்கினனென்க. அப்படிப்பட்ட சம்பத்துக் களையும் போகத்தையும் வலிமையையும் சிறப்பையுமுடைய இந்திரனுக் குச் சம்மதியாதவள் நம்மிறைவர்க்குஞ் சம்மதப்படாளென்பது கரதல மலகம்போற் றெரிதலால் மற்றைத் தூதிகளு மவளுடன் உரையாடி அவமான மடையாமையே நமக்கு மேன்மையென் றெழுந்தனரென்க. 84

தூதியரேகக்கண்டதோன்றல்செங்கமலக்கண்கண்
மேதகுசெல்வமிக்கவிதர்ப்பர்கோன்றவத்திற்றோன்று
மாதர்மென்னோக்கினுடன்வடிவினிலழுந்திப்பின்னு
மாதரம்பெருகியின்பவாரியினழுந்தவன்றே.

இ-ள். தூதியர்-தேவதூதிகள், எக-தம்மிடத்துக்குப்போதலை, கண்டபார்த்த, தோன்றல்—நளமகாராசனுடைய, செங்கமலக்கண்கள்-செந்தாமரைமலர்போன்றநேத்திரங்கள், மேதகு—மேம்பட்ட, செல்வம்—செல்வத்தினாலே, மிக்க—மிகுந்த, விதர்ப்பர்கோன்—வீமராசனுடைய, தவத்திற் றோன்றும்—தவத்தினாலவதரித்த, மாதர்—அழகிய, மெல்-மெல்லிய, நோக்கினுள் தன்—பார்வையையுடைய தமயந்தியினது, வடிவினில்—உருவத்தில், அழுந்தி—ஆழ்ந்து, பின்னும்-பின்னும், ஆதரம்பெருகி-ஆசை மிகுந்து, இன்பவாரியின்—இன்பக்கடலிலே, ஆழ்ந்த-அழுர்தின எ-று.

காவினி லொருமங்கையின் அழகை நோக்கும் ஆடவர்க்கு மற்றொருவர் அங்கில்லாதிருந்தால் மாத்திரஞ் சகிக்குமாதலால் தூதியரேகக்கண்ட தோன்றலென்றார். அங்குள்ள தோழிகளோவெனில் அவர்களுக் கிவளிருப்பது தெரியாதென்க. அவளவயவங்களைத் தனித்தனி நோக்கின் அந்நோக்குதற் கிடையூறடையின் மற்றவைகளெப்படி யுளவோவென்று கருத்தீலயு.

மாதலால் முழுவதுந் தன் சத்தியா லொருங்கு நோக்குதலால் வடிவினி லழுந்தியென்றும், அதில் ஆசைமிகுதலா லின்பசாகரத்தி லழுந்தினனென் றுஞ் சொல்லினர். 85

பாசிழைபரந்தவல்குற்பனிமொழிக்குமுதச்செவ்வாய்
மாசறுமதியமன்னவாண்முகத்தணங்கைநோக்கி
யாசையங்கடலுளாழ்ந்துகரைபெறுவரசனெஞ்சு
*மேசுவதொன்றுமில்லாமுலைவரையிவர்ந்தவன்றே.

இ-ள். பாசு இழை – பசும் பொன்னுற்செய்த வாபரணங்கள், பரந்த-பரவப்பெற்ற, அல்குல் – அல்குலேயும், பனிமொழி – குளிர்ச்சிபொருந்திய சொற்களேயும், குமுதம் – அல்லிமலர்போன்ற, செவ்வாய் – சிவந்த வாயினேயும், மாசு அறு – குற்றமற்ற, மதியம் அன்ன – சந்திரனேயொத்த, வாள் – ஒளிபொருந்திய, முகத்து – முகத்தையுமுடைய, அணங்கை – தமயந்தியை, நோக்கி – பார்த்து, ஆசையங்கடலுள் – ஆசையாகிய கடலினிடத்து, ஆழ்ந்து – முழுகி, கரைபெரு – கரையைப்பெறுத, அரசன் நோக்கம் – நளனுடைய பார்வை, ஏசுவது ஒன்றுமில்லா – பழிப்பதொன்றுமில்லாத, முலைவரை – முலைகளாகிய மலையின்மேல், இவர்ந்த – ஏறின.

அல்குற் பாம்பையும் வாய்க் குமுதத்தையும் முகமதியத்தையுமுடைய மங்கையினது ஆசைக்கடலில் வீழ்ந்து அவைகளுறுபடுத்த வருந்தி ஒரு துறையுங் காணுது தடுமாறும் அரசனேக்கங்கள் அங்கு முலைகளென்னு மலைகளேக்கண்டேறின வென்க. கச்சறுத்தல், களபச்சேறணிதல், முத்து வடமணிதல், இறுமாந்து மேனேக்கல், கண்கறுத்தல், அடிகனத்தல், திதலை பூத்தல், பூரித்தல், புளகித்தல், இழைநழையாது நெருங்கில், வெச்சென்ல், தண்ணெனல், இடையைவாட்டல் முதலிய நற்குணங்களிற் குறைவின்றி யிருத்தலால் "ஏசுவதொன்றுமில்லா முலே" யென்றார். மிகுந்த ஆசையோடும் தனங்களே நோக்கினனென்பது கருத்து. ஆசையங்கட லென்றதும் முலேவரை யென்றதும் உருவகங்கள். தமயந்தியைக்கண்ட கண்கள் மிகுந்த ஆசையுடையதாய் முலேயைப்பார்த்தன என்னும் பொருள்பெறச் சொல்லிய நோக்கம் கடலுளாழ்ந்து மலையிலிவர்ந்த தென்றலிற், கடலில்

---

* தனங்களின் இலக்கணமாவது பருத்து, அடிகனத்து இரண்டு மொத்தனவாய், இடைவெளியின்றி, கடைந்த செப்புக்களேப்போலப் புடைபரந்து தேமல் சொரிந்து, திரண்டு 'ஓங்கி' கோலமுற்று கண்கள் கறுக்கப்பெற்று விளங்குதலாம். வலத்தனம் உயரின் குமாரரைப் பெறுவாள். இடக்கொங்கை யங்ஙனமிருப்பிற் பேதையரையுயிர்ப்பாள். அடிகனத்து மேலே வர வர நேர்மையனவாயின், சிறிதுகாலம் அழகெய்துவள். அவ்வாறின்றித் திரிகையைப்போலப் பதியின் வரிசைக்குண முடையளாவள். சூசுகங்கள் பெருத்தாலும், நீண்டாலும், உயர்ந்திடினும், நுனியாழ்ந்தாலும், இடைவெளி மிகவும் நீங்கினும் அவற்றைக் கனவிலுங் தொடலாகா தென்பர் கற்றுணர்ந்தோர்.

மூழ்கினோர் கரையிலேறுவதாகிய உலகர்செய்கை தோன்றுதலால் முன்னுருவகத்தை யங்கமாகக்கொண்ட சுருக்கச்சொல்லணி. 86

போர்க்களிறனைய வீமன் புரிந்தமெய்த்தவத்திற்றோன்றுங்
கார்க்கருங்கூந்தலாண்மைக்கண்வலியதனுட்பட்டோ
வீர்க்கிடைபுகாதபொம்மலிளமுலைநெருக்கிற்புக்கோ
பார்த்தசெங்கமலக்கண்கள்பறிப்பரியனவாய்நின்ற.

இ-ள். போர் - போர்செய்கின்ற, களிறனைய - யானையை யொத்த, வீமன் - வீமராசன், புரிந்த – செய்த, மெய்த்தவத்தில் – உண்மையான தவத்தினுலே, தோன்றும் – அவதரித்த, கார் – மேகம்போன்ற, கருங்கூந்தலாள் - கரியஅளகபாரத்தையுடைய தமயந்தியினது, மை - மையையணிந்த, கண்வலி அதனுட்பட்டோ - கண்ணுகிய வலியிலகப்பட்டோ, ஈர்க்கு-ஈர்க்கானது, இடை – மத்தியத்திலே, புகாத – நுழையாத, பொம்மல்-பொலிவுபெற்ற, இளமுலை – இளமைபொருந்திய தனபாரங்களினுடைய, நெருங்கில் – நெருக்கத்தில், புக்கோ – புகுந்தோ, பார்த்த - நோக்கிய, செங்கமலக்கண்கள் – செந்தாமரைமலர்போன்றநேத்திரங்கள், பறிப்பரியனவாய்-பறிப்பதற்கரியவாகி, நின்ற – நின்றன எ-று.

குழுஉப்புறந்தருதல் குஞ்சரத்தியல்பே யென்றலின் அவ்வாறுலகினரைக் காப்பவனுகையாற் போர்க்களிறனைய வீமனென்றும் பொய்த்தவத்திற் றோன்றினனென்பதற்கு மெய்த்தவத்திற் றோன்றினனென்றுங் கொள்க. ஈர்க்கிடை புகாமல் விம்முதலால் மூத்தனவோ வென்னும் ஐயநிகழாமைக்கு இளமுலையென்றார். கண்கள் அழகு முழுவது நோக்கி முற்றுமையாற் பறிப்பரியனவாய் நின்றனவென்க. இது ஐயவணி. 87

விண்ணவர்மகளிர்யாரும்வெள்குறவனப்புவாய்ந்து
பெண்ணலங்கனிய நின்றபேதைபேரழகுமுற்றுங்
கண்ணெடுபிணித்தாலென்னவியப்புறகளித்துநோக்கும்
புண்ணுறுபுலவுவேலானுளத்தொடுபுகலலுற்றான்.

இ-ள். விண்ணவர் — தேவர்களுடைய, மகளிர் யாரும் – மங்கையரெல்லாம், வெள்குற – நாணமடைய, வனப்புவாய்ந்து – அழகைப்பெற்று, பெண் – பெண்களுக்குரிய, நலம் – நற்குணங்கள், கனிய – முதிர, நின்ற-நிற்கப்பெற்ற, பேதை – தமயந்தியினது, பேர் – பெரிய, அழகு முற்றும்-அழகுமுழுவதும், கண்ணெடு – கண்களுடனே, பிணித்தாலென்ன – கட்டினதையொப்ப, வியப்புற – ஆச்சரியமிக, களித்து – களிப்பை யடைந்து, நோக்கும் – பார்க்கின்ற, புண்ணுறு – மாமிசத்தையுற்ற, புலவு - நாற்றத்தையுடைய, வேலான் – வேற்படையேந்திய நளமகாராசன், உளத்தொடு-மனத்துடனே, புகலலுற்றான் - சொல்லத்தொடங்கினன் எ-று. உளத்தொடுபுகலல் – சிந்தித்தல்.

பெண்ணலமாவன நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு முதலிய குணங்களும் பிறவுமெனக்கொள்க. அவவழகின்கடலே யொருவாற்றுற் கட்டந்

நளன் தன்மனத்துக் கிசைந்தவர் வேறொருவரும் அங்கில்லாமையால் தான் கண்ட வியப்பை மனத்துடன் சொல்லத் தொடங்கின னென்க. பிணித்தா லென்றமையால் தற்குறிப்பணி. 88

வடிவமை நூலிற்சொல்லும்வனப்பெலாமமைத்துவேதன்
கடிமலர்ச்செங்கைவண்ணங்காட்டியவுருவுகொல்லோ
வடுகணேவெனிலானின்னமுதுகோறெய்த்துத்தீட்டும்
படிவமோயுயிரைவாட்டும்பாவைதன்வடிவந்தானே.

இதுமுதற் பத்துச்செய்யுட்களால் நளனது சிந்திப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். உயிரைவாட்டும் – என்னுயிரை வாட்டுகின்ற, பாவை – இப்பாவைபோல்வாளுடைய, வடிவம் – உருவமானது, வேதன் – பிரமனனவன், வடிவமைநூலில்-சாமுத்திரிகநூலிலே, சொல்லும்-சொல்லாகின்ற, வனப்பு எலாம் – அழகனைத்தும், அமைத்த – அமையச்செய்து, கடி-புதுமைபெற்ற, மலர் – தாமரை மலர்போன்ற, செங்கைவண்ணம் – தனதுசிவந்தகைகளின் குணத்தை, காட்டிய – காண்பித்த, உருவுகொல்லோ – உருவமோ. அடுகொல்லாகின்ற, கணே – பூங்கணைகளையுடைய, வேனிலான் – மன்மதனனவன், இன் – இனிய, அமுது – அமிர்தத்தில், கோல்-தூரியக்கோலை, தோய்த்து – நனைத்து, தீட்டும் – எழுதப்பட்ட, படிவமோ – உருவமோ எ-று.

வடிவமை நூலாவது சாமுத்திரிகா லக்கணம். நூல் – ஆகுபெயர். வேதன் – விதித்தலைச்செய்பவன், வேதத்தை யுடையவன். உருவு – உகரம் சாரியை, கொல் – ஐயப்பொருட்டு வேதன் செங்கைவண்ணங் கொல்லோ என்றவன், பின் வேனிலான் தீட்டும்படிவமோவெனக் கூறியது அவன் பஞ்சப்பி லிவ்வழகு கண்டிலேம்; அழகினால் உலகத்தை மயக்குங் காமனே படைக்கிலிவ்வழகுண்டாகலாமெனும் கருத்தாவெனக்கொள்க. வேதன்கை வண்ணங் காட்டியவுருவோ வேனிலான் தீட்டும் படிவமோ வெனக்குறித்தலால் தற்குறிப்பணி. 89

குழையெதிர்நடந்துபைம்பொற்குமிழ்மிசைமறிந்துதீண்ட
வுழைபொருநெடுங்கணுடனுறப்பினுக்குவமையாகச்
செழுமலர்முதலவாயபொருள்களைத்தெரிந்துகூறி
னழகினுக்குவமைதீர்ந்தவவற்றினுக்கிகழ்ச்சியாமே.

இ-ள். குழை – குழையென்னுங் காதணிக்கு, எதிர் நடந்து – முன்பாகச் சென்று, பைம்பொன் – பசியபொன்போன்ற, குமிழ் – குமிழம் பூவினது, மிசை – மேற்பக்கத்தில், மறிந்து – மறிபட்டு, தீண்ட – தீட்சியையடைந்த, உழைபொரு – மான்போன்ற, நெடுங்கணுடன் – நெடியகண்களையுடைய தமயந்தியினது, உறுப்பினுக்கு – அவயவத்துக்கு, உவமையாக – உவமானமாக, செழும் – செழுமைபெற்ற, மலர் முதலவாய – தாமரைமலர் முதலாகிய, பொருள்களை – வத்துக்களை, தெரிந்துகூறின் – தெரிந்துசொல்லின்,

அழகினுக்கு – அழகுக்கு, உவமை தீர்ந்த – உவமை நீங்கிய, அவற்றினுக்கு-அவ்வுறுப்புக்களுக்கு, இகழ்ச்சியாம் – பழிப்பாகும் எ-று. குமிழென்பது அதுபோன்ற மூக்கெனக் கொள்க.

மலர்முதலாய பொருள்களாவன – மேகம் நாகம், பிறை நறை, குவளை குமிழ், குமுதம் அமிர்தம், காந்தள் பாந்தள், அரும்பு கரும்பு, சுரும்பு முதலியவாம். உவமையில்லாத அவயவங்கட்கு அவைகளைச் சொல்லுவது இகழ்வாமென்க. உயர்ந்தவைகட்கு இழிந்தவைகளை யுவமித்துக் கூறுதலின் மிக்க அவமானமில்லையென்பது கருத்து. உவமானமாகிய தாமரைமலர் முதலியவற்றை இவளுறுப்புக்கு உவமையாகக் கூறின் இழிவென உவமேயத்தைச் சிறப்பித்தலால் எதிர் நிலையணி. 90.

குடைந்துவண்டிமிருஞ்செய்யகொழுமலர்த்திருவீனுடுக்
தடஞ்சினைபொதுளுமென்பூந்தருநிழலுறையுந்தெய்வ
மடந்தையர்தம்மையெல்லாம்வைகலும்படைத்துச்செங்கை
படிந்தபினிற்தமாதைப்படைத்தனன்கமலத்தோனே.

இ-ள். வண்டு – வண்டுகளானவை, குடைந்து – மூக்கினுலே கிண்டி, இமிரும் – ஒலிக்கின்ற, செய்ய – சிவந்த, கொழு – செழுமைபெற்ற, மலர்-தாமரைமலரி லிருக்கின்ற, திருவினேடும் – இலக்குமியுடனே, தடம் – பருத்த, சினை – கிளைகள், பொதுளும் – நெருங்கிய, மெல் – மெல்லிய, பூ-மலர் களையுடைய, தருநிழல் – ஐந்தரு நிழலில், உறையும் – வசிக்கின்ற, தெய்வ மடைந்தையர் தம்மை எல்லாம் – தெய்வமங்கைய ரனைவரையும், வைகலும்-நாள்தோறும், படைத்து – சிருட்டித்து, செங்கைபடிந்தபின் – தன்னுடைய சிவந்தகைகள் பழகியபின்பு, இந்தமாதை-இந்த தமயந்தியை, கமலத்தோன்-பிரமனனவன், படைத்தனன் – சிருட்டித்தான் எ-று. ஏ – அசை நிலை.

அழகிற்சிறந்த இலக்குமி இந்திராணி முதலிய தெய்வ மங்கையராலும் விரும்பத்தக்க அழகுடையவளா யிருத்தலா லிவ்வாறுசொல்லினன். இப் படிப்பட்ட படைப்பின்முயற்சி பிரமனுக்கு இல்லாதிருந்தும் உள்ளதாகக் கூறலின் உயர்வு நவிற்சியணி. 91

விரிந்தசெங்கமலத்தண்பூம்பொகுட்டில்வீற்றிருக்குமேலோன்
முருந்திளமுறுவற்செவ்வாய்முகிழ்முலைக்கரியகூந்தற்
றிருந்திழைபழகுவாய்ந்தகிருமுகந்திங்களாகப்
புரிந்தனன்களங்கமன்றேபுருவமாவியற்றினனே.

இ-ள். விரிந்த – விரியப்பெற்ற, செங்கமலம் - செந்தாமரையினுடைய, தண் – குளிர்ச்சிபொருந்திய, பூம்பொகுட்டில் - மலர்க்கொட்டையின்மேல், வீற்றிருக்கும் – அரசிருக்கின்ற, மேலோன் – பிரமனனவன், முருந்து - மயிலிறகின் முதன்முள்போன்ற, இள – இளமைபொருந்திய, முறுவல் - தந்தங்களையும், செவ்வாய் - சிவந்த வாயினையும், முகிழ் – அரும்பையொத்த, முலை – முலைகளையும், கரிய – கறுத்த, கூந்தல் - அளகபாரத்தையுமுடைய,

திருந்திழை – தமயந்தியினது, அழகுவாய்ந்த – அழகுபொருந்திய, திருமுக மாக – திருமுகமாக, திங்கள் – சந்திரனை, புரிந்தனன் – செய்தான், களங்க மன்றே – அதன் களங்கத்தையல்லவா, புருவமா-புருவமாக, இயற்றினன்- செய்தான் எ-று.

"ஒளி யுமிழ்ந்துநல் வட்டமா யெழிறிக ழூவாமதி யெனத் தோன்றி- னளின மென்மணம் வீசும்வாண் முகமெனி னன்றுகீ ழிதழ்சேந்து-வளர் செழுந்துகிர்க் கடிகைபோற் றிரண்டதி னடுவனேர் வரைசேரிற் -களகனு யுல களித்திடு மாசரிற் கிழத்தியாய்க் களிகூறும்" என்பவாகலின், இங்ங னம் நளாசனுரைத்தனன் முகத்தை. இவள் முகம் சந்திரனென்பதற்குச் சந்தேகமில்லை யென்பது கருத்து. இது உயர்வு நவிற்சியணி. 92

மணிமுடிய தனைக்கொம்மைமுலையெனவமைத்துமார
ணிமலர்க்கணைகளைந்திலான் றழுவுலகுமூன்று
கணைகளால்வென்றுமற்றைக்கணைகளுக்கெதிரில்லாமை
யிணைவிழியென்றுபேரிட்டிவண்முகத்திருத்தினனே.

இ-ள். மாரன் – மன்மதனனவன், மணிமுடியதனை – தன்னுடைய மணிகள்பதித்த கிரீடத்தை, கொம்மை – இளமை பொருந்திய, முலையென- தனங்களென்று சொல்ல, அமைத்து – பொருத்தி, அணி – அழகிய, மலர்க் கணைகளைந்தில் – பூவம்புகளைந்தனுள், ஆன்ற – நிறைந்த, முழுவுலகும் – திரி லோகங்களையும், மூன்று கணைகளால் – மூன்று பாணங்களால், வென்று- வெற்றிகொண்டு, மற்றைக் கணைகளுக்கு – மற்றை யிரண்டு பாணங்களுக்கு, எதிரில்லா – எதிரில்லாத, மை – அஞ்சனந்தீட்டிய, இணைவிழியென்று- இரண்டு கண்களென்று, பேரிட்டு – பேர்வைத்து, இவள்முகத்தை – இந்தத் தமயந்தியினுடைய முகத்தில், இருத்தினன் – இருத்திவைத்தான் எ-று.

கொம்மை – திரட்சி, "மும்மதத்தனென் றொருபெயர் தனக்கு மொய் கூந்தற் – கொம்மை வெம்முலை" என்னூர் தணிகைப்புராணத்தாரும். இவ ளுடைய கண்கள் மாரன்கணைகளாயினவாற்றல் ஆடவரை மயக்கின; அ ல்லவாயின் எவ்வாறு மயக்குமென்பது கருத்து. தமயந்தியின் விழிக்கண் மாரன்கணையை ஆரோபித்தற் பொருட்டு விழியின் பேரிட்டென்று அத் தன்மையை யொழித்தலால் ஒழிப்பணி. 93

வெதிர்புரைபசியமென்றோள்வேனெடுங்கண்ணினுடன்
றிதலைவெம்முலைபான்முத்தக்தெரிதரவணிந்திடாமன்
மதமழைகொழிக்குமவேழமருப்பிணைவெருவியன்றே
கதிர்மணிமுத்தமுள்ளேகரந்துவைத்திருக்குமாறே.

இ-ள். வெதிர்புரை – மூங்கிலையொத்த, பசிய – பசுமைபொருந்திய, மெல் – மெல்லிய, தோள் – தோளையும், வேல் – வேற்படைபோன்ற, நெடு- நெடிய, கண்ணினுள்தன் – கண்களையுமுடைய தமயந்தியினது, திதலை-தே மலையுடைய, வெம் – விருப்பத்தைத்தருகின்ற, முலைபோல் – தனங்களைப்

போல், முத்தம் – முத்துக்களே, தெரிதர – தெரியும்படி, அணிக்கிடாமல்-தரித்துக்கொள்ளாமல், மதமழை – மதமாகிய மழையை, கொழிக்கும் - கொழிக்கின்ற, வேழம் – யானையினுடைய, மருப்பு இணை – கொம்பிரண்டும், வெருவியன்ரே – பயந்தல்லவா, கதிர் – கிரணங்களையுடைய, மணி – அழகிய, முத்தம் – முத்துக்களே, உள்ளே – தமக்குள்ளே, கரந்து – ஒளித்து, வைத்திருக்குமாறு - வைத்திருக்கும்விதம் எ-று. கொழித்தல் - பெருக்குதல்.

முத்துக்கள் தம்மிடத்திற் பிறந்தனவா யிருந்தும் தனங்களால் வெல்லப்பட்டபடியால் அவ்வெற்றிதோன்ற அம்முத்துக்களே யணிந்த அத்தனங்கள்போல் தந்தங்கள் வெளிப்பட வணிதற்கு வெருவினமையாற் கரந்துவைத்தனவென்க. அரசனுல் அபகரிக்கப்பட்ட பொருளே புடையவன் தப்பி நின்ற திரவியத்தைத் தனக்குள்ளடக்கி வைப்பனென்பது கருத்து. தந்தங்கள் தமக்குள்ளியற்கையின் முத்துக்களுடைமையில் வெருவி, கரந்துவைத்தனெக் குறித்தலால் தற்குறிப்பணி. இவ்வாறு கூறலால் வர்ணியமாகிய தமயந்தியின் தனச்சிறப்புத் தோன்றுகின்றமையால்புனைவிலி புகழ்ச்சியணி.

மடலவிழ்கமலப்புத்தேள்வடிவினியமைத்துவெய்ய
தடமுலையமைப்பமாதினுறுப்பலாற்றரமின்றென்னு
விடையினுக்கமைத்தகூற்றையெடுத்தெடுத்தமைத்தலாலோ
* கொடியெனத்தேய்ந்துதேய்ந்துகுறைந்ததுமருங்குரனே.

இ-ள். மடல் – இதழ்களானவை, அவிழ் - விரிந்த, கமலப்புத்தேள்-தாமரை மலரிலிருக்கும் பிரமனனவன், வடிவினை – உருவத்தை, அமைத்து – முன்புசெய்து, வெய்ய – வெவ்விய, தடம் - பருத்த, முலை – தனங்களே, அமைப்ப – பின்பு செய்ய, மாதின் – தமயந்தியினுடைய, உறுப்பு அலால் – அவயவமல்லாமல், தரமின்றென்னு – தகுந்த பொருளில்லையென்று, இடையினுக்கு – மருங்குற்கு, அமைத்தகூற்றை - வைத்தபங்கை, எடுத்தெடுத்து - சிறிது சிறிது ஆக வெடுத்துக்கொண்டு, அமைத்தலாலோ - செய்தபடியாலோ, கொடியென – கொடியென்றுசொல்ல, தேய்ந்து தேய்ந்து – தேய்பட்டுத் தேய்பட்டு, மருங்குல் – இடையானது, குறைந்தது - குறைபட்டது எ-று.

தமயந்தியின் தனங்கள் நாடோறும் பருத்து இடை சிறுக்கையால் அவைகளேக்கண்டவரசன் மற்றை மாதரைப்போலாது முன்பு இவளேப் படைத்த பிரமன் வேரொரு கருவிக்கூறு தரமன்றென்று கருதி இவளுறுப்புகளுள் இடையில்வைத்த கூற்றைத் தனத்திற் கமைத்திருக்கலாகுமெனக் கருதினனென்க. இயல்பிற் குறைந்ததெனக் குறித்தலால் தற்குறிப்பணி.

மௌவலந்தெரியல்வேய்ந்துமணங்கமழ்கரியகூந்தற்
கொவ்வையங்கனிவாய்ப்பேதைகுவிமுலைக்களிகல்யானை

* இடையி னிலக்கணமாவது—"இடுகுநுண்ணிடை வறுமை யெய்தி யிடற் றிருவெய்திடும் பெரிதாகிற் படருழந்திடும்" என்னுங் காசிகாண்டச் செய்யுளாற்றெரிக.

செவ்விதிற்பினித்தநீலச்செழுமணிவல்லிபோலு
மவ்வயிறணிந்தகோலவணி * மயிரொழுக்கந்தானே.

இ-ள். மௌவல்-முல்லையினுடைய, அம்-அழகிய, தெரியல்வேய்ந்த-மாலையைத்தரித்த, மணம்-வாசனை, கமழ-கமழ்கின்ற, கரிய-கறுத்த, கூந்தல்-அளகபாரத்தையும், கொவ்வை அம் கனிவாய்ப்பேதை-கொவ்வைக் கனிபோன்ற வாயையுமுடைய தமயந்தியினது, குவி-குவிந்த, மூலை-தனங்களாகிய, களி-களிப்பையுடைய, நல்யானை-நல்லயானையை, செவ்விதியின்-நேராக, பிணித்த-கட்டிய, நீலச்செழுமணி வல்லிபோலும்-செழுமையுள்ள நீலரத்தினக் கொடிபோலும், அவ்வயிறு-அந்த வயிறு, அணிந்த-தரித்த, சோலம்-ஒப்பனையமைந்த, அணி-அழகிய, மயிரொழுக்கம்-மயிரொழுங்கு எ-று. தான்-ஏ-அசைகள்.

"பொருந்து கன்மயி ரொழுக்கற மென்மையாய்ப் பொழிகதிருமிழ் நீலத்-திருந்து கோலெனக் கிடந்திடின் பலருறை நிருவினுஞ் சிறப்பெய்தும்" "ஆகலின் அணிமயி ரொழுக்கம்" என்றார். தமயந்தியினுடைய தனங்களென்னும் யானைகள் கட்டாவிட்டால் எதிர்ப்பட்ட ஆடவரைக் கொல்லுமென்பது கருத்து. மயிரொழுக்கத்தை நீலச்செழுமணி வல்லி போலுமெனக் குறித்தலால் தற்குறிப்பணி. 96

ஐங்கணைக்கிழவன்வைகுமணியரசிருக்கைப்பாங்கர்த்
தங்குறவமைத்தவாழைத்தண்டுகொறுகட்சீற்றத்
துங்கவெம்பருமயானைத்தடக்கைகொறுணிதோறற்றஞ்
செங்கயற்கருங்கட்செவ்வாய்த்திருந்திழைகுறங்குதாமே.

இ-ள். செம்கயல்-சிவந்த கயல்போன்ற, கருங்கண்-கரியகண்களையும், செவ்வாய்-சிவந்த வாயினையும், திருந்திழை-திருத்தமாகிய ஆபரணத்தையு முடைய தமயந்தியினது, குறங்கு-தொடைகள், ஐங்கணைக்கிழவன்-மன்மதன், வைகும்-தங்குகின்ற, அணி-அழகிய, அரசிருக்கை-அத்தாணியிடத்தின், பங்கர்-பக்கத்தில், தங்குற-தங்கும்படி, அமைத்த-செய்த, வாழைத்தண்டுகொல்-வாழைத்தண்டோ, தறுகண்-அஞ்சாத, சீற்றம்-கோபத்தையுடைய, துங்கம்-உயர்ச்சி பொருந்திய, வெம்-வெவ்விய, பருமம்-ஒப்பனையமைந்த, யானை-யானையினுடைய, தடம்-பருத்த, கைகொள்-துதிக்கையோ, அணிதல்-இன்னதென்று அணிதலே, தேற்றும்-(யாம்) தேறும் எ-று.

---

* மயிரொழுங்கு நிலக்கணத்தை உரையிற்காட்டப்பட்ட செய்யுளாற் றெரிக. அவ்வொழுங்கைப்பற்றி யின்னுஞ்செய்யுளொன்று தருதும். அது வருமாறு "மயிரொழுக்க முள்வளைந்திடிற் கைம்மையா மம்மயிர்சிவப் பேறிற்-செயிறருங்ஞான மெய்திடு மிடையிடை சிதைந்திடிற் றிருநீங்கு-மியல்பொடுஞ் சமமாய் மயிரின்றிநல்லிதய மாழ்ந்திடாதாகி-னுயிரினுஞ் சிறந்தின்னுயிர்க்காதல னுவப்புறச் சிறப்பாமால்."

மாதாது அல்குல் மானுக்கு அரசிருக்கை மண்டபமாகையால் அதற்கு அலங்கரித்த வாழைத்தண்டோவென்றூர்.—தேற்றும் எனத் தன்வினைப் பொருள் பிறவினையில் வந்தது. குறங்கை – வாழைத்தண்டுகொல், யானைத் தடக்கைகோலென ஐயுறலால் ஐயவணி. 97

பைந்தருநீழல்வைகும்பாவையர்பதுமபீடத்
திந்திரைக்கணங்குசெய்யுமேந்திழையெழிற்குத்தோற்று
வந்தடிபணியுந்தோறும்வாணுதல்கவினத்தீட்டுஞ்
சிந்துரத்திலகந்தோய்ந்தசிறடிசிவந்தவாறே.

இ-ள். பைந்தருநீழல் - பசிய ஐந்தரு நீழலில், வைகும்-தங்கிய, பாவையர் – அரம்பையர்கள், பதுமபீடத்து – தாமரை மலரிலிருக்கின்ற, இந்திரைக்கு – திருமாலுக்கு, அணங்குசெய்யும் - வருத்தத்தைச்செய்கின்ற, ஏந்திழை – தமயந்தியினது, எழிற்கு – அழகிற்கு, தோற்றுவந்து – தோல்வி பெற்றுவந்து, அடிபணியும்தோறும் – அடிகளில் வணங்குந்தோறும், வாள்-ஒளி பொருந்திய, நுதல் – நெற்றியானது, கவின – அழகுபெற, தீட்டும்-எழுதப்பட்ட, சிந்துரத்திலகம் – சிந்துரப்பொட்டு, தோய்ந்தோ – தோயப் பெற்றோ, சிறடி - சிறியபாதங்கள், சிவந்தவாறு – சிவந்தவிதம் எ-று.

அரம்பையர் மேம்பிறப்பிலாவது பின்போலழகுபெற விரும்பினம், நீ மூற்பிறப்பிலே யாதுசெய்து இவ்வழகு பெற்றனை, அதைச்சொல்லுவாயாகில் யாமும் அவ்வாறுசெய்து மெனப்போற்றுதலால்,வந்தடிபணியுந்தோறு மென்றூர். பாதத்தினியற்கைச் சிவப்பினில் அடிபணியுந்தேவமாதர் சிந்துரத் திலகத்தோய்வைக் குறித்தலால் தற்குறிப்பணி. 98

இன்னவாறுளத்தினெண்ணியெறுழ்வலிமடங்கலன்ஞன்
மின்னவிர்குலிசவேந்தன்விஞ்சையின்புணர்ப்பினீங்கிப்
பொன்னவிர்சுணங்குபூத்தபொம்மல்வெம்முலையினுண்முன்
கன்னலஞ்சிலேவலென்னக்கட்புலன்கதுவநின்றான்.

இ-ள். இன்ன ஆறு – இந்தப்பிரகாரம், உள்ளத்தின் - மனத்திலே, எண்ணி – சிந்தித்து, எறுழ்வலி – மிகுந்த வலிமைபெற்ற, மடங்கலன்ஞன்-சிங்கத்தையொத்த நளன், மின் அவிர் - ஒளிவிளங்குகின்ற, குலிசவேந்தன்-வச்சிரப்படையையுடைய இந்திரனது, விஞ்சையின் – வித்தையினுடைய, புணர்ப்பினீங்கி – சம்பந்தத்தினின்று நீங்கி, பொன் – பொன்போலும், அவிர் - பிரகாசிக்கின்ற, சுணங்கு – தேமல், பூத்த – உண்டாகிய, பொம்மல்-பொலிவினையுடைய, வெம் – விருப்பத்தைத்தருகின்ற, முலையினுண்முன்-தனக்களேயுடைய தமயந்திக்கு முன்னுக, கன்னல் அஞ்சிலேவலென்ன-கருப்பு வில்லேந்திய மன்மதன்போல, கட்புலன் – கண்ணறிவு, கதுவ-பற்றும்படி, நின்றான் – நின்றனன் எ-று.

நளன் இவ்வாறு சிந்தித்துப் பின்பு தான்வந்தகாரிய முடித்தற்காகவேறு வின்றி யுரைக்கின் வெருவுவரென ஒளித்தலேலிட்டு வெளிப்பட நின்றனனென்க. சிலேவலென்ன வெனலால் உவமையணி. 99

விரைகமழ்நறிய தண்டார்விதர்ப்பர்கோனளித்தபாவை
யரசிளங்குமரன்றன்னையார்வமோடினிதுகண்டா
ளருவெளிகண்டுநாளுமுவக்குளமயர்வாண்முன்னந்
தெருளுறக்காணிலெய்துமுவகையாக்தெரிக்கற்பாலார்.

இ-ள். விரை - வாசனை, கமழ் - கமழ்கின்ற, நறிய - நல்ல, தண்-குளிர்ச்சி பொருந்திய, தார் - மாலையணிந்த, விதர்ப்பர்கோன்-வீமராசன், அளித்த - பெற்ற, பாவை - தமயந்தியானவள், அரசிளங்குமரன் தன்னை - நளமகாராசனை, ஆர்வமோடு - ஆசையுடன், இனிது - இனிதாக, கண்டாள்-பார்த்தான், உருவெளிகண்டு - உருவெளிதோற்றத்தைக் கண்டு, நாளும்-நாடோறும், உவந்து - உவப்படைந்து, உளம் - மனம், அயர்வாள்-வருந்துகின்றவள், முன்னம் - முன்னுக, தெருளுற - தெளிவு பொருந்த, காணில்-கண்டால், எய்தும் - அப்போதடைகின்ற, உவகை - மகிழ்ச்சியை, யார்-எவர்கள், தெரிக்கற்பாலார் - தெரியப்படுத்த வல்லவர்கள் (ஒருவருமில்லை)

அந்தப்புரத்திலே வந்த புருடனை நோக்குந் தமயந்தி வெருட்சிவெகுட்சிகளின்றி மகிழ்ந்தனளென்பது நாடோறும் பொய்வடிவங்கண்டு மகிழ்பவளுக்கு மெய்வடிவங் காணப்பெறில் உண்டாமின்பம் சொல்லிமுடியாதென்னும் வாக்கியப் பொருளால் நிறுத்தப்படலால் செய்யுட்குறிப்பணி. 100

அங்கண்மாஞாலங்காக்குமண்ணன்மேலணங்கனுடன்
செங்கயற்கருங்கண்வாளிசிறிதுசென்றெழுந்தாமுன்னம்
பைங்கழைதாங்கியாவம்பரித்திடம்பார்த்துநின்ற
துங்கவேள்விடுத்தவாளிதூவன்மட்டாழ்ந்தவன்றே.

இ-ள். அம் - அழகிய, கண் - இடமகன்ற, மா - மகத்தாகிய, ஞாலம்-பூமியை, காக்கும் - அளிக்கின்ற, அண்ணல்மேல் - நளமகாராசன்மீது, அணங்கனுடன் - தமயந்தியினுடைய, செம் கயல் - சிவந்தகயல்போன்ற, கருங்கண் - கரியகண்ணுகிய, வாளி - பாணங்கள், சிறிதுசென்று - சிறிது போய், அழுந்தாமுன்னம் - அழுந்துவதற்கு முன்னரே, பைங்கழை - பசிய கருப்புவில்லை, தாங்கி - சுமந்துகொண்டு, ஆவம்பரித்த - அம்பறாத் தூணியைத் தாங்கிக்கொண்டு, இடம்பார்த்து நின்ற-இடநோக்கியிருந்த, துங்கம்-உயர்ச்சிபொருந்திய, வேள் - மன்மதனனவன், விடுத்த-பிரயோகஞ்செய்த, வாளி - பாணம், தூவன்மட்டு - குதைவரையும், ஆழ்ந்த - அழுந்தின எ-று.

தம்மரசன் ஒருதொழிலில் செய்யத் தொடங்குத னோக்கிய வவலன் அவன்முடங்குமுன்னமே விரைந்து செய்து முடித்தல்போல் தமயந்தியின் கண்களாகிய பாணங்கள் சிறிதுபோய் நளன்மேலழுந்து முன்னமே மன்மத பாணங்குதைவரையும் அழுந்தின. ஆயின் அக்காமன் இவள்கண் குறிப்பினிற்கும் வவலனுகினனென்க. இவள் நோக்கியபின் செல்லுங் காமபாணத்திற்கு நோக்கின் முற்காலஞ் சொல்லப்பட்டமையால் உயர்வு நவிற்சியணி. 101

கழிபெருங்காதலாள்கட்கருவிளைமலர்கள்வெய்ய
மழவிடையனையான்செய்யமணிப்புயவரையிற்பூத்த
விழைவொடுமகிழ்ச்சிகூரும்வேனில்வேளனையான்செங்கண்
முழுநெறிக்கமலமன்னமுலைத்தடத்தலர்ந்தமாதோ.

இ-ள். கழி – மிகுந்த, பெருங் காதலாள் – பேராசையுடைய தமயந்தியினது, கண் – கண்ணுகிய, கருவிளைமலர்கள் – காக்கணம் பூக்கள், வெய்ய-வெவ்விய, மழவிடை அனையான் – இளவேற்றையொத்த நளமகாராசனது, செய்ய – சிவந்த, மணி – அழகிய, புயவரையில் – தோளாகியமலையில், பூத்தமலர்ந்தன, விழைவொடும் – அன்புடனே, மகிழ்ச்சி கூரும் – மகிழ்ச்சியடைகின்ற, வேனில் வேளனையான் – நளமகாராஜனுடைய, செம்கண்-சிவந்த கண்ணுகிய, முழுநெறி – முழுநெறிப்பையுடைய, கமலம் – தாமரைகள், அன்னள் – அத்தமயந்தியினுடைய, முலைத்தடத்து – தனத்தடமாகிய குளத்தினிடத்து, அலர்ந்த – பூத்தன எ-று. தடமென்பது மலையும், குளமும். மாதோ, ஓ – அசைகள்.

தமயந்தியின் கண்கள் நளன் புயங்களிலும், அவன் கண்கள் அவள் தனங்களிலும், பூத்தவென்றமையால் மாதவர்க்கு ஆடவர் புயங்கள்போலும் ஆடவர்க்கு மாதர் முலைகள்போலும் காட்சிப் பிரமாணத்தின் முற்பட்டு விரைந்தின்பஞ்செய்யும் அவயவங்கள் வேறொன்றில்லை யென்க. இவர்கள் எல்லையற்ற ஆசையுடையவ ரென்பதற்குப் பெருங்காதலென் றோதியாது, கழியென்றும், மகிழ்ச்சியென்றோதியாது விழைவோடென்றும் கூட்டிச் சொல்லப்பட்டன. கட்கருவிளைமலர்கள் புயவரை என்றதும், செங்கண் முழுநெறிக்கமலம் – முலைத்தடம் என்றதும் உருவகவணிகள். முலைத்தடமென்றலில் – முலைத்தடமாகிய தடம் எனப்படலால் உருவகம். 102

படவரவல்குற்செவ்வாய்ப்பனிமொழிக்கொடியன்னாள்
மடலவிழ்கமலப்போதின்மடந்தையென்பதற்குவெற்றிக்
கடைகளிறென்னநின்றகாமருகாளைதன்னை
யிடையறுநினிதுநோக்கியிமைப்புறுகுறையுந்தீர்ந்தாள்.

இ-ள். அரவுபடவல்குல் – அராப்படம்போன்ற, அல்குலையும், செவ்வாய் – சிவந்தவாயையும், பனிமொழி – குளிர்ந்த சொல்லையுமுடைய, கொடி அன்னாள் – தமயந்தியை, மடல் அவிழ் – இதழ்விரிந்த, கமலப்போதின் – தாமரை மலரிருக்கின்ற, மடந்தையென்பதற்கு – இலக்குமியென்று சொல்வதற்கு, வெற்றி – சயத்தைப்பெற்ற, கடகளிறு என்ன – மதயானையைப் போல, நின்ற – அருகிலிருந்த, காமர் – அழகிய, காளைதன்னை – நளமகாராசனை, இடையறுது – இடைவிடாமல், இனிதுநோக்கி – இனிதாகப் பார்த்து, இமைப்புறு – (இதுவரையும்) இமைப்பிலையடைந்த, குறையும்-குறையையும், தீர்ந்தாள் – நீங்கினாள் எ-று.

தமயந்தி கண்ணிமைப்பினாலன்றி மற்றைக்குணங்களால் இலக்குமியை யொத்தவளென்க. 103

உண்ணிறைவுடையகாமமுருவெடுத்தென்னநின்ற
வண்ணலுமணங்கன்னுமழகெழுமினியதேற
லெண்ணருங்காதல்கூவினிதினின்மாறிமாறிக்
கண்ணினுற்பருகியின்பக்களிப்பெனுங்கடலுளாழ்ந்தார்.

இ-ள். உள் - உள்ளே, நிறைவுடைய - நிறைவினையுடைய, காமம் - ஆசையானது, உருவெடுத்தென்ன - ஒருவடிவு கொண்டதுபோல, நின்ற அண்ணலும் - நின்ற நளனும், அணங்கன்னும் - தமயந்தியும், அழகெனும் - அழகென்று சொல்லும், இனியதேறல் - இனிப்பையுடையதேனை, எண்ணரும் - எண்ணுதற்கரிய, காதல்கூர் - ஆசைமிக, இனிதினின் - இளமையினாலே, மாறிமாறி - ஒருவர்க்கொருவரடிக்கடி மாறிக்கொண்டு, கண்ணினால் - நேத்திர இந்திரியத்தினால், பருகி - உண்டு, இன்பம் - இன்பத்தைத்தரும், களிப்பெனும் - களிப்பென்கிற, கடலுள் - கடலின்கண், ஆழ்ந்தார் - அழுந்தினார்கள் எ-று.

மாறிமாறியென்றது ஒத்த காமமுள்ளவர் நாணத்தால் ஒருவர் நோக்குங்காலத் தொருவர் நோக்காமையா லென்க. அது "யானெனக்குங்காலை நிலனெனக்கு நோக்காக்காற், றானெனக்கிமெல்ல நகும்" இதனாலறிக. காமமுருவெடுத் தென்னவெனலால் தற்குறிப்பணி. இன்பக்கடலென்றது உருவகவணி. இவை யிரண்டுஞ் சேர்தலாற் சேர்வையணி. 104

இருதடம்புயமுமந்தாரகலமுமியைந்ததாலென்
றெரிவருமாவியென்றூடெரிவையுமண்ணலானு
முருகவிழ்குழலும்வெய்யமுகிழ்முலைத்துணைபுந்தாங்கு
முருவுடைத்தாங்கொலென்றனுயிரெனவியந்துநின்றான்.

இ-ள். தெரிவையும் - தமயந்தியும், என் - என்னுடைய, தெரிவரும் - தெரிதற்கரிய, ஆவி - உயிரானது, இருதடம்புயமும் - பருத்த தோள்களிரண்டையும், அம் - அழகிய, தார் - மாலையணிந்த, அகலமும் - மார்பையும், இயைந்தது என்றான் - பொருந்திய தென்றான், அண்ணல் தானும் - நளனும், என்றனுயிர் - என்னுடைய உயிரானது, முருகவிழ் - தேனொழுகப் பெற்ற, குழலும் - கூந்தலையும், வெய்ய - வெவ்விய, முகிழ் - அரும்பையொத்த, முலைத்துணையும் - இரண்டு தனங்களையும், தாங்கும் - சுமக்கப் பெற்ற, உருவுடைத்தாம் என - உருவுடையதாமென்று, வியந்து - அதிசயித்து, நின்றான் - நின்றனன் எ-று.

முன்பு நளன் புயங்களைக்கண்ட தமயந்திக்கு இப்பொழுது அப்புயங்களுடன் மார்புந்தோன்றியது. அப்பொழுது தமயந்தி தனங்களைக்கண்ட நளனுக்கு இப்பொழுது அத்தனங்களுடன் கூந்தலுந் தோன்றிய தென்க. நளனிடத்து, "இருதடம் புயமு மந்தா ரகலமு மியைந் தாவி" யெனக் குறித்தலாலும், தமயந்தியினிடத்துக் "குழலும் முலைத்துணையுந் தாங்குமுயி" ரெனக் குறித்தலாலும், தற்குறிப்பணிகள். 105

மாதுபால்விழைவினேகுமனத்தினையல்லசெய்த
றாதினுக்கியல்பன்றென்னுத்தோன்றல்பேரறிவின்மீட்பக்
காதலினவன்பாற்செல்லுங்கருத்தினைக்கமலத்தண்பூம்
போதுறைமடந்தையன்னட்பொருந்துநாண்டடுத்ததன்றே.

இ-ள். அல்லசெய்தல் – தூதுக்குரிய அல்லவைகளைச் செய்தல். தூதினுக்கு – தூதுக்கு, இயல்பு அன்று என்னு - இயற்கையன்றென்று, தோன்றல் – நளமகாராசனனவன், மாதுபால் – தமயந்தியினிடத்து, விழையின் - ஆசையினாலே, ஏகும் - செல்லுகின்ற, மனத்தினை – மனத்தை, பேரறிவின் - பேரறிவினால், மீட்ப – மீட்க, கமலம் தண்பூ போதுறை - குளிர்ச்சி பொருந்திய தாமரைமலரி லிருக்கின்ற, மடந்தை அன்னள் - இலக்குமியை யொத்த தமயந்தியை, பொருந்தும் நாண் - பொருந்திய நாணமானது, காதலின் – ஆசையினால், அவன்பால் செல்லுங் கருத்தினை – அந்நளமகாராசனிடத்திற்சென்ற மனத்தை, தடுத்தது – தடுத்துவிட்டது எ-று.

அல்லல்செய்த வென்பதற்கு அல்லவை தேய வென்பதற்குப்போல் எதிர்மறைப் பொருளாகக் கொள்க. ஆடவர்க்குப் பேரறிவுபோலும் மாதர்க்கு நாணம்போலும் தருணத்தில் நன்மை விளைப்பதொன்றில்லை யென்பது கருத்து. 106

நாணமீதூரநின்றநகைமதிமுகத்தினுளும்
பூணினுக்கழகுசெய்யும்புனர்முலைத்தோழிமாரு
நீணகர்க்கடிகொள்வாயினீங்கிவந்தருகுநின்றுன்
சேணுறையமரன்கொல்லோதிருந்தெழிலியக்கனேயோ.

இதுமுதல் ஆறுபாட்டுக்களால் நளனைக்கண்ட தமயந்தியும் தோழிமார்களுஞ் சிந்தித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். நாணம் – நாணமானது, மீதூரநின்ற - அதிகரிக்கவிருந்த, நகை-ஒளிபொருந்திய, மதி – திங்கள்போன்ற, முகத்தினுளும் – முகத்தையுடைய தமயந்தியும், பூணினுக்கு – ஆபரணங்களுக்கு, அழகுசெய்யும் - அழகைச் செய்கின்ற, புனர் – நெருங்கிய, முலை – தனங்களையுடைய, தோழிமாரும் - தோழிகளும், நீள் – நீண்ட, நகர் – இந்நகரத்தினது, கடிகொள் – காவலைக் கொண்ட, வாயில் – வாயிலை, நீங்கிவந்து – கடந்துவந்து, அருகுநின்றுன் - நம்மருகே நின்றவன், சேண் உறை – ஆகாயத்திலிருக்கின்ற, அமரன்கொல்லோ – தேவனோ, திருந்து – திருத்தப்பெற்ற, எழில் – அழகையுடைய, இயக்கனேயோ – இயக்கனோ எ-று.

இப்பாட்டில் மதிமுகத்தினுளும் தோழிமாருமென்னும் எழுவாய்கள் யாவனோ வென்னும் பாட்டில் உறைக்கலுற்றார் என்னும் பயனிலைகொண்டு முடிந்தன. 107

கடிகமழ்கமலச்செல்விகண்கவர்வனப்புவாய்ந்த
வடிவுறுகுவவுத்திண்டோள்வண்டுழாய்மாயன்கொல்லோ

மிடல்கெழுவெள்ளிவெற்பின்விஞ்சையர்க்கிறைவன்கொல்லோ
முடியுடையமரர்போற்றுமொய்கழற்குமரன்கொல்லோ.

இ-ள். கடி – வாசனை, கமழ் – கமழ்கின்ற, கமலச் செல்வி – தாமரை மலரிலிருக்கின்ற, திருமாதினுடைய, கண் – கண்களை, கவர் – கவர்கின்ற, வனப்பு வாய்ந்த – அழகுபெற்ற, வடிவுறு – வடிவின்மிக்க, குவவு – திரட்சி பொருந்திய, திண்தோள் – திண்ணிய புயங்களையுடைய, வண் – அழகிய, திழாய் – துளபமாலையணிந்த, மாயன்கொல்லோ – திருமாலோ, மிடல் கெழு – வலிமைபொருந்திய, வெள்ளிவெற்பின் – வெள்ளிமலைக்கணுற்ற, விஞ்சையற்கு இறைவன்கொல்லோ – விஞ்சையர்க் கரசனோ, முடியுடை-மகுடத்தையுடைய, அமரர் போற்றும் – தேவர்களால் வணங்கப்பட்ட, மொய் – நெருங்கிய, கழல் – வீரக்கழலையணிந்த, குமரன் கொல்லோ – குமாரக்கடவுளோ எ-று.

பகைவரைத் தூதுத்தல், மாதரால் விரும்பப்படல், சராசரங்களைப் பாதுகாத்தல் வீரமிகுதி முதலிய குணத்தால் மாயனெனவென்றும், இசைநூல் வல்லமை, இங்கிதஜ்ஞர்மை, இறுமாப்புடைமை முதலிய குணத்தால் விஞ்சையர்க் கிறைவனே வென்றும், அபயந்தருதல், அசுரரைமாட்டல், அருளுடைமை, அநங்கனும் விரும்புங் கட்டழகுடைமை, ஆற்றலுடைமை, கட்டிளமையுடைமை முதலிய குணத்தாற் குமரனெனவென்றும் சொல்லினர். சூரன்முதலிய அசுரரைக்கொன்று இந்திரன் முதலிய தேவரைக்காத்தலால் அமரர் போற்றுங்குமர னெனப்பட்டது. 108

விரும்பியவனைத்துநல்குமேதகுதவத்தின்மாய்ந்தோர்
திருந்தெழில்யாக்கைபெற்றுத்திகழ்வரென்றுரைக்குநீரார்
கரும்புறழ்திளவிபாகன்கட்டழற்பாய்ந்துதுஞ்சி
யரும்பெறல்யாக்கைபெற்றகாமனேனறிகிலேமால்.

இ-ள். விரும்பிய அனைத்தும் – இச்சித்தவைகளெல்லாம், நல்கும்-தருகின்ற, மேதகு – மேம்பட்ட, தவத்தின் – தவத்தினால், மாய்ந்தோர்-இறந்தவர்கள், திருந்து – திருத்தமாகிய, எழில் – அழகுபொருந்திய, யாக்கைபெற்று – தேகத்தைப்பெற்று, திகழ்வர் என்று – விளங்குவர்களென்று, உரைக்கும் நீரால் – சொல்லுகின்றதன்மையால், கரும்புறழ் – கரும்பின் இரசத்தையொத்த, திளவி – சொல்லையுடைய உமாதேவியை, பாகன் – தனதிடப்பாகத்தில் வைத்த கடவுளது, கண் – நெற்றிக்கண்ணினுடைய, தழல்-நெருப்பிலே, பாய்ந்து – புகுந்து, துஞ்சி – இறந்து, அரும்பெறல் – பெறுதற்கரிய, யாக்கை பெற்ற – (அழகுள்ள) தேகத்தைப்பெற்ற, காமனை-மன்மதனை, அறிகிலேம் – (யாம்) அறியேம் எ-று.

முற்பிறப்பிலே ஒன்றை விரும்பி அதன்பொருட்டு அக்கினிப்பிரவேசம், வரைபாய்தல், புண்ணிய தீர்த்தங்களில் விழுதல் முதலியவற்றாலே தீத்தவர்கள் மறுபிறப்பிலே அதனைப் பெறுவர்களென்பது "முற்பவமுச்சியினின்று மிழந்துயிர் முற்றுற்றோர், பிற்பவமெண்ணிய வாறுபெறத்

தரு பேரோங்கல்'' இதனுற்காண்க. இங்ஙனம் நளனை உவமித்தற்கரிய வடிவம்வேண்டி ஈசுரன் விழிநெருப்பிலுடலை நீத்து இவ்வடிவைப்பெற்ற மன்மதனெனக் கருதினர்கள். நாணமீதூர வென்னும் பாட்டுமுதல் மூன்று பாட்டாலும் நளனை அமரனை, இயக்கனை, மாயனை, விஞ்சையர்க் கிறைவனை, குமரனை காமனெனவென ஐயுறலால் ஐயவணி. 109

மங்கையர்நிறையுநாணுங்கவர்ந்திடவனப்புவாய்ந்த
லிங்கிவன்றன்னைஞாலமின்புறப்படைத்திலானேற்
றிங்களங்கண்ணிவேய்ந்தசெஞ்சடைக்கடவுளெங்ஙன்
பைங்கழைமதனைக்கொன்றபடுபழிதீருமாறே.

இ-ள். மங்கையர் – மாதருடைய, நிறையும் – கற்பையும், நாணும்-நாணையும், கவர்ந்திட – கொள்ளையிடத்தக்க, வனப்பு வாய்ந்த – அழகு பெற்ற, இங்கு – இவ்விடத்து, இவன் தன்னை – இப்புருடனை, ஞாலம்-உலகம், இன்புற – இன்பத்தையடைய, படைத்திலானேல் – சிருட்டியாதிருப்பானேல், திங்களங்கண்ணி வேய்ந்த – மூன்றும் பிறையைத் தரித்த, செம்சடைக் கடவுள் – சிவந்த சடாபாரத்தையுடைய பரமசிவன், பைங்கழை – பசிய கருப்புவில்லேந்திய, மதனைக்கொன்ற – மன்மதனைக் கொன்ற, படுபழி – கொலைப்பழி, தீருமாறு – தீரும்விதம், எங்ஙன் – எப்படி எ-று. உலகமென்பது – அதிலிருக்கும் உயிருக்காதலால் ஆகுபெயர்.

ஈசரும் இவனது படைப்பால் காமனை எரித்த பழியைத்தீர்ந்தாரெனலால் அக்காமனிலு மிக்க அழகுள்ளவ னென்பது பெறப்பட்டது. நல்லோரொருவருக்குந் தீங்கு செய்யார், ஒருகாரணம் பற்றிச் செய்யினும் அதனினுமிக்க நன்மைசெய்து அத்தீங்கை யொழிப்பரென்பது கருத்து. பழிதீரா னென்பது இவன்றனை படைத்திலானே லென யூசித்தலால் உய்த்துணர்வணி. 110

மாயிருஞாலத்தானேன்மண்ணினிற்பொலிந்த தில்லை
மீயுயர்விசும்புளானேல்விசும்பினிற்சிறந்ததுண்டோ
பாயொளிப்பரிதிவேலான்பாதலத்துள்ளானுயின்
மேயகீழுலகேயெல்லாவுலகினுமேலதாமால்.

இ-ள். பாய் – தாவுகின்ற, ஒளி – காந்தியையுடைய, பரிதி – சூரியனை யொத்த, வேலான் – வேற்படையையுடைய இப்புருடன், மா – மகத்தாகி, இரு – பெரிய, ஞாலத்தானேல் – பூவுலகிலிருப்பவனுகில், மண்ணினில்-அப்பூவுலகைவிட, பொலிந்தது – பிரகாசமுள்ளதாகிய உலகம், இல்லை-இல்லை, மீ – மேலாக, உயர் – உயர்ந்த, விசும்புளானேல் – தெய்வலோகத்தானுகில், விசும்பினில் – அத்தெய்வலோகத்தைக் காட்டிலும், சிறந்தது – சிறப்புடையதாகிய வுலகம், உண்டோ – இல்லை, பாதலத்துள்ளான் ஆயின் – கீழுலகத்திருப்பவனுகில், மேய – பொருந்திய, கீழுகே – பாதாளவுலகமே, எல்லா உலகினும் – உலகங்களனைத்தினுக்கும், மேலதாம் – மேற்பட்டதாகும் எ-று.

இவனிருக்கு மூலகம் எதுவோ அதுவே, எவ்வுலகினுஞ் சிறந்ததென் பது கருத்து. இதுவும் அவ்வணி. 111

யாவனேவிவனென்றெண்ணியிருநிலத்திலங்குபைம்பொற்
சேவடிபொருந்துநீராற்றேவரினெருவனல்லன்
றூவியஞ்சிறையவன்னஞ்சொல்லியவனப்புவாய்ந்த
காவலனுங்கொலென்னக்கருதியொன்றுரைக்கலுற்றார்.

இ-ள். யாவனே இவனென்று – இவனெவனேவென்று, எண்ணி - சிந் தித்து, இருநிலத்து – பெரிய பூமியிடத்து, இலங்கு – பிரகாசிக்கின்ற, பைம் பொன் – பசிய பொற்கழலணிந்த, சேவடி - சிவந்த பாதங்கள், பொருந்து நீரால் - பொருந்துகின்ற தன்மையால், தேவரின் – தேவர்கூட்டத்துள், ஒருவன் அல்லன் – ஒருத்தனல்லனுகும், தூவி – தூவியென்னும் பெயரை யுடைய, அம் – அழகிய, சிறை – சிறகினையுடைய, அன்னம் – அன்னப்புள் ளானது, சொல்லிய – முன்பு சொல்லிய, வனப்புவாய்ந்த - அழகுபெற்ற, காவலன் ஆங்கொல் என்ன – அரசனுகுமென்று, கருதி – நினைத்து, ஒன்று- ஒருவார்த்தை, உரைக்கலுற்றார் - (தோழிகள்) சொல்லத் தொடங்கினர்கள்.

பூமியிற் பாதம் பொருந்தலாலே தேவரினெருவனல்லனென்று நிச்ச யித்த, மாதர்க்கு, நீழுலகத்தானேவென்னும் ஐய நிகழவில்லை, அவ்வன் னஞ் சொல்லிய அழகுள்ள நளமகாராசனெனக் குறித்தலாலென்க. 112

கலைநிலாத்தவழுமாடக்கடிநகர்கடந்துபோந்த
சிலைவலாய்நீயிங்கெய்தச்சிறப்புடைப்புவனந்தம்மிற்
பொலிவிழந்திருந்ததெந்தப்புவனநீபொருளதாக
நலனுறுபுனிதமாயதெப்பெயர்நவிற்றுகென்றார்.

இ-ள். கலைநிலா – கலைகணிறைந்த சந்திரன், தவழும் – தவழ்கின்ற, மாடம் – உப்பரிகைகளுடைய, கடிநகர் - காவலைப்பெற்ற நகரத்தை, கடந்து போந்த – கடந்துவந்த, சிலைவலாய் – வில்லெழிலில் வல்லவனே, நீ இங்கு எய்த – நீ யிங்கேவா (அதனுலே) சிறப்புடை - சிறப்பினையுடைய, புவனந் தம்மில் – தேசங்களுக்குள்ளே, பொலிவுஇழந்து – அழகிழந்து, இருந்தது- இருக்கப்பெற்றது, எந்தப்புவனம் – எந்தத்தேசம், நீ பொருளதாக - நின் னைப் பொருளதாகவுடைய, நலனுறு – நன்மைபொருந்திய, புனிதமாய து- பரிசுத்தமான து, எப்பெயர் - எந்தப்பெயர், நவிற்றுக என்றார் - (தோழிகள்) சொல்லென்றார்கள் எ-று.

உன்பேர் யாது? உன்தேசம் யாதென்னும் விஞக்கள் நீ போதலாற் பொலிவிழந்திருந்த தெப்புவனமெனலாலும் நீ பொருளாக நலனுறு புனித மாய தெப்பெயரெனலாலும் பெறப்படுதலாற் பிறிதினவிற்சியணிகள். இவ் விரண்டுஞ் சேர்தலாற் சேர்வையணி. 113

கானமர்கரியகூந்தற்கன்னியரிவ்வாறேறுதத்
தேனிமிர்தெரியல்வேய்ந்துசிலைத்தழும்பிருந்தோளான்

பானலங்கடந்தநீஞ்சொற்பைந்தொடிவதுவைவேட்டு
வானவர்விடுத்ததூதன்யானெனவழங்கலுற்றான்.

இ-ள். கான்அமர் – வாசனைபொருந்திய, கரியகூந்தல் – கறுத்த குழலையுடைய, கன்னியர் – மாதர்கள், இவ்வாறுஓத – இப்படிச்சொல்ல, தேன்வண்டுகள், இமிர் – ஒலிக்கின்ற, தெரியல் – மாலையை, வேய்ந்த – தரித்த, சிலைத்தழும்பு – விற்றழும்பு, இருந்த – தங்கிய, தோளான் – தோள்களையுடைய நளன், பால் – பாலினது, நலங்கடந்த – நலத்தைச் செயித்த, நீம் சொல் – இனிய சொல்லையுடைய, பைந்தொடி – தமயந்தியே, வதுவை வேட்டு – நின் விவாகத்தை யிச்சித்து, வானவர் – தேவர்களால், விடுத்த – விடுக்கப்பட்ட, தூதன் யானென – தூதுவன்யானென்று, வழங்கலுற்றான் – சொல்லத்தொடங்கினன் எ-று.

ஊர் பேர் முதலியவற்றை யுரைக்கில் முன்னரே விழைந்த தமயந்தியால் நந்நூதிற்கு வழுவுண்டா மென்றெண்ணி அவையுரையாது தனது தொழிற்குரிய பெயரால் கூறினனென்க. 114

ஐந்தருநீழல்வேந்தனர்கலிக்கிறைவன்வெய்ய
செந்தழற்கடவுடன்பாற்றிசையுறைதருமனின்னோர்
பைந்தொடிநின்னைவேட்டுப்படைமதன்பகழிபாயச்
சிந்தனைபிறிதாய்மாழ்கித்தெருமரலெய்துகின்றார்.

இதுமுதல் ஆறுபாட்டுக்களால் நளன்பேசுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஐந்தருநீழல் வேந்தன் – இந்திரன், ஆர்கலிக் கிறைவன் – வருணன், வெய்ய – கொடிய, செந்தழற்கடவுள் – அக்கினிபகவான், தென்பால் திசையுறை – தெற்குத்திக்கிலிருக்கின்ற, தருமன் – யமன், இன்னோர் – ஆகிய இந்நால்வரும், பைந்தொடி – தமயந்தி! நின்னைவேட்டு – உன்மேல் விருப்புற்று, படை – சேனைகளையுடைய, மதன் பகழி – மன்மதன் பாணங்கள், பாய – தங்கண்மேற்றைக்க, (அதனால்) சிந்தனை – மனம், பிறிதாய் – வேறுபட்டு, மாழ்கி – மயங்கி, தெருமரல் – சுழற்சியை, எய்துகின்றார் – அடைகின்றார்கள் எ-று. 115

இங்கிவர்தம்மையாசைக்கிறைவரென்றறைவதெல்லாந்
தங்கியதிசையின்பேராற்சாற்றியமாற்றமன்றே
கொங்கவிழ்குழையிற்றூவிக்குமிழ்மிசைமறியும்வேற்க
ணங்கலுழ்மேனியாய்நின்னுசையாய்வந்ததாமால்.

இ-ள். இங்கு – இவ்விடத்தில், இவர்தம்மை – இந்நால்வரையும், ஆசைக்கிறைவரென்று – ஆசைக்காரரென்று, அறைவதெல்லாம் – சொல்லுவதனைத்தும், தங்கிய – இவர்களிருக்கிற, திசையின்பேரால் – திக்கினது பெயரினாலே, சாற்றிய – சொல்லப்பட்ட, மாற்றமன்று – சொல்லன்றும், கொங்கு – வாசனை, அவிழ் – விரிகின்ற, குழையில் – காதணியில், தூவி-

பாய்ந்த, குமிழ் – குமிழம் பூவினது, மிசை – மேற்பக்கத்தில், மறியும் – மீளுகின்ற, வேற்கண் – வேல்போன்ற கண்களையுடைய, அம் – அழகானது, கலுழ் – ஒழுகுகின்ற, மேனியாய் – வடிவையுடைய தமயந்தியே! நின் – உன்மேல்வைத்த, ஆசையால் – ஆசையினால், வந்ததாம் – வந்ததாகும் எ-று.

ஆசையென்பது – திசைக்கும், அன்புக்கும்பெயர். அது "ஆசையே திசைபொன் னன்பாம்" என்பதாற் காண்க. திசைக்கிறைமையால் வந்த ஆசைக்கிறைவனென்னும் பெயர்க்கு அன்பினால் வந்ததெனப்பொருள் கூறுதலால் பிரிகிலை நவிற்சியணி. 116

பற்றியகாமத்தீயாற்பைம்பொனுட்டமரர்க்கெல்லாங்
கொற்றவன்வருந்தாவண்ணங்கொய்துகொய்தணையிற்சேர்த்தே
புற்றவர்வறுமைதீர்க்குமுயர்நினைத்தருக்களோந்து
நற்றளிரின்மையாகநல்குரவடைந்தமாதோ.

இதனால் இந்திரனது வருத்தஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். பை – பசிய, பொன்னுடு – பொன்னுலகத்திருக்கின்ற, அமரர்க்கெல்லாம் – தேவரனைவர்க்கும், கொற்றவன் – அரசனுகிய இந்திரன், பற்றிய – தன்னைப்பற்றிய, காமத்தீயால் – காமாக்கினியால், வருந்தாவண்ணம் – வருத்தப்படாதவிதம், உற்றவர் – தம்மை யடைந்தவர்களுடைய, வறுமை – இல்லாமையை, தீர்க்கும் – நீக்கும், உயர் – உயர்ந்த, நினை – நினைவுகளையுடைய, தருக்களோந்தும் – பஞ்சதருக்களும், கொய்து கொய்து – பறித்துப்பறித்து, அணையிற்சேர்த்த – படுக்கு மெத்தையிற்சேர்த்து, (அதனால்) நல் – நல்ல, தளிர் – தளிர்களை, இன்மையாகி – இல்லாமையாய், நல்குரவு – வறுமையை, அடைந்த – சேர்ந்தன எ-று.

இந்திரன் உன்னிடத்துற்ற ஆசையினுலே அளவற்ற தாபத்தை யடைந்தானென்பது கருத்து. கற்பகத்தருவுக்கு இதனால் நல்குரவில்லாதிருந்தும் உளதாகக்கூறலின் உயர்வு நவிற்சியணி. 117

கடிமலர்க்கூந்தனின்மேற்காதன்மீதூரகின்ற
வடுதொழிற்கூற்றமஞ்சவடர்கின்றுணங்கன்வெய்ய
வடவையோடிகலுமுந்நீர்க்கிறையையும்வருத்தியாவுஞ்
சுடுதழற்கடவுண்மீதுஞ்சுட்டதுகாமத்தீயே.

இதனால் மற்றைமூவர் வருத்தமுஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கடி – வாசனைபொருந்திய, மலர் – மலரையணிந்த, கூந்தல் – அளகபாரத்தையுடைய தமயந்தி! நின்மேல் – உன்னிடத்தில், காதல் – ஆசை, மீதூரகின்ற – அதிகரிக்கவிருந்த, அடுதொழில் – கொல்லுந்தொழிலையுடைய, கூற்றம் – யமனும், அஞ்ச – பயங்கொள்ள, அனங்கன் – மன்மதனனவன், அடர்கின்றுன் – நெருங்குகின்றுன், வெய்ய – கொடிய, வடவையோடு – வடவைத்தீயுடனே, இகலும் – பகைகொள்ளும், முந்நீர்க்கிறையையும் – கடற்கரசனுகிய வருணனையும், வருத்தி – வருத்தப்படுத்தி,

யாவையும் — எவற்றையும், சுடு - சுடுகின்ற, தழற்கடவுண்மீதும் - அக்கினி பகவான்மேலும், காமத்தீ — காமாக்கினி, சுட்டது — சுட்டது எ-று.

கொல்லுந் தொழிலையுடைய கூற்றையும் அஞ்சச்செய்துவடவைத்தீயையும் அடக்குங் கடலரசனையும் வருத்தி எல்லாவற்றையுஞ் சுடுகின்ற நீக்கடவுளையுஞ் சுடுதலாற் காமத்தீயை ஒருவராலும் வெல்லக் கூடாதென்றதாயிற்று. "ஊருளெழுந்த வருகெழு செந்தீக்கு, நீருட்குளித்தமுயலாகு-நீருட், குளிப்பினுங்காமஞ்சுடுமே குன்றேறி, யொளிப்பினுங்காமஞ்சுடும்" எனவும், "உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற் - கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத் — தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினுற் — கள்ளினுங் கொடியது காமத்தீயே" எனவும் வருவனவற்றுல் தூமத்தீயினுங் காமத்தீ கொடிதென்ப துணர்க. 118

முறுக்கிதழணங்கனுய்கின் முகிழ்முலேவேட்டனுன்றே
செருக்கிளரணங்கன் வாளிச்செழுமலர்வருத்தவாடி
யிருத்தலாற்பழிச்சுகின்றேரேடவிழ்நறியபோதா
லருச்சனைபுரியுந்தோறுமஞ்சுவரமரர்மாதோ.

இ-ள். முருக்கு — முருக்கலரையொத்த, இதழ் - அதரத்தையுடைய, அணங்கனுய் — தமயந்தியே, நின் — உன்னுடைய, முகிழ் — அரும்பையொத்த, முலே — தனங்களே, வேட்டனுன்றே — விரும்பியபொழுதே, செருப்போர்த்தொழிலில், கிளர் — கிளர்ச்சியையுடைய, அணங்கன் — மன்மதனுடைய, வாளி — பாணங்களாகிய, செழுமலர் — செழுமையுள்ளமலர்கள், வருத்த - வருத்தஞ்செய்ய, வாடி — அவைகளால் வாட்டமுற்று, இருத்தலால் - இருக்கையினுல், பழிச்சுகின்றேர் — பரவுகின்றவர்கள், ஏடவிழ் — இதழ்கள்விரிந்த, நறியபோதால் — நல்லமணமுள்ள மலரால், அருச்சனைபுரியுந் தோறும் — பூசைசெய்யுந்தோறும், அமரர் — (அருகிலிருக்குந்) தேவர்கள், அஞ்சுவர் — பயங்கொள்ளுவார்கள் எ-று.

இந்திரன் தமயந்தியை விரும்பிய நாள்முதலாக இன்றளவும் மன்மத பாணங்கள் வருத்தஞ்செய்ய வாடியிருத்தலால் காணவருபவர் முறைமைப்படி நறியமலர்களைக் கொண்டு அவனே அருச்சிக்குந்தோறுந் தேவர்கள் இவையும் அப்பாணங்களென் றஞ்சுதலாலே அஞ்சுவாமரரென்றுர். 119

இன்னணந்தேவர்மாழாந்திருநிலவரைப்பிற்போந்துன்
பொன்னவிர்திதலையார்ந்தபுணர்முலேப்போகம்வேட்ப
முன்னமெத்தவஞ்செய்தாய்கொலியைவதேமுறைமையென்றுன்
கன்னல்வில்லொளித்துநின்றகாமனேயனையநீரான்.

இ-ள். இன்னணம் — இவ்விதம், தேவர் — தேவர்கள், மாழாந்து — மயங்கி, இரு — பெரிய, நிலவரைப்பில் போந்து — பூவுலகில்வந்து, உன் — உன்னுடைய, பொன் — பொன்போலும், அவிர் — விளங்குகின்ற, திதலையார்ந்த - தேமலர் நிறையப்பெற்ற, புணர் — ஒன்றேடொன்று நெருங்கிய, முலே-

தனங்களினுடைய, போகம் - போகத்தை, வேட்ப – விரும்ப, முன்னம்-முற் பிறப்பில், எத்தவஞ் செய்தாய்கொல் - என்னதவஞ் செய்தனையோ, இயை வதே – சம்மதிப்பதுவே, முறைமையென்றான் - நிரமமென்றான், கன்னல் வில் – கருப்புவில்லை, ஒளித்துநின்ற – மறைத்துவைத்து நின்ற, காமனே யனைய-மன்மதனையேயொத்த, சீரான்-தன்மையையுடைய நளமகாராசன்.

தேவரிற்சிறந்த இந்திரன் முதலியோரைத் தலைவராகப்பெறுவதுமுற் பிறப்பிலே அருந்தவஞ் செய்தவர்க்கன்றி மற்றையோர்க்கு எளிதன் றென் பதுகருத்து. 120

என்றிவன்மொழிதலோடுமினையனேநளனென்றெண்ணி
மன்றலங்குழலாணைவருத்தமோடெருத்தங்கோட்டி
நின்றனண்மருங்குசூழ்ந்ததோழியர்நிடதங்காக்கும்
வென்றிகொள்சுடர்வேல்வேந்தற்கெதிர்மொழிவிளம்பலுற்றார்.

இ-ள். என்று – இப்படியென்று, இவன்-இந்தநளன், மொழிதலோடும்-சொல்லியவளவில், இனையனே - இவனே, நளனென்று எண்ணி – நளனென்று நினைத்து, மன்றலம் குழலாள் – தமயந்தி, நாணி – நாணமடைந்து, வருத்தமோடு – வருத்தத்துடனே, எருத்தம்கோட்டி - தலையை வளைத்துக் கொண்டு, நின்றனள் – நின்றாள், மருங்கு – பக்கத்தில், சூழ்ந்த – சுற்றி யிருக்கின்ற, தோழியர் – தோழிகள், நிடதம் காக்கும் - நிடத தேசத்தைப் புரக்கின்ற, வென்றிகொள் – வெற்றியைக்கொண்ட, சுடர் – கிரணங்களை யுடைய, வேல் – வேற்படையையேந்திய, வேந்தனுக்கு – நளமகாராசனுக்கு, எதிர்மொழி – எதிருத்தரத்தை, விளம்பலுற்றார் – சொல்லத் தொடங்கினர்கள் எ-று.

நளன் இவனேயென்று நிச்சயித்த தமயந்திக்கு இனி நமக்குத் தலைவனுக் வருபவனென்னுந் துணிவுளதே நாணமும், நாம் இவனை விரும்பியிருக்க இவன் தேவர் பொருட்டுத் தூது வந்தானென்பதால் வருத்தமும், உண்டாயினவாற்றால் வாளா விருந்தனள். உயிர்த்தோழிகள் அவள் கருத்து முழுவதும் அறிந்தவராதலால் அவ்விறைக்கு இறைகொடுக்கத் தொடங்கினரென்க. 121

ஆற்றல்சானளனேயன்றியாருயிர்பிறிதின்றென்னும்
வேற்றடங்கண்ணினுடன்மெய்பதைத்தாவிசோரச்
சாற்றியமாற்றந்தன்னுற்றழலுமிழ்தறுகட்பேழ்வாய்க்
கூற்றுவன்றானென்றுகூறியதியற்கையாமே.

இதுமுதலிரண்டு பாடல் நளனுக்குத் தூதியர் விடைகொடுக்கின்றனர்.

இ-ள். ஆற்றல்சால் – வலிமைமிக்க, நளனேயன்றி – நளமகாராசனேயல்லாமல், ஆருயிர் – நிறைந்த ஆவியானது, பிறிதின்றென்னும் - வேறொன்றில்லையென்கிற, வேல் தடங்கண்ணினுள் தன் – தமயந்தியினுடைய,

மெய் பதைத்த – தேக நடுங்கி, ஆவி – உயிரானது, சோர – சோர்வை யடைய, சாற்றிய – நீ சொல்லிய, மாற்றந்தன்னுல் – சொல்லினுல், தழலு மிழ் – நெருப்பையுமிழ்கின்ற, தறுகண் – கொடிய கண்களையும், பேழ்வாய்- பெருவாயையுமுடைய, கூற்றுவன் தூதனென்று – யமதூதனென்று, கூறி யது – (முன்) சொல்லியது, இயற்கையாம் – (உனக்குத்) தகுதியாகும் எ-று.

நளனையே உயிரென்று நிச்சயித்திருக்கும் தமயந்தியது அபிப்பிராயத் திற்கு விரோதமாகிய செய்தியைச் சொல்லி அவளுயிர் பிரிதற்கு நீ யேது வாகையால் முன்பு யமதூதனென்று சொல்லியது உனக்குத் தகுமென்றூர் கள். தழலுமிழ் தறுகட் பேழ்வாயென்னும் அடைமொழிகள் கூற்றுவனது கொடுமையை விளக்கிநின்றன. கூற்றுவன் றூதாகிவந்த நளனைக் கூற்று வன் றூதனென விதித்தலால் விதியணி. 122

வையகமொருகோலோச்சிவான்புகழ்நிடதங்காக்கு
மையனைமணப்பதன்றியாமதர்நெடுங்கட்செவ்வாய்த்
தையல்வேறொருவர்நாமஞ்சாற்றினுமாற்றுளாகி
வெய்யசெந்தழலின்மூழ்கிவிளிவதற்கையமின்றே.

இ-ள். வையகம் – பூவுலகத்தை, ஒருகோல் ஓச்சி – தனிச்செங்கோல் செலுத்தி, வான்புகழ் – மிகுந்த புகழையுடைய, நிடதங்காக்கும் – நிடத தேசத்தைப் புரக்கும், ஐயனை – நளமகாராசனை, மணப்பதன்றி – விவாகஞ் செய்து கொள்வதல்லாமல், அரி – செவ்வரிபரந்த, மதர் – களிப்பையுடைய, நெடுங்கண் – நெடிய கண்களையும், செம் வாய் – சிவந்த வாயினையுமுடைய, தையல் – தமயந்தியானவள், வேறொருவர் நாமம் – வேறொருவர் பெயரை, சாற்றினும் – சொல்லினுலும், ஆற்றுளாகி – பொறுக்கமாட்டாதவளாய், வெய்ய – கொடிய, செந்தழலில் – நெருப்பினில், மூழ்கி – முழுகி, விளிவதற்கு – இறப்பதற்கு, ஐயமின்று – ஐயமில்லை எ-று.

நளனை மணப்பதற்கு முன்புசெய்த தவம் போதாமையால் இப்படியா யிற்று. இப்பொழுதாவது விதிப்படி தீவளர்த்தி அதில் விழுந்து நினைத் ததை மறுபிறப்பில் முடிப்பாளென்னுங் கருத்துதோன்ற வெய்ய செந்தழ லின் மூழ்கி விளிவதற் கையமின்றென்றூர். 123

என்றவர்மொழியவேந்தனியம்புவானெரியின்வீழ்ந்து
பொன்றில்வெங்கனலிதன்னைப்புணர்த்தாம்புகன்றசெந்தீ
யன்றிவார்புனலின்வீழ்த்துள்ளாருயிர்விடுத்தாளெனுந்
துன்றுசீர்வருணன்றன்னைத்தோய்ந்ததாய்விளியுமன்றே.

இதுமுதல் நாலுபாட்டால் நளன் தமயந்தியை வற்புறுத்திக்கூறல்.

இ-ள். என்று இப்படியென்று, அவர்மொழிய – அந்தத் தோழிகள் சொல்ல, வேந்தன் – நளமகாராசன், இயம்புவான் – சொல்லுவான், எரி யின் வீழ்ந்த பொன்றில் – நெருப்பில் வீழ்ந்திறந்தால், வெங்கனலிதன்னை-

அக்கினிபகவானே, புணர்ந்ததாம் - கூடியதாகும், புகன்ற - (இப்பொழுது) சொல்லிய, செந்தீ அன்றி - அக்கினியல்லாமல், வார் - நெடிய, புனலின் வீழ்ந்து - நீரிலே விழுந்து, உள் - உள்ளே, ஆர் - நிறைந்த, உயிர் விடுத்தாளேனும் - உயிரை விட்டாளாலுலும், தன்று - நெருங்கிய, சீர் - சிறப்பையுடைய, வருணன்தன்னை - கடலரசனை, தோய்ந்ததாய் விளையும் - கலந்ததாகிவிளையும் எ-று.

நெருப்பில் வீழினும் நீரில் வீழினும் தீக்கடவுளையும் கடற்கரசனையும் புணர்ந்ததாக முடிதலாலும், இவள் நினைப்பு இப்பிறப்பில் முற்றுமையாலும் மறுமைப்பயனிம்மையிற் பயவாமையாலும் அவர்களேவந்து பிரார்த்திக்கும்போது இசைந்தால் மிக்க நன்மையுண்டா மென்பது கருத்து. 124

அன்றியுங்கனலிசான்றுயல்லதுவதுவையாற்றற்
கொன்றுமோவருணனெவ்வாதுதகமோடளிக்குந்தூய
மன்றலெவ்வாறுமுற்றும்வானவரருளில்லாமற்
றுன்றுநீர்ப்புவியால்யார்க்குஞ்சூழ்வினைமுடிக்கலாமே.

இ-ள். அன்றியும் - அப்படியல்லாமலும், கனலி சான்று யல்லது - அக்கினிசாட்சியா யல்லாமல், வதுவை ஆற்றற்கு - விவாகஞ் செய்தற்கு, ஒன்றுமோ - பொருந்துமோ, வருணன் - கடலரசன், ஒவ்வாது - சம்மதியாமல், உதகமோடளிக்கும் - நீரோடுகொடுப்பதாகிய, தூய - சுத்தமாகிய, மன்றல் - விவாகம், எவ்வாறு முற்றும் - எவ்வழிமுடியும், (ஆதலால்) வானவர் - தேவர்களுடைய, அருளில்லாமல் - கிருபையில்லாமல், துன்றுநீர் கடஞ்சூழ்ந்த, புவியில் - பூமியிலே, யார்க்கும் - எப்படிப்பட்டவர்களுக்கும், சூழ்வினை - நினைக்கப்பட்ட கருமங்களை, முடிக்கலாமே - முடிக்கக்கூடுமோ.

பூமியிலே எப்படிப்பட்டவர்களுக்கும் தீயும் நீருமன்றி விவாகமுற்றுதலால் அதற்கு அதிதேவதைகளாகிய இவர்கள் அருள்வேண்டு மென்பது கருத்து. 125

வேயினைப்பழித்தமென்றோள்வேற்றடங்கண்ணினுடை
னேயமேபரழகுமாந்தரிருகணினுக்கவற்றே
தீயுமிழ்வைரவெள்வாளேந்தியதேவர்கோமா
னுயிரங்கண்களாலுநோக்குதற்கமைந்ததன்றே.

இ-ள். வேயினை - மூங்கிலை, பழித்த - நிந்தித்த, மெல் - மெல்லிய, தோள் - தோளையுடைய, வேல் தடங்கண்ணினுடன் - தமயந்தியிடத்து, ஏய - பொருந்திய, பேரழகு - மிகுந்த அழகானது, மாந்தர் - மனிதருடைய, இருகணால் - இரண்டு விழிகளால், நோக்கவற்றே - பார்க்கவல்லதோ, தீ உமிழ் - நெருப்பை யுமிழ்கின்ற, வைரம் ஒள்வாள் - வச்சிராயுதத்தை, ஏந்திய - தாங்கிய, தேவர்கோமான் - இந்திரனவன், ஆயிரங்கண்களாலும் - ஆயிரம் விழிகளாலும், நோக்குதற்கு - பார்க்கும்பொருட்டு, அமைந்தது - பொருந்தியதாகும் எ-று.

உயிர்பிறப்பையுடைய தேவர்க்காசனுகிய இந்திரன் ஆயிரங்கண்களா லும் பார்த்தற்கமைந்த தமயந்தினழகை இழிபிறப்புடைய மனிதர் இரண்டு கண்களாற் பார்க்கும்படி விரும்புவதில் அவ்வழகு பயன்படாதென்பதாம்.

வெற்றிறற்களிகல்யானைவிதர்ப்பர்கோனளித்தமாதைத்
தந்துயிரளித்தியென்னத்தனியிருவிசும்புகாக்கு
மிந்திரன்கேட்டபோதிலெண்ணியவனைத்துநல்கு
மைந்தருவழங்கினும்மாலன்றெனமறுக்கலாமோ.

இ-ள். தனி - ஒப்பற்ற, இருவிசும்பு — பெரிய விண்ணுலகத்தை, காக் கும் — காக்கின்ற, இந்திரன் - இந்திரனனவன், வெற்றிறல் - வெவ்விய வலிமைபெற்ற, களி — களிப்பையுடைய, நல் - நல்ல, யானை — யானையை யுடைய, விதர்ப்பர்கோன் - வீமனனவன், அளித்த - பெற்ற, மாதை — தம யந்தியை, தந்து — கொடுத்து, உயிர் - என்னுயிரை, அளித்தியென்ன — காப் பாற்றென்று, கேட்டபோதில் — கேட்டாலப்பொழுது, எண்ணி அனைத் தும் - நினைத்தவைகளையெல்லாம், நல்கும் — தருகின்ற, ஐந்தரு - பஞ்சதருக் கள், வழங்கின் — கொடுத்தால், நும்மால் — உங்களால் — அன்றென — அன் றென்று, மறுக்கலாமோ — மறுக்கக்கூடுமோ எ-று.

இந்திரன் தருமனினப்பை யுடையவதனுதலால் தன்னுயிர்போக வந்த விடத்தும் அவ்வாறு செய்யாது சம்மதிப்படுத்த நினைத்தனனென்க. தனி யிருவிசும்பு காக்குமென்றலால் அவனுடைய ஆணைசொல்லப்பட்டது. பிறர் எண்ணியவினைத்தங் குறிப்பறிந்து கொடுக்கும் பஞ்சதருக்கள் தம தரசனுகிய இந்திரன் வாய்திறந்து கேட்கில் அது எப்படி யில்லையென்று சோல்லும். "எல்லாமொறுக்கு மதுகை யுரனுடையாளன் — பொறுக்கும் பொறையே பொறை" என்றிருத்தலால் இந்திரன் பொறுமையுள்ளவ னென்பது பெறப்பட்டது. ஐந்தரு சிருட்டித்துக்கொடுக்கி னெனப் பொருள்கொள்ளில் உலகத்தில் உவமையற்ற இவள்போற் பலருண்டாயின் இவளுக்குச் சிறப்பில்லையென்பது கருத்து. 127

என்றிவன்புகன்றமாற்றமிருசெவிவெதுப்பக்கேட்டு
நின்றுளம்பதைப்பவாடிநெட்டுயிர்ப்போடுஞ்சோரு
மன்றலங்குழலினுடன்மதர்கெடுங்கயற்கணீலி
குன்றெனப்பணைத்துவீங்குங்குவிமுலைவார்ந்தவன்றே.

இ-ள். என்று — இப்படியென்று, இவன் - இந்நளனனவன், புகன்ற மாற்றம் — சொன்ன சொற்கள், இருசெவி — இரண்டு காதுகளையும், வெது ப்ப - சுடுதலைச்செய்ய, கேட்டு — அவைகளைக் கேள்விப்பட்டு, நின்று-நின்று, உளம் — மனமானது, பதைப்ப - பதைப்படைய, வாடி — வாட்டமுற்று, நெ ட்டுயிர்ப்போடும் - பெருமூச்சுடனே, சோரும்-சோர்வையடைகின்ற, மன் றலங்குழலினுடன் — தமயந்தியினுடைய, மதர் — களிப்பையுடைய, நெடுங் கயற்கண் — நெடியகயல்போன்ற கண்களினின்றும், ஆவி - நீர்த்துளிகள்,

குன்றென – மலைகளென்றுசொல்ல, பணைத்த – பருத்த, வீங்கும் – வீங்கிய, குவிமுலை – குவிந்த தனங்களின்மேல், வார்ந்த – ஒழுகின எ-று.

ஆடவர் ஒரு பொருளைக்குறித்து வினவும்பொழுது அதற்கு விடை கூறத் தடைபடின் அழுவது மாதர்க்குச் சுபாவமாதலால் தமயந்திக்குக்கயற் கணுல்குவிமுலை வார்ந்த வென்றார். மிக்க கல்விப் பயிற்சியுள்ள விவட்குத் தடைபடுவதேனெனில் தான்பேசுவதற்குக் கூடாமையானும், இவன் பேசுவதில் தோழிகட்கும் வருத்த மிகுதலானுமென்க. எப்படிப் பட்டவர்க்கும் மனவருத்தமேலிடில் ஒன்றுந்தோன்று தென்பதாம். 128

மாதுகண் பனிப்பமோக்கித்தோழியர்மாழாந்துள்ளம்
பேதுறவெய்திநின்றபெய்வளைத்துயரமெல்லாந்
தூதுநாம்விடுத்தவன்னஞ்சொல்லியதென்னிற்சற்று
மாதரமின்றியிவ்வாறுரைக்குமோவரசனென்றார்.

இ-ள். மாது – தமயந்தியினுடைய, கண் – கண்கள், பனிப்ப நீரைச் சொரிய, நோக்கி – பார்த்து, தோழியர் – தோழிகள், மாழாந்து – மயங்கி, உள்ளம் – மனமானது, பேதுறவெய்தி – கவலையடைந்து, நின்றபெய்வளை – நிற்கின்ற தமயந்தியினுடைய, துயரமெல்லாம் – துன்பமனைத்தையும், தூது – தூதாக, நாம் விடுத்த – நம்மால் விடுக்கப்பட்ட, அன்னம் – அன்னப்பறவையானது, சொல்லியதென்னில் – சொல்லியிருந்தாலும், சற்றும் – கொஞ்சமும், ஆதரமின்றி – ஆசையில்லாமல், இவ்வாறு – இப்படி, அரசன் – நளனவன், உரைக்குமோவென்றார் – சொல்லுவானே வென்றார்கள் எ-று.

இவன் நளனே அல்லனே நளனேயாயினும் நாம் முன்னர்த் தூதாக விடுத்த அன்னம் நமது குறைகளைச் சொல்ல வில்லையோ சொன்னதாயின் தமயந்தியிடத்துமுன்னரே விழைந்துள்ள அரசன் அவளை எதிரிலேகண்டும் நம்முரைகேட்டும் சிறிதேனும் அன்பின்றி இவ்வாறு கூறுவதுகலின் யாவனேவென விடைகொடுத்தற்கு ஐயுற்றுத் தோழிகள் வருத்தமுற்றிருந்தனரென்க. 129

இன்னணமணங்கனுமாயமும்மிரங்கலைக்கி
மன்னனுமறிவுதீர்ந்துமனஞ்சிறிதயரும்வேலைப்
பொன்னிறப்பவளச்செவ்வாய்ப்பொற்புறுபசியமென்சூட்
டன்னமும்விசும்பினீங்கியவ்வுழியடைந்ததன்றே.

இ-ள். இன்னணம் – இப்படி, அனங்கனுலும்-தமயந்தியும், ஆயமும்-தோழிகளும், இரங்கலைக்கி – வருந்துவதைப் பார்த்து, மன்னனும் – நளனும், அறிவு தீர்ந்து – மதி மயங்கி, மனம் – மனமானது, சிறிது – கொஞ்சம், அயரும்வேலை – தளர்வடையும்போது, பொன்னிறம்-பொன்போன்ற நிறத்தையும், பவளம் – பவளம்போன்ற, செவ்வாய் – சிவந்தவாயையும், பொற்புறு – அழகான் மிகுந்த, பசிய – பசுமைபொருந்திய, மென் சூட்டு-மெல்லிய வுச்சிக்கொண்டையையு முடைய, அன்னமும் – அன்னப்பறவை

யும், விசும்பினீங்கி — ஆகாயத்தினின்று நீங்கி, அவ்வழி — அந்தவிடத்தில், அடைந்தது — வந்தது எ-று.

தூதுவந்த நளனே இன்னனென்று தெளியக் கூடாமையால் தமயந்தியும் தோழிகளும் வருந்தினர்கள்; நளனும் அறவழியிற் செல்பவனுதலால் தன்னுடைய வேட்கையை அவர்கள்முன்பு வெளிப்படுத்தக் கூடாமையால் வருந்தினனென்க. 130

எய்திய தூவியன்னமின்னகைப்பவளச்செவ்வாய்
மையவாங்கரியகூந்தல்வாண்முகமினிதுநோக்கி
நெய்தவழ்புலவுவைவேலினிடர்கொணிவனேயுள்ளத்
தையுறேல்கமலப்போதிலணங்கிற்குமணங்குபோல்வாய்.

இ-ள். எய்திய - அங்குவந்த, தூவி — இறகையுடைய, அன்னம் — அன்னப்பறவை, இன்னகை — இனிய நகையையும், பவளச் செம் வாய் — பவளம் போன்ற செவ்வாயையும், மை - மேகங்கள், அவாம் - விரும்புகின்ற, கரிய கூந்தல் — கறுத்த குழலையுமுடைய தமயந்தியினது, வாள் — ஒளி பொருந்திய, முகம் — திருமுகத்தை, இனிதுநோக்கி - இனிதாகப்பார்த்து, கமலப் போதிலணங்கிற்கும் — தாமரைமலரிலிருக்கும் திருமாதுக்கும், அணங்கு போல்வாய் — திருமாதுபோன்ற தமயந்தியே! நெய்தவழ்-நிணந்தவழ்கின்ற, புலவு — புலாலுற்றம் பொருந்திய, வைவேல் — கூரியவேலையுடைய, கிடதர் கோன் இவனே — இவனே நளமகாராஜன், உள்ளத்து-மனத்தில், ஐயுறேல்-ஐயப்படவேண்டாம் எ-று.

தெய்வத்தன்மையுள்ள அன்னமாதலால் தான் எடுத்த கருமத்திற்கு இடையூறுவாராது நளன்றூதுவந்தது தெரிந்து இவனே நளனென்று தமயந்திக்குச் சொல்லியதென்க. 131

மழைமதர்நெடுங்கட்செவ்வாய்வளர்முலைமடந்தாய்நின்மேல்
விழைவுகந்துரைத்தானல்லன்விண்ணவர்க்கியைந்தமாற்றம்
பழுதறுமென்னுமாற்றற்பகர்ந்தனன்பரிதிவேலா
னழுதகங்குழைந்திடேலென்றன்பினலறைந்ததன்றே.

இ-ள். மழை — குளிர்ச்சிபொருந்திய, மதர் — களிப்பையுடைய, நெடுங் கண் — நெடிய கண்களையும், செவ்வாய் — சிவந்தவாயையும், வளர்முலை-வளர்கின்ற தனங்களையுமுடைய, மடந்தாய் — தமயந்தியே! பரிதிவேலான் - நளமகாராஜன், நின்மேல் — உன்னிடத்தில், விழைவு இகந்து — ஆசைநீங்கி, உரைத்தானல்லன் — சொன்னவனல்லனும், விண்ணவர்க்கு — தேவர்களுக்கு, இயைந்த — தூதின்பொருட்டுச் சம்மதித்த, மாற்றம் — சொல், பழுதறும் என்னுமாற்றல் — பழுதாகு மென்கின்றபடியால், பகர்ந்தனன் — (இவ்வாறு) பேசினன், (அதனல்) அழுத - நீயழுது, அகங்குழைந்திடேலென்று-மனங்குழைய வேண்டாமென்று, அன்பினல் — விருப்பத்தினல், (அன்னம்) அறைந்தது சொல்லியது எ-று.

நளமகாராசனுனவன், தேவர்பொருட்டுச் சம்மதித்த கருமத்துக்கோர் பழுதடையின் இம்மைக்குப் பழியன்றி மறுமைக்குப் பாவமும் உண்டாம் ஆதலின் இவ்வாறுபேசினுன். அதனுல் நீவருத்தப்பட வேண்டாமென்று அன்னஞ் சொல்லியதென்க. 132

வடுவகிரனையவுன் கண்மடந்தையோடிவ்வாறுரைத்
கடகளிறென்னநின்றகாளைதன் முகத்தைநோக்கா
வுடையபேரறிவாற்காமமுள்ளமைத்தின்னகூறிற்
கொடிநெடுந்தானைவேந்தேகோற்றொடியாற்றுங்கொல்லோ.

இ-ள். வடு – மாவடுவினுடைய, வகிரனைய – பிளப்பையொத்த, உண் கண் – மையுண்ட கண்களையுடைய, மடந்தையோடு – தமயந்தியுடன், இவ் வாறுரைத்து – இவ்விதமாகச்சொல்லி, கடகளிறென்ன நின்ற – மதயானையென் னும்படிநின்ற, காளைதன்முகத்தை – அரசனதுமுகத்தை, நோக்கா – பார் த்து, கொடிநெடுந்தானைவேந்தே – நளமகாராசனே!, உடையபேரறிவால்- பேரறிவுடைமையால், காமம் – ஆசையை, உள்ளமைத்து – உள்ளேயடக்கி, இன்னகூறில் – இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினுல், கோல்தொடி- தமயந்தி, ஆற்றுங்கொல்லோ – பொறுப்பாளோ எ-று.

வடு, மடந்தை, காளை என்பன ஆகுபெயர்கள். களிறு – மதக்களிப் பினையுடையது. நோக்கா – செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். நின்போல்வார்க்கன்றிக் காமத்தைப் பேரறிவாலுள்ளடக்கிப் பேசுதல் மறையோர்க் கரிதென்றதாயிற்று. நின்னை விழைந்தவளாதலால், நீயேபேசில் தமயந்தி யாற்றுவதரிதென்றதென்க. 133

மாங்குயிற்குதலைப்பேதைமனமுநீயையைந்தவண்ணந்
தீங்கறவுரைத்தவாறுந்தேவர்மற்றுணராரல்ல
ரீங்கினியுரைப்பதென்னியிவ்வயினிகழ்ந்தவெல்லா
மாங்கவர்தம்பாலேகியறைதியென்றறைந்ததன்னம்.

இ-ள். மாங்குயில்-மாமரத்திலிருக்குங் குயிற்சொல்லையொத்த, குதலை- மழலைச்சொல்லையுடைய, பேதைமனமும் – தமயந்தியினதுமனமும், நீ யையைந்தவண்ணம் – நீ சம்மதித்து வந்தபடி, தீங்கற – தீங்குநீங்க, உரைத்த வாறும் – சொல்லியவிதமும், தேவர் – தேவர்கள், உணராரல்லர் – அறியாத வர்களல்லர், ஈங்கு – இவ்விடத்தில், இனியுரைப்பது என்னை – இனிப்பேச வேண்டுவதென்ன, இவ்வயின் – இவ்விடத்திலே, நிகழ்ந்தவெல்லாம் – நட ந்தவையனைத்தும், ஆங்கவர் தம்பால் – அத்தேவரிடத்துக்கு, ஏகி – போய், அறைதியென்று – நீ சொல்லுவாயாகவென்று – அன்னம்-அன்னப்பறவை, அறைந்தது – சொல்லியது எ-று.

தமயந்தியினது கருத்தும் நீதூதுக்குச் சம்மதித்து வந்தபடிபேசியதும் சர்வக்கியத்துவமுள்ள தேவர்களுக்கு நீபோய்ச்சொல்லுமுன்னமே தெரியு மென்க. 134

அவ்வுரைகேட்டலோடுமடையலர்ச்செகுக்கும்வேலான்
மவ்வலங்குழலினுடன் மனவலியினி திஞ்ஞேர்ந்து
செவ்வி தின்மனமுங்கண்ணுந்தெரிவைமேற்கிடப்பமாறுக்
கவ்வைகொள்வாயினீங்கிவிஞ்சையிற்கரந்துபோனன்.

இ-ள். அவ்வுரை – அந்த வார்த்தையை, கேட்டலோடும் – கேட்டவளவில், அடையலர் – சத்துருக்களை, செகுக்கும் – கொல்லுகின்ற, வேலான் – வேற்படையையுடைய நளன், மவ்வலங்குழலினுள் தன் – தமயந்தியினது, மனவலி – நெஞ்சினது வலிமையை, இனிதினுணர்ந்து – இனிதினறிந்து, செவ்விதின் – செம்மையுடைய, மனமும் – தன் மனத்தையும், கண்ணும் – கண்களையும், தெரிவைமேல்கிடப்ப – அத்தமயந்தியின்மேலிருக்கவைத்து, மாறு – நீங்காத, கவ்வைகொள் – ஒலித்தலைக்கொண்ட, வாயில்நீங்கி – வாயிலைக்கடந்து, விஞ்சையின் – மந்திரத்தினால், கரந்துபோனன் – ஒளித்துச் சென்றான் எ-று.

இந்திரன்மேல் தமயந்திக்குக்காதலில்லாமையை யறிந்தவளதலால்தன் மனமுங்கண்ணும் அவள்மேற்கிடப்ப விஞ்சையிற்கரந்து நீங்கினனென்றார்.

காரிகையுளமுநாணுங்கவர்ந்தனன்கரந்துபோய
மூரிவெஞ்சிலைக்கைவீரன்கடவுளர்முன்னரேகி
நேரிழைதன்பாற்றூதுபோயபினிகழ்ந்தவெல்லாஞ்
சோர்வுறுதைத்தான்றேவர்தோன்றல்பான்மகிழ்ச்சிகூர்ந்தார்.

இ-ள். காரிகை-தமயந்தியினுடைய, உளமும்-மனத்தையும், நாணும்-நாணையும், கவர்ந்தனன்-கொள்ளைகொண்டனனாகி, கரைந்துபோய-மறைந்து சென்ற. மூரி – வலிமைபெற்ற, வெஞ்சிலைக்கைவீரன் – நளமகாராசன், கடவுளர்முன்னர் – தேவர்களெதிரே, ஏகி-சென்று, நேரிழை தன்பால்-தமயந்தியினிடத்து, தூதுபோயபின் – தூதுபோனபின்பு, நிகழ்ந்த எல்லாம் – நடந்தவைகளனைத்தையும், சோர்வுறுதை-குறைவுபடாமல், உரைத்தான்-கொல்லினன், தேவர் – தேவர்கள், தோன்றல்பால்-அந்த நளமகாராசனிடத்தில், மகிழ்ச்சி கூர்ந்தார் – உவகையடைந்தார்கள் எ-று.

காரிகை – அழகு. அஃதானை யுடையாளுக் காதலால் ஆகுபெயர். கவர்ந்தனன் – வினைமுற்றெச்சம். கடவுளர் – உபசாரமொழி. அது ஈண்டுத்தொகைக் குறிப்புச்சொல். தேவர் என்றது மதி. நேரிழை அன்மொழித்தொகை. பின் என்னும் இடைச்சொல் காலப்பொருளில் வந்தது. தோன்றல் – அல்லீற்று. ஆண்பாற்பெயர். முன்னர், இடப்பொருட்டாய் நின்றது. உளமும் நாணும் – உம்மைகள் எண்ணுப்பொருளன. பால் – ஏழனுருபுகள். தான் விரும்பிய மாதிடத்தில் நம்முரைதவறுதலதுசென்று உள்ளபடி பேசிவந்தானென்று நளனிடத்தில் இந்திரன் முதலிய நால்வரும் மகிழ்கூர்ந்தனரென்க. 136

நளன் றூதுப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் – 543.

* சுயம்வரப்படலம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இன்னவைநிகழும்வேலையெழுகடல்வரைப்பின்மேவு
மன்னவர்குழாமும்விண்ணோர்தொகுதியுமணிச்செஞ்சூட்டுப்
பன்னகநாட்டுவேந்தர்வெள்ளமும்பரித்தேர்வீமன்
கன்னியம்புரிசைசூழ்ந்தகடிநகர்க்கெழுந்தவன்றே.

இப்படலத்தால் தமயந்தியானவள் நளமகாராசனைத் தலைவனுகத் தானே வரித்தாளென்று சொல்லத்தொடங்கி இப்பாட்டால் தமயந்தியின் சுயம்வரத்திற்குத் திரிலோகத்திலு முள்ளவர் வரவு சொல்லப்படுகின்றது.

இ-ள். இன்னவை - இப்படிப்பட்டவைகள், நிகழும் வேலை - நடக்கின்றபொழுது, எழுகடல் வரைப்பின்மேவும் - எழுகடல்சூழ்ந்த தீவுகளிலிருக்கின்ற, மன்னவர் குழாமும் - அரசர்கூட்டமும், விண்ணோர்தொகுதியும் - தேவர்கூட்டமும், மணி - இரத்தினங்களாகிய, செம்சூட்டு - சிவந்த சூட்டையுடைய, பன்னகநாட்டு - நாகலோகத்துள்ள, வேந்தர்வெள்ளமும் - அரசர்கள் கூட்டமும், பரித்தேர் - குதிரைகட்டிய தேரையுடைய, வீமன் - வீமராசனது, கன்னி - புதுமைப்பாட்டையுடைய, அம் - அழகிய, புரிசை சூழ்ந்த - மதிலாற் சூழப்பட்ட, கடிநகர்க்கு - காவலையுடைய குண்டினபுரத்துக்கு, எழுந்த - எழுந்தன எ-று.

வீமன் பூமியிலுள்ள அரசர்க்குமாத்திரம் சுயம்வரஓலை செலுத்தியிருக்க, மற்றை யுலகத்தாரு மெழுந்தனரென இப்பொழுது சொல்லியதற்குக் காரணமென்னெனில், முன்பு நாரதமுனி இந்திரனுக்குத் தமயந்தியின் செய்தி சொல்லும்போது, விஞ்சையர்கின் னரராவண ருரகர்புவி முழுதாளும் வேந்தர்யாரு, மஞ்சலிசெய் திருமருங்கும் புடைசூழ முனிவர்குழாமாசிகூற, வெண்ணும் பாட்டில் அங்கிருந்தாரெனச் சொல்லிய மேலுலகத்தாருங் கீழுலகத்தாரும் தீவிலுள்ளவரும் அவாவின் மிக்கவராய், அதைத் தமக்கும் வந்த செய்தியாகக் கொண்டு நல்லூழிருக்குமாயின் அம்மாசூட்டுமாலை நமக்குக் கிடைப்பினுங் கிடைக்குமென வெழுந்தனரெனக் கொள்ளல்வேண்டுமென்க. 1

பண்ணைமைகலினப்பாய்மாபசியபொற்கொடிஞ்சித்திண்டேர்
கண்ணழற்சிற்றத்துப்பிற்படாம்பொழிகளிரல்யானை
மண்ணைமுழுவத்திண்டோள்வாகைவேலுழவரீட்ட
மெண்ணிடவிடமொன்றின்றியெங்கணும்பரந்தவன்றே.

---

* சுயம்—தானே, வரம்—வரித்துக்கொள்ளுதல், அஃதாவது அரசமங்கையானவள் தனக்கு மூத்தோர்கள் தானே விழைந்து நின்ற அநேக அரசர்களே ஒரேகாலத்தில் வருவிக்க, அவரிற் றனக்கிசைந்த வொருவனுக்குத் தானே மாலையிட்டு தலைவனுகக் கொள்ளுதலாம்.

இதனுல் மேற்சொல்லிய அரசர்களுடைய நால்வகைச் சேனைகளின் வரவு சொல்லப்படுகின்றது.

இ-ள். பண்ணமை – கல்லணையமைந்த, கலினம் – கடிவாளத்தையுடைய, பாய் – தாவுகின்ற, மா – குதிரைகளும், பசியபொன் – பசியபொன்னுற்செய்த, கொடிஞ்சி – மேன்மொட்டையுடைய, திண் – வலிமை பெற்ற, தேர் – தேர்களும், கண் – கண்களில், அழல் – தீயையும், சீற்றம் – அப்பின் – மிகுந்த கோபத்தையுமுடைய, கடாம்பொழி – மதம்பொழிகின்ற, களிநல்யானை – களிப்பையுடைய நல்லயானைகளும், மண்ணமை – ஒப்பனையமைந்த, முழவு – மத்தளம்போன்ற, திண்டோள் – வலிமை பெற்ற புயங்களையும், வாகைவேல் – வெற்றிபெற்ற வேலையுமுடைய, உழவ சீட்டம் – காலாள்கள் கூட்டமும், எண் இட – எள்ளையிடுதற்கு, இட மொன்று இன்றி – வெற்றிடமொன்று மில்லாமல், எங்கணும் – எவ்விடங்களிலும், பரந்த – பரவின எ-று.

ஒவ்வொரு தேசத் தரசது சேனைகளே அனேகமாயிருப்பின் அனேக தேசத்தரசர் நால்வகைச் சேனைகளும் ஒரேகாலத்தில் ஓரிடத்திற்கு வருமாயின் இவ்வளவென்று குறிக்கக் கூடாதென்பார் எண்ணிட இடமொன்றின்றி வெங்கணும் பரந்தவென்றாரென்க. எண் – எள், அது "எண்ணுந் திலமுமெள்ளெனவிசைப்பர்" என்பதாலறிக. 2

கொய்புலைக்கலினமாவின் குரத்துகளழுந்துவிம்மி
வையகமுழுதுஞ்சூழ்போய்மறிகடற்கிடங்குதூர்த்து
மொய்பெருதசலத்தோடுமுரணியண்டிசையுங்காக்குந்
தொய்யின்மாமுகத்தயானைகவட்குழிதூர்த்தவன்றே.

இதனுற் குதிரைக் குளம்புகளினெழுந்த புழுதியின் தோற்றஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொய் – கொய்யப்பட்ட, உலை – புறமயிரையுடைய, கலினமாவின் – கடிவாளம் பூண்ட குதிரைகளுடைய, குரத்துகள் – குளம்பு பட்டுண்டாகும் புழுதிகள், எழுந்து – எழும்பி, விம்மி – பரவி, வையகமுழுதும் – பூவுலகமுழுதும், சூழ்போய் – வளைத்துக்கொண்டு, மறிகடல் – மடங்குகின்ற அலைகளையுடைய கடலாகிய, கிடங்கு – அகழை, தூர்த்து – தூர்த்துவிட்டு, மொய்பெருது – போர்பெருமல், அசலத்தோடு முரணி – குலகிரியுடன் மாறுகொண்டு, எண் திசையுங்காக்கும் – திசைகளெட்டையும் புரக்கின்ற, தொய்யில் – சித்திரமெழுதப்பெற்ற, மா – மகத்தாகிய, முகத்தயானை – முகத்தையுடைய யானைகளின், கவுட்குழி – கதப்புத்துளைகளை, தூர்த்த – தூர்த்தன எ-று.

குலகிரி இன்னவென வுரைத்துள்ளாம். ஆங்குக்காண்க. அசலம் = சலித்தல் இல்லாதது; மலை. அட்டதிக்கு யானைகள் இவை யென்பதும் முன்னர் விளக்கியுள்ளாம். பூவுலக முழுவதுஞ் சூழ்ந்த கடல்களைத் தூர்த்

அத் திக்கயங்களினுடைய கன்னத் தலைகளேயுங் தூர்த்தபொழுது அப்புறம் போதற்கிடமில்லாமையாற் றடைபட்டதன்றி அதற்களவில்லை யென்க. புழுதி யிப்படிப்பட்டதாயின் அக்குதிரைகளின் ஆரவாரஞ் சொல்லவேண் டுவதில்லை. இது உயர்வு நவிற்சியணி. 3

மண்ணகவரைப்பின்வேந்தர்வரைப்புயத்தெழுதுசாந்தம்
விண்ணகத்தமரர்மார்பங்கமழ்ந்தனவிண்ணோர்வேய்ந்த
தண்ணறவொழுகுமன்றற்றருமலர்ப்பசும்பொற்றாது
கண்ணகன்ஞாலங்காக்கும்வேந்தர்மெய்கமழ்ந்தமாதோ.

இதனுல் தேவர்கட்கும் அரசர்களுக்கு மிருக்கும்
கலப்புச் சொல்லப் படுகின்றது.

இ-ள். மண் அகவரைப்பின் — பூவுலகத்தினிடத்திருக்கின்ற, வேந்தர்-அரசர்களுடைய, வரைப்புயத்து — மலைகளே யொத்த தோள்களில், எழுது-தூரியக்கோலாற்றீட்டிய, சாந்தம் — சந்தனமானது, விண்ணகத்து — ஆகாயத்தினிடத் திருக்கின்ற, அமரர் — தேவர்களுடைய, மார்பம் — மார்பிலே, கமழ்ந்தன — மணத்தன, விண்ணோர் — தேவர்கள், வேய்ந்த — தரித்த, தண்-குளிர்ச்சி பொருந்திய, நறவு ஒழுகு — தேனொழுகுகின்ற, மன்றல் — வாசனையையுடைய, தருமலர் — பஞ்ச தருவினுடைய மலர்களின், பசும்பொன் தாது — பசும்பொன்போன்ற மகரந்தப்பொடிகள், கண்ணகல் — இடமகன்ற, ஞாலம் காக்கும் — பூமியைப் புரக்கின்ற, வேந்தர் மெய் — அரசர்களுடைய தேகத்தில், கமழ்ந்த — மணத்தன எ-று.

ஒருவர்க்கொருவர் நெருங்கியிருத்தலால் மனிதர்புயங்களிற் பூசிய சாந்தந் தேவர்கள் மார்பினும் தேவர்களணிந்த மாலைமலரின் மகரந்தம் அரசர் தேகங்களினுங் கமழ்ந்தனவென்க. ஆயின் தேவர்களே மனிதர்கள் அப்படி நெருங்கலாமோவென்னில் அரசரால் விரும்பப்படுந் தமயந்தியையே அவர்களும் விரும்பி வருதலாலும் அதிக நெருக்கமுள்ள விடத்தில் எவர்களும் அதிக மரியாதையை விரும்பாமையாலும் ஆகுமென்க. 4

காந்தெரிகதுவுஞ்செங்கட்கரிமதக்கலுழியாறுங்
கூந்தன்மாவுமிழ்விலாழிப்பெருக்கும்வேற்குமரன்ன
வேந்தர்திண்புயத்தில்வார்ந்தவிரைகமழ்ஞாளச்சேறும்
பாந்தண்மேற்கிடந்தஞாலமெங்கணும்பரந்தவன்றே.

இதனுல் மதநீர் முதலியவற்றின் பெருக்கஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். காந்து — மூதிர்கின்ற, எரி — தீயானது, கதுவும் — பற்றுகின்ற, செங்கண் — சிவந்தகண்களேயுடைய, கரி — யானையினுடைய, மதம் — மத நீராகிய, கலுழியாறும் — காலுறும், கூந்தல் — புறமயிரினையுடைய, மாகுதிரைகன், உமிழ் — சொரிகின்ற, விலாழிப்பெருக்கும் — நீர்ப்பெருக்கும்,

வேல் – வேற்படையையுடைய, குமரனன்ன – குமரக்கடவுளையொத்த, வேந்தர் – அரசர்களுடைய, திண்புயத்தில் – வலிமையுள்ள தோள்களில், வார்ந்த – ஒழுகிய, விரைகமழ் – வாசனை வீசுகின்ற, நானச்சேறும் – கஸ்தூரிச் சேரும், பாந்தள் மேல் – ஆதிசேடன்மேல், கிடந்த – இருந்த, ஞாலம் எங்கணும் – பூமியெங்கும், பரந்த – பரவின எ-று.

மதநதியும் விலாழிப் பெருக்கும் கத்தூரிச் சேறும் பூமி முழுவதும் பரந்தவெனலால் அவைகளுடைய யானைகளும் குதிரைகளும் அரசர்களும் அளவில்லையென்பது கருத்தாகக்கொள்க. 5

வெள்ளியங்கிரியின்மேயவிஞ்சையரியக்கர்விண்ணோர்
சொள்ளொளியெறிக்கும்பைம்பொன்விமானமுமுலகில்வேந்தர்
நள்ளிருள்சிக்குஞ்செய்யநகைமணிக்கொடிஞ்சித்தேருந்
தெள்ளிதினுணர்ந்துளோர்க்குந்தெரிவிலமயங்குமன்றே.

இதனால் தேவராதியர் ஊர்திகளின் பெருக்கஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். வெள்ளியங்கிரியின் – கயிலாயமலையில், மேய – பொருந்திய, விஞ்சையர் – வித்யாதரரும், இயக்கர் – இயக்கர்களும், விண்ணோர் – தேவர்களும் ஆகிய இவர்களுடைய, ஒள் ஒளி – மிகுந்தவொளியை, எறிக்கும் – வீசுகின்ற, பைம்பொன் – பசும்பொன்னாற்செய்த, விமானமும் – விமானங்களும், உலகில் – பூவுலகிலிருக்கும், வேந்தர் – அரசர்களுடைய, நள் இருள் சிக்கும் – மிகுந்த இருளினையோட்டுகின்ற, செய்ய – சிவந்த, நகை – ஒளியையுடைய, மணி – இரத்தினங்கள் பதித்த, கொடிஞ்சி – மேன்மொட்டையுடைய, தேரும் – தேர்களும், தெள்ளிதின் – தெளிவாக, உணர்ந்துளோர்க்கும் – அறிந்தவர்களுக்கும், தெரிவில் – தெரிந்துக்கொள்ளக் கூடாதனவாகி, மயங்கும் – ஒன்றோடொன்று மயங்கும் எ-று.

ஒவ்வொரு விதத்தில் அநேக விமானங்களும் அநேகந்தேர்களுமாகலில் நுண்ணறிவுடையராயினுந் தேவர்களுக்கும் அரசர்களுக்கும் நமது அதுவோ இதுவோவென்னத் தலைமயங்கிக் கிடக்குமென்க. 6

சிற்பநூல்கழியக்கற்றோர்சித்திரித்தென்னவாய்ந்த
பொற்புறுநெடியவேற்கட்பூங்கொடிவதுவைவேட்டுப்
பற்பலதேயவேந்தர்தொகுதலிற்பாடைதோர்வா
னற்புடனெவருந்தேவபாடையினறைவர்மாதோ.

இதனால் சுயம்வரசாலைவருங் கலந்துபேசல் சொல்லப்படுகின்றது.

இ-ள். சிற்பநூல் – சிற்பசாத்திரத்தை, கழிய – மிகவும், கற்றோர் – படித்தவர்கள், சித்திரித்தென்ன – சித்திரித்ததுபோல, வாய்ந்த – பொருந்திய, பொற்புறு – அழகான்மிக்க, நெடிய – நீட்சியையுடைய, வேல் கண் – வேல்போன்ற கண்களையுடைய, பூங்கொடி – தமயந்தியினது, வதுவைவேட்டு – விவாகத்தைவிரும்பி, பல்பல – அனேகமாகிய, தேயவேந்தர் – தேசங்களிலிருக்கும் அரசர்கள், தொகுதலில் – கூட்டங்கொண்டிருத்த

லால், பாடைதேர்வான் — (எல்லோர்க்குஞ்) சொற்பொருள் தெரியும்பொரு ட்டு, அற்புடன் – அன்புடனே, எவரும் — எவர்களும், தேவபாடையின்-கீர் வாணபாஷையால், அறைவர் - பேசிக்கொள்வார்கள். எ-று மாதோ-அசை.

மிக்க அழகினையுடைய தமயந்தியினது விவாகத்தை விரும்பி அனேக தேசத்து அரசர்கள் கூடியபடியால் தேசங்கள்தோறும் பாஷைகள் வேறுத லின் அவைகளாற் பேசினால் ஒருவர்க்கொருவர் உரைக்கும் வார்த்தைகட் குப் பொருளறியக் கூடாதென்று கீர்வாண பாஷையாற் பேசினரென்க. ஆதலாலே அதுவேபாஷைகளுக்கு மூலமும் எந்தத்தேசங்களுக்கும் பொதுவு மென்பதுபெற்றும். அன்பு – அற்பெனத்திரிந்தது. 7

கழைசுளிகளிநல்யானைபிளிறுலிகமஞ்சூல்வான
மழையொலியவியப்பம்பும்வார்முரசோதைதேவர்
முழவொலிகடந்தேர்ச்சில்லிமுழக்கொலிபுடவிபோர்த்த
வெழுகடலொலியுமெஞ்சவெங்கணுமொலித்தவன்றே.

இதனால் அங்குண்டாகிய ஒலியின்றோற்றஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். கழை – கரும்புகளே, சுளி – முரிக்கின்ற, களி-களிப்பையுடைய, நல் – நல்ல, யானை – யானைகளினது, பிளிறு – ஆரவாரமாகிய, ஒலி — சத்த மும், கமம் – நிறைந்த, சூல் — கருப்பத்தையுடைய, வானம் – ஆகாயத்திற் சஞ்சரிக்கும், மழை - மேகத்தினுடைய, ஒலி – சத்தமானது, அவிய-கெடும் படி, பம்பும் – கெருங்கிய, வார் — வாரையுடைய, முரசோதை - பேரிகை களின் சத்தமும், தேவர்முழவொலி - தேவதுந்துபிகளின் சத்தமும், தடம்-பருத்த, தேர் – தேரினுடைய, சில்லி – உருளைகள், முழக்கொலி — முழக்கு கின்ற சத்தமும், புடவிபோர்த்த-பூமியைச்சூழ்ந்த, எழுகடலொலியும்-ஏழு கடலினோசையும், எஞ்ச – குறையும்படி, எங்கணும் – எவ்விடத்தும், ஒலி த்த – சத்தித்தன எ-று.

யானை முதலியவற்றின் பேரொலியைச் சொல்லவே "ஒருமொழி யொழிதன் னினஞ் கொளற் குறித்தே" யென்பதனால் அளவற்ற மற்றைச் சிற்றொலிகளுங்கொள்க. இவ்வொலி எவ்விடத்து மிருத்தலாற்கரையருகின் மாத்திரம் ஒலிக்கும் எழுகடலொலிகள் எஞ்சவென்றார். 8

அகலிருவிசும்புபோர்த்தவணிமதிக்கவிகையீட்டம்
பகலொளிகரப்பவெங்கும்பாயிருள்பரப்புமன்னர்
நகைமணிமகுடகோடிநள்ளிருட்பிழம்பைக்கி
யிகலிவானிரவியோடவிளவெயிலெறிக்குமாதோ.

இதனால் அங்குண்டான இருளும் ஒளியுஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். அகல் – அகன்ற, இரு – பெரிய, விசும்பு – ஆகாயத்தை, போர் த்த – மூடிய, அணி — அழகிய, மதிக்கவிகை – சந்திரவட்டக் குடைகளினு

டைய, ஈட்டம் – கூட்டங்கள், பகல் ஒளி-சூரியப் பிரகாசம், கரப்ப-மறைய, எங்கும் - எவ்விடத்தும், பாய் – பரவிய, இருள் – இருளை, பரப்பும் – பரவச் செய்யும், மன்னர் – அரசர்களுடைய, நகை – ஒளியையுடைய, மணி-இரத்தினங்கள்பதித்த, மகுடகோடி – அநேக மகுடங்கள், நள்ளிருட்பிழம்பை-மிகுந்த விருட்பிழம்பை, நக்கி – உண்டு, இகலி-பகைத்து, வான் – ஆகாயத்திலிருக்கும், இரவி ஓட – சூரியனுவேலுடும்படி, இளவெயில்-இளங்கதிரை, எறிக்கும் – வீசும் எ-று.

அகல், இரு என்னும் அடைமொழிகளால் விசும்பின் அழற்சியும் பெருமையுந்தோன்றின. அப்படிப்பட்ட விசும்பையுங் குடைகள்மறைக்க, அதனுலுளதாம் இருளையோட்டற்கு அரசர் மகுடங்களிற்பதித்த மணிகளில் ஒவ்வொன்றே போதுமானதாயிருக்க, அத்தன்மை வாய்ந்த மணிகள் பலவற்றையுடைய அனேக மகுடகோடிகளுக்கு இவ்விருள் போதாதென்பது தோன்ற, விழுங்கினு யென்னுது நக்கியென்றார். 9

வெங்கதிர்நெற்றிதோய்ந்துவிளங்குபொற்கொடியினீட்ட
மங்குல்வானிழியுந்தெய்வமடந்தையர்வடிவுகாட்டக்
கொங்கலர்த்தெரியல்வேந்தர்கொற்றவெண்கவிகையீட்டந்
திங்களினழகுகாட்டத்திருநகர்பொலிந்ததன்றே.

இதனுல் கொடிகளுங் குடைகளுஞ் சொல்லப்பட்டது.

இ-ள். வெங்கதிர் – சூரியனுடைய, நெற்றி தோய்ந்து – நெற்றியிற்படிந்து, விளங்கு – பிரகாசிக்கின்ற, பொன் கொடியின் – பொன்னுற்செய்த கொடிகளினுடைய, ஈட்டம் – கூட்டங்கள், மங்குல் – மேகங்களையுடைய, வானிழியும் – ஆகாயத்தினின்றிழிகின்ற, தெய்வமடந்தையர் – தெய்வ மாதருடைய, வடிவுகாட்ட – வடிவினைத் தெரிவிக்க, கொங்கு – வாசமிகுந்த, அலர்த்தெரியல் – மலர்மாலையணிந்த, வேந்தர் – அரசர்களது, கொற்றம்-வெற்றியையுடைய, வெண்கவிகை-வெள்ளிய குடைகளினுடைய, ஈட்டம்-கூட்டங்கள், திங்களின் – சந்திரனது, அழகுகாட்ட-அழகைத்தெரிக்க, திருநகர் – குண்டினபுரமானது, பொலிந்தது – பொலிவையடைந்தது. எ-று. அன்று ஏ – அசைகள்.

கொடிகள் அநேக அரம்பையர் வடிவங்களையும் குடைகள் அநேக சந்திரர் வடிவங்களையுங் காட்டுதலால் விவாகத்திற்குச் சிறப்பு மங்கையராலன்றி வேறில்லை யாகலாலும், ஒரு சந்திரனு லுலகம் மகிழ்ச்சியடையும்போது அனேகசந்திரர் எக்காலத்தில் ஒரு நகரிற்றோன்றினு லெவ்வளவு சிறப்புண்டாகலா மாதலாலும் திருநகர் பொலிந்ததென்றார். 10

குருமணியிமைக்கும்பைம்பொற்குடைநிழல்வெயிலேயோட்ட
மருமலிகுயமென்பூமாலைவாடாமையாலுக்
திருநகர்ச்செவ்விதேகக்கியிமைப்பிலர்திரிதலானு
மரசரோடமரர்தம்மையறிவரிதாயதன்றே.

இதனுல் அரசர்க்குந் தேவர்க்கும் வேற்றுமை தோன்
றுமை சொல்லப்படுகின்றது.

இ-ள். குரு - நிறம்பொருந்திய, மணி — இரத்தினங்கள், இமைக்கும்-பிரகாசிக்கின்ற, பைம்பொன் — பசிய பொன்னுற்செய்த, குடைநிழல் குடைகளினுடைய நிழல்கள், வெயிலை ஒட்ட — வெயிலைத்தரத்த, (அதனுல்) மருமலி — வாசம்பொருந்திய, நறிய — நறியவாகிய, மெல்பூமாலை - மெல்லிய பூமாலைகள், வாடாமையானும் — வாடாமையாலும், திருநகர் - குண்டினபுரத்தினுடைய, செவ்வி நோக்கி — அழகைப்பார்த்து, இமைப்பிலர் - கண்களிமையாதவர்களாய், திரிதலானும் - திரிகின்றபடியாலும், அரசரோடு-அரசர்களுடனே, அமரர்தம்மை — தேவர்களை, அறிவரிதாயது - பகுத்தறிதலரிதாயது எ-று.

மாலைவாடுதல், கண்ணிமைத்தல் ஆகிய இரண்டு செய்கையால் தேவர்க்கு வேற்றுமைப்பட்டிருந்த அரசர் இப்பொழுது அவ்விரண்டு மில்லாமையால் வேற்றுமை தோன்றிலரென்க. அரசர்க்கு மமரர்க்கும் வேற்றுமை தோன்றுமையால் மறைவணி. 11

மாங்குயிலனைய தீஞ்சொல்வடுவகிர்பொருவும்வேற்கட்
பூங்கொடிவதுவைவேட்டுப்புவியினில்வேந்தரெல்லாந்
தேங்கமழ்தெரியல்வீமன்றிருநகரிருத்தறன்னு
லாங்கவர்தேயம்யாவுமரும்பொறையுயிர்த்தவன்றே.

இதனுல் மற்றைத்தேயங்களின் பொறையொழிவு
சொல்லப்படுகின்றது.

இ-ள். மாங்குயி லனைய — மாங்குயிலி னிசையொத்த, தீஞ்சொல்-தித்திக்கின்ற சொல்லையும், வடுவகிர்பொருவும் - மாவடுவின் பிளப்பையொத்த, வேல்கண் — வேல்போன்ற, கண்களையுமுடைய, பூங்கொடி-தமயந்தியினது, வதுவைவேட்டு — விவாகத்தைவிரும்பி, புவியினில் வேந்தரெல்லாம் — பூவுலகத்திருக்கும் அரசர்களெல்லாரும், தேங்கமழ் — வாசங்கமழ்கின்ற, தெரியல் - மலர்மாலையையணிந்த, வீமன் — வீமராசனது, திருநகர்-குண்டினபுரத்தில், இறுத்தல்தன்னுல் — வந்து தங்கியபடியால், அவர்தேகம் யாவும் — அவர்கள் தேகமெல்லாம், அரும்பொறை — பொறுத்தற்கரிய சுமையை, உயிர்த்தீங்கின எ-று.

வீமன் அநேகர் வருத்தங்களுக்கு இடங்கொடுத்து அவர்களை மகிழ்வுறச் செய்வதுபோல் அவன்தேசமும் அநேக தேசத்திலுமுள்ளவர்க்கு இடங் கொடுத்து அவைகள் இளைப்பாறி மகிழ்வுறச் செய்ததென்பதாகருத்து. 12

இழைபரந்திமைக்குமல்குலின்கனித்துயர்வாயெழை
மழைமதர்நோக்கிற்கஞ்சிமறியுமானேறுமாதின்
விழைதருநகரிற்றூண்டவெருவிமீண்டேகுமாற்றூற்
கழிபெருங்காதல்கூர்த்துங்காற்றிறைவரவுதீர்த்தான்.

இதமுதல் நாலுபாட்டுக்களால் தமயந்தி சுயம்வரத்திற்கு
வாயுமுதலிய நால்வரும் வாராமைக்குக் காரணஞ்
சொல்லத்தொடங்கி இப்பாட்டால்
வாயுவாராமைக்குக் காரணஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். இழை — ஆபரணங்கள், பரந்த — பரவி, இமைக்கும் - விளங்கும், அல்குல் — அல்குலேயும், இன் - இனிய, கனி — (கோவைக்) கனி போன்ற, துவர்வாய் ஏழை — செவ்வாயையுமுடைய தமயந்தியது, மழை-குளிர்ச்சிபொருந்திய, மதர் - களிப்பையுடைய, நோக்கிற்கஞ்சி — பார்வைக்குப் பயந்து, மறியும் - மடங்குகின்ற, மானேறும் — ஆண்மானும், மாதின் — அம்மங்கையினது, விழைதரு - விரும்புகின்ற, நகரில்தூண்ட-குண்டினபுரத்திற்குச் செலுத்த, வெருவி — பயந்து, மீண்டு — திரும்பி, ஏகு மாற்றல் — போகின்றபடியால், கழி — மிகுந்த, பெருங்காதல் கூர்ந்தும்-பேராசையையடைந்தும், காற்றிறை — வாயுவானவன், வரவு — வருதலை, தீர்ந்தான் - நீங்கினான் எ-று.

காற்றிறை *காற்றுக்களுக்குத் தலைவன். நாம் விவாகத்திற்குச்செல்ல வெழுந்ததற்கு அமங்கலமாக நமதூர்நியே தடை செய்தலால் நமக்கு அத்

---

* காற்றுக்களாவன—தன்வாயு, சதிவாகன், பிரசேனன், செசன், ஆசேசனி, மேகம், அமோகம், வைச்சிராங்கன், வத்ததம், இரைவதகன், சங்கவர்த்தன், விடமர்த்தன் என்னு மிவையாம். இவற்றுள் (1) தன் வாயு வானது பூமியின்மேல் ஐம்பதுயோசனை தூரம்வரையும் நிறைந்து பூமிக்கணுள்ள எல்லா ஓடதிகளையும் வளர்க்காகிற்கும். (2) சதிவாகனென்னுங்காற்றானது இப்பூமியில் வியாபித்து எல்லா வுயிர்கட்கும் தீபனஞ்செய்து பட்சிகள் பறப்பதற்கும் ஆதாரமாக விளங்கும். (3) பிரசேனன் என்னுங் காற்றானது சுழல்காற்றாக அடித்து மாங்களை முரித்து அக்கினியை யெழுப்பிக் கிரகங்களைத் தகித்து தடவாக்கினியைச் சொலிப்பிக்கும். (4) செசன் என்னும் காற்று ஆனது ஐந்நிற மேகத்தால் சமுத்திரநீரைப் பருகுவித்துப் பூமிக்குமேல் 150-யோசனை தூரத்திற்றெப்பம்போல மிதக்கச்செய்து, அதிலுள்ள சலத்தை மலை, வனம், நாடு இவைகளிற் சல்லடைகொண்டு அரிப்பதுபோற் சல்லி மழையாகப் பொழிவிக்கும். (5) அசேசனி யென்பது அதற்குமேல் 150-காததூரத்தில் மேகங்களாற் பெய்யப்படும் மழையினில், ஆமை, மீன், தவளை யிவை கலந்து விழச்செய்யும். (6) மேகம் என்பது அதற்குமேல் (50) யோசனையினின்று சனங்களுக்கு மழைநீர்ப்பானத்தாற்றுக்கங்கொடுக்கும். (7) அமோகம் என்னும் காற்றானது 50-யோசனையினின்று மழைநீரால் உயிர்க்கு மரணத்தை விளைவிக்கும். (8) வைச்சிராங்கன் என்பது (50) யோசனையினின்று மழைநீரால் மரங்களைத் தளிர்ப்பித்தல், பூக்கச்செய்தல், காய்ப்பித்தல் பழுப்பித்தல் என்னு மிவற்றைச்செய்யும். (9) வத்ததம் என்பது 50-யோசனையதாய் இடியிடிப்பித்து மழை

தமயந்தி மாலையிடுவதும் அவ்வாரூமென்று வாயுவானவ னின்றன னென்க. 13

ஐயரிபரந்துமைதோய்த்தம்பலைத்திகலும்வேற்கட்
டையலோர்பாதியாயதன்மையாற்றன துபைம்பொற்
செய்யதாள்பெயர்ப்பவன்னுள்சீரடியெழாமையாலே
மையணிகண்டத்தோனுமன்றலுக்கெழுந்திலானே.

இப்பாட்டால் ஈசானருத்திரர் வராமைக்குக் காரணஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஐ - அழகிய, அரிபரந்து-வெவ்வரிபரந்து, மைதோய்ந்து - அஞ்சனமணிந்து, அம்பலைத்து - அம்புகளை யலைவுசெய்து, இகலும் — பொருகின்ற, வேற்கண் — வேல்போன்ற கண்களையுடைய, தையல் — உமைமாதானவள், ஓர் பாதியாயதன்மையால் - வாமபாகத்திலிருக்கின்றபடியால், தனது — தன்னுடைய, பைம்பொன் — பசியபொன்போன்ற, செய்யதாள்- சிவந்த பாதங்களை, பெயர்ப்ப — தூக்க, அன்னுள் — அவ்வுமாதேவியினது, சீரடி - சிறியபாதங்கள், எழாமையாலே — எழுதலில்லாமையால், மையணி கண்டத்தோனும் — ஈசுரனும், மன்றலுக்கு — (தமயந்தியின்) விவாகத்திற்கு, எழுந்திலான் - புறப்பட்டிலன் எ-று.

சிவன் மன்மதனை யெரிப்பினும் காமமுள்ளவ னென்பது தோன்றத் தையலோர் பாதியாய தன்மையாலென்றும், உமாதேவியைத் தமயந்தி விவாகத்திற்குச் செல்லல்வேண்டும் நீயும் வாவென வாய்திறந்துரைக்கின் முனியுமென்று குறிப்பித்தமை தோன்றத் தனதுதாள் பெயர்ப்பவென்றும், மாற்றவள் வருதற் கொருவரு முடன்படாரென்பது தோன்ற அன்னுள் சீரடியெழாமையா லென்றும், விடத்தையுண்டு - தேவரைப் புரந்த வல்லமை யுற்றேனுயினும் தன் மனைவிக்குச் சமாதானஞ்சொல்லிப் போதற்கரிதாய் நின்றன னென்பதுதோன்ற "மையணி கண்டத்தோனு மன்றலுக்கெழுந்திலா" னென்றும் சொல்லினர். உத்தம நாயகனவன் தனக் கொரு பொருளில் அதிகவிழை விருந்ததாயினும் தலைவிக்கு அதிலே வெறுப் புள்ளதாகத் தோன்றுமாயின் விடுப்பனென்பது கருத்து ஈண்டுக் கூறியது பரிவினையன்று. எண்டிசைப் பாலருள் ஒருவராய ஈசானரையென்க. என்னை? ஏனைதிசைப்பாலர் வருகையும் வாராமையுங் கூறியதனாலும், சிவன்போலுருவும் ஊர்தியுந்தவத்தா லீசானியர் பெற்றுளராகலானுமென்க. இவ்வொப்புமைபற்றி யீச்சுரன் றன்மையை யீண்டேற்றிக் கூறினர். (14)

பெய்விக்கும். (10) இரைவதகன் என்பது அத்துணைத் தூரமதாய் மழை நீராலயிர்க்கட்குப் புஷ்டியை விளக்கும். (11) சங்கவர்த்தன் என்பது, ஐம்பது யோசனையதாய் வியாதியை விலக்கும்? (12) விடமவர்த்தன் என்னுங் காற்றனது குரோதன் எனப் பெயருள்ள மேகங்களாற் சோனைமழை பெய்வித்து, அதை யுயிர்களைக் குடிப்பித்துக் குரோதத்தை விலக்கும்.

* உருவுகண்டுவப்பதன்றியோடரித்தடங்கணல்லார்
திருவினுங்குலத்தினுஞ்செய்கிலரார்வமென்னு
மருவுதன்வடிவின்குற்றமனக்கொளாவயங்குபைம்பொற்
குரைகழலிலங்குநோன்றுட்குபேரனும்வந்திலானே.

இப்பாட்டால் குபேரன் வராமைக்குக் காரணஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். உருவுகண்டு – அழகுள்ள வடிவைப்பார்த்து, உவப்பதன்றி-மகிழ்வதல்லாமல், ஒடு—ஓடுகின்ற, அரி—செவ்வரிபரந்த, தட – விசாலம்-பொருந்திய, கண் - கண்களையுடைய, நல்லார் – மங்கையர்கள், திருவினும்-செல்வத்தினாலும், குலத்தினும்—உயர்ந்த குலத்தினாலும், ஆர்வஞ் செய்கிலர் என்னு – ஆசைசெய்யமாட்டார்களென்று, தன்வடிவின் – தன்னுடைய தேகத்தில், மருவு – பொருந்திய, குற்றம் - குற்றத்தை, மனம்கொளா-மனத்திலேகொண்டு, வயங்கு - பிரகாசிக்கின்ற, பைம்பொன் – பசும் பொன்னாற்செய்த, குரை – சத்தத்தையுடைய, கழல் - வீரக்கழல்கள், இலங்கு – விளங்குகின்ற, நோன் – பெருமைபொருந்திய, தாள் – பாதங்களையுடைய, குபேரனும்—குபேரனும், வந்திலான் - வந்திலன் எ-று.

தான் செல்வத்திலுங் குலத்திலு மிக்கவனாயிருப்பினும் மங்கையர் அழகுள்ளவரை விரும்புவதன்றி மற்றையரை விரும்பாராகையால் தன்வடிவின் குற்றமாகிய கண் தெரியாமை மறைக்கக்கூடாத குற்றமாகையால் அது கண்டு நம்மை விழையாரென்று குபேரன் தமயந்தி சுயம்வரத்திற்கு வந்திலனென்க. அன்றியும் குபேரன் என்னும் பெயரே தனது விகாரமான வடிவத்தைத் தெரித்தலின் வந்திலனென்பதூஉ மொன்று. 15

விரைகமழ்தருவினீழல்விண்ணவரிடத்துமார்வம்
புரிகலனளன்மேலன்புபூண்டனள்புலம்புகொண்ட
முருகவிழ்நறுமென்கூந்தன்முகிழ்முலைத்துவர்வாய்ப்பேதை
நிருதரைவிழையாளென்னநிருதியும்போந்திலானே.

---

* உருவுகண்டு உவத்தலாவது—பெண்கள் அழகின்மிக்க புருடரைக் கண்டு இச்சித்தலாம்; அது பெண்களுக்கு இயல்பே அதனை "குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார் கல்வியினுற் குறையாஞான – பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார் பாந்தபெருஞ் செல்வமுள்ள – தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள் யௌவனமு மழகுஞ்சான்ற – நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழன் மங்கைமார் நலத்தின்மிக்கோர்" என்னுஞ் செய்யுளானும், "பெண்ணுதவுங்காலைப் பிதாவிரும்பும்வித்தையே யெண்ணிறனம் விரும்பு மீன்றதாய் நண்ணிடையிற், கூறிய நற்சுற்றங் குலம் விரும்புங் காந்தனது போழகுதான் விரும்பும் பெண்" என்னுஞ் செய்யுளானு முணர்க.

இப்பாட்டால் நிருதிவாராமைக்குக் காரணஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். விரைகமழ் - வாசங் கமழ்கின்ற, தருவினீழல் - ஐந்தருவி னிழலி லிருக்கின்ற, விண்ணவரிடத்தும் — தேவர்களிடத்தினும், ஆர்வம் புரிகிலள் — ஆசைசெய்கிலள், நளன்மேல் - நளனிடத்தில், அன்பு பூண்ட னள் - அன்பு வைத்தவளாகி, புலம்புகொண்ட - இரங்குதலைக்கொண்ட, முருகு அவிழ் - தேனொழுகுகின்ற, நறு — நறிய, மெல் கூந்தல் — மெல்லிய குழலையும், முகிழ்மூலை - அரும்பையொத்த முலையையும், துவர்வாய்- செவ்வாயையுமுடைய, பேதை - தமயந்தியானவள், நிருதரை - இராக் கதரை, விழையாளென்ன - இச்சிக்கமாட்டாளென்று, நிருதியும் - நிருதி யென்பவனும், போந்திலான் - வந்திலன் எ-று.

முன் சொல்லப்பட்ட மூவருக்கு முண்டாகிய தடை இவனுக்கில்லா திருந்தும் இவன் வராதது அகத்துக்குணம் பல விருப்பினும் மாதர்முதற் கண் வடிவழகையே விரும்புவராதலின் அவ்வழகுள்ள இந்திரன் முதலி யோரை யிகழ்ந்து நளனை விழைந்துள்ள தமயந்தி அரக்கரென்னுங் குலம் பற்றி மாலைசூட்டாள் ஆயின், அதுபெரு தவரின் அதின் மிக்க அவமான மில்லையென்று தன்பேரறிவாற் குறித்து நிருதிவந்திலனென்க. விவேகிகள் இறந்ததாயினும் அவமானப்படுங் காரியத்தைக் குறித்துச் சொல்லாரென் பது கருத்து. 16

பொன்னகர்புரக்கும்வேந்தும்பொங்கழற்கிறையுமுந்நீர்
மன்னனுந்தறுகட்பேழ்வாய்மறலியுமடமாலைநோக்கி
னன்னுதனளனுக்கன்றிநறுந்தொடைசூட்டாளென்ன
வன்னவனுருவுதாங்கியணிநகர்மேயினாரே.

இதனால் இந்திரன்முதலிய நால்வரும் வருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொன்னகர் புரக்கும் வேந்தும் - இந்திரனும், பொங்கழற் கிறையும் — அக்கினிபகவானும், முந்நீர்மன்னனும் — வருணனும். தறுகண் பேழ்வாய் மறலியும் — யமனும், மடமாலைநோக்கின் — இளமான்பார்வையை யொத்த பார்வையை யுடைய, நன்னுதல் — தமயந்தியானவள், நளனுக் கன்றி — நளனுக்கல்லாமல், நறுந்தொடை — நறியமலர் மாலையை, சூட்டாள் என்ன — தரிக்கமாட்டாளென்று, அன்னவன் — அந்த நளனுடைய, உருவு தாங்கி — (வடிவையொத்த) வடிவத்தைக்கொண்டு, அணிநகர் - அழகிய நக ரத்தில், மேயினார் - பொருந்தினர் எ-று.

தறுகண் — அஞ்சாமை; பேழ்வாய் — பெரியவாய்.

நியாயமாகத் தம்முடைய பெருமைகளைத் தூதர்கள் மூலத்தில் விரும் பாத தமயந்தியை வஞ்சித்தாவது பெறல்வேண்டுமென்னுங்கருத்தால் மனித வடிவங்கொள்ளல் தமக்கிழிவேனும் இந்திரன் முதலிய நால்வரும் நளன் வடிவுகொண்டு வந்தனரென்க. காமமுள்ளவர்கள் அதன் விஷயத்தில் எதை யுஞ் செய்வார்களென்பது கருத்து. 17

கூற்றெனக்கொல்லும்வேழங்கொடியணிகொடிஞ்சித்திண்டேர்
பாற்றிரைக்கவரிகெற்றிப்பண்ணமைகலினப்பாய்மா
மாற்றருஞ்சிற்றத்துப்பின்வரிசிலையுழவரீட்ட
நாற்றிசைப்பரப்பும்போர்ப்பநாமமேவனளனும்வந்தான்.

இதனுல் நளன்வருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கூற்றென – யமனென்று சொல்லும்படியாக, கொல்லும்-கொலைசெய்கின்ற, வேழம் – யானைகளும், கொடியணி – கொடிகளணிந்த, கொடிஞ்சி – மேன்மொட்டையுடைய, திண் – வலிமைபெற்ற, தேர் – தேர்களும், பால் – பாலினுடைய, திரை – அலைகள்போன்ற, கவரி - சாமரைகள்கட்டிய, கெற்றி – நெற்றியையுடைய, பண் அமை – கல்லணையமைந்த, கலினம் - கடிவாளம்பூண்ட, பாய் – தாவுகின்ற, மா – குதிரைகளும், மாற்றரும் – நீக்குதற்கரிய, சிற்றம்பின் – கோபமிகுந்த, வரிசிலை – கெடிய வில்லையுடைய, உழவரீட்டம் – காலாட்கள் கூட்டமும், (ஆகிய இந்நால்வகைச் சேனைகளும்) நால்திசைப் பரப்பும் – நாலு திசைகளின் பரப்பெல்லாம், போர்ப்ப – மூடிக்கொண்டுவர, நாமம் – அச்சத்தைதருகின்ற, வேல் - வேற்படையையுடைய, நளனும் – நளமகாராசனும், வந்தான் – வந்தனன் எ-று.

இந்திரன் முதலிய தேவர்களே தமயந்தியை விரும்பிய தன்னைத் தூதாகவிடுத்தும் வேறு தூதிகளை யனுப்பியும் தடைசெய்தமன்றி, பின்னுந் தனதுருவங்கொண்டு வஞ்சிப்பதற்கு வருவதையறிந்தும் நளனவன் "ஊழையு முப்பக்கங் காண்ப ருலவின்றித், தாழா ஞற்றவர்" என்பதால் தாழாது செல்லுந்திறத்தினனுதலின் நளனுமென உயர்வு சிறப்பும்மை கொடுக்கப்பட்டது. 18

உலகொருமூன்றினுள்ளவொளிமுடிமன்னரெல்லா
மிலகுபொற்குடுமிவான்றேயெயிற்புறத்திறுத்தாராக
வலகில்வெஞ்சேனைசூழவரும்பெறற்சுற்றத்தோடும்
விலகிவில்லுமிழும்பைம்பூண்வித்தர்ப்பர்கோனெதிர்கொண்டானே.

இதனுல் சுயம்வரத்திற்கு வந்தவரை வீமன் எதிர்கொள்ளல் சொல்லப்படுகின்றது.

இ-ள். உலகொரு மூன்றினுள்ள – திரிலோகங்களிலுமுள்ள, ஒளி-காந்தியையுடைய, முடிமன்னரெல்லாம் – மகுடத்தையணிந்த அரசர்களெல்லாரும், இலகு – பிரகாசிக்கின்ற, பொன் குடுமி – பொன்னுலாகிய சிகரம், வான்றேய் - ஆகாயமளாவிய, எயில் புறத்து – மதிற் புறத்திலே, இறத்தாராக - தங்கினராக, (அதுகேட்டு), அலகில் – அளவற்ற, வெம் – வெவ்விய, சேனைசூழ – சேனைகள் சூழ்ந்துவர, அரும்பெறல் – பெறுதற்கரிய, சுற்றத்தோடும் – கிளைஞருடன், விலகி – வீசி, வில் – ஒளியை, உமிழும் – உமிழ்கின்ற, பைம்பூண் – பசிய ஆபரணத்தையுடைய, வித்தர்ப்பர்கோன் – வீமராசன், எதிர்கொண்டான் – எதிர்கொண்டனன் எ-று.

பலவித உபசாரங்களினும்எதிர்கொள்ளுதல் முற்பட்டதாகலின் அங்கு வந்த அரசர்களுக்கு வீமராசன் அதனைச் செய்தனனென்க. 19

விரைசெறியலங்கன்மாலைவிண்ணவர்விஞ்சைமன்ன
ருருகெழுமுரகவேந்தரோங்குநீருடுத்தஞாலத்
தரசிளங்குமாரோடுமளவளாய்முகமன்கூறி
வரிசையின்வழாமைநோக்கிவான்சிறப்பியற்றினனே.

இதனுல் வீமன் அவர்களுக்குச் சிறப்புச்செய்தல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். விரைசெறி – வாசமிகுந்த, அலங்கன்மாலை – மலர்மாலையை யணிந்த, விண்ணவர் – தேவர்கள், விஞ்சைமன்னர் – வித்தியாதரவேந்தர், உருகெழும் – வடிவுள்ள, உரகவேந்தர் – நாகவேந்தர், ஓங்கு – உயர்ந்த, நீருடுத்த ஞாலத்து – கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள, அரசிளங் குமாரோடும் – இராசகுமாரரோடும், அளவளாய் – கலந்து, முகமன்கூறி – உபசார வார்த்தைகளைச் சொல்லி, வரிசையின் – கிரமத்தினில், வாழாமைதப்பாமல், நோக்கி – ஆலோசித்து, வான் – மேலாகிய, சிறப்பு – சிறப்பை, இயற்றினன் – செய்தான் எ-று.

தன்னின் மிக்கோர்க்குச்செய்யும் எழுவகை மரியாதைகளுள் பிரியினுடங்கு சேறலொழித்து, இருப்பெழுகை, விரைந்துபோதல், எதிர்கொள்கையென்னு மூன்றும் முற்பாட்டிலும், தவிசினிடையிருத்தல், பூசைசெய்தல், இன்சொலாதியா லுவப்புச்செயல் என்னு மூன்றும் இப்பாட்டிலும் அடங்குதல் காண்க. அளவளாவல் – கலத்தல். "அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவளாய்" என்ற ஔவையார் திருவாக்கானு முணர்க. உருஉட்குமாம். 20

தோட்டலர்மாலைநாற்றித்துறக்கமோடுறழச்செய்த
வீட்டகந்தோறும்பைம்பொன்விளங்கிழைசெவ்விவாய்ப்பத்
தீட்டியவுருவிநோக்கித்தேறல்கொப்புளித்துமாந்தும்
பாட்டளித்தாமவேந்தர்பகற்பொழுதாற்றினரே.

இதனுல் அரசர்கள் பகற்பொழுது போக்கல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். தோடு – இதழ்களையுடைய, அலர் – மலராற்றொடுத்த, மாலை-மாலைகளை, நாற்றி – தொங்கக்கட்டி, துறக்கமோடு – தெய்வலோகத்துடனே, உறழ – ஒக்கும்படி, செய்த – செய்யப்பெற்ற, வீட்டகந்தோறும் – வீடுகளினிடந்தோறும், பைம்பொன் – பசியபொன்னினுல், விளங்கிழை – தமயந்தியினது, செவ்வி வாய்ப்ப – அழகுபொருந்த, தீட்டிய – எழுதிய, உருவு நோக்கி – பதுமைகளின் வடிவங்களைப் பார்த்து, தேறல் – தேனை, கொப்புளித்த – கொப்புளித்து, மாந்தும் – உண்ணுகின்ற, பாட்டு – இசைகளைப் பாடுகின்ற, அளி – வண்டுகள் மொய்த்த, தாமவேந்தர் – மாலையையணிந்த

அரசர்கள், பகற்பொழுது – பகற்காலத்தில், ஆற்றினர் – காமநோயைப் பொறுத்திருந்தார்கள் எ-று.

இவ்வரசர்கள் காமந்தலைக்கொண்டவர்க ளாகலால் அழகினுல் தாம் விழைந்த தமயந்திக்கொப்பாகிய பதுமைகளைப்பார்த்துப் பகற்பொழுதில் தமது காமநோயைச் சகித்துக்கொண்டிருந்தனரென்க. ஒப்புமை நோக்கல், சித்திரந்தீட்டல், கனவிற்காண்டல், அவர்மெய் யுற்றதைத் தீண்டல் இந்நான்கும் காமநோய்க்குப் பரிகாரமாம். "கூடும்பிரிவினினுங் கூடாப்பிரிவினினு – மோடுமன்பர் நோக்காட்சி யோவியத்தி, னுடல் – கனவர்மெய்ப் பூண்டவற்றைத் தீண்டலென்பர் காமத் – தினையுமவர்க் குற்றமருந்தே" இதனுலறிக. கூடும்பிரிவு – ஒரு நிமித்தம்பற்றிப் பிரிதல், கூடாப்பிரிவு – இறத்தல், இதுவடநூலிற்கண்டு மொழிபெயர்க்கப்பட்டது. விளங்கிழை செவ்விவாய்ப்பத் தீட்டிய வுருவென்பதற்கு, பிரகாசிக்கின்ற ஆபரணங்கள் அழகுபொருந்த எழுதப்பட்ட சித்திரமென்பாருமுளர். விளங்கிழை செவ்விவாய்ப்பவென உவமானமாகிய தீட்டியவுருவங்களே உவமேயமாகக் கூறலால் எதிர்நிலையணி. 21

சேயுயர்விசும்பிற்றேவர்தெண்டிரைப்பரவைசூழ்ந்த
மாயிருஞாலங்காக்குமன்னவருரகருற்ற
காயழற்காமவெந்தீகனற்றுமென்றஞ்சினுன்போற்
பாயிருளுலகம்போர்ப்பப்பகல்செய்வான்கடலுளாழ்ந்தான்.

இதனுல் சூரியாத்தமயனஞ்சொல்லப்படுகின்றது.

இ-ள். சேயுயர் – மிகவுமுயர்ந்த, விசும்பில் – தெய்வலோகத்திலிருக்கும், தேவர் – தேவர்களும், தெண்திரைப் பரவை சூழ்ந்த – தெள்ளிய அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற, மா இரு ஞாலங்காக்கும் – மகத்தாகிய பெரிய பூமியைப் புரக்கின்ற, மன்னவர் – அரசர்களும், உரகர் – நாகலோகத்தர்களும், உற்ற – (ஆகிய இவர்க) ளடைந்த, காய் – சுடுகின்ற, அழல்-வெப்பம் பொருந்திய, காமவெந்தீ – காமாக்கினி, கனற்றும் என்று – தன்னைச்சுடுமென்று, அஞ்சினன்போல் – பயந்தவன்போல், பாய் – பரவிய, இருள் – இருளானது, உலகம்போர்ப்ப – உலகத்தைமூடிக்கொள்ள, பகல் செய்வான் – சூரியனெனவன், கடலுள் – மேற்றிசைக்கடலுள், ஆழ்ந்தான்-அழுந்தினன் எ-று.

வெப்பத்தையுடைய சூரியனையும் அஞ்சச்செய்தலால் காமத்தீ அவனிலும் மிக்கதென்பது கருத்து அஞ்சினன்போலெனக் குறித்தலால் தற்குறிப்பணி. 22

விரிகதிர்மௌலிவிண்ணோர்மெய்யொளிபரத்தலானு
மரசிளங்குமரர்மார்பிலணிவெயிலுமிழ்தலானு
மூரகர்தஞ்சுடிகையுச்சியொளிர்மணியிமைத்தலானும்
பரிதிமேற்கடலுளாழ்ந்தும்பாயிருள்பரந்ததின்றே.

இதனால் இருள்பரவாமைக்குக் காரணஞ்
சொல்லப்படுகின்றது.

இ-ள். விரி — விரியப்பெற்ற, கதிர் — கிரணங்களையுடைய, மௌலி-மகுடங்களைத்தரித்த, விண்ணோர் — தேவர்களுடைய, மெய்யொளி — தேக காந்திகள், பரத்தலானும் - பரவுதலாலும், அரசிளங்குமார்மார்பில் — இராச குமாரர்கள் மார்பிலிருக்கும், அணி — ஆபரணங்கள், வெயில் — ஒளியை, உமிழ்தலானும் - கொப்புளித்தலாலும், உரகர் — நாகவரசர்களுடைய, சுடிகையுச்சி — முடியின்மேல், ஒளிர் — விளங்குகின்ற, மணி — இரத்தங்கள், இமைத்தலானும் — பிரகாசித்தலாலும், பரிதி — சூரியனெனவன், மேற்கடலுள் ஆழ்ந்தும் — மேற்கடலுளமுழ்தியும், பாய் — பாய்கின்ற, இருள் — இருளானது, பரந்தது இன்று — பரந்ததில்லை எ-று.

மெய்யொளி பரத்தல் அணிவெயி லுமிழ்தல் ஒளிர்மணி யிமைத்தல் ஆகிய பிரகாசங்கள் சூரியன் பிரகாசித்தல்போ லிருந்தனவென்பதுகருத்து. மெய்யணி மணிகளே இருள் பரவாமைக்குக் காரணமாகச் சொல்லப்பட்டமையால் கூட்டவணி. 23

மையவாங்கரியகூந்தல்வாள்கிடந்தனையவுண்கட்
பையரவல்குற்செவ்வாய்ப்பனிமொழிவதுவைவேட்டு
வெய்யசெங்கதிரினேடும்வெண்மதியுறைதறன்னு
லெய்துமிக்காலத்தன்னேயிரவென்கோபகலென்கேனே.

இ-ள். மை — அஞ்சனமானது, அவாம் — விரும்புகின்ற, கரியகூந்தல்-கருமையுள்ள கூந்தலையும், வாள்கிடந்தனைய — வாளாயுதங்கிடந்ததை யொத்த, உண்கண் — மையுண்டகண்களையும், பையரவல்குல் — அராப்படம் போன்ற அல்குலையும், செம் வாய் — சிவந்த வாயையும், பனிமொழி - குளிர்ச்சிபொருந்திய சொல்லையுமுடைய தமயந்தியினது, வதுவைவேட்டு-விவாகத்தை விரும்பி, வெய்ய — வெவ்விய, செங்கதிரினேடும் - சூரியனேடும், வெண்மதி — சந்திரன், உறைதல் தன்னுல் (அக்கரத்தில்) தங்குகின்ற படியால், எய்தும் — பொருந்திய, இக்காலத்தன்னை — இக்காலத்தை, இரவு என்கோ — இரவென்று சொல்லுவேனே, பகலென்கேனே - பகலென்று சொல்லுவேனே, [இன்னதென்று சொல்வேன்] எ-று. 24

தைமலர்த்தெரியல்வேந்தர்தளர்ந்துமெய்பதைத்துவாடப்
புதையிருட்போர்வைமெய்யிற்பொலிவுறப்போர்த்துவெய்ய
கதழெரிச்செக்கர்பேழ்வாய்திறந்துவெண்கதிர்குலாய
மதிவரிரெயிறுதோன்றவந்ததுமாலைக்கூற்றம்.

இப்பாட்டால் மாலைப்பொழுதின் வரவுசொல்லப்
படுகின்றது.

இ-ள். தை — நெருங்கிய, மலர்த்தெரியல் — மலர் மாலையையணிந்த, வேந்தர் - அரசர்கள், தளர்ந்து - தளர்ச்சியடைந்து, மெய்பதைத்து-தேகம்

பதைத்து, வாட – வாடும்படி, புதை – (உலகத்தை) மூடுகின்ற, இருள்போர் வை – இருளாகிய போர்வையை, மெய்யில் - (தன) உடம்பில், பொலிவுற- விளக்கமிக, போர்த்து-போர்த்துக்கொண்டு, வெய்ய – கொடிய, கதழ் – வே கத்தையுடைய, எரி-நெருப்பையொத்த, செக்கர் - செவ்வானமாகிய, பேழ் வாய்திறந்து - பெரியவாயைத்திறந்து, வெண்கதிர் - வெள்ளியகிரணங்கள், குலாய-விளங்கப்பெற்ற, மதி-சந்திரனுகிய, வகிர்-பிளப்பையுடைய, எயிறு- கோரப்பல்லானது, தோன்ற – தோன்றும்படி, மாலை-மாலைப்பொழுதாகிய, கூற்றம் – யமனுனது, வந்தது – தோன்றிற்று எ-று.

மாலைப் பொழுதானது விரகிகளைக் கொல்லப்பட்ட தாகவின் அதற் கேற்ப அதைக் கூற்றுவனுகவும், இருளை மறைக்கும் போர்வையாகவும், செ வ்வானத்தைப் பேழ்வாயாகவும், பிறையைப் பல்லாகவும் உருவகஞ்செய்தார், ஆதலால் அக்கூற்றுவன் தான் கொல்வதே யன்றித் தன்போர்வையால் மறைத்தும் வாயால்விழுங்கியும் பல்லாற் கறித்தும் கொல்வானென்பதாயி ற்று. இஃது உருப்புடை யுருவகவணி. 25

விரிகதிர்பரப்பிவானமீதெழுகுழவித்திங்க
ளெரிமணிப்பூண்செய்திண்டோளெழுபுவிவேந்தர்மேலும்
வரிசிலைகுழையவாங்கிமண்டமர்தொடங்குமாரன்
குரைகடன்முரசமெற்றுங்குணிலெனச்சிறந்ததன்றே.

இதுமுதல் ஏழுபாட்டால் வளர்பிறையின்
ரூற்றஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். விரிகதிர் – விரிந்த கிரணங்களை, பரப்பி – பரவச்செய்து, வான் மீது - ஆகாயத்தில், எழு – எழுந்த, குழவித்திங்கள் - இளம்பிறை, எரி-விள ங்குகின்ற, மணி – இரத்தினங்கள் பதித்த, பூண்செய் – ஆபரணங்களை யணி ந்த, திண்தோள் – வலிமையுள்ள தோளையுடைய, எழுபுவிவேந்தர்மேலும்- எழுதீவிலுள்ள அரசர்கள்மேலும், வரி – நெடிய, சிலை – வில்லை, குழையவா ங்கி - வளையவளைத்து, மண்டு - நெருங்கிய, அமர் – போரை, தொடங்கு மா ரன் – ஆரம்பிக்கு மன்மதனது, குரை – ஒலிக்கின்ற, கடல்முரசம் – கட லாகிய பேரிகையை, எற்றும் – அடிக்கின்ற, குணில் என – குறுந்தடி போல், சிறந்தது – சிறந்திருந்தது எ-று.

அழகிற் சிறந்த தமயந்தியை விழைந்து வந்த அரசர்களனைவரும் அவ் விரவில் அளவற்ற காமவருத்தத்தை அடைவதற்கு மன்மதன் காரணமாத லால் இதுகாறும் போலன்றி அதிகமுயற்சியோடு படையெடுத்து வருவதற் குக் குறியாக அக்காலத்தில் ஒலிக்குங் கடலை முரசமாக்கி அங்கணுண்டா கிய பிறையை அதை எற்றுங்குணிலாகக் கூறினரென்க. 26

ஏர்குடியிருந்தகங்கையிளமுலைப்போகம்வேட்ட
சீர்மலிகடலந்தானைநெடுநிலவேந்தர்தம்மேல்
வார்சிலைத்தடக்கைமாரன்மண்டமர்புரியத்தூண்டுங்
கூர்முள்வேழக்கோட்டினெழுந்ததுகுழவித்திங்கள்.

இ-ள். குழவித்திங்கள் – இளம்பிறையானது, ஏர் – அழகுகளானவை, குடியிருந்த - ஒருங்குபடத்தங்கி யிருக்கப்பெற்ற, நங்கை – தமயந்தியினது, இள் - இளமையாகிய, முலை – ஸ்தனங்களினது, போகம் — அணைதலை, வேட்ட – விரும்பிய, நீர்மலி - நீர்மிகுந்த, கடல் – கடலாகிய, அம் – அழகிய, தானை – ஆடையையுடைய, நெடுநிலம் – நெடிய பூமியிலுள்ள, வேந்தர் தம்மேல் – அரசர்கள்மீது, வார்சிலை – நீண்டவில்லையேந்திய, தடக்கை- விசாலமாகிய கையையுடைய, மாரன் — மன்மதன், மண்டு அமர்புரிய- நெருங்கிய யுத்தத்தைச்செய்ய, தூண்டும் – நடத்தப்பட்ட, கூரிருள் – மிகுந்த இருளாகிய, வேழம் – யானையினது, கோட்டின் – கொம்புபோல், எழுந்தது – உதித்தது எ-று.

கீழ்த்திசைத் தோன்றிவரும் இருளை அக்காலத்தில் வரு மன்மதனது யானையாகக்கூறி மேற்றிசைத் தோன்றியபிறையையும் அதற்குக் கொம்பாகச் சொல்லப்பட்டது. இதனால் இவ்விரண்டும் காமனைப்போலும் விரகிகளுக்குக் காமத்தை விளைவித்து வருத்துமென்பது கருத்து. இருள்வேழமென்பது உருவகம். கோட்டினெழுந்த தென்பது தற்குறிப்பணி. இது முன்னுருவகத்தை அங்கமாகக்கொண்டது. 27

கள்ளுயிர்த்தினவண்டார்க்குங்கமலம்வாய்முகிழ்ப்பச்செய்ய
வள்ளலங்கயத்துளாம்பலர்த்தியகுழவித்திங்க
டெள்ளுசெங்கதிரோன்மாலைத்தெரிவைவெம்முலையிற்கோட்டும்
வள்ளுகிர்க்குறியிற்றோன்றிப்பொலிவுறவயங்கிற்றன்றே.

இ-ள். கள் - தேனை, உயிர்த்து - தந்து, இனம் – கூட்டமாகிய, வண்டு – வண்டுகள், ஆர்க்கும் – ஒலிக்கின்ற, கமலம் – தாமரைமலர்கள், வாய் முகிழ்ப்ப – குவிய, செய்ய – சிவந்த, அள்ளல் – குழைசேற்றையுடைய, அம் - அழகிய, கயத்துள் – தடாகத்துள், ஆம்பல் - அல்லிகளை, அலர்த்திய- அலரச்செய்த, குழவித்திங்கள் – இளம்பிறையானது, தெள்ளு – தெளிந்த, செங்கதிரோன் – சிவந்த கதிரையுடைய சூரியனெனவன், மாலை – மாலைப் பொழுதாகிய, தெரிவை – மங்கையினுடைய, வெம்முலையில் - விருப்பத்தைச்செய்யுங் கொங்கைகளில், கோட்டும் – ஊன்றிய, வள் – கூறிய, உகிர்க்குறியின் – நகக்குறியைப்போல், தோன்றி – உண்டாய், பொலிவுற- அழகுபொருந்த, வயங்கிற்று – விளங்கிற்று எ-று.

சூரியனோடுகூடிப் பிரிந்து நின்ற மாலைப்பொழுதிற் காணப்படுகின்ற பிறையினை அவன்செய்த நகக்குறியாகக் கூறினர். புணருமிடத்து நகக்குறியுண்டாதல், "பற்குறி நகக்குறிகள் பாணிகொடுதட்ட, னற்கமிழ்து தூய்த்தல்களி நன்றெழவேத்த, லற்குகர ணங்களறி யாருமெளிதாகக், கற்கும் வகை நின்றன கதிர்த்தமணி யோவம்" இலலலறிக. மாலைப்பொழுதிலுண்டாகிய பிறையினைச் சூரியனோடு கூடிப்பிரிந்த மாலைப்பெண்ணின் முலைக்குறியாகக் குறித்தலால் இது தற்குறிப்பணி. 28

சேட்டிளம்பரிதிமார்பினளனுக்குத்தெரியனாலைச்
சூட்டுவடெரிவையென்னத்துலங்குகீழ்த்திசைமாதன்பிற்
காட்டியநிருத்தக்கையிற்கதிர்நிலவுமிழுந்தண்ணென்
கோட்டிளங்குழவித்திங்கள்குடபுலத்தெழுந்ததன்றே.

இ-ள். சேடுஇளம் – மிகுந்த இளமையையுடைய, பரிதி – சூரியன் போன்ற, மார்பின் – மார்பினிடத்தில், நளனுக்கு நளமகாராசனுக்கு, நாளை – நாளைப்பொழுதில், தெரிவை – தமயந்தியானவள், தெரியல்சூட்டுவ லென்ன – மாலையைத் தரிப்பாளென்று, துலங்கு – விளங்குகின்ற, கீழ் திசைமாது – கிழக்குத்திக்காகிய மங்கையானவள், அன்பின் – அன்பினாலே, காட்டிய – காட்டப்பட்ட, நிருத்தக்கையில் – அபிநயக்கைபோல், கதிர் – கதிர் களாகிய, நிலவுமிழும் – ஒளியைக்கொப்புளிக்கின்ற, தண்ணென் – குளிர்ச்சி பொருந்திய, கோடு – வளைந்த, இளங்குழவித் திங்கள் – மிகுந்த இளமை பொருந்திய பிறையானது, குடபுலத்து – மேற்குத்திசையில், எழுந்தது – உதயமாயிற்று எ-று.

நாடகக்கணிகையர் தமது கருத்தினுள்ளதை அபிநயத்தால் அபிமுகத் திற் காட்டுதலியல்பாதலின் அவ்வாறு கீழ்த்திசை மாது தமயந்தி நள னுக்கு மாலைசூட்டலைக் காட்டிய நிருத்தக்கைபோல் இளம்பிறை யெழுந்த தென்றார். அபிநயக்கையாகிய * இணையாவினைக்கை மூப்பத்து மூன்றுள் இளம்பிறைக்கை என்று மொன்றுளதாகலின் இளம்பிறை யெழுதலை நிருத் தக்கையென்றார். இளம்பிறை என்னுங் கையாவது – சுட்டுவிரல், நடுவிரல், பவித்திரவிரல், சிறுவிரல் என்னு நான்கும் உள்ளேவளைய, பெருவிரல் நிமிர்ந்து நிற்பது அது, "சுட்டுபேடு மகாமிகை சிறுவிர – லொட்டியசம் வளைய வொசித்த பெருவிரல் – விட்டு மீங்கும் விதியிற்றென்ப" என்னும் நாடகநூல் விதியாலுணர்க. பிறையில் நிருத்தக்கையைக் குறித்தமையால் தற்குறிப்பணி. 29

கூன்பயில்குழவித்திங்கள்கொள்ளவண்டிருந்துபாடக்
கான்பயின்மலரம்போதுங்கன்னலஞ்சிலைக்கைவேட
னூன்பயில்குருதிவேற்கணெண்ணுதன்மடவாருள்ள
மீன்கவர்தூண்டிலென்னவிசும்பிடைவிளங்கிற்றன்றே.

இ-ள். கூன்பயில் – வளைவுபொருந்திய, குழவித்திங்கள் – இளம்பிறை யானது, கொள்ள – மிகுதியாக, வண்டிருந்து – வண்டுகளிருந்து, பாட-

* இணையாவினைக்கை மூப்பத்துமூன்று வகையாவன—பதாகை, திரி பதகை, கத்திரிகை, தூபம், ஆளம், இளம்பிறை, சுகதுண்டம், மூட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திராம், பிரமாம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரி நிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி என்பனவாம்.

பாடலேச்செய்ய, கான்பயில் — வாசம்பொருந்திய, மலரம்பேந்தும் — மலர்க் கணைகளேயேந்திய, கன்னலஞ் சிலைகைவேடன் — மன்மதனது, ஊன்பயில்-தசைபொருந்திய, குருதி — உதிரத்தையுடைய, வேல்கண் — வேல்போன்ற கண்களேயும், ஒண்றுதல் — ஒளிபொருந்திய நெற்றியையுமுடைய, மடவார்-மாதரது, உள்ளம் — மனமாகிய, மீன் — மீனை, கவர் — அபகரிப்பதற்குப் போடப்பட்ட, தூண்டில் என்ன — தூண்டிலேப்போல், விசும்பிடை — ஆகாயத்தினிடத்து, விளங்கிற்று — பிரகாசித்தது எ-று.

மாமிசத்தை விரும்பிப் பற்றிய மீன்களேத் தூண்டில் இறக்கும்படி செய்வதுபோல், இப்பிறையும் காமவிடாய்நீரத் தன்னேப்பார்க்கின்ற பிரிந்தவரை வருத்துவதாகலின் இவ்வாறு கூறினர். பிறையைத் தூண்டின் முள்ளாகக் குறித்தமையால் தற்குறிப்பணி. 30

நீனிறத்தங்கண்வான நீள்கடற்பரப்பிற்றாய
வானிலாக்கதிர்கள்வீசிவயின்வயின்விளங்குகின்ற
மீனெனுங்கதிர்கொண்முத்தவெண்மணியுயிர்த்துத்தோன்றுங்
கூன்முதுகிப்பியென்னவெழுந்ததுகுழவித்திங்கள்.

இ-ள். குழவித்திங்கள் — இளம்பிறையானது, நீனிறத்து — நீலநிறத்தையுடைய, அம்கண் — அழகிய இடத்தையுடைய, வானம் — ஆகாயமாகிய, நீள் — நீண்ட, கடற்பரப்பில் — கடலினது பரப்பிலே, தூய — பரிசுத்தமாகிய, வால் — வெள்ளிய, நிலாக்கதிர்கள் — பிரகாசத்தையுடைய கிரணங்களே, வீசி-எறிந்து, வயின்வயின் — இடங்கள்தோறும், விளங்குகின்ற — பிரகாசிக்கின்ற, மீனெனும் — மீனென்கிற, கதிர்கொள் — கிரணங்களேக்கொண்ட, முத்த வெண்மணி — வெள்ளிய முத்தங்களே, உயிர்த்து — ஈன்று, தோன்றும் — விளங்கும், கூன்முதகு இப்பியென்ன — வளைந்த முதுகையுடைய இப்பியைப்போல், எழுந்தது — எழுந்தது எ-று.

மீனெனு முத்தமென்றது — உருவகம் கூன்முதுகிப்பி யென்னவெனக் குறித்தலால் தற்குறிப்பணி. அங்கண் — இடமகன்ற. 31

ஒங்குயர்விசும்புபூத்தவுடுப்புகர்முகத்ததாய
வாங்குவிற்றடக்கைமாரன்மலர்தலையுலகிற்றாண்டுந்
தூங்கிருட்களிகல்யானைதுரத்திடுந்தோட்டிபோலத்
தீங்கதிர்க்குழவித்திங்கள்சேணிடைத்திகழ்ந்ததன்றே.

இ-ள். தீங்கதிர் — நித்திப்புப்பொருந்திய கிரணங்களேயுடைய, குழவித்திங்கள் — இளம்பிறையானது, வாங்கு — வளைக்கப்பட்ட, வில் — கருப்புவில் லேந்திய, தடகை — விசாலம்பொருந்திய கையையுடைய, மாரன் — மன்மதனவன், மலர்தலை உலகில் — பரந்த இடத்தையுடைய வுலகத்தில், தாண்டும் — செலுத்துகின்ற, ஒங்குயர் — மிகவுமுயர்ந்த, விசும்பு — ஆகாயத்தில், பூத்த — உண்டாகிய, உடு — தாரகைகளாகிய, புகர் முகத்ததாய — புள்ளி

பெற்ற மூகத்தையுடையதாகிய, தூங்கு – தங்கிய, இருள் – இருளாகிய, களி நல்யானை – களிப்பையுடைய நல்லயானையை, தூரத்திடும் – ஓட்டுகின்ற, தோட்டிபோல – அங்குசம்போல், சேணிடை – ஆகாயத்தினிடத்து, திகழ்ந்தது – பிரகாசித்தது எ-று.

இதுவும் அவ்வணி. 32

பிள்ளைமாமதியங்கான்றநிலவழற்பிழம்புபற்ற
வுள்ளநெக்குருகிமாழாந்துலம்பொருவயிரத்திண்டோ
ளள்ளிலைவடிவேலேந்துமரசிளங்குமரர்பூண்ட
தள்ளருங்காதலெம்மாற்சாற்றலாந்தகைமைத்தன்றே.

இ-ள். பிள்ளை மாமதியம் – இளம்பிறையானது, கான்ற-வீசிய, நிலவு-சந்திரிகையாகிய, அழல் பிழம்பு – அக்கினித்திரட்சியானது, பற்ற-பிடிக்க, (அதனால்) உள்ளம் – மனமானது, நெக்குருகி – மிகவுமுருகி, மாழாந்து-மயங்கி, உலம்பொரு – திரள்கல்லையொத்த, வயிரம் திண்தோள் – வச்சிரம்போன்ற திண்ணியதோளையுடைய, அள் இலை-தசையையள்ளிக்கொள்ளுகின்ற இலையையுடைய, வடிவேல் ஏந்தும் – வடித்தவேலையேந்துகின்ற, அரசிளங்குமாரர் – இராசகுமாரர்கள், பூண்ட – அடைந்த, தள் அருங்காதல் – தள்ளுதற்கரிய ஆசை, எம்மால் – எம்மால், சாற்றலாம் – சொல்லலாமாகிய, தகைமைத்தன்று – தகைமையையுடையதன்று எ-று.

• காமமானது எப்படிப் பட்டவர்களாலும் விலக்குதற்கரிதாகையால் தள்ளருங் காதலென்றார். தள்ள என்பதன்கண் அகரந்தொகுத்தல் விகாரம். இதுவும் வரும்பாட்டும் ஆசிரியர் கூற்றெனக் கொள்க. இல – இலத்தொழிலுமாம். வடி – கூர்மை. 33

ஏற்றுரிமுரசந்துஞ்சாவிதர்ப்பர்கோனினிதினீன்ற
கோற்றொடிவதுவைவேட்டுக்கூரிருட்கங்குற்போதிற்
றூற்றிளம்பூகவேலித்தண்பணைநிடதங்காக்கு
மாற்றல்சானளனுக்குற்றவருந்துயருரைக்கலுற்றும்.

இ-ள். ஏறு உரி – இடபத்தின் றோலாற் செய்த, முரசம் – பேரிகையானது, துஞ்சா – உறங்காத வாயிலையுடைய, விதர்ப்பர்கோன் – வீமன், இனிதினீன்ற – இனிமையினாற்பெற்ற, கோற்றொடி – தமயந்தியினது, வடிவைகேட்டு – விவாகத்தை விரும்பி, கூரிருள் – மிகுந்த இருளையுடைய, கங்குல்போதில் – இராப்பொழுதில், தாறு – குலைகளையுடைய, இளம்பூகவேலி-இளமைபொருந்திய கமுகவேலிசூழ்ந்த, தண் – குளிர்ச்சிபொருந்திய, பணை-வயல்களையுடைய, நிடதங்காக்கும் – நிடததேசத்தைப்புரக்கின்ற, ஆற்றல் சால் – வலிமைமிக்க, நளனுக்கு – நளமகாராஜனுக்கு, உற்ற – பொருந்திய, அருந்துயர் – பொறுத்தற்கரிய துயரை, உரைக்கலுற்றும் – சொல்லத்தொடங்கினும் எ-று.

வலிமை மிக்க நளனாலும் பொருத்தற்கரிய தயரென்றது அதன் அருமையைக் குறிப்பித்து நின்றது. ஆற்றல் – பொறையுமாம். 34

கலிவிருத்தம்.

பனிமைக்கடலிற்படுமாரமிர்தோ
டினிதிற்றிருவோடுமெழுந்தனையென்
மனனுற்றவள்வாணுதல்போலுதியாற்
கனலத்தகுமோகலைவெண்மதியே.

• இதனால் நளன் பிறையை வெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கலை - கலையையுடைய, வெண்மதியே – வெள்ளிய சந்திரனே, பனி – குளிர்ச்சிபொருந்திய, மை – கரிய, கடலிற்படும்-கடலிற்றோன்றிய, ஆர் – நிறைந்த, அமிர்தோடு – அமிர்தத்துடன், இனிதின்-இனிமையுடைய, திருவோடும் – இலக்குமியுடன், எழுந்தனை – தோன்றினாய், என்மனனுற்றவள் – என்மனத்தி லிருப்பவளாகிய தமயந்தியினது, வாள் – ஒளிபொருந்திய, நுதல்போலுதியால் – நெற்றிபோ லிருக்கின்றாய், கனலத்தகுமோ-(நீ) (என்னைச்) சுடத்தகுமா ? எ-று.

நீ தோன்றிய இடத்தின் குணத்தையும் உடன் பிறந்தோர் தன்மையையும், உணராவிடினும், தமயந்தியினது நிகரில்லாத நெற்றிக்குநிகராவாய்; இப்பொழுது அதற்குரியமகிழ்ச்சி செய்வதைவிட்டு வெப்பஞ்செய்யின் அப் பெருமை உனக்குத் தகாதென்பது கருத்து. மனன் – போலி ஆல் • அசை.

கொந்தார்குவளைக்குளிர்மென்மலரிற்
பைந்தாதுதுதைந்துபடிந்துநறுஞ்
சந்தாடவியூடுதவழ்ந்துவரு
மந்தாநிலமேயுயிர்வெளவுதியோ.

இதனால் தென்றலை வெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொந்தார் – திரளாக நிறையப்பெற்ற, குவளை-உற்பலத்தினது, குளிர் – குளிர்ச்சிபொருந்திய, மென்மலரில் – மெல்லியமலர்களி லிருக்கும், பைந்தாது – பசிய மகரந்தங்களில், துதைந்து – நெருங்கி, படிந்து – முழுகி, நறும் – நறிய, சந்தாடவியூடு - சந்தனக்காட்டினிடத்தில், தவழ்ந்துவரும்-தவழ்ந்துவருகின்ற, மந்தா நிலமே – இளந்தென்றலே, (நீ) உயிர் – என்னுயிரை, வெளவுதியோ - அபகரிக்கின்றனையோ ? எ-று.

தென்றலுக்குக் குளிர்ச்சியும் மணமும் மென்மையும் சிறந்தனவாயினும் பிரிந்தவரை வருத்துதலால் இவ்வாறு கூறினன். இக்கருத்தைக்கொண்டமையால் கருத்துடையடை கொளயணி. 36

அயில்வாளிதுரந்தடல்வேள்பொரலாற்
செயலேதுமிலாதுநிகைத்தயர்வே

உயிர்போல்பவளின்சொலுணர்த்திவரிக்
குயிலேயெனதாருயிர்கொல்லுதியோ.

இதனாற் குயிலேவெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அடல் – கொலைசெய்கின்ற, வேள் – மன்மதனனவன், அயில்-கூர்மைபொருந்திய, வாளி – அம்புகளே, தாரந்து – செலுத்தி, பொரலால்-பொருதலால், செயல் ஏதுமிலாது – ஒருசெய்கையுமில்லாமல், திகைத்து-மயங்கி, அயர்வேன் – வருந்துவேனுகிய எனது, உயிர்போல்பவள் – உயிரை யொப்பவளாகிய தமயந்தியினது, இன்சொல் – இனியமொழியை, உணர்த்தி – அறிவித்து, வரிக்குயிலே – இசையையுடைய குயிலே, எனது – என்னுடைய, ஆர் – நிறைந்த, உயிர் – உயிரை, கொல்லுதியோ – கொல்லுகின்றனையோ ? எ-று.

ஒருவரோடு பொருது இளைத்தவரை, வேறொருவன் வெல்லவருவது தகாதென்பது கருத்து. இவ்விரண்டு பாட்டாலும் சுயம்வரம் வேனிற்கால த்தி லென்பது பெற்றும். 37

விண்ணோர்விடுதூதுவிளம்புதலாற்
பெண்ணரமிர்தேபிழைசெய்தனனே
வெண்ணுதுறுமிந்திரசாலமெனக்
கண்ணுடுபுகுந்துகரந்தனையே.

இது உருவெளித்தோற்றத் தமயந்தியைக்
குறித்துச் சொல்லியது.

இ-ள். விண்ணோர்-தேவர்களால்,விடு – விடுக்கப்பட்ட, தூது-தூதினை, விளம்புதலால் – சொல்லுதலால், பெண்ணரமிர்தே – தமயந்தியே! பிழை செய்தனனே – குற்றஞ்செய்தேனே, எண்ணுத – நினைக்கப்படாத, (அனைத்தும்) உறும் – பொருந்துகின்ற, இந்திரசாலமென – இந்திர சாலவித்தை போல், கண்ணுடு – என்கண்ணிடத்தில், புகுந்து – நுழைந்து, கரந்தனை-ஒளித்தாய் எ-று.

தூதாக வந்தவிடத்து யான்சொல்லியது குற்றமாகக் கொள்ளின் அது எனதன்று, தேவர்கள்செய்தது; ஆதலின் நீஎன்கண்ணெதிர்வந்து நில்லாது மறைவதற்கு யானெரு குற்றமுஞ் செய்திலனென்பதாம். எண்ணுத-தொகுத்தல் விகாரம். 38

தூஞ்சாதயர்வோடுயிர்சோர்தரவெந்
நஞ்சார்விழிவேலெறிகன்னுதிலாம்
பஞ்சேரடியாயிழைபாலுரையு
நெஞ்சேயெனைநீயுநினைந்திலையே.

இது தன்னெஞ்சைக்குறித்துச் சொல்லியது.

இ-ள். தூஞ்சாது – உறங்காமல், அயர்வோடு – தன்பத்தோடு, உயிர்-ஆவியானது, சோர்தர – தளர்ச்சியடைய, வெம் – வெப்பம்பொருந்திய,

நஞ்சார் - விடநிறைந்த, விழிவேல் - கண்ணுகியவேலை, எறி - எறிகின்ற, நன்னுதலாம் - நல்ல புருவத்தையுடையவளாகிய, பஞ்சு-செம்பஞ்சுக் குழம் பணிந்த, எர் - அழகிய, அடி - பாதங்களையுடைய, ஆயிழையாள் - தமயந்தி யிடத்து, உறையும் - தங்குகின்ற, நெஞ்சே - என்மனமே, எனை - என்னை, நீயும் - நீயும், நினைந்திலை - நினைந்தாயில்லை.

இடுக்கண் வரும்போது தனக்கு உயிர்போ லிருப்பவரும் உதவாரென் பது கருத்து எ-று. 39

என்றூர்வமொடின்ன புலம்பிமணிக்
குன்றூர்புயன்மெய்த்துயர்கூர்தரலும்
பொன்றூழ்பிதிர்சிந்தியபொம்மன்முலைப்
பின்றூழ்குழலுற்றதுபேசிடுவாம்.

இது கவி தன்கூற்றால் நிகழ்ந்தவை கூறல்.

இ-ள். என்று - இப்படியென்று, ஆர்வமொடு - ஆசையோடு, இன்ன - இத்தன்மையவாக, புலம்பி - இரங்கி, மணி - அழகிய, குன்றூர்புயன் - நள மகாராசன், மெய் - உண்மையாகிய, துயர் கூர்தரலும் - அதிக துன்பங் கொண்ட அளவில், பொன் - பொன்னைனது, தாழ் - தாழும்படி, பிதிர்- தேமல், சிந்திய - சிதறிய, பொம்மல் - பொலிவுபெற்ற, முலை - முலை களையும், பின் - பிற்பக்கத்தில், தாழ் - தாழ்கின்ற, குழல் - கூந்தலையு முடைய தமயந்தி, உற்றது - அடைந்ததுயரத்தை, பேசிடுவாம் - சொல்லு வாம் எ-று. 40

கணைவேணிகர்காமருகாளைபுயத்
தணையாமலென்மார்பகலங்கவரா
வணைமால்வரையென்னவளர்ந்தனிராற்
பணைமாமுலைகாள்பயனென்னைகொலாம்.

இது தமயந்தி தன்கொங்கைகளைப் பார்த்துச் சொல்லியது.

இ-ள். கணை - மலர்க்கணைகளையுடைய, வேள்நிகர் - மன்மதனையொ த்த, காமர் - அழகிய, காளைபுயத்து - நளமகாராசனுடைய தோள்களில், அணையாமல் - அழுந்தாமல், என் - என்னுடைய, மார்பகலம் - மார்பினிட மெல்லாம், கவரா - கவர்ந்துக்கொண்டு, இணை - இரண்டாகிய, மால்- பெரிய, வரையென்ன - பர்வதங்களென்று சொல்லும்படி, வளர்ந்தனிர்- வளர்வுற்றீர்கள், பணை - பருத்த, மா - மகத்தாகிய, முலைகாள் - தனங் களே, பயன் - (உமக்கு நமக்கும்) பயன், என்னைகொல் - யாது எ-று.

பணைமா முலைகாள் எனவிளித்துப் பொதுப்படப் பயனென்னைகொல் எனலால் மலைபோல்வளர்ந்து பெரிய மார்பகலங் கவர்ந்த நம்மைச்சமந்த எனக்கு நன்மைசெய்ய நினைத்து நளன் மார்பகத்துப் புல்லாவிடினும் நீர் பிறந்ததற்காவது பயன்கருதி யிணைந்தீரில்லை; ஆதலால் தனக்கும் பிறர்க் கும் பயன்படாத நம்போலும் வீணரில்லை யென்பதாம். 41

முனம்வானவர்தூதுமொழிந்திடுநாட்
புனைதாரவன்மார்பிடைபுல்லியுநீ
நினையாதுவிடுத்தனைநின்றுருகு
மனனேயினியென்கொல்வருந்துவதே.

இ-ள். முனம் – முன்னே, வானவர் - தேவர்களுடைய, தூது - தூதை, மொழிந்திடு நாள் – சொல்லியநாளில், புனைதாரவன் – நளமகாராசனுடைய, மார்பிடை – மார்பினிடத்திலே, புல்லியும் – தழுவியும், நீ நினையாது- நீ எவ்வளவுஞ் சிந்தியாமல், விடுத்தனை – அவனைவிட்டு, நின்று – நிகைத்து நின்று, உருகும் – கரைகின்ற, மனனே – நெஞ்சமே, இனி என்கொல்- இப்போது என்னகாரணமாக, வருந்துவது – வருத்தமடைவது? எ-று.

சமயம் வந்தகாலத்திற் பெறவேண்டுவதைப் பெறாமல் விடுத்துப் பின் வருந்துவதிற் பயனில்லையாயினும் பிறரானகைக்கப்படுவா யென்பது கருத்து. முன் என்னுமிடைச்சொல் அம் சாரியை பெற்றுநின்றது; காலப் பொருட்டு. மனம் – மனன் எனப்போலி. இனி என்னு மிடைச்சொல் எதிர்காலப் பொருட்டது. கொல் – அசைநிலை. 42

நண்ணர்தொழுவேனளன்மார்பகலக்
தண்ணாரணையிற்றழுவுங்கனவி
லெண்ணாதுவிழித்துவிடுத்திடுமென்
கண்ணேயிஃதென்கொல்கலுழ்வதுவே.

இது கண்களைக்குறித்துச் சொல்லியது.

இ-ள். நண்ணர் - பகைவர், தொழு – துதிக்கின்ற, வேல் - வேலையேந்திய, நளன் – நளமகாராசனுடைய, மார்பகலம் - மார்பினை, தண்ணர்- குளிர்ச்சிபொருந்திய, அணையில் - மெத்தையில், தழுவும் – தழுவுகின்ற, கனவில் – சொப்பனத்தில், எண்ணாது – ஆலோசியாமல், விழித்து - விழித்துக்கொண்டு, விடுத்திடும் – விட்டுவிடுகின்ற, என்கண்ணே – என்கண்களே, இஃதென்கொல் – இது என்னகாரணமாக, கலுழ்வது – கலங்குவது எ-று.

பிறரால்றி நின்ஞற்செய்யப்பட்ட குற்றத்துக்கு நீயே வருந்துவது பேதமையென்பது கருத்து. இடை – பகுதிப்பொருள் விகுதி. 43

தூதைகாண்மலர்வாளிதுரந்துதுரந்
தெதிர்வேளுயிர்கொல்லுதலெண்ணிலெளீள்
கதிர்வாணிலவாரமுல்கான்றெழுவெண்
மதியேயெனைநீயும்வருத்துதியோ.

இதனுற் சந்திரனை வெறுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தூதை – நெருங்கிய, காண் மலர் – புதிய மலராகிய, வாளி- பாணங்களை, துரந்து துரந்து – விடுத்து விடுத்து, எதிர் – எதிர்கின்ற,

வேள் - மன்மதனனவன், உயிர்கொல்லுதல் – உயிரைக்கொல்லுதலை, எண்ணிலை — நினைத்தாயில்லை, நீள் - நீண்ட, கதிர் – கிரணங்களினுடைய, வாள் – ஒளியுள, நிலவு – சந்திரிகையாகிய, ஆரழல் - மிகுந்ததீயை, கான்று-வீசிக்கொண்டு, எழு – தோன்றுகின்ற, வெண்மதியே — வெள்ளிய சந்திரனே, எனை - என்னை, நீயும் - நீயும், வருத்துதியோ - வருத்துகின்றனையோ?

தூரந்தூரந்து என்ற அடுக்கு மிகுதிப்பொருளில்வந்தது. அச்சப்பொருட்டென்பர் ஓர்சாரார். என்னுயிரை வருத்துவதற்கு மன்மதனொருவனே போதும்; அப்படியிருக்க நீயும் அத்தொழிலின் முயல்வது அரைக்கப்பட்டதை அரைப்பதுபோற் பயனில்லையென்பது கருத்து. நிலவு ஆரழல் - உருவக வலங்காரம். 44

வேளாண்மைசெலுத்தல்விலக்கிலையாய்
வாளாவுறைகின்றதுமன்னறமோ
தோளாண்மையின்மன்னர்தொழுஞ்சுடர்வேற்
காளாயெனதாருயிர்காவலனே.

இது நளனைக்குறித்துச் சொல்லியது.

இ-ள். தோளாண்மையின் – புயவலிமையினால், மன்னர்தொழும்-அரசர்களால் வணங்கப்பட்ட, சுடர்வேற்காளாய் – ஒளிபொருந்திய வேலைத் தரித்த காளையையொத்தவனே, எனது - என்னுடைய, ஆர் – நிறைந்த உயிர் — உயிருக்கு, காவலனே - அரசனுகிய நளமகாராசனே! வேள் – மன்மதனனவன், ஆண்மை செலுத்தல் – (உனை விழைந்த என்னிடத்துப்) பராக்கிரமஞ் செலுத்துவதை, விலக்கிலையாய் - ஒழிக்காதவனுய், வாளா உறைகின்றது - சும்மாவிருக்கின்றது, மன் அறமோ - அரசரது தருமமோ? எ-று.

வாளா என்பது பயனின்மைப் பொருளைத் தருமிடைச்சொல். தன் றேயத்திலுள்ளவர் தீங்கு செய்யின் அதை விலக்கிக் காப்பது அரசர் தருமமாகும், அங்ஙனமாதலின் நின்னையே யடைக்கலமாயுள்ள என்னிடத்து வேளானவன் தனது ஆண்மையைச் செலுத்தினால் அதை நீ விலக்கி அருள் செய்யாயாயின் நின்னை மிழுக்குற்றதுமன்றி நினக்கும் பழிப்புண்டாகும் என்றதாம். அறமோ ஓகாரம் எதிர்மறைப்பொருள். வேளாண்மை என்னும் சொல் ஈண்டுச்சார்புபற்றித் தொடர்மொழியாக் கொள்ளப்படும். 45

இடரோதவிராதிரவோவிடியா
தடல்வேலவர்தாமருளாபுரியார்
குடவால்வளையேகுருகேதிரையே
கடலேகழியேயிதுவோகடனே.

இ-ள். குடவால் வளையே — குடம்போன்ற வெள்ளிய சங்கே, குருகே-காரையே, திரையே – அலையே, கடலே – சமுத்திரமே, கழியே – கழிலிலமே, இடரோ — துன்பமோ, தவிராது – நீங்காது, இரவோ — இராத்

தரியோ, விடியாது – விடியமாட்டாது, அடல் – கொலைசெய்கின்ற, வேல வர்தாம் – வேற்படையையுடைய, நளமகாராசர், அருளோபுரியார் – கருணை செய்யார், (ஆதலால்) இதுவோ – இப்படிவருந்துவதோ, கடன் – என் கடன் எ-று.

ஓ – இரக்கப்பொருளிலும், ஏ – எண்ணிலும்வந்தன. வேலவர் புரியார் என்பன உயர்வுபற்றி பொருமை பன்மையாகக் கூறப்பட்டது.

இவ்வுலகில் அனேக அரசர் அனேக மங்கையர் வருத்தத்தை நீக்கி அளித்தனரெனக் கேட்டதுண்டு. இவர் கொலை செய்கின்ற வேலையுடைய ராகையால் அங்ஙனஞ் செய்திலர்போலும். ஆதலின் எனதிடர் நீங்கிற் றில்லை; அதனோடுபோக்குதலின் இரவும் நெடுங்காலம்போல விடிந்ததில்லை. நீவிர் இங்ஙனமூற்றுப்பிரிந்து வருந்துபவர்க்கு ஒப்புரவு செய்யுங் கடப்பாடு பெற்றுடையீராகலின் இவ்வரசர்க்குஞ் சொல்லுவீராக வென்றபடி. நீரால் எதிர்ப்புற்ற எரியைக் காக்கும்பொருட்டுப் போக்கிவிடுவதுபோல் மிக்க துன்பமுற்றவர்கள் பிறரோடு அதனை உரையாவிடின் ஆற்றாதலின் இவளுந்தன் துன்பத்தை இங்ஙனஞ் சொல்லினு ளென்க. 46

கழலாவளையுங்கனலாமதியு
முழலாமனனும்பெறுநாளுளதோ
மழவேறனையான்மருவாவிரகத்
தழலாலுருகுந்தமியேனினியே.

இ-ள். மழவு ஏறனையான் – இளவேற்றையொத்த நளமகாராசன், மருவா – பொருந்தப்பெறுத, விரகத்தழலால் – விராகாக்கினியால், உருகும் – கரைகின்ற, தமியேன் – தனியேனுடைய நான், இனி – இனி, கழலாவளையும் – கழலாத வளையல்களையும், கனலாமதியும் – சுடாத சந்திரனையும், உழலாமனனும் – கவலைப்படாத மனத்தினையும், பெறுநாள் – பெற்றுக் கொள்ளு நாள், உளதோ – உண்டாகுமோ எ-று.

கழலா, கனலா, உழலா என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச் சங்கள். மழவு. இளமை. "மழவுங்குழவு மிளமைப்பொருள்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். ஒரு ஆடவர்மாட்டு விரும்பி வைத்த மட வார்க்கு அந்நினைப்பு மூற்றுவிடின் அன்னநீர் முதலியவற்றின் விருப்பில் லாமையால் தேகம் வாடும் அவ்வாட்டத்தாற் கைவளை முதலியவுங்கழலும். மதியுங் குளிர்ச்சிசெய்து புணர்ச்சி நினைப்பை யுண்டாக்கி அது கிட்டக்கப் பெறுமையாற் சுடும். இங்ஙனமாதலின் மனம் விரும்பியதை யடையப் பெறுமையாற் பல தெறிகளினுஞ் சென்று புகுந்து சுழன்றழலும் இவ்வா றாகலின் நளனைப்பெறுத தமயந்தியும் "கழலாவளையுங் கனலாமதியு முழலா மனனும் பெறுநாளுளதோ" வென்றாள். நளனைப்பெற்ற நாளில் அவ்வா றென்பது கருத்து. ஓ – இரக்கப்பொருளில் வந்தது. 47

அள்ளிக்கொளலாமிருளுடன்வேள்
கள்ளத்தெனதாருயிரோகவர்வான்

விள்ளற்கரிதாம்விரகந்தமியே
னுள்ளத்துறவாயுணர்கிற்றிலேயோ.

இ-ள். விள்ளற்கு அரிதாம் – சொல்லுதற்கரிதாகிய, விரகம் – விரகத்தையுடைய, தமியேன் – தனியேனுகிய என்னுடைய, உள்ளத்துறைவாய் – மனத்திலிருக்கின்ற நளனே, (நீ) அள்ளிக்கொளலாம் (கையால்) அள்ளிக்கொளலாம்படி யிருந்த, இருளூடு – இருளினிடத்தில், அடர்வேள் – அடர்கின்ற மன்மதனுனவன், கள்ளத்து – கரவினுல், எனது – என்னுடைய, ஆர் – நிறைந்த, உயிர் – ஆவியை, கவர்வான் – அபகரிப்பான், உணர்கிற்றிலேயோ – (அக்களவினை) அறிகின்றுயில்லேயோ எ-று.

இருளிற் கரவுசெய்பவர்போல் காமனும் என்னுயிரைக் கொள்ளேயிட நினைத்திருக்கின்றனன். காமநோயால் இன்றிரவில் எனதாவி தரிக்கப் பெறுத அது உனது பொருளாதலால் அதற்கொரு தீங்குவராமற் காக்கக் கடவை, காவாவிடில் அதனைப் பின்னர் வருந்தன்பம் உனதாம் எனநேரிற் சொல்வதற்குப் பெறுத தமயந்தி தன்னுளத்திருக்கு நளனேவிளித்து மடமையா லிவ்வாறு கூறினுளென்க. 48

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

என்றுவெந் துயருற் றிருகணீர் வார விளமுலைத் துணைபசப் பூர, மின்றிகழ் மருங்குற் செய்யவாய்ப் பேதை மெலிவொடுவருந் துமெல் வையினின், மன்றலங் கமல முகைமுறுக் கவிழ்த்து வரிச் சிறைத் தும்பிபாட் டயரத், துன்றிருள் பருகும் விரிகதிர் பரப்பிச் சுடரவன் குணபுலத் தெழுந்தான்.

இதனுற் சூரியவுதயஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். என்று – இப்படியென்று, வெந்துயருற்று – வெவ்விய துன்பத்தையடைந்து, இருகணீர்வார – இரண்டு கண்களினின்றும் நீரொழுக, இள முலைத்துணை – இளமைபொருந்திய இரண்டுதனங்களும், பசப்பு ஊர – வேறுபட்ட நிறத்தையடைய, மின் – மின்னல்போல், திகழ் – பிரகாசிக்கின்ற, மருங்குல் – இடையினையும், செவ்வாய் – சிவந்தவாயினையுமுடைய, பேதை – தமயந்தியானவள், மெலிவொடு – இளைப்போடு, வருந்தும் – வருத்தப்படுகின்ற, ஏல்வையினில் – காலத்தில், மன்றல்-வாசனைபொருந்திய, அம்-அழகிய, கமலமுகை – தாமரையரும்பினுடைய, முறுக்கவிழ்த்து – முறுக்கவிழச் செய்து, வரி – இரேகைகள்பொருந்திய, சிறை – சிறகையுடைய, தும்பி – வண்டுகள், பாட்டயர-பாட்டைப்பாட, துன்று – நெருங்கிய, இருள்பருகும் – இருளையுண்ணும், விரிகதிர்பரப்பி – விரிகின்ற கிரணங்களைப் பரவச்செய்து, சுடரவன் – சூரியனுனவன், குணபுலத்து – கிழக்குத்திசையில், எழுந்தான் – உதித்தான் எ-று.

இப்படி வருத்தமுற்ற தமயந்தி பின்பு அவ்வருத்தங்களெல்லாம் நீங்கி மகிழ்வுறுதற்கு நிகழ்வதாகிய சுயம்வரச் சிறப்பைச் சொல்லுதற்கு

உரியகாளெய்திய தென்பார், பேதை வருந்து மெல்லையினிற் சுடரவன் குணபுலத் தெழுந்தானென்றார். 49

தணிவருந் துயரிற் கண்படை பெறாது தளர்வொடு வருந்தி வெய் துயிர்க்கு, மணியெழு வனைய பொற்றடந் திணிதோண் மன்னவர் மனமகிழ் சிறப்பப், பணியர வல்குற் கதிர்முலைத் துவர்வாய்ப் பைந்தொடி வதுவையின் றென்ஞ, வணிகக ணிகென் றரசர் கோன் பணியா லதிர்குரற் கடிமுரசறைந்தார்.

இதனுல் விவாகமுரசறைதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தணிவு அருந்துயரின்-ஆறுதற்கரிய துன்பத்தினுல், கண்படை பெறாது - நித்திரைசெய்யாமல், தளர்வொடு — தளர்ச்சியுடன், வருந்தி-வருத்தப்பட்டு, வெய்துயிர்க்கும் – பெருமூச்சுவிடுகின்ற, மணிஎழு அனைய-மணித்தூண்போன்ற, பொன் - அழகிய, தடம் – பருத்த, திணி — வலிமை பொருந்திய, தோள் – தோளையுடைய, மன்னவர் – அரசர்கள், மனமகிழ் சிறப்ப — மனமகிழ்ச்சிமிக, பணியரவல்குல் — அராப்படம்போன்ற அல்குலையும், கதிர்முலை – காந்திபொருந்திய தனங்களையும், துவர்வாய் — செவ்வாயையும், பைந்தொடி — பசிய வளையலையுமுடைய தமயந்தியினது, வதுவை-விவாகம், இன்றென்ஞ — இன்றென்றுசொல்லி, அணி – அழகிய, நகரணிக என்று — நகரை யலங்கரிக்கவென்று, அரசர்கோன்பணியால் – வீமராசனேவலினுல், அதிர்குரல் — அதிர்கின்ற ஓசையையுடைய, கடி – பெருமை பெற்ற, முரசு — பேரிகையை, அறைந்தார் – (வள்ளுவர்) அடித்தார்கள் எ-று.

இராமுழுவதும் நித்திரையின்றி வருந்திய அரசர் மனமகிழ்ச்சியடைய வீமராசன் ஏவலின்படி வள்ளுவர் முரசறைந்தார். முரசறைதல் பார்த்தவ புராணத்தில் "தெள்ளிய வேவலாளர் செப்பலு மகிழ்ந்துபோற்றி, வள்ளுவனுண்டு பூசி வாலிய வணிந்துவீர, வெள்ளிய வேற்றுப்போர்வை விரிமுரசெடுத்துவல்லே, கள்ளிவர்மாலைநாற்றிக் களிற்றினிட் டேறிச்சொல்வான்" இத்தப்பாட்டு முதல் "இனியன நுகர்ந்துபூசி யெழில்கொள வணிந்துமென்றீங், கனியென மொழிந்துளின்பங் கனிதரவளவளாவிப், புனிதவிண் ணவர்க்கும் பூசை போற்றுக போற்றுகென்ஞ, நனிபல பொருளுஞ்சொல்லி நளிமுர செருக்கினனே" யென்னும் இந்தப் பாட்டீருகவுள்ள ஐந்துபாட்டுக்களானும் அறிக. கண்படை – துயில். 50

இமிழ்கடி முரசங் கறங்குபே ரோதை யெழினகர் மாந்தர்தஞ் செவியி, னமிழ்துகுத் தென்னத் தவழ்தலு மகிழ்வுற் றணிவிழ வறுதலோ மறுகிற், கமழ்தரும் தாற்றுப் பாளைவாய்க் கமுகுங் கன்னலுங் கதலியு நடுவா, ருமிழ்கதி ரெறிக்கு மணிநெடுங் கொடிக ளுயர்விசும் பகடற நிரைப்பார்.

இதுமுதல் மூன்றுபாட்டுக்களால் நகரலங்கரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். இமிழ் - இனிமையையுடைய, கடி – புதுமைபெற்ற, முரசம்- பேரிகையானது, கறங்கு – ஒலிக்கும், பேரோதை – பேரொலியானது, எழினகர் – அழகிய நகரத்திலிருக்கும், மாந்தர் தஞ்செவியின் – மனிதர்செவியில், அமிழ்தகுத்தென்ன – அமிழ்தத்தை யுகுத்ததுபோல், தவழ்தலும்-தவழ்ந்த வளவில், மகிழ்வுற்று – மகிழ்ச்சியடைந்து, அணி – அழகிய, விழவறாத – திருவிழா நீங்காத, கோமறுகில் – இராசவீதியில், கமழ் – பரிமளிக்கின்ற, நறு – நறிய, தாறு – குலைகளையுடைய, பாளைவாய் – பாளைகள் வாய்ந்த, கமுகும் – கமுகமரமும், கன்னலும் – கருப்பங்கழியும், கதலியும் – வாழைமரமும், நடுவார் – நடுவார்கள், உமிழ்-கொப்புளிக்கின்ற, கதிரொறிக்கும்- கிரணத்தை வீசுகின்ற, மணி – இரத்தினங்கள்பதித்த, நெடுங் கொடிகள்- நெடியகொடிகளை, விசும்பு அகடுற – ஆகாசமுழுவது நிறைய, நிரைப்பார்- வரிசையாகக் கட்டுவார்கள் எ-று.

அரசன் மகட்குச் சுயம்வரமென்றடித்த முரசோதையை அவரவருந் தம்முடைய மகட்கு விவாகமென்று அடித்த ஓதையைக் கேட்டதுபோல் மகிழ்ச்சியடைந்தன ரென்பதுதோன்ற, செவியிலமிழ்தகுத்தென்னத் தவழ்தலுமென்றார். எப்பொழுதும் அலங்கரித் திருக்கின்ற வீதியென்பது தோன்ற அணிவிழவறாதகோ மறுகிலென்றார். இப்பாட்டின் மாந்தரென்னும் எழுவாய் இதுமுதற் பன்னிரண்டு பாட்டுவரையும் நடுவார் நிரைப்பார் முதலிய வெவ்வேறு பயனிலைகளைக் கொண்டுமுடிந்தது. 51

சேணுயர் பரிதி தழும்புற நிவந்த செழுமணித் தோரண நடுவார், வானில வொழுகு மணிவடம் பூணந்து வயங்குபொற் றசும் புகணிரைப்பார், பாணிகர் வரிவண் டுளர்ந்துதே னுகருமப னிமலர்த் தாமநாற் றிடுவார், தூணுறை கழித்து விரிகதி ரெறிக்குஞ் சுடர்மணிச் செறிதுக டுடைப்பார்.

இ-ள். சேணுயர் – மிகவுமுயர்ந்த, பரிதி – சூரியனைவன், தழும்புற- தழும்புபொருந்த, நிவர்ந்த – உயர்ந்த, செழுமணி – செழுமையுள்ள மணிகள் பதித்த, தோரணம் – தோரணங்களை, நடுவார் – நடுவார்கள், வாள் – ஒளி பொருந்திய, நிலவு - சந்திரிகை, ஒழுகும் - வீசுகின்ற, மணிவடம் – முத்து மாலைகள், பூணந்த – தரித்த, வயங்கு – பிரகாசிக்கின்ற, பொன்தசும்புகள்- பொற்குடங்களை, நிரைப்பார் - வைப்பார்கள், பாணிகர் – பண்ணையொத்த, வரி – பாட்டுகளையுடைய, வண்டு – வண்டுகள், உளர்ந்த – தடவி, தேனுகரும் – தேனுண்ணும், பனிமலர் – குளிர்ச்சிபொருந்திய மலராற்றொடுத்த, தாமம் - மாலைகளை, நாற்றிடுவார் – தொங்கக்கட்டுவார்கள்; தூண் – தூண்களில், உறைகழித்த – உறையைநீக்கி, விரிகதிரெறிக்கும் – விரியுங்கிரணங்களை வீசுகின்ற, சுடர் – பிரகாசிக்கின்ற, மணி – இரத்தினங்களில், செறிபடிந்த, துகள் – புழுதியை, துடைப்பார் – துடைப்பார்கள் எ-று.

பலகாலெறும்பூரக் கற்குழியுமென் றிருப்பதால் அனேக தோரணங் கள் அந்நகரைக் கடக்கும் வரையும் படுதலாற் பரிதிதழும்புற வென்றார்.

மைந்தரோடிடி ரந்நலார் பரிந்த மணிவடக் குப்பைக ளகற் றிச், சந்தமென் குழம்பா னன்னில மெழுகித் தண்முளைப் பாலி கை யமைப்பா, ரிந்திர தனுவிற் றிகழ்தரச் சாந்து மெரிமணிச் சுண்ணமு மிறைப்பார், நந்தலில் விளக்க மணிசெய்பொற் றகளி நறுநெய்பெய் தொளியுற வெடுப்பார்.

இ-ள். மைந்தரோடு — புருடருடன், ஊடி — பிணங்கி, அந்நலார்- அந்த மகளிர்கள், பரிந்த — நீக்கிய, மணிவடக் குப்பைகள் — முத்துமாலை களின் குவியல்களை, அகற்றி — நீக்கி, சந்தமென்குழம்பால் — சந்தனத்தினு டைய மெல்லிய குழம்பினால், நன்னிலமெழுகி - நல்ல பூமியைமெழுகி, தண் முளை - குளிர்ச்சிபொருந்திய முளைகளையுடைய, பாலிகை — பாலிகைகளை, அமைப்பார் — வைப்பார்கள், இந்திரதனுவில் — இந்திரவில்லைப்போல், திகழ் தர — பிரகாசிக்க, சாந்தம் — சந்தனத்தையும், எரி - காந்தியையுடைய, மணிச் சுண்ணமும் — (அதன்மேல்) இரத்தினப் பொடிகளையும், இறைப்பார் — வீசு வார்கள், நந்தலில் — கெடுதலில்லாத, விளக்கம் - தீபங்களை, மணிசெய்பொன் தகளி — இரத்தினங்களிழைத்த பொன்னகல்களில், நறுநெய்பெய்து — நல்ல நெய்விட்டு, ஒளியுற — ஒளிபொருந்த, எடுப்பார் - ஏற்றுவார்கள் எ-று.

ஊடுதல் காமத்திற்கின்பமாதலின், மைந்தரோ டிடியென்றார். இந்திர தனுவிலெனப் பலநிற முள்ளதை உவமானமாகக் கூறலால் இங்ஙன மணி யென்றதற்கு வெவ்வேறு நிறமுள்ள நவமணியையும் பொருளாகக்கொள்க. அவை வச்சிரம் — வைரியம், கோமேதகம், புட்பராகம், மரகதம், மாணிக் கம், நீலம், பவளம், முத்து என்பனவாம். 53

ஐயரிசிதறு மழைமதர் நெடுங்க ணஞ்சன மெழுதுவார் சாந் தத், தொய்யில்வெம் முலையி னிலவுகொப் புளிக்குந் தூமணிப் பிறைவட மணிவார், மையிருங் கூந்தல் வகிர்ந்துதேன் முரலு மட் டுவார் பூந்தொடை புனைவார், நையுதுண் மருங்கிற் சுதிரொளி பரப்பு நகைமணி மேகலை புனைவார்.

இதுமுத லிரண்டுபாட்டால் மாதர் தங்களை அலங்கரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஐயரிசிதறும் — அழகிய செவ்வரி பரந்த, மழை — குளிர்ச்சிபொ ருந்திய, மதர் — களிப்பையுடைய, நெடுங்கண் - நெடியகண்களில், அஞ்சனம் எழுதுவார் — மையெழுதுவார்கள், சாந்தத்தொய்யில் — சந்தனக்கோலம் எழு தப்பெற்ற, வெம்முலையின் — விருப்பத்தைச் செய்யும் தனங்களில், நிலவு- சந்திரிகையை, கொப்புளிக்கும் - உமிழ்கின்ற, தூ — பரிசுத்தமாகிய, மணி- இரத்தினங்களிழைத்த, பிறைவடம் — சந்திர ஆரத்தை, அணிவார் — அணி வார்கள், மை - கரிய, இரு - பெரிய, கூந்தல் — அளகபாரத்தை, வகிர்ந்து-

கோதி, தேன்மூரலும் — வண்டுக ளொலிக்கின்ற, மட்டுவார் — தேனொழுகு கின்ற, பூந்தொடை — பூமாலைகளே, புனைவார் - சூடுவார்கள், நையும் - நை கின்ற, நுண் — நுண்ணிய, மருங்கில் — இடையில், கதிர்-கிரணங்களினது, ஒளிபரப்பும் — ஒளியை விரிக்கின்ற, நகை — காந்தியையுடைய, மணி - மணி களிழைத்த, மேகலை — மேகலாபரணத்தை, அணிவார் — அணிவார்கள் எ-று.

சில்லரிச்சிலம்பு பஞ்சிமேற் பனிக்குஞ் சீறடி கவின்செயப் புனைவா, ரெல்வளை திருத்தி யாடமை பணைத்தோ ளெழில்பெறத் தொயில்வரைந் திடுவா, ரல்லியங்கமல மெனமலர் கவற்று மடியினி லகத்தக மணிவார், வில்லுமி ழொருகாழ் முத்தணி யணிவார் விரை கமழ் தெரியல்கை புனைவார்.

இ-ள். சில் - ஆரவாரிக்கின்ற, அரி — பருக்கைக்கல்லையுடைய, சிலம்பு-சிலம்புகளே, பஞ்சிமேல் — பஞ்சின்மேல் மிதிப்பினும், பனிக்கும்-வாடுகின்ற சீறடி — சிறியபாதங்களில், கவின்செய — அழகுபொருந்த, புனைவார் — தரிப் பார்கள், எல் — பிரகாசத்தையுடைய, வளை — வளையல்களே, திருத்தி - அணி ந்து, ஆடமை — வெற்றியமைந்த, பணைத்தோள்-பருத்த தோள்களில், எழில் பெற — அழகுபெறும்படி, தொழில் — சந்தனக்கோலத்தை, வரைந்திடுவார்-எழுதுவார்கள், அல்லி - அகவிதழையுடைய, அம்-அழகிய, கமலமென்மலர்-தாமரையினது மெல்லிய மலரை, கவற்றும் — கவலைப்படுத்தும், அடியினில்-பாதங்களில், அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பை, அணிவார் — பூசுவார்கள், வில் — ஒளியை, உமிழ் - கொப்புளிக்கின்ற, ஒரு - ஒப்பற்ற, காழ் - வைரித்த, முத்தணி — முத்துமாலைகளே, அணிவார் — அணிவார்கள், விரைகமழ் — வாச னைகமழ்கின்ற, தெரியல் — மலர்மாலைகளே, கைபுனைவார்-அலங்கரிப்பார்கள்.

சில் — சிலவாகிய என்னலு மொன்று; சிறிய என்பதுமாம். எல்வளை எனவே சித்திரத்தொழிலையுடைய சூடகம், செம்பொன்வளை, நவரத்தின வளை, சங்கவளை, பவழவளைகளும் அணிதல்கொள்க. என்னை? "புரைதபு சித்திரப் பொன்வளைபோக்கி - லெரியவிர் பொன்மணி யெல்லென் கடகம்-பரியகம் வால்வளை பாத்தில்பவழ — மரிமயிர் முன்கைக் கமையவணிந்தாள்" என்றாகலின். பணை — மூங்கிலுமாம். 55

கதிர்மதி தவழு மாடநீண் முகப்பிற் காழகிற் றீம்புகை யிடு வார், மூதுமறை வாணர்க் கின்னமு தடுவார் மொய்கதிர் வெயில் கரந் தொழிய, மதிநிலை வொழுகு சித்திலப் பந்தர் மாணுற வயின் வயி னிரைப்பார், சதிமுறை தவறுத் தண்ணுமை கறங்கக் கூத் தியர் தனித்தனி நடிப்பார்.

இதுமுதல் ஆறுபாட்டுக்களால் அந்தகரிலுள்ளவர் செய்யும் பலவிதச் செய்கைகளுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். கதிர் — கிரணங்களேயுடைய, மதிதவழும்-சந்திரன் தவழ்கின்ற, மாடம் - உப்பரிகையினுடைய, நீள் முகப்பில் - நீண்டமுகப்பினில், காழ்-

வயிரம்பொருந்திய, அகில் தீம்புகை – அகிலினதினிய புகையை, இடுவார்-இடுவார்கள், முதுமறை வாணர்க்கு – பிராமணர்களுக்கு, இன்னமுதடுவார்-இனிய அமுது சமைப்பார்கள், மொய் – மொய்க்கப்பெற்ற, கதிர் வெயில்-சூரியனது வெப்பமானது, கரந்தொழிய – ஒளித்துநீங்க, மதிநிலவொழுகும் – சந்திரப்பிரகாசம் வீசுகின்ற, நித்திலப்பந்தர் – முத்துப்பந்தல்கள், மாணுற – பெருமைபொருந்த, வயின் வயின் – இடங்கடோறும், நிரைப்பார் – செய்வார்கள், சதிமுறை – தாளவொத்தின் முறைப்படி, தவறுதப்பாமல், தண்ணுமை – மத்தளம், கறங்க – ஒலிக்க, கூத்தியர் – நாடகக்கணிகையர், தனித்தனி – வேறுவேறாக, நடிப்பார் – கூத்தாடுவார்கள் எ–று.

மறைவாணர்க் கின்னமுதடுவாரெனப் பொதுப்படக் கூறினும் உரிமையால் அந்நகரத்திலுள்ள அந்தண ரெனக்கொள்க. தண்ணுமைகறங்க வென்றாரேனும் அவ்வவ் நாட்டியங்கட்குரிய உறுப்புகள் பலவுங்கொள்க. தனித்தனி நடிப்பா ரென்றதனால் பலவிடங்களினும் பலவிதக் கூத்தும் ஆடுகின்ரரென்பது பெற்றாம். அக்கூத்தாவது, சாந்தி, விநோதம், என இருவகைத்து, சாந்தியாவது, சொக்கம், மெய், அவிநயம், நாடகம், என-4. அவற்றுட் சொக்கமாவது சுத்தநிருத்தம்; அது தூற்றெட்டுக் கரணமுடைத்தி. மெய்க்கூத்தாவது – தேசி, வடுகு, சிங்களம், இவை அகச்சுவையாகிய மூக்குணம்பற்றி எடுத்தலின் அகமார்க்கமெனப்படும். அவிநயமாவது – கதை தழுவாது பாட்டுக்களின் பொருள்தோன்றக் கைகாட்டி வல்லபஞ் செய்யுங் கூத்து. நாடகமாவது – கதைதழுவிவருங் கூத்து. இனி விநோதமாவது-குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என-6. குரவை – கைகோத்தாடுவது – கலிநடம். கழாய்க்கூத்து, குடக்கூத்து. மாயமூடல் – கரணம். படிந்த வாடல், நோக்கு – பாராமும் நண்மையும் ஆயமுதலாயின. தோற்பாவை. தோலாற் பாவைசெய்தாட்டுவது. இன்னும் வகைக்கூத்தோடு எழென்பாருமுண்டு. இவ்வேழும் இழிகுலத்தோராடற்குரியன. இவற்றின் விகற்பமனேகத்தும் இங்ஙனம் விரிக்கிற் பெருகுமாதலிற் சுருக்கிக் கூறினும். 56

எழிறிகழ் கன்னிக் கமுகமென் மிடற்றி னிசையெழீ இனிது
பாட் டயர்வார், செழுமலர்க் காந்தண் முகிழ்விரல் சேப்பத் திவ்
வியா ழின்னரம் புளர்வார், முழுநெறிக் குமுத முகைநெரித் தென
வாய் முகிழ்த்தருங் குரவைகள் புரிவார், கொழுமலர் வலீக்கை
கொட்டிலே னெடுங்கட் கோதையர் குரவையாட் டயர்வார்.

இ-ள். எழில் – அழகானது, திகழ் – பிரகாசிக்கின்ற, கன்னி – இளமை பொருந்திய, முகமென்மிடற்றில் – கமுகையொத்த மெல்லிய கண்டத்தில், இசையெழீஇ – இசையையெழுப்பி, இனிது – இனிமையாக, பாட்டயர்வார் – பாட்டைப் பாடுவார்கள், செழு – வளம்பொருந்திய, மலர் – மலரையுடைய, காந்தள் முகிழ்விரல் – காந்தளரும்பையொத்த விரல்கள், சேப்பசிவக்க, திவவு – வலிக்கட்டையுடைய, யாழ் – வீணையினது, இன் நரம்பு-

இனிய நரம்பை, உளர்வார் – தடவுவார்கள், முழுநெறி – முழுநெறிப்பை யுடைய, குமுதமுகை – செவ்வல்லியரும்பை, நெரித்தென – நெரித்தது போல, வாய் முகிழ்த்த – வாயைக் குவித்துக்கொண்டு, அரு – அரிய, குரவைகள் புரிவார் – குரவைப்பாடலைப் பாடுவார்கள், கொழுமலர் – செழுமையுள்ள தாமரை மலர்போன்ற, வளைக்கைகொட்டி – வளையலையணிந்த கைகளைக்கொட்டி, வேனெடுங்கண் – வேல்போன்ற நெடிய கண்களையுடைய, கோதையர் – மாதர்கள், குரவையாட்டு அயவார் – குரவைக் கூத்தாடுவார்கள் எ-று.

குரவையாவது காமமும் வென்றியும் பொருளாகக்கொண்ட பாடலைப் பாடிக்கொண்டு எழுவரேனும் ஒன்பதின்மரேனும் மாதர் கையிணைத்தாடுவதாம். 57

வெண்மதிக் கதிர்நூற் றனையவான்கவரி நெற்றிவெங் கலினவாம் புரவி, பண்ணுறுத்திடுவார் குருதிதோய் கோட்டுப் படுமதக் கலுழிவெஞ் சினத்த, வண்ணன்மால் யானை கவினுறப் பருமித் தணிவிழா மறுகிடைக் கொணர்வார், மண்ணமை கொடிஞ்சிக் கூந் தன்மான் றடந்தேர் வானவ ரூர்தியிற் றருவார்.

இ-ள். வெண்மதி – வெள்ளிய சந்திரனுடைய, கதிர் – கிரணங்களை, நூற்று அனைய – நூற்றதையொத்த, வான் – மேலாகிய, கவரி – சாமரையணிந்த, நெற்றி – நெற்றியையுடைய, வெம் – வெய்ய, கலினம் – கடிவாளம் பூண்ட, வாம் – தாவுகின்ற, புரவி – குதிரைகளுக்கு, பண்ணுறுத்திடுவார் – கல்லணை சேர்ப்பார்கள், குருதிதோய் – உதிரந்தோய்ந்த, கோட்டு – கொம்பையுடைய, படு – உண்டாகின்ற, மதக்கலுழி – மதப்பெருக்கையும், வெஞ்சினத்த – வெவ்வீய கோபத்தையும், அண்ணல் – பெருமையினையும், மால்மயக்கத்தினையுமுடைய, யானை – யானையை, கவினுற – அழகுபொருந்த, பருமித்து – அலங்கரித்து, அணி – அழகிய, விழா – திருவிழாவையுடைய, மறுகிடை – வீதியிலே, கொணர்வார் – கொண்டுவருவார்கள், மண் அமை – ஒப்பனையமைந்த, கொடிஞ்சி – மேன்மொட்டையும், கூந்தல்மான் – புறமயிரினைக்கொண்ட குதிரைகளையுமுடைய, தடந்தேர் – விசாலம்பொருந்திய தேர்களை, வானவரூர்தியில் – தேவர் விமானங்கள்போல், தருவார் – கொண்டுவருவார்கள் எ-று. 58

இருங்கடற் றிரைன்று மழகதி ரேய்க்கு மெரிமணிச் சிவிகையின் வருவார், சுரும்புவீழ்ந் தரற்ற மும்மதம் பொழிபுஞ் சூழிமால் யானையிற் புகுவார், திருந்துமொண் சுழிய கூந்தன்மாற் றேவிற் சேட்டிளம் பரிதியிற் செல்வார், பொருந்தமண் டோயா தகல்விசும் பகவும் பொங்குளைப் புரவியிற் போவார்.

இ-ள். இருங்கடற் றிரைன்றும் – பெரிய கடலிலுதிக்கின்ற, மழகதிர் எய்க்கும் – இளஞ்சூரியனையொக்கும், எரிமணி – பிரகாசிக்கின்ற இரத்தினங்

கள்பதித்த, சிவிகையின் – தண்டிகையில், வருவார் – வருவார்கள், சுரும்பு-வண்டுகள், வீழ்ந்து – விரும்பி, அரற்ற – ஒலிக்க, மும்மதம்பொழியும் – மும்மதங்களையும் பொழிகின்ற, சூழி – முகபடாத்தையுடைய, மால் – பெரிய, யானையிற் புகுவார் – யானையின்மேல் வருவார்கள், திருந்தும் – திருந்தப் பெற்ற, ஒள் – விளங்குகின்ற, சுழிய – சுழிகளையுடைய, கூந்தல்மான் – புறமயிரினையுடைய குதிரைகட்டிய, தேரில் – இரதத்தில், சேடு இளம்பரிதியில் – மிகுந்த இளமையையுடைய சூரியனைப்போல், செல்வார் – செல்வார்கள், பொருந்த – பொருந்தும்படி, மண் – பூமியிலே, தோயாது – தோயாமல், அகல் விசும்பு – அகன்ற ஆகாயத்தில், அகவும் – ஆடுகின்ற, பொங்கு – மிகுந்த, உளை – புறமயிரினையுடைய, புரவியில் – குதிரையின்மேல், போவார்-போவார் எ-று.

திருந்து மொண் சுழிகளாவன – கழுத்தினடுவிலேனும் கணைக்காலிலேனும், மேலுதடு, மூன்னங்கால், கன்னம், முழங்கால் ஆகிய இவைகளிலேனும் இரட்டைச் சுழிகளிருக்கின் ஆகாதனவாம். இவைகளின்றிக் கழுத்தில் வலஞ்சுழித்திருப்பது தேவமணியாம். முகம், தலை, மூக்கு, மார்பு இந்நான்கிடத்திலும் இரண்டிரண்டு சுழிகளும் நடுநெற்றி, பிற்பக்கம் இவைகளில் ஒவ்வொரு சுழியும் இருக்கின் நல்லனவாம். கிரீவற்சமென்னுங் குதிரைக்கு மார்பிலைந்து சுழியிருக்கும். நெற்றியில் இருசுழியேனும் மூச்சுழியேனு மிருக்கினும், நான்குசுழி வலம்புரியாயிருக்கினும் இரண்டுசுழி முன்னங்காலடியி லிருக்கினும், நல்லனவாம். இவற்றின் விகற்பமெல்லாம் அயலீலாவதியென்னும் வடநூலிற் காண்க. 59

நளிர்மதி தவழு மலயவெற் புயிர்த்த நறுங்குற டுரிஞ்சூழ்
தேய்வை, தளர்கொடி மருங்கு லலமரப் பணைத்த தரளமென் முலை
முகட்டணிவா, ரளியின மோச்சி வள்ளவாய்த் தேற லமிர்தீன
நுகர்ந்தளங் களிப்பார், துளிமதுப் பிலிற்றிக் காவறங் கமழுந்
தூமலர்ச் சிகழிகை புனைவார்.

இ-ள். நளிர் – குளிர்ச்சிபொருந்திய, மதிதவழும்-சந்திரன்றவழ்கின்ற, மலயவெற்பு – பொதியமலை, உயிர்த்த – பெற்ற, நறுங்குறடு – நறிய சந்தனக்கட்டைகளால், உரிஞ்சு – தேய்த்த, பூந்தேய்வை-அழகிய குழம்பினை, தளர்-தளரப்பெற்ற, கொடி-வல்லிபோன்ற, மருங்குல் – இடையானது, அலமர-சுழற்சியையுடைய, பணைத்த – பருத்த, தரளமும் – முத்துவடமணிந்த, மெல்முலை முகட்டு – மெல்லிய முலைகளின்மேல், அணிவார் – பூசுவார்கள், அளி இனம் ஒச்சி – வண்டுக்கூட்டங்களையோட்டி, வள்ளவாய்த்தேறல் – கிண்ணத்திலிருக்குந்தேனை, அமிர்தனை நுகர்ந்து – அமிர்தம்போலுண்டு, உளம் களிப்பார் – மனமகிழ்வார்கள், தளி-தளிகளையுடைய, மதுபிலிற்றி-தேனையொழுக்கி, காவதம் – காததூரமளவும், கமழும் – மணக்கும், தூ – பரிசுத்தமாகிய, மலர் – மலராற் றொடுக்கப்பெற்ற, சிகழிகை – மாலைகளை, பூனைவார் – தரிப்பார் எ-று.

காவதம்—காதம் என்பன ஒருபொருட்சொற்கள். ஒரு காவதமாவது ஏழரைநாழிகைவழி. எனவே பத்துமைல் தூரம். தேய்வை - தொழிலாகு பெயர். குறடு - கட்டை என்று வழக்கு இக்காலத்து கெழிகை - கோத்த மாலை. 60

நிழலொடு கறுவிப் பாகெறிந் தூன்பெய் நிணத்தொடு பழகு கூன் பிறைக்கோட், டழிகவுட் கடாத்த தறுகண்மால் யானை யகற்றுமி னெயிற்புறத் தென்பார், மழைமதர் நோக்கி மன்றல்செய் காலை வல்லவர் கன்னலிற் றெரிவார், விழைவொடு மகிழ்வுற் றரவளாய்ப் புகுந்தோர் வியப்புற விருந்தெதிர் கொள்வார்.

இ-ள். நிழலொடு—தங்கணிழலொடு, கறுவி - கோபித்து, பாகெறிந்து-யாகனைவீசி, ஊன்பெய் - தசையைப்பெய்கின்ற, நிணத்தொடு - நிணத்தோடு, பழகு - பழகாநின்ற, கூன் பிறைக்கோடு - வளைவுபொருந்திய பிறை போலுங் கொம்பினையும், அழி - அழிகின்ற, கவுள் - கதப்பினி லொழுகுகின்ற, கடாத்த - மதத்தினையுமுடைய, தறுகண் - அஞ்சாத, மால் யானை - பெரிய யானையை, எயில்புறத்து - மதிற்புறத்தில், அகற்றுமின் என்பார்-நீக்குங்க ளென்பார்கள், மழைமதர்நோக்கி—தமயந்தியினது, மன்றல்செய் காலை - விவாகஞ்செய்யும்பொழுதை, வல்லவர் - (கணிதநூலில்) வல்லமையுடையவர்கள், கன்னலில் - நாழிகை வட்டிலால், தெரிவார் - தெரிந்து கொள்வார்கள், விழைவொடு - விருப்பொடு, மகிழ்வற்று - மகிழ்ச்சியையடைந்து, அளவளாய்—கலந்து, புகுந்தோர் - அடைந்தவர்கள், வியப்புற-அதிசயிக்க, விருந்து - விருந்தாக, எதிர்கொள்வார் - எதிர்கொள்வார்கள்.

நாழிகை வட்டிலாவது ஆழமுள்ள ஒருபாத்திரத்திலே நீரை நிறைத்து, அதிற் பிரமாணப்படிசெய்த அடியிற் றுளையிட்டிருக்கும் வெண்கல வட்டிலேவிடுகின் அத்துளைவழியே நீர் உள்ளே நிரம்பி அமிழ்வது ஒருநாழிகையெனக்கொண்டு காலத்தை யளவிடுதற்குரிய கருவியெனக் கொள்க. கன்னல் ஆகுபெயராய்க் கருவிக்காயிற்று. கன்னலாவது இருபத்துநான்கு நிமிடங்கொண்ட காலம், இரண்டரைக்கன்னல் கொண்டது ஒருமணி. மகிழ்ச்சி—விருப்பினது காரியமாம். நிணம்—கொழுப்பு. 61

விரைகமழ் முல்லை முகைநிக ரடிசில் வெள்ளியங் கிரியெனக் குவிப்பார், கருனெயுங் கன்னற் கட்டியுந் தேமாங் கனிகளும் வயின்வயி னிரைப்பார், திரைபொரு கடலி னறுநெயும் பாலுந் தெருத்தொறும் பெருக்கெடுத் தோட, வெரிபசும் பொன்னங் கலம்பல பரப்பி யிரவலர்க் கின்னமு தளிப்பார்.

இதனால் அன்னந்தருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். விரை - வாசம், கமழ்—மணக்கின்ற, முல்லைமுகைநிகர்—முல்லையரும்பையொத்த, அடிசில் - சோற்றை, வெள்ளியங்கிரியென - வெள்ளிமலைபோல், குவிப்பார் - குவிப்பார்கள், கருனெயும் - பொரிக்கறியும், கன்

னற்கட்டியும் - சருக்கரைக்கட்டியும், தேமாங் கனிகளும் - தித்திப்பு மாம் பழங்களும், வயின்வயின் — இடங்கள்தோறும், நிரைப்பார் - ஒழுங்குபடவை ப்பார்கள், நிரைபொரு - அலைகள் மோதுகின்ற, கடலின் - கடல்போல், நறுநெயும் - நறியநெய்யும், பாலும் - பாலும், தெருத்தொறும் - தெருக்க டோறும், பெருக்கு எடுத்தோட - அதிகரித்தோட, எரி - பிரகாசிக்கின்ற, பசும்பொன்னங்கலம் — பசிய பொற்கலங்களை, பல - அனேகமாக, பரப்பி- வைத்து, இரவலர்க்கு — யாசகர்க்கு, இன் அமுது - இனிய சுவையுள்ள அ முதை, அளிப்பார் - கொடுப்பார்கள் எ-று.

அமுதுக்கினிமையாவது தகுதியாகக் கலந்து கூட்டிய அறுசுவைகளாம். அவை தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, உறைப்பு என்க. இவை செயற்கையாற் பலவகைப்படும், அவை "நெய்வீர லன்னஞ் சுத்த வெண் சொன்றி நிகழ்ததி யோதனம் பாற்சோ - றைவளர் மளகின் வல்சி மென்கடுகி னமலதண் ணிலவங்கம் பொம்மல், செய்வள ரெள்ளுப் போன கங் கட்டிச் செழும்பத மாதிமூரல்களும்" எனவரூஉம் பார்க்கவபுராணச் செய்யுளாற்காண்க. 62

வெள்ளியங் கிரியில் விஞ்சையர் தொகுவார் விண்ணவ ரெண் ணிலர் புகுவா, ரள்ளிலை நெடுவே லடசர்வர் திறப்பா ரந்தண களப்பிலர் திரிவா, ரொள்ளொலி விரிக்கும் பருமணிச் செஞ்சூட் டரசர் வெள் ளிடையறச் செறிவார், பள்ளநீர்க் கடல்சூ ழெழுபெருந் தீவி னுறையுநர் பரிவினிற் றொகுவார்.

இதனால் தேவர் மனிதர் நாகர்செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். வெள்ளியங்கிரியில் — சேடிமலையி லிருக்கின்ற, விஞ்சையர்-வித் தியாதரர்கள், தொகுவார் - கூடுவார்கள், விண்ணவர் - தேவர்கள், எண்ணி லர் - அளவில்லாதவர், புகுவார் - நுழைவார்கள், அள்ளிலை - (மாமிசத்தை) அள்ளிக்கொள்கின்ற இலையையுடைய, நெடுவேல் - நெடிய வேலையேந்திய, அரசர் - அரசர்கள், வந்து இறப்பார் - வந்து தங்குவார்கள், அந்தணர்-பிரா மணர்கள், அளப்பிலர் - அளவற்றவர்கள், திரிவார் - உலாவுவார்கள், ஒள் ளொலி - மிகுந்தவொளியை, விரிக்கும் - விரிக்கின்ற, பருமணி - பரிய மணி யினையுடைய, செம்சூட்டு - சிவந்த சூட்டினையுடைய, உரகர் - நாகர்கள், வெள் இடையற — (எங்கும்) வெளியிட மில்லாமல், செறிவார் - நெருங்கு வார்கள், பள்ளம் - ஆழம்பொருந்திய, நீர் — நீரையுடைய, கடல்சூழ் - கட லாற் சூழப்பெற்ற, எழுபெருந்தீவில் — சத்தத்தீவில், உறையுநர் - வசிப்பவர் கள், பரிவினில் - அன்பினால், தொகுவார் - கூடுவார்கள் எ-று. 63

பொன்னவிர் திதலைப் பொம்மல்வெம் முலையார் புனைமணி மாடக முறுகி, யின்னரம் புலரும் பாடல்கேட் டருகி யேழிசை மகரயாழ் பண்ணிக், கின்னர மிதுனம் பாடலுக் குடைந்து கிழ்ப் படு மிளிவர நெக்கி, மின்னகு சுடர்வேல் விஞ்சையர் முகளிர் வியப்பொடு தலைபணித் திடுவார்.

இதனுல் மாத ரிசைப்பாட்டின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொன் — பொன்போல், அவிர் - பிரகாசிக்கின்ற, திதலை — தேமல்பாந்த, பொம்மல் — பொலிவினையுடைய, வெம் — விருப்பத்தைச் செய்கின்ற, மூலையார் — தனங்களையுடைய மாதர்கள், புனைமணி - இரத்தினங்கள் பதித்த, மாடகம் — முறுக்காணிகளை, முறுக்கி — திருகி, இன்னரம்பு- இனிய நரம்பை, உளரும் — தடவுகின்ற, பாடல்கேட்டு — பாடலைக்கேட்டு, உருகி — மனங்கரைந்து, எழிசை - எழிசைகளையுடைய, மகரயாழ் - மகரயாழை, பண்ணி — செய்து, கின்னரமிதுனம் — கின்னரமிதுனங்கள், பாடலுக்குடைந்து — அப்பாட்டுக்குத்தோற்று, கீழ்ப்படும் - தாழ்வுபடுகின்ற, இனிவரல் - இழிவை, நோக்கி — பார்த்து, மின்நகு — ஒளியை வீசுகின்ற, சுடர்வேல் — காந்திபொருந்திய வேலையேந்திய, விஞ்சையர்மகளிர் — விஞ்சைய மாதர்கள், வியப்பொடு — ஆச்சரியத்தோடு, தலை — தலையை, பனித்திடுவார்- சாய்ப்பார்கள் எ-று.

கின்னரமிதுனம், மூலையார் பாடல்கேட்டுருகி, யாழ்பண்ணி உடைந்து, கீழ்ப்படு மிளிவரலைக்கியெனக் கூட்டுக. எழிசையாவன - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். இவை பிறக்குமிடம் கண்டம், நா, அண்ணம், தலை, நெற்றி, மார்பு, மூக்கு என 7. இவையே ஏழ்சுரமெனவும் வீணையிலேழ்நரம்பெனவுஞ் சொல்லுவர். இவற்றினிசை யுவமை மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை என 7. அதிதேவதைகள், விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன் என 7. யாழாவது பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என 4. இவற்றுள் பேரியாழிற்கு நரம்பு - 21, மகரயாழிற்கு - 19, சகோடயாழிற்கு - 16, செங்கோட்டியாழிற்கு - 7. அவற்றுளிது தண்டு, பத்தர், நரம்பு, முறுக்காணி, கொழுவாணி முதலிய வுறுப் பமைந்த மகரயாழெனக் கொள்க. பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, வீளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னுங் கலைத்தொழில்க ளெட்டனுள் பண்ணலாவது பாட கினைக்கப்பட்ட பண்ணுக்கு இணை, கிளைபகை, நட்பான நரம்புகள் பெறுந்தன்மை மாத்திரையறிந்து கட்டுதல். அவ்வாறு செய்தலின் மகரயாழ் பண்ணியென்றார். "பருந்து மதனிழலும் பாட்டு மெழாலுந், திருந்துதாச் சீவகற்கே சேர்ந்தனவென்றெண்ணி, விருந்தாக யாழ்பண்ணி வீணைதான்றோற்பா, னிருந்தா ளிளமயில்போ லேந்திலே வேற் கண்ணுள்" எனப் பிறரும் யாழ்பண்ணியென்றார். "கின்னரமிதுன மென்பது ஒரு தேவசாதி. அது "முன் னரசிங்கமதாகி யவுணன் முக்கியத்தை முடிப்பான் மூவுலகின், மன்னரஞ்சு மதருதனன் வாயிற்குழலி னூசை செவியைப்பற்றி வாங்க, நன்னரம்புடைய தும்புருவோடு நாரதனுந் தந்தம் வீணைமறந்து, கின்னர மிதுனங்களுந் தந்தங் கின்னரந் தொடுகிலோ மென்றனரே" இதனுலறிக. இசைக்குத் தோற்று நாணமடைதலால் தலைபணித் திடுவாரென்றார். விஞ்சையரும் பாடலில் வல்லவரேனும் ஈண்டு நகரமாதருக்கு அம்மாதரைக் கூறினர். ஆடவரிசையினும் மாதரிசை

விசேடமெனக் கூறுதலு மொன்று. அன்றி விஞ்சையரு மகளிருமெனக் கொள்ளினும் அமையும். 64

முகிறவழ் குடுமி மாடநீள் கொடிகண் மொய்ம்மணிக் கதிர் பரப் புதலா, னகர்வயிற் றுவர்வா யிமதர் மழைக்க ணன்னுதல் வதுவைவேட் டடைந்த, வகலிரு விசும்பிற் பாயிருள் பருகு மருக் கர்பன் னிருவருந் தமது, பகலிடைப் பறந்து திரியுமின் மினியிற் படரொளி மழுங்கினர் திரிவார்.

இதனுற் கொடிகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். முகில் - மேகங்கள், தவழ் - தவழ்கின்ற, குடுமி - சிகரத்தையுடைய, மாடம் - உப்பரிகைகளின், நீள்கொடிகள்-நீண்டகொடிகள், மொய்ம்மணி - நெருங்கிய இரத்தினங்களினது, கதிர் பரப்புதலால் - கதிர்களை விரித்தலால், நகர்வயின் - அந்நகரத்தில், துவர்வாய் - செவ்வாயையும், அரிசெவ்வரிபரந்த, மதர் - களிப்பையுடைய, மழை - குளிர்ச்சிபொருந்திய, கண் - கண்களையுடைய, நல்நுதல் - தமயந்தியினது, வதுவை-விவாகத்தை, வேட்டு அடைந்த - விரும்பிவந்த, அகல் - அகன்ற, இரு - பெரிய, விசும்பில் - ஆகாயத்தில், பாய் - பரவிய, இருள்பருகும் - இருளையுண்ணும், அருக்கர் பன்னிருவரும் - சூரியர்கள் பன்னிரண்டுபேரும், தமது-தம்மூடைய, பகலிடை - பகற்பொழுதில், பறந்துதிரியும் - பறந்துதிரிகின்ற, மின்மினியில் - மின்மினிப் பூச்சிகள்போல், படர் ஒளி - படர்கின்றகாந்தியை, மழுங்கினர் - ஒழிந்தவராகி, திரிவார் - திரிவார்கள் எ-று.

அருக்கர் பன்னிருவராவார் - தாத்தரு, சக்கிரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவேச்சுரன், பூடன், சவித்தரு, துவட்டா எனக்கொள்க. இவர்கள் ஒவ்வொருவரும் மிக்கபிரகாச முள்ளவர்; அப்படியிருக்க ஏககாலத்திற் பன்னிருவரும் பகலிற்பறக்கு மின்மினிபோல மழுங்கின ரெனில் அந்நகரிற் கட்டிய கொடிகளின் மணிப்பிரகாசஞ் சொல்லவேண்டுவ தில்லையாயிற்று. அருக்கர் மின்மினியிற் திரிவாரெனலால் உவமையணி. 65

விண்ணகத் தமர ளப்பில ரென்கோ விஞ்சைய ளப்பில ரென்கோ, மண்ணகத் தரச ளப்பில ரென்கோ வனிதைய ளப்பில ரென்கோ, பண்ணமை களிறு கூந்தன்மான் றடந்தேர் பதாகிமற் றளப்பில வென்கோ, வெண்ணிமற் றுரைக்கி னித்துணை யென்ன வெம்மனோர்க் கியம்புமா றரிதே.

இ-ள். விண்ணகத்தமரர் - விண்ணுலகத்திருந்துவந்த தேவர்கள், அளப்பிலர் என்கோ - அளவிலரென்று சொல்லுவேனே, விஞ்சையர் - வித்தியாதரர்கள், அளப்பிலர் என்கோ - அளவிலரென்று சொல்லுவேனே, மண்ணகத்தரசர் - மண்ணுலகத்திருந்துவந்த அரசர்கள், அளப்பிலரென்கோ-அளவிலரென்று சொல்லுவேனே, வனிதையர் - மங்கையர்கள், அளப்பிலர்

என்கோ - அளவிலரென்று சொல்லுவேனே, பண் அமை - ஒப்பனையமைந்த, களிறு - யானைகள், கூந்தல்மான் - புறமயிரினையுடைய குதிரைகள், தடந்தேர் - விசாலம்பொருந்தியதேர்கள், பதாதி - சேனைகள், (ஆகியஇவைகள்) அளப்பில என்கோ - அளவில்லனவென்று சொல்வேனே, எண்ணிசிந்தித்து, உரைக்கின் - சொல்லுமிடத்து, இத்தனையென்ன - இவ்வளவென்று, எம்மனோர்க்கு - எம்போலியோர்க்கு, இயம்புமாறு - சொல்லுமாறு, அரிது - அரிதாகும் எ-று.

ஏழைமை யுடையவரும் விவாகத்திற்குச் செல்லும்போது அனேகருடன் செல்வது வழக்கமாதலின், கிடைத்தற் கரியபொருளாகியதமயந்தியை விரும்பிவந்த செல்வங்களில் ஒருகுறைவுமின்றிய தேவர்கள் விஞ்சையர் நாகர் அரசர் முதலிய தலைவர்களேயே இத்தனையெனக் குறிக்கக் கூடாதாயிற்று. அவர்களில் ஒவ்வொருவருக்கே அனேக பரிவார மிருக்குமாதலின் அப்படி அனேகருக்கிருத்தலால் அவற்றையு மளவுபடுத்தல் மற்றைப் புலவர்க்கு மரிதென்பார், எம்மனோர்க்கியம்புமாறரிதென்றார். மற்றவைகள்,

எரிகதிர்ப் பசும்பொன் முகடுவேய்ந் தோங்கி யேழிரு காவத மகன்ற, நிரைமணி குயிற்றி மணவினைக் கமைத்த நித்தில விதான மண்டபத்திற், புரிமுறுக் கவிழ வண்டுபாண் முரன்று பூந்துகள் குடைந்து தேனுகரும், விரைகமழ் நறுந்தார் துயல்வரு தடந்தோள் விதர்ப்பர்கோ னினிதுவந் தடைந்தான்.

இதனுள் வீமன் சுயம்வர மண்டபத்துக்கு
வருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். எரி - ஒளிவிடுகின்ற, கதிர் - கிரணங்களையுடைய, பசும்பொன் - பசியபொன்னால், முகடுவேய்ந்து - சிகரங்கூட்டி, ஓங்கி - உயர்ந்து, ஏழிருகாவதம் - பதினாலுகாதவழி, அகன்ற - பரந்த, நிரை - ஒழுங்காக, மணிகுயிற்றி - இரத்தினங்கள் பதித்து, மணவினைக்கு அமைத்த - விவாகக்கிரியைக்குச் செய்த, நித்திலவிதானம் - முத்தினாற்செய்த மேற்கட்டியையுடைய, மண்டபத்தில்-மண்டபத்தின்கண், புரிமுறுக்கவிழ-கட்டினது முறுக்குவிரிய, வண்டு-வண்டுகள், பாண்முரன்று * இராகங்களையிசைத்து, பூந்துகள் குடைந்து-

* தலைமைபற்றிய இராகங்கள் 32. அவையாவன—பைரவி, தேவக்கிரியை, மேகராஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இல்லிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கௌசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தந்நியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம். இவற்றுள் பைரவி, பூபாளம் என்னும் இரண்டும் புருடராகமும் பிராமண சாதியுமாம். ஸ்ரீராகம், படமஞ்சரி என்னு மிரண்டும் புருடராகமாகி க்ஷத்திரியராகும். வசந்தம் மாளவி என்னும் புருடராகங்கள் வைசியசாதி யெனப்படும். பங்காளம் நாட்டை என்னு மிரண்டும் அங்ஙனே புருடராகங்கள் சூத்திர சாதி

மகரந்தங்களைக் குடைந்து, தேன் நுகரும் — தேனையுண்ணும், விரைகமழ்-வாசனை கமழ்கின்ற, நறுந்தார் — நறிய மலர்மாலையான து, துயல்வரு-அசைகின்ற, தடந்தோள் — பருத்த தோளையுடைய, விதர்ப்பர்கோன் — வீமராசன், இனிது உவந்து — இனிதான மகிழ்ச்சிகொண்டு, அடைந்தான் — வந்தனன் எ-று.

இனிதுவத்தல் — மிகமகிழ்தல். இச்சுயம்வாத்திற்குத் தலைவன் வீமராசனுதலால் இதைக்குறித்து வந்ததேவர், விஞ்சையர், நாகர், அரசர் முதலியவர்களுக்கு மரியாதை செய்யும்பொருட்டு மனமகிழ்ச்சியுடன் விதிப்படி செய்து அலங்கரித்திருக்கும் விவாக மண்டபத்திற்குத் தான் முன்னே வந்தனனென்க. 67

குழவிவெண் டிங்கண் மணிவடங் கிடந்த குங்குமக் குலவரைத் தடந்தோள், மழகளி றனைய விதர்ப்பர்கோன் பூனியால் வானகத் தமரர்தங் குழுவு, மொழுகொளி மணிச்சூட் டுரகருஞ்சேடி யுறை தரு விஞ்சையர் கணமு, மெழுகடல் வரைப்பின் மன்னருந் தேன் வேட் டிரைத்தெழு சுரும்பின்வந் தடைந்தார்.

இதனுல் திரிலோகத்தரசரும் வருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். குழவி — இளமையதாகிய, வெண்திங்கள் — வெள்ளிய திங்கள் போன்ற, மணிவடம் — சந்திர ஆரம், கிடந்த — இருந்த, குங்குமம் — குங்கும மணிந்த, குலவரை-குலமலைபோன்ற, தடந்தோள்-பருத்த தோளையுடைய, மழகளிறனைய-இளங்களிற்றையொத்த, விதர்ப்பர்கோன்பணியால்-வீமராசனேவலினுல், வானகத்து அமரர் தங்குழுவும் — விண்ணுலகத்தவர்கள் கூட்டமும், ஒழுகொளி — ஒளிவீசுகின்ற, மணிச்சூட்டு — உச்சிமணியையுடைய, உரகரும் — நாகவேந்தரும், சேடிஉறைதரு — விஞ்சைய ருலகத்திலிருக்கும், விஞ்சையர்கணமும் — வித்தியாதரர் கூட்டமும், எழுகடல்வரைப்பின்-சத்த தீவிலுள்ள, மன்னரும் — அரசரும், தேன்வேட்டு — தேனைவிரும்பி, இரைத்து — சத்தித்து, எழு-எழுகின்ற, சுரும்பின் — வண்டுகள்போல், வந்தடைந்தார் — வந்துசேர்ந்தார்கள் எ-று.

தேனைவிட வண்டிற்கு இனிமைசெய் துயிர்காப்பது வேறொரு பொருளில்லாமையால், தேன்வேட்டிரைத் தெழுசுரும்பி னென்றார். உவமிக்கப்படும் பொருட்கும் இவ்வுரைகொள்க. விதர்ப்பர்கோன்பணியால் அடைந்தாரெனக் கூட்டுக. சேடி - விஞ்சையருலகம், அது "சேணியுஞ்சேடியும் விஞ்சையர் சேர்விடம்" இதனுலறிக, அமரர் குழுவும் உரகரும், விஞ்சை

யாகும். இவற்றை முறையே அடுத்த 3,3,3,3,3,3,3,3, இராகங்கள். இவற்றிற்கு மனைவிகளாகுமென்க. கூறப்பட்ட எட்டுப் புருடராகங்களுக்கும், அவற்றின் மனைவிகளுக்கும் முறையே ஈசானன், திருமால், சாசுவதி, இலக்குமி, சூரியன், நாரதன், விநாயகர், அம்புருவர் என்னுமிவர் அதிதேவதைகளென்பது நான்முடிபு.

யர் கணமும், மன்னரும் எண்ணு மெழுவாய்கள், அடைந்தார் என்னும் வினைமுற்றுப் பயனிலைகொண்டன. சுரும்பின்வந் தடைந்தாரெனலால் உவமையணி. 68

கொய்துணர்த் தருவி னருகிழ லமர்ந்த குரைசுழல் விண்ண வர்க் கரசுஞ், செய்யகட் கயவா யெருமையே றுகைக்குந் தென்றி சைக் கடவுளுங் கனலும், வெய்யவான் சிகைய செந்தழற் கிறை யும் விரிதிரைக் கானகடல் வேந்து, நெய்துடைத் தொளிரு மள் ளிலை நெடுவே னிடதர்கோ னுருவொடு மடைந்தார்.

இதனுல் இந்திரன் முதலிய நால்வரும் நளனுருக்கொண்டு வருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொய் – பறிக்கின்ற, துணர் – பூங்கொத்துக்களை யுடைய, தருவின் – ஐந்தருவி னுடைய, நறுநிழல் – நரிய நிழலின் கண்ணே, அமர்ந்த – தங்கிய, குரை – ஒலிக்கின்ற, கழல் – வீரக்கழலை யணிந்த, விண் ணவர்க்கரசும் – இந்திரனும், செய்யகண் – சிவந்தகண்களையும், கயவாய்- பெரிய வாயையுமுடைய, எருமையேறு – எருமைக்கடாவை, உகைக்கும்- செலுத்துகின்ற, தென்திசைக் கடவுளும் – யமனும், கனலும் – சுடுகின்ற, செந்தழற்கிறையும் – அக்கினிபகவானும், விரிதிரை – விரிகின்ற அலைகளையும், கானை – ஒலியையுமுடைய, கடல்வேந்தும் – சமுத்திராசனுகிய வருணனும், நெய்துடைத்து – உதிரத்தைத் துடைத்து, ஒளிரும் – விளங்குகின்ற, அள்ளிலை – (மாமிசத்தை) யள்ளுகின்ற இலையையுடைய, நெடு வேல் – நெடியவேலையுடைய, நிடதர்கோனுருவொடும் – (தாங்கொண்ட) நளனது வேடத்துடன், அடைந்தார் – வந்தார்கள் எ-று.

உருவங்கொண் டடைந்தாரெனப் பாடங்கொள்ளின் முன்னே அன் னவனுருவுதாங்கி யணிநகர் மேயினரென் றிருப்பதால் கூறியது கூறலென் னுங் குற்றமாதலின் உருவொடு மடைந்தாரெனப் பாடங்கொண்டு, முன் கொண்ட உருவோடும் இப்பொழு தடைந்தாரெனப் பொருள்கொள்ளப் பட்டது. நெய் – நிணமெனினு மமையும். 69

மோட்டிளங் கயவாய் நெறிமரும் பெருமை முலைவழி யொழு கிய தீம்பால், சேட்டிளங் குருகின் பார்ப்பின மருந்துஞ் செழுவய னிடதர்கோன் மருமான், பாட்டிளஞ் சுரும்பர் பேட்டொடு மூச ன்று பருமுகை விரிக்குகாண் முல்லைச், சூட்டணிந் தம்பொற் சுடர்முடி கவித்துத் தொடுகழ னரலவீக் கினனுல்.

இதுமுத லேந்துபாட்டால் நளன் சுயம்வரமண்டபத்துக்குப் புறப்படுஞ் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். மோடு – உயர்வும், இளமை – இளமைபொருந்திய, கயவாய்- பெரிய வாயையும், நெறிமருப்பு – நெறித்த கொம்புகளையுமுடைய,

எருமை – எருமைகளினுடைய, முலைவழி - முலைவழியாக, ஒழுகிய - வழிந்த, நீம்பால் - தித்திப்புப்பாலை, சேடு இனம் – மிகுந்த இளமைபொருந்திய, குருகின் – நாரைகளினுடைய, பார்ப்பினம் – குஞ்சுக்கூட்டங்கள், அருந்தம் – உண்ணுகின்ற, செழுவயல் – செழுமைபொருந்திய வயல்கள்சூழ்ந்த, நிடதர்கோன்மருமான்-நிடததேசத்தையாளுகின்ற நளமகாராசன், பாட்டுபாட்டுக்களை, இளஞ்சுரும்பர் – இளவண்டுகள், பேடு ஒடும் – பெட்டைகளுடன், முரன்று – பாடி, பருமுகை – பரிய அம்புகளை, விரிக்கும் – மலர்த்துகின்ற, நாள் – புதிய, முல்லைச்சூட்டணிந்து - முல்லைமாலையையணிந்து, அம் – அழகிய, பொன் - பொன்னுற்செய்த, சுடர்முடி – கிரணங்களையுடைய மகுடத்தை, கவித்து – கவித்துக்கொண்டு, தொடு – தொடுக்கின்ற, கழல் – வீரக்கழலை, நால - ஒலிக்க, வீக்கினன் - கட்டினன் எ-று.

புல்லுகளை வயிறாரமேய்ந்து நீருண்டு உடையவராற் காக்கப்படுதலால் முலைவழி நீம்பாலொழுகிய எருமை யென்றார். பால்பரவிய வயலெனக் கொள்க. மருமான் – வழித்தோன்றல். அது "மருமான் பிறங்கடையும்பல் வழித்தோன்றல்" இதனாலறிக. நிடததேசத்தரசன் வழியிற்றோன்றிய நளனெனக் கொள்க. 70

கூற்றினு வென்னக் குருதிகொப் புளிக்குங் குற்றுடை வாண் மருங் கசைத்துப், பாற்றி னெஞ்சுழல நிணப்புலால் கமழும் பா யொளிப் பரிதிவே லேந்தி, நூற்றிதழ்க் கமல முகைமுறுக் கவிழ கொறில்பரித் தேரிளங் கதிரோன், றோற்றினு னென்ன நிழலுமிழ் கோடிஞ்சிற் சுடர்மணித் தேர்மிசைப் பொலிந்தான்.

இ-ள். கூற்றின் நா என்ன - யமனுடைய நாவைப்போல், குருதி கொப்புளிக்கும் – உதிரத்தை யுமிழ்கின்ற, குற்றுடைவாள் – குறுகிய சரிகையை, மருங்கசைத்து – பக்கத்திற்செருகி, பாறு இனம் - பருந்துக் கூட்டங்கள், சுழல – வட்டமிட, நிணப்புலால் – உதிராநாற்றம், கமழும் – நாறுகின்ற, பாய் – பரவப்பெற்ற, ஒளி - காந்தியையுடைய, பரிதி – சூரியன் போன்ற, வேல் ஏந்தி - வேற்படையைத்தாங்கி, நூறு இதழ் – நூறிதழ்களையுடைய, கமலமுகை – தாமரை யரும்புகள், முறுக்கவிழ – கட்டவிழ, கொறில் – வேகத்தையுடைய, பரி - குதிரைகட்டிய, தேர் – தேரையுடைய, இளங்கதிரோன் – பால சூரியன், தோற்றினுன் என்ன – உதயமானனென்று சொல்ல, நிழலுமிழ் - நிழலைக் கொப்புளிக்கின்ற, கொடிஞ்சி–மேன்மொட்டையுடைய, சுடர் – கிரணங்களையுடைய, மணி - இரத்தினங்கள் பதித்த, தேர்மிசை – தேரின்மேல், (நளமகாராசன்) பொலிந்தான்–தோன்றினன் எ-று.

யமன் நாவினால் அநேகரைக் கொல்லும்படி சொல்லுதலால் அக்கொலைத்தொழிலா லுண்டாகிய உதிரத்துக்கு அவனது நாவானது காரணமாதல்பற்றி அதுபோல் குருதிகொப்புளிக்கும் உடைவாளென்றார். நாவைப் போற்சிவந்து அடிபரந்து முனைகூரியதெனினும் அமையும். அன்றிக்

குருதி கொப்புளித்தலே உடைவாளுக்கு விசேடணமாக்கினுவென்னக் குற்றுடைவாளெனக் கூட்டின் அத்தினைச் சிறப்பின்றும். உணவளிப் பவரை உண்பவ ரெப்போதுஞ் சூழ்வாதலால், அதுபோல் தமக்கு விருந்து செய்யும் வேற்படையைப் பருந்துகள் நீங்காமையால், பாற்றினஞ்சூழல தினைப்புலால் கமழும் வேலென்றார். சூரியனேக்கண்டு தாமரை மலர்தல் போல், நளனேக்கண்டு மாதர் முகம் மலர்ச்சிபெறுதல் கொள்க. நளன் றேரிற்பொலிதலால் தேரினங்கநிரோன் தோற்றின னென்னவெனச் சூரி யனே அவனுக்கு உவமையாக்கினர். இது உவமையணி. 71

இன்னகைத் துவர்வா யிளமுலே மகளி ரெரிமணிப் படியசு மேந்தப், பொன்னவிர் திதலைப் பொம்மல்வெம் முலையார் பொழி கதிர்ச் சாமரை யிரட்ட, மின்னென நடங்கு மருங்குலார் மருங் கின் வெள்ளடை யுதவினர் செல்லத், தென்வரைச் சார்ந்து நான மென் சேறுந் திசைதிசை காவதங் கமழ.

இ-ள். இன் நகை — இனிய நகையையும், துவர்வாய் – செவ்வாயை யும், இளமுலே - இளமைபொருந்திய தனங்களேயுமுடைய, மகளிர் – மாதர் கள், எரிமணி—ஒளி விளங்குகின்ற, மணிகளிழைத்த படியகமேந்த – (தம் பலப்) படிக்கம் ஏந்திவர, பொன் அவிர்—பொன்போலும் விளங்குகின்ற, திதலை – தேமலையுடைய, பொம்மல் – பொலிவுபெற்ற, வெம்முலையார் - விருப்பத்தைத் தருகின்ற முலைகளேயுடைய மாதர்கள், பொழிகதிர் - கிர ணங்களே வீசுகின்ற, சாமரையிரட்ட – சாமரைவீசிவர, மின் என—மின் னல்போல், நடங்கும் - அசைகின்ற, மருங்குலார் – இடையையுடைய மாதர், மருங்கின்—அருகிலிருந்து, வெள் அடை—தாம்பூலத்தை, உதவினர் செல்ல – கொடுத்துக் கொண்டுவர, தென்வரைச்சாந்தம்— பொதியமலை யிற் பிறந்த சந்தனக்கட்டையாற் றேய்க்கப்பட்ட சந்தனமும், நானமென் சேறும் – கத்தூரியினது மெல்லியகுழம்பும், திசை திசை—எட்டுத்திக்குகளி லும், காவதம் – காததூரமளவும், கமழ—பரிமளிக்க எ-று.

நகை – பல், புன்சிரிப் பெனினு மொக்கும். துவர் – பவளமுமாம். மகளிர், முலேயார், மருங்குலார் எனப் பன்மையாகக் கூறினமையால் நளன் சக்கரவர்த்தியாதலாலும் செல்வ மிகுதியாலும் ஒருதொழிலேப் பலர் செய்தன ரென்க. "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனுல் வெள்ளிலேயெனவே துவர்க்காய், சுண்ணம், வாசந்தரு பண்ட முதலியவுங் கொள்க. அவை 'தகரந் தக்கோலங் கோட்டஞ் சாதிக்கா யில வங்க மேலங் கச்சோல மாஞ்சி, பகரும் வாசந்தரு பண்டப்பெயரே' இதனு லறிக. இப்பாட்டுமுதல் மூன்றுபாட்டும் குளகமாய், நளனென்னுந் தோன்று வெழுவாய் மூன்றும் பாட்டிற் புகுந்தானென்னும் வினேமுற்றுப் பயனிலே கொண்டு முடிந்தது. 72

குளிர்மதி பொருவ நிலவுகொப் புளிக்குங் கொற்றவெண் கவி கைசேம னிழற்ற, வளியினம் புடைக்குந் தழைசெவிப் பரூஉத்

காளரசுவா விருபுடை நெருங்க, முளரிமென் மலர்த்தா டொழப் புது மரசர் முடியொடு முடிபொரு தகுத்த, வொளிகிளர் பசும் பொற் றுகள்பரக் தவனி யும்பர்தம் பதியினிற் சிறப்ப.

இ-ள். குளிர்மதி பொருவ – குளிர்ச்சிபொருந்திய சந்திரனை யொப்ப, நிலவுகொப்புளிக்கும் – பிரகாசத்தையுமிழ்கின்ற, கொற்றவெண்கவிவை-வெண் கொற்றக்குடை, மேல் – மேலே, நிழற்ற – நிழலுச்செய்ய, அளி இனம் – வண்டினங்களை, புடைக்கும் – ஓட்டுகின்ற, தழைசெவி – தழைந்த காதுகளையும், பரூஉத்தாள் – பருத்தகால்களையுமுடைய, அரசுவா – உத்தம யானைகள், இருபுடைநெருங்க, இரண்டுபக்கத்திலு நெருங்கிவர, முளரி மென் மலர்த்தாள் – தாமரையின் மெல்லிய மலர்போன்ற பாதங்களை, தொழப்புகும் – வணங்குதற்கு வருகின்ற, அரசர் – அரசர்களுடைய, முடி யொடு முடிபொருத – மகுடங்களோடு மகுடங்கள் தாக்கி, உகுத்த – உதிர்த்த, ஒளிகிளர் – ஒளிவிளங்குகின்ற, பசும்பொன் – பசியபொன்னுலாகிய, துகள் பரந்த – தூளிகள் பரவி, அவனி – பூமியானது, உம்பர்தம் பதி யினில் – பொன்னகர்போல், சிறப்ப – சிறப்பையுடைய எ-று.

அரசுவாவென்றது ஏழுறுப்பு நிலந்தோய்ந்து வெள்ளிய நகத்தாய்க் காலாலுங், கையாலும், வாயாலுங், கேட்டாலும் பகையைக்கொல்ல வல்ல தாய், ஏழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழ நீண்டு பதின்மூன்றுமுழஞ் சுற்றள வுடையதாய், தீயுமிழ் சிறகணுஞ் செம்புகரு முடைத்தாய் மூன்புயர்ந்து பின்பணிந்திருப்பதாம். அது 'காலொருநான்குங் துதிக்கையுங்கோசமும் வாலுறுப்போடெழு மாநிலந்தோய்ந்து, பாலுஞ்சங்கும் போலக்காலுகிர், காலினுநான்றவொரு தனிக்கையினும், வாலினுமருப்பினுங் கோறல்வல்ல தாய்ப், பதின்மூன்றுமுழச் சுற்றுடையதாகி, யெழுமுழமுயர்ந் தொன்பது முழநீண்டு, தீயுமிழ்சிரகணுஞ் செம்புகருமுடைத்தாய், மூன்புயர்ந்து பின்பணிந்ததாயி னவ்யானை, அரசுவாவென்ன வறையவும்படுமே'' என்னும் பிங்கல நிகண்டுச் செய்யுளாலறிக. 73

உரவுநீர்த் தரங்கக் கடலுடைந் தென்ன வொலிகெழு பல்லி யந் துவைப்ப, மருவலர்க் கடந்த வொளிறு வாள்விசய மாகதரினி னினைத் தெடுப்பத், திருதுவெஞ் சினத்த வரிசிலை யுழவர் சேட் டிளம் புலியெனச் சூழ, வெரிபசும் பொன்செய் மாடநீண் மறுகி னிந்திர குமரனிற் புகுந்தான்.

இ-ள். உரவு – ஒலியையுடைய, நீர் – நீர்நிறைந்த, தரங்கம் – அலைவீசு கின்ற, கடல் உடைந்தென்ன – சமுத்திரமுடைந்ததுபோல், ஒலிகெழு-சத்தமிகுந்த, பல்லியம் துவைப்ப – நாலுவித வாத்தியங்களை முழக்க, மரு வலர் – சத்துருக்களை, கடந்த – வென்ற, ஒளிறு – பிரகாசிக்கின்ற, வாள்-வாட்படையினது, விசயம் – (வீரமுதலிய) வெற்றியை, மாகதர் – வந்தியர் கள், இனிதின் – இனிமையினால், எத்துஎடுப்ப – துதிசெய்ப, திருது – மாறு படுகின்ற, வெஞ்சினத்த – வெவ்விய கோபத்தையுடைய, வரிசிலை – நெடிய

வில்லேந்திய, உழவர் - காலாள்கள், சேடு இளம்புலியென - மிகுந்த இளமை பொருந்திய புலிப்போத்துப்போல, சூழ — சூழ்ந்துவர, எரி — ஒளிவிடுகின்ற, பசும்பொன்செய் — பசியபொன்னுற்செய்த, மாடம் - உபரிகைகளையுடைய, நீண்மறுகில் — நெடிய வீதியில், இந்திரகுமரனில் - இந்திரகுமரன்போல், (நளமகாராசன்) புகுந்தான் — போயினன் எ-று.

கடலுடைதலின் மிக்க வொலியின்மையால் அதைப் பல்லியத்துக் குவமையாக்கினர். பகைவரைக் கடத்தலின் மிக்கவென்றி யின்றென்ப தற்கு, மருவலர்க்கடந்த வாள்விசய மெனப்பட்டது. வீரத்தொடு பாய்தல் பற்றிச் சிலையுழவர்க்குப் புலியுவமையாயது. இந்திரகுமரன் — இந்திரனுகிய குமரனும் அரசாட்சி, செல்வம் போகம் முதலியவற்றிற் குறைவில்லாமை யால் இந்திர குமரனே யுவமிக்கப்பட்டது. இந்திரகுமரன் சயந்தனென லாகாது இது உவமையணி. 74

அலங்குளைப் புரவித் தேர்மிசைப் பொலிந்த வரசிளங் குமரனே நோக்கி, நலங்குடி யிருந்த நாகிள வேய்த்தோ ணங்கையர் பலரும்வந் தீண்டி, விலங்கிவில் லுமிழு மொருதெருஞ் சேடி விஞ்சையர் குமரனே வென்பார், பொலங்குழை மடவா ருளம்புகுந் தருக்கும் பூங்கணைக் குமரனே வென்பார்.

இதுமுதற் பதினெருபாட்டால் சுயம்வரமண்டபத்திற்குச் செல்கின்ற நளனைக்கண்ட மங்கையர்கள் தாங்கொண்ட விரகத்தால் வேறுவேறுகக் கூறுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அலங்கு - அசைகின்ற, உளை - பிடர்மயிரினையுடைய, புரவி - குதிரைகட்டிய, தேர்மிசை - தேரின்மேல், பொலிந்த - விளங்கிய, அர சினங் குமரனே - நளமகாராசனை, நோக்கி - பார்த்து, நலம்குடி யிருந்த - நன்மைதங்கிய, நாகிளவேய்த்தோள் — மிகுந்த இளமையுள்ள மூங்கிலை யொத்த தோள்களையுடைய, நங்கையர்பலரும் — மாதர்களனைவரும், வந்து ஈண்டி - வந்துசேர்ந்து, விலங்கி - தனித்தனியாக, வில்உமிழும் - ஒளியை வீசுகின்ற, ஒரு - ஒப்பற்ற, பெரு - பெரிய, சேடி - விஞ்சைய ருலகத்திருக் கின்ற, விஞ்சையர் குமரனே வென்பார் — விஞ்சையர் குமாரனே வென் பார்கள், பொலங்குழை - பொற்குழைகளை யணிந்த செவிகளையுடைய, மட வார்-மங்கையர்களுடைய, உளம் புகுந்து - உள்ளத்தி னுழைந்து, உருக்கும் - (அதைக்) கரைக்கின்ற, பூங்கணைக் குமரனே என்பார் — மலரம்புகளையுடைய மன்மதனே வென்பார்கள் எ-று.

பெண்களுக்கு வேண்டும் நற்குண மனேத்தும் எப்பொழுதும் நீங்கா திருத்தலால் நலங்குடி யிருந்த வென்றார். நங்கையர் பலரும் இவன்வெல்லு தல் ஆவாராத்தாற் றெரிந்தன ரெனக் கொள்க. விஞ்சையர் குமரன் — விஞ் சையர்க் காசன். மடவாருளத்தை யுருக்குதலால் பூங்கணைக் குமரனேவென்

ரூர். விலங்கி யென்பதற்கு இருளை விலக்கியென விகாரமாக்கினு மமையும். இது ஐயவணி. 75

வண்டுழா யலங்க லுயல்வரு தடந்தோண் மணிநிற வண்ண னெவென்பார், தெண்டிரைக் கடல்வாய்ச் சூர்முத றடிந்த சினவு வேற் குமரனெ வென்பார், விண்டலத் தியங்கு மந்திர மறந்து வீழ்ந்திய லியக்கனெ வென்பார், கெண்டையந் தடங்கண் பெற்ற பேறின்றே கிடைத்தனம் யாமெனக் கிளப்பார்.

இ-ள். வண்டுழாயலங்கல் - வளம்பெற்ற துளபமாலை, துயல்வரு-அசைகின்ற, தடந்தோள் – பருத்த தோள்களையுடைய, மணிநிற வண்ணனெ என்பார் - நீலரத்தின நிறத்தையொத்த நாரணனெ வென்பார்கள், தெண்திரைக் கடல்வாய் – தெளிந்த அலைமோதுகின்ற கடலிடத்தே, சூர்முத றடிந்த – சூரபன்மனுடைய முதல்வனைக்கொன்ற, சினவுவேல் - கோபஞ்செய்கின்ற வேற்படையையுடைய, குமரனெ என்பார்-குமாரக்கடவுளை வென்பார்கள், விண்தலத்து இயங்கும் – ஆகாயத்திற் சஞ்சரித்தற்குரிய, மந்திரம்-மந்திரத்தை, மறந்து – மறந்துவிட்டு, வீழ்ந்து – பூமியில் வீழ்ந்து, இயல்-சஞ்சரிக்கின்ற, இயக்கனெ என்பார் - இயக்கனெ வென்பார்கள், கெண்டையந் தடங்கண் – சேலையொத்த அழகிய விசாலம்பொருந்திய கண்களை, பெற்ற பேறு - பெற்றுக்கொண்டபேற்றை, இன்றே – இப்பொழுதே, யாம் – நாம், கிடைத்தனமென – பெற்றனமென்று, கிளப்பார் – சொல்லுவார்கள் எ-று.

இங்ஙனஞ்சொல்லிய தேவர்களழகையொத்த அழகும் அவர் செய்கையையொத்த செய்கையும் ஞானுக்கிருத்தலால் மாதர்கள் இவ்வாறு கூறினர். கண்களுக்குப் பேறுவது அழகுள்ள ஒருபொருளைக் காண்டலாம். "சூர் முதறடிந்த சுடரிலை வேலோன்" என்றார் சங்கத்து நூலினும் இதுவும் ஐயவணி என்க. 76

ஈர்க்கிடை புகாம லடிபரந் தோங்கு மேரிள வனமுலைத் துவர்வாய்த், தாக்கணங் கனையார் நாணமு மடனுஞ் சங்கமுங் கலையு மூண் ணிறையும், போக்கினர் புலம்பிக் கண்கவர் வனப்பிற் புரவலன் றடம்புயம் புல்லு, மேக்கர வதனு ளுள்ளம்விட் டகலு மின்னுயிர் தாங்கினர் மெலிவார்.

இ-ள். ஈர்க்கிடை புகாமல் – இடையிலீர்க்கு நுழைதற்கிடமில்லாமல், அடிபரந்தோங்கும் – அடிபரந்தோங்கிய, ஏரிளவனமுலை – அழகும் இளமையும் சந்தனக்கோலமும் பொருந்திய தனங்களையும், துவர்வாய் – செவ்வாயையுமுடைய, தாக்கணங்கனையார் – இலக்குமியையொத்த மடவார்கள், நாணமும் - நாணத்தையும், மடனும் – மடமையும், சங்கமும்-வளையையும், கலையும் – ஆடையையும், உள்நிறையும் – உள்ளேயிருக்கின்ற கற்பையும், போக்கினர்-ஒழித்தவராகி, புலம்பி - இரங்கி, கண் - கண்களின் பார்வையை, கவர் – தன்னிடத்தே யிழுத்துக்கொள்கின்ற, வனப்பின் - அழகையுடைய,

புரவலன் – நளமகாராசனுடைய, தடம் – பருத்த, புயம் – தோள்களே, புல்லும் – தழுவவேண்டுமென்னும், எக்கரவதனால் – ஏக்கத்தினால், உள்ளம்விட்டகலும் – உள்ளத்தைவிட்டு நீங்கும், இன்னுயிர் – இனியவுயிரை, தாங்கினர் – சுமந்தவராகி, மெலிவார் – வாடுவார்கள் எ-று.

நாணமுதலிய வைந்தையும் போக்கினமாதர் நளனைத் தழுவல் வேண்டுமென்ற ஆசையினால் அகத்தைவிட்டு நீங்குமுயிரைத் தாங்கி வருந்தியிருந்தனரென்க. ஏக்கரவு – தொழிற்பெயர். 77

பாட்டளி துதைந்து பருமுகை யவிழ்க்கும் பைந்துணர்த் தெரியல்சூழ் கூந்தற், சூட்டுடை யுச்சி நாகமங் கையர்தங் துணை முலை பசப்பவந் தெய்தி, வாட்டிறற் குரிசில் செயிரற விளங்கும் வனப்பெலாம் வந்திய ருரைப்பக், கேட்டகண் கண்டு களிப்புற நோக்கிக் கிடைத்ததெத் தவமெனக் கிளப்பார்.

இது நாகமங்கையர் சொல்லியது.

இ-ள். பாட்டளி – இசையைப்பாடுகின்ற வண்டுகள், துதைந்து – நெருங்கி, பருமுகை – பரிய அரும்புகளே, அவிழ்க்கும் – விரிக்கின்ற, பைந்துணர் – பசிய பூங்கொத்துகளாற்செய்த, தெரியல்சூழ் – மாலைசுற்றிய, கூந்தல் – அளகபாரத்தையும், சூட்டுடையுச்சி – உச்சிக்கொண்டையுமுடைய, நாகமங்கையர் – நாகலோகத்துமாதர், தம் – தம்முடைய, துணைமுலை – இரண்டுதனங்களும், பசப்ப – வேறுபட்ட நிறத்தையுடைய, வந்துஎய்தி – வந்து சேர்ந்து, வாட்டிறற் குரிசில் – நளமகாராசனது, செயிரற – குற்றமில்லாமல், விளங்கும் – பிரகாசிக்கின்ற, வனப்புஎலாம் – அழகனைத்தையும், வந்தியருரைப்ப – புகழ்வோர்கள்சொல்ல, கேட்ட – கேள்வியுற்ற, கண் – கண்களானவை, கண்டு – பார்த்து, களிப்புற – களிப்பையடைய, நோக்கக் கிடைத்தது – பார்க்கக்கிடைத்தது, எத்தவமென – எப்பொழுதுசெய்த தவமென்று, கிளப்பார் – சொல்லுவார்கள் எ-று.

நளனுடைய அழகை வந்தியரால் கேள்விப்பட்ட கண்களே இப்பொழுது காணக்கிடைத்தது எப்பொழுதுசெய்த தவமென நாகமங்கையர் கண்ணே யே செவியாகக் கொண்டமையால் இருவகை யின்பமும் ஒருகாலத்து ஒன்றலுற் பெற்றமையால் வியந்து இவ்வாறு கூறினரென்க. நாகமங்கையருக்குக் கண்ணே செவியென்பது. ''பனியே கட்செவி பாம்பெனப்படுமே'' ''பரிசமுறுக்காண்டல்பகர்கேள்வியோர்பான், மருவுமணிப்பூணினன் வந்தான்'' இவற்றாலறிக. 78

அமைத்தட மென்றோ ளரம்பையர் நிதலி யணிந்தபொற் றடமுலைப் பாரஞ், சுமக்கலா தொல்கி நுழைமருங் கொசியத் துகிற்கொடி மறுகின்வந் தெய்திச், சமர்த்தலை யுடன்றோ ராருயிர்பருகுந் தாமரைவற் குரிசிலை நோக்கி, யிமைப்பிலா நாட்டம் பெற்றமே றின்றே யெய்தின மெனமகிழ்ந் திசைப்பார்.

இது அரசமங்கையர் சொல்லியது.

இ-ள். அமை – மூங்கிலையொத்த, தடம் – பருத்த, மென்தோளாம் பையர் – மெல்லிய தோள்களையுடைய அரமங்கையர்கள், திதலையணிந்த – தேமலையணிந்த, பொன் – அழகிய, தடம் – பருத்த, முலைப்பாரம் – முலைகளினுடைய சுமையை, சுமக்கலாது – பொறுக்கமாட்டாமல், ஒல்கி – துவண்டு, நுழை – நுட்பமாகிய, மருங்கு – இடையானது, ஒசிய – வருந்த, திகிற் கொடி – வத்திரக்கொடிகளையுடைய, மறுகின் – வீதியிலே, வந்தெய்தி – வந்துசேர்ந்து, சமர்த்தலை – யுத்தகளத்தில், உடன்றோர் – பொருதவர்களுடைய, ஆர் – நிறைந்த, உயிர் – ஆவியை, பருகும் – உண்கின்ற, தாமம் – வெற்றிமாலைதரித்த, வேல் – வேற்படையையுடைய, குரிசிலை – நளமகாராசனை, நோக்கி – பார்த்து, இமைப்பிலாநாட்டம் – இமையாவிழிகளை, பெற்றபேறு – அடைத்தபேற்றை, இன்றே – இப்பொழுதே, எய்தினமென – அடைந்தனமென்று, மிழற்ற – மிழற்சியடைந்து, இசைப்பார் – சொல்லுவார்கள் எ-று.

மூலைப்பாரஞ் சுமக்கக்கூடாதிருந்தும் நுண்ணிய இடைவருந்த அரம்பைய செய்தியது தாம் எப்பொழுதுங் கேள்விப்பட்டும் அறியாத அழகு இவனிடத் திருத்தலாலென்க. இந்திரன்முதலிய தேவரிடத்து மில்லாத இவனிடத்திலுள்ள அழகைக்கண்டு இமையாவிழிகள் பெற்ற பேற்றை யடைந்தனமென்றாரென்க. 79

கலிவலா னெஞ்சிற் காதன்மீ தூர்ந்து கடிமணங் குறித்திவ
ண் புகுகப், புலவுநா றழல்வேல் விதர்ப்பர்கோன் மடந்தை புரித்த
தெத் தவமெனப் புகல்வா, ரிலகுலாம் பைம்பூ ணரசிளங் குமர
ரெண்ணிலர் விரும்பிமே விடினுஞ், சிலிவலாற் கன்றிச் செழுமல
ர்த் தெரியல் சேயிழை புனையுமோ வென்பார்.

இ-ள். கலிவலான் – நளமகாராசனுவன், நெஞ்சில் – மனதில், காதல் – ஆசை, மீதூர்ந்து – அதிகரித்து, கடிமணங்குறித்து – விவாகத்தைக் குறித்து, இவண் – இங்ஙகரில், புகுத – வருதற்கு, புலவுநாறு – புலாலுற்ற நாறுகின்ற, அழல்வேல் – நீயையொத்த வேற்படையையுடைய, விதர்ப்பர் கோன் – வீமராசன்பெற்ற, மடந்தை – தமயந்தியானவள், புரிந்தது – செய்தது, எத்தவமென – என்னதவமென்று, புகல்வார் – சொல்லுவார்கள், இலகுலாம் – இலகிவிளங்குகின்ற, பைம்பூண் – பசிய ஆபரணங்களையுடைய, அரசிளங்குமரர் – இராசகுமாரர்கள், எண்ணிலர் – அளவற்றபேர், விரும்பி – இச்சித்து, மேவிடினும் – வந்தாலும், சிலிவலாற்கு அன்றி – இவ்வரசனுக்கல்லாமல், செழுமலர்த்தெரியல் – செழுமைபொருந்திய மலர்மாலையை, சேயிழை – தமயந்தியானவள், புனையுமோ வென்பார் – தரிப்பாளோ வென்பார்கள் எ-று.

இல – இலைபோலச் சித்திரிக்கப்பட்ட என்னல் சிறப்பு. விதர்ப்பர் கோன் மடந்தை புரிந்த தெத்தவமெனலால், இப்படிப்பட்ட அழகுள்ள

புருடனே மாலையிடத் தாமும் அத்தவஞ் செய்யலாமென்பது கருத்து இங் ஙனங்குணம் மற்ற அரசர்களுக் கில்லாமையால் அன்னவர்க்குத் தமயந்தி மாலைசூட்ட மாட்டாளென்றார். 80

நிரைக்கட லுடுத்த மாநில நிழற்றுந் திங்களங் கவிகைமன் னவரு, மருக்கமழ் தருவி னீழல்வீற் றிருக்கும் வானவர் தொகுதி யும் வருகென், றரத்தமுண் டொளிரு மள்ளிலை நெடுவே லரசர் கோ னழைத்தது குழைக்குங், கருப்புவில் லொழித்த காமனே யனையான் கவினலங் காட்டுதற் கென்பார்.

இ-ள். நிரை – அலைமோதுகின்ற, கடல் – கடலை, உடுத்த – ஆடையாகத் தரித்த, மா – பெரிய, நிலம் - பூமிக்கு, நிழற்றும் – நிழலைச்செய்கின்ற, திங்களங்கவிகை மன்னவரும் – சந்திரவட்டக் குடையையுடைய அரசர்களும், மருக்கமழ் – வாசங்கமழ்கின்ற, தருவினீழல் — ஐந்தருவினீழலில், வீற்றிருக்கும் – அரசிருக்கின்ற, வானவர் தொகுதியும் – தேவர்கூட்டமும், வருகென்று – வாக்கடவீரென்று, அரத்தமுண்டு - உதிரத்தைப்புசித்து,ஒளிரும் – விளங்குகின்ற, அள் இலை – மாமிசத்தை அள்ளிக்கொள்கின்ற இலையையுடைய, நெடுவேல் – நெடியவேற்படையையுடைய,அரசர்கோன் – வீமராசன், அழைத்தது – அழைப்பித்தது, குழைக்கும் - வளைக்கப்பெற்ற, கருப்புவில்லொழித்த – கருப்புவில்லை நீக்கிய, காமனே அனையான் – மன்மதனையொத்த நளனுடைய, கவினலம் – அழகியனலத்தை, காட்டுதற்கு என்பார் – காண்பித்தற்கென்று சொல்லுவார்கள் எ-று.

சுயம்வரமென்று குறித்து, வீமன் தேவர் முதலியவரைத் தன்னகரில் அழைப்பித்தது, நளமகாராசனது மிகுந்த அழகைக் காட்டற்காம். அதிலே அவனுக்கு அவசியமென்னெனில் அப்படிப்பட்டவன் தன் மருகனுதல்பற்றிப் போலும். 81

மண்ணள வன்றிம் மன்னவன் றிணிதோண் மணிவரைப் பணைப்பென மகிழ்வார், கண்ணள வன்று காவலன்கலங் காண்ப தற்கென மனங் கலுழ்வார், பண்ணள வன்றே யமிர்தினிற் றேனிற் பாகினிற் பழுத்தவந் தீஞ்சொல், பெண்ணள வன்றே யாணவா வுறுமிப் பேரொழி லென்றுபே துறுவார்.

இ-ள். மண்ணளவன்று –பூமியைமாத்திரம் ஆளும் அளவுடையதன்றாகும், இம்மன்னவன் – இவ்வரசனுடைய, திணிதோள் – வலிமைபொருந்திய தோளாகிய, மணி - அழகிய, வரைப்பணைப்புள – மலையினுடைய பருமனென்று, மகிழ்வார் – மகிழ்ச்சியடைவார்கள், கண்ணளவன்று - கண்களாலெட்டும் அளவன்றாகும், காவலன் – அரசனுடைய, அகலம் - மார்பு, காண்பதற்கு எனா – பார்ப்பதற்கென்று, மனம் – மனமானது, கலுழ்வார் - கலங்குவார்கள், பண் அளவன்று – பண்களினுடைய அளவன்றாகும், அமிர்தினின் – அமிர்தம்போலும், தேனின் – தேன்போலும், பாகினின் – பாகு

போலும், பழுத்த - (சுவை) முதிர்ந்த, அம் - அழகிய, தீஞ்சொல் - மதுரம் பொருந்திய சொல்லென்பார்கள், பெண்அளவன்று - பெண்கள்மாத்திர மயங்கும் அளவினதன்றுகும், ஆண்அவாவுறும் - ஆண்மக்களும் விரும்பும், இப்பேரெழிலென்று - இப்பெரிய அழகென்று, பேதஉறுவார் - அறிவு மயங்குவார்கள் எ-று.

திரிலோகத்தையும் ஆளத்தக்க புயவலிமை இவனுக் கிருத்தலால், தோளுக்குத் திணியென்னும் அடை கொடுக்கப்பட்டது. * இவன்மார்பு பார்த்தற்கெட்டாமற் கண்ணளவினும் பரந்திருந்ததென்க. பண்ணென்பது பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நான்குவகைப்படும். இவன்மொழி அவற்றினு மிக்கிருத்தலால் அமிர்தினிற்றேனிற் பாகினிற் பழுத்தவந் தீஞ் சொலென்றார். ஆணவாவுதல், யாமும் பெண்பிறப் பெடுத்திருந்தோமாஞல் இப்படிப்பட்ட அழகுள்ள புருடனைச் சேரலாமென்று விரும்புதலாம். வாதம், என்பது வாது எனவும், சத்தம் என்பது சத்துஎனவும் திரிந்து நின் றுற்போலப் பேதம் என்னு மொழியும் - அம்கெட்டுக்குற்றுகரவீறாய் நின்றது. 82

கருணையங் கடல்வாய் மடைதிறந் தொழுகுங் கண்களுங் கதிர்மதி முகமு, முருகுகொப் பளிக்குஞ் செழுமலர்த் தொடைதாழ் முழவுறழ் திணிதடந் தோளும், பருகுவ போல நோக்குவா னேற்ற படைநெடுங் கண்கள்போன் முலைகா, ளருவரை யகலமின் புறத் தீளைப்ப வருந்தவம் புரிந்திலீ ரென்பார்.

இ-ள். கருணையங் கடல்வாய் - அருளாகிய அழகிய கடலிலுள்ள, மடைதிறந்தொழுகும் - மடைதிறந்துவருகின்ற, கண்களும் - நேத்திரங் களேயும், கதிர்மதிமுகமும் - கிரணங்களேயுடைய சந்திரன்போன்ற முகத் தையும், முருகுகொப்பளிக்கும் - தேனேயுமிழ்கின்ற, செழுமலர்த்தொடை தாழ் - செழுமையுள்ள மலர்மாலைதாழ்கின்ற, முழவுறழ் - மத்தளத்தை யொத்த, திணி - வலிமைபொருந்திய, தடந்தோளும் - பருத்த புயங்களே யும், பருகுவபோல - உண்பனபோல, நோக்குவான் - பார்க்கும்படி, நோற்ற - தவஞ்செய்த, படை - வாட்படையையொத்த, நெடுங்கண்கள் போல் - நெடிய கண்களேப்போல, முலைகாள் - தனங்களே, அருவரை-

* இதனுலே நளச்சக்கரவர்த்தியினது வீரம், காமம், ஞானம், அழ கென்னும் அரசிற்குச் சிறந்தன நான்கும் கூறினர். சொல் என்றமை யாலே வேத சிவாகம விழுமதூலறிவு பெறப்படும் வீரமகள், காமகள், வீற் றுத்தெய்வமென்னும் தெய்வங்கள் குடியிருந்தவாறு புலப்படும். இங்ஙனே சிவகசிந்தாமணியாரும்.

கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ்
சிலையின தகலமும் வீணைச் செல்வமு
மலையினி னகலிய மார்ப னல்லதிவ்
வுலகினி லிலையென வொருவ னியைனன். என்றுகூறினமைகாண்க.

அரியமலையை யொத்த, அகலம் – (இந்நளன்) மார்பை, இன்புற - இன்பமிக, நிலைப்ப – அழுந்தத் தழுவுதற்கு, அருந்தவம் – செய்தற்கரிய தவத்தை, புரிந்திலீர் – செய்தீரில்லை, என்பார் – என்பார்கள் எ-று.

மூலைகாள் அரசனுடைய பல அவயவங்களை நோக்கிக் களிக்கும் தவஞ் செய்யப் பெற்ற கண்கள்போல் அவன் மார்பை மாத்திரமேனும் பொருந் தம்படியான அருந்தவம் நீங்கள் செய்திலீரென்றீர். இதனால் தவஞ்செய் தவர் வேண்டியவை யடைவரென்பது கருத்து. அது "வேண்டிய வேண்டி யாங் கெய்தலாற் செய்தவ, மீண்டு முயலப்படும்" என்னுந் திருக்குறளாற் காண்க. 83

பணிமுடிக் கிடந்த பார்பொது நீக்கிப் பரித்திடு மரசிளங் குமரன், மணியெழு வனைய மல்லலந் திணிதோள் வனப்பெலாங் கண்டுகண் டுவப்ப, விணர்விரி பசுந்தார் துயலவரத் தொடுத்த வெரிமணிக் கொடிஞ்சியந் தேர்கொண், டணிகெழு மறுகின் மெல்லெனச் செல்கின் றலங்குளைப் புரவியைத் தொழுவார்.

இ-ள். பணிமுடிக்கிடந்த – ஆதிசேடன் றலைமேலிருந்த, பார்-பூமியை, பொதுநீக்கி – பலவரசர்க்கும் பொதுமையா யிருப்பதை நீக்கி, பரித்திடும்- (முழுவதுந் தானெருவனே) சுமக்கின்ற, அரசிளங் குமரன் - களனுடைய, மணியெழு வனைய – மணித்தூணையொத்த, மல்லல்-வளம்பொருந்திய, அம்- அழகிய, திணிதோள் – வலிமைபெற்ற தோள்களினுடைய, வனப்பெலாம்- அழகனைத்தையும், கண்டு கண்டு-நோக்கி நோக்கி, உவப்ப-மகிழ்ச்சியடைய, இணர்விரி – பூங்கொத்துகள் விரிந்த, பசுந்தார்-பசிய மலர்மாலை, துயல்வர- அசைய, தொடுத்த – கட்டப்பெற்ற, எரிமணி – ஒளியையுடைய மணிகள் பதித்த, கொடிஞ்சியந்தேர்கொண்டு – மேன்மொட்டையுடைய தேரைக் கொண்டு, அணிகெழு மறுகின் – அழகுபொருந்திய வீதியில், மெல்லெனச் செல்கென்று – மென்னப்போகென்று, அலங்கு - அசைகின்ற, உளை – புற மயிர்களையுடைய, புரவியை – குதிரையை, தொழுவார் – வணங்குவார்கள்.

கிடையாத கிடைத்த நளமகாராசனுடைய அழகைப் பார்த்த மங்கை யர் இன்னுஞ் சிறிதுபொழுது பார்த்தற்கு இடையூறுகத் தேரை விரைவிற் கொண்டுபோதலாலே, தம்மாற் றொழப்படுதற்குரிய தல்லதாகிய வீலங்கின் பிறப்புடைய குதிரையையும் வணங்கினார்க ளென்பதாம். இதனால் ஒரு வருக்குத் தன்னன்பு தெரிவித்தற்கு வணக்கம்போல மற்றொன்றில்லை யென்பது கருத்து. 84

வேலென மிளிர்ந்து குமிழ்மிசை மறிந்து வேனிலாற் கரசிய லளித்துச், சேலெனப் பிறழ்ந்து குழையெதிர் நடந்து செவ்வரி பரந்தமை தோய்ந்து, காலனிற் சினவிக் கொலைத்தொழில் புரியுங் கருந்தடங் கண்ணினர் தமது, மாலுற விடுத்த மனத்தினுங் கடி தோவுமான் றேரெனத் தொடர்வார்.

இ-ள். வேலென – வேற்படைபோல், மிளிர்ந்து – விளங்கி, குமிழ் மிசை – குமிழம் பூவினையொத்த மூக்கின் மேற்பக்கத்தில், மறிந்து – தடைபட்டு, வேனிலாற்கு – மன்மதனுக்கு, அரசியலளித்து – அரசாட்சியைக்கொடுத்து, சேலென – கெண்டைபோல, பிறழ்ந்து – துள்ளியோடி, குழை – குழையெனப்படுகின்ற காதணிக்கு, எதிர் – முன்பாக, நடந்து-சென்று, செவ்வரி-சிவந்தரேகைகள், பரந்து – பரவப்பெற்று, மை-அஞ்சனத்திலே, தோய்ந்து-அமிழ்ந்தி, காலனில் – யமன்போல், சினவி - கோபித்து, கொலைத்தொழில்-கொல்லுந்தொழிலே, புரியும் – செய்கின்ற, கருந்தடங்கண்ணினர் – கரிய விசாலம் பொருந்திய கண்களையுடைய மாதர்கள், தமது – தம்முடைய, மாலுற – மயக்கம்பொருந்த, விடுத்த – அனுப்பப்பட்ட, மனத்தினும் - மனத்தைக்காட்டிலும், கடிதோ – கடுமையையுடையதோ, வாவும் - தாவுகின்ற, மான் – குதிரைகட்டிய, தேரென – தேரென்று, தொடர்வார் – அத்தேரின் பின் செல்லுவார்கள் எ-று.

வேனிலாற் கரசியலளித்தலாவது – இவர்கள் கடைக்கண்பார்வைகளானவை திரிலோகத் தரசரையும் வீரகங்கொண்டு வருந்தச்செய்து மன்மதனுடைய தொழிலே வீர்த்தியாக்குதலாம். மனோவேகத்தினுங் குதிரை வேகஞ் சிறிதாதலால் மாதர்கள் தமது மனத்தினுங் கடிதோவாவு மான்றேரென்றார். 85.

* கண்டுகண் டருகி யினையராய் மனனுங் கருந்தடங் கண்களுங் களிக்கும், வண்டிமிர் கூந்தல் வனிதையர் வருந்த மணிகெடு வீதிவா யகன்று, கொண்டல்கண் படுக்கும் வரையினின் றிழியுங் கோளரி யேறென நிவந்த, விண்டொடு கொடிஞ்சித் தேரினின் றிழிந்து மேவரும் வேத்தவை புகுந்தான்.

இ-ள். இனையராய் – இத்தன்மை யுடையவராய், கண்டுகண்டு - பார்த்துப்பார்த்து, மனனும் – மனமும், கருந்தடங் கண்களும் - கரிய பெரியகண்களும், களிக்கும் – களிக்கின்ற, வண்டு – வண்டுகள், இமிர் – ஒலிக்கின்ற, கூந்தல் – அளகத்தையுமுடைய, வனிதையர் - மங்கையர்கள், உருகி – கரைந்து, வருந்த – துன்பமுற, மணி – அழகிய, நெடுவீதிவாய் – நெடிய தெருவின்கணின்றும், அகன்று – நீங்கி, கொண்டல் – மேகங்கள், கண்படுக்கும்-நித்திரைசெய்கின்ற, வரையினின் றிழியும் – மலையினின்று மிறங்குகின்ற, கோளரியேறென – சிங்கவேற்றைப்போல், நிவந்த – உயர்ந்த, விண்தொடு-ஆகாயத்தையளாவிய, கொடிஞ்சி – மேன்மொட்டையுடைய, தேரினின்

* இப்பாட்டின் கருத்துப்போலச் சீவகசிந்தாமணியாரும் உரைத்த ஒப்புமை யுணரத்தக்கது. சீவகசிந்தாமணி. கோவிந்தையாரிலம்பகம் – 62. செய்யுள். "வாண்முகத் தலர்ந்த போலு மழைமலர்த் தடங்கண் கோட்டித்-தோண்முதற் பசலைதீரத் தோன்றலைப் பருகுவார்போ – ஞண்முதற் பாசந் தட்ப நடுங்கினர் நிற்பதில்லான்—கோண்முகப் புலியோ டொப்பான் கொழுநிதிப் புரிசைபுக்கான்."

நிழிந்து – இரதத்தினின்று மிறங்கி, மேவரும் – (ஒப்பனை) பொருந்திய, வேத்தவை – இராசசபையில், (நளனவன்) புகுந்தான் – புகுந்தனன்.

கோள் – வலிமை. கண்டு கண்டு என்னும் அடுக்கு மிகுதிப்பொருட்டு. வனிதையர் – அழகுடையவர். வனிதா – அழகு.

நளன் மாதர்கள் வருந்த வீதியினீங்கித் தேரினின் நிழிந்து அவையிற் புகுந்தானென்க. வேந்தவை – வேத்தவையெனச் சந்த வின்பநோக்கி விகார மாயிற்று. வரையினின்நிழியுங் கோளரியேறென வென்றமையால் உவமையணி. 86

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தெரியல்சூழ்குவவுத்திண்டோட்சிலைவலானினிதினெய்த
வரசவையிருந்தசெவ்வியரசிளங்குமரரெல்லாங்
குரைகடன்முகட்டிற்றோன்றுங்குளிர்மதிகாண்டலோடும்
விரிகதிர்மழுங்குவானின்மீனினமென்னலானூர்.

இதனுல் சபையிலிருந்த அரசர்களுடைய தன்மை கூறப்படுகின்றது.

இ-ள். தெரியல்சூழ் – மாலைகள்சூழ்ந்த, குவவு – திரட்சிபொருந்திய, திண் – வலிமைபெற்ற, தோள் – புயத்தையுடைய, சிலைவலான் – நளமகாராசன், இனிதின் – இனிமையால், எய்த – அடைய, அரசவையிருந்த – (அப்பொழுது) இராசசபையிலிருந்த, செவ்வி-அழகிய, அரசிளங்குமரரெல்லாம்-இராசகுமாரர்களனைவரும், குரை-ஒலியையுடைய, கடன் முகட்டிற் றோன்றும் – கடலுச்சியி லுதிக்கின்ற, குளிர்மதி – குளிர்ச்சிபொருந்திய சந்திரனை, காண்டலோடும் – கண்டவளவில், விரிகதிர் மழுங்கும் – விரிந்த கிரணங்களினெளிகெடப்பெற்ற, வானில் – ஆகாயத்திலிருக்கின்ற, மீனினம் என்னலானூர் – உடுக்கணமென்று சொல்லும்படி யாயினர்கள் எ-று.

கதிர்மழுங்கினும் உடுக்கணத்திற்குச் சந்திரனிடத்து வெறுப்பின்றி விருப்புமிகுதல்போல், அழகிற் குறைந்த அரசர்களுக்கு நளனிடத்து விருப்புமிகுதல் கொள்க. உடுக்கணத்திற்குச் சந்திரனிடத்து மகிழ்ச்சியுண்டாதல் அவன் உடுபதியாதலாலும் சிலவற்றிற்குத் தானேவலுதலாலுமென்க. வடிவினுல் மாத்திரமின்றி விற்போர் முதலியவற்றினு மிக்கவனென்பது தோன்றக் குவவுத்திண்டோட் சிலைவலானென்றார். 87

குருமணியியைக்கும்பைம்பொற்கோடுபர்குமிக்குன்றம்
பொருவுமண்டபத்தினூடுபூண்சுடர்தவழப்புக்க
செருமலிதானைவேந்தன்றிருமுகந்திங்களாக
வரசர்வாண்முகங்களெல்லாமம்புயம்போன்றவன்றே.

இ-ள். குரு – நிறம்பொருந்திய, மணி – இரத்தினங்கள், இமைக்கும்-பிரகாசிக்கின்ற, பைம்பொன் – பசிய பொன்னுற்செய்த, கோடுயர்–உச்சியுயர்ந்த, குடுமி – சிகரங்களையுடைய, குன்றம்பொருவும் – மலையையொத்த, மண்டபத்தினூடு – விவாகமண்டபத்தில், பூண் – ஆபரணங்களின், சுடர்

தவழ – ஒளிவிளங்க, புக்க – புகுந்த, செருமலிதானைவேந்தன் – நளமகாராசனுடைய, திருமுகம் – திருமுகமானது, திங்களாக – சந்திரனுக, அரசர்-அரசர்களுடைய, வாள் – ஒளிபொருந்திய, முகங்களெல்லாம் – முகங்களனைத்தும், அம்புயம்போன்ற – தாமரைமலரை யொத்தன எ-று.

அன்று, ஏ – இவ்விரண்டும் அசைகள்.

திங்களைக் கண்ட அளவிலே தாமரைமலர்கள் குவிதல்போல், நளனைக் கண்ட அளவில் அரசர் முகங்கள் வாடினவென்க. இதனால் அரசர்களழகினும் இவனழகு மேற்பட்டிருந்த தென்பது கருத்து. திங்களென்னும் உருவகம் அம்புயம்போன்ற வென்னும் உவமையொடு கலத்தலாற் கலவையணி. 88

கடிமலர்ப்பகழியேந்துங்காமனுநாணும்பொற்பி
ளடல்கெழுபரிதிவைவேலயனியினிதினோக்கித்
தொடுகழலமரர்யாருந்துயரொடுமுழுக்காறெய்தி
வடிவினிற்சிறந்தானேனுமானுடனலனெவன்றூர்.

இதனால் தேவர்கள் பொறுமை சொல்லப்படுகின்றது.

இ-ள். கடி – வாசனைபொருந்திய, மலர்பகழி யேந்தும் – பூங்கணைகளையேந்திய, காமனும் – மன்மதனும், நாணும் – நாணத்தக்க, பொற்பின்-அழகையுடைய, அடல்கெழு – வெற்றிமிகுந்த, பரிதி – சூரியன்போன்ற, வைவேல் – கூரியவேலையுடைய, ஐயனை – நளமகாராஜனை, இனிதின் – இனிமையினால், நோக்கி – பார்த்து, தொடுகழல்-கட்டப்பட்ட வீரக்கழலையுடைய, அமரர்யாரும் – தேவர்களனைவரும், துயரொடும் – துன்பத்துடன், அழுக்காறெய்தி – பொறுமைகொண்டு, வடிவினில் – உருவத்தில், சிறந்தானேனும் – (இந்நளன்) சிறந்திருந்தானேனும், மானுடனலனெவன்றூர் – மானிடத்தன்மையையுடையவனல்லனென்று சொன்னார்கள் எ-று.

அழகிற் சிறந்த நளனைத் தேவர்கள் மற்றொன்றிலுங் குறைவுபடுத்தக் கூடாமல் வடிவினிற் சிறந்தானேனு மானுடனலனெவன்று பிறப்பிற் குறைவுசொல்லுதலால், அப்பொறுமைவார்த்தை அவனுக்குக்கல்வி, செல்வம், வீரம், தீரம், போகம், அரசு, வெற்றி, நற்குணம், நற்செய்கை முதலியவற்றொன்றிலும் ஒருகுறைவுமில்லை யென்பதனைப் புலப்படுத்தி நின்றது. அத்தேவர்களுக்கு, நாம் மானுடரும் புண்ணியப்பேற்றாற் பெறுவதாகிய தெய்வப் பிறப்பினால் உயர்ந்திருக்கின்றோம் என்னுஞ் செருக்குடையாரென்பது கருத்து. 89

ஓவியமெழுதவொண்ணாவுலம்பொருவயிரத்திண்டோள்
வாவுமான்றடந்தேரண்ணல்வனப்பினைநேராராகித்
தேவரில்லையங்காக்குமரசரிற்செவ்விகாய்ந்த
காவலர்திருந்தகோக்கார்கடைக்கணோக்கினரால்.

இதனுல் நளனைக்கண்ட தேவர்முதலானவர் நாணஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒலியர் – சித்திரக்காராலும், எழுதவொண்ணு-எழுதக்கூடாத, உலம்பொரு – திரள்கல்லியொத்த, வயிரம்-வச்சிரம்போன்ற, திண்டோள்-வலிமைபெற்ற தோளையும், வாவும் – தாவுகின்ற, மான் – குதிரைகட்டிய, தடம் – பருத்த, தேர் – தேரையுமுடைய, அண்ணல் – நளமகாராசனது, வனப்பினை – அழகை, நேராகி – ஒவ்வாதவர்களாய், தேவரில் – தேவருக்குள்ளேயும், வையங்காக்கும் – பூமியைப்புரக்கின்ற, அரசரில் – அரசருக்குள்ளேயும், செவ்விவாய்ந்த – அழகுபொருந்திய, காவலர் – அரசர்கள், திருந்த – நேராக, நோக்கார் – பாராராகி, கடைக்கணுல் – கடைக்கண்ணினுல், நோக்கினர் – பார்த்தார்கள் எ-று.

அழகிற் சிறந்தவனே அது குறைந்தவன் நேராகப்பார்த்தால் நம்மழகிடத்தில் இவன் மிக்க வீருப்புள்ளவனுய் நோக்குகின்றனனென்று எண்ணங் கொள்வானென்று நாணத்தால் கடைக்கண்ணுற் பார்த்தல் உலகத்திற் சுபாவமென்க. 90

விரிகதிரெறிக்கும்பைம்பூண்விதர்ப்பர்கோனினிதினிட்ட
வரியினஞ்சுமந்தபைம்பொனணிமணித்தவிசின்மீது
குருதிகொப்பளிக்கும்வைவேற்குமரனிலிருந்தான்வெய்ய
செருமலிகடலந்தாணைத்தீயுமிழ்வேலினானே.

இதனுல் நளனிருத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். விரிகதிர் – விரியப்பெற்ற கிரணங்களே, எறிக்கும் – வீசுகின்ற, பைம்பூண்-பசும்பொன்னுற்செய்த ஆபரணங்களையணிந்த, விதர்ப்பர்கோன்-வீமராசனுல், இனிதினிட்ட – இனிமையினுலிடப்பட்ட, அரியினம்-சிங்கக்கூட்டங்கள், சுமந்த – தாங்கிய, பைம்பொன் – பசிய பொன்னுற்செய்த, அணி – அழகிய, மணித்தவிசின்மீது – இரத்தினாசனத்தின்மேல், வெய்ய-வெவ்விய, செருமணி – போர்மலிந்த, கடலந்தாணை – சேனாசமுத்திரத்தையும், தீயுமிழ் – தீயையுமிழ்கின்ற, வேலினான் – வேற்படையையுமுடைய நளமகாராசன், குருதி – உதிரத்தை, கொப்பளிக்கும்-உமிழ்கின்ற, வைவேல்-கூரியவேலையுடைய, குமரனில் – குமரக்கடவுள்போல், இருந்தான் – இருந்தனன் எ-று. ஏகாரம் – ஈற்றசைக்கண்வந்தது.

விதர்ப்பர்கோனிட்ட மணித்தவிசி லிருந்தனனெனக் கூட்டுக. வீவாக மண்டபத்திற்கு வந்ததும் வீமன் மரியாதைசெய்ததும் தேவராதி யர்க்குப் பொதுப்படச்சொல்லி நளமகாராசனுக்கு மாத்திரம் வேறுபிரித்துச் சொல்லியதும் அவனுக்கு அவ்வளவு சிறப்பிருத்தலாலும் தமயந்திவிரும்பி மாலையிடலாலு மென்க. 91

கொங்கவிழ்நுவட்பைந்தார்க்குமரனினிதுநோக்கி
யிங்கிவன்வனப்புக்கொவ்வாதிழிவரலெய்திடாம

ஐங்கணைக்கிழவன்வெய்யவழற்கணைலருவமாக்குந்
திங்களங்கண்ணிமுக்கட்டேவினையக்குமன்றே.

இதனால் மன்மதன் வியத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொங்கு—வாசனை, அவிழ்—விரிகின்ற, உருவம்—உருவத்தையுடைய, பைந்தார்—பசியமாலையையணிந்த, குமரனை—நளனை, இனிது-இனிமையால், நோக்கி—பார்த்து, இங்கு—இவ்விடத்தில், இவன்—இவ்வரசனுடைய, வனப்புக்கு—அழகிற்கு, ஒவ்வாது—நிகராது, இழிவால்-இழிதகவை, எய்திடாமல்—அடையாமல், ஐங்கணைக்கிழவன்—மன்மதனனவன், வெய்ய—வெவ்விய, அழற்கணை—தீவிழியால், அருவமாக்கும்—(தன்னை) அருவமாக்கிய, திங்களங்கண்ணி—மூன்றாம்பிறையைத் தரித்த, முக்கட்டேவினை—பரமசிவனை, வியக்கும்—அதிசயிப்பான் எ-று.

அன்று, ஏ—அசைகள்.

* ஐங்கணைக்கிழவன் முக்கட்டேவினை வியத்தலாவது—நாம் எல்லாராலும் அழகில் உவமிக்கப்பட்டிருந்தோம். இப்பொழுது நம்மை அழகால் வென்ற நளனை இவ்வாசர் முன்னே அவமானப்படாமல் ஈசன் அருவமாக்கியது நமக்கு நன்மையாயிற்றென்று நினைந்து மகிழ்தலாம். அருவமாக்கிய குற்றத்தைக் குணமாக்கிக் கொள்ளுதலால் இலேசவணி. 92

ஏழ்நிலவரைப்பில்வானிற்பாதலத்தினிதுவைகும்
பாழியந்தடந்தோள்வேந்தர்பலரும்வந்தமர்த்தலாற்றால்
கேழ்கிளர்மணிசெய்மாடங்கிளர்வெயிலெறிக்குஞ்செய்ய
வாழியந்தடக்கைமாயனகடுபோன்றிருந்ததம்மா.

இதனால் விவாகமண்டபத்திற்கு உவமை சொல்லப்படுகின்றது.

இ-ள், ஏழ்நிலவரைப்பில்—சத்ததீவுகளிலும், வானில்—தேவருலகத்திலும், பாதலத்து—நாகருலகத்திலும், இனிதுவைகும்—இனிமையொடுதங்கிய, பாழி—அகலமாகிய, அம்—அழகிய, தடம்—பருத்த, தோள்—தோளை

* ஐங்கணைக்கிழவனை யருவமாக்கிய காலம்—தற்புருட கற்பத்திலே வேணு என்னும் இந்திரன் காலத்திலே, உத்தராயணத்திலே மாசிமாதத்திலே பூர நட்சத்திரத்திலே யென்க. என்னை? அறுமுகக்கடவுள் சதாசிவப்பெருமானது நெற்றிக்கண்களினின்றும் அறுபொறிகளாகத் தற்புருட கற்பத்திலே திருவவதாரஞ் செய்தாரென்று மற்சபுராணத்திலே கூறப்படுவதனாலும், மாசி மகத்திலே சனக சனாதன சனந்தன சனற்குமார விருடிகட்குச் சிவஞானபோதங் கைவரு மூபதேசம் தக்கிணமூர்த்தியாக விருந்து செய்தாரென்று வாமன மகாபுராணமும், அனலம் என்னும் சிவாகமும் அரையுமாற்றனும் அவர்க்குச் சிவஞானபோதநிட்டை தெருட்டிய நாளிலே காமனடுத்துப் போர்புரிய பூரமாகியவன்று எரித்து, இறைவியை யிமயத்து மணந்தநாளில் இரதிவேண்ட பங்குனி உத்தராநாளாகிய அன்று மீட்டுந் தோன்றிட அருளினன் என்பதனாலும் தெளிக.

யுடைய, வேந்தர் பலரும் – அரசனேவரும், வந்தமர்ந்தவாற்ஞல் – வந்து தங்கியபடியால், கேழ்கிளர் – ஒளிமிகுந்த, மணிசெய்-இரத்தினங்கள் பதித்த, மாடம் – விவாகமண்டபமான து, கிளர் – பிரகாசிக்கின்ற, வெயிலெறிக்கும்-வெயிலை வீசப்பெற்ற, செய்ய – சிவந்த, ஆழி – சக்கரமேந்திய, அம் – அழகிய, தடகை – விசாலம்பொருந்திய கையையுடைய, மாயன் – திருமாலினது, அகடுபோன்று – வயிற்றையொத்து, இருந்தது – இருந்தது எ-று.

சத்த தீவுகளாவன – நாவலந்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, கோமேதகத்தீவு, புட்காணித்தீவு, என்பனவாம். பிரளயகாலத்திற் சராசரங்களெல்லாம் நாரணக் கடவுளது வயிற்றில் அடங்கியிருத்தல்போல் இந்த விவாகமண்டபத்திலுந் திரிலோகத் தரசரும் அவர்கள் பரிவாரங்களும் அடங்கியிருத்தலால் அவ்வயிறு உவமையாயிற்று, இது உவமையணி. 93

மாங்குயிற்குதலேச்செவ்வாய்வனமூலைப்போகம்வேண்டித்
தேங்கமழ்தருவினீழற்றேவருடதங்காக்கு
மோங்கெழுவனையதோளானுருவுகொண்டடைந்தாரென்னி
லாங்கவன்வனப்புநம்மாலறைபலாந்தகைமைத்தன்றே.

இதனுல் நளனழகு சொல்லப்படுகின்றது.

இ-ள். மாங்குயில்-மாமரத்திலிருக்குங் குயிற்சொல்லியொத்த, குதலை-மழலைச்சொல்லையும், செவ்வாய் – செவ்வாயையுமுடைய தமயந்தியினது, வனமூலை – அழகிய தனங்களினுடைய, போகம் வேண்டி – போகத்தை விரும்பி, தேங்கமழ் – வாசனைகமழ்கின்ற, தருவினீழல் – ஐந்தருவினிழலிலிருக்கும், தேவரும் – இந்திரன்முதலியதேவர்களும், கிடதங்காக்கும் – கிடததேசத்தையளிக்கின்ற, ஓங்கெழுவனையதோளான் – உயர்ந்த எழுத்தனையொத்த தோளையுடைய நளமகாராசனது, உருவுகொண்டு – வடிவைக்கொண்டு, அடைந்தாரென்னில் – வந்தாரேயாஞல், ஆங்கவன் – அவ்வரசனுடைய, வனப்பு – அழகு, நம்மால் – நம்மால், அறையலாம் – சொல்லலாம், தகைமைத்தன்று – தகைமையுடையதன்று எ-று.

ஏ – அசை, யாவரும் விரும்பித் தவஞ்செய்தடைதற்குரிய பொன்னுலகத்தையாளும் இந்திரன் முதலிய நால்வரும் தம்முருவோடு மிருந்தால், தமயந்தி மாலே தரிக்கமாட்டாளென்று அழகிற்சிறந்த நளமகாராசனுடைய உருவைக்கொள்வாரென்னில், அவனழகை ஒருவாலுஞ்சொல்லக் கூடாதென்க. 94

வடுநெடுங்கண்ணிகொம்மைவருமூலைதிளைப்பவேண்டித்
தொடுகழலரசர்வெள்ளந்தொக்கொருங்கிருந்ததோற்ற
முடல்சினத்திகிரிமாயனுந்தியங்கமலம்பூத்த
கடவுடன்படைப்பின்வீக்கங்காட்டுதல்போன்றதன்றே.

இதனுல் விவாகத்திற்குவந்த அரசர் கூட்டத்துக்கு உவமை சொல்லப்படுகின்றது.

இ-ள். வடு-மாவடுவையொத்த, நெடுங்கண்ணி - நெடியகண்ணையுடைய தமயந்தியினது, கொம்மை – இளமையையுடைய, வரு - வளரப்பெற்ற, மூலை – தனங்களில், திளைப்ப – அணைய, வேண்டி - விரும்பி, தொடு – கட்டப்பட்ட, கழல் – வீரக்கழலையுடைய, அரசர்வெள்ளம்-அரசர் கூட்டங்கள், தொக்கு – கூடி, ஒருங்கிருந்த தோற்றம் – ஒருசேரவிருந்த தோற்றமானது, உடல் – பொருகின்ற, சினம் - கோபத்தையுடைய, நிகரி-சக்கரப்படையையேந்திய, மாயன் – நாரணனுடைய, உந்தியங் கமலம்பூத்த – நாபிக்கமலமானது தந்த, கடவுள் – பிரமதேவன், தன்புடைப்பின்வீக்கம் – தனது சிருட்டியினுடைய விரிவை, காட்டுதல் – காண்பித்தலை, போன்றது-ஒத்திருந்தது.

இங்ஙனஞ் சொல்லுதலால், திரிலோகத்திலுமுள்ள பிரம சிருட்டியிலடங்கிய அனைவரும் வந்திருந்தன ரென்பது கருத்து. இங்ஙனங்கூடிய வரசவையிற் பிரமன்படைப்பின் வீக்கங்காட்டுதல் போன்றதெனக் குறித்தலால் தற்குறிப்பணி. 95

தனியுருத்தாங்கியீசன் றழல்விழிப்பட்டேமென்று
பனிமலர்ப்பகழிமாரன் பலவுருவெடுத்தல்போலக்
கனிபடுகிளவியாடன் கதிரிளமுலையிற்றோய்வான்
குனிசிலைத்தடக்கைவேந்தரொருவழிக்குழுமினூரே.

இதனுல் அரசர் ஒருங்குசேரக் கூடுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பனி-குளிர்ச்சிபொருந்திய, மலர்ப்பகழி - பூங்கணைகளையுடைய, மாரன் – மன்மதனுவன், தனியுருத்தாங்கி – ஒருவடிவங்கொண்டு, ஈசன்-பரமசிவனுடைய, தழல் விழி – நெருப்புக்கண்ணினுல், பட்டேமென்று-இறந்தேமென்று, பலவுருவெடுத்தல்போல - பலவுருவங்கொண்டதுபோல, கனிபடு கிளவியாள்தன் – தமயந்தியினது, கதிர் – காந்திபொருந்திய, இளமுலையில் – இளமைபொருந்திய தனத்தில், தோய்வான் – கலக்கும்படி, குனிசிலை-வளைந்தவில்லையேந்திய, தடகை – விசாலம்பொருந்திய கையையுடைய, வேந்தர் – அரசரானவர்கள், ஒருவழி – ஓரிடத்தில், குழுமினூர் - கூடினூர்கள் எ-று.

ஏகாரம் – ஈற்றுக்கண்வந்தது. மாரன் – கொல்லுவோன், பட்டேம் என்பது உயர்வுபற்றிவந்த தனித்தன்மைப்பன்மை வினைமுற்று. களிப்படு என்றுல் படு என்னு முதனிலைத் தொழிற்பெயர் தாழ்த்தலென்னும் பொருட்டு.

இங்ஙனஞ் சொல்லுதலால் விவாகத்திற்குவந்த அரசரனைவரும் அழகினுல் மன்மதனையொத்திருந்தன ரென்பது கருத்து. இதுவுமுற்கூறியவணி.

வேனிலானுயர்த்தவெற்றிக்கயலும்வெருட்டிரீண்ட
மானினமருளுநோக்கின்மடவரல்வதுவைகாண்பான்

பானிறவன்னமூர்ந்தபழமறைக்கிழவனோடு
நீனிறச்செங்கண்மாயனெடுவிசும்படைந்தான்மன்னோ.

இதனற் பிரமவிட்டுணுக்களின் வரவுசொல்லப்படுகின்றது.

இ-ள். வேனிலான் - மன்மதனனவன், உயர்த்த - பிடித்த, வெற்றி - வெற்றிபொருந்திய, கயலேயும் - கொடியாகிய மீனேயும், வெருட்டி - அச்சமூறுத்தி, நீண்ட - நீண்ட, மானினம் - மான் கூட்டங்கள், மருளும் - மயங்குகின்ற, நோக்கின் - பார்வையையுடைய, மடவரல் - தமயந்தியினது, வதனை - விவாகத்தை, காண்பான் - காணும்பொருட்டு, பால்-வெள்ளிய, நிறம் - வண்ணத்தையுடைய: அன்னமூர்ந்த - அன்னப் பறவையைச் செலுத்திய, பழமறைக் கிழவனோடும் - பிரமதேவனோடும், நீல்நிறம் - கரியவண்ணத்தையும், செம்கண் - செய்யகண்ணேயுமுடைய, மாயன் - காரணனனவன், நெடுவிசும்பு - நெடிய ஆகாயத்தின்கண், அடைந்தான் - வந்தான்.

தமயந்தியினுடைய கடைக்கண் பார்வையைக் குறித்துத் திரிலோகத்தரசரும் வந்திருக்கிறபடியால் அவள்பார்வைக்கு அவ்வளவு சிறப்புச் சொல்லினர். வேனிற்காலத்திற்கு அதிபனுகலின் மன்மதனே வேனிலான் என்றார். வேனிற்காலமாவது சித்திரை வைகாசிமாதம். இதுபற்றி வசந்தன் என்றுங் கூறுவர். பார்வைமாத்திரையானே யின்பநுகருவது மீனுகலின் அதனைத் தன்னருவ வரசிற்கேற்பக் கொடியாக் கொண்டானென்ப. நீலம் என்னும் சொல்லில் அம் கடைக்குறைந்து நின்றது. 97

அவ்வழிநிணம்வாய்ப்பில்கியழலுமிழ்ந்தரத்தந்தோயு
நெய்வழிபரிதிவைவேல்விதர்ப்பர்கோனீலவுண்கட்
செவ்வழியனைதீஞ்சொற்றெரிவையர்தம்மைநோக்கி
மைவழிகரியகூந்தன்மங்கையைக்கொணர்மினென்றான்.

இதனுல் வீமன்செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். அவ்வழி - அப்பொழுது, நிணம் - நிணத்தை, வாய்ப்பில்கி - வாயாற்கொப்புளித்து, அழலுமிழ்ந்து - நெருப்பைக்கக்கி, அரத்தந்தோயும் - உதிரம்படிகின்ற, நெய்வழி - நெய்யொழுகுகின்ற, பரிதி - சூரியனேயொத்த, வைவேல்-கூரியவேலையுடைய, விதர்ப்பர்கோன் - வீமராசனனவன். நீலம் - கருங்குவளே மலர்போன்ற, உண்கண் - மையுண்ட கண்களேயுடைய, செவ்வழியனைய - செவ்வழிப் பண்ணேயொத்த, தீஞ்சொல் - மதுரம்பொருந்திய சொல்லையுடைய, தெரிவையர் தம்மைநோக்கி - மாத்தரைப்பார்த்து, மைவழி - மயிர்ச்சாந்தொழுகிய, கரியகூந்தல் - கரியகுழலேயுடைய, மங்கையை - தமயந்தியை, கொணர்மின் என்றான் - அழைத்துக்கொண்டு வாருங்களென்றான்.

நிணம் - கொழுப்பு. நெய் - எண்ணெய். பரிதி - ஆகுபெயர்.

இப்பொழுது நற்பொழுதா யிருக்கின்றபடியாற் கன்னியை யழைத்துக் கொண்டு வரச்சொன்னர்களென்று மங்களவார்த்தை சொல்லச் செல்கின்

றவாகையால், அத்தன்மை தோன்றத் தீஞ்சொற் றெரிவையரென்ற மாத்திரத் தொழியாது செவ்வழி யனையவென்றூர். 98

உரையதுகேட்டலோடுமோடரித்தடங்கணல்லா
ரெரிபரந்திமைக்கும்பைம்பூணின்னரிச்சிலம்பொடேங்கப்
புரிகுழன்மாலைசோரப்பூசல்வண்டார்த்துப்பொங்க
விரைவினரேகிப்பைம்பொன்விளங்கிழைகோயில்புக்கார்.

இனிப் பதின்மூன்றுபாட்டால் தமயந்திசெய்கை சொல்லத்தொடங்கி இதனுல் மாதர் சென்றமை சொல்லப்படுகின்றது.

இ-ள். உரையது – அச்சொல்லை, கேட்டலோடும் – கேட்டவளவில், ஓடரி - செவ்வரிபரந்த, தடங்கணல்லார் – விசாலம்பொருந்திய கண்ணையுடைய மாதர்கள், எரிபரந்து – ஒளிபரவி, இமைக்கும் - விளங்குகின்ற, பைம்பூண் – பசிய ஆபரணங்கள், இன்னரிச்சிலம்பொடு – இனிய கிண்கிணியுடைய பாதசாலத்தோடு, ஏங்க – ஒலிக்க, புரி – கட்டுப்பட்ட, குழல் – கூந்தலிலிருக்கின்ற, மாலைசோர – மலர்மாலை சோர்வையடைய, பூசல் - மிகுந்த வொலியையுடைய, வண்டு – வண்டுகள், ஆர்த்து – ஒலித்து, பொங்க - எழும்ப, விரைவினர் - விரைவுகொண்டவராகி, ஏகி - போய், பைம்பொன் - பசிய பொன்னுற்செய்த, விளங்கிழை – ஒளிசெய்கின்ற ஆபரணத்தையுடைய தமயந்தியினது, கோயில் – கன்னிமாடத்தில், புக்கார் – புகுந்தார்கள் எ-று.

"அது வுரை" என மாற்றிக்கொள்க. அது - பகுதிப்பொருள் விகுதியுமாம். குழல்போல் முடிக்கப் படுவதாகலிற் குழலென்றூர். ஏங்குதல், சோரல், பொங்குதல் என்னுந் தொழில்கள் விரைவு வகைப்பொருளைப் பயந்துநின்றன. நல்லார் உரைகேட்ட வளவில் பூணுஞ் சிலம்பு ஏங்க, மாலைசோர, வண்டார்த்துப் பொங்கவிரைந்தேகிக் கோயில் புக்காரெனக் கூட்டுக. விரைந்து செல்வோர் தன்மை கூறப்பட்டமையால் தன்மை நவிற்சியணி. 99

வாங்குவிற்றடக்கைவேந்தன்வதுவைமண்டபத்தின்வல்லே
கோங்கிளமுலையினாளைக்கொணர்கவென்றுரைத்தானென்னத்
தீங்கதிர்க்குழவித்திங்கள்சிறைகிடந்தனையநெற்றிப்
பூங்கொடிதன்னையீன்றபொற்றொடிக்குரைத்தான்றே.

இது வீமன் மனைவிக்குச் சொல்லியது.

இ-ள். வாங்கு – வளைக்கப்பட்ட, வில்-வில்லையுடைய, தடக்கை - விசாலம்பொருந்திய கையையுடைய, வேந்தன் - வீமராசனனவன், வதுவைமண்டபத்தின் – விவாகமண்டபத்தில், வல்லே – விரைவிலே, கோங்கிளமுலையினாளை – தமயந்தியை, கொணர்கவென்று – அழைத்துக்கொண்டு வாருங்களென்று, உரைத்தானென்ன – சொன்னனென்று, தீங்கதிர் – மதுரம்பொருந்திய கிரணங்களையுடைய, குழவித்திங்கள – இளம்பிறையானது, சிறை கிடந்தனைய – சிறையிருந்ததையொத்த, நெற்றி – நெற்றியையுடைய, பூங்

கொடிதன்னையின்ற – தமயந்தியைப்பெற்ற, பொற்றொடிக்கு – நற்றாயாகிய சாருகாசினிக்கு, உரைத்தார் – சொல்லினர் எ-று.

தோற்றவனென்பவன் சிறையிடுத லியற்கையாதலால் நெற்றியால் வெல்லப்பட்ட பிறையைத் தீங்கதிர்க்குழலித்திங்கள் சிறைகிடந்தனைய நெற்றியென்றார். அங்ஙனஞ்சென்ற மாதர் அரசன் தமயந்தியை அழைத்து வரச் சொல்லினனென்று அவள் நற்றாயாகிய சாருகாசினிக்குச் சொல்லின ரென்க. வீமன் மனைவிக்குப் பெயர் சாருகாசினியென்பது "வீரவேன் மன்னவன் விழையுங் கற்பினுண், மூரலோன்றாவகை முறைவல் செய்தலாற், சாருகாசினியெனச் சாற்றுநாமத்தா, லோரைமாநலமெலாந் திரண்டவுள் ளத்தாள்" இதனாலறிக. 100

களிமகிழ்வெய்தியாங்கட்கனைத்துவண்டிமிரும்பைந்தார்த்
துளிமதுக்கோதைதன்னைத்துவரினும்விரையினுனு
மொளிமணிகழீஇயதொப்பவுவப்பொடுந்திமிர்த்துபொங்குந்
தெளிதிரைசுருட்டுங்கங்கைத்தீம்புனலாட்டினரே.

இதனால் தமயந்திக்கு நீராட்டல் சொல்லப்படுகின்றது.

இ-ள் களிமகிழ்வெய்தி – மிகுந்த மகிழ்ச்சியை யடைந்து, ஆங்கண் – அவ்விடத்தில், கனைத்து – ஆரவாரித்து, வண்டிமிரும் – வண்டுகளொலிக்கின்ற, பைந்தார் – பசியமலர்மாலையை யணிந்த, துளிமது – தேன்துளிக்கின்ற, கோதைதன்னை – கூந்தலையுடைய தமயந்தியை, துவரினும் – புத்தித் துவராலும், விரையினுலும் – வாசனைத் திரவியத்தாலும், ஒளி – ஒளியையுடைய, மணிகழீஇயதொப்ப – மணியையொப்பமிட்டதையொப்ப, உவப்பொடும் – மகிழ்ச்சியுடன், திமிர்ந்து – பூசி, பொங்கும் – பொங்குகின்ற, தெளிதிரை – தெளிந்த அலைகளை, சுருட்டும் – மடக்குகின்ற, கங்கை – கங்காநதியிலிருந்துகொண்டுவந்த, தீம்புனல் – இனிய நீரைக் கொண்டு, (மாதர்கள்) ஆட்டினர் – முழுகச்செய்தார்கள் எ-று.

ஏ – அசை. கோதை ஆகுபெயர்.

* துவரும், விரையுங்கூறவே மூப்பத்திருவகை ஒமாலிகையையுங் கொள்ளப்படும் "கங்கையின் களிற்றினுச்சிக் கதிர்மணிக் குடத்திற் றந்த, மங்கல வாசனன்னீர் மணிநிறங்கழீஇய தொப்ப, நங்கையை நயப்பவெல்லா விரையொடு துவருஞ்சேர்த்தி, யங்கரவல்குலாளை யாட்டினு ரரம்பையன்

* துவர் விரை, ஒமாலிகை யென்பன மேல்வரும் பாக்களானு முணரப்படும். ஐந்துவிரையாவன.

'கோட்டந் தருக்கந் தகர மகிலரா
மோட்டிய வைந்தும் விரை.'

பத்துத் துவராவன:—

பூவந்தி திரிபலை புணர்கருங் காலி
நாவலோடு நாற்பான் மரமே.

ஞர்'' எனப்பிறரும் இவ்வாறு கூறுதல் காண்க. வாசனைத் திரவியங்களைப் பஞ்சவாசமெனவுஞ் சொல்வர். அவற்றுள் மூப்பத்திரண்டுவகை சேர்ந்த ஓமாலிகையும் பஞ்சவாசமும் பத்துத்துவரும் முறையே இவ்விரண்டு பாட்டாலுங்காண்க. ''புழுகுசட்டங்கோட்டமா ரியக்கோட்ட நாகப் பூமுத் தக் காசு சயிலேகம் விலாமிச்சம், பழுதிலிரு வேரிமலை யிருவேரி மாஞ்சில் பச்சிலை கச்சோலமதி மதுரந்தக்கோலம், வழைமலர்நன் ஞரிதிம்பூவெண் ணெய்கண்டில் வகுளப்பூத் தாவரிசியேலஞ் சாதிக்காய், தழைசரள மில வங்கநாகணமஞ் சட்டி சண்பகமொட்டரத்தை நறும்பிசின் றகரங்குக்கல், கூறியவோ மாலிகையெண் ணுன்கொடு கத்தூரி குங்குமங் கர்ப்பூரமதில் சந்தனமைவிரையும், வீறியபான் மரநான்கு திரிபலைமா வான்மிக்க கருங் காலியெனுந் துவர்ப்பத்து நல்லோர், தேறுவெள்ளிலோத்திரப்பூம் பொருக் கரைத்த சாந்துஞ்சேர்த்து நறுநெய்பூசித் திமிர்தருவி போல, வூறியமா மதகளிற்றுப்பிடரின் வருகங்கையுவந்தாட்டித் திருமேனியொற் றுடை புரிந்தார்'' மரநான்காவன – ஆல் அரசு அத்தி இத்தி என்பனவாம். மணப் பெண்களுக்கு இவ்விரண்டு வகைத்திரவியங்களையும் வெவ்வேறு சேர்த்து அரைத்துப் பூசி முழுக்காட்டல் விவாகதூலிற் சொல்லு நியதியாம். மணி கழீஇய தொப்பவெனலா லுவமையணி. 101

* புரிகுழல்புலரவாசப்பூம்புகைபூட்டிவிண்டு
முருகுயிர்த்தினவண்டார்க்குமுல்லையஞ்சூட்டுவேய்ந்து
வருமுலைமுகட்டிற்றெய்வமலயச்செஞ்சாந்துபூசி
யெரிமணிக்கலாபம்வீக்கியிழைபலதிருத்தினாரே.

மூப்பத்திரு வகையோமாலிகை யாவன:—

இலவங்கம் பச்சிலை கச்சோல மேலங், குலவிய நாகணங் கோட்டகில விய, நாக மதாவரிசி தக்கோல நன்ஞரி, வேகமில் வெண்கோட்ட மேவுசீர்- போகா, தகத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டில்வெண்ணெய், யொத்தகடு நெல்லி யுயிர்தான்றி – அத்தமொடு, வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுட, னெண்ணுஞ் சயிலேக மின்புழுகு – கண்ணுநறும், புன்னை நறுந்தாது புவியுகிர் பூஞ்சாளம், பின்னு தமாலம் பெருவகுளம்—பன்னும், பதிமுக னுண்ணேலம் பைங்கொடிவேரி, கதிர் நகை யோமா லிகை.

* ''ஓரை மிரையினு மீரைந்து துவரினு
மாறைந்தின் மேலிரண் டோமா லிகையினு
நாறைங் கதுப்பி னுனமு நன்குரைஇ
யூறின நன்னீ ருவந்தன ளாட்டி''

என்றபடி வாசநெய்யுரைத்தமணங் கமழுங்கரியகூந்தலைத்துவர்,விரை, ஓமாலிகையெனு மிவையூறிக் காயப்பட்ட நன்னீராலே நிறம்பெற ஆட்டிப் புகையிற் புலர்த்தி ஐந்துவகைபெற வகுத்த வகைதொறும் மான்மதத்தின் கொழுவிய சேற்றை பூட்டல் வழக்காதலின் ''புரிகுழல்புலரவாசப் பூம்புகை பூட்டி'' என்றார்.

இதனுல் அலங்கரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். புரி – கட்டப்பட்ட, குழல் – கூந்தலானது, புல – ஈரம்வாட வாசப் பூம்புகை – வாசனையுள்ள புகையை, ஊட்டி – ஊட்டுவித்து, விண்டு-விரிந்து, முருகுயிர்த்து – தேனைத்தந்து, இனவண்டு – வண்டுக்கூட்டங்கள், ஆர்க்கும் – ஒலிக்கப்பெற்ற, முல்லையஞ்சூட்டு – முல்லைமாலையை, வேய்ந்து-சூடி, வருமுலை முகட்டில் – வளர்கின்ற தனங்களினுச்சியில், தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள, மலயம் – பொதியமலையிற்றோன்றிய, செஞ்சாந்து-செந்நிறமுள்ளசந்தனக்குழம்பை, பூசி – தடவி, எரிமணி – ஒளியையுடைய மணிகளணிந்த, கலாபம் – கலாபத்தை, வீக்கி – தரித்து, இழைபல இன்னும்-அனேக ஆபரணங்களை, திருத்தினர் – அணிந்தார்கள் எ-று.

எகாரம் – ஈற்றசை. † மலயத்திற்குத் தெய்வத்தன்மையாவது – உயர்ந்தோரை யுடைமையாம்.

கலாபம் – பதினறுகோவையுள்ள மணி. இழை திருத்தலாவது – உரியவிடங்களில் தக்கவாறணிதல். ஆபரணங்களும் அனேகம், அணிந்தவரும் அனேகரென்பது தோன்ற இழைபலதிருத்தினரென்றார். 102

வேற்றுருக்கொண்டுமா தின்விளங்குவாண்முகத்திற்சேர்ந்த
கூற்றினைத்தடங்கணென்ன வஞ்சனங்குலவத்தீட்டிக்
கீற்றிளந்திங்களன்றுகிளரொளிநுதலேயென்று
தேற்றுவார்போலச்செய்ய திலகமுமெழுதினாரே.

இ-ள். வேற்றுருக்கொண்டு – வேற்றுவடிவங்கொண்டு, மாதின் – தம்மையந்தியினது, விளங்கு – பிரகாசிக்கின்ற, வாள் – ஒளிபொருந்திய, முகத்திற் சேர்ந்த – முகத்திலடைந்த, கூற்றினை – யமனை, தடங்கணென்ன – விசாலம்பொருந்திய கண்களென்று, அஞ்சனம் – மையை, குலவத்தீட்டி – விளங்கவெழுதி, கீற்று – கீற்றுகிய, இளந்திங்களன்று – இளம்பிறையென்று, கிளரொளி – மிகுந்த ஒளியையுடைய, நுதலேயென்று – நெற்றியேயென்று, தேற்றுவார்போல – தெளிவிப்பாரைப்போல, செய்ய – சிவந்த, திலகமும்-திலகப்பொட்டும், எழுதினர் – எழுதினர் எ-று.

ஏ இரண்டில் முன்னையது தேற்றம்; பின்னையது ஈற்றசை.

கூற்றுவன் வீழி வடிவங்கொண்டு இவள் முகத்திருப்பது எற்றுக்கெனின், தன் வடிவோடு மிருந்துகொண்டு உலகத்தார் நாடோறும் நிந்திக்கத் தானொருவனே கொலைப்பழியைச் சுமத்தல் பற்றிப்போலும் இங்ஙனஞ் சொல்லுதலால் யமன்போலும் விழிகள் ஆடவரைக் கொல்கின்றனவென்

† பொதியத்திற்குத் தெய்வத் தன்மையானது முனிவனுலின் முடித்த கேள்வியான் எனைத்துப் பொருளையு முணர்ந்த பெரியோர் ஆகியிற்றோன்றிச்சலிப்பின்றி நிலையுற்றதென்று கூறுவரன்றி அந்தமுண்டென்று கூறார் உயர்ந்தோர் ஆவார் – இருடிகளும் முனிவர்பிரான் அகத்தியனுமாம் இதுபற்றியே பொதியம் இமயம் புகார் மூன்றும் ஒரேதன்மையவென்றார் சிலப்பதிகாரத்தார்.

பதுகருத்த. இளந் திங்களன்று நுதலேயென்று தேற்றுவார்போ லென்ற தனால், நுதலே இளந்திங்களென்றிருந்தாற்படுமிழுக்கென்னெனின்? அதனை விரகிகள் நிந்தித்தலுண்டு; அந்நிந்தை இதற்கேறுமென்று கருதி அடையாள மாகத் திலகமு மெழுதினரெனக்கொள்க. கூற்றினேத்தடங்கணென்னும், திங்களன்று நுதலேயென்னும் ஒழிப்பணிகள், தேற்றுவார் போலவென்ற தற்குறிப்போடு கலந்து வருதலாற் கலவையணி. 103

வணங்கிடையிறுவதோராவனமூலைகவர்ந்துகொண்ட
சுணங்கணியாகமுற்றுஞ்சுந்தரச்சுண்ணமாட்டிக்
கணங்குழைமுகத்துச்செவ்வாய்க்கன்னன்மென்றூனையதீஞ்சொ
லணங்கினுக்கணிசெய்வார்போலணியினுக்கழகுசெய்தார்.

இ-ள். வணங்கு – வளைகின்ற, இடை – இடையானது, இறுவது- ஒடிவதை, ஓரா – எண்ணுது, வனமூலை – அழகிய முலைகளென்பவை, கவர்ந்துகொண்ட – கிரகித்துக்கொண்ட, சுணங்கு – தேமலையுடைய, அணி – அழகிய, ஆகமுற்றும் – மார்புமுழுவதும், சுந்தரச்சுண்ணமாட்டி- அழகிய பொற்றூளைத் தூவி, கணங்குழைமுகத்து – கூட்டமாகிய மணிகள் பதித்த குழையையணிந்த முகத்தையும், செவ்வாய் – சிவந்தவாயையும் கன்னன் மென்றூனைய – கரும்பை மென்றதையொத்த, தீஞ்சொல் – மதுர வார்த்தையையுமுடைய, அணங்கினுக்கு – தமயந்திக்கு, அணிசெய்வார் போல் – அழகுசெய்பவர்போல், அணியினுக்கு – ஆபரணங்களுக்கு, அழகு செய்தார் – அழகைச்செய்தார்கள் எ-று.

ஆபரணங்கள் தமயந்தியின் அவயவங்களிலே தரிக்கப்பெற்றுச் சிறப் புப் பெறுதலால், அணியினுக்கழகு செய்தாரென்றார். இதனால் ஆபரணந் தரியாவிடினும் அவளுக்கு இயற்கையழகே போதுமென்பது கருத்து. 104

* அயினிநீர்விளக்கமேந்தியையவிசிதறிமுத்தந்
துயல்வருமூலையினர்தந்தொல்குலத்தெய்வம்போற்றி
முயலறுமுழுவெண்டிங்கண்முகத்துவெண்முத்தமூரன்
மயிலியற்றிருவனூலவலஞ்செய்து † காப்புமிட்டார்.

---

* அயினிநீர் விளக்கமேந்தல் - மனுடரால்நேரும் கண்ணேறு, நாவேறு என்னுமிவற்றால் தன்பம் வராதபடி கழித்தற்கென்க, தமயந்தியை விதர்ப் பர்கோனும் சாறுகாணினியும் பரமசிவன் திருவருளாற் பெறலின், ஈண்டுத் "தொல்குலத் தெய்வம்" என்றது சிவபெருமானேயேயாம்.

† காப்பு – பூதப்பிரேத வேதாள சாகினி இடாகினியாதியவற்றால் தன் பங்களேரிடாதபடி காத்தலைச் செய்வது. எனவே விபூதி எனப்படும். என்னை? வைணவமுதலிய மதத்தாராற் கொள்ளப்படும் வெள்ளைமண், குங்குமம், மஞ்சள், சந்தனம், சாக்குப்பொட்டு என்னுமிவை சுவீனக்குறிக ளாகலானும்; காப்பு என்னும்பெயர் அவைக்கின்மையானும், திருநீறென் றையே பிருகச்சாபாலம், பஸ்மசாபால முதலிய வேதசிரசுகள் ரகை யென்னலாலுமென்க. இதனாலுஞ் சிவனே யவட்குக் குலதெய்வமென்பது.

இதனுல் உபசரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அயனிநீர்விளக்கம் – ஆலாத்தியை, எந்தி – எதிரேயேந்தி, ஐயவி – ஐயவியை, சிதறி – வீசி, முத்தந்துயல்வரும் – முத்துவடமசைகின்ற, முலையினர் – தனங்களையுடைய மாதர்கள், தம் – தம்முடைய தொல்குலத் தெய்வம் போற்றி – தொன்றுதொட்டு வணங்குகின்றதெய்வத்தைத் துதித்து, முயலறு – முயற்கறைநீங்கிய, முழுவெண்டிங்கள் – வெள்ளிய பூரணச் சந்திரனையொத்த, முகத்து – முகத்திடத்தில், வெண்முத்த மூரல் – வெள்ளிய முத்தையொத்த பற்களையும், மயிலியல் – மயில்போன்ற சாயலையுமுடைய, திருவனை – தமயந்தியை, வலஞ்செய்து – வலமாகச் சுற்றி, காப்புமிட்டார் – திருநீரும் தரித்தார்கள் எ-று.

அயனிநீர் விளக்கமென்பது – மஞ்சணீர்க் கலத்திலே செஞ்சோற்றுத் திரளையை வைத்து அதன்மேலேற்றும் விளக்காம். ஐயவிசிதறியென்பது – வெண்கடுகிறைத்தல்; அது அலகை நீக்கும்பொருட்டுச் செய்வது. கடுகிற்குக் கடிப்பகை யென்னும் பெயர் வந்தது இதனுலெனக்கொள்க. கடி – அலகை. இனி இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமையென்னும் ஐவகை எண்ணமுள்ள சோற்றை வெவ்வேறு ஐந்துருண்டை செய்து பலியிடுவதெனினும் அமையும். காப்புமிட்டாரென்னும் எச்சவும்மை இன்னும் செய்யவேண்டியவைகளையுஞ் செய்தாரென்பதைக் காட்டி நின்றது. 105

பந்தொடுகழங்கும்பொன்னம்பாவையுங்கிளியும்யாழுஞ்
சிந்துரத்திலகநெற்றித்தெரிவையருடன்கொண்டேக
விந்திரகுமரன்னனெழின்மணிபகலம்பூட்டக்
கொந்தவிழலங்கன்மாலைகொண்டனர்மருங்குசெல்ல.

இதுமுதல் நான்குபாட்டுக்களால் தமயந்தி சுயம்வர மண்டபத்திற்குப் புறப்படல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பந்தொடு – பந்தையும், கழங்கும் – அம்மனையையும், பொன்னம்பாவையும் – சுவர்ணப்பதுமைகளையும், கிளியும் – கிளிப்பிள்ளைகளையும், யாழும் – யாழையும், சிந்துரத்திலகநெற்றி – சிந்தூரப்பொட்டணிந்த நெற்றியையுடைய, தெரிவையர் – மங்கையர்கள், உடன்கொண்டேக – உடன்கொண்டுசெல்ல, இந்திர குமரன்னன் – நளமகாராசனுடைய, எழில் – அழகிய, மணி – இரத்தினபரணம்பூண்ட, அகலம் – மார்பினிடத்தில், பூட்ட – தரிக்க, கொந்தவிழ் – கொத்துவிரிகின்ற, அலங்கன்மாலை – மலர்மாலையை, கொண்டனர் – (எந்திக்) கொண்டவர்கள், மருங்குசெல்ல – அருகேவர எ-று.

ஒடு – எண்ணொடு. பொன் என்னுஞ் சொல், அம் – சாரியைபெற்று நின்றது. அலங்கன்மாலை என்றது காளிங்கமுகு என்றாற்போல வந்தது.

தமயந்தி அரசமாதாதலால், தனது செல்வ மிருந்திக் கேற்ப இது வரையும் பொழுது போக்கற்குச் சகாயமா யிருந்த பந்து முதலிய வற்றை யும் ஏவன் மாதர் உடன் கொண்டு சென்றன ரென்க. தாமொரு கரு மத்தின் பொருட்டுச் செல்லுபவர் இவைபோல்வனவற்றை உடன் கொண்டு சென்றதுண்டோ வெனின்? உண்டு. அது "கைக்கடாக் குரங்கு கோழி சிவல்கவு தாரிபற்றிப், பக்கமுன் போதுவார்கள் பயின் மொழி பயிற்றிச் செல்வ, மிக்கபூம் பிடகைக்கொள்வார் விரையடைப் பை யோர்சூழ, மைக்கருங் கண்ணினர்கண் மறுகநீண் மறுகில்வந்தார்" இதனு லறிக. இவள் நளனுக்கே மாலைசூட்ட வேண்டுமென்றிருக்குந் துணிவாலும், இச்செய்யுள் பின்பு செய்யப்பட்டமையாலும், மாலையை இந்திரகுமர னன்னு னெழின்மணி யகலஞ் சூட்டவென்றார். 106

விரியிருள்சீக்குங்கற்றைவெண்ணிறக்கவரிவீச
வெரிமணியடைப்பைதாங்கியின்னகைமகளிர்போத
* வரிசிலைதூணியொள்வாள்கேடகம்வீலக்கைபற்றிப்
புரிநரம்பிரங்குதீஞ்சொற்பொன்னனர்முன்னரேக.

இ-ள். விரியிருள் - விரிந்தயிருளை, சீக்கும் - ஓட்டுகின்ற, கற்றை-மயிர்த்தொகுதியாகிய, வெண்ணிறக்கவரி — வெண்ணிறத்தையுடைய சாம ரைகளை, வீச – (மாதர்க ளிருபாலும்) வீசிவர, எரி — ஒளிவிடுகின்ற, மணி-மணிகள்பதித்த, அடைப்பைதாங்கி – அடைப்பையைச் சுமந்து, இன்னகை-இனிய நகையையுடைய, மகளிர் - மாதர்கள், போத — செல்ல, வரிசிலை-நெடியவில்லையும், தூணி – அம்புக் கூட்டையும், ஒள்வாள் – ஒளியையுடைய வாளையும், கேடகம் - கேடகத்தையும், வீலக்கை-வீலையிலணிந்த கையில், பற்றி – ஏந்திக்கொண்டு, புரிநரம்பு – (யாழிற்கட்டிய) நரம்புகள், இரங்கு-வருந்தும்படியாகியு, தீஞ்சொல் – மதுரவார்த்தையையுடைய, பொன்ன னர் - மங்கையர்கள், முன்னரேக – முன்னேசெல்ல எ-று.

மற்றைத் தொழிற் கேற்பக் கவரி வீசுதற்கும் மாதரென்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. அடப்பை – தாம்பூலம் வைக்கும் ஒருபாத்திர விசேட மாம். விற்படை முதலியவற்றை மாதரேந்தி வந்தனரெனலால், அலங் காரப் பொருட்டன்றி ஒருவ ரெதிர்ப்பில் வெற்றிகொள்வீரோ வெனில்? துர்க்கை காளி முதலியவரும் அசுரரைக் கொன்று வென்றிபெற்றன ரென்

---

* சில முதலியன ஏந்தி மாதரேகினமை அலங்காரமெனலும், எதிர்த் தாரை வெல்லுதற்கெனலும் பொருந்தா.—என்னை? அவைகண்டுழி யச்ச நேர்வதல்லது அழகுண்டான தின்மையாலும், கன்னிமாடத்தினின்றுசுயம் வர மண்டபத்திற்கு வருங்கால் எதிர்க்கும் அரசருளரேற் சுயம்வரமென்பது பொய்க்குமாகலானும் பொருந்தாவாதல், அரசகன்னிகை யாகலின்றன்குல தின்னங்களே முற்கொண்டு செல்லும் வழக்கப்படி யேந்துவித்து வந்தானென் றலே சிறப்புடைத் தென்மனுர் புலவர்.

றும், கைகேசி முதலிய அரசமாதரும் விசயங்கொண்டனரென்றும்சரித்திர மிருத்தலால், இவருங்கொள்வாரென்க. 107

தொல்குலமரபிற்றோன்றிச்சூழ்புலநெறியிற்காத்துக்
கல்வியின்றுறைகைபோயவிருத்தர்கஞ்சுகத்தின்மெய்யர்
வில்லுமிழ்மணியிற்செய்தவேத்திரக்கரத்தர்வேந்திர்
நில்லுமினின்மினென்னுநீக்கினர்தொடர்ந்துசெல்ல.

இ-ள். தொல்குல மரபிற்றோன்றி – தொன்றுதொட்டு வருகின்ற நல்ல மரபிற்பிறந்து, சூழ்புலம்-ஒன்றைப்பற்றுகின்ற புலனைந்தையும், நெறியிற் காத்து – புறம்போகவொட்டாமலடக்கி, கல்வியின்றுறை – கல்வியின் வழியில், கைபோய – வல்லவராகிய, விருத்தர் – விருத்தரும், கஞ்சுகத்தின் மெய்யர் – கவசம்பூண்ட தேகத்தையுடையவரும், வில்லுமிழ் – ஒளியைக் கொப்புளிக்கின்ற, மணியிற்செய்த – மணியினுற்செய்த, வேத்திரக்கரத்தர்-பிரம்பைக் கையிலுடையவரும் (ஆகிய சேவகர்கள்) வேந்திர் – அரசர்களே, நில்லுமின் நின்மினென்னு-நில்லுங்கள் நில்லுங்களென்று, நீக்கினர்-அவரை விலக்கினராகி, தொடர்ந்துசெல்ல – தொடர்ந்துடன்செல்ல எ-று.

தமயந்தி பெண்பாலாகையால், அதற்கேற்ப அவளருகே என்று உபசரிக்க மாதரையும்பின்பு அம்மாதரைச் சூழ்ந்துவரநற்குணநற்செய்கையுள்ள விருத்தராகிய சேவகரையுங் கூறினரென்க. 108

பாயிருண்மேயும்பைம்பொ * னிலத்திடைப்பராரைச்சாந்தத்
தேய்வையின்முழுகிநுண்டேசுடுத்துமேற்றேங்கொள்வாசத்
தாய்மலரனிச்சப்போதுபரப்பியவணிகொள்வீதி
வேயுறழ்பசியதோளிமெல்லடிபெயர்த்திட்டாளே.

இ-ள். பாயிருள் – பரவியவிருளே, மேயும் – மேய்கின்ற, பைம்பொன்னிலத்திடை - பசியபொன்படுத்த பூமியிலே, பராரை – பருத்த அடியையுடைய, சாந்தம் – சந்தனமரத்திற்கொண்ட கட்டையாற்சேர்த்த, தேய்வையின் – குழம்பினால், மெழுகி – மெழுகி, நுண்தூசு – மெல்லிய வத்திரத்தை, உடுத்து – பரப்பி, மேல் – மேலே, தேம்கொள்-தேனைக்கொண்ட, வாசத்து – வாசனையோடுகூடிய, ஆய் - ஆய்ந்தெடுக்கப்பட்ட, மலர்-விரிந்த, அனிச்சம்போது அனிச்சமலரை, பரப்பிய-பரப்பியிருக்கின்ற, அணிகொள்-அழகைக்கொண்ட, வீதி – வீதியிலே, வேய் உறழ் – மூங்கிலையொத்த, பசிய தோளி – பசிய தோள்களையுடைய தமயந்தியானவள், மெல்லடி – மெல்லிய பாதத்தை, பெயர்த்திட்டாள் – தூக்கிவைத்து நடந்தாள் எ-று.

---

* "மாக்குவிரித்தன்ன பரோம் புழகுடன்" எனக்குறிஞ்சிப்பாட்டினும் "இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து" எனத் திருமுருகாற்றுப் படையினும், பரோம்புழகு, பராரை எனக் கூறியாங்கு இவரும் பராரைச் சாந்தம் என்றார். முற்றியலுகர முயிர்வரிற் கெடுதல் எழுத்ததிகாரப் புணரியலிற் கண்டமைக்க. அரை ஆரை என நீட்டல் பெற்று நின்றது.

ஏ – சுற்றசைக்கண் வந்தது. பாய்தல் – பரத்தல். மேய்தல் விழுங்கல். தேய்வை – தேய்க்கப்பட்டது. குழம்பு.

பொன் நான்கில் மாற்றுயர்ந்த சாம்பூநதப் பொன்னென்பதற்குப் பா யிருண்மேயும் பைம்பொன்னென்றார். மெல்லிய பாதமாகையால், அதற் கேற்பப் பொன்னிலத்திற் சந்தனக்குழம்பால் மெழுகி நுண்தூசுடுத்து அனி ச்சப்போது பரப்பிய வீதியென்றார். பந்தொடு என்னும் பாட்டுமுதல் இத் தப் பாட்டுவரையுங் குளகமாய், பசியதோளி யென்னும் எழுவாய், பெயர்த் திட்டாளென்னும் பயனிலையைக்கொண்டு முடிந்தது. 109

கலத்தொடுபழகுஞ்செம்பொற்கதிர்மூலைக்களிகல்யானை
யுலப்பருமதத்தகாணி லுயிர்குடித்தன்றி நில்லா
நிலத்தலைகாக்கும்வேந்திர்நீங்குகநீங்குகென்ன
வலத்தகுமூட்டுஞ்செம்பொனடிச்சிலம்பரற்றிச்சென்றாள்.

இதனாற் சிலம்பொலியின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். கலத்தொடு-ஆபரணத்தோடு, பழகும்-பழகுகின்ற, செம்பொன்-சிவந்த பொற்பிரகாசம்பொருந்திய, கதிர்—கிரணங்களையுடைய, மூல-தனங்களாகிய, களி – களிப்பையுடைய, நல்யானை – நல்ல யானைகளானவை, உலப்பரும்—கெடுதற்கரிய, மதத்த - மதத்தையுடைய, காணில் – நம்மைக் கண்டால், உயிர்குடித்தன்றி—உயிரைக் குடித்தாலல்லாமல், நில்லா – நிற்ற லேப்பெறமாட்டா, (ஆதலால்) நிலத்தலை – பூமியினிடத்து, காக்கும் - புரக் கின்ற, வேந்திர்—அரசர்காள், நீங்குக நீங்குக என்ன – நீங்கக்கடவீர் நீங் கக்கடவீரென்று, அலத்தகமூட்டும்-செம்பஞ்சுக் குழம்பூட்டிய, செம்பொன்-சிவந்த பொன்னுற்செய்த, அடி - பாதத்திலிருக்கின்ற, சிலம்பு - சிலம்புகள், அரற்ற—சத்திக்க, சென்றாள் - போனாள் எ-று.

தம்மை மேற்கொண்ட பாதங்கள் மற்ற அவயவங்களைச் சுமந்து காத் தல்போல் பூமியைச் சுமந்து காக்கும் அரசராகையால், அவ்வியைபுபற்றி அவரிறவாதபடி ஒரு தீங்குவருமுன்னர்த் தெரிவிப்பவர்போல் "நிலத்தலை காக்கும் வேந்திர் மூலைக் களிகல்யானை யுலப்பருமதத்தகாணி லுயிர்குடித் தன்றிநில்லா, நீங்குக நீங்குகென்ன அடிச்சிலம் பரற்றவென்றார்" நீங்குக நீங்குகவென்றது, வந்தது வந்தது கூற்றென்றதுபோல் விரைவுபற்றி வந்த அடுக்கு மூலைகளுக்கு யானையை உவமை சொல்லுதல் "கடாஅக் களிற்றின் மேற் கட்படாமாதர், படாஅ மூலைமேற் றுகில்" என்னுந் திருக்குறளானும் அறிக. சிலம்பொலித்தலில் நீக்குதற்குரியோர் சொல்லைக் குறித்தலால், தற்குறிப்பணி. 110

வரிவளைக்குலமும்வள்வார்மங்கலமுரசுங்கன்னற்
பொருசிலைமதனன் விண்ணுண்புடைப்பொடும்பொங்கியார்ப்பள்
விரிதிறைப்பரவையீன்றவிளங்கிழையனையகங்கை
திருமணியிமைக்குஞ்செம்பொன்மண்டபஞ்சென்றுசேர்ந்தாள்.

இதனுல் தமயந்தி சுயம்வரமண்டபஞ் சேர்தல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். வரி – இரேகைகளையுடைய, வளைக்குலமும்-சங்குக்கூட்டமும், வள்வார் – இறுக்கிய வாரையுடைய, மங்கலமுரசும் – விவாகபேரிகையும், கன்னற்பொருசிலை - பொழிகின்ற கருப்பம் வில்லேந்திய, மதனன் – மன்மதனுடைய, வில்நாண் புடைப்பொடும் – வில்லினது குணத்தொனியோடும், பொங்கி – மிகுந்து, ஆர்ப்ப - சத்திக்க, விரி – விரிந்த, திரை - அலைகளையுடைய, பரவையீன்ற - பாற்கடல்பெற்ற, விளங்கிழையனைய – திருமாதையொத்த, நங்கை – தமயந்தி, திருமணி – உயர்ந்த இரத்தினங்கள் பதித்து, இமைக்கும் – பிரகாசிக்கின்ற, செம்பொன் மண்டபம் – சிவந்த பொன்னுற் செய்த மண்டபத்தில், சென்று – போய், சேர்ந்தாள் – சேர்ந்தனள் எ-று.

சங்கு – எட்டுமங்கலங்களுட் சேரலானும் * மணக்காலத்தும் ஊதப்படலானுங் கூறினர். தமயந்திமேல் விருப்புற்று விவாகஞ்செய்துகொள்ள வந்திருக்கின்ற அனேக அரசரும் இப்பொழுது அவளைக்கண்ட சமயமாகையால், காலம்பார்த்திருந்த மன்மதன் ஏகாலத்தில் இடைவிடாமல் அவர்மேற் பூங்கணை யெய்தல்பற்றிச் சங்கபேரிகை யொலிவின்ஞண்புடைப்பொடும் பொங்கியார்ப்பவென்றார். 111

இழைசுடரெறித்தலானுமிருவிசும்புறையும்வானோர்
பொழிமலர்மிடைதலானும்பூசல்வண்டிவர்தலானு
முழைபொருதடங்கட்பேதையுருவினைத்தெரியக்காணர்
விழைவொடுநோக்கும்வேந்தர்விழிநெருக்குற்றமாதோ.

இதனுல் தமயந்தியைக்கண்ட அரசர்செய்கை
சொல்லப்படுகின்றது.

இ-ள். இழை – ஆபரணங்கள், சுடர் – ஒளியை, எறித்தலானும் - வீசுதலாலும், இருவிசும்பு - பெரிய சுவர்க்கத்தில், உறையும் – வசிக்கப்பெற்ற, வானோர் – தேவர்கள், பொழி – பொழிகின்ற, மலர் – பூக்கள், மிடைதலானும் – நெருங்குதலாலும், பூசல் – பூசலையுடைய, வண்டு – வண்டுகள், இவர்தலானும் – மொய்ப்பதனலும், உழைபொரு - மானையொத்த, தடங்கண் பேதை – விசாலம்பொருந்திய கண்களையுடைய தமயந்தியினது, உருவினை - வடிவை, தெரியக்காணர் – தெரியும்படி பாராராகி, விழைவொடு - விருப்பொடு, நோக்கும் – பார்க்கின்ற, வேந்தர் – அரசருடைய, விழி – விழிகளானவை, நெருக்குற்ற - நெருக்கமடைந்தன எ-று.

---

* மணக்காலத்தும் ஊதப்படல் "முதற்சங் கமுதாட்டு மொய்குழலா ராசை - நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங் - கடைச்சங்க, மாம்போ தகலூது மம்மட்டோ விம்மட்டோ - நாம் பூமி வாழ்ந்தநலம்" எனத் திருவெண்காட நாயனராகிய பட்டினத்துப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளியதனனு மூணர்க.

இழைசுட ரெறித்தல் முதலிய காரணங்கள் மூன்றும் பொதுப்படக் கூறினும், இழைசுட ரெறித்தலாற் பார்த்தற்குக் கண்கூசி விழிநெருக்குற்ற வென்றும், மலர்மிடைதலானும் வண்டிவர்தலானும் உருவினைத் தெரியக் காணாரென்றும் கொள்க. உருவினைத்தெரியக் காணாராயினும், வெறுப் பின்றி விழைவினால் அனேகர் நோக்குதலால், அவர் விழிகள் நெருக்க மூற்றன வெனினும் அமையும் உழைபொரு தடங்க ணென்றதனால், மான் பார்வையை மாதர் கண்பார்வைக்கு உவமை சொல்லுதலன்றி மானையே அவர்கண்ணிற்கு உவமை சொல்லுதலுமுண்டு. அது "கற்றைவார்குழ லாய்ச்சியர் கயல்விழி முகத்தின், பெற்றி யொப்புறப் பெருங்குருந் தச்சி மேற் ரூவி, யொற்றை மானுடைக் கலைமதியத்தினிழ லுறங்கு, மற்றை மானையும் பற்றுவான் கதிர்க்கையால் வருடும்." இதனாலறிக. 112

அதற்கருங்கூந்தற்பேதையணிகளிற்கரியசோதி
யெறிக்குநன்மணியின்ரூற்றமெறிதிரைக்கட்லின்மொய்த்த
விறற்கதிர்வடிவேல்வேந்தர்விழைவொடுநோக்குங்கண்கள்
பறிப்பரியனவாய்மெய்யிற்பதிந்தனபோலுமாதோ.

இதனால் தமயந்தி ஆபரணங்களில் நீலரத்தினத்தின் விளக்கஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். அறல் – கருமணலையொத்த, கருங்கூந்தல் – கரியகுழலையுடைய, பேதை - தமயந்தியினது, அணிகளில் – ஆபரணங்களுக்குள்ளே, கரிய சோதி - நீலவொளியை, எறிக்கும் – வீசுகின்ற, நன்மணியின்ரூற்றம் - நல்ல நீலரத்தினத்தின் காட்சியானவை, எறிதிரை – அலையெறிகின்ற, கட லின் – கடல்போல், மொய்த்த – நெருங்கப்பெற்ற, விறல் – பெருமை பொருந்திய, கதிர் – கிரணங்களையுடைய, வடிவேல் – வடித்த வேலை யுடைய, வேந்தர் - அரசர்கள், விழைவொடு – விருப்பத்தோடு, நோக்கும் - பார்க்கும், கண்கள் – கண்களானவை, பறிப்பரியனவாய் – வாங்குதற்கரிய வாகி, மெய்யில் - தேகத்திலே, பதிந்தனபோலும் – அழுந்தினபோலு மிருந் தன எ-று.

மாதை, ஓ – அசைகள், வடி – கூர்மையென்னலுமாம், மெய் - மங்கல மொழி. பேதை – பருவமுணர்த்தாது பெண்ணெனின்றது.

அணிகளிலே நவமணிகளும் அழுத்தியிருக்க நீலமணித் தோற்றத்தைச் சொல்லியது தமயந்தியைப்பார்க்கும் அரசர் கண்களே யுவமையாக்குதற் கென்க. தமயந்தியணிகளிற்பதித்த நீலமணிகளில் அரசர் பார்வையைக் குறித்தலால் தற்குறிப்பணி. 113

வஞ்சமொன்றின்றிவேறலரிதெனவதுவைநாட்டி
விஞ்சையின்புணர்ப்பாற்கூற்றைவிளங்கிழைவடிவமாக்கி
யெஞ்சலிலுலகமன்னர்பாரையுமொருங்குகொல்வான்
செஞ்சுடர்வயவாள்வேந்தன்றீவினையிழைத்ததென்பார்.

இதனுல் அரசர் கூறுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். வஞ்சமொன்றின்றி – வஞ்சனையொன்றில்லாமல், வேறலரி தென – நம்மால் வெல்லப்படுத லரிதென் றெண்ணி, வதுவை நாட்டி-சுயம்வரமென்றுநாட்டி, விஞ்சையின் புணர்ப்பால் – மந்திர வித்தையி னுடைய சம்பந்தத்தால், கூற்றை – யமனை, விளங்கிழை வடிவமாக்கி-தமயந்தியி னுருவமாகச் செய்து, எஞ்சலில் – குறைவில்லாத, உலகமன்னர் யாரையும் – திரிலோகத்திலுமுள்ள அரசரனைவரையும், ஒருங்குகொல் வான் – ஒருசேரக் கொல்லும்படி, செஞ்சுடர் – செய்யகிரணத்தையுடைய, வயவாள் – வெற்றிபொருந்திய வாட்படையையுடைய, வேந்தன் – வீம னனவன், இழைத்தது – செய்தது, தீவினையென்பார் – தீவினையாகுமென் பார்கள் எ-று.

வீமன் வஞ்சகஞ்செய்து கொல்லநினைத்தது யெதன் பொருட்டெனில் தனக்கு வலிமையிக்கிருப்பினும் படையெடுத்து நம்மைத் தனித்தனி வெல் வதற்கு நெடுங்காலஞ் செல்லுமென்றும் அங்ஙனஞ் செல்லினுந் தன்னின் மிக்கவரு மிருப்பாரென்னுங் கருத்தால் வெற்றியாகுமோ ஆகாதோவென் றுங் கருதியென்க. இதுமுதல் நான்குபாட்டுக்கள் தமயந்தியைக்கண்ட அர சர்கள் சொல்லியனவென்க. 114

தொண்டைவாய்முத்தமூரற்றுடியிடையறன்மென்கூந்த
லொண்டொடிவனப்புவாய்ந்தவுருவுநங்கண்களாரக்
கண்டுழிவியந்துநெஞ்சங்களிப்புறவொற்றர்கூறப்
பண்டுநாங்கேட்டவாற்றிற்பதின்மடங்காயிற்றென்பார்.

இதுவுமது.

இ-ள். தொண்டைவாய் – கோவைக்கனிபோன்ற வாயையும் – முத்த மூரல் – முத்தையொத்தபல்லையும், துடியிடை – உடுக்கையையொத்தஇடை யையும், அறல்மென் கூந்தல் – கருமணலையொத்த, மெல்லிய கூந்தலையு முடைய, ஒண்தொடி-தமயந்தியினது, வனப்புவாய்ந்த – அழகுபொருந்திய, உருவு – வடிவை, நம் – நம்முடைய, கண்கள்ஆர – கண்கள் திருத்திபெற, கண்டுழி – கண்டவிடத்தில், வியந்து – ஆதிசயித்து, நெஞ்சம்-மனமானது, களிப்புற – களிப்பையடைய, ஒற்றர் கூற – ஒற்றர்சொல்ல, பண்டு – முன் னே, நாம் – நாம், கேட்டவாற்றில் – கேட்டவகையில், பதின்மடங்கு-பத்து மடங்கு, ஆயிற்றென்பார் – மேலாயினதென்பார்கள் எ-று.

வியந்து பதின்மடங்காயிற் றென்பாரென்க. மடங்கு – பாகம்.

தமயந்திக்குத் தம்மோடு ஒற்றர் கூறிய அழகினும் இப்பொழுது பதின் மடங்கு அதிகரித்திருக்கக் காண்டலால் அரசர்க்கு மோகமும் அவ்வளவா யிற் றென்பது கருத்து. 115

வள்ளுறைகழித்தவொள்வாண்மாறிவைத்தனையவுண்க
ணள்ளிக்கொண்டுயிரையின்னேயருந்திடாதொழியினன்றே

தெள்ளமிர்தனைய தீஞ்சொற்சேயிழையுத்தரீயத்
துள்ளுரைகொடியகூற்றமுயிர்குடித்திடுவதென்பார்.

இதுவுமது.

இ-ள். வள் – கூர்மைபொருந்திய, உறைகழித்த – உறையினின்று நீங்கிய, ஒள்வாள் – ஒளிபொருந்தியவாளை, மாறிவைத்தனைய – மாறிவைத்தால்-(அதையொத்த), உண்கண் – மையுண்ட கண்களானவை, உயிரை-ஆவியை, அள்ளிக்கொண்டு – கையிலள்ளிக்கொண்டு, இன்னே – இப்பொழுதே, அருந்திடாது – உண்ணுமல், ஒழியினன்றே – நீங்கினலன்றே, தெள்ளமிர்தனைய – தெளிவுபொருந்திய அமிர்தத்தையொத்த, தீஞ்சொல் – மதுரம் பொருந்திய சொல்லையுடைய, சேயிழை – தமயந்தியினது, உத்தரீயத்துள்ளுறை – மேற்போர்வைக் குள்ளேயிருக்கும், கொடிய கூற்றம் – மூலகளாகிய கொடியகூற்றம், உயிர் – ஆவியை, குடித்திடுவதென்பார்-பருகுவதென்பார்கள் எ-று.

வள் – கூர்மைப் பொருடரு மூரிச்சொல். வைத்தது என்பதில் அ-என்னுஞ் சாரியையுந் துவ்விகுதியுந் தொக்கு நின்றன. இன்னே என்னும் இடைச்சொல் காலப்பொருளில் வந்தது. அன்றே – என்பதனை அன்று ஓ என அசைகளாகக் கொள்வதன்றி, தேற்றப்பொருட்டில்வந்த இடைச்சொல்லாகக் கொள்வதுமாம். கூற்று என்னுஞ் சொல் அம் சாரியை பெற்று நின்றது. அள்ளிக்கொண்டு உயிரை யருந்துதல் பற்றிக்கண்களுக்கு வாளையுவமையாக்கினர். கொல்பவன் மறைந்து வருவனென்பதுதோன்ற, தனங்களை உத்தரீயத்துள்ளுறை கொடிய கூற்றமென்றார். தமயந்திகண்களுக்கு உயிர் தப்பாதென்பது கருத்து. 116

மூருந்துறழினியமூரன்முகிழ்முலைப்பசியவேய்த்தோட்
கருந்தடங்கண்ணிசெவ்வாய்க்கமழ்திரையமிழ்தமாந்த
வருந்தவம்புரிந்தோர்மண்ணிலரசோவமரரேயோ
தெரிந்திலமென்னமாழ்கித்தெருமரலெய்நிற்பார்.

இதுவுமது.

இ-ள். மூருந்து – மயிலிறகினடியை, உறழ் – ஒத்த, இனிய – இனிமையையுடைய, மூரல் – பற்களையும், முகிழ் – அரும்பையொத்த, முலை – தனங்களையும், பசியவேய் – பசிய மூங்கிலையொத்த, தோள் – தோள்களையும், கருந்தடங்கண்ணி – கரிய பெரிய கண்களையுமுடைய தமயந்தியினுடைய, செவ்வாய் – சிவந்த வாயாகிய, கமழ் – மணக்கின்ற, திரை – பாற்கடலிற் றோன்றிய, அமிழ்தம் – அமிர்தத்தை, மாந்த – புசிப்பதற்கு, அருந்தவம் புரிந்தோர் – அரிய தவத்தைச்செய்தவர், மண்ணில் – பூமியிலிருக்கின்ற, அரசோ-அரசருக்கு ளொருவரோ, அமரரேயோ-தேவர்க்குளொருவரோ, தெரிந்திலமென்ன – யாம் அறிந்திலமென்று, மாழ்கி – மயங்கி, தெருமரலெய்தி – சுழற்சியடைந்து, நிற்பார் – நிற்பார்கள் எ-று.

ஒருவராயினும் அருந்தவம் புரிந்தோராகையால் அவ்வுயர்வுபற்றி அவரைப் பன்மை விகுதியாற் கூறினர். தவம்புரிந்தவர் இன்னொன்று தெரிந்தால் மற்றையவர் மாலேதரிக்கும்போது இங்ஙனமிருந்து அவமானப்படாமல் தம்மிடங்களிற் சேரலாமென்பது கருத்து. அது முன்னே தெரியாமையால் மாழ்கித் தெருமரலெய்தி நிற்பாரென்றார். 117

அளியசிறடிகணிவவனிச்சமேலொதுங்கச்செய்த
விளைமதுத்துளிக்குந்தண்டார்வேந்தனேகொடியனென்பார்
வளர்முலைப்பாரங்கண்டும்வண்டிமிர்தெரியல்சூட்டித்
தளரிடைக்கிடக்கண்செய்ததாயரேகொடியரென்பார்.

இதுவுமது.

இ-ள். அளிய – அளிதலே யுடையவராகிய, சிறடிகள்-சிறிய பாதங்கள், நோவ – நோவையடைய, அனிச்சமேல் – அனிச்சமலரின்மேல், ஒதுங்கச் செய்த – நடக்கச்செய்த, விளை – விளைகின்ற, மதுத்துளிக்கும் - தேன்றுளிக்கின்ற, தண் குளிர்ச்சிபொருந்திய, தார் – மாலையையுடைய, வேந்தனே-வீமராசனே, கொடியனென்பார் – கொடியவனென்பார்கள், வளர் – வளரப்பெற்ற, முலை – தனங்களினுடைய, பாரங்கண்டும் – சுமையைக்கண்டும், வண்டு – வண்டுகள், இமிர் - ஒலிக்கப்பெற்ற, தெரியல்சூட்டி – மாலையைச் சூட்டி, தளர் – தளரப்பெற்ற, இடைக்கு - மருங்குலுக்கு, இடுக்கண்செய்தவருத்தத்தைச்செய்த, தாயரே – தாய்மார்களே, கொடியர் என்பார் – கொடியரென்பார்கள் எ-று.

இடுங்குகண் - இடுக்கண் என மரூஉவிற்று. அனிச்சமலர் மென்மையாயிருப்பினு மாதர் அடிக்கு வருத்தஞ்செய்யு மென்பதுபற்றி அனிச்சமே லொதுங்கச்செய்த வேந்தனே கொடியனென்றார். அது "அனிச்சமு மன்னத்தின் றூவியுமாத, ரடிக்கு நெரிஞ்சிப்பழம்" இதனலுணர்க தந்தைக்குப் பெண்கள் வருத்தந் தெரியாவிடினும் தாயருக்குந் தெரியாதென்பார், முலைப்பாரங்கண்டுந் தெரியல்சூட்டித் தளரிடைக் கிடுக்கண் செய்த தாயரே கொடியரென்றார். தாயரெனப் பன்மையாகக் கூறுதலால் பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் என்னும் ஐவரையுங் கொள்க. 118

வமுறுமன்னர்யாருமினையனகூறப்பைம்பொன்
வாமமேகலைகளார்ப்பமணிச்சிலம்பொலிப்பச்செய்ய
காமர்வாண்முகையேசெவ்விக்காந்தளுஞ்செங்கைகூப்பித்
தாமவேற்றடங்கணல்லாடாதையைத்தொழுதுநின்றாள்.

இ-ள். வமுறும் - இன்பமடைகின்ற, மன்னர்யாரும்-அரசரனைவரும், இனையன – இப்படிப்பட்ட வார்த்தைகளை, கூற – சொல்ல, பைம்பொன்-பசிய பொன்னாற்செய்த, வாமம் – அழகுபொருந்திய, மேகலைகள் – மேகலாபரணங்கள், ஆர்ப்ப – சத்திக்க, மணி – நவமணிகளிழைக்கப்பெற்ற, சிலம்பு-

பாதசாலங்கள், ஒலிப்ப - ஒலிக்க, செய்ய - சிவந்த, காமர் - அழகுபொருந்திய, வாள் - ஒளியையுடைய, மூகைய - அரும்பையுடையனவாகிய, செவ்வி - செவ்வியையுடைய, காந்தளஞ் செங்கை கூப்பி - காந்தண் மலரையொத்த சிவந்த கைகளைக் குவித்து, தாமம் - வெற்றிமாலையைத் தரித்த, வேல்-வேலையொத்த, தடங்கண் — விசாலம்பொருந்திய கண்களையுடைய, நல்லாள் - தமயந்தியானவள், தாதையை — தந்தையை, தொழுதகின்றாள் - வணக்கஞ் செய்து நின்றனள் எ-று.

ஏமமென்பது - ஏம் எனக் கடைக்குறைந்து நின்றது. மன்னரெனப் பொதுப்படக் கூறலால் திரிலோகத்தரசரையுங் கொள்க. வீமனுடைய ஆணைப்படி நடக்கவேண்டியவைக ளாகையால் அக்குறிப்புத்தோன்ற அவனைத் தமயந்தி வணங்கினளென்க. 119

சேவடிதொழுதகின்றதெரிவையைமகிழ்ந்துநோக்கி
மூவுலகாளும்வேந்தரொருவழிதிரண்டமொய்த்தார்
யாவரேயிவரையெண்ணியீனையரென்றுரைப்பாரென்னப்
பூவைபோன்மேனியானைநினைந்தனன்புலவுவேலான்.

இதனுள் வீமராசன் செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். சேவடி - தன்னுடைய சிவந்த பாதங்களை, தொழுதகின்ற - வணங்கின்ற, தெரிவையை — தமயந்தியை, மகிழ்ந்து - மகிழ்ந்து, நோக்கி - பார்த்து, மூவுலகாளும் வேந்தர் — திரிலோகத்திலுமுள்ள அரசர்களும், ஒருவழி - ஓரிடத்திலே, திரண்டு - கூடி, மொய்த்தார் — நெருங்கினார்கள், யாவர்-எவர்கள், இவரை - இவ்வரசரை, எண்ணி - நினைத்து, ஈனையரென்று — இத்தன்மையரென்று, உரைப்பாரென்ன-சொல்லுவாரென்று, பூவைபோன் மேனியானை — காயாமலரையொத்த வண்ணத்தையுடைய நாரணனை, புலவுவேலான் — வீமராசன், நினைத்தனன் — நினைந்தான் எ-று.

எ - வினை. திரிலோகத்தரசரு நெருங்கி யிருக்கின்றபடியால் இவர் இன்னரென்று தெரிந்து சொல்லுதற்குத் தேவராலன்றி மனிதராலாகா தென்பதைக் கருதி வீமன் திருமாலை நினைந்தனனென்க. வீமன் தெரிவையைநோக்கி நினைந்தனனெனக் கூட்டுக. 120

மன்னவனினைவையோர்ந்துவண்டுழாயலங்கன்மார்பன்
றன்னடிதொழுதகின்றசதிமுகத்தேதவைநோக்கிக்
கன்னலிற்கனிந்தநீஞ்சொற்கலைமகளன்றிபாரே
யின்னரென்றிவரையெண்ணியேற்திழைக்கிசைக்குரோர்.

இதனுள் திருமாலினது செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். மன்னவன் — வீமராசனுடைய, நினைவை யோர்ந்து-நினைப்பை யறிந்து, வண்துழாயலங்கல் — வளம்பொருந்திய துளபமாலையை யணிந்த, மார்பன் — மார்பினையுடைய நாரணனவன், தன் அடி — தனது பாதத்

களே, தொழுதகின்ற – வணங்கின்ற, சதுமுகத் தேவைநோக்கி – பிரமதே வனைப் பார்த்து, கன்னலில் - கரும்பைக்காட்டிலும், கனிந்த - சுவைமுதிர்ந்த, நீஞ்சொல் – மதுரவார்த்தையையுடைய, கலைமகளன்றி – நாமகளல்லாமல், இன்னதென்று – இத்தேயத்தினரென்று, இவரை – இவ்வரசரை, எண்ணி-னேனத்து, ஏந்திழைக்கு - தமயந்திக்கு, இசைக்கும் – சொல்லுகின்ற, நீரார்-தன்மையையுடையவர், யார் - யாவர் எ-று.

ஏ - விஞ. மற்றையர்க்கு இவர் இன்னரென்று தெரியினுஞ் சொல் லுதலரிதாதலாற் கலைமகளன்றியாரே யின்னரென் றிவரையெண்ணி யேந் திழைக் கிசைக்கு நீரரென்றார். சொல்லிற்குக் கன்னலிற் கனிந்தவென் னும் அடைகொடுத்ததும் அதுபற்றியாம். 121

என்றலுமலரின்மேலோனிளநிலாவெறிக்குமேனி
மன்றலங்கரியுகூந்தல்வாணிவாண்முகத்தைநோக்கிச்
சென்றுநீயரசர்வெள்ளத்திரளினேவிதர்ப்பனீன்ற
பொன்றிகழ்முலையினுளுக்குரையெனப்புவியிற்போந்தாள்.

இதனுல் பிரமன் நாமகளே ஏவல் சொல்லப்படுகின்றது.

இ-ள். என்றலும் – இப்படியென்று சொன்னவளவில், மலரின் மே லோன் – பிரமதேவனனவன், இளநிலா – இளமைபொருந்திய நிலவினெ னியை, எறிக்கும் – வீசுகின்ற, மேனி - திருமேனியையுடைய, மன்றல்-வாசனைபொருந்திய, அம் - அழகிய, கரியகூந்தல் - கறுத்த கூந்தலையுடைய, வாணி – நாமகளுடைய, வாள் – ஒளிபொருந்திய, முகத்தை நோக்கி - முகத் தைப் பார்த்து, நீசென்று – நீபோய், அரசர் வெள்ளம் திரளினை – இராச கூட்டத்திரட்சியை, விதர்ப்பனீன்ற - வீமன்பெற்ற, பொன்திகழ் – பொன் போன்ற தேமல்விளங்கிய, முலையினுளுக்கு – தமயந்திக்கு, உரையென - சொ ல்லென்று சொல்ல, புவியில் – பூமியிலே, போந்தாள் – வந்தாள் எ-று.

மனிதப் பிறப்புற்ற வீமசேனனும் தமயந்தியும் அருந் தவம்புரிந்து தம்மை வேண்டாதிருப்ப நாரணனேவலாற் பிரமன் நாமகளேவிடுப்ப அவள் விரைந்து சேறலால், தந்தை வார்த்தையை மைந்தன் கடவாமையும் கண வன் மொழியைத் தேவி யிகழாமையும் பெறப்பட்டன. உரையென அவள் புவியிற் போந்தாளெனக் கொள்க. 122

போந்தவள்வண்டுமூசாப்பொன்னரிமாலையோடும்
வார்ந்தமேதமாலைதாழ்ந்தவதுவைமண்டபத்தின்மேவி
யேந்திழிலெருத்தங்கோட்டிநாணெடுமிழைஞ்சினின்ற
கூந்தலம்பிடிக்குவேந்தர்குலமுறைகிளக்கலுற்றாள்.

இ-ள். போந்தவள் – அப்படிவந்த நாமகள், வண்டு மூசா – வண்டுக னால் மொய்க்கப்படாத, பொன்னரி மாலையோடும் – பொன்னரி மாலை யுடனே, வார்ந்த – நீண்ட, தேம் - வாசனைபொருந்திய, மாலைதாழ்ந்த-மலர் மாலைகள் தாழப்பெற்ற, வதுவை மண்டபத்தின் - விவாக மண்டபத்தில்,

மேவி – பொருந்தி, ஏந்து – தாங்கிய, எழில் – அழகுபொருந்திய, எருத்தங் கோட்டி – தலையை வணங்கிக்கொண்டு, நாணெடும் – நாணத்தோடும், இறைஞ்சிநின்ற – தொழுதுநின்ற, கூந்தலம்பிடிக்கு – தமயந்திக்கு, வேந்தர் குல முறை – அரசர் மாபினை, இளக்கலுற்றான் – சொல்லத் தொடங்கினான் எ-று,

எருத்தங்கோட்டலும் நாணுறலும் மாதர்க்குச் சுபாவமாயினும் நாமகள் திரிமூர்த்திகளில் ஒரு மூர்த்தியினுடைய தேவியாதலால், அவளிடத்திலே இறைஞ்சியெனத் தமயந்திக்கு வணக்கமுஞ் சொல்லப்பட்டது. கூந்தலம் பிடி யென்பது அதுபோன்ற நடையை யுடையவளெனத் தமயந்திக்காத லால் உவமை யாகுபெயர். இனி 42 - பாட்டால் அரசர்களை வெவ்வேறு சொல்லத்தொடங்கி ஆறுபாட்டால் தேவர்களைச்சொல்லுதல் காண்க.123

சேயரிசிந்திநீண்டசெழுங்கடைமழைக்கட்செவ்வாய்
மாயிருஞாலம்விற்கும்வருமுலைத்தெரிவைகேட்டி
* யாயிரங்கதிர்கள்வீசியங்கண்மாஞாலம்போர்த்த
பாயிருள்பருகுஞ்செங்கேழ்ப்பரிதியிவ்விருந்ததேவே.

இ-ள். சேயரி – செவ்வரிகள், சிந்தி – சிதறப்பெற்று, நீண்ட-நெடுகிய, செழுங்கடை – செழுமைபெற்ற கடையை யுடைய, மழை – குளிர்ச்சி பொருந்திய, கண் – கண்ணையும், செவ்வாய் – சிவந்தவாயையும், மா – மகத் தாகிய, இரு – பெரிய, ஞாலம் – பூமியை, விற்கும் – விலைசெய்யும், வரு முலை – வளர்கின்ற தனங்களையுமுடைய, தெரிவை – தமயந்தியே, கேட்டி – நீகேட்பாயாக, ஆயிரங்கதிர்கள் வீசி – ஆயிரங் கிரணங்களை வீசி, அங்கண் – அழகிய, மா – மகத்தாகிய இடத்தையுடைய, ஞாலம் – பூமியை, போர்த்த – மூடிய, பாயிருள் – பரவியவிருளை, பருகும் – குடிக்கின்ற, செங்கேழ் – செந் நிறத்தையுடைய, பரிதி – சூரியன், இவ்விருந்ததேவு – இருந்தலையுற்ற இத்தேவன் எ-று. ஏகாரம் – ஈற்றசை.

* ஆயிரங்கதிர்களுள் நானூறுகதிர் மழைபெய்விக்கும். முந்நூறு வெயில் விளக்கும் எஞ்சிய முந்நூறு கதிர்கள் பனிமுதலியனவற்றைப் பெய்விக்கும் அது "வெய்யவன்கதிர்க ளாயிரமவற்றின் விளங்கொளிக் கதிர்களுனூறு பெய்ம்மழைபொழியும் பின்னுமுந்நூறு பிறங்கொளிக் கதிர்வெயில்விரித்து, வையகமுழுது மழைவளஞ்சுரக்கும் வயங்குமுந் நூறுவெங்கதிர்க, ளாயசெங்கமல மலர்முகவ்கருக வளிபனிக்குறுந்துளிசீரும்" என்னுங் கூர்ம புராணச் செய்யுளிற் கண்டாம். ஆயிரங் கதிர்களுள் ஏழுகிரணஞ்சிறந்தன. அவையாவன * சுசமுனை, அரிகேசம், விசுவைவிசம், கங்கியமம், வசுரம். அறுவாவசு, சுவராட்டு என்பன. இவையிற்றுள் முதலிரண்டும் புதனுக்கு ஒளிகொடுக்கும். விசுவைவிசம் வெள்ளியை விளக்கும். வசுரம், கங்கியமம் என்பன பூமியை விளக்கும். அறுவாவசு என்னுங் கதிர் வியாழத்தை மற் றவறத்துலக்கும் சுவராட்டுச் சனிக்கோட்கு ஒளிகொடுக்கும் என்க ஆயிரம் என்றதி சூரியகிரணங்களுள் விசேடமுடையவற்றை யென்பது என்னை? அவற்றிற்கு மேலுங்கதிர்களுளவென்று புராணங்கள் புகறலின்றும்.

பூமியை விற்றூல் தமயந்திமூலக்கு விலையாகு மென்பார்; ஞாலம் விற்கும் வருமூலை யென்றூர். பூமியைவிடப் பெரிதும் வலிதும் பொறுமையுள்ளதும் வளமுள்ளதும் வேறொன்றில்லை யென்பதற்கு மாயிரு வென்னும் அடைகள் கொடுக்கப்பட்டன. அது "தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும், பருவமுயற்சி யளவிற் பயத்தலு, மருவிய நன்னில மாண்பா கும்மே" இதனுலறிக. பூமியை மூடிய இருளோயோட்டிக் கண்களுக்குத் தெரியத்தக்க நிலநீர் முதலிய வெல்லாப் பொருள்களையும் நாடோறுங் காட்டுகின்ற நன்றிதோன்றச் சூரியனை ஆயிரங் கதிர்கள் வீசி யங்கண் மா ஞாலம்போர்த்த பாயிருள் பருகுஞ் செங்கேழ்ப் பரிதியென்றூர். 124

பண்ணமையினிய தீஞ்சொற்படாமூலைப்பாவைகேண்மோ
கண்வழுக்குறுதண்சோதிக்கலைநிலவெறிப்பவல்லான்
மண்ணியமணியிற்செய்தவான்றவிசிருந்ததேவன்
* விண்ணவர்க்கமிழ்தமீந்தவெண்கதிர்க்கடவுளாமால்.

இ-ள். பண் – இசை, அமை – பொருந்திய, இனிய - இனியவாகிய, தீஞ்சொல் – மதுரவார்த்தையையுடைய, படா - சாயாத, மூலை – தனங்களையுடைய, பாவை – தமயந்தியே, கேள் – கேட்பாயாக, கண் – கண்கள், வழுக்குறு – கூசுகின்ற, தண் – குளிர்ச்சி பொருந்திய, சோதி – பிரகாசத்தையுடைய, கலை – சோடசகலைகளும், நிலவெறிப்ப – ஒளி வீச, வல்லான் – வல்லவனுல், மண்ணிய – ஒப்பனையமைந்த, மணியிற்செய்த – இரத்தினங்களாற் செய்யப்பட்ட, வான் – பெரிய, தவிசு – ஆசனத்தில், இருந்த தேவன் – இருத்தலையுற்ற தேவனுனவன், விண்ணவர்க்கு – தேவர்களுக்கு, அமிர்தமீந்த – அமிர்தத்தைக் கொடுத்த, வெண்கதிர்க் கடவுளாம் – சந்திரனுகும் எ-று.

வல்லான் செய்த தவிசில் கலைநிலவெறிப்ப விருந்த தேவனெனக் கூட்டுக. சந்திரனுடைய கலைகளை அமரபக்கத்துப் பிரதமை முதலாகத் தொடங்கிப் பதினைந்து திதியிலும் அக்கினிமுதலாயிரு ருண்பர்; பூர்வபக்கத்திலும் அப்படியே கலைகள் வளரும், தேவர்களுண்ணும்படி தன்னுடைய கலைகளைச் சந்திரன் தருதலால் விண்ணவர்க் கமிழ்தமீந்த வெண்கதிர்க் கடவுளென்றூர். 125

ஊர்சுணங்கணிந்துவிம்மியொழுகொளியாரஞ்சூடி
யேர்கனிந்தொழுகும்பொம்மலிளமூலையணங்குகேட்டி
தார்புனைமௌலிதேவர்ந்துதணப்பிலாதிருந்ததேவர்
மாரனில்வனப்புவாய்ந்தமருத்துவத்தலைவர்தாமே.

* விண்ணவர்க்கு அமிழ்தமீதல்—'திங்களுஞ் செல்வன் கொடிஞ்சியுந் தேரிற் றிரிதரு செல்லியோர் மூன்று – மங்கதிற் பிணித்த வாம்பரி பத்துங் குருந்தின் மென்மலர் கிறமாகும் - வெங்கதிர்ப்பரிதி சுகமுனையென்னுங் கதிரினுல் வளரும் வெண்டிங்கள் – புங்கவர்தினமோர் கலையருந்துதலாற் பொழிகதிர் மழுங்கமெய்தேயும்" என்றதனுலறிக.

இ-ள். ஊர் - பரவுகின்ற, சுணங்கணிந்து — தேமலணிந்து, விம்மி-பருத்து, ஒழுகெள்ளி - ஒளியை வீசுகின்ற, ஆரம் - முத்து வடத்தை, சூடி-தரித்துக்கொண்டு, ஏர் — அழகானது, கனிந்து — முதிர்ந்து, ஒழுகும் - ஒழுகுகின்ற, பொம்மல் — பொலிவுபெற்ற — இளமுலை — இளமைபொருந்தியதனங்களையுடைய, அணங்கு - தமயந்தியே, கேட்டி — கேட்பாயாக, தார்-மலர்மாலையை,புனை — தரித்த,மௌலிவேய்ந்து-கிரீடத்தையணிந்து, தணப்பிலாது-இணைபிரியாது, இருந்ததேவர்-(இங்) கிருத்தலையுற்ற தேவர்கள், மாரனில்-மன்மதனைக்காட்டிலும், வனப்புவாய்ந்த - அழகுபெற்ற, மருத்துவத் தலைவர் - அசுவினிதேவர்கள் எ-று. தாம், ஏ — அசைகள்.

எப்பொழுதும் இருவரும் இணைபிரியா திருத்தலால் தணப்பிலாதிருந்தவென்றும், அழகின் மிக்கோராகலால் மாரனில் வனப்புவாய்ந்த வென்றும், தேவர்களுக்கு வியாதி தீர்ப்பவர்களிற் றலைமையுடையவராகையால் மருத்துவத் தலைவரென்றுஞ் சொல்லினர். தேவர்களுக்கும் வியாதி யுண்டோவெனில் உண்டு. அது "வலாரிதோள் வாதநோய னவண்மதிகய நோயாளன், சுலாவுறு வெப்புநோயிற் றொடக்குண்டான் றக்கனென்பா, னுலாவுறு காலிலாத மூடவனே யுரக்கொண் மந்தன், சலோதாகோய்க்தோட்பாட்டான் றண்புனற் கரையன்மாதோ" என்னுந் தணிகைப் புராணச் செய்யுளானறிக. 126

வண்ணமேகலையாய்மற்றுன்வருமுலைப்போகம்வேண்டி
யெண்ணிலராகியிப்பாலினிதுவீற்றிருந்தாரெல்லாம்
விண்ணவரப்பாற்பைம்பொன்னியன்றவிசிருந்ததேவர்
பண்ணமைதிவவினல்யாழ்பயின்ற * காந்தருவவேந்தர்.

இ-ள். வண்ண மேகலையாய் — அழகுபொருந்திய மேகலாபரணத்தையணிந்த தமயந்தியே! உன் — உன்னுடைய, வரு — வளரப்பெற்ற, முலை-தனங்களுடைய, போகம் வேண்டி — போகத்தை விரும்பி, எண்ணிலராகி — அளவற்றவராகி, இப்பால் — இப்புறத்தில், இனிது — இனிமையோடு, வீற்றிருந்தோரெல்லாம் — வீறுடனிருந்தலையுற்றவர்களெல்லாரும், விண்ணவர் — தேவர்கள், அப்பால் — அவர்க்கப்புறத்தில், பைம்பொன் — பசியபொன்னாற்செய்த, வியன் - மேலாகிய, தவிசிருந்த தேவர் - ஆசனத்திலிருக்கப்பெற்ற தேவர்கள், பண்ணமை — இசையமைந்த, திவவின் — வலிக்கட்டினையுடைய,

* காந்தருவராவார் - தும்புரு, நாரதன், அஞ்சன், விசுவா, அசேனன், சுஜி, அருவாவசு, பார்வசு, சித்திரசேனன், ஊர்ன், ஆயு, இரவிவாச்சன் என்னு மிவர் முதலாயினோர்.

மன்னுதும்புருயாழ்நாரதனஞ்சன்வழாதிசைநவின்றிடுமகரப்
பன்னுசீர்விசுவாவுபாசேனனன்சுதியருவாவசுப்பழிப்பி
றுன்னருங்கேள்விப்பார்வசுத்துகடூர்சித்திரசேனனூரளயு
வின்னிசையிரவிவாச்சனென்றவர்களிருதவுக்கிருவர்பாட்டியர்வார்.

என்ற திருவிருத்தத்திற் காண்க.

நல்யாழ் – நல்லயாழை, பயின்ற – வாசிக்கின்ற, காந்தருவவேந்தர் – கந்தருவ வரசர்கள் எ-று. மற்று – அசைநிலை.

தேவர்களே இன்னுரின்னுரென்று வெவ்வேறு கூறத்தொடங்கிற் கால நீட்டிக்குமென்பதை பற்றி எண்ணில ராகியிப்பா லினிதுவீற் றிருந்தோரெல்லாம் விண்ணவரெனப் பொதுப்படக் கூறப்பட்டது. யாழினிலக்கண முன்பெழுதப்பட்டது அங்ஙனங்காண்க. 127

குழைமுகங்கிழிக்கும்வேற்கட்கொம்மைவெம்முலையாய்கேட்டி
மழவிடையென்னவாங்கண்மணித்தவிசிருந்ததேவ
ரிழுமெனவருவிச்சாரலினமணிவரன்றித்தூங்கும்
விழைவுறுவெள்ளிவெற்பின்விஞ்சையர்க்கிறைவர்தாமே.

இ-ள். குழை முகம் – காதணியினுடைய முகத்தை, கிழிக்கும் – கிழிக்கின்ற, வேற்கண் – வேல்போன்ற கண்களையும், கொம்மை – இளமையையுடைய, வெம்முலையாய் – விருப்பைச்செய்கின்ற தனங்களையுமுடைய தமயந்தியே! கேட்டி – கேட்பாயாக, மழவிடையென்ன – இளவேற்றைப்போல், ஆங்கண் – அவ்விடத்தில், மணித் தவிசு – இரத்தினாசனத்திலே, இருந்த தேவர் – இருத்தலையுற்ற தேவர்கள், இழுமென – இழுமென்னு மோசையோடு, அருவி – அருவியானது, சாரல்-மலைப்பக்கத்தினின்றும், இனமணி-கூட்டமாகிய மணிகளை, வாரன்றி – வாரிக்கொண்டு, தூங்கும் – ஒழுகுகின்ற, விழைவுறு – விருப்பமடைகின்ற, வெள்ளிவெற்பின் – கைலாயமலையி லிருக்கின்ற, விஞ்சையர்க்கிறைவர் – வித்தியாதாருக் காசர்கள் எ-று.

இழுமென அருவி தூங்கு மென்பது—இழுமென்றல் விரைவினெளிக் குறியாம். "இழுமெனவிழிதரு மருவிப் – பழமுதிர் சோலை மலைகிழவோனே." எனத்திருவருட்பாக்களுள் ஒன்றிய திருமுருகாற்றுப்படையில் நக்கீரனர். இவ்வாறு கூறுதல்காண்க. ஐந்து முகத்தோடுங்கூடிய சதாசிவ மூர்த்தி யிருத்தலால் அங்கிருப்பின் நமக்கழிவில்லையென்று யாவருந் தவஞ் செய் தடைதற்கு விரும்புவதாகலின், கைலாயமலையை விழைவுறு வெள்ளி வெற்பென்றார். 128

முயற்கறையொழிந்தசெவ்விமுழுமதியதனினுரு
மயக்கியுள்ளுயிரையுண்ணும்வாள்கிடந்தனையகண்ணாய்
பயக்கருஞ்சிறப்பிற்றேவர்பாவமீண்டிருந்தகாவே
யியக்கர்தம்பெருமானீன்றவெழில்புனைகுமரிதேறே.

இ-ள். முயற்கறை – முயலினது கறுப்பு, ஒழிந்த – நீங்கிய, செவ்வி-அழகுபொருந்திய, முழுமதி அதனில் – பூரணச்சந்திரனையொத்த முகத்தில், நாளும் – நாடோறும், மயக்கி – மயங்கச்செய்து, உள்ளுயிரை – உள்ளேயிருக்கின்ற ஆவியை, உண்ணும் – உண்கின்ற, வாள்கிடந்தனைய – வாளினிருந்ததை யொத்த, கண்ணாய் – கண்ணையுடைய தமயந்தியே! பயக்கருந்தோன்றுதற்கரிய, சிறப்பில் – சிறப்பினால், தேவர்பாவ – தேவர்கள் உ

கும்படி, ஈண்டிருந்த – இவ்விடத்தி லிருத்தலைப் பெற்ற, காளை – அரசன், இயக்கர் தம்பெருமான் ஈன்ற – குபோனற் றரப்பட்ட, எழில்புனை – அழகு பொருந்திய, குமார்வறு – நளகூபரன் எ-று. ஏ – அசை.

திரவியமுடையவனை யாவருஞ் சூழ்ந்திருத்த லியல்பாதலின் நளகூபரன் குபேரன்மக னுதல்பற்றித் தேவர் பரவ வீண்டிருந்த காளையெனப் பட்டது. குபேரன் இயக்கர்வேந்தனென்பது "இயக்கர்வேந்தன் அளகையாளி" இதனுலறிக. இனி ஒருபாட்டால் நாகவேந்தனை சொல்லுதல் காண்க. 129

காதளவோடிமீண்டுகடைசிவந்தாவியுண்ணு
மாதர்மென்மெல்லெனையிம்மணித்தவிசிருந்தவேந்தல்
பூதரவில்லினைப்புனிதனுக்கணியுமாகிப்
பாதலத்தின்பந்துய்க்கும்பல்லவர்பாந்தள்வேந்தை.

இ-ள். காதளவோடி – காதுவரையுமோடி மீண்டு – திரும்பி, கடை சிவந்து – கடைக்கண்சிவந்து, ஆவியுண்ணும் – உயிரையுண்கின்ற, மாதர்-அழகிய, மெல்நோக்கினுய் – மெல்லிய பார்வையையுடைய தமயந்தியே, இம்மணித்தவிசிருந்த – இந்த இரத்நாசனத்தி லிருத்தலைப்பெற்ற, ஏந்தல்-அரசனவன், புனிதனுக்கு – பரமசிவனுக்கு, பூதரவில்லின் – மேருவில்லில், நாணுய் – நாரியாகியும், அணியுமாகி – ஆபரணமாகியும், பாதலத்து-நாகருலகத்திருந்து, இன்பம் துய்க்கும் – சுகத்தையனுபவிக்கின்ற, பல்லவ-பல்லவையையுடைய, பாந்தள்வேந்து – சர்ப்பராசன் எ-று. ஏ – ஈற்றசை.

பரமசிவன் திரிபுரத்தை அழிக்கத் தொடங்கியபோது மேருவை வில்லாக்கிக்கொண்டு அதற்கேற்பச் சர்ப்பராசனை நாணுக்கியபடியால் "பூதரவில்லி ணை" யென்றும் சர்ப்பங்க ளனைத்துஞ் சிவபூசைசெய்து எங்களை ஆபரணமாக்கிக் கொள்ளல் வேண்டுமென வரங்கேட்க அவ்வாறு அச்சிவன் கொடுத்தலாற் "புனிதனுக்கு அணியுமாகி" யென்னுஞ் சொல்லினுர். இவை தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகத் திருவருட்பாவிலும், சிவபுராணத்திலுங்காண்க. இனி ஐந்துபாட்டால் ஐந்துதீவிலு மிருந்து வந்த அரசரைச் சொல்லுதல் காண்க. 130

இழைபரந்திமைக்குமல்குலின்னகைப்பவளச்செவ்வாய்
மழைமதர்நெடுங்கணல்லாய்மலர்க்கணைவேளில்வேளுந்
தொழுதகுவனப்புவாய்ந்துதோன்றுமித்தோன்றல்வெய்ய
பொழிமதக்களிநல்யானைப்புட்கரத்தீவில்வேந்தை.

இ-ள். இழை – ஆபரணங்களால், பரந்து – பரவப்பெற்று, இமைக்கும்-பிரகாசிக்கின்ற, அல்குல் – அல்குலையும், இன்நகை – இனியநகையையுடைய, பவளம் – செவ்வாய் – பவளம்போன்ற செவ்வாயையும், மழை-குளிர்ச்சிபொருந்திய, மதர் – களிப்பையுடைய, நெடுங்கண் – நெடிய கண்களையுமுடைய, நல்லாய் – தமயந்தியே, மலர்க்கணை – பூங்கணைகளையுடைய,

வேனில் வேளும் – மன்மதனும், தொழுதகு – வணங்கத்தக்க, வனப்பு வாய்ந்த – அழகுபெற்று, தோன்றும் – தோன்றுகின்ற, இதோன்றல்- இவ்வரசன், வெய்ய – வெவ்விய, பொழிமதம் – மும்மதமும் பொழிகின்ற, களிநல்யானை – களிப்புமிகுந்த நல்ல யானைகளையுடைய, புட்கரத்தீவில்- புட்கரமென்னுந் தீவிலிருக்கின்ற, வேந்து – அரசன் எ-று.

தேவர்களையும் நாகவேந்தனையுஞ் சொல்லி உடனே நாவலந்தீவரசரைக் கூறாது மற்றைத் தீவரசரைச் சொல்லிய தென்பொருட்டெனில், அவர்கள் சோகம் நரை திரை மூப்பின்றிப் பதினாயிரம் வயதுள்ளவராய்த் தேவரோடு ஒருபுடை யொத்திருத்தலினென்க. அவர்களுக்கு அக்குணங்கள் "சாகமுத லிருமூன்றிற் றங்கினர்க டமக்கெல்லாஞ், சோகமிலை யெங்காளுந் துய்த்திருப்பர் சுகமமர்த், மாகமதி னரைதிரையு மில்லையயு தாயுள் வளர், மோகமிலை கலியுகத்துங் கிம்புருடர் முறைபெறுவர்." என்பதனாற்பெறப்படும். இப்பாட்டு முதலாவரும் பாட்டுத்தோறும் அரசர்செல்வச் சிறப்பைச் சொல்லுதலால் வீறுகோணி. 131

ஆற்றல்சான் மன்னராவியருந்துவான்கரந்துவெய்ய
கூற்றிருந்தனையவுண்கட்கோல்வளையினிதுகேட்டி.
வேற்படைத்தானைசூழவியனறவிசிருந்தகாளை
பாற்கடலுடுத்தசாகத்தீவுறைபரிதிவேலான்.

இ-ள். ஆற்றல்சால் – வலிமைமிக்க, மன்னர் ஆவி – அரசர்களுயிரை, அருந்துவான் – உண்ணும்படி, கரந்து – மறைந்து, வெய்ய – வெவ்விய, கூற்றிருந்தனைய – யமனிருந்ததை யொத்த, உண்கண் – மையுண்ட கண்களையுடைய, கோல்வளை – தமயந்தியே! இனிதுகேட்டி – இனிமையோடு கேட்பாயாக, வேற்படை – வேற்படையையேந்திய, தானை – சேனைகள், சூழ்தன்னைச் சுற்றும்படி, வியன் – அழகிய, தவிசிருந்த – ஆசனத்திலிருக்கப் பெற்ற, காளை – அரசனனவன், பாற்கடலுடுத்த – பாற்கடலையுடுத்த, சாகத்தீவுறை – சாகமென்னுந்தீவிலிருக்கின்ற, பரிதிவேலான்-சூரியன்போன்ற வேற்படையையுடைய அரசன் எ-று.

கடல்களேழினும் உயர்ச்சிபெற்ற கடலாதலாலும், அக்கடலிற் சிந்தாமணியாற்செய்த மண்டபத்தில் உமாதேவி யோகநித்திரை கொண்டிருத்தலாலும், நாரணக்கடவுள் ஆலிலைமேல் அறிதுயில் கொண்டிருத்தலாலும், தேவர்களால் அமிர்தங் கடைந்தெடுக்கப்படுதலாலும், இலக்குமிமுதலிய அழகின்மிக்க மங்கையரும் கௌத்துவமணி பஞ்சதருக்கள் ஐராவத முதலியவும் பிறத்தலாலும், அச்சிறப்பு விளங்க மற்றைத் தீவுகளுக்கு அவ்வக் கடல்களைக்கூறாது இத்தீவிற்கு மாத்திரம் பாற்கடலுடுத்த சாகத்தீவென்று சிறப்பிக்கப்பட்டது. அதனால் அத்தீவைப் புரக்கும் அரசன் பெருமைபுங் கூறியதாயிற்று. பாற்கடலிலே உமாதேவி யோகநித்திரைகொள்ளுதல் "ஆரமிர்தின் கடல் வேலிசெழுந்தருவாய்மணி பம்பிய தீவுடே, பாரகடம்பர் காணிலருங் கொண்ட பாய்மணி மண்டப வீடுடே, கோரசிவன்பர மேசனு மஞ்சமொர்

கூர்பரியங்க மெனுமேலே, சீரடரும்பா ஞானமுறுங்கனி தேவரறுந்துவர் பூமாதே'' எனச் செளந்தரியலகரி யுரைப்பதனுனும் பெறுதும். 132

தளரிடைமெலியவீங்கிச்சந்தனத்தேய்வைகொட்டி
வளரிளமுலையாயிங்ஙன்வைகியமணிசெய்பூணு
னிளவெயிற்பரிதிமான்றேரிடறுபொற்குடுமியோங்கிக்
கிளரொளிவிரிக்குமாடக்கிரவுஞ்சத்தீவின்வேந்தன்.

இ-ள். தளரிடை—தளர்கின்ற இடையானது, மெலிய—வாட, வீங்கி-பருத்து, சந்தனத்தேய்வை—சந்தனக்குழம்பினை, கொட்டி—அப்பி, வளர்-வளரப்பெற்ற, இளமுலையாய்—இளமைபொருந்திய தனங்களையுடைய தமயந்தியே, இங்ஙன்—இவ்விடத்தில், வைகிய—தங்கிய, மணிசெய்பூணன்-இரத்தினபரணங்களையுடைய அரசன், இளவெயில்—இளவெயிலையுடைய, பரிதிமான்றேர்—சூரியனுடைய குதிரைகட்டிய தேரான்து, இடறு—இடறுகின்ற, பொற்குடுமி—பொன்னாற்செய்த சிகரமானது, ஓங்கி—உயர்ந்து, கிளர்—மிகுந்த, ஒளிவிரிக்கும்—காந்தியைப் பரப்புகின்ற, மாடம்-உபரிகைகளையுடைய, கிரவுஞ்சத்தீவின்—கிரவுஞ்சமென்னுந் தீவையாளுகின்ற, வேந்தன்—அரசன் எ-று.

இங்ஙன மென்பது—இங்ஙனெனக் கடைக் குறைந்தது. சூரியனிரதத்திற் கட்டிய குதிரைகள் ஒளியை நோக்கிக் கண்கூசி ஒதுங்கி நடக்கப் பெருமையால் பரிதிமான்றேரிடறுபொற் குடுமியோங்கிக் கிளரொளிவிரிக்குமாட மெனப்பட்டது. 133

புரிவடஞ்சுமந்துவீங்கும்புணர்முலையீங்குவைகுந்
திருகுவெஞ்சிற்றத்துப்பிற்றிண்களியானையன்னான்
விரைமதுவுயிர்க்குங்கைதைவேலிவாய்மணியும்பொன்னும்
வருதிரைசுருட்டுங்கானல்வான்குசைத்தீவில்வேந்தன்.

இ-ள். புரிவடம்—முத்துவடங்களை, சுமந்து—பொறுத்து, வீங்கும்-பருத்த, புணர்முலை—பெருங்கிய தனங்களையுடைய தமயந்தியே! ஈங்குவைகும்—இங்கேயிருக்கின்ற, திருகு—மாறுபடுகின்ற, வெம்—வெவ்விய, சீற்றத்துப்பின்—மிகுந்தகோபத்தையும், திண்—வலிமையையுமுடைய, களியானை அன்னான்—களிப்புமிக்க யானையையொத்த அரசனுனவன்; விரைவாசனைபொருந்திய, மது உயிர்க்கும்-தேனைத்தருகின்ற, கைதைவேலிவாய்-தாழைவேலியிடத்தில், மணியும்—நவமணிகளையும், பொன்னும்-பொன்னையும், வருதிரை—வருகின்ற அலைகள், சுருட்டும்—மடக்கிவீசுகின்ற, கானல்-கடற்கரைச் சோலைகளையுடைய, வான்—மேலாகிய, குசைத்தீவில்—குசையென்னுந் தீவிலிருக்கின்ற, வேந்தன்—அரசன் எ-று.

எப்போதாயினுந் தன்னைப் பகைத்தவர்மேற் கோபம் வைத்தால் அனேகநாள் கழிக்கினும் மறவாது அவரைக்கொல்லுதலும் வலிமைபெறலும் களிப்புமிகுதலும் யானைக்குள்ள குணமாதல் இவ்வரசனுக்கும் அக்

குணங்களுன்டென்பது தோன்றத் "திருகுவெஞ் சீற்றத்துப்பிற் றிண்களி யானையன்ஞ" னென்ரூர். 134

தெண்டிரைப்பரவையீன்ற தெள்ளமிர்தூறல்போலும்
பண்டருமினியதீஞ்சொற்படாமுலைப்பாவைகேண்மோ
விண்டலப்பரிதிபோலவிளங்குமிக்குரிசில்வாசத்
தண்டலையுடுத்தகானற்சான்மலித்தீவில்வேந்தன்.

இ-ள். தெண்டிரை – தெளிந்த அலைகளையுடைய, பரவையீன்ற – கடலானதீன்ற, தெள் – தெளிந்த, அமிர்தூறல்போலும் – அமிர்தத்தின தூறல் போலும், இனிய் – இன்பந்தரத்தக்க, பண்டரும் – இசையைத்தருகின்ற, தீஞ்சொல் – மதுரம்பொருந்திய சொல்லையும், படாமுலை – சாயாததனங்களையுமுடைய, பாவை – தமயந்தியே! கேள் – கேட்பாயாக, விண்தலம் பரிதிபோல – ஆகாயத்திலிருக்கின்ற சூரியன்போல், விளங்கும் – பிரகாசிக்கின்ற, இக்குரிசில் – இவ்வாசனுனவன், வாசத்தண்டலையுடுத்த – வாசமிக்க மலர்களையுடைய சோலைகளையுடுத்த, கானல் – நெய்தனிலத்தையுடைய, சான்மலித்தீவில் – சான்மலித்தீவிலிருக்கின்ற, வேந்தன் – அரசன் எ-று.

பாற்கடலில் பிறந்த அமிர்தத்தின் மாதுரியம் இவள் சொல்லினுலறியலா மென்பதற்குப் பாவையீன்ற தெள்ளமிர் தூறல்போலு மினியதீஞ் சொலெனப்பட்டது. சூரியன் இருட்பகையை யோட்டுதல்போல் இவன் தன்பகையை யோட்டியவனென்பது தோன்ற, விண்டலப் பரிதிபோல விளங்குமிக் குரிசிலென்ரூர். அன்றிப் பரிதிபோல் விளங்கிய ஒளியையுடையவனெனினும் அமையும். 135

தேவர்கண்முதலாமற்றைத்தீவினில்வனப்புவாய்ந்த
காவலரினையரென்னுவுரைத்துமைக்கரியகூந்தற்
பூவையந்தீஞ்சொல்வாட்கட்பொம்மல்வெம்முலையினுட்கு
நாவலந்தீவின்வேந்தர்யாரையுநவிலலுற்றுள்.

இ-ள். தேவர்கண்முதலா – தேவர்களாதியாக, மற்றைத் தீவினில் – மற்றைத்தீவுகளில், வனப்புவாய்ந்த – அழகுபெற்ற, காவலர் – அரசர்கள், இனையர்என்ன – இத்தன்மையரென்று, உரைத்து – சொல்லி, மை – மைபோலும், கரியகூந்தல் – கறுத்தகுழலையும், பூவை அத்தீஞ்சொல் – பூவைப்புள்ளினிசையையொத்த தித்தித்த வார்த்தையையும், வாள்கண் – வாள்போன்ற கண்களையும், பொம்மல் – பொலிவுபெற்ற, வெம்முலையினுட்கு – விருப்பத்தைச்செய்கின்ற தனங்களையுமுடைய தமயந்திக்கு, நாவலந்தீவின்வேந்தர் – நாவலந்தீவிலிருக்கின்ற அரசர்கள், யாரையும் – எவர்களையும், நவிலல் உற்றுள் – சொல்லத்தொடங்கினுள் எ-று.

தீவுகளேழனுள் இப்பொழுது சொல்லிய தீவுகளொன்றும் இனிசொல்லப்போகிற தீவொன்றுமாக ஆறுதீவுகளைச்சொல்லி ஒன்றனைக் கூறு

தொழிந்தது, எந்தப் பிரதிகளிலு மில்லாமையால் அத்தீவையாளும் அரசன் வந்திலன்போலும். இனி நாவலந்தீவி லிருக்கின்ற பலதேசத்தரசரையுஞ் சொல்லப்படுதல் காண்க. நாவலந்தீவென்று இத்தீவிற்குப் பெயரானது "நறவினைய கனியுதிரு நன்னுவ லெங்நாளு, முறுதியுற வுயிர்க்கெல்லாந் தென்றிசையி லோங்குதலாற், பெறுநவகண் டமும்பெரிய நாவலந்தீ வெனும்பெயரை, மறுவறுமக் கனித்தீநீர் மலையதனை வலம்வருமே" இதனுற் காண்க. 136

கொள்ளைவண்டிமிருங்கூந்தற்கோதையிவ்விருந்தவேந்தல்
வள்ளவாய்க்கமலவாவிவாளையம்பகடுதாவிக்
கள்ளுலாம்பசியதாற்றுக்கமுகிளம்பாளைகீறு
மள்ளலம்பழனஞ்சூழ்ந்தவவந்திநாடாளுமவேந்தே.

இ-ள். கொள்ளை – கூட்டமாகிய, வண்டு - வண்டுகள், இமிரும் - சத்திக்கின்ற, கூந்தல் - அளகத்தையுடைய, கோதை – தமயந்தியே, இவ்விருந்த வேந்தல் – இங்கிருந்த விவ்வரசன், வள்ளவாய் – கிண்ணம்போன்ற வாயையுடைய, கமலவாவி - தாமரைத் தடாகத்தினின்றும், வாளைஅம்பகடு – ஆண்பாளைகள், தாவி – பாய்ந்து, கள் உலாம் - தேனெழுகுகின்ற, பசிய – பசுமைபொருந்திய, தாறு – குலைகளையுடைய, கமுகிளம்பாளை-கமுகமாத்தினிளம்பாளைகளை, கீறும் - கிழிக்கும்படி யிருக்கின்ற, அள்ளல்-சேற்றையுடைய, அம் – அழகிய, பழனஞ்சூழ்ந்த – கழனிகள் சூழ்ந்த, அவந்திநாடு – அவந்திதேசத்தை, ஆளும் – ஆளுகின்ற, வேந்து – அரசன்.

கொள்ளையிடும் வண்டெனப் பொருள்கொண்டு அதற் கேற்பத்தேனை யென்னுஞ் செயப்படுபொருள் வருவித்துக் கொள்ளினும் அமையும். அள்ளலம் பழனமென்னுந் தொடர்மொழியிலிருக்கும் அம்மென்பது விரித்தல் விகாரமாய் நின்றது. அது "வலித்தன் மெலித்தனீட்டல் குறுக்கல், விரித்த லிரட்டித்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி" என்னுஞ் சூத்திரத்தால் அந்நூலார் விரித்தல் விகாரத்திற்குக்காட்டிய "தண்ணந்துறைவர் தகவிலரே" என்னும் உதாரணத்தாலறிக. இன்னும் இந்நூலிற் பலவிடத்தோறும் அழகெனப் பொருள்கொண்டிருக்கும் இதுபோல்வனவற்றையும் இவ்வாறு விகாரமென்று கொள்ளினும் இழுக்காமென்க. 137

நன்னலங்கனிந்தகோதாயீங்குறைகாமவேலரின்
பொன்னவிரோடைநெற்றிப்பொழிமதக்களிறுமாய்க்குஞ்
செந்நெலங்குலையிற்றூங்குந்தீந்தொடைநறவுகாலுங்
கன்னலங்கழனிசூழ்ந்தகவுடகாட்டரசரேறே.

இ-ள். நன்னலம்—மிகுந்த நலமானது, கனிந்த – முதிர்ந்த, கோதாய்-தமயந்தியே, ஈங்கு உறை – இங்கேயிருக்கின்ற, காமம் – அச்சத்தைத்தருகின்ற, வேலான் – வேலாயுதத்தையுடைய அரசன், பொன் – பொன்னுற்செய்த, அவிர் – பிரகாசிக்கின்ற, ஓடை – முகபடாத்தையணிந்த, நெற்றி – நெற்றியையும், பொழிமதம் – பொழிகின்ற மதத்தையுமுடைய, களிறு-யானை

யை, மாய்க்கும் — மறைக்கின்ற, செந்நெல் — செஞ்சாலிகளுள்ளனவும், அங்கு லேயின் — அழகிய குலைகள்போல, தூங்கும் — தங்குகின்ற, தீ-தித்திப்புடைய, தொடை - தேன் கூண்டானது, நறவு — தேனை, காலும் — துளிக்கின்ற, கன்னல் — கரும்புள்ளனவுமாகிய, அம்கழனி-அழகிய கழனிகளால், சூழ்ந்த-சூழப்பட்ட, கவடநாடு — கவடதேசத்தை யாளுகின்ற, அரசர் - மன்னர்க்கு, ஏறு — ஆண்சிங்கம்போல்வான் எ-று.

களிறுமாய்க்குஞ் செந்நெலென்றும் தேன் கூட்டையுடைய கன்னலென்றுஞ் சொல்லுதல் கவிகளின் வழக்கம். அது "மீன்கணினளவுமெற்றிடங்களின்மையாற், றேன்கணக்கரும்பியல் காடுஞ்செந்நெலின், வான்புகழ்களிறுமாய் கழனியாக்கமு, மூன்கணர்க்குரைப்பரி கொல்லென்சும்மைத்தே" இதனுலறிக. 138

கஞ்சநாண்மலரைவென் றுகடைக்குழையெறிந்துமீண்ட
நஞ்செனக்கொடியவாட்கணங்கையிவ்விருந்தமீளி
வெஞ்சமங்காத்தலன் றியணியெனவிளங்கச்செய்த
விஞ்சிசூழ்மதுரைமூதூ ரெதுகுலமன்னரேறே.

இ-ள். கஞ்சம் — தாமரையினுடைய, நாண்மலரை — புதியமலரை, வென்று — வெற்றிகொண்டு, கடைகுழை-காதணியினுடையகடையை, எறிந்து-வீசி, மீண்ட - திரும்பிய, நஞ்சு என — விடம்போல, கொடிய - கொடியவாகிய, வாட்கண் — வாள்போன்ற கண்ணையுடைய, நங்கை — தமயந்தியே! இவ்விருந்தமீளி - இருத்தலேப்பெற்ற விவ்வரசன், வெம் - வெப்பம்பொருந்திய, சமம் - யுத்தத்திலே, காத்தலன்றி — காப்பதற்கல்லாமல், அணியென — அலங்காரமாக, விளங்கச்செய்த — பிரகாசிக்கும்படிசெய்த, இஞ்சிசூழ் - மதில் சூழ்ந்த, மதுரைமூதூர் — மதுராபுரியையாளுகின்ற, எதுகுலமன்னர்-எதுகுல வரசர்க்கு, ஏறு — ஆண்சிங்கத்தை யொத்தவன் எ-று.

பெரியோர்களாற் சிறந்தெடுத்துச் சொல்லப்பட்ட அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை என்னும்ஏழுநகரங்களில் ஒருநகர மாதலாலும், யதுவேந்தன் முதலிய அனேக அரசர் புரக்கும்படி இராசதானியா யிருந்ததனுலும், மதுரைக்கு மூதூரென அடைகொடுக்கப்பட்டது. * "மதுரை மூதூர்யாதெனவினவ" எனச்சிலப்பதிகாரமுங் கூறுமாறுணர்க. 139

* மதுரையென்னும்பெயர் வந்ததன் காரணமாவது — குலசேகர பாண்டியன் என்பான் கடம்ப வனத்திற் கண்ணுதலிறைவன் சிவலிங்கமாக விளங்குதலேயோர் வணிகனுலறிந்து அதனைத் தரிசித் தாங் கமரப், பெருமானுர் சித்த மூர்த்திகளாய்ச் சொப்பனத்திலெழுந்தருளிக் காட்டையழித்து நாட்டாக்குதியென்ன, அங்ஙனேசெய்து முற்றிச், சாந்திசெய்யக் கருதி வருந்தழி, எம்பெருமானுர் தந்திருச் சடைக்கணுள்ள சந்திரகலேயின் புத்தமிழ்தை யுகுக்க, அதுபரவி மதுரமயமாக்கிய காரணத்தால் மதுரையெனப்பெயர் பெற்றதென்று "பொன்மயமான சடைமதிக்கலேயின் புத்தமு துகுத்தன, எனவுரூஉ மதனுற் றிருவிளையாடற் புராணஞ் செப்பிற்று. ஈண்டுக் கூறப்பட்ட மதுரை உத்தரமதுரையன்றித் தென்கூடலன்றென்பாருமுளர்.

அமிழ்தினைமுனிந்துசாரலருவிதாழ்மலயமீன்ற
தமிழினுமினியதீஞ்சொற்றையலீண்டிருந்தகோமா
னிமிழ்திரைகொழித்தமுத்தநிமழைநின்முறுவல்காட்டுங்
கமழலந்திறைசூழ்தெண்ணீர்க்கங்கைநாடாளும்வேந்தன்.

இ-ள். அமிழ்தினை – அமிர்தத்தை, முனிந்து – கோபித்து, சாரல்-பக்கங்களிலே, அருவிதாழ் - அருவியான தாழ்கின்ற, மலயம் – பொதியமலையிலிருக்கும் அகத்திய முனிவனுல், ஈன்ற – தரப்பட்ட, தமிழினும் – தமிழைக்காட்டிலும், இனிய – இனிமையுள்ள, தீஞ்சொல் – மதுரம்பொருந்திய சொல்லையுடைய, தையல் - தமயந்தியே! ஈண்டிருந்த – இவ்விடத்திருந்த, கோமான் - அரசனுனவன், இமிழ் – பிரகாசிக்கின்ற, திரை - அலைகளானவை, கொழித்த – ஒதுக்கிய, முத்தம் – முத்துக்கள், ஏழை – தமயந்தியே, நின்முறுவல் - உன்னுடைய பல்வரிசையை, காட்டும் – காண்பிக்கும், கமழ்- பரிமளிக்கின்ற, அலம் – அமைவினையுடைய, தாறைசூழ் – தாறைகள்சூழ்ந்த, தெள் – தெளிவுபொருந்திய, நீர்-நீரையுடைய, கங்கைநாடாளும் வேந்தன்- கங்கைநாடாளும் அரசன் எ-று.

மலயமென்பது அதிலிருக்கும் அகத்தியமுனிக்காதலால் ஆகுபெயர். பரமசிவன் வடமொழிக்கிலக்கணம் பாணினிக்குச் சொல்லியருளியதுபோல், தமிழ்மொழிக் கிலக்கணம் அகத்திய முனிக்குப் போதித்தருளி உலகத்திலே பரவச் செய்தபடியால் மலயமீன்ற தமிழெனப்பட்டது. அது "விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேஞள், வடமொழிக்குரைத் தாங்கியன் மலயமாமுனிக்குத், திடமுறுத்தியம் மொழிக் கெதிராக்கிய தென்சொன், மடமகங்கரங் கென்பது வழுதிநாடன்றே." இதனுலறிக. 140

வனமலர்க்குழங்கன் மாலைவணரிருங்கூந்தற்செவ்வா
யினவளைமடந்தையிப்பாலெரிமணித்தவிசிற்றோன்று
நனைவிரியலங்கன் மார்பனுள்விழவுறுதவீதிக்
கனைகுரன்முரசஞ்சாக்காம்பிலிக்காவல்வேந்தன்.

இ-ள். வனமலர் – மலராற்றொடுத்த, குழங்கன்மாலை – அழகிய மாலையணிந்த, வணர் – வளைந்த, இரு – பெரிய, கூந்தல் – குழலையும், செவ்வாய் – செவ்வாயையும், இனவளை – கூட்டமாகிய வளையலையுமுடைய, மடந்தை – தமயந்தியே, இப்பால் – இப்புறத்து, எரி-ஒளிவிடுகின்ற, மணித்தவிசில்-இரத்நாசனத்தில், தோன்றும் – தோன்றுகின்ற, நனைவிரி – அரும்புகள் விரிந்த, அலங்கல் – மாலையையணிந்த, மார்பன் - மார்பையுடையவன், நாள் – நாடோறும், விழவுறுத – திருவிழாநீங்காத, வீதி – வீதியிலே, கனை-சத்திக்கின்ற, குரல் - குரலையுடைய, முரசம் – பேரிகையானது, தஞ்சா-ஓய்வில்லாத, காம்பிலிக் காவல்வேந்தன் - காம்பிலி தேசத்தையாளுகின்ற அரசன் எ-று.

விழா என்னும் சொல்குறுகி உகரம்பெற்று நின்றது. எந்நாளுந் தெய்வங்களுக்குச் சிறப்பு மிக்க திருவிழா வெடுப்பதுதோன்ற நான்விழ வுறுத

வீதியென்றும், எந்த வாத்தியங்களினும் முரசஞ் சிறந்தமையால் கலிங்கரான் முரசந்துஞ்சாவென்றும் சொல்லினர். முரசம் வாத்தியப் பொதுவுமாகும்.

நுழைகொகிமருங்குறீறம்பநுண்ணெழின்மாமைவாய்ந்த
விழைவளர்மூலியினுப்மற்றிங்கினிதிருந்தீதான்றன்
மழலைவண்டுழலத்தூங்குமழைமதப்புழைக்கைநால்வாய்க்
கழைசுளிகளிகல்யாணைக்கலிங்கநாடாளுமன்னன்.

இ-ள். நுழைகொசி – மிகுந்த நுட்பத்தையுடைய, மருங்குல் – இடையானது, தேம்பூவாட, நுண் – நுட்பம்பொருந்திய, எழில் – அழகானது, மாமைவாய்ந்த – பிரகாசம் பொருந்திய, இழை-ஆபரணத்தையணிந்த, வளர் மூலியினுய் – வளரப்பெற்ற மூலியினையுடைய தமயந்தியே, இங்கு - இவ்விடத்தில், இனிது – இனிதாக, இருந்த – இருக்கப்பெற்ற, தோன்றல்-அரசனுனவன், மழலை-இனிமைபொருந்திய வோசையையுடைய, வண்டு-வண்டுகள், உழல – உழலும்படி, தூங்கும் – தங்கிய, மழைமதம் – மழைபோன்ற, மதத்தையும், புழைக்கை – துவாரம்பொருந்திய துதிக்கையையும், நால்வாய்-தொங்குகின்ற வாயையுமுடைய, கழைசுளி - கரும்பை முரிக்கின்ற, களிகல் யானை – களிப்புப்பொருந்திய நல்ல யானைகளையுடைய, கலிங்கநாடாளும் மன்னன் – கலிங்கநாட்டையாளுகின்ற அரசன் எ-று.

* கலிங்கம் என்பது கொடுந்தமிழ் நாடுபதினெட்டனுளொன்று. யானை மதநீரையுண்ண வண்டுழலுதலால், வண்டுழலத்தூங்குமழை மதமென்றார். அம்மதநீரை வண்டுண்ணுதல் - "நல்லமதந்தாலுண்கவுளின்பா னன்றுண்ணச், செல்லுசுரும்பே வெங்கரியின்றூழ் செவியூதே, மெல்ல நடந்தே போகென மெல்ல விளம்பென்று, சொல்லி மறங்கூர் வேலனகண்ணார் துயர்கின்றூர்" என்பதனுலறிக. 142

உளங்கனிந்துருகப்பைந்தார்க்காமனுமுவக்குஞ்சாய
றுளங்கொளிமுத்தமூரற்றேரைகையீங்கிருந்தீதான்றல்
விளங்கிழைநினதுகண்போல்வேரியங்குவளைபூத்த
வளங்கெழுமருதவேலிவாரணவாசிமன்னன்.

இ-ள். உளமீ – மனமானது, கனிந்துருக – இளகியுருகும்படி, பைந்தார் – பசியமாலையையணிந்த, காமனும் – மன்மதனும், உவக்கும் – விரும்புகின்ற, சாயல் - சாயலையும், துளங்கு – அசைகின்ற, ஒளி - ஒளியையுடைய,

* கலிங்கம் கொடுந்தமிழ் நாடு என்பது.

சிங்களஞ்சோனகஞ்சாவகஞ்சீனந்துளுக்குடகங்
கொங்கணங்கன்னடங்கொல்லந்தெலுங்கம்கலிங்கம்வங்கங்
கங்கமகதங்கடாரங்கௌடங்கடுங்குசலந்
தங்கும்புகழ்த்தமிழ்சூழ்பதினேழ்புவிதாமிவையே.

என்னுஞ் செய்யுளாலுணர்க.

முத்தமூரல் – முத்தையொத்த பற்களையுடைய, தோகை – தமயந்தியே, ஈங்கு – இங்கே, இருந்த – இருத்தலைப்பெற்ற, தோன்றல் – அரசனவன், விளங்கிழை – விளங்குகின்ற ஆபரணத்தையுடையாய், நினது – உன்னுடைய, கண்போல – கண்ணைப்போல், வேரியங்குவளை – தேனையுடைய அழகிய குவளைமலர்கள், பூத்த – பூத்திருக்கின்ற, வளங்கெழு – வளப்பம்பொருந்திய, மருதவேலி – மருதநிலத்தையுடைய, வாரணவாசிமன்னன் – காசிதேசத்தரசன்

வாரணசியென்பது வாரணவாசியென மருவிற்று. சாயலால் தோகை போன்றவளெனக் கொள்க. மாதர் கண்களுக்கு உவமிக்கப்படுங் குவளை மலர்களை இத்தமயந்தி கண்களுக்கு உவமேயமாகக் கூறுதலால் எதிர் நிலையணி. 143

குவட்டிளமுலையினுய்நின் குழைமுகத்திங்களைநோக்கி
யுவட்டெடுத்துவகைவெள்ளமோங்கவீற்றிருந்ததோன்றல்
கவட்டடிக்கயவாய்மேதிகன்றுள்ளிப்பொழிந்ததீம்பா
றெவிட்டவண்டன்னந்துஞ்சுஞ்செழும்புனற்சிந்துவேந்தே.

இ-ள். குவடு – மலைபோன்ற, இளமுலையினுய் – இளமைபொருந்திய தனங்களையுடைய தமயந்தியே! நின் – உன்னுடைய, குழை-குண்டலத்தையணிந்த, முகத்திங்கள்நோக்கி – முகமாகிய சந்திரனைப் பார்த்து, உவட்டெடுத்து – பெருக்கெடுத்து, உவகை – மகிழ்ச்சியென்னும், வெள்ளம் – கடலானது, ஓங்க – மிகுந்தொலிக்க, ஈற்றிருந்த – இங்கிருத்தலையுற்ற, தோன்றல் – அரசனவன், தவடு அடி – பிளப்பாகிய குளம்பையும், கயம்வாய் – பெரிய வாயையுமுடைய, மேதி – எருமை, கன்று உள்ளி – தன் கன்றை நினைத்து, பொழிந்த – சொரிந்த, தீம்பால் – தித்திப்புப்பாலை, தெவிட்டவுண்டு – நிறையவுண்டு, அன்னந்துஞ்சும் – அன்னப்பறவை அயிலுகின்ற, செழும்புனல் – செழுமையுள்ள நீரையுடைய, சிந்துவேந்து – சிந்துதேசத்தையாளுகின்ற அரசன் எ-று. ஏகாரம் – ஈற்றசை.

சந்திரனைப் பார்த்தால் கடல் அதிகரித்தொலித்த லியல்பாதலால், குழைமுகத் திங்களைநோக்கி யுவட்டெடுத் துவகைவெள்ளமோங்க வீற்றிருந்ததோன்ற லெனப்பட்டது. "மதியெழக்கடன் முழங்குதல்போ" லென்னுர் பிறரும். நீரிலே எருமை தன் கன்றை நினைத்துப் பொழிந்த பாலை அன்னம் உண்ணுதல். "பாலுநீரும் பாற்படப்பிரித்த, லன்னத்தியல்பென வறிந்தனர் கொளலே" இதனைக் காண்க.

விந்தமலையின் றென்பாரிசத்துள்ள சிந்துநிறைபொருந்திய தேசம் சிந்து வென்க. 144

பகட்டிளமுலையாயீங்குப்படுதிரைப்பரவைவேலை
முகட்டெழும்பரிதியேய்ப்பவீற்குறைமுழவுத்தோளான்
பொகுட்டுமென்கமலவாவிப்பூம்புனலுழக்கிக்கொண்ட
லகட்டினில்வாளாதாவுமகன்பணைக்குருதேரே.

இ-ள். பகடு – யானை மத்தகம்போன்ற, இளமுலையாய் – இளமை பொருந்திய தனங்களையுடைய தமயந்தியே! ஈங்கு – இவ்விடத்தில், படுதிரை – அலைகளையுடைய, பாவை - பரந்த, வேலைமுகட்டெழு – கடலுச்சியிற் றோன்றிய, பரிதி ஏய்ப்ப – சூரியனையொப்ப, ஈங்குறை – இங்கிருக்கின்ற, முழவுத்தோளான் – மத்தளம்போன்ற தோளையுடையவன், பொகுட்டு - கொட்டையையுடைய, மென்கமலம் – மெல்லிய தாமரை மலரையுடைய, வாவி – தடாகத்திலுள்ள, பூம்புனலுழக்கி – அழகுபொருந்திய நீரைக்கலக்கி, கொண்டல் அகட்டினில் – மேகங்களுடைய வயிற்றினிடத்தில், வாளைதாவும் – வாளைமீன்கள் தாவுகின்ற, அகன்பணை – அகன்ற வயலையுடைய, குருதர் ஏறு – குருதேசத்தாருக்குச் சிங்கவேற்கை யொத்த அரசன் எ-று.

முன்பாட்டிலும் இப்பாட்டிலும் குவடு, கவடு, பகடு, முகடு, அகடு என்னும் அடியெதுகையாய் வந்த உயிர்த் தொடர்மொழிக் குற்றியலுகரங்கள் டகரவொற்றிரட்டித்தல், "ஈரெழுத்துமொழியு முயர்த்தொடர்மொழியும், வேற்றுமையாயி னொற்றிடையின்மிகத், தோற்றம் வேண்டும் வல்லீழுத்து மிகுதி." என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. கொண்ட விகட்டினில் வாளைதாவு மென்றல், "வெள்ளத்தடங்க ணெடுவாளை வேலிக்கமுகின் மிடறெறியத், துள்ளிமுகிலைக் கிழித்த மழைத் துளியோடிறங்கு" மென்பதாற் காண்க. 145

வேலெனப்பிறழ்ந்து கூற்றைவெல்குவன் வருகவென்னு
வோலைவிட்டிலவுங்கண்ணுயிங்குறையுலங்கொடோளான்
சூலுளைந்தலறிப்பைந்தேன் துளிக்குமென்கமலப்போதின்
வாள்வளைமுத்தமீனும்வளவயன்மச்சர்காவல.

இ-ள். வேல் எனப்பிறழ்ந்து – வேற்படைபோ லொளியைச்செய்து, கூற்றை – யமனை, வெல்குவன் – வெற்றிகொள்ளுவேன், வருக என்னு- நீவாக்கடவாயென்று, ஓலைவிட்டு – அந்த யமனுக்கு * ஓலையெழுதிவிட்டு, உலவும் – உலாவுகின்ற, கண்ணுய் – கண்களையுடைய தமயந்தியே, ஈங்குறை - இங்கேயிருக்கின்ற, உலங்கொள் - திரள்கல்லின் வலியைக்கொண்ட, தோளான் - புயத்தையுடையவன், சூலுளைந்து – கருப்பவாதைப்பட்டு, அலறி – ஒலித்து, பைந்தேன் – பசியதேனை, துளிக்கும் – தெரிக்கின்ற, மென்கமலப்போதின் – மெல்லிய தாமரைமலரில், வால் – வெண்மை பொருந்திய, வளை – சங்கங்கள், முத்தம் ஈனும் - முத்தங்களைப் பெறு

* எமற்கு அச்சத்தைக் கொடுக்க வெழுதிய தாகலிற் றிருமுகமென்னது ஓலையென்றார். பண்டைக் காலத்திலே தத்தங் கருத்தைத் தெரிப்பவரும், திருவருட்பா முதலிய திருமுறைகளாகிய நூல்களையெழுதுவாரும் பனையோலையில் எழுதுவது மரபாகலின் அங்ஙனம் கூறப்பட்டது. அது "ஓலைவிரித்து வெண்சோறு கால்கைதையு மெழுதுங் கலைவிரித்திடு பெண்ணையும்" எனக் கந்தபுராணத்து ஆற்றுப்படலத்து வரலுஞ் செய்யுளாற் கண்டாம்.

கின்ற, வளம் – வளம்பொருந்திய, வயல் – கழனிகள் சூழ்ந்த, மச்சர்ஏறு-மச்சதேசத்தாருக்கு அரசன் எ-று.

நீதிப்படி போர்செய்து வெல்லக்கருது மரசர்கள் உன்னைப் போரில் வெல்லும்படி எத்தனித்துவந்தேன், நீயும் வருகவென்று ஓலையேனும் தூதேனும் விடுத்துத் தெரியப்படுத்தல் முறையாகலின், கூற்றை வெல்குவன் வருகவென்னு வோலைவிட்டிலவுங் கண்ணுயென்னூர். இதனுற் கண்களானவை காமுகர்க்குச் செய்யுங்கொடுமை கூறியதாயிற்று. 146

குடங்கையினெடியவாட்கட்கொம்பனுயீங்குப்பைம்பொன்
மடங்கலாசனத்தின்மேயமணியெழுவனையதோளான்
மூடங்குவெண்டோட்டுக்கைதைமுருகுயிர்த்திரங்குதண்ணீர்
தடங்கடற்புலவுபோக்குந்தண்டுறை * மகதநாடன். [ர்த்

இ-ள். குடங்கையின் – உள்ளங்கைபோல், நெடியவாள்கண் – நீண்டவாள்போலுங் கண்களையுடைய, கொம்பனுய் - தமயந்தியே! ஈங்கு - இங்கே, பைம்பொன் - பசும்பொன்னுற்செய்த, மடங்கலாசனத்தில் – சிங்காதனத்தில், மேய – பொருந்திய, மணியெழு அனைய – அழகிய எழுத்தனையொத்த, தோளான் – புயங்களையுடையவன், மூடங்கு – வளைவினையுடைய, வெண்தோட்டு – வெண்மைபொருந்திய இதழையுடைய, கைதை – தாழைகளானவை, முருகுஉயிர்த்து, வாசனையைவீசி, இரங்கும் - சத்திக்கின்ற, தெண்ணீர் – தெளிந்தநீரையுடைய, தடம் - விசாலம்பொருந்திய, கடல் புலவு – கடலினது புலாலுற்றத்தை, போக்கும் – நீக்குகின்ற, தண்துறை-குளிர்ச்சிபொருந்திய துறையையுடைய, மகதநாடன் – மகததேசத்தரசன்.

வீரத்தன்மையும் புயவலிமையுந்தோன்ற ஆசனமென்றெழியாது மடங்கலாசன மென்றும் தோளானென் றெழியாது மணியெழு அனைய தோளானென்றும் சொல்லினுர். முருகுயிர்த்துக் கடற்புலவு போக்கு மென்றமையால், நெய்தற் கருப்பொருளாகிய தாழை அங்கே அதிகரித்திருக்கிற தென்பது கருத்து. 147

கழையெனத்திரண்டமென்றோட்காமருகுவளைபுண்சுட்
பொழிகதிர்முத்தமூரற்பூங்கொடியீங்குவைகு
மழிகவுட்கடாத்தசிற்றத்தண்ணலங்களிறுபோல்வான்
மழையகடுரிஞ்சுமாடமலிகுருநாடர்கோவே.

இ-ள். கழைஎன – மூங்கில்போல், திரண்ட – திரண்டிருக்கின்ற, மென்றோள் – மெல்லியதோள்களையும், காமரு – அழகுபொருந்திய, குவளை உண்கண் - நீலோற்பலத்தழகையுண்ட கண்களையும், பொழிகதிர் – கிரணங்

---

* மகதமும் கொடுந்தமிழ் நாட்டினு ளொன்று. இத்தேசத் தாசரு ளொருவன், கரிகாற் சோழனெடு பகையாற்பொரு தது தாங்கமாட்டாதி றையாகப் பட்டிமண்டபம் என்னும் வித்தியா மண்டபத்தைக் கொடுத்தா னென்று இந்திரவிழவு ரெடுத்தசாதை கூறிற்று.

களைப் பொழிகின்ற, முத்தமூரல் - முத்தங்களையொத்த பற்களையுமுடைய, பூங்கொடி – தமயந்தியே! ஈங்குவைகும் – இங்கேதங்கிய, அழி – ஒழுகுகின்ற, கவுள்கடாத்த - மதமொழுகுகின்ற கன்னத்தையும், சிற்றத்தர்கோபத்தையுமுடைய, அண்ணல் – பெரிய, களிறுபோல்வான் - யானையையொத்த அரசனுவன், மழைஅகடு – மேகத்தின்வயிற்றை, உரிஞ்சுதேய்க்கின்ற, மாடமலி – உப்பரிகைகள் நெருங்கிய, குருநாடர்கோ – குருநாடர்க்கதிபதி எ-று.

கழையென்பது – கரும்பெனினும் ஒக்கும். குருவென்னும் அரசனற் புரக்கப்படுதலாற் குருநாடாயிற்று. குருக்ஷேத்திரமென்றுங் கூறுவர். *குருக்ஷேத்திரம் புண்ணியபூமியாம். அது பாரதத்திற் காண்க. அன்றியும், "தீர்த்தமார்சிவ காசிநிகழ்குருக், கேத்திரம் பிரயாகை கிளரலர், பூத்தபுட்கர மாதிபுனிதர்க, ளார்த்தகங்கை யலைகடலாதியும்" இதனுலறிக.

வடுநெடுங்கண்ணியீங்குவைகியமடங்கலன்னுன்
குடநிகர்செருத்தற்செங்கட்குவிமுலையெருமைதெண்ணீர்த்
தடவயலுழக்கவாளைதாவிமுப்புடைக்காய்த்திதங்கின்
படுபழமுதிர்க்குஞ்சூழற்பல்லவதேயவேந்தே.

இ-ன். வடு – மாவடுபோன்ற, நெடுங்கண்ணி - நெடியகண்களையுடைய தமயந்தியே, ஈங்கு – இங்கே, வைகிய – தங்கப்பெற்ற, மடங்கலன்னுன் - சிங்க ஏற்றை யொத்தவன், குடநிகர் – குடத்தையொத்த, செருத்தல் - மடியையும், செம்கண் – சிவந்த கண்களையும், குவி முலை – குவிந்த முலையையுமுடைய, எருமை – எருமையானது, தெள்நீர் – தெளிந்த நீரையுடைய, தடவயல் – விசாலம்பொருந்திய கழனிகளை, உழக்க - கலக்க – வாளை – அதனுலெழும்பிய வாளைகள், தாவி – பாய்ந்து, முப்புடைக்காய்-மூன்றுபக்கமுள்ள காயையுடைய, தெங்கின் – தென்னமரத்தில, படு – உண்டாகிய, பழம்-பழங்களை, உதிர்க்கும் – உதிர்க்கின்ற, சூழல் – இடத்தையுடைய, பல்லவதேய வேந்து - பல்லவதேசத்தையாளுகின்ற அரசன் எ-று. ஏகாரம் - ஈற்றசை.

எருமை தெண்ணீர்த் தடவயலுழக்க, அதனுலெழுந்த வாளைதாவித் தெங்கின் பழமுதிர்க்கும் பல்லவதேசமெனக் கூட்டுக. இதனுல் அந்நாடு நீர்வனமிக்குச் செழித்திருக்கின்ற தென்பது கருத்து. 149

பிள்ளைமாலினுக்கியீங்குவைகியபிறங்கற்சூளா
னள்ளிலைக்கமலப்போதிலரசிளவன்னங்காண

---

*குரு என்னும் அரசனல் திருத்தியாளப் பெற்றமையால் குருநாடு என்னும் பெயருற்றது. இது அத்தினபுரம் என்னும் டில்லிக்குச் சமீபத்தில் உள்ளது. புண்ணிய பூமியாய் விசேடித்த தலமென்பது "ஸ்ரீபர்வதஞ் சிரஸ்தாநே கேதாரந்து லலாடகே – வாரணசி மகாபிராக்ஞா ப்ருவோர்க் ராணஸ்யமத்யமே – குருக்ஷேத்ரம் குசஸ்தானே பிரயாஹேஹிருத் சரோ ருஹே" எனவருஞ் சாமவேத மகாவாக்கியங்களாற் றெரிக.

வள்ளுறைபிலிற்றுந்தண்கார்வரவெதிர்மயில்களாடக்
கிள்ளைபாட்டயருஞ்சோலைக்கேகயநாட்டுவேந்தன்.

இ-ள். பிள்ளைமான் - இளமான் பார்வையையொத்த, நோக்கி — பார்வையையுடைய தமயந்தியே, ஈங்கு — இங்கே, வைகிய-தங்கப்பெற்ற, பிறங்கல் – மலையையொத்த, தோளான் – தோளையுடையவன், அள்ளிலை-தெருங்கிய இலையையுடைய, கமலப்போதில் - தாமரைமலரிலிருக்கின்ற, அரசிளஅன்னம்காண - இளமைபொருந்திய அரச அன்னம் பார்க்கும்படி, வள்வளம்பொருந்திய, உறை - தளியை, பிலிற்றும் — தளிக்கின்ற, தண்-குளிர்ச்சிபொருந்திய, கார் - மேகங்களினுடைய, வரவு எதிர்-வரவினையெதிர்த்த, மயில்களாட — மயில் கூத்தாட, கிள்ளை – கிளிப்பிள்ளைகள், பாட்டயரும்-பாட்டைப்பாடும், சோலை-சோலைகள்சூழ்ந்த, கேகயநாட்டு வேந்தன்-கேகயநாட்டரசன் எ-று.

அரசவன்னமாவது — மூக்குங் கால்களுஞ்சிவந்து உடம்பு விளர்த்திருப்பது. கார்கண்டு மயிலாடுதல் "என்னேபூர்ந்தருள் சுடர்வடி யிலையவேற் பெருமான், றன்னேநன்மரு கெனப்படைத் தவன்றனதூர்தி, யன்னதாமெனுங் கேண்மையா லளிமுகிற் குலத்தைக், கன்னிமாமயில் காண்டொறுங் களிசிறந் தகவும்" என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுளாற்காண்க. கிள்ளை பாட்டயரு மென்றலால், "கிள்ளைபாடுவ கேட்பனபூவைகள்" என்றூர் பிறரும். 150

கொல்லுலேவேற்கணல்லாயீங்குறைகுவதற்தோளான்
முல்லையம்புறவிற்சேதாமுலைவழியொழுகுநீம்பா
லல்லியங்கமலவள்ளத்தரசிளவன்னமாந்து
மல்லலம்பழனஞ்சூழ்ந்தமத்திரதேயவேந்தன்.

இ-ள். கொல்லுலை – கொல்லனுலையிற் காய்ந்த, வேல்கண் – வேல்போன்ற கண்களையுடைய, நல்லாய் — தமயந்தியே! ஈங்குறை – இங்கேயிருக்கின்ற, குவவு — திரட்சிபொருந்திய, தோளான் — தோள்களையுடையவன், முல்லையம்புறவில் — முல்லைகளையுடைய அங்கிலத்தில், சேதா - செவ்விய பசுக்களினுடைய, முலைவழி — முலையின்வழியே, ஒழுகுநீம்பால் - ஒழுகியதித்திப்புப்பாலை, அல்லியங்கமலவள்ளத்த - அகவிதழையுடைய தாமரைமலராகிய கிண்ணத்தில், அரசிளவன்னம் — இளமைபொருந்திய அரசவன்னங்கள், மாந்தும் – உண்ணுகின்ற, மல்லல் — வளம்பொருந்திய, பழனஞ் சூழ்ந்த - வயல்களாற் சூழப்பட்ட, மத்திரதேயவேந்தன் – மத்திரதேயத்தையாளுகின்ற வரசன் எ-று.

முல்லையம் புறவிலிருக்குஞ்சேதாவின் பாலைக் கமலவள்ளத் தன்னமாந்தும் பழனஞ் சூழ்ந்த தேயமென்னலால், முல்லை நிலத்திற்கும் மருதநிலத்திற்கும் திணைமயக்கங் கூறியவாறுயிற்று. 151

தாளதாமரையின்மேயதாக்கணங்கணையாயீங்குக்
கோளரியென்னவைகுங்குருதிகொப்புளிக்கும்வேலான்

பாலைவாய்கமுகிற்ருவிப்பலவின்மூட்புறக்காய்சிந்த
வாலையம்பகடுதாவும்வங்கநாடாளும்வேந்தே.

இ-ள். தாள-தாளத்தையுடைய, தாமரையின்-தாமரைமலரிலே, மேய-இருக்கின்ற, தாக்கணங்கனேயாய்-இலக்குமியையொத்ததமயந்தியே! ஈங்கு-இங்கே, கோளரியென்ன — சிங்கவேற்றைப்போல், வைகும் - தங்கிய, குருதி – உதிரத்தை, கொப்புளிக்கும் – கொழிக்கின்ற, வேலான் – வேற்படையையுடையவன், பாலைவாய்— பாலைகள்வாய்ந்த, கமுகிற்ருவி - கமுகமரத்தின்மேற்ருவி, பலவின் – பலாமரத்திற்காய்த்த, மூட்புறக்காய்-முள்ளைப்புறத்திலே யுடைய காய்கள், சிந்த – சிதற, வாலையம்பகடுதாவும்-ஆண்வாழைகள் தாவுகின்ற, வங்கநாடாளும் வேந்து—வங்கதேசத்தையாளுகின்ற அரசன் எ-று. ஏகாரம் – ஈற்றசை.

அரியென்பதற்குத் திருமாலெனப் பொருள்கொள்ளினு மமையும். அரசமங்கையர்க்கு இலக்குமியைச் சொல்லுதலும், அரசனுக்குத் திருமாலைச் சொல்லுதலும், அழகிற்குமாத்திரமன்றிப் பொருள், போகம், காப்பு, பெருமை முதலியவற்றிற்குங் கொள்க. கமுகினும் பலாபெரிதாகலால், கமுகிற்ருவிப் பலவின்மூட்பறக்காய் சிவந்த வாலையம்பகடு தாவுமென்ருர். கோள், சிங்கத்திற்குக் கொலையும், திருமாலுக்கு, வலிமையுங் கொள்க. 152

காம்புறழ்பசியமென்ருட்கதிர்முலைத்துவர்வாய்த்தீஞ்சொற்
பாம்படுமல்குலீங்குவைகியபரிதிவேலான்
றேம்பொதிகமலமேயவால்வளைதிங்களென்ன
வாம்பல்வாய்மலரும்வாவியங்கநாடாளும்வேந்தே.

இ-ள். காம்புறழ் – மூங்கிலையொத்த, பசிய - பசியவாகிய, மென்ருள் – மெல்லிய தோள்களையும், கதிர்முலை – பிரகாசம்பொருந்திய முலையையும், துவர்வாய் – சிவந்தவாயையும், தீம்சொல் – மதுரம்பொருந்திய சொல்லையும், பாம்புஅடும் அல்குல் - பாம்பினையடுகின்ற அல்குலையுமுடைய தமயந்தியே! ஈங்குவைகிய – இங்கேதங்கிய, பரிதிவேலான் — சூரியன் போன்ற வேலையுடையவன், தேம் - தேனைத்து, பொதி - நிறைந்த, கமல மேய — தாமரைமலரிலிருக்கின்ற, வால்வளை – வெண்சங்குகளை, திங்களென்ன – சந்திரனென்று, ஆம்பல்—அல்லிமுகைகள், வாய்மலரும்—விரியும், வாவி—தடாகத்தையுடைய, அங்கநாடாளும் – அங்கதேசத்தை யாளுகின்ற, வேந்து – அரசன் எ-று. ஏகாரம் - ஈற்றசை.

வளை திங்கள்போல் ஒளி வீசுதலால் ஆம்பல்வாய் மலருமென்ருர். "எவிழியார்மூர வளநிலாக் கண்டெருங், காவிமுகைய விழுங்காஞ்சியே" யென்ருர் பிறரும். உமாதேவி இமயமலைக்கு மகளாய் வந்திருந்தபோது பரமசிவன் சனகன்முதலிய நால்வர்க்கும் தக்கிண மூர்த்தியாயிருந்து அனுக்கிரகம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது அக்கவுரியை மணக்கும்படி செய்யவேண்டித் தம்மேல் மலரம்புகளைத் தொடுத்த மன்மதனை அக்கடவுள் நெற்றிக்கண்ணைத் திறந்தெரித்தபோது அவனெலும்பு விழுந்த இட

மாதலால், அதற்கு * அங்கதேச மென்னும் பெயராயிற்று. வால்வளை திங்க ளென்ன வாம்பல்வாய் மலருமென, ஆம்பன்மலருக்குச் சங்கினிடத்திற் சந்திரனென்னும் மயக்கஞ் சொல்லப் பட்டமையான் மயக்கவணி. 153

சிதரரிநெடுங்கணல்லாயிங்குறை நிணிபொற்றேளான்
கதிர்படுகழனியூடுகனைத்தினவண்டுக்தேனும்
புதிதுணைக்கமலப்போதுபுரிமுறுக்கவிழ்ந்துமாரு
மதுமடைதிறந்துபாயும்வளங்கொள்பாஞ்சாலவேந்தே.

இ-ள். சிதர் – பரவுகின்ற, அரி – செவ்வரிபரந்த, நெடுங்கணல்லாய் – நெடியகண்களையுடைய தமயந்தியே! ஈங்குறை – இக்கேயிருக்கின்ற, நிணி – வலிமைபொருந்திய, பொற்றேளான் – அழகியதோளையுடையவன், கதிர் படு – கதிர்களானிறையப்பெற்ற, கழனியூடு – வயல்களிலே, கனைத்து – ஆரவாரித்து – இனம் – கூட்டமாகிய, வண்டும் – வண்டுகளும், தேனும் – தேன்வண்டுகளும், புதிதுண – புதிதாவுண்ண, கமலப்போது – தாமரை மலர்கள், புரி – கட்டுப்பட்ட, முறுக்கவிழ்ந்து – முறுக்குடைந்து, மாறு – நீங்காத, மது – தேனை, மடைதிறந்து – மடையைத்திறந்து, பாயும் – பாய்கின்ற, வளங்கொள் – வளத்தைக்கொண்ட, பாஞ்சாலவேந்து – பாஞ்சாலதேசத்தரசன் எ-று. ஏகாரம் – ஈற்றசைக்கண் வந்தது.

கழனியினிடத்திலே யிருக்குந் தாமரைமலர்கள் வண்டினங்களுக்கு நாடோறும் புதிதாகவுண்ணும்படி தேனைத் தருமென்னலால், அவ்வாறு அங்நாட்டிலுள்ளவரனைவரும் விருந்தினர்க்கு உபசரிக்கின்றன ரென்பது கருத்து. 154

இழைபுரைமருங்குலின்னேயிறுமிறுமென்னவீங்கி
யழகுவீற்றிருந்தபொம்மலணிமுலையாங்குவைகுங்
கொழுதிவண்டிமிருந்தாரான் † கோணிலைதிரிந்தஞான்று
மழைவளஞ்சுரக்குஞ்செல்வமலிந்தகாந்தாரவேந்தே.

---

* அங்கதேசம் அங்கஞுச்சிரமம் என்றுங் கூறப்படும். அது "நெடி படு கானிலேகு நெறியினோர் காலிகோக்கி – விடலை யீதென்கோ வென்னக் கவுகின் விமலன்முன்ன – மொடிவறு தவஞ்செய்காலை யுடற்றிய வில் வேளங்க – மடலையினெரித்தநாட்டொட் டங்கஞுச்சிரமமென்பார்" என்று விசுவாமித்திர முனிவர் இராமனுக்கு உரைத்தனரென்று கூறிய. கூர்ம புராணச் செய்யுளா னுணரப்படும்.

† கோணிலைதிரிதலைமேல்வரு வனவற்றானுந் தெளிக. கிரகங்களிற்சுதர் மகனுகிய சனி இடபம், சிங்கம் மீனமென்னு மிவற்றிலேடு மாறுபடினும், ககனத்தே, புகைக்கொடி, வட்டம், சிலை நட்பம், தூமம் என்னுங் காந்துறை கோட்களுள் தூமம் (வால்வெள்ளி) என்னுங் கிரகம் தோன்றினலும், வீரி ந்த ஒளியையுடைய சுக்கிரன் தென்றிசைப் பெயரினும் மழைபெய்யாதெ னக. மேற்கோள்வருமாறு—சரியவன் புகையினும் புகைக்கொடிதோன்றி னும் - விரிகதிர் வெள்ளி தென்புலம்படரினும், என்னும் நாடுகாண்காதைச் செய்யுளானும், "மைம்மீன் புகையினுந் தூமந்தோன்றினுந், தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும்" எனவரூஉம் புறநானூற்றுச் செய்யுளானுங் காண்க.

இ-ள். இழைபுரை – நூலிழையையொத்த, மருங்குல் – இடையானது, இன்னே – இப்பொழுதே, இறுமிறுமென்ன – ஒடியுமொடியுமென்ன, வீங்கி – பருத்து, அழகுவீற்றிருந்த – அழகானது அரசிருந்த, பொம்மல் – பொலிவுபெற்ற, அணி – ஆபரணங்களையணிந்த, முலை – தனங்களையுடைய தமயந்தியே, ஆங்குவைகும் – அங்கேதங்கிய, கொழுநி – மூக்கினுலுழுது, வண்டு – வண்டுகள், இமிரும் – ஒலிக்கின்ற, தாரான் – மாலையையுடையவன், கோள் – நவக்கிரகங்கள், நிலைதிரிந்தனன்றும் – நிலைமாறியகாலத்தும், மழைவளஞ் சுரக்கும் – மழைவளங்களுண்டாகின்ற, செல்வமலிந்த – செல்வமிகுந்த, காந்தாரவேந்து – காந்தாரதேயத்தரசன் எ-று.

கோணிலை திரிதலாவது—கோள்கள் நடக்கவேண்டிய முறைதப்பிமாறி நடத்தல். அப்படி நடந்தால் அந்தத்தேயத்தில் மழைபெய்யமாட்டாதென்க. கோணிலை திரிதல்—காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக்கதிர்கால் வெள்ளித், தேசிகன் பின்புசென்று நடக்குமிச் செயலான் மூங்கீர்த், தூசின வுலகிற்பன்னீ ராண்டுவான் சுருங்குமென்று, பேசின நூல்கண்மாரி பெய்விப்போற் சென்று கேண்மின்.'' என்னுந் திருவிளையாடற்புராணச் செய்யுளாலறிக. 155

அள்ளிலைவடிவேற்கண்ணியிங்குறையலங்கற்றோளான்
முள்ளரைமுளரிமேய்ந்துமுழுநெறிக்குவளைமென்று
வள்ளைவாய்குதட்டிமேதிவழைநறுநீழற்றுஞ்சும்
வெள்ளநீர்ப்பழனஞ்சூழ்ந்தமிதிலைநாடாளும்வேந்தே.

இ-ள். அள் இலை – மாமிசத்தை யள்ளிக்கொள்கின்ற இலையையுடைய, வடிவேல் – கூரியவேல்போன்ற, கண்ணுய் – கண்களையுடைய தடியந்தியே! ஈங்குறை – இங்கேயிருக்கின்ற, அலங்கற்றோளான் – மாலையையணிந்த தோள்களையுடையவன், முள் அரை – முள்ளுகள் நிறைந்தாளையுடைய, முளரிமேய்ந்து – தாமரைப்பூவைமேய்ந்து, முழுநெறி – முழுநெறிப்பையுடைய; குவளைமென்று — குவளைமலரைமென்று, வள்ளை – வள்ளியிலையை, வாய்குதட்டி – மென்று, மேதி – எருமைகளானவை, வழை – புன்னைமரத்தினுடைய, நறுநீழல் – நறிய நிழலிலே, துஞ்சும் – உறங்குகின்ற, வெள்ளநீர் – அதிக நீரையுடைய, பழனஞ்சூழ்ந்த – கழனிகளாற்சூழப்பட்ட, மிதிலைநாடு ஆளும் – மிதிலாதேசத்தை யாளுகின்ற, வேந்து – அரசன். எ-று. ஏகாரம் – ஈற்றசை.

மேய்ந்து – மென்று – வாய்குதட்டி யென்னும்வினையெச்ச அடுக்குகள் துஞ்சுமென்னும் பெயரெச்ச வினையையும், அதுபழனமென்னும் பெயரையுங்கொண்டு முடிந்தன. அள் – கூர்மையுமாம். 156

வெந்திர்புரைபசியமென்றோள்வேல்கிடந்தனையமண்ணு
யதிர்சுழலரசர்போற்றவீங்குறையரியேறன்னான்
கதிர்வெயிற்கற்றைகான்றுகாசுகண்படுக்குமாட
மதியகடுரிஞ்சவோங்குமாளவதேயவேந்தே.

இ-ள். வெதிர்புரை – மூங்கிலையொத்த, பசிய – பசியவாகிய, மென்மேருள் – மெல்லிய புயங்களையுடைய, வேல்கிடந்தனைய – வேற்படையிருத்தையொத்த, கண்ணுய் – கண்ணையுடைய தமயந்தியே! அதிர் – அதிர்ச்சியையுடைய, கழலரசர் – வீரக்கழலையணிந்த அரசர்கள், போற்ற – வணங்க, ஈங்குறை – இங்கேயிருக்கின்ற, அரியேறு அன்னான் – சிங்க ஏற்றையொத்தவன், கதிர் – கதிராகிய, வெயில்கற்றை – வெயிற்கூட்டத்தினை, கான்று – வீசி, காசு – இரத்தினங்கள், கண்படுக்கும் – பதித்திருக்கின்ற, மாடம் – உப்பரிகைகள், மதி – சந்திரனுடைய, அகடு – வயிற்றை, உரிஞ்ச – தேய்க்க, ஓங்கும் – உயர்ந்திருக்கின்ற, மாளவதேயவேந்து – மாளவதேசத் தரசன்.

அநேக மன்னர் இவன்கீழ் அரசு செய்துகொண்டிருத்தல் தோன்ற அதிர்கழலரசர் போற்றவென்றும் அவர்களினு மிகுந்த தலமை யுடையவனென்பதுதோன்ற அரியேறன்ன னென்றுஞ்சொல்லினர். 157

வடுவகிர்நெடுங்கணல்லாய்மடங்கலாசனத்தின்வைகுந்
தொடுகடலுயிர்த்தமுத்தந்துயல்வருதடந்தோள்வீரன்
கடிமுறுக்கவிழ்ந்தசெவ்விக்கமலமென்பொகுட்டிலேறிக்
குடவாளமுத்தமீனுங்கோசலத்தரசனேறே.

இ-ள். வடுவகிர் – மாவடுவின் பிளப்பையொத்த, நெடுங்கண் – நெடிய கண்ணையுடைய, நல்லாய் – தமயந்தியே! மடங்கலாசனத்தின் – சிங்காதனத்திலே, வைகும் – தங்கிய, தொடுகடல் – சகராற் றோண்டப்பட்ட கடலானது, உயிர்த்த – பெற்ற, முத்தம் – முத்து வடங்களானவை, துயல்வரு – அசைகின்ற, தடம் – பருத்த, தோள் – புயத்தையுடைய, வீரன் – அரசனவன், கடி – வாசனை பொருந்திய, முறுக்கவிழ்ந்த – முறுக்குடைந்த, செவ்வி – அழகுபொருந்திய, கமலமென் பொகுட்டில் – தாமரைமலரினுடைய மெல்லிய கொட்டைகளின்மேல், ஏறி – ஏறிக்கொண்டு, குடவாளகுடம்போன்ற சங்கானது, முத்தம் ஈனும் – முத்துக்களைப் பெறுகின்ற, கோசலத்து – கோசலதேசத்தை யாளுகின்ற, அரசனேறு – அரசரிற் சிங்கவேற்றையொத்த வரசன் எ-று. ஏகாரம் – ஈற்றசைக்கண் வந்தது.

அணிகள் அனேகமிருக்க இவ்வரசன் முத்துவட மணிந்ததைக் குறிக்கில், தனக்கு இயற்கையிற் செல்வமிருந்திருப்பினும், உடுத்திரன் படிகம் போன்றும், உருட்சியும் கனமும் உள்ளனவும், பார்வைக்கின்பந் தருவனவும், குற்றமில்லனவுமாகிய முத்துக்களை யணிந்தால் வறுமை யுள்ளனவும் போய்ச் செல்வமுண்டாகுமென்னும் விதிபற்றிப்போலும், தன்னுட்டில் வச்சிரம் உற்பத்தியாயினும் அதில் இவ்வளவு விருப்பின்மை காண்க. 158

மாழைமென்னோக்கியீங்குவைகியமானவேலாண்
ரூழைமுப்புடைக்காய்வீழ்த்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்சுளைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளுமேவேந்தே.

இ-ள். மாழை - மாம்பிஞ்சுபோன்ற, மென்னோக்கி - மெல்லிய பார்வையையுடைய தமயந்தியே! ஈங்கு - இங்கே, வைகிய - தங்கிய, மான-பெரிய, வேலான் - வேற்படையை யுடையவன், தாழை - தெங்கினுடைய, மூப்புடைக்காய் - மூன்று பக்கங்களையுடைய காயானது, வீழ்ந்து-விழுந்து, தாறு - குலைகளையுடைய, இளங்கமுகு-இளமை பொருந்திய கமுகமரத்தை, செற்று - ஒடித்து, வீழ்சுளை - விரும்பப்பட்ட சுளையையுடைய, வருக்கை போழ்ந்து - பலாவைப்பிளந்து, வெம்புலியடிய - வெப்பம் பொருந்திய புலியினதடியையொத்த, பைங்காய் - பசிய காயையுடைய, கோழரை - கொழுமையுள்ள அடியையுடைய, அரம்பை - வாழையை, சாய்க்கும் - சாயச்செய்யும், குடகநாடு - குடகதேசத்தை, ஆளும் - ஆளுகின்ற, வேந்து அரசன்.

மாங்காக் கூறினும் அவ்வவற்றின் கனிகளையெனக்கொள்ளுதல் சிறப்பென்க. தென்னம்பழம் வீழ்தலால் இவ்வாறுரைமோ வெனின் ஆகும். அஃது "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப், பூமாண்டதேன் மொடைதேறி வருக்கைபோழ்ந்து, தேமாங்கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்து, மேமாங்கதமென் றிசையாற் றிசைபோயதுண்டே." என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளாலறிக. 159

ஏந்திளமுலையாயிப்பாலினீ துறைகுமரனன்னான்
றேந்துணரூழ்த்தபோதுந்தெரிவையரிழைத்தசிற்றிற்
காந்தெரிமணியும்பொன்னும்காழகிற்றுணியும்வாரிப்
பூந்திரைசுருட்டுந்தெண்ணீர்ப்பொன்னிநாடாளும்வேந்தே.

இ-ள். ஏந்து - தாங்குகின்ற, இளமுலையாய்-இளமைபொருந்திய முலைகளையுடைய தமயந்தியே! இப்பால் - இப்புறத்தில், இனிதுறை - இனிமையுடனுறைகின்ற, குமரனன்னான் - குமாரக்கடவுளையொத்தவன், தேம் அணர் - வாசனைபொருந்திய மகரந்தங்களை, ஊழ்த்த - உதிர்த்த, போதும்-மலரையும், தெரிவையர் - சிறுபெண்கள், இழைத்த - செய்த, சிற்றில்-சிறுவீட்டினது, காந்தெரி - ஒளிமிகுந்த, மணியும் - மணிகளையும், பொன்னும்-பொன்னையும், காழ்-வயிரம்பொருந்திய, அகிற்றுணியும் - அகிற்றுண்டுகளையும், வாரி - வாரிக்கொண்டு, பூ - அழகுபொருந்திய, திரைசுருட்டும் - அலைகளை மடக்குகின்ற, தெள்ளீர்-தெளிவுபொருந்திய நீரையுடைய, பொன்னிநாடு - காவிரிசூழ்ந்த சோணாட்டை, ஆளும்வேந்து - ஆளும் அரசன் எ-று.

வான்வறப்பினும் காலந்தப்பாதவரும் காவேரி நதிசூழ்ந்தீ அந்நாட்டுக்கு ஒரு குறைவில்லையென்பது தோன்றப் போதும் மணியும்பொன்னும் அகிற்றுணியும் வாரிப் பூந்திரை சுருட்டுந் தெண்ணீர்ப் பொன்னிநாடென்றார். அதனால் அந்நாட்டையாளும் அரசன்பெருமை விளங்குகின்றது. பொன்னி-பொன்கொழித்தோடுவது; காவிரி. 160

மோட்டிளமுலையாய்பைம்பொன்மொய்மணித்தவிசினுப்பட்
சேட்டிளம்பரிதிபோலவீங்குறைதிணிபொற்றோளான்

பாட்டளிபேட்டிஞெடும்பருமுகையவிழ்த்துத்தேறற்
கூட்டுணுங்கமலவாவிக்கோற்கையம்பதிக்குவேந்தே.

இ-ள். மோடு – உயர்ச்சிபெற்ற, இளமுலையாய் – இளமைபொருந்திய தனங்களையுடைய தமயந்தியே! பைம்பொன் – பசிய பொன்னுற்செய்த, மொய்ம்மணி – மணிகள்நெருங்கிய, தவிசினுப்பண் – ஆசனத்தின் மத்தியத்திலே, சேடு இளம்பரிதிபோல – மிகுந்த இளமைபொருந்தியசூரியன்போல், ஈங்குறை – இங்கேயிருக்கின்ற, திணி – வலிமைபெற்ற, பொன்தோளான் – அழகு பொருந்திய தோளையுடையவன், பாட்டளி-பாட்டையுடைய வண்டுகள், பேட்டிஞெடும் – பெட்டைகளுடன், பருமுகை அவிழ்த்து – பசிய அரும்புகளைவிரித்து, தேறல் – தேனை, கூட்டுணும் – கொள்ளைகொள்ளும், கமலவாவி – தாமரைத் தடாகத்தையுடைய, கொற்கையம்பதிக்கு வேந்து – சேரமான் எ-று. ஏகாரம் – அசைநிலை.

பாட்டளிபேட்டிஞெடுந் தேறல் கூட்டுணுமெனலால், உலகத்தில் தனியே யுண்பதினும் தமக்கினிய துணைவியுட னிருந்துண்ணல் யாவர்க்கு மின்பமென்ப தாயிற்று. 161

என்னமற்றினையவாறேயிருமணிமாடஞ்சேர்ந்த
மன்னவர்குலமும்பேரும்வரன்முறைவழாதுகூறி
மின்னகுபரிதிவைவேனளுருக்கொண்டுமேய
வண்ணவர்தமையுமற்றைநளனையுமறைபயிற்றும்.

இ-ள். என்ன – இப்படியென்று, இனையவாறு – இத்தன்மைப்படி, எரிமணி – ஒளிவீசுகின்ற மணிகள் பதித்த, மாடஞ்சேர்ந்த – உபரிகைகள் சேர்ந்த, மன்னவர் – அரசர்களுடைய, குலமும் – மரபும், பேரும் – நாமமும், வரன்முறை – குலமுறைமையில், வழாது – வழுவாமல், கூறி – சொல்லி, மின்நகு – ஒளியையுடைய, பரிதி – சூரியனையொத்த, வைவேல் – கூரிய வேலையுடைய, நளனுருக்கொண்டுமேய – நளனுருவங்கொண்டிருக்கின்ற, அன்னவர்தமையும் – இந்திரன்முதலிய அந்நால்வரையும், நளனையும் – நளமகாராசனையும், அறையலுற்றாள் – சொல்லத்தொடங்கினாள் எ-று. மற்று – அசை.

வடநூலிற் சொல்லியபடி வெவ்வேறு சொல்லில், இந்நூல் விரியுமென்பது பற்றி இத்தன்மையையுடைய நாட்டரசனென்று சொல்லியபடி. குலமும் பேருஞ் சொன்னனென்பதற்கு இனையவாறு மன்னவர் குலமும் பேரும் வரன்முறை வழாது கூறியென மாட்டெறிந் தொழுதலென்னும் உத்தியாற் சுருக்கிக் கூறினார். இனி நான்குபாட்டால் இந்திரன்முதலிய நால்வர்க்கும் நளனுக்குஞ் சிலேடையாகத் தனித்தனிசொல்லுதல் காண்க. 162

கலிவளர்நெங்களென்னக்கடிகமழ்கமலம்வாட்டுந்
திலகவாண்முகத்தாயீங்குவைகியசினவேற்காளை

வலனுடைவயிரவாளான்கற்பகமலிந்ததோளான்
பலபகைவரைமுன்செற்றபகட்டெழின்மார்பினனே.

இந்திரற்கும் நளற்கும் சிலேடை.

இ-ள். கலைவளர் — கலைகள்வளரப்பெற்ற, திங்களென்ன — சந்திரன் போல், கடிகமழ் — வாசனைகமழ்கின்ற, கமலம்வாட்டும் — தாமரைமலரை வாடச்செய்கின்ற, திலகவாள் முகத்தாய் — திலகமிட்ட ஒளிபொருந்திய முகத்தையுடைய தமயந்தியே! ஈங்கு வைகிய — இங்கேதங்கிய, சினவேற் காளை — கோபம்பொருந்திய வேற்படையையுடைய அரசன், வலனுடை வயிரவாளான் — வலனைக் கொன்ற வச்சிரப் படையையுடையவன், (வெற்றி பொருந்திய கூரியவாளையுடையவன்) கற்பகமலிந்ததோளான் — கற்பக லர் மாலை நெருங்கப்பெற்ற தோளையுடையவன், (மலையைப் பிளக்கும் வலிமை மிருந்த தோளையுடையவன்) பலபகைவரைமுன்செற்ற — பலவாகிய பகை கொண்ட மலைகளை முன்சிறகறுத்துச் சயங்கொண்ட, (பலசத்துருக்களை முன்செயித்த) பகட்டெழின்மார்பினன் — பெருமைபொருந்திய அழகிய மார்பையுடைய இந்திரன், (நளன்) எ-று.

தமயந்தி மாலைசூட்டாது வந்த மேற்சொன்ன அரசர்முகமலர்கள்வாடு தல்பற்றித் திங்களென்னக் கமலம்வாட்டுந் திலகவாள் முகத்தாயென்றார். இறந்தால் தன்னுடம்பு நவமணியாகும்படி வரம்பெற்றிருந்த வலாசுரனைக் கொன்றபடியால் வலனுடை வயிரவாளானென்றும், பறந்து உலகத்தையழித் துக்கொண்டிருந்த மலைகளின் சிறகை அறுத்தபடியாற் பலபகைவரைமுன் செற்றவென்றும், இந்திரனுக்கு அடைகள் கொடுக்கப்பட்டன. இப்பாட்டிற் பின்னிரண்டடியும் இந்திரனுக்கும் நளனுக்கும் சிலேடையாதல்காண்க இது சிலேடையலங்காரம் ஆகும். 163

நகைமதிமுகத்தாயீங்குவைகியநாமவேலான்
புகலரும்வெகுளியுள்ளத்தொருவினன்பொங்கியார்த்த
பகையிருட்பிழம்புசீக்கும்பலசுடருமிழும்வாளான்
றகைமைசால்புலவரேத்துந்தாலமேமுடையகோவே.

அக்கினிதேவற்கும் நளனுக்குஞ் சிலேடை.

இ-ள். நகை — ஒளியையுடைய, மதிமுகத்தாய் — சந்திரன்போன்ற முகத்தையுடைய தமயந்தியே! ஈங்குவைகிய — இங்கேதங்கிய, நாமவேலான் — அச்சத்தைத்தரும் வேற்படையையுடையவன், புகலரும் — சொல்லுதற் கரிய, வெகுளிஉள்ளத்து — கோபமுள்ள மனத்தையுடைய, ஒருவினன் — ஆட்டுக்கடா வாகனத்தையுடையவன், [புகலரும் — புகுதற்கரிய, வெகுளி — சினத்தை, உள்ளத்து — மனத்தின்கண், ஒருவினன் — நீக்கினன்,] பொங்கி — பொலிந்த, ஆர்த்த — ஒலித்த, பகை — பகையாகிய, இருள்பிழம்பு — இருட் பிழம்பை, சீக்கும் — ஓட்டுகின்ற, பல — பலவாகிய, சுடருமிழும் — ஒளியை யுமிழ்கின்ற, வாளான் — சுவாலையையுடையவன், [பொங்கி ஆர்த்த — மிகு

ந்து கர்ச்சித்த, பகையிருள் - இருளையொத்த பகைவரது, பிழம்பு—கூட்டத்தை, சீக்கும்—கெடுக்கின்ற, பல - பலவாகிய, சுடருமிழும் - ஒளிவிடுகின்ற, வாளான் - வாட்படையையுடையவன்.] தகைமைசால் - அழகுமிகுந்த, புலவரேத்தும் - தேவரால் துதிக்கப்பட்ட, தாலம்ஏழுடையகோ-ஏழுநாவுடைய தீக்கடவுள், [தகைமைசால்—பெருமைமிகுந்த, புலவரேத்தும் - வித்துவான்களால் துதிக்கப்பட்ட, தாலம் ஏழுடையகோ - சத்தஜிவையுடையநளன்] எ-று.

ஒருவென்பது - ஆடு. வெறிவிலக்கல் — "ஒருத்திக்கொருவன் பகையோ" வென்றூர் பிறரும். தேவர்புசிக்கின்ற அவிப்பாகங்கள் அக்கினிமுகமாகப் பெறவேண்டுதலாலும், இதனால் தேவர்கள் வாழ்க்கைக்கு அக்கினி காரணமாதலாலும், வேதத்தில் தேவர்களுக்கு அக்கினியை முகமாகச் சொல்லுதலாலும், தமக்குப் புகழ்புத் தருபவனே உண்பவர் புகழ்வது இயல்பாதல் பற்றி அக்கினியைப் புலவரேத்தும் தாலமேழுடையகோவென்றூர். புலவரென்பது - பலபொருளொருசொல்லாய்த் தேவரையும் கற்றவரையும் உணர்த்துதலால், ஏத்துதல் - அக்கினிக்குத் தேவரும், நளனுக்குக் கற்றவருமெனக்கொள்க. இப்பாட்டிற் பின் மூன்றடியும் அக்கினிக்கும் நளனுக்கும் சிலேடையாதல் காண்க. இதுவுஞ் சிலேடையணி. 164

அஞ்சனமெழுதலாற்றுதம்மீவாவென்றுகையும்
வஞ்சிநுண்ணிடையாயீங்குவைகியநாமமேவலா
னெஞ்சலிறருமன்றெண்ணீரிருங்கடலுலகமெல்லாஞ்
செஞ்செவேயோசைபோயதீதறுசெங்கோல்வேந்தே.

யமனுக்கும் நளனுக்குஞ் சிலேடை.

இ-ள். அஞ்சனம் - மையை, எழுதல் — எழுதுதலை, ஆற்றாது - சகியாது, ஓவென்று - ஓவென்ன, கையும் - வருத்தமடைகின்ற, வஞ்சிநுண் இடையாய் - வஞ்சிக்கொடிபோல் நுட்பமாகிய இடையையுடைய தமயந்தியே! ஈங்குவைகிய - இக்கேதங்கிய, நாமவேலான் — அச்சத்தைத் தருகின்ற வேற்படையை யுடையவன், எஞ்சலில் — குறைவில்லாத, தருமன்-[தருமனென்னும் பெயரையுடையவன்,] தருமத்தையுடையவன், தெள்நீர் - தெளிவுபொருந்திய நீரையுடைய, இருங்கடல் உலகமெல்லாம்-பெரிய கடல்சூழ்ந்த உலகமுழுவதும், செஞ்செவே - செவ்வையாக, ஓசை போய் - புகழ்பரவப்பெற்ற, தீதறு - குற்றமற்ற, செங்கோல்வேந்து-[செவ்விய காலதண்டத்தையுடைய யமன்.] செங்கோல் செலுத்தும் நளன் எ-று.

கண்ணுக்கு மையெழுதினால் அத்தமையளவு கனமும் பொறுக்க மாட்டாது கையுமிடையெனக் கொள்க. அம்மவோ - இரக்கக்குறிப்பு. "அனிச்சப்பூங் கோதை சூட்டி னம்மனே யோவெஞ்சஞ்சிப், பனிக்குநுண் ணுசுப்பிற்பாவை" என்றூர் பிறரும். உயிர்கள்செய்த தீவினைக்குத் தகவொறுத்தலால் யமனையும், அறமூப்பத்திரண்டும் செய்தலால் நளனையும்

தருமனென்றார். இப்பாட்டிற் பின்னிரண்டடியும் யமனுக்கும் நளனுக்கும் சிலேடையாதல் காண்க. 165

பாற்றிரையமிர்தமூறும்படரொளிப்பவளச்செவ்வாய்க்
கோற்றொடிமடந்தையிங்குவகையுகுவவுத்தோளான்
மாற்றருஞ்சிறப்பின்மிக்கவளங்கெழுபுவனவேந்த
னூற்றிசைப்பரப்புஞ்சூழ்போநலங்கெழுநேமிவேந்தே.

வருணற்கும் நளற்குஞ் சிலேடை.

இ-ள். பால்திரை – பாற்கடலிற் பிறந்த, அமிர்தமூறும் – அமிர்தம் ஊறுகின்ற, படர் – பரவப்பெற்ற, ஒளி – ஒளியையுடைய, பவளம் செவ்வாய் – பவளம்போன்ற செவ்வாயையும், கோற்றொடி – அழகிய வளையலையுமுடைய, மடந்தை – தமயந்தியே! ஈங்குவகைய – இங்கேதங்கிய, குவவுத் தோளான் – திரட்சிபொருந்திய தோளையுடையவன், மாற்றரும் – ஒருவராலும் நீக்குதற்கரிய, சிறப்பின்மிக்க – சிறப்பினால் மிகுந்த, வளங்கெழு – வளம்பொருந்திய, புவனவேந்தன் – நீருக்கரசன் பூமிக்கரசன், நாற்றிசைப் பரப்பும் – நான்குதிசைகளின் பரப்பினும், சூழ்போம் – சூழ்ந்துபோகின்ற, நலங்கெழு – நன்மைபொருந்திய, நேமிவேந்து – [கடலரசனைவருணன்.] சக்கிரவர்த்தியாகிய நளன் எ-று.

புவனமென்பது – நீருக்கும் பூமிக்கும், நேமியென்பது – கடலுக்கும் சக்கரத்துக்கும் பலபொரு ளொருசொல்லாதல் காண்க. இப்பாட்டிற் பின்னிரண்டடியும் வருணனுக்கும் நளனுக்குஞ் சிலேடையாதல் காண்க. இதுவுஞ் சிலேடையணி. 166

போதரிநெடுங்கணல்லாய்பொருசிலைவேனிலானிற்
கோதையர்மனமுங்கண்ணுங்கூட்டுணுங்குவவுத்தோளான்
மூதவிழ்கமலப்போதுமலர்ந்தபூந்தடங்கடோறு
மாதர்மென்முகங்கள்காட்டும்வளங்கெழுநிடதவேந்தே.

இ-ள். போதுஅரி – அரிபரந்த, நெடுங்கண் – நெடிய கண்களையுடைய, நல்லாய் – தமயந்தியே! பொருசிலை – பொருகின்ற வில்லையுடைய, வேனிலானின் – மன்மதன்போல், கோதையர் – மங்கையர்களுடைய, மனமும் நெஞ்சையும், கண்ணும் – விழிகளையும், கூட்டுணும் – கொள்ளையிடுகின்ற, குவவுத்தோளான் – திரட்சிபொருந்திய தோளையுடையவன், தாதுஅவிழ் மகரந்தப்பொடி யுதிர்கின்ற, கமலம்போது – தாமரைமலர்கள், மலர்ந்தவிரிந்த, பூந்தடங்கடோறும் – பொலிவு பொருந்திய தடாகங்கள்தோறும், மாதர் – மடவார்களுடைய, மென்முகங்கள் காட்டும் – மெல்லிய முகங்களைக் காண்பிக்கின்ற, வளம்கெழு – வளம்பொருந்திய, நிடதவேந்து – நிடததேசத்தையாளும் நளமகாராசன் எ-று. ஏ – அசை.

கோதையர் மனமுங்கண்ணுங் கொள்ளைகொண் டுண்ணுந்தோளானெனினும் அமையும். இப்பாட்டில் தோளான் எழுவாய், நிடதவேந்து-

பயனிலை. இப்படலத்திற் சேயரி சிந்தியென்னும் நூற்றிருபத்து நாலாம் பாட்டுமுதல் இப்பாட்டுவரையும் முதற்கண் இத்தன்மையனென்று பொதுப்படச் சுட்டியதை எழுவாயாகவும் இங்ஙனே னென்பதைப் பயனிலையாகவுங் கொள்க. 167

என்றியலணங்குகூறவினையரிலன்னங்கூறு
மன்றலந்தெரியற்றிண்டோண்மன்னவன்யார்கொலென்னப்
பொன்றிகழ்ந்திதலிபூத்தபுணர்முலைப்பாவைபோல்வா
ளொன்றியவையத்தாடுமுள்ளமெக்குருகிநின்றாள்.

இ-ள். என்று – இப்படியென்று, இயலணங்கு – நாமகளானவள், கூற – சொல்லியவளவில், இனையரில் - இத்தன்மையையுடைய அரசர்களில், அன்னங்கூறும் – அன்னப்பறவை முன்புசொல்லிய, மன்றல் – வாசனைபொருந்திய, தெரியல் – மாலையையணிந்த, திண்தோள் - திண்மைபொருந்திய தோள்களையுடைய, மன்னவன் – நளமகாராசன், யார்கொலென்ன – எவனென்று, பொன் – பொன்போல், திகழ் – விளங்குகின்ற, திதலிபூத்த – தேமல்பரவிய, புணர்முலை – நெருங்கிய முலைகளையுடைய, பாவைபோல்வாள் - பாவைபோல்பவளாகிய தமயந்தியானவள், ஒன்றிய ஐயத்தோடும் – பொருந்திய சந்தேகத்துடனே, உள்ளம் – மனமானது, நெக்குருகி நின்றாள் – மிகவுங் கரைந்து நின்றாள் எ-று.

இந்திரன் முதலிய நால்வரும் நளவேடங் கொண்டிருத்தலாலும், அவர் அவ்வாறிருத்தலைக் கேள்விப்படாமையாலும், நாமகள் அந்நால்வரையுஞ் சொன்ன செய்யுளுக்கு அத்தேவரையன்றி நளனென்றும் பொருள்படுதலாலும், நளனைச்சொல்லிய செய்யுளுக்கு வேறு பொருள்படாது நிடதவேந்தென்று வெளிப்பட்டிருப்பினும் இதற்கும் உளதோவென்றும் நம்மை விரும்பியிருந்த தேவர் நிலைமாறி மாயஞ் செய்யினுஞ் செய்வரென்னு மெண்ணமுள்ள தமயந்திக்கு ஒருவர்போலிருக்கும் இவ்வைவருள் நளன் எவனென்று சந்தேகத்துக் கிடமுண்டாய் வருத்தந் தோன்றியதென்க. இது பொதுமையணி. 168

எள்ளுறவேறினோரையிரட்டுறமொழிதலானும்
வள்ளன்மார்பணிந்ததாரில்வண்டுவீழ்ந்தரற்றலானு
முள்ளுறப்பிணித்தவன்பினூழ்வினைத்தொடர்பினானு
நள்ளிருள்பருகும்பைம்பூணளனேயெனநினைந்தாள்.

இ-ள். எள்உற – சந்தேகம்பொருந்த, ஏனையோரை - மற்றையோரை, இரட்டுறமொழிதலானும் – இரண்டு பொருள்படச் சொல்லுதலாலும், வள்ளல்மார்பு அணிந்தாரில் - நளன் மார்பிலணிந்த மாலையில், வண்டுவீழ்ந்து அரற்றலானும் – வண்டுகள்வீழ்ந் தொலித்தலாலும், உள்ளுறப் பிணித்த – உள்ளே பொருந்தக்கட்டிய, அன்பின் – அன்பினாலுண்டாகிய, ஊழ்வினைத் தொடர்பினானும் - ஊழ்வினையினுடைய சம்பந்தத்தினாலும், நள் இருள் -

மிகுந்த இருளை, பருகும்-உண்கின்ற, பைம்பூண் - பசிய பொன்னாற்செய்த ஆபரணங்களையுடைய, நளனையே — நளனென்னு மரசனையே, நளனென்று-நளமகாராசனென்று, ஓர்ந்தாள் — அறிந்தாள் எ-று.

தேவர்களணிவது கற்பகந்தந்த பொற்பூமாலையாகலால் அதில் வண்டு வீழாமைபற்றி "வள்ளன்மார் பணிந்தாரில் வண்டுவீழ்ந்தாற்றலானு" மென்றும், "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று, சூழினுந்தான் முந்துறும்" என்பதுபற்றி, ஊழ்வினைத் தொடர்பினனு மென்றும் சொல்லினர் பொதுமையுற்றிருந்த நளனை யதுவினாற் சிறப்பித்தலால் இதுசிறப்பணி. 169

மாதர்மென்னோக்கிநாணிமதிமுகஞ்சிறிதுகோட்டிக்
காதன்மீதூரவுள்ளங்களிமகிழ்ந்துங்கநின்ற
கோதையர்மணிசெய்செம்பொற்கோடிகத்தினிதினேந்துந்
தாதுலாமலங்கன்மாலைதளிரியல்கரத்திற்கொண்டாள்.

இ-ள். மாதர் - அழகுபொருந்திய, மெல்நோக்கி — மெல்லிய பார்வையையுடைய தமயந்தியானவள், நாணி — நாணமுற்று, மதிமுகம்-மதிபோன்ற முகத்தை, சிறிதுகோட்டி — கொஞ்சம் வணக்கிக்கொண்டு, காதல் — ஆசையானது, மீதூர — அதிகரிக்க, உள்ளம் — மனமானது, களிமகிழ்ந்துங்க — களிப்புமிகுந்த மகிழ்ச்சிதங்க, நின்ற — அருகேநின்ற, கோதையர் — தோழிகள், மணிசெய் — நவமணிகள்பதித்த, செம்பொன்கோடிகத்து — செம்பொன்னாற் செய்த தட்டில், இனிதின் ஏந்தும்-இனிமையிற்றாங்குகின்ற, தாதுலாம்-மகரந்த முலாவுகின்ற, அலங்கல்மாலை — மலர்மாலையை, தளிர் இயல் — தளிரினது சாயலையுடைய, கரத்தில்கொண்டாள் — கையிலெடுத்துக் கொண்டாள் எ-று.

கணவனென்னுந் துணிபுடையவளாகலால், நாணிமுகஞ் சிறிதுகோட்டியென்றார். அப்பொழுது தமயந்தி யுவகை என்னாற்சொல்லி முடியாதென்பார், களிமகிழ்ந்துங்கி நின்ற கோதையரெனப் பூந்தட்டேந்தியதோழிகளின் உவகை மாத்திரங்கூறினர். 170

இன்னரிச்சிலம்புசெம்பொற்கிண்கிணியார்ப்பவேகி
மன்னவர்மனமுங்கண்ணும்வண்டெனத்தொடர்ந்துவீழக்
கொன்னுனைவயிரவொள்வாணெடுந்தார்கோன்குவவுத்தோண்மேற்
பொன்னரிமாலைசூட்டிப்பூங்கழல்வணங்கிநின்றாள்.

இதனால் தமயந்தி நளனுக்கு மாலைசூட்டல் சொல்லப்படுகின்றது.

இ-ள். இன் — இனிய வோசையைத்தருகின்ற, அரி — பருக்கையையுடைய, சிலம்பு — சிலம்புகளும், செம்பொன் — சிவந்த பொன்னாற்செய்த, கிண்கிணி — சதங்கைகளும், ஆர்ப்ப — ஒலிக்கும்படி, ஏகி — போய், மன்னர்-அரசர்களுடைய, மனமும் — நெஞ்சும், கண்ணும் — கண்களும், வண்டு எனவண்டுகள்போல், தொடர்ந்துவீழ — தொடர்புகொண்டுவீழ, கொல் — கொல்

லுகின்ற, நுனை – முனையையுடைய, வயிரம் ஒள்வாள் – கூர்மைபொருந்திய ஒளிவீசுகின்ற வாட்படையை யேந்திய, நிடதர்கோன்-நளமகாராசனுடைய, குவவு – திரட்சிபொருந்திய, தோள்மேல் - புயங்களின்மேல், பொன்னரி மாலைசூட்டி – பொன்னரி மாலையையணிந்து, பூங்கழல் – அழகுபொருந்திய அவன்பாதங்களை, வணங்கி நின்றாள் - பணிந்து நின்றனள் எ-று.

இப்பொழுது பார்த்தாலன்றி இதுதவறின் தமயந்தி நமக்குப் பார்க்கவுங் கிடையாளென்னும் நினைப்பு அவள்தமக்கு மாலை சூட்டிலனென்னும் பொருமையினு மேற்பட்டிருத்தலால், மன்னவர் மனமுங் கண்ணும் வண்டெனத் தொடர்ந்து வீழவென்றும், மாதர்க்குக் கணவரைத்தொழுதலின் மிக்கநின்மையால் பூங்கழல் வணங்கி நின்றா ளென்றும் சொல்லினார். பொன்னரிமாலை யென்பது – பொன்னை யரிந்துசெய்யுமொருமாலை யிருப்பினும், முற்பாட்டில் தாதுலாமலங்கன் மாலையெனலால், இங்கு அழகு பொருந்திய வண்டுகள் சூழ்ந்த மாலையெனப்பொருள் தொள்க. 171

வடிமலர்நெடுங்கட்செவ்வாய்மடவரலினிதுசூட்டுக்
தொடையல்பொற்கிரியில்வீழுஞ்சுடர்மணியருவிபோப்ப
விடுகதிர்வலயத்திண்டோண்மன்னவன்விழைவுகூர்ந்து
பிடிதழீஇயுவகைபூத்தபெய்ம்மதக்களிறுபோன்றான்.

இதனுல் அப்பொழுது நளனுக்கிருந்த மகிழ்ச்சி சொல்லப்படுகின்றது.

இ-ள். வடி - தேனையுடைய, மலர் – குவளை மலர்போன்ற, நெடுங்கண் – நெடிய கண்களையும், செவ்வாய் – செவ்வாயையுமுடைய, மடவரல்-தமயந்தியானவள், இனிது சூட்டும் – இனிமையோடுஞ் சூட்டிய, தொடையல் – மாலையானது, பொன்கிரியில் – மேருமலையில், வீழும் – ஒழுகுகின்ற, சுடர் – ஒளியையுடைய, மணி – இரத்தினங்களோடும் வருகின்ற, அருவி ஏய்ப்ப – அருவியையொப்ப, விடுகதிர் – கிரணங்களை வீசுகின்ற, வலயம்-கேயூரமணிந்த, திண் – வலிமைபொருந்திய, தோள் – தோளையுடைய, மன்னவன் – நளமகாராசன், விழைவுகூர்ந்து - ஆசைமருங்து, பிடிதழீஇ-பெட்டை யானையைத்தழுவி, உவகை பூத்த – மகிழ்ச்சியுண்டாகிய, பெய் மதம்களிறு – மதம்பொழிகின்ற யானையை, போன்றான் – ஒத்தான் எ-று.

பிடி – பெண்யானை, களிறு – ஆண்யானை.

நளன் பிடியைத்தழுவி யுவகைபூத்த களிறுபோன்றனென்னலால், அவ்வாறு தமயந்தி களிற்றைத்தழுவி யுவகைபூத்த பிடிபோன்றனெனக் கொள்க. இது உவமையணி. 172

பூணுலாக்கிடந்தவல்குற்பொற்பெலாங்களிகொள்வண்டின்
பாணுலாக்கிடந்தாரான்பருகுவான்போலநோக்க
நாணமீதூரப்பைம்பொன்னலத்தபூங்கொடியினுல்கி
வாணகையுயர்த்தசெவ்விமதிமுகங்காட்டிநின்றாள்.

இ-ள். பூண் உலாக்கிடந்த - ஆபரணங்க ளசைந்துகிடந்த, அல்குல்- அல்குலையுடைய தமயந்தியினது, பொற்பு எலாம் – அழகனைத்தையும், களி கொள் – களிப்பைக்கொண்ட, வண்டினி – வண்டுகளுடைய, பாண் உலாக் கிடந்த – இசையுலாவிக்கிடந்த, தாரான் – மாலையையணிந்த நளனவன், பருகுவான்போல – கண்ணுலுண்பவன்போல, நோக்க – பார்க்க, (அதனுல்) நாணம்மீதூர – நாணமதிகரிக்க, பைம்பொன் – பசிய பொன்னுலாகிய, நலத்த - நன்மையையுடைய, பூகொடியின் - பூங்கொடிபோல், ஒல்கி- துவண்டு, வாள் – ஒளிபொருந்திய, நகை உயிர்த்த – புன்னகையைத்தந்த, செவ்வி - அழகுபொருந்திய, மதிமுகம் - சந்திரன்போன்ற முகத்தை, கோட்டிநின்ருள் – வணங்கிக்கொண்டு நின்றனள் எ-று.

தமயந்தி மாலசூட்டியபடியால் நமக்கு எப்படியுந் தனவியாயினள், இனிநாம் அந்தரங்கத்தில் அவளழகைப் பார்ப்போமென்றில்லாமற் பொற் பெலாம்பருகுவான்போல நோக்கவென்றமையால், அவளழகிடத்திருந்த அவாவானது அப்பொழுது அவன் விவேகத்தினு மேற்பட்டிருந்தது போலும். அவளுக்கும் அப்படியிருப்பினும் பெண்பாலாகையால் வெளிப் படுத்தா ளென்பதுதோன்ற நாணமீதூரப் பூங்கொடியி, னொல்கி நகை யுயிர்த்தசெவ்வி மதிமுகங்கோட்டி நின்ருளென்றும் சொல்லினர். 173

அலைகடலுயிர்த்தபொன்னம்பாவையையலங்குசோதி
நிலவுமிழ்பளிக்குமாடவேதிகைகொணர்ந்துநீங்காச்
சிலதியருயிரையன்னதோழியர்செவிலித்தாயர்
விலைவரம்பறியலாகாமென்றுகிலெழினிவீழ்த்தார்.

இ-ள். அலைகடல் – பாற்சமுத்திரமானது, உயிர்த்த – பெற்ற, பொன் னம்பாவையை - இலக்குமியையொத்த தமயந்தியை, அலங்கு – அசை கின்ற, சோதி நிலஉமிழ் - மிகுந்தவொளியைக் கொப்புளிக்கின்ற, பளிக்கு மாடம் வேதிகை – பளிங்கரிந்துசெய்த உபரிகையிருக்கு மேடையில், கொணர்ந்து – அழைத்துக் கொண்டுவந்து வைத்து, நீங்கா – நீங்காத, சில தியர் – ஏவல்செய் தோழிகளும், உயிரை அன்னதோழியர் – உயிரை யொத்த தோழிகளும், செவிலித்தாயார் – வளர்த்ததாய்மாரும், விலைவரம்பு அறியலாகா – விலையளவறியக்கூடாத, மென்துகில் – மெல்லிய சீலையாற் செய்த, எழினி – திரையை, வீழ்த்தார் - விடுத்தார்கள் எ-று.

சிலதியாதியர் எழுவாய்.

அரசரைத் தனித்தனி கண்டுவந்ததிற் பொழுது நீட்டித்ததால் இளைப் புறுமென்று தமயந்தியைப் பளிங்குவேதிகையிற் சேர்த்திப் பிறர் அவளை யும் பிறரையவளும் நோக்காமைப் பொருட்டுச் சிலதியர்முதலியோர் திரை வீழ்த்தனரென்க. 174

தாவருஞ்சிற்றத்துப்பிற்றறுகண்மால்யானையன்ன
மேவலர்கடந்தவொள்வாள்வேந்தர்கோன்முழவத்தோண்மேன்

மாவகிர்நெடுங்கண்சூட்டுமாலையேமாலையாகக்
காவலர்முகங்களெலலாங்கமலமொத்திருந்தமாதோ.

இ-ள். தாவரும் – தாவுதற்கரிய, சிற்றத்துப்பின் – மிருத்தகோபத்தை யும், தறுகண் – அஞ்சாமையையுமுடைய, மால் – பெருமை பொருந்திய, யானை அன்ன – யானையை யொத்த, மேவலர் – சத்துருக்களை, கடந்த – வென்ற, ஒள் – ஒளிபொருந்திய, வாள் – வாட்படையையுடைய, வேந்தர் கோன் – நளமகாராசனுடைய, முழவு – மத்தளத்தையொத்த, தோள்மேல் – புயங்களின்மீது, மாவகிர் – மாவடுவின் பிளப்பையொத்த, நெடுங்கண் – நெடிய கண்களையுடைய தமயந்தியானவள், சூட்டும் – தரித்த, மாலையே – பூமாலையே, மாலையாக – மாலைப்பொழுதாக, காவலர் – அரசருடைய, முகங்களெல்லாம் – முகங்களனைத்தும், கமலம் – தாமரைமலரை, ஒத்திருந்த – ஒத்திருந்தன எ-று. மாது – ஓ – அசைகள்.

நெடுங்கணெண்பது – பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அண் மொழித்தொகை. தமயந்தி நளனுக்கு மாலை தரித்தவளவில் மற்றையரசர் முகங்கள் குவிதல்பற்றி அவள்சூட்டிய மாலையை மாலைப்பொழுதாகவும், அவர் முகங்களை அம்மாலைப் பொழுதிற் குவியுந் தாமரைமலராகவும் சொல்லினர். முகங்கள் கமலமொத்திருந்த வென்னும் உவமை மாலையே மாலையாகவென்னும் உருவக மடியாக வருதலாற் கலவையணி. 175

சுயம்வரப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 718.

போர்புரிபடலம்.

இப்படலத்தாற் சுயம்வரத்திற்கு வந்த அரசர் தமயந்தி நளனை விரும்பி மாலை சூட்டுதலால் தாம் அவளைப் பைப்பற்றும் பொருட்டு அவனை வெல்ல வெண்ணிச் செய்யும் யுத்தம் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அழகினேச்சுமந்தபேறுபெற்றனளணங்கின்றென்னு
வொழுகொளியாரமார்பருவாக்கடன்மெலியவார்ப்பப்
பொழிகதிர்வயிரவோள்வாட்புரவலன்புழுங்கிநெஞ்சம்
விழியழல்கதுவநோக்கிவேந்தரைவிழித்துச்சொல்வான்.

இதனுல் அரசர்கள் மகிழ்ச்சியும் இந்திரன் பொறுமையுஞ் சொல்லப்படுகின்றன.

இ-ள். அழகினை – சௌந்தரியத்தை, சுமந்தபேறு – தாங்கிய பேற்றினை, அணங்கு – தமயந்தியானவள், இன்றுபெற்றனள் என்னு – இன்றுதான் பெற்றுளென்று, ஒழுகு ஒளி – ஒளிவிளங்குகின்ற, ஆரம் – மணிவட மணிந்த, மார்பர் – மார்பையுடைய அரசர்களனைவரும், உவாக்கடல் – பூரணைக்காலத்துக் கடலானது, மெலிய-ஒளியிற்குறையும்படி, ஆர்ப்ப-ஒலிக்க, (அதுகண்டு,) பொழிகதிர் – கிரணங்களை வீசுகின்ற, வயிரம் ஒள்வாள்-ஒளிபொருந்திய வச்சிரவாளாயுடைய, புரவலன் – இந்திரனைனவன், நெஞ்சம்புழுங்க – மனம்வெந்து, விழி – கண்களில், அழல்கதுவ - நெருப்புப்பற்ற, நோக்கி – பார்த்து, வேந்தரை – அரசரை, விளித்து – அழைத்து, சொல்வான் – இவ்வாறு சொல்வான் எ-று.

நளனுக்கு மாலைசூட்டுதலால் தமயந்தி யழகிற்கு அவனன்றி நாம் தகுதியுடையோ மல்லமென்று, மற்றையரசர் கினைத்தமைதோன்ற அழகினைச் சுமந்த பேறுபெற்றன னணங்கின்றென்றும், அதி லவ்வரசர்க்கு மகிழ்ச்சியன்றிப் பொறுமை யின்மை தோன்ற ஆரமார்பர் உவாக்கடல் மெலியவார்ப்பவென்றும், இந்திரன் தூதுகள் விடுத்தும் நளவேடங்கொண்டும் தம்மி லொருவர்க்கும் அவளிசையாமையால் வந்த அவமானம்பற்றிப் பொறுமையும் வெகுளியுங் கொண்டமை தோன்றப் புழுங்கி நெஞ்சம் விழியழல் கதுவவென்றும், அதனுல் அவ்வரசர்க்கும் பொறுமை யுண்டாக்கினமை தோன்ற வேந்தரை விளித்துச் சொல்வானென்றும் சொல்லினர். ''வெள்ளிலை வேற்கணாளச் சீவகன் விரைந்துவென்று, ஞெள்ளிய னென்றுமாந்த ருவாக்கடன் மெலியவார்ப்பக், கள்வாற் புலியைவேறு காணியை காவன் மன்ன, னுள்ளகம் புழுங்கிமாதோ வுரைத்தனன் மன்னர்க்கெல்லாம்'' எனச் சீவக சிந்தாமணியாரும் இவ்வாறு கூறுதல் காண்க.—பூரணைக்காலத்தில் நிறைமதி கண்டால் கடல் மிக்கொலித்தலறிக.

விரிகதிர்ப்பரிதிமுன்னர்வெண்மதிமழுங்குமல்லாற்
பரிதியும்மதியந்தோன்றிற்படரொளிமழுங்கலுண்டோ
வரசர்காணீரிவ்வெய்யோனருங்குலத்துதித்துந்திங்கண்
மரபின்மன்னவற்குநுங்கண்மாணெழின்மழுங்கினீரால்.

இதுமுதல் நான்குபாட்டால் இந்திரன் கலகமூட்டுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். விரிகதிர் – விரிந்த கிரணங்களையுடைய, பரிதிமுன்னர் – சூரியன்முன்னே, வெண்மதி – வெண்மைபொருந்திய சந்திரன், மழுங்கும் அல்லால் – மழுங்கிப் போகுமல்லாமல், பரிதியும் – சூரியனும், மதியந்தோன்றில் – சந்திரனுதித்தால், படர் – விரிகின்ற, ஒளி மழுங்கலுண்டோ – ஒளி கெடுதலுண்டோ, (இல்லை இவ்வாறிருக்க.) அரசர்காள்-அரசர்களே, நீவிர்-நீங்கள், வெய்யோன் – சூரியனுடைய, அருங்குலத்தி லுதித்தும் – கிடைத்தற்கரிய மரபினிற் பிறந்தும், திங்கள்மரபின் மன்னவற்கு – சந்திரவம்சத்திற்பிறந்த அரசனுக்கு, நுங்கள் – உங்களுடைய, மாண் – பெருமைபொருந்திய, எழில் – அழகு, மழுங்கினீர் – மழுங்கிப்போனீர்கள் எ-று.

சந்திரவம்சத்திற் பிறந்தவன் நளன்.

உலகத்தில் யாவருக்குங் குலத்தை யிழிவுபடுத்தலி லுண்டாகும் வேற்றுமை மற்றொன்றி லுண்டாகாதென்பதுபற்றி அரசரை நோக்கி இவ்வாறு சொல்லினனென்க. 2

உரிமையிற்புணர்ந்தமாதரூடவுமறுத்திம்மாதின்
வரிமுலைப்போகம்வேண்டிமணவினைதுணிந்துவந்தீர்
குருதிவேல்சுமந்துவாளாவீங்கியதுவுத்தோளீர்
திருநகர்க்கினிநீர்போய்நுந்தெரிவையர்க்கென்சொல்வீரே.

இ-ள். உரிமையில் – கிழமையினால், புணர்ந்த – கூடிய, மாதர் – மங்கையர்கள், ஊடவும் – பிணங்கிக்கொள்ளவும், மறுத்து – அதை நீக்கி, இம்மாதின் – இந்த மங்கையினுடைய, வரி – சந்தனக் கோலத்தையுடைய, முலைப் போகம்வேண்டி – தனத்தினுடைய போகத்தை விரும்பி, மணவினைவிவாகத்தொழிலை, துணிந்துவந்தீர் – நிச்சயித்துக்கொண்டு வந்தீர்கள், குருதி – உதிரந்தோய்ந்த, வேல்சுமந்து – வேற்படையைச்சுமந்து, வாளாவீங்கிய – பருத்த, புவவுத்தோளீர் – திரட்சிபொருந்தியதோள்களையுடைய அரசரே, திருநகர்க்கு – உங்களுடைய நகரத்திற்கு, இனி – இப்பொழுது, நீர்போய் – நீர்சென்று, நும்தெரிவையர்க்கு – உம்முடைய மனைவிகளுக்கு, என்சொல்வீர் – யாதுசொல்வீர்கள் எ-று.

வேறொருமாதரைத் தமது கணவனினைத்தது தெரியினும் பொறுத்த மங்கையர் தமயந்தியின் விவாகத்தைக்குறித்துவந்த அரசரோடு மிகவும் பிணங்கி யிருப்பதென்பது தோன்ற மாதரூடவுமென்றும் நீர் விரும்பிவந்த தமயந்தியைக் கொண்டுபோன நளனைவெல்லும்வல்லமை உமக்கில்லையென்பது

தோன்றக்குருகி வேல் சுமந்த வாளா வீங்கிய குவவுத்தோளீரென்றும், இங்ஙனமான நீர் உம்முடைய மனைவியர் பிணக்கையுந் தணிக்கமாட்டீ ரென்ப தோன்ற நுந்தெரிவையர்க் கென்சொல்வீரென்றும் சொல்லினன். 3

சூழிருஞ்சடைகடாங்கிச்சுடர்முடிதுறந்துகான்போய்
வீழ்சருகருந்திநீவிர்மெய்த்தவம்புரிதல்வேண்டுந்
தாழிருங்கூந்தலாளைநிடதர்கோன்றழீஇயபோதே
யாழிசூழுலகமெல்லாமவனடிபடுக்குமன்றே.

இ-ள். சுடர்முடி – கிரணங்களையுடைய கிரீடங்களை, துறந்து – விடுத்து, சூழ – சுற்றுகின்ற, இரு – பெரிய, சடைகள்தாங்கி – சடைகளைச் சுமந்து, கான்போய் – வனத்திற்சென்று, வீழ்-அங்கே யுதிர்கின்ற, சருகு அருந்தி – சருகைப்புசித்து, நீவிர் – (அரசர்களே) நீர், மெய்த்தவம் – உண்மையாகிய தவத்தை, புரிதல்வேண்டும் – செய்தல்வேண்டும், (அஃதேனெனில்,) தாழ் – தாழ்ந்த, இரு – பெரிய, கூந்தலாளை – அளகபாரத்தையுடைய தமயந்தியை, நிடதர்கோன் – நளன், தழீஇயபோதே – தழுவியபோதே, ஆழி சூழ் – கடலாற் சூழப்பட்ட, உலகமெல்லாம் – பூவுலகமனைத்தும், அவன்- அவ்வரசனுடைய, அடிபடுக்கும் – அடிபணிந்து கிடக்கும் எ-று.

உம்முடைய குலத்திற்கும் உமக்கும் இப்பொழுதவந்தகுற்றம் போரில் வென்று நீக்கல்வேண்டும்; அங்ஙனமின்மையால் இச்செய்கையா லன்றித் தீராதென்பான் மெய்த்தவம் புரிதல்வேண்டுமென்றும், தமயந்தி இலக்கணமுழுவதும் அமைந்த வருவுடையவளாதலால் அவளைமணந்தவன் பூமண்டலமுழுவதும் ஆள்வனென்பது தோன்ற, ஆழிசூழுலகமெல்லா மவனடிபடுக்குமென்றும் சொல்லினன். "வடதிசைக் குன்றமன்ன வான்குல மாசு செய்தீர், விடுகதிர்ப் பரிதிமுன்னர் மின்மினி விளக்கமொத்தீர், வடுவுரை யெனீறுமாயும் வாளமரஞ்சினீரேன், முடிதுறந்தனியீர்போகி முனிவனம் புகுமினென்றான்." "திருமக ளிவளைச்சேர்ந்தான் றெண்டிரை யாடை வேலி, யிருநில மகட்குஞ்செம்பொ னேமிக்கு மிறைவனுகுஞ், செருநிலத் திவளைவென்றீர் திருவினுக் குரியீரென்றான், கருமன நஞ்சுவெஞ்சொற் கட்டியக் காரனன்றே" இவ்வாறு திருத்தக்கதேவரும் கூறுதல்காண்க. 4

கண்டவர்மனமுங்கண்ணுங்கவர்ந்திடவனப்புவாய்ந்த
வொண்டொடிமாலைவேய்ந்தோற்குரியளென்றெண்ணவேண்டா
திண்டிறனிடதர்கோமான்செருவினிலிரியல்போக
மண்டமர்கடந்தவாள்வேன்மன்னவற்குரியளென்றான்.

இ-ள். கண்டவர் – தன்னைப் பார்த்தவர்களுடைய, மனமும் – மனத்தையும், கண்ணும் – கண்களையும், கவர்ந்திட – வாரிக்கொள்ளும்படி, வனப்புவாய்ந்த – அழகுபெற்ற, ஒண்தொடி – தமயந்தியானவள், மாலைவேய்ந்தோன்கு – மாலை சூட்டினவனுக்கு, உரியள் என்று – உரிமையுடையவளென்று, எண்ணவேண்டா – நினைக்கவேண்டா, திண்திறல் – மிகுந்த வலிமை,

யையுடைய, நிடதர்கோமான் - நிடததேசத்தரசன், செருவினில்-போரில், இரியல்போக - ஓடிப்போக, மண்டு - நெருங்கிய, அமர் - யுத்தத்திலே, கடந்த - செயித்த, ஒள்வேல் - ஒளிபொருந்திய வேலையுடைய, மன்னவன்கு- அரசனுக்கு, உரியன் என்றான்-உரிமையுடையவளாவாளென்றான். எ-று.

நளனைப்போர்செய்து வெல்லினும் அரசர் பலராதலால் இவள் எவனுக்கு உரியவளாதலென்னுஞ் சந்தேகமுண்டாகாமைப் பொருட்டு, இந்திரனவன் நிடதர்கோமான் செருவினி லிரியல்போக மண்டமர் கடந்தவொள் வேன் மன்னவர்க்குரியளென்றனென்க. மேற்படலத்தில்நூற்றுபத்தைத் தாம் பாட்டிற் காட்டிய அனிச்சப் பூங்கோதையென்னு மேற்கோளால் பிறரும் இவ்வாறு கூறுதல் காண்க. 5

என்றலுங்கடவுட்டிங்களிருங்குலமிழித்துக்கூற
னன்றுநன்றென்னநக்குகாமவேல்வழுதிசீறி
யுன்றலைதுணிப்பனென்னவொளிறுவாளுறையினீக்கிக்
குன்றெறிவயிரவொள்வாட்குரிசின்மேற்கனன்றுசென்றான்.

இதனால் அக்கலகவார்த்தைகேட்ட பாண்டியன்
வெகுளல் சொல்லப்படுகின்றது.

இ-ள். என்றலும் - இப்படியென்ற இந்திரன் சொன்ன வளவில், கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, திங்கள் இருங்குலம் - பெருமை பொருந்திய சந்திரவம்சத்தை, இழித்துக் கூறல் - இழிவுபடுத்திச் சொல்லல், நன்று நன்று என்ன - நல்லது நல்லதென்று, நக்கு — நகைத்து, காமம் வேல் — அச்சத்தைத் தருகின்ற வேற்படையையுடைய, வழுதி — பாண்டியராசன், சீறி - அதட்டி, உன்தலை - இப்படிச்சொல்லிய உனது சிரத்தினை, துணிப்பன் என்னு - தறித்து விடுவேனென்று, ஒளிறு - பிரகாசிக்கின்ற, வாள் - வாளை, உறையின்நீக்கி — உறையினின்றுநீக்கி, குன்று எறி — மலைகளின் சிறகையறுத்த, வயிரம் ஒள்வாள் - ஒளியையுடைய வச்சிரவாளை யேந்திய, குரிசில்மேல் - இந்திரன் மேல், கனன்று — கோபித்து, சென்றான் - போனான் எ-று.

குன்றென்பது அதன் சிறகினுக்காதல் - ஆகுபெயர். நன்று நன்று என்னும் அடுக்கு இகழ்ச்சிப்பொருளில் வந்தது.

உமையவள், பரமசிவன், குமரவேள் என்னு மூவரும் விரும்பி வந்து அரசுசெய்திருந்த குலமாகலாலும், சந்திரனைச் சிவன் முடிமேற் கொண்டிருத்தலாலும், அந்தவம்சத்தைக் கடவுட்டிங்களிருங் குலமென்றார். அதனால் அக்குலத்திற் றோன்றிய பாண்டியனுக்கு அதை இழிவுபடுத்திய இந்திரன்மேல் வெகுளியுண்டாயிற்றென்க. 6

வெகுளலியணங்கிற்காகநளனுருக்கொண்டுமேய
வகல்விசும்பளிக்கும்வேத்தனிவனெனவமரர்கூறத்
துகளழுமெளலிபண்டுதாற்றவன்றன்னொடென்கொ
லிகலெனப்புகையுமொள்வாளுறைசெறித்தேகினானே.

இதுவுமது.

இ-ள். வெகுளலே - கோபியாதே, அணங்கிற்கு ஆக — தமயந்திக்காக, நளன் உருக்கொண்டுமேய — நளன் வடிவங்கொண்டுவந்த, அகல் விசும்பு-அகன்ற தெய்வலோகத்தை, அளிக்கும் வேந்தன் — காக்குமிந்திரன், இவன் என — இவனென்று, அமரர்கூற - தேவர்கள்சொல்ல (அதுகேட்டு), துகள் எழ — தூளியெழும்ப, மௌலி - கிரீடம், பண்டு — முன்னே, தோற்றவன் தன்னோடு — தோற்றுப்போன இவனோடு, என்கொல் இகல் என — என்ன போரென்று, புகையும் - புகைகின்ற. ஒள்வாள் — ஒளிபொருந்திய வாட் படையை, உறைசெறித்து — உறையிலிட்டு, எகினன் — போனன் எ-று.

மதுரையில் உக்கிரபாண்டியன் அரசு செய்திருந்தகாளில் தன்னூட்டிலிருக்கும் பொதியமலையின்கண் மேய்ந்திருந்த மேகங்களைப் பிடித்துத் தூள செய்தான். அதைக்கேட்டு அப் பாண்டியனோடெதிர்த்து யுத்தஞ்செய்து * இந்திரன் மகுடபங்கப்பட்டுத் தோற்றோடியபடியால் தோல்வி யடைத்தவரோ டெதிர்த்தல் தருமமென்றென்பதுபற்றி இவன் அவ்விந்திரனென்று கேட்ட வரசன், "தகளெழமௌலிபண்டு தோற்றவன் றன்னோடென்கொ, லிகலெனப்புகையுமொள்வாளுறைசெறித்தேகினனென்றூர்.

கூற்றெனக்கனலியென்னக்குலவரை திரிக்குமூழிக்
காற்றெனவுருமேறென்னக்கதிர்முடியரசரெல்லா
மாற்றருஞ்சீற்றத்தோடுமடங்கலந்தவிசினின்றும்
பாற்றினஞ்சுழலும்வைவாட்படையொடுநிலத்திற்பாய்ந்தார்.

இதுமுதல் மூன்றுபாட்டுக்களால் அரசர்செய்கை கூறப்படுகின்றது.

இ-ள். கூற்று என — யமன்போலவும், கனலி என்ன — அக்கினி போலவும், குலவரை — சத்தகுலகிரிகளையும், திரிக்கும் — சுழற்றுகின்ற, ஊழிக்காற்று என — முடிவுகாலக் காற்றுப்போலவும், உரும்ஏறு என்ன-இடியேற்றைப்போலவும், கதிர்முடி - கிரணங்களையுடைய கிரீடமணிந்த, அரசர் எல்லாம் — அரசரனைவரும், மாற்றரும் - நீக்குதற்கரிய, சீற்றத்தோடு — கோபத்துடன், மடங்கல் அம்தவிசினின்றும் — சிங்காதனத்திலிருந்து, பாறு இனம் — பருந்துக்கூட்டங்கள், சுழலும் — வட்டமிடுகின்ற, வை — கூர்மைபொருந்திய, வாள்படை ஒடும் — வாளாயுதத்துடன், நிலத்தில் — பூமியிலே, பாய்ந்தார் — குதித்தார்கள் எ-று.

---

* இந்திரன் மகுடபங்கப்பட்டுத் தோற்றோடியதைப் பின்வரும் செய்யுளாலும் உணர்க. திருவிளையாடற்புராணம் — இந்திரன் முடிமேல் வேலெறிந்தபடலம். "காய்சின மடங்கலன்னான் கைவேலைசுழற்றிவல்லே-வீசினன் குலிசந்தன்னை வீழ்த்தது விடுத்தான் சென்னித்-தேசினன் மகுடந்தள்ளிச் சிதைத்தது சிதைத்தலோடுங்— கூசினனஞ்சிப் போனன் குன்றிறகரிந்தவீரன்" என்பதனாலறிக.

உயிர்போக்கலால் யமனையும், நீறுசெய்தலால் அக்கினியையும், வேகத் தோடு தள்ளுதலாற் காற்றையும், கர்ச்சித்து நடுக்கஞ்செய்தலால் இடி யேற்றையும், பெரும்பான்மைபற்றி அரசர்க்கு உவமையாக்கினர். என்ன-உவமவருபிடைச் சொற்கள். 8

கொய்யுளைக்கலினப்பாய்மாகொடிஞ்சியந்தேரிற்பூட்டி
மையன்மாமதத்தயானைபருமித்துமறலியேனுஞ்
செய்யகண்புதைக்குஞ்சீற்றத்திலகெழுவயவர்சூழ
மொய்கழலரசரெல்லாமுருகுலாந்தும்பைவேய்ந்தார்.

இ-ள். கொய்உளை — கொய்துகட்டிய புறமயிரினையுடைய, கலினம்-கடிவாளம்பூண்ட, பாய் - தாவுகின்ற, மா — குதிரைகளை, கொடிஞ்சி அம் தேரில் — மேன்மொட்டையுடைய இரதங்களில், பூட்டி — பூட்டுதல்செய்து, மையல் — மயக்கம்பொருந்திய, மா — பெரிய, மதத்த - மும்மதத்தையு முடைய, யானை — யானைகளை, பருமித்து — அலங்கரித்து, மறலியேனும்-கூற்றுவனுயினும், செய்ய கண்புதைக்கும் — சிவந்த கண்களை மூடிக்கொள் ளத்தக்க, சீற்றம் — கோபத்தையுடைய, திறல்கெழு — வலிமைபொருந்திய, வயவர்சூழ — காலாட்கள் தம்மைச் சூழ்ந்துவரும்படி, மொய் — நெருங்கிய, கழல் — வீரக்கழலையணிந்த, அரசர்எல்லாம் — அரசரனைவரும், முருகுலாம், தேனுமுருகுகின்ற * தும்பை — தும்பைமாலையை, வேய்ந்தார் — தரித்தார் கள். எ-று.

தும்பைவேய்தலாவது — "செங்களத்து மறங்கருதிப் — பைந்தும்பை தலைமலைந்தன்று." "கார்கருதின்ற திருங்கௌவை விழுப்பணையான், சோர்குருதி சூழாநிலநனைப்பப் — போர்கருதித், தப்புடைத் தும்பைமலைந் தான்றுகளறீர், வெப்புடைத் தானையெம்வேந்து." என்னும் புறப் பொருள் வெண்பாமாலையாலறிக. 9

கொடுங்குணில்பொருதவெற்றிப்போர்ப்பறைகுளிறவெம்போர்க்
கடுந்திறல்வயவர்வின்னுண்புடைப்பொலிகடலினுர்ப்பச்
சுடுங்கனல்குளிரவெய்தாச்சுடர்விழிபொறிகள்சிந்த
மடங்கலேறனையவேந்தர்வாளமரழுவத்துற்றார்.

---

* தும்பை — எழுவகைப் புறத்திணையுள் ஒன்று. நெய்தல் என்னும் அகத்திற்குப் புறனுகவுள்ளது. "தும்பைதானே நெய்தலதுபுறனே" என் றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். தும்பை என்பது சூடும்பூவினாற் பெற்ற பெயர். அதுபற்றியே, இந்நூலாரும், "தும்பைவேய்ந்தார்" என்றார். தம்வலிமையே பொருளாக்கொண்டு பகைத்த வேந்தனுடன் எதிர்பொரச் சேறுங்கால் இம்மாலை சூட்டிச் சேறலின் இங்ஙனம் கூறப்பட்டது. இது தமயந்தி மாலைசூட்டிய நளனைநோக்கிப் பொருமைங்கிழந்த வேந்தர். அவட் பெறல் குறித்துச்சென்ற தும்பையாகலின் வெட்சிப் புறத்தைத் தும்பை யென்ப.

இ-ள். கொடுங்குளில் - வளைந்த குறுந்தடியால், பொருத - அடிக்கப் பெற்ற, வெற்றி - சயத்தைத்தருகின்ற, போர்ப்பறை - யுத்தமுரசு, குளிற - ஒலிக்க, வெம்போர் — வெவ்விய போர்செய்கின்ற, கடுந்திறல் - மிகுந்த சௌரியத்தையுடைய, வயவர் - படைவீரர்கள், வில் — வில்லை வளைத்துச் செய்யும், நாண்புடைப்புஒலி - குணத்தொனிகள், கடலின் ஆர்ப்ப - கடல் போலொலிக்க, சுடுங்கனல் - சுடுகின்ற நெருப்பும், குளிர - குளிரும்படி, வெய்தா - வெப்பமாக, சுடர்விழி — சிவந்தகண்கள், பொறி - நெருப்புப் பொறிகளே, சிந்த - சிதற, மடங்கல்ஏறுஅனைய — சிங்கவேற்றையொத்த, வேந்தர் — அரசர்கள், வாளமர் - வாட்போர்செய்கின்ற, அழுவம் — யுத்த களத்தில், உற்றார் - அடைந்தார்கள் எ-று.

அநேக ரிறக்கும்படிசெய்யும் போரைக் குறித்துப் பறையை யடிக் கின்ற தாதலால், குணிலென்னுது கொடுங்குளிலென்றார். விழிகள் சிந் தும் பொறிகளுக்குச் சுடுங்கனலை ஒப்புச்சொன்னல் நெருப்புக்கு நீரை ஒப்புச் சொல்லுதல்போ லிருத்தலாற் "சுடுங்கனல் குளிரவெய்தாச் சுடர் விழி பொறிகள் சிந்த" வென்றார். குளிற, ஆர்ப்ப, சிந்தவென்னும் பெய ரெச்சம் வேந்தரென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. 10

மன்னவர்தருக்கும்வெம்போர்வயிரவாள்சுமந்ததிண்டோட்
பொன்னகர்க்கிறைவன்சூழ்ந்தபுணர்ப்புநாங்காண்டுமென்ன
வொன்னலரகலமூழ்கியுன்சுவைத்துநிரமாந்து
மின்னகுபரிதியொள்வேல்வேந்தர்கோன்சிறிதுநக்கான்.

இதனுல் நளனது செருக்குச் சொல்லப்படுகின்றது.

இ-ன். மன்னவர் — அரசர்களுடைய, தருக்கும் - கர்வமும், வெம் போர் — வெவ்விய போர்செய்கின்ற, வயிரம்வாள்சுமந்த - வச்சிராயுதத் தைச்சுமந்த, திண்தோள் - வலிமைபொருந்திய தோள்களையுடைய, பொன்னகர்க்கு இறைவன் - இந்திரனுனவன், சூழ்ந்த - எண்ணிய, புணர்ப் பும் - சம்பந்தமும், நாம் காண்டும் என்ன - நாம்காண்போமென்று, ஒன் னலர் - சத்துருக்களுடைய, அகல மூழ்கி - மார்பினிடத்திலே குளித்து, ஊண்சுவைத்து - மாமிசத்தைமென்று, உதிரம்மாந்தும் - புண்ணீரைக் குடிக்கின்ற, மின்னகு - ஒளிவிடுகின்ற, பரிதி - சூரியன்போன்ற, ஒள் வேல் - ஒளிபொருந்திய வேற்படையையுடைய, வேந்தர்கோன் - நளமகாரா சன், சிறிது - கொஞ்சம், நக்கான் - சிரித்தான் எ-று.

* இங்கே நளன் சிரித்தது வீரச்சிரிப்பாம் அதுபரமசிவன் சிரித்துத்திரி புரத்தை யெரித்தலாலறிக. "ஒன்னலரைச் செற்றனவொக்குஞ் சிறு நகை செய்வன" வென்றார் பிறரும். 11

* நகை முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலு மென மூவகைப்படும். நகையென்பது விளையாட்டுப் பொருட்டாய் வரி லும் சண்டு அப்பொருட்டல்லாதாயிற்று. நளன் முறுவலித்து நக்கான் என்பார். "சிறிது நக்கான்" என்றார். நகை எள்ளல், இளமை, பேதமை,

சிலைகுழைத்தரசர்நின்றசீற்றமுநிணம்வாய்ப்பில்கிக்
கொலைபழுத்தொழுகும்வேலான்குவவுத்தோட்பணைப்புநோக்கி
யிலைமுகப்பூணினுண்மற்றென்கொலாய்விளையுமென்னு
முலைமுகட்டலங்கல்வேற்கண்முத்துகவெருவிநின்றாள்.

இதனுல் தமயந்தி வருந்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். சிலைகுழைத்த – வில்லைவளைத்த, அரசர்நின்ற – அரசர் நிற்கப் பெற்ற, சீற்றமும் – கோபமும், நிணம் – கொழுப்பை, வாய்ப்பில்கி – வாயிற் சிதறி, கொலைபழுத்த – கொல்லுதல்மிகுந்த, ஒழுகும் ஒழுகுகின்ற, வேலான் – வேற்படையையுடைய, நளனது, குவவுத்தோள் – திரட்சிபொருந்திய தோள்களினுடைய, பணைப்பும் – பூரிப்பும், நோக்கி-பார்த்து, இலைமுகம் பூணினுள்-தமயந்தியானவள், என்கொலாய் விளையும் என்னுயாதாய் முடியுமோவென்று, முலைமுகட்டு – தனங்களினுடைய உச்சியில், வேல்கண்-வேல்போன்ற கண்களினின்றும், முத்து உக – முத்துப்போல் நீர்துளிக்க, வெருவி – பயந்து, நின்றாள் – நின்றனள் எ-று.

அரசர் கோபத்தையும் நளன்தோள் பூரிப்பையும் பார்த்த தமயந்தியானவள் அரசனுக்கு இத்தனைபேர், பகையாதற்கு நான்காரணமானேன் இனியாதாகுமோவென்று வெருவி நின்றனளென்க. மற்று – அசை நிலை. 12

கெழுங்கடைமழைக்கணல்லாய்திண்சிலைகுழைத்துவெம்போர்க்
கெழுந்தவிவ்வரசர்மார்பத்திழிபுருங்குருதிமாந்தப்
புழுங்குவெம்பகழிமாரிபொழிந்தமர்முருக்கியாடி
யுழுந்தருள்பொழுதின்மீள்வதுள்ளகேவலலென்றாள்.

இதனுல் நளன் தமயந்தியைத்தேற்றல் சொல்லப்படுகின்றது.

இ-ள். செழுமைகடை – செழுமையுள்ள கடையையுடைய, மழைக்கண் நல்லாய் – குளிர்ச்சிபொருந்திய கண்களையுடைய தமயந்தியே! திண்சிலை – வலிமையையுடைய வில்லை, குழைத்து – வளைத்து, வெம்போர்க்கு-வெவ்விய யுத்தத்திற்கு, எழுந்த – புறப்பட்ட, இவ்வரசர்மார்பத்து – இவ்வரசர் மார்பினிடத்திலே, இழி – இழிகின்ற, பெருங்குருதி-அதிகவுதிரத்தை, மாந்த – உண்ணும்படி, புழுங்கு – வெம்புகின்ற, வெம்பகழிமாரி – வெவ்விய பாண மழையை, பொழிந்து – சொரிந்து, அமர் – யுத்தத்திலே, முருக்கி-கொன்று, ஆடி – வீளையாடி, உழுந்த உருள் பொழுதின் – ஒரு உழுந்துரு

மடன் என்னும் நான்குவகைப்பற்றி யுண்டாவதாம். வேந்தர்கோனும் நளனுக்கு எள்ளல் காரணமாகத் தோன்றியது. அவ்வாறுதோன்றுங்காலத்து அதுதான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழித்தான் நகுதலுமென இருவகைத்து அவையிற்றுள் நளன் சுக்கது இறுதிவகையதென்க. வீரத்தின்பயனுல் வெகுளியும், வெகுளிக்கண்ணது நகையுமாகலிற் கூறினர்.

ளுகிற காலத்திலே, மீள்வல - திரும்புவேன், நீ - நீ, உள்ளம் - மனத்தினிடத்து, கவலல் - கவலைப்படவேண்டாம், என்றான் - என்று கூறினான்.

தமயந்தி யாற்றுமையையுங் கவலைப்படுதலையு நோக்கிவிரைவுதோன்ற உழுந்தருள் பொழுதின் மீள்வல் என்றான். உழுந்துருள் பொழுதிலென உலகவழக்கச்சொல்லைத் தழுவிச் சொல்லுதலால் உலகவழக்க நவிற்சியணி.

வினைசமர்க்கெழுந்துநின்றவீமனையினி திநோக்கிக்
களிமதக்களிறுசேர்தருங்களப்படுத்திகலினேற்ற
வுளைவயப்புரவித்தானையொன்னலர்ச்செகுப்பனீபோய்
களிகடற்றானைசூழநங்கையைக்காத்தியென்றான்.

இதனால் நளனுக்கு உதவியின்றிய பராக்கிரமஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். வினை - உண்டாகின்ற, சமர்க்கு - போர்செய்தற்கு, எழுந்து நின்ற - புறப்பட்டுநின்ற, வீமனை - வீமராசனை, இனிதின்-இனிமையினால், நோக்கி - பார்த்து, களி - களிப்பையுடைய, மதம் களிறும் - மதயானையையும், தேரும் - தேரையும், களப்படுத்து - யுத்தகளத்திலழித்து, இகலின்-பகையினால், ஏற்ற - எதிர்த்த, உளை - புறமயிரினையுடைய, வயம்புரவி-வலிமைபெற்ற குதிரைகளையும், தானை - சேனையையுமுடைய, ஒன்னலர் - சத்துருக்களை, செகுப்பல் - சொல்லுவேன், நீபோய்-நீசென்று, நளி-குளிர்ச்சி பொருந்திய, கடல் - கடல்போன்ற, தானைசூழ் - சேனை சூழ்ந்திருக்க, நங்கையை - தமயந்தியை, காத்தி என்றான் - காப்பாயென்றான் எ-று.

நளன் நங்கையைக் காத்தியென்ற னென்க.

தமயந்தி நமக்கு மாலையிட்ட பின்பு அவளை விரும்பி நம்மோடிருக்கும் அரசர் நாம் போர்செய்யும்போது அவளைக் காத்து வெளவவரினும் வருவதென்பது பற்றியும், தன்பொருட்டு வந்தபேரை மற்றொருவர் பால் விடில் தனக்கிழிவென்பது பற்றியும், அவட்குத் தந்தையாகிய வீமனை அவனைக் காக்கும்படி வைத்தனனென்க. 14

உடல்சினவுருமேறன்னவயவரையொருங்குநோக்கிக்
கொடியணிகொடிஞ்சித்திண்டேர்கொய்யுளைக்கலினப்பாய்மா
கலின்மடைதிறந்ததென்னக்காடுமூற்றிருந்துபாயும்
படுமதக்களிகல்யானைபண்ணுறுத்திடுமினென்றான்.

இதனால் நளன் போர்முயற்சி செய்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். உடல் - பொருகின்ற, சினம் - கோபத்தையுடைய, உரும் ஏறு என்ன - இடியேற்றையொத்த, வயவரை - சேவகரை, ஒருங்கு நோக்கி-ஒரேதரம் பார்த்து, கொடியணி - கொடிகளையணிந்த, கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய, திண் - வலிமைபொருந்திய, தேர் - தேரையும், கொய் உளை - கொய்துகட்டிய புறமயிரினையுடைய, கலினம் - கடிவாளம்பூண்ட,

பாய்மா – குதிரைகளையும், கடல் – கடலானது, மடைதிறந்தது என்ன – மடைதிறந்ததென்று சொல்லும்படி, காடம் – கவடுபட, ஊற்று இருந்து பாயும் – ஊற்றிருந்து பாய்கின்ற, படுமதம் – மதம்படுகின்ற, களிகல்யானை – களிப்பையுடைய நல்ல யானைகளையும், பண்உறுத்திடுமின் என்றான் – அலங்கரியுங்களென்றான் எ-று.

தனித்தனி உத்தரவுபண்ணிற் காலநீட்டிக்கு மென்பதுபற்றி விரைந்து கூறினமைபோன்ற வயவரை யொழுங்கு நோக்கித் தேர், பாய்மா, யானை, பண்ணுறுத்திடுமி னென்றான். 15

நீங்கருங்கவசமார்த்துநேரலர்மௌலிதேய்க்கும்
பூங்கழனரலவீக்கிப்போரெனிற்பொருப்புமஞ்ச
வீங்கியகுவவுத்தோளில்வெங்கணைப்புட்டிலாங்கி
வாங்குவிற்றடக்கையேந்திமறலிகண்புதைப்பநின்றான்.

இதனுள் களன் போர்க்கோலங் கொள்ளுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். நீங்கரும் – பிரிதற்கரிய, கவசம்ஆர்த்து – கவசந்தரித்து, நேரலர் – சத்துருக்களுடைய, மௌலி – முடியை, தேய்க்கும் – தேய்க்கின்ற, பூகழல் – வீரக்கழலை, கரல – ஒலிக்கும்படி, வீக்கி – கட்டி, போர்எனில் – யுத்தமென்றால், பொருப்பும் அஞ்ச – மலையுமஞ்சும்படி, வீங்கிய – பருத்த, குவவுத் தோளில் – திரட்சிபொருந்திய புயத்தின்கண், வெங்கணை – வெவ்விய பாணங்களையுடைய, புட்டில்தாங்கி – அம்புக்கூட்டைத் தாங்கி, வாங்கு – வளைக்கப்பட்ட, வில் – வில்லை, தடகை எந்தி – விசாலம்பொருந்திய கையிலேந்தி, மறலி – யமனும், கண்புதைப்ப – கண்களை மூடிக்கொள்ளும்படி, நின்றான் – நின்றனன் எ-று.

களன் கவசமார்த்துக் கழல்வீக்கிப் புட்டில்தாங்கி வில்லேந்தி நின்றனனெனக் கூட்டுக. சத்துருக்கள் பணிந்துகிடத்தலால் நேரலர்மௌலி தேய்க்கும் பூங்கழலென்றார், மறலியென்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கு நின்றது. 16

பொருசமர்தொடங்கிநின்றபுரவலர்மடவார்செய்ய
வரிகெடுங்கண்ணுந்தோளும்வலந்துடித்தின்னல்காட்டக்
குருமணிகுயிற்றுஞ்செம்பொற்கோடியர்கொடிஞ்சித்தேரி
னருவரையிவருஞ்சிற்றாடங்களேறென்னவார்ந்தான்.

இதனுள் களன் தேரேறுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பொரு – பொருகின்ற, சமர் – யுத்தத்தை, தொடங்கிநின்ற – ஆரம்பித்துநின்ற, புரவலர் – அரசர்களுடைய, மடவார் – மாதரது, செய்ய – சிவந்த, வரி – வரிபரந்த, நெடுங்கண்ணும் – நெடிய கண்களும், தோளும் – தோள்களும், வலந்துடித்து – வலப்பக்கந்துடித்து, இன்னல்காட்ட – தன்பக்குறிகாட்ட, குருமணி – நிறம்பொருந்திய மணியால், குயிற்றும் – பதிக்கப்பட்ட, செம்பொன் – சிவந்த பொன்னாற்செய்த, கோடியர் – சிகரத்தினை

ஓயர்ந்த, கொடிஞ்சித்தேரின் - மேன்மொட்டையுடைய தேரின்மேல், அரு வரை – அரிய மலையின்மேல், இவரும் – ஏறுகின்ற, சீற்றம் – கோபத்தை யுடைய, மடங்கல்ஏறு என்ன – ஆண்சிங்கம்போல், ஆர்த்தான் – எறிஞன்.

நளன் தேரிலேறினனெனக் கூட்டுக.

மாதர்க்குத் துன்பம் வருமாஞல் வலத்தோள்களும் வலக்கண்களும் துடிக்குமென்பது அடிநூலிற்காண்க. 17

ஊன்பயில்வடிவேலேந்தியுடன்றுவெம்போரிலேற்ற
தேன்பயிறெரியல்வேந்தர்நடுக்குறத்திசையினின்ற
கூன்பிறைக்கோட்டுகால்வாய்க்குஞ்சரம்வெருவிப்போட
வான்பொதிரெறியத்தெய்வவலம்புரிமுழக்கியிட்டான்.

இதனுல் நளன் சங்கத்தொனிசெய்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஊன் பயில்—மாமிசந்தங்கிய, வடிவேல் ஏந்தி – கூறிய வேற் படையைத்தாங்கி, உடன்று - கோபித்து, வெம்போரில் – வெவ்விய யுத்தத் தில், ஏற்ற - எதிர்த்த, தேன் பயில் - தேன்றங்குகின்ற, தெரியல் - மாலை யையுடைய, வேந்தர் – அரசர்கள், நடுக்குற - நடுக்கமடைய, திசையில்நின்ற, எட்டுத்திசையினும் நின்ற, கூன் — வளைவுபொருந்திய, பிறைக்கோட்டு- பிறையையொத்த கொம்பினையும், கால்வாய் – தொங்குகின்ற வாயினையு முடைய, குஞ்சரம் – யானைகள், வெருவியோட – பயந்தோடும்படி, வான்- ஆகாயம், பொதிர் எறிய – நடுக்கமடைய, தெய்வ வலம்புரி – தெய்வச்சங் கம், முழக்கி இட்டான் – தொனிசெய்தான் எ-று.

சங்கத்தொனியினுல் தான் எது எது எப்படி ஆதல்வேண்டுமென்று நினைக்கின்றூனே அது அது அப்படியாகத் தொனித்தலால் தெய்வவலம்புரி யென்றூர். 18

கொன்னவில்பரிதிவைவாட்கூற்றுயிருண்ணுங்கூற்றின்
மின்னகுவரிவிலேந்தும்விடலையைநோக்கியேற்ற
மன்னவரளவின்றின்னேனன்மணிவரைத்திணிதோள்வீக்க
மென்னினைத்தென்செய்தோமென்றிந்திரனடுங்கலுற்றான்.

இதனுல் இந்திரனடுக்கஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொல் – கொலைத்தொழிலை, நவில் – சொல்லப்பட்ட, பரிதி- சூரியனபோன்ற, வைவான் — கூர்மைபொருந்திய வாட்படையையும், கூற் றுயிர் — யமனுயிரையும் உண்ணும் — உண்ணுகின்ற, கூற்றின் - ஒரு யமன் போல், மின் நகு – ஒளியை வீசுகின்ற, வரிவிலேந்தும் — நெடிய வில்லையு மேந்திய, விடலையை — நளமகாராசனை, நோக்கி - பார்த்து, ஏற்ற-எதிர்த்த, மன்னவர் – அரசர்களது, அளவன்று — அளவுடையதன்று, இன்னேன்- இவ்வரசனுடைய, மணிவரை – அழகுபொருந்திய மலைபோன்ற, திணி - வலி மைபெற்ற, தோள் – புயங்களினுடைய, வீக்கம் — பாரிப்பு, (ஆதலினுல்)

என் நினைந்து – யாதை நினைந்து, என்செய்தோம் என்று – யாதுசெய்தோ மென்று, இந்திரன் – இந்திரனெனவன், நடுங்கல்உற்றான்-நடுங்கினன் எ-று.

நாம் பொருமையால் மூட்டிவிட்ட சண்டையிற் கொலைப்பழிவந்து அதிலும் நமக்கு அவமானமே வருதற்கு ஐயமில்லையென்று இந்திரன் நடுங்கல் உற்றனென்க. 19

கார்த்திரண்முழக்கமென்னக்கனைகுரன்மூரசமார்த்த
தூர்த்தனகடல்களேழுந்துரகதக்குரத்தின் றூளி
போர்த்தனவிசும்புபைம்பொற்கொடியொடுகுடையுமோங்கி
யார்த்தனவுவகைபொங்கித்துணங்கையிட்டலகையீட்டம்.

இனி இரண்டுபோட்டால் சேனைகளின் ஆரவாரஞ் சொல்லப்படுகின்றது.

இ-ள். கார்த்திரன் – மேகங்களினுடைய, முழக்கம் என்ன – சத்தம் போல், கனை – முழங்குகின்ற, குரல் – குரலையுடைய மூரசம் – பேரிகைகள், ஆர்த்த – ஒலித்தன, கடல்கள் ஏழும் – ஏழுசமுத்திரங்களையும், துரகதம்-குதிரைகளினுடைய, குரத்தின்றூளி – குளம்பினின்று மெழுகின்ற புழுதிகள், தூர்த்தன – தூர்த்துவிட்டன, விசும்பு – ஆகாயத்தை, பைம்பொன் கொடி ஓடு – பசிய பொற்கொடிகளோடு, குடையும்-குடைகளும், ஓங்கி – உயர்ந்து, போர்த்தன – மூடிக்கொண்டன, அலகை ஈட்டம் – பேய்க்கூட்டங்கள், உவகை பொங்கி – மகிழ்ச்சி மிகுந்து, துணங்கை இட்டு – கூத்தாடி, ஆர்த்தன – சத்தித்தன எ-று.

துணங்கை – இருகைமுடக்கிப் பழுப்புடை யொத்தியாடல். கார்த்திரண் முழக்கமென்ன மூரசமார்த்த வெனலால் அநேக மூரசங்களென்றும், குரத்தின்றூளி கடல்களேழுந் தூர்த்தனவெனலால் அநேகங் குதிரைகளென்றும், விசும்பைப் போர்த்தன வெனலால் அநேகங் குடைகள் சோடிகளென்றும், துணங்கையிட்டார்த்தன வெனலால் மாமிச முண்ணவந்த பேய்களநேகமென்றும் பெறப்பட்டன. 20

கூற்றெனவுறையார்த்துக்கொல்வினவரியேறென்ன
வேற்றவர்வெருவநெய்த்தோரிடையுறுதொழுகுங்கோட்டுச்
சீற்றமும்மதத்தினூழித்தீயையுமவிக்கும்வேங்கை
காற்றுறழ்களிறுதூண்டிக்கட்கனல்கதுவச்செல்வார்.

இ-ள். கூற்று என – யமனைப்போல், உரறி – ஆரவாரித்து, கொல்கொல்கின்ற, கினம் – கோபத்தையுடைய, அரியேறுஎன்ன – சிங்கவேற்றைப்போல், ஆர்த்த – கர்ச்சித்து, ஏற்றவர் – எதிர்த்தவர்கள், வெருவ – அஞ்ச, நெய்த்தோர் – உதிரமானது, இடையறுதொழுகும் – நீங்காதொழுகப்பெற்ற, கோட்டு – கொம்பையும், சீற்றம் – கோபத்தையுமுடைய, மும்மதத்தின் – மும்மதங்களால், ஊழித்தீயையும் – வடவாமுகாக்கினியையும், அவிக்கும் – அவிக்கப்பட்ட, வேகம் காற்று உறழ் – சண்டமாருதத்தை

யொத்த, களிறு தாண்டி - யானேயைச்செலுத்தி, கண் — விழிகளில், கனல் கதுவ — நெருப்புப்பற்ற, செல்வார் - செல்வார்கள் எ-று.

வீரரைத் தன் கோட்டாற் குத்திக் கொல்லுதலால் யானைக்கொம்பு நெய்த்தோரிடையரு தொழுங்கோடெனப்பட்டது. "வேலாண்முகத்த களிறு" என்ரூர் பிறரும். 21

ஒள்ளழல்கண்ணிற்காலவுயிர்ப்பலியுண்ணுங்கூற்றின்
வள்ளுறைவடிவாளேந்திவாய்மடித்தெயிறுதின்று
கள்ளவிழ்தும்பைசூடிக்கழுதுகைகொட்டியார்ப்ப
வள்ளிலைவீயிரப்பைம்பூணரசோடரசேற்ரூர்.

இதுமுதற் பத்துப் பாட்டுக்களால் இருதிறச்சேனைகளும் பொருதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். ஒள்—பிரகாசம்பொருந்திய, அழல் - நெருப்பு, கண்ணில்—கண்களினின்றும், கால — கொப்புளிக்க, உயிர்ப்பலி — உயிராகிய உணவை, உண்ணும் — உண்ணுகின்ற, கூற்றின் — யமன்போல், வள்உறை — நெருங்கிய உறையையுடைய, வடிவாள் ஏந்தி - கூரியவாளே யேந்திக்கொண்டு, வாய் மடித்து - உதட்டைமடித்துக்கொண்டு, எயிறுதின்று — பல்லைக்கடித்து, கள் அவிழ் — தேனொழுகுகின்ற, தும்பை சூடி — தும்பைமாலையைத்தரித்து, (இதுகண்டு) கழுது — பேய்கள், கை கொட்டி — கைகளைக்கொட்டி, ஆர்ப்பக்கர்ச்சிக்கும்படி, அள் இலை — அள்ளிக்கொள்ளும் இலைபோன்ற வயிரம், பைம்பூண் - பசிய பொன்னிற்பதித்த வச்சிராபரணத்தையுடைய, அரசர் ஓடு — அரசருடன், அரசர் — அரசர்கள், ஏற்ரூர் — எதிர்த்தார்கள் எ-று.

அநேகரைச் சேதித்து உயிரை யுண்ணுதலால் வாட்படைக்கு யமனே உவமை சொல்லப்பட்டது. வாய் மடித்தலும் பற்கறித்தலும் சினக்குறிப்பை வெளிப்படுத்துகின்றன. அதிரப்பொருதற்கு வந்த குறிப்புத்தோன்ற "கள்ளவிழ் தும்பைசூடி" யென்ரூர். நெடுங்காலம் போரில்லாமையால் உணவுகள் கிடையாதிருந்த வருத்தம் இப்பொழுது கெடுமென்னும் உவகை மிகுதியால் கழுதுகைகொட்டி யார்ப்பவென்ரூர். போரில்லாமை இந்திரப் படலத்தில் ஆங்கவண்மேலென்னும் பதினான்காம் பாட்டாலறிக. இது தன்மை நவிற்சியணி. 22

மண்ணிடைத்திரிவபோலமாதிரங்கடப்பதாவி
விண்ணிடைப்பறப்பவேழமருப்பிடைமிதித்துமீள்வ
கண்ணிமைபொருந்திற்காணக்கடிப்பினகலினப்பாய்மா
வெண்ணிலவயவர்தாண்டியெதிரெதிர்மலைந்துநிற்பார்.

இ-ள். மண் இடை — பூமியின்கண்ணே, திரிவபோல — திரிவன போல, மாதிரம் - திசைகளே, கடப்ப — தாண்டுவன, தாவி — பாய்ந்து, விண்ணிடை — ஆகாயத்திலே, பறப்ப - பறப்பன, வேழமருப்பு இடை - யானைக்கொம்பின்கண், மிதித்து — மிதித்து, மீள்வ — திரும்புவன, கண்-

கண்கள், இமைபொருந்தில் - இமைகோட்டுமாஞல், காணுக் கடுப்பின-காணக்கூடாத வேகத்தையுடையன, கலினம் பாய்மா - இத்தன்மையுள்ள கடிவாளம்பூண்ட தாவுகின்ற குதிரைகள், எண் இல - அளவற்றவைகளே, வயவர்தூண்டி - காலாட்கள்செலுத்தி, எதிர் எதிர் - நேர்நேராக, மலைந்து-போர்செய்து, நிற்பார் - நிற்பார்கள் எ-று.

கடப்ப, பறப்ப, மீள்வவென்னுங் கடுப்பினவாகிய பாய்மாவெனக் கூட்டுக. வேழமருப்பு இங்கே வெள்ளையானைக் கொம்பெனக் கொள்க இதவும் அவ்வணி. 23

சூழ்சுடர்வயிரவாளாலிந்திரன்றுமிக்குமுன்னம்
பாழியங்குடுமிக்குன்றஞ்சிறகொடுபறப்பவென்னக்
கேழ்கிளர்பரிதியேய்க்குங்கிளர்மணிக்கொடிஞ்சிமான்றே
ராழியோடாழிதாக்கவருஞ்சமர்தொடங்கிநிற்பார்.

இ-ள். சூழ் சுடர் — ஒளி சூழ்கின்ற, வயிரவாளால் வச்சிராயுதத்தால், இந்திரன் அமிக்கு முன்னம் — இந்திரனறுப்பதற்கு முன்னே, பாழி - அகன்ற, குடுமி - சிகரங்களையுடைய, குன்றம் — மலைகளானவை, சிறகுஒடு - இறகுடனே, பறப்ப என்ன - பறப்பனபோல், கேழ்கிளர் - செந்நிறமிகுந்த, பரிதி எய்க்கும் - சூரியனையொத்த, கிளர்மணி - ஒளிவிளங்கு மணிகள் பதித்த, கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய, மான்தேர்-குதிரை கட்டிய தேர்கள், ஆழியோடு ஆழிதாக்க — உருளைகளோடுருளைகள் மூட்ட, அருஞ்சமர்-அரியயுத்தத்தை, தொடங்கி - ஆரம்பித்து, நிற்பார்-நிற்பார்கள்.

ஒவ்வொருதேர், ஒவ்வொரு மலைபோல் நிறைதலால் அவைகட்குச் சிறகுடைய மலையுவமை சொல்லப்பட்டன. அநேகந்தேராதலால் நெருக்கம் பற்றி ஆழியோடாழி தாக்கவென்றார். அரசரோடரச ரெதிர்த்தலால் ஆழியோடாழி தாக்கினவென்க. 24

மோட்டிளமுலைகள்பாய்ந்தமருமத்தின்மூரியானைக்
கோட்டிணையுழக்கவெம்போர்க்கோளரியென்னச்சீறித்
தோட்டிணைகொட்டியார்த்துச்சுடர்நெடுங்குருதிவாளாற்
பூட்டியவோடைநெற்றிமத்தகம்போழ்ந்திட்டாரே.

இ-ள். மோடு - உயர்ச்சிபொருந்திய, இளமுலை — இளமைபொருந்திய தனங்கள், பாய்ந்த - பாயப்பெற்ற, மருமத்தின் — மார்பின்கண், மூரி - வலிமையையுடைய, யானைக்கோடுஇணை - யானையிரண்டு கொம்புகளும் உழக்க - குத்திக்கலக்க, வெம்போர் - வெவ்விய போர்செய்கின்ற, கோளரி என்ன - சிங்கவேற்றைப்போல், சீறி - கோபித்து, தோள்தணை - இரண்டு தோள்களையும், கொட்டி - தட்டி, ஆர்த்து — கர்ச்சித்து, சுடர் — ஒளியையுடைய, நெடு - நெடிய, குருதி - உதிரந்தோய்ந்த, வாளால் — வாட்படையால், ஓடைபூட்டிய — முகபடாத்தையணிந்த, நெற்றி - நெற்றியையுடைய, மத்தகம் - தலையை, போழ்ந்திட்டார் — பிளந்தார்கள் எ-று.

தமது மார்பிற் குத்திய யானைக்குச் சிங்கம் வலியாதலால், அரசரைக் கோளரியென்னச் சீறியென்றார். அரசர் சீறி ஆர்த்துவாளால் மத்தகம் போழ்ந்திட்டாரென்க. 25

கொலைத்தடங்கண்ணினல்லார்குறங்கின்மேற்குறங்குசேர்த்தி
முலைத்தடஞெமுங்கப்புல்லிக்கண்டுயின்முழவுத்தோளா
ரலைத்தமிழ்குருதிபொங்கவற்றவீழ்புழைக்கையற்றி
மலைக்கடாக்களிறுபுல்லிமண்ணிடைத்துஞ்சுகின்றார்.

இ-ள். கொலை – கொலைசெய்கின்ற, தட – விசாலம்பொருந்திய, கண்ணின் – கண்களையுடைய, நல்லார் – மாதர்களுடைய, குறங்கின்மேல் – தொடைகளின்மேல், குறங்குசேர்த்தி – தொடைகளைச் சேர்த்துக்கொண்டு, முலைத்தடம் – தனதடங்களைஞெமுங்கப்புல்லி – அழுந்தத் தழுவிக்கொண்டு, கண்துயில் – நித்திரைசெய்கின்ற, முழவு – மத்தளம்போன்ற, தோளார் – தோளையுடைய, அரசர்கள், அலைத்தமிழ் – அலைத்தமிழுகின்ற, குருதி பொங்க – உதிரமொழுக, அற்றவீழ் – அற்றுவிழுந்த, புழைக்கை – துதிக்கையின்மேல், ஏற்றி – தொடையை ஏற்றிக்கொண்டு, மலை – மலையையொத்த, கடாக்களிறு – மதயானையை, புல்லி – தழுவிக்கொண்டு, மண்ணிடை – பூமியிலே, துஞ்சுகின்றார் – நித்திரை செய்கின்றார்கள் எ-று.

மாதர் தொடைக்குத் துதிக்கையும், முலைக்கு யானையும், உவமையாதல்பற்றி அரசர் இறந்தும் முன்பு மாதரோடு துயிலுதல்போன்றிருந்தனரென்க. 26

கூற்றுடுங்கொம்மைகொட்டிக்குனிக்கும்வாளுழவர்வேகக்
காற்றினுற்பெண்ணையீன்றகருங்கனியுகுவதேபோல்
வேற்றிறல்வயவர்சென்னிவீழ்த்துவெங்கரிகணூற்றிச்
சீற்றவெம்மடங்கலேற்றிச்செருக்களத்துழக்கியிட்டார்.

இ-ள். கூற்று ஒடும் – யமனுடனே, கொம்மைகொட்டி – கைதட்டிக்கொண்டு, குனிக்கும் – கூத்தாடுகின்ற, வாள் உழவர் – வாட்படையையுடைய வீரர்கள், வேகம் காற்றினால் – சண்டமாருதத்தில், பெண்ணை ஈன்ற – பனைமாந்தந்த, கருங்கனி – கரியபழம், உருவதேபோல் – உதிர்வதுபோல், வேல் திறல் – வேற்படையின் றிறலையுடைய, வயவர் – படைவார்களுடைய, சென்னி – தலைகளை, வீழ்த்து – தள்ளி, வெங்கரிகள் – வெவ்விய யானைகளை, நூறிகொன்று, சீற்றம் – கோபத்தையுடைய, வெம்மடங்கல் ஏற்றில் – வெவ்விய சிங்கவேற்றைப்போல், செருக்களத்து – யுத்தகளத்தில், உழக்கி இட்டார் – கலக்கினார்கள் எ-று.

கொல்லுதலில் அவனே டொப்பாதலால் அவ்வுரிமைபற்றிக் கூற்றொடுங் கொம்மை கொட்டியென்றார். கொம்மை கொட்டலாவது – அகங்கை விரித்துக் கொட்டுதலாம். மயிருள்ள தலையாதலால் வயவர் சென்னிக்குப் பனையின் கருங்கனி உவமை சொல்லப்பட்டது. மடங்கலேற்றி னுழக்கியிட்டா ரெனலால் உவமையணி. 27

வயவரோரிருவர்தம்மில்வாளம்ர்விளைத்தலோடு
முயிர்துறந்தவற்குமாலெனதுமென்றும்பர்ப்போந்த
கயமலர்க்கண்ணிகாணக்காளையர்மாய்ந்துமண்ணிற்
புயலுறழ்கூந்தற்காகவானினும்போர்செய்கின்றார்.

இ-ள். வயவர் - படைவீரர்கள், ஓர் இருவர் - இரண்டுபேர், தம்மில்-தமக்குள்ளே, வாள் அமர் - வாட்போரை, விளைத்தலோடும் - செய்தவளவில், உயிர் துறந்தவன்கு - அவருளாவி நீங்கினவனுக்கு, மாலெனதும் என்று - மாலை தரிப்போமென்று, உம்பர்ப்போந்த - சுவர்க்கத்தினின்றும் வந்த, கயமலர் - தடாகத்திற்பூத்த மலரையொத்த, கண்ணி-கண்ணையுடைய அரம்பையானவள், காண - காணும்படி, காளையர் - வீரர்கள், மாய்ந்து - ஒருசேர இறந்து, மண்ணில் - பூமியிற்போய், புயல் உறழ் - மேகத்தையொத்த, கூந்தற்கு ஆக - கூந்தலையுடைய பெண்ணிற்காக, வானினும் - ஆகாயத்தின் கண்ணும், போர் - யுத்தத்தை, செய்கிறார் - செய்கிறார்கள் எ-று.

வானினு மென்பதில் உம்மை, இறந்தது தழீஇய வெச்சவும்மையாம் மண்ணிற் புயலுறழ் கூந்தல் - தமயந்தி, வானிற் புயலுறழ் கூந்தல் அரம்பையெனக் கொள்க. இம்மையில் ஒருபெண்ணைப் பலர்விரும்பிப் போர்செய்வதுபோல் மறுமையிலும் ஓரரம்பையை விரும்பியவர் பலராதலாற் பொருதனரென்க. எங்கணும் ஒருத்தியைப் பலர்விரும்பிப் போரேமுடியும் என்பதுகருத்து மாய்த்தம் போர்செய்கின்றாரெனலால் தொல்லுருப்பெறலணி.

குருதிகொப்பளிக்கும்வேலான் குங்குமவளறுழ்கு
மருமத்தில்வாளிமூழ்கமயங்கினன்றெளிதலோடும்
விரைமொய்த்தகூந்தறழைவிண்ணினின்றார்வத்தோடு
முருவத்தார்புனையவந்தவெண்டொடிமயங்கிநின்றாள்.

இ-ள். குருதி - உதிரத்தை, கொப்பளிக்கும் - உமிழ்கின்ற, வேலான்-வேற்படையையுடைய அரசனவன், குங்கும அளறு - குங்குமச் சேற்றில், மூழ்கும் - முழுகப்பெற்ற, மருமத்தில் - மார்பினிடத்தில், வாளிமூழ்க-பாணங்கள்புதைய, மயங்கினன் - மயக்கங்கொண்டவனாகி, தெளிதலோடும்-தெளிந்த வளவில், விரைமொய்த்த - வாசனையையுடைய, கூந்தல்தாழ-குழலானது அவிழ, விண்ணின் நின்று - ஆகாயத்தினின்றும், ஆர்வத்தோடும்-ஆசையுடன், உருவம்தார் - அழகியமாலையை, புனையவந்த - தரிக்கவந்த, ஒண்தொடி - அரமங்கையானவள், மயங்கி நின்றாள் - மயங்கி நின்றனள்.

கூந்தலவிழவெனலால் தினைப்பின்றி வீரைத்துவந்தனளென்க. இவன் உயிர் மனிததேகத்தைவிட்டு நீங்குமுன் மாலைசூட்டத் தெய்வமங்கைவந்து காத்திருப்பாளாலுல் விண்ணின்பம் பெறுதற்குப் போரின் மிக்க தில்லையென்பது கருத்து. 29

கான்படுமுருவப்பைந்தார்விதர்ப்பர்கோன்கன்னிவேற்க
ணூன்படாதுலையக்குத்தியுள்ளுயிர்பருகலாற்றேம்

31

வான்படாமின்னினேச்சும்வாளினுன்மாய்துமென்னுத்
தேன்படுதெரியல்வேந்தர்செருமலைந்தாவிநீத்தார்.

இ-ள். கான்படும் – வாசனையுண்டாகிய, உருவம் – அழகிய, பைந்தார்-பசியமாலையையுடை, வீதர்ப்பர்கோன் – வீமனுடைய, கன்னி – தமயந்தியினது, வேல்கண் – வேல்போன்ற கண்களானவை, ஊன்படாது – மாமிசம் படாமல், உலைய – வருந்தும்படி, குத்தி – குத்தி, உள்உயிர் – உள்ளாவியை, பருகல் – உண்பதை, ஆற்றேம் – பொறுக்கமாட்டோம், வான்படா – மேகத்திற்றோன்றுத, மின்னின் – மின்போல், ஒச்சும் – எறிகின்ற, வாளின்-வாட்படையால், மாய்தும் என்ன – மாய்வேமென்று, தேன்படு – தேனுண்டாகின்ற, தெரியல் – மலர்மாலையையணிந்த, வேந்தர் – அரசர்கள், செருமலைந்து – போர்புரிந்து, ஆவி – உயிரை, நீத்தார் – நீக்கினர்கள் எ-று.

மாதர்வீழி வாளினுங் கொடியதென்பது. "வெய்ய கூற்றருத் தெறி வேல் விலக்கினு, மெய்தமூழ் வினைத்தொட ரெண்ணிமாற்றினுந், தையலார் மூழுமதி முகத்திற்றங்கிய, மையகட் காலவேன் மாற்றலாகுமே." இதனுலறிக. 30

முழவுறழ்திணிதோள்வீரர்முழுமெயுமிரும்புண்மேய
விழிபெருங்குருதியாடியிளங்கதிர்ப்பரிதியேய்ப்ப
வழிகவுட்கடாத்தகால்வாயரசுவாவெருத்திற்றோன்றிப்
பொழிகணைமாரிசிந்தியகளிகுவிசும்புபோர்த்தார்.

இ-ள். முழவு உறழ் – மத்தளத்தையொத்த, திணி – வலிமை பொருந்திய, தோள்-புயத்தையுடைய, வீரர்-படைவீரர், முழுமெயும்-தேகமுழுதும், இரு – பெரிய, புண்மேய – புண்ணியத்திற்பொருந்திய, இழி – ஒழுகுகின்ற, பெருங்குருதி ஆடி – பெரிய வுதிரத்தில்மூழ்கி, இளங்கதிர் – இளமைபொருந்திய கிரணத்தையுடைய, பரிதி ஏய்ப்ப – சூரியனேயொப்ப, கவுள் – கவுளினிடத்திலே, அழி – வீழுகின்ற, கடாத்த – மதத்தையுடைய, கால்வாய்-தொங்குகின்ற வாயையுடைய, அரசு உவா – அரசயானையினது, எருத்தில்-பிடரியின்மேல், தோன்றி – ஏறி, பொழி – பொழிகின்ற, கணைமாரி-பாணமழைகளை, சிந்தி – சிதறி, அகல் – அகன்ற, இரு – பெரிய, விசும்பு-ஆகாயத்தை, போர்த்தார் – மறைத்தார்கள் எ-று.

அரசுவாவிற் கிலக்கணம்–சுயம்வரப் படலத்திற் "குளிர்மதி" என்னும் எழுபத்து மூன்றும் பாட்டுறையிற் காண்க. 31

அருமருந்தனையாள்சூட்டுமலங்கலந்தோளினுனைப்
பொருதிரைப்புணரிசூழ்ந்தபுவியினிலரசுசெல்லா
நிரையுளையரிமானேற்றைநிழல்சுளிதறுகட்சிற்ற
வரைபுரைகளிகல்யானைவளைந்தெனவளைந்துகொண்டார்.

இனி மூன்றுபாட்டால் அரசர் களனேயெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அருமருந்த அனையாள் – அரிய தேவாமிர்தத்தை யொத்த தமயந்தியானவள், சூட்டும் – தரித்த, அலக்கலந் தோளினனே – மாலைவிளங்கும் புயத்தையுடைய நளனே, பொருதிரை – மோதுகின்ற அலைகளையுடைய, புணரிசூழ்ந்த – கடலாற் சூழப்பட்ட, புவியினில் – பூவுலகத்து, அரசர் எல்லாம் – அரசரனைவரும், நிறை – வரிசைபெற்ற, உளை – புறமயிரையுடைய, அரிமான் ஏற்றை – சிங்கவேற்றை, நிழல்சுளி – நிழலைக் கோபிக்கின்ற, தறுகண் – அஞ்சாமையையும், சிற்றம் – கோபத்தையுமுடைய, வரைபுரை – மலையையொத்த, களிநல்யானை – களிப்பையுடைய நல்லயானைகள், வளைந்தென – வளைந்தனபோல், வளைந்துகொண்டார் – சூழ்ந்துகொண்டார்கள் எ-று.

இத்தனையரச ரெதிர்த்தும் நளனுக்கு இனையாக மாட்டாரென்பது தோன்ற "அரிமானேற்றைக் களிநல்யானை வளைந்தென வளைந்துகொண்டா" ரென்றார். இது உவமையணி. 32

நொறில்பறித்தடக்தேருந் நிகோன்சிலைகுழையவாங்கிப்
பொறியழற்பகழிதூவிப்பொங்குளைப்புரவிமான்றேர்
தெறுகதக்களிநல்யானினவுவாள்வயவரீட்டங்
குறைபடநூழிலாட்டிக்கூற்றெனவரசரார்த்தார்.

இ-ள். நொறில் – விரைவினையுடைய, பரி – குதிரைகட்டிய, தடவிசாலம்பொருந்திய, தேர் உந்தி – தேரைச்செலுத்தி, நோன்சிலை – பெரிய வில்லை, குழையவாங்கி – வளையவளைத்து, பொறி அழல் – அக்கினிப் பொறியையுடைய, பகழிதூவி – பாணங்களைவீசி, பொங்குஉளை – மிகுந்த புறமயிரினையுடைய, புரவி – குதிரைகளும், மான்தேர் – குதிரைகட்டிய தேர்களும், தெருகதம் களிநல்யானை – மிகுந்தகோபத்தையுங் களிப்பையுமுடைய யானைகளும், சினவுவாள் வயவர்ஈட்டம் – கோபிக்கின்ற வாட்படையையுடைய படைவீரர்கூட்டமும், குறைபட – குறையும்படி, நூழில் ஆட்டி – அமிதமான கொலைசெய்து, கூற்றுஎன – யமன்போல், அரசர்மன்னர்கள், ஆர்த்தார் – கர்ச்சித்தார்கள் எ-று.

தேருந்தி, சிலைவாங்கி, பகழிதூவி, நூழிலாட்டி, ஆர்த்தார் அரசரெனக்கொள்க. நூழிலாட்டாவது – பகைவர் – ஒடும்படி தன்மார்பிற்றைத் துக்கிடந்த ஆயுதத்தைப் பிடிங்கி யெறிதல். "களங்கழுமிய படையிரிய, வளங்கழித்த வேல்பறித் தோச்சின்று." "மொய்யகத்து வேந்தர் முரணினி யெண்ணுங்கொல், கையகத்துக் கொண்டான் கழல்விடலே, வெய்ய – விடுசுடர்சிந்தி விரையகலம்போழ்ந்த, படுசுடரெஃகம் பறித்து, கைவேல் களிற்றொடுபோக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்." இவற்றுலறிக. 33

தெண்டிரைப்பரவையேழுஞ்சேறுபட்டொழியத்தெண்ணீர் [பப்
மொண்டுகொண்டெழுந்தார்குன்றின் முகிற்குழாஞ்சொரிவதேய்ப்

புண்டலைவடிவேன்மன்னர்போர்முகழற்பகழிமாரி
மண்டமர்கடந்ததிண்டோண்மன்னன்மேற்பொழிந்திட்டாரே.

இ-ள். தெண்திரை – தெளிவுபொருந்திய அலைகளையுடைய, பரவை ஏழும் – கடல்களேழும், சேறுபட்டு ஒழிய – சேறுபட்டுநீங்க, தெள்நீர் மொண்டுகொண்டு – தெளிவாகியநீரை மொண்டுகொண்டு, ஓர்குன்றில்-ஒருமலையில், முகில்குழாம் – மேகக்கூட்டங்கள், சொரிவதுஎய்ப்ப – பொழிவதை யொப்ப, புண்தலை – ஊனைத்தலையிலுடைய, வடிவேல்மன்னர்-கூர்மையவேற்படையையுடைய அரசர்கள், பொறி அழல் – நெருப்புப்பொறி பறக்கின்ற, பகழிமாரி – பாணமழையை, மண்டு – நெருங்கிய, அமர்கடந்த-யுத்தத்திற்செயித்த, திண்தோள் – வலிமைபொருந்திய புயத்தையுடைய, மன்னன்மேல் – நளமகாராசன்மேல், பொழிந்திட்டார் – சொரிந்தார்.

பரவையேழுஞ் சேறுபட் டொழியத் தெண்ணீர்மொண்டு கொண்டென்னலால், அரசர்கள்வைப்பாக வைத்திருந்த பாணங்களையும் நளன்மேற் பொழிந்தன ரென்பதாயிற்று. 34

கொள்ளைகொண் டோரியுண்ணைக்குழாங்கொடுகவந்தமாட
வொள்ளழற்றறுகட்கூற்றமுயிருண்டுதெவிட்டிநிற்ப
வெள்ளவெங்குருதிபோர்ப்பவியன்பணைநிடதங்காக்கும்
வள்ளறன்புருவத்தோடும்வரிசிலைகுனிந்ததன்றே.

இனி இரண்டுபாட்டால் அவ்வரசரை நளனெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கொள்ளைகொண்டு – கொள்ளையாக வாரிக்கொண்டு, ஓரி உண்ண – நரிகளுண்ண, குழாங்கொடு – கூட்டங்கொண்டு, கவந்தம் ஆட – உடற்குறைகள் கூத்தாட, ஒள் அழல் – ஒளியையுடைய நெருப்புப்பொறி பறக்கின்ற, தறுகண் – அஞ்சாமையையுடைய, கூற்றம் – யமனைவன், உயிருண்டு – உயிரையுண்டு, தெவிட்டி நிற்ப – உமிழ்ந்து நிற்க, வெள்ளவெங்குருதி – வெப்பம்பொருந்திய உதிரவெள்ளமானது, போர்ப்ப – மூடிக்கொள்ள, வியன் – பெரிய, பணை – வயலையுடைய, நிடதம்காக்கும் – நிடத நாட்டைப் புரக்கின்ற, வள்ளல்தன் – நளனுடைய, புருவத்தோடு – புருவத்துடன், வரிசிலை – அவனது நெடியவில்லானது, குனிந்தது – வளைந்தது எ-று. அன்று, ஏ – இவ்விரண்டும் அசை நிலைகள்.

ஓரியுண்ண, கவந்தமாட, கூற்றமுயிருண்டு தெவிட்டிநிற்ப, குருதி போர்ப்ப வள்ளல்சிலை குனிந்ததெனக் கூட்டுக. புருவத்தோடும் சிலைவளைந்ததெனலால் உடனிகழ்ச்சியணி. 35

கூன்பிறைக்கோட்டுவல்லிற்குறைத்தகுழைத்துத்தெய்வ
ரூன்சுவைத்துண்ணும்வாளிவிடுத்ததுமொன்னலார்தங்
கான்படுதெறியன்மார்பம்போழ்ந்ததுதெரியக்காணார்
வான்படுபிணைக்குன்றேறுங்கிவயின்வயின்விளங்கக்கண்டார்.

இ-ள். கூன் – வளைவுகொண்ட, பிறை - பிறையையொத்த, கோட்டு வல்வில் – கொம்பிலுளாகிய வலியவில்லை, குழைத்ததும் – வளைத்ததையும், குழைத்த – வளைத்த, தெவ்வர் - பகைவருடைய, ஊன்சுவைத்த – மாமிசத்தைமென்று, உண்ணும் – உண்ணுகின்ற வாளிவிடுத்ததும் - பாணங்கள் விட்டதையும், ஒன்னலார்தம் – சத்துருக்களுடைய, கான்படு – மணமுண்டாகிய, தெரியல் – மலர்மாலையையணிந்த, மார்பம் – மார்பை, போழ்ந்ததும்- பிளந்ததையும், தெரியக்காணுர் – ஒருவருந் தெரியக்கண்டிலர், (யாதுகண்டனரெனில்) வான்படு – ஆகாயமளாவிய, பிணம் குன்று ஒங்கி – பிணமலைகளுயர்ந்து, வயின்வயின் - இடங்கடோறும், விளங்க – விளங்குதலை, கண்டார் – பார்த்தார்கள் எ-று.

புகையினுல் நெருப்புண்டென் றறிந்ததுபோற் பிணக்குன்றினுல்நளன் பொருதனனென் றறிந்தனரென்க. பிணக்குன்றேறுங்கி வயின்வயின் விளங்கக்கண்டாரென்னுங் காரியத்தினுற் காரணமாகிய நளனது வில்லாண்மை தோன்றுதலான் இது பூனைவிலிப் புகழ்ச்சியணி. 36

பொருசமத்துடன்றவீரர்பொன்றிடநின்றவேந்த
வெருவலுற்றியுமாறும்வேந்தர்கோன்வலியுநோக்கி
பெரிமணிப்பொன்செயோடையிளங்களிப்பகடுசூழக்
கரைபொருகடலந்தானைக்கலிங்கர்கோனமரிலெற்றான்.

இனி நளனொடு தனித்தனி அரசெதிர்த்துப் பொருதல்
சொல்லத்தொடங்கிக் கலிங்கநாட்டரச னெதிர்த்தல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். பொருசமத்த – பொருகின்றபோரில், உடன்றவீரர் – கோபித்தெதிர்த்த வீரர்கள், பொன்றிட - இறக்துவிட, நின்றவேந்தர் – நின்ற மற்றையரசர்கள், வெருவலுற்று – பயந்து, இரியுமாறும் - ஓடுந்தன்மையும், வேந்தர்கோன் - நளமகாராசனுடைய, வலியும் – வலிமையினையும், நோக்கி- பார்த்து, எரிமணி – ஒளியையுடைய மணிகள்பதித்த, பொன்செய் ஒடை- பொன்னுற்செய்த முகபடாத்தையுடைய, இளங்களிப்பகடுசூழ – இளமை பொருந்திய களிப்பையுடைய யானைகள் சூழ்ந்துவர, கரைபொரு – கரையோடு மோதுகின்ற, கடலந்தானை - சேனைசமுத்திரத்தையுடைய, கலிங்கர் கோன் – கலிங்கதேசத்தரசன், அமரில் – யுத்தத்தில், எற்றான் - எதிர்த்தான்.

எதிர்த்தவர்க ளிறத்தலையும் மற்றவேந்த ரோடுதலையும் நளன் வலிமையையுங் கண்ட கலிங்கதேசத்தரசன் அவனே டேற்றனனென்க. சேனையிற் குறைவிலனென்பது தோன்றக் கடலந்தானைக் கலிங்கர்கோனென்றார். 37

கந்தடுதறுகட்சீற்றக்கடாம்பொழிகளிநல்யானை
மந்தாகிரியாற்றூனைவாரிதியுழக்கிவானத்
திந்திரகுமரனென்னவிகல்புரிகிடதர்கோம்மா
னுந்துமான்றேரின்மேலுமொருகணைதெரிந்துவிட்டான்.

இ-ள். கந்தஅடு – கட்டுத்தறியை முரிக்கின்ற, தறுகண் – அஞ்சாமையையுடைய, சீற்றம் – கோபத்தையுடைய, கடாம்பொழி – மதம்பொழிகின்ற, களிநல்யானை – களிப்பையுடைய நல்லயானையாகிய, மந்தரகிரியால் – மந்தரமலையினால், தானைவாரிதி – சேனைசமுத்திரத்தை, உழக்கி – கலக்கி, வானத்து – விண்ணுலகத்து, இந்திரகுமரன் என்ன – இந்திரகுமரனைப் போல், இகல்புரி – போர்செய்கின்ற, கிடதர்கோமான் – நளமகாராசன், உந்த – செலுத்துகின்ற, மான்தேரின்மேலும் – குதிரைக்கட்டிய தேரின் மேலும், ஒருசார் – ஒருபாணத்தை, தெரிந்து – பார்த்து, விட்டான் – விடுத்தனன் எ-று.

இவன் விடும் பாணங்களுக்கும் வலிமைக்கும் தனது கோலென்றே நிகரென்பவன்போ லொருபாணம் விடுத்தனனென்க. உம்மை – சிறப்பு, யானையை மந்திரகிரியாகவும் தானையை வாரிதியாகவும் உருவகப்படுத்திச் சொல்லுதலால் உருவகவணி. 38

பைம்மலைத்தகன்றவல்குற்பாவையர்க்கருங்கணன்ன
தெம்மலைச்சினவேற்காளைசிலைவளைத்தொருகோலுந்தக்
கைம்மலைக்கோட்டில்வீழ்ந்தகலிங்கர்கோனமராதர்
வெம்முலைக்கோட்டில்வீழ்ந்துவிண்ணிடைவிளங்கினானே.

இ-ள். பைம்மலைத்து – பாம்பின் படத்துடன் பொருது, அகன்றவிரிந்த, அல்குல் – அல்குலையுடைய, பாவையர்க்கு – மாதர்க்கு, அருங்கண் அன்ன – மன்மதனையொத்த, தெவ் – சத்துருக்களை, மலை – பொருகின்ற, சினவேல்காளை – கோபம்பொருந்திய வேலையுடைய நளனவன், சிலைவளைத்து – வில்லைவளைத்து, ஒருகோல் உந்த – ஒருபாணஞ் செலுத்த, கைம்மலைக்கோட்டில் – யானைக்கொம்பின்மேல், வீழ்ந்த – விழுந்த, கலிங்கர் கோன் – கலிங்கதேசத்தரசனவன், அமர்மாதர் – அரம்பையருடைய, வெம் – விருப்பைச்செய்கின்ற, முலைக்கோட்டில்வீழ்ந்து – முலையாகிய யானைக்கொம்பின்மேல் விழுந்து, விண்ணிடை – தெய்வலோகத்தில், விளங்கினன் – பிரகாசித்தான் எ-று.

கலிங்கதேசத்தரசன் அனேக பாணங்கள் பிரயோகித்தும் அதனால் நளனிறவாமல் இவன்விட்ட ஒரு பாணத்தால் அவன் இறத்தலால் அப்பலவும் இவ்வொன்றை நிகராமை விளக்கி நின்றது நளனுடைய பாணத்தாலறுபட்டு யானையின் கொம்பில் வீழ்ந்த வளவிலேதானே அரம்பையருடைய தனத்தைப் புல்லி அதனுற் சிறப்புற்று நின்றனனென்க. கைம்மலைக் கோட்டில் வீழ்ந்தது – மனிதவுடல், வெம்முலைக்கோட்டில் வீழ்ந்தது – அவனது தெய்வவுட லெனக்கொள்க. விரைவுபற்றி அக்கோட்டில் வீழ்ந்து உடனே இக்கோட்டில் வீழ்ந்தன னென்றார். 39

களத்திடைக்கலிங்கர்கோமான்கவிழ்தலுங்கடைக்கண்சேப்ப
வளத்திடைவெகுளிபொங்கவுழிவெங்காலினேடி

வளைத்தனன் சேனையோடும்வார்சிலைவணக்கிவெம்போர்
விளைத்தனன் கூற்றுமஞ்சவெந்திறன்மகதர்கோவே.

இனி மூன்றுபாட்டுக்களாலே மகததேசத்தரசன் எதிர்த்திறத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். களத்திடை — யுத்தகளத்திலே, கலிங்கர் கோமான் — கலிங்க தேசத்தரசன், கவிழ்தலும் — இறந்தவளவில், கடைக்கண்சேப்ப - கடைக் கண்கள் சிவக்க, உளத்திடை — மனத்தில், வெகுளிபொங்க — கோபமிக, ஊழிவெம்காலின் — யுகமுடிவிலுண்டாகிய வெவ்விய காற்றுப்போல், ஓடி-ஓடி, வளைத்தனன் - வளைத்தனனாகி, சேனையோடும் — சேனையுடனே, வார் — நெடிய, சிலைவணக்கி — வில்லைவளைத்து, கூற்றும் அஞ்ச - யமனு மஞ்சும்படி, வெம்திறல் — வெவ்வியதிறலையுடைய, மகதர்கோன் - மகத தேசத்தரசன், வெம்போர் - வெவ்வியபோரை, விளைத்தனன் — செய் தனன் எ-று.

மகதர் கோவானவன் கடைக்கண் சேப்ப, வெகுளி பொங்க, ஓடி வளைத்தனனாகி விளைத்தனனெனக் கூட்டுக. 40

முரிதிரைப்பரவைவேலைமுகட்டெழுந்தகல்வான்மேய
விரிகதிர்மதியந்தீண்டும்வெள்ளெயிற்றரவமென்னக்,
குருதிகொப்பளிக்கும்வேலான்கொற்றவெங்குடையின்மீது
வரிசிலைகுழைத்துவெய்யவடிக்கணையொன்றுவிட்டான்.

இ-ள். முரி — வளைந்த, திரை - அலையையுடைய, பரவை — பரப்பை யுடைய, வேலைமுகட்டெழுந்த — கடலின தச்சியிலுதித்த, அகல்வான் மேய — அகன்ற ஆகாயத்தின்கணுள்ள, விரிகதிர்மயம் — விரிகின்ற கி ரணங்களுடைய சந்திரனை, தீண்டும் — தொடுகின்ற, வெள் எயிறு அரவம் என்ன - வெள்ளிய பல்லையுடைய சர்ப்பம்போல், குருதிகொப்பளிக்கும்-உதி ரத்தை யுமிழ்கின்ற, வேலான்-வேற்படையையுடைய நளனவன், கொற் றம் - சயத்தைத் தருகின்ற, வெண்குடையின்மீது — தவள சத்திரத்தின் மேல், வரிசிலை குழைத்து — நெடியவில்லை வளைத்து, வெய்ய — கொடிய, வடி க்கணையொன்று - கூரியகணையொன்றை, விட்டான் — விடுத்தனன் எ-று.

மதியந்தீண்டும் வெள்ளியிற் றரவமென்னல் "கண்டது மன்னுமொரு நா ளவர்மன்னுந் — திங்களைப் பாம்புகொண்டற்று." இதனாலறிக. வெண்கு டைக்கு மதியையும் பாணத்திற்குச் சர்ப்பத்தையும் ஒப்புச்சொல்லுதலால் உவமையணி. 41

சுரும்பிமிர்தும்பைவேய்ந்தசுடர்முடிமகதர்கோமான்
விரும்பலர்செகுக்கும்வேலான்விற்பழுத்துமிழும்வெய்ய
சரம்படவற்றுவீழ்ந்தன்னுடற்குறைந்ருட
வரம்பையோடுநோக்கியணிமணிமுறுவம்பூத்தான்.

இ-ள். சுரும்பு-வண்டுகள், இமிர் – ஒலிக்கின்ற, தும்பைவேய்ந்த – தும்பைமாலை தரித்துவந்த, சுடர்முடி-கிரணங்கள் வீசுகின்றகிரீடத்தையுடைய, மகதர்கோமான் – மகததேசத்தரசனனவன், விரும்பலர் – சத்துருக்களை, செகுக்கும் – கொல்லுகின்ற, வேலான் – வேற்படையையுடைய நளனது, வில்பழுத்து – வில்லானது பழுத்து, உமிழும் – உமிழுகின்ற, வெய்யசரம் பட – வெவ்விய பாணங்கள்பட, (அவைகளால்) அற்றுவீழ்ந்த – துணிந்து வீழ்ந்த, தன் – தன்னுடைய, உடல்குறை – கவந்தமானது, நின்று – நின்று, ஆட – கூத்தாட, அரம்பையரோடு – தெய்வமாதரோடு, நோக்கி – பார்த்து, அணி – அழகிய – மணி – முத்தையொத்த நகைதோன்ற, முறுவல் பூத்தான்-நகைத்தனன் எ-றி.

மகததேசத்தரசன் தெய்வவுருப்பெற்றமையால் அதிற்குறைந்த மனிதவுருவை யிகழ்ந்து நகைத்தனனென்க. தன்னுடற்குறை நின்றாடநோக்கியென்றலால், தறிபட்ட வுடலாடி நிலத்தின் வீழுமுன்னமே தெய்வவுருப் பெற்றனனென்னும் விரைவுதோன்றியது. நாணமுற்றவர் உடன் சிரித்திடுவதென்பது இயல்பாகலால் தனக்கு மாலைசூட்டிய அரம்பையரோடுநோக்கியணிமணி முறுவல் பூத்தானென்றார். 42

அமைப்பருந்தறுகட்சிற்றத்தாளரிமாறுபோல்வான்
சமர்த்தலையிகலினேற்றதரியலர்சென்னிவீழத்
தமித்திடுங்குருதியொள்வான்சுடரெழுவித்திர்ப்பநோக்கி
யிமைத்தலும்வளவர்கோனேவெருவனீயுகென்றான்.

இதனும் சோழனெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அமைப்பரும் – அமைத்தற்கரிய, தறுகண் – அஞ்சாமையையும், சிற்றத்தை – கோபத்தையும், ஆள் – ஆளுகின்ற, அரியேறுபோல் வான்-சிங்கவேற்றையொத்த நளனனவன், சமர்த்தலை – யுத்தகளத்தில், இகலின் எற்றபகையினெதிர்த்த, தரியலர் – சத்துருக்களுடைய, சென்னிவீழ-தலைகள் வீழும்படி, தமித்திடும் – தறித்திடுகின்ற, குருதி – உதிரத்தையுடைய, ஒள்வாள் – ஒள்ளிய வாட்படையை, சுடர் எழ – ஒளிதிகழும்ப, விதிர்ப்ப – அசைக்க, நோக்கி – அதுகண்டு, இமைத்தலும் – இமைகோட்டுமளவில், வளவர் கோனே – சோழனே, வெருவல் – அஞ்சாதே, நீ – நீ, ஏகுக என்றான்-போவென்றான் எ-று.

நளன் வாளசைத்ததைக் கண்டு கண்ணிமை கோட்டலால் நம்மோடு பொருதற்கு அஞ்சினன். இவ்வேடு பொறுவது தருமமன்றென்று சோழனைப்பார்த்து அஞ்சாதே! நீபோவென்றான். அதுதோல்வியென்பது "விழித்தகண்வேல் கொண்டெறிய வழித்திமைப்பி, னேட்டன்றே வன்கணவர்க்கு" இதனாலறிக. 43

கொய்யுளைப்புரவித்தூண்டிக்கொடுமரங்குழைபவாங்கி
வெய்யவெம்பகழிமாரிவிண்ணகம்புதைப்பத்தூவி

பையன்மெய்க்கவசமீதுமைங்கணிதறியார்த்தான்
மைபறுசிறப்பின்மிக்கவஞ்சியம்பதிக்குவேந்தே.

இதனால் சேரமான் எதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மை அறு – குற்றமற்ற, சிறப்பின்மிக்க-சிறப்பினாலுயர்ந்த, வஞ்சியம்பதிக்கு – வஞ்சியென்னு நகரத்திற்கு, வேந்து – அரசனுகிய சேரமான், கொய் உளை – கொய்துகட்டிய புறமயிரினையுடைய, புரவி – குதிரையை, தூண்டி – செலுத்தி, கொடுமரம் – வில்லை, குழையவாங்கி – வளையவளைத்து, வெய்ய – கொடிய, வெம்பகழிமாரி – வெவ்விய பாணமழையை, விண்ணகம் – ஆகாயமுழுவதும், புதைப்ப – மூடும்படி, தூவி – இறைத்து, ஐயன் – நளனுடைய, மெய்க்கவசம்மீதும் – சீராவின்மேலும், ஐயங்கணை தூவி – ஐந்து பாணம்விட்டு, ஆர்த்தான் – கர்ச்சித்தான் எ-று.

நளன்மேல் ஐங்கணை தூவின னெனலாற் பகழிமாரி விண்ணகம் புதைப்பத் தூவியென்பதைச் சேனைகண்மே லெனக்கொள்க. 44

சில்லியகடந்தேருந்திக்திண்சிலைகுழையவாங்கிக்
கொல்லியவெழுந்தகூற்றிற்கொடியவெம்பகழிதூவி
மல்லடுதோளுமார்பும்வழிபெருங்குருதியோடும்
வில்லவன்வெருவியோடவெஞ்சமமுடற்றினானே.

இ-ள். சில்லி – உருளையையுடைய, தட – விசாலம்பொருந்திய, தேர் உந்தி – தேரைச்செலுத்தி, திண் – வலிமைபொருந்திய, சிலை – வில்லை குழைய வாங்கி – வளைய வளைத்து, கொல்லிய வெழுந்த – கொல்லவெழுந்த, கூற்றின் – யமன்போல், கொடிய – கொடியவாகிய, வெம்பகழி – வெவ்விய பாணங்களை, தூவி – விட்டு, மல்அடு – மற்போர்செய்கின்ற, தோளும்-புயங்களிலும், மார்பும் – மார்பிலும், வழி – வழிகின்ற, பெருங் குருதியோடும்-அதிக உதிரத்தோடும், வில்லவன் – சேரமான், வெருவி ஓட – அஞ்சியோடும்படி, வெஞ்சமம் – வெவ்விய போரை, உடற்றினான் – செய்தான் எ-று.

வில்லவனுயினும் நளன் வில்லுக்குத் தோற்றோடினமை தோன்றச் சேரமானுக்குப் பலபேரிருக்க வில்லவனென்றார். வில்லவன்-விற்கொடியையுடையவன், இன் – உவமவுருபிடைச்சொல். 45

நிறங்கிளர்வயிரப்பைம்பூணிடதர்கோன்மொடுத்தகோலிற்
கறக்கெனத்திரியும்வெய்யகனிமான்றடக்கைதர்வீழ
மறங்கிளர்பரிதிவேலுமானமுந்துறத்துகாணூற்
புறங்கொடுத்திரியல்போனன்புட்கரத்தீவின்வேந்தன்.

இதனாற் புட்கரத்தீவரச னெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். புட்கரம் தீவின் வேந்தன் – புட்கரத் தீவையாளு மரசனுவன், நிறம் கிளர் – ஒளி விளங்குகின்ற, வயிரப் பைம்பூண் – வச்சிரபர

ணத்தையுடைய, நிடதர்கோன்—நளமகாராசன், தொடுத்த—பிரயோகஞ் செய்த, கோலில்—பாணத்தால், கறங்கு எனத் திரியும்—காற்றடிபோற் றிரிகின்ற, வெய்ய—வெவ்விய, கலினம் மான்—கடிவாளம்பூண்ட குதிரை கட்டிய, தடம்—விசாலம்பொருந்திய, தேர்வீழ—இரதம்வீழ, மறம்கிளர்—மறம்குந்த, பரிதிவேலும்—சூரியனையொத்த வேற்படையையும், மானமும்—அபிமானத்தையும், துறந்து—விட்டு, நாணமல்—நாணத்தால், புறங்கொடுத்த—முதுகுகாட்டி, இரியல்போனன்—ஓடிப்போனன் எ-று.

மானமும் ஒரு ஆபரணம்போ லணிபவனுதலின் புட்காத்தீவின் வேந்தை, வேலுமானமுந் துறந்தபோனனென்றார். "மானவருங்கலனீக்கி" என்றார் பிறரும். துறக்கப்படாத தொன்றுகலின் "மானமும்" என்று விதந்தது. அது "சூழுதல்வேண்டுந் தாள்கடொழுதிடல்வேண்டு மங்கை நானிவற் காளாகி - வாழுதல்வேண்டு நெஞ்சந் தடுத்தது மானமொன்றே" என வரூஉங் கந்தபுராணச் செய்யுளானு முணர்க. 46

கலி விருத்தம்.

பாகடுவெங் திறற்பருமயானைமேல்
வேகவெங்கலினமாவெள்ளஞ்சூழ்வரச்
சாகத்தீவுக்கிறைசமரிஞர்ப்பொடு
தோகையர்கண்ணெனப்பகழிதூவினன்.

இதனுல் சாகத்தீவரசன் எதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். பாகு—பாகனை, அடு—கொல்லுகின்ற, வெம்திறல்—வெவ்விய திறலையுடைய, பரும யானைமேல்-ஒப்பனைசெய்த யானையின்மேல், வேகம்—வேகத்தையுடைய, வெம் கலினமாவெள்ளம்—வெவ்விய கடிவாளம்பூண்ட குதிரைக் கூட்டங்கள், சூழ்வர—தன்னைச் சூழ்ந்து வரும்படி, சாகம் தீவுக்கு இறை—சாகத்தீவுக்காசனனவன், சமரின் ஆர்ப்பொடு—யுத்தத்திஞ்ர வாரத்துடன், தோகையர்கண்ணென—மாதர் விழிகள்போல், பகழி—பாணங்களை, தூவினன்—சிந்தினன் எ-று.

மாதர் கண்கள் பாணங்களினும் கொடியனவாகலால் "தோகையர் கண்ணெனப் பகழிதூவினன்" னென்றார். பாகு என்னும் பண்புப்பெயர் பண்புக்காயிற்று. இது உவமேயமாகிய கண்களை உவமானமாகிய பாணங்களுக்கு ஒப்புமை சொல்லலால் எதிர்மறையணி. 47

தணங்கையிட்டலகைகடுள்ளியார்த்தெழ
வணங்கெயிற்றரவென வழலும்வாளிகள்
வணங்குவிற்கால்வளைத்தெய்துமாற்றினு
ணிணங்கமழ்குருதிவேனிடதர்வேந்தனே.

இ-ள். தணங்கை இட்டு—கையைக் கொட்டி, அலகைகள்—பேய்கள், கள்ளி—குதித்து, ஆர்த்து—ஒலித்து, எழ—எழும்ப, அணங்கு—வருத்தத்

தைச்செய்கின்ற, எயிறு - பல்லையுடைய, அரவுஎன - சர்ப்பம்போல், அழலும் — சுடுகின்ற, வாளிகள் — பாணங்களை, வணக்கு — வளைகின்ற, வில்-வில்லை, கால்வளைத்து — காலிலூன்றி வளைத்து, எய்து - பிரயோகஞ்செய்து, மாற்றினன் — தீக்கினன், நிணம் கமழ் — கொழுப்பு நாறுகின்ற, குருதிவேல் — உதிரந்தோய்ந்த வேற்படையையுடைய, கிடதர்வேந்தன்-நளமகாராசன் எ-று. ஏகாரம் — ஈற்றசை.

இப்போரில் நமக்கு நல்லவுணவு கிடைக்குமென்று அதிக மகிழ்ச்சியாற் பேய்கள் கர்ச்சித்தலால் துணங்கையிட் டலகைகடுள்ளி யார்த்தெழுவென்றார். அரவைப்பாணத்துக்கும் எயிற்றை அதன்மூனைக்கும் உவமையாகக் கொள்க. 48

பாற்றினந்தொடர்வதுபகைவருன்சுவைத்
தூற்றிருந்திடையருதுதிரங்கால்வது
கூற்றெடுங்தோழமைகொள்வதாயதார்
மாற்றருங்கொடியவேன்மன்னன்வாங்கினன்.

இ-ள். பாறு இனம் தொடர்வது - பருந்துக்கூட்டங்கள் தொடர்வதும், பகைவர் — சத்துருக்களுடைய, ஊன் — மாமிசத்தை, சுவைத்து-மென்று, ஊற்று இருந்த — ஊற்றுகவிருந்த, இடை அறுத - ஒழியாமல், உதிரம் கால்வது — உதிரங்கக்குவதும், கூற்றெடும் - யமனுடன், தோழமை கொள்வது ஆயது — சினேகங்கொள்வதாகியதுமாகிய, ஓர் — ஒரு, மாற்ற அரும் — தடுப்பதற்கரிய, கொடியவேல் - கொடியவேற்படையை, மன்னன்-நளனவன், வாங்கினன் — கைக்கொண்டான் எ-று.

ஒருவர்மேல்விட்டால் அதன்கொடுமை சொல்ல வேண்டுவதில்லை யென்பது தோன்ற, சுபாவத்தில் இம் மூக்குணங்களையு முடையவே லென்றார். 49

அயிலெடுத்தெறிதலுமடர்க்குமொன்னலார்
வயிறெறிதவழ்ந்ததுவயிரவாட்படை
செயிரறவேங்தியசாகத்தீவிறை
யுயிர்துறந்தகனுலகம்புக்கதே.

இ-ள். அயில் எடுத்து எறிதலும் - வேற்படையை யெடுத்து வீசிய வளவில், அடர்க்கும் - பொருகின்ற, ஒன்னலார் — பகைவருடைய, வயிறு-வயிறானது, எரி — நெருப்பிலுல், தவழ்ந்தது - தவழ்ந்திடப்பட்டது, வயிரம் வாள்படை - வச்சிரவாளை, செயிர்அற — குற்றமற, வந்திய — தாங்கப் பெற்ற, சாகத்தீவு இறை - சாகத்தீவுக்கரசனுடைய, உயிர் — உயிரானது, துறந்து — உடலைவிட்டு, அந்தகன் உலகம் — யமலோகத்தில், புக்கது - புகுந்தது எ-று.

வயிறெறி தவழ்தலால் அடர்க்கு மொன்னல ரென்றது, சாகத்தீ வரசனுடு வந்து எதிர்த்தவரை யெனக்கொள்க. நிர்யுதனுகி யிறந்தில னென்பதுதோன்ற "வயிரவாட்படை செயிரறவேங்கியசாகத் தீவிறை" யென்றார்.

தூம்புடைக்கரமலையெருத்திற்றோன்றுபு
காம்பிலிக்கரசன்வில்வாங்கிக்காய்கணை
தேம்பொதிசெழுமலர்த்தெரியன்மார்பினன்
வாம்பரித்தேர்மிசைமழையிற்றூவினன்.

இதமுத லேழுபாட்டுகளாற் காம்பிலிதேசத்தரச னெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தூம்பு உடை – துவாரத்தையுடைய, கரமலை – கையையுடைய மலைபோன்ற யானையினது, எருத்தில் – பிடரியின்மேல், தோன்றுபு-தோன்றி, காம்பிலிக்கு அரசன் – காம்பிலி நாட்டுக் கரசனவன், வில் வாங்கி – வில்லைவளைத்து, காய் - கொல்லாகின்ற, கணை – பாணங்களை, தேம் – வாசனை, பொதி - நெருங்கிய, செழுமலர் – செழுமையுள்ள மலராற் றொடுத்த, தெரியல் – மாலையையணிந்த, மார்பினன் – நளனது, வாம்-தாவுகின்ற, பரி – குதிரைகட்டிய, தேர் மிசை – தேரின்மேல், மழையில்-மேகம்போல், தூவினன் - பிரயோகித்தான் எ-று.

அதிக்கை யொன்று தவிர மற்றையுடல் மலைபோ லிருத்தலால் யானை யைக் கரமலையென்றார். காம்பிலிதேசத்தரசன் நளன்தேரின்மேற் பாணந் தூவினனெனக் கூட்டுக. 51

சிலையுயிர்த்துயிர்ப்பலிகவருந்திண்கணை
கொலைவடிவேலினன்றுரப்பக்குஞ்சர
மலையெனக்கவிழ்தலுமடங்கலேறெனப்
புலவுவாளொடுமவன்புவியிற்பாய்ந்தனன்.

இ-ள். சிலை உயிர்த்து - வில்லால் விடப்பட்டு, உயிர்ப்பலிகவரும்-உயிராகிய வுணவை யுண்கின்ற, திண்கணை – வலிமைபெற்ற பாணங்களை, கொலைவடிவேலினன் – நளனவன், துரப்ப – செலுத்த, குஞ்சரம் – (ஏறிவந்த தன்) யானையானது, மலை எனக்கவிழ்தலும் – மலைபோற் கவிழ்ந்து வீழ்ந்தவளவில், உடங்கல் ஏறு என-சிங்கவேற்றைப்போல், புலவு-புலாலுற்றத்தையுடைய, வாள் ஒடும் – வாட்படையுடன், அவன் – அவ் வரசனவன், புவியில் - பூமியிலே, பாய்ந்தனன் – குதித்தனன் எ-று.

தன்னைவிட்டுத் தன் தேரின்மேற் பாணம் விடுத்தலால் நளனும் அவ் வரசனேறிவந்த யானைமேற் பாணம் விடுத்து அதைக் கொன்றனனென்க. "மலையென" வெனலாலுவமையணி. 52

வார்மயிர்க்கேடகம்பற்றிவாள்விதிர்த்
தூர்சினக்களிற்றணியுழக்கியொய்யெனப்
போர்முகத்துரறிவெம்புலியின்போத்தெனச்
சாரிகைதிரிந்தனன்றறுகணாளனே.

இ-ள். வார் – நெடிய, மயிர்க்கேடகம் - மயிரையுடைய தோற்கேடகத்தை, பற்றி – பிடித்து, வாள் விதிர்த்து – வாளை யசைத்து, ஊர் – நடக்

கின்ற, கினம் — கோபத்தையுடைய, கள்றுஅணி — யானைவகுப்பை, உழக்கி-கலக்கி, ஒய் என - விரைவில், போர்முகத்து — யுத்தமுகத்தில், உரறி — கர்ச்சித்து, வெம்புலியின் போத்து என — வெய்ய புலிப்போத்துப்போல், சாரிகை திரிந்தனன் - வட்டமாகத்திரிந்தான், தறுகணுளன் — அஞ்சத்தக்க வைகட்கு அஞ்சாத காம்பிலிதேசத் தரசனுனவன் எ-று.

பாணங்கள் தைப்பினும் அழிவிலாதிருத்தற்கு மயிருள்ள தோலினாற் செய்தபற்றி "மயிர்க்கேடக" மென்றார். ஒரு குற்றஞ் செய்தவர்க்குப் பல்குற்றஞ் செய்பவர்போல் தானேறிவந்த ஒரு யானையைக்கொன்ற களனது களிற்றணி யுழக்கிச் சாரிகை திரிந்தனனென்றார். புலியின் போத்தென வெனலால் உவமையணி. 53

பாரினின்றவனமர்புரியப்பாய்பரித்
தேரினின்றடுகணைச்செருவிளைத்திட
ரூருடைவயவர்போர்த்தருமமன்றெனக்
கூர்நுதிவாளுரீஇக்குப்புற்றனனரோ.

இ-ள். பாரில் நின்று — பூமியிலிருந்து, அவன் அமர்புரிய — அவ்வரசன் போர்புரிய, பாய் — தாவுகின்ற, பரித்தேரின் நின்று — குதிரைகட்டிய தேரிலிருந்து, அடுகணை - கொல்லாநின்ற பாணங்களைக்கொண்டு, செருவிளைத்திடல் — யுத்தஞ்செய்தல், தார் உடை - வெற்றி மாலையையணிந்த, வயவர் — படைவீரருடைய, போர்த்தருமம் அன்றனன — யுத்தத்தினுடைய தருமமன்றென்று, கூர் - கூரிய, நுதி — நுனியையுடைய, வாள்உரீஇ-வாளையுருவிக்கொண்டு, குப்புற்றனன் — குதித்தான் எ-று. அரோ - அசை.

களன் அறநிலைப்போர் செய்பவனுகலால் தன்னுடைதிர்த்த காம்பிலிதேசத் தரசனுனவன் பூமியிலிருத்தல்பற்றித் தானும் பூமியிற் குதித்தனனென்றார். 54

மன்பெருங்கேடகந் திரித்துவானிடை
மின்பிறழ்ந்தென்னவாள்விதிர்த்துநோக்கினை
மென்புகெக்குள்ளுடைந்திரியவேற்றனர்
வென்பிறரறிகிலாத்திறல்கொள்வீரரே.

இ-ள். மன் - நிலைபெற்ற, பெருங்கேடகம் — பெரிய பரிசையை, திரித்து — சுழற்றி, வான் இடை - ஆகாயத்தின்கண், மின்பிறழ்ந்தது என்ன-மின்ன லசைந்தாற்போல், வாள்விதிர்த்து-வாட்படையை யசைத்து, நோக்கினர் — பார்த்தவர்களுடைய, என்பு — எலும்புகள், நெக்கு - நெக்குவிட்டு, உள் - உள்ளே, உடைந்து இரிய - உடைந்தபோகும்படி, வெம் - தம்முதலை, பிறர் - பிறரால், அறிகிலா — அறியப்படாத, திறல்கொள் — வலிமையைக்கொண்ட, வீரர் - அரசர்கள், ஏற்றனர் — எதிர்த்தனர் எ-று.

வெம் - என்பதில் நகரவொற்றுப் பகரத்தோடு மயங்காமையின் வழக்கப்படி எதுகை நோக்கி னகரவொற் றெழுதப்பட்டதாம். "வெண்பிறரறி

லோ'' வென்பதனுல் ஒரிடத்திலும் இவ்விருவரும் தோற்றவல்லவரென்பது கருத்து. இது உவமையணி. 55

தெறுஞ்சினந்தலைக்கொளீஇச்செங்கண்டீயுகப்
பிறங்குபொற்கேடகம்பிறழவெற்றியு
மறங்கிளர்வயிரவாள்வாளிற்றுக்கியுங்
கறங்கெனத்திரிந்தனர்காளைவீரரே.

இ-ள். தெறும் – அழிக்கின்ற, சினம் – கோபமானது, தலைகொளீஇ-அதிகரித்து, செம்கண் – சிவந்த கண்களினின்றும், தீஉக – நெருப்புதிர, பிறங்கு – உயர்ந்த, பொன்கேடகம் – அழகிய கேடகத்தை, பிறழ – நீங்கும் படி, எற்றியும் – எறிந்தும், மறம்கிளர் – கொலைத்தொழிலில்மிகுந்த, வயிரம் வாள் – வச்சிரவாளே, வாளிற்றுக்கியும் – வாளினலெறிந்தும், கறங்கு என-காற்றுழிபோல், காளைவீரர் – அரசர்கள், திரிந்தனர் – திரிந்தார்கள் எ-று.

இவ்விரண்டு பாட்டானும் ஒருவர்க்கொருவ ருயர்வு தாழ்வுசொல்லாமையால் வாட்போரில் இவ்விருவரு மொத்தனரென்பதாம். 56

கோட்புலிப்போத்தெனநிடதர்கோமகன்
ஞாட்பினுட்காம்பிலிக்கிறைவனுமற
வாட்படையெறிந்துயிர்வெளவினனலன்
சேட்புலத்தரம்பையர்தெரியல்சூடினன்.

இ-ள். கோள் – கொலைசெய்கின்ற, புலிப்போத்து என – ஆண்புலி போல், நிடதர்கோமகன் – நளனவன், ஞாட்பினுள் – யுத்தத்தின்கண், காம்பிலிக்கு இறைவன் – காம்பிலி நாட்டார்க் காசனுடைய, நாமம் அறநாமமறும்படி, வாள்படை – வாளாயுதத்தை, எறிந்து – வீசி, உயிர் – ஆவியை, வெளவினன் – கொண்டான், அவன் – அவ்வரசன், சேண்புலத்துவிண்ணுலகத்தின்கண், அரம்பையர் – தெய்வமங்கையால், தெரியல் – மாலை, சூடினன் – சூடப்பட்டான் எ-று. நாமம் – நாம் எனக்கடை குறைந்தது.

தோல்வியின்றி வாட்போரில் எதிர்த்திறந்தவ ஞகலாற் காம்பிலி தேசத் தரசனுக்கு அரம்பையர் மாலைசூட்டினரென்றார். 57

அறைகழல்வேந்தர்மேலலங்கல்வேலினு
னெறுழ்வலிக்களிற்றிடைத்தாவுமெண்ணிலா
தொறில்பரித்தேர்மிசைப்பாயுநோன்கெழு
சிறையொடுந்திரிவதோர்சீயமென்னவே.

இ-ள். அலங்கல் – வெற்றிமாலைதரித்த, வேலினுன் – வேற்படையையுடைய நளனவன், நோன்கெழு – பெருமைபொருந்திய, சிறை ஒடுந் திரிவது – சிறகினுடன் திரிவதாகிய, ஓர் – ஒரு, சீயம் என்ன – சிங்கம்போல், அறை – ஒலிக்கின்ற, கழல் – வீரக்கழலையணிந்த, வேந்தர்மேல் – அரசர்கள் மேலும், எறுழ்வலி – மிகுந்த வலிமையையுடைய, களிறு இடை-யானையின்

மேலும், தாவும் – தாவுவான், எண்இலா – அளவில்லாத, தொறில் – ஒளியையுடைய, பரி – குதிரைமேலும், தேர்மிசை – தேரின்மேலும், பாயும் – பாய்வான் எ-று.

பரிதேர் உம்மைத்தொகை யாகலின் இயல்பு. நளன் செய்தபோரைத் தனித்தனிசொல்லின் முடியாதென்பார். தொகுத்துச் சுட்டலென்னும் உத்தியால் வேந்தர்மேற் களிற்றிடைப்பரி தேர்மிசை இவ்வாறெதிர்த்து வென்றனனென்றார். நோன்மை – பெருமைப் பொருட்டாதல் "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" என்னுந் திருமுறுகாற்றுப்படைச் செய்யுளானு முணர்க. 58

இன்னணங்கொடுஞ்சமர்முருக்கியேற்றிகண்
மன்னவர்புறக்கொடைகண்டுமாலுதாழ்
கொன்னவில்குருதிவேற்குவவுத்தோளினன்
சென்னிவான்றடவுபொற்றேரின்மேறினன்.

இ-ள். இன்னணம் – இந்தப்பிரகாரம், கொடுஞ்சமர் – கொடியயுத்தத்தில், முருக்கி – கொன்று, ஏற்று – எதிர்த்து, இகல் – பகைக்கின்ற, மன்னவர் – அரசர்கள், புறம்கொடை கண்டு – முதுகுகொடுத் தோடச்செய்து, மாலுதாழ் – மாலுதாழ்கின்ற, கொல்நவில் – கொல்லுதலைச்சொல்லுகின்ற, குருதி-உதிரந்தோய்ந்த, வேல்-வேற்படையையுடைய, குவவுத்தோளினன் – திரட்சிபொருந்திய தோள்களையுடைய நளனவன், சென்னி-தலையிலுள், வான் – ஆகாயத்தை, தடவு – தடவுகின்ற, பொன்தேரின் – அழகியதேரின் மேல், ஏறினன் – ஏறினன் எ-று.

இன்னவண்ணம் – என்பது இன்னணம் எனமரூஉவி நின்றது. பகைவரைக் கொன்று குவித்தலால் இரத்தந்தோய்ந்த வேலாகலால் வேலினுவித நந்தார். கொல்லுதலைத் தெரிந்தவர் வாயினற் சொல்லாது செய்கையால் சொல்லுதல்போல் வேற்படை கொலைசெய்தலாற் சொல்லுதலின் "கொன்னவில் குருதிவே" லென்றார். 59

கொச்சகக்கலிப்பா.

புலத்தலுமடநல்லார்புலவிதீர்தரச்சூட்டு
மலத்தகமலர்க்குஞ்சியழிகுருதிப்புனலலைப்ப
மலைத்தடந்திணிதோளார்வடிக்கணீரெயிற்போர்ப்பக்
கொலைத்தலைமுண்மாப்போற்கொடுஞ்சமத்திற்கிடந்தனரே.

இனி ஆறு பாட்டுக்களாற் படுகளச்சிறப்புச்
சொல்லப்படுகின்றது.

இ-ள். மடநல்லார் – மாதர்கள், புலத்தலும் – ஊடியவளவில், புலவி-அவ்வூடல், தீர்தர – நீங்கும்படி, சூட்டும் – அணிவிக்கும், அலத்தகம் – அவர் பாதங்களி னூட்டப்பெற்ற செம்பஞ்சுபடிந்த, மலர் – பூவையணிந்த, குஞ்சி-குடுமியை, அழி – அழிகின்ற, குருதிப்புனல் – உதிரநீரானது, அலைப்ப-

அலைக்க, மலை – மலைபோல், தட் – பருத்த, திணி – வலிமையையுடைய, தோளார் – தோளையுடையவரசர்கள், வடிக்கணை – கூரியபாணங்களை, வெயில்போர்ப்ப – தேகத்திலேமூட, கொலைத்தலை – கொல்லுகின்ற தலையையுடைய, முள்மாப்போல் – முள்ளம்பன்றிபோல், கொடுஞ்சமத்தில் – கொடிய யுத்தகளத்தில், கிடந்தனர் – கிடந்தார் எ-று.

மாதர்க்கு ஊடலுண்டாயின் கணவரையுதைத்தல் மாலைப்படலத்து இரண்டாம் பாட்டாலுணர்க. மாதர் புலவியில் ஆடவரைத் தாமுதைத்தலும் அவரை ஆடவர் பணிதலுமாகிய இரண்டுமுண்டு. அது அப்போது அவர்க்குண்டாகும் வேட்கைக்கிடால் நிற்குமெனக் கொள்க. தேகங்களில் அம்புகள் தைத்திருத்தல் முள்ளம்பன்றி முட்களைச் சிலிர்த்தல் போன்றிருத்தலால் அதற்கதை யுவமையாக்கினர். 60

இகன்மிகுதிறல்வேந்தரேதியாற்களப்படுத்த
புகர்முகக்கடாயானைபொழிகுருதிச்செழுஞ்சேற்றிற்
றிகிரியகொடிஞ்சிநெடுந்தேருழக்கத்துகளெழுந்தவ்
வகலிருவிசும்புபோர்த்தந்திவான்போன்றதுமே.

இ-ள். இகல்மிகு – பகைமைமிகுந்த, திறல் – வலிமைபொருந்திய வேந்தர் – அரசர்கள், எதியால் – வாட்படையால், களம்படுத்த – யுத்தகளத்திற்கொன்ற, புகர்முகம் கடாயானை – புள்ளிபெற்ற முகத்தையுமதத்தையுமுடைய யானைகள், பொழி – ஊற்றிய, செழுகுருதிச்சேற்றில் – செழுமைபொருந்திய வுதிரச்சேற்றில், திகிரிய – உருளைகளையுடையவும், கொடிஞ்சிமேன்மொட்டை யுடையவுமாகிய, நெடுந்தேர் – நெடியதேர்கள், உழக்க-கலக்க, துகள் – தூளிகள், எழுந்த – எழும்பி, அ அகல் இருவிசும்பு – அந்த அகற்சியுள்ள பெரிய ஆகாயத்தை, போர்த்து – மூடிக்கொண்டு, அந்திவான்-செவ்வானத்தை, போந்தது – ஒத்தது எ-று.

குருதிச் சேறுயினும் அநேகந்தரம் தேருருளை களோடுதலாற் புழுதியாயிற்றென்க. அப்புழுதி மூடுதலால் ஆகாயம் செவ்வானம் போன்றதென்றார். இது உவமையணி. 61

ஒளிகிளர்மணியோடைசிதைந்தொழியவுடன்றபோர்க்
களிசிறந்மால்யானைக்கதிர்மருப்புமிழ்ந்ததீ
முளிதடஞ்சினைமேயுமுருங்கெரியெனப்பற்றி
விளிதருவயவருடல்வெந்தொழியப்பரந்ததே.

இ-ள். ஒளிகிளர் – பிரகாசமிகுந்த, மணி ஓடை – அழகிய முகபடாமானது, சிதைந்து – கெட்டு, ஒழிய – நீங்க, உடன்ற – வெகுண்ட, போர்-யுத்தத்தில், களி – செருக்கையும், சினம் – கோபத்தையுமுடைய, மால்-பெரிய, யானை – யானைகளுடைய, கதிர் – பிரகாசம்பொருந்திய, மருப்பு-தந்தங்கள், உமிழ்ந்த – சொரிந்த, தீ – நெருப்பானது, முளி – காய்ந்த, தடம் – பருத்த, சினை – கிளைகளை, மேயும் – தகிக்கின்ற, முருங்கு எரியென – அழியுங்

தீயைப்போல், பற்றி – பற்றிக்கொண்டு, விளிதரு – இறந்த, வயவர் உடல்-படைவீரருடைய தேகங்கள், வெந்து ஒழிய – வெந்துபோகும்படி, பரந்தது-பரவியது எ-று. ஆல் – அசை.

போர்க்களத்தில் யானைக்கொம்பிற் பிறந்த தீயே வயவருடல் வெந் தொழியப் பரந்ததெனக் கொள்க. 62

பரிதிவடிவாள்பிடித்துப்பல்லினுலிதழதுக்கித்
திருகுசினந்தலைக்கொளீஇச்செங்கண்கடீயுமிழச்
குருதிபாயடுகளத்திற்குற்றுயிரிற்கிடந்தார்க்கண்
டருகணியக்கொடுங்கூற்றுமஞ்சிநின்றலறுமால்.

இ-ள். பரிதி – சூரியன்போன்ற, வடி – கூரிய, வாள் – வாட்படையை, பிடித்து – கையிற்பற்றி, பல்லினுல் – பற்களினுல், இதழ் அதுக்கி – உதட்டைக்கடித்து, திருகு – மாறுபட்ட, சினம் – கோபம், தலைக்கொளீஇ – அதிகரித்து, செம்கண்கள் – சிவந்த கண்களானவை, தீஉமிழ – நெருப்பைச் சொரிய, குருதிபாய – உதிரம்பரவிய, அடுகளத்தில் – கொலைக்களத்தில், குற்றுயிரில் – குற்றுயிருடன், கிடந்தார்க்கண்டு – கிடந்தவர்களைக்கண்டு, அருகு அணைய – அவர்களருகே வருவதற்கும், கொடுங்கூற்றும் – கொடியயமனும், அஞ்சிநின்று – அச்சமுற்று நின்று, அலறும் – அலறுவான் எ-று. ஆல்-அசைநிலை.

குற்றுயிரிற் கிடக்கும்போது யமன் அவரைப்பற்றுதற்கும் அலறுவானென்னிற் போரிலெதிர்க்கும்போது அவரைக்கண்டவர் அஞ்சுதல்சொல்ல வேண்டுவதில்லை யாயிற்று. 63

சிலைபொருதிணிதடந்தோட்டேர்வேந்தர்செருமலைந்து
கொலைபுரியடுகளத்திற்குடர்பின்னிக்கிடந்ததனைப்
புலவுநாறுடற்றசைவேட்டுண்ணவரும்புள்ளினங்கள்
வலைவளைந்ததெனவெண்ணிவானினிடைச்சுழலுமால்.

இ-ள். சிலைபொரு – மலையையொத்த, திணி – வலிமைபொருந்திய, தடதோள் – பருத்த தோள்களையுடைய, தேர்வேந்தர் – தேரையுடைய அரசர்கள், செருமலைந்து – போர்செய்து, கொலைபுரி – கொலைசெய்த, அடுகளத்தில் – யுத்தகளத்தில், குடர் – குடர்கள், பின்னிக்கிடந்ததனை – ஒன்றோடொன்று பின்னிக்கிடந்ததை, புலவுநாறு – புலாநாற்றநாறுகின்ற, உடல்தசை – தேகத்தின் மாமிசத்தை, வேட்டு – விரும்பி, உண்ணவரும் – உண்பதற்குவந்த, புள் இனங்கள் – பறவைக் கூட்டங்களானவை, வலை வளைந்தது என – வலையானது வளைந்ததென்று, எண்ணி – நினைந்து, வானின் இடை – ஆகாயத்தின்கண், சுழலும் – வட்டமிடும் எ-று. ஆல்-அசை.

தசைவேட்கையினும் உயிரின் வேட்கை பெரிதாகலானும், தசையை விட்டு நீங்கற்கு மனமெழாமையாலும், குடர்பின்னிக்கிடந்ததை 'வலை

வளைந்தென்று தசைவேட்டுண்ண வரும்புள்ளினங்கள் வானினிடைச் சுழலுமென்றார். 64

சீற்றமிகுங்களிபானைத்திறல்கெழுபோர்வயவேந்தர்
காற்றரளக்குடைதுணிக்துகளத்தினிடைக்கிடப்பனக
ளேற்றெருமையுகைத்தடருமிருணிறத்தவெரிகுஞ்சிக்
கூற்றமுயிர்ப்பலியேற்குங்கொள்கலம்போன்றிருந்தனவே.

இ-ள் சீற்றம்மிகும் - கோபமிகுந்த, களியானை — செருக்கையுடைய யானைகள்போல், திறல்கெழு - வலிமைமிக்க, போர் - போர்செய்கின்ற, வயம்வேந்தர் - வெற்றிமிகுந்த வீரர்களுடைய, கால் - காலையுடைய, தாளம் குடை - முத்துக்குடைகளானவை, துணிந்து - துண்டுபட்டு, களத்தின் இடை — யுத்தகளத்தின்கண், கிடப்பனகள் - இருப்பனவாகி, ஏறுஎருமை-எருமைப்போத்தை, உகைத்து - செலுத்தி, அடரும் - நெருங்குகின்ற, இருள்நிறத்த - இருளையொத்த நிறத்தையுடைய, எரிகுஞ்சி - எரிபோன்ற கிகையையுடைய, கூற்றம் - யமனனவன், உயிர்ப்பலி ஏற்கும் - உயிர்ப்பிச்சை யேற்கின்ற, கொள்கலம்போன்று — பாத்திரத்தை யொத்து, இருக்தன - இருந்தன எ-று. ஏகாரம் - ஈற்றசை.

கள் - இங்கே இசைநிறைத்தற் பொருட்டு விகுதிமேல் விகுதியாய் வந்தது காம்பு துணிந்துகிடந்த குடையைப் பலியேற்கும் பாத்திரமாகக் குறித்தலால் தற்குறிப்பணி. 65

கலிவிருத்தம்.

இன்னகளத்தினிரிந்தவரல்லாற்
றுன்னினராவிதுறத்தலும்வெங்கூற்
றன்னவன்வாளமராற்றலுநோக்காப்
பொன்னகரத்திறைபுக்கியினேர்ந்தான்.

இனி இரண்டுபாட்டால் இந்திரனெண்ணுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். இன்னகளத்தின் - இப்படிப்பட்ட யுத்தகளத்தில், இரிந்தவரல்லால் - ஓடிப்போனவரல்லாமல், துன்னினர் - எதிர்த்தவர்கள், ஆவி துறத்தலும் - உயிர் விடுதலையும், வெங்கூற்று அன்னவன் - வெவ்விய யமனையொத்த நளனவன், வாள் அமர் — வாட்போரை, ஆற்றலும் - செய்தலையும், நோக்கா - பார்த்து, பொன்நகரத்து இறை - இந்திரனவன், புத்தியின் — தன்புத்தியில், ஓர்ந்தான் - சிந்தித்தான் எ-று.

ஓடினவர் பிழைத்தலையும், எதிர்த்தவர் நிறத்தலையும், நளன் வாட்போர் ஆற்றலையும் பார்த்து, இந்திரன் ஆலோசித்தனனென்பதாம். நோக்கா - உடன்பாட்டு வினையெச்சம். 66

மன்றன்மலர்த்தொடைமன்னனையெய்தி
வென்றிகொள்போரைவிலக்கிலமாயிற்
துன்றுதிரைக்கடல்சூழுலகெல்லா
மின்றுமுடித்திடுமென்னினைந்தே.

இ-ள். மன்றல் - வாசனைபொருந்திய, மலர்தொடை – மலர்மாலையை யணிந்த, மன்னனை – நளனை, எய்தி – அடைந்து, வென்றிகொள் – வெற்றியைக்கொண்ட, போரை - யுத்தத்தை, விலக்கிலம் ஆயின் – விலக்காமற் போவோமாகில், துன்று – நெருங்கிய, திரை – அலையையுடைய, கடல் சூழ் – கடலாற் சூழப்பட்ட, உலகு எல்லாம் – பூவுலகத்திலுள்ள யாவரையும், இன்று - இன்று, முடித்திடும் என்ன – கொல்லுவானென்று, நினைத்து - (இந்திரன் முதலிய நால்வரும்) கருதி எ-று.

இச்செய்யுளு மேற்செய்யுளுங் குளகமாதலின், இதில் நினைந்தென்னும் வினையெச்சம் மேற்செய்யுளில் மேவியவென்னும் பெயரெச்சவினை கொண்டது. இந்திரனுனவன் நாம் இப்போரை விலக்காது விட்டனமென்னில் உலக முழுவதையும் நளன் கொல்லுவனென்று நினைத்தான். அந்நினைப்பு இரக்கமன்றியும், போரைத்தான் மூட்டினமையாலு முண்டாயிற்றென்க. 67

மழகளிறன்னவன் மாணுருநீங்கு
விழைவொடுதம்முருமேவியவிண்ணோ
ரழகுறுகாலையவ்வுருவிட்டோர்
கிழவுருவெய்தியகேண்மையரொத்தார்.

இதனுல் இந்திரன் முதலிய நால்வருந் தம்முருக்கொளல் சொல்லப்படுகின்றது.

இ-ள். மழகளிறு அன்னவன் – இளங்களிற்றையொத்த நளனது, மாண் - பெருமைபொருந்திய, உரு – வடிவத்தை, நீங்கி – விட்டுநீங்கி, விழைவு ஒடு – விருப்போடு, தம் உருமேவிய – தங்கள் வடிவைப்பொருந்திய, விண்ணோர் – தேவர்கள், அழகு உறு – அழகின்மிக்க, காலையர் – காலைப்பருவத்தையுடையவர், அ உருவிட்டு – அக்காலைவடிவத்தைவிட்டு, ஓர்கிழவுரு எய்திய - ஒரு கிழவடிவத்தையடைந்த, கேண்மையர் - தன்மையராதலை, ஒத்தார் - ஒத்தனர் எ-று.

நளனுருவிற்கும் இந்திரன் முதலிய நால்வருருவிற்கும் ஒப்புச்சொல்லில், அழகிய காலையர் வடிவிற்கும், கிழவர் வடிவிற்கும் ஒப்புச்சொல்லுதல் போலாமென்பது கருத்து. 68

முன்னுருமேவியமொய்கழல்விண்ணோர்
மன்னனையெய்துபுவாய்மையினுங்

துன்னலரைத்தெறுதோள்வலியானு
நின்னிலத்திடைநேர்பவர்யாரே.

இனி இரண்டு பாட்டுக்களால் நளன் போரை விலக்குதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். முன் உருமேவிய - பழைய வடிவினைப்பெற்ற, மொய் - நெருங்கிய, கழல் — வீரக்கழலையணிந்த, விண்ணோர் - தேவர்கள், மன்னனை எய்துபுகளனையடுத்து, வாய்மையினும் - சத்தியத்தினும், துன்னலரைசத்துருக்களை, தெறு — கொல்லுகின்ற, தோள்வலியானும் - புயபலத்தினும், நின்னை - உன்னை, நேர்பவர் — ஒப்பவர், நிலத்து இடை — பூமியில், யார் - எவர், (ஒருவருமில்லை) எ-று. ஏகாரம் — ஈற்றசைக்கண் வந்தது.

யாவரும் புகழ்ச்சியில் வயப்படுதல்போல் மற்றொன்றிலும் வயப்படாரென்பது தெரிந்த தேவர்கள், நளனைப் பூமியில் வாய்மையிலும் வலிமையிலும் உனக்குச் சமானமானவரில்லையென்றார். உவமேயமாகிய நளனை உவமானமாகக்கூறி அவனுக்கு மற்றையரசரோடு ஒப்பானமை கூறலால் எதிர்நிலையணி. 69

துன்முகளத்தெதிர்துன்னலர்யாரும்
பொன்றமுருக்கியபோர்த்தொழினீங்கி
வென்றிகொள்வேலவமின்னையாடன்
மன்றன்முடித்தனைவாழியவென்றார்.

இ-ள். வென்றிகொள் - வெற்றியைக்கொண்ட, வேலவ - வேற்படையையுடைய நளனே! துன்று - நெருங்கிய, களத்துஎதிர் - யுத்தகளத்திலெதிர்த்த, துன்னலர் யாரும் — சத்துருக்களெல்லாம், பொன்ற - இறக்கும்படி, முருக்கிய - கொன்ற, போர்த்தொழில் நீங்கி - போர்த்தொழிலைவிட்டு, மின் அனையாளன் தன் - மின்னலையொத்த தமயந்தியினது, மன்றல் - விவாகத்தை, முடித்தனை - செய்துகொண்டவனாகி, வாழிய என்றார் - (நீ) வாழக்கடவையென்றார்கள் எ-று.

முடித்தனை என்பது வினைமுற்றெச்சம் போரைவிட்டு விவாகமுடித்துக்கொண்டு தமயந்தியுடன் நெடுங்கால மிருப்பாயாக வென்பார் வாழிய வென்றனர். வேலவ என்றமையால், வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக்கடவுளை யொத்தவனே என்றும் பொருள்படும். வீரம், போறிவு, வெற்றி, புகழ், இன்பம் அழகு முதலியவற்றாற் குகப்பெருமானை யொத்தானென்க. 70

விண்ணவரின்னணம்வேண்டினர்கூறப்
புண்ணுறுவெய்யபுலால்கமழ்வைவே
லண்ணலமர்த்தொழிலாற்றலனாகிப்
பண்ணமைதேரினிழிந்துபணிந்தான்.

இதனால் இந்திரன்முதலிய கால்வரையும் நளன் வணங்குதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். விண்ணவர் – தேவர்கள், இன்னணம் – இந்தப்பிரகாரம், வேண்டினர் – வேண்டினவராகி, கூற – சொல்ல, புண் உறு – மாமிசந்தங்கிய, வெய்ய – வெவ்விய, புலால் – புலாலுநாற்றம், கமழ் – வீசுகின்ற, வைவேல் – கூரிய வேற்படையை யுடைய, அண்ணல் – நளனவன், அமர்த்தொழில் – யுத்தத்தை, ஆற்றலனாகி – செய்யாதவனாகி, பண்ணமை – அலங்காரப் பமைந்த, தேரின் இழிந்து – தேரினின்று மிறங்கி, பணிந்தான் – அந்தால்வரையும் வணங்கினன் எ-று.

போர்த்தொழிலில் முடுகினனாயினும் நளனவன் தேவர்கள் வேண்டுகோளுக் குடன்பட்டவனாய், அமர்த்தொழில்விட்டுத் தனது பொறை தோன்ற அவரைப்பணிந்தன னென்க. 71

கருணையினெய்திய காளையைநோக்கி
யருமகமெவ்வுழியாற்றினுமாங்க
ணுருவொடுவந்தவியுண்குவமென்னு
மருவருநல்வரம்வாசவனீந்தான்.

இனி ஐந்துபாட்டுக்களால் தேவர்கள் வரங்கொடுத்தல் சொல்லத் தொடங்கி, அவருள் இந்திரன் வரமளித்தல் இயம்பல்.

இ-ள். வாசன் – இந்திரனனவன், கருணையின் – அருளினால், எய்திய – அடைந்த, காளையை – நளனை, நோக்கி – பார்த்து, அருமகம் – அரியயாகத்தை, ஏ உழி – எவ்விடத்தில், ஆற்றினும் – நீசெய்தபோதினும், ஆங்கண் – அவ்விடத்தில், உரு ஒடு – உருவுடனே, வந்து – அடைந்து, அவி – அவிப்பாகத்தை, உண்குவம் என்னு – யாமுண்போமென்று, மருவ அரும் – அடைதற்கரிய, நல்வரம் – நல்லவரத்தை, ஈந்தான் – கொடுத்தனன் எ-று.

உருவுடனே தேவர்கள்வந்து யாகத்தில் அவிப்பாகங்கொள்வது அருமையென்பது தோன்ற மருவரு நல்வரமென்றார். 72

அக்கினி வரங்கொடுத்தல்.

மிடல்கெழுமேழகமேற்கொளுமேலா
னுடைதிரைவேலையினின்னமுதாப்ப
மடிதலில்வெங்கனலின்றியும்வாளா
வடிசிலடுத்தொழில்விஞ்சையளித்தான்.

இ-ள். மிடல்கெழு – வலிமைபொருந்திய, மேழகமேல்கொளும் – ஆட்டுக்கடாவின்மேலேறும், மேலோன் – அக்கினிதேவனனவன், உடை திரைவேலையின் – உடைகின்ற அலைகளையுடைய கடலிற்பிறந்த, இன் அமுது ஒப்ப – இனிய அமிர்தத்தையொப்ப, மடிதல் இல் – கெடாத, வெங்கனல் இன்றியும் – வெவ்விய நீயில்லாமலும், வாளா – சும்மா, அடிசில் – உணவை,

அடும் தொழில் - சமைக்கும் தொழிலாகிய, விஞ்சை — வித்தையை, அளித்தான் — வரமாகக் கொடுத்தான் எ-று.

அக்கினிதேவன் இவ்வரங் கொடுத்தலால் உலகத்தில் இப்பொழுதும் நளபாகம் போலென்று உவமை சொல்லும்படி விளங்கிற்றென்க, கெழுமு-ஏழகம் எனப் பிரிப்பாருமுளர். 73.

இயமன் வரங்கொடுத்தல்.

அல்லலுழந்தளருய்தினுநெஞ்சி
னல்லறமெய்தவுநண்ணியஞாட்பில்
வெல்படைவேண்டுவவெய்தவுமென்றிக்
கொல்சினவெம்பகடேற்றிகொடுத்தான்.

இ-ள். வென்றி — வெற்றியையும், கொல்சினம் — கொல்லாநின்ற கோபத்தையுமுடைய, வெம்பகடூர்தி — வெவ்விய எருமைக்கடா வாகனத்தையுடைய யமனுனவன், அல்லல் உழந்து - வருத்தப்பட்டு, அளர் எய்தினும்-அன்பமடையினும், நெஞ்சில் — மனத்தின்கண், நல் அறம் எய்தவும் — நல்ல தருமமடையவும், நண்ணிய — பொருந்திய, ஞாட்பில் - யுத்தத்தில், வெல் படை — வெல்லத்தக்க ஆயுதங்கள், வேண்டுவ — வேண்டுவனவற்றை, எய்தவும் — அடையவும், கொடுத்தான் — நளனுக்கு வரங்கொடுத்தான் எ-று.

காரணம் காரியத்துள்ளதென்பது பிரசித்தப்படும்படி, யமன் தருமனென்னும் பெயர்க்கேற்ப நளன் அல்லற்படும்போதும் நல்லறமெய்தவும், கொலைத்தொழிற்கேற்ப யுத்தகளத்தில் வெல்படைக ளெய்தவும் வரமாகக்கொடுத்தனனென்றார். 74

வருணன் வரமளித்தல்.

தார்புலராதுதயங்கவும்வேண்டி
னாகலிலாற்றவமைக்கவுமல்லா
* னீரறபாலியினெஞ்சினிதேற்பின்
வார்புனலெய்தவும்வருணனளித்தான்.

---

* கடுஞ்சுரமாதல் பற்றி "நீராறு பாலை என்றார். கடுஞ்சுரம் எனினும், பாலையெனினும், நடுவுநிலத்திணை யெனினுமொரு பொருட்சொற்கள்." "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து நல்லியல் பழிந்து நடுங்கு துயருறத்தப் பாலையென்பதோர் படிவங் கொள்ளும்" என்றாங்கு முதற் பொருள்பற்றிப் பாலைகிழத்தலானும், புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பவற்றிற்கு இடையே பிரிவுநிகழ்தலானும், நடுவணதாகிய நண்பகற் காலந் தனக்குக் காலமாகலானும், நடுவுநிலத்திணை யெனப்படும். "நடுவண தொழியப் படுதிரைவையம் பாத்தியபண்பே" என்ற ஆசிரியர் தொல்காப்பியனார் உரைத்தது முணர்க.

இத்திணைக்குச் சூரியனே தெய்வமென்பாரும், தர்க்கையே தெய்வமென்பாரும், அக்கினி, காற்று என்பவே கடவுளென்பாரும் ஆகப்பலவகைப்படுவர். அவற்றையெல்லாம் மறுத்து, அவ்வத்திணைத் தெய்வங்களே இப்பாலைக்குந் தெய்வமாகுமென்றார் — ஆசிரியர் நச்சினார்க்கினியார்.

இ-ள். வருணன் — வருணனவன், தார் — மாலைகள், புலராது — வாடாமல், தயங்கவும் — விளங்கவும், வேண்டின் — வேண்டுமானால், ஆர்கலி-சமுத்திரமானது, வற்றஅமைக்கவும் — வற்றும்படி செய்யவும் அல்லால்-அவையன்றியும், நீர் அறுபாலியில் - நீரில்லாத பாலிகிலத்தில், நெஞ்சில் நினைப்பின் — நெஞ்சிலே நினைத்தால், வார் — நெடிய, புனல் எய்தவும் - நீருண்டாகவும், அளித்தான் - நளனுக்கு வரங்கொடுத்தான் எ-று.

இதனால் மழையில்லாதவிடினும் இவன் தேசத்துக்கு நீராற் குறைவில்லையாம். 75

ஆண்டகைக்கின்னவளித்தரிவைக்கு
மாண்டகுகற்பைவருத்துவமென்னுத்
தீண்டினராவிசிதைந்திடுமாறும்
வேண்டுருவெய்தவும்விண்ணவரீந்தார்.

நால்வரும் தமயந்திக்கு வரமீதல்.

இ-ள். விண்ணவர் — இந்திரன் முதலிய தேவர்கள், ஆண்டகைக்கு-நளனுக்கு, இன்ன அளித்து — இவ்வரங்களைக் கொடுத்து, அரிவைக்கும் — தமயந்திக்கும், மாண்தகு — மாட்சிமைபொருந்திய, கற்பை — கற்பினை, வருத்துவம் என்னு — வருத்துவோமென்று, தீண்டினர் — தொட்டவர்களுடைய, ஆவி — உயிர், சிதைந்திடும், ஆறும் - கெடுமாறும், வேண்டு உருவெய்தவும்-வேண்டியவடிவங்களெடுக்கவும், ஈந்தார் — வரங்கொடுத்தனர் எ-று.

அரிவைக்குமென்பதில் உம்மை, சீச்சவும்மை யெனக்கொள்க. தாங்கள் பலமுயற்சிசெய்தஞ் சம்மதியாமல் மனிதனுகிய நளன்மேல்வைத்த கருத்தின்படி சாதித்தலால், தேவர்கள் அதில்மிகவும் மகிழ் உடையவராய்த் தமயந்தி கற்பை வருத்தவெண்ணின் அவருயிர் மாயும்படி வரந்தந்தனரென்க. 76

கண்ணகன்ஞாலமளித்தகழற்கா
லண்ணலேயேத்தியருந்ததிமானும்
பெண்ணமுதத்தைவிபந்துபெருஞ்சீர்
விண்ணவர்தம்பதிமேவினரன்றே.

இதனுல் தேவர் மகிழ்வோடு தம்பதியடைதல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். கண் — அகல் — இடமகன்ற, ஞாலம் - பூமியை, அளித்த-காத்த, கழல் கால் — வீரக்கழலே யணிந்த காலையுடைய, அண்ணலே - நளனே, ஏத்தி அருந்ததியை யொத்த, பெண் அமுதத்தை-தமயந்தியை, வியந்து — அதிசயித்து, பெருஞ்சீர் — மிகுந்த சிறப்பையுடைய, விண்ணவர் — தேவர்கள், தம்பதி - தம்முடைய நகரங்களை, மேவினர்-அடைந்தனர் எ-று. அன்று — ஏ - அசைகள்.

குற்றமில்லாத தன்மே லெதிர்க்கவந்த மற்றையரசரை விடுத்தலால் "ஞாலமளித்த அண்ணலென்னூர்." அருந்ததிமானும் என்பது பெரும் பாலும் கற்புக்கெனக் கொள்க. பெண்ணமுதத்தை வியந்தென்பது தமயந்தி நற்குண நற்செய்கையையென்க. 77

அங்கண்வானத்தமரருமாழியிற்
பொங்குதானையரசரும்போயபின்
சிங்கவேறனையான்றிகழ்மாமணி
தங்குபைம்பொனிருக்கையிற்சார்ந்தனன்.

இ-ள்.அங்கண் – அழகிய இடத்தையுடைய, வானத்து – தெய்வலோகத் திருந்துவந்த, அமரரும் – தேவரும், ஆழியில் – சமுத்திரம்போல், பொங்கு மிகுந்த, தானை – சேனையையுடைய, அரசரும் – அரசர்களும், போயபின் – போனபின்பு, திகழ் – பிரகாசிக்கின்ற, மாமணி – மாணிக்க மணிகளிழைத்து, தங்கு – தங்கிய, பைம்பொன் – பசியபொன்னாற்செய்த, இருக்கையில் – ஓரிடத்தில், சிங்கஏறு அனையான் – சிங்கவேற்றையொத்த நளனவன், சார்ந்தனன் – சேர்ந்தனன் எ-று.

தேவரும் அரசரும் தம்மிடத்திற் சென்றபின்பு நளனும் தானிருக்கத் தக்க ஓரிருக்கையிற் சார்ந்தனனென்பதாம். 78

போர்புரிபடலம் முற்றிற்று.

ஆ செய்யுள் - 796.

மணம்புரிபடலம்.

நளமகாராசன் தமயந்தியை விவாகஞ்செய்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

சாந்தமூழ்குதடமுலைக்கோதையர்
காந்துபைம்பொற்கவரியிரட்டுற
வாய்ந்தசெவ்விமணவினைமாடத்தின்
வேந்தர்சூழ்வரவீமன்வந்தெய்தினன்.

இ-ள். சாந்தம் – சந்தனக்குழம்பினால், மூழ்கு – முழுகப்பெற்ற, தட முலை – பருத்த முலையையுடைய, கோதையர் – மாதர்கள், காந்து – பிரகாசிக்கின்ற, பைம்பொன் – பசிய பொற்காம்பையுடைய, கவரி – சாமரைகள், இரட்டுற – வீச, வாய்ந்த – பொருந்திய, செவ்வி – அழகிய, மணவினை – விவாகஞ்செய்யும், மாடத்தின் – உபரிகையில், வேந்தர் – அரசர்களனைவரும், சூழ்வர – சூழ்ந்துவாராநிற்க, வீமன் – வீமராசன், வந்து எய்தினன் – வந்து சேர்ந்தான் எ-று.

பார்த்தவர்களுடைய கண்களைக்கவர்ந்துகொள்ளும்படிகைபோயவரால் அணிசெய்த மாடமென்பதற்கு "வாழ்ந்தசெவ்வி மணவினைமாட" மெனப் பட்டது. விவாகஞ் செய்வித்தற்குப் பிரதானமானவனுகையால் முன்னே வீமன் வந்தனனென்றார். 1

ஆற்றுவேள்வியருந்தவர்சூழ்வரப்
போற்றுநான்மறைக்கோதமன்போர்கெழு
வேற்றடங்கண்விளங்கிழைமன்றலுக்
கேற்றயாவையுங்கொண்டுடனெய்தினன்.

இ-ள். வேள்வி – யாகங்களை, ஆற்று – செய்கின்ற, அருந்தவர் – முனிவர்கள், சூழ்வர – சூழ்ந்துவர, நால்மறை – நாலுவேதங்களையும், போற்று – போற்றுகின்ற, கோதமன் – கௌதமமுனிவர், போர்கெழு – போரின்மிக்க, வேல்தடகண் – வேல்போன்ற விசாலம்பொருந்திய கண்களையுடைய, விளங்கு இடை – தமயந்தியின்னது, மன்றலுக்கு – விவாகத்திற்கு, ஏற்றயாவையும் – ஏற்றதிரவிய மனைத்தையும், கொண்டு – வருவித்துக்கொண்டு, உடன் – அதனுடனே, எய்தினன் – வந்தான் எ-று.

கௌதமமுனி விவாகபத்திரிப்படி அக்கிரியைக்கு வேண்டிய மாவிலை, சமித்து, தருப்பை முதலியவும் வரவழைத்துக்கொண்டுவந்தனனென்பதற்கு மன்றலுக்கேற்ற யாவையுங் கொண்டுடனெய்தினனென்றார். 2

வேரியந்தொடைவீமனும்வேந்தருந்
தேருநான்மறைச்செல்வருமன்றலுக்
கோரையெய்தியதென்றுழையொற்றரா
லாரமார்பற்கரியவுணர்த்தினர்.

இ-ள். வேரி அம்தொடை - தேனொழுகு மலர்மாலையையணிந்த, வீமனும் – வீமராசனும், வேந்தரும் – அரசர்களும், தேரும் நால்மறைச்செல்வரும் – நான்கு வேதங்களையு மறிந்த பிராமணர்களும், மன்றலுக்கு – விவாகத்திற்கு, ஓரை எய்தியது என்று – முகூர்த்தகாலம் வந்ததென்று, உழை-அருகிலிருந்த, ஒற்றரால் - வேவுகாரரால், ஆரமார்பன்கு – நளமகாராசனுக்கு, அறிய – தெரியும்படி, உணர்த்தினர் – தெரிவித்தார்கள் எ-று.

விவாகக்கிரியைக்கு முன்பு நடக்கவேண்டிய சடங்குகளனைத்தையு முடிக்கவேண்டி, நளமகாராசனைத் தூண்டும் நிமித்தப்புடையவர் ஒரையெய்தியதென்று ஒற்றரால் ஆரமார்பனுக் குணர்த்தினரென்றார். சந்துசெய்பவராகலின் ஒற்றர் எனப்பட்டார். 3

ஒற்றர்கூறவொளிர்முடிவேந்தனைக்
கற்றவார்சடைக்காசிபனுதியோர்
சொற்றநான்மறைநூல்வழித்தூமணிப்
பொற்றசும்பினிற்பூம்புனலாட்டினர்.

இ-ள். ஒற்றர்கூற – ஒற்றர்சொல்ல, (அவ்வளவில்) ஒளிர்முடி – வீளங்குகின்ற மகுடத்தையுடைய, வேந்தனை – நளனை, கற்றை – மயிர்த்தொகுதியாகிய, வார்சடை – நெடிய சடையையுடைய, காசிபன் ஆதியோர்-காசிபன்முதலிய முனிவர்கள், சொற்றநான்மறை நூல்வழி-வேதநூலிற் சொல்லியவழிப்படி, தூ – பரிசுத்தமாகிய, மணி – நவமணிகள்பதித்த, பொன்தசும்பினில் – பொற்குடத்திற் கொணர்ந்த, பூம்புனல் – பொலிவையுடைய தீர்த்தங்களினால், ஆட்டினர் – ஸ்நானஞ் செய்வித்தார்கள் எ-று.

காசிபன் – பிரமதேவரது புத்திரரு ளொருவன்; சூரபன்மன் சிங்கமுகன் முதலிய அசுர வீரர்களின் தந்தை. நூல் – உவமையாகுபெயர். அது. "பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாக" எனவும், "உரத்தின் வளம்பெருக்கி – புன்னிய தீமை" எனவும் வருமும் நன்னூற்செய்யுள்களா னுணர்க. பூம்புனலெனலாற் கங்கையாகிய தீர்த்த மெனக்கொள்க. நூல்வழிப் பூம்புனலாட்டின ரெனலால் மூப்புத்திரண்டுவகையுள்ள ஓமாலிகையையும், அவர்பத்தையும், விரை ஐந்தையும் பூசிமுழுக்காட்டின ரென்க. இவைகள் சுயம்வரப் படலத்தில் "களிமகிழ்வெய்தி" யென்னும் நூற்றொன்பதாம் பாட்டுரையிற் காண்க. 4

புனிற்றிளம்பிறைக்கண்ணியன் பூங்கழன்
மனத்தினெண்ணிவழிபட்டுமாமறை

யினைத்தும்வல்லவறநெறியந்தணர்
நினைத்தயாவையுநீரொடுநல்கினன்.

இ-ள். புனிறு இளம் – மிகுந்த விளமை பொருந்திய, பிறைக்கண்ணியன் – பாலசந்திரனையமாலையணிந்த பரமசிவனுடைய, பூகழல் – அழகியபாதங்களே, மனத்தின் எண்ணி – இதயத்திலே தியானித்து, வழிபட்டு – பூசித்து, மாமறை அனைத்தும் வல்ல – வேதமுழுதுந்தெரிந்த, அறநெறி – தருமமார்க்கத்தினின்ற, அந்தணர் – பிராமணர்கள், நினைத்த யாவையும்-நினைத்தவை யனைத்தையும், நீரோடு – நீருடனே, நல்கினன் – கொடுத்தனன்.

இதனுலே நளச்சக்கரவர்த்தி, நாரணனே வழிபடும் வைணவன் எனக் கூறல் மறுக்கப்பட்டு, அவன் மூப்பத்தாறுதத்துவங்கட்கும் மேலான தற்பரசிவனே வழிபடேம் அத்திவித சைவ சித்தாந்தி என்பது காட்டப்பட்டது. புனிற்றிளம்பிறைக் கண்ணின் வழிபடு கடவுளெனக் கொள்க. வழிபடல்-பூசித்தலாம். குறிப்பறிந் தீபவனுதலால் அந்தணர் நினைத்தயாவையு நீரோடு தானஞ்செய்தன னென்க. 5

அழகுவாய்ப்பவனிபவரண்ணலெத்
தொழுதுநல்லருள்பூண்டுசுடர்விரி
மழவுநன்கதிர்மால்வரைசேர்ந்தெனச்
செழுமணிப்பொற்றிகழ்முடிசூட்டினர்.

இதுமுதல் ஆறுபாட்டுக்களால் நளனுக்கு அலங்கரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அழகுவாய்ப்ப – அழகுபொருந்த, வனிபவர் – ஆபரணம் அலங்கரிப்பவர்கள், அண்ணலத்தொழுது – நளனேவணங்கி, நல் அருள் பூண்டு – அவனுடைய கிருபைபெற்று, சுடர்விரி – கிரணம்விரிகின்ற, மழவுநன்கதிர்-இளஞ் சூரியனைவன், மால்வரைசேர்ந்து என-உதயகிரியில்வந்தாற்போல், செழுமணி – செழுமையுள்ள மணிகள்பதித்த, பொன் – பொன்னுற்செய்து, திகழ் – பிரகாசிக்கின்ற, முடி – கிரீடத்தை, சூட்டினர் – தரித்தார்கள். எ-று.

அணிதலின் வல்லவரென்பதுதோன்ற "அழகுவாய்ப்பவனிபவ" ரென்றும், நளனருள் பெற்றென்பதற்கு "நல்லருள் பூண்" டென்றும், அரசர்க்குப் பிரதானமாகையால் முடிசூட்டியென்றுஞ் சொல்லினர். கதிர்வரை சேர்ந்தென வென்னலால் உவமையணி. 6

புயங்களென்னும்பொலங்கிரிமீதுவான்
றயங்குசோதிக்கதிர்கடவழ்ந்தெனக்
கயங்கொள்வள்ளைக்கவின்கவர்காதினில்
வயங்குபைம்பொன்மணிக்குழைசேர்த்தினர்.

இ-ள். புயங்கள் என்னும் – தோள்களென்கிற, பொலம்கிரிமீது-மேருமலையின்மேல், வான் – ஆகாயத்தின், தயங்கு – தங்குகின்ற, சோதி – ஒளி

யையுடைய, கதிர்கள் - சூரியர்கள், தவழ்ந்தது என - தவழ்ந்ததைப்போல், கயம்கொள் - தடாகங்கள்கொண்ட, வள்ளை - வள்ளையினுடைய, கவின்-அழகை, கவர் - கொண்ட, காதினில் - செவிகளில், வயங்கு - பிரகாசிக்கின்ற, பைம்பொன் - பைம்பொன்னுற் செய்த, மணிக்குழை - இரத்தினகுண்டலங்களை, சேர்த்தினர் - தரித்தார்கள் எ-று.

நளன் புயங்களென்னும் பொலங்கிரி யென்றது - உருவகவணி. கதிர்கள் தவழ்ந்தென மணிக்குழையென்றது உவமையணி. வள்ளைக்கவின்கவர் காதென்றது காட்சியணி. இம்மூன்றுங் கலந்துவருதலிற் கலவையணி. 7

வண்ணமேகலையார்மனங்கூட்டுணக்
கண்ணகன்றுகவின்செயுமார்பிடை
யண்ணன்மால்வரைதாழுமருவிபோற்
றெண்ணிலாமணியார்வடஞ்சேர்த்தினர்.

இ-ள். வண்ணம்மேகலையார் - அழகிய மேகலையைத்தரித்த மங்கையர்களுடைய, மனம் - நெஞ்சை, கூட்டுண - கொள்ளை கொள்ள, கண் அகன்று - இடமகன்று, கவின்செயும் - அழகைச் செய்யும், மார்பிடை - மார்பின்கண்ணே, அண்ணல் - பெரிய, மால்வரை - மேருமலையில், தாழும் அருவிபோல் - தாழ்ந்தொழுகு மருவிநீரைப்போல், தெள் - தெளிந்த, நிலா-ஒளியையுடைய, மணி ஆர்வடம் - முத்துவடங்களை, சேர்த்தினர் - தரித்தார்கள் எ-று.

மாதர்க்குத் தழுவற்குரிய ஆடவர்மார்பிடத்தில் மிகுந்த மகிழ்ச்சியீன்பதுதோன்ற, மேகலையார் மனங்கூட்டிணு மார்பெனப்பட்டது. மார்பிடை வரைதாழு மருவிபோல் வடஞ்சேர்த்தினரெனலால் உவமையணி. 8

பூமலர்ச்செழுங்கற்பகம்புல்லிய
காமர்வல்லியெனக்கவின்செய்திடத்
தூமணிச்சுடர்தூங்குபொலந்தொடி
தேமலர்த்தொடைதிண்புயஞ்சேர்த்தினர்.

இ-ள். பூமலர் - பொலிவுபொருந்திய மலர்களையுடைய, செழு-செழுமையுள்ள, கற்பகம்புல்லிய - கற்பகத்தைத் தழுவிய, காமர்வல்லி என - காமர்வல்லி யென்னுங் கொடிபோல், கவின்செய்திட - அழகைச் செய்ய, தூ - பரிசுத்தமாகிய, மணிச்சுடர் - நவமணியின்கிரணங்கள், தூங்கு-தங்கிய, பொலம்தொடி - தோள்வளையை, தேம்மலர்த்தொடை - வாசனை பொருந்திய மலர்மாலையையணிந்த, திண்புயம் - திண்ணிய தோள்களில், சேர்த்தினர் - தரித்தார்கள் எ-று.

கற்பகம்புல்லிய காமர் வல்லிபோற் பொலந்தொடியைத் திண்புயஞ் சேர்த்தினரெனலால் உவமையணி. பொலங்கொடி எனவருதல். "பொன்னென் கிளவி யீறுகெட முறையின்" எனவரூஉந் தொல்காப்பியச் சூத்திரவிதியானடக்கிக் கொள்க. 9

துளங்குதெண்டிரைசூழ்கடல்வையக
மளந்துகோடற்கருவிலைப்பூந்துகில்
விளங்குபொன்னங்கிரியினைவெண்முகில்
வளைந்ததென்னமருங்கினிற்சாற்றினர்.

இ-ள். துளங்கு – அசைகின்ற, தெண்திரைசூழ்கடல் – தெளிந்த அலைகளையுடைய கடலாற்சூழப்பட்ட, வையகம் – பூமியை, அளந்து கோடற்கு – அளவிட்டுக்கொள்வதற்கு, அருவிலை – அரியவிலையையுடைய, பூந்துகில் – அழகியஆடையை, விளங்கு – பிரகாசிக்கின்ற, பொன் அங்கிரியினை – மேருமலையை, வெண்முகில் – வெள்ளைமேகமானது, வளைந்தது என்ன – சூழ்ந்ததுபோல், மருங்கினில் – அரையின்கண், சாத்தினர் – தரித்தார்கள் எ-று.

பொன்னங்கிரியினை வெண்முகில் வளைந்ததென்னப் பூந்துகில்மருங்கினிற் சேர்த்தினரெனலால் உவமையணி. 10

பாந்தளேந்தியபார்பொதுநீக்கிய
வேந்தல்சேவடிப்போதினெழில்பெற
வேந்தர்பொன்முடிதேய்த்துவிளங்கிய
காந்துபைம்பொற்கணைகழல்வீக்கினர்.

இ-ள். பாந்தள் – ஆதிசேடனால், ஏந்திய – சுமக்கப்பட்ட, பார் – பூமியை, பொதுநீக்கிய – யாவருக்கும் பொதுவாதலைநீக்கிய, ஏந்தல் – நளனது, சேவடிப்போதின் – சிவந்த பாதமலர்களில், எழில்பெற – அழகுபெறும்படி, வேந்தர் – அரசர்களுடைய, பொன்முடி – சுவர்ணகிரீடங்களால், தேய்த்து – தேய்க்கப்பட்டு, விளங்கிய – பிரகாசித்த, காந்து – சொலிக்கின்ற, பைம்பொன் – பசும்பொன்னாற் செய்த, கணைகழல் – ஒலிக்கும் வீரக்கழலை, வீக்கினர் – கட்டினர்கள் எ-று.

பூமி அரசர்க்கெல்லாம் பொதுவாயிருப்பதை நீக்கித் தனதாக்கியாளுகையாற் பார்பொதுநீக்கிய எந்தலென்றார். வீரத்தன்மை தோன்றக் கணைகழல் வீக்கினரெனப்பட்டது. 11

இன்னபேரணியாவுமெழில்செயத்
துன்னியெங்குமுழவந்துவைத்திடப்
பொன்னஞ்சூழிப்புகர்முகவெற்பின்மேன்
மன்னர்மன்னன்மகிழ்ச்சியோடேகினன்.

இ-ள். இன்ன – இப்படிப்பட்ட, பேர் அணியாவும் – பெரியவிலையுள்ள ஆபரணங்களனைத்தும், எழில்செய் – அழகினைச்செய்ய, எங்கும் – எவ்விடத்தும், துன்னி – நெருங்கி, முழவம் – பேரிகைகள், துவைத்திட – ஒலிசெய்ய, பொன் – பொன்னாற்செய்த, அம் – அழகிய, சூழி – முகபடாத்தையுடைய, புகர்முகம் – புள்ளிபெற்ற முகத்தையுடைய, வெற்பின்மேல் – யானையின்மேல், மன்னர் மன்னன் – நளனவன், மகிழ்ச்சியோடு – மகிழ்ச்சியுடன், ஏகினன் – சென்றான் எ-று.

அரசன் புறப்படல் யாவர்க்குந் தெரிவித்தல்போல் எங்குமுழவந்தவை த்திடவென்றும், சக்கரவர்த்தி யென்பதுதோன்ற மன்னர் மன்னனென் றுஞ்சொல்லினர். இதுமுதல் வீதிப்பவனிவருதல் கூறப்படுகின்றது திரு மணக்காலத்தில் யானைமேற் பவனிபோதல், விநாயகக்கடவுள் திருமணத் தும், வேலிறையாம் யாழ்ப்பாணம் புதுச் சந்நிதிக்கோயிலமர் கந்தநாதன் றிருமணத்துங் காண்க. 12

நேமிசூழ்ந்தநெடுநிலமன்னவர்
தாமவெண்குடைதாங்கினர்பின்வர
வாமமேகலைமங்கையரங்கையிற்
காமர்செம்பொற்கவரியிரட்டவே.

இ-ள். நேமி சூழ்ந்த – சமுத்திரஞ் சூழ்ந்த, நெடுநிலமன்னவர் – நெடிய பூவுலகத்தரசர், தாமம் – மாலையணிந்த, வெண்குடை – வெண்கொற்றக் குடையை, தாங்கினர் – சுமந்தவராகி, பின்வர – பின்னேவரவும், வாமம்- அழகிய, மேகலை – மேகலாபரணத்தையுடைய, மங்கையர் – மாதர்கள், அம் கையில் - அழகியகையினால், காமர் – அழகிய, செம்பொன் – சிவந்தபொற் காம்பையுடைய, கவரி – சாமரைகள், இரட்ட – வீசிவரவும் எ-று.

வட்டவடிவாகலின் "நேமி" என்றும், நிலம்வரையறைப்படாமையின் "நெடுநிலம்" என்றும், சக்கரவர்த்திக்குரிய வெண்கொற்றக்குடையைத் தாங்குதற்குள்ளார் அரசர் என்பார் "மன்னவர்...தாங்கினர்" எனவும்கூறி னர். நிலம் – நிலத்தலையுடையது எனக்காரணங்கொள்க. குடை தாங்கு தல் அருமையாகலால், அதற்கேற்ப அரசரையும், கவரியிரட்டல் எளிதாக லால், அதற்கேற்ப மங்கையரையுஞ் சொல்லினர் என்றலுமாம். இதுமுத லிரண்டு குளகம். தாங்கினர் – வினைமுற்றெச்சம். அங்கை – உள்ளங்கை என்பதுமாம். செம்பொன் என்பது ஆகுபெயராய்க் காம்புக்கு ஆயிற்று.

தண்ணந்தாமரைத்தாக்கணங்கன்னவர்
கண்ணுநெஞ்சுமுவந்துகளிப்புற
வெண்ணில்வேதியராசியமும்பிட
வண்ணமாமணிமண்டபத்தெய்தினான்.

நளன் விவாகமண்டபம் வருதல்.

இ-ள். தண் அம் தாமரை – குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரிலிரு க்கின்ற, தாக்கணங்கு அன்னவர் – இலக்குமியையொத்த மங்கையர், கண் ணும் நெஞ்சும் – கண்ணும் மனமும், உவந்து – மகிழ்ச்சியடைந்து, களிப்பு உற – களிப்புமிக, எண் இல் வேதியர் – அளவற்ற பிராமணர்கள், ஆசி இயம் பிட – ஆசீர்வதிக்க, வண்ணம் மாமணி – அழகிய மாணிக்கமணிகள் பதித்த, மண்டபத்து - மண்டபத்தில், எய்தினான் - வந்துசேர்ந்தான் எ-று.

இனைக்கு நெஞ்சு களித்தற்கு நோக்குங்காண் காரணமாகலால் கண்ணு நெஞ்சு முவந்து களித்திடவென்றும், மண்டபத்தெய்துஞ் சமயமாதலில்

எண்ணில் வேதியராசி யியம்பிட வென்றுஞ் சொல்லினர். தாக்கணங்கு-நீண்டவருத்தந் தெய்வம் என்பர் ஆசிரியர் நச்சினர்க்கினியர். 14

வேனிலங்கணைவேள்புறங்காத்திடப்
பானலுண்கட்பனிமதிவாணுதற்
றேனவாங்குழற்றேமொழியைக்கொடு
மானினோக்கின்மடந்தையரெய்தினர்.

தமயந்தி மணமண்டபம் வருதல்.

இ-ள். வேனில் – வசந்த காலத்திற்குரிய, ஐங்கணைவேள் – பஞ்சபாணங்களையுடைய மன்மதனனவன், புறம் காத்திட-புறங்காத்துவர, பானல் அம் கண் – நீலோற்பலம்போன்ற கண்களையும், பனிமொழி – குளிர்ச்சி பொருந்திய சொல்லையும், வாள்நுதல் – ஒளிபொருந்திய நெற்றியையும், தேன் அவாம் – வண்டுகள் விரும்புகின்ற, குழல் – கூந்தலையுமுடைய, தேமொழியைக்கொடு – தமயந்தியை யழைத்துக்கொண்டு, மானின்நோக்கின்-மான் பார்வையையொத்த பார்வையையுடைய, மடந்தையர் – மாதர்கள், எய்தினர் – அடைந்தார் எ-று.

நளனே வெல்லும்படி வந்தவளாதலால் அதுபற்றி வேள்புறங் காத்திட வென்றார், வேள் – விரும்பப்படுவன், கந்தக்கடவுளே நீக்கற்கு "ஐங்கணை வேள்" என அடைகொடுத்தார். 15

கள்ளரூமலர்நாற்றியெண்காவத
மூள்ளகன்றவொளிர்மணிமாடத்தின்
பிள்ளைமானிகர்நோக்கியைப்பெய்கழல்
வள்ளலோடுமணத்தவிசேற்றினர்.

தம்பதிகள் மணத்தவிசிருத்தல்.

இ-ள். கள் அரு – தேனருத – மலர் நாற்றி – மலர்மாலை தூக்கி, எண்காவதம் – எட்டுக்காத தூரம், உள் அகன்ற – உள்ளேவிரிந்த, ஒளிர் – பிரகாசம்பொருந்திய, மணிமாடத்தின் – மணிகள் பதித்த உபரிகையில், பிள்ளை-மான் நிகர் – இளமான் பார்வைபோன்ற, நோக்கியை – பார்வையுடைய தமயந்தியை, பெய்கழல் – வீரக்கழலையணிந்த, வள்ளலோடு – நளனுடன், மணித்தவிசு – கல்யாணமேடையில், ஏற்றினர் – ஏற்றினர்கள் எ-று.

இடமுழுவதும் அலங்கரித்தமை தோன்றக் "கள்ளரூமலர் நாற்றியெண் காவத" மென்றார். ஒருகாவதம் ஆவது – பத்தமைல் தூரம் என்க. எட்டுக் காவதம் எனவே எண்பது மைல்தூரம் என்பதுபெறப்படும். பிள்ளை-இளமைகுறித்த பெயர்ச்சொல். 16

உதகநல்குல்லோரையிஃதென
விதியினடிக்கணிதர்விளம்பலும்

பதலியார்த்தெழப்பாவையைநல்கிய
மதுமலர்த்தொடைமன்னெழுந்தானரோ.

தாரைவார்க்க வீமனெழுதல்.

இ-ள். உதகம் நல்கும் - தாரைவார்க்கின்ற, நல் ஓரை - நல்ல முகூர்த்தம், இஃது என - இதுவென்று, விதியினுடி - சோதிடவிதிப்படிபார்த்து, கணிதர் - கணிதநூலோர், விளம்பலும் - சொன்னவளவில், பதலை - வாத்தியங்கள், ஆர்த்த எழ - மிகவொலிக்க, பாவையை நல்கிய - தமயந்தியைப் பெற்ற, மதுமலர்த் தொடை - தேனொழுகு மலர்மாலையையணிந்த, மன்-வீமன், எழுந்தான் - எழுந்தனன் எ-று.

தாரைவார்க்கின்ற காலமாகலாற் பதலியார்த்தெழப் பாவையைநல்கிய மன்னெழுந்தா னென்றார். பதலை - ஒருகட்பறையுமாம். அரோ - அசை நிலை. 17

கமலமீதுசெங்காந்தளலர்ந்தெனக்
குமரனங்கையிற்கோல்வளைசெங்கையைத்
திமயமாதுமிறைவனும்போலவாழ்ந்
தமைதிரென்னவரும்புனனல்கினான்.

வீமன் தாரைவார்த்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். கமலம்மீது - தாமரை மலரின்மேல், செங்காந்தள் அலர்ந்து என - சிவந்த காந்தண்மலர் பூத்ததுபோல், குமரன் அங்கையில் - நளனது அழகியகைம்மேல், கோல்வளை - தமயந்தியினது, செங்கைவைத்து - சிவந்தகையைவைத்து, இமயம்மாதும்-பார்வதியும், இறைவன்போல் வாழ்ந்து-பரமசிவனும்போல் வாழ்ந்து, அமைதிர் என்ன - பொருந்தியிருமென்று, அரும்புனல் - அரிய நீரை, நல்கினான் - வார்த்தான் எ-று.

கமலமலரையும் காந்தண்மலரையும் நளன் தமயந்தியென்னும் இருவர் கரங்களுக்கும், இமயமாதரையும் இறையையும் அவ்விருவர்க்கும் இணை சொல்லுதலால் உவமையணி. "இமயமாது மிறைவனும்போல" எனவாழ்த்திய தெற்றலோவெனின், மலர்மணம், மரவைரம்போல, ஓர்கணமும் பிரியாது நின்று "எத்திற நின்ற னீசனத்திற மவளுநிற்பள்" என்னுஞ்செந்தமிழுப நிடதமாகிய சிவஞான சித்தியார் உரைத்தபடி, அவன்றிறமா நிற்றலின் என்க. அன்றியும் அழிவின்மை, உடமை, அன்பு, மக்கட்பேறு, அறம்வளர்த்தலாதிய காரணங்களும் பற்றியாம். இமயச்செல்வி யொருகணம் பிரிந்திருந்த காலத்து உலகத்தின் படைத்தலாதி தொழில்களில்லாமற் போயின என்று கந்தபுராணம், சௌந்தரிய லகரி முதலாயின கூறுமாறுணர்க. ஏனைத் தேவர்க்கும் தேவியார்க்கு மிப்பெருமைகளொன்று மில்லையென்பது வெளிப்படை. 18

சூர்த்தமூழ்குவடம்புயனுரழற்
கேய்ந்தயாவுமினிதுமுடித்தபி

ஞய்ந்தநான் மறையின்வழியாயிழை
காந்தண்மெல்விரற்கைபிடித்தானரோ.

இ-ள். சாந்தம் மூழ்கு – சந்தனக்குழம்பால் மூழ்கப்பெற்ற, தடபுயன்-பருத்த புயங்களையுடைய நளனனவன், ஆர் – பொருந்திய, அழற்கு ஈய்ந்த யாவும் – அக்கினி காரியத்துக்குப் பொருந்திய வஸ்துக்களையும், இனிதுமுடித்தபின் – இனிமையோடுசெய்து முடித்தபின்பு, ஆய்ந்த – ஆராய்ந்தறிந்த, நான் மறையின் வழி – வேதமார்க்கப்படி, ஆயிழை – தமயந்தியினது, காந்தள் மெல்விரல் – காந்தளரும்புபோன்ற மெல்லிய விரல்களை, கை – தன்கையால், பற்றினன் – பிடித்தான் எ-று. அரோ – அசை.

வீவாகக் கோலந்தோன்ற "சாந்தமூழ்கு தடம்புய" னென்றும், அரசர்க்குப் பாணிக்கிரகணமே சிறப்பென்பது தோன்ற நான்மறையின் வழி ஆயிழைகாந்தண் மெல்விரல் கைப்பிடித்தென்றும், சொல்லினர். 19

பொங்குசெந்தழல்சூழ்வந்துபூம்பொரி
செங்கையாரச்சொரிந்துதிருமகள்
பங்கயப்பதம்பைம்பொனிணம்மிவைத்
தங்கண்வானத்தருந்ததிகாட்டினன்.

பொரியிரைத்தல், அம்மிமிதித்தல், அருந்ததிகாட்டல்கூறல்.

இ-ள். பொங்கு – மிகுந்த, செந்தழல் – அக்கினியை, சூழ்வந்து-வலம்வந்து, பூ பொரி – அழகிய பொரியை, செங்கை ஆர – சிவந்த கைநிறைய, சொரிந்து – அத்தீயிலிட்டு, திருமகள் – தமயந்தியினது, பங்கயம் பதம்-தாமரைமலர்போன்ற பாதத்தை, பைம்பொனின் – பசிய பொன்னுற்செய்த, அம்மிவைத்து – அம்மியின்மேற் றூக்கிவைத்து, அம்கண்வானத்து – அழகிய இடத்தையுடைய ஆகாயத்திலிருக்கின்ற, அருந்ததி – அருந்ததி கூட்சத்திரத்தை, காட்டினன் – காண்பித்தான் எ-று.

அக்கினி வலஞ்செய்து பொரியிறைத்து பாதத்தை அம்மியின்மேல் தூக்கிவைத்து அருந்ததி காட்டினனென்க. இப்படி செய்தற்குவிதி விவாகபத்ததியிற் காண்க. அருந்ததி – தடித்துப்பேசாதவள் என்பது காரணம். ந—ருந்ததி எனப் பிரிக்க. 20

ஏனையுள்ளனயாவுமுடித்தபின்
மானினோக்கியோர்வல்லியினொல்கிப்போய்த்
தானையங்கடற்றூதைபொற்றூளினிற்
றேனவாங்குழற்றேமலர்சூட்டினள்.

தமயந்தி தாதையை வணங்குதல்.

இ-ள். ஏனை உள்ளன – மற்றையகாரியங்கள், யாவும் – எல்லாம், முடித்தபின் – முடித்தபின்பு, மானின்நோக்கி – தமயந்தியானவள், ஓர்வல்லியின் – ஒருகொடிபோல், ஒல்கிப்போய் – அசைந்துபோய், தானைகடல்-

சேஞசமுத்திரத்தையுடைய, தாதை – தகப்பனுகிய வீமனது, பொன்தாளினில் – பொற்பாதங்களில், தேன் அவாம்-வண்டுகளால் விரும்பப்படுகின்ற, குழல் – கூந்தலாகிய, தேம்மலர் – வாசனை பொருந்தியமலரை, சூட்டினுள்-தரித்தாள் எ-று.

விவாகமுடிவில் தந்தையை வணங்கி மங்கலவாழ்த்துப் பெறுதல் மகளிர்க்கு மரபு ஆதலின், அவ்வாறு தமயந்தியும் தன்தாதையாகிய வீமனை வணங்கினளென்க. அம் – சாரியை. 21

சென்னி தாழ்த்துவணங்கியதேமொழி
மின்னு லாவியுவந்துவிதர்ப்பர்கோன்
பொன்னந்தாமரைப்பூவையுமாலும்போன்
மன்னர்கோளெடும்வாழ்கெனவாழ்த்தினுன்.

தம்பதிகளை வீமன் வாழ்த்துதல்.

இ-ள். சென்னி – தலையை, தாழ்த்து – தாழச்செய்து, வணக்கியபணிந்த, தேம்மொழி – தேன்போன்ற சொல்லையுடைய, மின் அனுலை-தமயந்தியை, உவந்து – மகிழ்ந்து, விதர்ப்பர் கோன் - வீமனுனவன், பொன் அம்தாமரைப் பூவையும் - இலக்குமியையும், மாலும்போல் – திருமாலையும் போல், மன்னர்கோளெடும் – களேடும், வாழ்க என் - வாழக்கடவையென்று, வாழ்த்தினுன் – வாழ்த்தினுன் எ-று.

இங்கே காப்பதருகி மாலேயம், செல்வமிருதிருத் திருமகளையும், களனுக்குத் தமயந்திக்கும் உவமை கூறலாயிற்று. அவ்விருவரையும்போல் நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்தினனெனினும் அமையும். வென் பிராமணனும், திருமால் கூத்திரியனும் எனமறை கூறியபடி அரசதர்மத்திற் கேற்பத் திருமாலேயும் கூறினுன். "இமையமாது மிறைவனும்போல, என்ற தோடு அமையாது" "பொன்னந்தாமரைப் பூவையுமாலும்போல்" என்று வீமன்கூறியது விதிவயத்தாலென்ப என்னே? காட்டின்கட் சானகியைப் பிரிந்த எக்குறைவிடுத்து, தானுமிரங்குற்றூற்போல, களதமயந்திகளும் அவ்வாறு கலிப்பயன் கோடல்வரு மூழாகலின் என்க. 22

முருகுவாய்மடுத்துண்டளிமூசுபூந்
தெரியன்மார்பினன்றேசிகர்தாடொழு
தருகுமன்பினுவந்துவிதர்ப்பர்கோன்
வரைகொண்மார்பமகிழ்வுறப்புல்லினுன்.

களன் குருவைவணங்கலும் மாமனைப் புல்லுதலும் கூறப்படுகின்றது.

இ-ன். முருகு – தேனை, வாய்மடுத்து உண்டு – வாயினுல்கொண்டு, அளி – வண்டுகள், மூச – மொய்க்கப்பெற்ற, பூ தெரியல்மார்பினன் – மலர் மாலேயையணிந்த மார்பையுடைய களனுனவன், தேசிகர் – ஆசிரியரது, தான் தொழுத – பாதத்தைவணங்கி, உருகும் – கரைகின்ற, அன்பின் – பத்

தியினால், உவந்து — மகிழ்ந்து, விதர்ப்பர்கோன் — வீமராசனுடைய, வரை கொள்மார்பம் — மலையின தழுவைக்கொண்ட மார்பினை, மகிழ்வு உற — மகிழ்ச்சியடைய, புல்லினன் — தழுவினன் எ-று.

தேசிகராதலில் தாடொழுதென்றும், தான் சக்கர வர்த்தியாகலின் விதர்ப்பர்கோன் வரைகொண்மார்பம் மகிழ்வுறப் புல்லினனென்றுஞ்சொல்லினர். 23

கோதினன்மறைக்கோதமனுதியா
மாதவத்துமுனிவருமன்னருங்
காதல்வேலைகரையழிந்தோங்கிட
* வாதரத்தொடுமாசியமம்பினர்.

முனிவர்கள் வாழ்த்துதல்.

இ-ள். கோது இல் — குற்றமற்ற, நான்மறை — நான்குவேதங்களையுடைய, கோதமன் ஆதியாம் — கௌதமமுனி முதலாகிய, மாதவத்து — பெரிய தவத்தைச்செய்யும், முனிவரும் — தபோதனரும், மன்னரும் — அரசரும், காதல் — ஆசையாகிய, வேலை — கடலானது, கரை அழிந்து — கரை கெட்டு, ஓங்கிட — உயர, ஆதரத்தொடும் — அன்புடனே, ஆசி இயம்பினர் — ஆசீர்வதித்தார்கள் எ-று.

தவமாதியவற்றிற் றலைமையுடைமைபற்றிக் கோதமனுதியா முனிவரென்றார். விவாகமுடிவில் ஆசிகூறல் பெரியோர் கடனென்பதாம். 24

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இன்னவைநிகழ்ந்தபின்னிறைவனுமணங்கனுஞ்
பொன்னரிமாலைகாற்றிப்பூம்புகைகமழ்ஊட்டிப்
பன்னருஞ்சிறப்புவாய்த்துபனியிருவிசும்புபாரின்
மன்னியதனயகோலமணவறையெய்தினாரே.

நளனும் தமயந்தியும் மணவரைபுகுதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். இன்னவை — இத்தன்மை யானவை, நிகழ்ந்த பின்னர் — நடந்த பின்பு, இறைவனும் — நளனும், அணங்கு அன்னாளும் — தமயந்தியும், பொன் அரிமாலை — பொன்னரிமாலைகளே, காற்றி — தொங்கக்கட்டி, பூம்புகை — அழகிய புகையை, கமழ் — பரிமளிக்கும்படி, ஊட்டி — ஊட்டுவித்து, பன்ன அரு-

* "ஆசி யியம்பினர் எனவே.

நமோ நமோ பவதி ஜாய மாநோக் காம்கேதரூஷ ஸாமேத்யக்ரே பாஹுந் தேவேப்யோவித தாத்யாயந் பிரசந்த்ரமாஸ்தி ராதிதீர்க்கமாயு: சதமாநம பவதிசதாயு: புருஷச் சதேந்திரிய ஆயுஷ்யே வேந்த்ரயேப்ராதிதிஷ்டதி!! நவ ஏவபதி ஜ்ரயமா என்றற் றொடக்கத்தவாய்வரும் சுலோகங்களைக் கூறி வாழ்த்துதலாம். இது சுவஸ்தியுபயுக்த வேத பாகமாகிய கல்யாண பஞ்சாதியிற் காண்க.

சொல்லுதற்கரிய. சிறப்புவாய்ந்த - சிறப்புப்பொருந்தி, பனி - குளிர்ச்சி பொருந்திய, இரு - பெரிய, விசும்பு - பொன்னுலகம், பாரில் - பூமியின் கண், மன்னியது அனைய - பொருந்தியிருந்தால் அதையொத்த, கோலம் - அழகிய, மணஅறை - படுக்கை யறையை, எய்தினர் - அடைந்தார்கள் எ-று.

பூவுலகில் அவ்வள வழகுள்ளவிட மொன்று மில்லாமையால் விசும்பு பாரின் மன்னியதனைய கோலமணவறையென்றார். 25

பாயிருட்பிழம்புசீத்துப்பகற்கதிருமிழும்வெய்ய
காயெரிமணியிற்செய்தகவின்றிகழ்மஞ்சமீது
தூயமென்பஞ்சியன்னத்தூவியூறினியசெப்பு
மாய்மயிர்மூதலூவைந்தடுக்கியவமளிசேர்ந்தார்.

நளதமயந்திகள் பஞ்சசயன மடைதல்.

இ-ள். பாய் - பரியாகின்ற, இருள்பிழம்பு - இருளினது திரட்சியை, சீத்து - போக்கி, பகல்கதிர் - சூரியகிரணங்களே, உமிழும் - கொப்பளிக்கின்ற, வெய்ய - வெவ்விய, காய் - சுடுகின்ற, எரி - அக்கினிபோன்ற, மணியிற் செய்த - மணிகளாற் செய்யப்பெற்ற, கவின்திகழ் - அழகுவிளங்குகின்ற மஞ்சம்மீது - கட்டிலின்மீது, தூய - சுத்தமாகிய, மெல் - மெல்லிய, பஞ்சி - பஞ்சியினாலும், அன்னம்தூவி - அன்னப் புள்ளினிறகாலும், ஊறு - பரிசம், இனிய - இனியவாக, செய்யும் - செய்கின்ற, ஆய் - ஆயாகின்ற, மயிர் மூதல் - மயிர்மூதலியவாக, மூவைந்து - மூவைந்தாக, அடுக்கிய - ஒன்றின் மே லொன்று சேர்த்த, அமளி - மெத்தையின்மேல், சேர்ந்தார் - சேர்ந்தார்கள் எ-று.

பஞ்சியெனப் பொதுப்படக் கூறினமையாற் செம்பஞ்சு வெண்பஞ்சு இரண்டுங்கொள்க. "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணமுறு தூவி யோடைந்து" என்றார் பிறரும். மூவைந்து என்றமையால் ஐந்தவகை யொன்றாகச் செய்த மூன்று மெத்தையெனக்கொள்க. அம்மூன்றும் ஒன்று போகநுகர்தற்கும், இரண்டு இருவரும் தனித்தனி நித்திரைசெய்தற்குமாம்.

போயிறுமருங்குலென்னப்புணர்முலைசுமக்கலாற்றாச்
சேயிழைபஞ்சியார்ந்தசிறடிக்கமலப்போதின்
மீயுயர்விசும்புபூத்தமின்னுருக்கொண்டதன்ன
வாயிரங்கோடிமாதரயினீர்சுழற்றிப்போனார்.

ஆலத்தி சுழற்றல்.

இ-ள். மருங்குல் - இடையானது, போல் இறுமென்ன - இற்றுப் போய்விடுமென்னும்படி, புணர்முலை-நெருங்கியமுலைகளே, சுமக்கல் ஆற்றா - சுமக்கமாட்டாத, சேய் இழை - தமயந்தியினுடைய, பஞ்சி ஆர்ந்த - செம் பஞ்சு நிறைந்த, சிறடி - சிறிய அடிகளாகிய, கமலம்போதின் - தாமரை மலரின்மேல், மீஉயர் - மேல்காகயர்ந்த, விசும்புபூத்த - மேகத்திலுண்டாகிய, மின் - மின்னல், உருக்கொண்டது அன்ன - பெண்வடிவுகொண்ட தென்

னும்படியுள்ள, ஆயிரங்கோடிமாதர் – ஆயிரங்கோடி மங்கையர்கள், அயினீர் – சோறிடப்பட்ட மஞ்சள்நீரை, சுழற்றி – சுழற்றுதல்செய்து, போனர் – போயினர்கள் எ-று.

அனேக மாதரென்பதற்கு ஆயிரங்கோடி மாதரென்றார். அயினீ ரென்பதற்கு முன்னுரைத் தாங்கு உரைக்க. 27

அருப்புமென்முலையாரைஞ்ஞூற்றைம்பதிற்றெண்மர்பைம்பொற்
பொருப்புறழ்தோழினற்கும்பொருகயற்கண்ணிணைட்கு
முருக்கிளர்மணியிற்செய்தலொளிகிளர்பசும்பொற்றட்டில்
கருப்புரத்தீபமேந்திக்கண்ணெச்சில்கழித்திட்டாரே.

நள தமயந்திகட்குக் கண்ணூறு கழித்தல்.

இ-ள். அரும்பு – தாமரையரும்பையொத்த, மெல் முலையார் – மெல்லிய முலைகளையுடைய மங்கையர்கள், ஐஞ்ஞூற்றைம்பதிற்று எண்மர் – ஐஞ்ஞூற்றைம்பத் தெட்டென்னுந் தொகையை யுடையவர்கள், பைம்பொன் – பசிய பொன்மயமாகிய, பொருப்பு உறழ் – மேருமலையையொத்த, தோழினற்கும் – புயங்களையுடைய நளனுக்கும், பொருகயல் கண்ணிணைட்கும் – கயற்கெண்டையை யொத்த கண்களையுடைய தமயந்திக்கும், உருகிளர் – உருவிளங்குகின்ற, மணியின்செய்த – நவமணிகளிற்செய்த, ஒளிகிளர் – ஒளிவிளங்குகின்ற, பசும்பொன் தட்டில் – பசியபொன்னாற்செய்த தட்டினில, கருப்பூரம் தீபம் ஏந்தி – கருப்பூர தீபத்தையேந்தி, கண் எச்சில் – திருட்டிதோஷத்தை, கழித்திட்டார் – போக்கினர்கள் எ-று.

அரும்பென்பது எதுகைநோக்கி அருப்பென விகாரமாயிற்று. கண் ணெச்சில் – கண்ணால் வந்ததோடம். 28

வாசனைகமழுஞ்சுண்ணம்வண்டிமிர்குழற்கன்மாலை
யோசனைகாறுஞ்சாந்தமொண்கருப்பூரம்பைங்காய்
காசறுசெப்பினுய்ந்தகமழ்சுவையமிழ்தினூடுத்
தூசுலாம்பருமவல்குற்றோழிகையேந்தினாரே.

இதுமுதலிரண்டுசெய்யுட்களாற் படுக்கையறையில் வைக்கும்பொருளை வைத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். வாசனை – பரிமளமானது, கமழும் – மணக்கின்ற, சுண்ணம் – பொடிகளையும், வண்டு இமிர் – வண்டுகளெனவிக்கின்ற, குழற்கல்மாலை – அழகிய மாலைகளையும், யோசனை – யோசனைதூரம், காறும் – கமழ்கின்ற, சாந்தம் – சந்தனத்தையும், ஒள் – ஒள்ளிய, கருப்பூரம் – பச்சைக் கருப்பூரத்தையும், பைங்காய் – அவர்க்காயையும், காசு அறு – குற்றமற்ற, செப்பின் – வட்டில்களில், ஆய்ந்த – ஆய்ந்தெடுத்த, கமழ் – பரிமளிக்கின்ற, சுவை – சுவையையுடைய, அமிழ்தினூடும் – அமிர்தத்தினே, தூசு உலாம் – ஆடைமேலசைகின்ற, பருமம் – அணிதரித்த, அல்குல் – நிதம்பத்தையுமுடைய, தோ

தையர் – மங்கையர்கள், எந்திளர் – தாங்கிளர்கள் எ-று. பருமம்-பதினெண் சாமுன்ன ஓர்மாலை.

சுண்ணமுதலியவும் போகத்துக்கு வேண்டிய பொருள்க ளெனக்கொள்க. திரையமிழ்து எனவும்பாடம். 29

பண்ணமை திவவினல்யாழ்பருமணியடப்பைதோக்கிற்
கண்வழுக்குறுசெஞ்சோதிக்கதிர்மணிக்கால்செய்வட்டம்
வெண்ணிறக்கவரிசெம்பொற்படியகமினையவெல்லா
மண்ணியமணிசெய்பைம்பூண் மடந்தையர்மருங்குவைத்தார்.

இ-ள். பண் அமை – இசையமைந்த, திவவின் – கட்டுக்களையுடைய, நல்யாழ் – நல்லயாழும், பருமணி – பரியமணிகள் கோத்த, அடப்பை – தாம்பூலப்பையும், நோக்கில் – பார்த்தால், கண்வழுக்கு உறு-கண்கள் கூசுகின்ற, செம்சோதி – சிவந்த காந்தியையுடைய, கதிர்மணி – கிரணங்களையுடைய மணிகள்பதித்த, கால்செய்வட்டம் – சாந்தாற்றியும், வெண்ணிறம் – வெள்ளிய நிறத்தையுடைய, கவரி – சாமரையும், செம்பொன் – சிவந்த பொன்னுற்செய்த, படியகம் – தம்பலப்படிக்கமும், இனைய எல்லாம் – ஆகிய இவை முதலிய வனைத்தையும், மண்ணிய – கழுவிய, மணிசெய் – மணிகள்பதித்த, பைம்பூண் – பசிய ஆபரணங்களையுடைய, மடந்தையர்-மாதர்கள், மருங்கு-அருகே, வைத்தார் – வைத்தனர் எ-று.

யாழ்முதலியவும் போகத்திற்கு வேண்டியனவாகலான் மாதர் மருங்கு வைத்தன ரென்றார். 30

பாம்பினைப்படத்தைமானும்பங்கயப்பருமவல்குற்
காம்புறழ்பசியமென்றோட்காரிகைவிழைவுநாணு
மேம்பலோடினிதுநோக்கியின்னுயிர்த்தோழிமார்கள்
பூம்புகைதவழ்ந்தாலவ்வனபொருமுகவெழினிவீழ்த்தார்.

சயனத் திரை வீழ்த்தல் சாற்றப்படுகின்றது.

இ-ள். பாம்பின் – சர்ப்பத்தினது, படத்தை – படத்தினை, மானும்-ஒத்த, பங்கயம் – தாமரைமலரையொத்த, பருமம் – பருமத்தையுடைய, அல்குல் – அல்குலையும், காம்பு உறழ் – மூங்கிலையொத்த, பசிய – பசுமையாகிய, மெல்தோள் – மெல்லிய தோளையுமுடைய, காரிகை – தமயந்தியினது, விழைவும் – விருப்பத்தையும், நாணும் – நாணத்தையும், எம்பலோடு – அகமலர்ச்சியுடன், இனிதுநோக்கி – இனிமையோடு பார்த்து, இன் உயிர்-இனியவுயிரையொத்த, தோழிமார்கள்-தோழிகள், பூ புகை – அழகிய புகையானது, தவழ்ந்தால் அன்ன – தவழ்ந்தா லதையொத்த, பொருமுக எழினி-பொருமுக வெழினியென்னுந் திரையை, வீழ்த்தார் – வீழ்த்தார்கள் எ-று.

பாம்பினைப் படத்தை யென்பதில் ஐ சாரியையாகக் கொண்டு பாம்பினது படமெனக்கொள்க. அன்றி உருபு மயக்கமெனினு மமையும். பங்கயத்தை மாதரல்குற்கு உவமைசொல்லுதல், "திருமுகங்கமல மினைவிழிகம

லஞ் செய்யவாய் கமலஞ்சி திலந்தாழ், வருமூலகமலம் தூணைக்காங்கமலம் வலம்புரி யுந்திபொற்கமலம், பெருகிய வல்குன் மணித்தடங்கமலம் பிடி நடைத் தாள்களுங்கமல, முருவவட்கவ்வா ரூதலினன்றே யுயர்த்தது பூவினு ட்கமலம்'' இதனுலறிக. பொருமுக வெழினியென்பது அரக்கத்திலிடு திரையெனக் கொள்க. அதுவழுவில் கேள்வி நன் னூலுணர்ந்தோ, ரெழினி தானே மூன்றென மொழிப "அவைதாம், ஒருமுகவெழினியும்பொருமுக வெழினியுங், கரந்துவாலெழினியு மெனமூவகையே'' இராசதானியிலும் அரக்கிலும் கோலமறைத்து வருமிடத்து மிடுவதாம். இச்செய்யுள் சிந்தா மணியுரையிற் காண்க. இது உவமையணி. 31

வரிமூலையோடுந்தோன்றிவளர்தொறும்வளர்ந்துவீங்கிப்
பெருகுநாண்சுமக்கலாற்றுப்பெய்ம்மலர்க்கொம்புபோல்வா
டிருமுகஞ்சிறிதுகோட்டிக்கயிற்புறமதனிற்றோன்றுகொள்
விரிமலர்க்கூந்தலாழமின்னெனநுடங்கிநின்றுள்.

இதுமுதல் ஏழுசெய்யுட்களால் ளனும் தமயந்தியும் கலத்தல் கழறியதாம்.

இ-ள். வரிமூல ஓடுந்தோன்றி - சந்தனக் கோலத்தையுடைய மூலை ஞண்டான போதுண்டாகி, வளர்தொறும் - அவைகள் வளருந்தோறும், வளர்ந்து — தானும்வளர்ந்து, வீங்கி — பருத்து, பெருநாண் - பெருகிய நாணை, சுமக்கல் ஆற்று - சுமக்கமாட்டாத, பெய் - பெய்கின்ற, மலர் - மல ரையுடைய, கொம்புபோல்வாள் - கொம்பையொத்த தமயந்தியானவள், திருமுகம் - திருமுகத்தை, சிறிதுகோட்டி - கொஞ்சம்வணக்கி, கயில்புறம் அதனில் - பிடரியின்மேல், தேம் கொள் - வாசனைகொண்ட, விரிமலர்க் கூந்தல் — விரிகின்ற மலரையணிந்த குழலானது, தாழ — சோர, மின் என- மின்னலைப்போல், நுடங்கி - துவண்டு, நின்றுள் - நின்றனள் எ-று.

தனங்களோடு தோன்றி வளர்வதாதலால் வரிமூலையோடுந்தோன்றி வளர்தொறும் வளர்ந்து வீங்கிப் பெருநாணென்றார். 32

கூற்றுறழ்கடங்கணிவிகொள்ளைகொண்டுண்ணவேவி
மாற்றமொன்றுரையாதிங்ஙன்மதிமுகங்கோட்டிநின்றீர்
சேற்றிதழ்க்கமலப்போதிற்றிருந்திழையனையீர்காத
லாற்றுமாறெவன்கொலாசைக்கடற்படுமளியன்றுனே.

இ-ள். கூற்று உறழ் - யமனையொத்த, தடங்கண்-விசாலம்பொருந்திய கண்ணை, ஆவி - என்னுயிரை, கொள்ளை கொண்டு உண்ண — கொள்ளையிட் டருந்த, ஏவி — அனுப்பி, மாற்றம் ஒன்று உரையாது - ஒருபேச்சும் பேசா மல், இங்ஙன் - இவ்விடத்தில், மதிமுகம் — சந்திரன்போன்ற முகத்தை, கோட்டி நின்றீர் - வேறுத்து நின்றீர், சேறு - சேற்றிலிருக்கின்ற, இதழ்கம லம்போதில் - இதழையுடைய தாமரைமலரி லிருக்கின்ற, திருந்து இழை அனையீர் - இலக்குமியையொத்தவரே! ஆசைக்கடல்படும் - ஆசைக்கடலில்

மூழ்கிய, அளியன் – எளியேன், காதல் - ஆசையை, ஆற்றும் ஆறு – சகிக்கு மாறு, எவன்கொல் – எப்படி எ-று.

மாதர் வலிந்தணைதலின் மிக்க சுகமென்று கருதி நளன் இவ்வாறுகூறி னான். கொள்ளை கொண்டுண்ணல் - அனைத்தையும் வருத்தியுண்டல். இவ் வனம் என்பது இங்கன் என மரூஉவி நின்றது. திருந்து இழை - அன் மொழித் தொகை. 33

வாட்டடங்கருங்கட்கூற்றைமலர்க்கையான்மறைத்தீராவி
கோட்டுமண்கொண்டுவீங்குகுவிமுலைக்களிநல்யானை
யாட்டுசாந்தகலம்போழாதளியனேன்றடந்தோட்கந்திற்
பூட்டிடலன்றேமுன்னம்புரிந்ததுமளியதாமே.

இ-ள். வாள் – வாள்போன்ற, தட – விசாலம்பொருந்திய, கருங்கண் கூற்றை - கரிய கண்ணுகியயமனை, மலர்க்கையால்-மலர்போன்றகையினால், மறைத்தீர் – மூடிக்கொண்டீர், ஆவி – உயிராகிய, கோட்டுமண் – கரை மண்ணை, கொண்டு – கொண்டு, வீங்கும் – பருத்த, குவிமுலை - குவிந்த முலை யாகிய, களி நல்யானை – களிப்பையுடைய யானையை, ஆட்டு சாந்து – சந்த னம் பூசிய, அகலம் – மார்பினிடத்தில், போழாது-பிளவாது, அளியனேன்– னுடைய, தடம்தோள் – பருத்ததோளாகிய, கந்தில் – தறியில், பூட்டிடி லன்றே – பூட்டினலன்றே, முன்னம் புரிந்ததும் – முன்செய்ததும், அளி யீதாம் - அன்பாகும் எ-று.

அந்த யானை கோட்டால் கரைமண் கொள்வதுபோல, முலையாகிய யானை உயிரைக் கொள்ளுமென்க. ஆவி – தடாகமுமாம். இது நாலிக் கண் புதைத்தலாம். உலகைபற்றி "மறைத்தீர்" என ஒருமை பன்மையா க்கூறியது. மற்றவற்றிற்கும் இதுவே கொள்க. 34

சுற்றங்கல்கூரவாழுந்தோமுறுசிறியர்போல
இற்றிடைமெலியச்செம்மாந்தெழுமுலைப்பாரம்பார்த்துங்
கற்றையங்குழலில்வீழ்ந்தமதநுகர்களிவண்டினின்
றற்றதுமக்குமேலோரளியெனவளித்தபேரே.

இ-ள். சுற்றம் - சுற்றத்தார், கல்கூர – வறுமையடைய, வாழும் – வாழ் கின்ற, தோம் உறு – குற்றத்தையுடைய, சிறியர்போல – சிறியவர்களைப் போல, இற்று – ஒடிந்து, இடை – இடையானது, மெலிய – வாட, செம்மா ந்து – அகமலர்ச்சியடைந்து, எழு – எழுகின்ற, முலைப்பாரம் – முலையினு டைய பாரத்தை, பார்த்தும் – நோக்கும், கற்றைக்குழலில் – மயிர்த்தொகுதி யாகிய கூந்தலில், வீழ்ந்த – விழுந்த, மதநுகர் – கள்ளையுண்கின்ற, களி- களிப்பையுடைய, வண்டினர் – வண்டுகளே, நுமக்கு – உமக்கு, மேலோர்-பெரி யோர், அளி என – அளியென்று, அளித்தபேர் – கொடுத்த பெயரானது, இன்று – இற்றை நாள், அற்றது – அற்றுவிட்டது எ-று.

இது வண்டோச்சி மருங்கணைதல். அஃதாவது ஒன்றும் அவள் பேசா மையால் வண்டையோட்டி மருங்கு செல்லுதலாம். இடையொடியும்படி

யெழுகின்ற மூலைப்பாரம் பார்த்துக் கற்றையங்குழலில் வீழ்தலால், நமக்கு மேலோர் அளியென அளித்தபேர் இன்றற்றதென்றூர். அளியென்பது-இங்கே—வண்டும் அன்புமாம். 35

பகைக்கடல்சுவற்றும்வைவேற்பகட்டெழின்மார்பினன்ற
னகத்திடைப்பெருகியோங்குமாசையங்கடலேயின்னே
முகைத்தமுழுமுல்லைமாலைமுருகுலாங்கோதைகாணூற்
றகைத்திடலரிதென்றெண்ணித்தன்னுளேமகிழ்ச்சிகூர்ந்தாள்.

இ-ள். பகைக்கடல் – பகையாகியகடலை, சுவற்றும்-சுவறச்செய்கின்ற, வைவேல் – கூரிய வேலையுடைய, பகடு எழில்-பகட்டுகின்ற அழகையுடைய, மார்பினன்தன் – மார்பையுடைய நளனது, அகத்து இடை – மனத்தின்கண், பெருகி ஓங்கும் - அதிகரித்துயர்கின்ற, ஆசையங்கடலை-ஆசையாகிய சமுத்திரத்தை, இன்னே – இப்பொழுதே, முகைத்து-அரும்பி, எழும் - எழுகின்ற, முல்லை மாலை – முல்லை மாலையினுடைய, முருகு – வாசனையானது, உலாம்-உலாவுகின்ற, கோதை-கூந்தலையுடைய தமயந்தியானவள், நாணூல்-தனது நாணினூல், தகைத்திடல் – தடுத்திடுவது, அரிது என்று எண்ணி-அருமையென்று நினைத்து, தன் உளே - தன்மனத்தினுள்ளே, மகிழ்ச்சி - மகிழ்ச்சியை, கூர்ந்தாள் - மிகுந்தாள் எ-று.

அரசனது இப்படிப்பட்ட காமத்தை நமது நாணற்றடுப்ப தரிதென்று தன்னுள மகிழ்ந்தன ளென்பதாம். 36

கழிமடநாணமச்சம்பயிர்ப்பெனுங்காவல்வேலை
யழிதரவாசைவெள்ளமகத்திடையடங்காதாகி
வழிவதேபோலவின்பம்வடிவெடுத்தனையநங்கை
பொழிகதிர்நிலவுநாணப்புன்னகைகோட்டினாளே.

இ-ள். கழி – மிகுந்த, மடம் – மடமும், நாணம் – நாணமும், அச்சம்-பயமும், பயிர்ப்பு எனும் – அருவருப்புமென்று சொல்லுகின்ற, காவல் – காவலையுடைய, வேலை - சமுத்திரமான து, அழிதர - அழியும்படி, ஆசைவெள்ளம் - ஆசையாகிய வெள்ளமான து, அகத்து இடை - மனத்தின்கண், அடங்காது ஆகி – அடங்காததாய், வழிவதேபோல – வழிகிறதேபோல, இன்பம்-இன்பமான து, வடிவு எடுத்த அனைய – ஒருவடிவுகொண்டதையொத்த, நங்கை – தமயந்தியானவள், பொழிகதிர் – கிரணத்தைப் பொழிகின்ற, நிலவும் நாண – சந்திரிகையும் நாணும்படி, புன் நகை – புன்சிரிப்பு, கோட்டினாள்-செய்தாள் எ-று.

மடம் முதலிய காவலை உறுதிப் படுத்துங் கால மன்றாகையால் அதைத் தானீக்கினமை தோன்றப் புன்னகை செய்தனளென்க. 37

குருமணிவலயமின்னுங்குமக்குவவுத்திண்டோள்
முருகுலாந்தாமமார்பன்முறுவலின்குறிப்புநோக்கித்

திருநலங்கனிய தின்றசெழுங்கடைமழைக்கட்பேதை
வருமுலைஞெமுங்கப்புல்லிமலரணைமேயினானே.

இ-ள். குரு - நிறம்பொருந்திய, மணி — மணிகள்பதித்த, வலயம் — கை யூரங்கள், மின்னும் — மின்னுகின்ற, குங்குமம் - குங்குமமணிந்த, குலவு-திரட்சிபொருந்திய, திண் — வலிமையையுடைய, தோள்-புயத்தையும், முருகு உலாம் — வாசனைவீசுகின்ற, தாமம் - மாலையணிந்த, மார்பன் — மார்பினையு முடைய நளனவன், முறுவலின் — புன்சிரிப்பினையுடைய, குறிப்பு நோக்கி — குறிப்பினைப்பார்த்து, திரு — சிறப்பினையுடைய, நலம் — சுகமான து, கனிய நின்ற — முதிரும்படி யிருந்த, செழுங்கடை — செழிய கடை யையுடைய, மழைக்கண் — குளிர்ச்சி பொருந்திய கண்ணையுடைய, பேதை - தமயந்தியினுடைய, வருமுலை — வளர்கின்ற முலையை, ஞெமுங்கப்புல்லி - அழுந்தத்தழுவி, மலர் அணை — மலர்மெத்தையில், மேயினான் — பொருந்தினான் எ-று.

உடனே முறுவற்குறிப்புணர்ந்த நளன் வருமுலை ஞெமுங்கப் புல்லி மலரணை மேயினனெனவே, தமயந்தியைத் தழுவிக்கொண்டே யவளோடுங் கூட அணையிற்சேர்ந்தானென்க. 38

ஆம்பலம்போதுமானுமணிதிகழ்பவளவாயிற்
றேம்பொதிக்தமுதமூறுஞ்செக்குவர்த்தேதறன்மாந்திப்
பாம்படுமல்குலாடன்பணைமுலைமணிக்கண்சேப்ப
வேம்பலுற்றினிதுபுல்லியிளநலம்பருகினானே.

இ-ள். ஆம்பல் அம்போது மானும் — அல்லிமலரையொத்த, அணி - அழகு, திகழ் — பிரகாசிக்கின்ற, பவளம்வாயில் — பவளம்போன்ற வாயில், தேம் — வாசனை, பொதிந்து — தங்கி, அமுதம் ஊறும் — அமிர்த மூறுகின்ற, செம்மூவர் - செம்பவளம் போன்ற அதரத்தினுடைய, தேறல் — தேனை, மாந்தி — உண்டு, பாம்பு அடும் - பாம்பின் படத்தையடுகின்ற, அல்குலாள் தன் — அல்குலையுடைய தமயந்தியினது, பணை — பருத்த, முலை — முலைகளி னுடைய, மணிக்கண் - கரியகண்களானவை, சேப்ப-சிவக்க, ஏம்பல் உற்று - இன்பத்தை யடைந்து, இனிது புல்லி — இனிதாகத் தழுவி, இளநலம் - இள நலத்தை, பருகினான் — அனுபவித்தான் எ-று.

இளநலம் பருகுதல், இங்கே அல்குற்பானமும், அதரபானமுமாம். அன்றியும் இளமைப்பருவத்திற் குரிய காம சுகத்தில் ஆந்தரப் புணர்ச்சி யெனினு மமையும். 39

கத்திகைக்கருமென்கூந்தல்கயிற்புறத்தவிழ்ந்துவீழ
முத்தரிச்சிலம்புபைம்பொற்கிண்கிணிமுரன்றுபாடத்
தத்தரிநெடுங்கண்சேப்பத்தடமுலைதாங்கலாற்ற
தெய்த்துநுண்மருங்குறேம்பவேந்தலோடாடினாளே.

இ-ள். கத்திகை — மலர்மாலையை யணிந்த, கருமென் கூந்தல் - கரிய மெல்லிய கூந்தலானது, கயிற்புறத்து — பிடரியினிடத்து, அவிழ்ந்து வீழ-

அவிழ்ந்து வீழவும், முத்து - முத்துக்களாகிய அரி — பரலையுடைய, சிலம்பு சிலம்புகளும், பைம்பொன் — பசிய பொன்னுற்செய்த, கிண்கிணி — சதங்கைகளும், முரன்று — ஒலித்து, பாட — பாடவும், தத்து — நெருங்குகின்ற, அரிசெவ்வரிபாய்ந்த, நெடுங்கண் — நெடிய கண்களானவை, சேப்ப — சிவக்கவும், தடமுலை — பருத்த முலைகளே, தாங்கல் ஆற்றா — சுமக்கமாட்டாது, எய்த்த — இளைத்த, நுண்மருங்குல் — நுண்ணிடையானது, தேம்ப — வருந்த, ஏந்தல் ஒடு — நளனோடு, ஆடினுள் — புணர்ந்தாள் எ-று.

ஒருதலைக்காமமாய் முடியாது தானும் அவ்வாறு நளனுடனுடினளென்றார். இது உபரிசுரதம் என்னும் தலைவி புணர்ச்சியின்மை கூறப்படுதலாற் றன்மை நவிற்சியணி. 40

களிக்கயல்பொருதுநீண்டுகதுப்பினையளக்கும்வேற்கட்
டுளிப்புயன்மின்னினன்னுட்டொண்டைவாயமுதமாந்தித்
தளிர்த்தெழுமுவகைபொங்கத்தண்ணறுஞ்சாந்தமார்ப
னளப்பருங்களிகொள்காமக்கடலகத்தழுந்தினானே.

இ-ள் களி — களிப்பையுடைய, கயல் - கயற்கண்ணையை, பொருது - போர்செய்து, நீண்டு — நெடுகி, கதுப்பினை அளக்கும் — கூந்தலினை யளக்கா நின்ற, வேல்கண் — வேல்போன்ற கண்ணையுடைய, துளி - துளியையுடைய, புயல் - மேகத்திற்கேறன்றிய, மின்னின் அன்னுள் — மின்னலையொத்த தமயந்தியினது, தொண்டைவாய் — கோவைக்கனியையொத்த வாயிலுண்டாகிய, அமிர்தம் மாந்தி - அமிர்தத்தையுண்டு, தளிர்த்து — துளிர்த்து, எழும் - எழுகின்ற, உவகை — மகிழ்ச்சியானது, பொங்க - மிக, தண் - குளிர்ச்சி பொருந்திய, நறு - நல்ல, சாந்தம்மார்பன் — சந்தனத்தை யணிந்த மார்பினையுடைய நளனவன், அளப்பு அரு - அளத்தற்கரிய, களிகொள் — களிப்பைக்கொண்ட, காமம் கடல் அகத்து - காம சமுத்திரத்தில், அழுந்தினன் - மூழ்கினன் எ-று.

காமக் கடலகத் தழுந்தல் — புணர்ச்சி முடிவில் அவசத்தினுல் முலையிடைத் துயிறலை யென்க. 41

அலங்கலங்குன்றமன்னன்மணிவரையகலமூழ்கி
நலங்கெழுகலவைச்சாந்துநானமுமழிதலோடும்
மிலங்கொளிவயிரப்பைம்பூணிளமுலைவடுக்கண்டேங்கி
பொலங்கொடிகாணிதேடும்பொய்த்துயில்கூர்ந்தாளன்றே.

இ-ள். அலங்கல் - மாலையையணிந்த, அம் — அழகிய, குன்றம் அன்னன் — மலையையொத்த நளமகாராசனது, மணி — அழகிய, வரை — மலை போன்ற, அகலம்மூழ்கி — மார்பினிடத்திலே மூழ்கி, நலம்கெழு — நன்மை பொருந்திய, கலவைச் சாந்தும் — கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பும், நானமும் — கத்தூரியும், அழிதலோடும் — அழிந்தவளவில், இலங்கு ஒளி — விளங்குகின்ற வொளியையுடைய, வயிரம்பைம்பூண் — வச்சிராபரணத்தையுடைய, இளமுலை — இளமைபொருந்திய தனத்தினிடத்திலே, வடுக்கண்டு ஏங்கி-

வடுவைக்கண்டிரங்கி, பொலம் கொடி – பொற்கொடிபோன்ற தமயந்தியானவள், நாணினெடும் – நாணத்துடனே, பொய்த்துயில் கூர்ந்தாள் – பொய் நித்திரையைச் செய்தாள் எ-று. அன்று, ஏ – அசைகள்.

முலையின்மேற் கணவன் செய்த வடுவாதலால் தோழிகள் கண்டால் என் சொல்வார்களோவென வெண்ணி வடுக்கண்டேங்கி யென்றார். 42

புலவியிற்றுயின்றீண்டின்முனிந்திடும்பூவையென்ன
மலரணைப்புறத்துத்தானுந்துயிறல்போற்கிடப்பவாய்ந்த
கலவியின்வேட்கைதூண்டக்கனவினில்வெருவினுள்போன்
முலைமுகடுழந்தவேந்தன்முழுவுத்தோள்புல்லினாளே.

இ-ள். புலவியின் – பிணக்கினால், துயின்றாள் – நித்திரைசெய்தாள், தீண்டின் – தொட்டால், முனிந்திடும் – கோபஞ்செய்வாள், பூவைஎன்ன – தமயந்தியென்று, மலர் அணைப்புறத்து – மலரணையினிடத்தில், தானும் துயிறல்போல் – தானும் நித்திரை செய்தல்போல், கிடப்ப – படுத்திருக்க, வாய்ந்த – பொருந்திய, கலவியின் – புணர்ச்சியினுடைய, வேட்கை – ஆசையானது, தூண்ட – தூண்டுதல் செய்ய, கனவினில் – கனவினிடத்திலே, வெருவினுள்போல் – பயந்தவள்போல, முலைமுகடு – முலையினுச்சி, அழுந்த – அழுந்தும்படி, வேந்தன் – நளமகாராசனுடைய, முழவுத்தோள் – மத்தளம்போன்ற தோளை, புல்லினாள் – தழுவினாள் எ-று.

மாதர் தமக்கு வேட்கை மிகுந்திடினும், புணர்ச்சியில் மூந்துவதில்லையென்பது தோன்றக் கனவினில் வெருவினுள்போ லென்றார். 43

புல்லலுமகிழ்ச்சிகூரப்புணர்முலைகுழையமோந்து
மெல்லிதழமுதமாந்திமேகலைநெகிழ்த்தலோடு
நல்லெழில்கனிந்தகோதைநகையுளத்தடக்கலாற்றாள்
முல்லைமென்முகையுநாணவரும்பிளமுறுவல்பூத்தாள்.

இ-ள். புல்லலும் – தழுவிக்கொண்ட வளவில், மகிழ்ச்சி – சந்தோடமானது, கூர – அதிகரிக்க, புணர் – நெருங்கிய, முலை – தனங்கள், குழைய மோந்து – குழையும்படி யுச்சியின்மோந்து, மெல் – மிருதுவாகிய, இதழ் – அதரத்தினுடைய, அமுதம்மாந்தி – அமிர்தத்தையுண்டு, மேகலை – மேகலாபரணத்தை, நெகிழ்த்தலோடும் – அவிழ்த்த வளவில், நல் – நல்ல, எழில் – அழகானது, கனிந்த – முதிர்ந்த, கோதை – தமயந்தியானவள், நகை – மகிழ்ச்சியை, உளத்து – மனத்தின்கண், அடக்கல் ஆற்றாள் – சகிக்காத வளாய், முல்லை – முல்லையினுடைய, மெல் – மிருதுவாகிய, முகையும் – அரும்புகளும், நாண – நாணும்படி, அரும்பு – உண்டாகின்ற, இள – இளமையாகிய, முறுவல் பூத்தாள் – தந்தங்கள்தோன்ற நகைத்தாள் எ-று.

தான் கனவிற் பயந்தவன்போல் தழுவியது நளன் உள்ளபடி யென்று நினைத்தானென்று நகையுளத்தடக்க லாற்றாளாய் முறுவல் பூத்தா ளென்றார். 44

புருவவிற்கோலியுள்ளம்போழ்ந்துகட்கணைகளோட
வுருவத்தாருடையவொற்றைவலம்புரியொலிப்பவிம்மி
வரிமுலைக்களிநல்யானைமருமம்பாய்ந்துழக்கமன்றல்
விரிமலர்க்கோதைகாமவெஞ்சமம்வீளத்திட்டாளே.

இ-ள். புருவம் - புருவமாகிய, வில் - தனுவை, கோலி - வளைத்து, உள்ளம் — மனத்தை, போழ்ந்து - பிளந்து, கண் — கண்களாகிய, கணைகள் - பாணங்கள், ஓட — ஓடவும், உருவம் - வடிவம் பொருந்திய, தார் உடைய - மாலையையுடைய, ஒற்றைவலம்புரி - ஒற்றைச் சங்கமாகிய மிடறு, ஒலிப்ப - சத்திக்க, விம்மி - பூரித்து, வரி - சந்தனக்கோலம் வளைந்த, முலை - தனங்களாகிய, களி - களிப்பையுடைய, நல் - நல்ல, யானை - யானையானது, மருமம்பாய்ந்து - மார்பினிடத்திற் பாய்ந்து, உழக்க - கலக்க, மன்றல் - வாசனையை, விரி — விரியச்செய்கின்ற, மலர் - மலராற்றொடுத்த, கோதை - மாலையையணிந்த தமயந்தியானவள், காமம் — காமமாகிய, வெஞ்சமம் - வெவ்விய யுத்தத்தை, வீளத்திட்டாள் — செய்தாள் எ-று.

தமயந்தியும் புருவவில் முதலிய சாதனங்களைக்கொண்டு நளனோடு காமப்போர் வீளத்தன ளென்க. 45

திருநுதற்பொடித்தவேர்விற்றேங்கமழ்திலகந்தேயப்
புரிமுறுக்கவிழ்ந்துதாழ்ந்தபொலங்குழைதிருவில்வீச
மருமலர்க்கூந்தல்சோரவசமழிந்துருகிவேந்த
னெரிமணியாரமார்பினின்றயில்பொருந்தினாளே.

இ-ள். திரு — அழகிய, நுதல் - நெற்றியின்கண், பொடித்த — உண்டாகிய, வேர்வின் — வேர்வையினாலே, தேம் — வாசனை, கமழ் — வீசுகின்ற, திலகம் - சிந்தூரப்பொட்டு, தேய — அழியவும், புரி — புரிந்த, முறுக்கு — முறுக்குகள், அவிழ்ந்து — நீங்கி, தாழ்ந்த-தொங்கிய காதினிடத்து, பொலம்-பொன்னினாற்செய்த, குழை - குண்டலங்கள், திரு — அழகிய, வில் - பிரகாசத்தை, வீச — வீசவும், மருமலர் - வாசனைபொருந்திய மலர்களையணிந்த, கூந்தல் - அளகபாரமானது, சோர - சரியவும், வசம் அழிந்து — பரவசப்பட்டு, உருகி - மனமுருகி, வேந்தன் — நளமகாராசனுடைய, எரி — பிரகாசிக்கின்ற, மணி - மணிகள்பதித்த, ஆரம்மார்பின் — பதக்கமணிந்த மார்பினிடத்தில், இன்துயில் — இனிதாகிய நித்திரையை, பொருந்தினாள் — கொண்டனள் எ-று.

இங்ஙனம் காமப்போர்வீளத்த தமயந்தி பரவசப்பட்டு நளன் மார்பில் நித்திரை செய்தன ளென்க. 46

கலவியின்மயக்கந்தீர்ந்தகனிபடுகிளவியாட
னலர்முலையாக்கைதவந்தனிவடமணிந்துலாங்குஞ்
சிலைநுதற்றிலகந்தீட்டித்தேங்கமழ்கூந்தல்கைசெய்
திலைமலர்க்கோதைசூட்டியிழைபலதிருத்தினாளே.

இ-ள். கலவியின் – புணர்ச்சியிற்றோன்றிய, மயக்கம் – மயக்கமானது, தீர்ந்த – நீங்கிய, கனிபடு – பழம்போற் சுவைபொருந்திய, கிளவியாள்தன்-சொற்களையுடைய தமயந்தியினது, அலர் – பரந்த, முலை-தனங்களையுடைய, ஆகம் – மார்பை, தைவந்து – தடவி, அணி – அழகிய, வடம் – மணிவடங்களை, அணிந்து – தரித்து, வாங்கும் – வளைக்கின்ற, சிலை – வில்போன்ற, நுதல் – நெற்றியினிடத்து, திலகம்தீட்டி-சிந்துரப்பொட்டிட்டு, தேம்கமழ்-வாசனைவீசுகின்ற, கூந்தல் – கூந்தலை, கைசெய்து – ஒழுங்குசெய்து, இலை-மருமுதலிய இலைகளோடு, மலர்க்கோதை – மலர்மாலையை, சூட்டி-தரித்து, இழை பல – பலவாபரணங்களை – திருத்தினன் – திருத்தச்செய்தான் எ-று.

கணவர் மாதர்க்குக் கலவியி லிவ்வாறு கூந்தன் முதலியவை திருத்த லியற்கையாதல் காண்க. 47

* தெளிவுமிழ்ந னமிழ்தமன்ன தேம்படுகிளவியாட
னொளிகிளர்முகத்துலாயவோடரித்தடங்கண் போலக்
களியிளஞ்சுரும்புகாணீர்கண்டனவுளவோசொல்லீர்
முளரிநாண்மலரிற்பூத்தமுழுநெறிக்குவளைப்போதே.

இ-ள். தெளியும் – தெளிந்த, இன் – இனிதாகிய, அமிழ்தம் அன்ன-அமிர்தம்போன்ற, தேம்படு – மதுரம்பொருந்திய, கிளவியாள்தன் – சொற்களையுடைய தமயந்தியினது, ஒளி – காந்தியானது, கிளர் – விளங்குகின்ற, முகத்து உலாய – முகத்தினிடத் துலாவுகின்ற, ஓடு-காதளவு மோடாகின்ற, அரி – செவ்வரிபரந்த, தட – விசாலம்பொருந்திய, கண்போல – கண்கள் போல, களி – களிப்பையுடைய, இள – இளமையாகிய, சுரும்புகாள்-வண்டுகளே, நீர் – நீங்கள், கண்டன – பார்த்தவை, உளவோ – உண்டோ, சொல்லீர் – சொல்லுங்கள், முளரி – தாமரையாகிய, நாள் – அன்றலர்ந்த, மலரின்-மலரின்மேல், பூத்த – உண்டாகிய, முழுநெறி-முழுநெறிப்பையுடைய, குவளைப்போது – நீலோற்பலங்களை எ-று. 48

தாமரைப்பொகுட்டின்மேயதாக்கணங்கனையாய்நெஞ்ச
மேமுறவரினுநின்னையிம்மையிற்பிரியேனென்ன
வாமமேகலையினைதுமையிற்பிரிவையென்னுக்
காமருகுவளைபோலுங்கண்பனியுகுப்பநின்றாள்.

---

* இது வண்டுகளை முன்னிலைப் படுத்திக் கூறியதாகும். இங்ஙனம் ஆலவாய்க்கடவுள் தருமி என்னும் அந்தணர்க் களித்தருளியதிருமுகப் பாசுரத்துங் கூறியருளியது காண்க. அதுவருமாறு:—

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது செழிஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றெரிவை கூந்தலி
னறியவு முளவோ நீ வறிதுமூ பூவே.

இ-ன். தாமரை பொகுட்டில் – தாமரைக் கொட்டையின்மேல், மேய-பொருந்திய, தாக்கணங்கு அனையாய் – இலக்குமியை யொத்தவளே! நெஞ்சம் – மனமானது, ஏமம் – வருத்தம், உறவினும் – பொருந்தவந்தாலும், நின்னை – உன்னை, இம்மையில் – இப்பிறப்பில், பிரியேன் என்ன-பிரியமாட்டேனென்றுசொல்ல, வாமம் – அழகிய, மேகலையினும்-மேகலையையணிந்த தமயந்தியும், மறுமையில் – வருபிறப்பில், பிரிவைஎன்னை – நீ பிரிவையேயென்றும், காமரு – அழகிய, குவளைபோலும் – நீலோற்பலம் போன்ற, கண் – கண்களினின்றும், பனிஉகுப்ப – நீர்துளிக்க, நின்றுள்-வருந்தி நின்றுள் எ-று.

இவளெந்தச் சனனத்திலும் பிரியாம லிருத்தல் வேண்டுமென்னு நினைப்புடையவளாதலா லிவ்வாறு கூறினாள். 49

பெய்தொடிகலுழ்வதென்கொல்பிழைத்திலேனருளாயென்னி
லுய்குவன்கொல்லோவின்னேயுள்ளுயிர்துறப்பலென்னு
வெய்துயிர்த்தனிச்சப்போதின்மிதிப்பினும்பனித்துவாடுந்
தெய்வமென்கமலப்போதுசென்னிமேற்சூடினானே.

இ-ள். பெய்தொடி – தமயந்தியே! கலுழ்வது – நீ கலங்குவது, என் கொல் – என்னகாரணம், பிழைத்திலேன் – நானொரு குற்றமுஞ் செய்திலேன், அருளாய் என்னில் – கிருபைசெய்யாவிட்டால், உய்குவன் கொல்லோ – பிழைப்பேனோ, இன்னே – இப்பொழுதே, உள் உயிர் – உள்ளேயிருக்கின்ற வுயிரை, துறப்பல் என்னு – விடுவேனென்று, வெய்து உயிர்த்து – பெருமூச்சுவிட்டு, அனிச்சம்போதில் – அனிச்சப்புட்பத்தில், மிதிப்பினும்-நடந்தாலும், பனித்து – கொப்பளித்து, வாடும் – வாடாநின்ற, தெய்வம் – தெய்வத்தன்மைபொருந்திய, மெல் – மிருதுவாகிய, கமலம்போது-பாதமாகிய தாமரைப்பூவை, சென்னிமேல் – சிரத்தின்மீது, சூடினான்-தரித்துக்கொண்டான் எ-று. 50

யாவரும் வணக்கத்தின் வசப்படுவதுபோல் மற்றொன்றில் வசப்படா ரென்பதுபற்றி நளனிவ்வாறு செய்தானென்க.

குழுமியபறவையாவுங்கூட்டுணப்பொதுவினல்கும்
பழுமரமனைய திண்டோட்பகட்டெழிற்றுமார்பு
வுழுவலன்போடுன்னையொருமையிற்புணர்வதன்றி
யெழுமையுந்தொடருமாதர்சிறடியிறைஞ்சுகென்னு.

இ-ள். குழுமிய – கூடிய, பறவையாவும் – பறவைக் கூட்டங்களனைத்தும், கூட்டுஉண – கொள்ளைகொள்ள, பொதுவில் நல்கும் – பொதுவாகத் தரும், பழுமரம் அனைய – ஆலமரத்தை யொத்த, திண்தோள் – வலிமை பொருந்திய தோளையும், பகட்டு எழில் – பகட்டுகின்ற அழகையுடைய, தாமம் – மாலையணிந்த, மார்ப – மார்பினையுமுடைய நளமகாராசனே! உழுவல் அன்போடு – இடையறாத அன்புடனே, நின்னை – உன்னை, ஒரு

மையில் – இப்பிறப்பில், புணர்வதன்றி – கூடுவதல்லாமல், எழுமையும்-எழுபிறப்பிலும், தொடரும் – தொடர்ந்துவருகின்ற, மாதர் – மங்கையருடைய, சிறுஅடி – சிறியபாதத்தில், இறைஞ்சுக என்னு – வணங்குவாயென்று சொல்லி எ-று.

யாவருக்கும் உபகாரஞ் செய்வோனென்பது தோன்ற, பழுமரமனைய திண்டோளென்றார். ஒருமை எழுமை என்பனவற்றின் பொருளை "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்—கெழுமைக்கு மேமாப்புடைத்து" என்னுந் திருக்குறளிற் காண்க. 51

கிளிபொருகிளவியாள்பொற்கிண்கிணிசிலம்போடார்ப்பத்
தளிர்நுப்பிலிற்றுமென்பூந்தடம்புயத்துதைத்தலோடுங்
களிசெயப்பொடித்தரோமங்கண்டகத்துறுத்திலந்தோ
வளியசிறடிகளேமென்றல்லலுற்றழுங்கினனே.

இ-ள். கிளிபொரு – கிளியையொத்த, கிளவியாள் – வசனத்தையுடைய தமயந்தியானவள், பொன் – பொன்னினாற்செய்த, கிண்கிணி-சிறுசதங்கைகள், சிலம்பொடு – சிலம்புடனே, ஆர்ப்ப – சத்திக்க, தளி-அளிதுளியாக, நறு – தேனை, பிலிற்றும் – துளிக்கின்ற, மெல் – மிருதுவாகிய, பூ – புட்பமாலையணிந்த, தட – விசாலம்பொருந்திய, புயத்து-புயத்தினிடத்தில், உதைத்தலோடும் – உதைத்தமாத்திரத்தில், களிசெய-மகிழ்ச்சியைச்செய்ய, பொடித்த – புளகித்த, உரோமம் – மயிர்கள், கண்டகத்து – முட்கள்போல், உறுத்தில் – உறுத்துமாகில், அந்தோ – ஐயோ, அளிய – மிருதுவாகிய, சிறுஅடிகள் – சிறியபாதங்கள், நோம்என்று – வருந்துமேயென்று, அல்லல்உற்று – துன்பமுற்று, அழுங்கினன் – வருந்தினன்.

அக்குற்றத்தைத் தமயந்தி பொறுத்தமை தோன்றத் தடம்புயத்துதைத்தென்றும், அதிலும் அவளுக்கோ ராச்சரியமான அருமைதோன்ற அளிய சிறடிகளேமென் றல்லலுற் றழுங்கினனென்றுஞ் சொல்லினார். இந்தப் பாட்டும் மூற்பாட்டுங் குளகம். 52

உடைதிரைப்பரவைஞாலத்துயர்ந்தவர்தொழும்புபூண்ட
வடியவரிழைத்ததீமையருளொடும்பொறுப்பதல்லால்
கொடியவர்போலச்சீறியாருயிர்குறைப்பர்கொல்லோ
மடலவிழ்கமலப்போதில்வாள்கிடந்தனையகண்ணாய்.

இ-ள். உடை – கரையையுடைக்கின்ற, திரை – அலைகளையுடைய, பரவை – சமுத்திரஞ் சூழ்ந்த, ஞாலத்து – பூமியினிடத்தில், உயர்ந்தவர் – பெரியோர்கள், தொழும்பு பூண்ட – தொண்டுபட்ட, அடியவர்-வேலைக்காரர்கள், இழைத்த – செய்த, தீமை – குற்றத்தை, அருள் ஒடும் – கிருபையுடனே, பொறுப்பது அல்லால் – பொறுத்துக் கொள்வதேயல்லாமல், கொடியவர் போல – தீயவர்போல, சீறி – கோபித்து, ஆர் உயிர் – பொருந்திய சீவனை, குறைப்பர்கொல்லோ – சேதிப்பார்களோ, மடல் அவிழ் – இதழ்கள்விரிந்த,

கமலம்போதில்-தாமரைமலரில், வாள்கிடந்த அனைய - இரண்டு வாள்களிருந்ததையொத்த, கண்ணுய் - கண்களையுடைய தமயந்தியே எ-று.

கலவிவேளையில் மாதர்க் கிதஞ்செய்வதே முக்கியம். மற்றவேளையில் ஒருவர்க்கொருவர் செய்யுமரியாதை அங்ஙனம் வேண்டுவதன்றுதலால், நளன் "அடியவரிழைத்த தீமை யருளொடும் பொறுப்பதல்லாற் - கொடிய வர்போலச்சீறி யாருயிர் குறைப்பர் கொல்லோ" வென்றன். 53

அள்ளிலைமணிப்பூண்கோதையருளெனப்பணிதலோடுங்
கள்ளுலாநறியகூந்தல்கலவியினுரைத்தயாவுங்
கிள்ளைகண்மிழற்றுமாறுகேட்டிளநிலவுகாலு
முள்ளெறியிலங்கச்செவ்விமுகிழ்நகைகோட்டினாளே.

இ-ள். அள் - நெருங்கிய, இலை - அரசிலைபோன்ற, மணிப்பூண் - இரத்தினு பரணமணிந்த, கோதை - தமயந்தியே! அருள் என - கிருபைசெய்யென்று, பணிதலோடும்-வணங்கினமாத்திரத்தில், கள்-தேனனது, உலாம்-பெருகுகின்ற, நறிய கூந்தல் - வாசனைபொருந்திய கூந்தலையுடைய தமயந்தியானவள், கலவியில் - புணர்ச்சியில், உரைத்தயாவும் - சொல்லியவெல்லாம், கிள்ளைகள் - கிளிப்பிள்ளைகள், மிழற்றும் ஆறு - சொல்லும்விதத்தை, கேட்டு - காதிற்கேட்டு, இளநிலவு - இளஞ்சந்திரிகையை, காலும் - கக்குகின்ற, முள் - முருந்துபோன்ற, எயிறு - தந்தங்கள், இலங்க - பிரகாசிக்க, செவ்வி - அழகு, முகிழ் - அரும்புகின்ற, நகை - புன்சிரிப்பை, கோட்டினாள் - செய்தாள் எ-று.

தாமிருவருங் கலவியிற் பேசினவற்றைக் கிளிப்பிள்ளைகள் வெளிப்படுத்தலால், தமயந்தி அங்ஙனம் நாணி நகைத்தனளென்க. 54

இன்னமிழ்துயிர்த்தசெவ்வியிளநிலாவுருவுவாய்ந்த
நன்னலங்கனிந்தகோதைநகைமுகவாயிற்பெற்றுப்
பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைக்கோடுபுல்லிக்
கன்னவிறோளான்காமக்கடலகத்தமுங்கினானே.

இ-ள். இன் அமிழ்து - இனிய வமிர்தத்தை, உயிர்த்த - ஈன்ற, செவ்வி - அழகுபொருந்திய, இள நிலா - இளமைபொருந்திய நிலவையொத்த, உருவுவாய்ந்த - வடிவம்பொருந்திய, நல் நலம் - நல்ல நலமானது, கனிந்த - முதிர்ந்த, கோதை - தமயந்தியினது, நகைமுகம் - புன்சிரிப்பையுடைய முகமாகிய, வாயில்பெற்று - தூதுபெற்று, பொன் அவிர் - பொன்னைப்போலும் பிரகாசிக்கின்ற, சுணங்கு - தேமலானது, பூத்த-உண்டாகிய, புணர் - நெருங்கிய, முலை - தனமாகிய, கோடு - கொம்பினை, புல்லி-தழுவி, கல் - மலைபோலும், நவில் - சொல்லாநின்ற, தோளான் - தோளையுடைய நளமகாராசன், காமக்கடல் அகத்து - காமமாகிய சமுத்திரத்தினிடத்தில், அழுந்தினன் - முழுகினன் எ-று.

தமயந்தியினுடைய நகைமுகத்தை நளன் தன் வேண்டுகோளுக்குவாயிலாகப்பெற்று, காமக்கடலகத் தழுந்தினை னெனக்கூட்டுக. 55

எறிதிரைசுருட்டுமுந்நீரினியதெள்ளமிழ்திணேடும்
பொறையுயிர்த்துலகில்வந்தபொலன்கொடியனையநங்கை
கறைகெழுகுருதிவைவேற்கண்வலைப்பட்டுவெம்போர்த்
திறல்கெழுசிங்கவேறுசிமிழ்ப்புண்டுகிடந்ததன்றே.

இ-ள். எறி – வீசாநின்ற, திரை – அலைகளே, சுருட்டும் – மடக்குகின்ற, முந்நீர் – கடலானது, இனிய – இனிதாகிய, தெள் – தெளிந்த, அமிழ்திணேடும் – அமிர்தத்தினேடும், பொறை உயிர்த்து – பெறப்பெற்று, உலகில்வந்த – உலகத்திற்றோன்றிய, பொலம்கொடி அனைய – பொற்கொடியையொத்த, நங்கை – தமயந்தியினது, கறைகெழு – உதிரந்தோய்ந்த, குருதிவைவேல் – சிவந்தகூரியவேல்போன்ற, கண்வலைப்பட்டு – கண்ணின் வலையிலகப்பட்டு, வெம்போர் – வெவ்விய யுத்தத்தில், திறல்கெழு – வலிமைமிக்க, சிங்க ஏறு – நளனுகிய ஆண்சிங்கமானது, சிமிழ்ப்பு உண்டு – கட்டுப்பட்டு, கிடந்தது – இருந்தது எ-று. அன்று – ஏ – அசைகள்.

"திறல்கெழுசிங்கவேறு சிமிழ்ப்புண்டு கிடந்ததன்"றென்பது போல, "வேட்டுவன் புட்சிமிழ்த்" தென்றார் பிறரும். 56

மல்லலந்தோளினுமழைமதர்நெடுங்கணுளும்
புல்லுவிட்டொழியிலாவிபொன்றிடுமென்னவெண்ணி
யல்லுநண்பகலும்விள்ளாதணிநலம்பருகியாங்குச்
செவ்வுழிநிகழ்ந்தவெல்லாஞ்செப்புவான்றொடங்குகின்றேன்.

இ-ள். மல்லல் – வலிபொருந்திய, அம் – அழகிய, தோளினும் – தோளையுடைய நளனும், மழை – குளிர்ச்சிபொருந்திய, மதர் – களிப்பையுடைய, நெடுங்கணுளும் – நெடிய கண்களையுடைய தமயந்தியும், புல்லுவிட்டு – ஒருவர்க்கொருவர் தழுவுதலைவிட்டு, ஒழியில் – நீங்கில், ஆவி – உயிரானது, பொன்றிடும் என்ன – இறக்குமென்று, எண்ணி – நினைத்து, அல்லும் – இராப்பொழுதிலும், நண்பகலும் – பகற்பொழுதிலும், விள்ளாது – நீங்காமல், அணி – அழகினது, கலம்பருகி – கலத்தையுண்டு, ஆங்கு – அவ்விடத்தில், செல்வுழி – செல்லுமிடத்தில், நிகழ்ந்த எல்லாம் – நடந்தனவனைத்தும், செப்புவான் – சொல்லும்படி, தொடங்குகின்றேன் – ஆரம்பிக்கின்றேன் எ-று.

"அல்லுநண்பகலும்" என்றபாடம் அத்தனைச் சிறப்பன்று. பகற்காலம் புணர்ச்சிக்கு நீக்கப்பட்டதாலும், விரகமிகுதியாற் பகற்பொழுதினும் இயைந்தகாலத்தைத் தும்த்தார் என்பார். "நண்பகலும்" என்றார். 57

திருத்தயிலாசமார்பன்சேயரிக்கண்ணியோடு
மருத்தியினுவந்தபைம்பொனணிநகர்க்கேகவெண்ணி

விருப்பொடுவிதர்ப்பர்கோனுக்குணர்த்தலும்விதர்ப்பன்காதற் புரிக்குழன்மடந்தையோடும்வதுவைமண்டபத்திற்புக்கான்.

வீமன் விவாகமண்டபம் வருதல்.

இ-ள். திருஅயில் – இலக்குமி தங்குகின்ற, ஆரம்மார்பன் – பதக்கத்தை யணிந்த மார்பினையுடைய நளமகாராசன், சேஅரிக்கண்ணியோடும்-தமயந்தியோடும், அருத்தியின - ஆசையினால், உவந்து – மகிழ்ந்து, பைம்பொன் - பசியபொன்மயமாகிய, அணிநகர்க்கு - அழகிய ராவிந்தமாநகர்க்கு, ஏகஎண்ணி – போகும்படி நினைத்து, விருப்பொடு - ஆசையுடன், விதர்ப்பர் கோனுக்கு – வீமராசனுக்கு, உணர்த்தலும் – அறிவித்தலும், விதர்ப்பன்-வீமராசனானவன், காதல் – ஆசையையுடைய, புரிகுழல் – கட்டுப்பட்ட கூந்தலையுடைய, மடந்தையோடும் - தேவியுடன், வதுவை மண்டபத்தில் – விவாகமண்டபத்தில், புக்கான் – புகுந்தான் எ-று. 56

பொழிகதிர்மணியிற்செய்தபுதவுடைக்கடிகொள்வாயில்
குழைமுகம்பொருதவேற்கட்கோதையர்விரைவிலோடி
விழைவொடும்விதர்ப்பர்கோமான்போந்தமைவிளம்பலோடும்
மழவிடையனையான்போந்துமாமனைத்தழுவினானே.

மாமனை மருகன் அணைத்தல்.

இ-ள். பொழிகதிர் – கதிர்களை வீசுகின்ற, மணியின்செய்த – இரத்தினங்களாற்செய்த, புதவு உடை – கதவையுடைய, கடிகொள் - காவலைக் கொண்ட, வாயில் – வாயிற்படியில், குழைமுகம்-காதின்முகத்தை, பொருத-மோதிய, வேல்கண் - வேல்போன்ற கண்களையுடைய, கோதையர் – மாதர்கள், விரைவின் ஓடி – விரைந்துபோய், விழைவு ஒடும் – விருப்பத்தோடும், விதர்ப்பர்கோமான் - வீமராசன், போந்தமை – வந்ததன்மையை, விளம்பலோடும் – சொன்ன அளவில், மழவிடை அனையான் – இளவேற்றையொத்த நளமகாராசன், போந்து – வந்து, மாமனை – மாமனாரை, தழுவினான்-தழுவிக்கொண்டான் எ-று.

புதவு – கதவு. கடி என்னும் உரிச்சொல் ஈண்டுக் காவற்பொருளில் வந்தது. மாமன் – மிக்கபெருமையை யுடையவன். பிருகனாலே மிகவும் பெருமையாகக் கோடற்குரியானாகலின் அப்பெயர்போந்தது. 57

மழையுறழ்தடக்கைவேந்தன்மனைப்பெருங்கிழமைபூண்ட
தொழுதகுகற்பினாளைச்சுடர்மணிக்கொம்பினல்கி
யெழில்குவிந்தனையகங்கையிறைஞ்சலுமெடுத்துமோந்து
விழைவொடுதழங்கில்வைத்துமெய்யுறத்தழுவிக்கொண்டாள்.

தமயந்தி வணங்கத் தாய் அணைத்தல்.

இ-ள். மழை உறழ் – மேகத்தையொத்த, தடக்கை – விசாலம்பொருந்திய கையையுடைய, வேந்தன் - வீமனுடைய, மனை – வீட்டுக்கு, பெருங்

கிழமை பூண்ட – பெரிய வுரிமையைக் கொண்ட, தொழு தகு – வணங்கத் தக்க, கற்பினுளே – கற்பையுடைய தாருகாசனியை, சுடர் – காந்தியை யுடைய, மணிக்கொம்பின் – இரத்தினக்கொம்புபோல், ஒல்கி – வளைந்து, எழில் குவிந்தது அனைய – அழகெல்லாமொன்றுய்க் குவிந்ததையொத்த, நங்கை – தமயந்தியானவள், இறைஞ்சலும் – வணங்கலும், எடுத்து – (தாரு காசனி என்பாள் தமயந்தியை) எடுத்து, மோந்து – மோந்து, விழைவொடு-ஆசையோடு, குறங்கில்வைத்து-தொடைமேல்வைத்துக்கொண்டு, மெய்உற-மெய்யிலேபொருந்த, தழுவினுள் – தழுவிக்கொண்டாள் எ-று. 60

அன்னைதாடொழுதுபின்னரலத்தகக்குழம்புதோய்ந்த
பொன்னிதழ்க்கமலஞ்சேப்பப்புணர்முலைதாங்கலாகா
மின்னுறழ்மருங்குதேம்பமெல்லெனவொதுங்கிப்போந்து
தன்னுடைத்தாதைபைம்பொற்றுளிணைவணங்கினுளே.

தமயந்தி தாதையை வணங்குதல்.

இ-ன். அன்னை – தாயினது, தாள்தொழுது – பாதத்தைவணங்கி, பின் னர் – பின்பு, அலத்தகம் குழம்புதோய்ந்த – செம்பஞ்சுக் குழம்புபடிந்த, பொன் – பொன்னையொத்த, இதழ் – இதழ்களையுடைய, கமலம் – பாததா மரைகள், சேப்ப – சிவக்க, புணர் – நெருங்கிய, முலை – தனங்களை, தாங்கல் ஆகா – தாங்கமாட்டாத, மின் உறழ் – மின்னலையொத்த, மருங்கு – இடை யானது, தேம்பி – வருந்த, மெல் என – மிருதுவாக, ஒதுங்கி – நடந்து, போய்ந்து – வந்து, தன்னுடை – தன்னுடைய, தாதை – வீமராஜனுடைய, பைம்பொன் – பசிய பொன்னையொத்த, தாள்இணை – உபய பாதங்களை, வணங்கினுள் – இறைஞ்சினுள் எ-று. 61

வணங்கிநுண்மருங்குனோவவல்லியினெல்கின்ற
சுணங்கிளமுலையஞ்சாயற்சுடர்க்கொடிதனையும்வேந்தர்
நிணங்கமழ்குருதிவைவேலளனையுநோக்கினேரா
ருணங்கியமுன்றில்வேந்தனுவகையங்கடலுளாழ்ந்தான்.

வீமன் மகளையும் மருமகனையும் நோக்கிமகிழ்தல்.

இ-ள். வணங்கி – தொழுது, நுண் – நுட்பமாகிய, மருங்கு – இடையா னது, நோவ – வருந்த, வல்லியின் – கொடிபோல, ஒல்கி-அசைந்து, நின்ற-எதிர் நின்ற, சுணங்கு – தேமல்பூத்த, இள – இளமையாகிய, முலை – தனத் தையும், அம் – அழகிய, சாயல் – தோற்றத்தையுமுடைய, சுடர்க் கொடி தனையும் – தமயந்தியையும், வேந்தர் – சத்துருக்களாகிய, அரசர்களது, நிணம் – மாமிசம், கமழ் – நாறுகின்ற, குருதி – உதிரந்தோய்ந்த, வைவேல்-கூரியவேலையுடைய, நளனையும் – நளமகாராசனையும், நோக்கி – பார்த்து, நேரார் – பகைவர், உணங்கிய – வாடியிருக்கின்ற, முன்றில் – முற்றத்தை யுடைய, வேந்தன் – வீமராசன், உவகையங்கடலுள் – சந்தோடமாகியகடலி னிடத்தில், ஆழ்ந்தான் – முழுகினன் எ-று. 62

பண்ணமைகலினமான்றேராயிரமிரட்டிபாய்மா
வண்ணலங்களிநல்யானையாயிரத்தறுபத்தோன்பான்
கண்ணகன்விசும்புபூத்தகற்பகத்தருவினோடு
மண்ணிழிந்தனையபேரூரைம்பதும்வழங்கினானே.

இதுமுதல் மூன்று பாட்டுக்களால் தமயந்திக்கு
வீமன் சீதனங் கொடுத்தல்.

இ-ள். பண் அமை – சேணமமைந்த, கலினம் – கடிவாளத்தையுடைய, மான் – குதிரைகட்டிய, தேர் ஆயிரம் – ஆயிரந் தேர்களும், இரட்டி பாய்மா – இரண்டாயிரங் குதிரைகளும், அண்ணல் – பெருமையினையும், அம் – அழகினையும், களி – செருக்கினையுமுடைய, நல் – நல்ல, யானை ஆயிரத்து அறுபத்தொன்பான் – ஆயிரத் தறுபத்தொன்பது யானைகளும், கண் அகல் – இடமகன்ற, விசும்பு – தெய்வலோகம், பூத்த – மலர்ந்த, கற்பகத்தருவினோடும் – கற்பக விருட்சங்களுடனே, மண் – பூமியினிடத்து, இழிந்தனைய – வந்ததையொத்த, பேரூர் ஐம்பதும் – ஐம்பது பெரியகிராமங்களையும், வழங்கினன் – கொடுத்தான் எ-று. எ – அசை. 63

பொருதிரைப்புணரியீன்றபொலங்கொடியனையசெவ்வி
யரிவையரிருபத்தையாயிரவர்நல்லரங்கிலாடும்
வருமுலைப்பவளச்செவ்வாய்வனிதையரெழுநூற்றெண்ம
ரிருபதுகோடிசெம்பொனினிதினில்வழங்கினானே.

இ-ள். பொரு – மோதுகின்ற, திரை – அலைகளையுடைய, புணரி – திருப்பாற் கடலானது, ஈன்ற – பெற்ற, பொலம் கொடி – இலக்குமியை, அனைய – ஒத்த, செவ்வி – அழகையுடைய, அரிவையர் இருபத்து ஐயாயிரவர் – இருபத்தையாயிரந் தோழிகளும், நல் – நல்ல, அரங்கில், சபையில், ஆடும் – ஆடாகின்ற, வரும் – வளர்ந்து வருகின்ற, முலை – தனங்களையும், பவளம் – பவளத்தையொத்த, செம்வாய் – சிவந்தவாயினையுமுடைய, வனிதையர் எழுநூற்று எண்மர் – எழுநூற்றெட்டு நாட்டியப்பெண்களும், இருபதுகோடி செம்பொன் – இருபதுகோடி செம்பொன்னையும், இனிதினில் – இன்பமாக, வழங்கினன் – கொடுத்தான் எ-று. 64

பொழிகதிர்மணிசெய்கட்டில்புனைமலர்ப்பாயல்பைம்பொ
னிழைபயில்வண்ணப்பேழையினியசாந்தாற்றியோடு
நிழறவழமணிக்கஞ்சுடிநித்திலமுகடுவேய்ந்த
வொழுகொளிக்கவரியின்னவுலப்பிலாநல்கினானே.

இ-ள். பொழிகதிர் – கிரணங்களைப் பொழிகின்ற, மணிசெய் – இரத்தினங்களாற்செய்த, கட்டில் – கட்டிலும், புனைமலர்ப் பாயல் – புட்பசயனமும், பைம்பொன் – பசிய பொன்னாற்செய்த, இழைபயில் – ஆபரணங்கள் வைக்கின்ற, வண்ணப் பேழை – அழகிய பெட்டிகளும், இனிய – இனிமையையுடைய, சாந்தாற்றியோடு – கால்செய் வட்டத்துடன், நிழல் தவழ்-ஒளி

தவழ்கின்ற, மணிக்கண்ணுடி – இரத்தினத்தால் விளிம்புசெய்த கண்ணுடிகளும், நித்திலம் – முத்துக்களால், முகடுவேய்ந்த – மூகடு செய்யப்பட்ட, ஒழுகு ஒளி – மிகுந்தஒளியையுடைய, கவரி – சாமரைகளும், இன்ன-ஆகிய விலைகளே, உலப்பு இல – அளவற்றவைகள், நல்கினன் – கொடுத்தான். எ-று. ஏ – அசை. 65

அல்லியங்கமலநீங்கியரசரிற்புகுந்துவாழும்
மெல்லியல்பிரியலாற்றுவிழைவாடுபலகாற்புல்லி
மல்லலக்தெரியல்வீமன்மனைவியர்பலருமாழ்கி
யெல்லையில்துயரினோடுந்தனித்தனியிரங்கினாரே.

இ-ள். அல்லி – அகவிதழையுடைய, அம் – அழகிய, கமலம் – தாமரை மலரை, நீங்கி – விட்டு, அரசர் இல் – இராசமனையில், புகுந்து – சேர்ந்து, வாழும் – வாழ்கின்ற; மெல் இயல் – இலக்குமியாகிய தமயந்தியை, பிரியல் ஆற்றா – பிரியமாட்டாத, விழைவொடு – ஆசையுடனே, பலகால் – பலதரம், புல்லி – அணைத்துக்கொண்டு, மல்லல் – வளம்பொருந்திய, அம் – அழகிய, தெரியல் – மாலையணிந்த, வீமன் – வீமராசனுடைய, மனைவியர் பலரும் – தேவிமார் பலரும், மாழ்கி – மயங்கி, எல்லை இல் – அளவில்லாத, துயரினோடும் – துன்பத்தோடும், தனித் தனி – தனித் தனியாக, இரங்கினர் – அழுதார்கள் எ-று. ஏ – அசை.

மெல்லியல்-பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஆற்றா – தவ்வீறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அருமையானோர் பிரியுங்கால் வருத்த மிகுதலாம் இரங்கினர் அதினும் இவள்பிரிவு இலக்குமி பிரிதல்போன்ற தென்பர் "அல்லியங்கமலநீங்கி யரசரிற்புகுந்துவாழும் - மெல்லியல் பிரியலாற்று" என்றார். 66

பெருந்துயருழந்துவாடும்பிணையனர்தம்மைநோக்கி
விரிந்தபூந்தளவினோன்பின் விரைமலர்க்கோதையாக
வருந்திமுன்னுயிர்த்தமெண்ணீர்மறிகடல்வருந்திற்றென்ன
வருந்தவர்க்கிறைவனானகோதமனுற்றினானே.

இ-ன். பெருந் துயர் உழந்து – மிகுந்த துன்பத்திலிலந்து, வாடும்-வருந்துகின்ற, பிணை அனர் தம்மை – மானையொத்த மங்கையரை, நோக்கி-பார்த்து, விரிந்த – மலர்ந்த, பூ – புட்பத்தையுடைய, தளவினோன் பின் – தளவி மாலையையுடைய மகாவிஷ்ணுவின் பின்னே, விரை – வாசனைபொருந்திய, மலர் – தாமரை மலரில் வாசமாயிருக்கின்ற, கோதை – இலக்குமியானவள், ஆக – போக, வருந்தி – வருத்தப்பட்டு, முன் உயிர்த்த – முன்னேபெற்ற, தெண்ணீர் – தெளிந்த நீரையுடைய, மறி – புரளாகின்ற, கடல் – சமுத்திரமானது, வருந்திற்றே என்ன – வருத்தமுற்றதோவென்று, அருந்தவர்க்கு – அரியதவத்தை யுடையவர்க்கு, இறைவனான – அரசனான, கோதமன் – கௌதமன், ஆற்றினான் – தேற்றினான் எ-று. 67

அன்னையரம்மெல்லோதித்தோழியையருளினோக்கி
யுன்னினுமிவண்மேற்காதலுளதெனவுரைக்கிலமா
லென்னினுமின்றுதொட்டுமின்னுயிர்த்தோழியல்லே
மின்னினுட்கண்ணினீயேவேண்டுவபுரிதியென்றார்.

இ-ள். அன்னையர் – தாய்மார்கள், அம் – அழகிய, மெல் – மிருதுவாகிய, ஓதி – கூந்தலையுடைய, தோழியை – உயிர்ப்பாங்கியை, அருளின்-இருபையினால், நோக்கி – பார்த்து, உன்னினும் – உன்னைப்பார்க்கிலும், இவள் மேல் – இந்தத் தமயந்தியின்மீது, காதல் – ஆசை, உளம் என – உள்ளோம் என, உரைக்கிலேம் – சொல்லுகின்றிலேம், என்னினும் – ஆனாலும், இன்று தொட்டும் – இன்று முதலாகவும், இன் – இனிதாகிய, உயிர்த்தோழியல்லே-உயிர்ப்பாங்கியல்லே, மின் அனுட்கு-மின்னலையொத்த தமயந்திக்கு, அன்னை நீயே – நீயேதாய், வேண்டுவ – வேண்டியவைகளை, புரிதி என்றார் – செய்யென்று சொன்னார்கள் எ-று. 68

மணம்புரிபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 864.

மீட்சிப்படலம்.

இப்படலத்தால் நளமகாராசன் தமயந்தியோடுந் தன்
நகரத்திற்குப் போதல் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மற்றிவைநிகழும்வேலைமகிழ்வொடுமாமன்றன்பால்
வெற்றிகொள்குருதிவைவேல்வேந்தர்கோன்விடைகொண்டேகி
யற்றமில்கேள்விசான்றவமைச்சரையினிதினோக்கி
யிற்றைநாளெழுச்சியென்னவிமிழ்முரசறைகவென்றான்.

இ-ள். மற்றிவை – பின்பு இக்காரியங்கள், நிகழும் வேலை – நடக்கும் பொழுது, மகிழ்வொடு – சந்தோஷத்துடனே, மாமன் தன்பால் – மீமராசனிடத்தில், வெற்றிகொள் – சயத்தைக்கொண்ட, குருதி – இரத்தந்தோய்ந்த, வை – கூர்மைபொருந்திய, வேல் – வேலையுடைய, வேந்தர்கோன் – நளமகாராசன், விடைகொண்டு ஏகி – உத்தரவுபெற்றுக்கொண்டுபோய், அற்றம் இல் – சோர்வில்லாத, கேள்வி – கல்விகள், சான்ற – பொருந்திய, அமைச்சரை – மந்திரிகளை, இனிதின்நோக்கி – இன்பமாகப்பார்த்து, இற்றைநாள் – இன்றைத்தினம், எழுச்சி என்ன – புறப்படுதலென்று, இமிழ் – சத்தியாகின்ற, முரசு – பேரிகையை, அறைக என்றான் – அடியுங்களென்று சொன்னான் எ-று. 1

கலி விருத்தம்.

அண்ணலங்குருதிவேலரசனேவலிற்
கண்ணகன்முரசெழுகடலினார்த்தெழ
வெண்ணிடவிடமிலையென்னநேமிசூழ்
கண்ணகவரைப்பெலாமலிந்ததானையே.

இ-ள். அண்ணல் – பெருமைபொருந்திய, அம் – அழகிய, குருதி – இரத்தந்தோய்ந்த, வேல் – வேலாயுதத்தையுடைய, அரசன் – நளமகாராசனுடைய, ஏவலில் – உத்தரவினால், கண் அகன் – இடமகன்ற, முரசு – பேரிகையானது, எழுகடலின் – ஏழ்கடலின் ஒலியைப்போல், ஆர்த்து எழ – மிகுந்தொலிக்க, எண் – எள்ளே, இட – இடுதற்கு, இடமில்லை என்ன – இடம் இல்லையென்றுசொல்ல, நேமிசூழ் – சமுத்திரஞ்சூழ்ந்த, மண் அகம் – பூமியினுடைய, வரைப்பு எல்லாம் – எல்லையெல்லாம், மலிந்த – நிறைந்தன, தானையே – சேனைகள் எ-று. 2

நிலவுவெண்கவிகைமேனிழற்றத்தண்மதிக்
கலைநிலாக்குவிந்தனகவரிகால்செய

மலர்தலையுலகெலாம்புரக்குமன்னவன்
சிலையுலாந்தமனியத்தேரிலேறினான்.

இ-ள். நிலவு - பிரகாசியாநின்ற, வெண்கவிகை - வெண்கொற்றக்கொடையை, மேல் - மேலே, நிழற்ற - பிடிக்க, தண் - குளிர்ச்சிபொருந்திய, மதி - சந்திரனுடைய, கலை - சோடசகலைகளின், நிலா - பிரகாசம், குவிந்தன - குவிந்ததோற்றம்போல், கவரி - சாமரைகள், கால்செய - காற்றைச் செய்ய, மலர்தலை உலகு எலாம் - பரந்த இடத்தையுடைய உலகமுழுவதும், புரக்கும் - இரட்சிக்காநின்ற, மன்னவன் - அரசன், சிலை - மலைபோல், உலாம் - உலாவுகின்ற, தமனியம் - பொன்னுலாகிய, தேரில் - இரதத்தின் மீதில், ஏறினான் - ஏறிக்கொண்டான் எ-று. 3

கலிகெழுமுரசுகண்குறங்குமோதையாற்
பொலன்முகடுடைந்துமேற்போயிற்றில்லையே
லலர்தலைவிசும்பினிரிடங்கலாவதே
நிலமிசையெழுந்துமேனிமிர்ந்ததூளியே.

இ-ள். கலிகெழு - சத்தம்பொருந்திய, முரசுகண் - பேரிகையின் கண்ணானது, கறங்கும் - ஒலிக்கும், ஓதையால் - சத்தத்தினால், பொலன் - அழகுபொருந்திய, முகடு - அண்டமுகடானது, உடைந்து - உடைபட்டு, மேல் போயிற்று இல்லையேல் - மேலண்டங்களில் போகாமற்போனால், அலர்தலை - பரந்த இடத்தையுடைய, விசும்பினில் - ஆகாயத்தில், அடங்கல்ஆவதே - அடங்குவதாவதோ, நிலமிசை - பூமியின்மீது, எழுந்து - எழும்பி, மேல் - மேலே, நிமிர்ந்த - வுயர்ந்த, தூளி - புழுதிகள் எ-று. ஏ - வினாவோடதிர்மறை. 4

இருங்கடற்றானையினெழுந்தநுண்டுகள்
பொருங்களிறுமிழ்மதம்பொழிந்தநில்லையேற்
கருங்கடலளறெழப்பருகிக்கார்க்குல
மொருங்குவான்பொழியினுமொழிக்கவொண்ணுமே.

இ-ள். இரு - பெருமைபொருந்திய, கடல்தானையின் - சேனைசமுத்திரத்தில், எழுந்த - எழும்பிய, நுண்துகள் - நுண்ணியபொடிகள், பொரும் - சண்டைசெய்யாகின்ற, களிறு - யானைகள், உமிழ் - கக்காநின்ற, மதம் - மும்மதத்தையும், பொழிந்தது இல்லையேல் - பொழியாமற்போனால், கருகறுத்த, கடல் - சமுத்திரசலத்தை, அளறுஎழ - சேறுபட, பருகி - குடித்து, கார்க்குலம் - மேகக்கூட்டங்கள், ஒருங்கு - ஒருமுகமாய், வான் - ஆகாயத்தினின்று, பொழியினும் - சொரிந்தாலும், ஒழிக்க ஒண்ணுமே - போகக்கூடுமோ எ-று. 5

சுடர்விடுபருமணிச்சூட்டராவின்மே
னெடுநிலந்தளக்குறுகின்றவாற்றினும்

படரிருவிசும்பினிற்பாய்ந்தவல்லது
புடவிமேன்மிதித்திலபுரவிவெள்ளமே.

இ-ள். சுடர்—பிரகாசத்தை, விடு - வீசாகின்ற, பருமணி – பருத்த ரத்னங்கள் பொருந்திய, சூட்டு – கடிகையையுடைய, அராவின்மேல்—ஆதிசேடன்மீது, நெடுநிலம் – நெடியபூமி, அளக்குற-அசைவுற, நின்ற ஆற்றினால்-இருந்தபடியால், படர் - விரிந்த, இரு — பெருமை பொருந்திய, விசும்பினில் – ஆகாயத்தில், பாய்ந்த அல்லது — தாவிச்சென்றனவல்லாமல், புடவி மேல் – பூமியின்மீது, மிதித்தஇல - நடக்கவில்லை, புரவிவெள்ளம் – குதிரைக்கூட்டங்கள் எ-று. ஏ – அசைகள். 6

புத்தயிருள்சித்தொளிபொழியுஞ்செங்கதி
ருதயமால்வரையெழவொளியிழத்தலான்
மதிபலவாய்வெயின்மறைத்தல்போலுமாற்
கதிர்நிலாமுத்தவெண்கவிகையீட்டமே.

இ-ள். புதை – நிறைந்த, இருள்—இருளை, சீத்து—கெடுத்து, ஒளி-பிரகாசத்தை, பொழியும் - சொரியாகின்ற, செங்கதிர்—சூரியன், உதயமால்வரைஎழ - உயர்ந்த உதயகிரியிலுதிக்க, ஒளியிழத்தலால்—பிரகாசத்தை நீங்குதலால், மதி – சந்திரனவன், பலவாய் – அநேகரூபமாய், வெயில் - சூரியனை, மறைத்தல்போலும்—மறைத்தலை யொக்கும், கதிர்நிலா – நிலவுபோற்கிரணத்தை வீசுகின்ற, முத்தம் - முத்தினாற்செய்த, வெள் – வெண்மை பொருந்திய, கவிகை ஈட்டம் – குடையின் கூட்டங்கள் எ-று. ஆல் : ஏ-அசை. 7

மழலையங்கிள்ளையும்வளர்த்தபூவையும்
குழைபொருதடங்கணார்கொண்டுசூழ்வர
விழைவளர்முலையினளிளநிலாக்கதிர்
பொழிமணிச்சிவிகையிற்போயினளரோ.

இ-ள். மழலை – மழலைச்சொல்லையுடைய, அம்—அழகிய, கிள்ளையும்-கிளிகளும், வளர்த்த — தாம்வளர்த்த, பூவையும் – நாகணவாய்ப்புள்ளும், குழை – குண்டலமணிந்த காதுடன், பொரு - போர்செய்யாகின்ற, தடவிசாலமாகிய, கண்ணார்—கண்களையுடைய தாதியர்கள், கொண்டு - கையிற்கொண்டு, சூழ்வர-சூழ்ந்தவர, இழை-ஆபரணங்களையணிந்த, வளர்-வளர்ந்துவாகின்ற, முலையினள் – தனங்களையுடைய தமயந்தி, இளநிலா — இளஞ்சந்திரன்போல, கதிர் — கிரணங்களை, பொழி – சொரியாகின்ற, மணிச்சிவிகையில்-முத்துப்பல்லக்கின்மீது, போயினள்-போனள் எ-று. அரோ-அசை.

கதிர்மணியடைப்பையுங்கால்செய்வட்டமுந்
ததைமயிர்க்கவரியுந்தாங்கிமெல்லென
வதிர்குரற்கிண்கிணிசிலம்பொடார்ப்பெழ
மதகரிநெடுங்கணார்மருங்குபோயினர்.

இ-ள். கதிர் – கிரணங்களையுடைய, மணி – இரத்தினத்தினாற் செய்த, அடைப்பையும் – தாம்பூலப்பையையும், கால்செய் வட்டமும் – விசிறிகளையும், தகை - நெருங்கிய, மயிர் – மயிரையுடைய, கவரியும்-சாமரைகளையும், தாங்கி – சுமந்து, மெல் என – மெதுவாக, அதிர் – அதிர்ந்த, குரல் – சத்தத்தையுடைய, கிண்கிணி – கிண்கிணிகள், சிலம்பு – சிலம்புகளுடனே, ஆர்ப்பு எழ – ஆரவாரிக்க, மதர் – மதர்த்த, அரி - செவ்வரிபரந்த, நெடுங்கணீர்-நீண்ட கண்களையுடைய மாதர்கள், மருங்கு – பக்கத்தில், போயினர் போனார்கள் எ-று. 9

சாந்தணிந்தேதாங்கியதடங்கொள்வெம்முலை.
யேந்திழைத்தேதாழியரெண்ணின்மங்கையர்
பூந்தருநீழலிற்பொன்னனாரெனக்
கூந்தலம்பிடிமிசைக்குழாங்கொடேகினர்.

இ-ள். சாந்து – சந்தனத்தை, அணிந்து - தரிக்கப்பெற்று, ஓங்கிய, உயர்ந்த, தடகொள் – விசாலத்தைக்கொண்ட, வெம் – விருப்பத்தைத்தரும், முலை – தனத்தினிடத்தில், ஏந்து இழை – ஆபரணங்களைத்தாங்கிய, தோழியர் - பாங்கியர்களும், எண் இல் – எண்ணளவில்லாத, மங்கையர்கள் - பெண்களும், பூ – பூவினையுடைய, தரு – கற்பகவிருக்கத்தினது, நீழலில் - நிழலில் வாசம்பண்ணுகிற, பொன் அன்னார் என - இலக்குமியையொத்த அரம்பை மாதர்கள்போல, கூந்தல் – புறமயிரினையுடைய, அம் – அழகிய, பிடிமிசை-பெட்டையானையின்மேல், குழாங்கொடு – கூட்டங்கொண்டு, எகினர் - போனார்கள் எ-று. 10

* கான்பயின்மரைமலர்ச்செல்விகாமுறு
மான்பயிலுக்கியர்மகரயாழிடைத்
தேன்பயிறெள்விளிபாடத்தேரையிற்
கூன்களுஞ்சிந்தெதொடுகுறளுஞ்சென்றவே.

இ-ள். கான் – வாசனை, பயில் – பொருந்திய, மரைமலர் - தாமரைமலரில் வாசம்பண்ணுகின்ற, செல்வி – இலக்குமியானவள், காமம் உறும் – இச்சியாநின்ற, மான் – மான்கள், பயில் – கற்காகின்ற, நோக்கியர் – பார்வையை

* காமம் உறு எனற்பாலது காமுறு என விகாரப்பட்டு நின்றது. அழகில் இலக்குமியையும் வென்றாராகலின் "செல்வி காமுறு மான்பயி னோக்கியர்" என்றார். மகரயாழ் ஆவது நால்வகை யாழ்களு ளொன்று. அதற்கு பதினேழு நரம்புகள் உள்ளனவென்று இசைநூல்கள் கூறின. "ஒன்று மிருபது மேரேழ்மேற் பத்துடனே – நின்ற பதினறேழு நேடுங்காற் – தன்றூத, நால்வகையாழிற்கு நன்னரம்புசொன்முறையே, யேல்வகை நூலோர், விதி" என்ற வெண்பாவானறிக. சிந்தாவது – மூன்றடி உயர முள்ளோர். குறளாவார் – இரண்டடி யுயரமுடையோர். "குறளிருசீறடி சிந்து மூச்சீறடி" என்னும் யாப்பருங் கலக்காரிகைச் செய்யுளானுந் தெரிக.

யுடைய மாதர்கள், மகரயாழிடை - மகரவீணையினிடத்தில், தேன்பயில்- தேன்போல் மதுரம் பொருந்திய, தெள்விளிபாட - தெள்விளியென்னு மிராகத்தைப்பாட, தேரையின் - தேரைபோல், கூன்களும் - கூனரும், சிற் தொடு-அவயவங்குறுகியவருடன், குறளும்-குள்ளரும், சென்ற-போயினர்.

கூன், சிந்து, குறள் என்பன உயர்திணைப் பொருளவேனும் சொல்லவா லஃறிணை யாகலிற் சென்றவென்னூர். 11

கொடிகளுங்குடைகளுங்குமுமப்பல்லியங்
கடலுடைந்தாலெனக்கறங்கியார்த்தெழ
வடிகெழுகுருதிவேன்மன்னர்சூழ்வர
நிடதனுடைடைந்தனனேமிவேந்தனே.

இ-ள். கொடிகளும் - துவசங்களும், குடைகளும் - கவிகைகளும், சூழும்- சுற்றிவர, பல்இயம் – நாலுவித வாத்தியங்கள், கடல் உடைந்தால் என-சமுத் திரமுடைந்து வருதல்போல, கறங்கி ஆர்த்து எழ – குமுறி யாரவாரிக்க, வடிகெழு – வடித்தல் பொருந்திய, குருதி – இறத்தற்தோய்ந்த, வேல் – வே லாயுதத்தையுடைய, மன்னர் – அரசர்கள், சூழ்வர – சூழ்ந்துவர, நிடதநாடு அடைந்தனன் – நிடததேசத்தைச் சேர்ந்தான், நேமி – உலகத்தையுடைய, வேந்தன் - நளமகாராசன் எ-று. 12

அருமறைமுனிவருமமைச்சர்வெள்ளமுங்
குரைகடற்றானையுங்குரவர்கூட்டமு
முரசொலியதிர்குரன்முகிலினுர்த்தெழ
விருநிலக்கிழவனையெதிர்கொண்டாரரோ.

இ-ள். அரு – அரிதாகிய, மறை – வேதத்தையுடைய, முனிவரும்- வேதியரும், அமைச்சர் வெள்ளமும் – மந்திரிகளின் கூட்டமும், குரை - சத் தியாநின்ற, கடல்தானையும் - சேனைசமுத்திரமும், குரவர் கூட்டமும்-பெரி யோர்கள் கூட்டமும், முரசுஒலி - பேரிகையின் சத்தமானது, அதிர்குரல்- அதிர்கின்ற குரலையுடைய, முகிலின் – மேகம்போல், ஆர்த்து எழ – ஆரவா ரிக்க, இரு – பெரிய, நிலம் கிழவனை – பூமிக்குரிய நளமகாராசனை, எதிர் கொண்டார் – எதிர்கொண்டார்கள் எ-று. அரோ - அசை. 13

அகழியங்கடல்புடையணிந்துநீள
முகிறவழ்முதெயின்முற்றியின்னகிற்
புகைகமழெரிமணிப்பொன்செய்மாடத்தி
னகைநிலாமதிதவழ்நகரமெய்தினன்.

இ-ள். அகழி – கிடங்காகிய, அம் – அழகிய, கடல் - சமுத்திரத்தை, புடை அணிந்து – பக்கத்தில் தரித்து, நீல்நிறம் - நீலநிறம் பொருந்திய, முகில்தவழ - மேகந்தவழாநின்ற, முது எயில் – பழைமையாகிய மதில், முற்றி- சூழ்ந்து, இன் அகில் – இனிய அகிலினது, புகை - புகையானது, கமழ் - பரி

மளியாகின்ற, எரி-பிரகாசம்பொருந்திய, மணி-இரத்தினத்தினாலும், பொன் செய்—பொன்னாலுஞ்செய்த, மாடத்தின்-உபரிகையின்மீது, நகை - பிரகாசியாகின்ற, நிலா—சந்திரிகையையுடைய, மதிதவழ்-சந்திரன் தவழாகின்ற, நகரம் - மாவிந்த நகரத்தை, எய்தினன் - சேர்ந்தான் எ-று. 14

பொருவருங்கங்கைநீர்நிரைத்துப்பூசுர
ரெரிமணிப்பொற்றசும்பேற்றிமுன்வர
விரைகமழ்செழுந்தொடைவீமன்மாதோடுக்
திருவளர்கோயிலிற்செல்வனெய்தினன்.

இ-ள். பொருஅரு - ஒப்பில்லாத, கங்கைநீர் – கங்காசலத்தை, நிரைத்து – பூரித்து, பூசுரர் – வேதியர்கள், எரிமணி – பிரகாசம் பொருந்திய இரத்தினமழுத்திய, பொன்தசும்பு – பொன்னாற்செய்த பூரணகும்பத்தை, ஏற்றி-தாங்கி, முன்வர - எதிர்வர, விரை - வாசனை, கமழ் - பரிமளியாகின்ற, செழு-செழுமையாகிய, தொடை – மாலையையணிந்த, வீமன் மாது ஒடும் – தமயந்தியினுடனே, திருவளர்-இலக்குமி வாசம்பண்ணுகின்ற, கோயிலில் - அரண்மனையில், செல்வன் – நளமகாராஜன், எய்தினன் - சேர்ந்தான் எ-று. 15

மீட்சிப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 879.

கலிதோன்றுபடலம்.

இப்படலத்தால் தமயந்தியின் விவாகத்தைக் கருதிவந்த கலி அவளை நளன் விவாகஞ் செய்தானென்னும் பொறுமையால் அவனை வருத்தற்கு அவனது நகரத்திற்றோன்றிக் காலம்பார்த்திருத்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

ஈங்கிவனின்னணமிருப்பவானிடைப்
பூங்கழல்விண்ணவர்போகுமல்வையிற்
றீங்குறுபடுபழிதீதுசூழ்வர
வாங்கவர்மூன்கலியடைந்தசேதுவாம்.

இ-ள். ஈங்கு - மாவிந்தமாநகரத்தில், இவன் — இந்த நளமகாராசன், இன்னணம் — இவ்வாறு தமயந்தியோடு (மகிழ்ந்து), இருப்ப — இருக்க, வான் இடை - ஆகாயத்தினிடத்தில், பூ - அழகிய, கழல் - வீரகண்டாமணியையணிந்த, விண்ணவர் — தேவர்கள், போகும் எல்வையில் — போகுஞ்சமயத்தில், தீங்கு உறு — குற்றம்பொருந்திய, படுபழி — படுபழியும், தீது — பொல்லாங்கும், சூழ்வர - சுற்றிக்கொண்டுவர, அவர்முன் — அந்தத் தேவர்களுக்கெதிரில், கலி - கலிபுருடனானவன், அடைந்தது — வந்ததை, ஓதுவாம் - சொல்லுவோம் எ-று. ஆங்கு — அசை. 1

வந்தவெங்கொடுங்கலிதன்னைவான்பட
நிந்திரன்யாண்டுநீயேகின்றுயெனச்
சந்தணிமுலைத்தமயந்திமன்றல்கேட்
டந்தமில்வேட்கையாலடைந்தனென்றான்.

இ-ள். வந்த — எதிரில்வந்த, வெம் — வெவ்விய, கொடு - கொடுமையையுடைய, கலிதன்னை — கலிபுருடனை, வான் - தெய்வலோகத்தை நோக்கி, படர் — போகின்ற, இந்திரன் — தேவேந்திரன், யாண்டு — எவ்விடத்துக்கு, நீ - நீ, ஏகின்றாய் என — போகின்றாயென்று கேட்க, சந்து அணி — சந்தனத்தையணிந்த, முலை - தனங்களையுடைய, தமயந்தி - தமயந்தியினது, மன்றல் - கலியாணத்தை, கேட்டு — கேள்விப்பட்டு, அந்தம் இல் — முடிவில்லாத, வேட்கையால் — ஆசையினால், அடைந்தனேன் என்றான் — வந்தேனென்றான் எ-று. 2

என்றலுமமரர்கோன்மூறுவலெய்தியம்
மன்றலுக்கோதனிவந்ததீங்கெனை
வென்றிவேனிடர்கோன்றனக்குமென்றுடை
துன்றிருங்கூந்தலாள்சூட்டினளென்றான்.

இ-ள். என்றலும் - இப்படியென்று சொன்னவளவில், அமர்கோன்-தேவேந்திரன், முறுவல் எய்தி - சிரித்து, அ மன்றலுக்கோ - அந்தக் கலியாணத்திற்காக, தனி - தனியாய், வந்தது ஈங்குஎனை - இவ்விடத்தில் வந்ததென்று, வென்றி - வெற்றிபொருந்திய, வேல் - வேலையுடைய, கிடதர்கோன் தனக்கு - நளமகாராசனுக்கு, மென்தொடை - மிருதுவாகியமாலையை, தன்று - நெருங்கிய, இரு - பெருமைபொருந்திய, கூந்தலாள் - கூந்தலையுடைய தமயந்தி, சூட்டினாள் என்றான் - அணிந்தாளென்று சொன்னான்.

விண்ணவரனைவரும்வெள்கப்பூந்தொடை
மண்ணகத்தரசனுக்கணியுமாணிழை
யெண்ணமுங்கெடுத்தவட்பிரிப்பனீண்டெனைக்
கண்ணழல்கதுவவெங்கலியுங்கூறினான்.

இ-ள். விண்ணவர் அனைவரும் - தேவர்கள் யாவரும், வெள்க - வெட்கப்பட, பூ தொடை - புட்பமாலையை, மண் அகத்தரசனுக்கு - பூலோகத்து ராசனுக்கு, அணியும் - தரித்த, மாண் இழை - மாட்சிமைபொருந்திய ஆபரணங்களையுடைய பெண்ணினது, எண்ணமும் கெடுத்து - நினைப்பையுங் கெடச்செய்து, அவள் - அவளை, பிரிப்பன் - பிரித்து விடுவேன், ஈண்டு எனை - இவ்விடத்தென்று, கண் அழல் கதுவ - கண்ணில் நெருப்புப் பொறி பறக்க, வெங்கலியும் - வெவ்விய கலிபுருடனும், கூறினான் - சொன்னான்.

அருஞ்சொற்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருந்ததிக்கற்பினல்லாளரசிளங்குமரன்றன்னைப்
பிரிந்திடவியற்றிப்பின்னர்ப்பெறுவதுதீமையன்றே
விரிந்தநூற்கேள்வியென்னும்பிறர்மனைவிழையவுள்ளம்
பொருந்தியதெவன்கொல்கல்லாப்புல்லரிற்புகழின்மிக்கோய்.

இ-ள். அருந்ததி - அருந்ததியை யொத்த, கற்பின் - பதிவிரதத்தையுடைய, நல்லாள் - தமயந்தி, அரசு இளங்குமரன்தன்னை - இளமைபொருந்திய ராசகுமாரனை நளமகாராசனை, பிரிந்திட இயற்றி - நீங்கும்படிசெய்து, பின்னர் - பின்பு, பெறுவது - அந்த மாதைப் பெற்றுக்கொள்வது, தீமை அன்றே - குற்றமல்லவோ, விரிந்த - பரந்த, நூல்கேள்வி - நூல்விசாரணை, என்னும் - யாதபயனைத்தரும், பிறர்மனைவிழைய - பிறர்மனைவியை விரும்ப, உள்ளம் பொருந்தியது எவன் - மனஞ்சம்மதித்தது என்னகாரணம், கல்லாபடியாத, புல்லரின் - மூடரைப்போல, புகழில் மிக்கோய் - கீர்த்தியின் மிக்கவனே! எ-று. கொல் - அசை. 5

இனையனமரர்கூறவிருகையும்படைத்துகக்குப்
பூணமலர்க்கோதைநல்லார்புணர்முலைகுழையப்புல்லி
வானதுகினைகிழ்க்குமின்பவாழ்வினையகன்றிமற்றோர்
நினைவருமின்பமுண்டேனிகழ்த்துதிர்நீவிரென்றான்.

இ-ள். இனையன - இப்படிப்பட்டவைகளே, அமரர் கூற - தேவர்கள் சொல்ல, இருகையும் - இரண்டுகையும், புடைத்து - கொட்டி, நக்கு - சிரித்து, பூனைமலர்க் கோதைநல்லார் - மலரால் அலங்கரிக்கப்பெற்ற கூந்தலையுடைய மாதரது, புணர்முலை - நெருங்கிய முலைகளே, குழையப்புல்லி - குழையும் படிதழுவி, வினை - கட்டியிருக்கிற, துகில் - ஆடையை, நெகிழ்க்கும் - அவிழ்க்கின்ற, இன்ப வாழ்வினையன்றி - காமவின்ப வாழ்வையல்லாது, மற்றோர் - வேறுமொரு, நினைவரும் இன்பமுண்டேல் - நினைத்தற்கரிய வின்பமுண்டாகில், நிகழ்த்துதிர் - சொல்லுங்கள், நீவிர் என்றான் - நீங்களென்று சொன்னான். எ-று. 6

மறைநெறிபிறழக்கூறுமிவனெடும்வாய்மைகூறி
லறநெறி திறம்புமென்னவமரரும்விசும்பிற்போனார்
தெறுகொழிற்கலியுங்காமஞ்சிதைந்துமீதூரவேத
நெறிமுறைவழுவல்செல்லாநிடதநாடதனிற்சென்றான்.

இ-ள். மறைநெறி - வேதவழி, பிறழ - மாறுபட, கூறும் - சொல்லும், இவனெடும் - இக்கலியினெடும், வாய்மைகூறில் - உண்மைபேசில், அற நெறி - தருமவழி, திறப்பும் என்ன - கெடுமென்று, அமரரும் - தேவர்களும், விசும்பிற் போனார் - மேலுலகைச் சேர்ந்தார்கள், தெறு - கொல்லாநின்ற, தொழில் - செய்கையையுடைய, கலியும் - கலியுருடனும், காமம் - வீரகமானது, சிதைந்து - வரம்பு கடந்து, மீதூர - அதிகரிக்க, வேதநெறி முறை - வேதவழியின் முறையானது, வழுவல்செல்லா - மாறுபடாத, நிடத நாடு அதனில் - நிடததேசத்தில், சென்றான் - போனான் எ-று. 7

மல்லலம்பழனவேலிவளங்கெழுநிடதநாட்டி
னல்லலுற்றரிதிற்செல்லுங்கொடுங்கலியமரர்வேட்ப
வெல்லையில்வேள்வியாற்றியருமறையில்வோரெங்குஞ்
சொல்லியபதங்கள்கேட்டுத்துணைப்பதம்பெயர்த்திலானே.

இ-ள். மல்லல் - வளம்பொருந்திய, அம் - அழகிய, பழனம் - கழனிகளையே, வேலி - வேலியாகவுடைய, வளம்கெழு - செல்வம்பொருந்திய, நிடத நாட்டின் - நிடததேசத்தில், அல்லல் உற்று - துன்பமுற்று, அரிதிற் செல்லும் - அருமையாகப் போகாநின்ற, கொடுங்கலி - கொடுங்கலியானவன், அமரர்வேட்ப - தேவர்கள் விரும்ப, எல்லை இல் - அளவில்லாத, வேள்வி ஆற்றி - யாகத்தைச்செய்து, அரு - அரிதாகிய, மறையில்வோர் - வேதப் பிராமணர்கள், எங்கும் - எவ்வீடத்திலும், சொல்லிய - சொன்ன, பதங்கள் கேட்டு - வேதபதங்களைக் காதிற்கேட்டு, துணைப்பதம் - தன்னுடைய உபயபாதங்களை, பெயர்த்திலான் - எடுத்து வைக்கவில்லை எ-று. 8

செம்மையிற்றிறம்பல்செல்லாமறையில்சிறுவனுங்கோர்
கைம்மையைக்கலத்தினுக்கிக்களிகிழ்சிறக்துசெல்வான்

வம்மினென் றமரர்தம்மைமறையினுற்கூறக்கேளா
வம்மவோமகமென்றஞ்சியலக்கணுற்றகன்றுபோனான்.

இ-ள். செம்மையில் – நன்னெறியில், நிரம்பல்செல்லா – மாறுபடாத, மறைபயில் – வேதம்படிக்கின்ற, சிறுவன் – ஒரு பிரமசாரி, ஆங்கோர் – அங் கொருகைம்மையை - கைம்பெண்ணை, கலத்தல்நோக்கி – புணர்தலேப்பார்த் து, களி – செருக்கையுடைய, மகிழ் – சந்தோஷம், சிறந்து - அதி கரித்து, செல்வான் – போகின்றவன், வம்மி என்று - வாருங்களென்று, அமரர்தம்மை – தேவர்களை, மறையினுல் - வேதத்தினுலே, கூற - அழைக்க, கேளா – கேட்டு, அம்மவோ – ஓ அம்ம, மகம் என்று - யாகமென்று, அஞ்சி- பயந்து, அலக்கண் உற்று - துன்பமுற்று, அகன்றுபோனான் – அப்புறம் போயினன் எ-று. 9

அருமறைமுனிவர்பாருமோர்கலத்தார்வமோடும்
பருகியவாறுநோக்கித்தீவினைபயந்ததென்னு
விரைவினிற்சேறலோடுமறைமொழிகூறும்வேள்விக்
குரியதுசோமபானமெனவுளமுடைந்துபோனான்.

இ-ள். அரு – அரிதாகிய, மறைமுனிவர்யாரும் - வேதியர்களெல்லா ரும், ஓர்கலத்த – ஒருபாத்திரத்தில், ஆர்வம் ஓடும் – ஆசையுடன், பருகிய ஆறுநோக்கி – பானம்பண்ணுகின்ற நெறியைப் பார்த்து, தீவினை பயந்தது என்னு - தீமையுண்டாயிற்றென்று, விரைவினில் – சீக்கிரத்தில், சேறலோ டும் – போனமாத்திரத்தில், மறைமொழி - வேதவசனத்தை, கூறும் - சொல் லும், வேள்விக்கு - யாகத்துக்கு, உரியது - உரித்தானது, சோமபானம்என- சோமபானயாகமென்று, உளம் உடைந்து – மனங்கலங்கி, போனன் - போ யினன் எ-று.

ஓர்கலத்தப் பலருண்ணுதல் வேத சிவாகம விரோதமென்பது, ஆயி னும் யாகத்திற் சோமபானம் அவ்வாறருந்தல் விதியாகலிற் களிபுருடன் வழியின்றிக் கலங்கினன் என்க. ஆர்வம் – மக்கவிருப்பம். தாமுண்ணுங் கலத்தில் பிறருண்ணற்குப் பொருத முனிவோர், சோமபானஞ் செய்யுங் காலை மகிழ்வோடு பருகினர் என்பார் "ஆர்வமோடும் பருகியவாறு நோக்கி" என்றார். 10

நிழல்சுளிகளிகல்யானைநிடதர்கோன்மகிழ்ச்சிகூர்ந்து
பழமறைக்கிழவர்யாரும்பரிவொடுகவர்ந்துகொள்ள
விழுநிதிபழனநாடுவேண்டுபவெறுப்பநாளும்
பொழிதருபுனலிலீந்திப்போக்கரிதென்னநின்றான்.

இ-ள். நிழல் - தன்னிழலை, சுளி – கோபிக்கிற, களி - செருக்கை யுடைய, நல்யானை – நல்லயானையையுடைய, நிடதர்கோன் - நளமகாராசன், மகிழ்ச்சிகூர்ந்து – உவகைமிகுந்து, பழமறைக்கிழவர் யாரும் - பழமையாகிய வேதப்பிராமணர்களெல்லாரும், பரிவொடு-ஆசையுடன், கவர்ந்துகொள்ள-

பெற்றுக்கொள்ள, விழுமிதி – மேன்மையாகிய திரவியமும், பழனம் - கழனிகளும், நாடு - ஊர்களும், வேண்டுப - வேண்டியவைகளே, வெறுப்ப - வெறுக்கும்படியாக, நாளும் - நான்தோறும், பொழிதரு - தத்தம்பண்ணுகிற, புனலே-சலத்தை, நீந்தி - கடந்து, போக்குஅரிது என்ன - போகுதல் கூடாதென்று, நின்றான் – இருந்தான் எ-று. 11

கலைவலானெருவன்பொய்ம்மைகண்டுரையாடலேக்கிக்
கொலைபழுத்தொழுகுநெஞ்சங்குழைந்தனன்மகிழ்ந்துசெல்வா
னலர்முலைசுமக்கலாற்றுவையநுண்மருங்குற்பேதை
புலவிதீர்ப்பதற்குக்கூறும்பொய்யெனப்புலர்ந்துபோனான்.

இ-ள். கலைவலான் ஒருவன் – வித்தையில் வல்லவனெருவன், பொய்ம்மை – பொய்ச்சொல்லை, கட்டுரை ஆடல் - உறுதிமொழியாகச் சொல்லுதலை, நோக்கி – அறிந்து, கொலை - கொல்லுதல், பழுத்த ஒழுகு நெஞ்சம் - முதிர்ந்து பெருகாநின்றமனம், குழைந்தனன்-குழைந்தவனாய், மகிழ்ந்து - சந்தோஷித்து, செல்வான் – போகின்றகலியானவன், அலர் - பரந்த, முலைதனங்களே, சுமக்கல் ஆற்றா – சுமக்கமாட்டாத, ஐயம் - சந்தேகத்தைத்தரும், நுண் – நுட்பம்பொருந்திய, மருங்குல் – இடையையுடைய, பேதை – மடந்தையாது, புலவி - பிணக்கை, தீர்ப்பதற்கு – போக்குதற்கு, கூறும் – சொல்லும், பொய் என – பொய்யென்று, புலர்ந்து – மனம்வாடி, போனான் - போயினான் எ-று. 12

கடிமனையிடங்களோறுங்கற்புடைமகளிரீட்டங்
கொடிநெடுவீதியெல்லாங்கடவுளர்விழவுதுன்று
நெடிபடுகானமுற்றுந்துறந்துளோர்நெருக்கமாண்டு
மடியிடலரிதென்றெண்ணியல்லலுற்றகன்றுபோனான்.

இ-ன். கடி – காவலையுடைய, மனை இடங்கள்தோறும் - வீட்டினிடங்களெல்லாம், கற்புடை – பதிவிரதத்தையுடைய, மகளிர் ஈட்டம் - மாதர்கூட்டங்கள், கொடி – கொடிகளையுடைய, நெடு – நீண்ட, வீதி எல்லாம் - தெருக்களனைத்திலும், கடவுயர் விழவு - தேவர் திருவிழா, தன்றும் – நெருங்கியிருக்கும், நெடி - சில்வண்டுகள், படு – உண்டாகிய, கானம்முற்றும் - காடுமுழுவதும், துறந்துளோர் - முனிவர்களுடைய, நெருக்கம் – கூட்டங்களுள்ளன, (ஆதலால்) யாண்டும் - எவ்விடத்தும், அடி இடல் – அடியெடுத்துவைத்தல், அரிது என்று - அருமையென்று, எண்ணி - நினைத்தி, அல்லல் உற்று - அன்பமுற்று, அகன்றுபோனான் - நீங்கிப்போயினான் எ-று. 13

இங்ஙகர்வரைப்பில்யாண்டுமெய்துதற்கரிதென்றெண்ணிச்
சென்னிவான்றடவுதெய்வச்செழுமலர்சோலைபுக்கு
மன்னவனிழைக்குந்தீமையாதெனமனத்தினேர்ந்து
தன்னருந்தான்றிமீதிற்சூழ்ச்சியோடிருக்குநாளில்

இ-ள். இங்ஙகர் - இந்த நகரினுடைய, வரைப்பில் - இடத்தில், யாண்டும் - எவ்விடத்தும், எய்துதற்கு அரித்து என்று எண்ணி - போதுதற்குக் கூடாதென்று நினைத்து, சென்னி - தலையானது, வான்தடவும் - ஆகாயத்தையளாவுகிற, தெய்வம் - தெய்விகமாகிய, செழு - செழித்த, மலர்புட்பத்தையுடைய, சோலைபுக்கு - சோலையையடைந்து, மன்னவன் - களமகாராஜன், இழைக்குந்தீமை - செய்யுங்குற்றம், யாது என - எதுவென்று, மனத்தின் ஓர்ந்து - மனதிலாராய்ந்து, துன்னஅரும் - சேரப்படாத, தான்றி மீதில் . தான்றிமரத்தின்மீது, சூழ்ச்சியோடு - ஆலோசனையுடனே, இருக்குநாளில் - இருக்கின்ற காலத்தில் எ-று. தான்றி - நிஷித்தம். 14

கலிதோன்றுபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 893.

* இளவேனிற் படலம்.

இப்படலத்தாற் பற்பல விளையாட்டுக்குரிய இளவேனிற் காலத்தினது சிறப்புச் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நமதுசெங்கரங்கடோயினகைமுகவிருந்துசெய்யுங்
கமலகாண்மலரைவாட்டும்பனியினைமுழுதுங்காய்வா
னிமயமால்வரையின்வெம்போர்த்தெழுந்தனவுலகம்போர்த்த
திமிரமேய்ந்துலவும்வெய்யோன்சென்றனன்வடபான்மன்னோ.

இ-ள். நமது - நம்முடைய, செங்கரங்கள் - சிவந்த கரணங்கள், தோயில் - பொருந்தினால், நகை - பிரகாசியாகின்ற, முகம் - முகத்துடனே, விருந்து செய்யும் - விருந்துசெய்யாகின்ற, கமலம் - தாமரையினது, நாள் - புதிய, மலரை - புட்பத்தை, வாட்டும் - வாடப்பண்ணும், பனியினை - பனியை, முழுதும் - முழுமையும், காய்வான் - அழிக்கும்பொருட்டு, இமயமால்வரையின் - இமயபர்வதத்தில், வெம்போர்க்கு எழுந்தென - வெவ்விதாகிய யுத்தத்திற் கெழுந்தவன்போல, உலகம் போர்த்த - உலகத்தைமூடிய, திமிரம் மேய்ந்து - இருளையுண்டு, உலவும் வெய்யோன் - உலவுகின்ற சூரியன், வடபால் - வலதுபக்கத்தில், சென்றனன் - போயினன் எ-று. மன்-ஒ அசைகள்.

உத்தராயணம் பிறந்ததென்பதாம். கரம் - கிரணம். காய்வான் - விரோயெச்சம். எழுந்தது என்பது எழுந்தென விகாரப்பட்டு நின்றது. சூரியன் வடபாற்போதல் உத்தராயணம் எனவும், தென்பாற்போதல் தக்கிணயன மெனவும் சொல்லப்படும். காய்வான் எழுந்தென என்றல் தற்குறிப்பணி.

இன்றுணைக்கணவர்நீங்கியிடருறுமடவார்சோர
மன்றலிற்கொழுநர்ப்புல்லுமடக்கையர்மகிழ்ச்சிகூரக்
குன்றிடைப்பிறந்ததென்றற்கொழுந்துமுன்போர்த்ததேம
மென்றளிர்ப்பேர்வைபோர்த்துவேனில்வந்திறுத்ததன்றே.

இ-ள். இன்றுணை - இனிய துணையாகிய, கணவர் - கொழுநரை, நீங்கிபிரிந்து, இடர் உறும் - துன்பத்தை யடைகின்ற, மடவார் - மாதர்கள்,

---

* பெருங்காப்பியத்தி னிலக்கணங்களுள் ஒன்றுகலின் இளவேனிற்சிறப்புக் கூறினர். வேனில்—வெயில். அது வன்மை மென்மைபற்றி இளவேனில், முதுவேனில் என இருவகைப்படும். சித்திரை வைகாசி மாதங்கள் இளவேனிற் காலமும், ஆனி ஆடிமாதங்கள் முதுவேனிற் பருவமுமாம். இளவேனிற் காலத்தை வசந்தருதுவென்றும், முதுவேனிற் காலத்தைக் கிரீஷ்மருதுவென்றுங் கூறுப வடநூலார். காலைதொடங்கி மாலையளவு மொருதன்மையாக் காய்தலின் வேனிலாயிற்று. "என்றாழ்கின்ற" என்னுஞ் சிலப்பதிகாரத்து ஊர்காண் காதையினும்.

சோர - சோர்வையடையவும், மன்றில் - விவாகத்தின்கண், கொழுகர்ப் புல்லும் - கணவரைத் தழுவும், மடந்தையர் - மாதர்கள், மகிழ்ச்சிகூர-மகிழ்ச்சியையடையவும், குன்று இடைப்பிறந்த - பொதியமலையிலுற்பவித்த, தென்றல் கொழுந்து - இளந்தென்றற்காற்றை, முன் - முன்னே, போர்த்த - போர்த்துக்கொண்ட, தேமா - தித்திப்புப்பொருந்திய மாமரத்தினது, மெல்தளிர் - மெல்லிய தளிராகிய, போர்வை போர்த்து - வத்திரத்தைப் போர்த்துக் கொண்டு, வேனில் - வேனிற்காலமானது, வந்து உறுத்தது - வந்து தங்கியது எ-று. அன்று - ஏ - அசைகள்.

மாதவி கொடியெடுப்ப, காவும் கானமும் மலரேந்தத் தென்னவனுடைய பொதியிற் றென்றலோடே அம்மன்னவனுடைய கூடனகரின்கட் புகுந்து தாம்மகிழ்ந்தணை கணவர்களைத் தழுவுவிக்கும் இனிய இளவேனிலென்னும் அரசன் என அடியார்க்கு நல்லார் உரைத்ததும் அறியத்தக்கது. 2

கள்ளுயிர்த்தலருமுல்லைக்கடிமுகைமுறுவலோன்ற
வள்ளிதழ்க்குவளையுண்கண்மலர்ந்துமாந்தளிர்மென்கையாக்
கிள்ளைமென்குதலைசாற்றிக்கிளரொளிவண்டுபாணித்
தெள்விளிபாடவேனிற்றிருமகள்சிறந்தாளன்றே.

இ-ள். கள்உயிர்த்து - தேனைத்தந்து, அலரும் - மலருகிற, முல்லை - முல்லையினது, கடி - வாசனைபொருந்திய, முகை - அரும்புகளாகிய, முறுவல் தோன்ற - பற்கள்தோன்ற, வள்இதழ் - கூர்மையாகிய இதழையுடைய, குவளை - நீலோற்பலங்களாகிய, உண்கண் - மையுண்டகண்கள், மலர்ந்து - விழித்து, மாதளிர் - மாந்தளிர்கள், மெல் - மெல்லிய, கை - கையாக, ஆர்ந்து, கிள்ளை - கிளிப்பிள்ளையின் மொழிகளாகிய, மெல் - மிருதுவான, குதலை - குதலைச்சொற்களை, சாற்றி - பேசி, கிளரொளி - விரிந்தவொளியையுடைய, வண்டு - வண்டுகளை, பாண்ஆ - பாணர்களாக, தெள்விளிபாட - தெளிவாகிய விளியென்னும் இராகத்தைப்பாட, வேனில் திருமகள் - வேனிற்காலமாகிய பெண், சிறந்தாள் - பொலிவையடைந்தாள் எ-று. அன்று - ஏ—அசைகள். 3

பூசல்வண்டார்ப்பவேனில்போந்தமை குயில்கள்கூறப்
பாசிலையுகுத்தீந்தமாபைந்தளிரீன்றதோற்றம்
மாசுறுதுகிலோர்தம்மகிழ்நர்தம்வரவுகேட்டுக்
கோசிகச்செம்பொனுடைகொம்பனுரைசெத்தல்போலும்.

இ-ள். பூசல் - போர்செய்தலையுடைய, வண்டு - வண்டுகள், ஆர்ப்ப - ஆரவாரிக்க, வேனில் - வேனிற்காலம், போந்தமை - வந்ததன்மையை, குயில்கள்கூற - கோகிலங்கள் சொல்ல, பாசு இலை - பழுப்பிலைகளை, உகுத்த - உதிர்த்த, தேமா - தித்திப்பு மாமரங்கள், பைந்தளிர் - பசுமைபொருந்திய தளிர்களை, ஈன்ற தோற்றம் - பெற்ற காட்சியானது, மிகுந்தம் வரவு கேட்டு - புருடர்களுடைய வரவுகேட்டு, மாசுறு - குற்றம்பொருந்திய

துகிலை - வத்திரத்தை, நீத்து - நீக்கி, கோசிகம் - பட்டாகிய, செம்பொன் - சிவந்த பொன்னுற்செய்த, ஆடை - வத்திரத்தை, கொம்புஅனார் - பெண்கள், அசைத்தல்போலும் – கட்டிக்கொள்ளுதலை யொக்கும் எ-று. 4

வானுயர்சோலைதோறுமுறுகுவாய்மடுத்துவீழ்ந்
தேனெடுசெரும்பும்வண்டும்புதிதுண்டுதெவிட்டியார்ப்பக்
கானமர்குழலினார்தங்கணவர்பாற்புலவிதீர
வேனில்வேட்குலகம்யாவும்விழுவயர்ந்திட்டவன்றே.

இ-ள். வான் - ஆகாயத்தில், உயர் - உயர்ந்த, சோலைதோறும் - தோப்புகள்தோறும்; முருகு – தேனை, வாய்மடுத்து - வாய்வைத்து, வீழும் - விரும்பும், தேன் ஒடு - பெண்வண்டுடனே, சுரும்பு - ஆண்வண்டும், வண்டும் - கருவண்டுகளும், புதிதுண்டு - விருந்துண்டு, தெவிட்டி - தெவிட்டெடுத்து, ஆர்ப்ப - ஆரவாரிக்க, கான் - வாசனை, அமர் - பொருந்திய, குழலினர் - கூந்தலையுடைய மாதர்கள், தம் - தங்கள், கணவர்பால் - புருடர்களிடத்தில், புலவிதீர - பிணக்குகள்நீங்க, வேனில் - வேனிற்காலத்துக்குரிய, வேள் - மன்மதனுக்கு, உலகம் யாவும் - உலகங்களெல்லாம், விழுவயர்ந்திட்ட-திருவிழாவைச் செய்தன எ-று. அன்று - ஏ - அசைகள். 5

குன்றிடைப்பிறந்ததென்றற்கொழுந்துமேற்புடர்ந்ததன்மை
தன்றிருட்பிழம்புசீக்குங்கனைகதிர்ச்சுடரோனைய
தன்றுணைக்கேள்வனீங்கிவடபுலஞ்சார்தலோடுந்
தென்றிசையணங்குமாழாந்துயிர்த்ததுசிவணுமாதோ.

இ-ள். குன்று இடை - பொதிய மலையினிடத்திலே, பிறந்த - உண்டாகிய, தென்றல் கொழுந்து - இளந்தென்றற்காற்று, மேற்படர்ந்த தன்மை - பூமியின்மீது பரவிய தன்மையானது, தன்று – நெருங்கிய, இருள்பிழம்பு - இருள்கூட்டத்தை, சீக்கும் – கெடுக்கும், கனை – மிகுந்த, கதிர் - கிரணங்களையுடைய, சுடரோன் ஆய – சூரியனுகிய, தன்துணை – தனக்குத் துணையாகிய, கேள்வன் – புருடன், நீங்கி - தன்னைநீங்கி, வடபுலம் – வடதிசையாகிய (பெண்ணை,) சார்தலோடும்-அடைந்த மாத்திரத்தில், தென்திசை அணங்கு-தெற்குத்திக்காகிய பெண், மாழாந்து – மயங்கி, உயிர்த்தது – பெருமூச்சுவிட்டதை, சிவணும் - ஒக்கும். எ-று.

தென்றிசை அணங்கென்றமையால் வடபுல வணங்கென்றுங் கொள்ளப்பட்டது. உத்தராயணத்து இளவேனிலில் தென்காற்று வீசியதைத் தக்ஷிணயன மகளின் பெருமூச்சேனக் குறித்தமையால் இது தற்குறிப் பெற்ற அலங்காரம். 6

பன்மணிவரன்றிச்சாரற்பானிறவருவிதாழுந்
தென்வரையினிதினீன்றபுனிற்றிளங்குழவித்தென்றல்
கன்னலஞ்சிலைக்கைம்மாரன்காதலர்ப்பிரிந்தமாத
ரின்னுயிர்படுப்பவேண்டியியற்றியபார்வையாமால்.

இ-ள். பலமணி – பலரத்தினங்களே, வரன்றி – வாரிக்கொண்டு, சாரல்-பக்கத்தில், பால்நிறம் - வெள்ளைநிறமாகிய, அருவிதாழும் - அருவிகள் பாயப் பெற்ற, தென்வரை – பொதியமலை, இனிதின் ஈன்ற – இன்பமாகப்பெற்ற, புனிறுஇளம் - மிகவுமிளமைபொருந்திய, குழவித்தென்றல் - இளந்தென்றற் காற்றானது, கன்னல் – கரும்பாகிய, அம் – அழகிய, சிலைக்கை – வில்லைப் பிடித்த கையையுடைய, மாரன் – மன்மதனானவன், காதலர் – நாயகர்களே, பிரிந்த – நீங்கிய, மாதர் – மாதர்களின், இன் உயிர் – இனிய உயிர்களே, படுப்பவேண்டி - பிடிக்க விழைந்து, இயற்றிய – வரவிட்ட, பார்வைஆம்-பார்வை மிருகமாகும் எ-று.

பார்வையென்பது மிருகங்களைப் பிடிக்க அவ்வவ்வினத்தில் ஒன்றை வளர்த்து வைப்பதாம். இது உவமையணி. 7

விண்டொடர்பொதும்பர்தோறும்விரைகமழ்போதில்வீழ்ந்து
வண்டினங்குடைந்துபாடமகரந்தமெழுந்ததோற்றங்
கொண்டல்கண்படுக்குந்தேமாங்குயிலினமழைப்பத்தோன்றுந்
திண்டிறலரங்கன்சேனைபராகமொத்திருந்ததன்றே.

இ-ள். விண்தொடர்-ஆகாயத்தை யளாவாநின்ற, பொதும்பர்தோறும்-சோலைகள்தோறும், விரை – வாசனை, கமழ் - பரிமளியாநின்ற, போதில் வீழ்ந்து – புட்பத்திலிறங்கி, வண்டுஇனம் – வண்டுக்கூட்டங்கள், குடைந்து-மூக்கினாலுழுது, பாட – பண்ணைப்பாட, மகரந்தம் – மகரந்தப்பொடிகள், எழுந்த தோற்றம் - எழும்பிய காட்சியானது, கொண்டல் – மேகங்கள், கண் படுக்கும் – நித்திரைசெய்யும்படியுள்ள, தேமா – தித்திப்பு மாமரத்திலிருக்கிற, குயில்இனம் – குயிற்கூட்டம், அழைப்ப – கூப்பிட, தோன்றும் - வந்த, திண்திறல் அரங்கன் - மிகுந்த வலிமையையுடைய மன்மதனது, சேனைபராகம் – சேனையினின்றெழும்புகிற புழுதியை, ஒத்து இருந்தது – ஒப்பாகியிருந்தது எ-று. 8

காயெரிமணியிற்செய்தகதிர்மூலமகளிர்கூந்த
லாய்மலருகுத்தல்போலக்குயில்குடைந்தாடவீழ்ந்த
சேயமென்போதுபோர்த்ததிருவரீனிலங்கள்யாவும்
பாயலிற்படுத்தசெம்பொற்படாமெனவிளங்குமன்றே.

இ-ள். காய் – கொளுத்தாநின்ற, எரி – நெருப்பையொத்த, மணியின் செய்த – இரத்தினத்தினாற்செய்த ஆபரணத்தினது, கதிர் - பிரகாசம்பொருந்திய, மூலை – தனங்களையுடைய, மகளிர் – மாதர்களது, கூந்தல் - அளகபாரமானது, ஆய் – ஆராய்ந்த, மலர்உகுத்தல்போல – புட்பத்தை உதிர்த்தல்போல, குயில் - கோகிலங்கள், குடைந்துஆட – கோதிக்கூவ, வீழ்ந்த – விழுந்த, சேய – சிவந்த, மெல் – மிருதுவாகிய, போது – புட்பங்கள், போர்த்த-மூடப்பெற்ற, தருவின் – மரங்களினது, நீள்நிலங்கள்யாவும் – நீண்டநிலங்களெல்லாம், பாயலில் – சயனத்தில், படுத்த – விரித்த, செம் - சிவந்த, பொற்

படாம் என – பொன் வத்திரத்தைப்போல, விளங்கும் – பிரகாசிக்கும் எ-து. அன்று ஏ – அசைகள். 9

தாழ்சினைபூத்தமென்பூந்தண்ணறுஞ்சுண்ணமாடி
வீழ்துணைவருதலைநோக்கிப்புதுக்கடிமேயதென்ஞா
யாழிசைமிடற்றசெங்கட்கருங்குயிலினிதினூடிக்
கோழரைக்குமரிவாழைக்குருத்திடையொளித்ததன்றே.

இ-ள். தாழ் – வளைந்த, சினை – கிளைகளில், பூத்த – மலர்ந்த, மெல்மிருதுவாகிய, பூ – மலர்களினது, தண் – குளிர்ச்சிபொருந்திய, நறு – வாசனையையுடைய, சுண்ணம்ஆடி – மகரந்தப் பொடியில்வீழ்ந்து, வீழ்-விரும்பாகின்ற, துணை – தலைவனுகிய ஆண்குயிலானது, வருதல் நோக்கி – வருகிறதைப்பார்த்து, புதுக்கடி-புதுமணத்தை, மேயது என்ஞ-அடைந்ததென்று கினைந்து, யாழ்இசை – வீணையினிசையையொத்த, மிடற்ற – கண்டத்தினையும், செங்கண் – சிவந்த கண்களையுமுடைய, கரு – கறுத்த, குயில் – பெட்டைக்குயிலானது, இனிதின்ஊடி – இன்பத்தினுலே பிணங்கி, கோழ் – செழிப்பாகிய, அரை – அரையையுடைய. குமரிவாழை – இளவாழையினது, குருத்தஇடை-குருத்தினிடத்தில், ஒளித்தது-ஒளித்துக்கொண்டது எ-று.

புதுக்கடி என்பதில் – நூதனவிவாகம் என்பதும் புதிய வாசனையென் பதுஞ் சிலேடையாற் பெறப்பட்டமையால், அதுகண்டு பெட்டைக்குயில் ஊடியதாம் எனக்கொள்க. 10

இளவேனிற்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 903.

போதுகொய்படலம்.

இப்படலத்தால் அந்நகரத்திலுள்ள ஆடவரும் மாதரும் லீலையோடு மலர்களைக் கொய்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

இன்னதன்மையவின்னிளவேனில்வா
யன்னபொன்னகராடவர்யாவரும்
பொன்னவாமுலைப்பூவையர்தம்மொடுந்
துன்னுநாண்மலர்ச்சோலைசென்றெய்தினர்.

இ-ள். இன்ன தன்மைய—இத்தன்மையவாகிய, இன் - இனிமையாகிய, இளவேனில் வாய் - வசந்தகாலத்தினிடத்தில், அன்ன பொன்னகர்- அந்த நகரத்திலுள்ள, ஆடவர் யாவரும் - புருடர்க ளெல்லோரும், பொன்- தேமலானது, அவாம்—விரும்புகின்ற, முலை—தனங்களையுடைய, பூவையர் தம்மொடும் - தங்கள் மங்கையரோடுங்கூட, துன்னும்—நெருங்கிய, நாள் மலர் - அன்றலர்ந்த மலர்களையுடைய, சோலை - பூஞ்சோலையை, சென்று- போய், எய்தினர் - அடைந்தார்கள் எ-று. 1

உள்ளங்கொண்டாரிவரென்றுணர்த்திடப்
புள்ளவாங்கணைவேளிடைப்போதல்போ
லள்ளிலைச்செழுஞ்சோலையிலன்பரைக்
கள்ளுண்கோதையர்கைப்பிடித்தேகினர்.

பெண்கள் கணவரைப் பிடித்துச் செல்லல்.

இ-ள். உள்ளம் - எங்கள் மனத்தை, கொண்டார் - அபகரித்துக்கொண்டார்கள், இவர் என்று—இவர்களென்று, உணர்த்திட - அறிவிக்க, புள்- வண்டுகள், அவாம் - விரும்புகின்ற, கணை - மலர்ப்பாணத்தையுடைய, வேள் இடை - மன்மதனிடத்தில், போதல்போல்—செல்வதுபோல, அள் - நெருங்கிய, இலை—இலைகளையுடைய, செழு - செழித்த சோலையினிடத்தில், அன்பரை - கணவர்களை, கள் உண்—தேன்பொருந்திய, கோதையர் - மாலையையணிந்த மங்கையர்கள், கைப்பிடித்து - கையிற் பிடித்துக்கொண்டு, ஏகினர்- போனார்கள் எ-று.

கள்ளரை அரசரிடத்துப் பிடித்துக்கொண்டுபோய் அவனுணைக் கிலக்காக்குவதுபோல ஆடவரைக் காமனுக் கிலக்காக்குதற்கென்க. 2

அணங்குநோய்செயுமைந்துமலரெனிற்
கணங்கொள்போதகளுலியபொங்கர்வாய்
மணந்துசெல்வதையன்றியணந்தவர்த்
தணந்துசெல்லுந்தருக்கினர்யாவரே.

சோலைக்கணுள்ள மலர்களின் சிறப்புக்கூறல்.

இ-ள். ஐந்து மலர் – ஐந்து மலர்களே, அணக்கு-வருத்தமாகிய, நோய்-துன்பத்தை, செயும் எனில் - செய்யுமேயாமாஞல், கணம்கொள் – கூட்டங் கொண்ட, போது – மலர்கள், களுலிய – நெருங்கிய, பொங்கர் வாய் – சோலையினிடத்தில், மணந்து – கூடி, செல்வதையன்றி – போவதையல்லாமல், மணந்தவர் – கூடினவர்களே, தணந்து – பிரிந்து, செல்லும் – போகின்ற, தருக்கினர் - செருக்கையுடையவர்கள், யாவர் – எவர்கள்? [ஒருவருமில்லை] எ-று. ஓ – அசை. 3

திருவலர்தங்குழாத்தொடுசென்றத
னிரைவளைஞ்சடியிற்றென்றறிகிலான்
வரைகொண்மார்பினுதைத்தமலரடி
புரைவதிதனநோக்கினன்போகின்றான்.

ஆடவனொருவன் சுவடுநோக்கிச் சேறல்.

இ-ள். திரு அலர்தம்-இலக்குமியையொத்த பெண்களுடைய, குழாத் தொடு - கூட்டத்துடன், சென்ற – நடந்த, தன் – தன்னுடைய, அரிவை-நாயகியினது, பஞ்சு – செம்பஞ்சுக் குழம்பூட்டிய, அடி – பாதமானது, இற்று என்று - இன்னதென்று, அறிகிலான் – அறியாத வொருவன், வரை – மலையை, கொள் – உவமை கொண்டிருக்கின்ற, மார்பின் – தனது மார்பினிடத்தில, உதைத்த – உதைத்த, மலரடி – தாமரை மலர்போன்ற பாதக்குறியை, புரைவது – ஒத்திருப்பது, ஈதுஎன – இந்த அடிக்குறியென்று, நோக்கினன்-பார்த்தவனுய், போகின்றான் - செல்கின்றான் எ-று. 4

மையகூந்தலொர்மங்கையசோகினி
லெய்துறுதுயர்பாதினையேறுபு
கொய்துமென்றுகுறித்தடிவைத்தலுஞ்
செய்யபோதுகினேதொறும்பூத்தவே.

மங்கைய ரடியால் அசோகு மலர்தல்.

இ-ள். மைய கூந்தல் – கறுத்த கூந்தலையுடைய, ஓர்மங்கை – ஒரு மங்கையானவள், அசோகினில்-அசோக மரத்தினிடத்தில், எய்துறுது-அடையக்கூடாமல், உயர் – உயரத்திலுள்ள, போதினை – மலரை, ஏறுபு – ஏறி, கொய்தும் என்று – பறிப்போமென்று, குறித்து – நினைத்து, அடிவைத்தலும் – பாதத்தைவைத்த மாத்திரத்தில், செய்ய – சிவந்த, போது – பூக்கள், கினைதொறும் – கினைக்கள்தோறும், பூத்த – மலர்ந்தன எ-று. 5

கோத்தமேகலைக்கோதையர்கோக்கலிற்
பூத்தசோகந்திலகமென்போதினிற்
றேத்துளிக்கமர்தெள்விளிவண்டினம்
பார்த்தகண்ணிழல்பாய்ந்தனபோலுமே.

மங்கையர் நோக்கால் மஞ்சாடி மலர்தல்.

இ-ள். கோத்த - கோவையிட்ட, மேகலை - மேகலாபரணத்தையுடைய, கோதையர் - மங்கையர்கள், நோக்கலின் - பார்த்தவளவில், பூத்து - மலர்ந்து, ஒசிந்த - வளைந்த, திலகம் — மஞ்சாடி மரத்தினுடைய, மெல் – மிருதுவாகிய, போதினில் – மலரில், தேம் தளிக்கு – தேனினது துளிக்கு, அமர்-பொருக்கிய, தெள்விளி - தெள்விளிராகத்தைப் பாடுகின்ற, வண்டு இனம் — வண்டுக் கூட்டங்கள், பார்த்த – பார்த்ததாகிய, கண் – கண்களினுடைய, நிழல்-சாயல்கள், பாய்ந்தனபோலும் – பரவினபோலும் எ-று. 6

காசுலாமூலைக்கன்னியர்புல்லலும்
பாசிலைக்குரவின்றபைம்போதினின்
மூசுவண்டினமொய்த்ததுவெம்முலைப்
பூசுகானம்பொறித்ததுபோதுமால்.

பெண்கள் தழுவப்பூத்த குராமரச் சிறப்பு.

இ-ள். காசு உலாம் — இரத்தினபரணங்கள் தங்கிய, மூலை - தனங்களையுடைய, கன்னியர் — மங்கையர்கள், புல்லலும் – தழுவினவளவில், பாசு இலை - பசுமைபொருந்திய இலைகளையுடைய, குரவு - குராமரமானது, ஈன்ற-பெற்ற, பைம்போதினில் - பசியமலரில், மூசு - மொருங்கிய, வண்டு இனம்-வண்டுக் கூட்டமானது, மொய்த்தது - மொய்த்துக்கொண்டது, வெம்-விருப்பத்தைக் கொடுக்கின்ற, முலை - தனங்களில், பூசு - பூசப்பட்ட, நானம்-கத்தூரி — பொறித்ததுபோலும் – பூசியதுபோலும் எ-று. 7

வஞ்சிநுண்ணிடைமாதர்மித்தலிற்
செஞ்செவேதளிர்ஈன்றசெயலைக
ளஞ்செஞ்சீரடிதோய்ந்தவரக்கெறி
பஞ்சியுண்டொளிர்பான்மைகடுக்குமே.

மாதர் மிதிக்க மலர்ந்த அசோகின் மாட்சி.

இ-ள். வஞ்சி — கொடியையொத்த, நுண் - நுட்பமாகிய, இடை - மருங்கையுடைய, மாதர் — மடவார், மித்தலில் - மிதித்தலினால், செஞ்செவே-செம்மையாக, தளிர் – தளிர்களை, ஈன்ற — தந்த, செயலைகள்-அசோக விருக்கங்கள், அம் – அழகிய, செம் - சிவந்த, சீறடி – அம்மடவார் சிற்றடியில், தோய்ந்த — பூசிய, அரக்குவறி – செங்கிறத்தை வீசாநின்ற, பஞ்சி - செம்பஞ்சியை, உண்டு – தம்மிடத்திற்கொண்டு, ஒளிர் – பிரகாசிக்கின்ற, பான்மை-தன்மையை, கடுக்கும் - ஒக்கும் எ-று. 8

அரவமேகலையாயிழையார்க்குயர்
குரவம்பாவைகொடுத்தகொழுதிமென்
முருகுலாமலிமொய்த்தகடம்பினம்
பரிவினடவெண்பந்துகொடுத்தவே.

அரிவையர்க்குக் குராமரமும் கடம்பு மளித்த கொடைகூறல்.

இ-ள். அரவம் - சத்தியாகின்ற, மேகலை - மேகலாபரணத்தையுடைய, ஆய் இழையார்க்கு - மாதருக்கு, உயர் - உயர்ந்த, குரவம் - குராமரங்கள், பாவை - காயாகிய பதுமைகளை, கொடுத்த - கொடுத்தன, கொழுதி - கோதி, மெல் - மிருதுபொருந்திய, முருகு - தேனினிடத்தில், உலாம் - உலாவுகின்ற, அளி - வண்டுகள், மொய்த்த - நெருங்கிய, கடம்பு இனம் - கடப்ப மரங்கள், பரிவின் - விருப்பத்துடனே, ஆட - ஆட, வெள் - வெண்மையாகிய, பந்து - காயாகியபந்தை, கொடுத்த - கொடுத்தன எ-று. 9

மாங்குயிற்சூல்கேட்டுமலருறுக்
கோங்கமாதர்குதலையைக்கேட்டலுக்
தேங்கொள்போதுசினைதொறும்பூத்தலா
லாங்கதற்கிணையாகுயிலார்ப்பதே.

குயற்குரலுக்கு மலராக்கோங்கு குதலைகேட் டலர்ந்தமை.

இ-ள். மா - மாமரத்திலிருக்கிற, குயில்குரல் - குயிலின் குரலை, கேட்டு - கேட்டு, மலர் உறு - மலராத, கோங்கம் - கோங்க விருக்குமானது, மாதர் - மடவாருடைய, குதலையை - குதலைச்சொல்லை, கேட்டலும் - கேட்டவளவில், தேம்கொள் - தேனைக்கொண்ட, போது - புட்பங்களை, சினைதொறும் - கிளைகள்தோறும், பூத்தலால் - புட்பித்தலால், ஆங்கு - அவ்விடத்தில், அதற்கு - அம்மடவார்சொல்லுக்கு, குயில் ஆர்ப்பது - குயில் கூவுவது, இனையோ - ஒப்பாகுமோ (ஆகாது) எ-று. 10

காவிலன்புடைக்காளியோர்தார்குழற்
பூவைகண்ணுறுபூந்துகண்மாற்றலு
மாவியென்னவருகுறைமாற்றவள்
காவியங்கட்கடைகள்சிவந்தவே.
சக்களத்தி அன்பால் பெண்ணெருத்தி பிணங்கல்.

இ-ள். காவில் - பூஞ்சோலையில், அன்பு உடை - ஆசையையுடைய, காளை - நாயகனுனவன், ஓர் - ஒரு, தார் - மாலையணிந்த, குழல் - கூந்தலையுடைய, பூவை - னேயாளது, கண் உறு - கண்ணிலேபடிந்த, பூந்துகள் - மகரந்தப் பொடியை, மாற்றலும் - துடைத்த மாத்திரத்தில், ஆவி என்ன - தன்னுயிரைப் போல, அருகு உறை - பக்கத்திலிருந்த, மாற்றவள் - சக்களத்தியினுடைய, காவி - நீலோற் பலத்தையொத்த, அம் - அழகிய, கண்கடைகள் - கடைக்கண்கள், சிவந்த - சிவந்தன எ-று.

தன்கணவன் சக்களத்தி யிடத்தினன்பினன் என்றறிந்து கோபித்தாளென்க. பூந்துகள் மாற்றலாகிய காரண மோரிடத்தும் கண்சிவத்தலாகிய காரியம் மற்றோரிடத்தும் கூறலால் தொடர் பின்மையணி. 11

வாங்குவிற்கைவரைபுரைதோளினன்
றேங்கொள்வண்டுதிளைப்பவடுவுறுங்

கோங்கரும்பினோக்கியோர்கோல்வளை
வீங்குவெம்முலைநோக்கலும்வெள்கினாள்.

இதுமுதல் மூன்றுபாட்டுக்கள் விளையாட்டையுரைத்தல்.

இ-ள். வாங்குவில் – வளைந்தவில்லை, கை – கையிலேயுடைய, வரை புரை – மலையையொத்த, தோளினன் – தோளையுடைய ஒருபுருடன், தேம் கொள் – தேனையுண்ணுகிற, வண்டு – வண்டுகள், திளைப்ப – பொருந்த, வடு உறும் – வடுவுண்ட, கோங்கமரத்தினது அரும்பினை – அரும்பை, நோக்கி-பார்த்து, ஒர் – ஒரு, கோல்வளை – மடந்தையினது, வீங்கு – பருத்த, வெம்-விருப்பத்தைத்தருகின்ற, முலை – தனங்களை, நோக்கலும் – பார்க்குமளவில், வெள்கினாள் – அவள் வெட்கப்பட்டாள் எ-று.

வடுவுண்ட கோங்கரும்பையும் நகக்குறியுண்ட தனங்களையும் ஒப்பாக்கிப் பார்க்குமளவில் அதுகண்டு நாணினளென்க. 12

கோதைமார்பனொர்கோல்வளைகாதினின்
மாதர்நீலம்புனைதலுமாற்றவ
ணேதகும்படிநோக்கியநோக்கவள்
காதிலும்புனைகாவிநிகர்த்ததே.

இ-ள். கோதை – மாலையணிந்த, மார்பன் – மார்பையுடையவன், ஒர்-ஒரு, கோல்வளை – மாதினது, காதினில் – காதிலே, மாதர் – அழகிய, நீலம்-நீலோற்பலத்தை, புனைதலும் – சூட்டியவளவில், மாற்றவள் – சக்களத்தி, நோதகும்படி – நோகும்படி, நோக்கிய-பார்த்த, நோக்கு – பார்வையானவை, அவள் – அச்சக்களத்தியினது, காதிலும் – காதினிடத்தும், புனை – சூடிய, காலி – நீலோற்பலத்தை, நிகர்த்த – ஒத்திருந்தன எ-று. 13

கோலநாண்மலர்கொய்பவளங்கையி
லோலிடுஞ்சுரும்போச்சவும்போகில
மாலுழந்துமறிந்துவிழுவன
நீலவொண்கழங்காடனிகர்க்குமால்.

இ-ள். கோலம் – அழகுபொருந்திய, நாள் மலர் – புதிய புட்பங்களை, கொய்பவள் – பறிக்கின்றவளது, அங்கையில் – உள்ளங்கையில், ஓலிடும்-சத்திக்கின்ற, சுரும்பு – வண்டுகள், ஒச்சவும் – ஓட்டவும், போகில – போகின்றிலவாய், மால் உழந்து – மயக்கமுற்று, மறிந்து – மறிபட்டு, விழுவன-அக்கையில் விழுகின்றனவாகி, நீலம் – கறுத்த, ஒள் – பிரகாசம்பொருந்திய, கழங்கு ஆடல் – அம்மனை ஆடலை, நிகர்க்கும் – ஒக்கும் எ-று. 14

போதுகொய்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் - 917.

புனல்விளையாட்டுப் படலம்.

இப்படலத்தாற் போதுகொய்தவர்கள் பின்பு அக்கா
லத்துக் கேற்பப் புனலில் விளையாடல்
சொல்லப்படுகின்றது.

கலி விருத்தம்.

இணர்விழ்பொதும்பரினிளைஞர்யாவரும்
புணர்முலைமகளிரும்போதுகொய்தபின்
றுணையொடுமடவனமிரியத்தூநிற
மணிதெளித்தனையநீர்வாவியெய்தினர்.

மாதரும் மைந்தரும் வாவியிற்சேர்தல்.

இ-ள். இணர் – பூங்கொத்துகள், அவிழ்-விரியாகின்ற, பொதும்பரின்-சோலையில், இளைஞர்யாவரும் – காளையர்களெவர்களும், புணர்-நெருங்கிய, முலை – தனங்களையுடைய, மகளிரும் – மாதர்களும், போது – புட்பங்களை, கொய்தபின் – பறித்தபின்பு, துணையொடும் – பெட்டையுடனே, மட அனம் – இளவன்னங்கள், இரிய – ஓட, தூ – வெண்மையாகிய, நிறம்-நிறத்தையுடைய, மணி – முத்தை, தெளித்த அனைய – பரப்பியதையொத்த, நீர் – சலத்தையுடைய, வாவி – தடாகத்தை, எய்தினர் – அடைந்தார்கள்.

வாணெடுங்கண்ணியர்வாவியெய்தலுஞ்
சேணிடைநேமியம்புட்கள்செல்லுதல்
யாணர்மென்கோங்கரும்பிடையவீங்கிய
பூண்முலைக்குடைந்தயல்போதல்போன்றதே.

இதமுதற் புனலில் விளையாடல் கூறப்படுகின்றது.

இ-ள். வாள் – வாளையொத்த, நெடுங்கண்ணியர் – நீண்டகண்களையுடைய மாதர்கள், வாவி – தடாகத்தில், எய்தலும் – அடையவும், சேண் இடை – ஆகாயத்தின்கண், நேமியம் புட்கள் – சக்கரவாகப்பகுதிகள், செல்லுதல் – போதலானது, யாணர் – புதுமைபொருந்திய, மெல் – மிருதுவாகிய, கோங்கு அரும்பு – கோங்கரும்புகள், இடைய – தோற்றுப்போக, வீங்கிய – பருத்த, பூண் – ஆபரணத்தையணிந்த, முலைக்கு-தனங்களுக்கு, உடைந்து – தோற்று, அயல் – புறத்தே, போதல் – போய்விடுதலை, போன்றது-ஒத்திருந்தது எ-று.

2

மங்கையர்செறிதலுமல்குநீரிடைப்
பங்கயச்செழுமலர்தாழ்தல்பாவையர்
திங்கள்வாண்முகத்தெழிற்குடைந்துதேங்கமழ்
பொங்குதண்புனலிடையொளித்தல்போலுமால்.

இ-ள். மங்கையர் – மாதர்கள், செறிதலும் – அடைதலும், மல்கு-நிறைந்த, நீர் இடை – சலத்தினிடத்தில், பங்கயம் – தாமரையினது, செழுமலர்-செழித்த புட்பங்கள், தாழ்தல் – மூழ்குதல், பாவையர் – மாதர்களுடைய, திங்கள் – சந்திரனையொத்த, வாள்-பிரகாசம்பொருந்திய, முகத்து எழிற்கு-முகத்தினது அழகிற்கு, உடைந்து – தோற்று, தேம் – வாசனை, கமழ் – பரிமளியாநின்ற, பொங்கு – மிகுந்த, தண் புனல் இடை – குளிர்ந்த நீரினிடத்தில், ஒளித்தல்போலும் – ஒளித்துக் கொள்ளுதலை யொக்கும் எ-று. 3

வடுவகிர்நெடுங்கணார்வார்கொள்வெம்முலை
குடைபுனல்வாவியுட்குளித்தலிற்றிண்
படர்சிறையரிவதற்கஞ்சிப்பாய்திரைக்
கடலிடைமால்வரையொளித்தல்காட்டுமால்.

இ-ள். வடுவகிர் – மாவடுவினது பிளப்பையொத்த, நெடுங்கணார்-நெடிய கண்களையுடைய மாதர்களது, வார்கொள் – கச்சையணிந்த, வெம் – விருப்பத்தைத்தரும், முலை – தனங்கள், குடை – ஆடாநின்ற, புனல் – சலத்தையுடைய, வாவி உள் – தடாகத்தினுள், குளித்தல் – மூழ்குதல், இந்திரன்-தேவேந்திரன், படர் – விரிந்த, சிறை – இறகை, அரிவதற்கு – அறுத்தற்கு, அஞ்சி – பயந்து, பாய் – பாயாநின்ற, திரை-அலையையுடைய, கடல் இடை-சமுத்திரத்தினிடத்தில், மால்வரை – உயர்ந்த மலைகள், ஒளித்தல் – ஒளித்துக்கொள்ளுதலை, காட்டும் – காண்பிக்கும். எ-று. ஆல் – அசை. 4

விரைகமழ்சுண்ணமெய்திமிர்ந்துமென்குழற்
றெரியலின்வீக்குபுதெய்வச்சாந்தணி
வரிமுலைதோன்றிடமகளிர்நீந்துத
னிரைமணிக்குடத்தினுணீந்தல்போலுமால்.

இ-ள். விரைகமழ் – வாசனைபரிமளியாநின்ற, சுண்ணம் – கந்தப்பொடிகளை, மெய்திமிர்ந்து – சரீரத்திற் பூசிக்கொண்டு, மென்குழல் – மிருதுவாகிய கூந்தலை, தெரியலின் வீக்குபு – மாலையிலை கட்டி, தெய்வம் – தெய்வீகமாகிய, சாந்து அணி – சந்தனத்தையணிந்த, வரி – கோலத்தையுடைய, முலை – தனங்கள், தோன்றிட – தோற்ற, மகளிர் – மாதர்கள், நீந்துதல்-நீந்தலானது, நிரை – வரிசையாகிய, மணிக்குடத்தினுள் – இரத்தின கும்பத்தினுள், நீந்தல்போலும் – நீந்துதலையொக்கும் எ-று. 5

படவரவல்குலார்முலையிற்பாய்புன
லுடைதிரைக்கரத்தினுற்பொருதலொண்டிறற்
குடமுனிகருங்கடல்குடித்தவாற்றினுற்
புடைதிரண்மணிக்குடம்புடைத்தல்போன்றதே.

இ-ள். பட அரவு அல்குலார் – பாம்பின் படத்தையொத்த நிதம்பத்தையுடையமாதரது, முலையில் – தனங்களின்மீது, பாய் – பாயாநின்ற, புனல் – சலமானது, உடை – உடையாநின்ற, திரைக்கரத்தினுல் – அலையா

கிய கையினுல், பொருதல் – மோதுதல், ஒண்திறல் – பிரகாசமாகிய வன் மையையுடைய, குடமுனி – அகத்தியர், கருங்கடல் – கருங்கடலே, குடித்த ஆற்றினுல் – பானம்பண்ணிய நெறியினுல், புடை – பக்கங்களில், திரள்-திரண்ட, மணிக்குடம் – இரத்தினக் குடத்தை, புடைத்தல் போன்றது – அடித்தலே யொத்திருந்தது எ-று.

அகத்தியமுனிவர் குடத்துப் பிறந்தார் ஆகலின் தன்னேக்குடித்தோன் முயென வெகுண்டு கடல் மோதிற் றென்க. பகையுடையார் ஒருவரின் இனத்தாரிடத்தும் பழிதீர்த்தல் வழக்கமாகலின் இவ்வாறு கூறினுர். அது கௌசிகமுனி வசிட்ட குமாரர்களே நீறுக்கியதனுலும், பரசுராமர் கார்த்த வீரியார்ச்சுனன் சந்ததிகளேக் கருவறுத்தமையினுலும் கண்டுகொள்க. அகத்தியர் கடல்குடித்த சரித்திரத்தைத் திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலத்திற் றெற்றெனக்காண்க. 6

சிற்றிடையொருத்திதன்றிலகவாண்முகத்
தெற்றுநீர்காதலனிறைப்பக்காண்டலு
மற்றதுபொறுக்கலாதுயிர்த்துமாழ்கிய
முற்றிழைமழைக்கணீர்முகனிறைந்தவே.

இ-ள். சிறு இடை – சிறிய இடையையுடைய, ஒருத்திதன் – ஒருமாதினது, திலகம் – திலகமணிந்த, வாள் முகத்து – பிரகாசம் பொருந்திய முகத்தினிடத்தில், எற்று – மோதுகின்ற, நீர் – சலத்தை, காதலன் – புருடன், இறைப்ப – இறைக்க, காண்டலும் – பார்த்தவளவில், அது – அதை, பொறுக்கலாது – பொறுக்கமாட்டாமல், உயிர்த்து – பெருமூச்சுவிட்டு, மாழ்கிய-மயங்கிய, முற்று இழை – சகக்களத்தியினது, மழைக்கண் நீர் – குளிர்ச்சி பொருந்திய கண்ணீரானது, முகம் – முகத்தில், நிறைந்த – நிரம்பின, எ-று. மற்று ஏ – அசைகள். 7

நாள்விழவயர்ந்தவனுணிக்காதலன்
றேளணிசாந்தநீர்தோய்ந்துநீக்கலும்
வாளுகிருழுதமெய்வடுக்கண்டேங்குறு
மீளவுமுளநனிவெள்கினுளரோ.

இ-ள். நாள் – புதிதாக, விழவு அயர்ந்தவன் – கலியாணம் பண்ணப் பட்டவள், நாணி – வெட்கப்பட்டு, காதலன் – புருடனது, தோள் அணி-தோள்களினின்று மணிந்த, சாந்தம் – சந்தனத்தை, நீர்தோய்ந்து – நீரிற் குளித்து, நீக்கலும் – போக்கியவளவில், வாள் – வாள்போன்ற, உகிர் – நகங்கள், உழுத – கிழித்த, மெய் – சரீரத்தில், வடுக்கண்டு – குறிகளேப்பார்த்து, ஏங்கு உறு – இரங்கிய, மீளவும் – மறுபடியும், உளம் – மனதில், நனி – மிகவும், வெள்கினுள் – வெட்கமுற்றுள் எ-று. அரோ – அசை. 8

இன்னணமாடதேனுக்கியெய்திய
மன்னவர்மன்னனுமருங்குதேய்த்துயர்

பொன்னவிரிளமுலைப்பூவைதன்னெடுந்
துன்னுநீர்ப்போர்த்தொழில்தொடங்கினளரோ.

இனி நளன் தமயந்தியுடன் புனல் விளையாட்டுச்
செய்தமைகூறல்.

இ-ள். இன்னணம் - இத்தன்மையவாக, ஆடுதல் – விளையாடுதலை, நோக்கி – பார்த்து, எய்திய – அத்தடாகத்தினிலே வந்த, மன்னவர் மன்னனும் – அரசர்க்கரசனுகிய நளமகாராசனும், மருங்கு தேய்த்த – இடையைத் தேய்த்த, உயர் – உயர்ந்த, பொன் அவிர் – தேமல் பிரகாசியாநின்ற, இள- இளமைபொருந்திய, முலை – தனங்களையுடைய, பூவை தன்னெடும் – தமயந்தியினெடும், துன்னு – நெருங்கிய, நீர்ப்போர்த்தொழில் – சலக்கிரீடையை, தொடங்கினன் – ஆரம்பித்தான் எ-று. அரோ – அசை. 9

சுண்ணமென்சிவிறிநீர்துரக்குமெந்திர
மெண்ணிலதாங்கிவேளனையவேந்தலைப்
பெண்ணலங்கனிந்தொளிர்பேதைதன்னெடு
மண்ணியமணியனூர்வலைந்திட்டாரரோ.

இ-ள். சுண்ணம் – கந்தப்பொடிகளையும், மெல் – மிருதுவாகிய, சிவிறி- துருத்தியையும், நீர்துரக்கும் எந்திரம் - நீரிறைக்குங் குழல்களையும், எண்ணில - அளவில்லாமல், தாங்கி - எடுத்துக்கொண்டு, வேள்அனைய - மன்மதனையொத்த, வந்தலை – நளமகாராசனை, பெண் நலம் – பெண்தன்மை, கனிந்து பழுத்து, ஒளிர் – பிரகாசியாகின்ற, பேதை தன்னெடும் – தமயந்தியோடு கூட, மண்ணிய – கழுவிய, மணி அனூர் - இரத்தினத்தையொத்த பெண்கள், வலைந்திட்டார் – வளைந்துகொண்டார்கள் எ-று. 10

துன்னிருங்கூந்தலார்துரந்ததாரைகண்
மன்னவன்மூள்களிற்பாய்தல்வானிடை
மின்னினங்காரொடுமிடைந்துமென்புனல்
பொன்னெடுங்குன்றின்மேற்பொழிதல்போன்றதே.

இ-ள். துன்னு – நெருங்கிய, இரு - பெருமைபொருந்திய, கூந்தலார்- கூந்தலையுடைய மாதர்கள், துரந்த – தூவிய, தாரைகள் – சலதாரைகள், மன்னவன் – நளமகாராசனுடைய, தோள்களில் – புயங்களில், பாய்தல்- வீழ்தலானது, வான்இடை – ஆகாயத்தினிடத்தில், மின் இனம் – மின்னற் கூட்டம், கார் ஒடும் - மேகத்தடனே, மிடைந்து – நெருங்கி, மெல் - மிருதுவாகிய, புனல் - சலத்தை, பொன்நெடுங் குன்றின்மேல் - பெரிய மகாமேருவின்மீது, பொழிதல் போன்றது – பொழிதலை ஒத்திருந்தது எ-று. 11

அரசர்கோன்குலிகநீர்த்தாரையாயிரஞ்
சுரிகுழன்மடந்தையர்முகத்திற்சோவுதன்

முருகவிழ்தாமரைமலரின்மோட்டிளம்
பரிதிசெங்கதிர்க்குழாம்பாய்தல்போன்றதே.

இ-ள். அரசர்கோன் – இராசாதி ராசனுகிய நளமகாராசன், குலிகநீர்-இங்குலிக நீரினது, தாரை ஆயிரம்-ஆயிரந்தாரைகளே, சுரி-சுழித்த, குழல்-கூந்தலையுடைய, மடந்தையர் – மாதருடைய, முகத்தில் – முகங்களில், தூவுதல் – இறைத்தலானது, முருகு – தேன், அவிழ் – விரியாநின்ற, தாமரை மலரின் – தாமரை புட்பத்தினிடத்தில், மோட்டிளம் – மிகுந்த இளமை பொருந்திய, பரிதி – சூரியனுடைய, செங்கதிர்க்குழாம் – சிவந்த கிரணக் கூட்டங்கள், பாய்தல் – வீழ்தலை, போன்றது – ஒத்திருந்தது எ-று. எ-ற்றசை. 12

விரைகமழ்சுண்ணமும்வீசுசாந்தமு
மாசனுண்டெறியலுமாற்றலாமையாற்
குரைகடல்குளித்திடுமின்னிற்கோதைய
ருரவுநீர்வாவியிலொளித்திட்டாரரோ.

இ-ள். விரை – வாசனை, கமழ் – பரிமளியாநின்ற, சுண்ணமும் – கந்தப் பொடிகளேயும், வீசு – வாசனையை வீசாநின்ற, சாந்தமும் – சந்தனத்தையும், அரசன் – நளமகாராசன், ஆண்டு – அவ்விடத்தில், எறிதலும் – வீசவும், ஆற்றலாமையால் – பொறுக்க மாட்டாமையினல், குரை – சத்தியாநின்ற, கடல்-சமுத்திரத்தில், குளித்திடும் – மூழ்குகின்ற, மின்னின் – மின்னலைப்போல், கோதையர் – மாதர்கள், உரவு – விரிந்த, நீர் – சலத்தையுடைய, வாவியில்-தடாகத்தில், ஒளித்திட்டார்-ஒளித்துக்கொண்டார்கள் எ-று. அரோ-அசை.

வாமமேகலையினர்வளர்ந்தவெம்முலை
கேமியம்புள்ளெனநீருட்காட்டுவார்
காமர்வாண்முகத்தினைக்கமலஞ்சேர்த்தித்தண்
டாமரையெனமணித்தடத்தின்மூழ்குவார்.

இ-ள். வாமம் – அழகுபொருந்திய, மேகலையினர் – மேகலாபரணத்தையுடைய மாதர்கள், வளர்ந்த – வளர்ந்த, வெம் – விருப்பத்தைத்தராநின்ற, முலை – தனங்களே, நேமியம் புள் என – சக்கரவாகப் பறவையென்று, நீருள் காட்டுவார் – சலத்துக்குள்ளே காட்டுவார்கள், காமர் – அழகிய, வாள் – பிரகாசம்பொருந்திய, முகத்தினை – முகத்தை, கமலம்சேர்த்தி – தாமரைப் புட்பத்துடனே சேர்த்து, தண் – குளிர்ச்சிபொருந்திய, தாமரை என – தாமரைப்பூவென்று சொல்ல, மணி – முகத்தையுடைய, தடத்தின் – தடாகத்தில், மூழ்குவார் – மூழ்குவார்கள் எ-று. 14

தோற்றதன்பெரும்படைதுளங்கினுயிரி
யாற்றலமெனமலரடியிற்சேர்தலுங்
கோற்றொடியலங்கலங்குன்றனனெடு
மேற்றனளெரிமணிச்சிவிறியேந்தியே.

இ-ள். தோற்ற - தோற்றுப்போன, தன் - தன்னுடைய, பெரும்படை - பெரிய சேனைகள், தளங்கினும் - நடுங்கினும், இனி - இனிமேல், ஆற்றலம் என - பொறுக்கமாட்டோமென்று, மலர் அடியில் - தாமரைமலரினையொத்த பாதத்தில், சேர்தலும் - அடையுமளவில், கோல்தொடி - தமயந்தியானவள், அலங்கல் - மாலையணிந்த, அம் - அழகிய, குன்று அன்னவனும் - மலையையொத்த நளமகாராசனுடனே, எரி - பிரகாசியாநின்ற, மணி - இரத்தினத்தாற்செய்த, சிவிறி - நீர்தூற்றுங் கருத்தியை, வாங்கி - தாங்கி, ஏற்றனள் - எதிர்த்தாள் எ-று. 15

ஓவியமெழுதருமுருவப்பூங்கொடிக்
கோவைவார்மணிவடக்கொம்மைவெம்முலைத்
தூவிலைமுறுமெனச்சுடர்செய்பூணினன்
ஞவியந்துகில்கரந்தமையத்தூவினன்.

இ-ள். ஓவியர் - சித்திரகாராலே, எழுதரு - எழுதுதற்கரிய, உருவம் - வடிவத்தையுடைய, பூங்கொடி - தமயந்தியினது, கோவை - கோத்திருக்கிற, வார் - நீண்ட, மணிவடம் - முத்துமாலையணிந்த, கொம்மை - இளமைபொருந்திய, வெம் - விருப்பத்தைத் தருகின்ற, முலை - தனங்களில், தூவில் - நீரைத்தூவில், நோமுறும் என - வருந்துவளென்று, சுடர்செய் - பிரகாசிக்கின்ற, பூணினன் - ஆபரணத்தையுடைய நளமகாராசன், ஆவி - பாலாவியையொத்த, அம் - அழகிய, துகில் - வத்திரமானது, கரந்து அமைய - மறையும்படி, தூவினன் - இறைத்தான் எ-று. 16

அந்துகினனைதலினல்குமூன்றுதல்
சுந்தடுகளிற்றினன்சாணைவெள்குறச்
சுந்தரச்சுண்ணநீர்முகத்திற்றூயவன்
சந்தணிதடம்புயந்தழுவினளரோ.

தமயந்தி வெள்கி நளனைத்தழுவல் கூறப்படுகின்றது.

இ-ள். அம்துகில் - அழகிய வத்திரம், நனைதலில் - நனைந்த வளவில், அல்குல் - நிதம்பமானது, தோன்றுதல் - தோன்றுதலே, கந்து அடு - கட்டுத்தறியை முறிக்காநின்ற, களிற்றினன் - யானையையுடைய நளன், காண - பார்க்க, வெள்குஉரு - வெட்கமுற்று, சுந்தரம் - அழகிய, சுண்ணநீர் - கந்தப்பொடி கலந்தநீரை, முகத்தில் தூய் - முகத்திலே இறைத்து, அவன் - அவ்வரசனுடைய, சந்து அணி - சந்தனமணிந்த, தடபுயம் - பருத்த தோள்களை, தழுவினள் - தழுவிக்கொண்டாள் எ-று.

தன்னுடைய அவயவங்களை நளன் பார்க்குமளவில் அதுகண்டு நாணிய தமயந்தி அவன் பாராமைக்கு அவன் முகத்தில் நீர் தூவியதமன்றி மட்டமையால் தழுவினளென்க. 17

அலர்முலையம்மருங்ககறுகாமெனக்
கலுழ்வபோற்றண்டுளிகாவிமேகலை

நிலவுமிழ்பூணினுணீக்கியேர்பெற
விலகிவில்லுமிழ்கலைவீக்கினளோ.

இனி யிரண்டுபாட்டால் சலக்கிரீடை செய்தபின் தமயந்தி யலங்கரித்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அலர்மூலை – தமயந்தியினது, அம் மருங்கு - அழகிய இடையை, அகறும் – நீங்குவோம், நாம் எனு – நாமென்று, கலுழ்வபோல் – அழுகின்றதுபோல், தண்டளி - தண்ணிய துளிகளை, காலும் - சொரியும், மேகலை- மேகலாபரணத்தை, நிலவு - பிரகாசத்தை, உமிழ் – உமிழாகின்ற, பூணினுள்- ஆபரணத்தையுடைய தமயந்தி, நீக்கி - தள்ளி, எர்பெற - அழகுபெற, விலகி- விட்டுவிட்டு; வில் – பிரகாசத்தை, உமிழ் – கக்காகின்ற, கலை - ஆடையை, வீக்கினுள் – கட்டிக்கொண்டாள் எ-று. பூணினுள் மேகலை நீக்கிக் கலைவீக்கினுளெனக் கூட்டுக. 18

நகைநிலாத்தவழ்ந்தெனநானங்கோட்டிய
முகிழ்முலைமுன்றிலின்முத்தந்தாங்கினள்
ளகினறுந்தூமமென்குழலிலம்மலர்ச்
சிகழிகைவேய்ந்தனடிலகந்தீட்டினுள்.

இ-ள். நகை – ஒளியையுடைய, நிலா – சந்திரிகை, தவழ்ந்து என - தவழ்ந்ததுபோல, நானம்கோட்டிய – கத்தூரியப்பிய, முகிழ் - அரும்பையொத்த, முலை முன்றிலில் - தனப்பிரதேசத்தில், முத்தம் – முத்துவடத்தை, தாங்கினுள் – தரித்தாள், அகில் – அகிலினுடைய, நறுந்தூமம் - நறிய புகையூட்டிய, மென்குழலில் – மெல்லிய கூந்தலில், அம் – அழகிய, மலர்ச்சிகழிகை- மலர்மாலையை, வேய்ந்தனள் - தரித்தாள், திலகம் – பொட்டை, தீட்டினுள்- எழுதினுள் எ-று. 19

களிச்சுரும்பரற்றுதார்க்காளைகாமநோய்
தளிர்த்தெழமடமயிற்சாயறன்னெடுந்
துளிப்புயல்கண்படுசோலைநாப்பணேர்
பளிக்குமேனிலைமலர்ப்பள்ளிமேவினன்.

நள தமயந்திகள் சோலை மலரணைமேவல்.

இ-ள். களி – களிப்பையுடைய, சுரும்பு – வண்டுகள், அரற்றுதார்-சத்தியாகின்ற மாலையையுடைய, காளை - நளமகாராசனுனவன், காமம்நோய்- விரகநோயான து, தளிர்த்து எழ – அதிகரிக்க, மடமயில்சாயல் தன்னெடும்- தமயந்தியுடனே, துளிப்புயல் – துளியையுடைய மேகங்கள், கண்படு – நித்திரை செய்யா கின்ற, சோலை நாப்பண் – சோலைக்கு மத்தியத்தில், ஓர்பளிக்கு மேல் நிலை – ஒரு பளிங்கினாற்செய்த மேலுப்பரிகையில், மலர்பள்ளி- புட்பசயனத்தில், மேவினன் – சேர்ந்தான் எ-று. 20

அரிக்குரற்கிண்கிணிசிலம்பொடார்த்தன
புரிக்குழன்மலர்மழைபொழிந்துபொங்கிய

வரிச்சிறைத்தும்பிபாட்டயர்ந்தமங்கைதன்
றிருக்கிளர்முலைநலஞ்செம்மலுண்ணவே.

ளன் தமயந்தியைச் சேர்ந்திருத்தல்.

இ-ள். மங்கைதன் – தமயந்தியினது, திருகிளர் - அழகுமிகுந்த, முலை நலம் - தனத்தினதின்பத்தை, செம்மல் – நளமகாராசன், உண்ண – அனுபவியாநிற்க, அரி – தவளையினது, குரல் – குரலையொத்த, கிண்கிணி - சதங்கைகள், சிலம்பொடு – சிலம்புடனே, ஆர்த்தன – ஆரவாரித்தன, புரி – கட்டுப்பட்ட, குழல் – கூந்தல், மலர்மழை-புட்பவருடத்தை, பொழிந்து-சொரிந்து, பொங்கிய – மிகுந்தன, வரி – நீண்ட, சிறை – இறகையுடைய, தும்பி-வண்டுகள், பாட்டு அயர்ந்த - பாட்டைப்பாடின எ-று. 21

ஏந்திளவனமுலைசாடவீர்நறுஞ்
சாந்துதிர்ந்தெதிரெழிறவழுமார்பினன்
பூந்துணர்பொதுளியபொதும்பர்நாப்பணேர்
வாய்ந்தபூங்கொடியொடுமணந்துவைகினன்.

இ-ள். ஏந்து - ஏந்திய, இள - இளமையாகிய, வனமுலை – அழகிய தனங்கள், சாட – மோத, ஈர் - குளிர்ச்சியும், நறு – வாசனையும்பொருந்திய, சாந்து உதிர்ந்து - சந்தனமழிந்து, எதிர்-நேராக, எழில்தவழும் - அழகு பொருந்திய, மார்பினன் – மார்பையுடைய நளன், பூதுணர் - பூங்கொத்துகள், பொதுளிய – நெருங்கிய, பொதும்பர் - சோலையினுடைய, நாப்பண்-மத்தியத்தில், ஓர் – ஒப்பற்ற, வாய்ந்த – தனக்குக்கிடைத்த, பூகொடியொடு-தமயந்தியினுடனே, மணந்து – கூடி, வைகினன் - இருந்தான் எ-று. 22

புனல்விளையாட்டுப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - 939.

சூதாடுபடலம்.

இப்படலத்தாற் குறைவின்றிய செல்வத்தை யனுபவிக்கும்
நளன் விதிவழியால் அளவிறந்த துன்பமனுபவித்
தற்குக் காரணமாகிய சூதாடல்
சொல்லப்படுகின்றது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வாம்பரித்தேரினுமாழையொண்கண்ணினுளு
மேம்பலோடினிதுபுல்லியிடைவிடாதெழுகுகாளி
லாம்பலம்போதுகாட்டுமணிதிகழ்பவளச்செவ்வாய்க்
காம்புறழ்தோளினுட்குக்கருப்பம்வந்துற்றதன்றே.

இ-ள். வாம் – தாவாகின்ற, பரித்தேரினும் – குதிரைகட்டிய தேரையுடைய நளமகாராசனும், மாழை – மாவடுவையொத்த, ஒள் – பிரகாசம் பொருந்திய, கண்ணினுளும் – கண்ணையுடைய தமயந்தியும், எம்பலோடு – அகமலர்ச்சியுடனே, இனிது புல்லி – இனிமையாகத் தழுவி, இடைவிடாது – நீங்காது, ஒழுகு நாளில் – நடக்கு நாளிலே, ஆம்பலம்போது – செவ்வல்லி மலரை, காட்டும் – காட்டுகின்ற, அணிதிகழ் – அழகு பிரகாசியாகின்ற, பவளம் – பவளத்தையொத்த, செம்வாய் – சிவந்தவாயையும், காம்பு – மூங்கிலை, உறழ் – ஒத்த, தோளினுட்கு – தோளையுமுடைய தமயந்திக்கு, கருப்பம் வந்து உற்றது – கர்ப்பமுண்டாயிற்று எ-று. 1

மெலியுதுண்மருங்குதோன்றவேயிளந்தோள்கடேம்ப
நலனுறுசெய்யமேனிபாசொளிநரம்புகாட்ட
வளர்சுணங்கணிந்துவீங்கியழகுவீற்றிருந்தபொம்மன்
முலைமுகங்கருகிச்செவ்விமுகமதிவிளர்த்ததன்றே.

இதனுல் தமயந்தியின் கருப்பக்குறிகள்
சொல்லப்படுகின்றது.

இ-ள். மெலியும் – வாடாகின்ற, நுண் – நுட்பமான, மருங்கு – இடையானது, தோன்ற – காண, வேய் – மூங்கிலையொத்த, இளை – இளமையாகிய, தோள்கள் – தோள்கள், தேம்ப – வாட, நலன் உறு – நன்மைபொருந்திய, செய்யமேனி – சிவந்தவுடம்பு, பாசொளி – பசிய வொளியையுடைய, நரம்பு காட்ட – நரம்புகளைத் தோற்றுவிக்க, அலர்-பரந்த; சுணங்கு – தேமலை, அணிந்து – தரித்து, வீங்கி – பருத்து, அழகு வீற்றிருந்த – அழகானது தங்கியிருந்த, பொம்மல் – பொலிவுபொருந்திய, முலை முகம் – தனங்களின் முகங்கள், கருகி – கறுத்து, செவ்வி – அழகையுடைய, முகமதி – முகமாகிய சந்திரன், விளர்த்தது – வெண்மையடைந்தது எ-று. அன்று – ஏ – அசைகள்.

குறைமுகங்கிழித்துநீண்டகொழுங்கடைமழைக்கட்பேதை
பொழிகதிர்த்திங்கள்காட்டும்வலம்புரிவருந்திப்பொங்கி
யொழுகொளிநிலவுகாலுந்தித்திலமுயிர்த்ததென்ன
மழகளிறனையதோற்றமாணிளங்குழவியீன்றாள். 3

இ-ள். குழை முகம் — காதின்முகத்தை, கிழித்து — கிழித்து, நீண்ட-நீண்டிருக்கிற, செழு - செழுமையாகிய, கடை — கடையையுடைய, மழைக்கண் - குளிர்ச்சிபொருந்திய கண்ணையுடைய, பேதை — தமயந்தியானவள், பொழி — சொரியாநின்ற, கதிர் — கிரணங்களையுடைய, திங்கள் — சந்திரனை, காட்டும் — தோற்றுவிக்கும், வலம்புரி — வலம்புரிச் சங்கம்போன்று, வருந்தி-வருத்தமுற்று, பொங்கி — பிரகாசித்து, ஒழுகு — மிகுந்த, ஒளி — காந்தியையுடைய, நிலவு - சந்திரிகையை, காலும் — கக்காநின்ற, நித்திலம் — முத்தை, உயிர்த்தது என்ன — பெற்றதுபோல, மழ — இளமைபொருந்திய, களிறு அனைய — யானையையொத்த, தோற்றம் — காட்சியையுடைய, மாண் — மாட்சிமையாகிய, இளங் குழவி — இளங்குழந்தையை, ஈன்றாள் — பெற்றாள். 3

மழகளிறனையகம்பிபிறைபெனவளருநாளிற்
கழைபுரைதோளிபின்னோர்கன்னியையுயிர்த்தாணமகள்
குழலினுங்கனிந்தவந்தீங்குதலைகேட்டுருகிவெய்ய
முழைபுகுசீயமன்னுவகையின்மூழ்கினனே. 4

இ-ள். மழை — இளமைபொருந்திய, களிறு அனைய - யானையையொத்த, கம்பி — பிள்ளையானவன், பிறை ஒன — மூன்றாம் பிறைபோல, வளரும் நாளில் - வளர்ந்து வருங்காலத்தில், கழைபுரை — மூங்கிலையொத்த, தோளி-தோள்களையுடைய தமயந்தி, பின் — பின்பு, ஓர் கன்னியை - ஒருபெண்ணை, உயிர்த்தாள் — பெற்றாள், மக்கள் — இரண்டு குழந்தைகளுடைய, குழலினும்-வேய்ங்குழலினும், கனிந்த - கனிவாகிய, அம் — அழகிய, தீங்குதலை — இத்திப்பழம்பொருந்திய மழலைச் சொல்லை, கேட்டு உருகி — கேட்டுள்ளுருகி, வெய்ய — வெவ்விதாகிய, முழை — குகையில், புகும் - நுழையாகின்ற, சீயம் அன்னன் — சிங்கத்தையொத்த நளமகாராசன், உவகையில்-சந்தோடத்தில், மூழ்கினன் — அழுந்தினன் எ-று. 4

நிழலுமிழ்ந்துதிரங்காலும்வயிரவாணிடதர்கோமா
னெழுவிவேந்தர்யாருமிடுதிறைகொணர்ந்தெஞ்ஞான்றுந்
தொழுதனரேத்திநிற்பத்தொடுகடலுடுத்தஞால
முழுவதுமொருகோலோச்சிமுறைவழாதளித்தானன்றே.

இ-ள். நிழல் - பிரகாசத்தை, உமிழ்ந்து — சொரிந்து, உதிரம் காலும்-இரத்தத்தைக்கக்கும், வயிரம் வாள்-கூரிய வாளையுடைய, நிடதர்கோமான்-நளமகாராசன், எழுவுலி — சத்த தீவிலுமுள்ள, வேந்தர்யாரும் — அரசரெல்லாரும், இடு திறை — இடாநின்ற கப்பங்களை, கொணர்ந்து - கொண்டுவந்து,

ஏ ஞான்றும் – எந்த நாளும், தொழுதனர் – வணங்கினவராய், எத்தி – அதித்து, நிற்ப – நிற்க, தொடு – தோண்டிய, கடல் உடுத்த – சமுத்திரஞ் சூழ்ந்த, ஞாலமுழுவதும் – உலகமுழுமையும், ஒருகோல் ஓச்சி – ஒருசெங்கோலைச் செலுத்தி, முறை வழாது – கிரமம் தப்பாது, அளித்தான் – இரட்சித்துக் கொண்டுவந்தான் எ-று. 5

கோவடுகுருதிவேலான்கொழுஞ்சுடர்பட்டகாலைச்
சேவடிகழுவலின்றிச்செய்கடன்கழித்தலோக்கிக்
காவலற்சேருங்காலங்கருதுபுபன்னீராண்டு
மேவருதாண்றியுற்றவெங்கலிமேயினானே.

கால்கழுவாமற் கடன்முடித்தமையாற் கலிபுருடன் பற்றல்.

இ-ள். கோ – (சத்துருக்களாகிய) ராசாக்களை, அடு – கொல்லாநின்ற, குருதி – இரத்தந்தோய்ந்த, வேலான் – வேலாயுதத்தையுடைய நளன், கொழு – செழித்த, சுடர் – சூரியன், பட்டகாலை – அத்தமித்தபொழுது, சே அடி – சிவந்தபாதங்களை, கழுவல் இன்றி – கழுவாமல், செய் கடன் – செய்யத்தக்க நித்திய கருமத்தை, கழித்தல்நோக்கி – செய்து முடித்தலைப் பார்த்து, காவலன் – அரசனை, சேரும்காலம் – அடையுங்காலம், (எதுவென்னில்) கருதுபு – நினைத்து, பன்னீர் ஆண்டு – பன்னிரண்டுவருடம், மேவரும் – அடைதற்கரிய, தான்றியுற்ற – தான்றிமரத்தின்கண்ணிருந்த, வெங்கலி – வெவ்வியகலியின், மேயினன் – சேர்ந்தான் எ-று. 6

கலி விருத்தம்.

விட்புலத்தரசருமேனிவேந்தரும்
வட்கவிம்மன்னவன்மல்லன்மார்பகம்
பெட்புறுமடந்தையைப்பிரிப்பன்யானெனப்
புட்கரன்பாற்கலிபோயினனரோ.

கலிபுருடன் புட்கரனிடஞ் செல்லல்.

இ-ள். விண் புலத்து – தெய்வலோகத்திலிருக்கும், அரசரும் – இந்திராதிதேவரும், ஏனை வேந்தரும் – பூலோகத்தரசரும், வட்க – நாணமடைய, இம்மன்னவன் – இந்த நளனுடைய, மல்லல் – வலிமைபொருந்திய, மார்பகம் – மார்பினிடத்தை, பெட்பு உறும் – விரும்பும், மடந்தையை – தமயந்தியை, பிரிப்பன் – பிரித்துவிடுவேன், யான் என – நானென்று, புட்கரன்பால் – புட்கராசனிடத்தில், கலி – கலிபுருடன், போயினன் – போனான் எ-று. அரோ – அசை. 7

வருகலிபுட்கரன்வதனநோக்குறுக்
குரைகழனளனெனுங்கொற்றவேந்தனை
யொருகுடைநீழலுலகங்காத்திட
விருநிலக்கிழமைநீயிழந்ததென்கொலோ.

இ-ள். வருகலி - வந்த கலியனுவன், புட்கரன் - புட்கராசனது, வதனம் - முகத்தை, நோக்கு உரு - பார்த்து, குரைகழல் - சத்தியாநின்ற வீரக்கழலையணிந்த, நளன் எனும் - நளனென்று சொல்லப்பட்ட, கொற்றம் - வெற்றியையுடைய, வேந்தனே - அரசனே, ஒருகுடை நீழலின் - ஏக சக்கிராதிபதியாய், உலகங்காத்திட - இவ்வுலகத்தைக் காக்க, இரு - பெருமை பொருந்திய, நிலம் நிழமை - அரசாட்சியை, நீ - நீ, இழந்தது - கைவிட்டது, என்கொலோ - யாதுகாரணமோ எ-று. 8

வாட்டிறல்வேந்தனோடந்தைதன்னெடுங்
காட்டிடைப்புகுத்திமண்காக்குமன்னருன்
றூட்டுணைதொழநறுந்தாமநீண்முடி
சூட்டுவனினக்கெனச்சொல்லினனரோ.

இ-ள். வாள் திறல் - வாட்போரில் வெற்றியையுடைய, வேந்தனே - அரசனே, மடந்தை தன்னெடும் - மனைவியுடனே, காட்டு இடைப்புகுத்தி - காட்டினிடத்திற் போகச்செய்து, மண் - உலகத்தை, காக்கும் - காக்காநின்ற, மன்னர் - அரசர்கள், உன் - உன்னுடைய, தாள்துணை - உபயபாதங்களே, தொழ - வணங்க, நறு - வாசனைபொருந்திய, தாமம் - மாலையணிந்த, நீள் முடி - நீண்ட கிரீடத்தை, எனக்கு - உனக்கு, சூட்டுவன் - தரிப்பேன், எனஎன்று, சொல்லினன் - சொன்னன் எ-று. 9

சொல்லலுங்களிமகிழ்தூங்கிப்புட்கரன்
கொல்லியவருந்திறற்கூற்றுமஞ்சுறு
மல்லடுதிண்புயமன்னர்மன்னனே
வெல்லுமாறெங்ஙனம்விளம்புவாயென்றான்.

புட்கரன் கலியைநோக்கி நளனைவெல்வது எப்படி
யென்று கேட்டல்.

இ-ள். சொல்லலும் - இப்படிச் சொன்னவளவில், களிமகிழ்தூங்கி - மிகுந்த மகிழ்ச்சியையடைந்து, புட்கரன் - புட்கராசன், கொல்லிய - கொல்ல, வரும் - வராநின்ற, திறல் - வெற்றியையுடைய, கூற்றும் - யமனும், அஞ்சு உறும் - பயப்படும்படியாகிய, மல் அடு - மற்போர்செய்கின்ற, திண்புயம் - திண்ணியபுயத்தையுடைய, மன்னர்மன்னனே - நளனை, வெல்லும் ஆறு - வெல்லுநெறி, எங்ஙனம் - எவ்விதம், விளம்புவாய் என்றான் - சொல்லென்று சொன்னன் எ-று. 10

எண்ணிலையாதுகானிழைத்தவஞ்சனை
விண்ணவராயினும்விலக்கற்பாலரோ
வண்ணலைச்சூதினிற்படுப்பலஞ்சனீ
கண்ணுறும்யான்கொடுங்கலியென்றனரோ.

கலி சூதினுலே நளனை வெல்விப்பேன் என்னல்.

இ-ள். யாதும் எண்ணலே – எவ்வளவும் ஆலோசிக்க வேண்டாம், நான் இழைத்த – நான்செய்த, வஞ்சனை – கபடத்தை, விண்ணவர் ஆயினும் – தேவர்களானாலும், விலக்கற்பாலரோ – நீக்குந்தன்மையையுடையர்களோ, அண்ணலே – நளனை, சூதினுற் படுப்பன் – சூதினுற் செயிப்பேன், நீ அஞ்சல் – நீ பயப்படவேண்டாம், கண்உறும் – எதிரேவந்த, யான் – நானும், கொடு – கொடிய, வெங்கலி என்றான் – வெவ்விய கலியனென்று சொன்னான் எ-று. 11

மூழையுறைகொடுவரியனையமொய்ம்பினு
னுழையினிற்போதுமென்றுரைத்துவெங்கலி
மழவிடையுருக்கொடுநிற்பவண்சுடர்
ரிழைதவழ்மார்பினனிவர்ந்துபோயினன்.

கலி இடபவடிவந் தாங்கலும், புட்கரன் அதிலேறிச் செல்லலும்.

இ-ள். மூழை – குகையினிடத்தில், உறை – இருக்கின்ற, கொடுவரி அனைய – புலியையொத்த, மொய்ம்பினன் – வலியையுடைய நளமகாராசனது, உழையினில் – இடத்தில், போதும் என்று – போவோமென்று, உரைத்து – சொல்லி, வெம் – வெவ்விய கலியானவன், மழவிடை – இளவேற்றின், உருக்கொடு – உருவத்தைக்கொண்டு, நிற்ப – நிற்க, வள் – வளப்பமாகிய, சுடர் – காந்தியையுடைய, இழைதவழ் – ஆபரணமசையாகின்ற, மார்பினன் – மார்பையுடைய புட்கராசன், இவர்ந்து – ஏறிக்கொண்டு, போயினன் – சென்றான் எ-று. 12

உரவுநீர்க்கருங்கடலுலகுகாவலன்
குரைகழல்பணிந்துதங்குறைகள்சாற்றுவா
னரசர்கண்டுயிலமைம்முகிலினர்ப்புறு
முரசுகண்டுயில்கிலாவாயின்முன்னினன்.

புட்கரன் நளனது அரண்மனை வாயிலிற் சேர்தல்.

இ-ள். உரவு நீர் – விரிந்த நீரையுடைய, கருங்கடல் – கரிய கடலாற் சூழப்பட்ட, உலகு காவலன் – உலகுக்காசனாகிய நளனது, குரைகழல் பணிந்து – சத்திக்கின்ற வீரக்கழலையணிந்த பாதத்தை வணங்கி, தம் குறைகள் சாற்றுவான் – தமது குறைகளைச் சொல்வதற்கு, அரசர் – அரசர்கள், கண்துயில் – (சமயங்கிடையாமல்) நித்திரைபண்ண, மைமுகிலின் – கறுத்த மேகத்தைப்போல, ஆர்ப்பு உறும் – சப்திக்கின்ற, முரசு – பேரிகையானது, கண்துயில்கிலா – நித்திரை செய்யாத, வாயில் – அரண்மனைவாயிலில், முன்னினன் – அடைந்தான் (புட்கராசன்) எ-று. 13

மன்னவற்கெம்வரவுரைத்திவாயிலோ
யென்னலுமாங்கவனெய்திக்கூறலுங்

கொன்னவில்வேலினன்கொணர்கவென்றன
னன்னவன்வருகெனவவையிடைனய்திஞன்.

புட்கரன் தன் வரவுரைக்குமாறு சொல்லல் நளன்
அவனை யழைப்பித்தல்.

இ-ள். வாயிலோய் - வாயிற் காவலாளனே! மன்னவற்கு - நளமகாரா சனுக்கு, எம் வரவு உரைத்தி — எமது வரவைச்சொல்லு, என்னலும் - என்று சொல்லலும், ஆங்கவன் - அக்காவலாளன், எய்திக் கூறலும் — போய்ச் சொன்னவளவில், கொல் நவில் - கொல்லுதலைச் செய்யாநின்ற, வேலினன் - வேலையுடைய வரசன், கொணர்க என்றனன் — அழைத்துவாவென்று சொன்னான், அன்னவன் வருக என — அக்காவலாளன் வாவென்று சொல்ல, அவையின் எய்திஞன் — சபையில் வந்தான் (புட்காராசன்) எ-று. 14

கூளகண தாகியோர்கவிகைநீழலில்
வளைகடலுலகெலாம்புரக்குமன்னவன்
றளையவிழ்தாமரைத்தாளில்வீழ்ந்தெழு
மிளவலோடளவளாயிருக்குமேல்வையில்.

புட்கரன் நளனை வணங்கி யளவளாவுதல்.

இ-ள். கூளகணது ஆகி — ஆதாரமாகி, ஓர் - ஒரு, கவிகை — வெண் கொற்றக் குடையினது, நீழலில் — நீழலிலிருந்து, வளைகடல் — சமுத்திரஞ் சூழ்ந்த, உலகு எலாம் — பூவுலக முழுவதும், புரக்கும் — காப்பாற்றுகின்ற, மன்னவன் — நளமகாராசனுடைய, தளை அவிழ் - முறுக்குகள் விரிந்த, தாமரை — தாமரைப்பூவையொத்த, தாளில் — பாதத்தில், வீழ்ந்து - வணங்கி, எழும் - எழுகின்ற, இளவலோடு - இளையோனுகிய புட்கர ராசனுடனே, அளவளாய் — ஒருவர்க்கொருவர் கலந்து பேசிக்கொண்டு, இருக்கும் எல்வையில் — இருக்குஞ் சமயத்தில் எ-று. 15

கொல்சினவாகைவேற்குரிசின்மல்லலேற்
றெல்லுமிழ்மணிக்கொடியுயர்த்ததென்னென
வல்லடுசூதினிலேற்றமன்னரை
வெல்கொடியீதெனவீளம்பினனரோ.

இ-ள். கொல் — கொல்லுகின்ற, சினம் - கோபத்தையுடைய, வாகை, வெற்றி பொருந்திய, வேல் — வேலாயுதத்தையுடைய, குரிசில்-நளமகாராச னனவன், மல்லல் — பலம்பொருந்திய, ஏறு — இடபத்தின்மேல், எல் — பிரகாசத்தை, உமிழ் — க்க்காநின்ற, மணிக்கொடி — அழகிய கொடியை, உயர்த்தது - பிடித்தது, என்என — என்னவென்று கேட்க, வல் - சொக்கட்டானுல், அடு — பொருகின்ற, சூதினில் — சூதாட்டத்தில், ஏற்ற மன்னரை — எதிர்த்த வேந்தரை, வெல் — செயிக்கின்ற, கொடி — துவசம், ஈது என - ஈதென்று, விளம்பினன் — சொன்னன் எ-று. 16

சொல்லியவவ்வுரைகேட்டுத்தூமணிக்
கல்லெனப்பணைத்துயர்கலவைத்தோளினன்
வெல்கொடியுயரியவிடலைசூதினீ
வல்லியேலாடுதும்வருகென்றுரைத்தனன்.

நளன் புட்கரனைச் சூதாட அழைத்தல்.

இ-ள். சொல்லிய—சொன்ன, அவ்வுரை—அந்த வார்த்தையை, கேட்டு—செவியிற்கேட்டு, தூ—பரிசுத்தமாகிய, மணி—இரத்தினங்களையுடைய, கல் என—மலையைப்போல, பணைத்து—பருத்து, உயர்—உயர்ந்த, கலவை—சந்தனமணிந்த, தோளினன்—தோள்களையுடைய நளன், வெல்கொடி உயரிய—வெல்லாகின்ற கொடியைப்பிடித்த, விடலை—புட்கரனே! சூதில்—சூதாட்டத்தில், நீவல்லையேல்—நீ வல்லமையுடையவனுனல், ஆடுதும்—ஆடுவோம், வருக என்றுரைத்தனன்—வாவென்று சொன்னன் எ-று. 17

நஞ்சினிற்கொடியவன்புணர்ப்பினம்மிறை
வஞ்சகச்சூதினின்மனம்வைத்தானென
வஞ்சினரமைச்சரவ்வரசர்கோமகன்
செஞ்சரண்டொழுதிவைசெப்பன்மேயினர்.

மந்திரிகள் சூது ஆகாதென்று போதித்தல்.

இ-ள். நஞ்சினில்—ஆலாலத்தைப் பார்க்கிலும், கொடியவன்—கொல்லாதவனுகிய புட்கரனது, புணர்ப்பின்—சம்பந்தத்தினால், நம் இறை—நம் மூடையவரசன், வஞ்சகம்—கபடமாகிய, சூதினில்—சூதில், மனம் வைத்தான் என—சிந்தை வைத்தானென்று, அஞ்சினர்—பயந்தவராய், அமைச்சர்—மந்திரிகள், அவ்வரசர்கோமகன்—அந்த நளமகாராசனது, செஞ்சரண் தொழுது—சிவந்த பாதங்களை வணங்கி, இவை செப்பல் மேயினர்—இவை சொல்லத் தொடங்கினர்கள் எ-று.

நஞ்சாவது—தேவரும் அசுரர்களும் சாவா மருந்து உண்ணுவான் விழைந்து பாற்கடல் கடைய, வாசுகி கக்கியதேயாகும். அதைப்பார்க்கினும் உலகை வருத்துவது பிறிதொன் றின்மையாற் கூறப்பட்டது. நஞ்சினில்—இதன்கணுள்ள ஐந்தனுருபு உறழ்பொருளில் வந்தது. அமைச்சர்—அமாத்தியர் என்னும் வடசொற்றிரிபு. மேவினர் என்றது மேயினர் என நின்றது.

சீலநற்றருமமெய்திதைக்குந்தெண்டிரை
வேலைமுற்றிருநிலக்கிழமைவீற்றிடு
மாலுமுத்திடுங்கவருடன்மன்னகேள்
கோலிழுக்கரசர்தங்கொள்கைத்தென்பவே.

இ-ள். மன்னகேள்—அரசனேகேள், கவறு ஆடல்—சூதாடலானது, சீலம்—ஒழுக்கத்தையும், நல் தருமம்—நல்ல தருமத்தையும், மெய்—சத்தியத்தையும், சிதைக்கும்—கெடுக்கும், தெள்திரை—தெள்ளிய அலைகளை

யுடைய, வேலமுற்று - கடலினாற்சூழப்பட்ட, இரு - பெருமைபொருந்திய, நிலமகிழமை - அரசாட்சியை, வீழ்த்திடும் - தள்ளிவிடும், மால் உறுத்திடும் - மயக்கஞ் செய்விக்கும், கோல் இழுக்கு அரசர்தம் - கொடுங்கோலைச் செலுத்துகிற அரசர்களது, கொள்கைத்து என்ப - கோட்பாட்டை யுடையதென்று (பெரியோர்கள்) சொல்லுவார்கள் எ-று. 19

கள்ளுணவிரும்புதல்கழகஞ்சேர்தன்மா
லுள்ளுறப்பிறர்மனைநயத்தலொன்னலர்க்
கெள்ளருஞாட்பினுளிரியல்செய்திடல்
வள்ளியோயறநெறிவழுக்குமென்பவே.

இ-ள். கள் உண விரும்புதல் - மதுவைக் குடிக்க இச்சித்தலும், கழகஞ் சேர்தல் - சூதாடு மிடத்தைச் சேர்தலும், மால் உள் உற - மயக்கமடைய, பிறர்மனைநயத்தல் - பிறர் மனையாளை விரும்புதலும், ஒன்னலர்க்கு - சத்துருக்களுக்கு, எள் அரு - இகழ்ச்சியில்லாத, ஞாட்பினுள் - அமர்க்களத்தில், இரியல் செய்திடல் - பின்னிட்டோடலும் (ஆகிய இவைகளால்), வள்ளியோய் - வரையாது கொடுக்கு மரசனே! அறநெறி - அறத்தின்வழி, வழுக்கும் என்ப - பிறழுமென்று (பெரியோர்கள்) சொல்லுவார்கள் எ-று. 20

ஐயநீயாடுதற்கமைந்தசூதுமற்
றெய்துநல்குரவினுக்கினைந்ததூதுவெம்
பொய்யினுக்கருந்துணைபுன்மைக்கீன்றதாய்
மெய்யினுக்குறுபகையென்பர்மேலையோர்.

இ-ள். ஐய - ஐயனே! நீ ஆடுதற்கு - நீயாடுதற்கு, அமைந்த - சம்மதித்த, சூது - சூதாட்டமானது, எய்தும் நல்குரவினுக்கு - தானே வருதற்குரிய தரித்திரத்துக்கு, இயைந்த தூது - நல்லதூதாகும், வெம் பொய்யினுக்கு - வெவ்விய பொய்க்கு, அருந்துணை - நல்ல சகோதரமாகும், புன்மைக்கு - கீழ்த்தொழிலுக்கு, ஈன்றதாய் - பெற்றதாயாகும், மெய்யினுக்கு - சத்தியத்திற்கு, உறுபகை என்பர் - மிகுந்த பகையென்று சொல்லுவார்கள், மேலையோர் - பெரியோர்கள் எ-று. 21

எள்ளுகசூதினையிகலிவென்றதூஉங்
கள்ளமேற்கொடுவலிகரந்துவேட்டுவ
ருள்ளுறவமைத்திடுமுண்மையோர்கிலாப்
புள்ளினமருந்தினபோலுமென்பவே.

இ-ள். எள்ளுக - இகழக்கடவாய், சூதினை - சூதாட்டத்தை, இகலி - பகைத்து, வென்றதூஉம் - செயித்ததும், கள்ளம் - கபடத்தை, மேற்கொடு - மேற்கொண்டு, வலிகரந்து - வலியைமறைத்து, வேட்டுவர் - வேடர்கள், உள் உற அமைத்திடும் உணவை - உள்ளே வைத்திருக்கிற இரையை, ஒக்கு இலா - அறியாத, புள் இனம் - பறவைக் கூட்டங்கள், அருந்தின - உண்டவை, போலும் - ஒக்கும், என்ப - என்று சொல்லுவார்கள் புலவர் எ-று.

கலைக்கடல்கடந்துளார்கழறுங்கட்டுரை
சிலைத்தழும்பிருந்ததோட்செம்மல்கேட்டுயி
ருலப்பினுமறுக்கிலேனுரைத்தவாய்மைநீர்
விலக்குவதென்னெனவிளம்பினனோ.

நளச்சக்கரவர்த்தி மந்திரிகளை விலக்கல்.

இ-ள். கலைக்கடல் - அறுபத்துநாலு கலைகளாகிய சமுத்திரத்தை, கடந்துளார் - ஆராய்ந்த மந்திரிகள், கழறும் - சொல்லுகிற, கட்டுரை - சொல்லை, சிலைத்தழும்பு இருந்த தோள் செம்மல் - சிலை தழும்புபொருந்திய புயத்தையுடைய நளமகாராசன், கேட்டு - கேட்டு, உயிர் உலப்பினும் - உயிரிறந்துவிட்டாலும், உரைத்த வாய்மை - யான் சொன்னசொல்லை, மறுக்கிலேன் - தடுக்கமாட்டேன், நீர் விலக்குவது என் எனை - நீங்கள் விலக்குகிறதென்னென்று, விளம்பினன் - சொன்னன் எ-று. 23

மன்னவனியைந்தவைமறுக்கலானென
வின்னலுற்றமைச்சராண்டிருப்பவெங்கலி
தன்னியதானுமூழ்துரந்தவாற்றினு
முன்னருஞ்சூதினின்முயல்கின்றனரோ.

மந்திரிகள் வருந்திப்போக அரசன் சூதாடத் தொடங்கல்.

இ-ள். மன்னவன் - அரசன், இயைந்தவை - சம்மதித்தவை, மறுக்கலான் என - தடுக்கமாட்டானென்று, இன்னல்உற்று - வருத்தமடைந்து, அமைச்சர் ஆண்டு இருப்ப - மந்திரிகள் அவ்விடத்திற் பேசாதிருக்க, வெம்கலி தன்னியதானும் - வெவ்விய கலிசேர்ந்ததினாலேயும், ஊழ் - ஊழ்வினையானது, துரந்த ஆற்றினும் - செலுத்துதலினாலும், முன் அருஞ் சூதினில் - வினைத்தற்கரிய சூதாட்டத்தில், முயல்கின்றனர் - முயற்சியுறுவானுயினன்.

நிழலுமிழ்வயிரவாணிடதர்கோமக
னெழுகொளிப்பூணினையொட்டம்யாதென
மழவிடையதனையான்வைப்பனீயுமு
னெழுகடன்ஞாலமுமியைகவென்றனன்.

புட்கரன் தன் இடபத்தையும், நளனை எழுகடல் உலகையும் பந்தயமாக வைக்கவெனல்.

இ-ள். நிழல் - பிரகாசத்தை, உமிழ் - கக்காநின்ற, வயிரவாள் - கூரிய வாளையுடைய, நிடதர் கோமகன் - நளமகாராசனனவன், ஒழுகு ஒளிப் பூணினை - மிகுந்த பிரகாசம்பொருந்திய ஆபரணத்தையுடைய புட்கரனே, ஒட்டம் யாது என - பந்தயம் யாதென்று கேட்க, மழவிடை அதனை - என்னுடைய இளவேற்றை, யான் - நான், வைப்பன் - பந்தயமாக வைப்பேன், நீயும் - நீயும், உன் எழுகடல் ஞாலமும் - உனது ஏழு சமுத்திரஞ்சூழ்ந்த

உலகத்தையும், இயைக – வைத்தற்குச் சம்மதி, என்றனன் – என்று சொன்னன் எ-று. 25

சூழ்வினைப்புணர்ப்பினுற்சொன்னவாறியைந்
தாழ்கடற்புவிதொழுமரசனுடவெங்
காழ்மனக்கொடுங்கலிகவற்றின்வண்ணமாய்
வீழ்தலும்புட்கரன்வென்றிட்டானரோ.

சூதாட்டத்திற் புட்கரன் செயித்தல்.

இ-ள். சூழ் – சூழ்ந்த, வினை – ஊழ்வினையின், புணர்ப்பினுல் – சம்பந்தத்தினுல், சொன்ன ஆறு இயைந்து – அவன் சொன்னபடி சம்மதித்து, ஆழ் – ஆழ்ந்த, கடல்புவி தொழும் – கடலாற் சூழப்பட்ட வுலகம் வணங்கும், அரசன் – நளமகாராசன், ஆட – சூதாட, வெம் – வெவ்விய, காழ் – வயிரம் பொருந்திய, மனம் – மனத்தையுடைய, கொடுங்கலி – கொடியகலியானவன், கவற்றின் வண்ணமாய் – சூதின் வடிவமாய், வீழ்தலும் – புரளவும், புட்கரன் – புட்கராசன், வென்றிட்டான் – செயித்தான் எ-று. 26

கழைசுளிபுகர்முகக்களிறுதேர்பரி
யிழைதவழிளமுலைமகளிரீட்டிய
விழுநிதிக்குப்பைகள்வேலைசூழ்புவி
முழுவதுந்தோற்றனன்முழவுத்தோளினுன்.

நளன் தோல்வியடைந்தமை சொல்லல்.

இ-ள். கழைசுளி – கரும்பை முறிக்கின்ற, புகர்முகம் – புள்ளி பொருந்திய முகத்தையுடைய, களிறு – யானையும், தேர் – இரதமும், பரி – குதிரையும், இழை – ஆபரணமானது, தவழ் – அசையாநின்ற, இள – இளமை தங்கிய, முலை – தனங்களையுடைய, மகளிர் – மாதர்களும், ஈட்டிய – சம்பாதித்த, விழு – மேன்மையாகிய, நிதிக்குப்பைகள் – திரவியக்கும்பலும், வேலை சூழ் – சமுத்திரஞ் சூழ்ந்த, புவி – பூமியும், முழுவதும் – ஆகிய வனைத்தையும், முழவுத்தோளினுன் – மத்தளத்தையொத்த தோளையுடைய நளமகாராசன், தோற்றனன் – தோற்றுவிட்டான் எ-று. 27

அனைத்தையுந்தோற்றனையருவிபாய்கவுட்
டினைக்களிமால்களிறனையசீற்றத்தோய்
மனத்திடைநினைக்குவதென்னவல்லைநின்
புனைக்கொடிக்கையைத்தினிப்பொருதும்யாமென்றான்.

புட்கரன் மனைவிமாரை வைத்தாடுவம் என்னல்.

இ-ள். அனைத்தையும் – முழுமையும், தோற்றனை-தோற்றுவிட்டாய், அருவி – மதசல வருவியானது, பாய – பாயாநின்ற, கவுள் – கபோலத்தை

யுடைய, சினம் – கோபம்பொருந்திய, களி – செருக்கையுடைய, மால்- பெருமைபொருந்திய, களிறு அன்ன – யானையையொத்த, சீற்றத்தோய்- கோபத்தையுடைய நளனே! மனத்திடை – மனதினிடத்தில், நினைக்குவது என்னை – ஆலோசிப்பதென்னை, வல்லை – சீக்கிரத்தில், நின் – உன்னுடைய, புனக்கொடிக்கு - மானையாளுக்கு, இயைந்து – பந்தயத்துக் கிசைந்து, நாம்- நாம் இருவரும், இனிப்பொருதும் – இனி ஆடுவோம், என்றான் – என்று சொன்னான் எ-று. 28

சூதாடுபடல முற்றிற்று.

ஆ செய்யுள் – 967.

நகர் நீங்குபடலம்.

இப்படலத்தாற் சூதிற்றோல்வியடைந்த நளன் தான் பழகிய அங்நகரத்தி லுள்ளாரோடும் வறியனுய்க் கூடியிருப் பதில் விழையாமல் அங்நகரைவிட்டு நீங்கல் சொல்லப்படுகின்றது.

கலி விருத்தம்.

என்றலுமுறுவலித்திசைக்கலாதன
வொன்றுநீயுரைத்திடலுலங்கொடோளினுய்
வென்றகின்னகர்வயின்மேவலேனெனுத்
துன்றுகானகஞ்செலத்துணிதன்மேயினன்.

நளன் காட்டுக்குச் செல்ல நினைத்தல்.

இ-ள். என்றலும் – என்றுசொன்ன வளவில், முறு வலித்து-சிரித்து, இசைக்கலாதன – சொல்லப்படாதவைகளை, நீ ஒன்று முரைத்திடல் – நீ யொன்றுஞ் சொல்லாதே, உலங்கொள் தோளினுய்-திரண்ட கல்லையொத்த தோளையுடைய புட்கரனே! வென்ற – செயித்த, நின்னகர்வயின் – உன்னு ரினிடத்து, மேவலேன் எனு – இருக்கமாட்டேனென்று, துன்று – நெருங் கிய, கானகம் செல – காட்டினிடத்திலேபோக, துணிதல் மேயினன் – நள மகாராச னிச்சயித்தான் எ-று.

வாட்டிறன்மன்னவன்கமலவாண்முக
மீட்டருமரசியலிழந்தபோதிலும்
பாட்டளிக்கூந்தல்வேந்தவையிற்பைந்தொடை
சூட்டியஞான்றினுந்துலங்குகின்றதே.

நளன் எல்லாந்தோற்றும் வாட்டமுறு திருத்தல்.

இ-ள். வாள் – வாட்போரில், திறல் – வல்லமையுடைய, மன்னவன் – நளமகாராசனது, கமலம் – தாமரைப் பூவையொத்த, வாள் – ஒளிபொருந் திய, முகம் – முகமானது, ஈட்டரும் – சம்பாதித்தற்கரிய, அரசியல் – அர சாட்சியை, இழந்தபோதினும் – இழந்தகாலத்திலும், பாட்டு – இராகங்கள் பாடாநின்ற, அளி – வண்டுகள் மொய்க்கின்ற, கூந்தல் – அளகபாரத்தையு டைய தமயந்தியானவள், வேந்து அவையில் – இராச சபையிலே, பைந் தொடை – பசிய பூமாலையை, சூட்டிய ஞான்றினும்-சூட்டின நாளிற் பார்க் கிலும், துலங்குகின்றது – பிரகாசிக்கின்றது எ-று.

சாமரையிரட்டுநாடடைப்பைதாங்குநர்
தீமுகத்துமிழும்வாளேந்திச்செல்குந

சேமுறயாரையும்விலக்கியேக்தறுன்
கோமகளினிதுறைகோயிலெய்தினுன்.

நளன் தனியே அந்தப்புரம்போதல் கூறப்படுகின்றது.

இ-ள். சாமரை இரட்டுநர் – சாமரை வீசுகிறவர்களேயும், அடைப்பை தாங்குநர் - தாம்பூலப்பையை யேந்தப்பட்டவர்களேயும், நீ – அக்கினியை, முகத்து – தன்முகத்தில், உமிழும் - கக்குகின்ற, வாள் – கத்தியை, ஏந்திதாங்கி, செல்குநர் – வருகின்றவர்களேயும், ஏம உற – மயக்கமுற, யாரையும்மற்றவர்களேயும், விலக்கி – நீக்கி, எந்தல்தான் – நளமகாராசன், கோமகள்தமயந்தி, இனிது - இனிமையாக, உறை – வாசம்பண்ணுகிற, கோயில்அரண்மனையை, ஏய்தினுன் – சேர்ந்தான் எ-று. 3

கற்றையங்கவரியுங்கால்செய்வட்டமுங்
கொற்றவெண்கவிகையுமின்றிகோதைவேன்
மற்றடந்தோளிஞன்வருதல்காண்டலு
முற்றதையென்கொலென்றுள்ளத்தெண்ணினுள்.

தமயந்தி கணவனைத் தனிவரல்கண்டு நியங்கியோசித்தல்.

இ-ள். கற்றை – தொகுதியாயிராநின்ற, அம் – அழகிய, கவரியும்-சாமரையும், கால்செய்வட்டமும் – சாந்தாற்றியும், கொற்றவெண் கவிகையும்-வெண்கொற்றக்குடையும், இன்றி – இல்லாமல், கோதைவேல் – மாலையணிந்தவேலையுடைய, மல் - வலிமைபொருந்திய, தடம் – பருத்த, தோளிஞன்-தோளையுடைய நளமகாராசன், வருதல் காண்டலும் – வருதலேப் பார்த்தவளவில், உற்றதை - இப்படிக்கு இவன்வருவதை, என்கொல் – என்ன காரணமென்று, உள்ளத்து எண்ணினுள் – மனத்தில் ஆலோசித்தாள் எ-று. 4

எண்ணிவந்திறைஞ்சியவெழிற்கொம்பன்னவள்
மண்ணியமதிநிகர்வதனநோக்குறுப்
புண்ணுழைவேலெனப்புகுந்தயாவையும்
கண்ணலர்க்கடந்தவேனம்பிகூறினுள்.

நளன் நிகழ்ந்தவெல்லாம் தமயந்திக்கு எடுத்துரைத்தல்.

இ-ள். எண்ணிவந்து – இப்படி யாலோசித்தெதிர்வந்து, இறைஞ்சியவணங்கிய, எழில் - அழகுபொருந்திய, கொம்பு அன்னவள் – பூங்கொம்பையொத்த தமயந்தியினது, மண்ணிய - கழுவிய, மதிநிகர் - சந்திரனேயொத்த, வதனம் – முகத்தை, நோக்குறு – பார்த்து, புண் - புண்ணினிடத்தில், நுழை-நுழைகின்ற, வேல் என – வேலேப்போல, புகுந்தயாவையும் – தானடைந்தவைகளேயெல்லாம், கண்ணலர் – சத்துருக்களே, கடந்த – செயித்த, வேல்-வேலேயுடைய, நம்பி – நளமகாராசன், கூறினுன் – சொன்னுன் எ-று. 5

தாழ்தடக்கையினுன்னசாற்றலும்
வீழிவாய்மடமயில்வெய்துயிர்ப்பொடு

மாழ்கினள்வருந்தினண்மழைக்கணீருகுத்
தாழ்வலியிதுவெனவுள்ளநேதறிஞள்.

தமயந்தி வருந்தித் தெளிதல்.

இ-ள். தாழ் — முழங்கால்மட்டும் நீண்ட, தடம் - விசாலமாகிய, கையினன் - கைகளையுடைய நளமகாராசன், இன்ன - இவைகளை, சாற்றலும் - சொன்னவளவில், வீழி - வீழிக்கனியையொத்த, வாய்-அதரத்தையுடைய, மடமயில் - தமயந்தியானவள், வெய்து உயிர்ப்பொடும் — வெவ்விய பெருமூச்சுடனே, மாழ்கினள் - மயங்கினள், வருந்தினள் — வருத்தமுற்றாள், மழைக்கண் - குளிர்ந்த கண்ணினின்றும், நீர் உகுத்து - நீரைச்சொரிந்து, ஊழ் - ஊழ்வினையினது, வலி - வண்மை, இது என - இதுவென்று, உள்ளம்தெறிஞள் - மனந்தெளிந்தாள் எ-று. 6

இந்திரசேனனென்றிசைக்கும்பேருடை
மைந்தனுமழலைவாய்க்கொடியுமாழ்குற
துய்ந்திடக்கொண்டுபேரோசைபோய கின்
றந்தைதன்வளகுகர்சார்கவென்றனன்.

மக்களைக்கொண்டு தந்தையிடம் சேர்கவென்று
நளன் தமயந்திக்கு உரைத்தல்.

இ-ள். இந்திரசேனனென்று - இந்திரசேனனென்று, இசைக்கும்-சொல்லுகின்ற, பேருடை - நாமத்தையுடைய, மைந்தனும் - பிள்ளையும், மழலை - மழலைச்சொல்லையுடைய, வாய் — வாயையுடைய, கொடியும் - புதல்வியும், மாழ்கு உற - வருத்தமுற, உய்ந்திட-பிழைத்திருக்க, கொண்டு-உடன்கொண்டு, பேர் ஓசைபோய - பெருங் கீர்த்தியையுடைய, கின் - உன்னுடைய, தந்தை தன் — தகப்பனுடைய, வளம் - வளம்பொருந்திய, நகர்-பட்டினத்தை, சார்க என்றனன் - அடையக் கடவையென்று (நளமகாராசன்) சொன்னன் எ-று. 7

உயிர்நிகர்மக்களோடுலங்கொடோளிஞள்
செயிறறுதந்தைபாற்செல்கென்றுதலும்
புயனறுங்கூந்தலாள்புண்ணினூடெரி
யயினுழைந்தாலெனவலமந்தேங்கினள்.

தமயந்திவருந்தி யுடன்படாதிறங்கல்.

இ-ள். உயிர் நிகர் - உயிரையொத்த, மக்களோடு - பிள்ளைகளுடனே, உலம்கொள் - திரண்டகல்லி னழகைக்கொண்ட, தோளிஞன் — தோள்களையுடைய நளமகாராசன், செயிர் அறு - குற்றமற்ற, தந்தை பால் - தகப்பனிடத்தில், செல்க என்று ஓதலும் - போகவென்று சொல்லலும், புயல் — மேகத்தையொத்த, நறு - வாசனைபொருந்திய, கூந்தலாள் — அளகபாரத்தையுடைய தமயந்தியானவள், புண்ணின் ஊடு-புண்ணினுள், எரி-எரியானது, அயில் — வேலானது, நுழைந்தால் என — நுழைந்ததுபோல, அலமந்து மனங்கலங்கி, ஏங்கினன் - அழுதாள் எ-று. 8

நெடிபடுகானிடைத்தமியைநீங்கிப்போய்ப்
படுபரலமளிமேற்பள்ளிகொள்ளவெங்
கடிநகரடைந்துமெல்லணையிற்கண்படி
லடியனேற்கிதனிலுமறனுண்டாங்கொலோ.

இ-ள். நெடிபடு – சில் வண்டுகளையுடைய, கான் இடை – காட்டினிடத்தில், தமியை – தனியாகிய வென்னை, நீங்கிப்போய் – விட்டு நீங்கிப்போய், படு – உறுத்தாநின்ற, பரற் – பரற் கல்லுகளாகிய, அமளிமேல் – அணையின் மீது, பள்ளிகொள்ள – நீர் நித்திரைசெய்ய, வெம் – குரூரமாகிய, கடி – காவலையுடைய, நகர் – பட்டினத்தை, அடைந்து – சேர்ந்து, மெல் – மிருதுவாகிய, அணையில் – சயனத்தில், கண்படில் – நான் நித்திரைசெய்யில், அடியனேற்கு – அடியேனுக்கு, இதனினும் – இதைப்பார்க்கிலும், அறன் உண்டாம் கொல் – தருமமுண்டோ எ-று. 9

என்றவளுரைத்தலுமடங்கலேறனுன்
மென்றளிர்கவற்றுநின்மெல்லென்சீரடி
கன்றவெம்பரல்படுகானினேகுதற்
கொன்றுமேலெனதுயிருய்யுமோவென்றான்.

நின்னடி – பருக்கைக்கற்படின் என்னுயிருய்யாதெனல்.

இ-ள். என்று – இப்படியென்று, அவள் – அத்தமயந்தியானவள், உரைத்தலும் – சொன்னவளவில், மடங்கல் ஏறனுன் – ஆண்சிங்கத்தையொத்த ஸ்ரேஷ்டமாகாசன், மென்தளிர் – மெல்லிய தளிரை, கவற்றும் – வருந்தச்செய்யும், நின் – என்னுடைய, மெல் என் – மிருதுவாகிய, சீறடி – சிற்றடிகள், கன்ற – கன்றிப்போக, வெம் – குரூரமான, படுபரல் – மணியாம் பருக்கைக்கல் லுண்டாகிய, கானின் – காட்டில், எதுதற்கு – போதற்கு, ஒன்றுமேல் – பொருந்துமாகில், எனது உயிர் – என்னுடைய பிராணன், உய்யுமோ என்றான் – பிழைக்குமோ வென்றுசொன்னன் எ-று. 10

பொற்பினுக்குறையுளாம்பொன்னங்கொம்பனை
யற்பினுற்பயந்தநம்மக்களாயிடை
யிற்பிரிந்துறைகுரோனுமெங்ஙன
நிற்பிரிந்தாற்றுவர்நிசழ்த்துவாயென்றான்.

மக்கள் எற்பிரிந்தாலு நிற்பிரியார் என்று நளன் கூறல்.

இ-ள். பொற்பினுக்கு – அழகிற்கு, உறையுள் ஆம் – இருப்பிடமாகிய, பொன்னம் கொம்பு அனை – அழகுபொருந்திய பொற்கொம்பையொத்த தமயந்தியே! அற்பினில் – அன்புடனே, பயந்த – பெற்ற, நம்மக்கள் – நம்முடைய பிள்ளைகள், ஆ இடை – அந்தவீமன் வீட்டில், எற்பிரிந்து – என்னை விட்டு நீங்கி, உறைகுரோனும் – இருப்பாராயினும், எங்ஙனம் – எத்தன்மையாய், நின்பிரிந்து – உன்னைவிட்டு நீங்கி, ஆற்றுவர் – பொறுத்திருப்பார்கள்,

நிகழ்த்துவாய் என்றான் – சொல்லென்று சொன்னான் எ-று. மக்கட்குத் தந்தையினும் தாயாதிக ளென்பதாம். 11

கூற்றுறழ்குருதிவேற்குரிசின் மக்கடா
மாற்றினுமாற்றலாதஞரின்மூழ்கினு
மாற்றருங்கற்பினர்மகிழ்நர்கான்செல
வேற்றுநாடுறைவதுவிழுமிதோவென்றாள்.

இ-ள். கூற்று உறழ் – யமனையொத்த, குருதி-உதிரந்தோய்ந்த, வேல்-வேலாயுதத்தையுடைய, குரிசில் – அரசனே! மக்கள்தாம் பிள்ளைகள், ஆற்றினும் – பொறுத்தாலும், ஆற்றலாது – பொறுக்காமல், அஞரில் – துக்கத்தில், மூழ்கினும் – மூழ்கினாலும், மாற்றரும் – பிறராற்கெடுத்தற்கரிய, கற்பினர் – பதிவிரதா தருமத்தையுடைய பெண்கள், மகிழ்நர் – புருடர்கள், கான்செல – காட்டிற்போக, வேற்றுநாடு உறைவது – வேறுதேசத்திற்போயிருப்பது, விழுமிதோ என்றாள் – மேன்மையுடையதோவென்று (தமயந்தி சொன்னாள்) எ-று.

அன்னாய் என்பது அனாய் என விகாரப்பட்டது. அன்பு அற்பு என்றாயது. அன்பாவது தொடர்புடையார் மாட்டு நிகழ்வதோர் கழிவிரக்கம் என்பர் ஆசிரியர் நச்சினார்க் கினியர் ஆ – இடை என்பன, பொதுவிதி பெறாது "மாயிருஞாலம்" ஆயிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து, என்றவற்றிற் போல யகரவுடம்படு மெய்பெற்றுவந்தது. அதற்குவிதி தொல்காப்பியம் எழுத்ததிகாரப் புறனடையிற் காண்க. 12

விரிகடலமிழ்தமும்வேலைஞாலமுஞ்
செருமுகத்தழலுமிழ்சிறுகண்யானையு
மெரிமணிக்குப்பையுமெளிதினெய்தலா
மருமகப்பெறுதன்மற்றரியதென்பவே.

தமயந்தி மக்கட்பேற்றின் அருமை கூறல்.

இ-ள். விரி – பரந்த, கடல் – திருப்பாற்கடலி லுண்டாகிய, அமிழ்தமும் – தேவாமிர்தத்தையும், வேலை – சமுத்திரஞ் சூழ்ந்த, ஞாலமும் – பூமியையும், செருமுகத்து – யுத்தத்தி னிடத்திலே, அழல் உமிழ் – நெருப்பை யுமிழ்கின்ற, சிறுகண்யானையும் – சிரிய கண்களையுடைய யானைகளையும், எரிபிரகாசிக்கின்ற – மணிக்குப்பையும் – இரத்தினக் குப்பைகளையும், எளிதின் எய்தலாம் – எளிதிலே யடையலாம், அருமகப்பெறுதல் – அரிய பிள்ளைகளைப் பெறுதல், அரியது என்ப – அரியதென்று சொல்வார் (பெரியோர்கள்) எ-று. 13

மற்று – ஏ – அசைகள்.

விம்மிமின் னுழைமருங்கொசியவீங்கிய
கொம்மைவெம்முலையினுக்குதலைமென்மொழிச்

செம்மையவருமக்கப்பெறுதலீமையோர்க்
கிம்மையுமறுமையுமின் பமில்லையால்.

இ-ள். விம்மி — பருத்து, மின் — மின்னலையொத்த, நுழை — நுட்பமாகிய, மருங்கு — இடையானது, ஒசிய — ஒடிந்துபோகும்படி, வீங்கிய-பூரித்த, கொம்மை — இளமைபொருந்திய, வெம் — விருப்பத்தைச் செய்கின்ற, முலையினுய் - தனங்களையுடைய, தமயந்தியே! குதலை — மழலையாகிய, மெல் மொழி — மிருதுவாகிய சொல்லையுடைய, செம்மைய — நல்ல குணத்தையுடைய, அருமக — அரிய பிள்ளைகளை, பெறுத-பெற்றுக்கொள்ளாத, தீமையோர்க்கு - குற்றத்தையுடையோர்க்கு, இம்மையும் — இப்பிறப்பிலும், மறுமையும் - மறுபிறப்பிலும், இன்பம் இல்லை — சுகமில்லை எ-று. ஆல் — அசை.

எண்ணலும்வணரிருங்கூந்தலீந்திழை
மன்னவமழலைவாய்மக்கடம்மொடு
மின்னகுபரிதிவேல்வீமன்மாநகர்
துன்னுதும்யாமெனச்சொல்லினளரோ.

எந்தை நகர்க்கு யாங்களெல்லோரும் எகுவம் என்றது.

இ-ள். என்னலும் — இப்படியென்று அரசன் சொல்லவும், வணர்-வளைந்த, இரு — பெரிதாகிய, கூந்தல் - அளகபாரத்தையுடைய, ஈந்து இழை-தமயிந்தியானவள், மன்னவ — அரசனே! நம் — நம்முடைய, மழலைவாய் - மழலைச்சொற்கள் பொருந்திய வாயையுடைய, மக்கள்தம்மொடும் — பிள்ளைகளுடனே, யாம் - நாமிருவரும், மின்னகு — மின்னலைப் பழிக்காநின்ற, பரிதி-சூரியனையொத்த, வேல் — வேலாயுதத்தையுடைய, வீமன் — வீமராசனுடைய, மாநகர்-பெரிய நகரில், துன்னுதும்-சேர்வோம், யாம்-நாம், என-என்று, சொல்லினள் — சொன்னள் எ-று. 15

கோற்றொடிசெல்வர்பாற் றுறையிரந்துகின்
றேற்றயின்றுயிர்சுமந்திருத்தலீறிலா
வாற்றலுமானமுமறிவுங்கல்வியு
மாற்றருஞ்சீர்த்தியுமாற்றுமென்பவே.

மாமன் வீட்டில் மருகன்சென்று வாழ்தல் பதடித்
தன்மையென நளன் வழங்கல்.

இ-ள். கோள்தொடி — தமயந்தியே! செல்வர்பால் — செல்வத்தையுடையவர்களிடத்தில், குறை இரந்து நின்று-குறையைச்சொல்லியிரந்துநின்று, ஏற்று — வாங்கி, அயின்று — உண்டு, உயிர் சுமந்து இருத்தல் - உயிரைத்தாங்கியிருத்தலானது, ஈறு இலா — முடிவில்லாத, ஆற்றலும் — வலியையும், மானமும் — அபிமானத்தையும், அறிவும் — அறிவையும், கல்வியும் — வித்தையையும், மாற்ற அரும் - நீக்கப்படாத, சீர்த்தியும் — சீர்த்தியையும், மாற்றும் என்ப - போக்குமென்று (பெரியோர்) சொல்வார்கள் எ-று. 16

மிக்கவெஞ்சமத்திடைவெருவியோடின
ரொக்கலுன்புறத்தனியுலகில்வாழுநர்
புக்குவேட்டகத்தினிலுண்ணும்புன்மையோர்
மக்களுட்பதடியென்றுரைக்கும்வையமே.

இ-ள். மிக்க - அதிகரித்த, வெஞ்சமத்திடை — வெவ்வியயுத்தத்தினிடத்தில், வெருவி ஓடினர் — பயந்தோடினவர்களும், ஒக்கல் - சுற்றத்தார், அன்பு உற — வருத்தமடைய, தனி - தனித்திருந்து, உலகில் — உலகத்தில், வாழுநர் — செல்வத்துடன் வாழ்கின்றவர்களும், புக்கு — போய், வேட்ட அகத்தினில் - மாமனார் வீட்டில், உண்ணும் — புசிக்கின்ற, புன்மையோர்- கீழ்மக்களும், மக்களுள் - மனிதருக்குள், பதடி என்று-பதரென்று, வையம்- உலகத்தார், உரைக்கும் — சொல்லுவர் எ-று. 17

என்றலுந்திருவுளமின்னதாகுமேன்
மன்றலந்தெரியலாய்மக்கடம்மைநம்
மின்றிகழ்மானவேல்விதர்ப்பன்மாநகர்
சென்றிடப்பணித்தருளென்றுசெப்பினாள்.

தமயந்தி பிள்ளைகளைத் தந்தைநகர்க்கு
அனுப்புக என்று வேண்டல்.

இ-ள். என்றலும் — இப்படியென்று அரசன் சொன்னவளவில், திருவுளம் — உம்முடைய சித்தம், இன்னது ஆகுமேல்-இத்தன்மையதாகுமாஞல், மன்றல் — வாசனைபொருந்திய, அம் - அழகிய, தெரியலாய் — மாலையையுடைய அரசனே! மக்கள் தம்மை — பிள்ளைகளை, நம் — நம்முடைய, மின் திகழ்-மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற, மானம்-பொருமைபொருந்திய, வேல் — வேலாயுதத்தையுடைய, விதர்ப்பன் — வீமராசனுடைய, மாநகர்- பெரி நகரத்தில், சென்று இட-போக, பணித்தருள்-உத்தரவுகொடு, என்று- என்று, செப்பினாள் — தமயந்தி சொன்னாள் எ-று. 18

தண்டலில்பாகனேநோக்கித்தாதுசேர்
வண்டிமிர்தெரியலான்வருந்திமக்களை
விண்டொடுபுரிசைசூழ்விதர்ப்பன்றன்னுழை
கொண்டனைபோகெனக்கூறினளோ.

தேர்ப்பாகனை நோக்கிப் பிள்ளைகளைக் கொண்டுபோ
வென்று நளன் சாற்றல்.

இ-ள். தண்டல் இல் — நீங்குதலில்லாத, பாகனை — தேர்ப்பாகனை, நோக்கி — பார்த்து, தாதுசேர் — மகரந்தஞ்சேர்ந்த, வண்டு இமிர் — வண்டுகள் ஒலிக்காநின்ற, தெரியலான்-மாலையையணிந்த நளமகாராசன், வருந்தி-வருத்தமுற்று, மக்களை — பிள்ளைகளை, விண்தொடு — மேகத்தை யளாவாநின்ற, புரிசைசூழ் - மதில்சூழ்ந்த, விதர்ப்பன் தன் உழை — வீமராசனிடத்தில்,

கொண்டானபோகென — கொண்டுபோ வென்று, கூறினன் — உத்தரவு கொடுத்தான் எ-று. அரோ — அசை. 19

தழுவியதாதைதன்முகமுந்தாயர்த
முழுமதியனையவாண்முகமுநோக்குரு
விழிவழிநீருகவிம்மிவிம்மிநின்
றழுதனர்கண்டுளோரலக்கணெய்தவே.

குரவரைப் பார்த்துக் குழவிகளிரங்கல்.

இ-ள். தழுவிய — தங்களைத் தழுவிக்கொண்ட, தாதை தன்முகமும்-தகப்பனுடைய முகத்தையும், தாயர்தம்-தாயாரினுடைய, முழுமதி அனைய-பூரண சந்திரனையொத்த, வாள்முகமும் — ஒளிபொருந்திய முகத்தையும், நோக்கு உரு — பார்த்து, விழிவழி — கண்ணின் வழியிலே, நீர்உக — நீர்சிந்த, விம்மிவிம்மி நின்று — தேம்பித் தேம்பிநின்று, கண்டுளோர் — பார்த்தவர்கள், அலக்கண் எய்த — துன்பமுறும்படி, அழுதனர் — அழுதார்கள் எ-று. 20

அலமருமக்கடமாகமெய்கணு
முலைவழியொழுகுபானனைப்பமோந்துவாய்
புலர்தரப்பற்பல்காற்புல்லிக்கொண்டுகண்
கலுழ்தருபுனலினுற்கழுவினளரோ.

தமயந்தி பிள்ளைகளின் பிரிவாற்றாது தனிவருந்தல்.

இ-ள். அலமரு - மனம் கலங்காநின்ற, மக்கள்தம் — பிள்ளைகளுடைய, ஆகம் எங்கணும் - சரீரமுழுமையும், முலைவழி-முலையின் வழியால், ஒழுகு-ஒழுகாநின்ற, பால் — பாலானது, நனைப்ப — நனைக்கும்படி, மோந்து — உச்சி மோந்து, வாய்புலர்தர — வாயுலர, பற்பல்கால்-அனந்தரம், புல்லிக்கொண்டு-தழுவிக்கொண்டு, கண்கலுழ்தரு — கண்ணினின்று மொழுகாநின்ற, புனலினுல் - சலத்தினுல், கழுவினள் — கழுவினள் எ-று. அரோ — அசை. 21

மடவரறன்னையுமதுகைவேந்தையும்
படுதுயரொழிகெனவாற்றிப்பாகனுங்
குடலுயிர்பிரித்தெனவுவகைமக்களைக்
கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டுபோயினன்.

தேர்ப்பாகன் நளன் மக்களை வீமன்தேசம்
கொண்டு சென்றது.

இ-ள். மடவரல் தன்னையும் — தமயந்தியையும், மதுகை — வலியையுடைய, வேந்தையும் — நளனையும், படு-உண்டாகாநின்ற, துயர் ஒழிகென-தீக்க நீங்குக்கடவீரென்று, ஆற்றி — தணித்து, பாகன்-தேர்ப்பாகன், ஆங்கு-அவ்விடத்தினின்று, உடல் உயிர் பிரித்தென — உடலையு முயிரையும் வேறு பிரித்ததுபோல், உவகைமக்களை — சந்தோடத்தைச்செய்யும் பிள்ளை

களே, கொடி—கொடியையுடைய, நெடுந்தேர்மிசை—நெடியதேரின்மீது, கொண்டு—ஏற்றிக்கொண்டு, போயினன்—சென்றான் எ-று. 22

மிகைப்படுதுன்பமும்விழைபுமின்பமு
மகத்திடைநிகரெனநோக்குமையனுந்
தகைப்பருந்துயரொடுதளர்ந்துசாம்புமேன்
மகப்பிரிவினுந்துயர்வலியதாவதே.

மகப்பிரிவைப் பார்க்கினும் துன்பம் வேறின்றெனல்.

இ-ள். மிகைப்படு-அதிகரித்த, துன்பமும்-துயரத்தையும், விழையும்-இச்சிக்கப்பட்ட, இன்பமும்—இன்பத்தையும், அகத்து இடை—மனதில், நிகர் என—ஒப்பாக, நோக்கும்—பார்க்கின்ற, ஐயனும்—நளனும், தகைப் பரும்—தடுத்தற்கரிய, துயர் ஒடு—துன்பத்துடன், தளர்ந்து-வருந்தி, சாம் புமேல்-சோர்வானேயாஞல், மகப்பிரிவினும்—மக்கட்பிரிவிலும், துயர்-துயரில், வலிது—வலிமையுடையது, யாவது—எது? (ஒன்றுமில்லை) எ-று.

சிலதியர்பரப்பியதேங்கொண்மெல்லிதழ்
மலர்மிசைமிதிப்பினும்வருந்துசீரடி
நிலமிசைப்படுபரலுறைப்பநேரிழை
புலவுவேற்காளைபின்றொடர்ந்துபோயினள்.

நளன்பின் தமயந்தி காட்டிற்குச் செல்லல்.

இ-ள். சிலதியர்-தோழிகள், பரப்பிய—பரவச்செய்த, தேம்கொள் வாசனைகொண்ட, மெல் இதழ்-மெல்லிய விதழையுடைய, மலர்மிசை-புட் பத்தின்மீது, மிதிப்பினும்-அடிவைத்தாலும், வருந்து-வருந்துகின்ற, சிறு அடி-சிறியபாதங்களில், நிலமிசை-பூமியின்மீது, படு-உண்டாகிய, பரல்-பருக்கைகள், உறைப்ப-உறுத்தும்படி, நேரிழை-தமயந்தியானவள், புலவுவேல்-புலா ஞற்றத்தையுடைய வேலையேந்திய, காளை-நளனது, பின்றொடர்ந்து-பின்னே தொடர்ந்து, போயினள்-சென்றாள் எ-று.

மடவரற்றெடுமதுகைவேந்தனைக்
கடிமுரசுருதிகோமறுகிற்காண்டலு
மிடியுறுமரவென்வேங்கிபேக்கினின்
றுடல்வெறுத்துயிருகவுழல்கின்றார்சிலர்.

இதுமுதல் நான்குபாட்டால் நளனை யிழந்தவர் செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். மடவரல்-தன்னெடு—தமயந்தியுடன், மதுகை வேந்தனை-வலி யையுடைய நளனை, கடி—சிறந்த, முரசு—பேரிகையினுலி, அருத—நீங் காத, கோமறுகில்-அரசர் வீதியில், காண்டலும்—பார்த்தவளவில், இடி உறு—மேகத்தி னுலியைக்கேட்ட, அரவு என-சர்ப்பத்தைப்போல, ஏங்கி ஏங்கி-மிகவு மேக்கமுற்று, நின்று—(திகைத்து) நின்று, உடல் வெறுத்து-

தேகத்தை வெறுத்து, உயிருக = உயிர் நீங்கும்படி, சிலர் உழல்கின்றார் - சிலர் சுழல்கின்றனர் எ-று. 25

மண்ணியமணிவரையனையமார்பினன்
பெண்ணலங்கனிந்தவிப்பேதைதன்னெடு
நண்ணருங்கானிடைநடத்தல்காணிவோ
கண்ணிணைபடைத்தனன்கமலத்தோனென்பார்.

இ-ள். மண்ணிய – கழுவிய, மணிவரை – அரதனமலையை, அனைய – ஒத்த, மார்பினன் – மார்பினையுடைய நளமகாராசன், பெண் நலம் கனிந்த – பெண்டன்மை மூத்திருந்த, இப்பேதை தன்னெடும் – இத்தமயந்தியுடனே, நண் அரு – போகப்படாத, கான் இடை – காட்டினிடத்தில், நடத்தல் காணவோ – போதலைப்பார்க்கவோ, கமலத்தோன் – பிரமன், கண் இணை – இரண்டுநேத்திரங்களை, படைத்தனன் - (எங்களுக்கு) அமைத்தனன், என்பார் - என்று (சிலர்) சொல்லுவார்கள் எ-று. 26

மல்லடுதிணிபுயமன்னர்மன்னவ
னெல்லையிறுயருழந்தேதகக்காண்டலு
மெல்லியில்வெடித்துயிரொழிந்ததில்லையாற்
கல்லினுமவலியதோகவலுநெஞ்சென்பார்.

இ-ள். மல் – மல்லர்களை, அடு - கொல்லாநின்ற, திணி – பலம்பொருந்திய, புயம் - புயத்தையுடைய, மன்னர் மன்னவன் - அரசர்க்கரசனுமாகிய நளன், எல்லை இல் – அளவில்லாத, துயர் உழந்து – துன்பமுற்று, ஏகபோக, காண்டலும் – பார்க்கவும், ஒல்லையில் – சீக்கிரத்தில், வெடித்து – கபாலம் வெடித்து, உயிர் – பிராணனானது, ஒழிந்தது இல்லை – நீங்கியதில்லை, (ஆதலால்) கல்லினும் - கல்லைப்பார்க்கிலும், வலியதோ – வலிமையுடையதோ, கவலும் – துன்பப்படும், நெஞ்சு - மனமானது, என்பார் – என்று சொல்லுவார்கள் எ-று.

கொல்லன், தச்சன் என்பன ஈறுகெட்டுக்கொல், தச்சு என நின்றாற் போல மல்லர் என்பது மல் என நின்றது. உயிர் போங்காலத்துப் பிரமரந்திரத்தைப் பிளந்துபோவது துணிபாகலின் "வெடித்துயி ரொழிந்தது இல்லையால்" என்றார். மார்பு வெடித்து என்றுரைப்பது ஈண்டைச் சிறப்பன்று. ஒல்லை - காலவிரைவு. ஆல் - அசை கல்லினும் – இதன்கண் ஐந்தனுருபு உறழ்பொருவில் வந்தது. 27

தாயினுமருள்புரிதரணிமன்னவன்
போயினன்கானிடைபென்றபோழ்தினின்.
மாய்வுறப்பெற்றிலேமன்னர்மன்னன்பா
லேயபேரன்பினெம்மியல்யாரென்பார்.

இ-ள். தாயினும் - தாயைப்பார்க்கிலும், அருள்புரி – உயிர்களிடத்திற் கிருபையைச் செய்கின்ற, தரணி மன்னவன் - உலகத்தையாளுநனான, கான்

இடை – காட்டினிடத்தில், போயினன் – சென்றான், போதினில்ம்ன்றன – என்று சொன்னபொழுதிலே, மாய்வுறப் பெற்றிலேம்–இறக்கப்பெறவில்லை, (ஆதலால்) மன்னர் மன்னன்பால் – இராசாதிராசனுடைய நளனிடத்தில், ஏய – பொருந்திய, போன்பினர் – போன்பையுடையவர்கள், எம்மில் – எங்களைப்பார்க்கிலும், யார் – யாவர், (உளர்) என்பார் – என்று, (சிலர்) சொல்வார்கள் எ-று. 28

அடிதொழுமரசருமமைச்சர்வெள்ளமு
மடவியரனைவருமைந்தரீட்டமுங்
கொடிநெடுவீதிவாய்க்குறுகியெங்கணுங்
கடன்மடைதிறந்தெனக்கலுழ்ந்திட்டாரரோ.

இப்பாட்டால் மந்திரி முதலாயினோர் வருந்துதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். அடிதொழும் – பாதத்தை வணங்காநின்ற, அரசரும் – இராசர்களும், அமைச்சர் வெள்ளமும் – மந்திரிக் கூட்டங்களும், மடவியர் அனைவரும் – மாதர்கூட்டங்களும், மைந்தர் ஈட்டமும் – புருடர்களீட்டமும், கொடி – கொடிகளையுடைய, நெடுவீதிவாய் – நீண்ட வீதியினிடத்தில், குறுகி – வந்து, எங்கணும் – எவ்விடத்தும், கடல் மடை திறந்தது என – கடல்மடை திறந்ததுபோல, கலுழ்ந்திட்டார் – அழுதார்கள் எ-று. 29

பொய்யுறு தீமொழிபுகல்கிலேனெனு
வையமீயெம்மையிங்கருளில்வேந்துதன்
கையகப்படுத்தினைகானிலேகினின்
மெய்யினும்பொய்ம்மையேவிழுமிதாமென்பார்.

இப்பாட்டால் அரசனைத் தடுத்தற்கு அவன் கோட்பாட்டிழிவு கூறப்படுகின்றது.

இ-ள். பொய்யுறு – பொய்யாகிய, தீமொழி – தியசொல்லை, புகல்கிலேன் எனு – சொல்லமாட்டேனென்று, ஐய – ஐயனே! நீ – நீ, எம்மை – எங்களை, இங்கு – இப்பட்டணத்தில், அருளில் – கிருபையில்லாத, வேந்துதன் – அரசனுடைய, கையகப்படுத்தினை – கையிற் சேர்த்தவனுய், கானில் ஏகின் – காட்டினிடத்துக்குப்போனால், நின் – உன்னுடைய, மெய்யினும் – சத்தியத்தைப் பார்க்கிலும், பொய்மையே – பொய்யுரையே, விழுமிதாம் – மேன்மையுடையதாம், என்பார் – என்று சொல்லுவார்கள் எ-று. 30

இன்னுயிருய்யுமீக்கென்றபோழ்தினும்
பொன்னவிர்மூலையினூர்புலர்த்தகாலையு
முன்னருஞ்சூதினும்பொய்ம்மைமூரிவேற்
கன்னவிரோளினுக்கழறலாமென்பார்.

இப்பாட்டால் இச்சூதிற் பொய்யுரைப்பினும் வழுவல்லவெனக் கூறப்படுகின்றது.

இ-ள். இங்கு - இவ்விடத்தில், இன்னுயிர் — இனியவுயிரான்து, உய்யும் — பிழைக்கும், என்றபோழ்தினும் — என்று சொல்லிய காலத்திலும், பொன் - தேமல், அவிர் — பிரகாசிக்கிற, மூலையினர் — மூலையையுடைய மடவார், புலர்ந்தகாலையும் — பிணங்கின காலத்திலும், முன்னரும் — நினைக்கப்படாத, சூதினும் — சூதாட்டத்திலும், பொய்ம்மை — பொய்யுரையை, மூரிபலம்பொருந்திய, வேல் - வேலாயுதத்தை யேந்திய கல்நவில் - மலைபோன்ற, தோளினுய் — தோளையுடைய அரசனே! கழறலாம் - சொல்லலாம், என்பார் — என்று சொல்லுவார்கள் எ-று. 31

எண்டிசைத்தலைவருமெழில்கண்டேமுறத்
தொண்டைவாய்மடமயின்மாலைசூட்டுநாள்
புண்டருகோட்டுவெங்களிற்றிற்போதரல்
கண்டகணிவற்றையுங்காணுமோவென்பார்.

இப்பாட்டால் தங்களுரையை நளன் கொள்ளாதது கண்டு மந்திரி முதலாயினோர் வருத்தமடைந்தார் எனப்படுகின்றது.

இ-ள். எண்திசைத் தலைவரும்-அட்டதிக்குப் பாலகரும், எழில்கண்டு-இந்நள னழகைப்பார்த்து, எமுற — (இவ்வளவழகு நமக்கில்லையென்று) மயக்கமுறுதற்க, தொண்டைவாய் — கோவைக்கனியையொத்த அதரத்தையுடைய, மடமயில் — தமயந்தியானவள், மாலை சூட்டுநாள் — சுயம்வரமாலையைச் சூட்டியதினத்தில், புண்தரு — மாமிசம்பொருந்திய, கோட்டு — தந்தங்களையுடைய, வெம் - குரூரமான, களிற்று — யானையின்மீது, போதரல்-(நீவிரிருவருங்) கோலம்வருதலை, கண்டகண் — பார்த்த கண்கள், இவற்றையும் — இக்கொடிய செய்கைகளையும், காணுமோ என்பார் — பார்க்குமோவென்று சொல்லுவார்கள் எ-று. 32

மன்னவனேகுதற்கிரங்கிமாழ்குநர்
தன்னருங்கானிடைத்தொடர்ந்துசெல்குந
ரின்னுயிர்செகுப்பலென்றிசையில்புன்மையோ
னன்னகரிடைமுரசறைவித்தானரோ.

இப்பாட்டால் நளனிடத் தன்புள்ளவராய்ப் புலம்புகின்ற அனைவர்க்கும் புட்கரன் பொறுமையாற் கொடிய ஆக்ஞை விதித்தானெனப் படுகின்றது.

இ-ள். மன்னவன் - நளமகாராசன், ஏகுதற்கு — காட்டிற் போவதற்கு, இரங்கி — அழுது, மாழ்குநர் — தன்பப்படுகின்றவர்களையும், தன்னரும்-போகக்கூடாத, கான்இடை - காட்டினிடத்தில், தொடர்ந்து — பின்னே

தொடர்ந்து, செல்குநர் - போகின்றவர்களேயும், இன்னுயிர் – இனியவுயிர் களே, செகுப்பல் என்று – கொல்லுவேனென்று, இசைஇல் – புகழில்லாத, புன்மையோன் – அற்பனுகிய புட்கரன், அங்நகரிடை – அந்நகரத்தினிடத் தில், முரசு – பேரிகையை, அறைவித்தான் – அடிப்பித்தான் எ-று. 33

வசைபடுமன்னவன்வாய்மையாலறை
விசிமுழவொலிசெவிவெதும்பக்கேட்டலு
மிசைபடுமன்னவறகிரங்கிஞெரெலா
மசுணமென்புள்ளென வலமந்தங்கினர்.

இ-ள். வசைபடு - அபகீர்த்தியையுடைய, மன்னவன் - புட்கராசனது, வாய்மையால் – ஆக்ஞையால், அறை - அடிக்கப்பெற்ற, விசி - வாரினுலிறுக் கிய, முரசொலி – முரசினுடைய சத்தத்தை, செவிவெதும்ப - காதுகள் வெப்பமுற, கேட்டலும் - கேட்டவளவில், இசைபடு மன்னவற்கு - புகழை யுடைய நளமகாராசனுக்கு, இரங்கிஞெரெலாம் – அழுதவர்களெல்லாரும், அசுண மென்புள்ளென - அசுணமென்னும் பட்சியைப்போல, அலமந்து மணஞ்சுழன்று, எங்கினர் - தன்பப்பட்டார்கள் எ-று.

கொடிய ஒலிகேட்கில் இறப்பது அசுணப்பறவைக் கியல்பாகலின் அது பற்றி அது இவர்க்கு உவமானமாய்க் கூறப்பட்டது. 34

வருந்திமுன்போதருவமைச்சர்வாண்முகம்
புரிந்தனனேக்கியபொருவில்வாய்மையான்
விரிந்தநூற்கேள்வியீரறத்தைவேரொடு
மரிந்தனிரெற்பிரிந்தாற்றலாமையால்.

இதமுத லிரண்டுபோட்டால் நளன் மந்திரி முதலானேர்க்கு விடைகொடுத்தல் சொல்லப்படுகின்றது.

இ-ள். வருந்தி - வருத்தமுற்று, முன்போதரும் – முன்னேபோகும், அமைச்சர் – மந்திரிகளுடைய, வாண்முகம் – ஒளிபொருந்திய முகத்தை, புரிந்தனன் – விரும்பினவனுய், நோக்கிய – பார்த்த, பொருவில் – ஒப்பில் லாத, வாய்மையான் – சத்தியத்தையுடைய நளமகாராசன், விரிந்த - பரந்த, நூற்கேள்வியீர் – சாத்திர விசாரணே யுடையவர்களே, என்பிரிந்து – என் னைப் பிரிந்து, ஆற்றலாமையால் – பொறுக்கமாட்டாமையினுல், அறத்தை - தருமத்தை, வேரொடும் – வேருடனே, அரிந்தனிர் – அறுத்துவிட்டீர்கள்.

வாய்மையானென்னு மெழுவாய் மேல்வரும் பாட்டில் என்றுனென் னும் பயனிலே கொண்டது. 35

மேவருஞ்சூதினிற்றோற்றமேதினி
யாவதுமென்றலதாளவெண்ணுதல்
கோவியல்பன்றவனுணேமேற்சூடி
நீவிரென்வாய்மையைநிறுத்துவீரென்றான்.

இ-ள். மேவரும்—பொருந்துதற்கரிய, சூதினில் – சூதாட்டத்திலே, தோற்ற—தோற்றுப்போன, மேதினியாவதும் - உலகமெல்லாவற்றையும், வென்றலது - (நான்) வெற்றிகொண்டல்லாமல், ஆள - ஆளுகிறதற்கு, எண்ணுதல்—நினைத்தல், கோ – அரசர்களுக்கு, இயல்பு அன்று—தருமமன்று, (ஆதலால்) அவன் - அந்த புட்கரனுடைய, ஆணை - ஆக்கினையை, மேற்கொடு-ஏற்றுக்கொண்டு, நீவிர் – நீங்கள், என் – என்னுடைய, வாய்மையை – சத்தியத்தை, நிறுத்துவீர் – நிலைநிறுத்துங்கள், என்றான் – என்று சொல்லினான்.

முளரியால்வெந்தவெங்கானின்மொய்துக
ளளியொடுபுலம்பினரழுதகட்கடைத்
துளியினிலவித்தனர்தொடரவெந்திறற்
களிமதக்களிற்றினான்கானினேகினான்.

இ-ள். முளரியால் – அக்கினியினால், வெந்த - நீறுபட்ட, வெம்கானில்-வெவ்விய காட்டினிடத்து, மொய் – நிறைந்த, துகள்-தூட்களே, அளியொடு-இரக்கத்துடன், புலம்பினர் - புலம்பினவராய், அழுத – அழுத, கண் கடை-கண்ணின்கடையிலிருந்து வராகின்ற, துளியினின் - நீர்த்துளியினால், அவித்தனர் – அவித்தவர்களாய், தொடர – பின்றொடர, வெம் திறல் - சூரமான வலியையும், களி – செருக்கையும், மதம் மும்மதத்தையுமுடைய, களிற்றினான் – யானையையுடைய நளமகாராசன், கானில்—காட்டினிடத்தில், எகினான் – சென்றான் எ-று. 37

திருகுவெஞ்சினக்கலிசெல்வன்பின்றொடர்
பரிசனம்யாவுமெய்பதைத்துமீட
முருகுறழ்பொற்பினான்முன்னரேகிய
வருநெறிதெரிவுறுவஞ்சமாற்றினான்.

இ-ன். திருகு – மாறுபாட்டையும், வெம் – வெவ்விய, சினம் - கோபத்தையுமுடைய, கலி – கலிபுருடனனவன், செல்வன் - நளனுடைய, பின் தொடர் – பின்னே போகின்ற, பரிசனம் யாவும்—எவல்செய்வோ ரெல்லோரும், மெய் பதைத்து – சரீரந்துடித்து, மீள்தர - திரும்பும்படி, முருகு உறழ் – சுப்பிரமணியரையொத்த, பொற்பினான் - அழகையுடைய நளமகாராசன், முன்னர் ஏகிய – முன்னேபோன, அருநெறி – அரிய வழியானது, தெரிவுறு—தெரியாத, வஞ்சம்—மாயையை, ஆற்றினான் – செய்தான். 38

ஆற்றுவஞ்சனையினலழகுவாய்ந்தபொற்
கோற்றொடிதன்னொடுங்கொற்றமன்னவன்
றோற்றுதல்காண்கிலார்துயரமெய்திநின்
றாற்றொழுகண்ணினருள்ளமாழ்கினார்.

இ-ள். ஆற்று – (கலி) செய்த, வஞ்சனையினல்—மாயையினால், அழகு வாய்ந்த—அழகு பொருந்திய, பொன்கோல்தொடி தன்னொடு—தமயந்தி

யோடும், கொற்ற மன்னவன் – வெற்றிபொருந்திய நளமகாராசன், தோற்றுதல் – தெரிதலே, காண்கிலர் – பார்க்காதவர்களாய், துயரம் – துக்கத்தை, எய்தி – அடைந்து, நின்று – நின்று, ஊற்று – சுரப்பானது, எழு – தோன்றுகின்ற, கண்ணினர் – கண்களையுடைய பரிசனங்கள், உள்ளம் மாழ்கினர் – உள்ளத்தில் மயங்கினர்கள் எ-று. 39

ஆயினு மினிதருள்புரியுமெம்பிரான்
றூயமென்மலரடிச்சுவடுகாண்கிலேம்
போயினன்யாண்டெவர்புணர்ப்பினுமிம்
மாயமென்றருநெறிமருங்கிற்றேடுவார்.

இ-ள். ஆயினும் – தாயைக்காட்டினும், இனிது – இனிதாக, அருள்கிருபையை, புரியும் – செய்கின்ற, எம்பிரான் – எங்களரசனுகிய நளமகாராசனது, தூ – பரிசுத்தமாகிய, மெல் – மெல்லிய, மலர் – தாமரை மலர் போன்ற, அடிச்சுவடு – அடிக்குறியை, காண்கிலேம் – நாங்கள் காணவில்லை, யாண்டு – எவ்விடத்தில், போயினன் – போயினான், இம்மாயம் – இந்த வஞ்சனையானது, எவர் புணர்ப்பினுனது – யார் சம்பந்தத்தினுலுண்டாகியது, என்று – என்று பேசிக்கொண்டு, அருநெறி – அரியவழியை, மருங்கில் – பக்கங்களில், தேடுவார் – தேடுவார்கள் எ-று. 40

தேடினர்புகுமிடந்தெரியலாமையில்
வாடினரருநெறிமருங்கினேர்வழி
கூடினரின்னுயிர்கூற்றங்கைக்கொள
வீடினராமெனவீழ்ந்துவிம்மினர்.

இ-ள். தேடினர் – தேடினவர்கள், புகுமிடம் – அரசன்போனவிடம், தெரிகிலாமையில் – அறியாதபடியால், வாடினர் – வாடினர்கள், அருநெறி – அரிய வழியினது, மருங்கில் – பக்கத்தில், ஓர்வழி – ஒருவழியை, கூடினர் – அடைந்தார்கள், இன் உயிர் – இனியவுயிரை, கூற்றம் கைக்கொள – யமன் கொண்டுபோக, வீடினராமென – இறந்தவர்போல, வீழ்ந்து – நிலத்திலே விழுந்து, விம்மினர் – அழுதார்கள் எ-று. 41

கொண்னுனேயலங்கல்வேற்குவவுத்தோளிஞன்
சென்னெறிகண்களிற்றெரியக்காண்கில
ரின்னலுற்றழுதழுதேங்கியேங்கியத்
தென்னகரடைந்தனர்தொடர்ந்துளோரெலாம்.

இ-ள். கொல் – கொல்லாகின்ற, நுனே – கூர்மையுடைய, அலங்கல் – வெற்றிமாலையணிந்த, வேல் – வேலையுடைய, குவவுத்தோளிஞன் – திரண்டதோளையுடைய நளமகாராசன், செல்நெறி – போனவழியை, கண்களில் – நேத்திரங்களில், தெரிய – அறிய, காண்கிலார் – காணுதவர்களாய், இன்னல் உற்று – துன்பமுற்று, அழுதழுது – புலம்பிப்புலம்பி, ஏங்கி ஏங்கி – மிகவு

மேக்கமுற்று, தொடர்ந்துளோர் எலாம் — பின்தொடர்ந்து போனவர்களெல்லாரும், அத்தென்னகர் — தங்கள் பழைய நகரை, அடைந்தனர் — சேர்ந்தார்கள் எ-று. 42

பறவைகள்குடம்பையுட்பார்ப்பருத்தில
கறவைகள்புனிற்றிளங்கன்றுக்கூட்டில
நறவுயிர்த்தலர்கிலமலர்கணுமேவ
லிறைவனேகினன்வனத்தென்றபின்னரே.

இதுமுதல் ஏழுபாட்டால் நளன் சென்றபின் அத்தேயத்தி
லுண்டாகிய செய்கை சொல்லப்படுகின்றது.

இ-ள். நாமம் — அச்சத்தைத்தருகின்ற, வேல் — வேலையுடைய, இறைவன் — நளமகாராசன், வனத்து — காட்டினிடத்தில், எகினனென்ற பின்னர் — போயினனென்றபின்பு, பறவைகள் — பட்சிகள், குடம்பைபுள் — கூண்டுக்குள்ளே, பார்ப்பு — தங் குஞ்சுகளே, அருத்தில — இரையூட்டவில்லை, கறவைகள் — பசுக்கள், புனிறு இளங்கன்றுக்கு — மிகுந்த விளங்கன்றுகளுக்கு, ஊட்டில் — பாலூட்டங்கொடுத்தில, மலர்கள் — புட்பங்கள், நறவு உயிர்த்து — தேனைத்தந்து, அலர்கில — மலரவில்லை எ-று. 43

வான்மறந்தனதுளிவழங்கலின்னிசைத்
தேன்மறந்தனமடமகளிர்தேங்குழல்
பான்மறந்தனபசுங்குழவிபாய்கவிட்
கான்மதமறந்தனகளிநல்யானையே.

இ-ள். வான் — மேகங்கள், துளிவழங்கல் — மழை பெய்தலை, மறந்தன — மறந்துவிட்டன, இன் இசை — இனிய இசையையுடைய, தேன் — வண்டுகள், மடமகளிர் — இளமைபொருந்திய பெண்களுடைய, தேம்குழல் — வாசனைபொருந்திய அளகத்தை, மறந்தன — மறந்துவிட்டன, பசுங்குழவி — இளங்குழந்தைகள், பால் — பாலுண்ணலை, மறந்தன — மறந்துவிட்டன, களி — செருக்கையுடைய, நல் — நல்ல, யானை — யானைகள், பாய் — பெருகாநின்ற, கவுள் — கன்னத்திலுண்டாகிய, கான்மதம் — வாசனைபொருந்திய மதவருடத்தை, மறந்தனை மறந்துவிட்டன எ-று. எ — அசை. 44

மலர்ப்பசுந்தாழ்குழன்மகளிர்கேள்வர்பாற்
புலத்தலுங்கலத்தலும்பொருந்துறுமையா
வலத்தகுமிழந்தனகுஞ்சியந்நலார்
மூலச்சுவடிழந்தனமுழவுத்தோள்களே.

இ-ள். மலர் — புட்பங்களையணிந்த, பசு — பசுமையாகிய தாழ் — நீண்ட, குழல் — கூந்தலையுடைய, மகளிர் — மாதர்கள், கேள்வர்பால் — கணவரிடத்தில், புலத்தலும் — பிணக்கத்தையும், கலத்தலும் — புணர்ச்சியையும், பொருந்துறுமையால் — அடையாமையால், குஞ்சி — குடுமிகள், அலத்தகம் — செம்

பஞ்சுக் குழம்பை, இழந்தன - நீங்கிவிட்டன; அ நல்லார் - அந்த மாதருடைய, மூலைச்சுவடு - தனத்தின் குறியை, முழவு - மத்தளம்போன்ற, தோள்கள்-புயங்கள், இழந்தன - நீங்கின எ-று.

ஊடில் அது தீர்வதற்குத் தலைவிபாதத்திற் றலைவன் வணங்கின் அப் பொழுது அவள் பாதத்துச் செம்பஞ்சு அவன் குடுமியிற்படும், புணர்ச்சி யுண்டாஞல் அவர் தனத்தில் எழுதிய சந்தனக்கோல நாடவர் புயத்திற்பதி யும், இவை துன்பத்தினு லின்மையால் இழந்தன வென்றூர். 45

அள்ளிலே வேற்கணரங்கைமீதுவைத்
தெள்ளருமின மொழிபயிற்றலின்மையால்
வள்ளவாயாரமுதுண்ணும்வண்சிறைக்
கிள்ளையுந்தேன்மொழிகிளக்கலற்றவே.

இ-ள். அள் - கூர்மைபொருந்திய, இலை - இலைபோன்ற, வேல் - வேலாயுதத்தையொத்த, கணர்-கண்களையுடைய பெண்கள், அங்கை மீது-அழகிய கையின்மீது, வைத்து - வைத்துக்கொண்டு, எள்ளரு-இகழ்ச்சியில்லாத, இன் - இனிமையான, மொழி - சொற்களை, பயிற்றல் இன்மையால் - கற்பிக்காதபடியால், வள்ளம்வாய் - கிண்ணத்தினிடத்தில், ஆர் - நிறைந்த, அமுது - பாலை, உண்ணும் - குடிக்கும், வள் - வளப்பம்பொருந்திய, சிறை-இறகையுடைய, கிள்ளையும்-கிளிப்பிள்ளையும், தேன்-மதுரமாகிய, மொழி-சொற்களை, கிளக்கல் அற்ற - பேசுதலொழிந்தன எ-று. 46

வாம்பரியிழந்தனவாவுமைங்கதி
யேம்பலின்விழவணியிழந்தகோமறு
காம்பல்வாயிழந்தனமுறுவலாரகிற்
றீம்புகையிழந்தனசெம்பொன்மாடமே.

இ-ள். வாம் - தாவுகின்ற, பரி - குதிரைகள், வாவும் - தாவுகின்ற, ஐங்கதி - ஐவகை நடையினையும் இழந்தன - நீங்கி விட்டன, எம்பலின்-வருத்தத்துடன், விழவணி - உற்சவாலங்காரத்தை, கோமறு - அரசவீதிகள், இழந்த - நீங்கிவிட்டன, ஆம்பல் - செவ்வல்லி மலர்போன்ற, வாய் - பெண்களுடைய வாய்கள், முறுவல் - புன்சிரிப்பை, இழந்தன - நீங்கிவிட்டன, ஆர் - நிறைந்த, அகில் - அகிற் கட்டையினது, தீ - இனிமையாகிய, புகை-புகையை, செம்பொன் - சிவந்த பொன்னுற்செய்த, மாடம் - உபரிகைகள், இழந்தன - நீங்கின எ-று. ஏ - அசை. 47

பாவலரிழந்தனர்பரிசிலுண்பலி
தேவருமிழந்தனர்கலியின்றீமையாற்
காவலனெடிபடுகானிலேகலால்
யாவருமிழந்தனரின்பமென்பவே.

இ-ள். பாவலர் - புலவர்கள், பரிசில் - தியாகத்தை, இழந்தனர் - நீங்கினார்கள், உண் - உண்ணப்பட்ட, பலி - அவியை, தேவரும் - தேவர்களும்,

இழந்தனர் - இழந்து விட்டார்கள், கலியின் - கலிபுருடனுடைய, தீமையால் - பொல்லாங்கினால், காவலன் - நளமகாராசன், நெடிபடு - சிள்வண்டை யுடைய, கானில் - காட்டில், எகலால் - போதலினால், யாவரும் - எல்லோரும், இன்பம் என்ப - இன்பமென்பனவற்றை, இழந்தனர் - நீங்கினார்கள் எ-று.

அறந்தலைமயங்கின பொய்ம்மையார்ந்தன
மறந்தலையெடுத்தன தீமைமல்கின
திறம்பின மனுநெறி தவங்கடீர்ந்தன
நிறைந்தனவஞ்சனை நெமியெங்குமே.

இ-ள். நெமியெங்கும் — உலகமெங்கும், அறம் - தருமம், தலைமயங் கின — தலைதடுமாறின, பொய்ம்மை - அசத்தியம், ஆர்ந்தன - நிறைந்தன, மறம் — பாவங்கள், தலை எடுத்தன - வளர்த்தன, தீமை - தீர் நடத்தைகள், மல்கின - நெருங்கின, மனுநெறி - இராசதருமம், திறம்பின - கெட்டன, தவங்கள் - தவசுகள், தீர்ந்தன — நீங்கின, வஞ்சனை - வஞ்சனைகள், நிறைந் தன - நிரம்பின எ-று. 49

நகர்நீங்குபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 1016.

கான் புகு படலம்.

இப்படலத்தால் தன் னகரைவிட்டு நீங்கிய நளமகாராசன் பிறர் நகரில் தன்னிலை தப்பிச் செல்வதில் விருப்ப மின்றிக் கானகம் புகுதல் சொல்லப்படுகின்றது.

கலி விருத்தம்.

களிமயில்குனித் திடக்காலமன் றியுங்
குளிமுகில்பிலிற் றின துணர்த்தபூங்கொடி
முளிசினை தளிர்த்தன முகைத்தபைந்தரு
நளிகடற்றுளோய்யான டந்தகானமே.

இதுமுதல் மூன்றுபாட்டால் நளன்சென்ற இடத்தண்டாகிய கிறப்புச் சொல்லப்படுகின்றது.

இ-ள். நளிர் – குளிர்ச்சியிருந்திய, கடல் – சமுத்திரத்தையொத்த, தானையான் – சேனையையுடைய நளமகாராசன், நடந்த-சென்ற, கானகம்-காட்டினில், களி – களிப்பையுடைய, மயில் - மயில்கள், குனித்திட – கூத்தாட, காலம் அன்றியும் – கார்கால மல்லாமலும், துளி - நீர்த்துளிகளை, முகில் – மேகங்கள், பிலிற்றின – பெய்தன, பூ - பொலிவு பொருந்திய, கொடி – கொடிகள், துணர்த்த – பூங்கொத்துகளைச் செய்தன, முளிசினை-உலர்ந்த கிளைகள், தளிர்த்தன – துளிர்த்தன, பைந்தரு – பசுமையாகிய விருக்கங்கள், முகைத்த – அரும்பின எ-று. 1

விள்ளருமதரிடைவெதும்புமெம்பரல்
கள்ளவிழ்மலரெனக்குழைந்துகாட்டினு
வெள்ளமுற்கதிர்சுடவுலரும்வெஞ்சுரம்
வள்ளவாய்மலர்விரிமருதம்போன்றதே.

இ-ள். விள் அரு - சொல்லுதற்கரிய, அதர் இடை - வழியிலே, வெதும்பு – சுடாநின்ற, வெம் – வெப்பமான, பரல் - மணியாம்பருக்கைகள், கள்-தேனுடன், அவிழ் - விரியாநின்ற, மலர் என - புட்பம்போல, குழைந்து-மிருதுவாய்க்காட்டின - காண்பித்தன, ஒள் - பிரகாசம்பொருந்திய, அழல்-அழற்றுகின்ற, கதிர் - சூரிய கிரணங்கள், சுட - தகிக்க, உலர் - காய்ந்த, வெம் - வெப்பமாகிய, சுரம் - பாலைநிலமான்து, வள்ளம் - கிண்ணம்போல, வாய் - முகத்தையுடைய, மலர் - புட்பங்கள், அவிழ்-விரியாநின்ற, மருதம்-மருதநிலத்தை, போன்றது - ஒத்திருந்தது எ-று. ஏ - அசை. 2

ஊறுசெய்தான் சுவைத்துடம்புவீக்கிய
வாறலைகள்வருமளியராயினர்

வேறினியுரைப்பதென் வெருவுமாவினொடு
மாறுகொளுழுவையுமாற்றத்தீர்ந்தவே.

இ-ள். ஊறுசெய்து - கொலைசெய்து, ஊன் — மாமிசத்தை, சுவைத்து-புசித்து, உடம்பு - சரீரத்தை, வீக்கிய - பருக்கச்செய்த, ஆறலை - வழியினிடத்திற் பறிக்கின்ற, கள்வரும்-திருடரும், அளியராயினூர் - கிருபையுடையராயினர்கள், வேறு - வேறுக, இனி - இனிமேல், உரைப்பது என் - சொல்லுவதென்னை, வெருவும் - அஞ்சாகின்ற, ஆவினொடு - பசுக்களுடனே, மாறுகொள் - பகைகொண்ட, உழுவையும் - புலியும், மாற்றம் - பகையை, தீர்ந்தநீங்கின எ-று. ஏ - அசை. 3

ஆயிடையுயிர்நிகரணங்கனுளொடு
மேயதன்னகர்வயின்விசும்புபோழ்ந்துலாங்
காய்கதிர்நுழைகலாக்காவினுடல்போற்
போயினனழலுமிழ்புலவுவேலினன்.

இ-ள். ஆ இடை — அந்தப்பாலை நிலத்தில், உயிர்நிகர் — தன்னுயிரையொத்த, அணங்கனுளொடும்-தெய்வப் பெண்ணையொத்த, தமயந்தியுடன், மேய — பொருந்திய, தன் — தன்னுடைய, நகர்வயின் — பட்டினத்தின்கண், விசும்பு — மேகங்களை, போழ்ந்து — பிளந்துகொண்டு, உலாம் — உலாவுகின்ற, காய் — காயாகின்ற, கதிர் — சூரிய கிரணமானது, நுழைகலா - நுழையக் கூடாத, காவின் - சோலையில், ஆடல்போல் — விளையாடல்போல், அழல்-அக்கினியை, உமிழ் — கக்காகின்ற, புலவு-புலால் நாற்றம்பொருந்திய, வேலினன் — வேலையுடைய நளமகாராசன், போயினன் — நடந்தான் எ-று. 4

அள்ளிலைப்பூணினனேகுமாற்றிடைக்
கொள்ளைவண்டினமிழிறவுகூட்டுணும்
வள்ளவாயமலரவிழ்வாவியங்கரைப்
புள்ளுருக்கொடுகலிபோயினனரோ.

இ-ள். அள்ளல் நெருங்கிய, இலை — இலைபோன்ற, பூணினன் — ஆபரணங்களையணிந்த நளமகாராசன், ஏகும் — போகாகின்ற, ஆற்றிடை — காட்டுவழியிலே, கொள்ளை — மிகுதியாகிய, வண்டு இனம் - சுரும்புக் கூட்டங்கள், இழி — பெருகாகின்ற, நறவு — தேனை, கூட்டுணும் — கொள்ளை கொள்ளும் படியிருக்கின்ற, வள்ளம்-கிண்ணம்போன்ற, வாய்-முகத்தையுடைய, மலர்-புட்பங்கள், அவிழ் — விரியாகின்ற, வாவி — தடாகத்தினை, அம் - அழகிய, கரை — கரையினிடத்து, புள் உருக்கொடு — அன்னத்தின் வுருவைக்கொண்டு, கலி - கலியன், போயினன் — சென்றான் எ-று. 5

வாவியின்மருங்குகன்மணிகள்கோத்தெனத்
தூவியம்பொற்சிறைமென்புட்டோன்றலு

மோவியமெழுதருமுருவப்பைங்கொடி
காவியங்கண்ணிணைகளிப்பநோக்கினாள்.

இ-ள். வாவியின் – தடாகத்தினது, மருங்கு – பக்கத்தில், நல் – நல்ல, மணிகள் – முத்துக்களை, கோத்த என – கோவையிட்டதுபோல, தூவி-தூவியெனப்பட்ட, அம் – அழகிய, பொன் – பொற் பிரகாசம்பொருந்திய, சிறை – இறகையுடைய, மெல் – மிருதுவாகிய, புள் – அன்னப் புள்ளானது, தோன்றலும் – காணலும், ஓவியர் – சித்திரக்காரர்கள், எழுதரு – எழுதற்கரிய, உருவம் – வடிவத்தையுடைய, பைங்கொடி – பசுமையாகிய கொடிபோன்ற தமயந்தியானவள், காவி – நீலோற்பலத்தையொத்த, அம் – அழகிய, கண் இணை – இரண்டு நேத்திரமும், களிப்ப – மகிழும்படி, நோக்கினாள் – பார்த்தாள் எ-று. 6

பன்மலர்களுலியபனிகொள்வாவியிற்
பொன்னவிர்கொடுஞ்சிறைப்புள்ளேநோக்குரு
மன்னநம்மணநிலைமுடித்தவண்சிறை
யன்னமென்புள்ளினீதழுதுவாய்ந்ததே.

இ-ள். பல் – நானவிதமான, மலர் – புட்பங்கள், களுலிய – நெருங்கிய, பனிகொள் – குளிர்ச்சியைக்கொண்ட, வாவியில் – தடாகத்தில், பொன்-பொன்போல, அவிர் – பிரகாசியாகின்ற, கொடுஞ்சிறை – கொடுமையான இறகையுடைய, புள்ளே – அன்னத்தை, நோக்குரு – பார்த்து, மன்ன அரசனே! நம் – நம்முடைய, மணநிலை – விவாகத்தை, முடித்த – நிறைவேற்றின, வண்சிறை – வளப்பமாகிய இறகையுடைய, அன்னமென்புள்ளின்-தெய்வ அன்னத்தைக் காட்டினும், ஈது – இப்பறவை, அழகு – அழகை, வாய்ந்தது – பொருந்தியது எ-று. 7

மற்றுமோருயிரெனவளர்த்தபூவையுஞ்
சொற்றருகிள்ளையுமறப்பத்தாமணிப்
பொற்றடந்தோளிளுப்பொன்னம்புள்ளினைப்
பற்றிநீதருகெனப்பணிந்துகூறினாள்.

இ-ள். மற்றுமோர் – மற்றொரு, உயிர் என – உயிர்போல, வளர்த்த-வளர்த்த, பூவையும் – நாகணவாய்ப்புள்ளையும், சொல் – மொழிகளை, தரு-சொல்லாகின்ற, கிள்ளையும் – கிளிப்பிள்ளைகளையும், மறப்ப – மறக்கும்படி, தூ – பரிசுத்தமாகிய, மணி – இரத்தின வடமணிந்த, பொன் – அழகிய, தட-விசாலமாகிய, தோளினுய் – புயத்தையுடைய அரசனே! பொன் – பொன்போன்ற, அம் – அழகிய, புள்ளினை – அன்னத்தை, பற்றி – பிடித்து, நீ தருக என – நீ கொடுப்பாயாக வென்று, பணிந்து – வணங்கி, கூறினாள் – சொன்னாள் எ-று. 8

ஓர்துகிலிருவருமுடுத்தமற்றையோர்
காரகிற்றீம்புகைகமழ்நீவிகொண்

தேர்கொடியிருந்தனவிலைகள்பூணினுய்
வார்சிறைப்புள்ளினைவளைத்துமென்றனள்.

இ-ள். ஓர் துகில் - ஓராடையை, இருவரும் - நாமிரண்டுபேரும், உடுத்து - தரித்துக்கொண்டு, மற்றையோர் - மற்றொருரு, கார் - கறுத்த, அகில்-அகிற்கட்டையினது, தீ - இனிமையாகிய, புகை - தூமம், கமழும் - பரிமளியாகின்ற, கீவிகொண்டு - ஆடையைக்கொண்டு, எர் - அழகு, குடியிருந்தது அன்ன - வாசஞ்செய்வதை யொத்த, இலைகொள் - தழைத்தலைக்கொண்ட, பூணினுய் - ஆபரணங்களையுடைய அரசனே, வார்சிறை - நீண்ட இறகையுடைய, புள்ளினை — அன்னத்தை, வளைத்தும் என்றனள் — பிடிப்போமென்று சொன்னுள் எ-று. 9

கருந்தடங்கண்ணிதன்னுள்ளங்கார்முறத்
திருந்துவேற்றடக்கையான்றுகிலிற்சேர்த்தலும்
பொருந்தியதுகிலொடும்வஞ்சம்பூண்டெதி
ரிருந்தபுள்ளந்தரத்தெழுந்துபோயதே.

இ-ள். கரு — கறுத்த, தடம் — விசாலமாகிய, கண்ணிதன் - கண்களையுடைய தமயந்தியினது, உள்ளம் - மனது, காமுற - இச்சிக்க, திருந்து-திருத்தமாகிய; வேல் — வேலையேந்திய, தடம் — பருத்த, கையான் — கையையுடைய அரசன், துகிலில் — ஆடையில், சேர்க்கலும் — சேர்த்தவளவில், பொருந்தியி - தன்மேற்சேர்ந்த, துகில்வொடும் — ஆடையோடும், வஞ்சம்-பேடத்தை, பூண்டு - கொண்டு, எதிரிருந்த - எதிரிலிருந்த, புள் - அன்னம், அந்தரத்து — ஆகாயத்தில், எழுந்து — எழும்பி, போயது - போயிற்று எ-று.

புனைதுகில்கவர்ந்துபைம்பொன்னிறத்தபுள்
பனியிருவிசும்பினிற்பறத்தல்காண்டலு
மினவிதனருந்துயர்நோக்கிமாழ்கினன்
வினைவலியிதுவெனமெலிவுநீக்கினன்.

இ-ள். புனை — தரித்திருந்த, துகில் - ஆடையை, கவர்ந்து — கிரகித்துக்கொண்டு, பைம்பொன் - பசுமையாகிய பொன்போன்ற, நிறத்த — நிறத்தையுடைய, புள் — அன்னமானது, பனி - குளிர்ந்த, இரு - பெருமைபொருந்திய, விசும்பினில் - ஆகாயத்தினில், பறத்தல் — பறந்துபோதலை, காண்டலும் - கண்டவளவில், மினவிதன் - மினையாளது, அருந்துயர் - அரிதான அக்கத்தை, நோக்கி - பார்த்து, மாழ்கினன்-வருந்தினன், வினை — ஊழ்வினையினது, வலி — உறுதி, இது என - ஈதென்று, மெலிவு — அன்பத்தை, நீக்கினன் - போக்கினன் எ-று. 11

கல்லதர்கடந்துபூங்கமலம்வாட்டியு
மெல்லடிசிவப்பூறல்வீழிவாய்மயிற்
கொல்லுமேபெனமனமுருகியுந்தைபூர்
செல்லுநீணெறியிதுவென்றுசெப்பினன்.

இ-ள். கல் அதர் - மலை வழியில், நடந்து - நடந்து, பூ - அழகிய, கமலம் - தாமரைமலரை, வாட்டிய - கெடுத்த, மெல் அடி - மிருதுவான பாதமானது, சிவப்புறல் - சிவத்தல், விழி - வீழிப்பழம்போன்ற, வாய் - அதரத்தையுடைய, மயிற்கு - மயில்போன்ற தமயந்திக்கு, ஒல்லுமே என - கூடுமோவென்று, மனம் - மனது, உருகி - இளகி, உந்தை - உன் தகப்பனது, ஊர் - குண்டினபுரத்துக்கு, செல்லும் - போகாகின்ற, நீள் - நீண்டநெறி மார்க்கம் இதுவென்று, செப்பினன் - சொன்னன் எ-று. 12

ஆங்கதுகேட்டலுமழுதுமாழ்கிநொந்
தீங்குநின்னடியனேன்பிழைத்ததியாதுகொல்
பூங்கழற்குரிசிலோய்பொரியிலேன்றனை
நீங்கவோயிவ்வுரைநிகழ்த்தினையென்றுள்.

இ-ள். ஆங்கு - அவ்விடத்தில், அது - அந்தச்சொல்லை, கேட்டலும் - கேட்டவளவில், அழுது - புலம்பி, மாழ்கி - வருந்தி, நொந்து - மன நொந்து, ஈங்கு - இவ்விடத்தில், நின் - உனக்கு, அடியனேன் - அடிமைத்திரம்பூண்டவன், பிழைத்தது - செய்தகுற்றம், யாது - எது, பூ - அழகிய, கழல் - வீரக்கழலையணிந்த, குரிசிலோய் - அரசனே! பொறியிலேன்தனை - அறிவில்லாத என்னை, நீங்கவோ - பிரியவோ, இவ்வுரை - இந்த வசனத்தை, நிகழ்த்தினையோ - சொன்னையோ, என்றுள் - என்று (தமயந்தி) சொல்லினள் எ-று. 13

செயிரறுமதிமுகம்பசப்பச்சிந்தைநொந்
தயர்வொடுகண்பனித்தவலங்கோடலே
மயிலியற்பேதைநிற்பிரிந்துவாழ்வெனே
யுயிர்பிரிந்தாலுடலுய்யுமோவென்றான்.

இ-ள். செயிர் அறு - குற்றமற்ற, மதி - சந்திரன்போன்ற, முகம்-வதனமானது, பசப்ப - பசந்துபோக, சிந்தைநொந்து - மனநொந்து, அயர்வொடு - சோர்வுடனே, கண்பனித்து - கண்ணீர்விட்டு, அவலம் கோடலை-அன்பத்தைக் கொள்ளாதே, மயில் - மயில்போலும், இயல் - சாயலையுடைய, பேதை - தமயந்தியே! நிற்பிரிந்து - உன்னைப் பிரிந்து, வாழ்வெனே - வாழ்வேனு, உயிர் பிரிந்தால் - உயிர் நீங்கினால், உடல் - தேகம், உய்யுமோ - பிழைக்குமோ, என்றான் - என்று (நளமகாராசன்) சொன்னன் எ-று. 14

முருகுயிர்த்தளியினமூசுபூங்குழற்
கருதருபெருந்துயர்க்காண்கிலேனெனப்
பரிதெடுந்தேரொடும்பரிவுற்றவை
னுரைவுநீர்க்கருங்கடலொளித்திட்டானரோ.

இ-ள். முருகு - தேனை, உயிர்த்து - பெற்று, அளி இனம் - வண்டுக் கூட்டங்கள், மூசு - மொய்க்காகின்ற, பூ - பூவையணிந்த, குழல் - கூந்தலையுடைய தமயந்தியினது, கருதரு - நினைத்தற்கரிய, பெருந்துயர் - பெரிதாகிய துன்பத்தை, காண்கிலேன்எனு - பார்க்கமாட்டேனென்று, பரி-குதி

ரைகட்டிய, நெடு - நெடிய, தேரோடும் - இரதத்துடனே, பரிதிவானவன் - சூரியதேவன், உரவுநீர் - உவர் நீரையுடைய, கருங்கடல் - கறுத்த சமுத்திரத்தில், ஒளித்திட்டான் - மறைத்தான் எ-று. 15

மாயிருஞாலமும்வானு நுங்கிய
பாயிருட்கங்குலிற்பாவைதன்னெடும்
போயரின்முற்றியபொலிவின்மண்டப
மேயினனரசர்கோன்விதியின்கொட்பினுல்.

இ-ள். மா - மகத்தாகிய, இரு - பெரிய, ஞாலம் - பூமியையும், வானும் - ஆகாயத்தையும், நுங்கிய - விழுங்கிய, பாய் - பரவிய, இருள் - இருட்டையுடைய, கங்குலில் - இராத்திரியில், பாவைதனெடும் - தமயந்தியுடனே, போய் - சென்று, அரில் - தூறுகள், முற்றிய - நிறைந்த, பொலிவு இல் - சிறப்பற்ற, மண்டபம் - ஓர் மண்டபத்தை, அரசர்கோன் - இராசாதி ராசனாகிய நளமகாராசன், விதியின் - வினையினது, கொட்பினுல் - திரிபினுல், மேயினன் - அடைந்தான் எ-று. 16

இன்னகிற்புகைதவழ்ந்தினிதின்மென்மைய
பன்மலரமளிமேற்பள்ளிகொள்பவர்
புன்னுனிபரந்தவெம்பொடிகொள்பார்மிசை
மன்னினரூழினும்வலிதியாவதே.

இ-ள். இன் - இனிதாகிய, அகில் புகை - அகிற்றூமம், தவழ்ந்து - ஊர்ந்து, இனிதின் - இன்பமாய், மென்மைய - மிருதுவாகிய, பல் - நாநாவிதமான, மலர் - புட்பம்பரப்பிய, அமளிமேல் - படுக்கையின்மீது, பள்ளிகொள்பவர் - சயனிப்பவராகிய (தமயந்தி நளனிருவரும்), புல் - புல்லினது, நுனி - நுனிகள், பரந்த - பரவிய, வெம் - வெவ்விய, பொடிகொள் - புழுதியைக் கொண்ட, பார்மிசை - பூமியின்மேல், மன்னினர் - படுத்தார்கள் (ஆதலால்), ஊழினும் - ஊழினைக்காட்டிலும், வலிது - வன்மையையுடையது, யாவது - யாது எ-று. 17

அனிச்சமென்புதுமலரமளிமேயினும்
பனித்திடுமெய்யெனப்பதைத்துவாடுவேன்
கனிப்படுகிளவிவெம்பொடியிற்கண்படி
னினித்தமியேனுயிரெங்ஙனுய்யுமே.

இ-ள். அனிச்சம் - அனிச்சம் விருக்கத்தினது, மெல் - மிருதுவாகிய, புதுமலர் - புதிய மலரையுடைய, அமளி - மெத்தையிலே, மேயினும் - படுத்தாலும், மெய் - சரீரமானது, பனித்திடும் என - வருந்துமென்று, பதைத்து - அடித்து, வாடுவேன் - சோர்வேன், கனிப்படு - பழச்சுவைபொருந்திய, கிளவி - வசனத்தையுடைய தமயந்தி, வெம்பொடி - வெவ்விய புழுதியில், கண்படில் - நித்திரைசெய்தில், இனி - இனிமேல், தமியேன் உயிர் - தனியாகிய என்னுயிர், எங்ஙன் - எப்படி, உய்யும் - பிழைக்கும் எ-று. 18

கண்ணகன் புவிக்கெலாங்களிர் சுஞ்சிய
தண்மதிநெடுங்குடைவிதர்ப்பன் சூழ்குழ
னண்ணருமித்துயருழந்துணணுமே
லெண்ணிமற்றியார்துயரெய்திடாரென்றான்.

இ-ள். கண் அகன் – இடமகன்ற, புவிக்குஎலாம் – பூமிக்கெல்லாம், களைகணுகிய – ஆதாரமாகிய, தண் – குளிர்ந்த, மதி – சந்திரன்போன்ற, நெடு – நீண்ட, குடை – குடையையுடைய, விதர்ப்பன் – விதர்ப்பதேசத்தை யாளும் வீமராசனீன்ற, தாழ்குழல் – தமயந்தியானவள், நண்ண அரு – பொருந்துதற்கரிய, இத்துயர் – இந்தத் துன்பத்தை, உழந்து – வருந்தி, நண்ணுமேல் – அடையுமாஞல், எண்ணின் – நினைக்குமிடத்தில், யார் – எவர்கள், துயர் – துன்பத்தை, எய்திடார் – அடையார்கள், என்றான் – என்று சொன்னன் எ-று. 19

வளைகடலுலகினின்மன்னர்தாடொழ
வுளையரிப்பூந்தவிசுறையுமெம்பிரான்
முளரியாலெங்கணுமுற்றுமண்டபத்
தெளியர்போலிருத்திகாலென்றுவிம்மினாள்.

இ-ள். வளைகடல் – சமுத்திரஞ்சூழ்ந்த, உலகினில் – உலகத்தில், மன்னர் – அரசர்கள், தாள்தொழ – பாதத்தில்வணங்க, உளை – புறமயிரையுடைய, அரி – சிங்கந்தாங்கிய, பூந்தவிசு – அழகுபொருந்திய ஆசனத்தில், உறையும் – இருக்கும், எம்பிரான் – எம் கர்த்தன், முளரியால் – முட்செடிகளால், எங்கணும் – எவ்விடத்தும், முற்றும் – நிறையப்பெற்ற, மண்டபத்து – மண்டபத்தில், எளியர்போல் – வறியோர்போல், இருத்தி – இருக்கிறாய், என்று – என்றுசொல்லி, விம்மினாள் – அழுதாள் எ-று. கொல் – அசை. 20

தடங்கணீர்துடைத்துமெய்தைவந்தாயிழை
நடுங்கலென்றூற்றிடநள்ளியாமத்து
மடங்கல்போன்பொய்ம்புடைமன்னர்மன்னவன்
கொடுங்கைமேற்றுயின்றனள்பொன்னங்கொம்பனாள்.

இ-ள். தட – விசாலமாகிய, கண் – கண்ணினின்றுவரும், நீர் – சலத்தை, துடைத்து – மாற்றி, மெய் – தேகத்தை, தைவந்து – தடவிக்கொடுத்து, ஆயிழை – பெண்ணே, நடுங்கலென்று – அஞ்சாதேயென்று, ஆற்றிட – தேற்ற, நள்ளியாமத்து – அர்த்தராத்திரியில், மடங்கல்போல் – சிங்கம்போல், மொய்ம்பு உடை – பலத்தையுடைய, மன்னர் மன்னவன் – அரசர்க்கரசனனளமகாராசனுடைய, கொடுங்கைமேல் – வளைந்த கையின்மீது, பொன்னங்கொம்பு அனாள் – அழகிய பொற்கொம்பையொத்த தமயந்தி, துயின்றனள் – நித்திரை செய்தாள் எ-று. 21

கான்புகுபடல முற்றிற்று.

செய்யுள் - 1037.

பிரிவுறுபடலம்.

இப்படலத்தாற் கானிடத்துச்சென்ற நளமகாராசன் அவ்விடத்தில் தமயந்திபடும் பெருந்துன்பத்தைக்கண்டு சகிக்காதவனாய் அதற்குக் காரணந் தானாகையால் தான்பிரிந்தால் அவள் சிறுதுயருடன் அருகிலுள்ள தன் தாய்வீட்டை யடைவாளென் றெண்ணிப் பிரிவுறல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

விண்படுமின்னென மிளிரும்மாகமும்
மண்படத்துயரொருவடிவுகொண்டெனக்
கண்படுதோகையைநோக்கிக்காவலன்
புண்படுநெஞ்சொடும்புலம்பியெண்ணினான்.

இ-ள். விண்படு — மேகத்தினு லுண்டாகிய, மின் என — மின்னல் போல், மிளிரும் - பிரகாசிக்கும், ஆகமும் — சரீரமும், மண்பட - புழுதியடைய, துயர் — துன்பம், ஒருவடிவம் - ஒருவடிவத்தை, கொண்டு என - கொண்டதுபோல, கண்படு - நித்திரைசெய்யாகின்ற, கோதையை — தமயந்தியை, நோக்கி — பார்த்து, காவலன் - நளமகாராசன், புண்படு - புண்பட்ட, நெஞ்சு ஒடும் — மனதுடனே, புலம்பி - அரற்றி, எண்ணினான் - ஆலோசித்தான் எ-று. 1

நண்ணருங்கானெலாந்தொடர்ந்துநண்ணுமேற்
கண்ணினுலிவடுயர்காணலாவதே
பெண்ணருங்கலத்தினேப்பிரியற்றந்தையூ
ரண்ணியதல்வுழியடைந்துவைகுமால்.

இ-ள். நண்ணரு - பொருந்துதற்கரிய, கான் எலாம் — காடுமுழுதும், தொடர்ந்து — பின்தொடர்ந்து, நண்ணுமேல் — அடையுமாஞல், கண்ணினுல் — கண்களினுல், இவள் — இத்தமயந்தியினது, துயர் — துன்பத்தை, காணல் ஆவதே - பார்க்கக்கூடுமோ, பெண் அருங்கலத்தினே — பெண்களுக்கரிய ஆபரணம்போன்ற இவளை, பிரியில் — நீங்கில், தந்தை — பிதாவினுடைய, ஊர் — நகரமானது, அண்ணியது — சமீபமாயது, அவ்வுழி — அந்நகரத்தினிடத்து, அடைந்து - சேர்ந்து, வைகும் — இருப்பாள் எ-று. 2

விரிமலர்ப்பூங்குழல்விழிக்கிலீங்கிவட்
பிரிகுவதரிதினிப்பிரியவெண்ணிலோ
மொருதுகிலாயதித்துகிலேயூறுசெய்
கருவியிங்கேதனக்கருத்தினெண்ணினான்.

இ-ன். விரி — மலர்ந்த, மலர் — புட்பத்தையணிந்த, பூ — பொலிவு பெற்ற, குழல் — கூந்தலையுடைய தமயந்தி, விழிக்கில் — கண்விழித்துக் கொண்டால், ஈங்கு — இவ்விடத்தில், இவள் — இவளே, பிரிகுவது — நீங்குவது, அரிது — கூடாது, இனி — இனிமேல், பிரிய — இவளே நீங்க, எண்ணிலோ — ஆலோசிக்கிலோ, ஒருதனில் ஆயது — (இருவருக்கும்) ஓாடையாயிருக்கின்றது, இத்தனிலை — இவ்வத்திரத்தை, ஊறுசெய் — துணிக்கின்ற, கருவி — ஆயுதம், இங்கு — இவ்விடத்தில், எதுஎன — யாதென்று, கருத்தின் — மனதில், எண்ணினான் — ஆலோசித்தான் எ-று. 3

எண்ணியதுணர்ந்திவர்ப்பிரிப்பமுன்னமே
கண்ணியவஞ்சகக்கலியும்வாளதாய்
நண்ணிமுற்கிடத்தலுமெடுத்துநாமமே
லண்ணலுந்துணெனடுவிரிந்திட்டானரோ.

இ-ள். எண்ணியது — ஆலோசித்ததை, உணர்ந்து — அறிந்து, அவர் — அவ்விருவரையும், பிரிப்ப — பிரிக்க, முன்னமே — முன்னரே, கண்ணிய — கருதிய, வஞ்சகம் — கபடத்தையுடைய, கலியும் — கலிபுருடனும், வாளதாய் — வாளாகி, நண்ணி — பொருந்தி, முன் — எதிரில், கிடத்தலும் — இருந்த அளவில், எடுத்து — கையிலெடுத்து, நாமம் — அச்சத்தைத்தரும், வேல் — வேலையுடைய, அண்ணலும் — நளனும், தனில் — வத்திரத்தை, நடு — மத்தியில், அரிந்திட்டான் — அரிந்தான் எ-று. 4

சில்லரிநெடுங்கணெருவுறுவகை
மெல்லெனக்கொடுங்கையினீக்கிவெய்துயிர்த்
தொல்லையிலுயிர்விடுமுடம்புபோன்மென
வல்லலங்கடலிடையழுந்தினனரோ.

இ-ள். சில் — சிலவாகிய, அரி — அரிபரந்த, நெடு — நீண்ட, கணை — கண்களையுடைய தமயந்தி, தெருள்உறுவகை — விழிக்காதவிதமாய், மெல்என — மிருதுவாக, கொடுங்கையின் — வளைந்தகையினின்றும், நீக்கி — அகற்றி, வெய்து உயிர்த்து — பெருமூச்சுவிட்டு, ஒல்லையில் — சிக்கிரத்தில், உயிர் — பிராணனை, விடும் — நீக்கும், உடம்புபோன்மென — தேகத்தைப்போல, அல்லலங்கடலிடை — துக்கசாகரத்தில், அழுந்தினன் — முழுகினன் எ-று. அரோ — அசை. 5

நீழுமகன்றுளினியென்கொலாமென
வழுமுயிர்துறந்தெனவவசமேற்கொளா
விழுமிவட்காக்கெனமெலித்துதெய்வதந்
தொழுமினையனபலதுன்பமெய்துமால்.

இ-ள் எழும் — எழுந்திருப்பான், அகன்றுள் — நீங்கினால், இனி — இனிமேல், என்கொலாம் என — என்னவாகுமோவென்று, அழும் — புலம்புவான், உயிர்துறந்தென — உயிர் நீங்கினவன்போல, அவசமேற்கொளா — பரவசத்

தைமேற்கொண்டு, வீழும் – வீழ்வான், இவள் – இவளே, காக்க என-இரட்
சிக்கவென்று, மெலிந்து – வாடி, தெய்வதம் – வனதேவதைகளே, தொழும்-
வணங்குவான், இனையன – இவைபோன்ற, பல – அநேகமான, துன்பம்-
துயரங்களே, எய்தும் – அடைவான் எ-று. 6

செல்லும்வெந்துயரொடுஞ்செல்லக்காலெழாத்
தொல்லையின்மீளும்வெய்துயிர்க்குமொண்ணுதல்
கல்லதரிடைத்தனியேகிற்பேய்க்கணங்
கொல்லுமென்றுருயிர்குழைந்துசாம்புமால்.

இ-ள். செல்லும் – நடப்பான், வெம்துயரொடும் – வெவ்விய துக்கத்து
டன், செல்ல – நடக்க, கால் எழாது – அடியெழும்பாமல், ஒல்லையில் – சீக்கி
ரத்தில், மீளும் – திரும்புவான், வெய்த உயிர்க்கும் – பெருமூச்சுவிடுவான்,
ஒள் நுதலே – ஒள்ளிய நெற்றியையுடைய தமயந்தி, கல் அதரிடை – மலை
வழியில், தனி – தனியே, ஏகில் – செல்வாளானால், பேய்க்கணம் – பிசாசுக்
கூட்டங்கள், கொல்லும் என்று – கொன்று விடுமென்று, ஆர்உயிர் – நிறை
ந்தவுயிர், குழைந்து – குழைவுற்று, சாம்பும் – வாடுவான் எ-று. ஆல்-அசை.
இதுதன்மை கவிற்சியணி. 7

ஆயிடையின்னணம்வருந்தியன்புகூர்
வேயுறழ்தோளியைப்பிரிந்துவெஞ்சின
மாயவெங்கொடுங்கலிவயத்தனுகலிற்
போயினன்பித்தரிற்பொருவில்வாய்மையான்.

இ-ள். ஆயிடை – அவ்விடத்தில், இன்னணம் – இப்படியாக, வருந்தி-
துன்புற்று, அன்புகூர் – ஆசைமிகுந்த, வேய் உறழ் – மூங்கிலையொத்த,
தோளியை – தோளையுடைய தமயந்தியை, பிரிந்து – நீங்கி, வெஞ்சினம்-
வெவ்வியகோபத்தையும், மாயம் – வஞ்சனையும், வெம் – குரூரமான, கொடு-
கொடுமையையுடைய, கலி – கலியனுக்கு, வயத்தன் ஆகலின் – வசப்பட்டவ
னதலால், பொரு இல் – ஒப்பற்ற, வாய்மையான் – சத்தியத்தையுடையனள,
பித்தரின் – பித்தரைப்போல், போயினன் – போனன் எ-று. 8

நள்ளிருட்போதுவெங்கானினுமவே
லள்ளிலைப்பூணினனகன்றுபோதலும்
விள்ளருந்துயரொடுமெலிந்துகண்படும்
பிள்ளைமாலெனக்கிதன்செய்கைபேசுவாம்.

இ-ள். நள் இருள்போது – நடுராத்திரியில், வெங்கானில் – வெவ்விய
காட்டில், நாமவேல் – அச்சத்தைச்செய்யும் வேலையும், அள்-கூர்மைபொரு
ந்திய, இலை – தொங்கலையுடைய, பூணினன் – ஆபரணத்தையுமுடைய நள
மகாராசன், அகன்று – நீங்கி, போதலும் – போனவளவில், விள் அரு – நீங்
குதற்கரிய, துயரொடு – துன்பத்துடனே, மெலிந்து – மெலிந்து, கண்படு-நித்
திரை செய்கின்ற, பிள்ளைமான் – மான்கன்றுபோன்ற, நோக்கிதன் – கண்

களையுடைய தமயந்தியினது, செய்கை - நடக்கையை, பேசுவாம் - சொல்லுவோம் எ-று. 9

நீடியதுயில்சிறிதுணர்ந்துநேரிழை
யாடகத்தொடிக்கையால்வணக்கக்காண்கிலா
ளூடினள்பதைத்தனளுயிர்ப்புவீங்கின
டேடினள்காந்தளஞ்செங்கைநீட்டினே.

இ-ள். நீடியதுயில் - மிகுந்த நித்திரை, சிறிதுணர்ந்து-கொஞ்சந்தெளிந்து, நேரிழை – தமயந்தி, ஆடகம்தொடி-பொன்னுற்செய்த வளையலணிந்த, கையால் – கைகளால், அணைக்க - தழுவ, காண்கிலாள்-காணாதவளாய், ஊடினள் – பிணங்கினாள், பதைத்தனள்-துடித்தாள், உயிர்ப்புவீங்கினள் – பெருமூச்சுவிட்டாள், காந்தள் - கார்ந்தள் மலரையொத்த, அம்-அழகிய, செங்கை-சிவந்தகையை, நீட்டி – நீட்டி, தேடினள் – தேடினாள் எ-று. இது தன்மை நவிற்சியணி. 10

ஆயிடைக்காண்கிலாதழுங்கிச்செங்கடை
பாயரிநெடுங்கணீருகுவிபாய்தரத்
தூயமென்மலர்க்கரநெரித்துத்துண்ணென
வாய்வெரீஇபால்வயிறதுக்கிமாழ்கினாள்.

இ-ள். ஆ இடை – அவ்விடத்தில், காண்கிலாது - (நளனைக்) காணாமல், அழுங்கி – வருந்தி, செங்கடை – சிவந்தகடையையுடைய, பாய-பாவிய, அரி - அரிகளையுடைய, நெடு – நீண்ட, கண் – கண்ணினின்றும், நீர்அருவி – நீர்வெள்ளம், பாய்தர – ஒழுக, தூய – பரிசுத்தமாகிய, மெல்-மிருதுபொருந்திய, மலர்க்கரம் – தாமரைமலர்போன்ற கைகளை, நெரித்து-நெரித்து, துண்ணென – திடுக்கென்று, வாய்வெரீஇ – கூச்சலிட்டு, ஆல்-ஆலிலைபோன்ற, வயிறு - வயிற்றை, அதுக்கி – பிசைந்து, மாழ்கினாள்-மயங்கினாள் எ-று.

ஆயிடை என்பதற்கு முன்னுரைத்தாங்கு உரைக்க. காண்கிலாது-எதிர்மறை வினையெச்சம். பாய்தர – இதன்கண்தா, துணை வினைவிகுதி. துண்ணென – விரைவுக்குறிப்பைத் தருவதோரிடைச்சொல். வெரீஇ-சொல்லிசை யளபெடை. ஆல் – பொருளாகு பெயராய் இலைக்கு ஆயிற்று.

தெளித்தபூம்பள்ளியிற்சிறிதுநீங்கினு
மளப்பருந்துயரொடுமலமெய்துவேன்
றளிப்பெயற்கங்குலிற்றமியண்மாற்குற
வொளித்துநீதனிவிளையாடலுய்வனே.

இ-ள். தெளித்தபூ – புட்பங்களைப் பரப்பிய, பள்ளியில் - சயனத்தில், சிறிது – கொஞ்சம், நீங்கினும் – விலகினாலும், அளப்பரு – அளவிடுதற்கரிய, துயர் ஒடும் – துன்பத்துடன், அவலம் – வருத்தத்தை, எய்துவேன்-

அடைகின்றயான், தளிப்பெயல் - பனித்துளி துளிக்காகின்ற, கங்குலில்- இராத்திரியில், தமியள் - தனித்தவளாய், மாழ்குஉற - வருந்த, நீ ஒளித்து- நீமறைந்து, தனி - தனியாய், விளையாடில் - விளையாடினால், உய்வனே- யான் பிழைப்பனே எ-று. 12

கொச்சகக்கலிப்பா.

கான்றருயிரொழுகக்கண்ணீர்கவுளலைப்ப
வூன்றுய்க்கணைபட்டுழலும்பிணையொத்தேன்
மான்றேரரசர்முடியுமுழுதவர்கழற்காற்
றோன்றலென்கண்களிப்பவின்னமுமென்றோன்றிலையே.

இ-ள். கான்று - வெளிப்பட்டு, ஆர்உயிர் - பொருந்தியவுயிர், சோர- நீங்க, கண்ணீர் - கண்ணீரானது, கவுள் - கன்னத்தை, அலைப்ப - அலைக்க, ஊன்தோய் - தசைபடிந்த, கணைபட்டு - அம்புபட்டு, உழலும் - சுழலா கின்ற, பிணை ஒத்தேன் - மானுக்கொப்பானேன், மான்தேர் - குதிரை கட்டிய தேரையுடைய, அரசர் - அரசருடைய, முடி - கிரீடங்கள், உழுத- படிந்த, வார் - நெடிய, கழல் - வீரக்கழலத்தரித்த, கால் - பாதத்தை யுடைய, தோன்றல் - அரசனே, என் - என்னுடைய, கண்களிப்ப - கண் மகிழ்ச்சியடைய, இன்னமும் - இந்நேரமட்டும், என் - என்னகாரணத் தினால், தோன்றிலை - காணப்படவில்லை எ-று. 13

கோலார்போரேறேறிடதத்தார்கோமானே
யாரவரைமார்பாவளியேனுயிர்க்குயிரே
காரிருள்வாயான்புலம்பக்கானகத்துவிட்டகன்றுஞ்
சாரலையாலின்னுமிதுவோதின்றண்ணளியே.

இ-ள். கோலார் - பகைவர்க்கு, போர்ஏறே - போர்செய்கின்ற சிங் கமே, நிடதத்தார் - நிடததேசத்தார்க்கு, கோமானே - அரசனே, ஆரம்- முத்துமாலையணிந்த, வரைமார்பா - மலைபோன்ற மார்பையுடையவனே, அளியேன் உயிர்க்கு - ஏழையாகிய என்னுயிர்க்கு, உயிரே - உயிர்போன்ற நளமகாராசனே, காரிருள்வாய் - கரியவிருளினிடத்தில், யான் - நான், புலம்ப - புலம்பும்படி, கானகத்து - காட்டினிடத்தில், விட்டு அகன்றும்- என்னைநீங்கியும், இன்னும் - இவ்வளவுகாலஞ் சென்றபின்பும், சாரலை- சேர்த்தாயில்லை, (ஆதலால்) இதுவோ - இதுதானே, நின் - உன்னுடைய, தண்ணளி - குளிர்ந்தவருள் எ-று. ஆல் - ஏ - அசை. 14

நெஞ்சமெலிவேனினதுதடந்தோளுங்
கஞ்சமலர்முகமுங்காணுதுகண்பனிப்ப
மஞ்சுதவழ்வெற்பெறிந்தவச்சிரத்தோனன்றளித்த
விஞ்சைபயின்றவிளையாட்டையருதியோ.

இ-ள். நெஞ்ச மெலிவேன் - மனம் வாடுகின்ற யான், நினது - உன்னுடைய, தடதோளும் - விசாலமாகிய தோள்களையும், கஞ்சம்-

தாமரைமலர்போன்ற, முகமும் – வதனத்தையும், காணுது – பாராமல்-கண்பனிப்ப – கண்ணீர்விடும்படி, மஞ்சுதவழ் – மேகங்கள் தவழ்கின்ற, வெற்பு – மலைகளின் (சிறகை), எறிந்த – அறுத்த, வச்சிரத்தோன் – வச்சிராயுதத்தை யேந்திய இந்திரன், அன்று – தூதுசென்ற வன்று, அளித்த-கொடுத்த, விஞ்சை – வித்தையை, பயின்று – பழகி, விளையாட்டு அயருதியோ – விளையாடுகின்றீரோ எ-று. 15

ஞாலத்திருணடப்பநாட்கமலம்வாய்கெகிழ
வேலைத்திரைமுகட்டில்வெய்யோனெழுந்தனனன்
மாலைக்கதிர்வடிவேன்மன்னர்பெருமானே
காலைக்கடவகடன்கடக்கவாராயே.

இ-ள். ஞாலத்து – பூமியிலுள்ள, இருள் – அந்தகாரமானது, நடப்ப-செல்லவும், நாள் – புதிய, கமலம் – தாமரைமுகைகள், வாய்கெகிழ-மலரவும், வேலை – கடலினது, திரை – அலைகளினது, முகட்டில் – உச்சியில், வெய்யோன் – சூரியன், எழுந்தனன் – உதித்தான் (ஆதலால்), மாலை – வெற்றி மாலை யணிந்த, கதிர் – ஒளிபொருந்திய, வடி – கூரிய, வேல் – வேலாயுதத்தையேந்திய, மன்னர் பெருமானே – அரசர்க் கரசனாகிய நளமகாராசனே, காலை – உதயத்தில், கடவ – செய்யத்தக்க, கடன் – நித்திய கன்மத்தை, கழிக்க – செய்து முடிக்க, வாராயே – வாராயா எ-று. ஏ – அசை. 16

மன்னவனேயிப்பிறப்பிற்கண்டுமணந்திலனே
யின்னமொருபிறப்பிலாலுமேழையேன்
றன்னந்தனியேயிருந்துதவமாற்றியுமுன்
பொன்னகலமுள்ளுருகப்புல்லாதொழிவேனே.

இ-ள். ஏழையேன்-ஏழையாகிய யான், மன்னவனே-நளமகாராசனே, இப்பிறப்பில் – இந்தச்சனனத்தில், கண்டு – (உன்னை) கண்டு, மணந்திலனேல் – சேராமற் போவேனாயின், இன்னம் – இனிமேல் (வருஞ்சனனங்களுள்), ஒருபிறப்பில் ஆனாலும் – ஒரு சனனத்திலாவது, தன்னம் தனியேயிருந்து – தனித்திருந்து, தவம் ஆற்றியும், தவத்தைச் செய்தாவது, உன்-உன்னுடைய, பொன் அகலம் – அழகுபொருந்தியமார்பம், உள்உருக-உள்ளமுருகும்படி, புல்லாது – தழுவாமல், ஒழிவேனே – நீங்குவேனா எ-று. 17

வாவுமிளமான்காண்மயில்காண்மடப்பிடிகாள்
கூவுங்கரியகுயில்காண்மென்புள்ளினங்கா
ளாவியென்மேவியகலேமெனவகன்ற
காவலன்முன்போனவழியெனக்குக்காட்டீரே.

இ-ள். வாவும் – தாவாநின்ற, இளமான்காள் – இளமை தங்கிய மான்களே, மயில்காள் – மயில்களே, மடப்பிடிகாள் – அழகிய பெட்டை யானைகளே, கூவும் – கூவுகின்ற, கரிய குயில்காள்-கருங் குயில்களே, மெல்-மென்மையாகிய, புள் இனங்காள் – பறவைக் கூட்டங்களே, ஆவி என – உயிரைப்

போல, மேவி - பொருந்தி, அகலேம் என - பிரியோமென்றுசொல்லி, அகன்ற - (இப்பொழுது) நீங்கிய, காவலன்றூன் - நளமகாராசன், போனவழி-சென்றவழியை, எனக்கு - என்றனுக்கு, காட்டீரே - நீங்கள் காட்டீரா.

என்னுவருகியிருகண்ணீராவியுகத்
தன்னுத்தழும்பப்புலம்பித்தமியளாய்
மின்னிடைநுடங்கச்செல்வாள்விறல்வேந்தன்
பொன்னடிநோக்கிப்பூங்கொடிபோல்வீழ்ந்தழுதாள்.

இ-ள். என்னு - இப்படியென்று, உருகி - மனமுருகி, இருகண் - இரண்டு கண்களினின்றும், நீர் ஆவி - நீர்த்துளிகள், உக-உதிர, தன்நா - தன்னுடைய நாவானது, தழும்ப - தடிப்புறும்படி, புலம்பி-அரற்றி, தமியளாய்-தனித்தவளாய், மின் - மின்னலின்றன்மை, ஆர் - நிறைந்த, இடை-இடையானது, நுடங்க - அவள, செல்வாள்-நடக்கின்ற தமயந்தியானவள், விறல்-வெற்றிபொருந்திய, வேந்தன் - நளமகாராசனது, பொன் ஆர் - அழகுபொருந்திய, அடி - பாதக்குறியை, நோக்கி - பார்த்து, பூங்கொடிபோல் - புட்பக்கொடிபோல், வீழ்ந்து - அதில் வீழ்ந்து, அழுதாள் - புலம்பினள் எ-று.

ஐயன்கமலவடிச்சுவடுகாண்டலுமே
வெய்யதுயரவிடமீதூரவாய்புலராச்
செய்யகமலமலரிற்றிருவனையாள்
கையறவாநெஞ்சங்கலுழாவியுயிர்சோர்ந்தாள்.

இ-ள். ஐயன் - நளமகாராசனுடைய, கமலம் அடிச்சுவடு - தாமரைமலர்போன்ற பாதக்குறியை, காண்டலும் - கண்டவளவில், வெய்ய-கொடிய, துயரவிடம் - துன்பமாகிய நஞ்சு, மீதூர-அதிகரிக்க, வாய் புலராவாயுலர்ந்து, செய்ய - சிவந்த, கமலமலரில்-தாமரைப் புட்பத்திலிருக்கின்ற, திரு அனையாள் - இலக்குமியையொத்த தமயந்தியானவள், கையறவா-செயலற்று, நெஞ்சம்கலுழா - மனங்கலங்கி, உயிர் சோர்ந்தாள் - மூர்ச்சித்தாள்.

இவ்வாறு துன்பக்கடலினிடைமூழ்கு
மைவார்தடங்கண்மடமாதின்செவ்விமுகஞ்
செவ்வாண்மதியமெனச்செங்கட்டுளையெயிற்று
வெவ்வாயரவமுருத்துவிழுங்கியதே.

இ-ள். இவ்வாறு - இந்தவிதமாய், துன்பம் கடலினிடை - துன்பக்கடலில், மூழ்கும் - அழுந்திய, மை - அஞ்சனமெழுதிய, வார் - நெடிய, தடவிசாலமாகிய, கண் - நேத்திரங்களையும், மடம் - அறியாமையுமுடையமாதின் - தமயந்தியினது, செவ்வி - அழகுபொருந்திய, முகம் - வதனத்தை, செம் வாய் - செவ்வையாகிய வெளுத்த, மதியம் என - சந்திரனென்று (எண்ணி), செம் கண் - சிவந்த கண்களையும், கூள எயிற்று-ஆவாரம்பொருந்திய பற்களையுடைய, வெம் வாய் - வெவ்விய வாயையு

முடைய, அரவம் – மலைப்பாம்பு, உருத்து – கோபித்து, விழுங்கியது-விழுங்கிற்று எ-று. ஈண்டு மதிக்குச்செவ்வை நிறைவெனக்கொள்க. எ-அசை. 21

நெய்த்தோரின்மூழ்கிநிணம்பருகும்வைவேலோய்
பைத்தோர்கொடுந்தறுகட்பாந்தள்விழுங்கியதா
லெய்த்தேனுயிர்காத்தற்கெய்தாயெனவழுதாண்
மைத்தோய்குவளைமதர்நெடுங்கண்வாணுதலே.

இ-ள். நெய்த்தோரில் - உதிரத்தில், மூழ்கி – குளித்து, நிணம் – மாமிசத்தை, பருகும் - புசிக்காநின்ற, வை – கூர்மை பொருந்திய, வேலோய்-வேலாயுதத்தையுடைய நளமகாராசனே! பைத்து - படத்தை யுடையதாகிய, ஓர் - ஒரு, கொடும் தறு கண் – கொடிய கோபத்தையுடைய, பாந்தள் – மலைப்பாம்பானது, விழுங்கியது – (என்னை) விழுங்கியது, எய்த்தேன் - இளைத்த என்னுடைய, உயிர்காத்தற்கு – உயிரைக் காப்பதற்கு, எய்தாய் – வாராயோ, என – என்று, மைத்தோய் – அஞ்சனந் தோய்ந்த, குவளை – கருநெய்தல்போன்ற, மதர்நெடுங் கண் – குளிர்ச்சி பொருந்திய நெடியகண்களையுடையவள், வாள்நுதல் – தமயந்தியானவள், அழுதாள் – புலம்பினள் எ-று. 22

பொங்கழல்வெங்கானகத்துப்பூவையழுங்குரல்கேட்
டங்கோர்சிலைக்கையடல்வேடன்வந்தணுகி
வெங்கணரவெறிந்துவெவ்வாயிடைநின்றுங்
கொங்கவிழுமென்கூந்தற்கோதைதனைநீக்கினனால்.

இ-ள். பொங்கழல் – மிகுந்த வக்கினியையுடைய, வெம் - வெப்பமாகிய, கானகத்து - காட்டினில், பூவை – தமயந்தியானவள், அழும்-புலம்புகின்ற, குரல் கேட்டு – சத்தத்தைக்கேட்டு, அங்கு – அவ்விடத்தில், ஓர் – ஒரு, சிலைக்கை – வில்லைக்கையிலேந்திய, அடல் – பலம்பெருந்திய, வேடன் – வேடனானவன், வந்து அணுகி - வந்து சேர்ந்து, வெம்கண்-வெவ்விய கண்களையுடைய, அரவு - மலைப்பாம்பை, எறிந்து – பிளந்து, வெவ்வாயிடை நின்றும் – வெவ்விய வாயினிடத்து னின்றும், கொங்கவிழ்-வாசனை வீசாநின்ற, மென் கூந்தல் – மென்மையாகிய கூந்தலையுடைய, கோதை தனை – தமயந்தியை, நீக்கினன் - விடுவித்தான் எ-று. ஆல்-அசை. 23

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெய்யவரவின்பருவாயின்விடுத்தமடம்மானெழிலுண்கண்
மையல்கூர்ந்தநெஞ்சினனுய்வரிவிற்றடக்கைவயவேடன்
மெய்யின்முலைமேற்புல்லுதற்குத்தொடரத்துஞ்சாவருங்கற்பின்
றையன்முனிந்துநோக்குதலுஞ்சாம்பராயிற்றவனுடலே.

39

இ-ள். வெய்ய - கொடியதாகிய, அரவின் - மலைப்பாம்பினது, பகு வாயின் - பிளப்பாகிய வாயினின்றும், விடுத்த - விடுவிக்கப்பட்ட, மட மான் - தமயந்தியினது, எழில் - அழகை, நோக்கி - பார்த்து, மையல் கூர்ந்த - மோகித்த, நெஞ்சினனுய் - மனமுள்ளவனுய், வரிவில் - நீண்ட வில்லேயேந்திய, தடகை - விசாலமாகிய கையையுடைய, வயம் - வெற்றி பொருந்திய, வேடன் - வேடனனவன், தொய்யில் - சந்தனக்கோலமணிந்த, முலைமேல் - தனங்களின்மேல், புல்லுதற்கு - அணைதற்கு, தொடர - பின் தொடர, அஞ்சா - கெடாத, அரு - அருமையாகிய, கற்பின் - கற்பினை யுடைய, தையல் - தமயந்தியானவள், முனிந்து - கோபித்து, நோக்கு தலும் - பார்த்தமாத்திரத்தில், அவனுடல் - அவ்வேடனுடலம், சாம்பர் ஆயிற்று - நீருயிற்று எ-று. ஏ - அசை. 24

கற்பினழலாற்கொடுஞ்சிலைக்கைவேடனுடலங்கரியாக்கிப்
பொற்பின்றுரைபோய்நலங்கனிந்தபொன்னம்பாவைபுலம்பெய்தி
வெற்பினுயர்தோள்வேந்துசெலும்வெங்கான்றுருவிமேயதுதன
மற்பின்முனிவர்தவமியற்றுஞ்சாலைநோக்கியருகணைந்தாள்.

இ-ள். கற்பின் அழலால் - பதிவிரத அக்கினியால், கொடுஞ்சிலைக்கை - கொடிய வில்லைக் கையிலேந்திய, வேடனுடலம் - வேடன் சரீரத்தை, கரியாக்கி - சாம்பராக்கி, பொற்பின் துறைபோய் - அழகிற் சிறந்து, நலம் கனிந்த - நன்மை மிகுந்த, பொன்னம் பாவை - தமயந்தியானவள், புலம்பு எய்தி - அழுதுகொண்டு, வெற்பின் - மலைபோல், உயர் - உயர்ந்த, தோள் - புயத்தையுடைய, வேந்து - நளமகாராசன், செல்லும் - செல்லா கின்ற, வெங் கான் - வெவ்விய காட்டினில், தருவி - தேடிக்கொண்டு, ஏகு தலும் - போகுமளவில், அற்பின் - அன்பினையுடைய, முனிவர் - முனிவர் கள், தவம் இயற்றும் - தவஞ்செய்யாகின்ற, சாலை-பர்ணசாலையை, நோக்கி- பார்த்து, அருகு - அதனருகில், அணைந்தாள் - சேர்ந்தாள் எ-று. 25

அடைந்தமாதின்முகநோக்கியாரைநீவெவ்வழற்கானி
னடைந்ததனியேயித்தலையிற்போந்ததென்னைகொலினமலர்த் [ன
தடங்கண்கலுழ்ந்துபுலம்பெய்துந் தன்மையெவன்கொல்சாற்றுகெ
டடந்தைபுகுந்தவாறீனத்துமுனிவர்கேட்பவகுத்துரைத்தாள்.

இ-ள். அடைந்த - தம்மிடத்துவந்த, மாதின்-தமயந்தியினது, முகம்- வதனத்தை, நோக்கி - பார்த்து, யாரை நீ - நீயார், வெம் அழல்-வெவ்விய அழல்பொருந்திய, கானில் - காட்டினில், நடந்து - காலானடந்து, தனியே- தனிமையாகி, இத்தலையில் - இவ்விடத்தில், போந்தது என்னை - வந்த தென்ன காரணம், கொலின மலர் - தாமரைமலர்போன்ற, தடகண் - விசால மாகிய கண்கள், கலுழ்ந்து - கலங்கி, புலம்பு எய்தும் தன்மை - துன்பப்படு தல், எவன் கொல் - என்னகாரணம், சாற்றுக என - சொல்லென்று, முனி வர்கேட்ப - முனிவர்கள்கேட்க, மடந்தை - தமயந்தியானவள், புகுந்த ஆறு

அனைத்தும் – நடந்தவை யெல்லாம், வகுத்து – பிரித்து, உரைத்தாள்-(அவர்க்குச்) சொல்லினாள் எ-று. 26

கேட்டவளவி லுளமுருகிக்கிள்ளைமருட்டும்பனிமொழியாய்
வாட்டமொழிதிகிற்பிரிந்தவடிவேனளஞ்சின்னுளி
ஞட்டங்களிப்பக்கண்டுமுன்போனலம்பெற்றிருத்தியெனநவிலா
வீட்டுந்தவத்தோர்மறைக்கிழவரிருக்கைநோக்கியேகினரால்.

இ-ள். கேட்ட அளவில் - (இச்செய்தியைக்) கேட்ட மாத்திரத்தில், உளமுருகி – மனமுருகி, கிள்ளை – கிளிப்பிள்ளைகளை, மருட்டும் – வெருட்டாகின்ற, பனிமொழியாய் - குளிர்ந்த சொற்களையுடைய தமயந்தியே! வாட்டம் – சோர்வை, ஒழிதி – ஒழித்துவிடு, கிள் பிரிந்த – உன்னைப்பிரிந்த, வடிவேல் – கூர்மையுடைய வேலேந்திய, நளனை – நளமகாராசனை, நில் நாளில் – சிலநாளிலே, நாட்டம் களிப்ப – கண்கள்களிக்க, கண்டு – பார்த்து, முன்போல் நலம்பெற்றிருத்தி – முன்போல நன்மையையடைந்து இருப்பாயாகவென்று, நவிலா – ஆசீர்வதித்து, ஈட்டுந்தவத்து – தவஞ்செய்கின்ற, ஓர் - ஒப்பற்ற, மறைக்கிழவர் – அந்தணர்கள், இருக்கை நோக்கி – (தாங்களிருக்கு மாச்சிரமத்தைக் குறித்து, ஏகினர் – சென்றார்கள் எ-று. ஆல்-அசை. 27

பிரிந்தபசும்பொற்றிதலைமுலைப்பெய்பூங்கோதைபிணைபோல்வா
ளெதிர்ந்தவணிகர்வழித்துணையாவேகிக்கதிர்மாமணிவரன்றி
யதிர்ந்துபுனல்பாய்பேராற்றங்கரையினுறையுமரையிருளிற்
முதிர்ந்தசினத்துப்பிறைக்கோட்டுமூரிக்களிருன்றணுகியதால்.

இ-ள். பிதிர்ந்த – உதிர்ந்த, பசும்பொன்-பசியபொன்போன்ற, திதலை-தேமலையுடைய, முலை - தனங்களையும், பெய்பூங்கோதையர் - மலர்மாலையணிந்த கூந்தலையுமுடைய, பிணைபோல்வாள் – மான்போன்ற தமயந்தியானவள், எதிர்ந்த – எதிர்ப்பட்ட, வணிகர் – வர்த்தகர், வழித்துணையா – வழித்துணையாக, ஏகி – போய், கதிர்மாமணி - ஒளிபொருந்திய சிறந்தமணிகளை, வாரி - வாரிக்கொண்டு, அதிர்ந்த – இரைந்து, புனல்-சலமானது, பாய்-பெருகாகின்ற, பேராற்றங்கரையில் – பெரிய ஆற்றங்கரையினிடத்தில், உறையும் – வாசஞ்செய்கின்ற, அரை இருளில் – அர்த்தராத்திரியில், முதிர்ந்த – மிகுந்த, சினத்து – கோபத்தையுடையதும், பிறைக்கோடு – பிறைபோன்றகொம்புகளையுடையதுமாகிய, மூரி-வலிமையுடையது, களிறு ஒன்று-ஒருயானையானது, அணுகியது - வந்து நெருங்கிற்று எ-று. 28

அணுகியாங்குப்புலம்பெய்து மலர்பூங்கோதை மயிலொழிய, வணிகமாக்களியாவரையு மதமால்யானை கொன்றேகத், துணைவந்தடைந்தோர் யாவரையுந் தொலைத்துடைந்த பரூஉத்தடக்கை, யிணைவெண்கோட்டுக் களிறென்னை யென்கொல்லாத தெனக்கலுழ்ந்தாள்.

இ-ள். ஆங்கு – அவ்விடத்தில், அணுகி-வந்தடைந்து, புலம்பு எய்தும்-புலம்பாநின்ற, அலர் பூங்கோதை – மலர்ந்த பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய, மயில் – தமயந்தியானவள், ஒழிய – நீங்கலாக, வணிகமாக்கள் யாவரையும் - வர்த்தகரனைவரையும், மதம் – மும்மதம்பொருந்திய, மால்யானை-பெரிய யானையானது, கொன்று-கொலைசெய்து, எக-போகாநின்ற, தூணை-தூணையாக, வந்து அடைந்தோர் – வந்தடையப்பட்ட, யாவரையும் – அனைவரையும், தொலைத்து – கொன்று, நடந்த – சென்ற, பருஉத்தடக்கை-பருத்தகீண்ட துதிக்கையையும், இணை – இரண்டாகிய, வெள்-வெண்மை பொருந்திய, கோட்டு - கொம்புகளையுமுடைய, களிறு - யானையானது, என்னை - (தன்பப்படுகின்ற) என்னை, என் – என்னகாரணத்தினால், கொல்லாதது – சொல்லாமற்போயிற்று, என - என்று, சலுழ்ந்தாள்- புலம்பினாள் எ-று. 29

சாதலொழிந்தவழிச்செல்வோர்தூணபாவுள்ளந்தளர்வெய்திப்
பாதமலர்கொப்புளமெய்திப்பணிக்கப்பரல்வெங்கானிறந்து
கோதைவடிவேல்வலனேந்துகுவவுத்திணிதோட்சுவாகுவெனுஞ்
சேதிபதிதன்வளநகரிற்சென்றுள்விதர்ப்பன்சேயிழையே.

இ-ள். சாதல் ஒழிந்த - இறக்காமல்சேடித்துநின்ற, வழிச்செல்வோர்-வழியிற்செல்லுகின்ற பிராமணர்கள், தூணையா – சகாயமாகக்கொண்டு, உள்ளம்தளர்வெய்தி – மனங்கலங்கி, பாதமலர் - மலர்போன்ற பாதங்கள், கொப்புளம்எய்தி – கொப்புளித்து, பணிக்க – நீரொழுக, பரல் – பருக்கைகளையுடைய, வெம்கான் – வெவ்வியவதனத்தை, இறந்து – விட்டுநீங்கி, கோதை – வெற்றிமாலையணிந்த, வடிவேல் – கூர்மைபொருந்திய வேலாயுதத்தை, வலன் – வலப்புறத்தில், ஏந்து – தங்காநின்ற, குவவு - நிரட்சியையும், திணி – வலிமையையுமுடைய, தோள் – புயத்தையுடைய, சுவாகு எனும் – சுவாகுவென்னும் பெயரையுடைய, சேதிபதிதன் - சேதிதேசத்தரசனது, வளநகரில் – வளப்பம்பொருந்திய பட்டினத்தில், விதர்ப்பன் சேயிழை - தமயந்தியானவள், சென்றுள் – சேர்ந்தனள் எ-று. 30

தூளிபட்டொழிந்தமென்றுகிலுஞ்சுடர்விட்டொளிரமண்ணுத
மணியிற்றிருந்நிமாசடைந்தவடிவும்விரிந்தவார்குழலும்
பிணியுற்றுழலுநெஞ்சமுமாய்ப்பித்தேறினர்போற்கோமருகி
லணுகச்சேதிபதிதாயகண்டார்கொலிவளென்றையுற்றுள்.

இ-ள். தூளிபட்டு ஒழிந்த – தண்டிடப்பட்ட, மென்துகிலும் – மெல்லிய ஆடையும், சுடர்விட்டு ஒளிர – ஒளிவிட்டுவிளங்கும்படி, மண்ணுத-கழுவாத, மணி இன் – இரத்தினம்போல, தோன்றி – காணப்பட்டு, மாசடைந்த – அழுக்கடைந்த, வடிவும் – உடம்பும், விரிந்த – அவிழ்ந்த, வார்குழலும் – நீண்டகூந்தலும், பிணி உற்று – துன்பப்பட்டு, உழலும் – கலங்காநின்ற, நெஞ்சமும் - மன்மும், ஆய் – (ஆகிய இவைகளையுடையவளாய்), பித்து ஏறினர்போல் - பித்தர்போல், கோமறுகில் – இராசவீதியில்,

அணுக – (தமயந்தி) வர, சேதிபதி – சுவர்குவரசனது, தாய் – தாயானவள், கண்டு – தமயந்தியைக்கண்டு, ஆர்கொல் இவள் – இந்தப்பெண் யாரோ, என்று – என்று, ஐயுற்றாள் – சந்தேகித்தாள் எ-று. 31

பொன்னம்பாவையுடன்முழுதும்புகையுண்டென்னச்சவிமழுங்கு
மின்னுண்மருங்குற்சில்லோதியணங்கோவரசர்மடமகளோ
வென்னத்தெருளேனிங்கிவளேயீண்டுக்கொணர்கிரெனமருங்கின்
மன்னுமகளிர்தமைப்பணிப்பவிடைகொண்டவருமருகணைந்தார்.

இ-ள். பொன்னம்பாவை – பொற்பதுமையானது, உடல்முழுதும்–உடம்பு முழுமையும், புகை உண்டென்ன – புகையுண்டதுபோல, சவி மழுங்கும் – ஒளிமழுங்கிய, மின் – மின்னலையொத்த, நுண் – நுட்பமாகிய, மருங்குல் – இடையையுடைய, சில் ஓதி – இப்பெண், அணங்கோ – தெய்வப்பெண்ணே, அரசர்மடமகளோ – இராசகுமாரத்தியோ, என்ன – என்று, தெருளேன் – தெளியேன், ஈங்கு – இவ்விடத்தில், இவளை – இப்பெண்ணை, ஈண்டு – சீக்கிரத்தில், கொணர்கிர் – கொண்டுவாருங்கள், என – என்று, மருங்கில் மன்னும் – அருகிலுள்ள, மகளிர்தமை – பெண்களை, பணிப்ப – (அவ்வரசனது தாயானவள்) சொல்ல, விடைகொண்டு – உத்தரவு பெற்றுக்கொண்டு, அவரும் – அம்மாதர்களும், அருகு – தமயந்தி சமீபத்திலே, அணைந்தார் – வந்தார்கள் எ-று. 32

அடைந்தமாதர்தனிப்போந்தவணங்கின்கமலமுகநோக்கிக் [ய்
கடைந்தமணிச்செப்பெனப்புடைத்துக்கதித்துவீங்குவனமுலையா
படங்கொளரவின்முடிகிடந்தபார்தாங்கிறைவன்றனையீன்ற
மடந்தைவருகென்றனளென்னவான்றோய்மாடத்தினிதடைந்தாள்

இ-ள். அடைந்தமாதர் – வந்த பெண்கள், தனிப்போந்த – தனித்து வந்த, அணங்கின் – தமயந்தியினது, கமலமுகநோக்கி – தாமரை மலர் போன்ற முகத்தைப்பார்த்து, கடைந்த – கடைதலிடப்பட்ட, மணிச் செப்பு என – இரத்தின கும்பங்கள் போல, புடைத்து – அடிபரந்து, கதித்து – பருத்து, வீங்கும் – வளராநின்ற, வனமுலையாய் – அழகிய தனங்களையுடையபெண்ணே, படம்கொள் – படத்தைக்கொண்ட, அரவின் – ஆதிசேடனுடைய, முடி – முடியின்மேல், கிடந்த – இருந்த, பார் – பூமியை, தாங்கு – தாங்காநின்ற, இறைவன்தனை – சுவாகுராசனை, ஈன்ற – பெற்ற, மடந்தை – அவனது தாயானவள், வருக என்றனள் – (உன்னை) வரச்சொல்லினள், என்ன – என்று சொல்லாநிற்க, வான்தோய் – ஆகாயமளாவிய, மாடத்து – உபரிகையில், இனிது – இன்பத்தோடு, அடைந்தாள் – (தமயந்தியானவள்) சேர்ந்தாள் எ-று. 33

வந்தமடமான்முகநோக்கிவரிவண்டெப்பொழியவிழ்ந்த
வந்தண்கமலம்லர்கவற்றியழகுவாய்ந்தமுகப்பசப்பச்

சிந்தைதளர்ந்துதனிப்போதற்குற்றதெவன்கொல்சேயிழையா
யுந்தையாருன்றலைவனெவனுன்பேர்யாதிங்குரையென்றாள்.

இ-ள். வந்த — தன்னிடத்துவந்த, மடமான் — தமயந்தியினது, முக நோக்கி — முகத்தைப்பார்த்து, சேயிழையாய் — பெண்ணே, வரிவண்டு-இசைப்பாட்டினையுடைய வண்டுகள், ஊத — ஒலிக்க, பொதி அவிழ்ந்த - கட்டவிழ்ந்த, அந்தண்கமலமலர் - அழகிய குளிர்ந்தாமரைமலர்களை, கவற்றி-கவலச்செய்து, அழகு வாய்ந்த — அழகுபொருந்திய, முகம் — வதனமானது, பசப்ப — பசலைநிறமடைய, சிந்தைதளர்ந்து-மனந்தளர்ந்து, தனிப்போதற்கு-தனித்துவருதற்கு, உற்றது — பொருந்தியது, எவன் — யாது, உந்தை - உன்றகப்பன், யார் — எவன், உன் தலைவன் - உன்கணவன், எவன் - யார், உன் பேர் - உன்னுடைய நாடதேயம், யாது - எது, இங்கு — இவவிடத்தில், உரை என்றாள் — (அரசன்றாய்) சொல்லென்றாள் எ-று. 34

வீமன்புதல்விபுகழ்நிடதவேந்தர்கோமான்மனைக்கிழத்தி
நாமம்பகரிற்றமயந்தியென்பாடன்கோணண்ணலற்குக்
காமர்நிதியும்வளநாடுஞ்சூதினிழந்துகானிடைப்போ
யாமந்தனின்மற்றவட்பிரியவவளைத்தேடியீண்டுநைந்தேன்.

இ-ள். வீமன்புதல்வி — வீமராசன்மகள், புகழ் — புகழப்பட்ட, நிடத வேந்தர்கோமான் — நளமகாராசனது, மனைக்கிழத்தி - மனையாள், நாமம்பகரில் - பேர் கூறுமிடத்து, தமயந்தி என்பாள் — தமயந்தியென்று சொல்லப்படுவாள், தன்கோன் - அவளது கணவனானவன், நண்ணலற்கு — பகைவனுக்கு, காமர் நிதியும்-விரும்பப்படுகின்ற தனங்களையும், வளநாடும் — செழித்த நாட்டையும், சூதில் — சூதினில், இழந்து — தோற்றுவிட்டு, கான் இடைப்போய் — வனத்திற்சென்று, யாமம்தனில் — இராத்திரியில், அவள்பிரிய-அவளைப்பிரிய, அவளை - அத்தமயந்தியை, தேடி - தேடிக்கொண்டு, ஈண்டு-இந்நகரில், அணைந்தேன் — வந்தேன் எ-று. 35

அனையமடமானுயிர்த்தோழியானென்றுரைப்பவகமகிழ்ந்து
தனியளாகிக்கொடுங்கானிற்றலைவன்பிரியத்தளர்ந்தேங்குங்
கனைவண்டிமிருங்கருங்குழலைக்காணுமளவுமிக்கசெரி
னினையல்வாழியிருத்தியெனவிசைத்தாங்கவளுமிருந்தனளால்.

இ-ள். அனையமடவாள் — அத்தமயந்தியினுடைய, உயிர்த்தோழி — உயிரையொத்ததோழி, யான் — நான், என்றுரைப்ப — என்று(தமயந்தி)சொல்ல, அகமகிழ்ந்து - சந்தோஷித்து, கொடுங்கானில் — கொடியகாட்டினில், தலைவன் — கணவன், பிரிய — பிரிந்தேக, தனியளாகி-தனித்தவளாகி, தளர்ந்து-தளர்ச்சியடைந்து, ஏங்கும் — துன்பப்படாநின்ற, கனை-கனைக்கின்ற, வண்டு-வண்டுகள், இமிரும் — சத்தியாநின்ற, கருங்குழலை — கரிய கூந்தலையுடைய தமயந்தியை, காணும் அளவும் — பார்க்குமளவில், இந்நகரில் - இந்த நகரத்தில், இருத்தி - இருப்பாயாக, இனையல் - வருத்தப்படாதே, வாழி-வாழக்

கடவை, என - என்று, (அரசன்முன்) சொல்ல, இசைந்து-(அவள்சொல்லுக்) கிசைந்து, ஆங்கு – அந்நகரத்தில், அவளும்-அந்தத்தமயந்தியும், இருந்தனள்-இருந்தாள் எ-று. 36

காதல்கூர்ந்துதன்மகளாஞ்சுனந்தைதகநிர்வாண்முகநோக்கி
மாதர்நோக்கிம்மடவரலிவருந்தாதளித்தியெனலோடு
மேதமின்றியவள்காப்பவிருந்தாண்மற்றீங்கிதுசிற்க
கோதைவடிவேனளற்குற்றசெய்தியினத்துங்கூறுவாம்.

இ-ள். காதல் கூர்ந்து – அன்புசெய்து, தன்மகளாம் சுனந்தை – தன்னுடைய மகளாகிய சுனந்தையினது, கதிர்வாள் – மிகுந்த ஒளிபொருந்திய, முகம் – முகத்தை, நோக்கி – பார்த்து, மாதர்நோக்கு – அழகிய பார்வையையுடைய, இம்மடவரலே – இப்பெண்ணே, வருந்தாது – துன்பப் படாமலிருக்கும்படி, அளித்தி – காப்பாய், எனலோடும் – என்று (அரசன்முன்) சொல்லியவளவில், எதமின்றி – பழுதின்றி, அவள் – அச்சுனந்தையானவள், காப்ப – பாதுகாக்க, இருந்தாள் – (தமயந்தி) இருந்தனள். இங்கு - இவ்விடத்தில் இச்செய்தி, சிற்க – இருக்க, தோதைவடிவேல்-வெற்றிமாலையணிந்த கூரியவேலையேந்திய, நள்ற்கு – நளமகாராசனுக்கு, உற்ற - பொருந்திய, செய்தி அனைத்தும் – செய்கையனைத்தையும், கூறுவாம் – சொல்லுவாம் எ-று. மற்ற - அசை. 37

பிரிவுறுபடல முற்றிற்று.

ஆ செய்யுள் – 1074.

வேற்றுருவமைந்தபடலம்.

இப்படலத்தால் நளமகாராசனுக்கு நாட்டிற் செல்லினும்
பிறரறியாதிருக்கும்படி வேற்றுருவமைந்தமை
சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

கள்ளுயிர்க்குமென் மலர்க்குழற்காமர்பூங்கொடியை
நள்ளிருட்பொழுதகன்றனணண்ணருங்கானிற்
றள்ளுதற்கருந்துயரொடுபோதலுந்தழலு
மொள்ளழற்புகைக்கொழுந்தெழக்கண்டனனுரவோன்.

நளன் காட்டிலே அக்கினி யெரிதலைக் கண்டது.

இ-ள். உரவோன் - நளமகாராசன், கள் உயிர்க்கும் - தேனைத்தரு கின்ற, மெல்மலர் - மெல்லிய மலர்களையணிந்த, குழல் - கூந்தலையுடைய, காமர் - அழகுபொருந்திய, பூங்கொடியை - தமயந்தியை, நண்ணரு - அடை தற்கரிய, கானில் - வனத்தில், நள் இருட்பொழுது - நடுராத்திரியில், அகன்றனன் - விட்டுப்பிரிந்தவனாய், தள்ளுதற்கு அரு - ஒழிதற்கரிய, துயர் ஒடும் - துன்பத்துடனே, போதலும் - செல்லுமளவில், தழலும் - தழைக்கானின்ற, ஒள் அழல் - ஒளிபொருந்திய தீயினது, புகைக்கொழுந்து - தூமக்கொழுந்து, எழ - எழும்பாநிற்க, கண்டனன் - அதைப்பார்த்தனன்.

செஞ்சுடர்ச்சிகைவாதலிற்றெருமரலெய்தி
நஞ்சுயிர்க்கும்வாளரவொன்றுகாமவேலிறைவ
தஞ்சமீயெனையளித்தியென்றுரைத்தலுந்தாழா
தஞ்சலஞ்சலென்றடைந்தனன்மடங்கலேறனையான்.

தீகடவி லகப்பட்ட பாம்பைக்காக்க நளன்
விரைந்து சேறல்.

இ-ள். செஞ்சுடர்ச்சிகை - அக்கினிச் சுவாலையானது, வாதலின் - சுற்றிக்கொண்டமையால், தெருமரல் எய்தி - மனங்கலங்கி, நஞ்சு உயிர்க் கும் - விடத்தைத்தருகின்ற, வாள் அரவு ஒன்று - ஒளிபொருந்திய கார்க் கோடகனென்னு நாகமானது, காமவேல் - அச்சத்தைத்தருகின்ற வேல யேந்திய, இறைவ - நளமகாராசனே, நீ - நீயே, தஞ்சம் - அடைக்கலம், எனை - என்றனை, அளித்தி - காக்கவேண்டும், என்று உரைத்தலும் - என்று சொல்லியவளவில், தாழாது - தயங்காது, அஞ்சல் அஞ்சல் - பயப்படாதே பயப்படாதே, என்று - என்றுசொல்லியவனாய், மடங்கல் ஏறு அனையான் - நளமகாராசன், அடைந்தனன் - அருகிலடைந்தான் எ-று.

கனைசெழுஞ்சுடர்க்கொழுங்கனல்படர்தலிற்கரிந்து
பனைமறிந்தெனக்கிடந்தபார்பாந்தளைநோக்க
வனைபொலன்கழற்குரிசிலோர்மறையவன்முனிவா
னினைவினுந்தனிப்பெயர்ந்திடுநிலைமையொன்றிவனுல்.

நளனுக்கு நாகம் தன்குறைகூறல்.

இ-ள். கனை – சத்தியாகின்ற, செழுஞ்சுடர் – செழித்தசுவாலைகளை யுடைய, கொழுங்கனல் – மிகுந்தகாட்டுத்தீயானது, படர்தலில் – சுற்றிக் கொள்வதனுல், கரிந்து – கருகி, பனை – பனைமரமானது, மறிந்து எனவிழுந்து கிடந்ததுபோல, கிடந்தது – கிடந்ததாகிய, ஓர் பாந்தளை – (கார்க்கோடகனென்னும்) ஒருபாம்பினை, நோக்க – (நளமகாராசன்) பார்க்க, வனை பொலன் கழல் – கட்டப்பட்ட பொன்னுற்செய்த வீரக்கழலையணிந்த, குரிசில் – நளமகாராசனே, ஓர் மறையவன் – அநாகசனென்னும் ஒரு பிரமயிருடியினது, முனிவால் – சாபத்தினுல், நினைவினும் – நினைப்பினுலும், தனி – தனியாக, பெயர்ந்திடு நிலைமை – நடக்கலாம் எனும் நிச்சயத்தை, ஒன்றிலன் – அடைந்திலேன் எ-று. ஆல் – அசை. 3

அழலினின்றெடுத்தையிரண்டடிப்புறத்தகற்றின்
முழுவலன்பொடுநன்கிழைக்குவலெனமொழிந்து
தழற்கட்பாம்புடல்சுருக்கலுந்தழலருள்வரத்தா
லெழுவினீள்கரத்தாலெடுத்தழற்புறத்திட்டான்.

நளன் தீயினின்றும் பாம்பை வெளியே யெடுத்துவிடல்.

இ-ள். அழலில் நின்றெடுத்து – அக்கினியினின் றெடுத்து, ஐயிரண்டு அடிப்புறத்து – பத்தடிக்குப் புறத்தில், அகற்றில் – நீக்கிவிடுவையானுல், முழுவல் அன்பொடு – நிறைந்த வலிய அன்புடனே, நன்கு இழைக்குவல் – உனக்கு நன்மையைச் செய்வேன், எனமொழிந்து – என்றுசொல்லி, தழற்கண் – அக்கினிபொருந்திய கண்களையுடைய, பாம்பு – கார்க்கோடக நாகமானது, உடல் சுருக்கலும் – உடம்பைச் சுருக்கிக்கொண்ட வளவில், (நளமகாராசனுவன்) தழல் அருள் வரத்தால் – அக்கினிதேவன் கொடுத்த வரத்தினுல், எழுவில் – தூண்போன்ற, நீள்கரத்தால் – நீண்டகரத்தினுல், எடுத்து – எடுத்து, அழல் புறத்து – தீயினுக்கு வெளியில், இட்டான் – விடுத்தான் எ-று. 4

கதழ்எரிக்கணின்றகற்றலுங்கதிரொளிவிரிக்கு
மதிர்பொலன்கழலரசர்கோன்மெய்புறத்தீண்டி
முதிர்சினத்தவாளரவுதன்முன்னுருவெடுப்ப
விதுகுலத்துயர்வேந்தனும்வேற்றுருவமைத்தான்.

பாம்புகடிக்க நளன் வேறுவடிவ மெடுத்தல்.

இ-ள். கதழ்எரிக்கணின்று – சொலிக்கின்ற தீயினின்றும், அகற்றலும் – நீக்கிவிட்டவளவில், கதிர் ஒளி விரிக்கும் – கிரணவொளி வீசாகின்ற, அதிர்-

சத்திக்கின்ற, பொலன்கழல் – பொன்னுற்செய்யப்பட்ட வீரக்கழலை யணிந்த, அரசர்கோன் – நளமகாராசனது, மெய் - சரீரத்தில், உற - பொருந்தம்படி, தீண்டி – கடித்து, முதிர் சினத்த – மிகுந்த கோபத்தையுடைய, வாள் அரவு – ஒளிபொருந்திய கார்க்கோடக நாகமானது, தன் – தன்னுடைய, முன் உரு – பழைய வுருவத்தை, எடுப்ப - எடுக்க, விதுருலத்து - சந்திரவம்சத்தில், உயர் – உயர்ந்த, வேந்தனும் – நளமகாராசனும், வேறு உரு அமைந்தான் – வேற்றுரு அடைந்தான் எ-று. 5

கருணைசெய்தெனைப்புரந்தநிற்கடித்ததுமுன்னே
யுருவுகண்ணுறிலொன்னகர்செகுப்பலென்பதனற்
பொருவிலோயினிவாகுவனெனும்பெயர்புனைவா
விருதுபன்னன்வாழயோத்திமாநகரினேகுதியால்.

பாம்பு தான்றீண்டியதற்குக் காரணங்கூறி
அயோத்தி போகுமா றுரைத்தல்.

இ-ள். கருணைசெய்து – இரங்கிசெய்து, எனை – என்னை, புரந்தகாத்த, நின்கடித்தது – உன்னைக்கடித்தது, (எனெனில்) முன்னை உருவு- பழைய வுருவமானது, கண்ணுறில் – காணப்படுமானால், ஒன்னலர் - சத்துருக்கள், செகுப்பர் – கொல்லுவார்கள், என்பதனால் – என்னை நினைவிலும், பொரு இலோய் – ஒப்பற்ற நளமகாராசனே, இனி – இனிமேல், வாகுவன் எனும் – வாகுவன் என்று சொல்லப்பட்ட, பெயர்புனைவா- பெயரைத் தரித்துக்கொண்டு, இருது பன்னன் – இருதுபன்னமகாராசன், வாழ் – அரசாட்சி செய்யாநின்ற, அயோத்திமாநகரில் – அயோத்தியென்னப்பட்ட பெருமைபொருந்திய பட்டினத்தில், எகுதி – போவாயாக எ-று. ஆல் - அசை. 6

ஏந்தலேகியம்மன்னவன்சூதனுவியைந்து
கூந்தன்மாவுளக்தெரிதருவிஞ்சைகொடுப்பி
னுய்ந்தசூதுவெல்விஞ்சைநின்பாலவனளிக்குஞ்
சாந்தமென்மூலித்தமயந்திதன்னெடுஞ்சார்வாய்.

இதுமுத லிரண்டுபோட்டுக்களாற் பின்வருங்
காரியங்களைப் பாம்புகூறல்.

இ-ள். ஏந்தல் - நளமகாராசனே, ஏகி – அந்நகரத்திற்சென்று, அம்மன்னவன் - அந்த இருதுபன்னனுக்கு, சூதனு - தேர்ப்பாகனுக, இயைந்து- பொருந்தி, கூந்தல் – புறமயிரினையுடைய, மா – குதிரைகளினது, உளம்- மனத்தை, தெரிதரும் – அறிகின்ற, விஞ்சை – வித்தையை, நீ கொடுப்பின் - நீ (அவ்வாசனுக்கு) உபதேசிப்பையானால், ஆய்ந்த – பரிசோதிக்கப்பட்ட, சூது – சூதினில், வெல் – வெற்றியைத்தராநின்ற, விஞ்சை – வித்தையை, நின்பால் – உன்னிடத்தில், அவன் – அவ்வரசன், அளிக்கும்- கொடுப்பான், (அதன்பிறகு) சாந்தம் – சந்தனக்கோலமணிந்த, மெல்மூலை-

மிருதுவாகிய தனங்களையுடைய, தமயந்தி தன்னெடும்—தமயந்தியோடும், சார்வாய்—கூடுவாய் எ-று. 7

பின்னர்மன்ன நின்பெருநிலக்கிழமையும்பெறுதி
முன்னைமாணுருவெளிதினிற்பெற்றிடமுன்னி
லின்னபூந்துகில்புனைதியென்றிருதுகிலளித்துத்
தன்னுருக்கொடுபோயதுதழல்விழிப்பாந்தள்.

இ-ள். பின்னர்—பின்பு, மன்ன — நளமகாராசனே, நின்—உன்னுடைய, பெருநிலம் கிழமையும் - அரசாட்சியையும், பெறுதி - அடைவாய், முன்னை – முற்பட்ட, மாண் உரு – மாட்சிமைப்பட்ட வுருவத்தை, எளிதினில் - வருத்தமின்றி, பெற்றிட முன்னில – பெறவினைப்பையாகில், இன்னபூந்துகில்—இந்த அழகிய வத்திரத்தை, புனைதி என்றுதரித்துக்கொள்ளென்று சொல்லி, இருதுகில் – இரண்டு வத்திரங்களை, அளித்து — கொடுத்து, தன் உருக்கொடு – தன் பழைய வுருவத்தையெடுத்துக்கொண்டு, தழல்விழி – அக்கினிபொருந்திய கண்களையுடைய, பாந்தள் – கார்க்கோடக நாகமரன்னது, போயது – மறைந்து போயது எ-று.

அதிர்பொலனகழல்சசர்கோனவ்வயினீங்கிப்
பிதிர்சுணங்கனிவெம்முலைப்பெய்வளைத்தடந்தோண்
மதர்வைநோக்கிதன்வாணகையெனவுயிர்வருத்துங்
கதிர்செய்நித்திலம்வரன்றிறிரைக்கடல்கண்டான்.

நளன் கடலைச் சேர்தல்.

இ-ள். அதிர் – சத்தியாகின்ற, பொலன்கழல்-பொன்னாற்செய்த வீரக்கழலையணிந்த, அரசர்கோன்—நளமகாராசனானவன், அவ்வயின் நீங்கி-அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, பிதிர்—பிதிர்ந்த, சுணங்கு அணி—தேமலையணிந்த, வெம்முலை-விருப்பத்தைச்செய்கின்ற தனங்களையும், பெய்வளை - வளையலையணிந்த, தடந்தோள் - பருத்த தோள்களையுமுடைய, மீதர்வைநோக்கி, தன் – தமயந்தியினது, வாள் நகையென-ஒளிபொருந்திய தந்தங்கள்போல, உயிர்—உயிரை, வருத்தும் – வருத்துகின்ற, கதிர்செய் – ஒளிவீடுகின்ற, நித்திலம் - முத்துக்களை, வரன்று - வாரிக்கொண்டு, எறி – வீசாகின்ற, திரை-அலைகள்பொருந்திய, கடல்—சமுத்திரத்தை, கண்டான்—(நளமகாராசன்) பார்த்தான் எ-று. 9

வஞ்சர்நெஞ்சிலுழ்கழியினேர்மடநடையன்ன
மஞ்சிறைப்புறத்தாருயிர்ப்பெடையினையணைத்துக்
கஞ்சநாண்மலர்ச்சேக்கையிற்கண்படினுக்கி
நெஞ்சமாழ்குறநெடிதுயிர்த்தயர்வொடுநின்றான்.

இதமுதல் நான்குபாட்டுக்களால் நளன்கடற்கரையிற் பத்து நாளிருந்து பலவற்றையுமெண்ணித் துயரப்படல்.

இ-ள். வஞ்சர் – வஞ்சகரது, நெஞ்சின் – மனம்போல, ஆழ் – ஆழ்ந்த, கழியினில் – கழிநிலத்தில், ஓர்மடம் நடை அன்னம் – ஒரு இளவன்னமானது, அம் – அழகிய, சிறைப்புறத்து – சிறகின்புறத்திலுள், ஆருயிர் – நிறைந்த வுயிரையொத்த, பெடையினை – பெட்டையன்னத்தை, அணைத்து – தழுவிக்கொண்டு, கஞ்சம் – தாமரையினது, நாள்மலர் – புதியமலராகிய, சேக்கையில் – படுக்கையில், கண்படல் – நித்திரைசெய்வதை, நோக்கி – பார்த்து, நெஞ்சம் – மனமானது, மாழ்குற-வருத்தமடைய, நெடிது உயிர்த்து-பெருமூச்சுவிட்டு, அயர்வொடும் – சோர்வுடனே, நின்றான் – (நளமகாராசன்) நின்றனன் எ-று. 10

சுடர்செய்முத்தமுமேமியம்புள்ளுமென்றுகிரு
நெடிதுநோக்கிநங்கேரிழைமூரலுமுலையும்
வடிவமைந்தமென்விரலுமீங்கெய்தியவாற்றூற்
கடலில்வீழ்ந்துயிர்துறந்தனளெனமனங்கலுழ்ந்தான்.

இ-ள். சுடர்செய் – ஒளிவிடுகின்ற, முத்தமும்-முத்துக்களையும், நேமியம்புள்ளும் – சக்கரவாகப் பறவைகளையும், மென் – மிருதுவாகிய, தகிரும்-பவளங்களையும், நெடிது – நெடுங்காலம், நோக்கி – பார்த்து, நம்-நம்முடைய, நேரிழை – தீமையந்தியினது, மூரலும் – தந்தவரிசைகளும், முலையும் – தனங்களும், வடிவு அமைந்த – அழகுபொருந்திய, மெல் விரலும்-மெல்லிய விரல்களும், ஈங்கு – இக்கழி நிலத்தில், எய்திய ஆற்றூல் – பொருந்தியபடியால், கடலில் – சமுத்திரத்தில், வீழ்ந்து – (தமயந்தியானவள்) விழுந்து, உயிர் துறந்தனள் – இறந்தாள், என – என்றெண்ணி, மனங்கலுழ்ந்தான் – (நளமகாராசன்) மனங்கலங்கினன் எ-று.

அக்கழி நிலத்திற் காணப்பட்ட முத்தமுதலிய உவமானப்பொருள்களை உவமேயமாக மயங்கினமையால் மயக்கவணி. 11

ஆவியன்னதோரணங்கினையரையிருணீத்த
பாவியேன்முகநோக்குறிற்பழிவருமென்றே
மேவுசேக்கையிற்குருகினம்பேட்டினம்வெருவிச்
சேவலோடகன்றேதுவதெனமனந்திகைத்தான்.

இ-ள். ஆவியன்ன – உயிரையொத்த, ஓர் அணங்கினை – ஒப்பற்ற தமயந்தியை, அரை இருள் – அர்த்தராத்திரியில், நீத்த – (தனியாக) விடுத்த, பாவியேன் – பாவியாகிய வென்னுடைய, முகம் – முகத்தை, நோக்குறில்-பார்த்தால், பழிவரும் – பாவம்வரும், என்றே – என்று நினைத்தோ, மேவு-பொருந்திய, சேக்கையில் – படுக்கையிலுள்ள, குருகு – பறவைகளினுடைய, இள – இளமைதங்கிய, பேடு இனம் – பெட்டைகளினமானது, வெருவி-பயந்து, சேவலோடு – ஆண் பறவைகளோடும், அகன்றே – (அவ்விடத்தை

லிட்டு) நீங்கி, எகுவது – போவது, என் – என்று, மனம் நிகைத்தான் – மதி மயங்கினன் எ-று.

பறவைகள் இயல்பான் மனிதரைக் கண்டேகினும் அதற்கு நளன் தன் குற்றத்தை ஏதுவாக்கினனென்க. இது தற்குறிப்பணி. 12

நவ்விநோக்கிதன்னகைமதிமுகமெனச்சிறந்த
தெய்வநாண்மலர்ப்போதவிழ்பூந்துகடிமிர்ந்து
கவ்வைவெண்டிரைத்துளியெறிதென்றலங்கன்று
தைவருந்தோறுமெய்பதைத்தாருயிர்தளர்ந்தான்.

இ-ள். நவ்வி – மான்போன்ற, நோக்கிதன் – கண்களையுடைய தமயந்தியினது, நகை – பிரகாசியாகின்ற, மதி–சந்திரனையொத்த, முகம் என-முகம் போல், சிறந்த – சிறப்பையடைந்த, தெய்வம் – தெய்வத்தன்மையுள்ள, நாள் மலர் – புதிதாக மலர்கின்ற, போது – புட்பத்தில், அவிழ் – விரிந்த, பூந்துகள் – மகரந்தப்பொடிகளை, திமிர்ந்து – பூசிக்கொண்டு, கவ்வை – ஒளிபொருந்திய, வெண்திரை – வெளுத்த சமுத்திரவலைகளினுடைய, துளி – திவலைகளை, ஏறி – வீசுகின்ற, தென்றலங்கன்று – இளந்தென்றலானது, தைவருந்தோறும் – மேலில் வீசுந்தோறும், மெய் – சரீரமானது, பதைத்து – துடித்து, ஆர் – நிறைந்த, உயிர் – உயிரானது, தளர்ந்தான் – தளரப்பெற்றான்.

இன்னதன்மையன்வைகலீரைந்துபோயிறப்பக்
கன்னல்வேலியங்கழனியிற்களிச்சுரும்பரற்றும்
பொன்னந்தாமரைப்பொகுட்டின்மேன்மடப்பெடைபுல்லி
யன்னங்கண்படுவெள்ளநீரயோத்திநாடடைந்தான்.

நளன் இருதுபன்னனது நகரையடைதல்.

இ-ள். இன்ன தன்மையன் – இத்தன்மையனாகிய நளமகாராசன், வைகலீரைந்து – பத்துநாள், போயிறப்ப – நீங்கிப்போக, கன்னல்வேலி – கருப்பம்வேலியிடப்பட்ட, அம்கழனியில் – அழகியவயல்களில், களிச்சுரும்பு – களிப்பினையுடைய வண்டுகள், அரற்றும் – சத்தியாகின்ற, பொன்னம் – பொன்போலழகிய, தாமரைப் பொகுட்டின்மேல் – தாமரைப் பூங்கொட்டையில், மடம்பெடை – இளமைதங்கிய பெட்டையன்னங்களை, புல்லி – தழுவிக்கொண்டு, அன்னம் – அன்னப்பறவைகள், கண்படு – நித்திரைசெய்கின்ற, வெள்ளநீர் – மிகுந்த நீர்வளமுள்ள, அயோத்தி நாடு – அயோத்தி நகரத்தை, அடைந்தான் – சேர்ந்தான் எ-று. 14

இருதுபன்னனைக்காண்டலுமெத்தொழில்வல்லை
மருவுநாமமென்கூறெனவாகுவனெனலோ
ருருவவாம்பரித்தேரினிதூர்குவனும்பர்
ஞருமருந்தெனவடுதாழில்புரிவனென்றறைந்தான்.

நளன் இருதுபன்னனை யடைதல்.

இ-ள். இருதுபன்னனை – இருதுபன்ன வரசனை, காண்டலும்-(நளன்) கண்டவளவில், எத்தொழில் – எச்செய்கையில், வல்லை-நீதிநிறமையுள்ளவன், மருவும் – பொருந்திய, நாமம் என் – உன்பெயரியாது, கூறு என – சொல் லென்று (இருதுபன்னன்கேட்க), வாகுவன் – வாகுவனென்பது, என்பேர்-எனதுபெயராம், உருவம் – நிறத்தையுடைய, வாம் – தாவாநின்ற, பரி-குதிரைகட்டிய, தேர் – இரதத்தை, இனிது – நன்றாக, ஊர்குவன் – நடத்துவேன், (அன்றியும்) உம்பர் – தேவர்களினது, அருமருந்தென – அரிய அமுதம்போல, அடுதொழில் – சமையற்றொழிலை, புரிவன் – செய்வேன், என்று அறைந்தான் – என்று (நளமகாராசன்) சொன்னன் எ-று. 15

வேந்தனவ்வுரைகேட்டலும்வியன்மணிநெடுந்தேர்
கூந்தன்மாவுளமறிந்தனைகுறிப்பினூர்குதியே
லாய்ந்தசெம்பொனோராயிரம்வைகலுமளிப்ப
லேய்ந்தவென்னிருபாகசோடிருத்தியென்றிசைத்தான்.

இருதுபன்னன் நளனுக்குச் சாரதித்தொழில்
செய்யுமாறு விதித்தல்.

இ-ள். வேந்தன் – இருதுபன்னராசன், அவ்வுரை – அந்நளன்சொல்லை, கேட்டலும் – கேட்ட மாத்திரத்தில், வியன் – பருத்த, மணி – நவரத்தினங் களிழைத்த, நெடு – நீண்ட, தேர் – தேரிற்கட்டப்பட்ட, கூந்தல் – புறமயிரினையுடைய, மா – குதிரையினது, உளம் அறிந்தனன் – மனதையறிந்தவனாகி, குறிப்பின் – குறிப்பினால், ஊர்குதியேல் – நடத்துகிறவனானால், ஆய்ந்த – குற்றமற்ற, செம்பொன் ஓராயிரம் – ஓராயிரம் பொன், வைகலும்-நாள்தோறும், அளிப்பல் – கொடுப்பேன், ஏந்தல் – வீரனே, என் – என்னுடைய, இருபாகர் ஓடு – இரண்டு சாரதிகளோடுங் கூட, இருத்தி – இரு, என்று இசைத்தான் – என்றுசொன்னன் எ-று.

பொன்னென்பது இருபது சின்னப்பணத்தினுக்குத் தொகைப்பேர். இது சேரசோழபாண்டியர் நாட்டுவழக்கு. 16

அன்னவாறுநோந்தலங்குளைப்புரவிமான்றேர்க்கு
மன்னனுகியநிடதர்கோன்வைகலும்புலம்பித்
தன்னுகாணிடைநீத்தவடியரமீக்கூர
வென்னளாயினளோவெனவிரங்கிவெய்துயிர்ப்பான்.

வாகுவனுகிய நளன், தன்மனைவியை நினைத்துவாடுதல்.

இ-ள். அன்னவாறு – அப்படியே, நோந்து – சம்மதித்து, அலங்கு-அசைகின்ற, உளை – புறமயிரினையுடைய, புரவிமான் – குதிரைகட்டிய, தேர்க்கு – இரதங்கட்கு, மன்னனுகிய – அதிபனுகிய, நிடதர்கோன் – நளமகாராசனுனவன், வைகலும் – நாள்தோறும், புலம்பி – மனமிரங்கி, தன்னு

கானிடை - நெருங்கிய காட்டினில், நீத்தவள் - விடப்பட்ட தமயந்தியானவள், தயரம் - துன்பம், மீக்கூர - அதிகரிக்க, என்னள் ஆயினளோ - எத்தன்மையளாளுளோ, என - என்று, இரங்கி - புலம்பி, வெய்து - கொடியதாக, உயிர்ப்பான் - பெருமூச்சுவிடுவான் எ-று. 17

உயிர்த்துமெய்தளர்ந்துருகியவேந்தனையுளத்தி
லயிர்த்தொர்சாரதியுற்றதையெவன்கொலென்றறைய
வெயிற்கொடுங்கதிர்மறைந்துழிவெவ்வழற்கானிற்
பயிர்ப்பில்கோதையைத்தீர்ந்தனன்பரிவிலேனென்றான்.

வாகுவன் றுயரப்படல் கண்டு வேறோர் சாரதி
என்னென வினவல்.

இ-ள். உயிர்த்து - பெருமூச்சுவிட்டு, மெய்தளர்ந்து - சரீரம் வாடி, உருகிய - மனமுருகிய, வேந்தனை - நளமகாராசனை, உளத்தில் - மனத்தில், அயிர்த்து - சந்தேகித்து, ஓர்சாரதி - சீவலனென்னுமொரு தேர்ப்பாகனவன், உற்றதை - (நான்தோறும்) அடைந்ததுன்பத்தை, எவன்கொலென்று அறைய - என்னவென்றுகேட்க, வெயில் - வெய்யிலைச் செய்கின்ற, கொடுங்கதிர் - சூரியன், மறைந்துழி - அத்தமித்தபின்பு, வெம் அழல் - கொடிய அழல் பொருந்திய, கானில் - காட்டினில், பயிர்ப்பில் - பரிசுத்தையாகிய, கோதையை - பெண்ணை, பரிவிலேன் - அன்பில்லாதநான், தீர்ந்தனன் - விடுத்தேன், என்றான் - என்று (நளன்) சொன்னான் எ-று. 18

வேற்றுருவமைந்தபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 1092.

வீமன் தேடவிட்டபடலம்.

இப்படலத்தால் வீமராசன் தமயந்தி நளன் இருவரையும்
தேடுதற்கு அதற்கு உரியோரை விடுத்தல்
சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

இனையனுகியமன்னவனவ்வுழியிருப்ப
வினைகருங்கழல்விதர்ப்பர்கோன்மறையவர்க்கூயென்
றனையதன்னெடுநள்ளுயுந்தேடிநீர்தந்தா
னினைவயாவையுந்தருகுவனெனவவர்நேர்ந்தார்.

வீமன் மகளையும், மருகனையுந்தேடி வரும்படி ஏவுதல்.

இ-ள். இனையன் ஆகிய – இத்தன்மையனுகிய, மன்னவன் – நளமகாராசன், அவ்வுழி – அவ்வயோத்தியில், இருப்ப – இருக்க, வினை கருங்கழல் – சிறந்த வீரக்கழலை யணிந்த, விதர்ப்பர்கோன் – வீமராசன், மறையவர் – பிராமணர்களை, கூய் – அழைத்து; என் தனயை தன்னெடும் – என் பெண்ணுகிய தமயந்தியோடும், நளனையும் – நளமகாராசனையும், தேடி – தேயங்களிற்றேடி, நீர் – நீவிர், தந்தால் – கொடுப்பீராயின், நினைவயாவையும் – நீர் நினைத்தவை யனைத்தையும், தருகுவன் – கொடுப்பேன், சுனை – என்று சொல்ல, அவர் – அம்மறையவர்கள், நேர்ந்தார் – அதற்குச் சம்மதித்தார் எ-று 1

தரங்கவாரிதிசூழ்தருதகைமைசாலுலக
மொருங்குதேடியுங்காண்கிலருலப்பிலார்திரிய
வரங்கொள்கேள்வியன்சுவேதனென்றுரைக்குமோர்மறையோன்
கருங்கட்பேதையைச்சேதிபன்மனைவயிற்கண்டான்.

இ-ள். தரங்கம்வாரிதி – அலைகளையுடைய சமுத்திரமானது, சூழ்தரு – சூழ்ந்த, தகைமைசால் – மேன்மைபொருந்திய, உலகம் – பூவுலகம், ஒருங்கு – ஒருங்குபட, தேடியும் – தேடியும். காண்கிலார் – காணுதவராய், உலப்பிலார் – அளவற்றபேர்கள், திரிய – திரியாநிற்க, வரம்கொள் – வரத்தைக் கொண்ட, கேள்வியன் – (சாஸ்திரக்) கேள்வியையுடைய, சுவேதன் என்றுரைக்கும் – சுவேதனென்று சொல்லப்பட்ட, ஓர் மறையோன் – ஒருபிராமணன், கருங்கண்பேதையை – கரிய கண்களையுடைய தமயந்தியை, சேதிபன் மனைவயின் – சேதிதேசத்தரசனுகிய சுவாகுவின் வீட்டில், கண்டான் – பார்த்தான் எ-று. 2

மாசுபூத்தொளிமழுங்குபுமண்ணுறுமணியிற்
றேசழிந்திடுதெரிவைதன்றிருமுகநோக்கி

யேசலில்லிவட்கோவிவையெய்துமற்றென்ஞ
வாசிகேள்வியோன்கலுழ்ந்தனன்றுயர்க்கடலாழ்ந்தான்.

சுவேதன் என்னும் பிராமணன் தமயந்தியைநோக்கிப் புலம்பல்.

இ-ள். மாசூழ்த்து – அழுக்கடைந்து, ஒளிமழுங்குபு – ஒளிமழுங்கி, மண்உரு மணியின் – சாணையிடாதமணிபோல, தேசழிந்திடும் – அழகழிந்த, தெரிவைதன் – தமயந்தியினது, திருமுகம் – அழகிய முகத்தை, நோக்கி-பார்த்து, ஏசல் இல் – பழிப்பில்லாத, இவட்கோ – இப்பெண்ணுக்கோ, இவை எய்தும் – இவ்வவத்தைகள் பொருந்தும், என்ஞ – என்று, ஆசில்-குறைவற்ற, கேள்வியோன் – கேள்வியையுடைய சுவேதன், கலுழ்ந்தனன்-கலங்கினவனாகி, துயர்க்கடல் – துன்பக்கடலில், ஆழ்ந்தான் – மூழ்கினன் எ-று. மற்று – அசை. 3

அழுவதென்கொலென்றுயிழைவினவநின்றுதை
முருவலன்புடைத்தோழன்யான்மொய்த்தநின்றமருங்
குழுவுநின்னிருகுரவருந்தீங்கிலரென்னத்
தொழுதுமைக்கணீர்முலைத்தடம்பெருகமெய்சோர்ந்தாள்.

சுவேதன் சொன்னவைகேட்டுத் தமயந்தி துயரப்படல்.

இ-ள். அழுவது என்கொல் – துன்பப்படுவது என்னகாரணம், என்று-என்றுசொல்லி, ஆயிழை – தமயந்தியானவள், வினவ – கேட்க, நின்தாதை-உன்றந்தைக்கு, முழுவல் அன்புடை – நிறைந்த அன்புடைய, தோழன்-தோழமையுள்ளவன், யான் – நான், மொய்த்த – நெருங்கிய, நின்-உன்னுடைய, தமரும் – உறவினரும், குழுவும் – கூட்டத்தவரும், நின்-உன்னுடைய, இரு குரவரும் – தாய்தகப்பன்மாரிருவரும், தீங்கிலர்-கேடிலராயுளர், என்ன – என்றுசொல்ல, தொழுது – (அவனைத்) தொழுது, மைக்கணீர் – மைபொருந்திய, கண்ணீர் முலைத்தடம் – முலையினிடத்தில், பெருக – ஒழுக, மெய் – உடம்பு, சோர்ந்தாள் – மெலிந்தாள் எ-று. 4

கந்தவார்குழற்காரிகையழுதல்கேட்டிவட்குத்
தந்தையாரெவற்குரியளித்தளிரியறணித்து
வந்தவாறிவளிவளோநீயுணர்ந்ததெவ்வாறென்
றந்தணாளனினவினள்சுவாகுவையளித்தாள்.

சேதிநாட்டரசன் ஆர் தமயந்தியின் வரலாறு கேட்டல்.

இ-ள். கந்தம் – வாசனைபொருந்திய, வார் – நீண்ட, குழல் – கூந்தலை யுடைய, காரிகை – தமயந்தியானவள், அழுதல் – துன்பப்படுதலை, கேட்டு-(சுநந்தையால்) கேள்விப்பட்டு, (வந்து) இவட்கு – இப்பெண்ணினுக்கு, தந்தை யார் – தகப்பன் யார், இத்தளிரியல் – இப்பெண்ணைனவள், எவற்கு உரியவள் – எவனுக்கு மனையாள், தனித்து வந்வாறு – தனித்து வந்த விதம், எவன் – யாது, இவளை – இப்பெண்ணை, நீ உணர்ந்தது – நீ அறிந்

தது, எவ்வாறு என்று - எப்படியென்று, அந்தணளனை - சுவேதனனை, சுவாகுவையளித்தாள் — சேதிதேசத்தரசனைப்பெற்ற தாயானவள், வின வினன் - கேட்டாள் எ-று. 5

மாதுகேட்டியிம்மடவரல்விதர்ப்பர்கோன்புதல்வி
காதலையகனிடதர்கோன்காசினிமுழுதுஞ்
சூதினுலிழந்திவளையுங்கானிடைத்துறந்தா
னுதலாலிவட்டேடெனவிதர்ப்பர்கோனறைந்தான்.

இரண்டு பாட்டுக்களால் தமயந்தி வரலாற்றைப்
பிரமணன் உரைத்தல்.

இ-ள். மாது - அரசனது தாயே, கேட்டி - கேள், இம்மடவரல் - இப் பெண், விதர்ப்பர்கோன் - வீமராசனது, புதல்வி - குமாரத்தி, காதல்- அன்பினையுடைய, நாயகன் - (இவட்குக்) கணவன், நிடதர்கோன் — நள மகாராசன், (அவன்) காசினிமுழுதும் - பூமிமுழுவதும், சூதினுல் — சூதாட் டத்தால், இழந்து - தோற்றுவிட்டு, இவளையும் - இத்தமயந்தியையும், கான் இடை — காட்டினில், துறந்தான் - விடுத்தான், ஆதலால் - ஆகை யால், இவள் - இவளே, தேடுஎன - தேடுவீரென்று, விதர்ப்பர்கோன்- வீமராசன், அறைந்தான் — உத்தரவு கொடுத்தான் எ-று. 6

தேண்டியெங்கணுங்கண்டிலன்றிருவைநின்மனையிற்
காண்டல்செய்தனன்கன்னலிற்பழுத்தமென்மொழியாண்
மாண்டபேரெழில்வாணுதல்வயங்கியமறுவா
லீண்டுணர்ந்தனன்யானெனமறையவணிசைத்தான்.

இ-ள். எங்கணும் — எவ்விடத்திலும், தேண்டி — தேடி — திருவை — இல க்குமியையொத்த தமயந்தியை, கண்டிலன் — காணதவனுய், நின்மனையில்- உன்மாளிகையில், காண்டல்செய்தனன் — கண்டேன், கன்னலில் — கரும்பி னும், பழுத்த - முதிர்ந்த, மெல்மொழியாள் — இனிய வசனத்தையுடைய இத்தமயந்தியினது, மாண்ட - மாட்சிமைப்பட்ட, பேர் எழில் — மிகுந்த அழகுதங்கிய, வாள்நுதல் — ஒளிபொருந்திய நெற்றியில், வயங்கிய — விளங் கிய, மறுவால் - மச்சத்தினுல், ஈண்டு - இவ்விடத்தில், யான் — நான், உண் ர்ந்தனன்-(இன்னளென்று) அறிந்தேன், என — என்று, மறையவன்-சுவேத னென்னும் பிராமணன், இசைத்தான் — சொன்னன் எ-று. 7

அதுகிளத்தலுமணிநுதன்மாசினியகற்றக்
கதிரெறித்தலிற்கண்வழுக்குற்றனகூச
மதித்தற்புறத்திலகியமறுவினேர்க்கித்
ததைமலர்க்குழற்றமயந்தியிவளெனவுணர்ந்தாள்.

சேதியரசன் தாயானவள், நெற்றியில் மச்சங்கண்டு
தமயந்தி யென்று அறிதல்.

இ-ள். அது - அச்செய்தியை, கிளத்தலும் - சொன்னவளவில், அணி நுதல் - அழகிய நெற்றியிலுள்ள, மாசினை - அழுக்கை, அகற்ற - போக்க, கதிர் எறித்தலின் - ஒளிவிடுகின்றமையால், கண் - நேத்திரங்கள், வழுக்குற்றன - சிதறினவைகளாகி, கூச - அஞ்ச, மதி நுதல் புறத்து - பிறைபோன்ற நெற்றியினிடத்து, இலகிய - பிரகாசித்த, மறுவை - மறுவினை, நோக்கி-பார்த்து, இவள் - இப்பெண், ததைமலர்க்குழல் - நெருங்கிய மலர்களையணிந்த கூந்தலையுடைய, தமயந்தி - தமயந்தியே, என - என்று, உணர்ந்தாள்-(அரசனது அன்னை) அறிந்தாள் எ-று.

வனைமலர்க்குழன் மங்கைநின்னன்னையும்யானும்
புனைகருங்கமழ்சுதர்மன்றன் புதல்வியராமே
மெனலுமன்னைதனிணைமலர்ச்சிரடியிறைஞ்சிக்
கனைகருங்கடல்கரைபுரண்டாலெனக்கலுழ்ந்தாள்.

சேதி தேசத்து அரசன்மேய் புலம்பல்.

இ-ள். வனை மலர்க்குழல் - பூமாலையணிந்த கூந்தலையுடைய, மங்கை-தமயந்தியே, நின் அன்னையும் - உனதுதாயும், யானும் - நானும், புனைதரிக்கப்பட்ட, கரு - பெருமைதங்கிய, கழல் - வீரக்கழலையணிந்த, சுதர்மன் தன் - சுதர்மராசனுடைய, புதல்வியர் ஆமே - புத்திரிகளாமேம், எனலும் - என்று (அரசனன்னை சொன்னவளவில்) அன்னைதன் - அப்பெரியதாயினது, இணை - இணைந்த, மலர் - தாமரை மலரையொத்த, சிரடி - சிற்றடிகளில், இறைஞ்சி - வணங்கி, கனை - சத்தியாகின்ற, கருங்கடல்-கறுத்த கடலான்து, கரைபுரண்டால் என - கரைபுரண்டாற்போல, கலுழ்ந்தாள்-(தமயந்தி) அழுதாள் எ-று. 9

இன்னனென்றெனையுணர்வதன்முன்னமுமீன்ற
வன்னையாமெனவளித்தனையன்புமீதூர
மன்னுமென்னுயிர்மக்களைக்காண்பதற்கெந்தை
பொன்னகர்க்கெனைவிடத்தியென்றின்னுரைபுகன்றாள்.

தமயந்தி தன்தந்தையூர்க்கு அனுப்புமாறு வேண்டுதல்.

இ-ள். எனை - என்னை, இன்னனென்று - இத்தன்மையனென்று, உணர்வதன் முன்னமும் - அறிவதற்கு முன்பும், ஈன்ற - பெற்ற, அன்னையாம் என - தாயானவளென்னும்படி, அன்புமீதூர - ஆசைமிக, அளித்தனை - இரட்சித்தாய், மன்னும் - அவ்விடத்திற் பொருந்தியிருக்கிற, என் உயிர் மக்களை-என்னுடைய உயிர்போன்ற பிள்ளைகளை, காண்பதற்கு - பார்ப்பதற்கு, எந்தை - என்பிதாவினது, பொன் நகர்க்கு - அழகிய குண்டினபுரத்துக்கு, எனை விடுத்தி - என்னையனுப்பு, என்று - என்று, இன் உரை - இனியசொற்களை, புகன்றாள் (தமயந்தி) சொன்னாள் எ-று. 10

உரைசெய்மாற்றமோர்ந்துள்ளுயிருருகுறத்தழுவிக்
கரைசெய்வேலையிற்கருந்தடங்கண்கணீருகுப்ப
வெரிமணிப்பொலன்சிவிகையிலிருளகனிந்தொழுகும்
விரைசெய்கோதையைவிதர்ப்பர்கோனகர்வயின்விடுத்தாள்.

சுவேதன் தாயானவள் தமயந்தியைக் குண்டின
புரத்திற்கு அனுப்புதல்.

இ-ள். உரைசெய் மாற்றம் - (தமயந்தி) சொல்லிய வசனத்தை, ஓர்ந்து—அறிந்து, உள் – உள்ளில். உயிர் – பிராணன், உருகுற—உருகும்படி, தழுவி—அணைத்துக்கொண்டு, கரைசெய்-கரையைச் செய்யாநின்ற, வேலையில் - சமுத்திரம்போல, கரு - கறுத்த, தட - விசாலமாகிய, கண்கள் - நேத்திரங்கள், நீர் - நீரை, உகுப்ப – சொரிய, எரி - பிரகாசிக்கின்ற, மணி - இரத்தினங்கள் பதித்த, பொலன் சிவிகையில் - பொற் பல்லக்கின்மீது, இருள் கனிந்து - இருள் முதிர்ந்து, ஒழுகும் - ஒழுகாநின்ற, விரைசெய் - வாசனை பொருந்திய, கோதையை - அளகபாரத்தையுடைய தமயந்தியை, விதர்ப்பர் கோன் - வீமராசனது, நகர்வயின் - குண்டினபுரத்திற்கு, விடுத்தாள்-அனுப்பினள் எ-று. 11

கொள்ளைவண்டினங்கூட்டுணுகுறுமலர்க்கோதை
யள்ளலங்கருஞ்சேற்றிடையரக்கிதழ்விரிந்த
வள்ளவாய்ச்செழுங்கமலமேன்மடவனந்துயில்கூர்
வெள்ளநீர்வயல்விதர்ப்பர்கோனகரமேயினளால்.

தமயந்தி குண்டினபுரத்தை யடைதல்.

இ-ள். கொள்ளை – மிகுந்த, வண்டு இனம்—வண்டுக்கூட்டங்கள், கூட்டுணும் - (தேனைக்) கொள்ளையிடும்படியாகிய, நறுமலர் – வாசனைபொருந்திய மலர்களையணிந்த, கோதை—கூந்தலையுடைய தமயந்தியானவள், அள்ளல்—குழைந்த, அம் – அழகிய, கரு – கரிய, சேறு இடை - சேற்றினிலுண்டாகிய, அரக்கிதழ்-செவ்விதழ்கள், விரிந்த—மலர்ந்த, வள்ளவாய்-இண்ணம் போன்ற வாயையுடைய, செழு-செழித்த, கமலமேல்-தாமரைமலரின்மேல், மட அனம்- இளவன்னங்கள், துயில்கூர் – நித்திரைசெய்கின்ற, வெள்ள நீர் - நீர்ப் பெருக்கையுடைய, வயல் – கழனிகள்பொருந்திய, விதர்ப்பர் கோன் - விதர்ப்ப தேசத்தரசனுகிய வீமராசனது, நகரம்-குண்டினபுரத்தை, மேயினள் — அடைந்தாள் எ-று. 12

அழுதவுண்கணுமற்றமெல்லாடையுமலங்கல்
கழுமச்சூட்டுபுகைசெயாக்கருங்குழற்காடும்
விழியினீங்கலும்விதர்ப்பர்கோன்வெய்துயிர்த்தயர்ந்தான்
றழுவியன்னையருமுதயர்சாற்றலாந்தகைத்தே.

இ-ள். அழுத-அழுகையுற்ற, உண்கணும்-(தமயந்தியினது) மையுண்ட கண்களையும், அற்ற — அறுபட்ட, மெல் ஆடையும் — மென்மைபொருந்திய புடைவையையும், அலங்கல் - மலர்மாலைகளை, கழுல - நிறைய, சூட்டுசூட்டி, கைசெயா — முடிக்காத, கருங்குழல் காடும் — கரிய கூந்தற் காட்டையும், விதர்ப்பர்கோன் — வீமராசனுடைய, விழியின் நோக்கலும் — கண்களாற் கண்டமாத்திரத்தில், வெய்து உயிர்த்து — பெருமூச்சுவிட்டு, அயர்க்தான் — சோர்ந்தான், அன்னையர் — தாய்மார்கள், தழுவி — (தமயந்தியைத்) தழுவிக்கொண்டு, உறுதுயர் — அடைந்த துன்பமானது, சாற்றலாம் — (நம்மாற்) சொல்லும்படியான, தகைத்தே — தன்மையையுடையதா? எ-று. 13

காட்டினள்ளிருட்காலையிற்காவலனீத்த
தீட்டொணெழிற்றெரிவையைத்தேடினன்கொணர்ந்த
மூட்டுமுத்தழன்மூன்றைமையின்வளர்த்திடுசுவேதன்
வேட்டயாவையுங்கொள்கெனவளித்தனன்வீமன்.

வீமன் சுவேதற்குப் பரிசளித்தல்.

இ-ள். காட்டில் — வனத்தில், நள் இருட்காலையில் - கடுராத்திரி காலத்தில், காவலன் — ரக்ஷகராசன், நீத்த — விடுத்த, தீட்டொணா — எழுதக் கூடாத, எழில் — அழகுபொருந்திய, தெரிவையை-தமயந்தியை, தேடினன்-தேடி, கொணர்ந்த-கொண்டுவந்த, மூட்டு — மூட்டப்பட்ட, முத்தழல்-மூன்றக்கினிகளை, முறைமையில் — கிரமத்தினால், வளர்த்திடும் — வளர்க்கின்ற, சுவேதன் — சுவேதனென்னும் மறையவன், வேட்ட-விரும்பிய, யாவையும் — எல்லாவற்றையும், கொள்க என - பெற்றுக்கொள்ளென்று, வீமன்-வீமராசன், அளித்தனன் — கொடுத்தான் எ-று.

முத்தழலாவன — தக்ஷிணாக்கினியம், காருகபத்தியம், ஆகவனீயம் என்பனவாம். 14

மக்கள்வாண்முகநோக்கியமடவரனெஞ்ச
நெக்குவாடுதல்கண்டுகற்றுளநெகிழ்ந்து
கக்குசெந்தழற்காலவேற்காதலற்குறுகி
நக்கபூங்கழனளினயுநாடுகென்றுரைத்தாள்.

தமயந்தி தாய், நளனையுந் தேடுவிக்குமாறு.
வீமனிட முரைத்தல்.

இ-ள். மக்கள் — பிள்ளைகளினது, வாள்முகம் — ஒளிபொருந்திய முகத்தை, நோக்கியும் — பார்த்தபின்பு, மடவரல்-தமயந்தியினது, நெஞ்சம்-மனமானது, நெக்குவாடுதல் — நெகிழ்ந்துவாடுதலை, கண்ட — பார்த்த, நல் தாய்-ஈன்ற தாயானவள், உளநெகிழ்ந்து — மனமுருகி, கக்கு — கக்கப்பட்ட, செந்தழல் — சிவந்த அக்கினிபொருந்திய, காலன் — யமனையொத்த, வேல்-வேலாயுதத்தையேந்திய, காதலன் — தன்னுயகணவனாகிய வீமராசனை; குறுகி - கிட்டிகின்று, நக்கபூங்கழல் — விளங்குகின்ற அழகிய வீரக்கழலையணிந்த, நளனை

யும் - நளமகாராசனையும், நாடுக என்று - தேடுகவென்று, உரைத்தாள்- சொல்லினாள் எ-று. 15

ஓடரிக்கணிருரைத்தலுமொற்றரைக்கூவி
யாடகப்பசும்பொலன்கழனளனீராய்ந்து
தேடிவம்மினென்றரசர்கோன்றிசைதோறுஞ்செலுத்த
நாடினரவர்நளிகடல்வரைப்பெலாநடந்தே.

நளனைத் தேடிவருமாறு வீமன் வேவுகாரரை யனுப்புதல்.

இ-ள். ஒடு அரிக்கணிள் - நீண்ட அரிபரந்த கண்களையுடைய காஞ்சன மாலையானவள், உரைத்தலும் - சொன்னமாத்திரத்தில், ஒற்றரை - வேவு காரரை, கூவி - அழைத்து, ஆடகம் - பொன்னுலாகிய, பசு - பசுமை யாகிய, பொலம் - அழகிய, கழல் - வீரக்கழலையணிந்த, நளனை - நளமகா ராசனை, நீர் - நீங்கள், ஆய்ந்து - ஆராய்ந்து, தேடி - திரிந்து பார்த்து, வம்மின் - வாருங்கள், என்று - என்றுசொல்லி, அரசர்கோன் - வீமராசன், திசைதோறும் - எட்டுத்திக்கிலும், செலுத்த - (அவர்களை) அனுப்ப, அவர்- அவ்வேவுகாரர், நளி - குளிர்ச்சிபொருந்திய, கடல்வரைப்பு எல்லாம்- சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டல முழுதினும், நடந்து - திரிந்து, நாடினர்- தேடினார்கள் எ-று. 16

தருவுமொற்றரிலொருவன்மீண்டணங்கின்முன்றோன்றி
யரிவைமூதெயிலயோத்திமாநகரினிலடைந்தேன்
புரிகருங்குழன்மனிவியைப்போக்கினன்புலம்பு
மொருவனிவ்வுழியுண்டுகொல்லெனவினவினனால்.

பருணதன் என்னும் பிராமணன் அயோத்தியிற் முன்வினைய வற்றைத் தமயந்திக்குத் தெரிவித்தல்.

இ-ள். தருவும் - தேடுகிற, ஒற்றரில் - வேவுகாரருள், ஒருவன் - பரு ணதனென்னுமொருபிராமணன், மீண்டு - திரும்பிவந்து, அணங்கின்முன்- தமயந்தியின் முன்னிலையில், தோன்றி - கின்று, அரிவை - இராசகுமா ரத்தியை, மூது - பழைய, எயில் - மதில்சூழ்ந்த, அயோத்திமாநகரினில்- அயோத்தியாபுரியில், அடைந்தேன் - சென்றேன், புரி - விரும்பப்பட்ட, கருங்குழல் - கரியகூந்தலையுடைய, மனிவியை - மனையாட்டியை, போக்கி னன் - விடுத்தவனுகி, புலம்பும் - தனப்படுகின்ற, ஒருவன் - யாவனுயினு மொருவன், இவ்வுழி - இந்தப்பட்டினத்தில், உண்டுகொல் - உளனு, என - என்று, வினவினன் - விசாரித்தேன் எ-று. ஆல் - அசை. 17

ஓகையோடெனக்கொருவனுங்குளக்கனிந்துருகி
வாகைவெஞ்சிலையிருதுபன்னற்குயர்மான்றேர்ப்
பாகன்கொய்யுளைப்பரியுளந்தேர்பவனெருவன
ரோகையைப்பிரிந்தாளுருழப்பவன்சோர்வான்.

இ-ள். ஒகையோடு – அன்புடனே, ஏனக்கு – எனக்கு, ஒருவன் – ஒரு மனிதன், ஆங்கு – அவ்வயோத்திநகரத்தில், உளம்கனிந்து – மனங்கனிந்து, உருகி – கரைந்து, வாகை – வெற்றிமாலையணிந்த, வெம் சிலை – வெவ்விய வில்லையேந்திய, இருதுபன்னற்கு – இருதுபன்னவரசனுக்கு, உயர்மான் தேர் – உயர்ந்த குதிரைகட்டிய தேரை நடத்துகின்ற, பாகன் – சாரதியும், கொய்உளை – கொய்துகட்டிய புறமயிரினையுடைய, பரி – குதிரைகளினது, உளம் – மனதை, தேர்பவன் – அறிபவனும், ஒருவன் – தனித்தவனும், தோகையை – மனையாளை, பிரிந்து – பிரிவுற்று, ஆளுர் உழப்பவன்மிகுந்த துன்பப்படுகின்றவனும், சோர்வான் – சோர்வையடைகின்றவனும்.

அழலிலாதுணவமிர்தெனவடுத்தொழில்புரிவோன்
மழகளிற்றினன்னடையினன்வாகுவனென்போ
னெழுவுலாந்திணிதோளினனீங்குளனென்ன
வொழுகுபூங்கொடிமருங்குலாயுணர்ந்தனன்வந்தேன்.

இ-ள். அழல் இலாது – நெருப்பில்லாமல், உணவு – உண்டியை, அமிர்து என – அமிழ்தமெனும்படி, அடுத்தொழில் – சமைத்தலை, புரிவோன் – செய்வானும், மழகளிற்றின் – இளமைதங்கிய யானைபோல, நல் நடையினன் – நல்ல நடையை யுடையவனும், வாகுவன் என்போன் – வாகுவனென்னும் பெயரையுடையவனும், எழுஉலாம் – தூண்போலுலாவுகிற, திணி – வலிமைபொருந்திய, தோளினன் – தோள்களையுடையவனுமாகிய (ஒருவன்), ஈங்கு – இந்நகரத்தில், உளன் – இருக்கின்றான், என்ன – என்றுசொல்ல, ஒழுகு – தேனொழுகுகின்ற, பூங்கொடி – புட்பக்கொடியையொத்த, மருங்குலாய் – இடையையுடைய தமயந்தியே, உணர்ந்தனன் – இச்செய்தியறிந்தவனாகி, வந்தேன் – இவ்விடம் வந்தேன் (என்றான்.)

வீமன்தேடவிட்டபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 1111.

கலி நீங்கு படலம்.

இப்படலத்தால் நளனிடத்திற் பொருந்தி வருத்தி
யிருந்த கலியன் நளன் அகூவித்தை யறிந்தபின்
அவனிடத்தில் நில்லாதுவிட்டு நீங்குதல்
சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

என்றுகூறியவந்தணற்கிருநிதிவழங்கி
நன்றுநின்னுரையின்னமும்மயோத்தியினண்ணி
மன்றன்மாலைவலிருதுபன்னற்குளமகிழ்வ
தொன்றுகூறுவதுளதெனவுரைத்தன்மேயினளால்.

தமயந்தி தனக்கு இரண்டாவது சுயம்வர மென்று
பருணதனிடஞ் சொல்லி அனுப்புதல்.

இ-ள். என்று கூறிய — இப்படியென்றுசொல்லிய, அந்தணற்கு — ஒற்றனுய்ச்சென்ற பருணதனென்னும் பிராமணனுக்கு, இருநிதி — மிகுந்த நிதிகளை, வழங்கி — கொடுத்து, நின் உரை — உன்சொற்கள், நன்று — நல்லது, இன்னமும் — மறுபடியும், அயோத்தியின் நண்ணி — அயோத்தி நகரத்திற் பொருந்தி, மன்றல் — வாசனைபொருந்திய, மாலை — பூமாலையணிந்த, வேல்-வேலாயுதமேந்திய, இருதுபன்னற்கு — இருதுபன்ன மகாராசனுக்கு, உளமகிழ்வது — மனங்களிப்பதாகிய, ஒன்று கூறுவது — ஒன்றுசொல்லத்தக்கது, உளது — உண்டு, என — என்று, உரைத்தன் மேயினள் — சொல்லினுள்.

நாட்டமூன்றுடைநாயகன்வரத்தினனங்கை
மீட்டுங்கன்னிகையாயினள்சுயம்வரம்விழைந்தாள்
கேட்டுமாநிலக்கிழவருமவ்வுழியிறுத்தார்
பூட்டுவார்சிலைமன்னநீபோதியேற்போவாய்.

இ-ள். நாட்டம் மூன்றுடை — திரிநேத்திரங்களையுடைய, நாயகன்-பரமசிவனது, வரத்தினுல் — அனுக்கிரகத்தினுல், நங்கை — தமயந்தியானவள், மீட்டும் — மறுபடியும், கன்னிகை ஆயினள் — கன்னிகையாகி, சுயம்வரம் — சுயம்வரத்தை, விழைந்தாள் — விரும்பினுள், கேட்டு — அச்செய்தி கேட்டு, மாநிலம்கிழ்வரும் — அரசர்களும், அவ்வுழி — அவ்விடத்தில், இறுத்தார் — வந்தடைந்தார்கள், பூட்டு-நாணேறிப்பட்ட, வார்சிலை-நீண்ட வில்லையேந்திய, மன்ன — இருதுபன்ன வரசனே, நீ போதியேல் — நீ போவையானுல், போவாய் — (விரைவிற்) போகக்கடவை எ-று. 2

நாளீகன்மணம்புணர்வதுநிடதநாடளிக்குங்
காளையாருயிருளன்கொலோகழிந்தனன்கொல்லோ

வாளிமொய்ம்பினனென்றுநீயறைகெனவறைந்தாள்
வானவென்றரிபரந்தமைதோய்ந்தகண்மடவாள்.

இ-ள். நாளை - நாளையத்தினத்தில், நல் - நல்ல, மணம்-விவாகமானது, புணர்வது - செய்யப்படுவதாய், நிடதநாடு - நிடத தேசத்தை, அளிக்கும்-இரட்சிக்காநின்ற, காளை - களமகாராசனுனவன், ஆர் - நிறைந்த, உயிர்-பிராணனுனது, உளன்கொலோ - இருக்கப்பெற்றனனோ, கழிந்தனன் கொல்லோ - நீக்கப்பெற்றனனோ, ஆளி - சிங்கத்தையொத்த, மொய்ம்பினுய்-பலத்தையுடைய இருதுபன்னனே, என்று-என்றுசொல்லி, நீயறைக எனநீசொல்லென்று, வாளை - வாளாயுதத்தை, வென்று - சயித்து, அரிபரந்து-செவ்வரிபரந்து, மைதோய்ந்த - அஞ்சனம்பொருந்திய, கண் - கண்களையுடைய, மடவாள் - தமயந்தியானவள், அறைந்தாள் - சொன்னுள் எ-று.

சுருதிநூற்றுறைபோயவன்றனிவினிலெய்தி
யிருதுபன்னனையடைந்திவையாவையுமியம்ப
மருமலர்க்குழன்மன்றல்கேட்டலுமுளமகிழ்வுற்
றுருவவாம்பரித்தேர்விடுவாகுவற்குரைப்பான்.

பருணதன் இரண்டாம் சுயம்வரமென்ன இருதுபன்னன்
குண்டின புரத்திற்குப் புறப்படல்.

இ-ள். சுருதிநூல் - வேத சாத்திரங்களினது, துறை - மார்க்கத்தில், போயவன் - சிறந்தவனுகிய வேதியன், தனிவினில் - சிக்கிரத்தில், எய்தி-(அயோத்தியை) அடைந்து, இருதுபன்னனை-இருதுபன்னராசனை, அடைந்து - நெருங்கி, இவையாவையும் - இவையனைத்தையும், இயம்ப-சொல்ல், மருமலர் - வாசனைபொருந்திய மலரையணிந்த, குழல் - கூந்தலையுடைய தமயந்தியினது, மன்றல் - விவாகவார்த்தையை, கேட்டலும் - கேள்வியுற்ற மாத்திரத்தில், உளம் - மனமானது, மகிழ்வுற்று - களிப்புற்று, உருவவாம்-நேராகத் தாவாநின்ற, பரி - குதிரை கட்டிய, தேர்விடும் - தேரைச் செலுத்தாநின்ற, வாகுவன்கு - வாகுவன் என்னுஞ் சாரதிக்கு, உரைப்பான் - சொல்லுவான் எ-று. 4

தளருநுண்ணிடைத்தமயந்திசுயம்வரநாளை
யுளவயப்பசும்புரவியினுள்ளமோர்ந்தனையேற்
றெளியுங்கேள்வியாய்விரைவினிற்செலுத்துகதெனென்
றளிமுரன்றுபைந்தேனுகர்தாரிஞனறைந்தான்.

இ-ள். தளரும் - தளர்ச்சியடையாநின்ற, நுண் இடை - நுட்பமான இடையையுடைய, தமயந்தி - தமயந்தியினது, சுயம்வரம் - சுயம்வரமானது, நாளை - நாளைத்தினத்தில், (நடக்கின்றது) உளை - புறமயிரினையும், வயம்-வெற்றியையுமுடைய, பசு - பசுமையாகிய, புரவியின் - குதிரையினது, உள்ளம் - மனதை, ஓர்ந்தனையேல் - அறிவர்யானுல், தெளியுங்கேள்வியாய் - தெளிவுபெறுங் கேள்வியையுடைய வாகுவனே, விரைவினில்-

சிக்கிரத்தில், தேர் – இரதத்தை, செலுத்துக – நடத்துக, என்று – என்று சொல்லி, அளி – வண்டுகள், முரன்று – சத்தித்து, பைந்தேன் – பசிய தேனை, நுகர் – உண்ணும்படியான, தாரினன் – மாலையணிந்த இருஷபன்னமகாராசன், அறைந்தான் – சொன்னன் எ-று. 5

கேட்டவாகுவன்கிளியெனமிழற்றுதீங்கிளவி
காட்டுணீத்ததுநினைத்தனளாயினுங்கற்பு
காட்டுகின்றவளித்திறம்புரியுமோநம்மைக்
கூட்டுதற்கிஃதிழைத்தனளாமெனக்குறித்தான்.

இ-ள். கேட்ட – அச்சொல்லைக்கேட்ட, வாகுவன் – வாகுவனென்னும் பெயரினையுடைய னன், கிளியென – கிளிபோல, மிழற்று – சொல்லப்பட்ட, தீங்கிளவி – மதுரமான சொற்களையுடைய தமயந்தியானவள், காட்டுள் – காட்டினுள், நீத்தது – விடுத்ததை, நினைத்தனளாயினும் – (விரோதமாக) நினைத்தாளாலும், கற்பு – பதிவிரதாதர்மத்தை, காட்டுகின்றவள் – நிலைநிறுத்துகின்றவள், இத்திறம் – இவ்வண்ணமாக, புரியுமோ – செய்வாளோ (செய்யாள் ஆயினும்) நம்மை – எம்மை, கூட்டுதற்கு – (தன்னுடன்) கூட்டுதற்கு, இஃது இழைத்தனளாம் – இதைச் செய்தவளாவாள், என – என்று, குறித்தான் – கருதினன் எ-று. 6

கொறில்வயப்பரித்தேர்பண்ணிநொய்தினிற்கொணரா
வெறுழ்வலித்தடந்தோளினுய்தேர்மிசையிவரி
னறுமலர்ப்பசும்பூந்தொடைவிதர்ப்பர்கோனுட்டி
லுறுவலிப்பகல்கழிவதன்முன்னெனவுரைத்தான்.

இ-ள். கொறில் – வேகமும், வயம் – வெற்றியும் பொருந்திய, பரிகுதிரைகட்டிய, தேர் – இரதத்தை, பண்ணி – அலங்கரித்து, நொய்தினில் – சிக்கிரத்தில், கொணரா – (வாகுவன்) கொண்டுவந்து, எறுழ்வலி – மிகுந்த வலிமைபொருந்திய, தடதோளினுய் – பருத்த தோட்களையுடைய இருஷபன்ன வரசனே, தேர்மிசை – தேரினில், இவரில் – ஏறிக்கொள்வையாகில், நறுமலர் – வாசனைபொருந்தியமலர்களொடுத்த, பசு – குளிர்ந்த, பூந்தொடை – அழகிய மாலைகளையணிந்த, விதர்ப்பர்கோன் – வீமராசனது, நாட்டில் – தேசத்தில், இப்பகல் – இற்றைத்தினம், கழிவதன்முன் – நீங்குவதற்கு முன்னமே, உறுவல் – அடைவேன், என – என்று, உரைத்தான் – சொன்னன் எ-று. 7

என்றுகூறலுமிளங்கதிர்ப்பரிதிபோலிறைவன்
குன்றுபோலுயர்கொடிஞ்சியந்தேர்மிசைக்கொள்ள
நின்றியாவரும்வியப்புறநினைவருங்கடுப்புண்
மன்றலந்தொடைவாகுவன்வாம்பரிவிடுத்தான்.

நளனுகிய வாகுவன் தேரை மிக்க வேகமாக நடத்திச்செல்லுதல்.

இ-ள். என்றுகூறலும் – இப்படி சொன்னமாத்திரத்தில், இளங்கதிர்ப் பரிதிபோல் – பால சூரியன்போல, இறைவன் –, இருதுபன்னவரசன், குன்றுபோல் – மலைபோல, உயர் - உயர்ந்த, கொடிஞ்சி - மேற்பரப்பை யுடைய, அம் தேர்மிசை – அழகிய தேரினில், கொள்ள – ஏறிக்கொள்ள, நின்றயாவரும் – பார்த்திருந்த அனைவரும், வியப்பு உற – ஆச்சரியப்பட, நினைவரும் – எண்ணுதற்கரிய, கடுப்பின் - வேகத்திலும், மன்றல்-வாசனைபொருந்திய, அம்தொடை – அழகிய மாலையணிந்த, வாகுவன்-வாகுவனுனவன், வாம்பரி - தாவாநின்ற குதிரைகளை, விடுத்தான் – நடத்தினன் எ-று. 8

விடுத்தவாம்பரிவருந்த லுமெய்த்தவர்தனக்குக்
கொடுத்தவிஞ்சையைக்கொய்யுளைப்பரியெடுங்கூறக்
கடுப்பையாவருமுணர்ந்திலர்கால்விசைத்தேறடி
யடுத்தவார்கழல்வித்தர்ப்பர்கோணணிகெழுநாட்டில்.

வாகுவன் மந்திரத்தை யசுவங்களின் செவியிற்கூற
அவை வேகமாக வீமன் நாடடைதல்.

இ-ள். விடுத்த – செலுத்தப்பட்ட, வாம்பரி - தாவாநின்றகுதிரைகள், வருந்தலும் – வருந்துமளவில், மெய்த்தவர் – முனிவர்கள், தனக்குக் கொடுத்த - தனக்குபதேசித்த, விஞ்சையை – மந்திரத்தை, கொய் – கொய்து கட்டிய, உளை – புறமயிரினையுடையு, பரியொடும் - குதிரையோடு, கூற உபதேசிக்க, கடுப்பை - (தங்கள்) வேகத்தை, யாவரும் – எவரும், உணர்ந்திலர் - அறிந்திலர், (ஆம்படி) கால்விசைத்து - கால்களைவீசி, ஏடி - சென்று, வார்கழல் – நீண்டவீரக்கழலையணிந்த, வித்தர்ப்பர்கோன் – வீமராசனது, அணிகெழும் – அழகுபொருந்திய, நாட்டில் - தேசத்தில், அடுத்த – சேர்ந்தன எ-று. 9

கூந்தன்மாவுளமறிதலிற்சாலிகோத்திரனே
வாய்ந்தகேள்வியின்மாதலியோவன்றிநளனு
மேந்தலவேற்றுருவெடுத்தனனெனவெண்ணி
வேந்தர்வேந்தனுமணிமுடிதாழக்கினன்வியந்தான்.

நளன் சாரத்தியத்தைக்கண்டு இருதுபன்னன்
இறும்பூது (ஆச்சரியம்) அடைதல்.

இ-ள். கூந்தல் மா – புறமயிரையுடைய குதிரைகளினது, உளம்-மனதை, அறிதலின் – உணர்வதில், சாலிகோத்திரனே – சாலிகோத்திர முனிவனே, (அன்றி) வாய்ந்த கேள்வியின் – பொருந்திய கேள்வியையுடைய, மாதலியோ – இந்திராசாரதியோ, அன்றி – அல்லவாயின், நளனும் – நளமகாராசனுகிய, வேந்தல் – அரசன், வேறு உரு எடுத்தனனே-

வேறருவெடுத்து வந்தனனே, எனை எண்ணி – என்று சிந்தித்து, வேந்தர் வேந்தனும் – இருதுபன்னராசனும், மணி முடி – நவரத்தின கிரீடந்தரித்த சிரத்தை, தளக்கினன் – அசைத்து, வியந்தான் – சந்தோடித்தான் எ-று.

முத்தவெண்குடைவேந்தர்கோன்முழவுறழ்தடந்தோ
ளுத்தரீயமங்கெறியிடைவீழ்தலுணர்ந்து
தத்துவாம்பரிநிறுவியத்துகிறருகென்ன
பத்தியோசனைகடந்ததுதேரெனப்பகர்ந்தான்.

அங்கவத்திரம் வீழ்ந்தது அதை யெடுத்துத் தருக என்று சொல்லு தற்குமுன் பத்தியோசனைதூரம் சென்றமை பகர்தல்.

இ-ள். முத்தவெண்குடை – முத்தினாற்செய்த வெள்ளைக் குடையைத் தரித்த, வேந்தர்கோன் – இருதுபன்ன வரசனுவன், முழவு உறழ் – மத்தளத்தையொத்த, தடதோள் – பருத்த தோள்களினின்றும், உத்தரீயம் – அங்கவத்திரமானது, அ நெறியிடை – அந்த மார்க்கத்தில், வீழ்தலும் – வீழ்ந்த மாத்திரத்தில், உணர்ந்து – தெரிந்து கொண்டு, தத்துவாம் – தாவியோடுகின்ற, பரி – குதிரைகளை, நிறுவி – நிறுத்தி, அத்துணில் – அந்த அங்கவத்திரத்தை, தருக என்று – தாவென்றுகேட்க, தேர் – இரதமானது, பத்தியோசனை – பத்தியோசனை தூரம், கடந்து – கடந்து வந்தது, எனஎன்று, பகர்ந்தான் – (வாகுவன்) சொன்னன் எ-று. 11

இன்னவாய்மைகேட்டரசனும்வியப்புடனேகப்
பின்னுமையிருகாவதமகன்றதற்பின்னர்
முன்னர்த்தோன்றியதளியின்மம்பெடையொடுமூசப்
பொன்னந்தாதுகுழுந்துணர்ப்பொரியரைத்தான்றி.

வழியில் தான்றிமரந் தோன்றுதல்.

இ-ள். இன்ன வாய்மை — இத்தன்மையான வசனத்தை, கேட்டுகேள்வியுற்று, அரசனும் – இருதுபன்னவரசனும், வியப்புடன் – ஆச்சரியத்துடனே, ஏக – போக, பின்னும் – பின்பும், ஐயிருகாவதம் – பத்துக் காதவழி, அகன்றதற்பின்னர் – சென்றபின்பு, அளி இனம் – வண்டுக்கூட்டங்கள், பெடையொடும் – பெட்டைவண்டுகளுடனே, மூச – மொய்க்கப் பெற்ற, பொன்னம் – பொன்போலழகிய, தாது – மகரந்தப்பொடிகள், உரும் – உதிரப்பெற்ற, பூந்துணர் – புட்பக்கொத்துகளையும், பொரி அரைபெருக்கெடுத்த அரையையுமுடைய, தான்றி – தான்றிமரமானது, முன்னர் – எதிரில், தோன்றியது – காணப்பட்டது எ-று. 12

தான்றிமாமரந்தோன்றலுந்தேரினைத்தகைத்துத்
தோன்றுமிம்மரத்திலைகளுந்தொக்கமென்பழனு
மூன்றுகோடியேமுப்பதிற்றிரண்டெனமொழிய
வான்றகேள்வியோனெண்ணியற்றுமெனவியந்தான்.

இருதுபன்னன் தான்றிமரத்தைப் பார்த்து இலை பழங்கள் இவ்வளவென்று உடனேகூறல்.

இ-ள். மாதான்றிமரம் - பெரிய தான்றிமரமானது, தோன்றலும்-காணப்பட்டவளவில், தேரினை - இரதத்தை, தகைத்து — (இருதுபன்னவரசன்) நிறுத்துவித்து, தோன்றும் — காணப்படும், இம்மரத்து - இந்தமரத்தில், இலைகளும் - இலைகளும், தொக்கமெல் பழனும் - நெருங்கிய மென்மையான பழங்களும், மூன்று கோடியே மூப்பதிற்று இரண்டென — இரண்டு தலையிட்டமுப்பதை மேற்கொண்ட மூன்றுகோடியென, மொழிய-சொல்ல, ஆன்றகேள்வியோன் — நிறைந்தகேள்வியையுடைய நளமகாராசன், எண்ணி-அம்மரத்தினிலை முதலியவற்றைக் கணக்கிட்டு, அற்றும்-நீசொல்லுமத்தன்மைத்தாம், என - என்றுகூறி, வியந்தான் - (அக்கணக்கறிவினி) லாச்சரியப் பட்டான் எ-று. 13

இனையவிஞ்சைமற்றெனக்குநீயளித்தனையென்னிற்
றுனைவபப்பரியுளமுணர்விஞ்சையான்சொல்வன்
வனைபொலங்கழன்மணிமுடிமன்னவென்றுரைப்ப
வனையவிஞ்சையைவாகுவற்களித்தனனன்றே.

நின்வித்தை யளிப்பின் எனது வித்தையைக் கொடுப்பேனென நளன்கூறல்.

இ-ள். இனைய விஞ்சை - இத்தன்மையாகிய வித்தையை, எனக்கு-என்றனக்கு, நீ அளித்தனை என்னில் - நீ கொடுப்பாயாஞல், துனை - வேகமுடைய, வயம் - வெற்றிபொருந்திய, பரி - குதிரைகளின், உளம்-மனத்தை, உணர்விஞ்சை - அறியும் வித்தையை, வனை - கட்டப்பட்ட, பொலம்கழல்-பொன்னூற்செய்த வீரக்கழலையும், மணிமுடி - நவரத்தினம்பதித்த கிரீடத்தையுந் தரித்த, மன்ன - இருதுபன்ன வரசனே, யான் - நான், சொல்வன்-(உனக்குச்) சொல்வேன், என்றுரைப்ப - என்றுவாகுவன்சொல்ல, அனைய விஞ்சையை - அந்த வித்தையை, வாகுவற்கு - வாகுவனுக்கு, அளித்தனன்-(இருதுபன்ன வரசன்) கொடுத்தான் எ-று. மற்று — அசைநிலை, பரி பரிப்பது, குதிரை - அந்த வித்தையாவது கணக்குவித்தை! அதுவே அசுவித்தையாம். 14

இருதுபன்னன்விஞ்சையைவாகுவற்கிய
மருவினின்றவன்கலிதனைந்தேதகிவாளரவி
னெரிசெய்வெவ்விடங்கான்றலினிதயநெக்குருகி
வெருவிவாய்விடாவிடத்தினையுமிழ்ந்தனனன்றே.

கலி நளனைவிட்டுப் பிரிதற் கேதுவுரைத்தல்.

இ-ள். இருது பன்னன் - இருதுபன்னவரசன், அவ்விஞ்சையை - அக்கணக்கு வித்தையை, வாகுவற்கு — வாகுவனுக்கு, நளனுக்கு, ஈய - கொடுக்க, மருவினின்ற — (நளனை) மருவியிருந்த, வன்கலி — வலிமையுள்ள கலியனை

வன், தணந்து எகி – (நளமகாராசனை) விட்டு நீங்கிப்போய், வாள் அரவம்-ஒளிபொருந்திய கார்க்கோடக நாகமானது, எரிசெய் – தகிக்காநின்ற, வெம் விடம்-கொடியவிடத்தை, கான்றலில் – (தானிருந்த நளனிடத்திற்) கக்கின மையால், இதயம்-மனமானது, நெக்குருகி – கரைந்தருகப்பெற்று, வெருவி-பயந்து, வாய்விடா-வாய்விட்டு, விடத்தினை-(கார்க்கோடகனது) விடத்தை, உமிழ்ந்தனன் – கக்கினனென எ-று. அன்று ஏ – அசைகள். 15

தணந்தவெந் திறற்கலியனைச்சபிக்குபனென்னக்
கணங்கொள்வண்டிமிர்தாரிளனுளத்திடைக்கருத
வுணர்ந்தவெங்கலிதமயந்திபுரைத்தசாபத்தா
லணங்காவுமிழ்விடத்தினுலின்றளவயர்ந்தேன்.

நளன் கலிபுருடனைச் சபிக்குமாறுன்ன, அவன்
நளனை வேண்டாமென்று இரத்தல்.

இ-ள். தணந்த – தன்னைப்பிரிந்து நின்ற, வெம் திறல் – வெவ்வியபல த்தையுடைய, கலியனை – கலிபுருடனை, சபிக்குவன் என்ன – சபிப்பேனென் று, கணம் கொள்-கூட்டங்கொண்ட, வண்டு – வண்டுகள், இமிர்-சத்தியா கின்ற, தாரினன் – மாலையணிந்த நளமகாராசன், உளத்திடை-மனத்தினில், கருதல்-நினைத்தலை, உணர்ந்த - அறிந்த, வெங்கலி – கொடிய கலியனை வன், தமயந்தி உரைத்த – தமயந்திசொற்ற, சாபத்தால் - சாபத்தினால், ஆணங்கு – அச்சத்தைத்தருகின்ற, அரா-கார்க்கோடக நாகமானது, உமிழ்-உமிழ்ந்த, விடத்தினால்-நஞ்சினால், இன்றளவு-இற்றைமட்டும், அயர்ந்தேன்-சோர்வை யடைந்தேன் எ-று. 16

இழைத்ததீவினைதணந்தனனின்றுதொட்டுன்பேர்
வழுத்தினுரையுமருவலன்மன்னவன்றேத்த
வழற்கொடுஞ்சினந்தணிந்தனலடல்வேலரசன்
குழைத்ததான்றியிலேறினன்கொடியவெங்கலியே.

நின்பேரை யுரைத்தவரையும் தீண்டேனென்று
ஆணையிட்டுக் கலி புருடன் போதல்.

இ-ள். இழைத்த – செய்யப்பட்ட, தீவினை – கொடுஞ்செய்கைகளை, தணந்தனன் – விட்டு நீங்கினேன், இன்றுதொட்டு – இன்றைத்தினமுதற் கொண்டு, உன்பேர் – உன்னுடைய நாமத்தை, வழுத்தினுரையும் – அழைத்த வரையும், மருவலன் – சேரேன், மன்ன – நளமகாராசனே, என்று ஏத்த-என்றுதுதித்த, அடல் – போர்செய்கின்ற, வேல் – வேலையேந்திய, அரசன்-நளமகாராசனவன், அழற்கொடு - அக்கினிபோற்கொடிய, சினம் – கோ பத்தை, தணிந்தனன்-விடுத்தான், குழைத்த-தளிர்த்த, தான்றியில்-தான்றி மரத்தில், கொடிய – குரூரமுடைய, வெங்கலி-வெவ்விய கலியனவன், ஏறி னன் – ஏறிக்கொண்டான் எ-று.

இழைத்த – இதன்கண் படிவுறுதி தொக்குநின்றது. பெயர் – பேர் என மரூஉவிற்று. வழுத்தினரையும் – இதன்க்ணுள்ள உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை தன்னை வணங்கினரை வெகுளல் அரசர்க்கு முறையின்மையாற், கலியேத்த அரசன் எனத்தணிக்தான் என்க: 17

கலிங்குபடல முற்றிற்று.

ஆ செய்யுள் - 1128.

தேவியைக் கண்ணுற்றபடலம்.

இப்படலத்தால் கலிங்கியபின்பு நளமகாராசன் வீமனது குண்டின நகரத்தில் வந்து மூன்றுவருடம் பிரிவுற்ற தனது தேவியாகிய தமயந்தியைக் காண்டல் சொல்லப்படுகின்றது.

கலிங்கிலத்துறை.

விண்டமென்மலர்ந்தறவினைவிளரியஞ்சுரும்ப
ருண்டுதுஞ்சுதார்நிடதர்கோன்றேர்கடிதோட்டி
மண்டுதீம்புனலகழிசூழ்மாமதிற்குடுமிக்
கொண்டல்கண்படுகுண்டினபுரத்தில்வந்தடைந்தான்.

நளன் குண்டின புரத்தை யடைதல்.

இ-ள். விண்ட – மலர்ந்த, மென் மலர் – மெல்லிய புட்பங்களினது, நறவினை - தேனை, விளரி - விளரி யென்னும் பண்ணைப் பாடுகின்ற, அம் சுரும்பர் – அழகியவண்டுகள், உண்டு – குடித்து, துஞ்சும்-நித்திரைசெய்தற் கிடமாய், தார் – மாலையையணிந்த, நிடதர்கோன் - நளமகாராசன், தேர்-இரதத்தை, கடிது – விரைவினில், ஓட்டி – செலுத்தி, மண்டு-நிறைந்த நீம் புனல் – மதுரமான நீரையுடைய, அகழி - அகழியானது, சூழ்-சூழப்பெற்ற, மீமதில் – பெரிய மதில்களினுடைய, குடுமி-சிகரத்தில், கொண்டல்-மேகங் கள், கண்படு-நித்திரை செய்யும்படியுள்ள, குண்டினபுரத்தில்-வீமராசனது பட்டினத்தில், வந்து அடைந்தான் – வந்துசேர்ந்தான் எ-று. 1

சில்லியந்தடந்தேர்வருகம்பலைகேளா
வெல்லியத்திறந்தேர்விடநளனலாதொருவர்
வல்லரோவெனமனத்திடையெண்ணிமற்றனையோ
னல்லனேலுயிர்துறப்பனென்றுன்னினளணங்கே.

தேரொலிகேட்டு வருவோன் நளனன்றேல் உயிர்
துறப்பேன் என்று தமயந்தியுரைத்தல்.

இ-ள். சில்லி – உருளையையுடைய, அம் தடதேர் – அழகியவிசாலமா கியதேரானது, வரும் – வருகின்ற, கம்பலை - சத்தத்தை, கேளா – கேட்டு, ஒல்லை – சீக்கிரத்தில், இத்திறம் - இவ்வண்ணமாக, தேர்விட-தேரைச்செலு த்த, நளனலாது – நளனேயல்லாமல், ஒருவர் – மற்றொருவர், வல்லரோ-திற மையுள்ளவரோ, என – என்று, மனத்திடை-மனத்தில், எண்ணி-சிந்தித்து, அனையோன் – இவன், அல்லனேல் – நளனல்லனாயின், உயிர்துறப்பல்-உயி ரைவிடுவேன், என்று – என்று, அணங்கு - தமயந்தியானவள், உன்னினள்-எண்ணினாள் எ-று. 2

மருவுபாகனேத்தேரொடும்வாயிலினிறுவி
யிருதுபன்னனவ்வீமன்மாட்டேக்குமெதிராப்
புரிவயாவையும்புரிந்துபல்காவதம்போக்கி
யுருவப்பூணினுய்வந்தமையெவன்கொலென்றுரைத்தான்.

இருதுபன்னன் வீமனை யடைதலும், அவனுபசரித்து
வந்தது என்னென வினவல்.

இ-ள். மருவு—பாகனை, பொருந்திய—சாரதியை, தேரொடும்-இரதத்தோடும், வாயிலில்—அரண்மனைவாயிலில், நிறுவி-நிறுத்தி, இருதுபன்னன்-இருதுபன்ன வரசனுனவன், அவ்வீமன் மாட்டு—அந்த வீமராசனிடத்து, ஏகலும்—சென்ற வளவில், எதிராப்புரிவயாவையும்-எதிர் வந்து செய்யத்தக்க மரியாதை யினத்தையும், புரிந்து—செய்து, பல்காவதம் போக்கி-பலகாதவழியைக்கடந்து, உருவம் பூணினுய்—அழகிய ஆபரணத்தையுடைய இருதுபன்னவரசனே, வந்தமை—(நீ) இவ்விடம் வந்த தன்மை, எவன் கொல்—என்ன காரணமோ, என்று—என்று, உரைத்தான்—(வீமராசன்) சொன்னன எ-று. 3

ஈங்கடைந்ததுமன்னநிற்காணியவெனலும்
வீங்குதோளினினியநன்மொழிபலவிளம்பிப்
பாங்குளார்தமையுறையுளொன்றமைக்கெனப்பணிப்ப
வாங்குவிண்ணவர்நகரினும்விழுமிதான்றமைத்தார்.

இருதபன்னற்கு வீமன் உபசாரங்கூறி
அரண்மனையியற்றுவித்தல்.

இ-ள். மன்ன—வீமராசனே, ஈங்கு—இங்கரத்தில், அடைந்தது-வந்தது, நின் காணிய—உன்னைக் காண்பதற்கு, எனலும்—என்றுசொல்லிய மாத்திரத்தில், வீங்கு தோளினன்—பருத்த புயத்தையுடைய வீமராசனனவன், இனிய—இனிமையான, நன்மொழி—நல்ல சொற்களை, பலவிளம்பி-பலவாகச்சொல்லி, பாங்குளார்தமை—அருகிலுள்ள ஏவலாளரை (பார்த்து), உறையுள் ஒன்று—ஒருவிடுதிவீட்டை, அமைக்க என—செய்யுங்க ளென்று, பணிப்ப—உத்தரவு கொடுப்ப, ஆங்கு—அவ்விடத்தில், விண்ணவர் நகரினும்—சுவர்க்கத்தைக் காட்டிலும், விழுமிது—மேன்மையதாகிய ஒன்று—ஒருவிடுதிவீட்டை, அமைத்தார்—(ஏவலாளர்) செய்து முடித்தார்.

இருதுபன்னன்வேந்தருளினுலவ்வினெய்தி
யரசர்யாவருந்தாக்கிலராய்வளைப்பணைத்தோள்
விரைசெய்கோதைதன்சுயம்வரமென்னவேதியன்மூன்
னுரைசெய்மாற்றமற்றென்கொலென்றியிர்த்தனுறைந்தான்

41

அரசன் சுயம்வர மில்லேபோலும் என்று
சந்தேகித்து இருத்தல்.

இ-ள். இருதுபன்னன் — இருதுபன்ன வரசன், வேந்தருளினுல்-வீமனுத்தரவினுல், அவ்வயின் - அந்தவீட்டில், எய்தி - அடைந்து, அரசர் யாவரும் — அரசர்கள் எவரும், தொக்கிலர்வந்து — சேர்ந்தனரில்லே, ஆய்வேல — சிறந்த வேலையேயணிந்த, பணைத்தோள் — மூங்கிலே யொத்த தோள்களேயும், விரைசெய் - பரிமளிக்கின்ற, கோதை தன் — கூந்தலேயுமுடைய தமயந்தியினது, சுயம் வரம் என்ன — சுயம்வரமென்று, வேதியன் — பருணுதனென்னும் பிராமணன், முன் — முந்திய தினத்தில், உரைசெய்-சொல்லப்பட்ட, மாற்றம் - வார்த்தை, என்கொல் - எப்படிப்பட்டதோ, என்று — என்று, அயிர்த்தனன் — சந்தேகித்தவனுகி, உறைந்தான் - வாசஞ் செய்தான் எ-று. மற்று — அசை.

வேந்து - விளுதி கெட்டு நின்ற ஆண்பாற்பெயர். வயின் — ஏழாம் வேற்றுமை யிடப் பொருளுணர நின்ற வருபிடைச் சொல், விரை செய் கோதை எனவே இயற்கை மணஞ் செறிந்த கூந்தலாளெனப்பட்டுப் பெண்களுள் முதற்சாதிக் கேற்ற வடிவினள் தமயந்தி யென்பதாயிற்று. அயிர்த்தனன் — வினேமுற் றெச்சப்பொருளில் வந்தது. 5

சாந்தமென் முலேத்தமயந்திதோழியைநோக்கி
போந்தமன்னவன்பொற்றடந்தேரிடைப்பிணித்த
கூந்தன்மாவிடுசாரதிகொற்றவேனளனும்
வேந்தனேவெனவுணர்ந்திவண்வருகெனவிடுத்தாள்.

சாரதி நளனே வென்பதை யாராய்ந்து வருதி யென்று
தமயந்தி தோழியை யனுப்பல்.

இ-ள். சாந்தம் - சந்தனக்கோல மணிந்த, மெல்முலே — மெல்லிய முலேகளேயுடைய, தமயந்தி — தமயந்தியானவள், தோழியை — கேசினி யென்னுந் தனது பாங்கியை, நோக்கி — பார்த்து, போந்தமன்னவன் — வந்த விருதுபன்ன வரசனது, பொன் - அழகிய, தட — விசாலமாகிய, தேரினில் — இரதத்தில், பிணித்த - கட்டிய, கூந்தல்மா — புறமயிரினேயுடைய குதிரைகளே, விடும் — நடத்துகின்ற, சாரதி — தேர்ப்பாகனவன், கொற்றம் — வெற்றிபொருந்திய, வேல் — வேலாயுதந் தரித்த, நளனும் — நளனுகிய, வேந்தனே — அரசனே (அல்லனே), என — என்று, உணர்ந்து - அறிந்துக் கொண்டு, இவன் - இவ்விடத்தில், வருகென - வாவென்றுசொல்லி, விடுத்தாள் — அனுப்பினுள் எ-று. 6

கொங்குவாய்மடுத்தினவண்டுகூட்டுணுங்கூந்தற்
றிங்கள்வாண்முகத்தெரிவைதன்னேவலிற்றிறம்பா
மங்கையெய்திமற்றியாவனீயெத்தொழில்வல்லே
யிங்குவந்தவாறென்னெனவாகுவனிசைப்பான்.

சாரதியை யடித்துத் தோழி விலுதல்.

இ-ள். கொங்கு – தேனை, வாய் மடுத்து – வாயைவைத்து, இனவண்டு-கூட்டமாகிய வண்டுகள், கூட்டுண்ணும் – கொள்ளைகொண்டுண்ணப்பெற்ற, கூந்தல் - அளகத்தையும், திங்கள் – சந்திரன்போன்ற, வாள் முகம் – ஒளி பொருந்திய முகத்தையுமுடைய, தெரிவைதன் – தமயந்தியினது, எவலில்-உத்தரவினின்றும், திறம்பா – தவறாத, மங்கை – கேசினியானவள், எய்தி-அவ்விடத்திற்சென்று, யாவன் நீ - நீ யார், எத்தொழில் – எந்தத் தொழில்களில், வல்லை – வல்லமையுள்ளவன், இங்கு - இவ்விடத்தில், வந்த ஆறு-வந்ததன்மை, என் என - எப்படிப் பட்டதென்றுகேட்க, வாகுவன்-வாகுவனெனப்பட்ட நளன், இசைப்பான் – சொல்லுவான் எ-று. 7

விரிமலர்க்குழற்றமயந்திசுயம்வரம்வேட்ட
விருதுபன்னன்மான்றேர்விடும்வாகுவனென்பேர்
புரிவல்வென்றழலின்றியுமடைத்தொழில்புனலற்
றருகுபாலியிற்றீம்புனறருவலென்றுரைத்தான்.

வாகுவன் தன்னிலைமை யுரைத்தல்.

இ-ள். விரி - மலர்ந்த, மலர்-மலர்களையணிந்த, குழல்-கூந்தலையுடைய, தமயந்தி – தமயந்தியினது, சுயம்வரம் – சுயம்வரத்தினில், மான்தேர் – குதிரைகட்டிய தேரை, விடும் – நடத்துகின்ற, வாகுவன்-பாகன் என்பது, என் பேர் - என்பெயராம், வெந்தழல் – வெவ்விய அக்கினி, இன்றியும் – இல்லாமலும், மடைத்தொழில் - சமையல், புரிவல் – செய்வேன், புனலற்று - நீரில்லாமல், உருகு - உருகுகின்ற, பாலியில் – பாலை நிலத்தில், தீம்புனல்-மதுரமான சலத்தை, தருவல் – (உண்டுபண்ணிக்) கொடுப்பேன், என்று உரைத்தான் - என்றுசொன்னான் எ-று. 8

இன்னவிஞ்சைகணளனலாதறிகுரில்லை
யன்னவன் றரக்கொண்டீனபோலுமவ்வரசன்
மன்னிவாழ்வதெந்நகர்வயின்வகுத்துரையென்றாள்
பொன்னவாஞ்சுணங்கரும்பியபுணர்முலைப்பூவை.

தோழி நளனுனக் கிவ்வித்தை யளித்தான்போலும்
அவன் எவ்விடத்துள்ளானென வினவல்.

இ-ள். பொன் அவ்வாம் – பொன்னுமவாவும், சுணங்கு - தேமல், அரும்பிய-உண்டாகிய, புணர்முலை-நெருங்கிய தன்களையுடைய, பூவை-கேசினியானவள், இன்னவிஞ்சைகள் – இத்தன்மைய வித்தைகள், நளன் அலாது-நளனல்லாமல், அறிகுரர்-அறிந்தவர்கள், இல்லை - (ஒருவரு) மில்லை, அன்னவன் – அந்த நளமகாராசன், தர-கொடுக்க, கொண்டனைபோலும் - பெற்றுக்கொண்டாய்போலும், அவ்வரசன் – அந்த நளமகாராசன், எந்நகர்வயி-று

எந்தப் பட்டினத்தில், மன்னி – பொருந்தி, வாழ்வது - சுகித்திருப்பது, வகுத்து – பகுத்து, உரை – அதைச்சொல்லு, என்றாள் - என்று விளவினன்.

மேயவிஞ்சையோர்களனெடுங்கற்றிலன்விறல்வேற்
சேயனுன்னிதுறைவதிவ்விடமெனத்தெருளேன்
தூயகற்பினர்காதலர்துறப்பினுமற்றோர்
நாயகற்பெறினிவர்கொலோவெனநவின்றான்.

நளனிருக்குமிடந்தெரியாது அவன் நீங்கினாலும் தமயந்தி இரண்டாவது மணஞ்செயல் தகுமோவெனல்.

இ-ள். மேய - பொருந்திய, விஞ்சை-வித்தையை, ஓர் – ஒப்பற்ற, நளனெடும் - நளமகாராசனிடத்தில், கற்றிலன் - (நான்) கற்கவில்லை, விறல் வேல்-வெற்றிபொருந்திய வேலேந்திய, சேயனன்-சுப்பிரமணியனையொத்த நளமகாராசன், இன்னிது உறைவது – இனிமையோடிருப்பது, இவ்விடம்-இன்னவிடம், என – என்று, தெருளேன் – அறியேன், தூய - பரிசுத்தமாகிய, கற்பினர் – கற்பினையுடைய மாதர்கள், காதலர் – கணவர்கள், துறப்பினும் - துறந்துவிட்டாலும், மற்றோர் – வேறொரு, நாயகன்பெற-கணவனையடைய, நினைவர்கொலோ – நினைப்பரோ, என – என்று, நவின்றான் - (நளமகாராசன்) சொன்னன் எ-று. 10

இன்னகூறலுமடவரல்கதுமெனவேகி
மின்னனாளுடன்கேட்டனயாவையும்விளம்பி
பன்னவன்றனதுருவலான்மொழிகுவதனைத்து
முன்னினம்மிறைமொழிவதேபோன்மெனமொழிந்தாள்.

தோழி தமயந்தியிடம் சென்று வாகுவன் நளன்போலிருக்கிறானென்றல்.

இ-ள். இன்ன – இத்தன்மையாக, கூறலும் – சொன்னவளவில், மடவரல் – கேணியானவள், கதுமென – சரேலென்று, எகி – சென்று, மின்னனாளுடன் – தமயந்தியுடன், கேட்டவையாவையும் – கேள்வியுற்ற சங்கதிகளெல்லாம், விளம்பி - சொல்லி, அன்னவன் தனது – அந்நளமகாராசனது, உருவலான்-வடிவமில்லாத இப்பாகன், மொழிகுவதனைத்தும்-சொல்லுவதெல்லாம், முன்னில் – யோசிக்குமிடத்தில், நம் இறை – நமது நளமகாராசன், மொழிவதே போன்மென – சொல்வதைப் போலிருக்கிறதென்று, மொழிந்தாள் - சொன்னாள் எ-று. போனம் - மகரக்குறுக்கம். 11

மொழிதல்கேட்டலுமொய்குழல்வாலரியுதவி
யழலிலாதிவையடுவதுக்காண்டியென்றறையக்
குழைகொள்வாண்முகக்கோம்பனளவனுழைக்குறுகி
யிழைகொள்பூண்முலைசொற்றவாறிசைத்தனளீந்தாள்.

தமயந்தி நெருப்பின்றிச் சமைக்கும்படி
அரிசிகொடுத் தனுப்புதல்.

இ-ள். மொழிதல் – கேசினிசொல்லியவைகளை, கேட்டலும் – கேள்வியுற்ற மாத்திரத்தில், மொய்குழல் – தமயந்தியானவள், வால் – வெள்ளிய, அரி – அரிசியை, உதவி – கொடுத்து, அழலிலாது – நெருப்பின்றி, இவையடுவது – இவ்வரிசிகளைச் சமைப்பதை, காண்டி என்று-பார்த்துவாவென்று, அறைய – கூற, குழைகொள் – குண்டலமணிந்த, வாள்முகம் – ஒளிபொருந்திய முகத்தையுடைய, கொம்பனாள் – பூங்கொம்பையொத்த, கேசினியானவள், அவனுழை – அப்பாகனிடத்து, குறுகி – சென்று, இழைகொள்-நூலிழைகொண்ட, பூண் – ஆரங்களையணிந்த, முலை-தனங்களையுடைய தமயந்தி, சொற்றவாறு – சொல்லியபடி, இசைத்தனள் – சொல்லி, ஈந்தாள்-அவ்வரிசியைக் கொடுத்தாள் எ-று. 12

ஈந்தவாலரிபெய்தபொற்குழிசிதீயின்றி
யாய்ந்தகேள்வியான்றொடுதலுமடிசிலாயமைய
வேய்ந்தபூங்குழல்கண்டுபோய்வெம்முலைப்பொறையாற்
சாய்ந்தநுண்ணிடைத்தமயந்திதன்னுடுமொழிந்தாள்.

நெருப்பின்றிச் சமைத்ததைத் தோழிதெரிவித்தல்.

இ-ள். ஈந்த – கொடுத்த, வாலரி – வெள்ளிய அரிசியானவை, பெய்தபோடப்பட்ட, பொன்குழிசி – பொற்குடத்தை, ஆய்ந்த கேள்வியான் – நளமகாராசன், தொடுதலும் – (கையால்) தொட்டமாத்திரத்தில், தீ இன்றி – நெருப்பில்லாமல், அடிசிலாயமைய – சோறாயமைய, வேய்ந்த – தரிக்கப்பட்ட, பூங்குழல் – பூமாலையணிந்த கூந்தலையுடைய கேசினியானவள், கண்டு-அதைப்பார்த்து, போய் – சென்று, வெம்முலை – விருப்பத்தைத்தருகின்ற தனங்களினுடைய, பொறையால் – பாரத்தினால், சாய்ந்த – வணங்கிய, நுண் இடை – நுட்பமான இடையையுடைய, தமயந்தி தன் ஒடும் – தமயந்தியுடனே, மொழிந்தாள் – (இவ்வதிசயத்தைச்) சொன்னாள் எ-று. 13

அழலுநீருமின்றமிழ்தெனவடுதொழில்கேட்டுக்
குழையுநெஞ்சினளின்னுயிர்க்கொழுகனென்றெண்ணி
விழைவினோடுதன்மக்களையவனுழைவிடுத்தாண்
மழலைமென்மொழிமக்களுமன்னன்மாட்டடைந்தார்.

தமயந்தி பின்னரு முணர்த்தற்கு மக்களை விடுத்தல்.

இ-ள். குழையு நெஞ்சினள்-குழைந்த நெஞ்சத்தளாகிய தமயந்தியானவள், அழலும் – நெருப்பும், நீரும் – தண்ணீரும், இன்று–இல்லாமல், அமிழ்தென – அமிர்தம்போல, அடுதொழில் – சமைத்தலை, கேட்டு-கேள்வியுற்று (இவன்), இன்னுயிர்க்கொழுநன் – இனிதாகிய உயிரையொத்த (நமது)கணவன், என்றெண்ணி – என்றுகருதி, விழைவினோடு – ஆசையோடு, தன்மக்களை – தன்புதல்வரை, அவனுழை-அவனிடத்து, விடுத்தாள் – அனுப்பினள்,

மழலை மென்மொழி - மெல்லிய மழலை மொழிகளையுடைய, மக்களும்-பிள்ளைகளும், மன்னன்மட்டு - நளமகாராசனிடத்தில், அடைந்தார் - சேர்ந்தார்கள் எ-று. 14

அடைந்தமக்களைக்காண்டலுமழலிடுமெழுகி
னுடைந்ததுள்ளநீரூற்றிருந்தொழுகினநெடுங்கண்
டொடர்ந்தமும்மலமுருக்கிவெம்பவக்கடலொலையக்
கடந்துளோர்களுங்கடப்பரோமக்கண்மேற்காதல்.

மக்களைக்கண்டு நளனுஞ் சாரதி புலம்பல்
சொல்லப்படுகின்றது.

இ-ள். அடைந்த - தன்னிடத்துவந்த, மக்களை - புதல்வரை, காண்டலும் - பார்த்தமாத்திரத்தில், அழல் இடும் - நீயிலிட்ட, மெழுகின்-மெழுகு போல, உள்ளம் - (நளமகாராசன்) மனமானது, உடைந்தது - நெகிழ்ந்தது, நெடுங்கண் - நெடியகண்கள், நீரூற்றிருந்து - நீர் சுரந்து, ஒழுகின - சொரிந்தன, தொடர்ந்த-சனனங்கடோறு மனுசரித்த, மும்மலம்-ஆணவம் மாயை கன்மமெனு மூன்று மலத்தையும், முருக்கி - கெடுத்து, வெம் - கொடிய, பவம்கடல் - சனனசாகரத்தை, தொலைய - நீங்க, கடந்துளோர்களும் - கீத்தோரும், மக்கள்மேல் - பிள்ளைகண்மேல்வைத்த, காதல் - ஆசையை, கடப்பரோ - ஒழிப்பரோ - (ஒழியார்) எ-று.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழார்வலர்-புண்கணீர் பூசறரும்" எனவருஞ் திருக்குறளின்படி அன்பின் குறியாக நெடுங்கண் நீரூற்றிருந்து ஒழுகின என்றார். தொடர்ந்த மும்மலம் எனவே அநாதியே பந்தித்த ஆணவமலமும், பிரவாகரூபியாய்ச் சேரும் மாயை கன்மங்களும் கொள்ளப்படும். மாயா காரியமெனும் மாயேயத்தையும், அவ்வம்மலங்களை யவ்வத் தொழிலிற்படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசத்தியை மறைத்தலைச் செய்வதாகிய திரோதாயியையும் சேர்த்து மலம் ஐந்தென்பதுமாம். அவ்விரண்டு மிம்மூன்றனுளடங்களால் "மும்மலம்" என்றார். 15

மழலைமென்மொழிமக்களைக்காண்டலுமன்ன
னழுதுதுன்புறலாய்வளைத்தொழிகண்மேகித்
தொழுதுசொற்றலுங்கொழுநனுமென்பதுதுணிந்து
முழுவ்லன்புடைத்தாயொடுதந்தைபான்மொழிந்தாள்.

தமயந்தி நாயுகனெனத் தெளிந்து தன்றந்தையிட முரைத்தல்.

இ-ள். மழலை மென்மொழி - மெல்லிய மழலைச் சொற்களையுடைய, மக்களை - பிள்ளைகளை, காண்டலும் - கண்டவளவில், மன்னன் - நளமகாராசன், அழுது - புலம்பி, துன்புறல் - துன்பப்படுதலை, ஆய்வளை - சிறந்த வளையலையணிந்த, தொழி - கேசினியானவள், கண்டு - பார்த்து, எகி - தமயந்தியிடத்துச் சென்று, தொழுது - வணங்கி, சொற்றலும் - இச்செய்கையைச் சொன்னவளவில், கொழுநன் - (இவனே) நமது கணவன், ஆம்-

ஆவன், என்பது – எனப்படுவதை, துணிந்து – தமயந்தி நிச்சயித்து, முழுவலன்புடை – நிறைந்த கெடாத அன்பையுடைய, தாயொடு – தாயினுல், தந்தைபால் – தகப்பனிடத்தில், மொழிந்தாள் – சொன்னுன் எ-று.

"குழலினி தியாழினி தென்ப தம்மக்கண் – மழலைச்சொற் கேளாதவர்" என்னும் பெருநாவலர் திருவாக்கின்படி, தாய் தந்தையரை மகிழ்வித்து இரக்க முண்டாவது குதலைச்சொற்களாகலின் "மழலைமென்மொழி மக்களே" என்றும். அவரைக் கண்டமாத்திரையே மகவிருப்பன்தோன்றிப் புலம்பினுன் ஆகலின் "அழுது துன்புற" என்றும் கூறினுர். முழுவல்-சிறத்தல் "காகத்திருகண்ணிற் கொன்றே மணிகலந்தாங்கு மிருவாகத்து மோருயிர் பெற்றுற்போலு முழுவலன்புடையாய்" எனத் கூறியதூஉ மறிக. 16

மழைத்தடங்கணுண்மன்னவன் பணியினுல்வேந்தை
யழைத்துவம்மெனவாய்வளைத்தோழியைவிடுப்பக்
குழைத்தபூங்கொடியன்னவள்வாகுவற்குறிகித்
தழைத்தகாதலால்வருகெனமன்னனுஞ்சார்ந்தான்.

சாரதியாகிய நளன் வீமன் அரண்மனைக்கு வருதல்.

இ-ள். மழை – குளிர்ச்சியும், தட – விசாலமும் பொருந்திய, கணுள்-கண்களையுடைய தமயந்தியானவள், மன்னவன் – வீமராசனது, பணியினுல் – உத்தரவினுல் வேந்தை (நளனுகிய,) அழைத்துவம் என – சமாதியை யழைத்துவாவென்று, ஆய்வளை – சிறந்த வளையல்களையுடைய, தோழியை – கேசினியை, விடுப்ப – அனுப்ப, குழைத்த – தளிர்த்த, பூங் கொடி அன்னவள் – புட்பக்கொடியையொத்த கேசினியானவன், வாகுவன் குறுகி – வாகுவனையடைந்து, தழைத்த காதலால் – மிகுந்த அன்போடும். வருகென – (அரசனுத்திரவின்படி) வாவென்றழைக்க, மன்னனும் – நள மகாராசனும், சார்ந்தான் – (அரண்மனையை) யடைந்தான் எ-று. 17

மறுவில்கற்பினண்மானவேன்மன்னவன்வரலுங்
குறைவிலன்பினள்பிழையிலள்கண்படைகொள்வா
ளிறையுநீப்பருமனவியையிருள்படுகானி
லறனிழுக்குறுநளனலதியாவரேயகல்வார்.

தமயந்தி நளன்விட்டுப் பிரிந்தமை கூறல்.

இ-ள். மறு இல் – களங்கமில்லாத, கற்பினள் – தமயந்தியானவள், மானவேல் – வலிய வேற்படையேந்திய, மன்னவன் – நளமகாராசன், வரலும் – வந்த மாத்திரத்தில், குறைவில் – குறைவில்லாத, அன்பினன் – அன்பையுடையவளும், பிழையிலள் – குற்றமில்லாதவளும், கண்படை கொள்வாள் – நித்திரைசெய்கின்றவளுமாகிய, இறையும் – இறைப்பொழுதும், நீப்பரும் – நீத்தற்கரிய, மனவியை – தமயந்தியை, இருள்படு-இருளுண்டா

யிருக்கிற, கானில் – வனத்தில், அறன் – தருமத்தினின்றும், இழுக்குறு – தவறுத, நளனலாது – நளனேயல்லாமல், யாவரே – (மற்றவர்) யார்தாம், அகல்வார் – பிரிந்துவிடுவோர்கள் எ-று.

அறக் கற்புடையவள் என்பார் "மறுவில் கற்பினள்" என்றார். தலையன்புடையவள் ஆகலால் "குறைவில் அன்பினள்" என விதக்கப்பட்டது அறம் – அறன் எனப்போலி. பெரியோர்களால் இதுசெய்க, தவிர்க என வரையறுக்கப்பட்டது என்று காரணமுரைக்க. அரனிழுக்குறு நளனென்றது வஞ்சப் புகழ்ச்சி. இதனால் தமயந்தி நளனை வெறுத்தல் தோற்றுகின்றது. 18

என்றுகண் கணீரிடையறுதொழுகிடமாசு
துன்றுமேனியுந்துணிபடுமாடையுமாகி
நின்றமாதினைநோக்கினனெட்டுயிர்ப்பெறிந்து
குன்றிரண்டெனவீங்குதோட்கொற்றவன்கூறும்.

தமயந்தி சொன்னவைகேட்டு நளன்வருந்திக் கூறல்.

இ-ள். என்று – இப்படியாகச் சொல்லி, கண்கள் – கண்களினின்றும், நீர் – நீரானது, இடையறாது – இடைவிடாமல், ஒழுகிட – பெருக, மாசு துன்று – அழுக்கடைந்த, மேனியும் – வடிவத்தவளும், துணிபடு – அறுபட்ட, ஆடையும் – ஆடையையுடையவளும், ஆகி – ஆய், நின்ற – (தன்னெதிரி) னின்ற மாதினை – தமயந்தியை, நோக்கினன் – பார்த்தவனாய், நெட்டுயிர்ப்பு எறிந்து – பெருமூச்சுவிட்டு, குன்று இரண்டென – இரண்டு மலைகள்போல், வீங்கு – பூரித்த, தோள் – தோள்களையுடைய, கொற்றவன் – நளமகாராசனானவன், கூறும் – (இவ்வாறு) சொல்லுவான் எ-று. 19

அலர்முலைப்பசுங்கொடியனையையிருட்போதிற்
கலிவயத்தனுக்காட்டிடைநீத்தனனின்னை
நலியும்வெங்கலிதணந்தபின்னண்ணினனின்பான்
மெலியன்மீட்டுமோர்சுயம்வரம்வேட்டதென்னென்றான்.

இரண்டாவது சுயம்வரம் வைத்தல் நிற்குத் தகுதியோவென நளன் வினவல்.

இ-ள். அலர் – பருத்த, முலை – தனங்களையுடைய, பசு – பசுமையாகிய, கொடியனையை – கொடியையொத்த தமயந்தியை, அரையிருள்போதில் – அர்த்தராத்திரியில், கலி – கலியனுக்கு, வயத்தனை – வசப்பட்டவனாகி, காட்டிடை – வனத்தில், நின்னை – உன்னை, நீத்தனன் – விடுத்தேன், நலியும் – வருத்துகின்ற, வெங்கலி – வெவ்விய கலியன், தணந்தபின் – பிரிந்து சென்றபின்பு, நின்பால் – உன்னிடத்தில், நண்ணினன் – வந்தடைந்தேன், மெலியல் – வருந்தாதே, மீட்டும் – மறுபடியும், ஓர் சுயம்வரம் – ஒரு சுயம்வரத்தை, வேட்டது – விரும்பியது, என் – யாதுபற்றி, என்றான் – என்று சொன்னான் எ-று. 20

கிடதர்கோவினையோத்தியிற்றேடினன்கண்டேன்
படரூறேறலெனவந்தொருமறையவன்பகரக்
கடிதினெய்துவான்மணவினையிழைத்தனன்கருத்தி
லடியனேன்றனையுறேறலெனமொழிந்தழுதாள்.

நின்னை யழைத்தற்கன்றி வேறு நாயகனைப்பெற விழைந்திலே
னெனத் தமயந்தியாற்றல்.

இ-ள். கிடதர்கோவினை - நளமகாராசனை, தேடினன் – தேடி, அயோத்தியில் – அயோத்திநகரத்தில், கண்டேன் – பார்த்தேன், படரூறேல் – வருத்தப்படாதே, என - என்று, ஒரு மறையவன் – ஒரு பிராமணன், வந்து-இவ்விடத்தில் வந்து, பகர – சொல்ல, கடிதின் – சீக்கிரத்தில், எய்துவான் - உன்னைச் சேரும்பொருட்டு, மணவினை - சுயம்வரமென்பதை, இழைத்தனன் - செய்தேன், கருத்தில்-மனதில், அடியனேன்றனை-அடியாளாகிய வென்னை, ஐயுறேல் என – சந்தேகப்படாதே யென்று, மொழிந்து – சொல்லி, அழுதாள் - (தமயந்தி) புலம்பினாள் எ-று. 21

முன்னைநல்லுருக்காட்டெனமுற்றிழைமொழியப்
பன்னகத்திறையுதவியபூந்துகில்பரிவான்
மன்னரேறனன்புனைதலுமாணுருவெய்திக்
கன்னல்வேளினுங்கவினலங்கனிர்ந்திடநின்றான்.

நளன் முன்னைய வடிவத்தைக் கொள்ளுதல்.

இ-ள். முன்னை – பழைய, நல்லுரு – நல்ல உருவத்தை, காட்டென் - காட்டுவாயென்று, முற்றிழை – தமயந்தியானவள், மொழிய - சொல்ல, பன்னகத்தரையிறை-நாகராசனுகிய கார்க்கோடகன், உதவிய - கொடுத்த, பூந்துகில் – அழகிய வத்திரங்களை, பரிவால் – ஆசையோடு, மன்னரேறனன் - இராசசிங்கமாகிய நளமகாராசன், புனைதலும் – தரித்தமாத்திரத்தில், மாண் உரு – மாட்சிமைப்பட்ட வுருவத்தை, எய்தி – அடைந்து, கன்னல் – கருப்பு வில்லைத்தரித்த, வேளினும் – மன்மதனைக் காட்டிலும், கவின் – அழகினை, நலம் – நன்மையானது, கனிந்திட – முதிர, நின்றான் - (நளமகாராச) னிருந்தான் எ-று. 22

நின்றமன்னனைநிரைவளைக்கைம்மலர்க்கூப்பி
மன்றலங்குழன்மடவரல்மணங்கினணிற்ப
வென்றிவேலுடைவிதர்ப்பர்கோன்விளித்தமைகேட்டு
துன்றுதன்கிளைமன்னவர்சூழ்வரப்புகுந்தான்.

வீமன் கேட்டு இறும்பூதற்றுப் பங்காக்களோடு எதிர்கொள்ளல்.

இ-ள். நின்ற – எதிரில்நின்ற, மன்னனை – நளமகாராசனை, நிரை-வரிசையாயணிந்த, வளை – வளையலையுடைய, கைம்மலர் – மலர்போன்ற கைகளை, கூப்பி – குவித்து, மன்றல் – வாசனைபொருந்திய, அம் – அழகிய,

குழல் — கூந்தலையுடைய, மடவரல் - தமயந்தியானவள், வணங்கினள்- வணக்கி, நிற்ப — இருக்க, வென்றி — வெற்றிபொருந்திய, வேலுடை- வேலையுடைய, விதர்ப்பர்கோன் - வீமராசனுனவன், விளைந்தமை - நடந்த செய்திகளை, கேட்டு - கேள்வியுற்று, தன்று — நெருங்கிய, தன் — தன் னுடைய, கிளை — பந்துக்களாகிய, மன்னவர் - அரசர்கள், சூழ்வர — சூழ, புகுந்தான் — அவ்விடம்வந்து சேர்ந்தான் எ-று. 23

அன்னகாலையிலகலிருவிசும்பிலோர்வாணி
மன்னகேட்டியிம்மடவரறன்னைமூவாண்டு
வின்னவின்றியாமளித்தனஞ்சுயம்வரமென்னு
வன்னையிவ்வழிக்கூட்டுதற்கொண்டொடியிழைத்தாள்.

இதுமுத லிரண்டு பாட்டுக்களால் அசரீரியுரைத்தல் கூறப்படுகின்றது.

இ-ள். அன்னகாலையில் - அந்தச்சமயத்தில், அகல் — அகன்ற, இரு- பெருமைபொருந்திய, விசும்பில் — ஆகாயத்தில், ஓர்வாணி — ஒரு அசரீரி வாக்கு, மன்ன - நளமகாராசனே, கேட்டி - கேள், இம்மடவரல்தன்னை- இத்தமயந்தியை, மூவாண்டும் - மூன்று வருடமளவும், இன்னலின்றி- நீங்கில்லாமல், யாம் — நாம், அளித்தனம் — இரட்சித்தோம், சுயம்வர மென்னு - சுயம்வரம் என்று சொல்லப்பட்டதை, உன்னை — உன்னை, இவ் வழி - இவ்விடத்தில், கூட்டுதற்கு — சேர்த்தற்கு, ஒண்தொடி — தமயந்தி யாவள், இழைத்தான் — செய்தாள் எ-று. 24

வடபுலத்தினிலோக்குநர்மாசறவிளங்குங்
கடவுண்மீனினுந்தொழுதகுகற்றனர்க்கரசாங்
கொடிமருங்குலையையுறுதருளெனக்கூர்வே
னிடதர்காமகன்மகிழ்வுறநிகழ்ந்ததையன்றே.

இ-ள். வடபுலத்தினில் — வடதிசையில், நோக்குநர் — காண்கின்றவ ரது, மாசற - குற்றமற, விளங்கும் — பிரகாசியாகின்ற, கடவுள்மீனினும்- தெய்வத்தன்மையுள்ள அருந்ததியைக் காட்டிலும், தொழுதகு — மேன்மை யாகிய, கற்பினர்க்கு - பதிவிரதைகட்கு, அரசாம் — அரசாகிய, கொடிமருங் குலை - தமயந்தியை, ஐ உறுதி - சந்தேகியாமல், அருள் என — கிருபைசெய் யென்று, கூர்வேல் - கூர்மைபொருந்திய வேலேந்திய, நிடதர் காமகன்- நளமகாராசன், மகிழ்வுற — மனங்களிக்க, நிகழ்ந்தது - (ஆகாயவாணீ) உண் டாயிற்று எ-று. ஐ - அன்று எ - அசைகள். 25

தமரவேலையினந்தரதுந்துபிதழங்க
வமரர்யாவரும்பூமழைபொழிந்துநின்றார்த்தா
ருமிழ்செழுங்கதிர்மணிமுடிவீமனுமுவந்தான்
குமரனன்னவன்கோல்வளைத்தோளியையடைந்தான்.

தமயந்தியை நளன் அடைதல் சொல்லப்படுகின்றது.

இ-ள். தமரம் – பேரொலியையுடைய, வேலியின் – சமுத்திரம்போல, அந்தரம் – ஆகாயத்தில், துந்துபி – துந்துபி வாத்தியமானது, தழங்க – சத்திக்க, அமரர் யாவரும் – தேவர்களனைவரும், பூமழை – புட்ப வருடத்தை, பொழிந்து – சொரிந்து, நின்று – நிலைபெற்று, ஆர்த்தார் – துதித்தார்கள், உமிழ் – கக்கப்பட்ட, செழு – செழுமையாகிய, கதிர் – கிரணங்களையுடைய, மணிமுடி – இரத்தின கிரீடத்தையுடைய, வீமனும் – வீமராசனும், உவந்தான் – சந்தோடித்தான், குமரன் அன்னவன் – முருகனையொத்த நளமகாராசன், கோல்வளை – அழகிய வளையலையணிந்த, தோளியை – புயத்தையுடைய தமயந்தியை, அடைந்தான் – சேர்ந்தான் எ-று. 26

மண்களித்ததுமாநிரங்களித்தனமலர்மேற்
பெண்களித்தனள்பேரறங்களித்தனகண்டோர்
கண்களித்தனகளித்தனகலிவலோர்நெஞ்சம்
விண்களித்தனகளித்ததுவீமன்மாநகரம்.

தமயந்தி நளனை யடைந்ததனு லுண்டாகிய மகிழ்ச்சிகூறல்.

இ-ள். மண் – பூமியானது, களித்தது – களிப்புற்றது, மாநிரம் – மலைகள், களித்தன – களிப்புற்றன, மலர்மேல் பெண் – இலக்குமி, களித்தனள் – களிப்புற்றனள், பேரறம் – மகத்தான தருமங்கள், களித்தன – களிப்புற்றன, கண்டோர் – பார்த்தவர்களது, கண் – நேத்திரங்கள், களித்தன – களிப்புற்றன, கலிவலோர் – வித்துவான்களுடைய, நெஞ்சம் – மனங்கள், களித்தன – களிப்புற்றன, விண் – விண்ணுலகங்கள், களித்தன – களிப்புற்றன, வீமன் – வீமராசனது, மா – பெரிய, நகரம் – பட்டினமானது, களித்தது – களிப்புற்றது எ-று. 37

உருவவொண்கழனிடதர்கோன்வெளிப்படலோரா
விருதுபன்னனுங்கறிந்தபினவனுழையெய்தி
யரசநின்னையானறிந்திடாதிபற்றியவனைத்துந்
திருவுளங்கொளாதருளெனச்சேவடிதொழுதான்.

இருதுபன்னன் தன்பிழையைப் பொறுக்குமாறு
நளனை வணங்குதல்.

இ-ள். உருவம் – அழகையுடைய, ஒண் கழல் – ஒளிபொருந்திய வீரக்கழலையணிந்த, நிடதர்கோன் – நளமகாராசன், வெளிப்படல் – (மறைவினின்றும்) வெளிப்பட்டதை, ஓரா – ஆராய்ந்து, இருதுபன்னன் – இருதுபன்ன வரசன், ஆங்கு – அந்நகரத்தில், அறிந்தபின் – தெரிந்துகொண்டபின்பு, அவனுழையெய்தி – அந்நளனிடத்துவந்து, அரச – நளமகாராசனே, நின்னை – உன்னை, யான் – நான், அறிந்திடாது – அறியாமல், இயற்றிய வினைத்தும் – செய்த குற்றங்களனைத்தையும், திருவுளங்கொளாது – மனத்

திற்கொள்ளாமல், அருள் என – கிருபைசெய்யவேண்டுமென்று, சே அடி-சிவந்த பாதங்களில், தொழுதான் – வணங்கினன் எ-று. 28

செய்ய தாடொழுமன் னனைச்செங்கையாற்றழுவிக்
கொய்யுளைப்பரியுளமறிவிஞ்சையுங்கொடுத்து
மையின்மாதகிமுகமலர்ந்தின்னுரைவழங்கி
யையனைவவ்வரசனுமயோத்திநாடடைந்தான்.

இருதுபன்னற்கு வேண்டிய கொடுத்து நளன் அனுப்புதல்.

இ-ள். செய்ய தாள்தொழும் - சிவந்த பாதத்தில் வணங்கிய, மன்னனை - இருதுபன்னாசனை, செம் கையால் – சிவந்த கைகளால், தழுவி – அணைத்துக்கொண்டு, கொய்யுளை – கொய்துகட்டிய புறமயிரினையுடைய, பரி - குதிரைகளினது, உளம் - மனதை, அறி – அறிவிக்கின்ற, விஞ்சையும் – வித்தையையும், கொடுத்து - உபதேசித்து, மையில் – களங்கமில்லாத, மா - பெருமைதங்கிய, மதி – சந்திரன்போன்ற, முகமலர்ந்து – முகமலர்ச்சியடைந்து, இன்உரை – இனியசொற்களை, வழங்கி – சொல்லி, ஐயன் – நளமகாராசன், எவ - விடைகொடுக்க, அவ்வரசனும் - அவ்விருதுபன்னராசனும், அயோத்தி நாடு – அயோத்திதேசத்தை, அடைந்தான் – சேர்ந்தான் எ-று. 29

தேவியைக் கண்ணுற்றபடல முற்றிற்று.

செய்யுள் - 1157.

அரசாட்சிப்பட்டலம்.

இப்படலத்தால் நளன் தமயந்தியை அடைந்தபின்பு அவளோடு தனது நிடததேசத்திற் சென்று புட்கரனை வென்று அரசாட்சி செய்தல் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

கொங்குண்வார்குழற்கொம்மைவெம்மூலைநலம்பருகித்
திங்களொன்றவணிருந்தபின்றெண்டிரையுடுத்த
வங்கண்மாநிலம்புரந்திடுமாமனைபோய்ந்து
பொங்குதானையோடெழுந்தனன்புலவுவேற்குரிசில்.

நளன் நிடததேயத்திற்குப் புறப்படல்.

இ-ள். புலவு - புலால்நாற்றம் நாறுகின்ற, வேல் – வேலையுடைய, குரிசில் – நளமகாராசனுனவன், கொங்கு உண் – வாசனைபொருந்திய, வார்-நீண்ட, குழல் – கூந்தலையும், கொம்மை – திரட்சிபொருந்திய, வெம்-விருப்பத்தைத்தருகின்ற, மூலை – தனங்களையுமுடைய தமயந்தியினது, நலம்-இன்பத்தை, பருகி – அனுபவித்து, திங்கள் ஒன்று – ஒருமாதம், அவண்-அக்குண்டினபுரத்தில், இருந்தபின் - வாசஞ்செய்தபின்பு, தெண்திரை-கடலை, உடுத்த – ஆடையாக வுடுத்த, அம்கண் – அழகிய இடத்தையுடைய, மா – பெரிய, நிலம் – பூமியை, புரந்திடும் - இரட்சியாநின்ற, மாமேரு-மாமலையிய வீமராசனோடு, ஆய்ந்து – ஆலோசித்து, பொங்கு – பிராகியாநின்ற, தானையோடு – சேனையோடு, எழுந்தனன் - பிரயாணப்பட்டான்.

இயற்கை வாசனையுடைய கூந்தலான் "கொங்குண் வார்குழல்" என்றார். வெம்மூலை – பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. சந்திரகதியைக்கொண்டு எண்ணப்படும் மாதம் என்பார். "திங்களொன்று" எனக் கூறினர். பின்காலப் பொருளில்வந்த இடைச்சொல். தெண்டிரை என்பது அன்மொழித் தொகையாய்க் கடலினைக் குறிக்கநின்றது. பகைவர் நிணமிடையருது இருத்தலால் "புலவுவேல்" எனப்பட்டது. குரிசில் – ஆண்பாற்பெயர். 1

மழைமதக்களியானையுங்கலினவாம்பரியுஞ்
செழுமணித்தடந்தேர்களும்வயவருஞ்செறிய
வெழுகடற்புவிமன்னருமிறைஞ்சினர்செல்ல்
வழலுயிர்க்கும்வேலரசனுநிடதர்காடடைந்தான்.

நளச்சக்கிரவர்த்தி நிடததேசத்தை யடைதல்.

இ-ன். மழை – மழைபோன்ற, மதம் – மதசலத்தையும், களி – களிப்பையுமுடைய, யானையும் - யானைகளும், கலினம் – கடிவாளத்தையுடைய,

வாம் – தாவுகின்ற, பரியும் – குதிரைகளும், செழு – செழித்த, மணி – இரத்தினங்களிழைத்த, தட – விசாலமாகிய, தேர்களும்-இரதங்களும், வயவரும்-படைவீரர்களும், செறிய – நெருங்கவும், எழுகடல் – எழுசமுத்திரங்கள் சூழ்ந்த, புவி – சப்த தீபங்களிலுள்ள, மன்னரும் – அரசர்களும், இறைஞ்சினர்-வணங்கினவராகி, செல்ல – நடக்கவும், அழல் உயிர்க்கும் – அக்கினியைக் கக்காநின்ற, வேல் – வேலையுடைய, அரசனும் – நளனும், நிடத நாடு – நிடத தேசத்தை, அடைந்தான் – சேர்ந்தான் எ-று.

எழுகடல்களாவன – உப்பு, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், சுத்தோதகம் என்பனவாம். இவற்றுற் சூழப்பட்ட எழுதீவுகளாவன-சம்புத் தீவு, சாகத் தீவு, குசைத் தீவு, கிரவுஞ்சத் தீவு, சான்மலித் தீவு, கோமேதகத் தீவு, புட்கரத் தீவு என்பனவாம். இவற்றை "குலவிய சம்பு சாகங்குசை கிரவுஞ்சங்கோதி – லிலவுகோமேதகம் புட்கரமிவை யேழு தீவே" எனவும், "பரவுமிவ்வுல கிலுப்புப்பாறயிர் நெய்யே கன்ன – விரதமதுநீராகு மெழுகட லேழுதீவும் – வரன்முறை விரவிச்சூழ மற்றதற் கப்பாற் சொன்னத்-தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச் சையம்" எனவும் கந்தபுராணம் கழறுதல் காண்க. 2

மூதெயிற்புறத்திறுத்தபின் மொய்யமர்தொடங்கப்
போதல்செய்தவெம்போர்த்தொழிற்கஞ்சினையாகிற்
காதலிற்கவருடுவான்வருகெனக்கழறித்
தூதுபோக்கினன்புட்கரன் றனக்குவேற்றோன்றல்.

நளன் புட்கரனுக்குத் தூது அனுப்புதல்.

இ-ள். மூத – பழைய, எயில் புறத்து-மதிலினது புறத்திலே, இறுத்தபின் – இறங்கிய பின்பு, மொய் – நெருங்கிய, அமர் – போரை, தொடங்க-ஆரம்பிக்க, போதல்செய்க – வருவாயாக, வெம் – வெவ்விய, போர்த்தொழிற்கு – யுத்தச்செய்கைக்கு, அஞ்சினையாகில் – பயப்படுவையேயாஞல், காதலின் – ஆசையோடு, கவருடுவான் – சூதாடுதற்கு, வருக – வருவாயாக, எனஎன்று, கழறி – சொல்லி, புட்கரன் றனக்கு-புட்கராசனுக்கு, வேல்-வேலையுடைய, தோன்றல் – நளன், தூது – தூதரை, போக்கினன் – விடுத்தான்.

போயதூதுவர்புட்கரற்கித்திறம்புகல
வாயுங்கேள்வி நூலமைச்சொடும்வேறிருந்தாய்ந்து
காயும்போரினில்வேறன்மற்றரிதெனக்கருதி
மாயவெங்கவருடுவான்வருகெனவிடுத்தான்.

புட்கரன் சூதாடுதற்குவருமாறு நளனையழைத்தல்.

இ-ள். போயதூதுவர் – நளனிடத்தினின்றும்போன தூதுவர், புட்கரற்கு, புட்கரனுக்கு, இத்திறம் – இவ்விதங்களை, புகல – சொல்ல, ஆயும்-ஆராய்ச்சி செய்யத்தகுந்த. கேள்வி – கேள்வியையும், நூல் – தருமசாத்திரத்தையுமுடைய, அமைச்சொடும் – மந்திரியோடும், வேறு இருந்து – தனியே

யிருந்து, ஆய்ந்து — ஆலோசித்து, காயும் - கொல்லும், போரினில் - யுத்தத்தில், வேறல் — வெல்லுதல், அரிது என — அரியதென்று, கருதி — நினைத்து, மாயம் - வஞ்சனையோடுங் கூடிய, வெம்-வெவ்விய, கவறு ஆடுவான்-சூதாடுதற்கு, வருக என-வருவாயாக வென்றுசொல்லி, விடுத்தான்-அனுப்பினான்.

விட்டதூதுவருரைத்தசொற்கேட்டலும்விரிந்து
மட்டுலாந்தொடைமார்பினன்மாநகரெய்திக்
கட்டுவார்கழற்புட்கரகவறுநாமாடற்
கொட்டம்யாதெனவுரைத்தனனுலங்கெழுதோளான்.

நளன் பந்தயம் யாதென்று புட்கரனை வினவல்.

இ-ள். விட்ட தூதுவர் — அனுப்பப்பட்ட தூதர்கள், உரைத்தசொல்-சொல்லியசொற்களை, கேட்டலும் — கேட்டமாத்திரத்தில், விரிந்து — மலர்ந்து, மட்டுலாம்-தேனெழுகுகின்ற, தொடை-மாலையையணிந்த, மார்பினன், மார்பையுடைய நளன், மா-பெரிய, நகர் — பட்டினத்தில், எய்தி-அடைந்து, கட்டு — கட்டப்பட்ட, வார் - நீண்ட, கழல் — வீரக்கழலையுடைய, புட்கரபுட்கரனே! கவறு — சூதை, நாமாடற்கு-நாமாடுவதற்கு, ஒட்டம் யாது என-பந்தயம்யாதென்றுகேட்க, உலங்கெழுதோளான்-திரள்கல்லையொத்ததோள்களையுடைய வரசன், உரைத்தனன் - சொன்னான் எ-று. 5

வயிரவாட்படைமன்னவர்மன்னநீதோற்பின்
முயலிலாமதிபூத்திடுமுழுநெறிக்குவளை
யயரநீண்டகட்டேவியையளித்தியான்றோற்பி
னுயிரினோடுநின்னுலகெலாந்தருவனென்றுரைத்தான்.

நளனும் புட்கரனும் பந்தயம்வைத்துச் சூதாடத்தொடங்கல்.

இ-ள். வயிரம்-கூர்மைபொருந்திய,வாள்படை-வாளாயுதத்தையுடைய, மன்னவர் மன்ன — அரசர்க்கரசனாகிய நளமகாராசனே! நீ தோற்பின் — நீ தோற்றால், முயலிலா — முயற்கறையொழிந்த, மதி — சந்திரனிடத்தில், பூத்திடும் — புட்பித்த, முழுநெறி — முழுநெறிப்பையுடைய, குவளை - நீலோற்பலங்கள், அயர — சோர்வையடைய, நீண்டகண் - நீண்டகண்களையுடைய, தேவியை — தமயந்தியை, அளித்தி — கொடு, யான் தோற்பின் — நான்தோற்றால், உயிரினோடு — என்னுயிரோடு, நின் உலகெலாம் — உனது உலகமுழுவதையும், தருவன் என்று - கொடுப்பேனென்று, உரைத்தான்-சொன்னான்.

ஏக சக்கராதிபதியாக இருத்தலால் "மன்னவர் மன்ன" என்றார். முயலாவது — சந்திரனிடத்துள்ள களங்கம். அதுமுயல்வடிவம்போலவும், மானுருப்போலவும் விளங்கலால் முயல் எனவும், மான் எனவுங் கூறுகிற்பர். தமயந்தி முகம் களங்கமில்லாதமதியை நிகர்த்ததெனலால் "முயலிலாமதி" என்றார். 6

அன்னவாறியைந்தாடலும்புட்கரன்றோற்ப
மன்னமுன்னநீவென்றதுங்கொடுங்கலிவயத்தா

னின்னதாருயிர்நேர்ந்தனனெம்பியாதலினுற்
றுன்னகர்க்கினிதேகெனப்பணித்தனன்றுன்றல்.

புட்கரன் சூதாடித் தோல்வியுறல்.

இ-ள். அன்ன ஆறு – அத்தன்மையாகவே, இயைந்து – சம்மதித்து, ஆடலும் – ஆடுமளவில், புட்கரன் – புட்கராசன், தோற்ப-தோற்க, மன்ன-புட்கராசனே! முன்னம் – முன்பு, நீ – நீ, வென்றதும் – செயித்ததும், கொடு – கொடிய, கலிவயத்தால் – கலியினது வசத்தினால் (அன்றிவேறல்ல) எம்பியாதலினால் – தம்பியாகையினாலே, நின்னது-உன்னுடைய, ஆர்-நிறைந்த, உயிர் – உயிரை, நேர்ந்தனன் - கொடுத்தேன், தொல் நகர்க்கு – பழமையாகிய உனது நகரத்திற்கு, இனிது – இனிதாக, ஏகென – போவென்று, தோன்றல் - நளன், பணித்தனன் - ஆக்கியாபித்தான் எ-று. 7

பணிதலைக்கொடுபுட்கரன்போதலும்பன்னூற்
கணிதர்சொற்றநல்லோரையிற்கடிநகரெய்தி
யணிபொலனகழன்மன்னவன்விதர்ப்பர்கோனளித்த
மணிசெய்மேகலைவாணுதற்கொற்றரைவிடுத்தான்.

இ-ள். பணி – அந்தவாக்கினையை, தலைக்கொடு - சிரசின்மீதுகொண்டு, புட்கரன் – புட்கராசன், போதலும் – போயினபின், பன்னூல் – அனேக சாத்திரங்களையுணர்ந்த, கணிதர் – சோதிடர்களாலே, சொற்ற – சொல்லப்பட்ட, நல் ஓரையில் – நல்ல இலக்கினத்தில், கடி – காவலையுடைய, நகர்-பட்டினத்தை, எய்தி – அடைந்து, அணி - அணியப்பட்ட பொலன் - பொன்னினாற்செய்யப்பட்ட, கழல் – வீரக்கழலையுடைய, மன்னவன்-நளன், விதர்ப்பர் கோனளித்த – வீமராசன்பெற்ற, மணிசெய் – இரத்தினங்களாற் செய்யப்பட்ட, மேகலை-மேகலாபரணத்தையுடைய, வாள்நுதற்கு - ஒளிபொருந்திய நெற்றியையுடைய தமயந்திக்கு, ஒற்றரை-வேவுகாரரை, விடுத்தான்-அனுப்பினான் எ-று. 7

ஒற்றரேகியவ்விதர்ப்பர்கோன்றன்னுழைபுரைப்ப
வற்றமில்லெனவரும்பொருளாங்கவர்க்களித்துக்
கற்றைவார்குழன்மதர்கெடுங்கண்ணியைக்கணிதர்
சொற்றவோரையில்விடுத்தனன்றுன்றன்மாநகரில்.

தமயந்தியை வீமன், கிடதநாட்டிற்கு அனுப்புதல்.

இ-ள். ஒற்றர் – வேவுகாரர், ஏகி – போய், அவ்விதர்ப்பர்கோன் றன்னுழை – அவ்வீமராசனிடத்தில், உரைப்ப – சொல்ல, அற்றமில்லென-மிருதியாக, அரு - அரிய, பொருள் - பொருளை, ஆங்கு – அவ்விடத்தில், அவர்க்கு – அவர்களுக்கு, அளித்து – கொடுத்து, கற்றை – கூட்டமாகிய, வார்-நீண்ட, குழல் – கூந்தலையும், மதர் – மதர்த்த, நெடு – நெடிய, கண்ணியை-கண்களையுமுடையதமயந்தியை, கணிதர்-சோதிடர்கள், சொற்ற-சொல்லிய

ஓரையில் – இலக்கினத்தில், தோன்றல் – வீரராசன், மா – பெரிய, நகரில்-னன அபட்டினத்திற்கு, விடுத்தனன் – விட்டான் எ-று. 9

ஒற்றர் – ஒன்றுதலைச்செய்வோர்; எனவே சந்திசெய்வோர், ஒளித்திருந்து விடயங்களை யறிவோர் எனவு முரைப்ப. "அற்றம் இல்லென" என்பதற்கு, சோர்வு இல்லையென்று சொல்லும்படி எனப்பொருளுரைப்ப. "இலனென்னு மெவ்வ முரையாமையீதல் – குல முடையான் கண்ணேயுள" எனத் திருவள்ளுவநாயனார் அருளியது மிக்கருத்தென்ப. இல் – வறுமை; அதாவது சிறுமை, அற்றம் – இல்லாதாயினேம், என – என்று, பொருளுரைப்பாருமுளர். உலகைக் காரியத்தைத் தெரிப்பார்க்கு அவ்விலக்கணமேலீடு பற்றிப்பொருளுதவல்வழக்கா மாகலின் ஒற்றர்த்தும் உதவினன் என்க. 10

வெள்ளத்தானையுமகளிருஞ்சூழ்வரவேந்த
னுள்ளத்தாமரைமலருறையாடரிக்கண்ணுள்
வள்ளத்தாமரைப்பொகுட்டின்மேல்வண்டுகண்படுக்கு
மள்ளற்றீம்புனற்கழனிசூழ்நிடதநாடடைந்தாள்.

நிடத தேசத்தைத் தமயந்தி சேர்தல்.

இ-ள். வெள்ளம் தானையும் – பிரவாகம் போன்ற சேனையும், மகளிரும் – மாதர்களும், சூழ்வர – சூழ்ந்து வரும்படி, வேந்தன் – நள மகாராசனது, உள்ளம் – மனமாகிய, தாமரைமலர் – தாமரைப் பூவில், உறை – வாசஞ்செய்கின்ற, ஓடரி – செவ்வரிபரந்த, கண்ணுள் – கண்களை யுடைய தமயந்தியானவள், வள்ளம் – கிண்ணம்போன்ற, தாமரைப்பொகுட்டின்மேல் – தாமரைமலரின் சுர்ணிகையில், வண்டு – வண்டுகள், கண்படுக்கும் – நித்திரைசெய்யாகின்ற, அள்ளல் – சேற்றையும், தீம்புனல் – மதுரமான சலத்தையுமுடைய, கழனி – வயல்களால், சூழ் – சூழப்பட்ட, நிடத நாடு – நிடததேசத்தை, அடைந்தாள் – சேர்ந்தாள் எ-று. 11

நவ்வினோக்கியர்சூழ்வரநகைநிலாவெறிக்குங்
கொவ்வைவாய்மலர்ப்பூங்குழற்குவிமுலைமடந்தை
தெய்வநாண்மலர்த்தவிசிழிதிருமகளென்ன
வெவ்வமில்லதோரெரிமணிச்சிவிகைநின்றிழிந்தாள்.

தமயந்தி சிவிகைவிட்டு இறங்குதல்.

இ-ள். நவ்வி – மான்போன்ற, நோக்கியர் – பார்வையையுடைய மங்கையர், சூழ்வர – சூழ்ந்துவர, நகை – பற்கள், நிலா – நிலவைப்போல, எறிக்கும் – பிரகாசிக்கின்ற, கொவ்வை – கோவைக்கனிபோன்ற, வாய் – சிவந்த வாயையும், மலர் – புட்பத்தையுடைய, பூ – அழகிய, குழல் – கூந்தலையும், குவி – குவிந்த, முலை – தனங்களையுமுடைய, மடந்தை – தமயந்தியானவள், தெய்வம் – தெய்வத்தன்மை பொருந்திய, நாள் – நன்றலர்ந்த, மலர்த்தவிசு – புட்பாசனத்தினின்றும், இழி – இறங்குகின்ற, திருமகளென்ன – இலக்குமி போல், எவ்வம் இல்லது – குற்றமில்லாததாகிய, ஓர் – ஒரு, எரி – பிரகாசிக்

கின்ற, மணிச்சிவிகை நின்று - இரத்தின தண்டிகையினின்றும், இழிந் தாள் - இறங்கினாள் எ-று. 12

பரிதிவானவனெதிர்தலும்பனியிதழ்விரிந்த
முருகுலாவுறுந்தாமரைபோன்முகமலரா
வருகுதுண்ணிடையின்னுயிர்க்காதலனம்பொற்
றிருவாணமலர்ச்சேவடிசென்னியிற்றொழுதாள்.

நளனைத் தமயந்தி வணங்குதல்.

இ-ள். பரிதிவானவன் - சூரியனனவன், எதிர்தலும் - தோன்றினவள வில், பனிஇதழ் - குளிர்ச்சிபொருந்திய விதழ்கள், விரிந்த - மலர்ந்த, முருகு உலாம் - வாசனை வீசுகின்ற, நறு - நல்ல, தாமரைபோல் - தாமரைபோல, முகமலரா - முகமலர்ச்சியடைந்து, அருகு - சிறுத்த, நுண்இடை - நுட்ப மான இடையையுடைய தமயந்தி, இன்னுயிர் - இனிய வுயிர்போன்ற, காத லன் - கணவனாகிய நளனது, அம் - அழகிய, பொன் - பொன்போன்ற, திருவ - செல்வத்தையுடைய, நாள் - புதிய, மலர்ச்சேவடி - தாமரைமலர் போன்ற பாதங்களை, சென்னியின் - சிரசினால், தொழுதாள் - வணங்கினாள்.

தொழுதமங்கையைச்சுடர்மணித்தடக்கையாலெடுத்துக்
கொழுதிவண்டினங்கூட்டுணுந்தெரியற்றும்மார்பி
னுழுதுவெம்முலைக்குங்குமச்சேற்றிடைபொளிப்பத்
தழுவினனவடேம்பியவின்னுயிர்தளிர்த்தாள்.

நளன் தமயந்தியை யுவகையுண்டாமாறு தழுவல்.

இ-ள். தொழுத - வணங்கிய, மங்கையை - தமயந்தியை, சுடர்மணி-பிரகாசம்பொருந்திய ஆபரணத்தையுடைய, தட - நீண்ட, கையால் - கரங் களால், எடுத்து - எடுத்து, கொழுதி - கோதி, வண்டு இனம் - வண்டுக் கூட் டங்கள், கூட்டு உணும் - கொள்ளை கொள்கின்ற, தெரியல் - மாலையானது, தாழ - தொங்குகின்ற, மார்பின் - மார்பினிடத்திலே, உழுது - உழுது, வெம் - விருப்பத்தைத் தருகின்ற, முலை - தனங்கள், குங்குமச் சேற்றிடை குங்குமச்சேற்றில், ஒளிப்ப - ஒளிக்கும்படி, தழுவினன் - ஆலிங்கனஞ்செய் தான், அவள் - அந்தத் தமயந்தி, தேம்பிய - மெலிந்த, இன்னுயிர் - இனிய உயிர், தளிர்த்தாள் - தளிர்த்தாள் எ-று. 14

திருந்துமாமணிச்செய்குன்றுந்தெளிபுனற்றடமும்
விருந்துவீவனிலாற்கெதிரியலிமைமலர்க்காவும்
முருந்துவாணகைமுகிழ்முலைமடந்தையோடாடிப்
பொருந்தவிண்ணிடைப்போகமுண்டுவந்தனர்போன்றார்.

இ-ள். திருந்து - திருத்தமாகிய, மா - பெரிய, மணி - இரத்தினங்கள் பதித்த, செய் குன்றும் - விளையாட்டு மலைகளிடத்தும், தெளி - தெளிந்த, புனல் - சலத்தையுடைய, தடமும் - வாவிகளிடத்தும், விருந்து - விருந்

தாக, வேனிலான்கு — மன்மதனுக்கு, எதிரிய — தோன்றிய, விரை - வாசனையையுடைய, மலர் — புட்பங்களையுடைய, காவும் — சோலைகளிடத்தும், முருத்த — மயிலிறகினடியையொத்த, வாள் — ஒளிபொருந்திய, நகை — பற்களையும், முகிழ் — கோங்கரும்பையொத்த, முலை — தனங்களையுமுடைய, மடந்தையோடு — தமயந்தியுடனே, ஆடி — விளையாடி, பொருந்த — அமைய, விண்ணிடை — தெய்வலோகத்தில், போகம் — இன்பத்தை, உண்டு — அனுபவித்து, உவந்தனர் — மகிழ்ந்தவர்களை, போன்றான் — ஒத்திருந்தான். எ-று.

செய் குன்றுவது — பொன், இரத்தினம் முதலியவற்றால் மலைபோலச் செய்தது. இதில் அரசமங்கையர் இவர்ந்து விளையாடுப. மங்கையர் நகையும் தனமும் ஆடவர் மனதைக் கொள்ளைகொள்ளலான் ‘முருந்துவாணகை முகிழ்முலை மடந்தையோடாடி’’ என்றார். 15

ஆழிசூழ்புவிமுழுவதுமாழியொன்றுருட்டி
வாழிநல்லறம்புரிந்தருமகம்பலவாற்றிச்
சூழிமால்வரைப்பிடருறுசுமையொழித்தாறப்
பாழியம்புயத்துலகெலாம்பரித்தினிதிருந்தான்.

இ-ள். ஆழி சூழ் — சமுத்திரஞ் சூழ்ந்த, புவி முழுவதும் — பூமிமுழுமையும், ஆழியொன்று — ஏகசக்கரத்தை, உருட்டி — நடத்தி, நல் அறம் — நல்ல தருமத்தை, புரிந்து — செய்து, அரு — செய்தற்கரிய, பலமகம் — பல யாகங்களை, ஆற்றி — செய்து, சூழி — முகபடாமணிந்த, மால் — பெரிய, வரை - மலையையொத்த எட்டுத்திக்கு யானைகளும், பிடர் — பிடரியிற் சுமக்கிற உறுமிகுந்த, சுமை — பூமிபாரத்தை, யொழித்து — நீக்கி, ஆற — இளைப்பாறும்படி, பாழி — வலிபொருந்திய, அம் — அழகிய, புயத்து — தோளினிடத்தில், உலகு எலாம் — உலகமுழுதையும், தரித்து — தாங்கி, இனிது - இனிதாக, இருந்தான் - (நளமகாராச) னிருந்தான் எ-று.

ஆழி என்னுஞ் சொற்கள் இரண்டனுள் முன்னது ஆழமுடைத்தெனவும், மற்றையது வட்ட வடிவுடையது எனவும் காரணங்கொள்க. ஆஞ்ஞையை ஆழி என்பதற் கேற்ப, செலுத்தற்றொழிலை உருட்டி என்னும்வினை கொடுத்தார், வாழி — முன்னிலையசை யென்பதன்றி, சிறத்தல் என்னும் பொருட்டுமாம். வரை — ஆகுபெயர்.

அறம் — பசுதர்மம், சிவதர்மம் என இருவகைப்படும். அவற்றுண்முன்னையது அரசற் கியற்கையாகலின் ஈண்டுக் கூறப்பட்டது பின்னைய சிவதர்மம் ஏன்க. சிவதர்ம சாதனத்தாற் றெரிதற்கரிய தற்பரசிவன் வெளிப்பட்டருளு மென்பது சித்தாந்த நூற்றுணிபு அதுவேனை, ‘‘நல்ல சிவ தன்மத்தானல்ல சிவயோகத்தா-னல்ல சிவஞானத்தா ஞானழிய—வல்லதனு, லாரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்கா—ணாரேனுங்கா ணுவரன்’’ என்னுந் திருக்களிற்றுப்படியார்த் திருவெண்பாவா னறிக. அச் சிவதர்மம் மெல்வினை, வல்வினையென இருவகைப்படும். அவற்றின் விரிவெல்லாம் மெய்கண்ட சாத்திரத்தில் பரக்கக்காண்க. எட்டுத்திக்கியானைகளாவன—ஐராவதம், புண்

டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதீபம் என்பன இவற்றின் பெண் யானைகளாவன—அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்பவையாம். "அருமகம்" என்றமையால், பிரமயஞ்ஞும், தேவயஞ்ஞும், பூதயஞ்ஞும், பிதிர்யஞ்ஞும், மானுடயஞ்ஞும் என்னுமிவையன்றி, அக்கினிட்டோமம், அத்தினியக்கிட்டோமம், உத்தியம், சோடசியம், வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர் மாசியம், நிரூடபசுமந்தம், ஆக்கிரயணம். சௌத்திராமணி அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணீ, சைத்திரி, ஆயுவயுசி, சோதிட்டோமம், அங்கிட்டோமம், சோமபாகம், இராச சூயம், அச்சுவமேதம், பிரமமேதம், மேடயர்கம் முதலியனவென்க.

"இனி திருந்தான்" எனவே அட்ட ஐசுவரியம், அட்டபோகம், சத்த சந்தானம், சதுர்வித உபாயம், சட்குண சமேதம், பஞ்ச தந்திரப்பிரவீணம், வர்க்கத் திரய விசிட்டம், சதுரங்க பலம், சபாசத்தாங்கம், கவீச்சுர காயக சாத்திர கோபித பாரங்கத இராதிபரிணிதாதியனபெற்றுவாழ்ந்தான் என்பது பெறப்படும். 16

அரசாட்சிப்படலம் முற்றிற்று.

ஆ படலம் – 28 – க்கு செய்யுள் – 1172.

நைடத மூலமும் விருத்தியுரையும் முற்றிற்று.

மெய்கண்டதேவன் மெல்கழல் வாழ்க.

நளச்சக்கரவர்த்தியின்

முன்னைப் பிறவி.

இக்காப்பியத் தலைவனாகிய நளச்சக்கரவர்த்தியின் முற்பிறவி யிதுவென்று கௌதம முனிவர் அவ்வரசனுக்கே கூறியுளார். அது தானைப் பிருதுமுனி யுரைத்த புராணப்படி ஈண்டுரைப்பாம். நளச் சக்கரவர்த்தி அதற்கு முந்திய பிறவியிலே கௌடதேச ராசனாகத் தோன்றினன். கௌடமாவது கொடுந்தமிழ் நாட்டைச் சூழ்ந் திருக்கும் நாடுகளிலொன்று என்பது "சிங்களஞ் சோனகஞ் சாவ கஞ்சீனம்" என்னுஞ் செய்யுளாற் றெரிகின்றது. அவ்வாறு கௌட தேசராசனாகப் பிறந்து, பற்பல தேசங்களைத் தன்வயப் படுத்து மாறு கருதிப் படைகளுட னடைந்த பகைவர்மேல் வந்து போர்செய் யத் தோற்று, காட்டிற்சென்று கரந்திருந்தான். ஆங்குத் தன்ப முற்றிருக்குங் காலத்திலே தவசிரேட்டராகிய விசுவாமித்திர முனி வரையடுத்துப் பணிந்து பகைவரை வென்று நாடாளும் உபாயம் அருள்க என்று வேண்டாநிற்ப, கௌசிகன் மைந்தனும் விசுவாமித் திரர் அரசனை நோக்கி, பின்னைப் புதுப்பொருட்கும் பின்னைப் புதுப்பொருள் ஆகிய சிவபெருமான் றிருக்குமாரரான விநாயகக் கடவுளின் விரதத்துட் சதுர்த்தி விரதத்தை யநுட்டிப்பாய் என்று, அதனியல்களையெல்லா மெடுத்துரைத்தார். சைவ சித்தாந்த முரைக்கும் அத்துவித இயல்களைத் தந்திருமுகத்துள்ள துதிக்கை யொன்றானை யுணர்த்தும் வேழமுகப் பெருமான் றோன்றி அருள, பகைவரை வென்று, அவரெலாம் பணிந்து திறைபளிக்க. அர சாண்டிருந்தான். விநாயகசதுர்த்தி விரதத்தைப் பலவாண்டு மெய் யன்புடன் அநுட்டித்தமையால் அடுத்த பிறப்பிலே கௌடதேசத் தரசன், * வீரசேனமகாராசன் குமாரனுகப் பிறந்து நளன் என னும் பெயருடனே தமயந்தியையும் மணந்து, முதல் வள்ளன்மார் எழுவருள் ஒருவனுய்ப் நிடததேயத்தில் வாழ்ந்தனன் என்க. அவன் மந்திரி நிறைமுறைகளை நன்கறிந்த பதுமவத்தன் எனப்படுவான். அவனை ஆங்கீரச முனிவருக்கு ஒப்பாகப் புராணம் புகலாநின்றது.

நஞ்சுமிழ்தடத்தவெள்வாணளன்மகிழ்ந்தாண்டதோறும்
மஞ்சனேரம்பனுள்ளமகிழ்ந்தருள்சுரத்திநோன்பு
தஞ்சமொன்றின்றியாற்றித்தத்துவப்பிணிவினீங்கி
விஞ்சியபரமானந்தவெள்ளத்துளழுந்தினனே.

---

* இந்நைடதத்திலே நளன் றூதுப்படலம் 14 - வது செய்யுளிற் கூறப் பட்டபடி வீரசேனமகாராசனது குமாரனெனத் தெரிகிறது. கூர்மபுரா ணத்திலே சொல்லப்பட்ட வரலாற்றின்படி சுமந்துவின் புத்தல்வன் நள னெனத் தோன்றுகிறது. ஆங்குக் கூறப்பட்ட நளன் இவனல்லன் என் பாருமுளர்.

சிலப்பதிகாரத்தில் நளன் சரிதம்.

ஐவகைக் காப்பியங்களு ளொன்றாய, இளங்கோவடிகளாற் செய்யப்பட்டதாகி விளங்கும் சிலப்பதிகாரத்திலே நளசரிதமுஞ் சொல்லப்பட்டுளது. தன்மனையாங் கண்ணகியுடன் கௌந்தியென் பாளருந் தூண்யாய்வரச் சங்கமிருந்த கூடலம்பதி சாந்த கோவல னென்பான் "இத்தொன்னகர் வணிகர்க்கு என்றன்மை யுணர்த்தி வருங்காறும் இவணின் புகலாவள்; அவ்வாறாயினட்கு இனியோ ரேதமுண்டாங் கொலோ" என்று கையெடுத்துக் கூறினன். அவ் வாறுரைத்த கோவலாற் பார்த்துக் கௌந்தி என்பாள் பொருள் பெண் என்னு மிவையிற்றைப் புணர்தல் பிரிதலால் வருந்துன்பக் கடலிலழுந்திக் கரைகாணப்படாத இடும்பை யெய்தினர் நின்னள வினரல்லர். முன்னும் எண்ணிறந்தோர் பலருளர் அவருட்டேவ ரிற் சிறந்தோ ரொருவனையும், மக்களுட் சிறந்தோ ரொருவனையும் எடுத்துக் காட்டுவமென்று நளசரிதம் உரைத்தாள். மக்களுட் சிறந்தோன் நளனென்பது இதனாற் றெரிகின்றது. அது வருமாறு:-

பதினென்காவது ஊர்காண்காதை. (50 - 57)

"வல்லசா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமைய ளல்ல
ளடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடையிருள் யாமத் திட்டு நீக்கியது
வல்வினை யன்றே மடந்தைதன் பிழையெனச்
சொல்வது முண்டேற் சொல்லா யோநீ."

(இதன்பொருள்.) நளன் ரூன் முன் புட்கரனோடு பொருத சூதின் ஆயத்தான் மண்ணையும் அரசாட்சியையு மிழந்து தன் மனை விமீயோடு வெய்ய கானகத்தே சென்றடைந்தவன் பிறிதொரு பொ ருண்மேற் சென்ற காதலான் அவளைப் பிரிந்தா னல்லன்; அவ ளும் வீறின்மையோடு பொருந்தப்பட்டதனாற் சிறுமை யுறுவாளு மல்லள்; ஆகவும் அடவியாகிய காட்டகத்து அரையிருள் யாமதே யவளை யுறக்கிடை நீத்து நீக்கியது முன்செய்த தீவினையன்றி அம் மடந்தை பிழையாள் என்று சொல்லுதற்கு வேறுகாரண முண்டா யின் (கோவலனே!) நீ சொல் என்றாள் (கௌந்தி) என்க.

நல்லாப்பிள்ளை பாரதத்தில் நளசரிதம்.

தருமன் முதலிய ஐவரும் சூதாடித் தம்நகர் அரசாட்சி, சேனை முதலியவற்றை யெல்லாந் தோற்று, திரௌபதியுடன் காமி யவனம் புக்கமர்ந்த காலத்தே, வியாசமுனிவனர் ஆங்குப்போந்து நீதிகள் கூறித் தேற்றினர். அதுபோது உதிட்டிரர் முனிவரை

வணங்கி, எம்மைப்போன் முன்னஞ் சூதாடிப் பூமியைத்தோற்றுக் கானகமடைந்தா ருளரோவென, வியாதனுர் நளன் சரிதத்தைக் கூறினர்.

அதனைத் தமிழிற் செய்தாருள் நல்லாப்பிள்ளை அவர்கள் நளன் கதை யுரைத்த சருக்கம் என்று ஒரு சருக்கமிட்டு, நூற்றைம் பத்து மூன்று செய்யுட்களால் நைடதத்தைச் சுருக்கமாக அழ குறப் பாடியுள்ளார். அதனை நல்லாப்பிள்ளை பாரதத்திற் காண்க.

வில்லிபுத்தூரர் பாரதத்தில் நளசரிதம்.

குகக்கடவுளின் திருவருள் பெற்று விளங்கிய ஸ்ரீமத் அருண கிரிநாத சுவாமிகளுடன் வாதிட்டு, அவராற் பாடியருளப்பெற்ற கந்தர் அந்தாதிக்கு உரையுரைக்க வாற்றலின்றித் தோல்வித்தான மடைந்து, சிவதூடணையாற் கண்களிழந்த வில்லிபுத்தூரர், அந்த அபராத நீக்கற்காகப் பாடிய பாரதத்திலே,

அருச்சுனன் றவநிலைச்சருக்கம் 24 - செய்யுளில்
கூறியது வருமாறு:—

நீவிரே யல்லிர் மூன்ன ணிலமுழு தாண்ட நேமி
நாவிரி கீர்த்திவாள னளனெனு நாம வேந்தன்.
காவிரி யென்னத் தப்பாக் கருணையான் சூதிற்றோற்றுத்
தீவிரி கானஞ் சென்ற காதையுஞ் செவிப்படாதோ.

சூடாமணி நிகண்டு.

மிக்கசெம் பியனே காரி விராடனே நிருதி தானுங்
தக்கதுங் துமாரி தானுஞ் சகரனு நளனுந் தாமுன்.

பிங்கல நிகண்டு.

சகரன் காரி நளன் றுந்துமாரி
நிருதி செம்பியன் விராடன் றலைவள்ளல்.

நளவெண்பா.

"வெண்பாவிற் புகழ்ந்தி பரணிக்கோ சயங்கொண் டான்" என்னுஞ் செய்யுட்படி வெண்பாப் பாடுதலில் வல்ல புகழேந்திப் புலவராலே, முரனை நகர்ச் சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனது விருப்பின்படி வெண்பா யாப்பினுலே நளசரிதம் முழுதும் பாடப் பீட்டுளது புலவர்க்களவரும் போற்றிக் கொண்டாடுவது. ஒட்டக் கூத்தர், அதனை யரங்கேற்றுங் காலத்தில் ஆட்சேபித்தவற்றிற் கெல்லாம் செவ்வனிறை தெளித்தார் என்று தெரிகிறது. நளச் சக்கர வர்த்தியினது வீரம், கொடை, நற்குணம், அழகு, கல்வி, அறிவு, சத்தியப், நிறை, கடைப்பிடி, போர், வென்றி, அன்பு, அருள், சிவபத்தி யாதியன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

நைடத உள்ளுரைபொருள்.

இருதுபன்னன் தான்றி மரத்தைப் பார்த்து அதன்கண் இலை இவ்வளவு, பூ, காய்கள் இவ்வளவு என்றும், அதற்கு அக்ஷவித்தை யெனப் பெயர் என்றும் உரைத்ததனால், முற்காலத்துள்ள எம்மனோர் யாவரும் கணக்கில் வல்லவர் என்று புலப்படுகின்றது.

நளன் சாரதியாயிருந்து இருதுபன்னன் றேரைச் செலுத்தாநிற்புழி, அவனுத்தரீயம் வீழ்ந்தலும், அதனை எடுத்துக்கொடுக்க என்னு முன்னமே 24-காதம் (அதாவது 240 மைல்) தூரம் சென்றது என்றமையால், பூர்விகர் குதிரைகளின் மனக்கருத்தறிந்து செலுத்துவதில் வல்லமையுடையர் என்பதும், புகைவண்டி, தந்தி, முதலியவற்றின் வேகத்தைப் பார்க்கினும் மிக்க வேகமாகக் குதிரைசெலுத்தி யமல்பினர் என்பதும் அறியக்கிடக்கின்றது.

நளன் நீரும் நெருப்பு மின்றிச் சோறு சமைத்தான் எனவே, அவ்வியப்புத் தொழில் பரதகண்டத்தின் ரிடத்துக் காணப்பட்ட தென்று தெரிகிறது.

அன்னத்தைத் தூதுவிட்ட படலம் 5-வது செய்யுளால் மழை பெய்தற்குக் காரணம் சூரியகிரணம் என்னு முண்மை வெளிப்படுகிறது.

சந்திரோபாலம்பனப் படலத்தில் 20-வது செய்யுளால் சகோரப் பறவையானது நஞ்சைக்கண்ட அளவிலே தன் கண்கள் சிவந்து காந்தும் என்று காமந்தகம் என்னும் பொருணூல் கூறியபடி சொல்லப்பட்டது.

நளன் ஓர் மந்திரத்தையுச்சரித்துத் தன்னுருவை மறைத்துக் கொண்டு தமயந்தியின் அரண்மனை புக்கான் என்பதனால், பற்பலர் இருக்குமிடத்தும், எண்ணிலார் காவல்புரியுமிடத்தினும் சென்று தாம் எண்ணியதைக் கொண்டுவருவார் இந்துக்களாகக் காணப்படுகின்றனர். இதனைமாலிகாஞ்சன வித்தையென்ப.

இந்திரன் மூதலாய தேவர்கள் நளனுருவைக்கண்டு வெள்கியும் தமயந்தியுன்னுருவங்கண்டு தத்தமாதரை வெறுத்து இவளே வெஃகியும், நின்னூர் என்றதனாற் சுவர்க்கத்தைப் பார்க்கினும் இம்மண்ணுலக போகத்தின் மேம்பட்டதென்பது பெறப்படும்.

கற்பினையுடையாரைத் தீண்ட நினைப்பாரும் அழிவர் என்பது, தமயந்தியை வனத்திலே தீண்டியிறந்த வேடன் நிலைமையால் நன்கு விளங்கும். இவ்வாறே யாங்காங்குச் சிறப்புப்பொருள் பல காணப்படும்.

தமயந்தி வமிசவரலாறு.

தமயந்தியின் மூப்தந்தையர்களின் பெயர்கள் கூறியதன்றி, இந்நூல் வேறொன்றும் அவர்களைப் பற்றிக் கூறிற்றிலது. ஆகலின் தமயந்தி வமிசத்தை யறிந்தவரையி லீண்டுக் கூறுதும். தமயந்தியின் வமிசத்திய அரசர்கள் வழிவழி யிருந்த அரசாண்ட தொன்னகரம் கருநடதேயத்துள்ள பானுமாநகரமே யாகும். அந்நகரத்தில் அரசாண்டிருந்தான் வல்லவன் என்னு மாநிருபன். அவன் மனையாள் பெயர் கமலியாகும். அவ்விருவருங் கூடிவாழுங்காலத்தில் ஓராண்குழந்தை குருடு, செவிடு, ஊமை என்னு மிவையுற்றுத் தேகமெங்கும் புண்கண் செறிந்து, குறளன் (இரண்டடி யுயர முடையவன்) ஆகித் தோன்றிற்று. தந்தையாம் வல்லவராசன் அவை நீங்கும் வண்ணம் தவம், தானம் என்னும் இவையிற்றைப் பலப்பல செய்தும் வல்ல மருத்துவர்க்கூவி மருந்து கொடுப்பித்தும் அவையகலப் பெறுமையாற் பெருத்துன்புற்று, மனைவியையுங் குழந்தையையும் காட்டிற்குப் போக்கினன். தக்கன் என்னுங் குழந்தையுடன் காட்டிற்சென்று வருந்திய கமலியென்பாள், அவ்வருஞ் சுரங்கடந்து குண்டினபுரத்தை யடைந்து, அவ்வூர் விநாயகராலயத்தின் ஓர்பால் வசித்து ஐயமேற்று மகவுக்கூட்டி வளர்த்து வந்தாள். ஒருநாள் விநாயகக்கட்வுளின் நல்லருள்பெற்ற முற்கல முனிவனுர் அவண்போதர, அவரது மேனிச் சுகந்தக் கர்ற்றுத் தக்கனென்னுங் குழந்தைமீது பட்டமையால் அந்நோய் முதலியன நீங்கப்பெற்று மன்மதனெனவென் றயிர்க்கத்தக்க அழகிய வடிவங் கொண்டான். அதுகண்டு ஈன்றபொழுதினும் பெரிதுவந்தாய் முற்கலமுனிவனுரை வணங்க, அவர் அஷ்டாக்ஷர மந்திரத்தை யுபதேசிக்க, தக்கன் அம்மந்திரங்கொண்டு உபாசித்து விநாயகப் பெருமான் றிருவருள்பெற்று, அரசரெல்லாந் தொழுங் குண்டின புரத்தையே இராசதானியாக்கொண்டு அரசாளுவானாயினன். அது முதல் விதர்ப்பதேசமே அரசரிருக்குந் தேசமாயிற்று. குண்டின புரத்தைக் களண்டியந்நகர் என்றுங் கூறுவர். தந்தையாகிய வல்லவராசனும் புத்திரனாகிய தக்கன் அரசனேறு மாள்வதறிந்து கருநடதேசத்தை விடுத்து விதர்ப்பதேயத்துக் குண்டினபுரத்தையே யடைந்து வாழ்ந்திருந்தான். தக்கன் என்பான் வீரசேனராசன் புத்திரியை மணந்து பிரகற்பானு என்பவனைப் பெற்றான்.

பிரகற்பானு என்னும் அரசன் கட்கரதன் என்பவனைப் பெற்றான். அவன் சுபாலன் என்னும் மகாராசனை யீன்றான். அவன் றவப்பேறாக வதாகர்ன் என்னும் குமாரனை யீன்றினன். அவன் மகன் வபுத்திரத்தன். அவன் மைந்தன் சித்திரசேனன். அச்சித்திரசேன மகாராசன் றவப்புதல்வன் வீமராசன் எனப்படுவான். அரசர்களை யெல்லாம் அடக்கியாண்ட வீமமன்னவன், சுதர்மன் என்னும் அரசனது புதல்வியாகிய சாருகாசினி, சேதிமன்னன் மூர்ய் என்னு மிருவருட் சாருகாசினி யென்பாளை விவாகம் செய்

தனன். பற்கள் தோன்றுதபடி புன்னகை செய்வதால் அவட்குச் சாருகாசினி என்னும் பெயர் கூறுவர். அது,

வீரவேன் மன்னவன் விழையுங் கற்பிலுண்
மூரறேற் றுவகை முறுவல் செய்தலாற்
சாருகாசினி யெனச் சாற்று நாமத்தா
ளோருமா நலமெலாந் திரண்ட வுள்ளத்தாள்.

என்னும் பார்க்கவ புராணச் செய்யுளா னுணர்க.

கணேசப்பெருமானுக்கு வழிவழி யடியவராயிருக்கின்ற வீம னும் சாருகாசினி யென்பாளும் புத்திர ரில்லையென்று வருந்தித் தவஞ்செய்வான் காட்டினை யடைந்தார். ஆங்குக் கௌசிகமுனி வரைக் கண்டு வணங்கிப் புத்திரப்பேற்றிற்கு உபாயங் கேட்டார். காதிமன்னன் மகனாகிய விசுவாமித்திரனுர் கணேச வகாக்கர மந் திரத்தை யுபதேசித்தனர். அதனைக்கொண்டு உபாசித்து விநாயகக் கடவுள் திருவருளாற் பொன்னிறமுடைய மேனிப் புத்திரனைப் பெற்றனர். அதனால் அப்புத்திரனுக்கு உருக்குமாங்கதன் என் னும் பெயரிடப்பட்டது அதனை,

திருக்கிலாதவன் செய்வனசெய்தபின்,
றருக்கிலாரணர் தம்மைழிஞப்பெய
ருருக்குமாங்கத் தொளிர்தருமைந்தனுக்
குருக்குமாங்கத னென்றுரைத்தானரோ.

என்னுஞ் செய்யுளாற் றெரிக. அவ்வுருக்குமாங்கதன் அரசா னுங் காலத்திலோர்நாள் கானகம் சென்று வேட்டையாடிக் களி என்னு முனிவர் இருக்கும் காட்டகஞ்சார்ந்து, அவர் மனைவியை நீர் வேட்கைபோகுவான் றண்ணீர்கேட்டான். அதனைக்கொண்டு வந்து கொடுத்த கவிமுனி மனையாளாம் முகுந்தை, இவன் அழகு கண்டு மோகித்து அணைவாள்வேண்ட மறுத்தானென்ப. அவள் சபித்தமையால் வெண்குட்ட நோய்கொண்டு, அதனை விநாயகவழி பாட்டால் நீக்கிக் கொண்டான் என்பது. பின்னர் வீமனும் சாரு காசினியும் யோசித்து "மனைக்கு விளக்க மடவார்" என்ற முது மொழிப்படி, குலவிருத்தியும் இல்லத்திற்கு விளக்கமும் உண்டா மாறும், ஏகசக்கிராதிபதியை மருகனுகப் பெருமாறும், பெண்ணர சாகித்தேவர்களும் வெஃகுங் கட்டழகுடைய நங்கைப் பெறுவய லென்று தமனமுனிவரையடுத்து அவர் உபாயத்தாற் தமயந்தி யைப் பெற்றனர். அவள் சக்கரவர்த்தியாம் நளனை மணந்து இந் திரசேனன் என்னுங் குமாரனையும், களாயினி என்னும் புத்திரியை யும் பெற்றனள். தமயந்தியின் உயிர்த்தோழி கேசினி என்னுப்பெ யராள். தமயந்தியின் முயர்திய சாருகாசினியின் சகோதரி சேதி யாசன்றுய் என்பாள். சுவாகு என்னும் புதல்வனையும், சுநந்தை யென்னும் புதல்வியையும் அவள் பெற்றனள் எனத் தெரிகின்றது. இதுவே தமயந்தி சுயம்வர வரலாற்றிற் றெரிந்ததாகும்.

தமயந்தி சுயம்வர வரலாறு முற்றிற்று.

இந்நூற் செய்யுட்களின் வரும்

அலங்காரங்கள்.

1 இகழ்ச்சியணி.
2 இலேசவணி.
3 இல்புலவே துத்தற்குறிப்பணி.
4 இல்பொருளுவமையணி.
5 இல்பொருளெதிர்நிலையணி.
6 இன்மைநவிற்சியணி.
7 உடனிகழ்ச்சியணி.
8 உயர்வுநவிற்சியணி.
9 உய்த்துணர்வணி.
10 உருவகவணி.
11 உருவகவுயர்வுநவிற்சியணி.
12 உலகவழக்குநவிற்சியணி.
13 உவகையணி.
14 உவமையணி.
15 உருப்புடையுருவகவணி.
16 உறுப்புறுப்பிக்கலவையணி.
17 எடுத்துக்காட்டுவமையணி.
18 எதிர்நிலையணி.
19 எதிர்நிலையுவமையணி.
20 எதிர்மறையணி.
21 ஏகதேசவுருவகவணி.
22 ஏதுத்தற்குறிப்பணி.
23 ஐயவணி.
24 ஒப்புமைப்பூனைவிலிபுகழ்ச்சியணி.
25 ஒருதொடர்ப்பொருட்கலவையணி.
26 ஒழித்துக்காட்டணி.
27 ஒழிப்பணி.
28 கருத்தடைகொளியணி.
29 கலவையணி.
30 கற்றோர்நவிற்சியணி.
31 காட்சியணி.
32 காரணப்பூனைவிலிபுகழ்ச்சியணி
33 குறிநிலையணி.
34 கூட்டவணி.
35 சிலேடையணி.
36 சிறப்பணி.
37 சுருங்கச்சொல்லணி.
38 செய்யுட்குறியணி.
39 செய்யுட்பொருட்பேறணி.
40 தகுதியின்மையணி.
41 தற்குறிப்பணி.
(தற்குறிப்பேற்றவணி.)
42 சேர்வையணி.
43 திரிபணி.
44 தன்பவணி.
45 தொகையுவமையணி.
46 தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.
47 தொடர்புயர்வுநவிற்சியணி.
48 தொடர்புருவகவணி.
49 தொடர்முழுதுவமையணி.
50 தொல்லுருப்பெறலணி.
51 நற்பொருட்காட்சியணி.
52 நிரனிறையணி.
53 நினைப்பணி.
54 பதப்பொருட்காட்சியணி.
55 பயின்றற்குறிப்பணி.
56 பிரிநிலைநவிற்சியணி.
57 பிறிதாராய்ச்சியணி.
58 பிறிதினவிற்சியணி.
59 புகழ்பொருட்சிலேடையணி.
60 பூனைவிலிபுகழ்ச்சியணி.
61 பொதுமையணி.
62 பொதுப்பூனைவிலிபுகழ்ச்சியணி
63 பொருட்டற்குறிப்பணி.
64 மயக்கவணி.
65 மயக்கவொழிப்பணி.
66 மாற்றுநிலையணி.
67 முறையிற்படர்ச்சியணி.
68 மிகையுயர்வுநவிற்சியணி.
69 மேன்மேலுயர்ச்சியணி.
70 வஞ்சகவொழிப்பணி.
71 வஞ்சப்பழிப்பணி.
72 வஞ்சநவிற்சியணி.
73 வஞ்சப்புகழ்ச்சியணி.
74 வடிவப்பொருட்டற்குறிப்பணி.
75 வல்லோர்நவிற்சியணி.
76 விரியுவமையணி.
77 வினைப்பொருட்டற்குறிப்பணி
78 வீறுகோள்ணி.
79 வேண்டலணி.
80 வேற்றுப்பொருள்வைப்பணி-
81 வேற்றுமையணி.

அலங்காரங்கள் முற்றிற்று.

இந்நூலின் அடங்கிய

பொருள்களின் அட்டவணை.

இலக்கம்.	விஷயம்.	பக்கம்.
1	காந்தியுரை.	3
2	இந்நூலுரையிற் காட்டப்பட்ட நூல்கள்.	6
3	நூலாசிரியர் வரலாறு.	7
4	இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்.	18
5	ஸ்தமயந்திகளின் சரிதம் உரைத்த நூல்கள்.	,,
6	வடமொழி நைஷதம்.	19
7	ஷ்ரீ நைஷத ஆசிரியர்.	,,
8	ஸ்தியானங் காரிய சித்தி.	20
9	நிடததேச விபரம்.	,,
10	நைடத நூற்பயன்.	21
11	ஸ்சக்ரவர்த்தி வமிச வரலாறு.	22
12	நைடதம் என்னும் பெயர் விளக்கம்.	23
13	கடவுள் வணக்கம்.	24
14	சிறப்புப்பாயிரம்.	26
15	காட்டுப் படலம்.	28
16	நகரப் படலம்.	45
17	அன்னத்தைக் கண்ணுற்ற படலம்.	71
18	அன்னத்தைத் தூதுவிட்ட படலம்.	122
19	கைக்கிளைப் படலம்.	216
20	மாலைப் படலம்.	231
21	நிலாத் தோற்று படலம்.	239
22	சுக்திரோ பாலம்பனப் படலம்.	250
23	மன்மதோ பாலம்பனப் படலம்.	274
24	இந்திரப் படலம்.	282
25	ஸ்ளன் தூதுப் படலம்.	296
26	சுயம்வரப் படலம்.	360
27	போர்புரி படலம்.	466
28	மணம்புரி படலம்.	505
29	மீட்சிப் படலம்.	536
30	கலிதோன்று படலம்.	542

இலக்கம்.	விஷயம்.	பக்கம்.
31	இளவேனிற் படலம்.	548
32	போதுகொய் படலம்.	553
33	புனல் விளையாட்டுப் படலம்.	558
34	சூதாடு படலம்.	566
35	நகர்நீங்கு படலம்.	577
36	கான்புகு படலம்.	595
37	பிரிவுறு படலம்.	602
38	வேற்றுரு வமைத்த படலம்.	616
39	வீமன் தேடவிட்ட படலம்.	624
40	கலிநீங்கு படலம்.	632
41	தேவியைக் கண்ணுற்ற படலம்.	640
42	அரசாட்சிப் படலம்.	653
43	நளச்சக்ரவர்த்தியின் முன்னைப் பிறவி.	661
44	சிலப்பதிகாரத்தில் நளன் சரிதம்.	662
45	பாரதத்தில் நளசரிதம்.	,,
46	நளவெண்பா.	663
47	நைடத உள்ளுறைபொருள்.	664
48	தமயந்தி வமிச வரலாறு.	665
49	இந்நூற் செய்யுளின் வரும் அலங்காரம்.	667

பொருள்களின் அட்டவணை

முற்றுற்று.

பாட்டு முதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
அ	
அகலிருவிசும்பு	364
அகல்விசும்பெ	247
அகழியங்கடல்	540
அகனிலாமணி	55
அங்கண்மா	342
அங்கண்வானக	236
அங்கண்வானத்	504
அங்கலுழ்மேனி	317
அஞ்சனமெ	459
அடிதொழு	587
அடைந்தம	645
அடைந்தமாதர்	613
அடைந்தமாதி	610
அணங்கினுக்	81
அண்ணுநோ	553
அணித்தாயரிதா	159
அணுகியாங்	611
அண்டருலகத்	296
அண்ணலங்	536
அண்ணறன்	320
அதிர்பொலன்	619
அதுகிளத்த	626
அத்தகையம	292
அத்திறத்தெ	283
அந்தாமரை	260
அந்துகினனே	563
அமிழ்தினே	445
அமைத்தட	406
அமைப்பருங்	483
அயிலெடுத்	491
அயில்வாளி	380
அயினீர்	423
அரக்கெறி	37
அரசர்கோ	561
அரத்தமுண்	301
அரவமேகலை	555
அரிகேசரற்கி	564
அருந்ததிக்	543
அருந்தவத்தம	129
அருந்தவனே	293
அருப்புமென்	517
அருமருந்த	482
அருமறைக்கி	39
அருமறைமுனிவரு	540
அருமறைமுனிவர்	545
அரும்பிளநகை	93
அருவமாயணு	275
அருவமாயமெ	277
அருளினதுறை	69
அலங்கலங்கு	523
அலங்குளப்	404
அலமருமக்க	584
அலரின்மீது	275
அலர்முலைப்ப	648
அலர்முலைய	563
அலர்வார்பக	203
அலகடலு	464
அலத்தடங்க	222
அலையொலி	105
அலவாய்விடத்	272
அல்லலுழந்த	502
அல்லலுற்றழு	217
அல்லியங்கம	534
அல்லியங்கோ	38
அல்லினிருண்	253
அவிரிழை	38
அவிர்பூணெ	60
அவ்வழிணை	418
அவ்வுரை	359
அழகினைச்	466
அழகுவாய்ப்	507
அழலிலாது	631
அழலினின்	617
அழலுமீரு	645
அழுதவுண்	628
அருவதென்	625
அளிக்கொருகட	120
அளிமூலணி	100
அளியதொடி	432
அளியின்மூர	125
அள்ளிக்கொ	385
அள்ளிலைப்பூ	596
அள்ளிலைமணி	529
அள்ளிலைவடி	454
அள்ளிலைவேற்	593
அறந்தலை	594
அறற்கருங்	129
அறுகான்மூர	265
அறைகழல்	494
அறைபொற்	174
அனங்கனை	74
அனிச்சமென்பு	600
அனிச்சமென்மல	119
அனைத்தையுங்	575
அனையமடமா	614
அன்றியுங்க	354
அன்னகாலையிலக	650
அன்னகாலையிலாய்	283
அன்னங்கண்	29
அன்னமுரைச	296
அன்னமுரைத்த	209
அன்னமுரைத்தவி	215
அன்னந்தொடரு	210
அன்னவாறி	655
அன்னவாறு	622
அன்னைத்தெ	532
அன்னைமூப்பழி	118
அன்னையரம்	535

பாட்டு.	பக்கம்.
ஆ	
ஆகுலத்துடன்	121
ஆங்கதுகேட்ட	599
ஆங்கதுகேட்டவர	306
ஆங்கவண்மே	292
ஆடவரொடேடி	56
ஆண்டகைக்	503
ஆம்பலம்போ	522
ஆயவெள்ளம்	210
ஆயிடைக்காண்	605
ஆயிடையின்	604
ஆயிடையுயிர்	596
ஆயினுமினி	591
ஆயின்னதோ	620
ஆழிசூழ்புவி	659
ஆற்றல்சான்ம	440
ஆற்றல்சானள	352
ஆற்றவஞ்சின	590
ஆற்றவேள்வி	505
இ	
இகன்மிகுதி	496
இங்கிவர்த்தம்	349
இடரோதவி	384
இடுக்கணெய்	282
இணரிழ்	558
இத்தகைவன	144
இந்திரசேன	579
இந்நகர்வரை	546
இமிழ்கடிமு	387
இருங்கடற்ரு	537
இருங்கட்ற்ரே	392
இருதடம்புய	344
இருதுபன்ன	621
இருதுபன்னன்	637
இருதுபன்னன்	641
இருவிசும்பொ	329
இரைத்தயர்	114
இவனழற்கடவு	302
இவ்வாறிருங்	209
இவவாறுசெ	179
இவ்வாறுதன்	608
இழைசுடரெறி	428
இழைத்ததீவி	638
இழைபரந்திமைக	366
இழைபரந்திமை-ன	439
இழைபுரைம	453
இழையிடைபு	138
இழைவளர்மு	321
இனையனவமர	543
இனையவிஞ்சை	637
இனையனவாச	311
இனையனவுரை	331
இனையஞகிய	624
இன்பக்கலவி	207
இன்றுணைக்	548
இன்னகளத்	498
இன்னகாரிருட்	248
இன்னகிற்பு	600
இன்னகூறலு	644
இன்னகைத்	402
இன்னணங்	495
இன்னணந்தே	351
இன்னணமண்ண	356
இன்னணமா	560
இன்னதன்மையனு	71
இன்னதன்மையன்	621
இன்னதன்மையவி	553
இன்னபோரணி	509
இன்னபொன்னிற	115
இன்னமிழ்துயிர்	529
இன்னரிச்சிலம்பு	462
இன்னவாய்மை	636
இன்னவாறுமகனி	279
இன்னவாறுளத்	341
இன்னவிஞ்சை	643
இன்னவைகிமும்	360
இன்னவைகிழ்	515
இன்னளென்	627
இன்னிசைய	321
இன்னுயிருய்யு	587
ஈ	
ஈங்கடைந்து	641
ஈங்கிவனின்ன	542
ஈங்கிவன்மா	154
ஈங்கிவ்வாறு	212
ஈட்டுமணிகள்	200
ஈந்தவாலாரி	645
ஈர்க்கிடை	405
உ	
உடல்சின	474
உடைதிரைப்	528
உடைப்பெரும்	305
உண்ணிறை	344
உண்ணெகிழ்	303
உதகநல்கு	511
உயிருதவிசெய்	194
உயிர்த்துமெ	623
உயிர்நிகர்ம	579
உரவுநீர்க்கருங்கட	304
உரவுநீர்க்கருங்கட	570
உரவுநீர்த்	403
உரிமையிற்	467
உருகியுளங்	290
உருகுதக்கொ	313
உருவவொண்	651
உருவிலானெதிர்	227
உருவின்மை	50
உருவுகண்டுவ	369
உருவெளி	322
உரைசெய்	628
உரையது	419
உலகமெலாம்	188
உலகொருமூன்றி	371
உலனுறுசெய்	171
உளங்கனிந்தா	41
உளங்கனிந்து	446
உளத்தனவாண்	197
உள்ளங்கொண்	553
உள்ளமொன்று	65
உன்னுழை	302
ஊ	
ஊர்சுணங்	436
ஊழியுஞ்செய்	192
ஊறுசெய்	595
ஊன்பயில்	476
எ	
எண்ணரும்	582
எண்ணில	569
எண்ணியது	603

பாட்டு.	பக்கம்.
எண்ணியெண்	280
எண்ணிவந்	578
எண்டிசைத்	588
எதிர்முக	320
எப்பொரு	309
எம்மிறையீ	330
எய்தியது	357
எய்தியமக	329
எரிகதிர்ப்	399
எழிறிகழ்	391
எழுமகன்	603
எள்ளுகருதினை	573
எள்ளுறவே	461
எறிதிரைசுருட்	530
எனவிவை	104
என்குறைநீ	195
என்றலுங்கடவு	469
என்றலுந்தி	583
என்றலுமமரர்	542
என்றலுமலரி	434
என்றலுமுறு	577
என்றவர்மொ	353
எனறவளுரை	580
எனறூர்வமொ	382
எனறெய்ய	461
என்றிவன்புக்	355
என்றிவன்மொ	352
என்றின்மாபோ	165
என்றுகண்க	648
என்றுகூறலு	634
என்றுகூறிய	632
என்றுகூறினு	230
என்றுமற்றி	305
எனறுமுனி	290
என்றுவெந்த	386
என்னமற்றினை	457
என்னருந்தவ	306
என்னலும்	582
என்னவாங்கு	198
என்னவேந்து	310
என்னுவருகி	608
என்னும்விள்	308
என்னுளத்தி	190
என்னுளத்தெ	332

எ

பாட்டு.	பக்கம்.
எகாவிசும்பி	170
எதமில்குண	327
எந்தலேகி	618
எந்தலோடவ	108
எந்திளமூலை	456
எந்திளவன	565
எமுறுமன்ன	432
எர்குடியிரு	375
எழ்நிலவரை	415
எற்றுரிமு	379
எனையுள்ளன	513

ஐ

பாட்டு.	பக்கம்.
ஐங்கணேக்கிழவன்	340
ஐந்தருநீழலி	304
ஐந்தருநீழல்வே	349
ஐயரியோடு	573
ஐயமுறேனள	191
ஐயரிக்கண்	225
ஐயரிசிதறு	389
ஐயரிபரந்து	368
ஐயன்கமல	608

ஒ

பாட்டு.	பக்கம்.
ஒருத்தியா	325
ஒழுகுநீம்புனல்	31
ஒழுகொளி	136
ஒளிஇளர்	496
ஒளிமுகமி	304
ஒளிர்பொன்னு	168
ஒள்ளழல்க	478
ஒற்றரேகி	656
ஒற்றர்கூற	506
ஒற்றையாழியன்றே	46
ஒற்றையாழியான்	231
ஒன்னலர்மணி	67

ஓ

பாட்டு.	பக்கம்.
ஓகையோ	630
ஓங்குயர்வி	378
ஓடரிக்கணு	630
ஓர்துகிலி	597
ஓவியத்துறை	75
ஓவியரெழுதரு	563
ஓவியரெழுத	413

க

பாட்டு.	பக்கம்.
கங்குலெய்திய	247
கங்கையென்றுல	31
கஞ்சநாண்	444
கடல்சூழ்புவியி	199
கடல்படுமமுத	42
கடிகமழ்	345
கடிமலர்க்கூ	350
கடிமலர்ப்ப	413
கடிமனையிட	546
கட்புலன்கது	154
கட்புலனென்	78
கணங்குழை	317
கணங்கொண்	51
கணைவேணி	382
கண்கவர்வனப்பி	132
கண்டவர்ம	468
கண்டுகண்டு	411
கண்ணகன்ஞா	503
கண்ணகன்பு	601
கண்ணகன்ம	314
கண்ணகன்ற	45
கண்ணுங்கை	157
கதழெரிக்க	617
கதிர்செய்நித்	240
கதிர்மணியடை	538
கதிர்மதிதவ	390
கத்திகைக்கரு	522
கந்தடுகிம்புரி	189
கந்தடுதறு	485
கந்தவார்குழற்	625
கமலமீது	512
கருணைசெய்	618
கருணைபுங்க	409
கருணையினெய்திய	501
கருத்தினுள்டெழு	236
கருந்தடங்கண்ணித	598
கருந்தடங்கண்ணி	324
கருந்தாரை	178
கரும்புயன்மறை	149

பாட்டு.	பக்கம்.
கருவிமாமழை	28
கலத்தொடு	427
கலவியின்மயக்க	525
கலிகெழுமூசு	537
கலைக்கடல்	574
கலைவலானெஞ்	407
கலைவலாஞெ	546
கலைவளர்தி	457
கலைநிலாத்	348
கல்லதர்நட	598
கல்வியினகன்றிடு	117
கல்வியின்றுறை	82
கழலாவாழ்யுங்	385
கழிபெருங்	343
கழிமடநாண	521
கழைகளிகளி	364
கழைசுளிபுகர்மு-ங	300
கழைசுளிபுகர்-தேர்	575
கழையென	449
களத்திடை	486
களிகொள்வ	246
களிக்கயல்	523
களிசெய்காம	243
களிச்சுரும்	564
களிமஞ்ஞ்	420
களிமயில்கு	595
களிமாமயி	166
காகடிந்தொ	130
காகணதாகி	571
கள்ளவிழ்	319
கள்ளருமலர்	511
கள்ளுணவி	573
கள்ளுயிர்க்கு	617
கள்ளுயிர்த்த	549
கள்ளுயிர்த்தி	376
கறுவொடு	35
கற்பினழலா	610
கற்றைமிங்க	578
கனைசெழுஞ்	617
கன்றுகுணில	251
கன்னல்கமு	291
கன்னிமனஞ்	190
கா	
காசுலாமு	555
காட்டினள்	629
காண்டலும	145
காதலங்கடலி	152
காதல்கூர்ந்து	615
காதளவோ	439
காந்தெரி	362
காமுறுமொ	315
காம்புறழ்	452
காயெரிம	551
காரிகையுளமூ	359
கார்க்கும்வெண்	202
கார்த்திரண்	477
காலமென்னு	234
காவிலன்புடை	556
கானமாலங்	328
கானமர்கரி	348
கான்படு	481
கான்பயின்	539
கான்ரருயி	606
கி	
கிளிபொருகி	528
கு	
குடங்கையனை	205
குடங்கையி	449
குடவளைக்குல	45
குடவளையினங்	129
குடவளையினமணி	110
குடைந்தவ	337
குதலைமொழியி	260
குமிழ்மிசை	133
குயின்மென்	177
குரவவிழ்ந்த	226
குருதிகொப்பு	481
குருமணிமேக	307
குருமணியி-குடை	365
குருமணியி-கோடு	412
குருமணியி-நீள்	110
குருமணிவல	521
குரும்பைமென்	34
குவட்டின	447
குழலிவெண்	399
குழுமியபறவை	527
குழைமுகங்கிழி-கு	438
குழைமுகங்கி-த்து	567
குழையெதிர்	336
குளிர்கறுஞ்	98
குளிர்பளிக்கு	63
குளிர்மதி	402
குறிப்பறிந்தீ	303
குறைவில்	242
குனிசிலை	108
குன்றிடைப்	550
கூ	
கூந்தன்மா	635
கூழுமங்கை	228
கூற்றமென்ன	276
கூற்றிலுவெ	401
கூற்றுழற்கு	581
கூற்றுறழ்தடங்க	519
கூற்றெனக்கனலி	470
கூற்றெனக்கொ	371
கூற்றெனவர	477
கூற்றெறிங்கொ	480
கூனிரும்பினிற்	33
கூன்பயில்	377
கூன்பிறைக்	484
கே	
கேட்டவளவி	611
கேட்டவாரு	634
கேழ்கிளர	146
கை	
கைப்படுகூறை	113
கைம்மாறு	194
கொ	
கொங்கவி	414
கொங்கிற்பொ	267
கொங்குண்	650
கொங்குவாய்	242
கொங்குவிம்மு	616
கொங்குவிரிப்	261
கொடிகளுங்	540

பாட்டு.	பக்கம்.
கொடியன	41
கொடுங்குணி	471
கொட்புறவு	89
கொந்தார்	380
கொய்குணர்	400
கொய்யுளைக்கலினப்	471
கொய்யுளைக்கலின	361
கொய்யுளைப்பரி	91
கொய்யுளைப்பா	483
கொய்யுளைவய்	297
கொலைத்தட	480
கொல்சின	571
கொல்லும்வேலு	208
கொல்லுலையீர்	545
கொல்லுளைவேற்	457
கொன்னுளைகொ	484
கொன்னுளைவண்டிமி	443
கொன்னுளைவண்டின	628
கொன்றுகான்செய்	278
கொன்றுவில்	476
கொன்னுனை	591
கோ	
கோங்கிளர்	93
கோடுந்தியர்	164
கோட்புலிப்	494
கோணைக்களிற்	172
கோதிலுளன்	515
கோதைமார்	557
கோத்தும்பி	554
கோலநாண்	557
கோவடுகருதி	568
கோறல்செய்தா	116
கோற்றொழிலிச்	582
கோற்றொடிந	332
கௌ	
கௌவைக்கட	167
ச	
சகார்தொட்ட	232
சடிலமன்று	278
சந்தநறு	59
சா	
சாதலொழி	612
சாந்தணிந்தோ	539
சாந்தமூழ்கி	66
சாந்தமூ-மூலை	505
சாந்தமூ-புய	512
சாந்தமென்மூலை	642
சாமரையிர	577
சி	
சிதாறிநெடுங்க	453
சிலதியர்பரப்பிய	585
சிலகுழைத்	473
சிலபொருதினி	497
சிலையுயிர்த்	492
சில்லரிச்சிலம்பு	390
சில்லரிநெடு	603
சில்லியந்தடந்தே	489
சில்லியந்தடந்தேர்	640
சிறையளிருடை	85
சிறையொளிர்	115
சிறைவண்டு	173
சிற்பதூல்	363
சிற்றிடை	560
சீ	
சீதையொரு	266
சீலநற்றரு	572
சீற்றமிகுவ்	498
சு	
சுடரும்வடனல	257
சுடரும்வெண்	281
சுடாகான்றெ	255
சுடர்செய்	620
சுடர்விடு	537
சுணங்குபூத்தக்	199
சுணங்குபூத்தொரு	140
சுணங்குழை	371
சுணமென்	516
சுருதிநூற்றுரை	633
சுரும்பிமிர்	487
சுலவுற்றெதிர்	158
சுழிகொள்வாம்	91
சுழித்தகூடல்	219
சுற்றநல்	520
சூ	
சூழிருஞ்ச	468
சூழ்சுடர்	479
சூழ்வளியுடன்	112
சூழ்வினை	575
செ	
செஞ்சுடர்	616
செப்புகோர்	217
செம்மையி	544
செயிரறு	599
செயிர்ப்பின்	221
செய்தொழில்	148
செய்யப்பட்ட	163
செய்யகண்	315
செய்யகமல	250
செய்யவெங்	335
செய்யதா	652
செய்யுறு	137
செருக்களத்	116
செருவின்மா	245
செல்லும்வெ	614
செழுங்கடை	473
செழுமணிப்	326
செறிந்தவாழ்	234
சென்னிதாழ்	514
சே	
சேட்டிளம்	377
சேணுயர்	388
சேயரிசித்தி	435
சேயிதழ்கி	109
சேயுயர்வி	373
சேவடிதொ	433
சேற்றிதழ்	302
சொ	
சொல்லருவி	323
சொல்லலுங்	569

பாட்டு.	பக்கம்.
சொல்லியவ	572
சோ	
சோலைவாயி	156
ஞா	
ஞாலத்திரு	607
த	
தடங்கணீர்	601
தடங்கொடா	54
தடங்கொள்	284
தணத்தலை	235
தணந்தவெந்தி	638
தணிவருந்தி	387
தண்டாரள	286
தண்டலில்	583
தண்ணங்கதிர்	268
தண்ணங்தா	510
தண்ணருக்கொ	95
தண்ணருத்தி	83
தண்ணறுங்	111
தத்தைமலர்த்	374
தமரவேலை	650
தரங்கவாரி	624
தருவின்றுங்கொழு	187
தருவினறுங்கொழு	183
தருவுமணியு	256
தழுவியதா	584
தழைசிறைய	183
தழைவிரி	24
தளர்வொடுமெ	86
தளரிடை	441
தளருநண்	634
தனியுருத்தாங்	417
தா	
தாதளேந்தி	72
தாதகமழு	211
தாதொடுறவு	331
தாமரைப்	526
தாமரைமுக	78
தாயினுமருள்புரி	586
தார்புலரா	502
தார்வாய்மூர	270
தார்வருஞ்சீ	464
தாழும்வண்டி	245
தாழ்சினைபூ	552
தாழ்தடக்	578
தாளதாமரை	451
தான்றிமரமாந்	686
தி	
திங்கட்கலை	175
திங்கட்புலி	257
திங்களுநல்	58
திங்கள்வெண்	54
திங்கள்வேங்கை	244
திருவெஞ்சின	590
திருத்தகுசெவி	307
திருத்தயிலார	536
திருநுதற்பொ	525
திருந்தார்மௌலி	214
திருந்துமாமணி	658
திருவனூர்தங்	554
திரைக்கடலுடு	408
திரைசெய்கரிய	269
திரைநெடுங்கடல்	241
து	
துஞ்சாதயர்வோடு	381
துணங்கையிட்ட	490
துணர்த்தாரளக	263
துணிபட்டொழி	612
துதைதாண்மலர்	383
துருவுமொற்ற	630
துலங்குவெண்ம	248
துளங்குதெண்	509
துளிதூங்கிய	168
துன்றுகளத்தெதி	500
துன்னிருங்கூ	561
தூ	
தூதியரேக்கண்ட	333
தூம்புடைக்கர	492
தூயதிங்கள்வெண்	27
தூவியஞ்சிறை	107
தெ	
தெண்டிரை-மீன்	442
தெண்டிரை-யேழு	483
தெண்பனிக்கடற்	243
தெய்வத்தாமரை	58
தெரியல்சூழ்ந்வ	412
தெரிவையின்ற	316
தெளித்தபூம்பள்ளி	605
தெளிவுமின்னயி	526
தெள்ளாரமுதத்	169
தெள்ளுதெண்டி	240
தெறுஞ்சினத்தலை	494
தே	
தேங்கமழ்	84
தேங்கமழ்மலர்	106
தேடினர்புகு	591
தேண்டியெங்க	626
தேர்நடவுகம்பலை	299
தேவர்கண்மூதலா	442
தேற்றொளி	201
தேற்றுவார்சிலர்	279
தொ	
தொடர்ந்தாள்கலுழ்	163
தொண்டைவா	430
தொய்யின்முலை	255
தொலைவறுலை	111
தொல்குலமரபி	426
தொழுதகுங்கை	658
தோ	
தோட்டலர்மாலை	372
தோட்டுமென்மலர்	237
தோளாரமணி	179
தோற்றுதன்பெ	562
ந	
நகைகிலாத்தவ	564
நகைமதிமுகத்	458

பாட்டு.	பக்கம்.
நஞ்சினிர்கொடி	572
நஞ்சுமிழ்வேலி	106
நண்ணருங்கான	602
நண்ணுர்தொழுவே	383
நமதுசெங்கர	548
நலனுமுகுமரர்	43
நவிரோக்கியர்	657
நவிரோக்கிய	621
நளிர்மதிதவழு	393
நள்ளிருட்குறும்	244
நட்டிருட்பொது	604
நறைகாப்புளி	269
நன்கமைந்தசா	247
நன்னலங்கனிந்	443
நா	
ளவரிவண்டு	102
நாட்டமூன்று	632
நாணமீதூரகின்	345
நாமவேல்வல	327
ாவிமென்குழ	280
நாவேநன்மண	632
நாள்விழுவயர்ந்த	560
நி	
நீட்டார்கோ	649
நீண்டாண்டரள	258
நிலவுபரந்தனி	26
நிலவுவெண்கதிர்	60
நிலவுவெண்கவி	530
நிலவுவெண்முத்	40
நிழலுமிழ்ந்து	567
நிழலுமிலையி	574
நிழலொடுகறவி	394
நிழல்களிகளிந	545
நிறங்கிளர்வயி	489
நிறங்கிளர்ப்-பூ	489
நின்சீருறவு	203
நின்றாள்ளை	649
நீ	
நீங்கரியகூல	56
நீங்கருங்கவச	475
நீடியதயில்செறி	605
நீடுமாவண	63
நீனிறத்தங்க	378
நீனிறமுகிலோ	131
நு	
நுழைநொசி	446
நெ	
நெஞ்சமெலி	606
நெஞ்சபடற்	
நெடிபடுகானிடை	580
நெய்த்தோரி	609
நே	
நேமிகுழ்ந்தநெ	510
நேரலார்போ	606
நை	
நையுநுண்மரு	230
நையுமென்	274
நொ	
நொறில்பரித்த	483
நொறில்வயப்ப	634
ப	
பகட்டிளமூலை	447
பகைக்கடல்சு	525
பசியநெட்டிலை	102
படவரவல்குலா	559
படவரவல்குற்	343
படைப்புழிவே	139
பட்டகாரிருட்	237
பணந்தாழாவு	253
பணந்தாழல்கு	259
பலிதலைக்கொடு	656
பணிமுடிக்கிடங்	410
பண்ணமைகலின	360
பண்ணமை-மா	533
பண்ணமைகூந்	312
பண்ணமைந்தநீஞ்	229
பண்ணமையினிய	436
பண்ணமைதிவ	518
பண்ணைவாய்த்தவ	32
பதுமமலர்மெல்ல	262
பத்திமாடமணி	64
பந்தொடுகழங்கும்	424
பரிதிவடிவாள்	497
பருதிவானவ	658
பருந்துங்கழுகும்	201
பளிக்கறைபுகுந்தன்	57
பளிக்குமேனிலத்	50
பளிங்கிற்றுன்னி	181
பறவைகள்குடம்	512
பற்றியகாமத்தியாற்	350
பனிமைக்கடலிற்	380
பன்மணிவரன்	550
பன்மலர்கஞலி	597
பன்னகஞ்சுமந்	90
பா	
பாகடுலெந்திறற்	490
பாசிலையிடையி	99
பாசிழைபரந்த	334
பாட்டளிதுதை	406
பாட்டுவரிச்சுர	185
பாணிகர்வண	324
பாந்தணமேற்	300
பாந்தளேந்திய	509
பாம்பினைப்படத்	518
பாயிருட்பிழம்பு	516
பாயிருண்மேயும்	426
பாரிநின்றவன்ன	493
பாவலரிழந்தனர்	593
பாலைவாய்கழு	74
பாற்றிரையமி	460
பாற்றினைத்தொ	491
பி	
பிதிர்ந்தப	611
பிரிவெனுமழ	120
பிள்ளைமாலை	450
பிள்ளைமாம	379

பாட்டு.	பக்கம்.
பிறைவடங்	122
பின்னர்மன்ன	619
பு	
புதுமணத்த	48
புதைத்தகாரிருட்	232
புதையிருள்சீத்	538
புயங்களென்	507
புரிகுழல்பு	421
புரிவடஞ்சும	441
புருவவிறகோ	525
புலத்தலு	495
புலவிநீக்கிப்	61
புலவியற்று	524
புலவுத்திரைசூ	271
புலவுநாறும்	204
புலவுநாறுவெஞ்	241
புல்லலுமகிழ்	524
புல்லுவிட்டஞ்	118
புளினத்தட	160
புள்ளினமிரி	124
புற்றுகுமாவ	173
புனிற்றிளம்	506
புனைமென்கொ	261
புனைமேகலையீ	161
புனைதகில்	598
பூ	
பூகமடல்சிறி	297
பூங்கரும்பு	36
பூங்கழைக்குமர	96
பூங்கழைகுழைக்	143
பூசல்வண்டார்	549
பூசுசாந்தமெ	225
பூணுலாக்கி	463
பூந்தகன்செ	319
பூமலர்ச்செழுங்	508
பூமலிதடங்க	34
பெ	
பெய்தொடி	527
பெருகியமூப்பினிற்	117
பெருந்தியருழந்த	534
பெறலருமலி	312
பே	
பேதைநீர்மை	180
பை	
பைந்தருநீழல்	340
பைம்மலைத்தகன்ற	486
பொ	
பொங்கழல்	609
பொங்குசெந்	513
பொய்ம்மைமொழி	184
பொய்யுறுதிமொழி	587
பொரியரைத்தேமா	39
பொரிசமத்து	485
பொருசமர்த்தொ	475
பொருதிலேவேனில்	68
பொருநிரைப்புண	534
பொர்ந்தியமன்னர்	311
பொருந்துருதனம்	61
பொருவருங்க	54
பொருவருவன	328
பொருவிலாழி	234
பொலன்சிறை	149
பொழிகதிர்செ	533
பொழிகதிர்யிற்	531
பொறிசெறித்	197
பொறியின்வழி	159
பொறிவழியுள்ள	88
பொற்பினுக்குறை	180
பொற்றடக்தேர்	299
பொன்னகரந்	289
பொன்னகர்பு	370
பொன்னஞ்சி	213
பொன்னடிப்பூ	323
பொன்னம்பா	613
பொன்னவிர்தி	395
பொன்னிதழ்	97
பொன்னிறத்	123
பொன்னினிற்	128
பொன்னேயமு	249
போ	
போதரிநெடு	460
போதருநெறி	153
போந்தவள்	434
போயதுதா	654
போயிருமறு	576
போர்க்களிறனை	335
போர்த்தொழி	301
போர்வேனள	177
ம	
மக்கள்வாண்	629
மங்குலூடு	274
மங்கையர்செ	558
மங்கையர்நிறை	347
மடலவிழ்	339
மடவரலுரு	322
மடவரறன்னை	584
மடவரறன்னெ	585
மடைவாய்த்தவ	208
மட்டுவிரிபு	252
மணங்கமழ்	101
மணிமுடிய	334
மணியெழுவனை	79
மண்களித்தது	651
மண்டமர்க-மன்	300
மண்டமர்க-னை	325
மண்ணகவரைப்	362
மண்ணளவ	408
மண்ணிடைத்	478
மண்ணியம்	586
மண்ணினிற்சி	331
மண்ணுலகின்	294
மதர்நெடுங்	295
மதப்பிலிற்	223
மயிர்வா-	175
மருங்கிலெ	288
மருவபுரிசர	186
மருவாகனை	641
மருளியிர்க்கு	287
மலயமாதவ	62
மலையிவற்	294
மலர்ந்தசெ	326
மலர்பயில்	315
மலர்ப்பிசு	692
மலர்மேலய	165
மல்லடுதினி	586
மல்லலன்தோ	530

பாட்டு.	பக்கம்.
மல்லலம்பழ	544
மல்லலம்புவ	27
மழகளிறனே	567
மழகளிறன்ன	499
மழலைத்தீஞ்	263
மழலைமென்	646
மழலைவாய்ச்	538
மழைக்கண்	48
மழைத்தடங்	647
மழைமதக்களி	653
மழைமதம்பொ	357
மழைமதர்க்க	219
மழையுறழ்	531
மறங்கிளரு	188
மறுவிகந்த	47
மறுவில்கற்பின	647
மன்றவெறி	544
மன்றிலைங்கை	536
மற்றுமோரு	597
மனக்கவர்	314
மனமுறுமோர்	184
மனைபெருங்	493
மன்றற்குழ	271
மன்றன்மல	499
மன்னுலகம்	276
மன்னவற்கெம்	570
மன்னவர்தரு	472
மன்னவனியை	574
மன்னவனினை	436
மன்னவனீரு	588
மன்னவனேயி	607
மன்னுமாநகர்	155
மா	
மாங்குலனே	366
மாங்குயிச்-செவ்	506
மாங்குயி-ப்பே	358
மாங்குயிற்குரா	556
மாசுபூத்தொ	624
மார்மென்மு	35
மாரிதார்மென்னே	462
மாதிகண்பனி	356
மாதுகேட்டி	626
மாதுபால்வி	245
மாந்தளிர்மேனி	142
மாயிருஞாலத்து	299
மாயிருஞாலத்தா	347
மாயிருஞாலந்தன்	330
மாயிருஞாலமும்	600
மால்புரிமூலமென்	138
மாழைமென்னோக்	455
மாணிரராணஞ்	85
மி	
மிகைப்படுதுன்பம்	585
மிக்கவெஞ்சமத்தி	583
மிடல்கெழு	501
மிடைந்திருவிசும்பு	107
மின்னிடைய	325
மின்னிலங்கு	73
மீ	
மீண்டதன்ன	213
மீதுலாயவெண்டா	156
மு	
முகிழ்மெண்மூலை	161
முகிறவழ்கு	397
முடங்கலின்	297
முத்தவெண்குடை	636
முயற்கறை	438
முரிதிரைப்பரவை	487
முருகவிழ்குழலினு	322
முருகவிழ்செய்	144
முருகன்வேலுமுக்க	205
முருகுண்டவ	172
முருகுயிர்த்தளி	599
முருகுயிர்த்தவொ	52
முருகுவாய்மடு	514
முருக்கிதழண	351
முருக்கிளமுலை	151
முருக்குறழி	431
முல்லையுங்	36
முழவுறழ்	482
முறையுறை	570
முழைவாய்திற	265
முளரியாலெந்த	590
முள்ளரைச்	246
மூற்றிழை	308
மூனம்மான	383
மூன்னுருமே	499
மூன்னகல்	649
மூ	
மூதெயிற்பு	654
மெ	
மெலியுநுண்	566
மே	
மேயவிஞ்சை	644
மேவருஞ்சு	589
மேனிவந்தொளிர்	51
மை	
மைத்தடங்கணீர்	281
மைந்தரோடிடி	389
மைம்மறந்த	218
மையகூந்த	554
மையரிக்கண்	221
மையவாங்கரியகூந்	374
மையன்மத	211
மையுண்கண்	233
மொ	
மொழிதல்கேட்டலு	644
மோ	
மோட்டிளங்	400
மோட்டினமுலைகள்	470
மோட்டினமுலையா	456
மௌ	
மௌவலந்தெரி	339
யா	
யாண்டேய	64
யாவனுவி	348

பாட்டு.	பக்கம்.
வ	
வசைபடு	589
வஞ்சமொன்	429
வஞ்சர்நெஞ்சி	619
வஞ்சிநுண்	555
வடபுலத்தி	650
வடவானலத்	254
வடிகொளவெண்	47
வடுநெடுங்க	450
வடிமலர்	463
வடியுண்கணி	162
வடிவமைநூ	336
வடுக்கண்டுயி	268
வடுநெடுங்-கொ	559
வடுவகிரனைய	358
வடுவகிர்நெடு	455
வடுவகிர்-ணர்	539
வணங்கிடை	423
வணங்கிநுண்	532
வண்டார்வஞ்	169
வண்டுழா	405
வண்ணமுலை	57
வண்ணமே	437
வண்ண-யார்	508
வந்தமடமா	613
வந்தவெங்கொ	542
வய்வரோரி	481
வயிரவாட்	625
வயிரியர்பாட	92
வரிச்சிறை	109
வரிமுலையோ	519
வரிவளைக்குலமு	527
வரிவளைக்குலக்	53
வருகலிபுட்க	568
வருந்தமுன்	126
வருந்திமுன்	689
வழங்கிழு	309
வழித்துதெள்ள	167
வளமலியிங்	66
வளைகட	601
வளைத்தடக்	224
வள்ளவாய்ச்	32
வள்ளவாய்த்	114
வள்ளவாய்மலர்	49
வள்ளற்குரச	77
வள்ளுறைக	430
வள்ளுவார்	135
வனப்பினில்	80
வனைமலர்க்குழன்	627
வனைமலர்க்குழல்க	445
வா	
வாங்குலிற்கை	556
வாங்குவிற்றட	419
வாசனைசம	517
வாட்டடங்கண்	220
வாட்டடங்கரு	520
வாட்டிறல்சேர்	193
வாட்டிறல்வே	569
வாட்டிறன்-கம	577
வாட்டிற்-வனி	378
வாணிலாமணி	65
வாணெடுங்க	558
வாமமேகலை	562
வாம்பரி-ஞ	566
வாம்பரி-னி	313
வாம்பரியிழ	593
வாய்ந்தமின்	59
வார்மயிர்க்	492
வாவியின்	596
வாவுமிள	607
வானவரொண்	285
வானுயர்சோலை	550
வான்மறக்	592
வி	
விஞ்சையர்	288
விடுத்தவர	635
விட்புலத்த	568
விட்புலத்தி	131
விட்டதூ	655
விண்டமெ	640
விண்டொடர்	551
விண்படுமி	602
விண்புகுவிய	100
விண்ணகத்தம	397
விண்ணகத்தும்	293
விண்ணம்புலி	167
விண்ணவரனை	543
விண்ணவரின்	500
விண்ணவர்ம	335
விண்ணின்னிய	164
விண்ணேர்வி	381
விம்மிமின்னு	581
விரவுகரியகூ	251
விரிகடலமி	581
விரிகதிரொ	414
விரிகதிர்விதிர்ப்	414
விரிகதிர்பர	375
விரிகதிர்ப்பா	467
விரிகதிர்மௌலி	375
விரிதெண்டி	250
விரிந்தசெங்	337
விரிந்ததிரை	258
விரிந்தவேணி	277
விரிமலர்க்	643
விரிமலர்ப்பூ	602
விரியிருள்ச	425
விரும்பியகணவர்	94
விரும்பியவீ	346
விரைகமழ்-மும்	562
விரைகமழ்-மெய்க	559
விரைகமழ்தரு	389
விரைகமழ்நறி	342
விரைகமழ்முல்	394
விரைசெறிய	372
விரைசேர்கம	176
விரையுயிர்க்கு	19
விலகிவில்லு	29
வில்லுமிழு	58
விழுந்தவ	33
விழையுழனத்	182
விழையுகரா	103
விழைவுறு	112
விழைவெனு	316
விளங்கிழை	318
விளிச்சுரு	264
விளைகழார்க்	474
விள்ளுமத	595
வீ	
வீமண்புதல்	614
வீழுமெற்	119

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
வெ		வெந்தீயதனி	272	வேரியங்தொ	506
		வெயில்வீரி	306	வேலெனப்பி	448
வெகுளலேய	469	வெய்யவர	609	வேலெனமி	410
வெங்கதிர்க்க	141	வெவ்வாவினை	239	வேலைசூழ்	284
வெங்கதிர்சு	60	வெள்ளத்தா	657	வேழவெண்	30
வெங்கதிர்தெ	105	வெள்ளி-யில்	395	வேளாண்மை	384
வெங்கோல்தெ	365	வெள்ளியங்	395	வேற்றரசர்	196
வெங்கோலிடர்	69	வெற்பினதெ	320	வேற்றருக்	422
வெண்கதிர்பந்	152			வேனிலானு	417
வெண்மதிக்கதிர்	392	வே		வேனில்வேள்	134
வெண்மதிகவி	96			வேனிலெங்க	511
வெண்ணகைத்	150	வேட்கைதன	187		
வெண்ணிறத்	109	வேண்டல்செய்	181	வை	
வெற்றிர்புரைவேல்	454	வேந்தனவ்	622		
வெற்றிர்புரைவே	338	வேயினப்பழி	354	வையகமொ	353
வெற்றிறற்	355	வேயைவென்ற	223	வையமேழு	282

பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றுப்பெற்றது.